கண்ணியம்¹ kaṇṇiyam, *n.* < *ganya.* Respectability, dignity, honour; கௌரவம்.

கண்ணியம்² kaṇṇiyam, *n.* Tree Turmeric. See மரமஞ்சள். (L.)

கண்ணிரங்கு-தல் kaṇ-ṇ-iraṅku-, *v. intr.* < கண் +. 1. To sound; ஒலித்தல். *கலாபம்வீங்கி மிளிர்ந்து கண்ணிரங்க* (சீவக. 1985). 2. To pity; to have compassion; அருள்செய்தல். *தெய்வம் கண்ணிரங்கவேண்டும்.*

கண்ணில்[ற்]-த[ற]ல் kaṇ-ṇil-, *v. intr.* < id. + நில். To stand before one's eyes; எதிர் நிற்றல். *கண்ணின்று கண்ணறச் சொல்லினும்* (குறள், 184).

கண்ணிலன் kaṇ-ṇ-ilaṉ, *n.* < id. + இல் neg. 1. Blind man; குருடன். 2. Merciless man; இரக்கமற்றவன். *கடுஞ்சொல்லன் கண்ணிலனாயின்* (குறள், 566).

கண்ணிலி kaṇ-ṇ-ili, *n.* < id. +. Blind person; கண்ணில்லாதவ-ன்-ள். *கண்ணிலி குமரன் வெம்பி* (பாரத. பதின்மூன். 91).

கண்ணிவை-த்தல் kaṇṇi-vai-, *v. intr.* < கண்ணி¹ +. To set a snare or trap for catching game, etc.; புள்முதலியவற்றை அகப்படுத்தச் சுருக்குக்கயிறு தொடுத்துவைத்தல். *Colloq.*

கண்ணிறுக்கம் kaṇ-ṇ-iṟukkam, *n.* < கண் +. A disease of the eyes, esp. of children, *Ophthalmia neonatorum;* கண்ணோய்வகை. (தைலவ. தைல. 57.)

கண்ணிறை kaṇ-ṇ-iṟai, *n.* < id. + இறு-. Sleep; தூக்கம். *பின்னர்க் கண்ணிறை கோடல் செய்யான்* (கம்பரா. கும்பக. 10).

கண்ணினளவு kaṇṇiṉ-aḷavu, *n.* < id. +. Moment as measured by a wink, eye-wink; ஒருமாத்திரை யளவு. (சீவக. 1393.)

கண்ணீர்¹ kaṇṇīr, *n.* < id. +. [T. *kannīru,* K. M. *kaṇṇīr,* Tu. *kaṇṇa-nīr.*] Tears; விழிநீர். (மணி. 3, 13.)

கண்ணீர்² kaṇṇīr, *n.* < கள் +. Toddy; கள்ளாகிய நீர். (சிலப். 13, 188. உரை.)

கண்ணீர்நடுக்குறை kaṇṇīrnaṭukkuṟai, *n.* Spreading Hogweed. See மூக்கிரட்டை. (மலை.)

கண்ணீர்முட்டல் kaṇṇīr-muṭṭal, *n.* < கண் +. Increased fluid-pressure within the eyeball, *Glaucoma;* கண்ணோய்வகை.

கண்ணீர்விடு-தல் kaṇṇīr-viṭu-, *v. intr.* < கண்ணீர்¹ +. 1. To weep, shed tears; கண்ணீர் சிந்துதல். 2. To grieve, feel sad; துக்கப்படுதல்.

கண்ணீராக்கி kaṇṇīr-ākki, *n.* < id. +. Crude camphor; பச்சைக்கருப்பூரம். (W.)

கண்ணு-தல் kaṇṇu-, *5 v. tr.* 1. To purpose, think, consider; கருதுதல். *கண்ணிய துணர்தலும்* (மணி. 2, 25). 2. To be attached to, fastened to; பொருந்துதல். *புடைகண்ணிய வொளிராழியின்* (இரகு. யாக. 17).

கண்ணுக்கரசன் kaṇṇukkaracaṉ, *n.* < கண்ணுக்கு + அரசன். Blue vitriol; துரிசு. (மூ. அ.)

கண்ணுக்கினியான் kaṇṇukkiṉiyāṉ, *n.* < id. + இனியான். (மூ. அ.) 1. Lit., that which is good for the eyes, name of a medicinal plant. See பொன்னாங்காணி. 2. A plant growing in wet places. See கையாந்தகரை.

கண்ணுக்குக்கண்ணா-தல் kaṇṇukku-k-kaṇ-ṇ-ā-, *v. intr.* < id. +. 1. To be very dear, precious, as the eye; மிகப்பாராட்டப்படுதல். அவன்

கண்ணுக்குக் கண்ணயிருந்தான். 2. To be a trusted confidant; அந்தரங்கனயிருத்தல். *Loc.*

கண்ணுக்குத்தை-த்தல் kaṇṇukku-t-tai-, *v. intr.* <id.+. To attract the eyes, arrest the attention; கண்கவரப்படுதல். (W.)

கண்ணுகம் kaṇṇukam, *n.* cf. கந்துகம்[1]. Horse; குதிரை. (பிங்.)

கண்ணுங்கருத்துமாய் kaṇ-ṇ-uṅ-karuttu-m-āy, *adv.* <கண்+. With all attention; முழுக் கவனத்துடன். *Colloq.*

கண்ணுடைமூலி kaṇṇuṭai-mūli, *n.* A plant that grows only in hot and dry places. See விஷ்ணுகிராந்தி. (சங். அக.)

கண்ணுடையவள்ளலார் kaṇṇuṭaya-vaḷḷalār, *n.* <கண்+. Name of the author of *Oḷivil-oṭukkam*, a Śaivite philosophical work of the 15th c. cir.; ஒழிவிலொடுக்க நூலாசிரியர்.

கண்ணுதல் kaṇṇutal, *n.* <id.+நுதல். 1. Forehead having an eye; கண்ணையுடைய நெற்றி. கண்ணுதலுடையதோர் களிற்றுமாமுகப் பண்ணவன் (கந்தபு. கடவுள். 8). 2. Śiva, who has an eye in His forehead; சிவன். எம்மண்ணல் கண்ணுதல் பாத நண்ணி (திருவாச. 35, 1).

கண்ணுதன்மலை kaṇṇutaṉ-malai, *n.* <கண்ணுதல்+. Mount Kailāsa, the abode of Śiva; கைலாயம். (பிங்.)

கண்ணுப்பீ kaṇṇu-p-pī, *n.* <கண்+. Rheum of the eyes; கண்பீளை. *Vul.*

கண்ணுமை kaṇṇumai, *n.* <id. Sight; காட்சி. கட்டமை யொழுக்கத்துக் கண்ணுமை யானும் (தொல். பொ. 76).

கண்ணுராவி kaṇṇurāvi, *n.* <T. *kannara*. See கண்ணராவி. (W.)

கண்ணுருகு-தல் kaṇ-ṇ-uruku-, *v. intr.* <கண்+. To shed tears; கண்ணீர்வார்தல். மெய் யுருகிக் கண்ணுருகி (சீவக. 682).

கண்ணுலைமூடி kaṇ-ṇ-ulai-mūṭi, *n.* <id. +. Rice-strainer; colander; சிப்பல். (W.)

கண்ணுவம் kaṇṇuvam, *n.* <id. Artisanship; கம்மியர்தொழில். (W.)

கண்ணுள் kaṇṇuḷ, *n.* <id.+உள். 1. Acting, dance; கூத்து. (திவா.) 2. Fine, delicate workmanship in jewelry; அரும்புத்தொழில். பல வுறு கண்ணுட் சிலகோ லவிர்தொடி (கலித். 85, 7).

கண்ணுள்வினைஞன் kaṇṇuḷ-viṉaiñaṉ, *n.* <கண்ணுள்+. 1. Painter; சித்திரகாரன். கண்ணுள் வினைஞரு மண்ணீட் டாளரும் (சிலப். 5, 30). 2. Artisan; கம்மாளன். (சூடா.)

கண்ணுளன் kaṇṇuḷaṉ, *n.* <id. See கண்ணுளாளன். கலம்பெறு கண்ணுள ரொக்கற்றலைவ (மலைபடு. 50).

கண்ணுளாளன் kaṇṇuḷ-āḷaṉ, *n.* <id.+. Actor, dancer; masquerader; கூத்தன்.

கண்ணுறக்கம் kaṇ-ṇ-uṟakkam, *n.* <கண்+. Dozing, slumber, sleep; நித்திரை. (சூடா. 12, 10.)

கண்ணுறு-தல் kaṇ-ṇ-uṟu-, *v.* <id.+. *tr.* 1. To see, view, look at; பார்த்தல். கற்கனி யக்கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான் (கம்பரா. குகப். 29). 2. To meet; to come upon by chance; எதிர்ப்படுதல். கொய்ம்மலர்த்தாரினானைக் கண்ணுறு (சீவக. 1214). 3. To approach, reach; கிட்டுதல். வெட்சியாரைக் கண்ணுற்றவளைஇ (பு. வெ. 2, 4, கொளு).—*intr.* To be possible: இயலுதல். ஒரு கருத்தனின்றி யவை கண்ணுறு (பிரபோத. 39, 21).

கண்ணுறுத்து-தல் kaṇ-ṇ-uṟuttu-, *v. intr.* <id.+. 1. To smart, as the eyes; கண்நோதல். 2. To be envious; பொறாமை உண்டாதல்.

கண்ணுறை[1] kaṇ-ṇ-uṟai, *n.* <id.+உறை. 1. Curry; relish; கறி. வெண்சோற்றுக் கண்ணுறையாக (புறநா. 61, 5). 2. Curry-stuff; மசாலை. அடகின் கண்ணுறையாக (புறநா. 140, 4).

கண்ணுறை[2] kaṇ-ṇ-uṟai, *n.* <id.+உறுத்து-. Fear at the mere sight of a thing; fright; கண்ணுற்கண்டஞ்சும் அச்சம். மத்திகைக் கண்ணுறையாக (கலித். 96, 12).

கண்ணூறு kaṇ-ṇ-ūṟu, *n.* <id.+. Evil eye, blight of the eyes causing sickness or misfortune; திருஷ்டிதோஷம். அந்திநின்று கண்ணூ றழித்தா ளணிநீ றளித்தே (தணிகைப்பு. களவு. 329).

கண்ணூறுகழி-த்தல் kaṇ-ṇ-ūṟu-kaḻi-, *v. intr.* <கண்ணூறு+. To dispel the blight of an evil eye by prescribed ceremonies; திருஷ்டி தோஷம் போக்குதல்.

கண்ணெச்சில் kaṇ-ṇ-eccil, *n.* <கண்+. See கண்ணூறு. கண்ணெச்சிற்படாமைக்குக் கரி பூசு கிறார் (ஈடு, 5, 1, 2).

கண்ணெடுத்துப்பார்-த்தல் kaṇ-ṇ-eṭuttu-p-pār-, *v. tr.* <id.+. 1. To lift up one's eyes and see; to look intently at a thing; கவனித்துப்பார்த்தல். 2. To look with favour, as a superior; அருள்செய்தல்.

கண்ணெடுப்பு kaṇ-ṇ-eṭuppu, *n.* <id.+. Swelling at the corner of the eye, *Dacrocystitis;* கடைக்கண்ணில்உண்டாகும்நோய்வகை. (சீவரட். 269.)

கண்ணெரிவு kaṇ-ṇ-erivu, *n.* <id. +. Smarting of the eyes, from want of sleep, from heat, from intemperance; தூக்கமின்மை முதலிய வற்றால்நேரும் கண்ணெரிச்சல்.

கண்ணெழுத்தாளன் kaṇ-ṇ-eḻuttāḷaṉ, *n.* <id.+. One who writes letters dictated by the king, amanuensis to the king; அரசனது திருமுகம் எழுதுவோன். (சிலப். 26, 170.)

கண்ணெறி kaṇ-ṇ-eṟi, *n.* <id.+. 1. See கன்னூறு. *கல்லெறிக்குத் தப்பினாலும் கண்ணெறிக்குத் தப்பக்கூடாது.* 2. Skilful playing on the drum; தோற்கருவிகளை வாசிக்கை. *தண்ணுமைக் கருவிக் கண்ணெறி தெரிவோர்* (மணி. 19, 82). 3. Corneal ulcer; நேத்திரப்புண்.

கண்ணேணி kaṇ-ṇ-ēṇi, *n.* <id.+. A single bamboo pole used as a ladder in climbing up hills etc., its nodes serving as rungs; கணுக்களிலே அடிவைத்து மலை முதலியவற்றில் ஏறிச்செல்லும்படி யமைத்துள்ள மூங்கில். (புறநா. 105, உரை.)

கண்ணேறு kaṇ-ṇ-ēṟu, *n.* <id.+ஏறு. See கன்னூறு. *கண்ணேறெலா மின்றறத்துடைப்பாம்* (அரிசமய. பதுமை. 140).

கண்ணைக்கசக்கு-தல் kaṇṇai-k-kacakku-, *v. intr.* <id.+. 1. To rub the eyes, as one just awaking from sleep; கண்ணைத்தேய்த்தல். 2. To be sorrowful; துக்கப்படுதல். *Colloq.*

கண்ணைக்கவர்-தல் kaṇṇai-k-kavar-, *v. intr.* <id.+. See கண்ணைப்பறி-.

கண்ணைக்காட்டு-தல் kaṇṇai-k-kāṭṭu-, *v. intr.* <id.+. To hint by a glance of the eye; கண்சாடை காட்டுதல்.

கண்ணைப்பறி-த்தல் kaṇṇai-p-paṟi-, *v. intr.* <id.+. To dazzle the eyes, as a flash of lightning, as a captivating sight; கண்பார்வையைக்கவர்தல்.

கண்ணைப்பிசை-தல் kaṇṇai-p-picai-, *v. intr.* <id.+. See கண்ணைக்கசக்கு-.

கண்ணொட்டு-தல் kaṇ-ṇ-oṭṭu-, *v. intr.* <id.+. To be heavy with sleep, used impersonally; கண் தூக்கநிலை யடைதல். *எனக்குக் கண்ணொட்டிக்கொண்டு வருகிறது.* (W.)

கண்ணொடையாட்டி kaṇṇoṭai-y-āṭṭi, *n.* <கள் + கொடை + ஆட்டி. Female toddy seller; கள்விற்பவள். (சிலப். 5, 24.)

கண்ணொளி kaṇ-ṇ-oḷi, *n.* <கண் +. Brightness of the eye; lustre of the eyes; கண்ணிலிருக்கும் ஒளி. *கண்ணொளி மழுங்கியது.*

கண்ணோ kaṇṇō, *n.* <id.+நோ-. See கண்ணோவு.

கண்ணோக்கு[1]**-தல்** kaṇṇōkku-, *v. tr.* <id. +. 1. To look at, see; பார்த்தல். 2. To look with favour; கருணையோடுபார்த்தல்.

கண்ணோக்கு[2] kaṇṇōkku, *n.* <id.+. 1. Gaze, glance, look; பார்வை. 2. Favour, grace; அருட்பார்வை. *கண்ணோக் கரும்பா* (நீதிநெறி. 37).

கண்ணோட்டம் kaṇ-ṇ-ōṭṭam, *n.* <id. + ஓடு-. 1. Glance, look, vision; கண்பார்வை. (கலைசைச். 97.) 2. Regard, kindness, partiality, glow of kind feeling towards a friend or even a casual acquaintance, reluctance to deny a request made by a friend or acquaintance, humanity, fellow-feeling; தாட்சிணியம். *கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை* (குறள், 571). 3. Discerning by the eye, close examination, careful scrutiny; பார்வையிடுகை.

கண்ணோடு-தல் kaṇ-ṇ-ōṭu-, *v.* <id. +. *intr.* 1. To run out, as the eyes on a desired object; விரும்பியபொருள்மேற் பார்வைசெல்லுதல். *அவனுக்கு அங்கே கண்ணோடுகிறது.* 2. To be kind, benignant, gracious, indulgent, sympathetic, tender; இரங்குதல். *கூற்றுக் கண்ணோடிய வெருவரு பறந்தலை* (புறநா. 19). 3. To be partial; to be biassed towards; to yield to feelings of pity; தாட்சிணியப்படுதல். *கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்கு* (குறள், 578).—*tr.* To supervise; மேற்பார்வைபார்த்தல். *உடையவன் கண்ணோடாப் பயிர்.* (W.)

கண்ணோய் kaṇṇōy, *n.* <id.+நோய். See கண்ணோவு.

கண்ணோய்க்காரம் kaṇṇōy-k-kāram, *n.* <id.+id.+. Stimulant applications in affections of the eye; கண்வலிமருந்து. *Loc.*

கண்ணோவு kaṇṇōvu, *n.* <id.+. Sore eyes, ophthalmia, *conjunctivitis*; கண்வலி. (சிலப். 3, 13, உரை.)

கண்திட்டம் kaṇ-tiṭṭam, *n.* <id.+. Guess by the eye, estimation by sight; பார்வையாலிடும் மதிப்பு.

கண்திட்டி kaṇ-tiṭṭi, *n.* <id.+*dṛṣṭi*. See கன்னூறு.

கண்தி[டி]ற-த்தல் kaṇ-tiṟa-, *v.* <id.+. *tr.* 1. To chisel or paint the eyes of an idol or of a picture, respectively, so as to make the image appear to have the sense of sight; விக்கிரகம் முதலியவற்றிற்கு கண்விழிதோன்றச் செய்தல். 2. To cut open the eyes of the coconut; பருதுமாறு இளநீரின் கண்ணைத்திறத்தல்.—*intr.* 1. To open the eyes, as a kitten; பிறந்தகுட்டிகள் கண்களைத்திறத்தல். 2. To illumine the mind, to impart instruction, as opening the eyes of a disciple's mind; அறிவு உண்டாக்குதல். 3. To educate, instruct; கல்வி கற்பித்தல். *உபாத்தியாயர் என் பிள்ளைக்குக் கண்திறந்து வைத்தார்.* 4. To show mercy; கருணை புரிதல். *Loc.* 5. To clear, as the sky free from clouds and with the sun shining; ஆகாயம் வெளியாதல். *இன்றைக்காவது வானம் கண்திறக்குமா?* 6. To be gracious; அருள்செய்தல். *தெய்வம் கண்திறக்கவேண்டும்.* 7. To be enlightened in mind; அறிவு உண்டாதல்.

கண்தெரியாதவன் kaṇ-teriyātavaṉ, *n.* <id.+. Blind man; குருடன்.

கண்தெறி-த்தல் kaṇ-teṟi-, *v. intr.* <id.+. To be dazed, as the eyes by very strong light; பெருவெளிச்சத்தாற் கண்ணொளி மழுங்குதல்.

கண்பச-த்தல் kaṇ-paca-, *v. intr.* <id.+. To lose lustre, as the eyes, from distress; கண்ணின்நிறம் மாறுதல். *அரிமத ருண் கண்பசப்ப நோய் செய்யும்* (கலித். 82, 20).

கண்பஞ்சடை-தல் kaṇ-pañcaṭai-, *v. intr.* <id.+பஞ்சு+அடை-. To grow dim, as the eyes on the approach of death; மரணக்குறியாகக் கண் ஒளியறுதல். *கண்பஞ்சடை முன்னே* (பட்டினத். திருப்பா. பக். 173).

கண்பட்டை kaṇ-paṭṭai, *n.* <id.+. Eye-lid; இமை. *Loc.*

கண்படு[1]-தல் kaṇ-paṭu-, *v. intr.* <id.+. 1. To sleep; நித்திரைசெய்தல். *அன்னங் கண்படு தண்பணை* (நைடத. நாட்டுப். 2). 2. To spread over a surface; பரவுதல். *வயலும் புன்செய்யுங் கண்பட வேர்பூட்டி* (பு. வெ. 12, வென்றிப். 4). 3. To be in favour of, partial to; கண்ணோடுதல். *கண்பட் டாழ்ந்துநெகிழ்ந்து* (சிறுபஞ். 78). 4. To be affected by the evil eye; திருஷ்டிபடுதல். *என்பிள்ளைக்கு யார் கண்பட்டதோ?*

கண்படு[2]-த்தல் kaṇ-paṭu-, *v. intr.* <id.+. 1. To sleep; நித்திரைசெய்தல். *பண்ணவன் கண் படுத்திடு பாற்கடல்* (கந்தபு. திருக்கைலாச. 5). 2. To be set, as gems in jewels; பதிக்கப்பட்டிருத்தல். *காசு கண்படுக்கு மாடம்* (நைடத. சுயம்வர. 157).

கண்படை kaṇ-paṭai, *n.* <id.+படு-. 1. Sleep; நித்திரை. *மண்டமர் நசையொடு கண்படை பெறாஅது* (முல்லைப். 67). 2. Bed; bedroom; மனிதர் துயிலிடம். (சூடா.)

கண்படைநிலை kaṇ-paṭai-nilai, *n.* <கண்படை+. 1. (Puṟap.) Theme of the court physicians, ministers, and other attendants of a king sitting in audience humbly suggesting to His Majesty that it is time for him to go to bed; அவையில் இரவில் நெடுநேரம் தங்குகையால் அரசனை நோக்கி மருத்துவர் முதலியோர் அவன் துயில்கோடலைக் கருதிக்கூறும் புறத்துறை. (தொல். பொ. 90.) 2. Name of the poem containing the *kaṇ-paṭai-nilai* theme; ஓர் பிரபந்தம். (தொன். 283, உரை.) 3. See கண்படை, 1. *வேந்தன் கண்படைநிலை மலிந்தன்று* (பு. வெ. 8, 29, கொளு).

கண்பரிகாரம் kaṇ-parikāram, *n.* <கண்+*pari-hāra*. Medical treatment of the eyes; profession of an oculist; கண்வைத்தியம். (W.)

கண்பரிகாரி kaṇ-parikāri, *n.* <id.+*pari-hārin*. Eye-doctor, oculist; கண்வைத்தியன். (W.)

கண்பனி-த்தல் kaṇ-paṉi-, *v. intr.* <id.+. To weep, shed tears; கண்ணீர்சிந்துதல். *நெஞ் சுருகிக் கண்பனிப்ப* (திவ் திருநெடு. 12).

கண்பாடு kaṇ-pāṭu, *n.* <id.+படு-. Sleep; நித்திரை. *முனிவினாற் கண்பா டிலர்* (நாலடி, 366)

கண்பாய்ச்சல் kaṇ-pāyccal, *n.* <id.+. Glance, look; பார்வை. (W.)

கண்பார்-த்தல் kaṇ-pār-, *v. tr.* <id.+. 1. To look upon graciously, compassionately; கிருபைசெய்தல். 2. To examine critically, as precious stones, elephants, horses; பரீக்ஷித்தறிதல். (W.)

கண்பார்வை kaṇ-pārvai, *n.* <id. + . 1. Supervision; மேற்பார்வை. 2. Estimate from personal examination; மதிப்பு.

கண்பிசை-தல் kaṇ-picai-, *v. intr.* <id.+. To rub the eyes in sorrow; துக்கத்தால் கண்ணைக் கசக்குதல். *கண்பிசைந் தொருசே யின்னுங் கலுழினும்* (பிரபுலிங். கைலாச. 5).

கண்பிடி kaṇ-piṭi, *n.* <id.+. Small jack fruit, small bunch of palmyra fruits, fruits attached to a larger fruit; ஒருகாம்பிற் பெருங் காயோடு கூடியுள்ள சிறுகாய்கள். (J.)

கண்பிதுங்கு-தல் kaṇ-pituṅku-, *v. intr.* <id.+. To be so much fatigued from overwork as to cause even the bulging out of the eyes; வேலைமிகுதியால் வருத்தமிகுதல். *இந்த வேலை கண் பிதுங்கச்செய்கிறது.*

கண்பீளை kaṇ-pīḷai, *n.* <id.+. [M. *kaṇpīḷa.*] Viscid discharge from the eye; கண்ணிலுண்டாகும் புளிச்சை.

கண்பு kaṇpu, *n.* cf. சம்பு. Elephant-grass. See சம்பங்கோரை. *செருந்தியொடு கண்பமன் றூர்தர* (மதுரைக். 172).

கண்புகைச்சல் kaṇ-pukaiccal, *n.* <கண்+. 1. A disease of the eye; கண்ணோய்வகை. 2. Dimness of sight from age or disease; கண் மங்கல். (W.)

கண்புதை[1]-தல் kaṇ-putai-, *v. intr.* <id. +. 1. To weaken, as understanding; அறிவு கெடுதல். *கண்புதைந்த மாந்தர்* (நல்வழி, 28). 2. To lie covered and hidden; மூடப்பட்டு மறைதல். *பாருருவும் பார்வளைத்த நீருருவுங் கண்புதைய . . . நிமிர்ந்த கால்* (திவ். இயற். பெரியதிருவ. 21).

கண்புதை[2]-த்தல் kaṇ-putai-, *v.* <id.+. *intr.* To cover the eyes; கண்பொத்துதல். *வைவேற் கண்புதைத்து* (திருக்கோ. 43).—*tr.* To cover, hide; மறைத்தல். *கலவங் கண்புதையாது கனற்றலின்* (சீவக. 1982).

கண்புரை kaṇ-purai, *n.* <id.+. Cataract; கண்ணில் வளரும் படலம். *Loc.*

கண்புளிச்சை kaṇ-puḷiccai, *n.* < id. + . See கண்பீளை.

கண்பூ[1]**-த்தல்** kaṇ-pū-, *v. intr.* < id. + . To blur, as the eyes by steadfast gazing; நேடு நேரப்பார்வையாற் கண்ணொளி குன்றுதல். பெலட யன்னுர் கண்பூத்து நோக்கும்வாயெல்லாம் (கலித். 102, 15).

கண்பூ[2] kaṇ-pū, *n.* < id. + . Opacity of the cornea; கண்ணில் விழும் நுந்தம். (இங். வை. 363.)

கண்பூளை kaṇ-pūḷai, *n.* < id. + . A common wayside weed. See சிறுபூளை. (M. M.)

கண்பெறு-தல் kaṇ-peṟu-, *v. intr.* < id. + . 1. To regain the power of sight; பார்வையடைதல். கண்பெற்ற வாண்முகமோ (கள. கலிநீக். 92). 2. To win gracious favour, as from a superior; அநுணுக்கிரந்த இலக்காதல். நின் கண்பெறினல்லால் (கலித். 88, 8).

கண்பொங்கு-தல் kaṇ-poṅku-, *v. intr.* < id. + . To be inflamed, as the eyes; சூட்டுமிகுதியின் குறி கண்ணிற் காணுதல்.

கண்பொத்து-தல் kaṇ-pottu-, *v. tr.* < id. + . To blindfold, as in the game of blind-man's buff; கண்ணைமூடி விளையாடுதல்.

கண்பொறிதட்டு-தல் kaṇ-poṟi-taṭṭu-, *v. intr.* < id. + . (W.) 1. To flash, as the eyes in fainting from a blow; கண்பொறி கலங்குதல். 2. To be dazzled, as the sight by great glare or very strong light; கண்ணொளிமழுங்குதல்.

கண்பொன்று-தல் kaṇ-ponṟu-, *v. intr.* < id. + . (W.) 1. To have the power of vision diminished or dimmed, by age, by disease of the eyes, by eye strain etc.; பார்வைகுறைதல். 2. See கண்பொங்கு-.

கண்போடு-தல் kaṇ-pōṭu-, *v. intr.* < id. + . 1. To cast wistful looks on objects with the intention of securing them; to fall in love; to make eyes at; இச்சையுடன் ஒன்றன்மேல் நோக்கஞ் செலுத்துதல். (W.) 2. To cast the evil eye; நோக்கினால் ஊறுண்டாக்குதல். *Colloq.*

கண்மங்கு-தல் kaṇ-maṅku-, *v. intr.* < id. + . To become dull, obscure, heavy, dim in the eyes; கண்ணொளி குறைதல்.

கண்மட்டம் kaṇ-maṭṭam, *n.* < id. + . Guess by the eye or as appears to the eye; working or levelling by sight; கண்மதிப்பு. (W.)

கண்மட்டு kaṇ-maṭṭu, *n.* < id. + . See கண்மட்டம். (W.)

கண்மடல் kaṇ-maṭal, *n.* < id. + . Eyelid; இமை.

கண்மடை kaṇ-maṭai, *n.* < id. + . Small channel for water, as in a garden; சிறுமடை. (W.)

கண்மண்டை kaṇ-maṇṭai, *n.* < id. + . Bones forming the eye-socket; கண்ணெலும்புக்கூடு. (W.)

கண்மணி kaṇ-maṇi, *n.* < id. + . 1. Apple of the eye; கண்ணின் கருமணி. கண்மணி குளிர்ப்பக் கண்டேன் (சிலப். 11, 55). 2. Rudrākṣa bead; உருத்திராக்கம். வெண்பொடி கண்மணி திகழ மெய்யணிந்து (திருவானைக். திருமால். 13).

கண்மயக்கு kaṇ-mayakku, *n.* < id. + . 1. Bewitching, captivating with the eyes; கண்களால் வசீகரிக்கை. 2. Illusion; hallucination; மாயத்தோற்றம்.

கண்மயம் kaṇ-mayam, *n.* < id. + . Mercy, kindness, humanity, compassion; தாட்சிணியம். களித்த கண்மய மில்லவர் (உபதேசகா. உருத்திராக். 106).

கண்மயிர் kaṇ-mayir, *n.* < id. + . Eyelash; இமைமயிர். (W.)

கண்மருட்சி kaṇ-maruṭci, *n.* < id. + . Fascinating or bewitching by the eye; கண்ணால் மயக்குகை.

கண்மருட்டு kaṇ-maruṭṭu, *n.* < id. + . See கண்மருட்சி. (W.)

கண்மருந்து kaṇ-maruntu, *n.* < id. + . 1. Medicines or ointment for the eyes; கண்ணுக்குப் போடும் மருந்து. 2. Collyrium, used for the eyelids, esp. of women and children; கண்ணுக்கிடும் அஞ்சனம்.

கண்மலர்[1]**-தல்** kaṇ-malar-, *v. intr.* < id. + . To open wide, as the eyes; to awake fully; விழித்தல்.

கண்மலர்[2]**-த்தல்** kaṇ-malar-, *v. intr.* < id. + . See கண்மலர்[1]-. மார்புறவே தழீஇயிளு னவள் கண்மலர்த்தாள் (சீவக. 228).

கண்மலர்[3] kaṇ-malar, *n.* < id. + . 1. Eye comparable to a flower; மலர்போன்ற கண். 2. An ornament resembling the eye made of gold or silver and put on an idol; விக்கிரகங்கட்கு அணியும் விழிமலர். (S.I.I. ii, 340.)

கண்மழை kaṇ-maḻai, *n.* < id. + . Profuse tears; கண்ணீர்வெள்ளம். மண்ணவர் கண்மழை பொழிந்தார் (பெரியபு. மனுநீதி. 45).

கண்மறிக்காட்டு-தல் kaṇ-maṟi-k-kāṭṭu-, *v. intr.* < id. + மறி- + . To hint by the eye; கண்குறிப்புக்காட்டுதல். (W.)

கண்மாய் kaṇ-māy, *n.* < கம் + வாய் See கம்மாய். (C.E.M.)

கண்மாயம் kaṇ-māyam, *n.* < கண் + Ocular deception by magic, illusion; visual trick; கண்கட்டுவித்தை. கண்டுங் கண்டிலே னென்ன கண்மாயமே (திருவாச. 5, 42)

கண்மாறு-தல் kaṇ-māṟu-, *v.* <id. + . *intr.* 1. To appear and disappear in a twinkling; தோன்றி உடனே மறைதல். *கண்மாருடவர் (மதுரைக். 642).* 2. To be humbled down from a high position; to be humbled; நிலைகெடுதல். *நலனே . . . கண்மாறின்றே (குறுந். 125).*—*tr.* To be indifferent to, to neglect; புறக்கணித்தல். *அறங் கண்மாறின்று (பு. வெ. 12, இருபாற். 17, கொளு).*

கண்மிச்சில் kaṇ-miccil, *n.* <id. +. See கண்ணூறு. *போக்கும் பொருளாற் கண்மிச்சில் போக்கி (பிரபுலிங். மாயையுற். 48).*

கண்மின்னு-தல் kaṇ-miṉṉu-, *v. intr.* <id. +. See கண்போறிதட்டு-. (W.)

கண்முகப்பு kaṇ-mukappu, *n.* < id. +. Direct view; கண்ணின் முன்னிடம். *நங்கண்முகப் பேமாவேறிச் செல்கின்ற மன்னவரும் (திவ் இயற். 2, 69).*

கண்முகிழ்[1]-த்தல் kaṇ-mukiḻ-, *v. intr.* <id. +. 1. To shut the eyes; கண்மூடுதல். *(கம்பரா. நாகபா. 244.)* 2. To put one's eyes together, become drowsy: to go to sleep; தூங்குதல்.

கண்முகிழ்[2] kaṇ-mukiḻ, *n.* <id. +. Eyelid; இமை. *கண்முகிழ் திறந்தால் (வெங்கைக்கோ. 218).*

கண்முழி kaṇ-muḻi, *n.* <id. + விழி. Vul. for கண்விழி.

கண்மூடி kaṇ-mūṭi, *n.* <id. + மூடு-. Lit., one who has his eyes shut, fig., one who is lacking in mental perception, discernment or foresight; inconsiderate, heedless, reckless person; கவன மில்லாதவன். *Colloq.*

கண்மூடித்தனம் kaṇ-mūṭi-t-taṉam, *n.* <id. +. Folly, recklessness, negligence; கவன மின்மை.

கண்மூடு-தல் kaṇ-mūṭu-, *v. intr.* <id. +. 1. To close the eyelids; இமைகுவித்தல். *கண்மூடி மௌனியாகி (தாயு. சச்சிதா. 5).* 2. To sleep; தூங்குதல். 3. To die, an euphemism; சாதல்.

கண்மை[1] kaṇ-mai, *n.* <id. + மை. Black pigment for the eyelids; கண்ணுக்கிடும் அஞ்சனம்.

கண்மை[2] kaṇmai, *n.* <id. + மை part. 1. Gracious look, favour; sympathy, kindliness; கண்ணோட்டம். (பிங்.) 2. View, scenery; காட்சி. *கண்மையிந்நகர் (கம்பரா. ஒற்றுக். 51).*

கண்ரெப்பை kaṇ-reppai, *n.* <id. +. Eyelash; கண்ணிதழ்.

கண்வட்டம் kaṇ-vaṭṭam, *n.* <id. +. 1. Range of vision, eye-sweep, full reach of one's observation; கண்பார்வைக்குட்பட்ட இடம். *தங்கள் கண்வட்டத்திலே உண்டுடுத்துத்திரிகிற (ஈடு, 3, 5, 2).* 2. Mint; நாணயசாலை. *கண்வட்டக்கள்ளன் (ஈடு).*

கண்வரி kaṇ-vari, *n.* <id. +. Red streaks in the white of the eye; வெள்விழியின் செவ்வரி. (W.)

கண்வலி kaṇ-vali, *n.* <id. +. See கண்ணோவு.

கண்வலிப்பூ kaṇ-vali-p-pū, *n.* <id. + Eye-flower so called because it is used as a medicine for sore-eyes. See நந்தியாவட்டம்.

கண்வழுக்கு-தல் kaṇ-vaḻukku-, *v. intr.* <id. +. To be dazzled, as the eye; கண்கூசுதல். *கண்வழுக்கு சுடர்மாலை (கூர்மபு. திருக்கல். 18).*

கண்வளர்-தல் kaṇ-vaḷar-, *v. intr.* <id. + 1. To sleep; தூங்குதல். *இளந்தளிர்மேற் கண்வளர்ந்த வீசன்தன்னை (திவ். பெரியதி. 2, 10, 1).* 2. To close, as the petals of a flower; குவிதல். *கருங்குவளை கண்வளருங் கழனி (தேவா. 621, 1).*

கண்வளையம் kaṇ-vaḷaiyam, *n.* <id. + *valaya.* Dark ring around the beaten centre of a drumhead; மத்தளத்தின்கண்ணைச் சுற்றியுள்ள வட்டம். *(பாரத. ஒழிபி. 12, உரை.)*

கண்வாங்கு-தல் kaṇ-vāṅku-, *v.* <id. +. *intr.* 1. To attract attention; to be inviting; கண்ணைக்கவர்தல். *காந்தள் கடிசமழுங் கண்வாங் கிருஞ் சிலம்பில் (கலித். 39, 15).* 2. To withdraw attention; to cease to take notice; நோக்கம் ஒழிதல்.—*tr.* To clean out a well, making its springs clear; தூர்வை எடுத்தல். *இதொரு பழங்கிணறு கண் வாங்குகிறதென் (ஈடு, 6, 8, 1).*

கண்வாரு-தல் kaṇ-vāru-, *v. tr.* <id. +. See கண்வாங்கு-. *பழங்கிணறு கண்வாருகிறதென் (திவ். திருமாலை, 36, வ்யா. 120).*

கண்விடு[1]-தல் kaṇ-viṭu-, *v. intr.* <id. +. 1. To break, as the eye of a needle; ஊசிமுதலியவற்றின் காது ஒடிதல். (W.) 2. To form, as butter while churning; வெண்ணெய் திரளுதல். (W.) 3. To melt, as silver; வெள்ளிமுதலியன உருகுதல். *(யாழ். அக.)* 4. To form, as openings in an ulcer; துவாரமுண்டாதல். *Colloq.*

கண்விடு[2]-த்தல் kaṇ-viṭu-, *v. tr.* <id. +. 1. To open the eyes; விழித்துப்பார்த்தல். *கடவுண் மால்வரை கண்விடுத் தன்ன (சிறுபாண். 205).* 2. See கண்திற-, 1. *நோக்கினுற் கண்விடுத்து (சீவக. 180).*

கண்விடுதூம்பு kaṇ-viṭu-tūmpu, *n.* <id. +. Kind of drum; தோற்கருவிவகை. *(சிலப். 3. 27, உரை.)*

கண்விதுப்பழி-தல் kaṇ-vituppaḻi-, *v. intr.* <id. + விதுப்பு +. (Erot.) To blur, as the eyes of a maiden eagerly longing to see her lover; to be distressed in mind as a consequence of

such wistful gazing; தலைவனைக் காண்டற்கு விரைந்து தலைவி வருந்துதல். (குறள், அதி. 118)

கண்விதுப்பு kaṇ-vituppu, *n.* <id. + . Longing of the eyes to see; கண்கள் காண்டற்கு விரைகை. (குறள், அதி. 118, அவதா.)

கண்விழி¹-த்தல் kaṇ-viḻi-, *v. intr.* <id.+. 1. To open the eyes; கண்திறத்தல். 2. To keep awake; தூங்காதிருத்தல். சிவராத்திரியில் கண் விழிக்கவேண்டும். 3. To awake from sleep; நித்திரைநீங்குதல். துயில் கண்விழித் தோன் ஞேளிற்கா ளூன் (சிலப். 16, 195). 4. To dawn, appear; தோன்றுதல். கதிர்க்கடவுள் கண்விழித்த காலையே (சீவக. 1943) 5. To revive, as withered plants after watering; வாடினபயிர் மீண்டுஞ்செழித்தல். (W.)

கண்விழி² kaṇ-viḻi, *n.* <id.+. Pupil of the eye; கண்மணி.

கண்விழிப்பு kaṇ-viḻippu, *n.* <id.+. 1. Wakefulness; விழித்திருக்கை. 2. Watchfulness, circumspection, caution; சாக்கிரதை.

கண்விளி-த்தல் kaṇ-viḷi-, *v. tr.* <id.+. To summon, invite; அழைத்தல். கூற்றுக்கண்விளிக் கும் . . . முரசு (மணி. 1, 30).

கண்வினைஞன் kaṇ-viṉaiñaṉ, *n.* <id.+. See கண்வினையாளன்.

கண்வினையாளன் kaṇ-viṉai-y-āḷaṉ, *n.* <id.+. Smith, artisan; கம்மாளன். (W.)

கண்வெளி-த்தல் kaṇ-veḷi-, *v. intr.* <id. +. To see clearly; to have the power of vision restored after disease; கண்ணொளி தெளிவாதல். (W.)

கண்வெறிப்பு kaṇ-veṟippu, *n.* <id. + . Staring, as from fear or wonder; கண்மருட்சி. (சீவக. 2397, உரை.)

கண்வை-த்தல் kaṇ-vai-, *v. intr.* <id.+. 1. To be benignant, gracious, kind; கிருபை வைத்தல். என்மீது சிறிது கண்வைக்கவேண்டும். 2. To look wistfully; to gaze upon amorously; பெறுதற்கு இச்சை வைத்தல். அவன் அதனிடத்துக் கண்வைத்திருக்கிறான். 3. To cast the evil eye; கண்ணூறு படுத்துதல். அவன் கண்வைத்தால் கேடு தான். 4. To form, as an opening in an ulcer; புண்ணில் துவாரம் உண்டாதல்.

கண்வைத்தியன் kaṇ-vaittiyaṉ, *n.* <id. + . Eye-doctor, one skilled in treating diseases of the eye; கண்சிகிற்சை செய்வோன்.

கணக்கதிகாரம் kaṇakkatikāram, *n.* <கணக்கு + . A treatise on arithmetic by Kāriyār; காரியார் இயற்றிய ஒரு கணிதநூல்.

கணக்கப்பிள்ளை kaṇakka-p-piḷḷai, *n.* <*gaṇaka* + . 1. Village accountant, cashier, bursar, writer, agent, shipping clerk, bill collector; கணக்கன். 2. Man of the *kaṇakkaṉ* caste; ஒரு சாதியான்.

கணக்கன் kaṇakkaṉ, *n.* <*gaṇaka*. [M. *kaṇakkaṉ*.] 1. Accountant, book-keeper; கணக்கெழுதுவோன். (திருவாலவா. 30, 22.) 2. See கணக்கப்பிள்ளை, 1. 3. A certain caste; ஒரு சாதி. (இலக். வி. 52, உரை.) 4. Arithmetician; கணக்கில் வல்லவன். (W.) 5. One who is well versed in the philosophy of religion, or in any science; சாஸ்திரம் வல்லோன். சமயக்கணக்கர் (மணி. 27, 2). 6. The planet Mercury; புதன். (திவா.)

கணக்காசாரம் kaṇakkācāram, *adv.* <கணக்கு + ஆசாரம். According to the account; கணக்குப்படி.

கணக்காய் kaṇakkāy, *adv.* <id. + ஆ-. After the manner of; so; மாதிரி. அந்தக்கணக்காயிருந்தது.

கணக்காய்ச்சல் kaṇa-k-kāyccal, *n.* <கணம்¹ +. See கணைச்சூடு.

கணக்காயர் kaṇakkāyar, *n.* <கணக்கு + ஆய்-. Teachers, instructors; நூலோதுவிப்போர். கணக்காயர் பாடத்தாற் பெற்றதாம் பேதையோர் சூத்திரம் (நாலடி., 314).

கணக்கிடு-தல் kaṇakkiṭu-, *v. tr.* <id. +. To reckon, compute, calculate; அளவிடுதல்.

கணக்கு kaṇakku, *n.* cf. *gaṇaka*. [M. *kaṇakku*.] 1. Number, account, reckoning, calculation, computation; எண். (திவா.) 2. The four simple rules of arithmetic, viz., கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல். 3. Account book, ledger; வரவுசெலவுக்கணக்குக் குறிப்பு. காவலர் கணக்காய் வகையின் வருந்தி (குறுந். 261). 4. Science of arithmetic; கணிதசாஸ்திரம். 5. Order; sequence; முறைமை. அசித்தையும் இவனையுங் காட்டுகிறகணக்கிலே (ஈடு, 3, 4, ப்ர.). 6. Stratagem, artifice, expedient; சூழ்ச்சி. கதமென வேக விடுத்தது நல்ல கணக்கன்றே (பிரபோத. 24, 25). 7. Result, consequence; event; முடிவு. (W.) 8. Sum; தொகை. மொத்தக் கணக்கென்ன? 9. Thing, affair, circumstance; காரியம். என்ன கணக்காக நானலைந் தெய்த்தேன் (சிவப். பிரபந். திருச்செந். நிரோட். 28). 10. Limit; count; அளவு. கணக்கிலாத் திருக்கோலம் (திருவாச. 30, 4). 11. Letter, writing; எழுத்து. (திவா.) 12. Literature; science; நூல். மேற்கணக்கு, கீழ்க்கணக்கு. 13. Litigation; வழக்கு. இக்கணக்கிப்படிக்கார் வெல்லுவார் (திருவாலவா. 41, 28) 14. Way, manner; விதம். புகுவதெக்கணக்கம்மா (இரகு. திக்கு. 163) 15. Orderly arrangement, system; ஒழுங்கான ஏற்பாடு. அவனது செயல்யாவும் கணக்காக இருக்கும்.

கணக்குக்காட்டு-தல் kaṇakku-k-kāṭṭu-, *v. intr.* <கணக்கு +. To render account; கணக்கொப்புவித்தல்.

கணக்குச்சுமத்து-தல் kaṇakku-c-cumattu-, *v.intr.*<id.+. To charge to one's account; கணக்கேற்றுதல்.

கணக்குச்சுருணை kaṇakku-c-curuṇai, *n.* <id.+. Roll or file of accounts on palmyra leaves, kept by a village accountant; கணக்கோலைக்கற்றை.

கணக்குச்சுருள் kaṇakku-c-curuḷ, *n.* <id. +. See கணக்குச்சுருணை.

கணக்குச்சொல்(லு)-தல் kaṇakku-c-col-, *v.intr.* <id.+. To give details of receipts and disbursements; கணக்கு விவரம் சொல்லுதல்.

கணக்குத்தீர்-தல் kaṇakku-t-tīr-, *v. intr.* <id.+. 1. To be closed, as an account; கணக்குப் பைசலாதல். 2. To be made, as a settlement; விவகாரமுடிதல்.

கணக்குப்பார்-த்தல் kaṇakku-p-pār-, *v.* <id.+. *tr.* To reckon, calculate; எண்ணிக் கணக்கிடுதல்.—*intr.* To audit accounts; கணக்குப் பரிசோதித்தல்.

கணக்குப்பிள்ளை kaṇakku-p-piḷḷai, *n.*<id. +. See கணக்கப்பிள்ளை.

கணக்குப்பூட்டு-தல் kaṇakku-p-pūṭṭu-, *v. intr.* <id.+. To post up accounts into the ledger; கணக்கைப்பேரேட்டுக்குக் கொண்டுவருதல். *Loc.*

கணக்குமானியம் kaṇakku-māṉiyam, *n.* <id.+. Land granted rent-free to the village accountant for his services, a service inam; கணக்கனுக்குக்கொடுக்கும் இறையிலி நிலம்.

கணக்குவழக்கு kaṇakku-vaḻakku, *n.* <id. +. 1. Justice, order, regulation; முறைமை. அடியேன் கண்கொள்வதே கணக்குவழக்காகில் (தேவா. 1110, 4) 2. Limit, bound; அளவு. கணக்குவழக்கைக் கடந்தவடி (தேவா. 969, 3). 3. Accounts, pecuniary affairs; அலுவல். அவனுடைய கணக்கு வழக்கு எப்படி இருக்கிறது? 4. Money dealings; கொடுக்கல் வாங்கல். எனக்கும் அவனுக்கும் கணக்கு வழக்கு உண்டு

கணக்கொதுக்கு-தல் kaṇakkotukku-, *v.* <id.+. *intr.* (W.) To settle an account; கணக்குத்தீர்த்தல்.—*tr.* To ruin, reduce to poverty; கெடுத்தல்.

கணக்கொப்பி-த்தல் kaṇakkoppi-, *v. intr.* <id.+. See கணக்கொப்புவி-.

கணக்கொப்புவி-த்தல் kaṇakkoppuvi-, *v.intr.*<id.+. To render accounts; கணக்கைப் பிறரேற்க விவரித்தல்.

கணக்கோலை kaṇakkōlai, *n.*<id.+ ஓலை. 1. Palmyra leaf on which accounts are written; கணக்கெழுதப்பெற்ற ஏடு. 2. Indented palmyra leaves useful for writing accounts; கணக்கெழுதற்கேற்ற ஓலை. (W.)

கணகண-த்தல் kaṇa-kaṇa-, *v. intr.* Onom. 1. To sound, rattle, jingle, tinkle; ஒலித்தல். மேரு திருக்குளம்பிற் கணகணப்ப (திவ். பெரியதி. 4, 4, 8). 2. To feel feverish, as from disease, from exposure to the sun, or from taking spirituous liquors; உடம்பு சூடுறுதல். உடம்பு கணகணக்கிறது.

கணகணப்பு kaṇa-kaṇappu, *n.* <கணகண-. Temperature of the body slightly more than normal; தேககாங்கை. உடம்பு கணகணப்பாயிருக்கிறது.

கணகணெனல் kaṇa-kaṇ-eṉal, *n.* Onom. 1. Tintinnabulation; tinkling, as of bells; chiming; ஒலிக்குறிப்பு. உடைமணி கணகணென (திவ் பெரியாழ். 1, 7, 7). 2. Burning fiercely, as fire with a hollow roar; மிக்கெரிதற் குறிப்பு. நெருப்புக் கணகணென்று எரிகிறது. 3. Feeling feverish; உடம்புச் சூட்டுக் குறிப்பு.

கணகம் kaṇakam, *n.* prob. *gaṇa*. Division of an army consisting of 27 chariots, 27 elephants, 81 horses and 135 footmen; தனித்தனி 27 தேர் யானைகளும், 81 குதிரைகளும், 135 காலாட்களுமுள்ள படைப்பிரிவு. (பிங்.)

கணகன் kaṇakaṉ, *n.* <*gaṇaka*. 1. Village accountant; கணக்கப்பிள்ளை. இவ்வூர்க் கணகன் பஞ்சநதி லக்ஷ்மணன் (S.I.I. iii, 88). 2. Astrologer; சோதிடன். (சங். அக.)

கணச்சூடு kaṇa-c-cūṭu, *n.* <கணம்[1]+. See கணைச்சூடு.

கணசங்கியாபாகம் kaṇa-caṅkiyā-pākam, *n.*<*gaṇa*+*saṅkhyā*+. Aggregate number of shares into which the lands of a village are, at the time of the original grant, equally divided; கிராமப்பங்குகளின் பிரிவுத்தொகை. *Loc.*

கணத்தார் kaṇattār, *n.* <*gaṇa*. Managers of village affairs; ஊர்க்காரியநிர்வாகிகள். (I.M.P. Tj. 569.)

கணத்தி kaṇatti, *n.* 1. A prepared arsenic; ஒருவகை வைப்பரிதாரம். (மூ. அ.) 2. Small Indian Oak. See செங்கடம்பு (L.)

கணதரன் kaṇa-taraṉ, *n.* < *gaṇa*+*dhara*. Arhat; அருகன். கணதர ரேறுசெந் தாமரைகாண் (திருநூற். 59).

கணந்துள் kaṇantuḷ, *n.* A kind of bird; பறவைவகை. (சிலப். 10, 117, உரை.)

கணநாதநாயனார் kaṇa-nāta-nāyaṉār, *n.* <*gaṇa*+. Name of a canonized Śaiva saint,

one of 63; அறுபத்துமூவர் நாயன்மாருள் ஒருவர். (பெரியபு.)

கணநாதன் kaṇa-nātaṉ, *n.* <*gaṇa-nātha*. 1. Chief of Śiva's hosts; சிவகணத்தலைவன். நடந் தெதிர்ந்த கணநாதரை யெல்லாம் (கந்தபு. தாரக. 123). 2. Gaṇēśa; விநாயகன். 3. See கணநாத நாயனார். கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியேன் (தேவா. 737, 6).

கணப்பறை kaṇa-p-paṟai, *n.* A kind of drum; தோற்கருவிவகை. (சிலப். 3, 27, உரை.)

கணப்பு kaṇappu, *n.* cf. கணகண-. 1. Fire kindled to dry one who is wet or to give warmth to one who feels cold; குளிர்காயுந் தீ. 2. See கணப்புச்சட்டி.

கணப்புச்சட்டி kaṇappu-c-caṭṭi, *n.* <கணப்பு+. Earthen vessel with charcoal etc. used for warming oneself; a kind of earthen grate used in Indian households; குளிர்காய்தற் குரிய தீப்பெய்கலம்.

கணப்பெருமக்கள் kaṇa-p-peru-makkaḷ, *n.* <*gaṇa*+. Managers of village affairs in ancient times; ஊர்க்காரியநிர்வாகிகள். (I.M.P. Cg. 516.)

கணப்பொருத்தம் kaṇa-p-poruttam, *n.* <id.+. 1. (Poet.) Rule of propriety which lays down that the first word in a poem shall be one of *nīr-k-kaṇam, mati-k-kaṇam, intira-kaṇam*, or *nila-k-kaṇam*, one of ten *ceyyuṇmutaṉ-moḻi-p-poruttam*, q. v.; செய்யுண் முதன்மொழிப்பொருத்தவகை. (வெண்பாப். முதன். 20.) 2. (Astrol.) Correspondence between the horoscopes of the prospective bride and bridegroom in respect of the three *kaṇams*, viz., *tēva-kaṇam, irāṭcata-kaṇam, māṉuṭa-kaṇam*, one of ten *kaliyāṇa-p-poruttam*, q.v.; கலியாணப் பொருத்தங்களுள் ஒன்று. (சோதிட. சிந். 195.)

கணப்பொழுது kaṇa-p-poḻutu, *n.* <*kṣaṇa* +. Instant, moment of time; நொடிப்பொழுது.

கணபங்கம் kaṇa-paṅkam, *n.* <id.+*bhaṅga*. That which is of momentary duration, transient; க்ஷணத்தில் தோன்றியழிவது. புத்தி கண பங்கமெனப் புத்திகெட்டபுத்தனுரை (சிவப். பிரபந். சிவஞா. நெஞ்சு. 210).

கணபங்கவாதி kaṇa-paṅka-vāti, *n.* <id. +id.+. (Phil.) One who asserts that the universe is incessantly appearing every instant and is also as rapidly dissolving; பிரபஞ்சங் கணந்தோறுந்தோன்றியழியும் என்று வாதிப்பவன். (சி. போ. பா. அவை.)

கணபதி kaṇa-pati, *n.* <*gaṇa-pati*. 1. Gaṇēśa, who is the chief of Śiva's hosts; விநாயகன். (திவா.) 2. Name of an Upaniṣad; நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று.

கணபதியணி kaṇapati-y-aṇi, *n.* <id.+. Bermuda grass, so called because it is sacred to Gaṇēśa. See அறுகு. (தைலவ. தைல. 132.)

கணபர் kaṇa-par, *n.* <*gaṇa-pa*. Śiva's chief attendants, as guardians of their hosts; சிவகணத்தலைவர். கணபர்கள் வானோரொடு (கோயிற்பு. திருவிழா. 47).

கணபிச்சை kaṇa-piccai, *n.* <*kaṇa*+. Rice gleaned by an householder, as alms from door to door; இல்வாழ்வானால் வீடுதோறும் வாங்கப்பெறுந் தண்டுல பிட்சை. (சைவச. பொது. 257, உரை.)

கணம்[1] kaṇam, *n.* prob. கணகண-. Child's disease. See கணை[2], 1. (பிங்.)

கணம்[2] kaṇam, *n.* <*kaṇa*. 1. Trifle, triviality; அற்பம். (சூடா.) 2. See கணபிச்சை. (சைவச. பொது. 257.)

கணம்[3] kaṇam, *n.* <*kaṇā*. Long pepper. See திப்பலி. (பிங்.)

கணம்[4] kaṇam, *n.* <*gaṇa*. 1. Group; collection; class; tribe; clan; flock; herd; series; கூட்டம். கணங்கொண்டு சுற்றத்தார் (நாலடி, 25). 2. Company, assembly, concourse of people; திரண்டோர். (திவா.) 3. Demon; devil; பேய். (பிங்.) 4. Constellation, star; நட்சத்திரம். (பிங்.) 5. Celestial hosts, divided into 18 classes, viz., அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், கந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பிசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசியர், போகபூமியர்; பதினெண்கணம். (பிங்.) 6. The number 18; பதினெட்டென்னும் எண். (தைலவ.) 7. See கணப்பொருத்தம், 2. (விதான. கடிமண. 4.) 8. Division of an army. See கணகம். (திவா.) 9. Sphericity; globularity; திரட்சி. கணங்குழை நல்லவர் (கலித். 71, 19). 10. Circle; வட்டம். (பிங்.)

கணம்[5] kaṇam, *n.* <*kṣaṇa*. Moment; shortest duration of time, as measured by a snap with the fingers; காலநுட்பம். வெகுளி கணமேயுங் காத்தலரிது (குறள், 29).

கணம்புல்லநாயனார் kaṇam-pulla-nāyaṉār, *n.* A canonized Śaiva saint, one of 63; அறுபத்துமூவர் நாயன்மாருள் ஒருவர். (பெரியபு.)

கணமாந்தம் kaṇa-māntam, *n.* <கணம்[1]+. One of eight *māntam* arising out of fever and disordered bowels; மாந்தவகை. (W.)

கணமூலி kaṇamūli, *n.* Buffalo tongue, milk-hedge. See எருமைநாக்கி. (W.)

கணவம் kaṇavam, *n.* Pipal. See அரசு. சாகைக ணிறைபணைக் கணவம் (அரிசமய. பரமபத. 2).

கணவர் kaṇavar, *n.* <*gaṇa*. Members of a group or assemblage; கூட்டத்தார். பூதகணவர் (கந்தபு. திருக்கயி. 8).

கணவலர் kaṇa-v-alar, *n.* prob. id. +. Sweet Oleander. See அலரி. கள்ளார்தழாயுங் கணவலரும் (திவ். பெரியதி. 11, 7, 6).

கணவன் kaṇavaṉ, *n.* prob. கண். [M. *kaṇavaṉ*.] Husband; கொழுநன். எக்கணவ ரெக்தோண் மேற் சேர்க்தெழினும் (நாலடி, 385).

கணவாட்டி kaṇavāṭṭi, *n.* Woman of the *kaṇavāḷam* caste; கணவாளக்சாதிப் பெண். (கன். 276, மயிலை)

கணவாய்[1] kaṇavāy, *n.* [T. *kanama*, K. *kaṇave*.] Defile between hills; mountain pass, ravine, ghat; மலைகளுக்கிடையுள்ள சிறுவழி. (பிங்.)

கணவாய்[2] kaṇavāy, *n.* Cuttlefish, a cephalopod, *sepia;* சிப்பிவகை. (J.)

கணவாய்மை kaṇavāymai, *n.* <கணவாய்[2] + மை. Black liquid found in the shell of a cuttlefish, sometimes used for ink; ஒருவகைச் சிப்பியின் கருநீர். (W.)

கணவாயோடு kaṇavāy-ōṭu, *n.* <id. +. Shell of the cuttlefish; கணவாய்ச் சிப்பியின் ஓடு.

கணவாளம் kaṇavāḷam, *n.* An ancient caste; ஒருசாதி. கணவாளகுலத்தினன் செட்டிப்பிள்ளையப்பன் (பெருந்தொ. 1349).

கணவாளன் kaṇavāḷaṉ, *n.* Man of the *kaṇavāḷam* caste; கணவாளக்சாதியான். (இலக். வி. 52, உரை.)

கணவிரம் kaṇaviram, *n.* See கணவீரம். கணவிர மாலை (மணி. 3, 104).

கணவீரம் kaṇavīram, *n.* <Pkt. *kaṇavira* <*karavīra*. Red Oleander; செவ்வலரி. பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை (திருமுரு. 236).

கணன்[1] kaṇaṉ, *n.* <கள்- + ந் + அன். Thief, rogue; திருடன். (சைவச. பொது. 248.)

கணன்[2] kaṇaṉ, *n.* <*gaṇa*. Collection, aggregation, whole series; தொகுதி. கணனடங்கக் கற்றானு மில் (சிறுபஞ். 31).

கணனம் kaṇaṉam, *n.* <*gaṇana*. (Astron.) Calculation of the movement of planets etc.; கிரகநடை முதலியன கணிக்கை.

கணனை kaṇaṉai, *n.* <*gaṇanā*. Number; எண். பரிசங் கணனை பரிமாணம் (பிரபோத. 42, 2).

கணாதமதம் kaṇāta-matam, *n.* <*kaṇāda* +. The Vaiśeṣika branch of the Nyāya system of philosophy, founded by Kaṇātaṉ; வைசேடிக மதம்.

கணாதர் kaṇātar, *n.* <*kāṇāda*. Logicians; தார்க்கிகர். ஆய்ந்த கணாதர்கள் (திருக்காளத். பு. 5, 41).

கணாதன் kaṇātaṉ, *n.* <*kaṇāda*. Lit., 'atom-eater', name of the founder of the Vaiśeṣika system of Indian Philosophy, which is closely allied to the Nyāya system with which it came to be syncretized at later stages, the word kaṇāda having reference prob. to the original relation of Indian atomism to the Vaiśeṣika system; வைசேடிக மதாசாரியனான முனிவன். அக்கபாதன் கணாதன் சைமினி (மணி. 27, 82).

கணாமூலம் kaṇā-mūlam, *n.* <*kaṇā* +. Long-pepper root; திப்பலிவேர். (தைலவ. தைல. 82.)

கணாரிடல் kaṇār-iṭal, *n.* <கணார் Onom. + இடு-. Ringing, as of a bell; sonorous pealing; clanging, as sounding brass; echoing, as rock; ஒலிக்கை. (J.)

கணி[1] kaṇi, *n.* cf. அகணி. Agricultural tract; மருதநிலம். (பிங்.)

கணி[2] kaṇi, *n.* <*gaṇi*. 1. Learned man; one who is well versed in some branch of knowledge; நூல்வல்லவன். கணிபுகழ் காளை (சீவக. 722). 2. Painter; சித்திரமெழுதுவோன். நற்கணி நேமித்தெழுதாச் சித்திரம் (திருப்பு. 597). 3. Astrologer; சோதிடன். விளைவெல்லாங் கண்ணி யுரைப்பான் கணி (பு. வெ. 8, 20). 4. East Indian Kino. See வேங்கை. (திவா.) 5. Science; any branch of knowledge; கலை. பெருகுங் கணியிற் கணி (சீவக. 1062)

கணி[3]**-த்தல்** kaṇi-, *11 v. tr.* <*gaṇ*. 1. To compute, reckon, calculate, count; கணக்கிடுதல். 2. To estimate, conjecture, surmise; அளவு குறித்தல். கணித்த நாள்களேழ் (சீவக. 2518). 3. To esteem, honour, respect, regard; மதித்தல். அவன் என்னைக் கணிக்கவில்லை. 4. To read, study; படித்தல். கணியாது முழுதுணர்ந்த (சூளா. இரத. 64). 5. To create; சிருட்டித்தல். மலரின்மேலான் கணித்த வுலகு (பிரமோத். 21, 53). 6. To repeat mentally in worship, as mantras; மானதமாகச் செபித்தல். திருவஞ்செழுத்து அவ்விதிப்படியறிந்து கணிக்கப்படும் (சி. போ. பா.).

கணிக்காரிகை kaṇi-k-kārikai, *n.* <கணி[2] +. Female fortune-teller, as a gypsy; குறிசொல்லும் பெண். (தொல். பொ. 60, உரை, பழையபதிப்பு.)

கணிகம்[1] kaṇikam, *n.* cf. *gaṇa*. One thousand millions; நூறுகோடி. (W.)

கணிகம்[2] kaṇikam, *n.* <*kṣaṇika*. 1. Moment, short duration of time; காலநுட்பம். காலங் கணிகமெனுங் குறுநிகழ்ச்சியும் (மணி. 27, 191). 2. That which is momentary, transient; கணப்பொழுது இருக்கக்கூடியது. 3. Lingam made of earth, rice, or any material, near at hand, for worship,

for the occasion; தாற்காலிக பூசைக்குரியதாய் மண் முதலியவற்றாற் செய்யப்பெறும் இலிங்கம். (சைவச. பொது. 555, உரை.)

கணிகவெற்பு kaṇika-veṟpu, *n.* < கணிகம்[2] + The hill of *Tiru-t-taṇi*, in the North Arcot District; திருத்தணிகைமலை. (தணிகைப்பு. வீராட். 121.)

கணிகன் kaṇikaṉ, *n.* < *gaṇi.* Astrologer; சோதிடன். *கணிகரிம் மைந்தன் வைகிற் காவல னிறக்கு மென்ன* (காசிக. வீரேசன். 11).

கணிகாரம் kaṇikāram, *n.* < *karṇikāra.* Red cotton tree. See கோங்கு. *கணிகாரங் கொட்குங்கொல்* (கலித். 143, 5).

கணிகாரி kaṇi-kāri, *n.* See கணிக்காரிகை. (தொல். பொ. 60, உரை.)

கணிகை kaṇikai, *n.* < *gaṇikā.* 1. Harlot, courtesan, prostitute; பொதுமகள். *கணிகை யொருத்தி கைத்தூணல்க* (மணி. 16, 6). 2. Eared jasmine. See முல்லை. *கணிகைதுன் றளப்பில் கோங்கு* (இரகு. இந்தும. 14).

கணிச்சி kaṇicci, *n.* 1. Battle-axe; மழு. *மாற்றருங் கணிச்சி மணிமிடற்றோன்* (புறநா. 56, 2). 2. Kind of pick-axe for breaking stone; குந்தாலி. *கணிச்சிகளிற் கயம்பட நன்கிடித்து* (சீவக. 592). 3. Goad for urging the elephant; யானைத் தோட்டி. (பிங்.) 4. Chisel; உளி. (திவா.) 5. Axe, hatchet; கோடாலி. (பிங்.) 6. Knife for cutting the stalk of the betel; இலைமூக்கரி கத்தி. (பிங்.)

கணிச்சியோன் kaṇicciyōṉ, *n.* < கணிச்சி. Śiva, who holds the battle-axe in his hand; மழுவேந்தியாகிய சிவன். *கணிச்சியோன் சினவலின்* (கலித். 2, 6).

கணிசக்காரன் kaṇica-k-kāraṉ, *n.* < கணிசம் +. Estimable person; மதிப்புடையவன்.

கணிசம் kaṇicam, *n.* < *gaṇ.* 1. Estimating, guessing, rough calculation; மதிப்பு. *கைக் கணிசமாகத் தூக்கிப்பார்த்தான்.* 2. Honour, dignity, respectability, worth, weight of character; மேம்பாடு. 3. Measure, weight in the hand, size, bulk, in a limited sense; அளவு. ஒருபாக்குக்கணிசம் அபின். (W.) 4. Voice; சப்தம். *பெருமானை . . . யேத்திவசமாக்கிக் கணிசங் கொண்டு* (ஈடு, 6, 9, 3).

கணிசம்பார்-த்தல் kaṇicam-pār-, *v.* < கணிசம் +. *tr.* 1. To estimate, value, appraise; மதிப்பிடுதல். 2. To estimate roughly the weight of an article by taking it in the hand and shaking it; கையால் நிறையறிதல். (W.)—*intr.* (W.) 1. To be zealous of one's own dignity; தன் மதிப்புக்காத்தல். 2. To discriminate in respect of caste, or of rank; to examine worth; தகுதியறிதல்.

கணிசி-த்தல் kaṇici-, *11 v. tr.* < id. 1. To consider, meditate, contemplate; சிந்தித்தல். *இவன் வளர்ந்தருளுகைக்குக் கணிசித்தபடியைக் கண்டு* (ஈடு, 7, 4, 1). 2. To desire, wish for; விரும்புதல். *மோக்ஷபூதன் மோக்ஷிபக்கல் கணிசிப்பது திருவடிகளையிறே* (ஈடு, 1, 1, 1). 3. To honour, esteem; நன்கு மதித்தல். 4. To discern; உய்த்துணர்தல். *கமல வல்லியைக்கண்டு மன்மதவிகார மென்று கணிசித்து* (கோயிலொ. 4).

கணிதசாஸ்திரம் kaṇita-cāstiram, *n.* < *gaṇita* +. 1. Mathematics; கணிதநூல். 2. Astronomy, astrology; சோதிட நூல்.

கணிதம் kaṇitam, *n.* < *gaṇita.* 1. Methods of arithmetical calculation; processes of computation, of which eight are mentioned, viz., சங்கலிதம் (கூட்டல்), விபகலிதம் (கழித்தல்), குணனம் (பெருக்கல்), பாகாரம் (வகுத்தல்), வர்க்கம், வர்க்கமூலம், கனம், கனமூலம்; கணக்குவகை. (பிங்.) 2. Arithmetic, mathematics; கணிதசாஸ்திரம். 3. Astrology including astronomy; சோதிடம். (தொல். பொ. 75, உரை.) 4. That which is predicted by astronomy or prognosticated by astrology; கணிக்கப்பட்டது. 5. Measure, limit; அளவு. *கணிதமில்புகழ்* (சேதுபு. கந்தமா. 86).

கணிதரத்தினம் kaṇita-rattiṉam, *n.* < id +. Name of a mathematical work in Tamil; ஒரு தமிழ்க் கணிதநூல். (கணக்கதி. பாயி.)

கணிதன் kaṇitaṉ, *n.* < id. 1. Astronomer, astrologer; சோதிடன். *கணிதர்சொற்ற வோரையில்* (நைடத. அரசா. 9). 2. Arithmetician, mathematician; கணக்கறிவோன். (W.) 3. Accountant, cashier, secretary, clerk; கணக்கெழுதுவோன். (W.)

கணிப்பு kaṇippu, *n.* < கணி-. 1. Computing, counting; அளவிடுகை. *வெம்படை கணிப்பில கொண்ட . . . தேர்* (கந்தபு. முதனாட். 42). 2. Esteeming, honouring, reverencing, venerating; கௌரவிக்கை. *கமைக் கணிப்பிலன்* (சேதுபு. இலக். 9). 3. Estimating, appraising; மதிப்பிடுகை.

கணிமேதாவியார் kaṇi-mētāviyār, *n.* < *gaṇi* +. Name of the author of *Elāti* and *Tiṇai-mālai-nūṟṟaimpatu*; ஏலாதி, திணைமாலை நூற்றைம்பது என்ற நூல்களின் ஆசிரியர்.

கணியான் kaṇiyāṉ, *n.* < id. Man of a low caste noted for his skill in magic and his knowledge of astrology; ஒரு சாதியான். (G. Tn. D. 227.)

கணிலெனல் kaṇil-eṉal, *n.* See கணீரெனல். *கவின்மணி கணிலென்னும்* (கம்பரா. மூலபல. 228).

கணிவன் kaṇivaṉ, *n.* < *gaṇi.* Astrologer; சோதிடன். *தொல்கேள்விக் கணிவன்* (பு. வெ. 8, கொளு, 20).

கணிவன்முல்லை kaṇivaṉ-mullai, *n.* < கணி வன் +. (Puṟap.) Theme of praising the fame of the skilled astrologer; சோதிடநூல்வல்லவனது கீர்த்தியைச் சொல்லும் புறத்துறை. (பு. வெ. 8, 20)

கணீரெனல் kaṇīr-eṉal, *n.* Onom. Ringing, as of a bell; clanging, as sounding brass; speaking audibly and clearly with a metallic ringing of voice; ஒலிக்குறிப்பு.

கணு kaṇu, *n.* < கண். 1. Joint of a bamboo, cane, etc.; மூங்கில்முதலியவற்றின் கண். (சைவச. பொது. 358.) 2. Node; மரமுதலியவற்றின் கணு. 3. Bamboo; மூங்கில். (மலை.) 4. Knuckle; joint of the spine; vertebra; அவயவப்பொருத்து. 5. Tubercle of a bone; எலும்புக்கணு. (W.)

கணுக்கால் kaṇu-k-kāl, *n.* < கணு +. Ankle; காற்பரடு. *Colloq.*

கணுக்கிரந்தி kaṇu-k-kiranti, *n.* < id. +. Venereal ulcer affecting the joints in the body; உடற்சந்துகளிலுண்டாகும் சிலந்தி. (W.)

கணுக்கை kaṇu-k-kai, *n.* < id. +. Wrist; மணிக்கட்டு. *Loc.*

கணுப்பாலை kaṇu-p-pālai, *n.* < id. +. Obtuse-leaved Ape Flower. See கரும்பாலை.

கணுமாந்தம் kaṇu-māntam, *n.* < id. +. Whitlow; நகச்சுற்று. (M.L.)

கணுவட்டு kaṇuvaṭṭu, *n.* Small bunch of plantains; சிறுவாழைக்குலை. (J.)

கணுவவரை kaṇu-v-avarai, *n.* < கணு +. A kind of pulse that bears fruit in its boughs also; அவரைவகை. (W.)

கணுவிரல் kaṇu-viral, *n.* < id. +. Knuckle; விரற்கணு.

கணுவை kaṇuvai, *n.* A kind of drum; ஒருவகைத் தோற்கருவி. கணுவை யூமை சகடையோ டார்த்த வன்றே (கம்பரா. பிரமாத். 5).

கணேசன் kaṇēcaṉ, *n.* < *gaṇēśa*. Gaṇēśa, son of Śiva, as the overlord of Śiva's hosts; விநாயகன்.

கணை[1] kaṇai, *n.* 1. Cylindrical or globular shape; திரட்சி. கடுவிசைக் கணைக்கோல் (மலைபடு. 380). 2. Arrow; அம்பு. கணைகொடிது (குறள், 279). 3. Arrow-head; அம்பினலகு. கணைக்கோ லெயுங் குனி சிலை (சீவக. 90). 4. The 11th *nakṣatra*; பூரநாள். (பிங்.) 5. Wooden handle of a hoe, of a pick-axe, or of other tool; ஆயுதக்காம்பு. மண்வெட்டி யின் கணை. 6. Curved pole of a palanquin; சிவிகையின் வளைகொம்பு. சிவிகைக் கணை. 7. See கணைக்கால். 8. See கணையமரம். 9. Sugar-cane; கரும்பு. (மலை.)

கணை[2] kaṇai, *n.* < கணம்[1]. 1. See கணைச்சூடு. 2. A cattle disease; கால்நடை வியாதியு ளொன்று. *Loc.*

கணை[3] kaṇai, *n.* < *kaṇā*. Long pepper. See திப்பலி. (தைலவ.)

கணைக்கட்டு kaṇai-k-kaṭṭu, *n.* < கணை[1] +. Bundle of arrows; அம்புக்கட்டு. (திவா.)

கணைக்கால் kaṇai-k-kāl, *n.* < id. +. 1. The shin, forepart of the leg between the knee and the ankle; முழந்தாளுக்கும் பரட்டுக்கும் இடையிலுள்ள உறுப்பு. பூங்கணைக்காற் கொரு பரிசு தான் பொரும் (கம்பரா. உருக்கா. 43). 2. Main stem of a flower, as of a lotus; திரண்ட நாளம். கணைக்கா லலர்கூம்ப (கலித். 119, 5).

கணைக்கை kaṇai-k-kai, *n.* < id. +. Fore-arm, *antebrachium*; முன்கை. *Loc.*

கணைக்கொம்பன் kaṇai-k-kompaṉ, *n.* < id. +. Ox with stunted horns; கட்டைக் கொம்புள்ள எருது. (W.)

கணைச்சூடு kaṇai-c-cūṭu, *n.* < கணை[2] +. A disease of children, *Tabes mesenterica*; குழந்தை நோய் வகை.

கணைப்புல் kaṇai-p-pul, *n.* Sticking-grass. See ஒட்டுப்புல். (W.)

கணைமார்க்கம் kaṇai-mārkkam, *n.* < கணை[1] +. A pace of the horse, resembling the straight course of an arrow; அசுவகதியு ளொன்று. (திருவாலவா. 28, 58.)

கணைமூங்கில் kaṇai-mūṅkil, *n.* A plant growing in damp places. See பொன்னுங்கரணி. *Loc.*

கணையம் kaṇaiyam, *n.* < கணை[1]. 1. Club, used as a weapon; தண்டாயுதம். அம்பொடு கணையம் வித்தி (சீவக. 757). 2. Curved club; வளைதடி. தண்டமாலங் கணையங் குலிசாயுத மாதியாக (கந்தபு. தாரக. 157). 3. Post to which an elephant is tied; யானைத்தூண். (சீவக. 81, உரை.) 4. Jungle growth specially formed to serve as a protective barrier to a fort; காவற்காடு. (பிங்.) 5. Fort; கோட்டை. அஞ்சுவர்களோ கணையத்துக்குள்ளேயிருப்பார் (ஈடு, 5, 4, 7). 6. See கணையமரம். அவன் களிறுதாம் கணைய மரத்தால் தடுக்கப்பட்ட கதவைப் பொருது (புறநா. 97, உரை). 7. War; போர். (பிங்.) 8. A kind of drum; வாத்தியவகை. (கந்தபு. கயமுகனு. 214.)

கணையமரம் kaṇaiya-maram, *n.* < கணையம் +. 1. Cross-bar of wood set behind the doors of a fortress; கோட்டை மதிற்கதவுக்குத் தடையாகத் தறுக்கேயிடும் எழு. (புறநா. 98, உரை.) 2. Cross-bar, toll bar, wooden bar, set to bar an entrance; தாழ்க்குமரம்.

கணையாழி kaṇai-y-āḻi, *n.* < கணை[1] + . Finger-ring, signet ring; முத்திரைமோதிரம்.

கணையாழிமோதிரம் kaṇai-y-āḻi-mōtiram, *n.* < கணையாழி + . See **கணையாழி**. (W.)

கணையுலக்கை kaṇai-y-ulakkai, *n.* < கணை[1] + . Top of a pestle, without the ferrule; உலக்கைக்கட்டை. (W.)

கணைவெட்டை kaṇai-veṭṭai, *n.* < கணை[2] + . Tuberculosis in the mesenteric glands; ஒருவகை வெட்டைநோய். (M.L.)

கத்தக்கதி-த்தல் katta-k-kati-, *v. intr.* Redupl. of கதி-. To increase vastly, grow mmensely; நிரம்பமிகுதல். *கத்தக்கதித்துக் கிடந்த பெருஞ்செல்வம்* (திவ். பெரியாழ். 1, 9, 3).

கத்தக்காம்பு katta-k-kāmpu, *n.* < U. *kath* + Malay *gambier*. Extract prepared from the eaves and young shoots of a Malay shrub, *Uncaria gambier*, used in mastication with betel; தாம்பூலத்தோடு வாயிலிடும் ஒருபண்டம்.

கத்தணம் kattaṇam, *n.* [T. *kattaḷamu.*] Jacket, tunic, coat of mail; கவசம். *கத்தணங் கடிது பூண்டார்* (இரகு. மீட்சிப். 7).

கத்தபம் kattapam, *n.* < *gardabha.* Ass; கழுதை. (திவா.)

கத்தம் kattam, *n.* < *karda.* Mire, dung, sloppy mud of a cow-house; மலச்சேறு. *கத்தத் தொக்குப்பை* (திருப்பு. 432).

கத்தரி[1] kattari, *n.* Brinjal, Egg-Plant, m. sh., *Solanum melongena;* செடிவகை. (பதார்த்த. 685.)

கத்தரி[2] kattari, *n.* < *kartarī.* 1. Scissors, shears; கத்தரிக்கோல். 2. Rat trap; எலிப்பொறி. 3. A species of snake; பாம்புவகை.

கத்தரி[3]**-த்தல்** kattari-, *11 v.* < id. [K. *kattarisu.*] *tr.* 1. To cut with scissors, clip, snip, shear; கத்தரியால் வெட்டுதல். (திவா.) 2. To gnaw, nibble off, as insects, as vermin; புழுவரித்தல். 3. To cut away, to chop off; அறுத்தல். *தலைபத்துங் கத்தரிக்க வெய்தான்* (கந்தால. 22). 4. To separate from, break away from friendship; நட்புப்பிரித்தல்.—*intr.* 1. To flash, as priming powder; to go out, as a match or a lighted bamboo; to miss fire; நெருப்பு ஒழுங்காய்ப்பற்றமல் இடைவிடுதல். 2. To divide, fork, as a path; to branch off; கவராதல். *வழி கத்தரித்துப்போகிறது.* 3. To change, alter, as fortune; மாறுபடுதல். *அதிருஷ்டம் கத்தரித்துப் போயிற்று.*

கத்தரி[4] kattari, *n.* < *kṛttikā*. Period of the greatest heat in summer, usually the fortnight from 23rd *Cittirai* to 7th *Vaikāci*. See அக்கினி நட்சத்திரம். *Loc.*

கத்தரிக்கரப்பான் kattari-k-karappāṉ, *n.* prob. கத்தரி[1] + . A kind of eruption; கரப்பான்வகை.

கத்தரிக்கோல் kattari-k-kōl, *n.* < கத்தரி[2] + . Scissors, shears, snuffers; கத்தரிக்குங் கருவி.

கத்தரிகை kattarikai, *n.* < *kartarikā.* 1. Scissors, shears; கத்தரிக்கோல். *மயி ரரிதற்கொரு கத்தரிகை தருகென* (பெருங். வத்தவ. 14, 7). 2. (Nāṭya.) Gesture with one hand in which the forefinger and the middle finger are held together and pointed upward, while the thumb and the ring finger remain bent, the little finger being kept stretched; இணையா வினைக்கைவகை. (சிலப். 3, 18, உரை.)

கத்தரிகைக்கால் kattarikai-k-kāl, *n.* < கத்தரிகை + . (W.) 1. Shanks of scissors; கத்தரிக்கோலின் அலகு. 2. Beams or poles crossed and placed on the ground for supporting a weight; கத்தரிபோற் பிணைத்த கால். 3. Legs of a camp-table or camp-chair; நாற்காலி முதலியவற்றின் மடக்குக்கால்.

கத்தரிநாயகம் kattari-nāyakam, *n.* Chinese Anise. See பெருஞ்சீரகம். (மலை.)

கத்தரிப்புழு kattari-p-puḻu, *n.* < கத்தரி[1] + . Small worm or insect found in the brinjal; கத்தரிச் செடியிலுண்டாகும் புழுவகை.

கத்தரிமணியன் kattari-maṇiyaṉ, *n.* prob. கத்தரி- + . A kind of poisonous rat; எலிவகை. (W.)

கந்தோர் kantōr, *n.* <Sinh. *kandōruva*. Office: உத்தியோகசாலை. (J.)

கப்சா kapcā, *n.* < U. *kabza*. Lie, falsehood; பொய்வார்த்தை.

கப்சாவீசு-தல் kapcā-vīcu-, *v. intr.* <கப்சா +. To spread false rumours; பொய்வார்த்தை கட்டிச்சொல்லுதல். *Loc.*

கப்பங்கட்டு-தல் kappaṅ-kaṭṭu-, *v. intr.* <கப்பம்[1] +. To pay tribute, as a petty king to his suzerain; திறைகொடுத்தல்.

கப்பச்சு kappaccu, *n.* perh. *karman* + *akṣa*. A blacksmith's tool; கம்மாளர்கருவியில் ஒன்று. (யாழ். அக.)

கப்படம் kappaṭam, *n.* < *karpaṭa*. 1. Clothing in rags, tatters; கந்தற்சீலை. தேவசாதி கப்படங் கட்டிக்கொண்டு செல்ல (ஈடு, 6, 4, 5). 2. Cloth for wear; ஆடை. அரையிற்கூட்டுமைக் கப்படம் (பதினொ. நம்பியாண். திருத்தொண். 80).

கப்படா kappaṭā, *n.* Waist; அரை. (யாழ். அக.)

கப்படிமரம் kappaṭi-maram, *n.* <கப்பு +. A kind of tree with branches from the root; மர வகை. (W.)

கப்பணம்[1] kappaṇam, *n.* cf. *kapana*. 1. Javelin; கைவேல். (திவா.) 2. Small caltrop; ஆனைநெருஞ்சிமுள்போல இரும்பால் பண்ணிய கருவி. கப்பணஞ் சிதறினன் (சீவக. 285).

கப்பணம்[2] kappaṇam, *n.* 1. A kind of necklace; gold collar; ஒரு கழுத்தணி. (W.) 2. Iron collar for the neck worn by religious mendicants; அரிகண்டம். (W.) 3. Saffron cord around the wrist worn, as an amulet or as preliminary to the performance of a ceremony; காப்புநாண். *Loc.* 4. Fibre rope; கொச்சைக் கயிறு. *Loc.*

கப்பம்[1] kappam, *n.* [T. *kappamu*, K. Tu. *kappa*, M. *kappam*.] Tribute, as paid by an inferior prince to his suzerain; அரசர்க்கிடுந் திறை. (திவா.)

கப்பம்[2] kappam, *n.* <Pkt. *kappa* <*kalpa*. See கற்பம்[8]. கப்பத் திந்திரன் காட்டிய நூலின் (சிலப். 11, 154).

கப்பரை kapparai, *n.* <Pkt. *khappara* <*karpara*. 1. Bowl of a beggar or mendicant; பிச்சைக்கலம். கப்பரை கைக்கொள வைப்பவர் (திருப்பு. 1147). 2. Earthen vessel; மட்கலம். கப்பரைதனி லுணவாகா (காசிக. இல்லறந். 35). 3. Vessel for keeping sacred ashes in temples; விபூதிக்கலம். (சங். அக.) 4. Brass vessel; கிடாரம். (யாழ். அக.)

கப்பல் kappal, *n.* [T. *kappali*, M. Tu. *kappal*.] Ship, sailing vessel; மரக்கலம். கப்பல் பிழைத்துக் கரைகாணும் (ஒழிவி. சத்திநி. 22).

கப்பல்மிளகு kappal-miḷaku, *n.* <கப்பல் +. Chilli. See மிளகாய், 1. *Loc.*

கப்பல்வாழை kappal-vāḻai, *n.* <id. +. Red-costate-leaved Banana. See ரஸ்தாளி. (J.)

கப்பல்வை-த்தல் kappal-vai-, *v. intr.* <id. +. To engage a ship; மரக்கலம் அமர்த்துதல். (W.)

கப்பலேற்று-தல் kappal-ēṟṟu, *v. tr.* <id. +. To transport; to punish with transportation, as to the Andamans; தண்டனையாகத் தூரதேசத்துக்கு அனுப்புதல். *Loc.*

கப்பலோட்டி kappal-ōṭṭi, *n.* <id. +. 1. Sailor, seaman; கப்பலின் வேலையாள். 2. Captain, chief sailor; மாலுமி.

கப்பலோட்டு[1] kappal-ōṭṭu, *n.* <id. + ஓடு. Sailing of a ship; கப்பலின் ஓட்டம்.

கப்பலோட்டு[2]**-தல்** kappal-ōṭṭu-, *v. intr.* <id. +. To sail a ship, steer a vessel; மரக்கலஞ் செலுத்துதல்.

கப்பலோடு-தல் kappal-ōṭu-, *v. intr.* <id. +. 1. To sail, as a ship; நாவாய் செல்லுதல். 2. To carry on trade by sea; கடல்வியாபாரம் செய்தல். கப்பலோடிப் பட்ட கடன்.

கப்பற்கடலை kappaṟ-kaṭalai, *n.* <id. +. Seed of the Garden-pea. See பட்டாணிக்கடலை.

கப்பற்கதலி kappaṟ-katali, *n.* <id. +. An exotic plantain; வாழைவகை.

கப்பற்கன்மணி kappaṟ-kaṉ-maṇi, *n.* <id. +. A necklace worn by Parava women; பரவ மாதரணியும் கழுத்தணிவகை.

கப்பற்காரன் kappaṟ-kāraṉ, *n.* <id. +. 1. Master of a ship, ship-holder; கப்பலின் தலைவன். முன்னேரங்கப்பற்காரன், பின்னேரம் பிச்சைக்காரன். 2. Mariner, shipman; கப்பலில் வேலை செய்வோன்.

கப்பற்கோவை kappaṟ-kōvai, *n.* <id. +. Name of a *kōvai* poem in praise of the patron, *Karumāṇikkaṉ* of Kappalūr; கப்பலூர்த்தலைவனை கருமாணிக்கன்மேற் பாடப்பட்ட ஒரு கோவைநூல்.

கப்பற்சண்டை kappaṟ-caṇṭai, *n.* <id. + Naval warfare; கப்பலிலிருந்து புரியும்போர்.

கப்பற்சாஸ்திரம் kappaṟ-cāstiram, *n.* <id. +. Science of navigation; நாவாய்நூல்.

கப்பற்சேதம் kappaṟ-cētam, *n.* <id. +. Shipwreck; மரக்கலத்தின் அழிவு.

கப்பற்படை kappaṟ-paṭai, *n.* <id. +. 1. Naval force; battleships; கடற்படை. 2. What-

ever belongs to a ship, as cordage, etc.; கப்பலுக்குரியசாமான். (W.)

கப்பற்பாட்டு kappar̲-pāṭṭu, n. < id. +. Mariners' song; கப்பற்காரர் பாடும் ஓடப்பாடல்.

கப்பற்பாய் kappar̲-pāy, n. <id.+. Sail made of canvas; கப்பலிற் காற்றைமுகப்பதற்காகச் சீலையாலமைந்த பாய்.

கப்பறை kappar̲ai, n. Blank in the play of dice; தாயவிளையாட்டில் ஒருகணக்கு. (W.)

கப்பாசு kappācu, n. prob. *karpāsa*. Raw cotton; சுத்தம்பண்ணாத பருத்தி. (G. Tn. D. i, 161.)

கப்பி¹-த்தல் kappi-, *11 v.intr.* <கப்பு². 1. To fork, as a branch; கவர்படுதல். *கப்பித்த காலையுடைய ஞெண்டினது* (பெரும்பாண். 208, உரை). 2. To grow in size; பெருத்தல். *அரும்பிக் கப்பித்த தனத் தந்தரி* (திருப்பு. 412).

கப்பி² kappi, n. 1. [M. *kappi.*] Grits in flour comminuted imperfectly; coarse grits; grain half-ground; தெள்ளிநீக்கிய நொய். *கப்பிகடவதாக் காலைத் தன்வாய்ப் பெயினும்* (நாலடி, 341). 2. Gravel, road-metal, concrete of brick, dust and broken pieces of brick used for foundations or flooring, கல்லி. *Colloq.*

கப்பி³ kappi, n.< U. *qabb.* 1. [M. *kappi.*] Pulley; கயிறிழுக்குங் கருவி. *Naut.* 2. (Weav.) Block and wheel in a loom; நெய்தற்கருவியுளொன்று.

கப்பி⁴ kappi, n. <U. *gappi.* Lie, barefaced falsehood; பொய்யுரை.

கப்பிப்பிஞ்சு kappi-p-piñcu, n. <கப்பி²+. 1. Very tender fruit; இளம் பிஞ்சு. 2. Tender fruit out of season; அகாலத்தில் தோன்றிய பிஞ்சு. (J.)

கப்பிப்பூ kappi-p-pū, n. Fall of the *ilup-pai-p-pū* in due season, dist. fr. பந்தர்ப்பூ, பாவாடைப்பூ and கலியாணப்பூ, q.v.; உரியகாலத்தில் ஒருசேர இலுப்பைப்பூ விழுகை. (J.)

கப்பியல் kappiyal, n. <U. *qabb.* See கப்பி³, 1.

கப்பிர் kappir, n. <U. *gubbar.* Pride, haughtiness; கருவம். *கப்பிர்பிடித்து அலைகிறான். Loc.*

கப்பிரஸ்தா kappi-rastā, n. <கப்பி² + U. *rasthā.* See கப்பிரோடு.

கப்பிரோடு kappi-rōṭu, n. <id.+ E. *road.* Metalled road; கல்லியிட்டுக்கெட்டித்த பாதை.

கப்பு¹-தல் kappu-, *5 v. tr.* [T. K. M. Tu. *kappu.*] 1. To overspread, as cloud; மூடிக்கொள்ளுதல். *நற்பொற்சாத்திஞெளி கப்பத்தெருக்களவும்* (தனிப்பா. ii, 195, 471). 2. To gorge, cram into the mouth; கொள்ளுமளவு வாயிலிட்டு வேகமாக விழுங்குதல். *அவல்பொரி கப்பியகரிமுகன்* (திருப்பு. விநாயகர். 1).

கப்பு² kappu, n. cf. கம்பு. 1. Forked branch; கவர்கொம்பு. (பிங்.) 2. Branch, bough; கிளை. 3. Cleavage, cleft; பிளவு. *கப்புடைநாவினகர்* (கம்பரா. எதிர். 2). 4. Small pillar, post; சிறுதூண். (J.) 5. Shoulder; தோள். *கப்பா லாயர்கள் காவிற் கொணர்ந்த* (திவ். பெரியாழ். 3, 1, 5). 6. Support, refuge; ஆதாரம். *ரக்ஷ்யரக்ஷகபாவம் தன் கப்பிலே கிடக்கும்* (ஸ்ரீவசன. 244). 7. That which draws unto itself; கவர்ச்சி. *கப்பின்று மீசன் கழல்* (சி. போ. 11, 5, வெண்.).

கப்பு³ kappu, n. <T. *kappu.* 1. Fastness of colour of the dye used for dyeing cloth; சாயத்தின் அழுத்தம். 2. A kind of red tint; செஞ்சாயவகை. (G. Tj. D. i, 121.) 3. Hair-dye; மயிர்க்கு ஊட்டுஞ்சாயம். (W.)

கப்பு⁴ kappu, n. <U. *gap.* Idle or vain talk; வீண்பேச்சு. *Colloq.*

கப்பு⁵ kappu, n. Privacy; secrecy; இரகசியம். *Loc.*

கப்புக்கால் kappu-k-kāl, n. <கப்பு²+. 1. Bandy legs; வளைகால். 2. Support, prop; முட்டுக்கால்.

கப்புக்குனையறு-த்தல் kappu-k-kun̲ai-y-ar̲u-, *v. tr.* <கப்பு³+. To render a piece of coloured cloth perfect by substituting proper threads for such as are unfit; இழையோட்டுதல். (W.)

கப்புச்சிப்பெனல் kappu-c-cippen̲al, n. [K. *gapcip.*] Phrase signifying the keeping of perfect silence; பேச்சின்றி அடங்குகைக்குறிப்பு.

கப்புத்தோள் kappu-t-tōḷ, n. prob. காவு- + தோள். Bearing on the right and left shoulder alternately; வலத்தோளும் இடத்தோளுமாகமாறிக் காவுகை. (யாழ். அக.)

கப்புமஞ்சள் kappu-mañcaḷ, n. <கப்பு³+. A superior kind of turmeric from Cochin; கொச்சியிலிருந்துகிடைக்கும் ஒருவகை உயர்ந்தமஞ்சள். (W.)

கப்புரம் kappuram, n. <Pkt. *kappura* <*karpūra.* See கர்ப்பூரம். *கப்புரப் பசுந்திரை* (சீவக. 197).

கப்புவிடு¹-தல் kappu-viṭu-, *v. intr.* <கப்பு² +. To fork, as a branch; to ramify, diverge; கிளைவிடுதல்.

கப்புவிடு²-தல் kappu-viṭu-, *v. intr.* <கப்பு⁴ +. To lie, utter falsehood; புரட்டுப்பேசுதல்.

கப்பே kappē, n. <Fr. *caffe.* Coffee; காப்பி. *Pond.*

கப்பைக்காலன் kappai-k-kālaṉ, *n.* <கப்பு[2] +. Bow-legged man; தொட்டிக்காலன்.

கபக்கட்டு kapa-k-kaṭṭu, *n.* <*kapha* +. Accumulation of phlegm in the throat; கபம் நெஞ்சில் திரண்டிருக்கை.

கபகபவெனல் kapa-kapa-v-eṉal, *n.* Onom. 1. The sound of gurgling, as produced by water when poured out of a vessel with a narrow mouth; ஓர் ஒலிக்குறிப்பு. 2. Burning sensation in the abdomen from hunger or from strong passion; பசி முதலியவற்றால் வயிறெரிகைக் குறிப்பு.

கபட்டுநாக்கு kapaṭṭu-nākku, *n.* <*kapaṭa* +. Deceitfulness of speech, double-tongue; வஞ்சகம்பேசும் நா.

கபட்டுப்படிக்கல் kapaṭṭu-p-paṭi-k-kal, *n.* <id.+. False weight; கள்ளநிறைகல்.

கபடக்காரன் kapaṭa-k-kāraṉ, *n.* <id.+. Cheat, deceiver; வஞ்சகன்.

கபடநாடகம் kapaṭa-nāṭakam, *n.* <id.+. Deceitful dealing; போலிநடிப்பு. *கபடநாடகத்தை மெய்யென்று நம்பி* (*அருட்பா*, i, *நெஞ்சறி.* 528).

கபடம் kapaṭam, *n.* <*kapaṭa.* Guile, fraud, deceit; வஞ்சகம்.

கபடவித்தை kapaṭa-vittai, *n.* <id. +. Trick, juggle, dodge; மாயவித்தை.

கபடன் kapaṭaṉ, *n.* <id. Cheat, deceiver, knave, shuffler; வஞ்சகன். *சனகியைக் கபடன் வௌவி* (*கம்பரா. சம்பா.* 59).

கபடஸ்தன் kapaṭa-staṉ, *n.* <id.+*stha*. See கபடன்.

கபடி kapaṭi, *n.*<*kapaṭin.* Deceitful person; கபடமுள்ளவ-ன்-ள். *தீமைபுரி கபடி* (*திருப்பு.* 109).

கபடு kapaṭu, *n.* <*kapaṭa.* See கபடம்.

கபடேரிகம் kapaṭērikam, *n.* cf. *kāṣṭhaka.* Eaglewood. See அகில். (மலை.)

கபந்தம் kapantam, *n.* <*kabandha.* 1. See கவந்தம். 2. Simpleton, stupid person; அறிவிலி. *Brah.*

கபநாசம் kapa-nācam, *n.* <*kapha*+. See கண்டங்கத்தரி. (மலை.)

கபம் kapam, *n.* <*kapha.* Phlegm, one of the three kinds of *nāṭi*; சிலேட்டுமம். *வாதபித்தகபமெண . . . மூவரும் . . . நலிந்தனர்* (*உத்தரரா. அரக்கர்.* 31).

கபம்பம் kapampam, *n.* cf. *kaṭabhī.* Black-oil tree. See வாலுளுவை. (மலை.)

கபர் kapar, *n.* <U. *khabar.* News; செய்தி. (W.)

கபர்த்தம் kaparttam, *n.* <*kaparda.* Śiva's matted locks; சிவபிரான் சடை.

கபர்த்தி kapartti, *n.* <*kapardin.* Śiva, having matted locks; சிவன்.

கபர்தார் kapartār, *int.* <U. *khabadār.* Beware, take care; சாக்கிரதையாயிரு.

கபரோகம் kapa-rōkam, *n.*<*kapha*+. Any disease caused by excess of phlegm, as bronchitis or asthma; சிலேட்டுமநோய்.

கபவாதசுரம் kapa-vāta-curam, *n.* <id.+. Pneumonia; சிலேட்டும வாதங்களின் சேர்க்கையால் தோன்றுஞ் சுரநோய்.

கபவிரோதி kapa-virōti, *n.*<id.+. Lesser Galangal. See சிற்றரத்தை. (தைலவ.)

கபளீகரி-த்தல் kapaḷīkari-, *11 v. tr.*<*kabalīkṛ.* See கவளீகரி-. *Colloq.*

கபாடக்கட்டி kapāṭa-k-kaṭṭi, *n.* Sweet Flag. See வசம்பு. (மலை.)

கபாடபந்தனம் kapāṭa-pantaṉam, *n.* <*kapāṭa*+. Keeping the doors closed; கதவடைப்பு.

கபாடபுரம் kapāṭa-puram, *n.* <id. +. The ancient Pāṇḍyan capital which was the seat of the Second Tamil Academy; இடைச்சங்கமிருந்த பாண்டியன் தலைநகர். (*இறை.* 1, *உரை.*)

கபாடம்[1] kapāṭam, *n.* <*kapāṭa.* 1. Door; கதவு. *அறிவென்கபாடச்செந்தான்* (*ஞானா.* 34, 3). 2. Guard, defence, protection; காவல். (W.)

கபாடம்[2] kapāṭam, *n.* Beasts' burden, as wood; பொதி. (C.G.)

கபாத்து[1] kapāttu, *n.* <U. *kabāt.* (W.) 1. Capon; விதையெடுத்த சேவல். 2. Pruning; மரஞ்செடிகளின் கிளைகளை ஒழுங்குபெறக் கத்தரிக்கை.

கபாத்து[2] kapāttu, *n.* <U. *qawāid.* Military drill; படைப்பயிற்சி.

கபாபு kapāpu, *n.* <U. *kabāb.* Roast, dish of roasted meat; சூட்டிறைச்சி. (W.)

கபாய் kapāy, *n.*<U. *qabā.* Frock, a kind of long flowing tunic reaching to the ankles such as that worn generally by Muhammadans; நிலையங்கி. *கடகளிறுதவு கபாய்மிசைப்போர்த்தவள்* (*மீனாட். பிள். காப்பு.* 10).

கபால் kapāl, *n.* <*kapāla.* Skull. See கபாலம். *கைவைத்த வன்கபால் மிசை* (*திவ். திருச்சந்.* 42).

கபாலக்கரப்பான் kapāla-k-karappāṉ, *n.* <id.+. Scald head, *Tinea porrigo*, especially of children; தலையில்வருங் கரப்பான்.

கபாலக்குத்து kapāla-k-kuttu, *n.* <id.+. Severe headache, acute meningitis, *cephalalgia*,

sometimes causing blindness; கடுந்தலைவலி. (இங். வை 217)

கபாலகுஷ்டம் kapāla-kuṣṭam, *n.* <id.+. Eruption on the head; மண்டைக்கரப்பான். (பைஷஜ. 214.)

கபாலச்சூலை kapāla-c-cūlai, *n.* <id.+. See கபாலக்குத்து. (இங். வை. 217.)

கபாலசாந்தி kapāla-cānti, *n.* prob. id.+. Tanner's Senna. See ஆவிரை. (மலை.)

கபாலதரன் kapāla-taraṉ, *n.* <*kapāla*+. Šiva, who holds a skull of Brahmā in one of His hands and also wears a garland of skulls; சிவன்.

கபாலநீர் kapāla-nīr, *n.* <id.+. Humours in the head, sometimes causing blindness; சிரத்திலேறிய துர்நீர். (W.)

கபாலபாணி kapāla-pāṇi, *n.*<id.+. Šiva, who has a skull in one of His hands; சிவன்.

கபாலம் kapālam, *n.* <*kapāla*. 1. Skull, cranium; தலையோடு. (திவா.) 2. Beggar's bowl; இரப்போர்கலம். (W.) 3. See கபாலக்குத்து. (J.) 4. See கபாலக்கரப்பான். (மூ. அ.)

கபாலமூர்த்தி kapāla-mūrtti, *n.* <id.+. See கபாலதரன். (திவா.)

கபாலமோக்ஷம் kapāla-mōkṣam, *n.* <id.+. 1. Deliverance of the soul, in the case of a Yōgi, from the body through the bursting out of the skull; பிரமரந்திரவழியாய் உயிர்செல்கை. *Loc.* 2. Breaking the head; மண்டையை யுடைக்கை. *Colloq.*

கபாலரேகை kapāla-rēkai, *n.* <id.+. Sutures of the skull; தலையெழுத்து. (இங். வை. 7.)

கபாலவரிக்கட்டு kapāla-vari-k-kaṭṭu, *n.* <id.+. Covering course of a wall, parapet; சுவர்த்தலைக்கட்டு. (A. M.)

கபாலவாசல் kapāla-vācal, *n.* <id.+. Fissure on the crown of the head; தலையின் உச்சித் துவாரம். (W.)

கபாலவாடை kapāla-vāṭai, *n.* <id.+. Headache; disease of the cranium; தலைநோய். (தைலவ. தைல. 141.)

கபாலவாயு kapāla-vāyu, *n.* <id.+. 1. See கபாலக்குத்து. (இங். வை. 217.) 2. Neuralgia; நரம்புத்தலைவலி. *Loc.*

கபாலவிடி kapāla-v-iṭi, *n.* <id.+ இடி. See கபாலக்குத்து. (M.L.)

கபாலன் kapālaṉ, *n.* A mineral poison. See சீர்பந்தபாஷாணம். (மூ. அ.)

கபாலி[1] kapāli, *n.* <*kapālin*. 1. See கபாலபாணி. (பிங்.) 2. Name of a Rudra, one of *ēkātaca-ruttirar*, q.v.; ஏகாதசருத்திரருள் ஒருவர். (திவா.) 3. Bhairava; வைரவன். (பிங்.)

கபாலி[2] kapāli, *n.* <*kāpālika*. Name of a certain Šaiva sect of the left hand order, members of which carry about their person human skulls in the form of garlands and also eat and drink from them; காபாலிகவிரதியான சைவசமயத்தான். *கம்பக் கபாலிகாண்* (திவ். பெரியாழ். 2, 8, 8).

கபி[1] kapi, *n.* <*kapi*. Monkey; குரங்கு.

கபி[2] kapi, *n.*<U. *qabb*. See கப்பி[3], 1. (W.)

கபிஞ்சலம் kapiñcalam, *n.* <*kapiñjala*. 1. Rain Quail, *Turnix taigoor*; காடை. (பிங்.) 2. Francolin Partridge, *Francolinus vulgaris*; காடைவகை. (W.)

கபித்தம்[1] kapittam, *n.* <*kapittha*. 1. Wood-apple. See விளா. (பிங்.) 2. (Nāṭya.) A gesture with one hand in which the tips of the thumb and of the forefinger are closely joined while the other three fingers are held loose, one of 33 *iṇaiyā-viṉai-k-kai*, q.v.; சுட்டுவிரல்நுனியும் பெருவிரல் நுனியும் உகிர்நுனைகௌவ ஒழிந்த மூன்றுவிரலும் மெல்லெனப்பிடிக்கும் இணையாவினைக்கை. (சிலப். 3, 18, உரை.)

கபித்தம்[2] kapittam, *n.* A plant that yields an odoriferous medicinal oil. See கோட்டிக்கிழங்கு. (தைலவ.)

கபிதம் kapitam, *n.* Black Cumin. See கருஞ்சீரகம். (மலை.)

கபிலப்பொடி kapila-p-poṭi, *n.*<*kapila*+. Kamela Dye, Scarlet Croton, s. tr., *Mallotus philippinensis*; மரவகை. (L.)

கபிலம் kapilam, *n.* <*kapila*. 1. Tawny, dim colour; dinginess, dustiness, brown; புகர்நிறம். (திவா.) 2. Name of a secondary Purāṇa. See காபிலம். (W.) 3. See கபிலப்பொடி. 4. King-crow. See கரிக்குருவி. (பிங்.)

கபிலமதம் kapila-matam, *n.* <id.+. Šāṅkhya system of philosophy, founded by Kapila; கபிலரால் தாபிக்கப்பெற்ற சாங்கியமதம்.

கபிலர் kapilar, *n.*<id. Rudras; உருத்திரர். பதினொருகபிலரும் (பரிபா. 3, 7).

கபிலவஸ்து kapilavastu, *n.*<*Kapilavastu*. Kapilavastu, Buddha's birth-place; புத்தர் அவதரித்த நகரம். (மணி. அரும்.)

கபிலன் kapilaṉ, *n.* <*Kapila*. 1. Kapila, the founder, or rather the earliest known exponent of the Šāṅkhya system of philosophy; ஒரு முனிவர். *கபில னக்கபாதன் கணாதன் சைமினி* (மணி. 27, 81). 2. Kapila, a poet of the age of the Third

Sangam, author of *innā-nāṟ-patu, kuriñci-p-pāṭṭu, kuriñci-k-kali*, and other poems; இன்னா நாற்பது குறிஞ்சிப்பாட்டு முதலியவற்றிற்கு ஆசிரியர். (புறநா. 174, 10.) 3. A later poet, author of *kapilar-akaval*; கபிலாகவல் பாடிய ஆசிரியர்.

கபிலை[1] kapilai, *n.* [T. K. *kapile.*] Water-lift, consisting of a large hemispherical leather or iron bucket, worked with bullocks; எருது களைக்கட்டி நீரிறைக்கும் ஏற்றம்.

கபிலை[2] kapilai, *n.* <*kapilā*. 1. Tawny, brown or swarthy colour; புகர்நிறம். (C.G.) 2. Dim coloured cow; தூரற்பசு. *கபிலையொடு குடநாட் டோரு ரீத்து* (பதிற்றுப். 60, பதி.). 3. Cow of the *Cuvarkkam;* தெய்வப் பசு. (சூடா.) 4. Name of the female elephant of the South-East quarter, being the mate of *Puṇṭarīkam;* தென் கீழ்த்திசைப் பெண்யானை. 5. See கபிலவஸ்து. *சாவகும் பெருமைக் கபிலையம் பதியின்* (மணி. 26, 44).

கபீதனம் kapītaṉam, *n.* <*kapītana*. Siris. See வாகை. (மலை.)

கபுக்குக்கபுக்கெனல் kapukku-k-kapukkeṉal, *n.* Onom. Sounding impetuously; sound of gurgling of water; ஓர் ஒலிக்குறிப்பு.

கபுல் kapul, *n.* <U. *qaul*. See கவுல். (W.)

கபூல் kapūl, *n.* <U. *qabul*. Consent, approval, admission, confession; சம்மதம். (W.)

கபூலி kapūli, *n.* See கபூல். (C.G.)

கபூலியத்து kapūliyattu, *n.*<U. *qabūliyat*. See கபூலியத்நாமா. (C.G.)

கபூலியத்நாமா kapūliyat-nāmā, *n.* <id. +. Counter-agreement, counterpart of a license; எதிர்ச்சீட்டுப்பத்திரம்.

கபூலேத்து kapūlēttu, *n.* <id. Agreement in writing; உடன்படிக்கைப்பத்திரம். (W.)

கபோணிகுளநியாயம் kapōṇi-kuḷa-niyāyam, *n.* <*kapōṇi*+*guḍa*+. Illustration of absolute inaccessibility or unattainability, as the illustration of the treacle on one's elbow, being tantalizingly out of reach of one's tongue; முழங்கையிலுள்ள வெல்லத்தை நாவாற் சுவைக்க இயலாததுபோல அமைந்திருந்தும் தனக்கு அடையமுடியாமையைக் காட்டும் நெறி.

கபோதகத்தலை kapōtaka-t-talai, *n.*<*kapōtaka*+. Wooden support under a cornice or other projection; கொடுங்கையைத் தாங்குதலுடைய பலகை. (மெசெல். 48, உரை.)

கபோதகநியாயம் kapōtaka-niyāyam, *n.* <id.+. Illustration of the flock of doves, showing how one thing is immediately followed by a multitude of others, as doves flock down successively one after another when one leads the way; ஒருபுறா ஓரிடஞ்சேர அதன் இனமான புறக்களெல்லாம் உடனே அதனைப்பின்பற்றி அங்குச் சேர்தல்போல ஒன்றுநிகழ அதனினமான பலவும் உடனிகழும் நெறி. *கபோதகநியாயமே கடுப்ப* (பூவாளூர்ப்.).

கபோதகம் kapōtakam, *n.* <*kapōtaka*. 1. Dove; புறா. *சிவல் கபோதகஞ் சாதகம்* (சேதுபு. சங்கா. 19). 2. Moulding in masonry; சிற்பவுறுப்புக் களுள் ஒன்று. (W.)

கபோதம் kapōtam, *n.* <*kapōta*. 1. Dove; புறா. (திவா.) 2. Pigeon; கரும்புறா. (திவா.) 3. Overhanging projections of a house; வீட்டின் கொடுங்கை. *பதலைக் கபோதத் தொளிமாடநெற்றி* (திவ். பெரியதி. 3, 8, 2). 4. Parakeet-bur, a wide-spread weed. See புறமுட்டி. 5. (Nāṭya.) A gesture with one hand in which all the fingers but the thumb are held close and upright while the thumb is kept as far away as possible, one of 33 *iṇaiyā-viṉai-k-kai*, q.v.; பெருவிரல் விட்டு நிமிர மற்றை நான்குவிரல்களும் ஒட்டிநிமிரும் இணையாவினைக்கை. (சிலப். 3, 18, உரை.) 6. (Nāṭya.) A gesture with both hands in which they are joined in *kapōtam* pose; இரண்டு கைகளையும கபோதக்கையாகக் கூட்டும் இணைக்கை. (சிலப். 3, 18, உரை.)

கபோதி kapōti, *n.* <T. *kabōdi.* [K. *kabōji.*] *Colloq.* 1. Blind person; கண்தெரியாதவ-ன்-ள். 2. Silly fellow; அறிவிலி.

கபோலம் kapōlam, *n.* <*kapōla*. Cheek; கன்னம். *நாயகன் கபோலத்திட்ட* (திருவிளை. இரச. 30).

கம்[1] kam, *n.* 1. Whiteness; வெண்மை. (பிங்.) 2. cf. கம்பளம். Goat, sheep; ஆடு. (அக. நி.)

கம்[2] kam, *n.* <*ka*. 1. Water; நீர். (பிங்.) 2. Skull; கபாலம். *கங்கை . . . சுமந்தது . . . நும் பாலுண்பலியேற்க* (திருவிளை. வளை. 9). 3. Head; தலை. (திவா.) 4. Wind, air; காற்று. (சூடா.) 5. Cloud; மேகம். (சூடா.) 6. Brahmā; பிரமன். (பிங்.) 7. Soul; உயிர். *கம்மெனு மாவி* (காஞ்சிப்பு. திருவேகம்ப. 49). 8. Final bliss; வீட்டின்பம். *கம் மெனும் பெருவீட்டின்ப நுகர்விக்கும்* (காஞ்சிப்பு. திருவேகம்ப. 49).

கம்[3] kam, *n.* <*karman*. 1. Act, operation, employment; தொழில். *கம்மு முருமென் கிளவியும்* (தொல். எழுத். 328). 2. Smith's work; கம்மியர் தொழில். (நன். 223, விருத்.)

கம்[4] kam, *n.*<*kha*. 1. Ether, space; ஆகாசம். (பிங்.) 2. Svarga; தேவலோகம். (உரி. நி.)

கம்பக்கூத்தாடி kampa-k-kūttāṭi, *n.* <கம்பம்[1]+. Pole dancer; கழைக்கூத்தாடி.

கம்பக்கூத்து kampa-k-kūttu, *n.* <id.+. Pole dancing; acrobatic performance; கழைக் கூத்து.

கம்பங்களி kampaṅ-kaḷi, *n.* <கம்பு+. Porridge made of the flour of Bulrush Millet; கம்புமாவாற் சமைத்த களி.

கம்பங்கொளுத்து-தல் kampaṅ-koḷuttu-, *v. intr.*<கம்பம்[1]+. To ignite fire-works fastened to a post; கம்பவாணத்துக்கு நெருப்புவைத்தல். *Loc.*

கம்பங்கோரை kampaṅ-kōrai, *n.* <கம்பு+. Bulrush, l. sh., ***Typha elephantina;*** கோரை வகை.

கம்பசூத்திரம் kampa-cūttiram, *n.* <கம்பன்+. Stanzas composed by Kambar in his Rāmāyaṇa, in such a way that the real purport thereof is but suggestive and is not easily apparent on the surface; உய்த்துணர்பொருளவாய்க் கம்பர் தம் இராமாயணத்தில் அமைத்த அருங்கவி.

கம்பஞ்சம்பா kampañ-campā, *n.* <கம்பு+. A kind of paddy resembling Bulrush Millet; சம்பாநெல்வகை.

கம்பட்டக்காரன் kampaṭṭa-k-kāraṉ, *n.* <கம்பட்டம்+. Coiner; நாணயம்செய்வோன். (W.)

கம்பட்டக்கூடம் kampaṭṭa-k-kūṭam, *n.* <id.+. Mint; நாணயசாலை. (W.)

கம்பட்டம் kampaṭṭam, *n.* [K. ***kammaṭa,*** M. *kammṭṭam.*] Coinage, coin; நாணயம். (W.)

கம்பட்டமுளை kampaṭṭa-muḷai, *n.*<id.+. Die, coining stamp; நாணயமுத்திரை. (W.)

கம்படி kampaṭi, *n.* <கம்பு + அடி. Plot of land on the outskirts of a village set apart for growing Bulrush Millet; ஊர்ப்புறத்துக் கம்பு விளைவிக்கும் நிலம். (G. Tn. D. i, 159.)

கம்பத்தக்காரன் kampatta-k-kāraṉ, *n.* <T. *kammatamu*+. One who owns landed property; பூஸ்திதியுடையவன். *எழூர்க்கம்பத்தக்காரன். Loc.*

கம்பத்தம் kampattam, *n.*<T. ***kammatamu.*** 1. Agriculture, cultivation by the owner with his own stock; சொந்த விவசாயம். 2. Agricultural land; விவசாயபூமி.

கம்பத்து[1] kampattu, *n.* <U. ***gammat.*** Pomp, splendour; இடம்பம். (W.)

கம்பத்து[2] kampattu, *n.* <Port. ***gamote.*** Leakage in a ship; கப்பலில்விழும் ஓட்டை. *Naut.*

கம்பத்துப்பார்-த்தல் kampattu-p-pār-, *v. intr.*<id.+. To stop a ship's leak; கப்பலின் ஓட்டையையடைத்தல். (W.)

கம்பதாளி kampatāḷi, *n.* A kind of hysteria; ஒருவகைநோய். *சூலைநோய் கம்பதாளி குன்மமும்* (தேவா. 995, 4).

கம்பந்தட்டு kampan-taṭṭu, *n.* <கம்பு+. See கம்பந்தட்டை.

கம்பந்தட்டை kampan-taṭṭai, *n.* <id.+. Straw of the Bulrush Millet; கம்பங்கதிரின் தாள்.

கம்பந்தாளி kampan-tāḷi, *n.* <id.+. Convolvulus; தாளிக்கொடிவகை. (யாழ். அக.)

கம்பந்திராய் kampan-tirāy, *n.* <id.+. A kind of wild Chickweed, ***Pharnaceum;*** திராய்ப் பூண்டிவ்வகை.

கம்பநாட்டாழ்வான் kampa-nāṭṭāḻvāṉ, *n.* <கம்பநாடு+. Poet Kamban, spoken of as a devotee of Viṣṇu. See கம்பன். *ஆதித்தன் கம்பநாட்டாழ்வான் கவி* (கம்பரா. தனி. 1).

கம்பநாடன் kampa-nāṭaṉ, *n.* <id. Poet Kamban, so called because he lived probably in *Kampa-nāṭu.* See கம்பன். *கம்பநாடன் சொன்ன மும்மணிக்கோவை* (தமிழ்நா. 102).

கம்பநாடு kampa-nāṭu, *n.* A district in *Cōḻa-nāṭu* so called because Kamban, the celebrated poet probably lived there; சோணாட்டைச்சார்ந்ததோர் நாடு. *கம்பநாடுடைய வள்ளல் கவிச் சக்ரவர்த்தி* (கம்பரா. தனி. 6).

கம்பபாணம் kampa-pāṇam, *n.* <கம்பம்[1]+. See கம்பவாணம்.

கம்பம்[1] kampam, *n.* < Pkt. ***khambha.*** <*stambha.* 1. Post, pillar; தூண். (திவா.) 2. Lamp-stand, candlestick; விளக்குத்தண்டு. (திவா.)

கம்பம்[2] kampam, *n.* <*kampa.* 1. Vibration, shaking, motion; அசைவு. *கம்ப மில்லாக் கழிபெருஞ் செல்வர்* (மணி. 17, 63). 2. Tremor, tremulousness, quaking; நடுக்கம். *கம்பஞ்செய் பரிவு* (சீவக. 1737).

கம்பம்[3] kampam, *n.* <*ekāmra.* The Śiva shrine at Conjeevaram; கச்சியேகாம்பரர் கோயில். *கண்ணுதற் பரமற்கிடங் கம்பமே* (தேவா. 1035, 1).

கம்பம்[4] kampam, *n.* Mineral poisons in the forms, *தாலம்பம், வெள்ளை, சாலாங்கம், கற்பரி;* தாலம்பம் முதலிய பாஷாணங்கள். (மூ. அ.)

கம்பம்புல் kampam-pul, *n.*<கம்பு+. Stalk Grass, Bulrush Millet, *Panicum grossarium;* புல்வகை. (W.)

கம்பராமாயணம் kampa-rāmāyaṇam, *n.* <கம்பன்+. The story of the Rāmāyaṇa written in Tamil by the poet Kamban; கம்பரியற்றிய இராமாயண காவியம்.

கம்பரிசி kamparici, *n.* <கம்பு+. Husked grain of Bulrush Millet; கம்புத்தானியம்.

கம்பல் kampal, *n.* prob. *kambala.* Garment, clothing; ஆடை. *நறைந்த நீலயுத் தன் கம்ப லும்* (கலித். 65).

கம்பலம்[1] kampalam, *n.* <*kambala.* 1. Woollen blanket, rug; கம்பளிப்படாம். (பிங்.) 2. Carpet; இரத்தினகம்பளம். *செய்யகம்பலம் விரித் தென* (சீகாளத். பு. காண்முக. 108). 3. Canopy, tester; மேற்கட்டி. *மேகக் கம்பல நிழற்கீழ் வைகுங் கடவுளர்* (இரகு. குசன. 66).

கம்பலம்[2] kampalam, *n.* See கம்பலை[1], 1. *கம்பலம் பொலிவெய்த* (சீவக. 56).

கம்பலி kampali, *n.* prob. கம்பலை[1]. A kind of drum; பறைவகை. *கம்பலி யுறுமை தக்கை* (கம்ப ரா. பிரமாத். 5).

கம்பலை[1] kampalai, *n.* 1. Sound, noise, clamour, roar; ஆரவாரம். *வம்ப மாக்கள் கம்பலை மூதூர்* (மணி. 3, 126). 2. Sound of a lute; யாழோசை. (திவா.) 3. Agricultural tract; மருதநிலம். (திவா.)

கம்பலை[2] kampalai, *n.* <*kampa.* 1. Trembling, quivering, quaking; நடுக்கம். (சூடா.) 2. Fear, dread; அச்சம். (பிங்.) 3. Distress, suffering; துன்பம். (திவா.) 4. Uproar, tumult, quarrelling; சச்சரவு. (W.)

கம்பலைகட்டு-தல் kampalai-kaṭṭu-, *v.intr.* <கம்பலை[2]+. See கம்பலைப்படு-. (W.)

கம்பலைப்படு-தல் kampalai-p-paṭu-, *v. intr.* <id.+. To quarrel, raise a tumult; சச்சரவுசெய்தல்.

கம்பலைமாரி kampalai-māri, *n.* <id.+. (W.) 1. Female demon worshipped especially by Veddahs; வேடர் வணங்கும் ஒரு பெண்தேவதை. 2. Termagant, scold; கோபக்காரி.

கம்பவாணம் kampa-vāṇam, *n.* <கம்பம்[1]+ *bāṇa.* Fireworks shot from a tall post; நீண்ட கம்பத்தில் இணைத்துக் கொளுத்தப்படும் வாணம். *Colloq.*

கம்பவாதம் kampa-vātam, *n.* <கம்பம்[2]+. Shaking palsy, *Paralysis agitons;* நடுக்குவாதம்.

கம்பவிசித்திரம் kampa-vicittiram, *n.* <கம்பன் + விசித்திரம். Verse composed by Kamban full of suggestive significance; கம்பராமாயணத்திலுள்ள சாதுரியமான கவி.

கம்பளத்தாயி kampaḷattāyi, *n.* <*kambala* + ஆய்[4]. Female demon worshipped by the Toṭṭiya caste; தொட்டியர் வணங்கும் ஒரு பெண் தேவதை. *Loc.*

கம்பளத்தான் kampaḷattāṉ, *n.* <id. 1. Man of the Toṭṭiya caste; தொட்டியசாதியான். (E.T.) 2. A soothsaying beggar in a motley attire playing on a taborine; குடுகுடுப்பாண்டி. *Loc.*

கம்பளம்[1] kampaḷam, *n.* <*kambala.* 1. Woollen shawl; blanket; கம்பளிப்போர்வை. 2. Red cloth; செம்படாம். (திவா.) 3. Woollen rug to be spread on the floor; மயிர்ப்படாத்தாலாகிய ஆசனம். *இந்திரன் பாண்டுகம்பளந் துளக்கியது* (மணி. 14, 29). 4. The Toṭṭiya caste; தொட்டியசாதி. *கம்பளவல்லக்கர் குலன்* (தனிப்பா. i, 339, 51). 5. Ram of the fleecy kind; செம்மறிக் கடா. (சூடா.)

கம்பளம்[2] kampaḷam, *n.* Squash Gourd, See சர்க்கரைப்பூசணி. *Loc.*

கம்பளர்[1] kampaḷar, *n.* prob. கம்பலை[1]. Inhabitants of an agricultural tract; மருதநிலமாக்கள். (திவா.)

கம்பளர்[2] kampaḷar, *n.* <*kambala.* Men of the Toṭṭiya caste; தொட்டியசாதியார்.

கம்பளி kampaḷi, *n.* <id. 1. Coarse, woollen blanket, woollen stuffs, hair cloth; உரோமப்படாம். 2. Confusion, disorder; தாறுமாறு. *Colloq.* 3. See கம்பளிச்செடி. (மூ. அ.)

கம்பளிகொண்டான் kampaḷi-koṇṭāṉ, *n.* <id.+. See கம்பளிச்செடி.

கம்பளிச்செடி kampaḷi-c-ceṭi, *n.* <id.+. Indian Mulberry. See மஞ்சணாத்தி. (மூ. அ.)

கம்பளிப்பிசின் kampaḷi-p-picin, *n.* <id. +. 1. White Emetic Nut, s. tr., *Gardenia lucida;* சிறுமாவகை. (M.M.) 2. cf. கம்பிலிப்பிசின். Dikmali Gum-plant. See நீக்காமல்லி.

கம்பளிப்பூச்சி kampaḷi-p-pūcci, *n.* <id +. Hairy caterpillar; உடலில் மயிருள்ள ஒரு வகைப் புழு. (W.)

கம்பளிப்பூச்சிச்செடி kampaḷi-p-pūcci-c-ceṭi, *n.* <id.+. See கம்பளிச்செடி.

கம்பளிப்பேச்சு kampaḷi-p-pēccu, *n.* <id. +. Idle talk, vain talk; வீண்பேச்சு. *Colloq.*

கம்பளியாடு kampaḷi-yāṭu, *n.* <id.+. A kind of fleecy sheep; குறும்பாடு. (W.)

கம்பன்[1] kampaṉ, *n.* <கம்பநாடன். An eminent poet, author of the Rāmāyaṇa, 12th c.; தமிழில் இராமாயணம் இயற்றிய பெரும் புலவர்.

கம்பன்[2] kampaṉ, *n.* <ஏகம்பன். Śiva, who is worshipped at Conjeevaram; காஞ்சிபுரத்துச் சிவபிரான். *கம்ப னிலங்கு சரணே* (தேவா. 1035, 8).

கம்பனம் kampaṉam, *n.* <*kampana.* 1. Motion, vibration, shaking; அசைவு. 2. Quaking, trembling with fear; நடுக்கம். *கம்பனமெய்தி* (காஞ்சிப்பு. தழுவக்.).

கம்பாகம் kampākam, *n.* Ship's cable; கப்பற்கயிறு. (W.)

கம்பாயம் kampāyam, *n.* <U. *cambāy*. Tartan waist cloth, in chequered designs worn by Muhammadans in the Straits and in Ceylon; முகம்மதியர் உடுக்கும் கைலித்துணி.

கம்பான் kampāṉ, *n.* See கம்பாகம். (W.)

கம்பி[1] kampi, *n.* 1. [T. K. M. Tu. *kambi*.] Wire of gold, silver, iron or other metal; பொன், இரும்பு முதலியவற்றின் கம்பி. *கம்பியர் . . . கம்பிவாங்கு மச்சென* (இரகு. திக்கு. 189). 2. A kind of ear-ring; காதணிவகை. *கம்பி இருபதிலுல் பொன் அறுகழஞ்சே குன்றி* (S.I.I. ii, 19, 73). 3. Bit of a horse's bridle; கடிவாளம். *கம்பியுங் கயிறுங் காத்தேந்தி* (பாரத. காண்டு. 21). 4. Narrow stripe along the border of a cloth; ஆடையின் ஓரச்சிறுகரை. 5. Narrow moulding in carpenter's or mason's work; சித்திர வேலைவகை. (W.) 6. Saltpetre; வெடியுப்பு. (மூ. அ.) 7. A mineral poison; இலவணபாஷாணம். (W.) 8. Money; காசு. (W.) 9. cf. *kambi*. Joist, beam, slender post; நீண்ட கோம்பு. *இந்தக் கம்பி பந்தற்காலுக்கு உதவும்*. *Loc.*

கம்பி[2]**-த்தல்** kampi-, *11 v.* <*kampa*. *intr.* 1. To toss, shake; அசைதல். *கம்பித் தலையெறிநீர்* (கம்பரா. பரசுராமப். 8). 2. To tremble, quake; நடுங்குதல். *அழுதுடல் கம்பித்து* (திருவாச. 4, 61). 3. To roar, sound; முழங்குதல். *அதிரக் கம்பிக்குந் தெய்வமுரசுடையான்* (காளத். உலா, 540).—*tr.* 1. To shake, vibrate; அசைத்தல். *செவ்விய செங்கையுஞ் சிரமுங் கம்பியா* (பிரபோத. 23, 12). 2. To cause to tremble; to frighten; நடுங்கச்செய்தல். *இவனைக் கம்பித்தனை யென்னைகொல் காரணமே* (உபதேசகா. சிவநாம. 48).

கம்பி[3] kampi, *n.* 1. Carey's Myrtle Bloom, l. tr., *Careya arbore*; ஒருவகைமரம். 2. See கம்பளிப்பிசின். (M. N. A. D. i, 29.)

கம்பிக்கடுக்கன் kampi-k-kaṭukkaṉ, *n.* <கம்பி[1] +. Ear-ring formed of a wire of metal; கம்பியாற்செய்த கடுக்கன். (W.)

கம்பிக்கரை kampi-k-karai, *n.* <id. +. Narrow stripe along the border of a cloth; ஆடையின் ஓரச்சிறுகரை. *Colloq.*

கம்பிக்காரன் kampi-k-kāraṉ, *n.* <id.+. Moneyed man; காசுக்காரன். (W.)

கம்பிக்குறி kampi-k-kuṟi, *n.* <id.+. See கம்பிக்கரை. (W.)

கம்பிகட்டு-தல் kampi-kaṭṭu-, *v. tr.* <id. +. 1. To form or make the border of a cloth, as a dyer; ஆடைக்குச் சாயக்கரையிடுதல். 2. To make a narrow moulding; எழுதகவேலைசெய்தல். 3. To fasten with wire, as a jewel, an umbrella; கம்பியால் அணிகலன்குடை முதலியவை கட்டுதல்.

கம்பிகாட்டு-தல் kampi-kāṭṭu-, *v. intr.* <id.+. See கம்பிநீட்டு-. *Loc.*

கம்பிகை kampikai, *n.* A kind of drum; ஒருவகை வாத்தியம். (சங். அக.)

கம்பிச்சு kampiccu, *n.* See கம்பியச்சு. *Loc.*

கம்பிச்சேலை kampi-c-cēlai, *n.* <கம்பி+. Woman's cloth with striped border; கம்பிக்கரையிடப்பெற்ற சேலை. (W.)

கம்பிச்சோமன் kampi-c-cōmaṉ, *n.* <id. +. Man's cloth with a thin striped border; கம்பிக்கரையுள்ள வேஷ்டி.

கம்பிதம் kampitam, *n.* <*kampita*. 1. Quivering, quaking, trembling, shaking; நடுக்கம். *கம்பிதமுங் கண்ணீரும் வரக்கவற்சி யுறும்போதில்* (திருவாத. பு. மண்சுமந்த. 56). 2. (Mus.) Tremola, a trill, one of ten *kamakam*, q.v.; கமகம் பத்தனுள் ஒன்று. (பரத. இராக. 24.)

கம்பிநீட்டு-தல் kampi-nīṭṭu-, *v. intr.* <கம்பி[1] +. To run away, go off slily, steal away, take to one's heels; ஓடிவிடுதல். *Colloq.*

கம்பிப்பிசின் kampi-p-piciṉ, *n.* <id.+. Dikmali gum; ஒருவகை மரப்பிசின். (W.)

கம்பிமணி kampi-maṇi, *n.* <id. +. A kind of wire necklace; ஒருவகைக் கழுத்தணி. (W.)

கம்பியச்சு kampi-y-accu, *n.* <id.+. [M. *kambiyacca*.] Perforated iron plate used by goldsmiths and silversmiths for drawing out wire; கம்பியிழுக்கும் தட்டார்கருவி.

கம்பியிழு-த்தல் kampi-y-iḻu-, *v. intr.* <id. +. To draw out wire; பொற்கம்பிமுதலியன நீளச்செய்தல். *Colloq.*

கம்பியுப்பு kampi-y-uppu, *n.* <id.+. A superior kind of saltpetre in bars or pieces. See வெடியுப்பு. (W.)

கம்பில் kampil, *n.* 1. See கம்பி[3]. 2. Broad-leaved Gardenia, m. tr., *Gardenia latifolia*; பெருங்கம்பில். (L.)

கம்பிலி[1] kampili, *n.* See கம்பி[3]. (B.)

கம்பிலி[2] kampili, *n.* <*Kāmpila*. A city in N. India; வடநாட்டு ஓரூர். *கம்பிலிச்சயத் தம்பகட்டதும்* (கலிங். 190, புதுப்.).

கம்பிலிப்பிசின் kampili-p-piciṉ, *n.* cf. கம்பளிப்பிசின். Dikmali gum-plant. See தீக்காமல்லி.

கம்பிவாங்கு-தல் kampi-vāṅku-, *v. intr.* <கம்பி[1]+. See கம்பிநீட்டு-.

கம்பிவிறிசு kampi-viṟicu, *n.* <id.+. Fire-works which shoot forth in pencils of light; கம்பிகம்பியாகப் தீப்பொறி பொரியும் ஒருவகைவாணம். (W.)

கம்பிவேஷ்டி kampi-vēṣṭi, *n.* <id. + . Man's cloth with a thin striped border; கம்பிக் கரையுள்ளவேஷ்டி.

கம்பீர் kampīr, *n.*< Malay. *gambier.* A preparation from the astringent leaf of a Malay shrub used along with betel; தாம்பூலத்துடன் சேர்க்கும் ஒருவகைத் துவர்ப்புச்சரக்கு. (மூ. அ.)

கம்பீரசன்னி kampīra-caṉṉi, *n.* <*gambhīra*+. 1. High delirium; அதிகாரசன்னி. 2. Superciliousness, boastfulness, haughtiness; கருவம். *Colloq.*

கம்பீரம் kampīram, *n.* <*gambhīra.* 1. Depth, profundity; ஆழம். (சூடா.) 2. Profound knowledge; ஆழ்ந்த அறிவு. (W.) 3. Majestic air or bearing; manliness; வீறு.

கம்பீரவாக்கு kampīra-vākku, *n.* <id.+. 1. Superior style of writing, pregnant with meaning; பொருளாழ்ந்த செய்யுள். (W.) 2. Manly, authoritative, majestic voice; deep, grave intonation; எடுப்பான குரல்.

கம்பீரி-த்தல் kampīri-, *11 v. intr.* <id. To exult; to speak in a majestic tone; எடுப்பான குரலாற் பேசுதல். (W.)

கம்பு[1] kampu, *n.* <Pkt. *khambha* <*stambha.* [T. *kambu.*] 1. Post for tying elephants; stake; கட்டுத்தறி. *கம்பமருவ் கரியுரியன்* (தேவா. 1092, 4). 2. Pole, rod, stick; கழி. *வெந்தற்ற இருகத்திலே ஒரு கம்பாயினுங் கிடைக்குமோ* (ஈடு, 4, 1, ப்ர.). 3. Branch of a tree; மரக்கொம்பு. (திவா.) 4. Slender twig of a climber, or shrub; கொடி செடிகளின் சிறுதண்டு. *அளியின மல்லிகைப்பூங் கம்பு* (வெங்கைக்கோ. 191). 5. Pole for measuring wet lands=2 ft. +1 span; அளவுகோல். *Rd.*

கம்பு[2] kampu, *n.* 1. Bulrush Millet; கம்புத்தானியம். *கம்புகுளிர்ச்சியென . . . சொல்லுவர்* (பதார்த்த. 829). 2. Italian Millet. See செந்தினை. (பிங்.)

கம்பு[3] kampu, *n.* <*kambu.* Conch-shell; சங்கு. *கம்பொன்றியகை . . . திருமால்* (இரகு. இலவண. 75).

கம்புக்கெளுத்தி kampu-k-keḷutti, *n.* prob. id. + கெளிறு. cf. கொம்பன்கெளுத்தி. A fresh-water fish, bluish, attaining six ft. in length, *Macrones aor;* நல்லதண்ணீரில் வாழும் மீன்வகை.

கம்புக்கொங்கை kampu-k-koṅkai, *n.* <கம்பு[2]+. Cob of the Bulrush Millet after the grain has been removed; தானியம் நீக்கப்பட்ட கம்பங் கதிர்.

கம்புகட்டி kam-pukaṭṭi, *n.* prob. கம்[3] + புகட்டு-. One who irrigates; ஏரிநீர்பாய்ச்சுவோன். *கடல்வருணன் கம்புகட்டி* (சேக்கிழார். பு. 4).

கம்புகம் kampukam, *n.* Opium; அபின். (தைலவ. தைல. 94.)

கம்புள்[1] kampuḷ, *n.* prob. கம்[2] + புள். 1. A kind of water-fowl; ஒருவகை நீர்ப்பறவை. *கம்புட் சேவ லின்றுயி லிரிய* (மதுரைக். 254). 2. Indian sky-lark. See வானம்பாடி, 1. (சூடா.)

கம்புள்[2] kampuḷ, *n* <*kambu.* See கம்பு[3]. (சூடா.)

கம்பை kampai, *n.* <கம்பு[1]. 1. Ledge, frame of a door, etc.; கதவுமுதலியவற்றின் சட்டம். *Loc.* 2. Slips of wood forming the binding of a book made up of palm leaves; ஏட்டுச்சுவடிச் சட்டம். *சுவடியுங் கயிறுங் கம்பையும்* (பிரபோத. 11, 8). 3. Jurisdiction; அதிகாரவரம்பு. *கம்பைக்குள்ளாக்க.* (W.)

கம்பைக்கல் kampai-k-kal, *n.*< U. *Cambay* +. Cambay pebble, a kind of opal found in Cambay; ஒருவகைப் படிகம். (W.)

கம்பைகட்டு-தல் kampai-kaṭṭu-, *v. intr.* <கம்பை+. To close a book after reading; வாசித்தபின் சுவடியைக் கட்டுதல். *Loc.*

கம்பைதை-த்தல் kampai-tai-, *v. intr.* <id.+. To nail a beading or border on a door or the edge of a box; கதவுமுதலியவற்றிற் சட்டமடித்தல்.

கம்பைமரம் kampai-maram, *n.* Broad-leaved Gardenia, *Gardenia latifolia;* மாவிசேடம்.

கம்மக்குடம் kamma-k-kuṭam, *n.*<கம்[3]+. Pot made by a smith; கம்மியர்செய்த குடம். (நன். 222, மயிலை.)

கம்மக்கை kamma-k-kai, *n.* <id.+. (J.) 1. Pressure of work; நெருக்குவேலை. 2. Difficult work; கடினவேலை.

கம்மகாரர் kamma-kārar, *n.*< Pkt. *kamma* +*kāra.* Sailors, mariners; கப்பலோட்டிகள். *கம்மகாரர் கொண்டாடும்படி நன்றாக ஓடிற்று* (சீவக. 501, உரை).

கம்மத்தம் kammattam, *n.* <T. *kammatamu.* 1. Zemindar's or Inamdar's land which he cultivates with his own labourers; பண்ணை விவசாயம். 2. Grant of a village for a wife's pocket expenses; மனைவி அனுபவிக்க விடப்படும் ஊர். (M. M. 249.)

கம்மத்து kammattu, *n.* < U. *gammat.* Pomp, show. See கம்பத்து[1]. (W.)

கம்மம் kammam, *n.* < Pkt. *kamma* < *karman.* Smith's work; கம்மியர்தொழில். கம்மஞ் செய் மாக்கள் (நாலடி, 393).

கம்மல்[1] kammal, *n.* < கம்மு-. 1. Hoarseness, sore throat; குரலடைப்பு. 2. Dimness, as of gem, of a lamp, of glass, of spectacles; மங்கல். 3. Cloudiness, haziness; மந்தாரம். 4. Defect; deficiency, as in growth; fall in price; குறைவு. பயிர் கம்மலாய்ப்போயிற்று; விலைகம்மலாயிருக்கிறது. (W.)

கம்மல்[2] kammal, *n.* < T. *kamma.* A kind of ear-ring worn by women in the lobe of the ear; மகளிர் காதணிவகை.

கம்மவார் kammavār, *n.* < T. *kammavāru.* A Telugu agricultural caste; தெலுங்குச் சாதியாருள் விவசாயிகளான ஒரு பிரிவார்.

கம்மாட்டி kammāṭṭi, *n.* See கம்மாளச்சி. வீரசோ. தத்தி. 5, உரை.)

கம்மாணன் kammāṇaṉ, *n.* < Pkt. *kammāra.* See கம்மாளன். பறைச்சேரியுங் கம்மாணசேரியும் (S.I.I. ii, 43).

கம்மாய் kammāy, *n.* < *kam* + வாய்-. cf. கண்மாய். Irrigation tank, lake; ஏரி. *Loc.*

கம்மார்வெற்றிலை kammār-veṟṟilai, *n.* < T. *kammērāku.* A kind of betel-leaf which is dark-coloured and pungent; கறுப்புவெற்றிலை.

கம்மால் kammāl, *n.* < Pkt. *kamma* + ஆலை < *karma-śālā.* Brazier's forge; பித்தளை வேலை செய்யுமிடம். *Madr.*

கம்மாலை kammālai, *n.* See கம்மால்.

கம்மாளச்சி kammāḷacci, *n.* < Pkt. *kammāra.* Woman of *kammāḷaṉ* caste; கம்மாள சாதிப்பெண்.

கம்மாளத்தி kammāḷatti, *n.* See கம்மாளச்சி.

கம்மாளன் kammāḷaṉ, *n.* < Pkt. *kammāra* < *karmāra.* Smith, mechanic, artisan, of five castes, viz., *தட்டான், கன்னான், சிற்பன், தச்சன், கொல்லன்;* பொன்வேலை முதலிய தொழில் செய்யுஞ் சாதியான்.

கம்மாறர் kammāṟar, *n.* < *karmāra.* See கம்மகாரர். (W.)

கம்மி[1] kammi, *n.* < *karmin.* Labourer, workman; தொழிலாளி. மட்கலஞ்செய் கம்மி (பாரத. நிரை. 64).

கம்மி[2] kammi, *n.* < U. *kamī.* Deficiency, deficit, scantiness; குறைவு.

கம்மியநூல் kammiya-nūl, *n.* < *karmaṇya* +. Science of Architecture; சிற்பசாஸ்திரம். கம்மியநூற் றொல்வரம் பெல்லைகண்டு (திருவிளை. திருநகரங். 38).

கம்மியம் kammiyam, *n.* < id. 1. Work, labour; handicraft; கைத்தொழில். (W.) 2. Smith's work; கம்மாளத்தொழில்.

கம்மியன் kammiyaṉ, *n.* < *karmaṇya.* 1. Servant, labourer; தொழிலாளி. கம்மியரு மூர்வர் களிறு (சீவக. 495). 2. Smith, artisan; கம்மாளன். (திவா.) 3. Weaver; நெய்பவன். கம்மியர் குழீஇ (மதுரைக். 521).

கம்மு-தல் kammu-, *5 v. intr.* 1. To become hoarse; to be rough, jarring, as a wind instrument; குரல்குன்றி மாறுபடுதல். மென்குரல் கம்மாமே (குமர. பிர. முத்துக். 18). 2. To be overcast, cloudy, gloomy, dark; ஒளிகுறைதல். *Loc.*

கம்மெனல் kam-m-eṉal, *n.* Onom. 1. Term signifying indistinct sound; தெளிவின்றி ஒலித்தற்குறிப்பு. *Loc.* 2. Being calm, still, silent; ஓசையடங்கற் குறிப்பு. கானமுங் கம்மென் றன்றே (நற். 154). 3. Emitting of fragrance; மணங்கமழ்தற் குறிப்பு. ஒருங்குபிணியவிழக் காடே கம்மென்றன்றே (அகநா. 23). 4. Hastening; விரைவுக்குறிப்பு. கம்மென . . . முயக்கம் . . . பெறுகுவர் (அகநா. 11).

கம்மை kammai, *n.* Amaranth. See சிறுகீரை. (மலை.)

கம்ஸன் kamsaṉ, *n.* < *Kaṃsa.* Kaṃsa, a king of Mathurā, slain by Krṣṇa; கண்ணபிரானுற் கொலையுண்ட ஓர் அரசன்.

கம-த்தல் kama-, *12 v. intr.* < கமம்[1]. To be full; to occupy fully; நிறைதல். கமந்த மாதிரக் காவலர் (கம்பரா. மிதிலைக். 132).

கமக்காரன் kama-k-kāraṉ, *n.* < கமம்[3] +. Cultivator, farmer; விவசாயி. (J.)

கமகம் kamakam, *n.* < *gamaka.* 1. (Mus.) Graces and embellishments of melody of which there are ten varieties, viz. *ஆரோகணம், அவரோகணம், டாலு, ஆந்தோளம், ஸ்புரிதம், ஆகதம், மூர்ச்சனை, திரியுச்சம், பிரத்தியாகதம், கம்பிதம்;* ஸ்வரபேதம். (பாரத. இராக. 24.) 2. Clue, key, as of a solution; ஒன்றையறிதற்கு ஏதுவாயுள்ள குறிப்பு. இப்புகையுடைமை தீயுடைமையது கமகம் (தர்க்கபரி. 72).

கமகம-த்தல் kamakama-, *11 v. intr.* < கமகம. To be very fragrant; மிகமணத்தல்.

கமகமவெனல் kamakama-v-eṉal, *n.* < id. +. An expr. signifying fragrant smell; வாசனைக் குறிப்பு.

கமகன் kamakaṉ, *n.* < *gamaka.* One who, by his wide studies, literary training and

keenness of intellect, is able to expound even such works as he had not read before, to the satisfaction of learned scholars, one of the four kinds of *pulamaiyōr*, q.v.; நுண்ணறிவினுலும் கல்விப்பெருமையாலும் கல்லாத நூற்பொருளையும் எடுத்துரைக்க வல்லவன். (வெண்பாப். செய். 46.)

கமங்கட்டு-தல் kamaṅ-kaṭṭu-, *v. intr.* <கமம்² +. To cultivate one's own farm; சொந்த நிலத்தில் விவசாயஞ்செய்தல். (J.)

கமசி kamaci, *n.* <கம்பி + அச்சு. See கமிச்சு. *Loc.*

கமஞ்சூல் kamañ-cūl, *n.* <கமம்¹ +. Cloud, full of moisture; மேகம். வளங்கெழு கமஞ்சூல் (பதிற்றுப். 81, 2).

கமடம் kamaṭam, *n.* <*kamaṭha*. Turtle, tortoise; ஆமை. மந்தரத்தினை . . . கமடமாய் முதுகினிற் சுமந்தான் (பாகவ. மாயவனமி. 29).

கமடாதனம் kamaṭātaṉam, *n.* <id. + ஆதனம். A raised wooden board shaped like a tortoise used as a seat while meditating; கூர்மாசனம். இருந்து கமடாதனத்திலே (சைவச. பொது. 61).

கமண்டலம் kamaṇṭalam, *n.* <*kamaṇḍalu*. See கமண்டலு. தண்டங் கமண்டலங் கொண்டு (பழம. 24).

கமண்டலவிளநீர் kamaṇṭala-v-iḷanīr, *n.* <id. +. Large and tender coconut containing enough milk to fill a *kamaṇṭalam;* ஒருகமண்டலமளவு நீர்தரக்கூடிய இளநீர்வகை. (W.)

கமண்டலு kamaṇṭalu, *n.* <*kamaṇḍalu*. A vessel for holding water, used by ascetics; கரகம். கமண்டலுவி னன்னீர் (கம்பரா. அகத்திய. 48).

கமத்தொழில் kama-t-toḻil, *n.* <கமம்² +. Tillage, cultivation; விவசாயம். (J.)

கமம்¹ kamam, *n.* Fullness, entirety; நிறைவு. (தொல். சொல். 355.)

கமம்² kamam, *n.* perh. *karman*. (J.) 1. Cultivation, agriculture; விவசாயம். 2. Field, farm; வயல்.

கமம்புலம் kamam-pulam, *n.* <கமம்² +. Lands and fields; நிலமும்புலமும். (J.)

கமர் kamar, *n.* prob. கவர்²-. Crack, chasm, cleft in the ground caused by drought; நிலப்பிளப்பு. (திவா.)

கமரதம் kamaratam, *n.* Black Nightshade. See மணித்தக்காளி. (மலை.)

கமரிப்புல் kamari-p-pul, *n.* 1. *Poa malabarica;* புல்வகை. 2. Cleft grass, *Festucus indica;* ஒருவகைப்புல்.

கமல் kamal, *n.* Ivory-tree. See வெட்பாலை. (மூ. அ.)

கமலக்கண்ணன் kamala-k-kaṇṇaṉ, *n.* <*kamala* +. Viṣṇu, the lotus-eyed; திருமால். (திவா.)

கமலகுண்டலமாய் kamala-kuṇṭalam-āy, *adv.* <id. +. Head foremost; upside down; தலைகீழாய். (J.)

கமலகோசிகம் kamala-kōcikam, *n.* <id. + *kōśa*. (Nāṭya.) A gesture with one hand in which the fingers are so held as to appear like the calyx of a lotus, one of 33 *iṇaiyāvinai-k-kai*, q.v.; கைதுவித்து ஐந்துவிரலும் அகலவிரித்துக் காட்டும் இணையாவினைக்கை. (சிலப். 3, 18, உரை.)

கமலத்தேவி kamala-t-tēvi, *n.* < id. +. Lakṣmī, whose abode is the pink lotus; இலக்குமி. கமலத்தேவி யென்றே யையஞ் சென்றதன்றே (திருக்கோ. 41).

கமலத்தோன் kamalattōṉ, *n.* <id. Brahmā; பிரமன். கமலத்தோ னுயுளும் (திவா. 11, 80).

கமலநிருத்தம் kamala-niruttam, *n.* <id. +. A kind of dance; கூத்தின் விகற்பம். (யாழ். அக.)

கமலம்¹ kamalam, *n.* <*kamala*. 1. Lotus; தாமரை. (திவா.) 2. Water; நீர். (திவா.) 3. A large number; ஒரு பேரெண். கமலமும் வெள்ளமும் (பரிபா. 2, 14). 4. Circular salver, like a full-blown lotus; ஒருவகைத் தட்டு. *Colloq.* 5. Faceted diamond; பட்டைதீர்ந்த வயிரம்.

கமலம்² kamalam, *n.* <கைமூலம். Cow that has lost its calf, but which nevertheless gives milk by other inducements; கன்றிழந்த பசு. *Madr.*

கமலமனோகரி kamala-maṉōkari, *n.* <*kamala-manōharī*. A musical mode; ஓர் இராகம். (பரத. இராக. 55.)

கமலயோனி kamala-yōṉi, *n.* <*kamala* +. Brahmā, the lotus-born; பிரமன். (திவா.)

கமலரேகை kamala-rēkai, *n.* <id. +. Certain lines on the palm of the hand, as interpreted in palmistry. See பதுமரேகை. பசுங் கமலச் சங்கரேகைக் கையைக் காட்டாய் (குற்ற. குற. 66, 3).

கமலவருத்தனை kamala-varuttaṉai, *n.* <id. + *vartanā*. (Nāṭya.) A gesture with both hands signifying obeisance, consisting in folding one's hands so as to resemble a lotus bud; தொழுதற்கு அறிகுறியாகத் தாமரைமொட்டுப்போலக் கைகளைக் குவிக்கை. (பரிபா. 16, 11, உரை.)

கமலவல்லி kamala-valli, *n.* < id. +. See கமலத்தேவி.

கமலவூர்தி kamala-v-ūrti, *n.*<id.+. Arhat, who rides on a lotus; தாமரையை வாகனமாக வுடைய அருகக்கடவுள். (திவா.)

கமலவைப்பு kamala-vaippu, *n.* <id.+. Lotus tank or pool; தாமரையுள்ள நீர்நிலை. வண் டினமேசீர் . . . வாழ்கமலவைப்பில் (மாறன. 261, 652, உதா.).

கமலன் kamalaṉ, *n.* <id. Brahmā, the lotus-born; பிரமன். (கூர்மபு. பிரமவி. 8.)

கமலா kamalā, *n.* prob. id. Loose-jacket, Sylhet Orange, s. tr., *Citrus aurantium-nobilis-chrysocarpa;* கிச்சிலிவகை.

கமலாக்கினி kamalākkiṉi, *n.* <*kamala*+*agni*. Circular flame of uniformly low heat such as that produced from two thin splinters of wood each being not more than two fingers in thickness, used in the preparation of medicine, so called because the flame spreads out like a lotus, one of three *āyur-vētākkiṉi*, q.v.; இரு விரல் கனமுள்ள இரண்டு விறகால் மருந்தெரிக்கும் எரிப்புத்திட்டம். (தைலவ. பாயி. 62, உரை.)

கமலாசனம் kamalācaṉam, *n.* <id.+. One of the postures prescribed for the practice of yōga. See பதுமாசனம். கமலாசனுதிசேர்ந்து (தாயு. தேசோ. 1).

கமலாசனன் kamalācaṉaṉ, *n.* <id.+. 1. Brahmā, seated on a lotus; பிரமன். 2. Arhat, seated on a lotus; அருகன்.

கமலாசனி kamalācaṉi, *n.*<id.+. Lakṣmī, seated on a lotus; இலக்குமி.

கமலாப்பொடி kamalā-p-poṭi, *n.* Kamēla. See குரங்குமஞ்சணறி. *Loc.*

கமலாலயம் kamalālayam, *n.*<*kamalā*+. Tiruvālūr, a town sacred to Śiva, in Tanjore District; திருவாரூர். முந்துசீர்க் கமலாலயத்து (கந்தபு. தெய்வயா. 61).

கமலாலயன் kamalālayaṉ, *n.* <*kamala*+. Brahmā who has his abode in a pink lotus; தாமரையை வாழிடமாகக்கொண்ட பிரமன். கமலாலயனுக்கருள்வோய் சரணம் (பிரமோத். 22, 75).

கமலி kamali, *n.* prob. id. A prepared arsenic. See துங்குமபாஷாணம். (மூ. அ.)

கமலிப்பட்டு kamali-p-paṭṭu, *n.* A kind of silk cloth; பட்டாடை வகை. (சங். அக.)

கமலை[1] kamalai, *n.* <*kamalā*. 1. Lakṣmī; இலக்குமி. கமலைநோக்கும் (கம்பரா. பாயி. பயன், 1). 2. Tiruvālūr, in Tanjore District; திருவாரூர். (திவா.)

கமலை[2] kamalai, *n.* See கபிலை[1]. (G. Tn. D. i, 157.)

கமவாரம் kama-vāram, *n.*<கமம்[2]+. Share of the produce of land given in return for agricultural implements loaned for its cultivation; உழவுக்கருவிகளுக்காக வாங்கும் வாரம். (J.)

கமழ்-தல் kamaḻ-, *4 v.intr.* 1. To emit fragrance; மணத்தல். தேங்கமழ் நாற்றம் (நாலடி. 199). 2. To appear; தோன்றுதல். மணங்கமழ் மாதரை (பொருந. 19). 3. To spread; பரத்தல். வியலிடங் கமழ விவணிசையுடையோர்க்கு (புறநா. 50, 13).

கமறு-தல் kamaṟu-, *5 v.intr.* 1. To roar, as thunder; மிகவொலித்தல். முகிலுங் கமற (திருப்பு. 750). 2. To weep bitterly, cry very loud; மிக அழுதல். (W.) 3. To be excessively heated, to become dry and hard; மிகவேதுதல். கடல் தீவுகள்கமற வெந்தழல் வேல்விடு சேவக (திருப்பு. 784). 4. To feel a pungent sensation as that produced by chillies on the fire; நெடியுண்டாதல். மிளகாய் கமறுகிறது. *Colloq.*

கமனகுளிகை kamaṉa-kuḷikai, *n.* <*gamana*+. Magical mercury pill, reputed to give a person the power of freely traversing through space; ஆகாயவழியே நினைத்தவிடம் செல்லுதற்கு உரிய சித்தர்குளிகை. (W.)

கமனசித்தர் kamaṉa-cittar, *n.* <id. +. Siddhas reputed to have the supernatural power of freely traversing through space; வானவழியே நினைத்தவிடம் செல்லவல்ல சித்தர். (W.)

கமனசித்தி kamaṉa-citti, *n.* <id.+*siddhi*. Supernatural power of freely traversing through space; வானவழியே நினைத்தவிடம் செல்லுஞ் சக்தி. (W.)

கமனம் kamaṉam, *n.* <*gamana*. Going, journeying, walking; செல்லுகை.

கமனாயகம் kamaṉāyakam, *n.*<E. *gum-ammoniacum*. Gum-ammoniacal tree, s. tr., *Dorema ammoniacum;* ஒருவகைப் பிசின்மரம்.

கமனி-த்தல் kamaṉi-, *11 v. intr.*<*gamana*. To go, pass swiftly; செல்லுதல். (யாழ். அக.)

கமாசு kamācu, *n.* <U. *khamāz*. A musical mode; ஓர் இராகம்.

கமாசுதார் kamācutār, *n.* <U. *kamāishdār*. Person appointed to supervise a *cattiram;* சத்திர மேற்பார்க்கும் அதிகாரி. *Loc.*

கமாம்ஸு kamāmsu, *n.* See கமாமிசு. காரியம் கமாம்ஸு. *Colloq.*

கமாமிசு kamāmicu, *n.* < U. *kamāish*. Affairs, business; காரியம். (W.)

கமார் kamār, *n.* See கமர். (W.)

கமாரக்காரர் kamāra-k-kārar, *n.* perh. கமார். A division among the Parava caste who impugn

the authority of their caste leader; பரவருள் ஒரு பகுதியார். (G. Tn. D. i, 123.)

கமாரிடு-தல் kamār-iṭu-, *v. intr.* <கமார் onom. +. To cry softly, utter a faint sound; மெதுவாய்ச் சத்தஞ்செய்தல். *அங்கே ஒருவருங் கமாரிடக் கூடாது.* (W.)

கமாரெனல் kamār-eṉal, *n.* Onom. Crying softly, uttering a faint sound; மெதுவான சத்தக் குறிப்பு. (W.)

கமான் kamāṉ, *n.* <U. *kamān.* 1. Arch; வளைவு. 2. Curling tongs; வளைந்த குறடு. *Loc.*

கமி[1] kami, *n.* Black Pepper. See மிளகு. (மலை.)

கமி[2]**-த்தல்** kami-, *11 v. intr.*<*gam.* To walk; நடத்தல். (பிங்.)

கமி[3]**-த்தல்** kami-, *11 v. tr.* <*kṣam.* 1. To bear with, endure, forgive, pardon; பொறுத்தல். *எங்க ளறியாமையாதி கமி* (தேவா. 1184, 7). 2. To support; தாங்குதல். *கமித்துநின்றிடு களையெலாம்* (சேதுபு. மங்கல. 64).

கமிச்சு kamiccu, *n.* <கம்பி + அச்சு. [T. *kammaccu.*] See கம்பியச்சு. *Loc.*

கமிசு kamicu, *n.* See கமிஸ்.

கமிஸ் kamis, *n.* <U. *qamis.* Shirt, chemise; உட்சட்டை.

கமீர் kamīr, *n.*<U. *khamīr.* Leaven, yeast, fermented matter; புளிப்பு.

கமுக்கக்காரன் kamukka-k-kāraṉ, *n.* <கமுக்கம்+. Reserved, reticent man; அடக்க முள்ளவன்.

கமுக்கட்டு kamukkaṭṭu, *n.* Armpit; அக்குள். (பிங்.)

கமுக்கம் kamukkam, *n.* [G. *kammeke.*] Reticence, taciturnity; இரகசிய வடக்கம். *மூடிக் கொண்டிருந்தால் கமுக்கம், திறந்தால் வெட்டவெளி.*

கமுகஞ்சலாகை kamukañ-calākai, *n.* <கமுகு +. Areca-lath; கமுகினாலியன்ற வரிச்சல். (W.)

கமுகம்பிள்ளை kamukam-piḷḷai, *n.*<id.+. The young Areca; கமுகங்கன்று.

கமுகம்பூச்சம்பா kamukam-pū-c-campā, *n.* <id. +. A kind of paddy, having the odour of Areca flowers; கமுகம்பூவின் மணமுடைய சம்பாநெல்வகை.

கமுகமடல் kamuka-maṭal, *n.* <id. +. Lower part of the leaf-stalk that wraps round the Areca tree; கமுகம்பட்டை. (W.)

கமுகவலிச்சல் kamuka-valiccal, *n.* <id. +. See கமுகஞ்சலாகை. (W.)

கமுகு kamuku, *n.* <*kramuka.* Areca-palm, *Areca catechu;* பாக்குமரம். *காய்க்குலைக் கமுகும்* (மணி. 1, 46).

கமை[1]**-த்தல்** kamai-, *11 v. tr.* <*kṣamā.* See கமி[3]-, 1. *அடியேன் பிழைத்தேனுயினு நீ கமைக்க வேண்டும்* (விநாயகபு. 33, 13).

கமை[2] kamai, *n.* <id. Patience, forbearance, lenity, endurance; பொறுமை. *கமை யினை யுடையராகி* (தேவா. 1104, 5).

கமை[3] kamai, *n.* cf. *kṣmā-bhṛt.* Mountain; மலை. *கமையாகி நின்ற கனலே போற்றி* (தேவா. 1160, 8).

கமைப்பு kamaippu, *n.* <கமை-. Endurance; பொறுமை. *கமைப்புறு நாண்முதற் காப்பு நீங்கினர்* (திருவிளை. வளை. 28).

கய[1]**-த்தல்** kaya-, *12 v.* <கை-. [M. *kai.*] *intr.* To be bitter; கைத்தல்.—*tr.* To abhor, loathe, detest; வெறுத்தல். *கயந்து நவின்றீரே* (சிவதரு. சுவர்க்கநரக. 188).

கய[2] kaya, *adj.* 1. Great; பெரிய. *கயவாய்ப் பெருங்கையானை* (தொல். சொல். 320, உரை). 2. Tender, smooth, delicate; மெல்லிய. *கயந்தலை மடப்பிடி* (தொல். சொல். 322, உரை).

கயக்கம் kayakkam, *n.*<கயங்கு-. 1. Strain, stress; வாட்டம். *புனிறுதீர் கயக்கந் தீர்வினை மகளிர்* (மணி. 7, 75). 2. Intermission, interruption; இடையீடு. *கயக்கமி றுயிற்சிக் கும்பகருணன்* (கம்பரா. ஊர்தேடு. 121). 3. Confusion, perturbation; கலக்கம். *கயக்கமி னிலைமை நோக்கி* (சீவக. 394).

கயக்கால் kaya-k-kāl, *n.* <கயம்[4] +. Channel issuing from a spring; river channel; ஊற்றுக்கால். *இம்பூண்டிக் கயக்காலுக்கு வடக்கும்* (S.I.I. i, 87).

கயக்கு[1]**-தல்** kayakku-, *5 v. tr.* Caus. of கயங்கு-. 1. To squeeze in the hand, rub, bruise, mash; கசங்கச்செய்தல். 2. To disarrange, throw into confusion; கலக்குதல். *கயக்கருங் கடற்றானை* (பு. வெ. 9, 35, கொளு).

கயக்கு[2] kayakku, *n.* <கயங்கு-. 1. Weariness, exhaustion; சோர்வு. (திவா.) 2. Confusion of mind, doubt, perplexity; மனக்கலக்கம். *கயக்கறு மாக்கள் கடிந்தனர்* (மணி. 16, 85).

கயங்கு-தல் kayaṅku-, *5 v. intr.* 1. To be squeezed in the hand, bruised, mashed; to shrivel; கசங்குதல். *கயங்கி வாடாதே* (அருட்பா, vi, திருவருட்பேறு, 10, பக். 565). 2. To be tired, exhausted; to droop; சோர்தல். *கயங்காதிலையும்* (அருட்பா, i, திருவருண். 203). 3. To be disturbed, as in mind; to be excited; கலங்குதல். *கயங்கு நெஞ்சே* (திருக்காளத். பு. 4, 5).

கயடேரிகம் kayaṭērikam, *n.* cf. கபடேரிகம். Eagle wood. See அகில். (மூ. அ.)

கயத்தம் kayattam, *n.*<*kāya-sthā*. Sacred Basil. See துளசி. (மலை.)

கயத்தி kayatti, *n.* <கய-மை. 1. Base, unworthy woman; கீழ்மகள். 2. Cruel woman; கொடியவள். அரங்கின்மே லிவளைத் தந்த தாய்கொலோ கயத்தி (சீவக. 678).

கயந்தலை kaya-n-talai, *n.* <கய+. 1. Soft head, as of a child; மெல்லிய தலை. முக்காழ் கயந் தலைத் தாழ (கலித். 86, 2). 2. Young elephant, having a tender head; யானைக்கன்று. (பிங்.)

கயப்பிணை kayappiṉai, *n.* Galena powder; வங்கமணல். (W.)

கயப்பு kayappu, *n.* <கய-. Bitterness; கைப்பு. வாய் கயப்புற (கம்பரா. மந்தரை. 63).

கயப்பூ kaya-p-pū, *n.*<கயம்[4]+. Aquatic flower; நீர்ப்பூ. கயப்பூப்போன் முன்மலர்ந்து பிற் கூம்புவாரை (நாலடி, 215).

கயம்[1] kayam, *n.* <கய. 1. Greatness, superiority, eminence; பெருமை. (பிங்.) 2. Tenderness, softness, smoothness; மென்மை. (பிங்.) 3. Youthfulness; இளமை. (திவா.)

கயம்[2] kayam, *n.* <கய-மை. 1. Inferiority, baseness, meanness; கீழ்மை. கயம்பெருகிற் பாவம் பெரிது (நான்மணி. 92). 2. The mean; the wicked; the vicious; கீழ்மக்கள். இரும்பிற் பிணிப்பர் கயத்தை (நான்மணி. 12).

கயம்[3] kayam, *n.* cf. கயவாய்[2]. See கரிக்குருவி. கோக்கயம் (திருவாலவா. 60, 13).

கயம்[4] kayam, *n.* prob. கசி-. 1. Tank, lake; நீர்நிலை. துணிகயந் துகள்பட (மணி. 24, 84). 2. Water; நீர். (பிங்.) 3. Sea; கடல். கயங்கரந்துறை யரக்கரை (உபதேசகா. விபூதி. 201). 4. [M. *kayam.*] Depth; ஆழம். கணிச்சிகளிற் கயம்பட நன்கிடித்து (சீவக. 592).

கயம்[5] kayam, *n.*<*gaja*. Elephant; யானை. கயந்தனைக் கொன்று (திருவாச. 9, 18).

கயம்[6] kayam, *n.* <Pkt. *khaya* <*kṣaya*. 1. Decay, wane, diminution; தேய்வு. தீவினை பின் னுவாமதியென . . . கயத்தருங்கொல் (திருச்செந். பு செயந்திபுரவை. 11). 2. Deficiency, defect; குறை பாடு. (சூடா.) 3. Loss, destruction, ruin; கேடு. (சூடா.) 4. Consumption, tuberculosis. See க்ஷயரோகம். கயக்கொடும் பிணியினல் (உபதேசகா. சிவத்து. 87).

கயமுகன் kaya-mukaṉ, *n.*<*gaja-mukha*. 1. Gaṇēśa, the elephant-headed; விநாயகர். (சூடா.) 2. An asura slain by Gaṇēṣa; விநாய கரால் கொல்லப்பட்ட ஓர் அசுரன். (விநாயகபு.)

கயமுனி kaya-muṉi, *n.*<*gaja*+. Young elephant; யானைக்கன்று. பொய்பொரு கயமுனி முயங் குகை கடுப்ப (மலைபடு. 107).

கயமை kayamai, *n.* Inferiority, baseness, despicableness; கீழ்மை. (குறள், 108, அதி.)

கயர் kayar, *n.* <கை-. (J.) 1. Astringency; துவர்ப்பு. 2. Astringent matter, as juices that taint metals, linen, skin; கறையுண்டாக்கும் துவர் உள்ள பொருள். 3. cf. கசர். Soft, spongy top of a coconut; தேங்காயின் கண்ணுள்ள பகுதி.

கயர்ப்பாக்கு kayar-p-pākku, *n.* <கயர்+. Highly astringent areca-nut; துவர்மிக்க பாக்கு. (J.)

கயரோகம் kaya-rōkam, *n.* <*kṣaya*+. Pulmonary disease, consumption; க்ஷயநோய். கயரோகத் திளைப்பர் (சேதுபு. துராசார. 27).

கயல் kayal, *n.* perh. கயம்[4]. Carp, a tank fish, *Cyprinus fimbriatus;* கெண்டைமீன். கயலெ னக் கருதிய வுண்கண் (ஐங்குறு. 36).

கயவஞ்சி kaya-vañci, *n.* <கய-மை+prob. *vañcaka*. Niggard, stingy person; உலுத்தன். (J.)

கயவன் kayavaṉ, *n.* <id. 1. Base, unworthy man; கீழ்மகன். கல்லாக் கயவன் (மணி. 23, 94). 2. Cruel man; கொடியவன். கண்ணிருட்டி யவர்கொலோ கயவர் சொல்லீர் (சீவக. 678).

கயவாய்[1] kaya-vāy, *n.*<கயம்[4]+. Estuary; நதியின் சங்கமுகம். கடன்மண் டழுவத்துக் கயவாய் கடுப்ப (மலைபடு. 528)

கயவாய்[2] kayavāy, *n.* prob. கயம்[3]+வாய். 1. See கரிக்குருவி. தேற்றமில் கயவாயாகிச் செனித்தலால் (திருவிளை. கரிக். 3). 2. Buffalo; எருமை. (பிங்.)

கயவாளி kaya-vāḷi, *n.* <*gayā*+ U. *wāl*. See கயாவாளி.

கயவு[1] kayavu, *n.* <கய. See கயம்[1], 1 and 2. (திவா.)

கயவு[2] kayavu, *n.*<கய-மை. 1. See கயம்[2], 1. (அக. நி.) 2. Theft, pilfering, larceny; களவு. (பிங்.)

கயவு[3] kayavu, *n.* <கயம்[3]. See கரிக்குருவி. (பிங்.)

கயற்கெண்டை kayaṟ-keṇṭai, *n.* <கயல் +. A kind of *keṇṭai* fish; கெண்டைமீன்வகை. (W.)

கயாகரம் kayākaram, *n.* A glossary in *kalitturai* verse, compiled by *Kayākarar* of Rāmēswaram; கயாகரர் இயற்றிய நிகண்டு.

கயாசிராத்தம் kayā-cirāttam, *n.* <*gayā*+. Religious ceremony for the departed, performed at Gayā; கயையிற்செய்யும் பிதிரர்கடங்கு.

கயாவாளி kayā-vāḷi, *n.* <id. + U. *wāl.* 1. One of the priestly class at Gayā; கயையிற் செய்யுஞ் சிராத்தத்தில் உண்ணுதற்கு உரிய பிராமணன். 2. Extortioner; பேராசைக்காரன். (C.G.) 3. Dishonest, unscrupulous fellow; அயோக்கியன்.

கயிங்கரியபரர் kayiṅkariya-parar, *n.* <*kaiṅkarya* + *para*. Servants; பணிவிடை செய்வோர். *Brah.*

கயிங்கரியம் kayiṅkariyam, *n.* <*kaiṅkarya.* Service. See கைங்கரியம். *வாசாகயிங்கரிய மன்றி* (தாயு. பரிபூரண. 1).

கயிப்பு kayippu, *n.* <U. *kaif.* [T. *hayipu.*] Drunkenness, intoxication; இலாகிரி. (W.)

கயிமவாதி kayimavāti, *n.* prob. *haimavati.* Sweet Flag. See வசம்பு. (மலை.)

கயிரம் kayiram, *n.* prob. *karavira.* Sweet Oleander. See அலரி. (W.)

கயிரவம் kayiravam, *n.* <*kairava.* Water-lily, white and red. See ஆம்பல். *கயிரவ நிறத்த பூங்கச்சு* (கந்தபு. யுத்தகாண். முதனாட். 21).

கயிரிகம் kayirikam, *n.* <*gairika.* Red ochre, red chalk; காவிக்கல். (சூடா.)

கயில்[1] kayil, *n.* 1. Clasp of a necklace; பூண்கடைப்புணர்வு. (திவா.) 2. Nape of the neck; பிடர். *கயில்கலந் திருண்டுதாழ்ந்த கருங்குழல்* (சூளா. சுயம். 112).

கயில்[2] kayil, *n.* Half of a coconut; தேங்காயிற் பாதி. (J.)

கயிலா kayilā, *n.* <U. *kāyilā.* Sickness, ill health. See காயலா.

கயிலாசம் kayilācam, *n.* <*kailāsa.* Šiva's abode. See கைலாசம்.

கயிலாயம் kayilāyam, *n.* <id. Šiva's abode, the heaven accg. to Šaivas. See கைலாசம். *முற்றுமொளிபெற்ற கயிலாயமலையே* (தேவா. 1156, 2).

கயிலாயன் kayilāyan̠, *n.* <id. Šiva, Lord of Kailāsa; சிவன். (W.)

கயிலி[1] kayili, *n.* <U. *khilat.* A kind of checkered cloth worn by Muhammadans; பலவர்ணமுள்ள முகம்மதியர் உடை. (J.)

கயிலி[2] kayili, *n.* <கையொலி. Vestment for an idol. See கைலி[2]. *அறுதிக்கயிலி . . . சாதிக்கிறதும்* (கோயிலொ. 74).

கயிலை kayilai, *n.* <*kailāsa.* Mt. Kailāsa, in the Himālayas, abode of Šiva; கைலாசம். *கயிலைமலையானே* (தேவா. 1159, 1).

கயிலையாளி kayilai-y-āḷi, *n.* <id. + ஆள். Šiva, Lord of Kailāsa; *சிவன்.*

கயிலையிற்கடுங்காரி kayilaiyir̠-kaṭuṅkāri, *n.* A kind of ore, solvent of flesh; மாமிசபேதி. (W.)

கயிற்கடை kayir̠-kaṭai, *n.* <கயில்[1] +. Curved extremity of a hook; கொக்குவாய். *கயிற்கடை முக்காழ்* (மணி. 3, 135).

கயிற்றரவு kayir̠r̠aravu, *n.* <கயிறு + அரவு. Illusion of mistaking a rope for a snake; பழுதையிற்றேன்றும் பாம்புணர்வு. *கயிற்றர விப்பி வெள்ளி* (சித். சிகா. 23, 5).

கயிற்றளவு kayir̠r̠aḷavu, *n.* <id. + அளவு. Measurement by a rope of a heap of grain or corn in stack; தானியக்குவியல் முதலியவற்றைக் கயிறுகொண்டு குறிக்கும் ஓரளவு. (W.)

கயிற்றுக்கோல் kayir̠r̠u-k-kōl, *n.* <id. +. A kind of balance in which vegetables are generally weighed, similar to the Danish steel-yard; காய்கறி முதலியன நிறுக்கும் ஒருவகை நிறைகோல். (W.)

கயிற்றுக்கோலாட்டம் kayir̠r̠u-k-kōl-āṭ-ṭam, *n.* <id. +. Playing with strings and sticks so that a weft of lace is formed thereby; பின்னற்கோலாட்ட விளையாட்டு. (W.)

கயிற்றுப்பொருத்தம் kayir̠r̠u-p-poruttam, *n.* <id. +. (Astrol.) A felicitous agreement in the *nakṣatras* of the bridegroom and the bride necessary for the assumption of the marriage badge; கலியாணப்பொருத்தங்களுள் ஒன்றான இரச்சுப்பொருத்தம். (விதான. கடிமண. 4.)

கயிற்றுவலை kayir̠r̠u-valai, *n.* <id. +. [M. *kayaṭṭu-vala.*] Rope-net for catching large fish in deep water or rapid streams; ஒருவகை மீன்வலை. (திவா.)

கயிற்றுவிரியன் kayir̠r̠u-viriyan̠, *n.* <id. +. Rope viper; விரியன்பாம்புவகை. (M.M.)

கயிற்றேணி kayir̠r̠ēṇi, *n.* <id. + ஏணி[1]. Rope-ladder; நூலேணி. (W.)

கயிறடி-த்தல் kayir̠aṭi-, *v. intr.* <id. + அடி-. To mark lines with thread soaked in colour on timber that has to be sawn, as in carpentry; அறுக்கும் மரங்களுக்கு நூல்வைத்துக் காவி முதலியவற்றாற் குறிதட்டுதல்.

கயிறறுந்தவாள் kayir̠ar̠unta-v-āḷ, *n.* <id. + அறு[1]- + ஆள். Vagrant, vagabond, stroller; one who wanders about aimlessly as a boat that is drifting on account of the rope that had secured it to a ship having snapped; கோம்பித்திரிபவ-ன்-ள். (J.)

கயிறு kayir̠u, *n.* [M. *kayar̠u.*] 1. Rope, cord, string, twine, cable; பாசம். *திருவினைத் தீராமை யார்க்குங் கயிறு* (குறள், 482). 2. Thread of the

marriage badge; மங்கலநாண். கயிறுநீத்து விதவையாய் (உபதேசகா. சிவபுண். 186). 3. Science, treatise; சாஸ்திரம். யாத்த சிறப்பக் கயிற்றின் வாழ்நரும் (பெருங். வத்தவ. 2, 51). 4. (Astrol.) Zodiacal sign rising at the moment when a person just consults the astrologer; ஆருடம் கேட்கவந்த காலத்து உதயமான இராசி. வந்தகயிற்றை மகிழ்ந்தெழு மட்டாயெண்ணி (சினேந். 2).

கயிறுகட்டிவிடு-தல் kayiṟu-kaṭṭi-viṭu-, *v. intr.* <கயிறுகட்டு-+. To noise abroad false news; to spread a false rumour; பொய்ச்செய்தி உண்டாக்கிப் பரப்புதல்.

கயிறுகட்டு-தல் kayiṟu-kaṭṭu-, *v. intr.* <கயிறு+. 1. To invent a story, spin a yarn; இல்லாததை உண்டாக்கிச் சொல்லுதல். *Colloq.* 2. To put off from day to day; நாட்கழித்தல். (W.) 3. To show a pretended consent, as a seller to one who offers a low price; பாசாங்குசெய்தல். (W.) 4. To employ one to deceive another; ஒருவனைக்கொண்டு மற்றொருவனை வஞ்சித்தல். (W.)

கயிறுசாத்து-தல் kayiṟu-cāttu-, *v. intr.* <id.+. To pass a string between the leaves of a sacred book in order to divine by it; நிமித்தம்பார்க்குமாறு இராமாயணம் தேவாரம்போன்ற நூலினுட் கயிறிடுதல்.

கயிறுசிக்குப்படு-தல் kayiṟu-cikku-p-paṭu-, *v. intr.* <id.+. To be embroiled, to disagree, quarrel, get into a tangle; தொந்தரவுபடுதல். (W.)

கயிறுதட்டு-தல் kayiṟu-taṭṭu-, *v. intr.* <id. +. See கயிறடி-.

கயிறுதடி kayiṟu-taṭi, *n.* <id.+. A weaving instrument; ஒரு நெசவுக்கருவி.

கயிறுதிரி-த்தல் kayiṟu-tiri-, *v. intr.* <id. +. 1. To twist twine, cord, rope; கயிறுமுறுக்குதல். 2. To invent a story, spin a yarn; கற்பித்துச் சொல்லுதல். *Colloq.*

கயிறுபிடி-த்தல் kayiṟu-piṭi-, *v. intr.* <id. +. See கயிறுதிரி-, 1. (W.)

கயிறுபிடித்தறி-தல் kayiṟu-piṭi-t-taṟi-, *v. intr.* <id.+. To measure, sound or test by the plumb-line, to adjust erections to a vertical line by means of the plummet; கட்டடமுதலியவற்றுக்காக கயிறுபிடித்து நேர்மையறிதல்.

கயிறுபோடு-தல் kayiṟu-pōṭu-, *v. intr.* <id. +. 1. To twist a rope; கயிறுதிரித்தல். *Loc.* 2. See கயிறுசாத்து-. *Colloq.*

கயிறுமாறு-தல் kayiṟu-māṟu-, *v. tr.* <id.+. To replace the old cord-strings of a newly bought animal, as a horse, by new tethering in confirmation of purchase, the old cords being taken away by the seller; குதிரைமுதலியவற்றின் விற்பனையை உறுதிப்படுத்த அவற்றின் கயிற்றை மாற்றுதல். பரிகள் . . . கயிறுமாறி நின்னவாக்கொள்ளுநீரால் (திருவிளை. நரிபரி. 33).

கயிறுருவிவிடு-தல் kayiṟuruvi-viṭu-, *v. intr.* <id.+உருவு-+. 1. To untether, as a bull in *calli-k-kaṭṭu*; எருதுமுதலியவற்றை வெளியேறும்படி அவிழ்த்துவிடுதல். 2. To unleash and urge, as a hound; தூண்டிவிடுதல். மற்றிவனைக் காவார் கயிறுரீஇ விட்டார் (திணைமாலை. 47).

கயிறுவெட்டுப்புண் kayiṟu-veṭṭu-p-puṇ, *n.* <id.+. Wound caused by the grating of a rope; வடத்தால் அறுபட்ட புண்.

கயினி[1] kayiṉi, *n.* <கை. The 13th *nakṣatra*, supposed to resemble the hand in shape; அத்தநாள். (பிங்.)

கயினி[2] kayiṉi, *n.* <கைம்மை. Widow; கைம்பெண். கயினியவரிற் கண்ணுற்று (இரகு. இந்து. 27).

கயை kayai, *n.* <*Gayā*. Gayā, sacred city in Behar, famous place of pilgrimage; ஒரு க்ஷேத்திரம்.

கர்க்கசம் karkkacam, *n.* <*karkaśa*. That which is rough, gruff, grating, unpolished; கடினமானது. என் கர்க்கசச்சொல் (இரகு. பாயி. 7).

கர்க்கடகசங்கிராந்தி karkkaṭaka-caṅkirānti, *n.* <*karkaṭaka*+. Beginning of the month of *Āṭi* when the sun passes to the sign of Cancer; ஆடிமாதப்பிறப்பு. (C.G.)

கர்க்கடகசந்திரன் karkkaṭaka-cantiraṉ, *n.* < id. +. The moon in Cancer; கர்க்கடகராசியில் நிற்குஞ் சந்திரன்.

கர்க்கடகசிங்கி karkkaṭaka-ciṅki, *n.* <id. *śṛṅgī*. Japanese Wax-tree, m. tr., *Rhus succedanea;* கடுக்காய்ப்பூமரம். கர்க்கடகசிங்கி . . . அரிவையரைக் கூடு திறங்கொடுக்கும் (பதார்த்த. 1008).

கர்க்கடகபாஷாணம் karkkaṭaka-pāṣāṇam, *n.* <id.+. A mineral poison; பிறவிப்பாஷாணங்களுள் ஒன்று.

கர்க்கடகம் karkkaṭakam, *n.* <*karkaṭaka*. 1. Crab; நண்டு. (திவா.) 2. Cancer, a constellation of the Zodiac; ஓர் இராசி. (சூடா.)

கர்க்கர் karkkar, *n.* <*Garga*. Garga, one of the earliest astronomers; வானசாஸ்திர ஆசிரியரான ஒரு முனிவர்.

கர்க்கரி[1] karkkari, *n.* <*karkarī*. A jar for holding water; கரகம். (பிங்.)

கர்க்கரி[2] karkkari, *n.* <*gargarī*. Churn; தயிர்கடை தாழி. (சூடா.)

கர்க்கவம் karkkavam, *n.* Ceylon Tea, m. tr., *Elaeodendron glaucum;* மரவகை.

கர்ச்சினை karccaṉai, *n.* <*garjana.* Roar, as of a lion or a thunderstorm; பேரொலி. (திவா.)

கர்ச்சி¹-த்தல் karcci-, *11 v. intr.* <*garj.* To roar, as a wild beast or thunder; முழங்குதல்.

கர்ச்சி² karcci, *n.* Indian Nightshade. See சிறுவழுதுணை.

கர்ச்சிதம் karccitam, *n.* <*garjita.* Rumbling of clouds, rolling of distant thunder; roaring of a lion; முழக்கம்.

கர்ச்சிப்பு karccippu, *n.* <கர்ச்சி-. See கர்ச்சிதம்.

கர்ச்சு karccu, *n.* <U. *kharcu.* Charge, expense, expenditure; செலவு. (G. Sm. D. i, ii, 50.)

கர்ச்சூர் karccūr, *n.* See கர்ச்சூரம். (தைலவ. தைல. 1.)

கர்ச்சூரம் karccūram, *n.* <*kharjūra.* 1. Date Palm. See பேரீந்து. (சூடா.) 2. Bonduc-nut. See கழற்கொடி. (பிங்.)

கர்ச்சூரிக்காய் karccūri-k-kāy, *n.* <id.+. 1. Date fruit; பேரீச்சங்காய். 2. A preparation in confectionery, a puff; ஒருவகைப்பண்ணிகாரம்.

கர்சு karcu, *n.* See கர்ச்சு. (C.G.)

கர்ணகடூரம் karṇa-kaṭūram, *n.* See கர்ணகடோரம்.

கர்ணகடோரம் karṇa-kaṭōram, *n.*<*karṇa* +*kaṭhōra.* That which is unpleasant to hear; harsh, jarring, discordant sound; காதுக்குக் கடுமையானது.

கர்ணகூசிகை karṇa-kūcikai, *n.* prob. *karṇa-gūthaka.* A disease of the ear; காதுநோய்வகை. (தைலவ. தைல. 44.)

கர்ணசூலை karṇa-cūlai, *n.* <*karṇa* +. Ear-ache; காதுக்குத்து. (தைலவ. தைல. 44.)

கர்ணநாதம் karṇa-nātam, *n.*<id.+. Singing in the ears, a disease of the ear; காதிரைச்சல்நோய். (தைலவ. தைல. 44.)

கர்ணப்பூ karṇa-p-pū, *n.* <id.+. Jewel worn at the top of the ear next to the *muruku*, usually made of gold; ஒருவகைக் காதணி.

கர்ணபத்திரம் karṇa-pattiram, *n.*<id.+. 1. Gold ear-ring fashioned after a roll of palmyra leaf worn by women; ஓலையென்னுங் காதணி. 2. Ear-like ornament for the idol made of gold or silver; விக்கிரகங்கட்குச் சாத்தும் காதுபோன்ற அணி.

கர்ணபரம்பரை karṇa-paramparai, *n.* <id.+. Tradition, traditional story or information; கேள்விவழியாக வந்த செய்தி.

கர்ணபூரம் karṇa-pūram, *n.* <id.+*pūra.* A kind of ear-ornament; காதணிவகை.

கர்ணம்¹ karṇam, *n.* <*karṇa.* Ear; காது.

கர்ணம்² karṇam, *n.* <*karaṇa.* 1. Village accountantship; கிராமக்கணக்குவேலை. 2. Village accountant; கிராமக்கணக்கன்.

கர்ணமந்திரம் karṇa-mantiram, *n.*<*karṇa*+. Verses from the Vēda, uttered into the ear of a dying person; இறக்குநிலையிலிருப்பவரின் காதில் செபிக்கும் வேதமந்திரம். *Brah.*

கர்ணன் karṇaṉ, *n.*<*Karṇa.* See கன்னன்

கர்ணா karṇā, *n.* <U. *karnā.* A kind of musical instrument; ஒருவகை வாத்தியம். *கர்ணாவொடு சிறந்தகொம்புகள் . . . முழங்கின* (இராமநா. யுத்த. 87).

கர்ணிகம் karṇikam, *n.* <*karṇika.* A kind of delirium, one of 13 *caṉṉi*; சன்னிவகை. (சீவரட். 27.)

கர்ணிகை karṇikai, *n.* <*karṇikā.* Pericarp of the lotus or rudiment of the future fruit; தாமரைப்பொகுட்டு.

கர்த்தத்துவம் karttattuvam, *n.* <*kartṛ-tva.* See கர்த்திருத்துவம். *கர்த்தத்துவம் அவர்தோளின் மேலிருக்கும்* (விவிலி. ஏசா. 9, 6).

கர்த்ததுரோகம் kartta-turōkam, *n.*<*kartṛ* +. High treason; இராசத்துரோகம். (W.)

கர்த்ததுரோகி kartta-turōki, *n.* <id.+. One guilty of high treason; இராசத்துரோகி. (W.)

கர்த்தபம் karttapam, *n.* <*gardabha.* Ass, donkey; கழுதை. (பிங்.)

கர்த்தமன் karttamaṉ, *n.* <*kardama.* See கருத்தமன்.

கர்த்தரிப்பிரயோகம் karttari-p-pirayōkam, *n.* <*kartari-prayōga.* (Gram.) Active voice; செய்வினைவழக்கு. (பி. வி. 36, உரை.)

கர்த்தவம் karttavam, *n.* <*gardabha.* See கர்த்தபம். *நீ கர்த்தவ மாகியென்றான்* (உபதேசகா. சிவத்துரோகி. 455).

கர்த்தவியம் karttaviyam, *n.* <*kartavya.* That which ought to be done, duty, obligation; செய்யத்தக்கது. *கர்த்தவிய மெவ்விடம்* (தாயு. எங்குநிறை. 1).

கர்த்தன் karttaṉ, *n.* See கர்த்தா.

கர்த்தா karttā, *n.* <*kartā* nom. of *kartṛ.* 1. Doer, maker, agent, author; managing member of a family; one who performs, as a religious ceremony; செய்வோன். 2. (Gram.) Subject of a sentence; agent of an action; வினை

முதல். (சன். 297.) 3. God, as Creator; கடவுள். 4. Master, chief, lord; தலைவன். (விவிலி. மத். 7, 22.)

கர்த்தாக்கள் karttākkaḷ, *n.*<id. 1. (Šaiva.) Agents, term applied to the five deities as those through whose actions for the benefit of souls the Supreme Power manifests itself, the deities being *பிரமன், விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன்;* படைப்பு முதலிய தொழில்புரியும் பஞ்சகர்த்தாக்கள். 2. Title of the Nāyaka kings of Madura; மதுரை நாயக்கவரசர் பட்டப்பெயர். *கர்த்தாக்கள் மெச்சுஞ் சவியா மதிமந்திரி* (பெருந்தொ. 1300).

கர்த்தாளி karttāḷi, *n.* <id.+ஆள்-. Heir; உரியவன். *அம்மான்சொத்துக்கு மருமகன் கர்த்தாளி* *Loc.*

கர்த்திருத்துவம் karttiruttuvam, *n.*<*kartṛ-tva.* 1. Privilege of commencing or doing an act; தொழில் நடாத்து முதன்மை. 2. Godhead; கடவுட்டன்மை.

கர்நாடகம் karnāṭakam, *n.*<*கருநாடகம்.* 1. See கன்னடம். 2. The Carnatic, as ruled by the Nabobs; நவாபு ஆண்ட தேசம். 3. Pure South Indian music; தென்னாட்டுச் சங்கீதம். 4. A musical mode; ஓர் இராகம். (*பாரத. இராக.* 55.) 5. Old fashion, an epithet applied in facetious disparagement, to a person of old-fashioned ways; பழைய மாதிரி, *அவன் ஒரு கர்நாடக மனிதன். Colloq.*

கர்ப்பக்கல் karppa-k-kal, *n.* <*garbha*+. Quadrangular stone, used to quicken the delivery of the child; பிரசவத்தினின்று சிசுவை விரைந்து வெளியேற்ற உதவும் ஒருவகைக் கல். (W.)

கர்ப்பக்கிருகம் karppa-k-kirukam, *n.* <id. +. Inner sanctuary of a Hindu temple, in which the fixed idol is placed; ஆலயத்திலுள்ள மூலஸ்தானம்.

கர்ப்பக்குழி karppa-k-kuḻi, *n.* <id.+. See கர்ப்பகோசம்.

கர்ப்பகோசம் karppa-kōcam, *n.* <id.+ *kōša.* The uterus; கருத்தங்கும் உறுப்பு.

கர்ப்பகோளகை karppa-kōḷakai, *n.* <id. +*gōlaka.* See கர்ப்பகோசம்.

கர்ப்பங்கரை-தல் karppaṅ-karai-, *v. intr.* <id.+. 1. To abort; கருச் சிதைதல். 2. To be frightened out of one's wits; அச்சமிகுதல்.

கர்ப்பங்கலங்கு-தல் karppaṅ-kalaṅku-, *v. intr.* <id.+. See கர்ப்பங்கரை-.

கர்ப்பச்சூடு karppa-c-cūṭu, *n.* <id.+. 1. Constitutional debility of an infant brought on by antenatal conditions; பெற்றோர்வழியாக வரும் குழந்தைநோய்வகை. 2. A disease of the tongue; நாக்கிற் காணும் ஒருவகை நோய். (பைஷஜ.)

கர்ப்பசிராவம் karppa-cirāvam, *n.* <id.+ *srāva.* 1. Abortion; கருச்சிதைவு. (C.G.) 2. See கர்ப்பமேகம். (பைஷஜ.)

கர்ப்பசூலை karppa-cūlai, *n.* <id.+. 1. Obstruction of the menses, *amenorrhoea*, causing swelling of the abdomen; சூதகத்தடை. (W.) 2. Pain in the womb; கருப்பையில் வேதனை. (பைஷஜ.)

கர்ப்பந்தரி-த்தல் karppan-tari-, *v. intr.* <id.+. To conceive, become pregnant; கருக்கொள்ளுதல்.

கர்ப்பப்பை karppa-p-pai, *n.* < id. +. See கர்ப்பகோசம்.

கர்ப்பபாதம் karppa-pātam, *n.* <id.+ *pāta.* Abortion; கருச்சிதைவு. (பைஷஜ.)

கர்ப்பம் karppam, *n.*<*garbha.* 1. Embryo, foetus, the young in the womb; கரு. 2. Womb; matrix; கருப்பாசயம். 3. Fig., essence, substance; inside, inner contents of anything; உட்கொண்டது. *அர்த்தகர்ப்பமுள்ள பாட்டு.* 4. Crisis of a plot in a drama, one of five *nāṭaka-c-canti*, q.v.; நாடகச்சந்தியைந்தனுள் ஒன்று. 5. Name of an Upaniṣad; நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று.

கர்ப்பமேகம் karppa-mēkam, *n.* <id.+. Leucorrhoea; வெள்ளைநோய்.

கர்ப்பவதி karppavati, *n.* <*garbha-vatī.* Pregnant woman; கருவுற்ற பெண்.

கர்ப்பவாசம் karppa-vācam, *n.* <*garbha* +. Being in the womb; கருப்பத்தில் தங்குகை.

கர்ப்பவாதை karppa-vātai, *n.* <id.+ Travail, pain of child-birth; பிரசவவேதனை.

கர்ப்பவாயு karppa-vāyu, *n.* <id. +. A diseased condition of the womb; சூதிகா வாயு.

கர்ப்பவோட்டம் karppa-v-ōṭṭam, *n.* <id.+. Southern passage of clouds. See கர்ப்போட்டம். (W.)

கர்ப்பஸ்ரீமான் karppa-šrīmāṉ, *n.* <id.+. One born with a silver spoon in his mouth; பிறவிச்செல்வன்.

கர்ப்பஸ்திரீ karppa-stirī, *n.*<id.+. Pregnant woman; கருப்பவதி.

கர்ப்பாசயம் karppācayam, *n.* < id. + *ā-šaya.* Uterus, womb, one of *pañcācayam*, q.v.; கர்ப்பப்பை. *கர்ப்பாசயக்குழிக்கே தள்ளுமோ* (பட்டினத். திருப்பா. திருச்செங்காடு. பக். 142).

கர்ப்பாதானம் karppātāṉam, *n.* <id.+ *ā-dhāna.* Rite performed for the conception of the child, one of *cōṭaca-samskāram*,

q.v.; கருப்பந்தரித்தற்காகச் செய்யுஞ் சடங்கு. (திருவாலவா. கோச்செங். 14.)

கர்ப்பாஷ்டமம் karppāṣṭamam, *n.* <id. +*aṣṭama*. The eighth year from conception being the seventh year after birth; கருவுண்டான நாள்தொடங்கி எட்டாவதாகிய வருடம். *கர்ப்பாஷ்டமத்தில் தானே உபநயனகர்மத்தையும் . . . செய்து முடிக்க* (குருபரம். பன்னீ. 223).

கர்ப்பிணி karppiṇi, *n.* <*garbhiṇī*. See கருப்பஸ்திரீ. *மலடி கர்ப்பிணி தாதி* (சைவச. பொது. 388).

கர்ப்புரை karppurai, *n.* prob. *karburā*. Benzoin tree. See சாம்பிராணி. (சங். அக.)

கர்ப்பூரக்கிச்சிலிக்கிழங்கு karppūra-k-kiccili-k-kiḻaṅku, *n.* <*karpūra*+: Zedoary root; பூலாங்கிழங்கு.

கர்ப்பூரக்கிளுவை karppūra-k-kiḷuvai, *n.* <id.+. Hill Balsam tree. See மலைமா. (L.)

கர்ப்பூரக்கொடி karppūra-k-koṭi, *n.* <id. +. A kind of betel. See வெள்ளைக்கொடி. (G. Sm. D. 215.)

கர்ப்பூரசிலாசத்து karppūra-cilā-cattu, *n.* <id.+. Foliated crystallized gypsum; ஒருவகை மருந்துக்கல்.

கர்ப்பூரத்துளசி karppūra-t-tuḷaci, *n.* <id. +. A kind of *tuḷaci* plant that diffuses the smell of camphor; கர்ப்பூரவாசனையுள்ள துளசிவகை.

கர்ப்பூரத்தைலம் karppūra-t-tailam, *n.* <id.+. 1. Oil or spirit of turpentine; கர்ப்பூரம்போல வாசனையுள்ள பூச்சுமருந்து. 2. Oil of camphor; கர்ப்பூரத்தினின்று எடுக்குந் தைலம்.

கர்ப்பூரதீபம் karppūra-tīpam, *n.* <id.+. Lighted camphor used in worship; கர்ப்பூரத்தினின்று எரியுந் தீபம். (பாரத. ஒழிபி. 42, உரை.)

கர்ப்பூரநீர் karppūra-nīr, *n.* <id. +. Tincture of camphor; camphor in solution; கர்ப்பூரத்திராவகம். (W.)

கர்ப்பூரப்புல் karppūra-p-pul, *n.* <id.+. Lemon-grass, ***Andropogon citratus;*** ஒருவகை வாசனைப்புல். (W.)

கர்ப்பூரம்[1] karppūram, *n.* <*karpūra*. 1. Common camphor; எரிக்குங் கர்ப்பூரம். 2. Camphor in its native state, one of five *muka-vācam*, q.v.; முகவாசங்களுள் ஒன்றான பச்சைக்கர்ப்பூரம். (சீவக. 838, உரை.) 3. See கர்ப்பூரமரம்.

கர்ப்பூரம்[2] karppūram, *n.* <*karbūra*. Gold; பொன். (பிங்.)

கர்ப்பூரமணி karppūra-maṇi, *n.* perh. *கர்ப்பூரம்*[1]+. Amber. See அம்பர்[3]. (M.M.)

கர்ப்பூரமரம் karppūra-maram, *n.* <*kar-pūra*+. 1. Japan Camphor tree, l. tr., *Cinnamomum camphora;* கர்ப்பூரம் உண்டாதற்குரிய மரம். 2. Blue-gum tree, l. tr., *Eucalyptus globulus;* மரவிசேடம். (W.)

கர்ப்பூரவல்லி karppūra-valli, *n.* <id.+. See கர்ப்பூரவள்ளி.

கர்ப்பூரவள்ளி karppūra-vaḷḷi, *n.* <id.+. 1. Thick-leaved Lavender, s. sh., *Anisochilus carnosum;* ஒருவகை மருந்துச்செடி. *நெஞ்சிற்கட்டு கபம் வாதமும்போம் . . . கர்ப்பூரவள்ளி* (பத ந்த. 330). 2. Country Borage, s.sh., *Coleus arcmaticus;* ஒருவகை வாசனைச்செடி.

கர்ப்பூரவாழை karppūra-vāḻai, *n.* <id.+. A kind of plantain; வாழைவகை.

கர்ப்பூரவில்வம் karppūra-vilvam, *n.* <id. +. A very fragrant Bael tree; வில்வமரவகை. (W.)

கர்ப்பூரவிலை karppūra-vilai, *n.* <id.+. Price paid for temple lands; தேவஸ்தானநிலங்களுக்குக் கொடுக்கும் விலை. *Loc.*

கர்ப்பூரவெற்றிலை karppūra-veṟṟilai, *n.* <id.+. Fragrant White Betel; வெற்றிலைவகை. (W.)

கர்ப்பூராரத்தி karppūrāratti, *n.* <id.+ *ārātrika*. Waving of lighted camphor; கர்ப்பூரத்தாலாகிய ஆலத்தி.

கர்ப்போட்டம் karppōṭṭam, *n.* <*garbha* +*ஓட்டம்* Southern passage of the rain clouds about the latter half of the *Mārkaḻi* month; மார்கழிப்பிற்பகுதியில் கருக்கொண்டமேகத்தின் தென்சார்பான ஓட்டம்.

கர்பரி karpari, *n.* <U. *garbari*. Confusion; குழப்பம். (W.)

கர்மகாண்டம் karma-kāṇṭam, *n.* <*karman* +. 1. That part of the Vēda chiefly Brāhmaṇā literature which treats about dharma, ceremonial acts and sacrificial rites; யாகம் முதலிய வைதிக தர்மங்களைப்பற்றிக்கூறும் வேதத்தின் முற்பகுதி. 2. A medical treatise, attributed to Agastya; அகத்தியர் எழுதியதாகக் கூறப்படும் ஒரு வைத்தியநூல்.

கர்மணிப்பிரயோகம் karmaṇi-p-pirayō-kam, *n.* <*karmaṇi*+*prayōga*. (Gram.) Passive voice; செயப்பாட்டுவினைவழக்கு. (பி. வி. 36, உரை.)

கர்மதாரயம் karma-tārayam, *n.* <*karma-dhāraya*. (Gram.) Appositional compound noun made up of two nouns in which '*ākiya*'

the particle of apposition is understood; இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. (பி. வி 22, உரை.)

கர்மநிஷ்டன் karma-niṣṭaṉ, *n.* <*karman* + *ni-ṣṭha*. One devoted to the strict observance of one's religious duties; கருமத்தை மேற்கொண்டொழுகுவோன்.

கர்மப்பிரமவாதி karma-p-pirama-vāti, *n.* <id. +. One who affirms that karma itself is Brahman, i.e., one who believes that the strict observance of Vēdic rituals is the highest goal of man and that in such observance alone lies the true path of liberation; வைதிகச்சடங்குகளே பிரமமென வாதிக்கும் பூர்வமீமாஞ்சகன்.

கர்மம் karmam, *n.* <*karman*. See கருமம்.

கர்மக்ஷயாதிசயம் karma-kṣayāticayam, *n.* <id. + *kṣaya* + *ati-śaya*. (Jaina.) Pre-eminence arising from annihilation of all karma, one of three *aticayam*, q.v.; சைனர்கூறும் அதிசயம் மூன்றனுள் வினைநீங்குகையாகிய அதிசயம். (சீவக. 2813, உரை.)

கர்மாந்தரம் karmāntaram, *n.* <id. + *antara*. Final funeral obsequies. See கருமாந்தரம்.

கர்மிகள் karmikaḷ, *n.* <*karmin*. Artisans; தொழிலாளிகள். (Insc.)

கர்லா karlā, *n.* <U. *karela*. See கர்லாக்கட்டை.

கர்லாக்கட்டை karlā-k-kaṭṭai, *n.* <id. +. Indian club used for physical exercises; தேகப்பயிற்சிக்காகச் சுழற்றுந் திரண்டுகனத்த மரக்கட்டை.

கர்வடம் karvaṭam, *n.* <*kharvaṭa*. Town surrounded by mountains and rivers; மலையும் யாறுஞ் சூழ்ந்த ஊர். (திவா.)

கர்வம்[1] karvam, *n.* <*garva*. Pride, haughtiness, arrogance; செருக்கு.

கர்வம்[2] karvam, *n.* <*kharva*. 1. A billion; இலட்சங்கோடி. 2. One of the nine treasures of Kubēra; நவநிதிகளுள் ஒன்று.

கர்வி[1]**-த்தல்** karvi-, *11 v. intr.* <*garva*. To be proud, arrogant; செருக்குதல்.

கர்வி[2] karvi, *n.* <*garvin*. Proud fellow; செருக்கன்.

கர்விதன் karvitaṉ, *n.* <*garvita*. See கர்வி.

கர்விஷ்டன் karviṣṭaṉ, *n.* <*garvi-ṣṭha*. Haughty, arrogant fellow; மிக்க செருக்குள்ளவன்.

கர[1]**-த்தல்** kara-, *12 v. tr.* 1. To conceal, hide, disguise; மறைத்தல். *தன்னு வடக்கிக் கரக்கினும்* (புறநா. 1, 8). 2. To steal, pilfer; கவர்தல். *கழுத்தின தெழிலைச் சங்கங் கரந்தன* (கந்தபு. மாயைப். 48). 3. To withhold; to refuse to give; கொடாதிருத்தல். (பிங்.) 4. To destroy, i.e., to reduce to primal elements; அழித்து முதற்காரணத்தோடு ஒடுக்குதல். *காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி* (திருவாச. 7, 12). 5. To join, unite with; அடைதல். *பதுக்கையு மிருங்கதி கரக்கும்* (உபதேசகா. சிவபுராண. 42).—*intr.* 1. To hide, abscond, lie hidden, keep one's self out of sight; மறைதல். *கரந்துறை கணக்கும்* (மணி. 2, 26). 2. To be injured, ruined; கெடுதல். *படரும் புரங் கரப்ப* (திருக்கோ. 213).

கர[2] kara, *n.* <*khara*. The 25th year of the Jupiter cycle of sixty years; வருஷம் அறுபதில் இருபத்தைந்தாவது.

கரகம் karakam, *n.* <*karaka*. 1. Ewer, pitcher, water-vessel with a spout; கமண்டலம். *நாலே கரக முக்கோல் மணையே* (தொல். பொ. 625). 2. Hailstone; ஆலங்கட்டி. (பிங்.) 3. Drop of water; நீர்த்துளி. (பிங்.) 4. Water; நீர். (பிங்.) 5. The Ganges; கங்கை. (பிங்.) 6. Decorated water-pot carried in procession in propitiation of certain gods or goddesses, either when an epidemic prevails, or when an auspicious ceremony is to take place in the family; பிரார்த்தனையாக எடுக்கும் பூங்குடம். *Colloq.*

கரகமாடு-தல் karakam-āṭu, *v. intr.* <id. +. To carry about in procession a decorated water-pot and dance with it on the head, in fulfilment of a vow; பிரார்த்தனைக்காகப் பூங்குடமெடுத்து ஆடுதல்.

கரகமூக்கு karaka-mūkku, *n.* < id. +. Spout of a pitcher or kettle; நீர்விழுங்கெண்டியின் உறுப்பு.

கரகமெடு-த்தல் karakam-eṭu-. *v. intr.* <id. +. See கரகமாடு-.

கரகர-த்தல் karakara-, *11 v. intr.* 1. To feel irritation, as from sand or grit in the eye; உறுத்துதல். *மணல் கண்ணிலே கரகரக்கிறது.* 2. To feel irritation in the throat; to experience a predisposition to cough; to be hoarse, as with a cold; சீதளம் முதலியவற்றால் தொண்டையில் அரிப்புண்டாதல். 3. To be crisp in the mouth, as fried cake; கடித்தற்குக் கரகரப்பாதல்.—*tr.* (W.) 1. To importune; விடாமல் வேண்டுதல். 2. To tease, harass; அலைக்கழித்தல்.

கரகரணம் kara-karaṇam, *n.* < *kara* + *karaṇa*. Gesticulation by hand in dancing; கையினாற்செய்யும் அபிநயம்.

கரகரப்பிரியா karakarappiriyā, *n.* <*kharaharapriyā*. A musical mode; ஓர் இராகம்.

கரகரப்பு karakarappu, *n.* <*கரகர*-. 1. Irritation in the throat; தொண்டையரிப்பு. 2. Hoarseness or heaviness of voice; குரல் கனத்திருக்கை. (W.) 3. Importunity; ஓயாது வேண்டு

கை. (W.) 4. Teasing, harassing; அலைக்கழிப்பு. (W.)

கரகரப்புப்பாகம் karakarappu-p-pākam, *n.* <id.+. A particular state or consistency of medicinal oil, in which it becomes granulated the moment it is taken up in a ladle; அகப்பையால் முகந்தமாத்திரத்தில் மணல்வடிவமுண்டாகும் நிலையிலுள்ள தைல பக்குவம். (தைலவ. பாயி. 43.)

கரகரெனல் karakareṉal, *n.* <*கரகர*. 1. Being irritated in the throat; தொண்டையரித்தற் குறிப்பு. 2. Teasing, carping; வருத்துதற் குறிப்பு. *காகரென் றரிக்கிறான்*. 3. Being crisp in the mouth; கடிப்பதற்குக் கரகரப்பாயிருத்தற் குறிப்பு. *முறுக்குக் கரகரென்று இருக்கிறது*.

கரச்சி karacci, *n.* See கடிச்சைமீன்.

கரசம் karacam, *n.* Mysore Thorn. See புலிதொடக்கி. (*மலை*.)

கரசரணாதிகள் kara-caraṇātikaḷ, *n.* <*kara* + *caraṇa* + *ādi*. Limbs of the body, as the hands, feet etc.; கை கால்முதலிய உறுப்புக்கள்.

கரசல் karacal, *n.* perh. *கரை-*. A medical work; ஒரு வைத்தியநூல். *தேரையர்கரசல்*. (W.)

கரசை[1] karacai, *n.* <*gara*. [K. *garaje*.] (Astrol.) A division of time, one of eleven ***karaṇam***, q.v.; கரணம் பதினொன்றனுள் ஒன்று. (*விதான. பஞ்சாங்க. 29, உரை*.)

கரசை[2] karacai, *n.* [T. *garise*, K. *garase*.] Cubic measure for grain, 400 ***marakkāl*** or 9256¼ *rāttal*; நானூறு மரக்கால்கொண்ட ஓரளவு.

கரஞ்சகம் karañcakam, *n.* See கரஞ்சம். (*சூடா*.)

கரஞ்சம் karañcam, *n.* <*karañja*. Indian Beech. See புன்கு. (*தைலவ. தைல. 73*.)

கரட்டரிதாரம் karaṭṭaritāram, *n.* <*கரடு*[1] + *அரிதாரம்*. Virulent kind of arsenic; அரிதாரவகை. (W.)

கரட்டான் karaṭṭāṉ, *n.* <id. Blood-sucker. See காட்டோந்தி.

கரட்டுக்கரட்டெனல் karaṭṭu-k-karaṭṭeṉal, *n.* Onom. expr. signifying hoarseness; ஓர் ஒலிக்குறிப்பு. (W.)

கரட்டுக்கல் karaṭṭu-k-kal, *n.* <*கரடு*[1]+. Unpolished, rough stone; செப்பனிடப்பெறாத முருட்டுக்கல்.

கரட்டுத்தரை karaṭṭu-t-tarai, *n.* <id.+. 1. Rugged, uneven ground; மேடுபள்ளமான நிலம். 2. Hard, clayey soil; கரிசற்பூமி. *Loc.*

கரட்டுத்தாளகம் karaṭṭu-t-tāḷakam, *n.* <id.+. See கரட்டரிதாரம். (W.)

கரட்டுவிரியன் karaṭṭu-viriyaṉ, *n.* <id.+ Blood viper, reddish in colour; செந்நிறமுள்ள விரியன்பாம்புவகை. (M.M.)

கரட்டோணன் karaṭṭōṇāṉ, *n.* <id.+ ஓணான். See காட்டோந்தி.

கரட்டோந்தி karaṭṭōnti, *n.* <id.+ ஓந்தி Blood-sucker, *Calotes versicolor*; ஓணான்வகை.

கரடகபாஷாணம் karaṭaka-pāṣāṇam, *n.* A kind of arsenic; பாஷாணவகை. (W.)

கரடகம் karaṭakam, *n.* <*karaṭaka*. Deceit, fraud; கபடம். (W.)

கரடகம்பம் karaṭakampam, *n.* prob. *கரடகம்*. See கரடகம். (W.)

கரடகன் karaṭakaṉ, *n.* <*karaṭaka*. Crafty, cunning person, being the name of a crafty fox in *Pañca-tantiram*; தந்திரி.

கரடம் karaṭam, *n.* <*karaṭa*. 1. Crow; காக்கை. (*பிங்*.) 2. Trace of must on an elephant's cheek; யானை மதம்பாய் சுவடு. (*திவா*.) 3. Aperture in an elephant's temple from which must flows out; யானைக்கவுளினின்றும் மதம்பாயுந் துவாரம். *யானையின் கொடிறுவாய் கரடம தடைத்தல் கூடுமே* (இரகு. திக்கு. 120).

கரடன் karaṭaṉ, *n.* A kind of rat; எலிவகை. (W.)

கரடா karaṭā, *n.* <U. *kartha*. cf. *கரடு*[1]. Coarse country paper; ஒருவகை முருட்டுக்காகிதம். *Mod.*

கரடி[1] karaṭi, *n.* [K. M. Tu. *karaḍi*.] 1. Indian black-bear, sloth-bear, ***Melursus ursinus***; விலங்குவகை. *கொலைகாசுமோடு கரடி* (*தேவா*. 1172, 6). 2. cf. *karaṭa*. See கரடிப்பறை. *கரடிசயம் வளர்படகம் பாவகாசம்* (குற்). தல. சிவபூசை. 49).

கரடி[2] karaṭi, *n.* [T. *gariḍi*, K. *garuḍi*.] 1. Fencing; சிலம்பம். 2. See கரடிக்கூடம். 3. Deceit, falsehood; புரட்டு.

கரடிக்கூடம் karaṭi-k-kūṭam, *n.* <*கரடி*[2]+. School or gymnasium where wrestling and fencing are taught; மல் சிலம்பம் முதலியன பயிலுங் காலை.

கரடிகை karaṭikai, *n.* <*கரடி*[1]. A kind of drum, producing a sound similar to the growling of a bear; கரடி கத்தினாற்போலும் ஓசையுடைய பறைவகை. (*சிலப். 3, 27, உரை*.)

கரடிப்பறை karaṭi-p-paṟai, *n.* <id.+. See கரடிகை. (*திவா*.)

கரடிப்புன்கு karaṭi-p-puṉku, *n.* Four-leaved Soapnut. See நெய்க்கொட்டான். (L.)

காடிவிடு¹-தல் karaṭi-viṭu-, *v. intr.* <காடி³ + . To spin a yarn; to disseminate a lie; பொய்யைக் கட்டிக்கூறுதல். *Colloq.*

காடிவிடு²-தல் karaṭi-viṭu-, *v. intr.* <காடி¹ + Lit., to let in a bear; fig., to intrude suddenly in an irrelevant fashion and thus rudely disturb a situation; சம்பந்தமில்லாத தோன்றைக் கோண்டு புகுத்திக் கலங்கச்செய்தல். பூசைவேளையில் காடிவிடாதே. *Loc.*

காடிவித்தை karaṭi-vittai, *n.*<காடி²+. Art of fencing; சிலம்பவித்தை.

காடிவியாபாரம் karaṭi-viyāpāram, *n.* <id.+. Coaxing by flattery, toadying, fawning; இச்சகம் பேசுகை. *Mod.*

கரடு¹ karaṭu, *n.* [K. M. *karaḍu.*] 1. Roughness, ruggedness, unevenness; முருடு. *சண்பெரு கதக் கரடு* (அருட்பா, iv, பத்தி. 6). 2. Churlish temper; முரட்டுக்குணம். 3. Hillock, low hill; சிறுகுன்று. *Loc.* 4. Ankle; காற்பரடு. (பிங்.) 5. Knot in wood; மரக்கணு. *கரடார் மரம்* (திருப்பு. 70). 6. Turf; புற்கரடு. 7. That which is stunted in growth; வளர்ச்சியற்றது. *காட்டுப்பசு.* 8. A variety of pearl; ஒருவகை முத்து. (S.I.I. ii, 549.)

கரடு² karaṭu, *n.*<*karaṭa.* Running amuck of an elephant; யானையின் மதவெறி. *கரடுபெயர்த்தது* (பெருங். உஞ்சைக். 32, தலைப்பு).

கரடுமரடு karaṭu-muraṭu, *n.* <கரடு¹ + . See கரடுமுருடு.

கரடுமுருடு karaṭu-muruṭu, *n.* <id. +. Unevenness, ruggedness, roughness; ஒழுங்கின்மை.

கரண் karaṇ, *n.* cf. கரடு¹. 1. The uneven surface in vegetables and fruits; காய்கறிகளின் முண்டு. 2. Scar; புண்வடு.

கரண்டகம் karaṇṭakam, *n.* <*karaṇḍaka.* 1. Basket made of plaited coconut-leaves for carrying flowers for divine worship; தென்னை ஓலையால் முடைந்த பூக்குடலை. *கரண்டகநீர் தரியாபோல்* (ஞானவா. வைராக். 74). 2. Small metal box for keeping quicklime to be used with betel; சுண்ணும்புச்செப்பு. *Colloq.*

கரண்டம் karaṇṭam, *n.* <*karaṇḍa.* 1. Water-crow, coot; நீர்க்காக்கை. *கரண்டமாடு பொய்கை* (திவ். திருச்சந்த. 62). 2. Jewel-box; அணிகலச்செப்பு. (பிங்.) 3. Spoon, ladle; கரண்டி. (பிங்.) 4. Water-vessel used by ascetics; கமண்டலம். (அக. நி.) 5. See கரண்டகம், 2. (W.)

கரண்டி karaṇṭi, *n.* Spoon or ladle, made of metal; உலோகத்தாலாகியதும் காம்புள்ளதுமாகிய முகத்தற்கருவி. (பிங்.)

கரண்டிகை karaṇṭikai, *n.* <*karaṇḍikā* 1. Flower-basket; பூங்கூடை. *கரண்டிகையுட் சாலும் பலபோது* (கோயிற்பு. வியாக்கிர. 15). 2. Name of a special part of the crown; முடியின் ஓருறுப்பு. *கரண்டிகையிற் கோத்த வடம்* (S.I.I. ii, 87).

கரண்டிகைச்செப்பு karaṇṭikai-c-ceppu, *n.* <id.+. See கரண்டகம், 2. (S.I.I. ii, 15.)

கரண்டிப்பாறை karaṇṭi-p-pāṟai, *n.* cf. *karaṇḍin*+. Horse-mackerel, greenish, generally attaining 1 ft. in length, *Caranx jarra;* கடல்மீன்வகை.

கரண்டு-தல் karaṇṭu-, *5 v. tr.* [M. *karaṇḍu.*] To paw, as a dog; to gnaw, as a rat; to scrape; சுரண்டுதல். *நாவினையென்பால் . . . கரண்டுகின்ற நாய்க்கும்* (அருட்பா, i, மகாதேவ. 86).

கரண்டை¹ karaṇṭai, *n.* 1. cf. காண்டை. Rocky cave, cavern; கற்பாழி. (திவா.) 2. The abode of sages, as mountain cave; முனிவர் வாழிடம். (திவா.) 3. A mode in the flight of birds; பறவையின் கதிவிசேடம். (காசிக. திரிலோ. 6)

கரண்டை² karaṇṭai, *n.*<*karaṇḍa.* Water-vessel, used by ascetics; கமண்டலம். *சிமிலிக் கரண்டையன்* (மணி. 3, 86).

கரண்டைக்காய்மோதிரம் karaṇṭai-k-kāy-mōtiram, *n.* A kind of finger-ring worn by Parava women on all the five fingers, four or five such rings being worn on each finger; பரவமகளிர் ஒருவிரலுக்கு நாலைந்துவீதம் ஐந்துவிரலிலும் அணியும் மோதிரம்.

கரண்டைக்கை karaṇṭai-k-kai, *n.* prob. கரண் +. Fore-arm; முன்கை. *Loc.*

கரணகளேபரம் karaṇa-kaḷēparam, *n.* <*karaṇa*+. The physical body with its sensory organs; பொறிகளும் சரீரமும். *கரணகளேபரங்களை யிழந்து* (அஷ்டாதச. முமுட்சுப். வ்யா. அவ.).

கரணத்தான் karaṇattāṉ, *n.* <id. Accountant; கணக்கன். *இக்கரக்கரணத்தான்* (S.I.I. iii, 23).

கரணத்தியலவர் karaṇattiyalavar, *n.*<id. +இயலவர். Account officers working under a king, one of *eṇperu-n-tuṇaivar*, q.v.; அரசர்க்குரிய எண்பேருந்துணைவருள் ஒருவராகிய கணக்கர். (திவா.)

கரணம் karaṇam, *n.* <*karaṇa.* 1. Work by one's hand; கையாற் செய்யுந் தொழில். *சித்திரக் கரணஞ் சிதைவின்று செலுத்தும்* (சிலப். 3, 54). 2. Organ of sense; இந்திரியம். *கரணங்க ளெல்லாங் கடந்து* (திருவாச. 10, 9). 3. Intellect; cognition; அந்தக்கரணம். 4. Mind; மனம். *பொறியொடு கரணத் தப்புறம்* (கம்பரா. தைல. 27). 5. Marriage ceremony; விவாகச்சடங்கு. *ஐயர் யாத்தனர் கரண மென்ப*

(தொல். பொ. 145). 6. Coition; கலவி. (சூடா.) 7. A variety in dramatic action, a kind of dancing; கூத்து விகற்பம். *கரணமிட்டுத் தன்மை பேசி* (*தேவா.* 56, 3). 8. Somer-sault, tumbling heels over head; caper; தலைகீழாகப் பாய்கை. *கரணம்போடுகிறான்.* 9. Instrument; கருவி. (திவா.) 10. Implement, means, material, instrument; உபகரணம். *அதனுக்குரியவாய பல்கரணமுந் தருதி* (*கந்தபு. குமாரபுரி.* 65). 11. Number; எண். (பிங்.) 12. (Astron.) One of the five elements of the *pañcāṅkam*, a division of time, 11 in number, viz., *பவம், பாலவம், கௌலவம், தைதுலம், கரசை, வணிசை, பத்திரை, சகுனி, சதுஷ்பாதம், நாகவம், கிமித்துக்கினம்*, the eleven *karaṇas* being computed to be equal to 30 *tithis* of a lunar month according to a special calculation; பஞ்சாங்க உறுப்புக்களில் ஒன்று. (*விதான. பஞ்சாங்க.* 29.) 13. Title-deed, document (R.F.); சாஸனம். 14. Accountant, karnam; கணக்கன். (S.I.I. i, 65.) 15. Ingredients mixed and used in connection with funeral rites, being seven, viz., the five products of the cow together with rice and rapeseed; கருமாதிச்சடங்குக்குரிய பண்டங்கள். *Loc.*

கரணம்பலம் karaṇampalam, *n.* <id. + அம்பலம். Ancient name for the office of village headman; வரிதண்டும் உத்தியோகம். *Rd.*

கரணம்பாய்-தல் karaṇam-pāy-, *v. intr.* <id. +. 1. To dance with gestures; கூத்தாடுதல். (திருக்கோ. 389, உரை.) 2. See கரணம்போடு-, 1. *Colloq.*

கரணம்போடு-தல் karaṇam-pōṭu-, *v. intr.* <id. +. 1. To tumble heels over head; to gambol; தலைகீழாகப் பாய்தல். *Colloq.* 2. To solicit pressingly and persistently; to importune; to crave or beg for; கெஞ்சுதல். 3. To do one's utmost; to use all possible means; to leave no stone unturned to accomplish an object; தன்னாற் கூடியதெல்லாம் செய்தல்.

கரணவாசனை karaṇa-vācaṉai, *n.* < id. +. See கரணவாதனை.

கரணவாதனை karaṇa-vātaṉai, *n.* <id. +. Sensation, experience, pleasing or painful, as associated either with bodily organs or mental faculties; இந்திரியங்களின் பழக்கவறிவு. (W.)

கரணன் karaṇaṉ, *n.* <*karaṇa*. Accountant; கணக்கன். *கரணர்கள் வந்தனர் கழல் வணங்கினார்* (*கந்தபு. மார்க்கண்.* 210).

கரணி karaṇi, *n.* cf. *sañjīva-karaṇi*. Medicine; மருந்து. *மருத்துவன் கைக்கரணியுண்ணே* (*தைலவ. பாயி.* 1).

கரணிக்கசோடி karaṇikka-cōṭi, *n.* <கரணிகம் +. Karanam's quit-rent; கணக்கர்வரி. (S.I.I. ii, 119.)

கரணிகம் karaṇikam, *n.* < *karaṇa*. 1. Intellectual power, any one of the four *anta-k-karaṇam*, q.v.; அந்தக்கரணம். (W.) 2. A kind of dramatic action or dancing; கூத்தின்விகற்பம். (W.) 3. Copulation; கலவி. (சங். அக.) 4. [T. *karaṇikamu*.] Office of accountant. See கருணீகம். *Loc.*

கரணியமேனிக்கல் karaṇiya-mēṉi-k-kal, *n.* A kind of metal-ore; கரும்புள்ளிக்கல். (W.)

கரணை[1] karaṇai, *n.* cf. கரண்டி. Small trowel; கோத்துக்கரண்டி. (W.)

கரணை[2] karaṇai, *n.* <கரண். 1. Piece cut off, as sugarcane cut crosswise; கரும்பு முதலியவற்றின் துண்டு. 2. Main body of a *vīṇā*; வீணைத்தண்டு. (W.) 3. Scar of a wound; புண்வடு. 4. See கருணை[5]. (W.) 5. See பாவட்டை. (L.)

கரணைக்கொட்டி karaṇai-k-koṭṭi, *n.* <கரணை[2] +. A medicinal plant. See காறற்கொட்டி. (A.)

கரணைப்பலா karaṇai-p-palā, *n.* <id. +. A tuberous-rooted herb. See வெருகு. (மலை.)

கரணைப்பாவட்டை karaṇai-p-pāvaṭṭai, *n.* <id. +. See பாவட்டை. (W.)

கரத்தை karattai, *n.* <E. Cart; வண்டி. *ஒரு கரத்தை பிடித்துக்கொண்டுவா.* (J.)

கரதலப்பாடம் karatala-p-pāṭam, *n.* See கடைதலைப்பாடம்.

கரதலம் kara-talam, *n.* <*kara* +. Palm of the hand; கைத்தலம். *மானுற்ற கரதலமொன்று* (*தேவா.* 44, 3).

கரதலாமலகம் karatalāmalakam, *n.* <*kara-tala* + *āmalaka*. Lit., a fruit of the myrobalan placed on the palm of the hand; fig., perception at once easy and quite clear; உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவானது. *மறைகள் . . . கரதலாமலகமதாக வுணர்வில்வைத்த* (*செவ்வந்திப்பு. சார.* 2).

கரதாளம் kara-tāḷam, *n.* <id. +. 1. (Mus.) Keeping time with the hands; கையாற்போடும் தாளம். 2. [T. *karatāḷamu*.] Palmyra palm. See பனை.

கரந்தகற்படை karanta-kaṟ-paṭai, *n.* <கர- +. Covered drainage-channel in a city; கற்படுத்து மூடப்பெற்ற நகர் நீர்க்கால். (சிலப். 14, 65, உரை.)

கரந்துபடை karantu-paṭai, *n.* <id. + படு[2]-. See கரந்தகற்படை.

கரந்துவரலெழினி karantu-varal-eḻiṉi, *n.* <id. +. A kind of over-hanging curtain put

up on the ancient Indian stage; நாடகத்திரைச்சீலை. ஒருமுக வெழினியும் பொருமுக வெழினியுங் கரந்துவர லெழினியும் (சிலப். 3, 109-110).

கரந்துறை karanturai, *n.* <id. + உறை-. See கரந்தகற்படை. (சிலப். 14, 65, அரும்.)

கரந்துறைகிளவி karanturai-kiḷavi, *n.* <id. +. Words that mask one's innermost feelings and purpose; உள்ளக்குறிப்பை மறைத்துச்சொல் லும் மொழி. (திருக்கோ. 50, கொளு.)

கரந்துறைகோள் karanturai-kōḷ, *n.* <id. +. Phenomena of the heavens, sometimes visible and sometimes not, for the most part regarded as ominous, such as இராகு, கேது, பரி வேடம், வால்வெள்ளி, வானவில்; மறைந்து சிறுபான் மையாகப் புலப்படுங் கிரகங்கள். *கரந்துறைகோளொடு நிரந்தவை நிறீஇ* (பெருங். உஞ்சைக். 58, 57).

கரந்துறைச்செய்யுள் karanturai-c-ceyyuḷ, *n.* <id. +. See கரந்துறைப்பாட்டு. (தண்டி. 95.)

கரந்துறைசெய்யுள் karanturai-ceyyuḷ, *n.* <id. +. See கரந்துறைப்பாட்டு. (மாறன. 488.)

கரந்துறைப்பாட்டு karanturai-p-pāṭṭu, *n.* <id. +. Stanza composed in such a way that when the alternate letters of the words in it are put together, in a correct sequence, they form by themselves another verse altogether; ஒவ்வோரெழுத்து இடைவிட்டுப் படிக்கும்போது வே றும் ஒருகவி தோன்றும்படி எழுத்துக்கள் அமைத்துப் பாடப்படும் ஒரு மிறைக்கவி. (தண்டி. 95, உரை.)

கரந்தை karantai, *n.* 1. Fragrant Basil. See திருநீற்றுப்பச்சை. 2. Indian Globe-thistle. See கொட்டைக்கரந்தை. *காய்த்த கரந்தை* (பதிற்றுப். 40, 5). 3. Iron-weed, *Vernonia arborea;* மர வகை. (மலை.) 4. Arrow-head aquatic plant. See நீர்ச்சேம்பு. (L.) 5. Chaplet of *karantai* flowers worn by warriors when recovering cows that had been seized by the enemy; நிரைமீட்போர் அணியும் கரந்தைப்பூமாலை. (பிங்.) 6. See கரந்தைத்திணை. *கரந்தையுங் கரந்தைத்துறையு மெ ன்ப* (பு. வெ. 2, 1). 7. Priest; குரு. *கரந்தைக வாண்டி லொருக்கால் வருவது* (தனிப்பா. i, 87, 171).

கரந்தைத்திணை karantai-t-tiṇai, *n.* <கரந் தை +. (Puṟap.) Theme of recovering the herd of cows seized by the enemy as a signal of the declaration of hostilities; பகைவர் கவர்ந்த நிரை யை மீட்டலைக்கூறும் புறத்திணை. (பு. வெ. 2, 1, உரை.)

கரந்தையார் karantaiyār, *n.* <id. Warriors who rescue the cows that have been seized by the enemy; பகைவர் கவர்ந்த நிரையை மீட்கும் மறவர். *கரந்தையார் அலறும்படி கைக்கொண்ட இன நிரைகள்* (சிலப். 12, முருந்தேர். உரை).

கரநியாசம் kara-niyācam, *n.* <*kara* +. Assignment of the fingers of the hand severally to different deities with appropriate mantras and gesticulation, previous to meditation and prayer; தேவர்களை மந்திராட்சர பூர்வகமாக விரல்களில் வைக்கும் கிரியை. *அஞ்செழுத்தா லங்கசர நியாசம் பண்ணி* (சி. சி. 9, 8).

கரப்பறை karapparai, *n.* <கரப்பு + அறை. Room to hide oneself in, retreat; ஒளித்திருத்தற் குரிய அறை. *கரப்பறை வீதியுங் கள்ளப் பூமியும்* (பெ ருங். உஞ்சைக். 33, 17).

கரப்பன் karappaṉ, *n.* [M. *karappan.*] Eruption in children. See கரப்பான். (J.)

கரப்பன்பண்டம் karappaṉ-paṇṭam, *n.* <கரப்பன் +. Eatables, which promote eruptions; கரப்பானையுண்டாக்கும் உணவுப்பொருள். (W.)

கரப்பான் karappāṉ, *n.* cf. *கரப்பன்.* Eruption, any cutaneous disease, rash, eczema, erysipelas, etc.; சொறி புண்வகை.

கரப்பான்கட்டு karappāṉ-kaṭṭu, *n.* <கரப் பான் +. Cellulitis; கரப்பானோய் வகை.

கரப்பான்கொல்லி karappāṉ-kolli, *n.* <id. +. Antidote for eruptions, anti-scorbutic; கரப்பானைப்போக்கும் மருந்து. (M.M.)

கரப்பான்பூச்சி karappāṉ-pūcci, *n.* <கரப் பு +. Cockroach, *Blatta orientalis;* கரப்புப் பூச்சி. *Loc.*

கரப்பான்பூடு karappāṉ-pūṭu, *n.* A lowly flowering thorny shrub, *Lepidagathis cristata;* ஒருவகை முட்செடி. (W.)

கரப்பிரசாரம் kara-p-piracāram, *n.* <*kara* + *pra-cāra.* (Nāṭya.) A kind of gesture; ஒரு வகை அபிநயம். *சீர்சால் கரப்பிரசார முவமையில் சிரக்கரகருமம்* (திருவிளை. கான்மா. 8).

கரப்பு karappu, *n.* <கர-. 1. Concealing, screening; hiding, as one's thoughts; மறைக்கை. *கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார்* (குறள், 1053). 2. Theft; களவு. (திவா.) 3. Fraud, deceit; வஞ்ச கம். *கரப்புறு சிந்தையர் காண்டற் கரியவன்* (தேவா. 524, 3). 4. Conical basket for catching fish; weel, hen-coop; மீன் பிடிக்குங் கூடை, பஞ்சரம் முத லியன. (J.) 5. Churn; மத்து. (யாழ். அக.) 6. See கரப்பான்பூச்சி. *பூனை கரப்பருந்த காடெங்கடன்* (அருட் பா).

கரப்புக்குடில் karappu-k-kuṭil, *n.* <கரப்பு +. Small hut; சிறுகுடிசை. (J.)

கரப்புக்குத்து-தல் karappu-k-kuttu-, *v. intr.* <id. +. To catch fish with a basket, dazzling them by a strong light and thrusting the weel upon them; கூடைவைத்து மீன் பிடித்தல். (J.)

கரப்புநீர்க்கேணி karappu-nīr-k-kēṇi, *n.* <id.+. Well containing water that is hidden from view, covered wells; மறைகிணறு. *பரப்புநீர்ப் பொய்கையுங் கரப்புநீர்க்கேணியும்* (மணி. 19, 104).

கரப்பொறி kara-p-poṟi, *n.* prob. கர-+. A kind of trap for catching monkeys; குரங்கு பிடிக்கும் ஒருவகைப்பொறி. (W.)

கரபத்திரம் kara-pattiram, *n.* <*kara-patra.* 1. Saw; ஈர்வாள். (திவா.) 2. Sword; வாள். *பணிக்கர் கரபத்திரமதாகும்* (திருவாதபு. புத். 74).

கரபம்[1] karapam, *n.* <*karabha.* 1. Metacarpus, the part of the hand between the wrist and fingers; மணிக்கட்டிலிருந்து விரல்வரையில் உள்ள பகுதி. *யானைத் தடவுடைக் கையுங் கரபமும்* (திருவிளை. உக்கிர. வேல்வளை. 39). 2. Elephant; யானை. *ஒருகாற் றந்தக் கரபத்தி னண்ணல்* (கந்தபு. அசமுகிக. 22).

கரபம்[2] karapam, *n.* prob. *gardabha.* Ass; கழுதை. (W.)

கரபாகம் kara-pākam, *n.* <*kara*+*pāka.* That stage in the preparation of any medicine by heating, when it reaches such consistency as would admit of a small pinch between wet fingers being easily rolled into a soft globule; சூடுபட்டு மிருதுவான குளிகைபோல் திரளுகிற மருந்துப்பாகம். (பைஷஜ. 9.)

கரம்[1] karam, *part.* cf. *kāra.* (Gram.) Expletive used in designating the short vocalic letters of the Tamil alphabet; ஓர் எழுத்துச் சாரியை. (நன். 126.)

கரம்[2] karam, *n.* <*kara.* 1. Hand; கை. *கரமலர் மொட்டித்து* (திருவாச. 4, 84). 2. Cubit; முழம். *அங்குல மறுகான் கெய்தி னதுகரம்* (கந்தபு. அண்டகோ. 6). 3. Elephant's trunk; துதிக்கை. *கரசலம்.* 4. Heap of palm leaves; ஓலைக்கோத்தின் திரள். (J.) 5. Ray of light; கிரணம். *ஆயிரக் கழற்கரத்து* (கல்லா. 13). 6. Light, ஒளி. *அக்கரச் சணக்கர்* (தனிப்பா. ii, 30, 70). 7. Tax, duty; குடியிறை. (திவா.) 8. That which causes, used only as the second member of some compound nouns, as *பயங்கரம்*; செய்வது.

கரம்[3] karam, *n.* <*khara.* 1. Heat; உஷ்ணம். (W.) 2. Medicine for winning over a person; love philtre administered to a person without his knowledge or consent; இடுமருந்து. (சீவரட். 325.) 3. High price; விலையேற்றம். *விலை கரமாயிருக்கிறது. Loc.* 4. Ass; கழுதை. *கர மிவர்க் கிட வினைப்பரோ* (சொனத். பு. கன்னி. 61).

கரம்[4] karam, *n.* <*gara.* Poison; நஞ்சு. *கரம் போலக் கள்ளநோய் காலு மயல்* (சிறுபஞ். 62)

கரம்[5] karam, *n.* <*Karam.* Name of an Upaniṣad; நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று.

கரம்பதிவு karam-pativu, *n.* <*kara*+. See கரம்பதிவுக் கணக்கு.

கரம்பதிவுக்கணக்கு karam-pativu-k-kaṇakku, *n.* <கரம்பதிவு+. Register of assessment; வரிப்பதிவுப்புத்தகம்.

கரம்பு karampu, *n.* perh. கரண். Waste land uncultivated though cultivable, of two kinds, viz., *அனுபிக்கரம்பு* and *செய்காற்கரம்பு*; சாகுபடி செய்யாத நிலம். *Colloq.*

கரம்பை karampai, *n.* cf. கரம்பு. 1. Land with a surface layer of alluvium (R.F.); வண்டல் பரந்த பூமி. 2. Hard, clayey soil; வறண்ட களிமண்ணிலம். *இருநிலக் கரம்பைப் படுநீறுடி* (பெரும்பாண். 93). 3. Waste land; தரிசு. *விடுநிலக் கரம்பை விடரளை நிறைய* (பதிற்றுப். 28). 4. A low-spreading, spiny, evergreen shrub. See சிறுகளா. (மலை.)

கரமசாலை kara-macālai, *n.* <U. *garm-masālā.* Pungent curry-stuff; காரமான மசாலை. (W.)

கரமஞ்சரி kara-mañcari, *n.* <*khara-mañjarī.* A plant growing in hedges and thickets. See நாயுருவி. (பிங்.)

கரமுகிழ்-த்தல் kara-mukiḻ-, *v. intr.* <*kara*+. To join the palms of the hands in worship; கைகூப்புதல். *கரமுகிழ்ப்ப நின்னருளைக் கருத்தில் வைப்பாம்* (தாயு. பொருள்வ. 10).

கரலட்சணம் kara-laṭcaṇam, *n.* <id.+. (Nāṭya.) Gesticulation by the hands; கையாற் புரியும் அபிநயம். (பாத. பாவ. 19, தலைப்பு.)

கரவடநூல் karavaṭa-nūl, *n.* <கரவடம்+. A treatise on theft, probably adapted from a Sanskrit work on the subject by Karavaṭa who is better known as Karnīsuta; களவைப்பற்றிக் கூறும் நூல். (சிலப். 16, 180, அரும்.)

கரவடம் karavaṭam, *n.* <கர-. cf. *kara-vaṭa.* 1. Act or practice of stealing; களவு. (திவா.) 2. Deceit; வஞ்சகம். *மார்பின் மீதிலே தாழ் வடக்கண் மனத்திலே கரவடமாம் வேடம்* (தண்டலைச. 29).

கரவடர் karavaṭar, *n.* <கரவடம். 1. Thieves; திருடர். (திவா.) 2. Deceivers, crafty persons; வஞ்சகர்.

கரவம் karavam, *n.* Wild Date-palm. See காட்டீந்து.

கரவர் karavar, *n.* <கர-. Thieves; கள்வர். (பிங்.)

கரவல் karaval, *n.* <id. Concealment, as of an article that should be given away; கொடாது மறைக்கை. *கரவ லருங் கற்பகமும்* (கம்பரா. சடாயுகாண். 21).

கரவா karavā, *n.* A sea-fish of vermilion colour, *Upeneus cinnebarinus;* கடல்மீன்வகை.

கரவாகம் karavākam, *n.* prob. *khara* + *vāka*. Crow from its being harsh-voiced; காக்கை. (W.)

கரவாரம் kara-vāram, *n.* <*kara* + prob. வாரு-. Raising the arm, as while singing; கையை எடுத்து வீசுகை. *பாடகர்வியந்து கரவாரங்கொண்டு* (திருவாத. பு. மந்திரி. 36).

கரவாள் kara-vāḷ, *n.* <id. + . Dagger, poniard; கைவாள். *கரவாள்கொடு . . . தடிந்திட்டு* (பிரபுலிங். துதி. 8).

கரவாளம் kara-vāḷam, *n.* <id.+. See கரவாள். *கரவாளங் கைதுளங்க* (திருவாலவா. 28, 34).

கரவீரம் karavīram, *n.* <*kara-vīra*. Sweet Oleander. See அலரி. (திவா.)

கரவு[1] karavu, *n.* <கர-. 1. Concealment; மறைவு. *கரவிலுற்றவை* (அரிச். பு. வேட்டஞ். 9). 2. Deceit; வஞ்சனை. *களவறிந்தார் நெஞ்சிற் கரவு* (குறள், 288). 3. Theft; களவு. (திவா.) 4. Falsehood; பொய். *கரவெனு முன்றனுவில்* (திருவாத. பு. புத்த. 55).

கரவு[2] karavu, *n.* <கரா. cf. *grāha*. Alligator; முதலை. *கரவார்தடம்* (திவ். திருவாய். 8, 9, 9).

களம் karaḷam, *n.* <*garala*. 1. Poison, venom; நஞ்சு. (திவா.) 2. Strychnine-tree. See எட்டி. (மலை.)

கரளை karaḷai, *n.* prob. கரண். See கறளை. *Loc.*

கரன் karaṉ, *n.* <*khara*. Firm, steady person; நிலையுள்ளவன். *கரந்தெங்கும் பரந்துளன் இவையுண்ட கரனே* (திவ். திருவாய். 1, 1, 10). 2. A cousin of Rāvaṇa, a powerful Rākṣasa, slain by Rāma during his (Rāma's) stay in the *Taṇṭakāraṇiyam;* இராமனால் தண்டகாரணியத்திற் கொல்லப்பட்ட ஓர் அரக்கன். (கம்பரா. கரன்வதைப்.)

கரஸ்தம்பவாதம் kara-stampa-vātam, *n.* <*kara*+. Paralysis of the arm; கையைத் தம்பிக்கச்செய்யும் வாத நோய்வகை. (W.)

கருந்துகிலோன் karu-n-tukilōṉ, *n.* <id. +. cf. *nīlāmbara*. Balarama, so called because he wore, accg. to mythology, two blue clothes presented to him by Jumna; பலராமன். (பிங்.)

கருந்தும்பி karu-n-tumpi, *n.*<id.+. 1. A sea-fish, red, attaining 14 in. in length, *Pterois milis;* கடல்மீன்வகை. 2. A sea-fish, brownish black, *Gymnapistus niger;* கடல்மீன்வகை. 3. Coromandel ebony. See தும்பிலி.

கருந்தும்பை karu-n-tumpai, *n.* <id.+. 1. A very soft woolly plant. See பேய்மருட்டி. 2. Coromandel ebony. See கருங்காலி. (L.) 3. An ornamental plant, *Angelonia salicariæfolia;* செடிவகை. (A.) 4. South Indian pine, l. tr., *Podocarpus latifolia;* மரவிசேடம். *Kātar.*

கருந்துவரை karu-n-tuvarai, *n.*<id.+. 1. Angola pea. See மலைத்துவரை. 2. Blackwood. See தோதகத்தி. 3. Bourdillon's apple-fruited ebony, l. tr., *Diospyros bourdilloni;* மரவிசேடம். (L.) 4. Topasi ebony of Bengal, m. tr., *Diospyros topasia;* ஒருவகை மரம். (L.) 5. Panicle-flowered ebony, m. tr., *Diospyros paniculata;* மரவகை. (L.)

கருந்துழாய் karu-n-tuḻāy, *n.* <id.+. See கருந்துளசி.

கருந்துளசி karu-n-tuḷaci, *n.* <id.+. Purple-stalked basil, m. sh., *Ocimum sanctum-typica;* துளசிவகை. (பதார்த்த. 304.)

கருந்தேள் karu-n-tēḷ, *n.* <id.+. Black scorpion; கறுப்புத்தேள்.

கருந்தொழில் karu-n-toḻil, *n.* <id.+. 1. Strong workmanship; வலிய தொழில். கருந் தொழில் வினைஞர் (சிறுபாண். 257). 2. Foul deed, dark assassin's work, killing; கொலைத்தொழில். கருந்தொழிற் கொல்லன் (சிலப். 16, 154).

கருந்தோழி karu-n-tōḻi, *n.* <id.+*dolā*. Indian indigo. See அவுரி. (மலை.)

கருநச்சுழி karunaccuḻi, *n.* Goby, a sea-fish, greenish, stone-coloured, attaining more than 6 in. in length, *Gobius gymnocephalus;* கடல்மீன்வகை.

கருநடம் karu-naṭam, *n.* <கருநாடகம். See கன்னடம். கருநடப்பேர் வெள்ளத்து விழாமல் (பாரத. சிறப்புப். 18).

கருநந்து karu-nantu, *n.* <கரு-மை+. A species of snail; நத்தைவகை. (பிங்.)

கருநாக்கு karu-nākku, *n.* <id.+. 1. Vile tongue; தீய நாக்கு. 2. Evil-tongued-person; தீய நாக்குள்ளவ-ள்-ன். *Colloq.*

கருநாகப்படலம் karu-nāka-p-paṭalam, *n.* <id.+ prob. *nāga*+. Iritis; கண்ணோய்வகை. (சீவரட். 262.)

கருநாகம் karu-nākam, *n.* <id.+ *nāga*. 1. Black cobra; கிருஷ்ணசர்ப்பம். 2. Rāhu the ascending node, considered as a planet; இராகு. செங்காகமோடு கருநாகத்தின் செய்கைபெற்று (கந்தபு மகாசாத். 25). 3. Lead, plumbago; காரீயம். (பதார்த்த. 1175.)

கருநாங்கு karunāṅku, *n.* Long-pointed broad-leaved Ceylon ironwood, l. tr., *Mesua ferrea-typica;* மரவிசேடம். (L.)

கருநாசம் karu-nācam, *n.* prob. கரு[3]+. Rosy-flowered leadwort, m. cl., *Plumbago rosea;* செங்கொடுவேலி. (மலை.)

கருநாடகம் karu-nāṭakam, *n.* prob. கரு-மை+நாடு+அகம். 1. See கன்னடம். 2. See கர்நாடகம், 2. 3. Music of South India; தென்னாட்டுச் சங்கீதம்.

கருநாடர் karu-nāṭar, *n.* prob. id.+நாடு. Kanarese people; கன்னடநாட்டார். கொங்கர் கரு நாடரும் (சிலப். 25, 156).

கருநார் karu-nār, *n.* <கரு-மை+. Black palmyra fibre; பனையின் கறுத்த நார். (W.)

கருநார்ப்பெட்டி karu-nār-p-peṭṭi, *n.*<id. +. Basket made of good black fibre; பனையின் கருநாரால் முடையப்பட்ட பெட்டி. (W.)

கருநாரை karu-nārai, *n.* <id.+. Black ibis, *Geronticus papillosus;* நாரைவகை. (பிங்.)

கருநாவி karu-nāvi, *n.* <id.+. Black species of aconite; நாவிப்பூடுவகை. (பதார்த்த. 1056.)

கருநாழிகை karu-nāḻikai, *n.*<id.+*nāḍikā*. Night; இரவு. கருநாழிகைதான் . . . விடியாவிடின் (கம்பரா. கடிமண. 5).

கருநாள் karu-nāḷ, *n.*<id.+. Inauspicious day. See கரிநாள். தொழாமற் செலுத்திய நாள் கருநாள் (அருட்பா, i, வடிவுடை. 38).

கருநிமிளை karu-nimiḷai, *n.* < id. +. Antimony, sulphuret of antimony; அம்பர்வகை. (W.)

கருநிலம் karu-nilam, *n.* <id.+. Barren soil; useless, waste land; பயன்படாத நிலம். (திவா.)

கருநீலப்பிறப்பு karu-nīla-p-piṟappu, *n.* <id.+. (Jaina.) A state of existence just above the lowest existence in a *narakam*, one of six kinds of births; நரகசன்மத்துக்குச் சிறிதும் மேற்பட்ட பிறவி. *கரும்பிறப்புங் கருநீலப் பிறப்பும்* (மணி. 27, 150).

கருநூல் karu-nūl, *n.* <கரு³+. Treatise on black magic; சூனியநூல். (W.)

கருநெய்தல் karu-neytal, *n.* <கரு-மை+. Blue Indian water-lily, *Nymphaea stellata;* நீலோற்பலம். (பிங்.)

கருநெருஞ்சி karu-neruñci, *n.* <id.+. Black Nerinjy, a prostrate herb, *Indigofera schinata;* நெருஞ்சிவகை.

கருநெல்லி karu-nelli, *n.* <id. + . Small papery-downy-glabrate elliptic-oblong-obtuse-or-acute-leaved feather-foil, *Phyllanthus reticulatus;* செடிவகை. (பதார்த்த. 226)

கருநெறி karu-neṟi, *n.* <id. + நெறி.= *kṛṣṇa-vartman.* Fire; நெருப்பு. (பிங்.)

கருநொச்சி karu-nocci, *n.* <id.+. 1. Willow-leaved Justicia, m. sh., *Justicia gendarussa;* நொச்சிவகை. (பைஷஜ. 50.) 2. [M. *karunocci.*] Three-leaved Chaste tree, s. tr., *Vitex trifolia;* செடிவிசேடம். (L.) 3. A plant, dark-leaved evergreen, planted in gardens by the side of walks, *Gendarussa vulgaris;* நொச்சி விசேடம். (W.)

கருநொச்சில் karu-noccil, *n.* <id.+. See கருநொச்சி. (மலை.)

கருநோய் karu-nōy, *n.* <id.+. A kind of mange in cattle; மாட்டுநோய்வகை. (J.)

கருப்பக்கிருகம் karuppa-k-kirukam, *n.* <*garbha*+. 1. See கர்ப்பக்கிருகம். 2. Inner apartment of a palace; the queen's apartment; அரண்மனையின் உள்வீடு. (நெடுநல். 114, உரை.)

கருப்பங்கொல்லை karuppaṅ-kollai, *n.* <கரும்பு+. Sugar-cane field; கரும்புத்தோட்டம்.

கருப்பச்சிதைவு karuppa-c-citaivu, *n.* <*garbha*+. Abortion; கருவழிவு.

கருப்பஞ்சாற்றுக்கடல் karuppañ-cāṟṟu-k-kaṭal, *n.* <கரும்பு+சாறு+. The ring-shaped sea of sugar-cane juice, one of *eḻu-kaṭal*, q.v.; எழுகடல்களு ளொன்று.

கருப்பட்டி karuppaṭṭi, *n.* <id.+அட்டு. [M. *karippaṭṭi.*] 1. Jaggery made from palmyra juice; பனைவெல்லம். *சீவன் கருப்பட்டியோ* (இராமநா. உயுத். 69). 2. Candy made from palmyra juice; பனங்கற்கண்டு. (யாழ். அக.) 3. Jaggery; வெல்லம். (W.)

கருப்பணி karuppaṇi, *n.* <id. + நீர். Sweet toddy of the palmyra, drawn into an earthen vessel smeared within with lime to prevent fermentation; பனையினின்று இறக்கும் பதநீர். (J.)

கருப்பத்துளை karuppa-t-tuḷai, *n.*<*garbha* +. Inner hole or cavity formed at the first formation of a coral, a flaw in coral; பவளங்கள் உண்டாம்போதே காணும் உட்டுளையாகிய குற்றம். *கருப்பத்துளையவுங் கல்லிடை முடக்கலும்* (சிலப். 14, 197).

கருப்பதீக்கை karuppa-tīkkai, *n.* <id.+. Religious observance of allowing one's hair to grow during the period of one's wife's pregnancy; மனைவியின் சர்ப்பகாலத்து மயிர்வளர்க்கை. *பாற்படுங் கருப்பதீக்கையன்* (சேதுபு. சேதுபல. 42).

கருப்பதீட்சை karuppa-tīṭcai, *n.* <id.+. See கருப்பதீக்கை.

கருப்பந்தெப்பம் karuppan-teppam, *n.* <கரும்பு+. Raft made of wild sugar-cane reeds; பேய்க்கரும்புகொண்டு செய்யப்படும் மிதவை. (பதிற்றுப். 87, 4, உரை.)

கருப்பந்தோகை karuppan-tōkai, *n.* <id. +. Leaf of the sugar-cane plant; கரும்பின் இலை. *Loc.*

கருப்பநாள் karuppa-nāḷ, *n.* <*garbha*+. The ninth day after child-birth; பிறந்த ஒன்பதாம் நாள். (யாழ். அக.)

கருப்பநிச்சிதம் karuppa-niccitam, *n.* <id.+. Definite understanding, in advance, of a matrimonial alliance, even while the would-be bride or bridegroom is as yet in the womb; கருப்பகாலத்தேயே செய்யப்பட்ட விவாகநிச்சயம். (பஞ்.)

கருப்பநீர் karuppanīr, *n.* <கரும்பு+நீர். 1. Sugar-cane juice; கருப்பஞ்சாறு. 2. See கருப்பணி. (J.)

கருப்பபாதம் karuppa-pātam, *n.* perh. *garbha-pāta.* Red Indian laburnum. See செம்மருங்கை. (மலை.)

கருப்பம் karuppam, *n.* <*garbha.* That which is suggestive, prognosticative; உட்பொருளாகக்கொண்டது. (சிலப். 17, 442.)

கருப்பம்பாகு karuppam-pāku, *n.* <கரும்பு +. Sugar-cane treacle, medicated molasses; வெல்லப்பாகு. (W.)

கருப்பாசயம் karuppācayam, *n.* <*garbha* + *ā-śaya.* See கர்ப்பாசயம். *சிறைக்கருப்பாசயஞ் சேரா* (பதினொ. திருவிடைமரு. மும்மணிக். 1).

கருப்பாதானம் karuppātāṉam, *n.* < id. + *ā-dhāna*. See கர்ப்பாதானம். *இருதுசங்கமனங் கருப்பாதானம் புஞ்சவனம்* (திருவானைக். கோச்செங். 14).

கருப்பாலை karuppālai, *n.* < கரும்பு + ஆலை. Sugar-cane press; கரும்பாட்டும் ஆலை. *கருப்பாலைச் சோதி கெடும்புகை* (சேக்கிழார். பு. 74).

கருப்பிண்டம் karu-p-piṇṭam, *n.* < கரு³ +. Foetus; கருப்பத்திலுள்ள பிண்டம். *Colloq.*

கருப்பிணி karuppiṇi, *n.* < *garbhiṇī*. Pregnant woman. See கர்ப்பிணி.

கருப்பு karuppu, *n.* < கரு-மை. [T. *karuvu.*] Famine, dearth, scarcity; பஞ்சம். *மழையின்றிப் பசையில் கருப்புவர* (சேதுபு. வேதாள. 20).

கருப்புக்கட்டி karuppu-k-kaṭṭi, *n.* < கரும்பு +. 1. Sugar-cane jaggery; வெல்லம். (திருவானைக். திருநீற்று. 13.) 2. Palmyra jaggery; பனைவெல்லம். 3. Rock candy; கற்கண்டு. (W.)

கருப்புக்கிட்டி karuppu-k-kiṭṭi, *n.* < கருப்பு +. A pest that affects the maize or Indian corn; சோளப்பயிர்க்கு வரும் ஒருவகை நோய். *Loc.*

கருப்புரம் karuppuram, *n.* < *karpūra*. See கர்ப்பூரம். *கருப்புரந் திறைந்த கல்லுயர் மணித்தோள்* (கல்லா. 10).

கருப்புவில் karuppu-vil, *n.* < கரும்பு +. Sugar-cane bow of the God of love; மன்மதனது கரும்பு வில். *சுருப்புநாண் கருப்புவி லருப்புக்கணை தூவ* (மணி. 18, 105).

கருப்புவில்லி karuppu-villi, *n.* < id. +. Kāma, the God of love, whose bow is made of sugar-cane; மன்மதன். *மீன்றிகழ் கொடியனைக் கருப்புவில்லியை* (மணி. 20, 92).

கருப்பூர்வழக்கு karuppūr-vaḻakku, *n.* Undecided suit; தீராத வழக்கு. (W.)

கருப்பூரம் karuppūram, *n.* < *karpūra*. See கர்ப்பூரம். *தொகுகருப்பூரமுஞ் சுமந்துடன் வந்த* (சிலப். 14, 109).

கருப்பேந்திரம் karuppēntiram, *n.* < கரும்பு + *yantra*. Sugar-cane press; கரும்பாலை. *கருப்பேந்திர முதலாயின கண்டாள்* (கம்பரா. கங்கை. 6).

கருப்பை¹ karu-p-pai, *n.* < கரு³ + பை. Womb. See கர்ப்பாசயம். *கருப்பைக்குண் முட்டைக்கும்* (தனிப்பா. i, 120, 3).

கருப்பை² karuppai, *n.* perh. கரு-மை. 1. Rat; எலி. *அணிலொடு கருப்பை யாடாது* (பெரும்பாண். 85). 2. Palmyra, that bears black fruit; கருங்காய்ப்பனை. (J.)

கருப்பொருள் karu-p-poruḷ, *n.* < கரு³ +. 1. God, the efficient Cause, the originator of all things; காரணவஸ்து. *அந்தக்கரணங் கடந்த கருப் பொருளே* (பதினொ. திருக்கழும. மும்மணிக். 3). 2. (Akap.) Distinctive regional features of each of the *aintiṇai* or five tracts of land, embracing 14 items, viz., *தெய்வம், தலைவர், மாக்கள், புள், விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணா, பறை, யாழ், பண், தொழில்*; ஐந்திணைகளுள் ஒவ்வொன்றுக்குமுரிய தெய்வமுதலிய பொருள்கள். (நம்பியகப். 19, உரை.)

கருப்போட்டம் karuppōṭṭam, *n.* < *garbha* + ஓட்டம். See கர்ப்போட்டம்.

கரும்படை karu-m-paṭai, *n.* < கரு-மை + Ringworm; மேகப்படை. (M. L.)

கரும்பணி karumpaṇi, *n.* < கரும்பு + அணி. Figure of sugar-cane drawn with sandal paste on women's arms and breasts, an adornment for women in ancient times; பெண்பாலாரின் தோள்மார்புகளில் சந்தனக்குழம்புமுதலியவற்றாற் கரும்பின்வடிவமாக எழுதப்படுங் கோலம். *அன்றுதா னீத்த கரும்பணி வாட* (கலித். 131, 29).

கரும்பருந்து karu-m-paruntu, *n.* < கரு-மை +. Spotted eagle, *Aquila nævia*; பருந்துவகை. (W.)

கரும்பளிங்கு karu-m-paḷiṅku, *n.* < id. + Basalt, crystalline form of dolerite; பளிங்குக் கல்வகை. (M.M. 247.)

கரும்பன் karumpaṉ, *n.* < கரும்பு. God of love who has a sugar-cane bow; கரும்பை வில்லாகவுடைய மன்மதன். *சாற்றுக் கரும்பனைக் கூற்றென்னும்* (அஷ்டப். அழகரந். 17).

கரும்பனசை karu-m-paṉacai, *n.* < கரு¹ +. A venomous kind of snake; ஒருவகை விடப் பாம்பு. *Loc.*

கரும்பனையன் karu-m-paṉaiyaṉ, *n.* < id. +. Krait, as black in colour, *Bungarus cæruleus*; பாம்புவகை. (W.)

கரும்பாடு karu-m-pāṭu, *n.* < id. + படு-. Margin of a tank between the bund and the water limit, usually clayey; ஏரியின் நீர்ப்பிடிவரையுள்ள நிலம். *Rd.*

கரும்பாம்பு karu-m-pāmpu, *n.* < id. +. 1. Black snake; கிருஷ்ண சர்ப்பம். 2. Rāhu, the ascending node, which accg. to mythology is regarded as a serpent; இராகு. (பிங்.)

கரும்பாலை¹ karumpālai, *n.* < கரும்பு + ஆலை. Sugar-cane press; கரும்பாட்டும் யந்திரம். *Colloq.*

கரும்பாலை² karu-m-pālai, *n.* < கரு¹ + பாலை. Obtuse-leaved Ape Flower, m. tr., *Mimusops roxburghiana*; பாலை மரவகை.

கரும்பித்தம் karu-m-pittam, *n.* < id. + . (W.) 1. Black bile; ஒருவகைப் பித்தநீர். 2. Madness, dementia; பைத்தியம்.

கரும்பிலாச்சை karu-m-pilāccai, *n.* <id. +. Globe-fish, dull reddish, *Tetrodon magaritatus;* கடல்மீன்வகை.

கரும்பிள்ளை karu-m-piḷḷai, *n.* <id.+. Crow; காக்கை. அலர்கதிர் கரும்பிளை மடிப்ப (சீவக. 1252).

கரும்பிறப்பு karu-m-piṟappu, *n.* <id.+. (Jaina.) Lowest form of existence, in a *narakam*, one six of kinds of births; நரகசன்மம். கரும்பிறப்புங் கருநீலப்பிறப்பும் (மணி. 27, 150).

கரும்பிறை karu-m-piṟai, *n.* <id.+. (W.) 1. Black marble; கரும்பளிங்குக்கல். 2. Black limestone; கருஞ்சுக்கான்கல்.

கரும்பு karumpu, *n.* [K. *kabbu*, M. *karimpu*, Tu. *karumbu*.] 1. Sugar-cane, a saccharine grass, *Saccharum officinarum*. கரும்புபோற் கொல்லப் பயன்படுங் கீழ் (குறள், 1078). 2. The Seventh *nakṣatra;* புனர்பூசம். (திவா.)

கரும்புசம் karu-m-pucam, *n.* <கரு-மை+. A kind of black beetle, *Apis violacea;* ஒருவகைக் கரிய வண்டு. (W.)

கரும்புடையன் karu-m-puṭaiyaṉ, *n.* <id. +. Black wart snake, *Acaochordus;* புடையன் பாம்புவகை.

கரும்புல் karu-m-pul, *n.*<id.+. Palmyra-palm; பனை. (மலை.)

கரும்புள் karu-m-puḷ, *n.* <id.+. 1. A kind of black-beetle; வண்டுவகை. (பிங்.) 2. Female beetle; பெண்வண்டு. (சூடா.)

கரும்புள்ளி karu-m-puḷḷi, *n.* <id.+. A kind of venereal disease producing black spots all over the body; உடலிற் கரும்புள்ளிகளை உண்டாக்கும் ஒருவகை மேகநோய். (தைலவ. தைல. 7.)

கரும்புள்ளிக்கல் karu-m-puḷḷi-k-kal, *n.* <id.+. A kind of stone containing metal; உலோகதாதுவுள்ள கல்வகை. (W.)

கரும்புளி-த்தல் karumpuḷi-, *v. intr.* prob. களிம்பு + புளி-. To become spoiled, as acid food kept in a brass vessel; களிம்பூறுதல். (W.)

கரும்புற்று karu-m-puṟṟu, *n.* <கரு-மை+. Black cancer, *Melanosis;* கருநிறமுள்ள கிரந்திவகை. (இங். வை. 307.)

கரும்புறத்தான் karu-m-puṟattāṉ, *n.* <id. +. 1. Man of a minor caste found in Madura and Tinnevelly districts who use the title Pillai; மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களில் வசிக்கும் ஒரு சிறு சாதி. (E. T.) 2. Kāppiliyas. See காப்பிலியன்.

கரும்புறத்தோர் karu-m-puṟattōr, *n.* <id. +. Hunters who live by chase; விலங்குகளை வேட்டையாடிக் கொன்றுண்ணுஞ் சாதியார். (சீவக. 2751, உரை.)

கரும்புறம் karu-m-puṟam, *n.* <id.+. 1. Palmyra-palm. See பனை. (பிங்.) 2. Blackness; கருமை. நீலமே! . . . நின்வண்ணம் யாது? கரும்புறமல்லவோ (சீவக. 2514, உரை).

கரும்புறா karu-m-puṟā, *n.*<id.+. Turtle-dove, *Turtur cambayensis;* புறவிசேடம். (திவா.)

கரும்பெலாச்சி karu-m-pelācci, *n.* <id. +. See கரும்பிலாச்சை.

கரும்பேன் karu-m-pēṉ, *n.*<id.+. Black spots that form in cloth kept wet for long; ஈரத்தாற் சீலையில் தோன்றுங் கரும்புள்ளி. (J.)

கரும்பொன் karu-m-poṉ, *n.*<id.+. Iron; இரும்பு. கரும்பொ னியல்பன்றி (சீவக. 104).

கருமக்கருத்தன் karuma-k-karuttaṉ, *n.* <*karman*+. (Gram.) See கருமகர்த்தா, 2. (இறை. 18, உரை.)

கருமக்கழிபலம் karuma-k-kaḻi-palam, *n.* <id.+. Virtue or merit that expiates sin; பாவத்தைக் கழிக்கும் புண்ணியம். கருமக்கழிபலங் கொண்மினோ (சிலப். 15, 62).

கருமக்காமம் karuma-k-kāmam, *n.*<id.+. Love, that is professed with a purpose, dist. fr. that which is sincerely felt as a natural emotion or passion, *Amour de convenance;* காரியத்தின்பொருட்டு மேற்கொண்ட பொய்க்காமம். கருமக் காம மல்ல தவண்மாட், டொருமையி னோடாது புலம்பு முள்ளமும் (பெருங். வத்தவ. 7, 9).

கருமக்கோட்பாடு karuma-k-kōṭpāṭu, *n.* <id.+. Avowed object; மேற்கொண்ட காரியம். கோசிகன் தான்வந்த கருமக்கோட்பாட்டினைக் கூறுகின்றவன் (சிலப். 13, 56, உரை).

கருமகர்த்தா karuma-karttā, *n.* <id.+. 1. Doer, actor, performer; கருமஞ் செய்பவன். (W.) 2. (Gram.) Subject of a sentence in which the predicate is active in form, but passive in sense, as in பசுக்கறந்தது; செயப்படுபொருள் வினைமுதல் போல வருவது. (பி. வி. 11, உரை.)

கருமகள் karu-makaḷ, *n.* <கரு-மை+. 1. Base, infamous woman; சண்டாளி. கருமக ளிலங்கையாட்டி (திவ். பெரியதி. 4, 5, 5). 2. Crow; காக்கை. (W.)

கருமகன் karumakaṉ, *n.* prob. *karma-kara*. Blacksmith; கொல்லன். கருமகக் கம்மியன் (கம்பரா. பம்பா. 37).

கருமகாண்டம் karuma-kāṇṭam, *n.* <*karman*+. 1. See கர்மகாண்டம். (சி.போ. பா. அவை. யடக்கம்.) 2. A medical treatise. See கன்மகாண்டம், 1.

கருமகாண்டி karuma-kāṇṭi, *n.* <id. + *kāṇḍin.* One who performs religious rites and ceremonies enjoined by the Vēdas for the realization of his object; வைதிகக்கிரியைகளைப் பயன்கருதி அநுஷ்டிப்போன். (வேதா. சூ. 13.)

கருமகாண்டிகன் karuma-kāṇṭikaṉ, *n.* <id.+. See கருமகாண்டி. (W.)

கருமச்சார்ச்சி karuma-c-cārcci, *n.* <id.+. See கருமச்சார்பு. (தொல். சொல். 84, உரை.)

கருமச்சார்பு karuma-c-cārpu, *n.* <id.+. (Gram.) Direct relationship of the nominative of a verb with its object denoted only by the accusative case, as in *தூணைச்சார்ந்தான்*; இரண்டன் உருபேயேற்ற செயப்படுபொருளைக் கருத்தா மெய்யுறுஞ் சார்பு. (தொல். சொல். 84, சேனா.)

கருமசண்டாளன் karuma-caṇṭāḷaṉ, *n.* <id.+. A person of high birth who degrades himself by his own vile deeds; மேற்சாதியிற் பிறந்திருப்பினும் இழிவான செய்கையாற் சண்டாளனானவன். *Colloq.*

கருமசம் karuma-cam, *n.* prob. *karma-ja.* Pipal. See அரசு. (சங். அக.)

கருமசேடம் karuma-cēṭam, *n.* <*karman* +. Residue of past karma, the results of which yet remain to be experienced; பல்வேறு அனுபவங்களிற் கொண்டு செலுத்தும் வினைக்குறை. *கருமசேடங்க ளெய்த்து* (திருக்காளத். பு. 32, 73).

கருமஞ்சரி karu-mañcari, *n.* <*khara-mañjarī.* A plant growing in hedges and thickets. See நாயுருவி. (மலை.)

கருமஞ்செய்-தல் karumañ-cey-, *v. intr.* <*karman*+. To perform funeral rites; உத்தரக்கிரியை புரிதல். *Colloq.*

கருமட்டி karu-maṭṭi, *n.* <கரு-மை+. A large edible oyster, *Ostrea edulis;* மட்டிப்பூச்சி வகை. (W.)

கருமணத்தக்காளி karu-maṇa-t-takkāḷi, *n.* <id.+. Black Nightshade, s. sh., *Solanum nigrum;* மணித்தக்காளிவகை. (பதார்த்த. 282.)

கருமணல் karu-maṇal, *n.* <id.+. Fine black sand found on the sea-shore or near the bed of a running stream; கடற்கரை முதலிய இடத்துள்ள கரிய நுண்மணல். (பிங்.)

கருமணி karu-maṇi, *n.* <id.+. The apple of the eye; கண்மணி. *கருமணிப் பாவையன்னான்* (சீவக. 1508).

கருமணிக்கெண்டை karu-maṇi-k-keṇṭai, *n.* <id.+. Carp, reddish, attaining 2 ft. in length, *Labes kontius;* கெண்டைமீன்வகை.

கருமத்தம் karu-mattam, *n.* <id.+*matta.* Purple stramony. See கருவூமத்தை. (பதார்த்த. 271.)

கருமத்தலைவன் karuma-t-talaivaṉ, *n.* <*karman*+. Superintendent, secretary; காரியத்தலைவன். *மன்னர்க் குள்படு கருமத்தலைவர்க்கு* (திவா. 2, 129).

கருமத்துரோகம் karuma-t-turōkam, *n.* <id.+. Treachery, treason, villany; துரோகச்செயல். (W.)

கருமநிவிர்த்தி karuma-nivirtti, *n.* <id.+. 1. Cessation from all action, as a step preparatory to emancipation; வினையொழிவு. 2. Ceremonies performed to ward off the effect of evil deeds done in the past; முன்செய்த தீவினை நீங்கப் புரியுங் கிரியை.

கருமபந்தம் karuma-pantam, *n.* <id.+. Chain of causation, relation between deeds in a given birth and the concomitant experiences in a subsequent one; வினைகளாலான கட்டு. (W.)

கருமபந்தனம் karuma-pantaṉam, *n.* <id. +. See கருமபந்தம்.

கருமபலன் karuma-palaṉ, *n.* < id. +. Effect of deeds as pain, pleasure, etc.; வினைப்பயன். *கருமமுங் கருமபலனுமாகிய காரணன்றன்னை* (திவ். திருவாய். 3, 5, 10).

கருமபாகை karuma-pākai, *n.* < id. + *bhāga.* See கர்மகாண்டம். (திவா.)

கருமபூமி karuma-pūmi, *n.* <id.+. 1. Bhāratavarṣa, i.e., the land of Bharata or India where virtuous deeds such as religious sacrifices are performed, dist. fr. *போகபூமி*; யாகமுதலிய நற்காரியங்கள் புரிதற்குரிய பாரதவர்ஷம். 2. The earth which is adapted for the occupations of agriculture, commerce, etc.; உழவு வாணிபமுதலிய தொழில்களைச் செய்தற்குரிய பூமி. (திவா.) 3. Cremation ground; சுடுகாடு. (W.)

கருமம்[1] karumam, *n.*<*karman.* 1. Action; work; deed; செயல். (திவா.) 2. Fruit of deeds, accumulating in three ways, viz., *சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம்;* fate; வினைப்பயன். *கரும வரிசையாற் கல்லாதார் பின்னும், பெருமை யுடையாருஞ் சேறல்* (நாலடி, 249). 3. Business; profession, occupation; தொழில். *தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்* (குறள், 266). 4. Religious rites; duties that are enjoined by the Śāstras; வேதசம்மதமான சடங்கு. 5. Moral duty; specific obligation; கடமைச்செயல். *காணப்பேர் கைதொழல் கருமமே* (தேவா. 897, 10). 6. Funeral ceremonies; உத்தரக்கிரியை. 7. (Gram.) Object of a verb; செயப்படுபொருள். (வீரசோ. வேற்றுமை. 1.)

கருமம்[2] karumam, *n.* <*gharma*. Heat; உஷ்ணம். (பிங்.)

கருமமல்லாச்சார்பு karumam-allā-c-cārpu, *n.* < *karman* +. Relationship of the subject of a verb with its object denoted either by the accusative case or locative case, as in *அரசரைச்சார்ந்தான்* or *அரசர்கட்சார்ந்தான்*; செயப்படு பொருளையேனும் ஆதாரத்தையேனும் கருத்தா மெய் யுறுதலின்றி வரும் சார்பு. (தொல். சொல். 84)

கருமமீமாஞ்சை karuma-mīmāñcai, *n.* <id. +. System of Indian philosophy whose founder or the earliest systematic exponent was Jaimini and which consists of an enquiry into the nature of dharma according to the Karma-kāṇḍa of the Vēda; பூர்வமீமாஞ்சை.

கருமமூலம் karuma-mūlam, *n.* < id. +. Darbha grass. See தர்ப்பை. (மலை.)

கருமயாகம் karuma-yākam, *n.* <id. +. Due performance of all religious duties enjoined for daily practice regarded in itself as a religious sacrifice, one of *ai-vakai-yākam*, q.v.; நித்தியகருமானுஷ்டானம். *அறைந்த கருமயாக முத லோந்து மொன்றுக்கொன றதிகம்* (சிவதரு. ஐவகை. 8).

கருமயோகம் karuma-yōkam, *n.* <id. +. 1. Performance of rites and duties without any expectation of fruits therefrom; நிஷ்காமிய மான கருமானுஷ்டானம். (பகவற். அத். 3.) 2. Yōga consisting in the systematic control of breath practised for the attainment of longevity; உடம்பு நிலைத்துநிற்குமாறு பிராணவாயுவை அடக்கி யோகிகள் செய்வதான யோகம்: *கருமயோகத்தைக் கழற்ற வரிது* (ஒழிவி. யோக. 1).

கருமருது karu-marutu, *n.* <கரு-மை +. Brown-hard-felted-backed-leaved Winged Myrobalan, l. tr., *Terminalia tomentosa*; மருதமர வகை.

கருமலை karu-malai, *n.* <id. +. Mountain containing iron ore; இருப்புக்கனியுள்ள மலை. (W.)

கருமவதிகாரர் karuma-v-atikārar, *n.* < *karman* +. Heads of the various departments of administration in a State; இராச்சியகாரியம் நடத்துந் தலைவர். (பிங்.)

கருமவிதிகள் karuma-vitikaḷ, *n.* <id. +. See கருமவதிகாரர். (திவா.)

கருமவியாதி karuma-viyāti, *n.* <id. +. Incurable disease, believed to be the result of the sins committed in previous births; முன் செய்த தீவினையால் உறும் தீராநோய். *Colloq.*

கருமவினைஞன் karuma-viṉaiñaṉ, *n.* < id. +. One who officiates as priest in conducting the religious rites and ceremonies performed by the householder; புரோகிதன். *கருமவினைஞருங் கணக்கியல் வினைஞரும்* (சிலப். 26, 40).

கருமன் karumaṉ, *n.* cf. *karma-kara*. Blacksmith; கொல்லன். (பிங்.)

கருமா karu-mā, *n.* <கரு-மை + மா. 1. Hog, பன்றி. *கருமாலுங் கருமாவாய்* (பெரியபு. திரு ஞான. 1003). 2. Elephant; யானை. (பிங்.)

கருமாதி karumāti, *n.* <*karman* + *ādi*. Final funeral obsequies; funeral ceremonies, etc. See கருமாந்தரம். *Colloq.*

கருமாதிகாரி karumātikāri, *n.* <id. + *adhi-kārin*. 1. Superintendent, minister; head of a department; காரியத்தலைவன். 2. One entitled to perform the funeral rites; ஈமச்சடங்கு செய்யும் உரிமையுள்ளான்.

கருமாதிபதி karumātipati, *n.* <id. + *adhi-pati*. (Astrol.) The lord of that sign of the Zodiac which is the tenth from the ascendant; ஜாதகன் பிறந்த இலக்கினத்திற்குப் பத்தாம் இடத்து அதிபதி.

கருமாந்தம் karumāntam, *n.* <id. + *anta*. See கருமாந்தரம்.

கருமாந்தரம் karumāntaram, *n.* <id. + *antara*. Final ceremony, usually performed among non-Brahmans, on the 16th day after death, as the end of funeral obsequies; இறந்தவர் பொருட்டுப் பதினாறுநாட்செய்யுஞ் சடங்கு.

கருமாநிமிளை karu-mā-nimiḷai, *n.* <கரு-மை +. Black bismuth, used as antimony to blacken the eye lids; கண்களுக்கு அஞ்சனமிடுதற் குரிய அம்பரைவகை.

கருமாயம் karu-māyam, *n.* <கரு-மை +. 1. Exorbitant price; அதிகவிலை. *கத்தரிக்காய் கருமாய மாய் விற்கிறது. Colloq.* 2. That which is scarce; அருமையானது. (W.)

கருமாறிப்பாய்-தல் karu-māṟi-p-pāy-, *v. intr.* <கரு[1] +. To do a very difficult and hazardous feat as jumping between two impaling stakes into a tank from a high place; கரு மாறிப் பாய்ச்சல்போன்ற அரியசெயலைச் செய்தல். *கருமாறிப் பாய்ந்தாலும் பேற்றுக்குத் தக்கது போராதாய்* (திவ். திருவிருத். 21, வ்யா).

கருமாறிப்பாய்ச்சல் karu-māṟi-p-pāyccal, *n.* <id. +. Very difficult and hazardous feat, as that of jumping from a high place between two impaling stakes planted into the tank in the temple of Kāmākṣī at Conjeevaram; காஞ்சீ புரத்துக் காமாட்சிகோயிற் குளத்துள் நாட்டப்பட்ட இரண்டு கழுக்கோல்களின் இடையே உயரமான இடத் தினின்றுந் தவறாது குதிக்கை. *கருமாறிப்பாய்ச்சல் யார்க்கு மினிது* (தனிப்பா. i, 21, 37).

கருமான் karu-māṉ, *n.* <கரு-மை+. [M. *karmān.*] 1. Stag; ஆண்மான். (பிங்.) 2. Hog; பன்றி. கரும்மானுரைத்திடின் . . . மருமத் தணிபடைப் பேன் (தணிகைப்பு. களவுப். 198).

கருமான்[2] karumāṉ, *n.* [M. *karumāṉ.*] See கருமகன். *Colloq.*

கருமானம் karu-māṉam, *n.* <கரு[3]+*māna.* Witchcraft, black magic; துனியவித்தை.

கருமானுட்டானம் karumāṉuṭṭāṉam, *n.* <*karman+anu-ṣṭhāna.* Due observance of religious duties and rites; வைதிக ஆகமக்கிரியை களை அனுஷ்டிக்கை.

கருமானுபவம் karumāṉupavam, *n.* <id. +*anu-bhava.* Experiencing the fruits of former deeds; முன்வினைப்பயனை அனுபவிக்கை.

கருமி karumi, *n.* <*karmin.* 1. One who contents himself with the mere performance of such religious rites as have been enjoined and who does not rise spiritually higher; தன்சாதிக்கு உரியனவாய்ச் சாஸ்திரம்விதித்த கிரியைகளைச் செய் வோன். தன்சாதி கருமமேபற்றி முத்தனுமவன் . . . கருமி (வேதா. சூ. 14). 2. Atrocious sinner; தீவினை யாளன். (W.) 3. Miser; உலோபி. *Colloq.*

கருமுகில் karu-mukil, *n.* <கரு-மை+. 1. Black cloud laden with rain; நீருண்ட மேகம். கரு முகிற் பொடித்த வெய்யோன் (சீவக. 1724). 2. See கருமுகிற்பாஷாணம். (மூ. அ.)

கருமுகில்வண்ணம் karu-mukil-vaṇṇam, *n.* <id.+. A prepared arsenic. See திமுகற் பாஷாணம். (W.)

கருமுகிற்சிலை karu-mukiṟ-cilai, *n.* <id.+. Loadstone. See காகச்சிலை. (W.)

கருமுகிற்பாஷாணம் karu-mukiṟ-pāṣā-ṇam, *n.*<id.+. A prepared arsenic, one of 32; வைப்புப்பாஷாணம் 32-ல் ஒன்று.

கருமுகை karu-mukai, *n.* <id.+. 1. Malabar Jasmine. See சாதிமல்லிகை. (பிங்.) 2. Tuscan Jasmine. See இருவாட்சி. (மலை.) 3. Kananga flower tree. See சிறுசண்பகம். (திவா.)

கருமுடி-த்தல் karu-muṭi-, *v. intr.* <கரு[3] +. (யாழ். அக.) 1. To prepare necessary materials for witchcraft; துனியவித்தைக்காக அட்ட கருமக்கரு உண்டாக்குதல். 2. To make ready the materials for alchemy; இரசவாதக்கருவைச் சித்தப் படுத்துதல்.

கருமுழிக்கெண்டை karu-muḻi-k-keṇṭai, *n.* See கருவிழிக்கெண்டை.

கருமுஞ்சிப்பாரை karu-muñci-p-pārai, *n.* <கரு-மை+. Grey horse-mackerel; இருப் பாரைமீன்.

கருமேகம் karu-mēkam, *n.* <id.+. A kind of syphilis characterized by dark spots over the body; மேகநோய்வகை.

கருமேந்திரியம் karumēntiriyam, *n.*<*kar-man+indriya.* Organs of motor action, of which there are five, viz., வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம், opp. to ஞானேந்திரியம்; தொழிற்புரிந் துரியகைகால் முதலிய உறுப்புக்கள். கருமேந்திரிய மைம்பூதம் (திவ். திருவாய். 10, 7, 10).

கருமேனி karu-mēṉi, *n.*<கரு-மை+. Corpulent body; தூலசரீரம். (சி. சி. 1, 55, ஞானப்.)

கருமை[1] karumai, *n.* [K. *kari*, M. *karuma.*] 1. Blackness, dark colour; கறுப்பு. கருமை பெற்ற கடல் (தேவா. 62, 5). 2. Greatness, excellence; பெருமை. (திவா.) 3. Vigour, strength; வலிமை. (புறநா. 21.) 4. Freshness; பசுமை. (பட்டினப். 9. உரை.) 5. Severity, cruelty; கொடுமை. (சிலப். 15. 208, அரும்.)

கருமை[2] karu-mai, *n.* <கரு-மை[1] + மை. Goat; வெள்ளாடு. (தைலவ. தைல. 16.)

கருமை[3] karumai, *n.* Heat. See கருமம்[2].

கருவங்கம் karu-vaṅkam, *n.* <கரு-மை + *vaṅga.* Black lead; காரீயம். (மூ. அ.)

கருவடகம் karu-vaṭakam, *n.* < கறி +. Curry condiments. See கறிவடகம். (இந்தபாக. 260.)

கருவடம் karuvaṭam, *n.*<*kharvaṭa.* Town or village surrounded by mountains and rivers; மலையும் ஆறும் சூழ்ந்த ஊர். (சூடா.)

கருவண்டிறால் karu-vaṇṭiṟāl, *n.* <கரு-மை+. Black prawn, ***Astacus nigricans;*** கறுப்பு நண்டுவகை.

கருவண்டு karu-vaṇṭu, *n.* <id.+. Black beetle; கறுப்புவண்டு. (W.)

கருவம் karuvam, *n.* <*garva.* Haughtiness, arrogance, pride; செருக்கு.

கருவம்[2] karuvam, *n.* <*garbha.* Foetus, embryo; கரு. (W.)

கருவரி karu-vari, *n.* <கரு-மை+. Dark lines in the eye, dist. fr. செவ்வரி; கண்ணிலுள்ள கரியரேகை. செவ்வரி கருவரிபரந்த . . . மையுண்ட விழியும் (பு. வெ. 11, ஆண்பாற். 3, உரை).

கருவலி karu-vali, *n.* < id. +. Great strength; மிகுந்த பலம். கருவலி . . . காளையை (சீவக. 2269).

கருவவ்வால் karu-vavvāl, *n.* < id. +. Black Pomfret. See கருவௌவால். (பதார்த்த. 937)

கருவழலை karu-vaḻalai, *n.* <id.+. [M. *karuvaḻala.*] 1. A highly venomous nocturnal

serpent of the black variety, *Lycodontidæ;* வழலைப்பாம்புவகை. (சீவக. 1276, உரை.)

கருவழிவு karu-v-aḻivu, *n.* <கரு³ + அழிவு. [M. *karuvaḻivu.*] Abortion; கருப்பச்சிதைவு.

கருவளைச்சுக்கான் karu-vaḷai-c-cukkāṉ, *n.* <கரு-மை+. Black limestone; கருஞ்சுக்கான் கல். (W.)

கருவறி-தல் karu-v-aṟi-, *v. intr.* <கரு³+ அறி-. To attain the age of discretion; பகுத்தறியும் பருவமடைதல். (W.)

கருவறு-த்தல் karu-v-aṟu-, *v. tr.* <id.+. To ruin, as an enemy; to exterminate, as a family; நிர்மூலமாக்குதல். *தானவரைக் கருவறுத்து* (கம்பரா. சூர்ப்ப. 111).

கருவறை karu-v-aṟai, *n.* <id.+. Womb; கர்ப்பக்குழி. *ஆணவக் கருவறையி லறிவற்ற . . . குழவியைப்போல்* (தாயு. சின்மயா. 6).

கருவன்[1] karuvaṉ, *n.* <*garva.* Arrogant man; செருக்கன்.

கருவன்[2] karuvaṉ, *n.* <*gṛ.* (=to swallow.) Destroyer; சங்காரமூர்த்தி. *கருவனைக் காலனை முன் காய்ந்த கானோ* (தேவா. 731, 1).

கருவா karuvā, *n.* 1. Cinnamon tree, m. tr., *Cinnamomum zeylanicum;* இலவங்கப் பட்டைமரம். 2. Cassia Cinnamon, *Cinnamomum macrocarpum;* மரவகை. 3. Clove tree, m.tr., *Eugenia caryophyllata;* கிராம்புமரம். (L.)

கருவாகை karu-vākai, *n.* <கரு-மை+. Fragrant sirissa, l. tr., *Albizzia odoratissima;* வாகைமரவகை. (பதார்த்த. 223.)

கருவாட்டுவாலி karu-v-āṭṭu-vāli, *n.* prob. id.+ஆட்டு-+. King crow. See வலியான். (W.)

கருவாடு karu-vāṭu, *n.* prob. id.+வாடு-. [T. *karavāḍu*, M. *karuvāṭu*, Port. *cravado.*] Salted and dried fish; உப்புமீன்கண்டம். (பதார்த்த. 921.)

கருவாப்பட்டை karuvā-p-paṭṭai, *n.* <கருவா+. Cinnamon, the dry bark of *Cinnamomum zeylanicum;* இலவங்கப்பட்டை. (மூ. அ.)

கருவாமுப்பு karu-v-ām-uppu, *n.* prob. கரு³+ஆம்+. Saltpetre; வெடியுப்பு. (W.)

கருவாலி karuvāli, *n.* (W.) 1. Ceylon Tea, l.tr., *Blæodendron glaucum;* மரவகை. 2. Partridge. See கதுவாலி.

கருவாழை karu-vāḻai, *n.* <கரு-மை+. A plantain tree bearing small fruit of dark colour, from 200 to 400 to the bunch; சிறியனவும் கருமையுடையனவுமாகிய பழங்கள் ஒருகுலையில் 200 முதல் 400 வரை உண்டாகக்கூடிய வாழைச்சாதி. (G. Sm. D. iv, 216.)

கருவாளி karu-v-āḷi, *n.* <கரு³ + ஆள்-. Sagacious person, genius; புத்திமான். (யாழ். அக.)

கருவாற்றிருக்கை karu-vāṟṟirukkai, *n.* <கரு-மை+வால்+திருக்கை. Broad flat sea-fish, greyish olive, attaining upwards of 6 ft. in width, with whip-like tail three or four times as long as the body, *Aetobatis narinari;* சாட்டை போன்று நீட்டையும் வால்நீட்சியுமுடைய கடல்மீன்வகை.

கருவி karuvi, *n.* prob. கரு³. [M. *karuvi.*] 1. Instrument, tool, implement; ஆயுதம். *கருவி கொண்டு . . . பொருள்கையுறின்* (சிலப். 16, 186). 2. Means, materials, as for a sacrifice; சாதனம். *அறிவற்றங் காக்குங் கருவி* (குறள், 421). 3. Armour, coat of mail; கவசம். (திவா.) 4. Shield; கேடகம். *கருவித்தேன்* (சீவக. 1606). 5. Saddle; குதிரைக் கலணை. (திவா.) 6. Horse-whip; குதிரைச்சம்மட்டி. (சூடா.) 7. Assembly, collection, flock, group; தொகுதி. (தொல். சொல். 354, உரை.) 8. Connection, concatenation; தொடர்பு. (திவா.) 9. Garment; வஸ்திரம். (சூடா.) 10. Painting; சித்திரம். *கருவியுயிர்பெற வெழுதி* (சுடு). 11. Secondary or instrumental cause; துணைக்காரணம். *வினைமுதல் கருவி* (தொல். சொல். 73). 12. Lute; யாழ். (திவா.) 13. One of the musical instruments, of which there are four kinds, viz., *தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி* to which *கண்டக்கருவி* (the larynx) is sometimes added as the fifth; இசையுண்டாதற்கு உரிய யாழ் முதலிய கருவிகள்.

கருவிக்கருத்தன் karuvi-k-karuttaṉ, *n.* <கருவி+. (Gram.) Instrument, as agent, as வாள் எறியும்; கருவி வினைமுதலாகவருவது. (இறை. 18, உரை.)

கருவிக்குயிலுவர் karuvi-k-kuyiluvar, *n.* <id.+. Drummer; தோற்கருவி வாசிப்பவர். *கண்ணுளாளர் கருவிக்குயிலுவர்* (சிலப். 5, 184).

கருவிகரணங்கள் karuvi-karaṇaṅkaḷ, *n.* <id.+. Faculties; senses and intellectual powers; இந்திரியங்களும் மனமும். (W.)

கருவிகழல்(லு)-தல் karuvi-kaḻal-, *v. intr.*<id.+. To be greatly exhausted, to lose one's strength; வலியழிதல். (W.)

கருவிடும்வாசல் karu-viṭum-vācal, *n.* <கரு³+விடு-+. Penis; ஆண்குறி. *கருவிடும் வாசலிருவிரற் கீழே* (திருமந். 584).

கருவிநூல் karuvi-nūl, *n.* <கருவி+. Book that is of help to the study of literature, philosophy or religion; கல்வியறிவினை வளர்த்தற்குச் சாதனமான நூல்.

கருவிப்புட்டில் karuvi-p-puṭṭil, *n.* <id. +. Scabbard, sheath; ஆயுதவுறை. (பிங்.)

கருவிப்பை karuvi-p-pai, *n.* <id.+. Instrument-case; barber's bag; ஆயுதமிடும் பை. (W.)

கருவிமாக்கள் karuvi-mākkaḷ, *n.* <id.+. Bards, minstrels; யாழ்வாசிக்கும் பாணர். *கருவி மாக்கள் கையற வுரைத்தன்று* (பு. வெ. 2, 10, கொளு).

கருவியாகுபெயர் karuvi-y-āku-peyar, *n.* <id.+. Metonymy in which cause is put for effect, as *திருவாசகம்*; கருவி காரியத்துக்கு ஆகி வரும் பெயர். (நன். விருத். 290.)

கருவிரலூகம் karu-viral-ūkam, *n.* <கரு-மை + A catapultic machine, of the shape of a monkey with black claws, mounted on the walls of a fort in ancient times and intended to seize and bite the approaching enemy; கரிய விரல்களையுடைய குரங்குபோலிருந்து சேர்ந்தாரைக் கடிக்கும் மதிற்பொறி. *கருவிரலூகமுங் கல்லுமிழ் கவணும்* (சிலப். 15, 208).

கருவிரி-தல் karu-viri-, *v. intr.* <கரு³+ To ear; to come into ear; தானியத்திற் கதிர்பரிதல். (W.)

கருவிலி karuvili, *n.* cf. *கருவழலை.* A nocturnal ground-snake; பாம்புவகை. (J.)

கருவிழி karu-viḻi, *n.* <கரு-மை+. [M. *karumiḻi.*] Apple of the eye; கண்மணி.

கருவிழிக்கெண்டை karu-viḻi-k-keṇṭai, *n.* <id.+. Carp. See கருமணிக்கெண்டை.

கருவிளங்கனி karu-viḷan-kaṉi, *n.* <கருவிளை+. (Pros.) Formula denoting a foot of three *nirai* ᴗᴗ ᴗᴗ ᴗᴗ; மூன்று நிரையசைச்சீரைக் குறிக்கும் வாய்பாடு. (*காரிகை, உறுப். 7, உரை.*)

கருவிளங்காய் karu-viḷan-kāy, *n.* <id.+. (Pros.) Formula denoting a foot of two *nirai* ᴗᴗ ᴗᴗ followed by a *nēr*-; நிரைநிரைநேர் கொண்ட மூவசைச்சீரைக் குறிக்கும் வாய்பாடு. (*காரிகை, உறுப். 7, உரை.*)

கருவிளநீர் karu-v-iḷa-nīr, *n.* <கரு-மை + இளநீர். Black milk of a kind of young coconut, having the property of curing sores and eruptions; சொறிபுண்களைப் போக்கக்கூடிய கருநிற முள்ள இளநீர். (*பதார்த்த.* 68.)

கருவிளம் karu-viḷam, *n.* <கருவிளை. 1. (Pros.) Formula denoting a foot of two *nirai* ᴗᴗ ᴗᴗ; இரண்டு நிரையசைச்சீரைக் குறிக்கும் வாய்பாடு. (*காரிகை, உறுப்.7.*) 2. Mussell-shell Creeper. See காக்கட்டான், 1. (மலை.) 3. Bael. See வில்வம். (மலை.)

கருவிளா karu-viḷā, *n.* <கரு-மை+. 1. Wood-apple. See விளா. (மலை.) 2. Bael. See வில்வம். (மூ. அ.)

கருவிளை karu-viḷai, *n.* <id. + விளை-. Mussel-shell Creeper. See காக்கணம். *கண்ணெனக் கருவிளை மலர* (ஐங்குறு. 464).

கருவினை karu-viṉai, *n.* <id.+. Sin; பாவம். *ஐம்பதங்க ணீராக் கருவினை கழுவப்பட்டு* (சீவக. 951).

கருவீரல் karu-v-īral, *n.* <id.+ ஈரல். Liver; பித்தாசயம்.

கருவுகலம் karuvu-kalam, *n.* cf. கருவூலம். Treasury, treasure-house; பொக்கிஷவறை. *கருவுகலத்திலே ஒரு நெஞ்சைத் தந்தாய்* (ஈடு, 2, 7, 7).

கருவுப்பு karu-v-uppu, *n.* <கரு-மை+. Salt extracted out of sesamum seed; எள்ளுப்பு. (சங். அக.)

கருவுயிர்-த்தல் karu-v-uyir-, *v. intr.* <கரு³ + உயிர்-. To bring forth, bear; ஈனுதல். *கருவுயிர்ப்பன கங்குடிப்பன* (*தனிகைப்பு. திருநாட்.* 145).

கருவுளமைப்பு karuvuḷ-amaippu, *n.* <id. The six incidents of birth, viz., *பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, மரணம்*; சன்மமெடுத்ததால் வரும் விளைவு. (பிங்.)

கருவுறு-தல் karu-v-uṟu-, *v. intr.* <id.+. 1. See கருத்தரி-. 2. To bloom; மலர்தல். *காந்தள் கருவுற* (திருக்கோ. 279, கொளு).

கருவூமத்தை karu-v-ūmattai, *n.* <கரு-மை +. Purple stramony, s.sh., *Datura fastuosa*; ஊமத்தைவகை. (*பதார்த்த.* 271.)

கருவூர் karu-v-ūr, *n.* <கரு³+. cf. *garbha-purī.* 1. Karur in Trichinopoly District, the ancient capital of the Chēra kingdom; சேரரது பழைய தலைநகர். *நெடுந்தேர்க் கோதை . . . கருவூர் முன்றுறை* (அகநா. 93). 2. See கருவூர்த்தேவர். *கருவூரறைந்த சொன்மாலை* (திருவிசை. கருவூர்த். 6, 10).

கருவூர்த்தேவர் karuvūr-t-tēvar, *n.* <கருவூர்+. A Śaiva saint, one of the authors *Tiru-v-icai-p-pā*; திருவிசைப்பாவாசிரியருள் ஒருவர். (திருவிசை. கருவூர்த்தேவர்.)

கருவூரன் karu-v-ūraṉ, *n.* <id. See கருவூர்த்தேவர். (திருவிசை. கருவூர்த். 7, 10.)

கருவூரானிலை karuvūr-āṉilai, *n.* <id.+. The Śiva temple at Karur; கருவூரிலுள்ள சிவபிரான் கோயில். (தேவா.)

கருவூலம் karuvūlam, *n.* cf. கருகூலம். Treasure, treasure-house; பொக்கிஷவறை. *புத்திய தாருமெய்க் கருவூலப் பொருளை* (பிரபோத. 27, 72).

கருவெடு-த்தல் karu-v-eṭu-, *v. intr.* <கரு³ +. 1. To gather ingredients for witchcraft; அட்டகருமக்கருச்சேர்த்தல். (W.) 2. To counteract the effect of witchcraft; சூனியக்கருவின் சக்தியை நீக்குதல். *Colloq.*

கருவேப்பிலை karu-vēppilai, *n.* < கறிவேம்பு + இலை. 1. Curry leaf; கறிவேம்பின் இலை. (பதார்த்த. 523.) 2. Curry-leaf tree. See கறிவேம்பு. *Colloq.* 3. China box, m. sh., *Murraya exotica;* செடிவகை. (L.)

கருவேம்பு karu-vēmpu, *n.* < கறி +. [T. *karivēmu*, M. *kariveppu.*] 1. Curry-leaf tree. See கறிவேம்பு. 2. Black Neem tree, l. tr., *Garuga pinnata;* கறுப்புவேப்பமரவகை.

கருவேல் karu-vēl, *n.* < கரு-மை +. [M. *karuvēlam.*] Black babul, s. tr., *Acacia arabica;* வேலமரவகை. (பதார்த்த. 462.)

கருவை[1] karuvai, *n.* < id. + வை. Millet straw; வரதவைக்கோல். கருவை வேய்ந்த கவின் குடிச் சிறூர் (பெரும்பாண். 191).

கருவை[2] karuvai, *n.* < கரிவலம்வந்தநல்லூர். A Śiva temple in Tinnevelly District; ஒரு சிவ தலம். திருக்கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி.

கருவௌவால் karu-vauvāl, *n.* < கரு-மை +. Black Pomfret, deep brown, attaining 2 ft. in length, *Stromateus niger;* கடல்மீன்வகை.

கருள் karuḷ, *n.* < id. 1. Darkness; இருள். (பிங்.) 2. Black, blackness; கறுப்பு. கருடரு கண்டத்து . . . கையிலையார் (தேவா. 337, 4). 3. Blot, stain; குற்றம். கருடீர் வலியால் (சேதுபு. முத்தீர்த். 5). 4. Indignation, wrath; சீற்றம். கருளுடைய பொழின்மருதும் (திவ். பெரியாழ். 4, 9, 3). 5. Excellent clothing; நல்லாடை. (திவா.)

கருளன் karuḷaṉ, *n.* < *garuḍa*. See கருடன். கருளக்கொடியொன் றுடையீர் (திவ். பெரியதி. 10, 8, 3).

கருனாடகம் karuṉāṭakam, *n.* See கருநாடகம். (W.)

கருனை karuṉai, *n.* Any preparation which is fried; பொரிக்கறி. கருனைச்சோ றார்வர் கயவர் (நாலடி, 200).

கரூசம் karūcam, *n.* < *karūśa*. Name of a country in Ancient India, one of 56 *tēcam*, q.v.; ஐம்பத்தாறுதேசங்களுள் ஒன்று. (திருவேங். சத. 97.)

கரேணு karēṇu, *n.* < *karēṇu*. 1. She-elephant; பெண்யானை. (திவா.) 2. Elephant; யானை. (சூடா.)

கரை[1]-தல் karai-, *4 v.* [T. K. Tu. *karagu*, M. *karakku.*] *intr.* 1. To wear away, as soil by the action of water; to dissolve, as salt or sugar in water; கரைந்துபோதல். 2. To be reduced from a solid to a liquid form; உருகுதல். கருங்கற்றுன் வெண்ணெயெனக் கரைந்தோட (அழகர்கல. 1). 3. To become emaciated, as the body; இளைத்தல். உடம்பு கரைந்துவிட்டது *Colloq.* 4. To become gradually attenuated; கெடுதல். இந்திரன் செருக்குக் கரைய (திருவிளை. திருநகரப். 101). 5. To undergo difficulties; வருந்துதல். நெஞ்சிழுங் கரையாமல் வாங்கிய கள்வன் (சிலப். 18, 26). 6. To linger, delay; தாமதித்தல். (சிலப். 18, 26, உரை.) 7. To sound, roar; ஒலித்தல். கரையுங் கடலும் (தேவா. 742, 1). 8. [M. *kara.*] To weep, lament; அழுதல். கரையாவயர் வேனெனை (கம்பரா. நகர்நீங். 33). 9. To be over-ripe, as fruit; பதனழிதல். கரைந்த பழம். (W.)—*tr.* 1. To call, invite; அழைத்தல். அஞ்சிலோதியை வரக் கரைந்தீமே (ஐங்குறு. 391). 2. To tell, expound; சொல்லுதல். அறங்கரை நாவின் (தொல். பாயிரம்).

கரை[2]-த்தல் karai-, *11 v. tr.* Caus. of கரை[1]-. 1. To dissolve in water; கரையச்செய்தல். 2. To melt, as metal; to liquify; உருக்குதல். 3. To extirpate; அழித்தல். உள்குவார் வினையைக் கரைக்கும் (தேவா. 1040, 5). 4. To pinch, squeeze so as to cause pain; நிமிண்டுதல். உபாத்தியாயர் கன்னத்தைப் பிடித்துக் கரைத்தார்.

கரை[3]-த்தல் karai-, *11 v. tr.* [K. *kare.*] To call, summon; அழைத்தல். உழையரிற் பலரைக் கரைத்து (கந்தபு. குமாரபுரி. 66).

கரை[4]-தல் karai-, *v. tr.* < K. *kara*. To take, as a load; கொண்டுபோதல். கருங்கடல் வளந்தரக் கரையும் பண்டியும் (சீவக. 63).

கரை[5] karai, *n.* < கரை[1]-. [T. M. *kara*, K. *karē.*] 1. Shore of a sea; கடற்கரை. காவாய் கரையலைக்குஞ் சேர்ப்ப (நாலடி. 224). 2. Bank, bund, as of a tank; நீர்க்கரை. யமுனைக் கரைக் கென்னை யுய்த்திடுமின் (திவ். நாய்ச்சி. 12, 4). 3. Bound, limit; எல்லை. கல்வி கரையில (நாலடி, 135). 4. Ridge of a field; செய்வரம்பு. 5. Border of a cloth; சீலைவிளிம்பு. பூங்கரை நீலம் (கலித். 111). 6. Side, proximity, usu. in compounds, as அம்பைப்பக்கரை, வழிக்கரை; பக்கம். 7. Place; இடம். (சூடா.) 8. Word; வார்த்தை. (கள். 458.) 9. Large division of co-parcenary land in a village consisting of dry and wet lands and garden fields; கிராமப் பெரும்பங்கு. (S.I.I. ii, 114: G.S.A.D. i, 288.)

கரைக்கட்டு karai-k-kaṭṭu, *n.* < கரை +. *Loc.* 1. Buttress for strengthening the bund of a tank; நீர்க்கரைக்கு ஆதாரமாய்க் கட்டியது. 2. Border of a cloth; சீலையின் விளிம்பு.

கரைக்கல்லோலம் karai-k-kallōlam, *n.* Sponge; கடற்பாசி. (மலை.)

கரைக்காரன் karai-k-kāraṉ, *n.* < கரை +. *Loc.* 1. Owner of a *karai* or determinate share in a co-parcenary village; நிலப்பங்குக்குரியவன். 2. [M. *karakkār.*] Village officer; கிராம மணியகாரன்.

கரைக்காற்று karai-k-kāṟṟu, *n.* < id. +. [M. *karakkārra.*] Land breeze, dist. fr. கடற்காற்று; கரையினின்று வீசுங் காற்று. (W.)

கரைக்கூறுசெய்வார் karai-k-kūṟu-ceyvār, *n.* < id. +. Officer, whose duty is to measure the lands in a village; நிலவளவைசெய்யும் கிராம அதிகாரிகள். (Insc.)

கரைகட்டு-தல் karai-kaṭṭu-, *v. intr.* <id. +. 1. To construct a bank or a bund; நீர்க் கரைக்கு வரம்பு உண்டாக்குதல். 2. To make the selvedge of cloth, put on a coloured border; சீலைவிளிம்பைக் கட்டுதல். *கரைகட்டிச் சலவைசெய்ய வேண்டும்.*

கரைகட-த்தல் karai-kaṭa-, *v. intr.* <id. +. 1. To overflow a bank, as a tank, a river; கரையை மீறுதல். *உலகுடைய தாயே கரைகடக்க லாகாது காண்* (தமிழ்நா. 81). 2. To pass or transgress the limit; எல்லைமீறுதல்.

கரைகண்டவன் karai-kaṇṭavaṉ, *n.* <id. +. [M. *karakaṇḍavaṉ.*] One whose learning in any branch of knowledge is at once profound and extensive; one who is skilled in business, master in science or learning; கலைகளைச் செவ்வனே அறிந்தவன்.

கரைகன்று karai-kaṉṟu, *n.* <கரை[1]- +. A calf born prematurely; பருவத்துக்குமுன் ஈன்ற கன்று. (J.)

கரைகாண்(ணு)-தல் karai-kāṇ-, *v. intr.* <கரை +. To get to the very end; to reach a destined port; to master thoroughly an art or science; எல்லையறிதல். *நற்றவமுனிவர் கரைகண்டோர்* (திவ். திருவாய். 8, 3, 10).

கரைகாரன் karai-kāraṉ, *n.* <id.+. See கரைக்காரன்.

கரைகுட்டி karai-kuṭṭi, *n.* <கரை[1]-+. Young animal born prematurely; பருவத்துக்கு முன் ஈன்ற குட்டி. (J.)

கரைச்சல் karaiccal, *n.* <கரை[2]-. Melting; உருக்குகை. (யாழ். அக.)

கரைசல் karaical, *n.* <கரை[1]-. See கரையல்.

கரைசிலை karai-cilai, *n.* <id.+. Rock-salt. See இந்துப்பு. (சங். அக.)

கரைஞ்சான் karaiñcāṉ, *n.* See அகில், 1. (W.)

கரைத்துக்குடி-த்தல் kara[illegible]-kuṭi-, *v. tr.* <கரை[2]-+. 1. To drink any liquid in which solid food or medicine has been dissolved; உணவு முதலியவற்றைத் திரவபதார்த்தத்தால் கலக்கி உட்கொள்ளுதல். 2. To learn thoroughly the contents of a book; முற்றக் கற்றறிதல். *அவன் பல நூல்களையும் கரைத்துக்குடித்தவன்.*

கரைதலைப்பாடம் karai-talai-p-pāṭam, *n.* See கடைதலைப்பாடம்.

கரைதுறை karai-tuṟai, *n.* <கரை+. (W.) 1. Landing-place; இறங்குமிடம். 2. End; முடிவு.

கரைதுறைக்காவற்காரன் karai-tuṟai-k-kāvaṟ-kāraṉ, *n.* <id.+. Tide-waiter; master-attendant; துறைமுகங் காப்பவருள் தலைவன். (W.)

கரைப்பங்கு karai-p-paṅku, *n.* < id. +. Share in the village lands; கிராமநிலப்பங்கு.

கரைப்படு[1]-தல் karai-p-paṭu-, *v. intr.* <id. +. To get to the shore, as a vessel; கரைசேர்தல்.

கரைப்படு[2]-த்தல் karai-p-paṭu-, *v. tr.* Caus. of கரைப்படு[1]-. 1. To convey to the shore; கரையிற் சேர்த்தல். *கரைப்படுத் தாங்குக்காட்டினன் பெயரும்* (சிலப். 11, 127). 2. To land one on the shores of bliss, as a guru; நற்கதி அடைவித்தல். (W.)

கரைப்பாதை karai-p-pātai, *n.* <கரை+. 1. Land route; கரைவழி. (J.) 2. Journeying by land; கரைவழியே செய்யும் பிரயாணம். (W.)

கரைப்பு karaippu, *n.* <கரை[2]-. Sloping course in roofing; வீட்டின் மேற்றளத்தை நீர்வாட்ட முறும்படி செய்கை. (C.E.M.)

கரைப்புக்கல் karaippu-k-kal, *n.* <கரைப்பு +. Crystal-stone rubber; தளத்திற்கு இழைப் போட்டுங் கல். (C.E.M.)

கரைப்போக்கு[1] karai-p-pōkku, *n.* <கரை +. Sea-coast; கடற்கரை. (W.)

கரைப்போக்கு[2] karaippōkku, *n.* <T. *karabōku.* 1. See கரைப்போக்குக்கல். *Loc.* 2. That which is base or inferior; இழிவானது. (W.)

கரைப்போக்குக்கல் karaippōkku-k-kal, *n.* <id. +. Spurious gem, found in alluvial soil; போலிக்கெம்பு. *Colloq.*

கரைப்போக்குப்பொடி karaippōkku-p-poṭi, *n.*<id. +. See கரைப்போக்குக்கல். *Colloq.*

கரைப்போக்குமனிதன் karaippōkku-maṉitaṉ, *n.* <id.+. One whose father belongs to a caste higher than that of his mother; அநுலோம சாதியான். (W.)

கரைபடு-தல் karai-paṭu-, *v. intr.* <கரை + To be divided into lots according to the shares in the land; பங்குவீதம் நிலம் பிரிவுபடுதல்.

கரைபிடி-த்தல் karai-piṭi-, *v. intr.* <id. +. [M. *karapiḍi.*] To arrive at a port; மரக்கலந் துறைசேர்தல். (W.)

கரைபிடித்தோடு-தல் karai-piṭittōṭu-, *v. intr.* <id.+. [M. *karapiḍi.*] To sail along the coast; மரக்கலம் கரையோரமாய்ச் செல்லுதல்.

கரைபுரள்(ளு)-தல் karai-puraḷ-, *v. intr.* <id.+. 1. To overflow, as a river; பெருக்

கெடுத்தல். 2. To exceed bounds; மிகுதல். குணங்கள் கரைபுரண்டிருந்தால் (ஈடு, 1, 1, 1).

கரைபோடு-தல் karai-pōṭu-, *v. intr.* <id. +. 1. To construct an embankment, as of a tank; செய்கரை கட்டுதல். 2. To fix the boundaries of land; நிலம்பிரித்தல். (W.) 3. To cast lots; சீட்டுப்போடுதல். (W.)

கரைமடி karai-maṭi, *n.* <id. +. A shore-net, dist. fr. தட்டுமடி. See கரைவலை. (W.)

கரைமரஞ்சேர்-தல் karai-marañ-cēr-, *v. intr.* <id. +. To attain salvation, as a boat reaching the shore; உய்வடைதல். லௌகிகர் நம்மையேபற்றிக் கரைமரஞ்சேரும் விரகேதோ (ஈடு, 4, 8, 9).

கரைமானியம் karai-māṉiyam, *n.* <id. +. Tax-free land assigned for the service of collecting workmen to repair tanks; ஏரிக்கரையைப் பழுதுப்பார்ப்பதற்கு வேண்டிய ஆட்களைக்கூட்டுவதற்கு விடப்பட்ட இறையிலிநிலம். (M. M.)

கரையப்பாடம்பண்ணு-தல் karaiya-p-pāṭam-paṇṇu-, *v. tr.* < கரை[1]-+. To learn perfectly, as a lesson; நன்றாகக் கற்றல். (W.)

கரையல் karaiyal, *n.* <id. 1. Dissolving; கரைகை. 2. Melting; உருகுகை. 3. That which is dissolved, reduced; கரைந்த பொருள்.

கரையற்சாதம் karaiyaṟ-cātam, *n.* <id. +. Rice over-boiled; குழைந்த சாதம். (J.)

கரையற்பனங்கட்டி karaiyaṟ-paṉaṅ-kaṭṭi, *n.* <id. +. Jaggery, reduced to a fluid condition by moisture; இளகின கருப்பட்டி. (W.)

கரையனூல் karaiyaṉūl, *n.* <கரையல் + நூல். Loose yarn that easily parts; எளிதிற்பிரியக்கூடிய நூல். (W.)

கரையாத்திரை karai-yāttirai, *n.* <கரை +. A land-journey; நிலத்திற்செய்யும் பிரயாணம். (W.)

கரையாளன் karai-y-āḷaṉ, *n.* <id. +. 1. Owner of *karai* land in a village; கிராமக்கரைப் பங்குக்கு உரியவன். (W.) 2. Caste-title of Maravas and some Iṭaiyas; மறவரிடையர்களின் பட்டப்பெயர். (E. T.)

கரையான் karaiyāṉ, *n.* <id. Fisherman living near the sea-coast; கடற்கரைப்பக்கத்து வாழும் வலைஞன்.

கரையிடு-தல் karai-y-iṭu-, *v. intr.* <id. +. 1. To divide land into portions; நிலப்பங்கு பிரித்தல். 2. To assign portions of land to be cultivated; நிலங்களைப் பயிரிடுமாறு பிரித்துக்கொடுத்தல். (W.)

கரையீடு karai-y-īṭu, *n.* <id. +. Tenure by which the lands of a village are exchanged amongst the co-parceners or owners periodically; கிராமநிலங்களை மாற்றியடைக்கை. (C. G.)

கரையேற்றம் karai-y-ēṟṟam, *n.* <id. +. [M. *karayēṟṟam.*] 1. Salvation; final deliverance of the soul; நற்கதியடைகை. 2. Emancipation from poverty, etc.; வறுமை முதலியவற்றினின்று ஈடேறுகை.

கரையேற்று-தல் karai-y-ēṟṟu-, *v. tr.* <id. +. 1. To save, redeem, emancipate, as from karma; நற்கதிசேர்த்தல். 2. To raise from indigence; to reinstate in affluent circumstances; வறுமை முதலியவற்றினின்று ஈடேற்றுதல். 3. To marry and settle, as a destitute girl; விவாகம்பெறச் செய்தல். (W.)

கரையேறு-தல் karai-y-ēṟu-, *v. intr.* <id. +. [M. *karayēṟu.*] 1. To get ashore, land; நீரினின்று கரையடைதல். கடலோடி மீண்டு கரையேறினாலென் (நல்வழி, 6). 2. To be saved, rescued, as from the sea of transmigration; to gain heavenly bliss; நற்கதியடைதல். உய்தீ கரையேற வேண்டின் (குற்றா. தல. கவுற்சனச். 83). 3. To be freed from distress; வறுமை முதலியவற்றினின்றும் ஈடேறுதல். (W.) 4. To get married; வாழ்க்கைப்படுதல். (W.) 5. To attain an object of desire; விரும்பியதை அடைதல். (W.)

கரைவலை karai-valai, *n.* <id. +. [M. *karavala.*] Drag-net, having a cotton bag with fine meshes in the centre, sometimes ½ mile in length spread out from the shore in a semi-circle and after an hour or two withdrawn from the water while the boys beat it shouting so as to drive the fish into the bag as it nears the shore; நுட்பமான துவாரங்கள்பொருந்திய ஒரு பையைத் தன்னகத்தேகொண்டதாய்க் கரையிலிருந்து அரைமைல்தூரம் வட்டமாகவீசி மீன்களைத் துரத்திப் பிடிக்க உதவும் ஒருவகை வலை.

கரைவலைத்தோணி karai-valai-t-tōṇi, *n.* <கரைவலை +. Boat for fishing with the drag-net; கரைவலையை இழுத்துச்செல்லுந் தோணி. (W.)

கரைவழி karai-vaḻi, *n.* <கரை + [M. *karavaḻi.*] 1. Road or path along the shore; நீர்க்கரைப்பாதை. (W.) 2. Lands lying along the banks of a river; ஆற்றோரமான நிலம். *Loc.* 3. See கரையீடு.

கரைவழித்தீர்வை karai-vaḻi-t-tīrvai, *n.* <கரைவழி +. Land customs, duty; வேற்றூர்களிலிருந்து உள்நாடுவழியாக வரும் பண்டங்களுக்கு விதிக்கப்படுஞ் சுங்கம். (W.)

கரைவாடை karai-vāṭai, *n.* < கரை +. North-west wind; வடமேல்காற்று. (W.)

கரைவிளங்கு karai-viḷaṅku, *n.* cf. கறைவிளங்கு. A species of White Cedar, s. tr., *Heynea trijuga*; சிறிய மரவகை. (L.)

கரைவீதம் karai-vītam, *n.* < கரை +. Land apportioned to the respective householders in a village; கிராமக்குடிகட்குப் பிரிக்கப்பட்ட பங்கு. (W.)

கரைவு karaivu, *n.* < கரை¹-. 1. Dissolving; கரைகை. 2. Tenderness of mind; மன இளக்கம். (W.) 3. Slope; சரிவு. *மலைக்கரைவு. Loc.*

கரோடி karōṭi, *n.* prob. *karōṭi*. Garland of skulls; சிரமாலை. *கரோடி விரிசடைமேல் . . . அணி நாயகன்* (தேவா. 524, 8).

கரோடிகை karōṭikai, *n.* < *karōṭikā*. See கரோடி. *புலவுகமழ் கரோடிகை யுடையபுனிதர்* (பதிெ. கோயினெ்மணி. 23).

கல்¹[ற்]-த[ற]ல் kal-, *10 v. tr.* [T. *karacu*, K. M. Tu. *kal.*] 1. To learn, study; படித்தல். *கல்லென்று தந்தை கழற* (நாலடி, 253). 2. To practise, as arts; to acquire skill in the use of arms; பயின்றறிதல். *கல்லாமா வன்னுர்* (குறள், 814).

கல்² kal, *n.* [T. Tu. *kallu*, K. M. *kal.*] 1. Stone; வெட்டி எடுக்கப்பட்ட பெருங்கல். *வாழ்நாள் வழியடைக்குங் கல்* (குறள், 38). 2. Gravel, pebble, grit; சிறு கல். *கற்கொண்டெறியுந் தவறு* (நாலடி, 364). 3. Boulder, ledge, crag; பாறை. *கல்லகழ் கிடங்கின்* (மலைபடு. 91). 4. Rock, hill, mountain; மலை. *கல்சேர்பு மாமழை தலைஇ* (பதிற்றுப். 84, 23). 5. Precious stone; இரத்தினம். *குருவிந்தக் கற்கள்* (கம்பரா. சித்திர. 17). 6. Red ochre, reddle; காவிக்கல். *முக்கோலுங் கற்றோய் முழுமடியும்* (இலக். வி. 707, உரை). 7. Pearl; முத்து. *கற்குளிமாக்கள்* (கல்லா. 42, 2). 8. Memorial stone in a village, as for a hero; வீரக்கல். *பலர் . . . கன்னின்றவர்* (குறள், 771). 9. A stone fixed in the house of a deceased person for ten days since his demise; சாச்சடங்கில் இறந்தார்பொருட்டுப் பத்துநாளைக்கு நாட்டப்படுங் கல். 10. A flaw in emeralds, one of eight *marakata-k-kuṟṟam*, q.v.; மரகதக்குற்றம் எட்டனுள் ஒன்று. (சிலப். 14, 184, உரை.) 11. Brick; செங்கல். *Colloq.* 12. Milestone; மைல் அளவுக்கு நாட்டுங் கல். *Mod.* 13. Mile; மைல்தூரம். *Mod.*

கல்கம் kalkam, *n.* < *kalka*. Medicinal pill prepared by mixing dried drugs with milk or water; உலர்ந்த சரக்கைப் பால் அல்லது நீர்விட்டு அரைத்துச்செய்யுங் குளிகை. (பைஷஜ.)

கல்காரம் kal-kāram, *n.* < கல் + *kṛ*. Stone building; பாறைக்கற்கட்டிடம். *சாது அம்பலமும் திருமடைப்பள்ளியும் ரிஷபமண்டபமும் கல்காரமாய்ப் பணிசெய்வித்து* (T.A.S. 179).

கல்கி kalki, *n.* < *Kalki*. The tenth incarnation of Viṣṇu. See கற்கி².

கல்சிலை kal-cilai, *n.* A kind of bird; பறவைவகை. (பிங்.)

கல்நவரை kal-navarai, *n.* < கல் +. A sea-fish, purple red, attaining at least 16 in. in length, *Upeneus indicus*; கடல்மீன்வகை.

கல்நாதம் kalnātam, *n.* Green vitriol; அன்னபேதி. (W.)

கல்நார் kal-nār, *n.* < கல் +. [K. *kallunāru.*] Asbestos; ஒருவகை மருந்து.

கல்மடி kal-maṭi, *n.* < id. +. Hard udder of a cow; பசுவின் காய்மடி. *Loc.*

கல்மதம் kal-matam, *n.* < id. +. See கன்மதம்.

கல்மதனம் kal-mataṉam, *n.* < id. +. A sea-fish, pale dull red, attaining at least a foot in length, *Sclopsis vosmeri*; கடல்மீன்வகை.

கல்மந்தாரம் kal-mantāram, *n.* < id. +. Cloudiness, the state of being overcast; அடைபட்டுச் சஞ்சாரமின்றியுள்ள மேகம். *Loc.*

கல்மழை kal-maḻai, *n.* < id. +. Shower of hailstones; ஆலங்கட்டியாக விழும் மழை. *Colloq.*

கல்மஷம் kalmaṣam, *n.* < *kalmaṣa*. 1. Dirt, dross, impurity; அழுக்கு. 2. Pus, of a boil; புண்ணினின்று வெளிவரும் சீ முதலிய மஷ்டு. 3. Sin; பாவம்.

கல்மா kal-mā, *n.* < கல் +. See கன்மா.

கல்மாந்தம் kal-māntam, *n.* < id. +. Cirrhosis, a disease of the liver; குழந்தைகட்கு உண்டாகும் ஈரல்நோய்வகை.

கல்மீசை kal-mīcai, *n.* cf. U. *galmucch*. Whiskers; கன்னமீசை. (C.G.)

கல்முச்சா kalmuccā, *n.* < U. *galmucch*. A tuft of hair on a man's lower lip, the imperial; கீழுதட்டின்கீழ் வைத்துக்கொள்ளும் மீசை. (C.G.)

கல்முடி kal-muṭi, *n.* < கல் +. Well-tightened knot, hard like stone; மணி முடிச்சு. *Loc.*

கல்முடிச்சு kal-muṭiccu, *n.* < id. +. See கல்முடி.

கல்மூங்கில் kal-mūṅkil, *n.* < id. +. 1. A variety of bamboo in which the hollow is half filled up, *Dendrocalamus strictus*; உட்டொளை சிறுகியுள்ள மூங்கில்வகை. 2. Thornless Reed, l.sh., *Oxytenanthera thwaitesii*; முள்ளில்லாத சிறுமூங்கில் வகை. (L.)

கல்யாணகுணம் kalyāṇa-kuṇam, *n.* < *kalyāṇa* +. Good disposition, nobility of character; நற்குணம். (சம். அக.)

கல்யாணச்சாவு kalyāṇa-c-cāvu, *n.* <id. +. Death of a person at an extreme old age; வயதுமுதிர்ந்தோரது மரணம்.

கல்யாணசுந்தரர் kalyāṇa-cuntarar, *n.* <id.+. One of the forms in which Śiva is worshipped; சிவமூர்த்தங்களுள் ஒன்று.

கல்யாணம் kalyāṇam, *n.* <*kalyāṇa*. 1. Good fortune, prosperity, felicity; சுபம். *கல்யாண குணகண பரிபூர்ணனுய்* (ஈடு, மஹாப்ர.). 2. Wedding; விவாகம். (திவா.) 3. Festivity, conviviality, joyful celebration; சுபகாரியம். 4. Gold; பொன். (சூடா.) 5. Good character, virtue; நற்குணம்.

கல்யாணன் kalyāṇaṉ, *n.* <id. Person of good disposition, of noble character; நற்குண முடையவன். *இங்குனே யாரொப்பார் நல்ல கல்யாண னன்றே* (திருவாலவா. 29, 12).

கல்யாணி kalyāṇi, *n.* <*kalyāṇī*. 1. See கலியாணி. *திரியம்பகனைப் பாகத்தில் வைக்கும் பரமகல்யாணி* (கந்தரலங். 80). 2. (Mus.) A musical mode; ஓர் இராகம்.

கல்லக்காரம் kal-l-akkāram, *n.* <கல் + அக்காரம்[1]. Candied molasses made from palmyra juice; பனங்கற்கண்டு. (J.)

கல்லகச்சத்து kal-l-aka-c-cattu, *n.* <கல் + அகம் + *jātu*. Fossil or mineral drug, supposed to ooze from mountains, bitumen; சிலாசத்து. (பதார்த்த. 1130.)

கல்லகம் kal-l-akam, *n.* <id.+id. Mountain; மலை. (திவா.)

கல்லகாரம் kallakāram, *n.* <*kahlāra*. Arrow-head. See நீர்க்குளிரி. *கல்லகாரப்பூவாற் கண்ணி தொடுத்தானை* (பரிபா. 11, 103).

கல்லங்காய் kal-l-aṅ-kāy, *n.* <கல் +. Fruit which becomes as hard as stone; இறுகிய காய். (W.)

கல்லங்கோரை kal-l-aṅ-kōrai, *n.* <id.+. A kind of sedge; கோரைவகை.

கல்லட்டிகை kal-l-aṭṭikai, *n.* <id.+. Necklace set with precious stones; இரத்தினம் வைத்து இழைத்த அட்டிகையணி.

கல்லடார் kal-l-aṭār, *n.* <id.+. Trap for tigers and other animals; விலங்குகளை அகப் படுத்தும் பொறி. *புனவன் சிறுபொறி மாட்டிய பெருங் கல்லடார்* (நற். 119).

கல்லடி-த்தல் kal-l-aṭi-, *v. intr.* <id.+. 1. To hew or cut stone; கல்வெட்டுதல். 2. To strike the foot against a stone; காலிற் கல்லடி படுதல்.

கல்லடிச்சேம்பு kal-l-aṭi-c-cēmpu, *n.* prob. id.+. An edible vegetable, an inferior kind of *cēmpu*; சேம்புவகை. (W.)

கல்லடிமூலம் kallaṭimūlam, *n.* prob. id. +. See கற்கடகபாஷாணம். (மூ. அ.)

கல்லடைப்பு kal-l-aṭaippu, *n.* <கல்+. Stone in the bladder, retention of urine by gravel, *Vesical calculus;* நீரடைப்பு நோய்வகை.

கல்லண்டம் kal-l-aṇṭam, *n.* <id. +. Blood-swelling, *haematocele;* அண்டவீக்கநோய்வகை. (M.L.)

கல்லணை[1] kal-l-aṇai, *n.* <id. +. Dam built of stone, anicut, causeway; கல்லாற் கட்டிய நீரணை.

கல்லணை[2] kallaṇai, *n.* See கலனை[1]. (திவா.)

கல்லத்தி kal-l-atti, *n.* <கல் +. [K. *kallatti.*] 1. Hill Banyan, l. tr., *Ficus tomentosa;* அத்தி மரவகை. *பாலைகல்லத்தி தோதகத்தி* (மச்சபு. நைமிச. 8). 2. Nooga, *Ficus altissima;* ஒருவகை அத்தி.

கல்லதர் kal-l-atar, *n.* <id.+. Narrow path full of stones in a desert tract; பருக்கைக் கற்கள் பொருந்திய சிறுவழி. *கல்லத ரத்தம்* (சிலப். 16, 57).

கல்லரசு kal-l-aracu, *n.* <id. +. Wild Pipal. See கொடியரசு. (L.)

கல்லரவிந்தம் kal-l-aravintam, *n.* <id.+. A mountain shrub; பூடுவகை. (மலை.)

கல்லல் kallal, *n.* cf. அல்லல். Disturbance, confusion, tumult; குழப்பம். *கல்லலற வொன்றை யருள்வோனே* (திருப்பு. 291).

கல்லலகு kallalaku, *n.* A kind of musical instrument; ஒருவகை வாச்சியம். *கல்லலகு பாணி பயின்றார்* (தேவா. 519, 1).

கல்லலசு kallalacu, *n.* See கல்லலகு. *கல் லலசு தத்தரி யேங்க* (கல்லா. 34).

கல்லவடம் kallavaṭam, *n.* A kind of drum; ஒருவகைப் பறை. *கல்லவடமிட்டுத் திசைதொழு தாடியும்* (தேவா. 576, 6).

கல்லளை kal-l-aḷai, *n.* <கல்+. Cleft or cave in a rock or mountain; மலைக்குகை. *புலி சேர்ந்து போகிய கல்லளை போல* (புறநா. 86, 4).

கல்லறு-த்தல் kal-l-aṟu-, *v. intr.* <id.+. To cut bricks out of a clayey mould; பச்சை வெட்டுக்கல் அறுத்தல். *Colloq.*

கல்லறை kal-l-aṟai, *n.* <id. +. [M. *kallaṟa.*] 1. Cave, cavern; குகை. *கல்லறையி னுழுவை சினங்கொண்டு* (தேவா. 1155, 4). 2. Vault, tomb hewn out in a rock, sepulchre, grave; பிரேதக் குழி. *Chr.* 3. Room having stone walls and roof; கல்லாலாகிய அறை.

கல்லன் kallaṉ, *n.* <*khala.* Vile, wicked, hard-hearted fellow; தீயோன். *ஊன்முதலுண் கல்லன்* (சிவதரு. சுவர்க்கநரக. 30).

கல்லாங்காசு kal-l-aṅ-kācu, *n.* <கல்+. Small round tile for a child's game; சிறுவர் விளையாட்டில் உபயோகிக்கும் வட்டமான ஓடு. (W.)

கல்லாங்குத்துநிலம் kal-l-āṅ-kuttu-nilam, *n.* <id.+. Hard or stony ground; கடினமான நிலம். (C.G.)

கல்லாசாரி kal-l-ācāri, *n.* <id.+. [M. *kallācāri.*] 1. Stone-mason; கற்றச்சன். *Colloq.* 2. Master mason, architect; கற்றச்சர் தலைவன். (W.)

கல்லாடம்[1] kallāṭam, *n.* Name of a Siva shrine; ஒரு சிவஸ்தலம். *கல்லாடத்துக் கலந்தினிதருளி* (திருவாச. 2, 11).

கல்லாடம்[2] kallāṭam, *n.* <கல்லாடர். Name of an amatory poem describing the erotic emotions in 100 *akaval* stanzas by Kallāṭar; கல்லாடரால் அகப்பொருளின் துறையமைய நூறு அகவற்பாக்களாற் செய்யப்பட்ட ஒருநூல்.

கல்லாடர் kallāṭar, *n.* <கல்லாடம். 1. See கல்லாடனார். *ஆக்கவுங் கெடவும் பாடல்தரும் கபிலர் பரணர் கல்லாடர் மாமூலர்* (யாப். வி. 93, பக். 351). 2. The author of *Kallāṭam;* கல்லாடநூல் இயற்றிய புலவர். *கல்லாடர் செய்பனுவற் கல்லாட நூறும்* (கல்லா. பாயி.)

கல்லாடனார் kallāṭaṉār, *n.* <id. A poet of the Third Tamil Saṅgam; கடைச்சங்கப் புலவருள் ஒருவர். (புறநா. 23).

கல்லாடை kal-l-āṭai, *n.* <கல்+. Cloth dyed in red ochre, worn by those who have renounced the world; காவி வஸ்திரம். *கோத்த கல்லாடையும்* (தேவா. 509, 2).

கல்லாணக்காணம் kallāṇa-k-kāṇam, *n.* <*kalyāṇa*+. An ancient marriage cess; கல்லியாணத்திற்காகச் செலுத்தும் ஒருபழைய வரி. (S.I.I. ii, 509.)

கல்லாமை[1] kal-l-ā-mai, *n.* <கல்-+ஆ neg. +மை. State of being unlearned, illiteracy, ignorance; படியாதிருக்கை. *கல்லாமை யச்சம்* (நாலடி, 145).

கல்லாமை[2] kal-l-āmai, *n.* <கல்+ஆமை. Starred Tortoise, *Testudo geometrica;* ஆமைவகை.

கல்லார்மா kallārmā, *n.* Cashew tree. See கொட்டைமுந்திரி. (L.)

கல்லாரம் kallāram, *n.* <*kahlāra.* 1. Red Indian Water-lily. See செங்கழுநீர். (பிங்.) 2. Arrow-head. See நீர்க்குளிரி. (பிங்.) 3. Blue Nelumbo. See கருங்குவளை, 1. (திவா.)

கல்லாரல் kal-l-āral, *n.* <கல்+. Spiny-eel, a fresh-water fish, of rich brown colour, attaining 2 ft. or more in length, *Mastacembelus armatus;* மீன்விசேடம்.

கல்லாரை kal-l-ārai, *n.* prob. கல்+. Ironweed. See காந்தை, 3. (மலை.)

கல்லால் kal-l-āl, *n.*<கல்+ஆல். 1. Banyan, m. tr., *Ficus dalhouseae;* ஆல்வகை. *கல்லானிழல் மேயவனே* (தேவா. 437, 3). 2. White Fig with fruits in clusters. See குருக்கத்தி. (L.) 3. White Fig, l. tr *Ficus infectoria;* ஆல்வகை. (L.)

கல்லாலம் kal-l-ālam, *n.* <id. +. See கல்லால்.

கல்லான் kal-l-āṉ, *n.* <கல்-+ஆ neg. Unlearned, illiterate person; கல்வியில்லாதவன். *கல்லானே யானாலும்* (நல்வழி, 34).

கல்லி[1] kalli, *n.* prob. கல்-. *Loc.* 1. Precocity; பருவத்துக்கு மேற்பட்ட நுண்ணறிவு. *குழந்தை கல்லியாய்ப் பேசுகிறது.* 2. Precocious child; பருவத்துக்கு மேற்பட்ட நுண்ணறிவுள்ள குழந்தை. *அவன் அதிகக் கல்லி, அவனுடன் பேச்சுக் கொடுக்காதே.*

கல்லி[2] kalli, *n.* 1. perh. கல். Tortoise; ஆமை. (சூ. அ.) 2. Sparrow; ஊர்க்குருவி. (W.)

கல்லி[3] kalli, *n.* cf. *keli.* 1. Ridicule, derision, mockery; கேலி. *கல்லிபண்ணுகிறான்.* 2. Fun, as of a child; வேடிக்கை. *குழந்தை கல்லி கல்லியாய்ப் பேசுகிறது.*

கல்லி[4] kalli, *n.* <U. *kalli.* Triangular piece of cloth, gore in long Indian jacket; மேலங்கியுறுப்பு. (W.)

கல்லிச்சி kal-l-icci, *n.* <கல்+. See கல்லித்தி.

கல்லிசை-த்தல் kal-l-icai-, *v. intr.* <id. +. To join stones by means of joggles so as to prevent their sliding apart; சரிந்து விழாதபடி கற்களை அமைத்தல். (C.E.M.)

கல்லித்தி kal-l-itti, *n.* <கல்+. Species of fig (*a*) Stone Fig, m. sh., *Ficus gibbosa parasitica:* (*b*) Jointed Ovate-leaved Fig., l. tr., *Ficus tsiela:* (*c*) Oval-leaved Fig, l. tr., *Ficus retusa.* (L.): (*d*) Tailed Oval-leaved Fig, l. tr., *Ficus talboti.* (L.); இத்திவகைகள்.

கல்லியம் kalliyam, *n.* <*kalyā.* Toddy, fermented liquor; கள். (பிங்.)

கல்லியாணம் kalliyāṇam, *n.* <*kalyāṇa.* See கல்யாணம். *கல்லியாணத் தேவர் பிறிர்விழா* (ஆசாரக். 49).

கல்லில்நாருரி-த்தல் kallil-nār-uri-, *v. intr.* <கல்+. 1. To seek for the unattainable, strive for the impossible, as stripping fibre

from stone; இல்லாதபொருளைப் பெறமுயலுதல். 2. To obtain by very great labour; ஒருபொருளைப் பாடுபட்டு முயன்றுபெறுதல். *Colloq.*

கல்லிழை-த்தல் kal-l-iḻai-, *v. intr.* <id. +. To set precious stones; இரத்தினங்களைப் பதித்தல். *கல்லிழைத்த அட்டிகை.*

கல்லிறால் kal-l-iṟāl, *n.* <id. +. 1. Lobster. See ஈர்க்கிறல். 2. Black Prawn; இறல்மீன் வகை. (W.)

கல்லின்காரம் kallin-kāram, *n.* <id. +. See கல்நார்.

கல்லீயம் kal-l-īyam, *n.* <id. +. 1. Pewter; வெள்ளீயங் காரீயங்களின் கலப்பு. (W.) 2. See நீலாஞ்சனம். (மூ. அ.)

கல்லீரல் kal-l-īral, *n.* <id. +. 1. Liver; பித்தாசயம். (W.) 2. Gizzard, so called because of its hardness; பறவை மீன்களுக்குள்ள இரண்டாம் இரைப்பை. *Loc.*

கல்லு[1]-தல் kallu-, *5 v. tr.* cf. *khal.* 1. To work away gradually, as earth, pebbles; to dig out, as a hole; to hollow, as a rat; to excavate; தோண்டுதல். *கல்லூற்றுழி* (காலடி, 185). 2. To scoop out, as a nut; துருவுதல். (W.) 3. To wash out, erode, as flowing water; நீர் அரித்தல். *வெள்ளம் கரையைக் கல்லிவிட்டது.* 4. To eat away, as caustic; தின்னுதல். *இந்தக் காரமருந்து கல்லிக்கல்லி எடுத்துவிடும்.* (W.) 5. To tear, as a style, the palmyra leaf when writing upon; எழுத்தாணிக் கூர் கிழித்தல். (J.)

கல்லு[2]-தல் kallu-, *5 v. intr.* cf. *kall.* To cause to sound, as a drum; ஒலித்தல். *மங்கல வியங் கல்ல* (திருவிளை. திருமணப். 103).

கல்லுக்கலைக்காத்தான் kallukkalai-k-kāttāṉ, *n.* See கல்லுக்கலைத்தான். (மலை.)

கல்லுக்கலைத்தான் kallu-k-kalaittāṉ, *n.* A plant growing in damp, marshy places. See பொன்னாங்காணி. (மூ. அ.)

கல்லுக்காரர் kallu-k-kārar, *n.* <கல் +. Lapidaries; இரத்தினம்விற்போர். *Colloq.*

கல்லுக்குத்து-தல் kallu-k-kuttu-, *v. intr.* <id. +. 1. To arrange bricks edgewise, as in terracing a roof, arch-work, etc.; மேற்றளம் முதலியவற்றிற்குப் பாவுகல் குத்துதல். *Colloq.* 2. To frustrate a business by misrepresentation or by creating obstacles; காரியத்தைத் தடைசெய்தல். (J.)

கல்லுக்கோழிமீன் kallu-k-kōḻi-mīṉ, *n.* <id. +. A sea-fish, bluish, ***Holocanthus imperator;*** கடல்மீன்வகை.

கல்லுகம் kallukam, *n.* Siris. See பெரு வாகை. (மூ. அ.)

கல்லுகொம்பு kallu-kompu, *n.* <கல்லு[1]- +. Stake for digging up the earth; தரைதோண்டும் முளை.

கல்லுண்டை kal-l-uṇṭai, *n.* <கல் +. See கல்லுண்டைச்சம்பா. (சங். அக.)

கல்லுண்டைச்சம்பா kal-l-uṇṭai-c-campā, *n.* <கல்லுண்டை +. A kind of paddy yielding hard round rice, maturing in 6½ months; ஆறு மாதப்பயிரான சம்பா நெல்வகை. (பதார்த்த. 805.)

கல்லுணி kalluṇi, *n.* cf. *கல்லுருணி.* A vegetable parasite. See புல்லுருவி. (மூ. அ.)

கல்லுத்தீர்-தல் kallu-t-tīr-, *v. intr.* <கல் +. To cut and polish, as gems; இரத்தினஞ் செதுக்குதல். (W.)

கல்லுத்தூக்கு-தல் kallu-t-tūkku-, *v. intr.* <id. +. To weigh anchor; நங்கூரந் தூக்குதல். (W.)

கல்லுதிரி kal-l-utiri, *n.* <id. + உதிரி. A variety of small-pox producing hard pustules; அம்மைவகை. (W.)

கல்லுப்பிடி-த்தல் kallu-p-piṭi-, *v. intr.* <id. +. 1. To settle at the bottom of a pot, as grit, when rice is washed prior to cooking; அரிசி களையும்போது சிறுகற்கள் கீழே தங்குதல். *Loc.* 2. To scheme or plan for ruining a person; தொலைக்க வழிதேடுதல். *Colloq.*

கல்லுப்பு kal-l-uppu, *n.* <id. +. [K. M. *kalluppu.*] Mineral or rock salt; உப்புவகை. (பதார்த்த. 1091.)

கல்லுப்பொறுக்கி kallu-p-poṟukki, *n.* <id. +. A species of dove which swallows little pebbles; கல்லை விழுங்கும் புறவகை. (W.)

கல்லுப்போடு-தல் kallu-p-pōṭu-, *v. intr.* <id. +. *Colloq.* 1. To lay anchor; நங்கூரம் போடுதல். 2. To frustrate a business by malicious misrepresentation or by creating obstacles; காரியத்தடைசெய்தல். 3. To bring out an unforeseen calamity; எதிர்பாராத ஆபத்தை உண்டாக்குதல். *Colloq.*

கல்லுரல் kal-l-ural, *n.* <id. +. [K. *kalloral.*] Stone mortar; கல்லாற் செய்த உரல்.

கல்லுருணி kalluruṇi, *n.* cf. *கல்லுணி.* A vegetable parasite. See புல்லுருவி. (W.)

கல்லுருவி kal-l-uruvi, *n.* <கல் +. Blistering plant, ***Ammannia vesicatoria;*** கல்லைக் கரைக்குங்குணமுள்ள ஒருவகைப் பூடு. (பதார்த்த. 287.)

கல்லுவை-த்தல் kallu-vai-, *v. intr.* <id. +. (J.) 1. To lay anchor; நங்கூரமிடுதல். 2. To apply, with appropriate mantra, an anti-poisonous stone to the wound caused by a venomous bite; கடிவாயில் மந்திரங்கூறி விஷக்கல்

வைத்தல். 3. To set a stone on the forehead, the face being turned upwards to the sky and the head thrown back, a method of punishment; நெற்றியிற் கல்லைவைத்துத் தண்டித்தல். 4. To erect a stone temporarily at a funeral ceremony to represent the deceased; இறந்தோர்பொருட்டுச் சிலை நடுதல். 5. To set precious stones in jewels; அணிகளில் அரதனக் கற்களைப் பதித்தல்.

கல்லுளி[1] kal-l-uḷi, *n.* <id.+. [K. M. *kalluḷi.*] Stone-cutter's chisel; கல்வெட்டும் உளி.

கல்லுளி[2] kalluḷi, *n.* A species of Whortleberry; பேய்க்களா. (மலை.)

கல்லுளிச்சித்தன் kal-l-uḷi-c-cittaṉ, *n.* prob. கல்லுளி[1]+. 1. Name of an ascetic who had the power of transporting himself to any place at will; ஒரு சித்தபுருஷர். 2. See கல்லுளிமங்கன். கல்லுளிச்சித்தன் போனவழி கதவுகளெல்லாந் தவிடுபொடி.

கல்லுளித்தச்சன் kal-l-uḷi-t-taccaṉ, *n.* <id.+. Sculptor, stone-cutter; கல்வேலை செய்யுந் தச்சன். (W.)

கல்லுளிமங்கன் kal-l-uḷi-maṅkaṉ, *n.* prob. id.+. A pertinacious beggar who threatens to hack himself with his knife if he be not given alms; a kind of repulsive mendicant; அருவருப்பான செய்கையாற் பிடிவாதங்காட்டும் பிச்சைக்காரன். கல்லுளிமங்கன் போனவழி கதவுகளெல்லாந் தவிடுபொடி.

கல்லுளியுருக்கு kal-l-uḷi-y-urukku, *n.* <id.+. A kind of very hard steel used for cutting stones; கல்லைச் சேதுக்கும் எஃகு. (W.)

கல்லுளுவை kal-l-uḷuvai, *n.* <id.+. A sea-fish, whitish, attaining at least 5 in. in length, *Percis punctata*; ஒருவகைச் சிறுகடல்மீன்.

கல்லூசி kal-l-ūci, *n.* <id.+. A medicinal stone; ஒருவகை மருந்துக்கல். (W.)

கல்லூடான் kal-l-ūṭāṉ, *n.* <id.+. A sea-fish, silvery, attaining more than 9 in. in length, *Gerres oblongus*; சிறிய கடல்மீன்வகை.

கல்லூரி kal-l-ūri, *n.* <கல்-+ஊர்-. Academy, college, institution where instruction is given in arts and sciences; கல்விபயிலும் இடம். கல்லூரி நற்கொட்டிலா (சீவக. 995).

கல்லூற்று kal-l-ūṟṟu, *n.* <கல்+. Spring in a rocky soil; கல்லில் ஊறும் நீரூற்று. *Colloq.*

கல்லூன்று-தல் kal-l-ūṉṟu-, *v. intr.* <id.+. To erect temporarily a stone at a funeral ceremony to represent the deceased; சாக்கடங்காகப் பாஷாணஸ்தாபனஞ் செய்தல். *Colloq.*

கல்லெடுப்பு kal-l-eṭuppu, *n.* < id. +. Funeral rite of removing the stone, as a sign of the final departure of the dead; பாஷாணோத்துவாசனம் என்ற பிரேதக்கிரியை.

கல்லெரிப்பு kal-l-erippu, *n.* <id.+. See கல்லெரிப்புமேகம். கல்லெரிப்பு முதலவிடாப் பிணியால் (திருக்காளத். பு. 17, 25).

கல்லெரிப்புமேகம் kal-l-erippu-mēkam, *n.* <id.+. Incontinence of urine; நீர்ச்சுருக்கு நோய். (W.)

கல்லெறி kal-l-eṟi, *n.* <id.+. 1. Throwing of a stone; கல்லைவீசுகை. கண்டனமாகிய கல்லெறிக்கஞ்சி (சிவசம. 45). 2. See கல்லெறிதூரம். (W.) 3. Sling; கவண். (W.)

கல்லெறிதூரம் kal-l-eṟi-tūram, *n.* <id.+. [M. *kalleṟidūram.*] Distance of a stone's throw from a strong arm; முழுவலிமையோடு கல்லை வீசியெறிய அதுவிழும் தூரவளவு. *Colloq.*

கல்லெனல் kal-l-eṉal, *n.* Onom. expr. signifying excitement; ஓசைக்குறிப்பு. கல்லென் பேரூர் (சிலப். 12, 12).

கல்லேறு kal-l-ēṟu, *n.* <கல்+எறி-. 1. [M. *kallēṟu.*] Throwing of a stone; கல்லெறிகை. காயாத மரமீது கல்லேறு செல்லுமோ (தாயு. சச்சிதா. 8). 2. Flaw in a pearl; முத்துக்குற்றங்களுளொன்று. (சிலப். 14, 193, உரை.)

கல்லை[1] kallai, *n.* 1. Plate made of leaves sewn together; தையலிலைக் கலம். சருகிலையிணைத்த கல்லை (பெரியபு. கண்ணப்ப. 118). 2. Knob in wooden sandals; பாதகுறட்டின் குமிழ். (பிங்.)

கல்லை[2] kallai, *n.* <T. *kalla.* Calumny, aspersion; அவதூறு. கல்லைப்பட்டுப் போனவன். (W.)

கல்லைகுத்து-தல் kallai-kuttu-, *v. intr.* <கல்லை[1]+. To sew leaves together into a plate to eat from; இலைக்கலந் தைத்தல்.

கல்லைநீராக்கி kallai-nīr-ākki, *n.* A kind of ore; மாமிசபேதி. (W.)

கல்லொட்டர் kal-l-oṭṭar, *n.* <கல்+. [K. *kalloḍḍa.*] A caste of people usually employed to build stone walls; கற்சுவர் எடுக்கும் ஒட்டசாதியார். (W.)

கல்லொட்டி kal-l-oṭṭi, *n.* <id.+ஒட்டு-. Snail; நத்தை. (W.)

கல்லோலம் kallōlam, *n.* <*kallōla.* Billow, wave, surge; அலை. பெருங்கல்லோலப் புணரியின் மூழ்க (திருவாலவா. 9, 5).

கல்வம் kalvam, *n.* <*khalla.* See கலுவம். *Colloq.*

கல்வருக்கை kal-varukkai, *n.* <கல்+. Anjely. See காட்டுப்பலா. (W.)

கல்வழி kal-vaḻi, *n.* <id.+. A kind of computation with the aid of concrete objects as

pebbles; கல்லைவைத் தெண்ணும் ஒருவகைக் கணக்கு. (கணக்கதி. பாயி.)

கல்வாழை kal-vāḻai, *n.* <id.+. [M. *kalluvāḻa.*] 1. Indian Shot, m. sh., *Cana indica;* பூவாழை. 2. Wild plantain, *Musa superba;* காட்டுவாழை.

கல்வி kalvi, *n.*<கல்-. [K. *kalpi.*] 1. Studying; கற்கை. (குறள், 40, அதி.) 2. Learning, erudition; கல்வியறிவு. *ஒருமைக்கட் டான்கற்ற கல்வி* (குறள், 398). 3. Science, literature; வித்தை. 4. Practice; பயிற்சி. (அக. நி.) 5. Scientific work; நூல். (W.)

கல்விக்களஞ்சியம் kalvi-k-kaḷañciyam, *n.* <கல்வி+. Lit., repository of learning, a very learned person; கல்விநிரம்பினவ-ன்-ள்.

கல்விச்சாலை kalvi-c-cālai, *n.* <id.+*śālā.* College, school, a seat of learning; கல்விபயிலும் இடம்.

கல்விப்பொருள் kalvi-p-poruḷ, *n.* <id.+. Learning as a material possession, dist. fr. *செல்வப்பொருள்;* கல்வியாகிய செல்வம். (திவா.)

கல்விமதம் kalvi-matam, *n.* <id.+. Pride of learning; வித்தியா கர்வம்.

கல்விமான் kalvi-māṉ, *n.* <id. Learned man, scholar; படிப்பாளி. *Colloq.*

கல்வியறிவு kalvi-y-aṟivu, *n.* <id.+. Knowledge, the result of study; படிப்பால் உண்டாகும் ஞானம்.

கல்வியொழுக்கம் kalvi-y-oḻukkam, *n.* <id.+. A collection of moral aphorisms arranged alphabetically and ascribed to Auvaiyār; ஔவையார் இயற்றிய ஒரு நீதிநூல்.

கல்விளக்கு kal-viḷakku, *n.* <கல்+. Lamp made of soap-stone; மாக்கல்லாலாகிய விளக்கு.

கல்வினையர் kal-viṉaiyar, *n.* < id. +. Architects; சிற்பாசாரியர். (பிங்.)

கல்வீடு kal-vīṭu, *n.* <id.+. 1. House built of brick or stone; கல்லாற்கட்டிய வீடு. 2. Strong building; உறுதியான கட்டிடம்.

கல்வீரியம் kal-vīriyam, *n.* <id.+. Green vitriol; அன்னபேதி. (மூ. அ.)

கல்வெட்டி kal-veṭṭi, *n.* <id. + வெட்டு-. 1. One who cuts precious stones, as rubies; lapidary; இரத்தினக்கல் செதுக்குவோ-ன்-ள். 2. Brick-knife; பச்சைவெட்டுக்கல் அறுத்தற்கு உரிய கத்தி. (C. E. M.)

கல்வெட்டு kal-veṭṭu, *n.*<id.+. 1. Stone-cutting, engraving on stone, inscription on stone; சிலாசாசனம். 2. Unalterable word, as if engraven on stone; தவறாத வாக்கு. *அவன் பேச்சுக் கல்வெட்டுத்தான்.* 3. Stanza commemorative of the date of death of an ancestor; முன்னோர் இறந்தநாள் முதலியவற்றைக் குறிக்கும் புகழ்ச்சிச் செய்யுள். (J.) 4. Elegy; சரமகவி. (J.)

கல்வெள்ளி kal-veḷḷi, *n.* <id.+. 1. Amalgam of iron and tin; இரும்பும் வெள்ளீயமுங் கலந்தது. (W.) 2. Hard inferior silver mixed with much alloy; கலப்புவெள்ளி. (C. G.)

கல்வேகம் kal-vēkam, *n.* <id.+. See கல்வீரியம். (மூ. அ.)

கல்வேதி kal-vēti, *n.* <id.+. A kind of ore. See சகஸ்ரபேதி. (W.)

கல்வேலை kal-vēlai, *n.* <id.+. 1. Stone-mason's or sculptor's work; கல்லிற்செய்யும் வேலை. 2. Work of a lapidary; இரத்தின வேலை.

கல-த்தல் kala-, *12 v.* [T. *kalayu*, K. *kalasu*, Tu. *kala.*] *intr.* 1. To mix, unite, join; to commingle, combine; to be absorbed, as the individual soul into the Godhead; கூடுதல். *கலந்து நின்னடியாரோ டன்று* (திருவாச. 32, 1). 2. To unite in friendship, grow intimate; to hold communion with, associate in friendship with, form friendly or matrimonial alliance with; கூட்டுறவாதல். *ஒருமூவேங் கலந்த காலை* (கம்பரா. சூர்ப்ப. 140). 3. To spread, as news; பரத்தல். *கட்டுரை கலந்த காலை* (கம்பரா. காள். 68). 4. To appear, come into being; தோன்றுதல். *அமுதொடு கலந்த நஞ்சை மிடற்றினி லடக்கிய* (தேவா. 473, 1). 5. To get close together; to come into close quarters with; நெருங்குதல். *கலந்து போர்செய்தாரோர்சிலர்* (கந்தபு. சகத்திரவா. 32). 6. To be wielded, held; பொருந்துதல். *அலங்கலந் தார்* (புலியூரந். 1).—*tr.* 1. To mix, blend, compound, amalgamate; கூட்டுதல். *பாலொடு தேன்கலந் தற்றே* (குறள், 1121). 2. To copulate; புணர்தல். *பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல்* (குறள், 1276).

கலக்கடி kalakkaṭi, *n.* <கலங்க+அடி-. Confusion, perturbation, tribulation; குழப்பம். (J.)

கலக்கம் kalakkam, *n.* <கலங்கு-. [T. *kalaka*, M. *kalakkam.*] 1. Being agitated, as the surface of a sheet of water; கலங்குகை. 2. Disquiet, discomposure, embarrassment; மனக்குழப்பம். *நலத்தக நாடிற் கலக்கமு மதுவே* (தொல். பொ. 270). 3. Distress, affliction; துன்பம். *கலக்கத்தைக் கையாறாக் கொள்ளாதா மேல்* (குறள், 627). 4. Terror, dread; அச்சம். *மகபதி கலக்கங்கொண்டு* (கந்தபு. தாரக. 2). 5. Perplexity, distraction, bewilderment; புத்திமாறாட்டம். *சித்தவிகாரக் கலக்கந் தெளிவித்த . . . தேவர்* (திருவாச. 10, 6). 6. Weeping, bewailing; அழுகை. (திவா.)

கலக்கு[1]-தல் kalakku-, *5 v. tr.* Caus. of கலங்கு-. [T. *kalatsu*, K. *kalaku*, M. *kalakku.*]

To confuse, nonplus; கலங்கச்செய்தல். கலக்கியமா மனத்தினனாய்க் கைகேசி வரம்வேண்ட (திவ். பெரியாழ். 3, 10, 3).

கலக்கு[2] kalakku, *n.* <கலக்கு-. [T. *kalakuva*, K. *kalaku.*] See கலக்கம். பெருங்கலக் குற்றன்று (புறநா. 41, 16).

கலக்கு[3] kalakku, *n.* <கல-. Joint; பொருத்து. சகடக் கலக்கழியக் காலோச்சி (திவ். திருப்பா. 6).

கலகக்காரன் kalaka-k-kāraṉ, *n.* <*kalaha* +. 1. Insurgent, rebel; கலகஞ்செய்வோன். 2. Jangler, quarrelsome person, wrangler, one who bickers; சச்சரவு விளைப்போன். *Colloq.*

கலகக்குருவி kalaka-k-kuruvi, *n.* <id. +. 1. Common kingfisher. See மீன்குத்தி. 2. Mischievous person, meddler; சச்சரவுசெய்வோன். *Colloq.*

கலகக்கை kalaka-k-kai, *n.* <id. +. (Nāṭya.) A gesture in which the fingers of both hands are brought together and bent from an upright position; இருகைவிரல்களையும் நிமிர்த்து வளைக்கும் அபிநயக்கை. (பரத. பாவ 59.)

கலகப்பிரியன் kalaka-p-piriyaṉ, *n.* <id. +. One who delights in creating trouble or quarrel; கலகம் மூட்ட விரும்புவோன்.

கலகம் kalakam, *n.* <*kalaha.* 1. Strife, quarrel, wrangle, altercation; சச்சரவு. மாவொடு கலகத்தினை வாளா வருவித்தாள் (சேதுபு. சேதுமா. 24). 2. Inciting one to break off from another; ஒருவன்மேற் பிறர்க்கு விரோதம் உண்டாகும்படி தூண்டிவிடுகை. 3 Uproar, tumult; பேரொலி. (திவா.) 4. Insurrection, revolt, rebellion; நாட்டுக் குழப்பம். 5. War, fight, skirmish; போர். (W.)

கலகல[1] kala-kala, *n.* [K. Tu. *kalakala.*] Onom. See கலகலெனல். கலகல கூஉந் துணையல்லால் (நாலடி, 140).

கலகல[2]**-த்தல்** kala-kala-, *11 v. intr.* <கலகல. 1. To reiterate in sound; to rustle, as dry leaves; to tinkle, as little bells; to chink, as money; to clink, as chains; to rattle, as pebbles in a shell; கலகலவென்று ஒலித்தல். வற்றிய வோலை கலகலக்கும் (நாலடி, 256). 2. To become shaky, get loose in the joints, as an old cart; கட்டுக் குலைதல். இந்த வண்டி கலகலத்துப் போயிற்று.

கலகலக்கக்காய்-தல் kalakalakka-k-kāy-, *v. intr.* <கலகல- +. To dry thoroughly; நன்றாக உலர்தல். *Colloq.*

கலகலத்தவாய் kalakalatta-vāy, *n.* <id. +. 1. A chatterbox, an incessant jabberer; அலப்பும் வாய். 2. An outspoken man; மனத்திலுள்ளதை மறையாது பேசுவோன்.

கலகலப்பு kalakalappu, *n.* <id. 1. Rustling; ஒலிக்கை. 2. Sociability; கலந்துபழகுகை. அவன் கலகலப்பாய் இருக்கிறான். 3. Joyfulness, exhilaration; உற்சாகமுடைமை. கல்யாணவீடு கலகலப்பாயிருக்கிறது. 4. Sound health; வாயுமுதலிய நோயின் உபத்திரவமின்மை. உடம்பு கலகலப்பாயிருக்கிறது.

கலகலம் kala-kalam, *n.* <கலகல. [T. *kalakalamu.*] 1. Chirping of birds; பறவையொலி. (உரி. நி.) 2. Hullabaloo, confused noise of a crowd; பேரிரைச்சல். (W.)

கலகலெனல் kala-kal-eṉal, *n.* <id. [T. *galagala.*] Onom. expr. signifying tinkling, chinking; ஓர் ஒலிக்குறிப்பு. பசும்பொன் வளையல் கலகலென (தனிப்பா. ii, 2, 2).

கலகவாயன் kalaka-vāyaṉ, *n.* <*kalaha* +. Pugnacious, quarrelsome person; சண்டைக்காரன்.

கலகி[1]**-த்தல்** kalaki-, *11 v. intr.* <id. To create a disturbance, cause a commotion; கலகஞ்செய்தல்.

கலகி[2] kalaki, *n.* <id. Quarrelsome, intriguing, woman; கலகக்காரி. மால் கலகியாம் (சினேந். 269).

கலங்கடி-த்தல் kalaṅkaṭi-, *v. tr.* <கலங்க + அடி-. To discomfit, put to rout, as the forces of an enemy; கலங்கச்செய்தல். எதிரி சேனையைக் கலங்கடித்தான்.

கலங்கரைவிளக்கம் kalaṅ-karai-viḷakkam, *n.* <கலம்[1] + கரை[1]- +. Lit., light that invites vessels; beacon light; light-house; கப்பல்களை அழைக்கும் தீபஸ்தம்பம். இலங்குநீர் வரைப்பிற் கலங்கரைவிளக்கமும் (சிலப். 6, 141).

கலங்கல்[1] kalaṅkal, *n.* <கலங்கு-. 1. Turbidity, muddiness; கலங்குகை. தெளிவிலாக் கலங்கனீர்சூழ் (திவ். திருமாலை, 37). 2. Muddy water; கலங்கல்நீர். செங்கலங்கல் வெண்மணன்மேற் றவழும் (திவ். பெரியதி. 4, 4, 7). 3. Weeping; அழுகை. (சங். அக.) 4. Fear; அச்சம். (W.) 5. Perturbation; மயங்குகை. 6. Toddy; கலங்கிய கள். எமக்கே கலங்க றருமே (புறநா. 298, 1).

கலங்கல்[2] kalaṅkal, *n.* <கலிங்கு. Calingula of a tank. See கலிங்கு. *Loc.*

கலங்காவரிச்சு kalaṅkā-variccu, *n.* <கலங்கு- +. Thin rafters fixed equidistantly in a roof; இடைவிட்டுக்கட்டிய வரிச்சுக்கட்டு. (W.)

கலங்கு-தல் kalaṅku-, *5 v. intr.* [T. *kalagu*, K. Tu. *kalaṅku*, M. *kalaṅṅu.*] 1. To be stirred up, agitated, ruffled, as water; நீர் முதலியன குழம்புதல். கலங்க முந்நீர் கடைந்து (திவ். பெரியதி. 6, 5, 1). 2. To be confused, confounded; மனங்குழம்புதல். கலக்காமற் காத்துய்க்கும் (நாலடி, 59). 3. To be abashed, embarrassed, perplexed; மயங்குதல். காமகலியக் கலங்கி (பு. வெ. 11, பெண்பாற். 1).

4. To fear; to be intimidated; to be cowed; அஞ்சுதல். விண்ணு மண்ணுமெல்லாங் கலங்க (திருவாச. 6, 28). 5. To be sad; to grieve; to experience sorrow; துன்பமுறுதல். (W.) 6. To fail; தவறுதல். கலங்காது ஞாலங் கருதுபவர் (குறள், 485).

கலங்கொம்பு kalaṅ-kompu, *n.* <கலை[3] + கொம்பு. Stag's horn; கலைமான்கொம்பு. (J.)

கலசக்கொப்பு kalaca-k-koppu, *n.* <*kalaśa* +. Ear ornament worn by women; மாதர் காதணிவகை. (W.)

கலசநிறுத்து-தல் kalaca-niṟuttu-, *v. intr.* <id. +. To set up with mantras, on religious occasions, a pot full of water covered with sprays of mango leaves and a coconut atop of it; சீரியை செய்நந்து மந்திரபூர்வமாகக் கும்பம் அமைத்தல்.

கலசப்படை kalaca-p-paṭai, *n.* <id. +. An ear ornament worn by Parava women; பரவ மகளிர் காதணிவகை.

கலசப்பானை kalaca-p-pāṉai, *n.* <id. +. 1. Censer; தூபகலசம். (திவா.) கலசப்பானையொன்று மூக்கும் அடியுமுட்பட (S.I.I. ii, 5). 2. Spittoon; காளாஞ்சி. (சது.)

கலசம் kalacam, *n.* <*kalaśa*. 1. Small vessel, pot; குடம். செப்பென்பன் கலசமென்பன் (கம்பரா. நாடவி. 43). 2. Censer; தூபகலசம். 3. Cup; கிண்ணம். (விவிலி. மத். 10, 42.) 4. (Arch.) Dome, cupola; தூபி. கலசமஹால். 5. A standard measure of capacity = 1,000 பாக்கு. (அபி. சிந். பக். 204.)

கலசமாட்டு[1]-தல் kalacam-āṭṭu-, *v. intr.* <id. +. To bathe an idol with the consecrated water from a *kalacam* reciting appropriate mantras as the water is poured; கலசத்தால் மஞ்சனமாட்டுதல். (S.I.I. iii, 102.)

கலசமாட்டு[2] kalacam-āṭṭu, *n.* <id. +. Pouring consecrated water on an idol, from a *kalacam*, with mantras; கலசங்கொண்டு அபிஷேகஞ் செய்கை. *Loc.*

கலசமுனி kalaca-muṉi, *n.* <id. +. Agastya, who was born from a pot; குடத்தினின்று பிறந்தவரான அகஸ்தியர். அன்று கலசமுனி வயிற்றி லற்று வென்னில் (நைட. சந். 4).

கலசயோனி kalaca-yōṉi, *n.* <id. +. See கலசமுனி. (தொல். பொ. 75, உரை.)

கலசு-தல் kalacu-, 5 *v. intr.* <கல-. [K. *kalasu.*] To mingle; கலத்தல். பிரமருத்திரர்கள் கடுவே கலசுகின்றால் (ஈடு).

கலணை kalaṇai, *n.* See கலனை[2]. கலணை விசித்து . . புரவிசெலுத்தி (திருப்பு. 405).

கலணைக்கரடு kalaṇai-k-karaṭu, *n.* <கலணை +. Pommel of a saddle; சேணத்தின் முன்பக்கம். (W.)

கலணைவார் kalaṇai-vār, *n.* <id. +. Girth of a saddle; சேணத்தின் வார்.

கலதி[1] kalati, *n.* <*khalati*. The disease that produces bald head; தலைவழுக்கையை உண்டாக்கும் நோய். (சீவரட்.)

கலதி[2] kalati, *n.* cf. *khala-tā*. 1. Ruin, destruction, disaster; கேடு. கலதியம் பிலையுங் காய்ந்த (சீவக. 769). 2. The goddess of misfortune; மூதேவி. (பிங்.) 3. Villain, wicked man; தீக்குணமுடையவன். கள்வன் கடியன் கலதி யிவன் (திருவாச. 10, 19).

கலதிமை kalati-mai, *n.* <கலதி[2]. Misfortune; தீவினை. நல்லறங் காய்வது கலதிமைப் பாலதாகுமே (சீவக. 2932).

கலதை kalatai, *n.* perh. *khala-tā*. Confusion, tumult, turmoil; குழப்பம். (W.)

கலந்தான் kalantāṉ, *n.* <U. *kalamdān*. Inkstand; மைக்கூடு. (C.G.)

கலந்துகட்டி kalantu-kaṭṭi, *n.* <கல- +. Admixture of the good and bad; haphazard interlarding; நல்லதும் கெட்டதும் கலந்தது. தேவதாந்தரங்களையுங் கலந்துகட்டியாக ப்ரதிபாதிக்கையாலும் (ஈடு, 4, 10, ப்ர.).

கலந்துகட்டிப்பரிமாறு-தல் kalantu-kaṭṭi-p-parimāṟu-, *v.* <id. +. *intr.* To mix freely without any distinction, as caste, rank, etc.; வேறுபாடின்றிக் கலத்தல்.—*tr.* To use ornaments or other property in common; ஆபரணங்கள் முதலியவற்றைப் பொதுவில் உபயோகப்படுத்துதல். (W.)

கலந்துபரிமாறு-தல் kalantu-parimāṟu-, *v. intr.* <id. +. 1. To co-operate; கூடிக் காரியம் நடத்துதல். 2. To enjoy in common; கூடியனுபவித்தல். (திவ். திருவாய். 4, 2, ப்ர. ஆறு.)

கலந்தை kalantai, *n.* Greatness; பெருமை. (திவா.)

கலப்படம் kala-p-paṭam, *n.* <T. *kalapadamu*. Mixture; adulteration; கலப்புள்ளது. இந்தநெய் கலப்படமானது. *Loc.*

கலப்பற்றடி-த்தல் kala-p-paṟṟaṭi-, *v. tr.* <கலம்[1] + பற்று + அடி-. See கலப்பற்றுப்பார்-.

கலப்பற்று kala-p-paṟṟu, *n.* <id. +. Calking of a boat; படகின் நீக்கல் அடைக்கை. (J.)

கலப்பற்றுக்காரன் kala-p-paṟṟu-k-kāraṉ, *n.* <id. +. One whose occupation is the calking of ships, boats, etc., calker; படகின் நீக்கலடைப்பவன்.

கலப்பற்றுத்தோணி kala-p-paṟṟu-t-tōṇi, *n.* <id.+. Calked boat, surf-boat, the seams of which are formed by joining planks without lapping; நீக்கலடைக்கப்பட்டுள்ள தோணி. (W.)

கலப்பற்றுப்பார்-த்தல் kala-p-paṟṟu-p-pār-, *v. tr.* <id.+. To calk a boat; படகின் நீக்கலடைத்தல்.

கலப்பற்றுளி kala-p-paṟṟuḷi, *n.* <id.+பற்று+உளி. Calking-iron; படகின் நீக்கலடைக்குங் கருவி.

கலப்பு kalappu, *n.* <கல-. [K. *kalapu.*] 1. Cordiality, fraternity; combination; mixture; கலக்கை. 2. Meeting; வந்துகூடுகை. 3. Friendship, fellowship, intimacy; நட்பாகை. பெரியோருடன் கலப்பு நன்மைதரும். 4. [T. *kalapu.*] Adulteration; alloyage; கலந்துகட்டியாதுகை. கொழுப்புக் கலப்புள்ள நெய். 5. Copulation; மெய்யுறு புணர்ச்சி. கந்திருவர் கண்ட கலப்பு (தொல். பொ. 92, உரை).

கலப்புச்சரக்கு kalappu-c-carakku, *n.* <கலப்பு+. Adulterated article; கலந்துகட்டியான பண்டம்.

கலப்பெண் kalappeṇ, *n.* < id. + எண். (Arith.) Mixed number; பின்னத்துடன்சேர்ந்த முழு எண். *Mod.*

கலப்பை[1] kalappai, *n.* perh. கல-. cf. *hala.* 1. [T. *kalapa*, M. *kalappa.*] Plough, ploughshare; உழுபடை. கலப்பை பூண்ட வோரால் (சேக்கிழார். பு. 16). 2. Parts, as of a sacrifice; ஒன்றற்கமைந்த உறுப்புக்கள். ஆயதற் குரியன கலப்பை யாவையும் (கம்பரா. திருவவ. 84).

கலப்பை[2] kala-p-pai, *n.* <கலம்[1]+பை. Hold-all for keeping musical instruments and other articles; வாத்தியமுதலிய முட்டுக்கள் வைக்கும் பை. சுருக்கிக் காய கலப்பை (மலைபடு. 13).

கலப்பைக்கிழங்கு kalappai-k-kiḻaṅku, *n.* prob. கலப்பை[1]+. Malabar Glory Lily, *Gloriosa superba*; நாபிக்கொடி. (மலை.)

கலப்பைக்கூர் kalappai-k-kūr, *n.* <கலப்பை[1]+. Sharp point of the colter of a plough; கலப்பையின் கொழுமுனை.

கலப்பைச்சக்கரம் kalappai-c-cakkaram, *n.* <id.+. (Astrol.) Diagram in the form of a plough used in determining the auspicious day for commencing ploughing during the season; ஏர்ப்பொருத்தம் பார்க்கும் சக்கரம். (விதான. ஏர்மங். 4. தலைப்பு.)

கலப்பைசேர்-த்தல் kalappai-cēr-, *v. intr.* <id.+. To make a plough; கலப்பைசெய்தல். (W.)

கலப்பைநூல் kalappai-nūl, *n.* <id. + . Science of agriculture; உழவுநூல். நுண்கலப்பை நூலோதுவார் (சிறுபஞ். 60).

கலப்பைப்படை kalappai-p-paṭai, *n.* <id. +. The plough used as a weapon of war by Balarāma; அலாயுதம்.

கலபம் kalapam, *n.* <*kalāpa.* Peacock's tail-covert; மயிற்றோகை. மாக்கவின் மிகுங் கலப மஞ்ஞை (திருவாத. பு. திருப்பெருந். 13).

கலம்[1] kalam, *n.* 1. [K. *kala*, M. *kalam*, Tu. *kara.*] Vessel; hollow utensil, as a cup; plate, whether of earth or metal; earthenware; பாத்திரம். பொற்கலத் தூட்டி (நாலடி, 345). 2. Bottle-shaped vessel; குப்பி. யவனர் நன்கலந் தந்த . . . தேறல் (புறநா. 56, 18). 3. [T. *kalamu*, M. *kalam.*] Ship, boat; மரக்கலம். கலங்கவிழ் மாக்களை (மணி. 16, 120). 4. The 27th *nakṣatra.* See இரேவதி. பூரம் பரணி கலம் (சிலப். 3, 123, உரை). 5. Jewel; ornament; ஆபரணம். நன்கலம் பரிசின்மாக்கட்கு . . . நல்கி (புறநா. 6, 15). 6. Lute; யாழ். கலத்தொடு புணர்ந்தமைந்த கண்டத்தால் (சிலப். 7, 24). 7. Plough; உழுபடை. (சூடா.) 8. Weapon; ஆயுதம். கையினுங் கலத்தினு மெய்யுறத் தீண்டி (பட்டினப். 70). 9. Document written on palm-leaf; ஓலைப்பத்திரம். (தொல். சொல். 81, உரை.) 10. A measure of capacity; ஒரு முகத்தலளவு. (தொல். எழுத். 168.)

கலம்[2] kalam, *n.* <E. Column, a narrow division of a sheet, page, etc.; பந்தி. 20-ஆம் பக்கத்து 2-ஆம் கலம் பார்க்க.

கலம்பகக்கலி kalampaka-k-kali, *n.* <கலம்பகம்+. Stanza consisting of lines of unequal number of letters, opp. to கட்டளைக்கலி; அடிகள் எழுத்தொவ்வாது வருங் கலி. (யாப். வி. 95, 470.)

கலம்பகம் kalampakam, *n.* prob. கலப்பு+அகம். 1. Mixture; compound; combination; miscellany; perfumed ointment containing several ingredients; கலவை. கலம்பகம் புனைந்த வலங்கலந் தொடையல் (திவ். திருப்பள்ளி. 5). 2. A kind of poem composed of different kinds of stanzas; பல்வகைச் செய்யுள்களாலாகிய பிரபந்தவகை. (இலக். வி. 812.) 3. Confusion, tumult, disturbance; குழப்பம். (W.) 4. A work in Mathematics; ஒருகணிதநூல். (கணக்கதி. 5, உரை.)

கலம்பகமாலை kalampaka-mālai, *n.* <கலம்பகம்+. 1. Garland of many kinds of flowers; பலபூக் கலந்த மாலை. கலம்பகமாலையைப் பணியாக (ஈடு, அவ.). 2. A kind of poem formed of different kinds of verses; ஒரு பிரபந்தம். (W.)

கலம்பம் kalampam, *n.* A mineral poison. See தாலம்பபாஷாணம். (மூ. அ.)

கலம்பாடு kalam-pāṭu, *n.* <கலம்[1]+. See கலவித்துப்பாடு. (T.A.S. I, i, 10.)

கலம்பி kalampi, *n.* Heart-leaved Malabar Nightshade. See கோத்துப்பசளே. (மலை.)

கலம்பூச்சு kalam-pūccu, *n.* <கலம்[1]+. Sound produced when scouring household utensils; பாத்திரந்தேய்க்கும் ஓசை. *கலம்பூச் சாவஞ் சிலஞ்சி முற்றத்து* (பெருங். உஞ்சைக். 40, 128).

கலமர் kalamar, *n.* <id. A class of minstrels in ancient Tamil country; பாணர். (அக. நி.)

கலமலக்கு-தல் kalamalakku-, *v. tr.* prob. களம்+மலக்கு-. To cause to flounder; to stir, agitate, confound; உழக்குதல். *மனத்துள்ளே கலமலக்கிட்டுத் திரியுங் கணபதி* (தேவா. 949, 5).

கலயம் kalayam, *n.* <*kalaśa*. 1. Small pot of earth or metal. See கலசம். *கலயத்தின் முகந்து தண்புனலாட்ட* (சிவப். பிரபந். சோணசைல. 10). 2. Cup; பானபாத்திரம். *Chr.*

கலயனர் kalayaṉār, *n.* <id. A canonized Śaiva saint. See குங்கிலியக்கலயர். *தங்கணவனர் கலயனர்* (பெரியபு. குங்கிலியக். 9).

கலர் kalar, *n.* <*khala*. 1. The vulgar, the rabble; கீழோர். *கலரெனத் தணித்தலும்* (ஞானா. 48, 19). 2. The wicked; தீமக்கள். *கலராயினர் நினையாத் தில்லை* (திருக்கோ. 259).

கலரை kalarai, *n.* <கலம்[1] + அரை. A measure of capacity, prob. equal to a *kalam* and a half; ஓர் அளவுப்பெயர். (தொல். எழுத். 171, உரை.)

கலல் kalal, *n.* See கல்லல். (C.G.)

கலலம் kalalam, *n.* <*kalala*. Thin membrane covering the foetus; கருவைச் சூழ்ந்து தோன்றுந் தோல். *சேரு மற்றைத்தினங் கலலம்* (சூத. ஞான. 10, 9).

கலவகம் kalavakam, *n.* prob. *khara-vāka*. Crow; காக்கை. (W.)

கலவங்கீரை kalavaṅ-kīrai, *n.* <கலவை+. See கலவைக்கீரை. *Loc.*

கலவஞ்சம்பா kalavañ-campā, *n.* <*kalama*+. A variety of small *campā* paddy maturing in six months; ஆறுமாதத்திற் பயிராகக் கூடிய சிறுமணிநெல். *Loc.*

கலவடை kala-v-aṭai, *n.* <கலம்[1]+அடை-. 1. Plaited coil of straw or coir used for resting water-vessels; mouth of a broken pot, also used as a rest, as above; பாத்திரம்வைக்கும் புரிமணை. 2. Circular piece of stone, of iron, of earth, fitted to the mouth of a mortar to keep the grain within; உரலின் வாய்க்கூடு. (W.)

கலவம் kalavam, *n.* <*kalāpa*. 1. Peacock's tail; மயிற்றோகை. *கலவம்விரித்த மஞ்ஞை* (பொருந. 212). 2. Peacock; மயில். *கலவஞ்சேர் கழிக்கானல்* (தேவா. 532, 4). 3. Women's jewelled girdle; கலாபமென்னும் இடையணி. *பூந்துகில் கலவங் கண்புதையாது* (சீவக. 1982).

கலவர் kalavar, *n.* <கலம்[1]. 1. Navigators, sailors; மரக்கலமாக்கள். *கடற்குட்டம் போழ்வர் கலவர்* (நான்மணி. 16). 2. Passengers in a ship; கப்பலிற் செல்வோர். *காற்றத் திடைப்பட்ட கலவர் மனம்போல்* (திவ். பெரியதி. 11, 8, 2). 3. Inhabitants of a maritime tract; fishermen; நெய்தனிலமாக்கள். *கலவர் . . . மீனெறி சால நேர்விரித் துலர்த்தலும்* (சேதுபு. கந்தமா. 91). 4. Warriors; படைவீரர். (W.)

கலவரம் kalavaram, *n.* [T. *kalavaramu*, K. *kaḷavaḷa*.] Confusion of mind; perturbation; perplexity; மனக்கலக்கம்.

கலவரி-த்தல் kalavari-, 11 *v. intr.* <கலவரம். To be confused, perturbed; கலங்குதல். (W.)

கலவரை kalavarai, *n.* <id. See கலவரம்.

கலவல் kalaval, *n.* <கலவு-. 1. Mixing, combining; கலக்கை. (பிங்.) 2. Inarticulate sound; எழுத்திலாவோசை. (W.)

கலவறை kala-v-aṟai, *n.* <கலம்[1] + அறை. [M. *kalavaṟa*.] Strong-room, guarded chamber in a palace in which ornaments are kept; ஆபரணங்கள் வைக்கும் அறை. *வியனகர்க் கலவறை காக்கும்* (பெருங். உஞ்சைக். 32, 61).

கலவன் kalavaṉ, *n.* <கலவு-. Medley, hotch-potch, mixture of various things; கலப்பானது. *Loc.*

கலவா kalavā, *n.* See கலவாய்.

கலவாங்கட்டி kala-v-āṅ-kaṭṭi, *n.* <கலம்[1]+. Small potsherd; உடைந்த ஓடு. (J.)

கலவாசு kalavācu, *n.* Cracker in fireworks; ஒருவகை வேடி. (J.)

கலவாய் kalavāy, *n.* The Sea-perches, *Serranus*; கடல்மீன்வகை. (W.)

கலவாயோடு kalavāy-ōṭu, *n.* prob. கலவாய்+. See கடனுரை. (J.)

கலவார் kalavār, *n.* <கல-+ஆ neg.+. Enemies; பகைவர். *கலவார் முனைமேற் செலவமர்ந்தன்று* (பு. வெ. 1, 3, கொளு).

கலவி kalavi, *n.* <id. [T. *kalayika*.] 1. Union, combination; கலக்கை. (திவா.) 2. Sexual union; புணர்ச்சி. *கலவியான் மகிழ்ந்தான்போல்* (சிலப். 7, 24, கட்டுரை).

கலவித்துப்பாடு kala-vittu-p-pāṭu, *n.* <கலம்[1]+. Land sufficient in extent for sowing one *kalam* of paddy; ஒருகலவிதை விதைத்தற்குரிய நிலம். (T.A.S. I, i, 7.)

கலவிருக்கை¹ kalav-irukkai, *n.* < கலவு- + இருக்கை. Pleasant abode; பிரியமான இடம். *மாவலியை . . . பாதாளங் கலவிருக்கை கொடுத்து* (திவ். பெரியாழ். 4, 9, 7).

கலவிருக்கை² kala-v-irukkai, *n.* < கலம்¹ + இருக்கை. [illegible]-house; பண்டசாலை. *வேயாமாடமும் வியன் [illegible]விருக்கையும்* (சிலப். 5, 7).

கலவிரைப்பாடு kala-virai-p-pāṭu, *n.* < id. +. See கலவைத்துப்பாடு. *Colloq.*

கலவினர் kalavinār, *n.* < கலவு-. Friends, loving associates, relations; உற்றர். *கலவினர் பழி காக்கு மேதை* (தணிகைப்பு. திருநாட்டு. 142).

கலவு¹**-தல்** kalavu-, 5 *v. tr. & intr.* < கல-. To mix; கலத்தல். *கனியின் றிரளுங் கலவி* (சூளா. சீய. 230).

கலவு² kalavu, *n.* < கலவு-. Joint of the body; உடலின் மூட்டுவாய். *கலவுக்கழி கடுமுடை* (அகநா. 3).

கலவை¹ kalavai, *n.* < கல-. 1. Mixture, compound, medley; கலப்புண்ட பொருள். 2. Perfumed paste; சந்தனக்குழம்பு. *தழுவியகிலவெணக் கலவை* (கம்பரா. கடிமணப். 51). 3. Mixture of different kinds of food, scraps, leavings; கலந்த உணவு. *கலவைக ளுண்டு கழிப்பர்* (நாலடி, 268). 4. Lime and sand mixed for mortar; மணல்கலந்த சுண்ணும்பு. *Colloq.*

கலவை² kalavai, *n.* cf. கலவா. Indian Rockcod; மீன்வகை. (G. Tn. D. i, 229.)

கலவைக்கீரை kalavai-k-kīrai, *n.* < கலவை¹ +. Edible greens of sorts mixed together and cooked as a dish; பலவகைக் கீரைகள் கலந்தது. (பதார்த்த. 592.)

கலவைச்சந்தனம் kalavai-c-cantaṉam, *n.* < id. +. Sandal paste prepared with the addition of many aromatic substances; வாசனைப் பண்டங்கள் சேர்த்த சந்தனம். (பாரத. பாவ. 23, உரை.)

கலவைச்சுண்ணும்பு kalavai-c-cuṇṇāmpu, *n.* < id. +. Lime and sand mixed with water, mortar; மணலோடு கலந்த சுண்ணும்பு.

கலவைச்சேறு kalavai-c-cēṟu, *n.* < id. +. See கலவைச்சந்தனம். (திவா.)

கலவைத்தசை kalavai-t-tacai, *n.* < id. +. Complex muscle; இறுகியமைந்த சதை. (W.)

கலவைநீர் kalavai-nīr, *n.* < id. +. Fragrant solution for ladies' baths; வாசங்கலந்த நீர். *சுருங்குழல் கழீஇய கலவை நீரும்* (மணி. 28, 6).

கலவையணி kalavai-y-aṇi, *n.* < id. +. (Rhet.) Figures of speech indistinguishably blended together, dist. fr. *சேர்வையணி*; நீரும் பாலும்போலப் பிரிக்கமுடியாத பல அலங்காரம் விரவி வருவது. (அணியி. பக். 43.)

கலன் kalaṉ, *n.* cf. *kalaha.* Encumbrance; வில்லங்கம். *மனைக்கு . . . எப்பேர்ப்பட்ட கலனுமில்லை* (S.I.I. i, 104).

கலன்கழிமடந்தை kalaṉ-kaḻi-maṭantai, *n.* < கலம்¹ +. Lit., woman who has given up wearing ornaments, widow; கைம்பெண். (சூடா.)

கலனம்¹ kalaṉam, *n.* < *skhalana.* 1. Prattling, as in sleep; வாய்பிதற்றுகை. *கலனமுறு சொப்பனத்தில்* (ஞானவா. உற்பத். 65). 2. Seminal emission; இந்திரிய நெகிழ்ச்சி.

கலனம்² kalaṉam, *n.* See கலனை².

கலனரசு kalaṉ-aracu, *n.* < கலம்¹ +. Lit., the paramount of all ornaments, *tāli*, the marriage badge; மங்கலியம்.

கலனிருக்கை kalaṉ-irukkai, *n.* < id. +. See கலவிருக்கை². (திவா.)

கலனை¹ kalaṉai, *n.* 1. cf. *hala.* Plough; கலப்பை. (திவா.) 2. Parts, as of a sacrifice; ஒன்றற்கமைந்த பல்வகை உறுப்புக்கள். (திவா.)

கலனை² kalaṉai, *n.* < *khalīna.* cf. கலணை. Horse-saddle; சேணம். *மேற்கலனையி னுக்க செம்மணி* (காஞ்சிப்பு. நகர. 17).

கலாங்கம் kalāṅkam, *n.* A mineral poison See துத்தபாஷாணம். (W.)

கலாங்கழி kalāṅkaḻi, *n.* See கலாங்கம். (யாழ். அக.)

கலாங்கன் kalāṅkaṉ, *n.* See கலாங்கம். (W.)

கலாங்கனி kalāṅkaṉi, *n.* See கலாங்கம். (யாழ். அக.)

கலாசு kalācu, *n.* < U. *khalās.* Shipping; மரக்கலத்தின் சம்பந்தமானது. (W.)

கலாசுகாரன் kalācu-kāraṉ, *n.* < id. +. 1. Indian seaman; மரக்கலம் ஓட்டுவோன். *Loc.* 2. Native gunner who works in an armoury; பீரங்கிசுடும் சேனையாள். (W.)

கலாசோதனை kalā-cōtaṉai, *n.* < *kalā* +. (Šaiva.) The fourth stage of initiation, one of five *tīṭcai*, q.v.; சைவதீட்சைகளுள் ஒன்று.

கலாட்டா kalāṭṭā, *n.* < U. *galāṭā.* Riot, commotion, tumult, insurrection, strife; கலவரம்.

கலாத்துவா kalāttuvā, *n.* < *kalā* + *adhvan.* (Šaiva.) A path to salvation in the form of *pañca-kalai*, one of six *attuvā*, q. v.; பஞ்சகலைகளாகிய அத்துவாவகை. (சி. சி. 8, 6-9, மறைஞா.)

கலாதத்துவம் kalā-tattuvam, *n.* < id. +. (Šaiva.) That which slightly reduces the power of *Āṇava-malam* (which acts as a veil on the soul), so as to enable the soul to act, one of

seven cuttācutta-tattuvam, q.v.; சுத்தாசுத்த தத்துவங்களுள் ஒன்று. (சி. போ. பா. 2, 2, பக். 151.)

கலாதி kalāti, n. <kalaha. Agitation, stir, disturbance, tumult, quarrel, scuffle, squabble, brawl, wrangle; கலகம். (W.)

கலாநிதி kalā-niti, n. <kalā+. 1. Moon, having phases; சந்திரன். (பிங்.) 2. Treasure-house of learning, a title given to a learned person; கல்விக்களஞ்சியம். தாகூறித்தியகலாநிதி.

கலாப்பி-த்தல் kalāppi-, 11 v. tr. <கல-. To mix; கலத்தல். (அக. நி.)

கலாபம்[1] kalāpam, n. <kalāpa. 1. Women's zone of beads or bells consisting of 16 strands; பதினறுகோவையுள்ள மாதரிடையணி. கலாபம் வீக்கி (சீவக. 624). 2. Jewelled girdle of a woman; மேகலை. (பிங்.) 3. Peacock's tail; மயிற்றோகை. மணிவயிற் கலாபம் (சிறுபாண். 15). 4. Umbrella made of peacock's feathers; பீலிக்குடை. (திவா.)

கலாபம்[2] kalāpam, n. prob. galba. Rising, disturbance, uproar, raid, invasion; கலகம். ஐதர் கலாபம்.

கலாபனை kalāpaṉai, n.<id. [T. kalāpana.] See கலாபம்[2].

கலாபி[1] kalāpi, n. <kalāpin. Peacock; மயில். (பிங்.)

கலாபி[2]**-த்தல்** kalāpi-, 11 v. intr. <கலாபம்[2]. To create disturbance, stir up a revolt; கலகம் பண்ணுதல். Loc.

கலாபேதம் kalā-pētam, n. < kalā +. Heresy; வேறுபட்ட சமயம். கலாபேதத்த கவேிட மெய்தி (திருவாச. 4, 57).

கலாம் kalām, n. <kalaha. 1. War, battle; போர். கலாஅத் தானையன் (புறநா. 69, 11). 2. Rivalry; competition; மாறுபாடு. போர்க்கலாமின்று கண்டேம் (சீவக. 620). 3. Rage, fury; கோபம். (பிங்.) 4. Impetuosity; கொடுமை. (பிங்.)

கலாம்பூரம் kalāmpūram, n. A kind of drug; மருந்துவகை. (W.)

கலாய்-த்தல் kalāy-, 11 v. intr. <kalaha. 1. To quarrel, to be at variance; கலகித்தல். யாயினிக் கலாய்த்தல் வேண்ட வொழிகென (காஞ்சிப்பு. அனந்த 5). 2. To get angry; கோபித்தல். கலாய்த்தொலைப் பருகுவார்போல் (சீவக. 1950).

கலாயி kalāyi, n. <U. galai. Tin used for tinning vessels; பாத்திரங்கட்குப் பூசப்படும் ஈயம். Loc.

கலால் kalāl, n. <U. kalāl. Toddy; கள். Colloq.

கலால்தீர்வை kalāl-tīrvai, n. <id.+. Tax on toddy; கள்வரி. Colloq.

கலாவம் kalāvam, n. <Pkt. kalāva <kalā-pa. Peacock's tail. See கலாபம்[1]. கலிமயிற் கலாவம் (புறநா. 146, 8).

கலாவு[1]**-தல்** kalāvu-, 5 v. intr. <கலவு-. To mix, join together, unite; கலத்தல். வானத்து வீசவளி கலாவலின் (குறிஞ்சிப். 48).

கலாவு[2]**-தல்** kalāvu-, 5 v. intr. prob. kalaha. 1. To be perturbed, confused; கலக்கமடைதல். கண்ணி நீரலைக் கலாவ (நெடுநல். 6). 2. To be displeased, angry; கோபித்தல். வசந்தமோகினி பெருங்கலாவினொடு கலாவினன் (குற்றா. குற. 29).

கலி[1]**-த்தல்** kali-, 11 v. intr. 1. prob. கல் onom. To sound, clamour, roar; ஒலித்தல். கடவுட் பராவி நமர்கலிப்ப (திருக்கோ. 279). 2. To sound, as yāḻ; யாழொலித்தல். (திவா.) 3. To grow luxuriantly; செழித்தல். ஆர்பெயற் கலித்த . . . நெல்லின் (நெடுநல். 21). 4. To sprout, come into being; உண்டாதல். களிபிடைக் கலித்த தென்ப (ஞானா. 11). 5. To appear, become manifest; எழுதல். (யாப். வி. 55, 207.) 6. To increase: பெருகுதல். செய்யார் தேஎந் தெருமரல் கலிப்ப (பொருந. 134). 7. cf. களி-. To rejoice; மகிழ்தல். கலித்த வியவர் (மதுரைக். 304). 8. To swell, to be proud, to grow arrogant; செருக்குதல். காஅங் கலித்த . . . அகழி (புறநா. 37, 7). 9. To be swift, quick; வேகமாதல். (யாப். வி. 55, 207.) 10. To be dense, crowded; நெருங்கியிருத்தல். (யாப். வி. 55, 207.)—tr. cf. kal. To cause to go, move; செலுத்துதல். (சி. போ. பா. 151.)

கலி[2] kali, n.<கலி[1]-. 1. Sound; ஒலி. (தொல். சொல். 349.) 2. Sea; கடல். (பிங்.) 3. Strength, force; வலி. (பிங்.) 4. Haughtiness, conceit, self-esteem; செருக்கு. இக்கலிகேழூரே (கலித். 52). 5. Flourishing, thriving, prospering; தழைக்கை. கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை (புறநா. 66, 6). 6. Perturbation; discomposure; uneasiness; துளக்கம். கலியி னெஞ்சினேம் (பரிபா. 2, 74). 7. Spiritedness, sprightliness, animation; மனவெழுச்சி. கலிமாப் பலவுடன் பூட்டி (பு. வெ. 12, வென்றிப். 14). 8. See கலிப்பா. (தொல். பொ. 53.) 9. A poem of the Middle Sangam period, not extant; இடைச்சங்ககாலத்து இயற்றப்பட்ட ஒருநூல். (இறை. 1, உரை.) 10. See கலித்தொகை. கலியே யகம்புற மென்று (புறநா. முகவுரை). 11. War, dissension, strife; போர். (W.)

கலி[3]**-த்தல்** kali-, 11 v. <skhal. intr. To trickle, flow gently; நழுவுதல். சுக்கிலங் கலித்தலாற் பெருந்தவவலி குன்றும் (வைராக். சத. 43).—tr. To remove; நீக்குதல். (சி. போ. பா. 151.)

கலி[4] kali, n. <Kali. 1. The deity presiding over the Iron age; கலிபுருஷன். கலிநீங்கு காண்டம். (சு.) 2. See கலியுகம். (பிங்.) 3. Saturn,

as a malignant planet; சனி. 4. Mishap, disaster, calamity; துன்பம். ஆழ்கலத் தன்ன கலி (நாலடி, 12). 5. Poverty, want; தரித்திரம். கலி கையா னீக்கல் கடன் (பு. வெ. 12, வென்றிப். 2). 6. Deceit, fraud; வஞ்சகம். கலிக்கிறை யாய நெஞ்சிற் கட்டியங்காரன் (சீவக. 266)

கலிக்கத்துரா kalikkatturā, *n.* prob. *kalikā* + U. *turai*. Aigrette, spray of gems, diadem of gold or of gold set with precious stones, set up as an ornament vertically over the forehead, on the turban; முன்னெற்றியில் அணியும் ஒருவகை அணி.

கலிக்கம் kalikkam, *n.* <T. *kalikamu*. Pungent eye-salve used as a stimulant to revive a person who is in an unconscious condition, or to cure a person of chronic headache; கண்ணிடும் மருந்து.

கலிக்கம்பநாயனார் kali-k-kampa-nāyaṉār, *n.* A canonized Śaiva saint, one of 63; அறுபத்துமூவர் நாயன்மாருள் ஒருவர். (பெரியபு.)

கலிக்கிமரம் kalikki-maram, *n.* A tree, *Parkia biglandulosa*; மரவகை. (A.)

கலிகம் kalikam, *n.* See கலிக்கம். கலிகங் கியாழும் (திருவேங். சத. 68).

கலிகன்றி kali-kaṉṟi, *n.* <*kali* + கன்று-. Lit., one who put down with a strong hand the might of *kali-puruṣaṉ*, an appellation of Tirumaṅkai-y-āḻvār, q.v.; திருமங்கையாழ்வார். (திவ். பெரியதி. 1, 1, 10.)

கலிகாலம் kali-kālam, *n.* <id. +. The Iron age; கலியுகம். கங்குபூசி வருகின்ற கலிகால மெனவே (கம்பரா. விராதன். 14).

கலிகை kalikai, *n.* <*kalikā*. 1. Tender bud; மொட்டு. (திவா.) 2. Snake Jasmine, m. sh., *Rhinacanthus communis*; நாகமல்லி. (மலை.)

கலிகொள்ளு-தல் kali-koḷḷu-, *v. intr.* <கலி[1]- +. To be revealed, to be discovered; வெளிப்படுதல். உருடி யானுங் கலிகொள வறியலாகும் (ஞானா. 15, 23).

கலிங்கச்சம்பா kaliṅka-c-campā, *n.* <*Kalinga* +. A kind of paddy, maturing in four or five months, so called because it was prob. brought from Kaliṅkam; நாலைந்து மாதங்களிற் பயிராகும் சம்பாநெல்வகை.

கலிங்கத்துப்பரணி kaliṅkattu-p-paraṇi, *n.* <id. +. A poem by Ceyaṅkoṇṭār describing the successful invasion of the Kaliṅga country by Karuṇākara-t-toṇṭaimāṉ, the Generalissimo of King Kulōttuṅga I, 1115 A.D. cir.; முதற் குலோத்துங்க சோழனது சேனாபதியான கருணாகரத் தொண்டைமான் கலிங்கநாட்டின்மீது படையெடுத்து வென்றதைப் பொருளாகக்கொண்டு சயங்கொண்டார் இயற்றியதொரு பரணிநூல்.

கலிங்கம்[1] kaliṅkam, *n.* <*Kalinga*. 1. Country comprising modern Orissa and Ganjam, one of the 56 *tēcam*, q.v.; ஐம்பத்தாறு தேசங்களில் ஒன்று. (பிங்.) 2. Language of Kaliṅga, one of 18 languages known to the ancient Tamil; ஒரு பாஷை. (திவா.) 3. Cloth, garment; ஆடை. கலிங்கம் பகர்நரும் (மதுரைக் 513). 4. Lark; வானம்பாடி. (பிங்.) 5. Sparrow; ஊர்க்குருவி. (பிங்.) 6. Conessi Bark. See வெட்பாலை. (மலை.) 7. Country Cucumber. See தும்மட்டி. (பதார்த்த. 720.)

கலிங்கம்[2] kaliṅkam, *n.* <T. *kalikamu*. 1. See கலிக்கம். (யாழ். அக.) 2. Black pepper. See மிளகு. (மலை.)

கலிங்கல் kaliṅkal, *n.* prob. கலி[1]-. See கலிங்கு.

கலிங்கு kaliṅku, *n.* prob. id. [T. *kalugu*.] 1. Sluice or water weirs for surplus vents; waterway constructed in the bund of a tank to permit the escape of surplus water so as to prevent the bursting of the tank from overfulness of water, now usually set with upright stones to admit of partial binding up of water; ஏரி மதகு. வாட்கண் கலிங்குக டிறந்த (சீவக. 2476). 2. Calingula; நீர்வழியும் அணைக்கட்டு. (W.)

கலிச்சி kalicci, *n.* <கலி[2]. Female of twins when they happen to be of opposite sexes; இரட்டைப்பிள்ளைகளுட் பெண். (W.)

கலிசந்தரணம் kalicantaraṇam, *n.* <*kali-santaraṇa*. Name of an Upaniṣad, one of 108; நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று.

கலிசம் kalicam, *n.* Indian Mesquit. See வன்னிமரம். (திவா.)

கலிஞ்சு kaliñcu, *n.* See கலிங்கு. (S.I.I. i, 95.)

கலித்தளை kali-t-taḷai, *n.* <கலி[3] +. Metrical connection between two successive feet in which a காய்ச்சீர் is followed by a foot beginning in *நிரை*; நேரீற்று உரிச்சீர்முன்னர் நிரைவருவது. (யாப். 20.)

கவுசி[2] kavuci, *n.* 1. A kind of dancing with gestures; ஒருவகை வரிக்கூத்து. (சிலப். 3, 13, உரை.) 2. perh. *kaiśika.* Song; பாட்டு. (அக. நி.)

கவுசி[3] kavuci, *n.* A kind of disease; ஒருவகை நோய். கண்டமாலே கவுசி மகோதரம் (திருவாலவா. 27, 14).

கவுசிகம்[1] kavucikam, *n.* <*kauśika.* (சூடா.) 1. Silk; வெண்பட்டு. 2. Rock horned owl. See கோட்டான்.

கவுசிகம்[2] kavucikam, *n.* prob. *kaiśika.* 1. A musical mode; ஒருபண். (சூடா.) 2. Sāma Vēda; சாமவேதம். வெளியிடற்குள ஏதலிய கவுசிகம் (அரிசமய. பராங்குச. 9).

கவுசிகம்[3] kavucikam, *n.* Lamp-stand; விளக்குத்தண்டு. (சூடா.)

கவுசிகன் kavucikaṉ, *n.* <*Kauśika.* Visvāmitra, so called because of his descent from *Kuśika;* குசிகவமிசத்தில் தோன்றிய விசுவாமித்திரன். தாவுன தடிக்கன் பென்று தாழ்ந்தனன் கவுசிகன்ருன் (சேதுபு. தோத். 47).

கவுசுத்தி kavucutti, *n.* Claw-hammer; சுத்தியல்வகை. (C.E.M.)

கவுஞ்சம் kavuñcam, *n.*<*krauñca.* A kind of curlew. See கிரவுஞ்சம். (பிங்.)

கவுஞ்சயூகம் kavuñca-yūkam, *n.* <id. + *vyūha.* Battle array, arrangement of troops in the form of *aṉṟil;* அன்றில்போல் வகுக்கும் அணிவகுப்பு. திகடரு கவுஞ்சயூக மாகவே (பாரத. பதிஞெ. 6).

கவுட்டி kavuṭṭi, *n.* prob. கவடு. Space between thighs; தொடைச்சந்து.

கவுடதம் kavuṭatam, *n.* <*kauṭaja.* See வெட்பாலே. (மலே.)

கவுடம்[1] kavuṭam, *n.* <*gauḍa.* 1. District of Gaur in Bengal; வங்காளதேசத்திலுள்ள கௌடநாடு. (கன். 272, மயிலே.) 2. One of the North-Indian languages; வட இந்தியபாஷைகளில் ஒன்று.

கவுடம்[2] kavuṭam, *n.* A creeper; கொடிவகை. (சூடா.)

கவுடமாய் kavuṭam-āy, *adv.* <*gūḍha.* With hidden meaning; பொருள்வெளிப்படையின்றி. செந்தமிழினுங் கவுடமாக வுரைசெய்தார் (சிவதரு. சிவஞானயோ. 124).

கவுடி[1] kavuṭi, *n.* [U. *kauḍi.*] See கவடி[1]. (சூடா.)

கவுடி[2] kavuṭi, *n.* prob. *gauḍi.* A musical mode; ஒருபண். நெடிய கவுடியிசை (திருப்பு. 319).

கவுண்டன் kavuṇṭaṉ, *n.* [K. *gavuḍa.*] 1. A caste title of certain Tamil and Kanarese folk, as கொங்கவேளாளன், அனுப்பன், காப்பிலியன், பள்ளி, செம்படவன், ஊராளி, வேட்டுவன்; தமிழர் கன்னடர் சிலர்க்குள் வழங்கும் பட்டப்பெயர். *Colloq.* 2. Man of the lowest caste; சண்டாளன். (திவா.)

கவுணம் kavuṇam, *n.* <*gauṇa.* 1. That which is secondary, as a word or its meaning. See கௌணம். கட்டில் கூப்பிட்டது என்றவிடத்து . . . கட்டிலிலிருக்கும் புருடனென்று கவுணப்பொருள் (சி. சி. பாயி. 2, ஞானப்.). 2. The sacred ashes (secondary) other than *āgnēyam* (primary) got from forest conflagration, etc., one of the forms of sacred ashes; ஆக்கினேயம்போலன்றிக் காட்டுத்தீ முதலியவற்றிலிருந்து கொள்ளும் ஒருவகைத் திருநீறு. ஆக்கினேயத்தோடு . . . கவுணமென்று இருவகைத்தாகும் (திருக்காளத். பு. 26, 5).

கவுணி kavuṇi, *n.* <*kauṇḍinya.* See கவுணியன். கழுமலவூர்க் கவுணி . . . ஞானசம்பந்தன் (தேவா. 138, 12).

கவுணியர்கோன் kavuṇiyar-kōṉ, *n.* <id. +. Campantar, the Śaiva saint, so called from his being the most famous personage in the *Kauṇḍinya Gōtra;* கௌண்டினிய கோத்திரத்துப் பெரியோரான திருஞானசம்பந்தர். பதிகங் கவுணியர்கோன் பாடுங்காலே (பெரியபு. திருஞா. 102).

கவுணியன் kavuṇiyaṉ, *n.* <id. One born in the *Kauṇḍinya Gōtra;* கவுண்டினிய கோத்திரத்தான். பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கவுணியன் விண்ணத்தாயன் (புறநா. 166).

கவுத்துகவாதம் kavuttuka-vātam, *n.* <*kautuka* + . Art of bringing delight to a sorrowful mind, one of *aṟupattu-nālu-kalai,* q.v.; அறுபத்துநாலு கலேகளுள் வருந்துகின்ற மனத்தை மகிழ்விக்கும் வித்தை.

கவுத்துவம்[1] kavuttuvam, *n.* cf. *kaitava.* Deceitfulness; வஞ்சகம். *Loc.*

கவுத்துவம்[2] kavuttuvam, *n.* <*kaustubha.* Jewel obtained from churning the sea of milk, and worn by Viṣṇu on his chest; திருமால் மார்

பில் அணியும் மணி. கவுத்துவங் கிடந்த மார்பின் (கூர் மபு. அந்தகா. 85).

கவுதகம் kavutakam, *n.* Parapet wall; கைப்பிடிச்சுவர். *Loc.*

கவுதம் kavutam, *n.* cf. கனகம், 2. Common kingfisher. See மீன்கொத்தி. (பிங்.)

கவுதாரி kavutāri, *n:* cf. கதுவாலி. Indian partridge; ஒரு பறவை. சிவல் குறும்பூழ் . . . பொறி மயிர்க் கவுதாரிகள் (கம்பரா. பள்ளி. 14).

கவுதாரிபுடம் kavutāri-puṭam, *n.* <கவுதாரி +. Measure determining the strength of fire in the calcination or reduction of metals with three dried dung cakes; கவுதாரியளவாக மூன்று எருவிட்டெரிக்கும் மருந்துப் புடம். (மூ. அ.)

கவுந்தம் kavuntam, *n.* (சங். அக.) 1. See கார்க்கடகபாஷாணம். 2. See கோளகபாஷாணம்.

கவுந்தி[1] kavunti, *n.* Female Jain ascetic; சைன தவப்பெண். (திவா.)

கவுந்தி[2] kavunti, *n.* <*Kuntī.* Kuntī, mother of the Pāṇḍavas; குந்திதேவி. அறுவர்க் கறுவரைப் பெற்றுங் கவுந்தி (யாப். வி. 64, 242).

கவுபதம் kavupatam, *n.* cf. *kauṭaja.* Conessi bark. See வெட்பாலை.

கவுமாரம் kavumāram, *n.* <*kaumāra.* 1. Adolescence, youth; இளமை. கவுமாரமாய் வயங்கு (பாகவ. 1, 1, 23). 2. Doctrine that Kumāra is the highest God. See கௌமாரம்.

கவுமோதகி kavumōtaki, *n.* <*kaumōdakī.* Mace of Viṣṇu; திருமாலின் தண்டாயுதம். மாயோன் செங்கை மூரிநெடுந்தண்டு கவுமோதகி (சேதுபு. துராசா. 34).

கவுரம் kavuram, *n.*<*gaura.* White colour; வெண்மை. கவுரவா னிறத்தளாய் (காஞ்சிப்பு. கழுவாய். 23).

கவுரவம் kavuravam, *n.* Dignity, respectability. See கௌரவம்.

கவுரவர் kavuravar, *n.*<*kaurava.* Kaurava princes of the Mahābhārata, chiefly the sons Dhṛtarāṣṭra, as descendants of *Kuru;* குருகுல வேந்தரான திருதராட்டிரன் புத்திரர்.

கவுரிசங்கம் kavuri-caṅkam, *n.* See கவுரி சங்கரம்.

கவுரிசங்கரம் kavuri-caṅkaram, *n.* <*gauri-śaṅkara.* A double *Rudrākṣa* bead believed to represent Pārvatī and Śiva; கவுரிசங்கரர்களது உருவினதாய் இருபிளவுபட்ட ஒற்றை உருத்திராக்கம்.

கவுரிபாஷாணம் kavuri-pāṣāṇam, *n.* <*gauri*+. A prepared arsenic; வைப்புப்பாஷாணவகை.

கவுல்[1] kavul, *n.* [T. *gaulu*, K. *gavulu.*] Fetid odour; bad smell; தீநாற்றம். அந்தக் கறி கவுலடிக்கிறது.

கவுல்[2] kavul, *n.* <U. *qaul.* Favourable tenure of land; agreement whereby land is held for rent either perpetually or for a term of years; நிலக்குத்தகை உடன்படிக்கை. (G. Sm. D. ii, 22.)

கவுல்தார் kavul-tār, *n.* <id.+. Ryot holding lands on *kavul;* நிலக்குத்தகை எடுத்தவன்.

கவுல்நாமா kavul-nāmā, *n.* <id.+. Written agreement showing terms on which a land is held; நிலக்குத்தகைப் பத்திரம்.

கவுல்வாங்கு-தல் kavul-vāṅku-, *v. tr.*<id. +. To take waste lands for rent either perpetually or for a term of years; வருஷத்தவணைக் குத் தர்க்காஸ்துக்குத்தகை எடுத்துக்கொள்ளுதல்.

கவுள் kavuḷ, *n.* <*kapōla.* [M. *kaviḷ.*] 1. Cheek; கன்னம். கண்ணீர் கவுளலைப்ப (சீவக. 2050). 2. Temple of an elephant; யானையின் கன்னம். நனைகவுள் யானையால் (குறள், 678). 3. Jaw of an elephant; யானையின் உள்வாய். களிறு கவுளடுத்த வெறிகற் போல (புறநா. 30, 8). 4. Side; பக்கம். ஒலிகவுள கிண்கிணியும் (சீவக. 2967).

கவுளி[1] kavuḷi, *n.* See கவளி, 2.

கவுளி[2] kavuḷi, *n.* perh. *gōdhi.* [T. M. *gauḷi*, K. *gavuḷi.*] Lizard; பல்லி. இடத்தெழுந்த கவுளி நன்று (குமர. பிர. மீனாட். குற. 11).

கவுனி[1] kavuṉi, *n.* <T. *gavini.* Gate of a fort or a city; கோட்டைவாயில். *Loc.*

கவுனி[2] kavuṉi, *n.* A mineral poison. See குதிரைப்பற்பாஷாணம். (W.)

கவேரகன்னி kavēra-kaṉṉi, *n.* <*Kavēra* +. The river Kāvēri said to be the daughter of Kavēraṉ; கவேரன் மகளான காவேரிநதி. கவேர கன்னிப் பெயரொடு விளங்கிய . . . மூதூர் (மணி. 9, 52).

கவேரவனம் kavēra-vaṉam, *n.* <id.+. A forest near *Kāviri-p-pūm-paṭṭiṉam* where Kavēraṉ lived; காவிரிப்பூம்பட்டினத்தருகில் கவேர முனி வசித்த வனம். கவேரனுங் கிருந்த கவேரவனமும் (மணி. 3, 56).

கவேரன் kavēraṉ, *n.* <*Kavēra.* A royal sage; ஓர் இராசரிஷி. (மணி. 3, 56.)

கவை[1]**-த்தல்** kavai-, *11 v. intr.* 1. To fork, as a branch; கவடுபடுதல். கவைமுள்ளிற் புழையடைப்பவும் (புறநா. 98). 2. To be, exist; உளதாதல். கவைஇய கற்பினை (கல்லா. 6, 22).—*tr.* 1. To contain within oneself, to include; அகத்திடுதல். ஆரங் கவைஇய மார்பே (புறநா. 19, 18).

2. To join with, embrace; அணைத்தல். ஒய்யெனப் பிரியவும் விடாஅன் கவைஇ (குறிஞ்சிப். 185).

கவை[2] kavai, *n.* <கவை-. [M. *kava.*] 1. Division; cleavage, as of a hoof, a crab's claws; கவர். கவைக்கதிர் வரகின் (அகநா. 393). 2. Branch of a tree; மரக்கிளை. (பிங்.) 3. Forked stick; கவைக்கோல். கானவன் கவைபொறுத்தன்ன (அகநா. 34). 4. A weapon with forked iron points; முனைகவரான இரும்பாயுதம். 5. Cross-roads, diverging paths; கவர்வழி. (சூடா.) 6. Wood; jungle; காடு. (பிங்.) 7. See அகில். (மலை.) 8. Concern, interest; கரிசனை. *Loc.* 9. Fort, fortification; கோட்டை. (W.) 10. Notch in a bone; எலும்புக்கவை. (W.)

கவை[3] kavai, *n.* cf. கவ்வை[2]. 1. Business; காரியம். நமனூர்க்கிங் கேதுகவை (பதார்த்த. 1499). 2. Young sesame pod; எள்ளிளங்காய். (பிங்.) 3. The ninth *nakṣatra.* See ஆயிலியம். (பிங்.)

கவைக்காகாமை kavaikkākāmai, *n.* <கவை[3] + ஆகாமை. Uselessness, unprofitableness; உபயோகமின்மை. அவன்படிப்பு கவைக்காகாமைதெரிந்ததே.

கவைக்கால் kavai-k-kāl, *n.* <கவை[2] +. Forked post; பிளவுபட்டுத் தோன்றுங் கால்.

கவைக்குளம்பு kavai-k-kuḷampu, *n.* <id. +. Cloven hoof; விலங்கின் பிளவுள்ள பாதம்.

கவைக்கொம்பு kavai-k-kompu, *n.* <id. +. 1. Forked branch; பிரிவுபட்ட மரக்கிளை. 2. Antler; கலைமான்.

கவைக்கோல் kavai-k-kōl, *n.* <id. +. 1. Forked stick; கவரான கழி. (அகநா. 34, உரை.) 2. Pikestaff; குத்துக்கோல். (சிலப். 16, 142, அரும்.) 3. Crow-bar. See கோடிற்றுக்கோல். (சிலப். 16, 142, உரை.)

கவைத்தாம்பு kavai-t-tāmpu, *n.* <id. +. Slip-knot, noose; தாமணியையுடைய தாம்பு. கவைத்தாம்பு தொடுத்த காழ் (பெரும்பாண். 244).

கவைத்தாள் kavai-t-tāḷ, *n.* <id. +. 1. Forked, divaricated claws; பிளவுபட்ட கால். கவைத்தா ளலவன் (பெரும்பாண். 208). 2. Crab, having forked claws; நண்டு. (பிங்.)

கவைநா kavai-nā, *n.* <id. +. Forked tongue, as of a snake; பிளவுபட்ட நா. கவைநா வரவின் (திவ். பெரியதி. 3, 2, 4).

கவைமுட்கருவி kavai-muṭkaruvi, *n.* <id. +. Elephant-goad, having spikes; யானையை அடக்கும் குத்துக்கோல். கவைமுட் கருவியு மாகிக் கடிகொள (மணி. 18, 164).

கவையடி kavai-y-aṭi, *n.* <id. +. Cloven foot; பிளவுள்ள அடி. கவையடி பெயர்த்து (மணி. 6, 125).

கவையமா kavaiya-mā, *n.* <*gavaya* +. Wild cow. See கவயம்[1]. (பிங்.)

கவையாயிரு-த்தல் kavai-y-āy-iru-, *v. intr.* <கவை[3] +. 1. To be busy; வேலையாயிருத்தல். *Loc.* 2. To be interested; அக்கறையாயிருத்தல்.

கழகண்டு kaḷa-kaṇṭu, *n.* Mischief; தீம்பு. கண்ணைப் புரட்டிவிழித்துக் கழகண்டு செய்யும் பிரானே (திவ். பெரியாழ். 2, 4, 6).

கழகம் kaḷakam, *n.* [M. *kaḷakam.*] 1. Assembly; ஓலக்கம். கழகமேறேல் நம்பீ (திவ். திருவாய். 6, 2, 6). 2. Assembly of poets; புலவர் கூடிய சபை. (திவா.) 3. Public place of learning, college; கல்விபயிலும் இடம். கந்தனை யனையவர் கலைதெரி கழகம் (கம்பரா. நாட்டுப். 48). 4. Place for practising the use of arms; place for wrestling; boxing hall; gymnasium; படை மல் முதலியன பயிலும் இடம். (திவா.) 5. Place of gambling; சூதாடும் இடம். கழகத்துக் காலை புகின் (குறள், 937). 6. Gambling; சூது. கழகத் தியலும் (பு. வெ. 12, வென்றிப். 16).

கழகு kaḷaku, *n.* See கழகம்.

கழங்கம் kaḷaṅkam, *n.* prob. கழங்கு. Conical pieces in the game of dice; சூதாடுகருவி. (சது.)

கழங்காடல் kaḷaṅkāṭal, *n.* <கழங்கு + ஆடு-. Girls' game with Molucca-beans; பெண்கள் ஆடும் கழற்சிக்காயாட்டம். (பிங்.)

கழங்கிட்டுரை-த்தல் kaḷaṅkiṭṭurai-, *v. tr.* <id. +. To divine with Molucca-beans; கழற்சிக்காயாற் குறியறிந்து சொல்லுதல். களமாவது கட்டுங்கழங்கும் இட்டுரைக்குமிடமும் வெறியாட்டிடமுமாம் (தொல். பொ. 114, உரை).

கழங்கு kaḷaṅku, *n.* perh. கழல். 1. Molucca-bean; கழற்சிக்காய். மகளிர் . . . கழங்கிற் றெற்றி யாடும் (புறநா. 36, 4). 2. Play among girls with Molucca-beans; கழற்சி விளையாட்டு. 3. See கழங்குப்பருவம். (இலக். வி. 807.) 4. Divination with the help of Molucca-beans by a soothsayer when possessed; கழற்சிக்காயைக்கொண்டு வெறியாட்டில் வேலன் சொல்லுங் குறி. கழங்கிற்கோட்டங்காட்டி (நற். 47). 5. Gambling; சூது. (சூடா.)

கழங்குப்பருவம் kaḷaṅku-p-paruvam, *n.* <கழங்கு +. Section of *peṇpāṟ-piḷḷai-t-tamiḻ*, which describes the stage of childhood in which the child plays the *kaḷaṅku* game; பெண்பாற்பிள்ளைத்தமிழ்க்குரிய பருவங்களுள் கழற்சிக்காய் கொண்டு ஆடுவதை வருணித்துக் கூறும் பருவம்.

கழங்குபடு-த்தல் kaḷaṅku-paṭu-, *v. intr.* <id. +. To practise soothsaying or divination with the help of Molucca-beans; கழங்குகொண்டு குறியறிதல். கழங்குபடுத் தன்னைக்கு முருகென மொழியும் வேலன் (ஐங்குறு. 249).

கழங்குமெய்ப்படு-த்தல் kaḻaṅku-mey-p-paṭu-, *v. intr.* <id.+. 1. To use Molucca-beans to serve as eyes for tiger-like figures put up in fields to prevent wild beasts from committing ravages on the crop; பயிர்களை விலங்குகள் அழிக்காதபடி புலிபோற்செய்துவைக்கும் உருவுக்குக் கழற்சிக்காயைக் கண்ணாக அமைத்தல். *கன்முகை வயப்புலி கழங்கு மெய்ப்படூஉம்* (ஐங்குறு. 246). 2. To practise soothsaying with the help of Molucca-beans; கழற்காய்மூலங் குறியறிதல். *கழங்கு மெய்ப்படுத்து . . . முருகென மொழியுமாயின்* (ஐங்குறு. 245).

கழஞ்சு kaḻañcu, *n.* prob. கழங்கு. [M. *kaḻañcu.*] A weight equal in modern times to ⅙ oz. troy; ஓர் எடுத்தலளவை. *விழுக்கழஞ்சிற் சீருடைய விழைபெற்றிசினே* (புறநா. 11, 12).

கழணி kaḻaṇi, *n.* <கழுவு-+நீர். Water in which rice has been washed; கழநீர். *Loc.*

கழப்பன் kaḻappaṉ, *n.* See கழப்பாளி.

கழப்பாடி kaḻappāṭi, *n.* See கழப்பாளி.

கழப்பாளி kaḻappāḷi, *n.* <கழப்பு+ஆள்-. Idle, shuffling person; shirker; வேலையைச் செய்யாமல் வீண்பொழுது போக்குபவ-ன்-ள்.

கழப்பு¹-தல் kaḻappu-, *5 v. intr.* prob. கழி¹-. To be idle, making excuses; to shirk work; வேலைசெய்யாது காலம் போக்குதல். *Colloq.*

கழப்பு² kaḻappu, *n.* <கழப்பு-. Laziness, idleness, slothfulness; சோம்பல். *கழப்பின் வாராக் கையற வுளவோ* (பதினொ. திருவிடை. மரு. மும்மணிக். 10).

கழப்புணி kaḻappuṇi, *n.* <id.+உண்-. See கழப்பாளி. (W.)

கழல்¹(லு)-தல் kaḻal-, *3 v. intr.* cf. *gal.* [K. M. *kaḻal.*] 1. To become loose, as a fastening, nail, shoe, handle, lock, leaf, hair, bracelet, knot, part of any mechanism; to be unhinged, to slip off; to slough off, as a snake's skin; to become extricated, disentangled; நெகிழ்ந்துபோதல். *கங்கைதன் றுகிலொடு சரிவளை கழல்கின்றதே* (திவ். பெரியாழ். 3, 4, 8). 2. To be put out of joint, dislocated; உடற்பொருந்து விலகுதல். *விழுந்து முழங்தாள் கழன்றது. Loc.* 3. To pass through, as an arrow; வெளியேறுதல். *தங்கா தப்புறங் கழன்று* (கம்பரா. தாடகை. 72). 4. To run away; ஓடுதல். *அவரைக் கழல வழக்கி* (கலித். 106). 5. To pass away, to disappear; நீங்குதல். *துயரெல்லாங் கழன்றது* (உபதேசகா. சிவபுரா. 16). 6. To protrude, bulge out; பிதுங்குதல். *கழல்கட் கூகை* (திருமுரு. 49). 7. To fall out, as a loose tooth; விழுதல். *பற்கழன்று* (காலடி, 13). 8. To be expended; செலவாதல். *மாதம் மாதம் எவ்வளவு தொகை கழலும்? Loc.*

கழல்² kaḻal, *n.* <கழல்-. [K. M. *kaḻal.*] 1. Anklet given as a token of honour to a warrior; வீரக்கழல். *ஒண்பொறிக் கழற்கால்* (பதிற்றுப். 34, 2). 2. Anklet; சிலம்பு. *அறைகழ லருளொலி* (ஞானா. 2, 9). 3. Toe-ring; கால்மோதிரம். *கட்டுவடக் கழலினர்* (பரிபா. 12, 24). 4. Sandal; செருப்பு. *கழலிற் செந்தாமரையடிகள் புல்லி* (சீவக. 1648). 5. (Fig.) Foot; பாதம். *கணவன் கழல்வாழ்த்தி* (பு. வெ. 10, முல்லைப். 5). 6. See கழற்சி. *கழற்கனி வகுத்த துணைச்சில்லோதி* (புறநா. 97, 23). 7. Weathercock moved by the wind; காற்றாடி. (திவா.)

கழலக்குத்து-தல் kaḻala-k-kuttu-, *v. intr.* <id.+. To defeat an object by an unfavourable remark; குற்றஞ்சொல்லிக் காரியத்தைத் தடுத்தல். (J.)

கழலவிடு-தல் kaḻala-viṭu-, *v. tr.* <id.+. To connive at, let pass or escape without notice, through leniency or partiality; பட்சபாதம் முதலியவற்றால் வேண்டுமென்று நெகிழவிடுதல்.

கழலாபு kaḻalāpu, *n.* Sponge-gourd. See பீர்க்கு. (மலை.)

கழலி kaḻali, *n.* Square-stalked wild vine. See பிரண்டை. (மலை.)

கழலை kaḻalai, *n.* <கழல்-. [M. *kaḻala.*] See கழலைக்கட்டி. *கீழ்வயிற்றுக்கழலை* (சுடு, 1, 1, 3).

கழலைக்கட்டி kaḻalai-k-kaṭṭi, *n.* <கழலை+. 1. Wen, tubercle, dermoid cyst; கழுத்துமுதலிய வற்றிலுள்ள மாமிசகிரந்தி பெருத்துத்தோன்றும் நோய். 2. Tumour; விரணக்கட்டி.

கழலைகரப்பான் kaḻalai-karappāṉ, *n.* <id. +. A kind of eruption on various parts of the body; ஒருவகைச் சொறிநோய். *கழலை கரப்பான் போலே எங்கும் ஒக்கச்சஞ்சரிக்கும் நோய்* (திவ். திருநெடுந். 23, வ்யா.).

கழற்காய் kaḻaṟ-kāy, *n.* <கழல்+. Molucca-bean; கழற்சிக்காய். (பதார்த்த. 793.)

கழற்கொடி kaḻaṟ-koṭi, *n.* <id.+. See கழற்சி.

கழற்சி kaḻaṟci, *n.* <id. [M. *kaḻacci.*] 1. Molucca-bean, l. cl., ***Cæsalpina bonducella;*** ஒருவகைக் கொடி. (பிங்.) 2. Bonduc nut; கழற்சிக்காய்.

கழற்சிக்கொட்டை kaḻaṟci-k-koṭṭai, *n.* <கழற்சி+. See கழற்சி, 2.

கழற்சிங்கநாயனார் kaḻaṟ-ciṅka-nāyaṉār, *n.* <கழல்+. Name of a canonized Śaiva saint, one of 63; அறுபத்துமூவர் நாயன்மாருள் ஒருவர். (திருத். பு. சா. 58.)

கழற்சுபதம் kaḻaṟ-cupatam, *n.* prob. கழல் +*śveta.* Atees. See அதிவிடையம். (மலை.)

கழற்பதி kaḻaṟpati, *n.* Coomb teak. See பெருங்குமிழ். (மலை.)

கழற்றி kaḻaṟṟi, *n.* <கழற்று-. That which causes one to slip off, to disappear; கழலப் பண்ணுவது. யோகக்கழற்றி (ஒழிவி. 3, 106).

கழற்று[1]**-தல்** kaḻaṟṟu-, *5 v. tr.* Caus. of கழல்-. [M. *kaḻaṟṟu.*] 1. To unfasten, loosen, unhinge, dislocate, unlock, unhook, unbolt, unscrew, unbutton, disentangle, extricate, disencumber; நெகிழச்செய்தல். 2. To strip, take off, divest, dismantle, unrig; to slough off, as a snake, its skin; ஆடையணிமுதலியன நீக்குதல். கழற்றிப் பொன்னணி (இரகு. திக்கு. 255). 3. To remove, to be freed, as from sin; போக்குதல். வல்வினையைக் கழற்றலாமே (தேவா. 1225, 7).

கழற்று[2] kaḻaṟṟu, *n.* <கழறு-. Admonition, expostulation; criticism, at once kind and severe; உறுதிமொழி.

கழற்றெதிர்மறு-த்தல் kaḻaṟṟetir-maṟu-, *v. intr.* <கழற்று+. (Akap.) To reject the dissuasions of a friend, as a lover; பாங்கனுடைய உறுதிமொழியைத் தலைவன் கேளாது மறுத்தல். (திருக்கோ. 23, தலைப்பு.)

கழற்றெதிர்மறை kaḻaṟṟetir-maṟai, *n.* <id. +. (Akap.) Rejecting, as a lover, the dissuasions of a friend; தலைவன் பாங்கனுடைய உறுதிமொழியைக் கேளாது மறுத்துச் சொல்லுஞ் சொல். (இறை. 3, 47.)

கழறல் kaḻaṟal, *n.* <கழறு-. 1. Speech, word, speaking; சொல்லுகை. இனையன கழறலுற் றான் (கந்தபு. தாரக. 128). 2. Exhortation, admonition; உறுதிமொழி. (திவா.)

கழறியுரை-த்தல் kaḻaṟi-y-urai-, *v. intr.* <id.+. 1. To protest, find fault with and advise, as a minister, the king; இடித்துரைத்தல். மந்திரி அரசனுக்குக் கழறியுரைத்தான். 2. (Akap.) To dissuade a lover from his intention, as a friend; பாங்கன் தலைவனுக்கு இடித்துரைத்து உறுதிமொழி கூறுதல். (திருக்கோ. 22, தலைப்பு.)

கழறிற்றறிவார் kaḻaṟiṟṟaṟivār, *n.* <id.+. Name of a Śaiva saint, Cēramāṉ Perumāḷ who is so called because he is said to have been able to understand the language of the lower animals; சேரமான்பெருமாணயனர். பிறவுயிர் கள் வேறு கழறிற்றறிவார் (பெரியபு. சிறத். 88).

கழறு-தல் kaḻaṟu-, *5 v. intr.* 1. To thunder; இடித்தல். கமஞ்சூல் . . . கடுஞ்சிலை கழறி (பதிற்றுப். 81, 4). 2. To make solemn declaration, bind oneself by a vow; பிரதிஞ்ஞை செய்தல். கொல்வோ மென்றுங் கவாவர் கழறிப்பேசி (திருவாலவா. 36, 17). 3. To urge, exhort, charge earnestly; உறுதிசொல்லுதல். கல்லென்று தந்தை கழற (நாலடி, 253).—*tr.* 1. To say, declare, tell; சொல்லுதல். சிலர்கழறிச் சோர்வார் (பாகவ. 1, 4, 35). 2. To be angry with; கோபித்தல். கடிந்தது மிலை யாய்நீ கழறிய வந்ததை (கலித். 76, 13). 3. To abuse, dishonour; அவமதித்தல். கற்றவர் தம்மையுங் கழற நோக்குமே (சூளா. முத். 16).

கழனி[1] kaḻaṉi, *n.* perh. களம்[3]. [M. *kaḻani.*] 1. Field, paddy-field; வயல். கழனியுழவர் (புறநா. 13, 11). 2. Agricultural tract; மருதநிலம். (பிங்.) 3. Mud; சேறு. (W.)

கழனி[2] kaḻaṉi, *n.* prob. கழல்-. See கழினி. (பிங்.)

கழனி[3] kaḻaṉi, *n.* <கழுவு- + நீர். See கழுநீர். *Loc.*

கழனிக்கடைத்தவர் kaḻaṉikkaṭaittavar, *n.* <கழனி[1] + அடைத்தவர். People of an agricultural tract; மருதநிலமாக்கள். (திவா.)

கழனிநண்டு kaḻaṉi-naṇṭu, *n.* <id.+. Fresh-water crab found in fields; வயல்நண்டு வகை. (W.)

கழனிப்பயிர் kaḻaṉi-p-payir, *n.* <id. +. Paddy; நெல். (W.)

கழனிலை kaḻaṉilai, *n.* <கழல் + நிலை. (Puṟap.) Theme of warriors decorating a youthful victor with anklets and singing his praises to the accompaniment of a dance; இளைஞனொரு வன் போரிற் புறக்கொடாமைகண்டு வியந்த வீரர் அவனுக்கு வீரக்கழலணிவித்துப் புகழ்ந்தாடும் புறத் துறை. (தொல். பொ. 60.)

கழாஅல் kaḻāal, *n.* <கழுவு-. Washing, cleansing; கழுவுகை. மாக்கள் வெண்கோடு கழாஅ லின் (புறநா. 94, 1).

கழாஅல kaḻāala, *pple.* Caus. of கழல. To unloose or divest; கழற்ற. முண்டகங் கதிர்மணி கழாஅலவும் (சிறுபாண். 148).

கழாநிலம் kaḻā-nilam, *n.* See கழாலை. (யாழ். அக.)

கழாலை kaḻālai, *n.* perh. கழாஅல். Saline soil; உவர் நிலம். (யாழ். அக.)

கழாய் kaḻāy, *n.* <கழை. 1. Spiny bamboo; மூங்கில். 2. Acrobat's pole; கழைக்கூத்தன் ஏறி நின்று ஆடுதற்கு நாட்டும் மூங்கிற்கம்பம். (சீவக. 66, உரை.) 3. Areca-palm. See கமுகு. (மலை.)

கழாய்க்கூத்து kaḻāy-k-kūttu, *n.* <கழாய் +. See கழைக்கூத்து. கானகக்கூத்தும் கழாய்க்கூத்தும் ஆடுபவராக (தொல். பொ. 91, உரை).

கழாய்வனம் kaḻāyvaṉam, *n.* A species of amaranth. See சிறுகீரை. (மலை.)

கழாயர் kaḻāyar, *n.* <கழை. Pole-dancers, rope-dancers, tumblers; கழைக்கூத்தர். (டா.)

கழாயினர் kaḻāyiṉar, *n.* <id. See கழாயர். கோடியர் கழாயினர் (கந்தபு. அசமுகிக. 14).

கழால் kaḻāl, *n.* <கழல்-. Weeding, rooting up; களைகை. களைகால் கழாலின் (புறநா. 120, 5).

கழாலு-தல் kaḻālu-, prob. *5 v. intr.* <id. To become loose; நெகிழ்தல். கழாலுகின்ற பல் காழுடை மேகலை (கந்தபு. திருக்கல். 15).

கழாற்றூக்கு kaḻāṟṟūkku, *n.* prob. கழல் + தூக்கு. (Mus.) A mode of keeping time composed of six *cīr;* ஆறுசீரளவுள்ள தாளவுறுப்பு. (சிலப். 3, 16, உரை.)

கழி[1]**-தல்** kaḻi-, *4 v.* cf. *gal.* [K. *kaḻi.*] *intr.* 1. [M. *kaḻi.*] To pass, as time, season; to slip away, as prosperity, adversity; to elapse, become spent; கடந்துபோதல். பொழுதொடு நாளும் வாளா கழிந்தன போலும் (கம்பரா. சூர்ப்ப. 48). 2. To walk, proceed; நடத்தல். (பிங்.) 3. To be abated, deducted, discounted; குறைபடுதல். கழியாம வளித்தனை கண்ண துகில் (பாகவ. 1, 4, 37). 4. To be ruined; அழிதல். அங்குராங் கழியும் வேனில் (சி. சி. 1, 9). 5. To be removed; ஒழிதல். பாவங் கழிந்தது. 6. [M. *kaḻi.*] To expire, die; சாதல். கழியா தலந்தினையும் (பு. வெ. 10, சிறப்பிற். 4). 7. To finish, come to an end, cease; முடிவடைதல். மென்னோக்கி யிடையாய்க் கழிந்தது (திருக்கோ. 61). 8. To suffer, to be troubled; வருந்துதல். சேக்கை மேவாது கழிய (சிலப். 4, 65). 9. To be discharged, as excreta, etc.; உடம்பினின்று மலமுதலியன வெளிப்படுதல். 10. To purge; வயிற்றுப்போக்காதல். 11. To be in terror; அச்சங்கொள்ளுதல். அவரைக்கண்டால் கழிவன். *Colloq.*—*tr.* 1. To pass through; கடத்தல். வேய்கரி கானம் . . . கழிந்த தற்கு (அகநா. 55). 2. To resemble; ஒத்தல். (பரிபா. 3, 32, உரை.)

கழி[2] kaḻi, *n.* <கழி[1]-. 1. [M. *kaḻi.*] Backwater, shallow sea-waters, salt river, marsh; கடலையடுத்த உப்புநீர்ப் பரப்பு. மாக்கழி மலர்ந்த நெய் தலானும் (புறநா. 48, 3). 2. Salt-pan; உப்பளம். (பிங்.)

கழி[3]**-த்தல்** kaḻi-, *11 v. tr.* Caus. of கழி[1]-. [M. *kaḻikka.*] 1. To reject, expel, discard, exclude, dislodge, remove, strip off, separate, eliminate; நீக்குதல். பூண்டான் கழித்தற் கருமையால் (நாலடி, 56). 2. To eject; to leave, as refuse; to abandon; ஒதுக்குதல். மாடு தின்றுகழித்த வைக் கோல். 3. (Arith.) To subtract; பெரிய எண்ணி னின்று சிறிய எண்ணைக் குறைத்தல். இதில் மூன்றைக் கழி. 4. To deduct, abate, discount, remit; குறைத்தல். வட்டியைக் கழித்துக்கொண்டான். 5. To cut off, as hair; to pare off, as nails; to clear off, clear away; to smooth off, as knots; to prune, top; வெட்டுதல். மரக்கிளையைக் கழித்தான். 6. To spend, waste, as time; போக்குதல். காலத் தைக் கழிக்கின்றீரே (திவ். திருமாலை, 11). 7. To exempt, release, free, as from duties or postage; வரிமுதலியவை தள்ளிக்கொடுத்தல். 8. To cast off, as exuviae; to evacuate, void, as excreta; மலம் முதலியவற்றை வெளிப்படுத்துதல். 9. To unsheath; உருவுதல். கழித்துறை செறியா வாளுடை (அகநா. 24).

கழி[4] kaḻi, *n.* <கழி[3]-. 1. Rod, cudgel, staff, stick; கோல். ஆயர்மேய்க்குங் கழி (புலியூரக். 8). 2. Wooden peg to keep a yoke in place; நுகத்துளையில் இடுங்கழி. தென்கடலிட்ட தோர் கோன் கழி (சீவக. 2749). 3. [M. *kaḻi.*] Handle of a tool; ஆயுதக் காம்பு. தோல் கழியொடு பிடிசெ றிப்பவும் (புறநா. 98, 11). 4. Lute-stick; plectrum; யாழின் இசையெழுப்புங் கருவி. (W.) 5. Lath, strip put across the rafters to support tiles; வரிச்சல். கழிநிரைத்து (தேவா. 838, 4). 6. Knot, tie, string, thread; நூற்கூருள். (W.) 7. Flesh; மாமிசம். கழிப்பிணிக் கறைத்தோல் (சிலப். 5, 81).

கழி[5] kaḻi, *adj.* Much, great, excessive, extreme; மிகுந்த. (நன். 456.)

கழி[6]**-தல்** kaḻi-, *4 v. intr.* [K. *kaḻi.*] To be great in quantity or quality; to be abundant, copious, intense, extensive; மிகுதல். கழி கின்றதொர் கடலேபுரை காமந்தெறு நோயால் (கந்தபு. அசமுகிப். 4).

கழிக்கரைப்புலம்பல் kaḻi-k-karai-p-pulampal, *n.* <கழி[2]+. 1. (Akap.) Soliloquy of a maiden in a maritime tract lamenting the separation from her lover; பிரிந்த தலைவனை நினைந்து தலைவி கடற்கரையிலிருந்துகொண்டு தனியே இரங்குகை. 2. A poem on the soliloquy of a maiden in a maritime tract lamenting the separation from her lover; சமுத்திரவிலாசம் என்னும் பிரபந்தம்.

கழிக்காரை kaḻi-k-kārai, *n.* <id. + . A thorny shrub, *Canthium;* ஒருவகை முட்செடி. (W.)

கழிக்காறல் kaḻi-k-kāṟal, *n.* <id.+. A sea-fish, silvery, attaining 5 in. length, ***Equula splendens;*** கடல்மீன்வகை.

கழிக்கானல் kaḻi-k-kāṉal, *n.* <id.+. Seaside park; கடற்கரைச்சோலை. காதலராகிக் கழிக்கா னற் கையுறை கொண்டு (சிலப். 6, 150, உரை).

கழிக்கோல் kaḻi-k-kōl, *n.* <கழி[4]+. See கழிகோல்.

கழிகடை kaḻi-kaṭai, *n.* < கழி[5] +. The worst, as applied to persons or things; refuse; that which is base; மிக இழிந்த-வன்-வள்-து-வை. *Colloq.*

கழிகண்ணோட்டம் kaḻi-kaṇṇōṭṭam, *n.* <id.+. Lit. glance with overflowing eyes, great joy, delight; அளவிறந்த உவகை. (குறள், 432, உரை.)

கழிகணம் kaḻi-kaṇam, *n.* <கழி^{1}-+. A disease of children attended with diarrhœa; வயிற்றுப்போக்கை உண்டாக்கும் குழந்தைநோய்வகை. (பாலவா. 40.)

கழிகலமகடூஉ kaḻi-kala-makaṭūu, *n.* <id. +. Widow, who has been stripped of her ornaments; கைம்பெண். *கழிகலமகடூஉப் போலப் புல்லென்றனையால்* (புறநா. 261, 18).

கழிகாலம் kaḻi-kālam, *n.* <id.+. Past time; சென்றகாலம். *கழிகாலமா யுலகை . . . அளிப் பாய்* (திவ். திருவாய். 3, 1, 5).

கழிகெட்டவன் kaḻi-keṭṭavaṉ, *n.* <கழி^{5} +. Reprobate fellow, vile wretch; மிகக் கேட் டவன். (J.)

கழிகோல் kaḻi-kōl, *n.* prob. கழு^{1}+. 1. Two rods joined at an angle and thrown round the horns of an intractable cow to keep it under control while milking; எளிதில் கறவாத பசுவை அசையாமல் நிறுத்திக் கறப்பதற்கு உபயோகிக்கும் இணைப்புக்கழி. *கடையாவின் கழிகோற்கைச் சறையி ஞர்* (திவ். திருவாய். 4, 8, 4). 2. Wicker basket for the mouth of a calf to prevent it from sucking; கன்று பாலுண்ணுமலிருக்க முகத்திற்கட்டும் வாய்ப் பூட்டு. (ஈடு, 4, 8, 4.)

கழிச்சல் kaḻiccal, *n.* <கழி^{1}-. 1. Diarrhœa, looseness of bowels; பேதி. 2. Extreme fear, producing instantaneous diarrhœa; பெரும்பீதி.

கழிச்சியர் kaḻicciyar, *n.* <கழி^{6}. Women of the maritime tracts; நெய்தனிலத்து மகளிர். *கழிச்சியர்க ளவரை யேனலுக்கு* (பெரியபு. திருக்குறிப் புத். 44).

கழிசடை kaḻi-caṭai, *n.*<கழி^{3}-+சடை. Person or thing that is cast away, as shaven hair; கழிக்கப்பட்ட மயிர்ச்சடைபோல இழிந்த-வன்-வள்-து. *Loc.*

கழிசல் kaḻical, *n.* <கழி^{1}-. That which is rejected; கழிக்கப்பட்டது.

கழிசறை kaḻi-caṟai, *n.* See கழிசடை. *Loc.*

கழிசிறை kaḻi-ciṟai, *n.* See கழிசடை. *Loc.*

கழித்தல் kaḻittal, *n.* <கழி^{3}-. (Arith.) Subtraction; எண்ணின்கழிப்பு.

கழித்துக்கட்டு-தல் kaḻittu-k-kaṭṭu-, *v. tr.* <id.+. 1. To evade by excuses; போக்குச் சொல்லி நெகிழவிடுதல். 2. To cast off with contempt; இகழ்ந்து ஒதுக்குதல்.

கழிந்தகாலம் kaḻinta-kālam, *n.* <கழி^{1}-+. (Gram.) Past tense; இறந்தகாலம். (நன். 144, மயிலை.)

கழிந்தார் kaḻintār, *n.* <id. 1. Poor, destitute persons; பொருளில்லாதவர். *எடுப்பிற்கிளை யுட் கழிந்தா ரெடுக்க* (நான்மணி. 82). 2. Deceased persons; இறந்தவர். *கழிந்தா ரிடுதலை* (நாலடி, 49).

கழிந்தோர் kaḻintōr, *n.* <கழி^{5}-. Very strong men; வலிமிக்கோர். *கழிந்தோ ருடற்றும்* (பதிற்றுப். 90, 5).

கழிநிலம் kaḻi-nilam, *n.* <கழி^{2} +. 1. Natural salt-pan; உப்பளம். (பிங்.) 2. Saline soil, marshy tract bordering on the sea; உவர்த் தரை. (W.)

கழிநெடில் kaḻi-neṭil, *n.* See கழிநெடிலடி.

கழிநெடிலடி kaḻi-neṭil-aṭi, *n.* <கழி^{5} +. Lit., a very long line, a line in verse containing more than five feet; ஐந்தின் மிக்க சீரால்வரும் அடி. (காரிகை, உறுப்பு. 12.)

கழிப்பணம் kaḻi-p-paṇam, *n.* See கலி பணம்.

கழிப்பாம்பு kaḻi-p-pāmpu, *n.* perh. கழி^{2}+. Kind of animal having six feet; ஆறுகாலுடைய ஒரு பிராணி. (சிலப். பக். 524, குறிப்பு.)

கழிப்பு^{1}-தல் kaḻippu-, *5 v. tr.* Caus. of கழி^{1}-. 1. To spend, pass, as time; போக்குதல். *பன்னாட் கழிப்பி* (பொருந. 111). 2. To complete; செய்து முடித்தல். *மூவேழ் துறையு முறையுளி கழிப்பி* (புறநா. 152, 20).

கழிப்பு^{2} kaḻippu, *n.* <கழி^{3}-. [M. *kaḻippu.*] 1. Expulsion, ejection; ஒழிக்கை. 2. Propitiating malignant deities by giving them offerings; சாந்திகழிக்கை. *Colloq.* 3. Blemish, defect, fault; குற்றம். (திவா.) 4. That which is cast aside, rejected; தள்ளுண்ட பொருள். (W.) 5. (Arith.) Subtraction; கழித்தல். (W.)

கழிப்புக்கழி-த்தல் kaḻippu-k-kaḻi-, *v. intr.* <கழிப்பு+. To throw away boiled rice, etc., after waving it round the head of a patient by way of averting the influence wrought by an evil eye or a malignant spirit; நோயாளி தலை யைச்சுற்றிச் சோறு முதலியவற்றைத் திருஷ்டியாகக் கழித்து எறிந்துவிடுதல்.

கழிப்புல் kaḻi-p-pul, *n.* <கழி^{2}+. A kind of grass, *Rotboellia laevis;* புல்வகை. (W.)

கழிப்பெடு-த்தல் kaḻippeṭu-, *v. intr.* <கழிப்பு+எடு-. See கழிப்புக்கழி-. *Loc.*

கழிபடர் kaḻi-paṭar, *n.* <கழி^{5}+. Great distress; மிக்க துயர். *தலைவிக்குக் காமமிக்க கழி படர் சிறந்தாற் போல்வது* (தொல். பொ. 111, பக். 472, உரை).

கழிபிறப்பு kaḻi-piṟappu, *n.*<கழி^{1}-+. Former birth; முற்பிறப்பு. (திவா.)

கழிமாந்தம் kaḻi-māntam, *n.* <id.+. Infantile diarrhœa, one of eight kinds of *māntam,* q.v.; குழந்தைகட்குப் பேதியோடுவரும் மாந்தநோய்.

கழிமுகம் kaḻi-mukam, *n.* <கழி³+. 1. River mouth; ஆறு கடலோடுகலக்கும் சங்கமுகம். (திவா.) 2. Mountain torrent, waterfall; அருவி. (சூடா.)

கழிமுட்டான் kaḻi-muṭṭāṉ, *n.* <id.+ முட்டு. A kind of grass, *Apluda aristata;* புல்வகை. (W.)

கழிமுள்ளி kaḻi-muḷḷi, *n.* <id.+. Indian nightshade. See முள்ளி. (மதுரைக். 96, உரை.)

கழிமை kaḻimai, *n.* <கழி³-. Avoidance, riddance; விலக்குகை. (சங். அக.)

கழிய kaḻiya, *adv.* <கழி⁵. Exceedingly; மிகவும். *கல்லாதா னொட்பங் கழியநன் றாயினும்* (குறள், 404).

கழியல் kaḻiyal, *n.* <கழி¹-. 1. Departing, passing; கழிகை. 2. That which is cast away, rejected; கழியப்பட்டது. (யாழ். அக.) 3. See கழிச்சல். *Loc.*

கழியவர் kaḻiyavar, *n.* <கழி³. Men of the maritime tracts; நெய்தனிலமாக்கள். *கழிய வர் கானவர்க் களித்து* (பெரியபு. திருக்குறிப். 44).

கழியுப்பு kaḻi-y-uppu, *n.*<id.+. Salt from the swamps; கடலுப்பு. (C.G.)

கழியூணன் kaḻi-y-ūṇaṉ, *n.* <கழி⁵+ஊண். Glutton; பெருந்தீனியுண்பவன்.

கழிவிரக்கம் kaḻivirakkam, *n.* <கழிவு+இரக்கம். Remorse; repentance; பச்சாத்தாபம். *கற் றூர்முற் றோன்றா கழிவிரக்கம்* (நான்மணி. 8).

கழிவு kaḻivu, *n.* <கழி¹-. [K. *kaḻivu,* M. *kaḻivu.*] 1. Passing, as time; leaving, as a place; discharging, as from the bowels; கழிந்து போகை. 2. (Gram.) Past tense; இறந்தகாலம். (நன். 145.) 3. Present age; நிகழ்காலம். *இறப் பெதிர்காலக் கழிவுமானானை* (திவ். பெரியதி. 4, 3, 2). 4. Waste, refuse, leavings, dross; that which is inferior, base, vile; கழிகடை. 5. Deduction, discount, rebate; தள்ளுபடியான தொகை. *மொத்த வட்டியிற் கழிவு எவ்வளவு?* 6. (Arith.) Remainder; மிச்சம். 7. Expiation, as of sin; பிராயச்சித்தம். *பெரும்பாவக்கழிவு* (காஞ்சிப்பு. கயிலாய. 30). 8. Destruction; அழிவு. *கழிவிலாத வாகாயம்* (பிரபுலிங். முத்தாயி. 9). 9. Death; சாவு. (சூடா.) 10. cf. கழி⁶-. Excess, abundance, surplus; மிகுதி. (திவா.) 11. (Log.) Reasoning by elimination. See பாரிசேடம். (W.)

கழிவுசரக்கு kaḻivu-carakku, *n.* <கழிவு+. Rejected goods; தள்ளுபடியான பொருள்.

கழிவெண்பிறப்பு kaḻi-veṇ-piṟappu, *n.* <கழி¹-+. (Jaina.) The final emancipation after passing through six kinds of births; அறுவகைப்பிறப்பையுங் கடந்து ஆன்மா அடையும் நிருவாண நிலை. *கழிவெண்பிறப்பிற் கலந்துவீடணைகுவர்* (மணி. 27, 155).

கழிவெளி kaḻi-veḷi, *n.* <கழி³+. Backwater; கடற்கழியுள்ள இடம். *Loc.*

கழினி kaḻiṉi, *n.* perh. கழி³-. cf. எழினி. Curtain; இடுதிரை. (திவா. MS.)

கழு¹ kaḻu, *n.* cf. *kaṣ.* (=to kill.) [K. *kaḻu.*] 1. [M. *kaḻu.*] Stake for impaling criminals; கழுமரம். *கழுவிலேறி* (தமிழ்நா. 235). 2. Trident; சூலம். (திவா.) 3. Pieces of wood sharpened at both ends, strung together and put around the neck of fierce cows when milking; கறவாத பசுவைக் கறப்பதற்கு அதன் கழுத்தில் இரண்டுதலையுஞ் சீவி மாலைபோற் கட்டியிடுங் கழி. *கழுவொடு சுடுபடை சுருக்கிய தோல்* (கலித். 106). 4. [M. *kaḻu.*] See கழுகு. *கழுக்குன்ற மமர்ந்தான் றன்னை* (தேவா. 1131, 1).

கழு² kaḻu, *n.* Green turf; புற்பற்றை. (W.)

கழுக்கடை kaḻu-k-kaṭai, *n.* <கழு¹+. 1. Impaling stake with an iron point; கழுவாயுதம். (திவா.) 2. Spike, short spear; சிறிய ஈட்டி. *பிண்டி பாலங்கள் கழுக்கடை வாட்படை* (திருவிளை. திருமண. 31). 3. Trident; சூலம். *கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியும்* (திருவாச. 2, 110).

கழுக்களம் kaḻu-k-kaḷam, *n.*<id.+. Place of execution by impaling; கழுவேற்றும் இடம்.

கழுக்காணி kaḻukkāṇi, *n.* 1. Pestle; உலக்கை. (சூடா. 1, 1, 1, ஜீ.) 2. Stout man without common sense, thick head, dullard; அறிவற்ற தடியன். *கறுத்த செங்கழுக்காணிச் சமணரே* (திருவாலவா. 38, 51). 3. Indian kino tree; வேங்கை மரம். (சூடா. 1, 1, 1, ஜீ.) 4. Lotus; தாமரை. (சூடா. 1, 1, 1, ஜீ.)

கழுக்குமொழுக்கெனல் kaḻukku-moḻuk-keṉal, *n.* Expr. signifying corpulence, fatty appearance; உடல் மிகப்பருத்திருத்தற் குறிப்பு.

கழுக்கோல் kaḻu-k-kōl, *n.* <கழு¹+. [M. *kaḻukkōl.*] 1. Impaling stake; கழுமரம். *வேன் மழுக் கடைத்தலைக் கழுக்கோல்* (திருவாலவா. 39, 19). 2. See கழு¹, 3. (சிலப். 15, 211, உரை.)

கழுகண்டு kaḻukaṇṭu, *n.* cf. கழகண்டு. Refractory person; வணங்காத்தலையன். (யாழ். அக.)

கழுகி kaḻuki, *n.* cf. *guḍūcī.* Moon creeper, bile-killer. See சீந்தில். (மலை.)

கழுகு kaḻuku, *n.* cf. *kaṣ.* [M. *kaḻu.*] 1 Griffin vulture, *Gyps indicus;* பிணந்தின்னிக் கழுகு. *கழுகொடு செஞ்செவி யெருவை திரிதரும்* (புறநா. 370, 25). 2. Pharaoh's chicken, *Neophrc gingimanus;* பறவைவகை. 3. Eagle, *Aquilinc falconidæ;* பொன்னிறக்கழுகு.

கழுகுப்பொறி kaḻuku-p-poṟi, *n.* <கழுகு+. Ancient machine in the shape of an eagle mounted on a fort for defence; கோட்டை மதிலில் வைக்கப்படும் கழுகின் உருவமுள்ள யந்திரம். (சிலப். 15, 216, உரை.)

கழுகுழு-த்தல் kaḻukuḻu-, *11 v. intr.* To feel damp and chilly; ஈரத்தால் தரைமுதலியன நோதுநோதுத்தல். (யாழ். அக.)

கழுச்சிறையன் kaḻu-c-ciṟaiyaṉ, *n.* <கழு[1] +. One who deserves impaling; கழுவேற்றப் படத்தக்கவன். (W.)

கழுசி kaḻuci, *n.* <*guḍūci.* cf. களுசி. Moon creeper. See சீந்தில்.

கழுத்தல் kaḻuttal, *n.* perh. கழி[3]-. Lie; பொய். (W.)

கழுத்தறு-த்தல் kaḻuttaṟu-, *v. tr.* <கழுத்து +அறு[3]-. Lit., to cut the throat, to harass, injure; பெருந்துன்பத்துக்கு உள்ளாக்குதல்.

கழுத்தறுப்பு kaḻuttaṟuppu, *n.* <id.+. Distress, trouble, as if the throat is being cut; பெருந் துன்பம். *அவன் அதில் தலையிட்டிருப்பது எனக்குக் கழுத்தறுப்புத்தான்.*

கழுத்திரு-த்தல் kaḻuttiru-, *v. intr.* <id. +. To press down with a heavy load, as the neck; பாரத்தாற் கழுத்து அழுங்குதல். *சுமையாற் கழுத்திருந்துவிட்டது.*

கழுத்திற்கட்டு-தல் kaḻuttiṟ-kaṭṭu-, *v. tr.* <id.+. To consign to one's care against one's wishes, as a family which one cannot or will not maintain; ஒருவனை நிர்ப்பந்தித்துப் பொறுப்பாளியாக்குதல். *Colloq.*

கழுத்து kaḻuttu, *n.* prob. கெழு-மை. cf. *gala.* [K. *kattu,* M. *kaḻuttu.*] 1. Neck; கண்டம். (திவா.) 2. Elevation on, or depression in, the floor suitable for placing big pots; பூமியில் பானைமுதலியன வைத்தற்கேற்ற இடம். *பாரிற் கழுத்தானவிடத்தே வைத்த மிடா* (பெரும்பாண். 57, உரை).

கழுத்துக்கட்டி kaḻuttu-k-kaṭṭi, *n.*<கழுத்து+. 1. Tumour of the neck; கழுத்துக்கழலை. 2. Obstacle, impediment; இடையூறு. *ஜ்ஞாக பக்திகளிரண்டும் கழுத்துக்கட்டியாய் விட்டன* (ஈடு, 4, 7, 10). 3. Woollen wrap for the neck; கழுத்துக்குட்டைவகை.

கழுத்துக்குக்கத்தி kaḻuttukku-k-katti, *n.* <id.+. Person or thing feared, as a fatal knife; நாசத்தை உண்டாக்கக்கூடிய-வன்-வள்-து. *Colloq.*

கழுத்துக்குட்டை kaḻuttu-k-kuṭṭai, *n.* <id.+. Neck-tie, cravat; அங்கிக்குமேலே கழுத்தைச்சுற்றிக் கட்டுங் துணி.

கழுத்துக்கொடு-த்தல் kaḻuttu-k-koṭu-, *v. intr.* <id. + . 1. To risk one's life for the sake of others; தன்வருத்தம்பாராமல் பிறர் காரியத்தைத் தான் ஏற்றுநிற்றல். 2. To commit a heinous crime likely to bring about one's own destruction; உயிர்க்கு இறுதிதரக்கூடிய குற்றத்தைப் புரிதல். (W.) 3. To be married; வாழ்க்கைப்படுதல். *Loc.*

கழுத்துக்கோல் kaḻuttu-k-kōl, *n.* <id.+. Balance resembling a steel-yard for weighing vegetables, etc. See கயிற்றுக்கோல். (G. Tj. D. I, 133.)

கழுத்துச்சட்டை kaḻuttu-c-caṭṭai, *n.* <id. +. A girl's jacket; பெண்களின் அங்கிவகை. (J.)

கழுத்துசந்து kaḻuttu-c-cantu, *n.* <id. +. Nape of the neck; கழுத்தின்பூட்டு. (திவா.)

கழுத்துத்திருகு-தல் kaḻuttu-t-tiruku-, *v. tr.* <id.+. *Colloq.* 1. To wring the neck, as of a fowl; கழுத்தைமுறித்தல். 2. Lit., to twist the head, to persecute; நிர்ப்பந்தித்தல்.

கழுத்துப்பட்டிகை kaḻuttu-p-paṭṭikai, *n.* <id.+. See கழுத்துப்பட்டை.

கழுத்துப்பட்டை kaḻuttu-p-paṭṭai, *n.* <id.+. 1. Collar of a cloak; சட்டையின் கழுத்தைச்சுற்றித் தைத்திருக்கும் பட்டைத்துணி. 2. See கழுத்துக்கட்டி, 3.

கழுத்துப்பிடிப்பு kaḻuttu-p-piṭippu, *n.* <id. + . Stiff neck, torticollis; கழுத்துச் சுளுக்கு.

கழுத்துமணி kaḻuttu-maṇi, *n.* <id.+. A kind of necklace; கழுத்தணிவகை.

கழுத்துமுடிச்சு kaḻuttu-muṭiccu, *n.* <id. +. Adam's apple, projection formed by the thyroid cartilage in the neck; குரல்வளை. (C.G.)

கழுத்துமுறி-த்தல் kaḻuttu-muṟi-, *v. intr.* <id.+. To express dissent by turning the neck; அசம்மதக் குறியாகக் கழுத்தைத் திருப்பிக்கொள்ளுதல். *Loc.*

கழுத்துரு kaḻutturu, *n.* <id.+உரு[3]. Pieces of gold of various shapes and sizes forming the accompaniments of the *tāli;* திருமங்கலியத்தோடு கோக்கும் பலவகையான தங்க உருக்கள்.

கழுத்துவெட்டி kaḻuttu-veṭṭi, *n.* <id.+. Cut-throat, murderer, assassin; கொலைகாரன். (W.)

கழுத்தூட்டி kaḻuttūṭṭi, *n.* <id.+ஊட்டி. Throat; தொண்டை. (W.)

கழுத்தேறுதண்டம் kaḻuttēṟu-taṇṭam, *n.* <id.+ஏறு-+. Capital punishment; சிரச்சேதம்.

கழுத்தைக்கட்டு-தல் kaḻuttai-k-kaṭṭu-, *v. tr.* <id.+. Lit., to press the neck, to importune, trouble unceasingly, harass; விடாது நிர்ப்பந்தித்தல். அந்தக்குடும்பம் என் கழுத்தைக்கட்டிக் கொண்டு வருத்துகிறது.

கழுதாழி kaḻutāḻi, *n.* <கழுது + ஆழி See கழுதிரதம். எழுகழுதாழியி னிடையே (பகவற். சாங்கிய. 22).

கழுதிரதம் kaḻutiratam, *n.* <id. + இரதம். Lit., the devil's chariot, mirage; பேய்த்தேர். கனைக் கழுதிரதம் (சி. சி. 6, 3).

கழுது kaḻutu, *n.* 1. Demon; பேய்வகை. கூற்றக் கொஃறேர் கழுதொடு கொட்ப (மதுரைக். 633). 2. Elevated platform from which fields are guarded against damage from beasts and birds; காவற்பரண். சேணோ னிழைத்த நெடுங்காற் கழுதில் (நற். 276). 3. Beetle; வண்டு. (திவா.)

கழுதுக்குத்தி kaḻutukkutti, *n.* See கடிச்சை[1]. (L.)

கழுதும்பை kaḻu-tumpai, *n.* Dial. var. of கவிழ்தும்பை.

கழுதை kaḻutai, *n.* cf. *gardabha.* [T. *gādida*, K. *kaḻte*, M. *kaḻuta*, Tu. *katte.*] Domestic ass, donkey, *Equus asinus;* ஒரு விலங்கு. வெள்வாய்க் கழுதைப் புல்லினம் (புறநா. 392, 9).

கழுதைக்கரணம் kaḻutai-k-karaṇam, *n.* <கழுதை+. (Astrol.) A division of time. See தைதுலம்.

கழுதைக்குடத்தி kaḻutai-k-kuṭatti, *n.* <id.+. See கழுதைப்புலி.

கழுதைகடி kaḻutai-kaṭi, *n.* House with one corner under repair, considered inauspicious; ஒருமூலை இடிந்த வீடு. (யாழ். அக.)

கழுதைத்திசை kaḻutai-t-ticai, *n.* <கழுதை +. (Astrol.) North-west direction; வடமேற்குத் திசை.

கழுதைத்தும்பை kaḻutai-t-tumpai, *n.* <id.+. A low annual plant with many hispid branches, flourishing in dry situations, *Trichodesma indicum;* தும்பைச்செடிவகை. (பதார்த்த. 309.)

கழுதைப்பாலை kaḻutai-p-pālai, *n.* <id. +. Indian ipecacuanha, m. cl., *Tylophora asthmatica;* நச்சறுப்பான்கொடி. (L.)

கழுதைப்புலி kaḻutai-p-puli, *n.* <id.+. [M. *kaḻutappuli.*] Hyena, *Hyaena striata;* கடுவாய் விலங்கு.

கழுதைமுள்ளி kaḻutai-muḷḷi, *n.* <id.+. [M. *kaḻumuḷ.*] Holly-leaved bear's-breech, m. sh., *Acanthus ilicifolius;* செடிவகை. (L.)

கழுதையாட்டம் kaḻutai-y-āṭṭam, *n.* <id. +. A game at cards. See தலைவாரி. *Colloq.*

கழுதையூர்தி kaḻutai-y-ūrti, *n.* <id.+. Goddess of ill-luck who rides an ass; மூதேவி. (பிங்.)

கழுதைவண்டு kaḻutai-vaṇṭu, *n.* <id.+. A species of beetle; ஒருவகைவண்டு.

கழுதைவாகினி kaḻutai-vākiṉi, *n.* <id.+ *vāhanī.* See கழுதையூர்தி. நிணத்தசையில் வீழும் . . . கழுதைவாகினி பதாகை (இரகு. திக்கு. 112).

கழுதைவிரியன் kaḻutai-viriyaṉ, *n.* <id. +. A viper, black, slow in movement, growing to a large size, of deadly bite; விரியன் பாம்பு வகை.

கழுந்தன் kaḻuntaṉ, *n.* <கழுந்து. Stout person without brains, as the smooth end of a pestle; கழுந்துபோற் பருத்து அறிவுமழுங்கினவன். கழுந்தரா யுனகழல் பணியாதவர் (கம்பரா. தனியன். 9).

கழுந்தாக்கு-தல் kaḻuntākku-, *v. intr.* <id. +. To make tenons for dovetailing; பலகையின் பொருத்துவாய் உண்டாக்குதல். (W.)

கழுந்து kaḻuntu, *n.* prob. கெழு-மை. [M. *kaḻunnu.*] 1. Rounded end, as of a pestle or of a bow; உலக்கை வில் முதலியவற்றின் திரண்ட நுனி. கழுந்துடை வரிசிலை (கம்பரா. கிளை. 26). 2. Rashness, rudeness; முரட்டுத்தனம். கழுந்துறு மவுணர் (கந்தபு. காசிபன்பு. 25). 3. Heart or core of a tree; மரவைரம். (W.) 4. Tenon; பொருத்துக்கூர். கழுந்தாக்குதல். (யாழ். அக.)

கழுநர் kaḻunar, *n.* <கழுவு-. Those who wash away dirt or sin; அழுக்கு பாவம் முதலியவை கழுவுவோர். பாரகங் கழுநர்போல (சீவக. 2771).

கழுநீர்[1] kaḻu-nīr, *n.* perh. கெழு-மை + நீர்-மை. 1. Purple Indian water-lily. See செங்குவளை. கழுநீர்மாலை . . . அணிந்தும் (திருவாச. 2, 113). 2. Blue Indian water-lily. See நீலோற்பலம். கழுநீரிருவரும்பன்ன நின்கண்கண்டு வாடும் (மருதா. 96).

கழுநீர்[2] kaḻu-nīr, *n.* <கழுவு- +. 1. Water in which rice has been washed; அரிசிகழுவிய நீர். கழுநீருட் காரடகேனும் (நாலடி, 217). 2. Sacred water for cleansing away sin, as that of the Ganges; தீவினையைக் கழுவுதற்குக் காரணமான தீர்த்த நீர். கழுநீர் கொண்ட வெழுநா ளந்தி (மதுரைக். 427).

கழுப்பற்றை kaḻu-p-paṟṟai, *n.* <கழு[2]+. Tuft of grass, turf; புற்கரடு. (W.)

கழுமணி kaḻu-maṇi, *n.* <கழுவு- +. Spotless gem; polished gem; கடைந்து சுத்தஞ்செய்யப்பட்ட இரத்தினம். கழுமணியே யின்னுங் காட்டு கண்டாய் (திருவாச. 6, 27).

கழுமம் kaḻumam, *n.* <கழுமு-. Fault; குற்றம். கழுமமி னெஞ்சகம் (காஞ்சிப்பு. பன்னிரு. 93).

கழுமரம் kaḻu-maram, *n.* <கழு¹+. Impaling stake; கழுவேற்றுதற்கு நடப்பட்ட மரம்.

கழுமல் kaḻumal, *n.*<கழுமு-. 1. Confusion, fascination, delusion; மயக்கம். *கழுமலெய்திய காதற் றோழன்* (திருக்கோ. 28, கொளு). 2. Seizing; பற்றுகை. (சூடா.) 3. Fulness; நிறைவு. (சூடா.) 4. Abundance; மிகுதி. (சூடா.)

கழுமலம் kaḻu-malam, *n.* <கழுவு-+. 1. One of the names for Shiyali, a Śaiva shrine in Tanjore District, as that which washes away sin; சீகாழி. *கழுமலத்தினுட் கடவுள்பாதமேகருது ஞான சம்பந்தன்* (தேவா. 149, 12). 2. Name of an ancient town in the Cera country; சேரநாட்டுள்ளதோர் ஊர். *நற்றேர்க் குட்டுவன் கழுமலத் தன்ன* (அகநா. 270).

கழுமு¹-தல் kaḻumu-, *5 v. intr.* 1. To join, unite; சேர்தல். *பெண்டிர் . . . செந்தீக் கழுமினர்* (பு. வெ. 7, 28). 2. To be fitting, suited; பொருந்தியதாதல். *கழுமிய காதல்* (பு. வெ. 10, முல்லைப். 5, கொளு). 3. To come together; to crowd; திரளுதல். *மென்புகை கழுமு சேக்கை* (சீவக. 1350). 4. To mix together; கலத்தல். *கழுமிய ஞாட்பு* (தொல். சொல். 351, உரை). 5. To be full, complete; நிறைதல். *கழுமிற்றுக் காதல்* (சீவக. 1870). 6. To be abundant, copious, plentiful; to overflow; மிகுதல். (சூடா.) 7. To be fascinated, bewildered, confused; மயங்குதல். *கழுமிக் கோதை கண்படுக்கும்* (சீவக. 349).

கழுமு² kaḻumu, *n.* <கழுமு-. 1. Combination, mixture; கலப்பு. (தொல். சொல். 351.) 2. Denseness, as of the tuft of hair; திரட்சி. (தொல். சொல். 351, உரை.)

கழுமுள் kaḻu-muḷ, *n.* <கழு¹+. 1. See கழுக்கடை, 1. (சூடா.) 2. Weapon; ஆயுதம். (திவா.) 3. Pomegranate. See மாதுளை. (திவா.)

கழுமோது-தல் kaḻu-mōtu-, *v. intr.* <கழு²+. To cover the ground with green sods, to turf; தரையிற் புற்பற்றை அடித்தல்.

கழுவடிக்கறுப்பன் kaḻu-v-aṭi-k-kaṟuppaṉ, *n.* See கழுவடியான்.

கழுவடியான் kaḻu-v-aṭiyāṉ, *n.* <கழு¹+அடி. A demon represented by a pole of the height of a man, on a raised platform beside an impaling stake; கழுவடியில் மனிதனுயரமான கழியில் தாபிக்கப்பட்டுள்ள ஒரு சிறுதேவதை. *Loc.*

கழுவறை-தல் kaḻu-v-aṟai-, *v. intr.* <கழு²+. See கழுமோது-. *Loc.*

கழுவன் kaḻuvaṉ, *n.* <கழு¹. Daring villain, wretch, as deserving the stake; பெருந்துஷ்டன். *அவன் கழுவனைச் சாதிக்கிறான்.* *Colloq.*

கழுவாணி kaḻu-v-āṇi, *n.* <id.+ஆணி. Iron point of an impaling stake; கழுவிலுள்ள இருப்பு முள். (W.)

கழுவாநெஞ்சன் kaḻuvā-neñcaṉ, *n.* prob. id.+ஆம்+. Hard-hearted man; நெஞ்சுரமுள்ளவன். *Loc.*

கழுவாய் kaḻu-vāy, *n.* <கழுவு- + வாய். Purification, expiation from sin; பிராயச்சித்தம். *வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென* (புறநா. 34, 4).

கழுவாய்நிலம் kaḻu-vāy-nilam, *n.*<கழு²+வாய்-+. Green fields from which sods are taken; புற்பற்றை எடுக்கக்கூடிய நிலம். (W.)

கழுவிக்குளிப்பாட்டு-தல் kaḻuvi-k-kuḷi-ppāṭṭu-, *v. tr.* <கழுவு-+. To wash a corpse; பிணத்தை நீராற் கழுவுதல். *Loc.*

கழுவிழுங்கி kaḻu-viḻuṅki, *n.* <கழு¹+. Sluggard; சோம்பேறி. *Loc.*

கழுவு-தல் kaḻuvu-, *5 v. tr.* [T. *kaḍugu*, M. *kaḻuku.*] 1. To wash, cleanse by washing, rinse, purify; நீராற் சுத்தஞ்செய்தல். *கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால்* (குறள், 840). 2. To melt and mould, as metal; வட்டாக உருக்குதல். *இரும்பறக் கழுவி* (சீவக. 698). 3. To remove; நீக்குதல். *அருவினை கழூஉ மாதி முதல்வன்* (மணி. 12, 36).

கழுவுணி kaḻu-v-uṇi, *n.* <கழு¹+உண்-. See கழுவிழுங்கி.

கழுவுநீர் kaḻuvu-nīr, *n.*<கழுவு-+. Lotion; புண்கழுவும் மருந்துநீர். *Mod.*

கழுவுப்பற்றை kaḻuvu-p-paṟṟai, *n.* <கழு²+. See கழுப்பற்றை.

கழுவெளி kaḻu-veḷi, *n.* <id.+. See கழுவாய்நிலம். (W.)

கழுவேற்றம் kaḻu-v-ēṟṟam, *n.*<கழு¹+ஏற்று-. Impalement; கழுவில் ஏற்றுகை.

கழுவேற்று-தல் kaḻu-v-ēṟṟu-, *v. tr.*<id.+. To impale; கழுவினில் ஏற்றிக் கொல்லுதல். *வெங்கழுவேற்றுவா னிவ்வேந்தனே* (பெரியபு. திருஞான. 798).

கழுவேறி kaḻu-v-ēṟi, *n.* <id.+ஏறு-. [M. *kaḻuvēṟi.*] 1. A malefactor, one impaled; கழுவேறினவன். 2. See கழுவன். (W.)

கழுவேறு-தல் kaḻu-v-ēṟu-, *v. intr.* <id.+. 1. To be impaled; கழுவிலேறிச் சாதல். 2. To partake voluntarily in another's sufferings through friendship; பிறனது வருத்தந் தாங்குதல். (W.)

கழை kaḻai, *n.* cf. கழி³-. [T. *gaḍa*, M. *kala.*] 1. Spiny bamboo; மூங்கில். (திவா.) 2. Bamboo bottle; மூங்கிற்குழாய். *கழைபெய் தீந்தயிர்* (மலைபடு. 523). 3. Musical bamboo-pipe; வேய்ங்குழல். *கண்ணன் மலர்வாய்க் கழையெறிந்து* (சிவப். பிரபந். வெங்கையு. 98). 4. Pole used for propelling boats; ஓடக்கோல். *கழைநிலை பெறுஅக் காவிரி நீத்*

தம் (அகநா. 6). 5. Elephant-goad; குத்துக்கோல். கழைகாண்டலுஞ் சுளியுங் களியானை (திருக்கோ. 111). 6. Sugar-cane; கரும்பு. (திவா.) 7. Stem of sugar-cane; shaft of a bamboo; தண்டு. நெடுவரை யாடுகழை யிருவெதிர் (அகநா. 27). 8. The seventh *nakṣatra*. See புனர்பூசம். (பிங்.)

கழைக்கூத்தன் kaḻai-k-kūttaṉ, *n.* <கழை + See கழைக்கூத்தாடி. (திவா.)

கழைக்கூத்தாடி kaḻai-k-kūttāṭi, *n.* <id. +. Pole-dancer, rope-dancer; கழையில் நின்று கூத்தாடுவோன்.

கழைக்கூத்து kaḻai-k-kūttu, *n.* <id.+. Pole-dancing; கழையினின்றாடுங் கூத்து. மோகன மாடக் கழைக்கூத்தாட (தனிப்பா. i, 235, 1).

கழைந்து kaḻaintu, *n.* <கழஞ்சு. See கழஞ்சு. (T.A.S. i, 9.)

கழைநெல் kaḻai-nel, *n.*<கழை+. Bamboo-seed; மூங்கிலரிசி. போகுயர் நீள்கழை நெல்லும் (சீவக. 1422).

கள்[1]**-தல்** [**கட்டல்**] kaḷ-, *9 v.tr.* [K. M. *kaḷ.*] 1. To weed; களைபிடுங்குதல். கட்டபி னீரினு நன்றதன் காப்பு (குறள், 1038). 2. To pluck; பறித்தல். (சூடா.) 3. To rob, steal; திருடுதல். கட்போ ருளரெனின் (சிலப். 5, 115). 4. To deceive, entertain furtive designs upon; வஞ்சித்தல். (W.)

கள்[2] kaḷ, *n.* <கள்-. [K. *kaḷ.*] Stealing, theft, robbery; களவு. (சூடா.)

கள்[3] kaḷ, *n.* cf. *kalyā.* [T. *kallu*, K. M. *kaḷ*, Tu. *kali.*] 1. Toddy, vinous liquor; மது. கட்காதல் கொண்டொழுகுவார் (குறள், 921). 2. The saccharine juice formed in flowers; honey; தேன். கள்ளார்ந்த பூங்கொன்றை (தேவா. 158, 1). 3. Bee; வண்டு. கள்ளின மார்த்துண்ணும் வண்கொன்றை யோன் (திருக்கோ. 295).

கள்[4] kaḷ, *part.* [K. *kaḷ.*] 1. A plural ending; பன்மைவிகுதி. வாய்ச்சொற்க ளென்ன பயனு மில (குறள், 1100). 2. An expletive; அசைநிலை. சுட்டிக்கெங்களன்றே (சீவக. 2773).

கள்வம் kaḷvam, *n.* <கள்-. [M. *kaḷḷam.*] Act of thieving; திருட்டுச்செயல். கண்ணன் கள்வங்களே (திவ். திருவாய். 9, 6, 5).

கள்வன்[1] kaḷvaṉ, *n.* <id. 1. cf. *kalama.* [M. *kaḷavaṉ*, Tu. *kaḷvĕ.*] Thief, robber; திருடன். என்னுள்ளங் கவர் கள்வன் (தேவா. 61, 1). 2. Dark black person; கரியவன். (பிங்.) 3. Mediator; நடுச்சொல்வோன். (பிங்.) 4. Lungoor, *Semnopithecus priamus*; முசு. (பிங்.) 5. cf. களவன். Crab; நண்டு. புள்ளிக்கள்வன் (ஐங்குறு. 21). 6. Cancer of the zodiac; கர்க்கடகம். (திவா.)

கள்வன்[2] kaḷvaṉ, *n.* <*kalabha.* Elephant; யானை. (பிங்.)

கள்விலைஞன் kaḷ-vilaiñaṉ, *n.* <கள்[3]+. Toddy-seller; கள்விற்போன். (திவா.)

கள்விலையாட்டி kaḷ-vilai-y-āṭṭi, *n.* <id. +. She who sells toddy; கள்விற்பவள். கள்விலையாட்டி மறுப்பப் பொருமறவன் (சிலப். 12, உரைப்பாட்டுமடை, 13, பாடல்).

கள்ள kaḷḷa, *n.* prob. கள்-. A particle of comparison; ஓர் உவமவுருபு. கள்ள மதிப்ப வெல்ல வீழ (தொல். பொ. 289).

கள்ளக்கடவு kaḷḷa-k-kaṭavu, *n.* <கள்ளம் +கடவு. Secret passage; திருட்டுவழி.

கள்ளக்கடை[1] kaḷḷa-k-kaṭai, *n.* <id.+. A repository of stolen goods; திருட்டுச்சாமான் களை விற்கும் கடை.

கள்ளக்கடை[2] kaḷḷa-k-kaṭai, *n.* <id.+ கட-. See கள்ளக்கடவு.

கள்ளக்கத்தி kaḷḷa-k-katti, *n.* < id. +. Hollow cane, with a knife inside it; உள்ளே கத்தியுள்ள கைத்தடி.

கள்ளக்கதவு kaḷḷa-k-katavu, *n.* <id.+. Trap-door; பிறரறியாமற் செல்லுதற்குரிய கதவுள்ள வாயில். (C.E.M.)

கள்ளக்கப்பல் kaḷḷa-k-kappal, *n.* <id.+. Vessel of pirates; கடற்கொள்ளைக்காரர்க்குரிய கப்பல். (W.)

கள்ளக்கப்பற்காரன் kaḷḷa-k-kappaṟ-kā-raṉ, *n.*<id.+. Pirate; கடற்கொள்ளையடிப்போன்.

கள்ளக்கயிறு kaḷḷa-k-kayiṟu, *n.* <id.+. 1. Ring or cord for holding articles firm in an *uṟi*; உறியின் சுருக்குக்கயிறு. உறிகளிலே சேமித்துக் கள்ளக் கயிறுருவிவைத்த (ஈடு, 2, 3, 8). 2. Cord for opening and closing a bag or purse; பையின் சுருக்குக் கயிறு.

கள்ளக்கவறு kaḷḷa-k-kavaṟu, *n.* <id.+. False dice; கள்ளச் சூதுகருவி. (W.)

கள்ளக்கவி kaḷḷa-k-kavi, *n.* <id.+. 1. One who palms off another's poetical composition as one's own, plagiarist-poet; பிறனொருவனது பாட்டைத் தனதென்று காட்டுபவன். 2. He who transfers a poem composed in honour of one to another; ஒருவனுக்காகப் பாடிய பாட்டை மற்றொருவனுக்குக் கோடுப்போன். (வெண்பாப். செய். 48, உரை.)

கள்ளக்காசு kaḷḷa-k-kācu, *n.* <id.+. See கள்ளநாணயம்.

கள்ளக்காமம் kaḷḷa-k-kāmam, *n.* <id.+. Feigned or pretended love to gain some ulterior object; காரியத்தின்பொருட்டு மேற்கொண்ட போலிக்காமம். கரும நுதலிய கள்ளக்காமம் (பெருங். உஞ்சைக். 35, 228).

கள்ளக்காய்படு-தல் kaḷḷa-k-kāy-paṭu-, *v. intr.* <id.+. To fail in the process of ripening fruits by smoke; பழுக்கவைத்த காய் பழுக்காமற் போதல். (W.)

கள்ளக்கிடை kaḷḷa-k-kiṭai, *n.* <id.+. 1. Malingering, feigning sickness or sleep; துயில் பவன் நோயாளி முதலியவர்போலப் படுத்துக்கிடக்கை. 2. Lying in ambush; மறைந்து பதுங்கியிருக்கை. (W.)

கள்ளக்குணம் kaḷḷa-k-kuṇam, *n.* <id.+. 1. False, insidious, deceptive disposition, in man or beast; திருட்டுக்குணம். 2. Insidiousness, as in boils or diseases; changeableness, as in weather, wind or sea; மாறன தோற்றம். (W.)

கள்ளக்கும்பிடு kaḷḷa-k-kumpiṭu, *n.* <id. +. See கள்ளக்கும்பீடு. *Colloq.*

கள்ளக்கும்பீடு kaḷḷa-k-kumpīṭu, *n.* <id. +கும்பிடு-. Hypocritical civility; வஞ்சனையாகச் செய்யும் வணக்கம்.

கள்ளக்கையெழுத்து kaḷḷa-k-kai-y-eḻuttu, *n.*<id.+. Forged signature, forgery; மாறாட்டமான கைச்சாத்து.

கள்ளக்கோல் kaḷḷa-k-kōl, *n.* <id.+. [M. *kaḷḷakkōl.*] False balance; அளவைத் தவறாக நிறுத்துக்காட்டுந் தராசு.

கள்ளங்கவடு kaḷḷaṅ-kavaṭu, *n.* <id.+. Cunning, deceitful disposition; சூதுவாது.

கள்ளங்காய்படு-தல் kaḷḷaṅ-kāy-paṭu-, *v. intr.* <id.+. 1. To reach an acute or aggravated stage, as a sore at almost the healing point when carelessly scratched or badly dressed; ஆறிவரும்சமயத்தில் சொறிதல் முதலியவற்றால் புண் புடைகொள்ளுதல். 2. To be thwarted in the accomplishment of a plan by premature disclosure; காரியக்கேடு உண்டாதல்.

கள்ளச்சத்தியம் kaḷḷa-c-cattiyam, *n.* <id. +. [M. *kaḷḷassatyam.*] False oath, perjury; பொய்யாணை.


கன்னுன் kannān, *n.* <கன்[1]. [M. *kannān.*] Brazier, bell-metal worker, one of the divisions of the Kammāḷa caste; செம்புகொட்டி. (திவா.)

கன்னி kanni, *n.* <*kanyā.* [T. K. *kanne*, M. *kanni.*] 1. Virgin, maiden, young unmarried woman; குமரி. *கன்னிதன்னைப் புணர்ந்தாலும்* (சிலப். 7, மன்னுமாலை.). 2. Youthfulness, tenderness, juvenility, virginity; இளமை. *கன்னிப் புன்னை* (திருக்கோ. 177). 3. Freshness; புதுமை. *கன்னிசீலக்கட் கன்னி* (சீவக. 900). 4. State of being earliest in time; முதன்முதலான நிகழ்ச்சி. *கன்னிப்போர்.* 5. Imperishable state; அழிவின்மை. *கன்னிமா மதில்சூழ் கருவூர்* (திவ். பெரியதி. 2, 9, 7). 6. Woman; பெண். (சூடா.) 7. Female ascetic; தவப்பெண். (சூடா.) 8. Female possessing perpetual youth, as celestials; என்றும் இளமையழியாத பெண். *சத்தகன்னியர்.* (பிங்.) 9. Durgā; துர்க்கை. *கன்னிசெங்கோட்டம்* (கல்லா. 58). 10. Pārvatī; பார்வதி. (பிங்.) 11. Name of a river that flowed in ancient times, south of Cape Comorin; குமரியாறு. *கன்னியழிந்தனள் கங்கை திறம்பினள்* (தமிழ்நா. 81). 12. Virgo, a zodiacal sign; கன்னியாராசி. (பிங்.) 13. The month *Puraṭṭāci;* புரட்டாசி. (தைலவ. பாயி. 55.) 14. The 13th *nakṣatra.* See அத்தம்[8]. (திவா.) 15. A principal tubular vessel of the human body, one of *taca-nāṭi*, q.v.; தசநாடியிலொன்று. (சிலப். 3, 26, உரை.) 16. Aloe. See கற்றாழை. (சூடா.) 17. Mussell-shell creeper. See காக்கணம். (திவா.)

கன்னிக்காய்ச்சல் kanni-k-kāyccal, *n.* <கன்னி +. [M. *kannikāccal.*] Scorching rays of the September sun; hot September; புரட்டாசிமாதத்தில் காயும் வெயில்மிகுதி.

கன்னிக்கால் kanni-k-kāl, *n.* <id. +. 1. First post set up in the wall of a new house, facing south and decked with a woman's cloth; புதுவீட்டின்மதிலில் தென்முகமாக முதலில்நாட்டுஞ் சீலைசுற்றிய தம்பம். (W.) 2. The first marriage-post erected in the south-west portion of a house; கலியாணமுகூர்த்தக்கால். 3. Branch channel; வாய்க்காலிலிருந்து வெட்டிய சிறுகால். *Loc.*

கன்னிக்காவல் kanni-k-kāval, *n.* <id. +. Virgin's chastity, maiden modesty; கன்னிப்பருவத்துக் காக்குங் கற்பு. *கன்னிக்காவலுங் கடியிற் காவலும்* (மணி. 18, 98).

கன்னிக்கிழங்கு kanni-k-kilaṅku, *n.* prob. id. +. Indian shrubby copper-leaf. See சின்னி. (மலை.)

கன்னிக்குட்டி kanni-k-kuṭṭi, *n.* <id. +. First-born kid or lamb; முதலீற்று ஆட்டுக்குட்டி. (J.)

கன்னிக்கோரை kanni-k-kōrai, *n.* <id. +. A kind of sedge; கோரைவகை.

கன்னிக்கோழி kanni-k-kōli, *n.* <id. +. Pullet arrived at maturity; முட்டையிடத் தொடங்கியுள்ள இளம்பெட்டைக்கோழி.

கன்னிகம் kannikam, *n.* Black nightshade. See மணித்தக்காளி. (மலை.)

கன்னிகழி-தல் kanni-kali-, *v. intr.* <கன்னி +. To pass from maidenhood to married state; மணம்புரியப்பெறுதல்.

கன்னிகாதானம் kannikā-tānam, *n.* <*kanyakā* + *dāna.* Giving away a virgin in marriage, one of *muppattiranṭaram*, q.v.; கன்னியை ஆடவனுக்கு மணம்புரிந்து கொடுக்கும் அறம். (பிங்.)

கன்னிகாமடம் kannikā-maṭam, *n.* <id. +. See கன்னியாஸ்திரீமடம். *Chr.*

கன்னிகாரம் kannikāram, *n.* <*karṇikāra.* False tragacanth. See கோங்கு. *கன்னிகாரத்து . . . ஒருத்தி தோன்றி* (சிலப். 11, 110).

கன்னிகுமரி kanni-kumari, *n.* <கன்னி +. See கன்னியாகுமரி. *கன்னி குமரிமுதற் றீர்த்தமெல்லாம்* (திருக்காளத். பு. கடவுள்வா. 16).

கன்னிகை[1] kannikai, *n.* <*kanyakā* Virgin; குமரி.

கன்னிகை[2] kaṉṉikai, *n.* < *karṇikā.* (பிங்.) 1. Pericarp of the lotus; தாமரைக்கொட்டை. 2. Flower bud; பூவின்மொட்டு.

கன்னிச்சவ்வு kaṉṉi-c-cavvu, *n.* < கன்னி +. Virginal membrane stretched across the external orifice of the vagina, hymen; கன்னிமை நீங்குதற்குமுன் யோனியை மூடியுள்ள சவ்வு. (W.)

கன்னிச்செவ்வாய் kaṉṉi-c-cevvāy, *n.* < id. +. Mars in the zodiacal sign, Virgo, indicating drought and famine; கன்னிராசியிற் பிரவேசித்த செவ்வாய். *கன்னிச்செவ்வாயிற் கடலும் வற்றும்.*

கன்னித்தமிழ் kaṉṉi-t-tamiḻ, *n.* < id. +. Immortal Tamil; அழிவில்லாத தமிழ்மொழி. *கன்னித்தமிழோர் கம்பலை யென்ப* (திவா. 11).

கன்னித்திசை kaṉṉi-t-ticai, *n.* < id. +. South-west; தென்மேற்குமூலை. *Colloq.*

கன்னித்தீட்டு kaṉṉi-t-tīṭṭu, *n.* < id. +. Ceremonial pollution at the attainment of puberty by a girl; முதற்பூப்புக்கு உரிய தீட்டு.

கன்னித்தேங்காய் kaṉṉi-t-tēṅ-kāy, *n.* < id. +. First fruit of a coconut tree; தென்னையின் முதற்காய். (யாழ். அக.)

கன்னிநகர் kaṉṉi-nakar, *n.* < id. +. See கன்னிமாடம். (கம்பரா. மிதிலைக். 82.)

கன்னிநாகு kaṉṉi-nāku, *n.* < id. +. Heifer; ஈனாத இளம்பசு. (யாழ். அக.)

கன்னிநாடு kaṉṉi-nāṭu, *n.* < id. +. The Pāṇḍya country, which was, according to tradition, once ruled by a virgin princess, Taṭātakai, identified with the goddess Mīṉākṣī; பாண்டிநாடு. *கன்னிநாட்டு நல்வினைப்பயத்தாற் கேட்டார்* (பெரியபு. திருஞான. 605).

கன்னிப்பாறை kaṉṉi-p-pāṟai, *n.* Horse-mackerel, bluish-green, attaining at least 1 ft. in length, *Caranx atropus*; கடல்மீன்வகை.

கன்னிப்பிடி kaṉṉi-p-piṭi, *n.* < கன்னி +. Ball of coloured food thrown to feed crows by women praying for the welfare of their brothers on the day following *makara-caṅkirānti*; சங்கிராந்திக்கு அடுத்தநாள் பெண்கள் தம் உடன்பிறந்தாருடைய ஆக்கங்கருதிக் காகங்களுக்கு இடும் சித்திரான்ன பலி.

கன்னிப்பிள்ளைத்தாய்ச்சி kaṉṉi-p-piḷḷai-t-tāycci, *n.* < id. +. A woman in her first pregnancy; முதற்கருவுற்றவள். (J.)

கன்னிப்புதன் kaṉṉi-p-putaṉ, *n.* < id. +. Mercury in the zodiacal sign Virgo, indicating learning for one born under such influence; சாதகனுக்கு வித்தை நிரம்புவதன் அடையாளமாகக் கன்னிராசியிலுள்ள புதன். (W.)

கன்னிப்பூப்பு kaṉṉi-p-pūppu, *n.* < id. +. First menstruation; முதற்பூப்பு. *கயலேர் மலருண்கண் கன்னிப்பூப் பெய்தி* (இலக். வி. 485, உரை).

கன்னிப்பொங்கல் kaṉṉi-p-poṅkal, *n.* < id. +. Festival on the day following the *caṅkirānti* specially celebrated by unmarried girls; சங்கிராந்திக்கு அடுத்தநாளில் கன்னிகைகளாற் கொண்டாடப்பெறும் ஒரு பண்டிகை.

கன்னிப்போர் kaṉṉi-p-pōr, *n.* < id. +. Maiden battle; வீரனது முதற்போர். *காகுத்தன் கன்னிப்போரில்* (கம்பரா. தாடகை. 76).

கன்னிமடம் kaṉṉi-maṭam, *n.* < id. +. See கன்னியாஸ்திரீமடம். *Chr.*

கன்னிமதில் kaṉṉi-matil, *n.* < id. +. Impregnable fort; அழியாத கோட்டை. (கம்பரா. மிதிலைக். 59.)

கன்னிமரி kaṉṉi-mari, *n.* < id. +. See கன்னிமரியம்மாள். *Chr.*

கன்னிமரியம்மாள் kaṉṉi-mari-y-ammāḷ, *n.* < id. +. Virgin Mary; இயேசுநாதரைப் பெற்ற தாய். *Chr.*

கன்னிமரியாள் kaṉṉi-mariyāḷ, *n.* See கன்னிமரியம்மாள். *Chr.*

கன்னிமாடம் kaṉṉi-māṭam, *n.* < id. +. [K. *kannemāḍa.*] Residence of virgin princesses; இராசகன்னியர் வசிக்கும் மாளிகை. *மற்றவன் கன்னிமாடத் தடைந்தபின்* (மணி. 22, 100).

கன்னிமார் kaṉṉimār, *n.* < id. [M. *kannimār.*] 1. Virgins, unmarried girls; மணஞ்செய்யப்பெறாத பெண்கள். 2. Deified females, pious virgins on earth, afterwards born in the supernal worlds in one of the three lower states of bliss; நற்கதிபெற்ற கற்புடைக்கன்னியர். (W.) 3. Seven deified virgins. See சத்தகன்னியர். *எக்கன்னிமா ரறியச்சொன்னேன்* (குமர. பிர. மீனாட். குறம். 22).

கன்னிமுத்திரை kaṉṉi-muttirai, *n.* < id. +. See கன்னிச்சவ்வு. (W.)

கன்னிமூலை kaṉṉi-mūlai, *n.* < id. +. See கன்னித்திசை.

கன்னிமை kaṉṉimai, *n.* < id. Virginity; கன்னித்தன்மை. *கன்னிமை கனிந்து* (சீவக. 1260).

கன்னியழி-தல் kaṉṉi-y-aḻi-, *v. intr.* < id. +. To lose virginity, be deflowered, as a virgin; கன்னிமைகெடுதல். (W.)

கன்னியழித்தல் kaṉṉi-y-aḻittal, *n.* < id. +. The ceremonial celebration of the first sexual intercourse of a girl of the dancing-girl caste; புருஷர் கணிகையுடன் முதன்முதற் கூடிக் கன்னித்தன்மையை நீக்குஞ் சடங்கு.

கன்னியன்னம் kaṉṉi-y-aṉṉam, *n.* < id. + *anna*. Pulp of the aloe leaf; கற்றாழஞ்சோறு. (மூ. அ.)

கன்னியாகுமரி kaṉṉiyā-kumari, *n.* < *kanyā* +. [K. M. *kanyākumārī*.] 1. The ancient river *Kanni*, said to have been swallowed by the sea; குமரியாறு. (W.) 2. Cape Comorin, the southernmost point of India, under the protection of the goddess Durgā; பரதகண்டத்தின் தென்கோடிமுனை.

கன்னியாசுல்கம் kaṉṉiyā-culkam, *n.* < id. +. 1. Money given to the bride's father as her price; purchase money of a girl; கலியாணத்தில் மணமகன் மணமகளைச்சார்ந்தார்க்குக் கொடுக்கும் பணம். 2. Arduous undertaking, as bending a bow or successfully handling a wild ox, set as a test to win the hand of a bride; ஒருவன் ஒருகன்னிகையை மணந்துகொள்வதற்கு நிபந்தனையாக ஏற்படுத்தும் வில்வளைக்கை ஏறுதழுவுகைபோன்ற செயல்.

கன்னியாதானம் kaṉṉiyā-tāṉam, *n.* < id. +. See கன்னிகாதானம்.

கன்னியாபுத்திரன் kaṉṉiyā-puttiraṉ, *n.* < id. +. Son of an unmarried woman; கன்னி பெற்ற மகன்.

கன்னியாமடம் kaṉṉiyā-maṭam, *n.* < id. +. Convent, nunnery. See கன்னியாஸ்திரீமடம். *Chr.*

கன்னியாமாடம் kaṉṉiyā-māṭam, *n.* < id. +. See கன்னிமாடம். *மணியிற் செய்த கன்னியர் மாட மெய்தி* (சீவக. 585).

கன்னியாஸ்திரீ kaṉṉiyā-stirī, *n.* < id. +. 1. Virgin; damsel; விவாகமாகாத பெண். 2. Nun; கிறிஸ்தவப் பெண்துறவி. *Chr.*

கன்னியாஸ்திரீமடம் kaṉṉiyā-stirī-maṭam, *n.* < id. +. Convent for nuns; கிறிஸ்தவப் பெண்துறவிகள் வசிக்கும் மடம். *Chr.*

கன்னியிருட்டு kaṉṉi-y-iruṭṭu, *n.* < id. +. Darkness before dawn; வைகறைக்குமுன் தோன்றும் இருள். *Colloq.*

கன்னியீற்று kaṉṉi-y-īṟṟu, *n.* < id. +. First calving of a cow; பசுவின் தலையீற்று. (W.)

கன்னியூஞ்சல் kaṉṉi-y-ūñcal, *n.* < id. +. Ceremonial swing of the bride and bridegroom at the beginning of marriage; விவாகச்சடங்கின் தொடக்கத்தில் மணமக்கள் ஆடும் ஊஞ்சலாட்டம்.

கன்னிவிடியல் kaṉṉi-viṭiyal, *n.* < id. +. Early dawn; வைகறை. *கன்னிவிடியற் கணைக்காலாம்பல் . . . மலரும்* (ஐங்குறு. 68).

கன்னிவேட்டை kaṉṉi-vēṭṭai, *n.* < id. +. First hunt; முதல்வேட்டை. *கன்னிவேட்டை மகன் போக* (பெரியபு. கண்ணப்ப. 47).

கன்னிறம் kaṉṉiṟam, *n.* Mistletoe-berry thorn. See சங்கஞ்செடி. (மலை.)

கன்னீர்ப்படுத்தல் kaṉṉīr-p-paṭuttal, *n.* < கல் + நீர்ப்படு-. 1. (Puṟap.) Theme of bathing a memorial stone of a dead warrior; போரிலிறந்த வீரனது நடுகல்லை நீராட்டும் புறத்துறை. (பு. வெ. 10, பொதுவியற். 10.) 2. (Puṟap.) Theme of soldiers storing up the memorial stones of the dead warriors in the battle-field; போர்செய்து இறந்த வீரரது வீரச்செயலை வரைந்த கற்களைப் போர்க்களத்திலே மறவர் நிரைத்தலைக்கூறும் புறத்துறை. (பு. வெ. 10, பொதுவியற். 11.)

கன்னுவர் kaṉṉuvar, *n.* < கன்[1]. Braziers, bell-metal workers; கன்னார். (திவா.)

கன்னுறுகம் kaṉṉuṟukam, *n.* cf. கன்னவகம். A species of amaranth. See சிறுகீரை. (மலை.)

கன்னூஞ்சல் kaṉṉūñcal, *n.* See கன்னியூஞ்சல்.

கன்னெஞ்சன் kaṉṉeñcaṉ, *n.* < கல் + நெஞ்சன். Hard-hearted, unfeeling, unrelenting person; வன்மனமுள்ளவன். *அன்ப ரன்புக்கெளியை கன்னெஞ்சனுக் கெளியையோ* (தாயு. கருணா. 9).

கன்னெஞ்சு kaṉṉeñcu, *n.* < id. + நெஞ்சு. Stony heart; வன்மனம். *கன்னெஞ் சுருக்கி* (திருவாச. 10, 11).

கன்னை kaṉṉai, *n.* Side; party, as in games, wrestling, fighting; கட்சி. (J.)

கன்னைக்கொற்றி kaṉṉai-k-koṟṟi, *n.* < கன்னை +. One who helps both the parties, generally in play; இருகட்சிக்கும் உதவிசெய்வோன். (J.)

கன்னைக்கோல் kaṉṉai-k-kōl, *n.* Weaver's rod; நெய்வார்கருவிகளுள் ஒன்று. (யாழ். அக.)

கன்னைபிரி-த்தல் kaṉṉai-piri-, *v. tr.* < கன்னை +. To divide a company into two parties for a game; விளையாட்டில் இருகட்சிவகுத்தல். (J.)

கன்னைமாறு-தல் kaṉṉai-māṟu-, *v. intr.* < id. +. To change sides for a new game; விளையாட்டிற் பக்கமாறி ஆடுதல். (J.)

கன[1] kaṉa, *n.* < கனா. See கனா. *துஞ்சமிடைக் கன மூன்றவை தோன்றலின்* (சீவக. 219).

கன[2]**-த்தல்** kaṉa-, 11 *v. intr.* < *ghana*. 1. To be heavy; பாரமாதல். *கனக்கும் வெண்டாளவடம்* (பாரத. குருகுல. 137). 2. To be abundant, copious, numerous; மிகுதியாதல். *சாமந்தர்க்குப் புறம்பே நாடுகள் கனக்கவுண்டாகிலும்* (ஈடு, 1, 3, 9). 3. To be stout; பருத்தல். *கனத்தெழு விலங்கற்*

திண்டோர் (இரகு. இரகுவ. 59). 4. To be hoarse; to break, as the voice of a youth; கட்டைக்குரலாதல். குரல் கனத்துவிட்டது. 5. To be honourable, noble, illustrious; பெருமையுறுதல். கனத்த குடியிற் பிறந்தவன்.

கனக்குறைவு kaṉa-k-kuṟaivu, *n.* <கனம் +. 1. Loss of weight, lightness; இலேசான தன்மை. 2. Degradation; பெருமைக்கேடு. அந்தக்காரியத்தில் தலையிடுவது கனக்குறைவு.

கனகச்சம்பா kaṉaka-c-campā, *n.* <*kanaka*+. A superior kind of paddy; உயர்ந்த சம்பாநெல்வகை.

கனகச்சுற்றம் kaṉaka-c-cuṟṟam, *n.* <id.+. Men in charge of the treasury, one of *eṇ-peruntuṇaivar*, q.v.; அரசர்க்குரிய எண்பெருந்துணைவருள் ஒருவகையாராகிய பொக்கிஷவதிகாரிகள். (திவா.)

கனகசபை kaṉaka-capai, *n.* <id.+. Lit., hall made of gold, hall roofed with gold plates in which the deity Nataraja is kept, as at Chidambaram; நடராசமூர்த்தி எழுந்தருளியிருக்கும் பொன்னம்பலம். கனகசபை மேவு மெனது குருநாதா (திருப்பு.).

கனகத்தும்பி kaṉaka-t-tumpi, *n.* <id.+. Dragonfly, *Diplax elisa*; பொன்வண்டு.

கனகதண்டி kaṉaka-taṇṭi, *n.* <id.+. See கனகதண்டிகை. கனகதண்டி மேலுக்குப் பஞ்சணையில்லை யென்பார்க்கும் விசனமொன்றே (தனிப்பா.).

கனகதண்டிகை kaṉaka-taṇṭikai, *n.*<id. +. *Taṇṭikai* studded with gold; பொற்சிவிகை.

கனகதம் kaṉakatam, *n.* prob. *ghana*+ *gata*. Camel, as with swift pace; ஒட்டகம். (பிங்.)

கனகதர் kaṉakatar, *n.*<id.+கதம்[1]. Villains, base persons; கண்டாளர். (திவா.)

கனகதோராவல்லி kaṉaka-tōrāvalli, *n.* <*kanaka*+. A kind of topaz; ஒருவகை இரத்தினம். இவற்றின்க ணுதித்த . . . தோராவல்லி கனக தோராவல்லி (திருவாலவா. 25, 22).

கனகபரீட்சை kaṉaka-parīṭcai, *n.* <id.+. The art of testing gold, one of *aṟupattu-nālu-kalai*, q.v.; அறுபத்துநாலுகலையுள் பொன்னின் தன்மையைச் சோதித்தறியும் வித்தை.

கனகம் kaṉakam, *n.* <*kanaka*. 1. Gold; பொன். காரார்வண்ணன் கனகமனையானும் (தேவா. 502, 9). 2. cf. பொன்வாய்ப்புள். Common kingfisher. See மீன்கொத்தி. (பிங். MS.)

கனகமலை kaṉaka-malai, *n.* <id.+. Mēru, the gold mountain; மேருமலை. புலியூர்க் கனக மலைச்சிலை வாணனை (புலியூரந்.).

கனகமாரிபொழி-தல் kaṉaka-māri-poḻi-, *v. intr.* <id.+. Lit., to shower gold, to bestow gifts liberally; பொருளை விசேடமாகக்கொடுத்தல்.

கனகமாழை kaṉaka-māḻai, *n.* <id. +. Lump of gold, nugget; பொற்கட்டி. கூப்பிய கனகமாழையால் (சீவக. 913).

கனகமிளகு kaṉaka-miḷaku, *n.* Cubeb. See வால்மிளகு. (மலை.)

கனகன் kaṉakaṉ, *n.* <*kanaka*. A Daitya king of golden colour. See இரணியகசிபு. கன்றெனக் கனகன் சொன்னான் (கம்பரா. இரணியன்வ. 124).

கனகாசம் kaṉa-kācam, *n.* perh. *ghana*+ *kāca*. A disease of the eye; கண்ணோய்வகை. (யாழ். அக.)

கனகாசலம் kaṉakācalam, *n.* <*kanaka*+ *a-cala*. See கனகமலை.

கனகாபிஷேகம் kaṉakāpiṣēkam, *n.* <id. +*abhiṣēka*. Showering gold, bestowing gifts liberally as a mark of appreciation shown by kings and noblemen; அரசர் முதலியோர் ஒருவரை மதித்துப் பொன்னால் அபிஷேகஞ்செய்கை அல்லது மிகுதியாகக் கொடுக்கை.

கனகாமிர்தம் kaṉakāmirtam, *n.* cf. *kanaka-mala*. Silver; வெள்ளி. (W.)

கனகாரியம்[1] kaṉa-kāriyam, *n.*<*ghana*+. Important business; முக்கியமான அலுவல்.

கனகாரியம்[2] kaṉakāriyam, *n.* <*kanakāhvaya*. See கனகி. (மலை.)

கனகி kaṉaki, *n.* <*kanaka*. Thorn-apple, l. sh., *Datura stramonium*; ஊமத்தை. கனகியின் முகை . . . பொதிசடை முடியினன் (தேவா. 832, 4).

கனங்காய் kaṉaṅkāy, *n.* Fragrant heart's-joy. See மனோரஞ்சிதம். (W.)

கனங்குழை kaṉaṅ-kuḻai, *n.* <*ghana*+. Woman, wearing heavy earrings; கனவிய குழையணிந்த பெண். கனங்குழை மாதர்கொல் (குறள், 1081).

கனங்கொள்(ளு)-தல் kaṉaṅ-koḷ-, *v. intr.* <id.+. 1. To become heavy, unwieldy; பாரமாதல். 2. To become serious, important, momentous; பெருமையுடையதாதல். (W.)

கனசங்கலிதம் kaṉa-caṅkalitam, *n.*<id.+ *saṅkalita*. (Math.) Summation of cubes of natural numbers, as 1, 8, 27, 64, etc.; அடுத்தடுத்துவரும் எண்களின் கனத்தைக் கூட்டுகை.

கனசாரம் kaṉa-cāram, *n.* <*ghana-sāra*. Camphor; பச்சைக்கர்ப்பூரம். (சூடா.)

கனத்தநாள் kaṉatta-nāḷ, *n.* <*ghana* +. Day which is supposed to have in itself powers to aggravate a disease in its course, as the new

or full moon, when the influence of the planets is supposed to be unusually powerful; கிரகநிலை யால் வியாதியைப் பெருகச்செய்யும் நாள். *Colloq.*

கனதி kaṉati, *n.* <*ghana-tā.* 1. Heaviness, ponderosity, gravity; பாரம். 2. Thickness; பருமை. (W.) 3. Pride, haughtiness; இறுமாப்பு. (W.)

கனதை kaṉatai, *n.*<id. Honour, dignity; கௌரவம். *மற்றுள பொருளுந் தோற்றுக் கனதை போய்* (குற்று. தல. மந்தமா. 43).

கனப்படுத்து-தல் kaṉa-p-paṭuttu-, *v. tr.* <*ghana*+. To honour, respect, esteem; பெருமைப்படுத்துதல்.

கனப்பு kaṉappu, *n.* <id. 1. Being heavy; கனமாயிருக்கை. 2. Thickness; பருமை. (W.) 3. Weight, heaviness; பாரம். (W.) 4. Hardness, as of a swelling; அழுத்தம். 5. Fattiness; கொழுப்பு. (W.) 6. Pride, self-conceit; இறுமாப்பு. *உன் கனப்பு எடுத்துப்போடுவேன்.* (W.)

கனபாடி kaṉa-pāṭi, *n.* <id.+*pāṭhin.* One who recites the Vēda in a certain manner known as *ghanam;* வேதத்துக்குக் கனஞ்சொல்ல வல்லோன்.

கனம்[1] kaṉam, *n.* <*ghana.* 1. Heaviness, weight; பாரம். (திவா.) 2. Thickness; size; பருமன். 3. Honour, dignity, respectability, moral worth; பெருமை. 4. Density, closeness, hardness, solidity; செறிவு. (திவா.) 5. Roundness; திரட்சி. (திவா.) 6. Firmness; உறுதி. *கனமே சொல்லினேன்* (திவ். திருவாய். 9, 3, 5). 7. Abundance, copiousness, excessiveness, plenty, much; மிகுதி. 8. (Math.) Cube of a number, one of *aṭṭa-kaṇitam*, q.v.; ஒரெண்ணை அதனாலேயே இருமுறைபெருக்க வரும் இலக்கம். (பிங்.) 9. A particular manner of reciting the Ṛg and Yajur Vēdas; வேதபாடவிசேடம். 10. See கனராகம். (பாரத. இராக. 65.) 11. Cube, as a solid; கனவடிவு. 12. Multitude, assemblage, crowd; கூட்டம். (W.) 13. Circle; வட்டம். (திவா.) 14. Width, breadth; அகலம். 15. Cloud; மேகம். *கனமே குழல்* (தஞ்சைவா. 49). 16. Tuber of *kōrai* grass; கோரைக்கிழங்கு.

கனம்[2] kaṉam, *n.* <*kanaka.* Gold; பொன். *கனங்குழாய்* (கலித். 57).

கனம்பாடு-தல் kaṉam-pāṭu-, *v. intr.* <*ghana*+. To sing with a full deep voice; தூக்கல்விட்டுப் பாடுதல். (W.)

கனம்பார்-த்தல் kaṉam-pār-, *v. intr.* <id. +. (W.) 1. To estimate weight; நிறையளவை மதிப்பிடுதல். 2. To consider conditions or external circumstances; நிலைதெரிதல்.

கனம்பொருந்திய kaṉam-poruntiya, *adj.* <id.+. Honourable, worthy, esteemed, common form of address to a superior; கண்ணியமுள்ள.

கனமாப்பலகை kaṉam-ā-p-palakai, *n.* <id.+. The famous miraculous seat of the members of the third Tamil Saṅgam; சங்கப்பலகை. *கனமாப்பலகை யேற்றிக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைப்ப* (இறை. 1, உரை).

கனமூலம் kaṉa-mūlam, *n.* <id.+*mūla.* (Math.) Cube root, one of *aṭṭa-kaṇitam*, q.v.; கனத்தொகையினின்று அறியும் அதன்மூலம். (திவா.)

கனமோசம் kaṉa-mōcam, *n.* <id.+. Unfathomable deceit or treachery; பெருவஞ்சகம்.

கனரதம் kaṉa-ratam, *n.* <*ghana-rasa.* Water. See கனவிரதம். (உரி. நி.)

கனராகம் kaṉa-rākam, *n.* <*ghana*+. A name common to each of the ten musical modes, viz., *நாட்டை, சாரங்கநாட்டை, கேதாரநாட்டை, வராளி, ஆரபி, பௌளம், கௌளம், ரீதிகௌளம், நாராயணகௌளம், ஸ்ரீராகம்;* ஒருசார் இராகங்களின் தொகுதி. (பாரத. இராக. 65, உரை.)

கனருசி kaṉa-ruci, *n.* <id.+*ruci.* Lit., lustre of the cloud, lightning; மின்னல். (பிங்.)

கனல்[1] kaṉal, *n.*<கனல்-. cf. *anala.* [K. M. *kanal.*] Fire; நெருப்பு. *உழிதரு காலுங் கனலும்* (திருவாச. 5, 8).

கனல்[2]**(லு)-தல்** kaṉal-, *3 v.* [T. *kanalu*, K. *kanal.*] *intr.* 1. To be hot; to glow, as fire; எரிதல். *வேமிருந்தையெனக் கனலும்* (கம்பரா. சூர்ப்ப. 118). 2. To boil, as hot water; கொதித்தல். *தீப்போற் கனலுமே* (நாலடி, 291). 3. To be angry; சினத்தல். *மாமுனி கனல மேனூன்* (கம்பரா. நீர்விளை. 2). 4. To redden; சிவத்தல். *கண்கனன்று . . . நோக்குதலும்* (பு. வெ. 6, 23). —*tr.* To burn; சுடுதல். *வயிற்றகங் கனலுஞ் சூலை* (பெரியபு. திருநா. 62).

கனல்வு kaṉalvu, *n.* <கனல்-. Anger; கோபம். *இங்குநின்வர வென்னவெனக் கன்ல்வெய்த* (கம்பரா. சூளா. 78).

கனலி kaṉali, *n.* <id. 1. Sun; சூரியன். *வெங்கதிர்க் கனலி* (புறநா. 41, 6). 2. Fire; நெருப்பு. (திவா.) 3. Ceylon leadwort. See கொடுவேலி. (மலை.) 4. Hog; பன்றி. *இளமதியம் புரையுங் கனலி மருப்பு* (சிவப். பிரபந். வெங்கைக்கல. 99).

கனலிநாள் kaṉali-nāḷ, *n.* <கனலி+. The 13th *nakṣatra.* See அத்தம்[3]. (பிங்.)

கனலொழுங்கு kaṉal-oḻuṅku, *n.*<கனல்+. Flame; சுவாலை. (சூடா.)

கனலோன் kaṉalōṉ, *n.* <id. Lit., he who is hot, sun; சூரியன். *காகெனலக் கனலோன் சினஞ் சொரிய* (பு. வெ. 10, பொதுவியற். 10).

கனவட்டம் kaṉa-vaṭṭam, *n.* prob. *ghana* + *vṛtta*. 1. Horse; குதிரை. (திவா.) 2. The state horse of the Pāṇḍya kings; பாண்டியன் குதிரை. வழுதி கனவட்டம் (பெருந்தொ. 656).

கனவல் kaṉaval, *n.* <கனவு-. Dreaming; கனாக்காண்கை. கனவலிற் பொருக்கென வெழுந்து (தணிகைப்பு. திருநாட்டுப். 42).

கனவளவு kaṉa-v-aḷavu, *n.* <*ghana*+. See கனவளவை.

கனவளவை kaṉa-v-aḷavai, *n.* <id.+. Cubic measure; அகல நீளங்களுடன் ஆழம் அல்லது உயரம் அல்லது கனத்தைப் பெருக்குதலாற் பெறப்பட்ட கணக்கு.

கனவான் kaṉavāṉ, *n.* <*ghana*. A person worthy of respect, honour, esteem; a gentleman; கௌரவமுடையவன். எங்குநிறை கனவான் (பிரபுலிங். விமலை. 33).

கனவிரதம் kaṉa-v-iratam, *n.* <*ghana-rasa*. Lit., juice from the cloud, water; நீர். (பிங்.)

கனவீனம் kaṉa-v-īṉam, *n.* <*ghana* + *hīna*. Dishonour, disgrace; கௌரவக்குறைவு.

கனவு[1]-தல் kaṉavu-, 5 *v. tr.* <கனவு. To dream; கனாக்காணுதல். கவரி . . . நரந்தங் கனவும் (பதிற்றுப். 11, 22).

கனவு[2] kaṉavu, *n.* [K. Tu. *kana*, M. *kināvu*.] 1. See கனா. கனவினாற் காதலர்க் காணாதவர் (குறள், 1219). 2. Sleep; நித்திரை. கனவு முண்டேல் (திருக்கோ. 378). 3. Stupor, drowsiness; மயக்கம். (திவா.)

கனவுமூலி kaṉavu-mūli, *n.* Poison-lily. See விஷமூங்கில். (மலை.)

கனற்கூர்மை kaṉaṟ-kūrmai, *n.* prob. கனல் +. Glass-gall. See வளையலுப்பு.

கனற்சி kaṉaṟci, *n.* <கனல்-. 1. Heat, glow; வெப்பம். 2. Rage, anger; உள்ளக்கொதிப்பு. வீரனது கனற்சியைச் சொல்லியது (பு. வெ. 8, 27, கொளு, உரை).

கனற்சிலை kaṉaṟ-cilai, *n.* prob. id.+. A kind of black stone; ஒருவகைக் கருங்கல்.

கனற்சுக்கிரன் kaṉaṟ-cukkiraṉ, *n.* <கனல் +. A disease of the eye; கண்ணோய்வகை. (சீவரட். 265.)

கனற்பேதி kaṉaṟ-pēti, *n.* prob. id.+. A kind of ochre; சுகத்திரவேதி. (W.)

கனற்று-தல் kaṉaṟṟu-, 5 *v.* Caus. of கனல்-. *tr.* 1. To cause to burn; எரியச்செய்தல். கலந்தவர் காமத்தைக் கனற்றலோ செய்தாய் (கலித். 148). 2. To heat gently, to impart heat by direct rays, not applicable to heating in a vessel; சூடச்செய்தல். வெயில் பிள்ளையைக் கனற்றியது. (W.) 3. To render warm; வெதுப்புதல். கனற்றக் கொண்ட நறவென்னும் (புறநா. 384).—*intr.* To shine brightly; மிக்குவிளங்குதல். காதல் கனற்ற நின்றானும் (தேவா. 696, 7).

கனறல் kaṉaṟal, *n.* <கனல்-. Anger; கோபம். (W.)

கனன்மரம் kaṉaṉ-maram, *n.* <கனல்+. A kind of tree said to shine in the dark; சோதிவிருட்சம். (சங். அக.)

கனனத்தம்பம் kaṉaṉa-t-tampam, *n.* <*khanana* + *stambha*. Art of preventing the discovery of buried treasures, one of *aṟupattu-nālu-kalai*, q.v.; அறுபத்துநாலுகலையுள் புதையலை அகப்படாமற் செய்யும் வித்தை. (W.)

கனனிறக்கல் kaṉaṉiṟa-k-kal, *n.* <கனல்+ நிறம்+. Ruby; மாணிக்கம். (W.)

கனா kaṉā, *n.* [T. *kala*, K.T . *kana*.] Dream; கனவு. கனாவுறு திறத்தினும் (மணி. 27, 281).

கனாக்காண்(ணு)-தல் kaṉā-k-kāṇ-, *v. intr.* <கனா+. 1. To dream. கனாக்கண்டேன் தோழீ நான் (திவ். நாய்ச். 6, 1). 2. To aspire for anything beyond reach; கிடைத்தற்கரியதைப் பெற அவாவுதல்.

கனாநூல் kaṉā-nūl, *n.* <id.+. Treatise on the significance of dreams by Poṉṉavaṉ; கனாப்பயன்களைப்பற்றிப் பொன்னவன் என்ற புலவர் பாடிய நூல். (சிலப். 15, 106, உரை.)

கனி[1]-தல் kaṉi-, 4 *v. intr.* [M. *kani*.] 1. To ripen, as fruits; to turn mellow, luscious, sweet; பழுத்தல். கால மின்றியுங் கனிந்தன (கம்பரா. வனம்பு. 44). 2. To be overripe; அளிதல். 3. To become complete, perfect; முதிர்தல். கன்னிமை கனியா (பரிபா. 11, 136). 4. To be mellifluous, to be full of sweetness; இனித்தல். கனிந்த சொல்லாய் (தஞ்சைவா. 174). 5. [K. *kari*.] To melt, grow tender, become soft, as the heart by affection, love, devotion; மனமுதலியன இளகுதல். விஞ்சையர் கனிந்து சோர்ந்தார் (சீவக. 727). 6. To be red-hot, to glow; தழல்மிகுதல். நெருப்புக் கனிகின்றது. 7. To become red-hot, as a metal; பழுக்கக் காய்தல். கனிய வெந்த இரும்பு. 8. [T. *kini*.] To get suddenly angry, to be irritable; முன்கோபம் அடைதல். (குடா.)

கனி[2]-த்தல் kaṉi-, 11 *v. tr.* Caus. of கனி[1]-. To melt, soften; இளகச்செய்தல். அனங்கனைக் கனிக்கு கீரான் (சீவக. 607).

கனி[3] kaṉi, *n.* <கனி[1]-. [M. *kani*.] 1. Ripeness, maturity; கனிவு. கனிவளர் கிளவி (சீவக. 486). 2. Fruit; ripe, mellow fruit; பழம். கனியிருப்பக் காய்கவர்ந் தற்று (குறள், 100). 3. Sweetness; இனி

மை. (சூடா.) 4. Essence; சாரம். காமக் கொழுங் கனி சுவைத்து (சீவக. 1985). 5. See கனிச்சீர். வெண் டளைத்தன்மை குன்றிப்போஞ் சீர்கனிபுகில் (காரிகை, ஒழி பி. 3). 6. The last metrical division in a word of three syllables sounding like '*kaṉi*'; மூவசைச்சீரில் இறுதியிலுள்ள நிரையசை. அந்தக்கனியா . . . வருத்த வஞ்சிக்குரிச்சீர் (காரிகை, உறுப். 7).

கனி[4]**-தல்** kaṉi-, *4 v. tr.* <*khan.* To bury, conceal, hide; புதைத்தல். (பிங்.)

கனி[5] kaṉi, *n.* <*khani.* Mine; பொன்முதலியன எடுக்கும் சுரங்கம். கரைகனிப் பொருளும் (திருக்காளத். பு. 11, 22).

கனிக்காய் kaṉi-k-kāy, *n.*<கனி[3]+. Unripe fruit in the process of ripening; பழுக்குநிலையிலுள்ள காய். (சிலப். 16, 24, உரை.)

கனிக்காழ் kaṉi-k-kāḻ, *n.* <id.+. Seedling, seed of a fruit; பழத்தின் விதை. (திவா.)

கனிகரம் kaṉi-karam, *n.* <id.+*kr.* [T. *kanikaramu*, Tu. *kanikara.*] Affection, love; அன்பு. *Madr.*

கனிகாலம் kaṉi-kālam, *n.* <கனி[1]- + . Fruit-season; பழுக்குங் காலம். (W.)

கனிச்சீர் kaṉi-c-cīr, *n.* <கனி[3]+. (Pros.) Foot of three *acai* necessarily ending in *nirai*, of four kinds, as *tē-māṅ-kaṉi=nēr nēr nirai* (- - ᴗᴗ), *puḷi-māṅ-kaṉi=nirai nēr nirai* (ᴗᴗ - ᴗᴗ), *kū-viḷaṅ-kaṉi=nēr nirai nirai* (- ᴗᴗ ᴗᴗ), *karu-viḷaṅ-kaṉi=nirai nirai nirai* (ᴗᴗ ᴗᴗ ᴗᴗ); கனி என்ற வாய்பாடுகொண்ட அசையை இறுதியிலுடைய வஞ்சியுரிச்சீர். (யாப். வி. 12.)

கனிட்டன்[1] kaṉiṭṭaṉ, *n.* <*kaniṣṭha.* 1. Last-born son; கடைசிப்பிள்ளை. (C. G.) 2. Younger brother; தம்பி. ஆனைமுகார் கனிட்ட (திருப்பு. 513). 3. Base, vile, low person; கீழ் மகன். (திவா.)

கனிட்டன்[2] kaṉiṭṭaṉ, *n.* <*kaniṣṭhā.* See கனிட்டை, 3. (சிலப். 3, 58, உரை.)

கனிட்டிகை kaṉiṭṭikai, *n.* <*kaniṣṭhikā.* See கனிட்டை, 3.

கனிட்டை kaṉiṭṭai, *n.*<*kaniṣṭhā.* 1. Last-born daughter; கடைசியாகப் பிறந்த மகள். 2. Sister, younger than oneself; தங்கை. 3. The little finger; சிறுவிரல். அணியது மாகுங் கனிட்டை யங்குட்டமின்றி (சைவச. பொது. 190).

கனிந்தபாடம் kaṉinta-pāṭam, *n.* <கனி[1]- +. Well-learnt lesson, verse well committed to memory; தெளிந்த பாடம். (W.)

கனிப்பு kaṉippu, *n.* <id. Mellifluence, sweetness, pleasantness; இனிமை. கனிப்புறு சொல்லவௗ இ (சீவக. 1020).

கனிய kaṉiya, *adv.* <id. Wholly; முற்ற. குலே கனியக் காவுறீஇ (சீவக. 826).

கனியாமணக்கு kaṉi-y-āmaṇakku, *n.* <கனி[3]+. Common papaw. See பப்பாளி. (W.)

கனிவாழை kaṉi-vāḻai, *n.*<id.+. A kind of sweet plantain; வாழைவகை. (சீவக. 1562, உரை.)

கனிவு kaṉivu, *n.* <கனி[1]-. 1. Ripening; முதிர்கை. 2. Love, compassion; இரக்கம்.

கனிஷ்டன் kaṉiṣṭaṉ, *n.*<*kaniṣṭha.* See கனிட்டன்[1].

கனிஷ்டை kaṉiṣṭai, *n.* <*kaniṣṭhā.* See கனிட்டை.

கனுக்கு-தல் kaṉukku-, *5 v.* (J.) *intr.* To shake the voice in singing, quaver or flourish; பாடும்போது கண்டத்தொனி உருளுதல்.—*tr.* To emaciate, to grow lean by disease or by labour; to train, inure, keep closely engaged; to cause to grow mellow by heat, or by reiterated pressure; கசங்கப்பண்ணுதல். காய்ச்சல் நாளுக்கு நாள் அவனைக் கனுக்கிப்போட்டது.

கனுக்குப்பினுக்கெனல் kaṉukku-p-piṉukkeṉal, *n.* (W.) 1. Expr. signifying ecstasy, great joy, conviviality; மிகக் களித்தற் குறிப்பு. 2. Onom. expr. signifying bustling, rustling; ஒலிக்குறிப்பு.

கனுப்பிடி kaṉu-p-piṭi, *n.* <கன்னி+. See கன்னிப்பிடி.

கனுப்பொங்கல் kaṉu-p-poṅkal, *n.* <id. +. See கன்னிப்பொங்கல்.

கனை[1]**-தல்** kaṉai-, *4 v. intr.* 1. To be crowded; நெருங்குதல். கனைதுளி சிதறென (கலித். 16, 7). 2. To be intense; மிகுதல். காமங் கனைந்தெழ (பரிபா. 10, 63). 3. To sound, as a drum; ஒலித்தல். ஆடுதொறு கனையும் . . . துடி (அகநா. 79).

கனை[2] kaṉai, *n.* <கனை[1]-. 1. Density, crowdedness, closeness, intensity; செறிவு. (சூடா.) 2. Fulness, repletion; நிறைவு. (உரி. நி.) 3. Abundance; மிகுதி. கனையெரி (புறநா. 23, 11).

கனை[3]**-த்தல்** kaṉai-, *11 v. intr.* 1. To sound, as a drum; to bellow, as a buffalo; ஒலித்தல். கனைகடற் றண்சேர்ப்ப (நாலடி, 349). மேதி கன்றுள்ளிக் கனைப்ப (கம்பரா. நாட்டுப் 13). 2. To neigh, as a horse; குதிரைமுதலியன கத்துதல். *Colloq.* 3. To laugh in contempt, ridicule, hum and haw; கொக்கரித்தல். (W.) 4. To sound the aspirated soft consonants in Sanskrit; வடமொழி ஐவர்க்க எழுத்துக்களுள் நான்காமெய்களை அழுத்தி யொலித்தல். (நன். 146, மயிலை.) 5. To mature; to grow round, as fruits; திரளுதல். கவிழ்க்கனைத்து . . . தீங்கழைக்

கரும்பு (மலைபடு. 117). 6. To become darkened; இருளுதல். (சூடா.) 7. To proceed in eager haste; முன்டுசெல்லுதல். மனத்தினர் . . . மாண்பலா நெறிகண்மேலே கனைப்பரால் (தேவா. 9. 8).

கனை¹ kaṉai, *n.* <கனை³-. Sound, roar, resonance; ஒலி. (சூடா.)

கனைப்பு kaṉaippu, *n.* <id. 1. Sound, roar; ஒலி. 2. Neighing, braying, bellowing; குதிரைமுதலியவற்றின் குரலோசை. 3. Laughter, giggling, chuckling; கொக்கரிப்பு. (W.)

கனைவு kaṉaivu, *n.* <கனை¹-. Closeness, thickness; நெருக்கம். (சங். அக.)

கனோபலம் kaṉōpalam, *n.* <*ghana* + *upala*. Hail-stone; ஆலங்கட்டி. மழையிற் சுரும்பு கனோபலத்திற் கனல (சேதுபு. அகத்திய. 15).

கஜ்ஜியா kajjiyā, *n.* <U. *qaziya*. Quarrel; சண்டை. (W.)

கஜ்ஜோடு kajjōṭu, *n.* prob. U. *kaccā*+. Black betel devoid of tenderness and pungency; மட்டமான வெற்றிலை. (C.G.)

கஜக்கோல் kaja-k-kōl, *n.* <U. *gaz*+. Yard-stick; ஒருகஜவளவைக் குறிக்குங் கோல்.

கஜபரீக்ஷை kaja-parīkṣai, *n.* <*gaja*+. See கஜபரீட்சை.

கஜம்¹ kajam, *n.* <*gaja*. 1. Elephant; யானை.

கஜம்² kajam, *n.* <U. *gaz*. Yard-measure; இரண்டுமுழங் கொண்ட அளவு.

கஜலக்ஷ்மி kaja-lakṣmi, *n.* <*gaja*+. Figure of Lakṣmī with elephants on both sides; இருபக்கத்தும் யானைகளையுடைய இலக்குமியுருவம்.

கஜவேட்டை kaja-vēṭṭai, *n.* <id.+. Elephant-hunt; யானைவேட்டை. கஜவேட்டை கண்டருளிய தேவர் (S.I.I. i, 131).

கஜான்ஜி kajāṉji, *n.* <U. *khazānci*. Treasurer, cashier; பொக்கிஷதார்.

கஜானா kajāṉā, *n.* <U. *khazāna*. Treasury, public treasury; பொக்கிஷசாலை.

கஷ்கம் kaṣkam, *n.* <*kakṣa*. See கக்ஷம். *Vul.*

கஷ்டக்கூட்டாளி kaṣṭa-k-kūṭṭāḷi, *n.* <*kaṣṭa*+. Working partner; வேலைபார்க்கும் பங்காளி. (C.G.)

கஷ்டகாலம் kaṣṭa-kālam, *n.* <id.+. 1. Evil time, time of misfortune; துரதிருஷ்ட சமயம். 2. Time of famine; பஞ்சகாலம்.

கஷ்டசாத்தியம் kaṣṭa-cāttiyam, *n.* <id. +. That which is accomplished with difficulty; அரிதிற் செய்து முடிக்கக்கூடியது.

கஷ்டசாத்தியரோகம் kaṣṭa-cāttiya-rōkam, *n.* <id.+. Disease that is difficult to cure; அரிதில் தீர்க்கக்கூடிய நோய்.

கஷ்டப்பிரசவம் kaṣṭa-p-piracavam, *n.* <id.+. Delivery after inordinate labour pains, hard travail, opp. to *cuka-p-piracavam;* வருத்தப்பட்டுப் பெறும் பிள்ளைப்பேறு.

கஷ்டம் kaṣṭam, *n.* <*kaṣṭa*. Difficulty, trouble; வருத்தம்.

கஷ்டார்ஜிதம் kaṣṭārjitam, *n.* <id.+ *arjita*. Hard-earned wealth; வருந்தித் தேடிய சொத்து.

கஷாயம் kaṣāyam, *n.* <*kaṣāya*. 1. Decoction, infusion; காய்ச்சிய மருந்துக்குடிநீர். (பதார்த்த. 1489.) 2. (Jaina.) Impurity or sin clinging to the soul; defect; degeneracy; தீவினை. (சீவக. 3076, உரை.)

கஸ்தி kasti, *n.* <T. *kasti*. cf. *kaṣṭa*. 1. Grief; துக்கம். 2. Difficulty, trouble; கஷ்டம். கஸ்தியடையலாமோ (இராமநா. உயுத். 60).

கஸ்து kastu, *n.* <U. *gasht*. Night-patrol; இராவிற் சுற்றும் ஊர்காவல். கஸ்து வருகிறார்கள். (C.G.)

கஸ்தூரி kastūri, *n.* <*kastūri*. 1. Musk, animal perfume supposed to come out of the navel of the musk deer, of which there are five kinds, viz., கரிகை, திலகை, குளுந்தை, பிண்டகை, நாயகை; கஸ்தூரிமானின் நாபியினின்று எடுக்கப்படும் வாசனைப்பொருள். (பதார்த்த. 1081.) 2. See கஸ்தூரிமான்.

கஸ்தூரிதிலகம் kastūri-tilakam, *n.* <id. +. Mark in the form of a dot or a vertical line with musk on the fore-head, as of an idol; கஸ்தூரியினால் இடும் நெற்றிப்பொட்டு.

கஸ்தூரிநிசி kastūri-nici, *n.* <id.+. See கஸ்தூரிமஞ்சள்.

கஸ்தூரிப்பட்டை kastūri-p-paṭṭai, *n.* <id.+. See கஸ்தூரியலரி.

கஸ்தூரிமஞ்சள் kastūri-mañcaḷ, *n.* <id. +. Yellow zedoary, shrub, *Curcuma aromatica;* மஞ்சள்வகை.

கஸ்தூரிமல்லிகை kastūri-mallikai, *n.* <id.+. Musk jasmine, m. cl., *Jasminum pubescens*, having the fragrance of musk; கஸ்தூரிமணம் வீசும் மல்லிகைவகை. (மூ. அ.)

கஸ்தூரிமான் kastūri-māṉ, *n.* <id.+. Musk-deer, *Moschus moschiferus;* மான்வகை.

கஸ்தூரிமிருகம் kastūri-mirukam, *n.* <id.+. See கஸ்தூரிமான்.

கஸ்தூரியலரி kastūri-y-alari, *n.* <id.+. Red oleander, l. sh., *Nerium odorum rubra;* அலரிவகை.

கஸ்தூரியெலுமிச்சை kastūri-y-elumiccai, *n.* <id.+. Lime-berry, m. sh., ***Triphasia aurantiola;*** சீனக்கொழுந்தி.

கஸ்பா kaspā, *n.* <U. *qasba.* Chief station or head-quarters of a district or division; தலைமையூர்.

கஸர் kasar, *n.* <U. *khasr.* Difference between the nominal chit amount and the actual amount bid for; ஏலச்சீட்டு முதலியவற்றில் சீட்டுத் தொகையிலிருந்து ஏலத்தொகையைக் கழித்து மிஞ்சின பாகம். *Colloq.*

கஸர்வாங்கு-தல் kasar-vāṅku-, *v.* <id. +. *tr.* To exact hard work; கடுமையாய் வேலை வாங்குதல். *Colloq.—intr.* To be exacting, taxing; கஷ்டமாயிருத்தல். *இந்த வேலை கஸர்வாங்குகிறது.*

கஸரத்து kasarattu, *n.* <U. *kasrat.* Physical exercise, a form of Indian gymnastics; தேகப்பயிற்சி.

கஸாயி kasāyi, *n.* <U. *qasāī.* Butcher; மாமிசம்விற்போன்.

கக்ஷம் kakṣam, *n.* <*kakṣa.* Armpit; அக்குள்.

கக்ஷி kakṣi, *n.* <*kakṣyā.* See கட்சி.

கக்ஷிக்காரன் kakṣi-k-kāraṉ, *n.* <கக்ஷி+. See கட்சிக்காரன்.

கக்ஷிப்பிராது kakṣi-p-pirātu, *n.* <id.+. Complaint or suit by way of counter; எதிர்வழக்கு.

கா

கா[1] kā, The compound of க்+ஆ.

கா[2]**-த்தல்** kā-, *11 v.* [T. *kāccu*, K. M. *kā.*] *tr.* 1. To preserve, shelter; பாதுகாத்தல். *தன்மண் காத்தன்று* (மணி. 23, 17). 2. To guard, keep guard over, watch; காவல்செய்தல். *சிறைகாக்குங் காப்பெவன் செய்யும்* (குறள், 57). 3. To restrain, ward off, prevent, guard against; தடுத்தல். *செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்* (குறள், 301). 4. To observe, as a vow, a fast, a time of pollution; அனுஷ்டித்தல். *அவன் நோன்பு காத்தான்.* 5. To rescue, safe-guard; தீமை வராவொட்டாமல் தடுத்தல். *கண்ணிணைக் காக்கின்ற இமையிற்காத்தனர்* (கம்பரா. வேள்வி. 41).—*intr.* To wait for; எதிர்பார்த்தல். *அவனுக்காகக் காத்திருந்தான்.*

கா[3] kā, *n.* <கா-. 1. Preservation, protection; பாதுகாப்பு. (திவா.) 2. [K. *kā*, M. *kāppu.*] Forest, pleasure-grove, garden; சோலை. *கடிமரந் தளங்கிய காவும்* (புறநா. 23, 9).

கா[4] kā, *n.* <காவு-. 1. Pole with ropes hung on each end, used to carry loads or gifts to a temple easily on the shoulder; காவடித்தண்டு. *காமமு நாணு முயிர்காவாத் தூங்கும்* (குறள், 1163). 2. Lever or beam for a well-sweep; lever of a steelyard; scales; துலாக்கோல். (W.) 3. A standard weight = 100 பலம்; ஒரு நிறையளவு. *காவென் னிறையும்* (தொல். எழுத். 169). 4. Receptacle, basket, as for betel or flowers; பூ முதலியன இடும் பெட்டி. *இவர்தரு மெல்லிலைக் காவும்* (சீவக. 826).

கா[5] kā, *part.* A poetic expletive; ஓர் அசைச்சொல். *காண்டிகா* (தொல். சொல். 279, சேனா).

கா[6] kā, *n.* <*kā.* Brahma's spouse. See சரசுவதி. *காவெனப் பெயரிய கலைமகளை* (காஞ்சிப்பு. வீராட்ட. 45).

காக்கட்டான் kākkaṭṭāṉ, *n.* 1. Mussell-shell creeper, s. cl., ***Clitoria ternatea typica;*** கொடிவகை. 2. Sky-blue bindweed, m. cl., ***Ipomaea hederacea;*** கொடிக்காக்கட்டான். (L.)

காக்கணங்கொவ்வை kākkaṇaṅkovvai, *n.* See காக்கட்டான், 1.

காக்கணம் kākkaṇam, *n.* See காக்கட்டான், 1. (திவா.)

காக்கத்துவான் kākkattuvāṉ, *n.* <Malay. *kākātūwa.* Cockatoo; கிளிவகை.

காக்கம் kākkam, *n.* 1. Bitter snake-gourd. See குறட்டை. (மலை.) 2. A common creeper of the hedges. See கோவ்வை. (மலை.)

காக்கரை kākkarai, *n.* <கார்+. Black, stiff, clayey soil, cracking widely in dry weather, requiring a good soaking before being ploughed; கரிசல்நிலம். *Madu.*

காக்கன் kākkaṉ, *n.* A sea-fish, grey, attaining 1½ ft. in length, ***Pristipoma hasta;*** கடல்மீன்வகை. (M. M.)

காக்கன்போக்கன் kākkaṉ-pōkkaṉ, *n.* Redupl. of போக்கன். 1. Stranger, unknown person; ஊர்பேர் தெரியாதவன். 2. Idle vagrant; துன்மார்க்கன். (W.)

காக்கா kākkā, *n.* <U. *kākā.* Elder brother; தமையன். *Muham.*

காக்காச்சி kākkācci, *n.* 1. A sea and river fish, silvery, attaining 6 in. in length, ***Ambassis commersoni;*** கடலிலும் நதிகளிலும் வாழும் கடல்மீன் வகை. 2. A sea-fish, roseate, attaining 11¼ in. in length, ***Sciaena murdjan;*** கடல்மீன் வகை. 3. Cockle, ***Cordium edule;*** ஒருவகைக் கிளிஞ்சில்.

காக்காந்தோல் kākkāntōl, *n.* <காக்கை+. Abscess in the heel; குதிகாலில் உண்டாகும் கொப்புள வகை. *Tinn.*

காக்காய் kākkāy, *n.* <காக்கை. See காகம். *Vul.*

காக்காய்க்கால் kākkāy-k-kāl, *n.* <காக்காய் +. 1. Splits or clefts in dried fields of wet cultivation; காய்ந்தவயலிற் காணும் வெடிப்பு. *Loc.* 2. Flaw in a gem, esp. a diamond, so called from its resembling a crow's foot; காகத்தின் கால்போற் காணும் வயிரக்குற்ற வகை. *Colloq.*

காக்காய்க்கால்தையல் kākkāy-k-kāl-taiyal, *n.* <id. +. Feather-stitching; தையல்வேலை வகை.

காக்காய்க்குறவன் kākkāy-k-kuṟavaṉ, *n.* <id. +. [M. *kākkakkuṟavan.*] Crow-eating Kurava; காகந்தின்னுங் குறவன்.

காக்காய்க்கொப்புளம் kākkāy-k-koppuḷam, *n.* <id. +. See காக்காந்தோல்.

காக்காய்கொல்லி kākkāy-kolli, *n.* <id. +. Cocculus-indicus, m. cl., ***Anamirta cocculus;*** கோடிவிஷேடம். (L.)

காக்காய்ச்சோளம் kākkāy-c-cōḷam, *n.* <id. +. Black cholam; கருஞ்சோளம்.

காக்காய்த்தாளி kākkāy-t-tāḷi, *n.* <id. + *தாளி*. Ceylon ebony, l. tr., ***Diospyros ebenum;*** கருங்காலிவகை. (L.)

காக்காய்த்தோல் kākkāy-t-tōl, *n.* <id. +. See காக்காந்தோல்.

காக்காய்ப்பாலை kākkāy-p-pālai, *n.* <id. +. Cluster-flowered croton, m. tr., ***Gelonium lanceolatum;*** மரவகை. (L.)

காக்காய்ப்புண் kākkāy-p-puṇ, *n.* <id. +. See காக்காந்தோல்.

காக்காய்ப்பூ kākkāy-p-pū, *n.* <id. +. [M. *kākkappū.*] Sisparra creeper, herbaceous pot plant, which bears small purple flowers, s. cl., ***Torenia asiatica;*** பூடுவகை. (M. M.)

காக்காய்ப்பொன் kākkāy-p-poṉ, *n.* <id. +. See காக்கைப்பொன்.

காக்காய்பிடி-த்தல் kākkāy-piṭi-, *v. tr.* <id. +. To cajole, coax by word and deed; இச்சகமாக நடந்து வசப்படுத்தல். *Colloq.*

காக்காய்மீன் kākkāy-mīṉ, *n.* <id. +. A kind of fish; மீன்வகை.

காக்காய்முள் kākkāy-muḷ, *n.* <id. +. [M. *kākkamuḷḷu.*] 1. Thorns used by crows in building their nests; கூடுகட்டக் காக்கை உபயோகிக்கும் முள். 2. Crow thorn, elephant caltrop, ***Pedalium murex;*** ஆனைநெரிஞ்சி. (M. M.)

காக்காய்மூக்கன் kākkāy-mūkkaṉ, *n.* <id. +. Man with sharp long nose; நீண்ட மூக்குள்ளவன். *Colloq.*

காக்காய்மூக்கி kākkāy-mūkki, *n.* <id. + perh. மூக்கு. A prepared arsenic. See கருமுகிற் பாஷாணம். (W.)

காக்காய்மூக்கு kākkāy-mūkku, *n.* <id. +. Sprout from a coconut seedling just as it begins to grow, resembling a crow's beak; நட்ட தென்னைநெற்றினின்று தோன்றும் முளை.

காக்காய்வடை kākkāy-vaṭai, *n.* <id. +. Cake offered to manes at the end of a *Śrāddham;* சிராத்தமுடிவில் நடத்தும் பிண்டப்பிரதானத்திலே பிதிர்தேவதைகளுக்கு நிவேதிக்கும் வடை.

காக்காய்வலிப்பு kākkāy-valippu, *n.* <id. +. See காக்கைவலி.

காக்காய்வெருட்சி kākkāy-veruṭci, *n.* <id. +. Lit., crow-terror, vampire bat, ***Megaderma lyra;*** காக்கைகட்கு மனவெருட்சியை உண்டாக்கும் வௌவால்வகை. (M.M.)

காக்காரர் kā-k-kārar, *n.* <கா¹ +. Palanquin-bearers; persons who carry loads suspended from a pole on their shoulders; பல்லக்கு காத்தண்டுகளைச் சுமப்போர். (W.)

காக்காவெனல் kā-k-kā-v-eṉal, *n.* Onom. expr. signifying the cawing of the crow; காக்கையின் ஒலிக்குறிப்பு.

காக்கி kākki, *n.* <U. *khāki*. Light drab or chocolate-coloured cloth, produced by boiling myrobalans and sulphate of iron together; ஒருவகைப் பழுப்புநிறத் துணி.

காக்குத்துவான் kākkuttuvāṉ, *n.* See காக்கத்துவான். (*யாழ். அக.*)

காக்குறட்டை kākkuṟaṭṭai, *n.* <கார் +. Mussell-shell creeper, s. cl., ***Clitoria ternatea typica;*** காக்கணவகை. (*மலை.*)

காக்கை¹ kākkai, *n.* Onom. cf. *kāka*. [T. *kāki*, K. *kāke*, M. *kākka*, Tu. *kakke.*] 1. Crow, ***Corvus splendens;*** காகம். *காக்கை கரவா கரைந் துண்ணும்* (*குறள்,* 527). 2. The 23rd *nakṣatra*. See அவிட்டம். (*திவா.*)

காக்கை² kākkai, *n.* <கா-. Preserving; பாதுகாக்கை. *மண்காக்கைக்கு மாய்க்கைக்கும்* (*அஷ்டப். திருவரங்கத்தந்.* 9).

காக்கைக்கண்ணன் kākkai-k-kaṇṇaṉ, *n.* <காக்கை¹ +. Squint-eyed or cross-eyed person; மாறுகண்ணன். *கற்புளார் செயலைகொய்து கழறினன் காக்கைக்கண்ணன்* (*சிவதரு. சுவர்க்கநரகசே.* 31).

காக்கைக்குணம் kākkai-k-kuṇam, *n.* <id. +. Characteristics of a crow, being five, viz., *மடியின்மை, கலங்காமை,* நெடுகக்காண்டல், பொழுதிறவாதிடம்புகுதல், மறைந்தபுணர்ச்சி; காக்கைக்குரிய ஐந்து தன்மைகள். (*திருக்கோ.* 235, *உரை.*)

காக்கைக்கொடியாள் kākkai-k-koṭiyāḷ, *n.* <id.+. The goddess of ill-luck, who has a crow on her banner; மூதேவி. (திவா.)

காக்கைச்சேல் kākkai-c-cēl, *n.* prob. id. +. A fresh-water coast-fish, yellowish, attaining 3 in. in length, very pugnacious, *Etroplus maculatus;* நல்லதண்ணீரில் வாழும் மீன்வகை.

காக்கைப்பலா kākkai-p-palā, *n.* perh. id. +. Esculent-leaved false kamela, m. tr., *Caesaria esculenta;* மாவிலேகடம். (L.)

காக்கைப்பொன் kākkai-p-poṉ, *n.* <id.+. [M. *kākkapponnu.*] A kind of tinsel, resembling gold leaf, used for decoration at weddings and other festivals; பொன்போன்ற ஒருவகை வர்ணத்தகடு. ஒருவன் ஒருகுழமகனைப் பண்ணி அதின்கழுத்திலே காக்கைப்பொன்னைத் தொற்றி (ஈடு, 3, 1, 10).

காக்கைபாடினியம் kākkai-pāṭiṉiyam, *n.* <காக்கைபாடினி. An ancient work on Tamil prosody by Kākkai-pāṭiṉiyār, not extant, only a few *sutras* of which are found quoted in the old commentaries; காக்கை பாடினியார் இயற்றிய யாப்பிலக்கணநூல்.

காக்கைபாடினியார் kākkai-pāṭiṉiyār, *n.* The author of an ancient work on Tamil prosody; யாப்பிலக்கணஞ்செய்த பழைய ஆசிரியருள் ஒருவர். (தொல். பொ. 650, உரை.)

காக்கைபாடினியார்நச்செள்ளையார் kākkai-pāṭiṉiyār-nacceḷḷaiyār, *n.* <காக்கை+பாடு-+. A famous poetess, author of the sixth section in *Patiṟṟu-p-pattu,* so named because she vividly described the cawing of a crow; காக்கைகரைதலைப் பாராட்டிக் கூறியமைபற்றிக் காக்கைபாடினி எனப்பட்டுப் பதிற்றுப்பத்தின் ஆறாம்பத்தினை இயற்றிய பெண்பாற்புலவர்.

காக்கைமல்லி kākkai-malli, *n.* < id. +. Lit., crow jasmine, wild ach-root. See நுணா. (மூ. அ.)

காக்கைவலி kākkai-vali, *n.* <id. + . Epilepsy, falling sickness; வலிப்புநோய்வகை. (சீவரட்.)

காக்கைவேலி kākkai-vēli, *n.* prob. id.+. A hedge twiner. See வேலிப்பருத்தி.

காகக்கரிப்பன் kāka-k-karippaṉ, *n.* <*kāka*+. A black-coloured eclipse plant; கருங்கையாந்தகரை. (தைலவ. தைல. 94.)

காகச்சிலை kāka-c-cilai, *n.* <id.+. Black loadstone, magnetic oxide of iron; காந்தசத்தி உள்ள ஒருவகை இதம்புக்கட்டி. (W.)

காகச்சுக்கான் kāka-c-cukkāṉ, *n.* <id.+. Black marble; கருஞ்சுக்கான். (W.)

காகசகுட்டம் kākaca-kuṭṭam, *n.* <*kāka-ja+kuṣṭha.* A kind of leprosy, with reddish shining spots followed by an eruption of dark nodules; ஒருவகைக் குஷ்டரோகம். (சீவரட். 151.)

காகசுரம் kāka-curam, *n.* <*kāka+svara.* (Mus.) Cawing note, a defect in singing; ஓர் அபஸ்வரம். (திருவாலவா. 57, 14.)

காகத்துரத்தி kāka-t-turatti, *n.* prob. id.+ துர-. Thorny caper. See காத்தொட்டி, 1. (மலை.)

காகத்துவசத்தாள் kāka-t-tuvacattāḷ, *n.* <id.+*dhvaja.* See காக்கைக்கொடியாள். (சூடா.)

காகதாலியம் kāka-tāliyam, *n.* <*kāka-tālīya.* See காகதாலீயம். விளங்கிலிசோ . . . காகதாலியமென்பதுவே (வெங்கைக்கோ. 10).

காகதாலீயம் kāka-tālīyam, *n.* <id. Illustration of the settling of the crow on the palmtree followed by the fall of palm-fruit as an instance of *post hoc ergo propter hoc;* காகம் பனையில்வந்து தங்கப்பனம்பழம்வீழ்ந்ததுபோலத் தற்செயல்குறிக்கும்நெறி. காகதாலீயம்போல் வாதனையின் வசத்திலுளங்கலந்து நிற்குமேகமுற (ஞானவா. உற்ப. 66).

காகதாளி kāka-tāḷi, *n.* <*kāka* + தாள். Ceylon ebony. See கருங்காலி. (M.M.)

காகதாளீயம் kāka-tāḷīyam, *n.* See காகதாலீயம்.

காகதுண்டம் kāka-tuṇṭam, *n.* <*kāka-tuṇḍa.* Eagle-wood. See அகில். எக்தெழிற் காகதுண்டம் (சூளா. சீய. 105).

காகதேரி kāka-tēri, *n.* <*kāka* + தேர்-. Black nightshade. See மணித்தக்காளி. (மலை.)

காகந்தி kākanti, *n.* <ககந்தன். Kāviri-p-pūm-paṭṭiṉam so named after one of its kings, Kakantaṉ; காவிரிப்பூம்பட்டினம். ககந்தன் காத்தலிற் காகந்தியென்றே (மணி. 22, 37).

காகநாசம் kāka-nācam, *n.* prob. *kāka*+. An inferior species of coral tree. See நரிமுருக்கு. (சங். அக.)

காகநாசி kāka-nāci, *n.* <*kāka-nāsikā.* Indian guttapercha. See பாற்சொற்றி. (மூ. அ.)

காகநிமிளை kāka-nimiḷai, *n.* <*kāka*+. Antimony. See கருநிமிளை. (மூ. அ.)

காகப்புள் kāka-p-puḷ, *n.*<id.+. 1. Crow; காக்கை. 2. The 23rd *nakṣatra.* See அவிட்டம். (பிங்.)

காகபதம் kāka-patam, *n.* <*kāka-pada.* (Mus.) One of ten varieties of *kālam,* q.v., which consists of 65536 *kaṇam;* 65,536 கணங்கொண்ட காலவகை. (பரத. தாள. 27.)

காகபலி kāka-pali, *n.* <*kāka*+. Ball of rice thrown to crows by Hindus just before their midday meal; பகலில் உணவுகொள்ளுதற்கு முன்பு காகத்துக்கு இடும் பலி.

காகபாதம் kāka-pātam, *n.* <*kāka-pāda*. A flaw in diamond, one of 12 *vayira-k-kuṟṟam*, q.v.; வயிரக்குற்றங்களுள் ஒன்று. (சிலப். 14, 180, உரை.)

காகபாஷாணம் kāka-pāṣāṇam, *n.* prob. *kāka*+. A prepared arsenic, one of 32; வைப்புப் பாஷாணவகை. (மூ. அ.)

காகபிந்து kāka-pintu, *n.* <*kāka-bindu*. Black dot; கரும்புள்ளி. வயிரம், ரக்தபிந்துவும் காகபிந்துவும் உடையன (S.I.I. ii, 78).

காகபீலி kāka-pīli, *n.* <*kāka-pīlu*. Crab's eye. See குன்றி. (சங். அக.)

காகம் kākam, *n.* <*kāka*. 1. Crow, *Corvus splendens*; காக்கை. காகபந்தரிற் கருமுகிற் காளிமங் கஞலும் (கந்தபு. ஆற்றுப். 13). 2. The 23rd *nakṣatra*. See அவிட்டம். (சாதகசிந். காலநிகண். 20.)

காகமாசி kāka-māci, *n.* <*kāka-māci*. Black nightshade. See மணித்தக்காளி. (தைலவ. தைல. 76.)

காகரி kākari, *n.* cf. *kṛkarā*. Long pepper. See திப்பலி. (மலை.)

காகலிநிஷாதம் kākali-niṣātam, *n.* <*kākali-niṣāda*. (Mus.) Highest variety of the seventh note of the gamut, one of *cōṭaca-curam*, q.v.; ஏழாம் இசை வகையுள் ஒன்று.

காகவாகனன் kāka-vākanaṉ, *n.* <*kāka*+*vāhana*. Saturn, as riding a crow; சனி. (சங். அக.)

காகவிருந்தம் kāka-viruntam, *n.* prob. id.+*vṛnta*. A variety of diamond; வயிரமணி வகை. வயிரம் காகவிருந்தமும் உருளையுமாக ஐந்தும் (S.I.I. ii, 396, 143).

காகவோசை kāka-v-ōcai, *n.* <id.+. See காககுரம். வினைபடு காகவோசை (திருவாலவா. 57, 26).

காகளம் kākaḷam, *n.* <*kāhala*. Trumpet; எக்காளம். கல்லென விரங்குறு காடி காகளம் (கந்தபு. சரவண. 9).

காகாட்சிகோளநியாயம் kākāṭci-kōḷa-niyāyam, *n.* <*kākākṣi-gōla-nyāya*. Illustration of the single eye-ball of the crow functioning through both the eyes, to explain the same word or phrase being construed twice; காகத்தின் இருகண்களுக்கும் ஒன்றே மணியானதுபோல ஒரே சொல்அல்லது தொடர் ஈரிடத்து இயைந்து பொருள்விளக்கும் நெறி.

காகாபிசாசு kākā-picācu, *n.* See காகாவிரிச்சி. (J.)

காகாவிரிச்சி kākā-viricci, *n.* <*kāka*+வெருட்சி. A kind of vampire-bat of black colour and bristling hair; இரத்தமுண்ணும் வௌவாற்பறவை. (J.)

காகித்தம் kākittam, *n.* See காகித்திரம்.

காகித்திரம் kākittiram, *n.* Indian ipecacuanha. See நறிஞ்சா. (மலை.)

காகிதம் kākitam, *n.* <Mhr. *kāgada*. [U. *kāgaz*.] 1. Paper; கடுதாசி. 2. Epistle written on paper; கடிதம்.

காகு kāku, *n.* <*kāku*. Modulation of voice which indicates an implied meaning; கூறப்படாதபொருளைத் தரக்கூடிய சொல்லின் ஓசைவேறுபாடு. (குறள், 1318, உரை.)

காகுத்தன் kākuttaṉ, *n.* <*Kākutstha*. Rama, the hero of the Rāmāyaṇa, as a descendant of Kakutstha; ககுத்ஸ்தவமிசத்தில் தோன்றிய இராமன். காயுங் கடுஞ்சிலையென் காகுத்தன் வாரானால் (திவ். திருவாய். 5, 4, 3).

காகுராசி kākurāci, *n.* Snake-gourd. See புடல். (மலை.)

காகுளி[1] kākuḷi, *n.* cf. *kāhala*. 1. Harsh demoniac sound in singing; பேய் கத்தினாற்போலப் பாடுவது. (கல்லா. 21, 40.) 2. (Mus.) Guttural sound, bass; மிடற்றெழும் மந்தவிசை. (பிங்.) 3. Tune, melody, music; இசை. (பிங்.)

காகுளி[2] kākuḷi, *n.* Seat, mat, bed; தவிசு. (பிங்.)

காகூவெனல் kā-kū-v-eṉal, *n.* Onom. expr. as in wailing; ஓர் ஒலிக்குறிப்பு.

காகோடகி kākōṭaki, *n.* Black oil tree. See வாலுளுவை. (மலை.)

காகோடி kākōṭi, *n.* cf. *kākōla*. Strychnine tree. See எட்டி. (மலை.)

காகோடியன் kā-kōṭiyaṉ, *n.* prob. கா[4]+கோடியன். Strolling dancer; கழைக்கூத்தன். (அக. நி.)

காகோதம் kākōtam, *n.* See காகோதரம். கங்கு லிரைதேருங் காகோதராசனும் (திருப்பு.).

காகோதரம் kākōtaram, *n.* <*kākōdara*. Lit., that which moves on its belly in a zigzag way, snake; பாம்பு. (பிங்.)

காகோலம் kākōlam, *n.* <*kākōla*. Jungle crow, raven. See அண்டங்காக்கை. (உரி. நி.)

காகோளி kākōḷi, *n.* cf. *kaṅkēli*. 1. Aśōka. See அசோகு. (திவா.) 2. Indian turnsole. See தேட்கொடுக்கி. 3. Wild pipal. See கொடியரசு.

காங்கி kāṅki, *n.* <*kāṅkṣin*. Avaricious person; பேராசைக்காரன். மற்றவன் கைத்துண்பான் காங்கி யெனப்படுவோன் (நான்மணி. 61).

காங்கிசை kāṅkicai, *n.* <*kāṅkṣā.* Desire; விருப்பம். *காங்கிசை மிக்க மறக்கொடி* (திருப்பு. 263).

காங்கு[1] kāṅku, *n.* <Chin. *kaṅg.* Large earthen pot; பெரும்பானை.

காங்கு[2] kāṅku, *n.* <கோங்கு. Common caung. See கோங்கு. (L.)

காங்குப்புடைவை kāṅku-p-puṭaivai, *n.* [K. *kāgu*, M. *kāṅgi*, Tu. *kāṅgu.*] A kind of coloured cloth; புடைவை வகை. (G. Sm. D. i, 265.)

காங்கூலம் kāṅkūlam, *n.* <*lāṅgūla.* (Nāṭya.) A gesture with one hand in which the thumb, the forefinger and the middle finger are joined and bent forward while the ring-finger is folded and the little finger is held upright, one of 33 *iṇaiyā-viṉaikkai*, q.v.; சுட்டு விரல் பெருவிரல் பேடுவிரல் என்றமூன்றும் ஒட்டிநிற்க அநாமிகைவிரல் முடங்கிச் சிறுவிரல் நிமிர்ந்து நிற்கும் இணையாவினைக்கை. (சிலப். 3, 18, உரை.)

காங்கெயம் kāṅkeyam, *n.* <*gāṅgēya.* Gold; பொன். *காங்கெயத்தொழிற் கம்மியர்* (இரகு. திக்கு. 189).

காங்கெயர் kāṅkeyar, *n.* 1. Inhabitants of the country ruled by the Gangas; கங்கநாட்டினர். *பொப்பண காங்கெயர்கோன்* (சிலப். பக். 11). 2. Name of the author of the *Uriccol-nikaṇṭu*; உரிச்சொல் நிகண்டுசெய்த ஆசிரியர். *முந்துகாங்கெயனுரிச்சொல்* (ஆ. நி.)

காங்கேயன் kāṅkēyaṉ, *n.* <*Gāṅgēya.* 1. Skanda, said to have been born in the Ganges; கந்தக்கடவுள். (திவா.) 2. Bhīṣma, son of Gaṅgā; பீஷ்மர். *காங்கெய னுள்ளிட்ட காவலர்கள்* (பாரதவெண். ஸ்ரீவாசுதேவன். 46).

காங்கை kāṅkai, *n.* prob. *காய்கை.* [T. *kāka*, K. *kāṅke.*] Heat, feverishness, pyrexia; வெப்பம்.

காங்கையன் kāṅkaiyaṉ, *n.* prob. *காய்*[1]-. A prepared arsenic; நீலபாஷாணம். (W.)

காச்சக்கீரை kācca-k-kīrai, *n.* [T. *kāci.*] Indian brown hemp. See புளிச்சைக்கீரை. (W.)

காச்சப்பட்டா kācca-p-paṭṭā, *n.* Umbelled yellow-flowered resin-seed, s. tr., *Pittosporum tetraspermum*; தூரிமரம்.

காச்சரக்கு kāccarakku, *n.* cf. *காச்சிரக்கு.* See காச்சரக்குநார். (W.)

காச்சரக்குநார் kāccarakku-nār, *n.* Indian brown hemp. See புளிச்சைக்கீரை. *Loc.*

காச்சி kācci, *n.* perh. *காய்*[2]-. Common dhal; துவரை. (மலை.)

காச்சிமீரம் kāccimīram, *n.* <*kāśmīra.* See காசுமீரம்.

காச்சிரக்கு kāccirakku, *n.* <T. *kāci.* See புளிச்சைக்கீரை. (W.)

காச்சுப்பீச்செனல் kāccu-p-pīcceṉal, *n.* Onom. See காச்சுமூச்செனல்.

காச்சுமூச்செனல் kāccu-mūcceṉal, *n.* Onom. expr. signifying noise or clamour, as in a family of children and women; ஓர் ஒலிக்குறிப்பு.

காச்சுரக்கைநார் kāccurakkai-nār, *n.* cf. *காச்சரக்குநார்.* Indian brown hemp. See புளிச்சைக்கீரை.

காச்சுரை kāccurai, *n.* cf. *காச்சிரக்கு.* Indian brown hemp. See புளிச்சைக்கீரை. (W.)

காசசுவாசம் kāca-cuvācam, *n.* <*kāśa* + Asthmatic breathing, difficult breathing as in asthma; காச இழுப்பு. (*பதார்த்த.* 24.)

காசண்டி kācaṇṭi, *n.* <Mhr. *kāsaṇḍi.* A kind of pot with a wide mouth; வாயகலமுள்ள ஒருவகைப் பாத்திரம். *கெண்டிகை காசண்டி செப்புக் கும்பம்* (பிரபோத. 11, 31).

காசநீர் kāca-nīr, *n.* <*kāśa* +. The humour that causes the disease called *kācam*; காச நோய்க்குக் காரணமான துர்நீர். (W.)

காசம்[1] kācam, *n.* prob. *kās.* (W.) 1. Gold; பொன். 2. A mineral poison. See கற்பாஷாணம்.

காசம்[2] kācam, *n.* <*kāśa.* 1. Kaus, a large coarse grass; நாணல். (*சூடா.*) 2. Phthisis, asthma, pulmonic and bronchial affections; ஈளைமுதலிய நோய். (W.) 3. Phlegm; கோழை. (*பிங்.*)

காசம்[3] kācam, *n.* <*ā-kāśa.* Space; sky; ஆகாயம். *காசமாயின வெல்லாங் கரந்து* (கம்பரா. மருத்து. 40).

காசம்[4] kācam, *n.* <*kāca.* 1. Crystal; பளிங்கு. 2. A disease of the eyes, cataract, affection of the optic nerve, *Gutta serena*; கண்ணோய்வகை. *கண்ணின் காசகாமலாதி தோஷம்* (சி. சி. 2, 85, சிவாக்.).

காசமர்த்தகம் kāca-marttakam, *n.* prob. *kāśa* + *mardaka.* A kind of large grass; பெரும்புல். (தைலவ. தைல. 76.)

காசலவணம் kāca-lavaṇam, *n.* <*kāca* +. Salt of potash or soda in crystalline state, one of *pañca-lavaṇam*, q. v.; பஞ்சலவணத்துள் ஒன்று.

காசறை kācaṟai, *n.* perh. *காசு*[1] + *அறு*[1]-. 1. Musk deer; கஸ்தூரிமிருகம். *காசறைக் கருவும்* (சிலப். 25, 52). 2. Musk; கஸ்தூரி. *காசறைத்திலகக் கருங்கறை* (சிலப். 28, 27). 3. Pomatum.

காரக்கருணை kāra-k-karuṇai, *n.* < கார்[1]- +. Elephant yam. See காறுகருணை. (M. M. 289.)

காரக்கல் kāra-k-kal, *n.* < *kṣāra* +. A kind of caustic mineral; ஒருவகை விஷக்கல். (W.)

காரக்கழிச்சல் kāra-k-kaḻiccal, *n.* < id. +. A kind of diarrhœa; அசீரணபேதிவகை.

காரக்காஞ்சிரம் kāra-k-kāñciram, *n.* prob. id. +. Medicinal herb, *Peristrophe bicalyculata;* ஒருவகை மருந்துச்செடி. (M. M. 161.)

காரகக்கருவி kāraka-k-karuvi, *n.* < *kāraka* +. (Gram.) That which is instrumental in bringing about action, opp. to *ñāpaka-k-karuvi;* தொழிலை இயற்றுவிக்குங் கருவி. (தொல். சொல். 74, உரை.)

காரகபஞ்சகம் kāraka-pañcakam, *n.* < id. +. The five organs of action; ஐவகைக் கருமேந்திரியம். (சி. சி. 1, 5, சிவாக்.)

காரகம்[1] kārakam, *n.* < *kāraka.* (Gram.) The relation of a noun to a verb denoted by the case-ending; வேற்றுமையுருபேற்ற பெயர் வினை கொண்டு முடியும் நிலை. (பி. வி. 8.)

காரகம்[2] kārakam, *n.* < *kārā-gṛha.* Jail, prison, dungeon; சிறைச்சாலை. *காரகத் திவளை யாக்கி* (உபதேசகா. சிவபுண். 338).

காரகம்[3] kārakam, *n.* < கரு-மை +. Secondary syphilis; மேகரோகம். *Loc.*

காரகவரிக்கொம்பு kār-aka-vari-k-kom-pu, *n.* < கார் + அகம் +. Horn of an ox with black streaks on the inside; உட்புறத்துக் கறுப்புவரி கொண்ட மாட்டின் கொம்பு. *Loc.*

காரகவெட்டை kāraka-veṭṭai, *n.* < காரகம்[3] +. See காரகம்[3]. (இராசவைத்.)

காரகவேது kāraka-v-ētu, *n.* < *kāraka* + *hētu.* (Gram.) Efficient cause, actually producing the effect, dist. fr. *ñāpaka-v-ētu,* as *வானவிசுத் தான் ஆயினன்;* தொழினிகழ்ச்சிக்குக் கருவியாயுள்ள ஏது. (தண்டி. 58, தலைப்பு.)

காரகன் kārakaṉ, *n.* < *kāraka.* 1. Agent, doer; செய்வோன். 2. Creator; படைப்போன். *காரகன்றனையும்* (சிவதரு. சிவஞான. 31). 3. (Astron.) Sun's longitude corrected for parallax, as reckoned on the fixed zodiac; சூரியரேகாமிசம்.

காரங்கட்டு-தல் kāraṅ-kaṭṭu-, *v. intr.* < *kṣāra* +. 1. To strengthen the blue dye by adding the necessary ingredients; நீலச்சாயத்தை உறுதியாக்குதல். (W.) 2. To prepare caustics; உறைப்புமருந்து கூட்டுதல்.

காரங்கூட்டு-தல் kāraṅ-kūṭṭu-, *v. intr.* < id. +. To prepare dyer's lye; சாயமருந்து சேர்த்தல். (W.)

காரங்கொடு-த்தல் kāraṅ-koṭu-, *v. intr.* < id. +. To give pungent medicines, as to a lying-in-woman; காரமருந்தை உண்பித்தல். *Colloq.*

காரச்சாயம் kāra-c-cāyam, *n.* < id. +. A compound colour for dyeing; ஒருவகைக் கலப்புச் சாயம். (J.)

காரச்சீலை kāra-c-cīlai, *n.* < id. +. Corrosive plaster, blister; புண்ணுக்கிடும் மருந்துச் சீலை. *Colloq.*

காரசாரம் kāra-cāram, *n.* < id. + *sāra.* cf. *kṣāra-kṣāra.* Pungency, the quality of being pungent and palatable; வேண்டிய அளவோடு அமைந்த காரச்சுவை. *காரசாரஞ்சேர் சாற்றிலே கலந்த சோற்றிலே* (அருட்பா, vi, அவாவறுப்பு. 2).

காரட்டு kāraṭṭu, *n.* < E. *carat.* cf. U. *qirāṭ.* Carat, standard weight for precious stones, 3⅙ gr. troy; இரத்தினங்களை நிறுக்கும் ஒரு நிறை.

காரடம் kāraṭam, *n.* [T. *gāraḍamu,* K. *gāraḍa.*] See காரடவித்தை.

காரடவித்தை kāraṭa-vittai, *n.* < காரடம் +. Juggling, legerdemain; சாலவித்தை.

காரடன் kāraṭaṉ, *n.* < id. Juggler; சாலவித்தைக்காரன்.

காரடை kār-aṭai, *n.* < கார் + அடை. A kind of rice cake; ஒருவகைப் பணிகாரம்.

காரடையாநோன்பு kāraṭaiyā-nōṉpu, *n.* < காரடை + ஆம் +. A ceremonial fast observed by women when the sun passes from Aquarius to Pisces, praying for the longevity of their husbands; மாசியும் பங்குனியும் கூடும்நாளில் தம் கணவரின் தீர்க்காயுளைக் கருதிக் காரடையை உணவாகக் கொண்டு மகளிர் கைக்கொள்ளும் ஒரு விரதம்.

காரண்டம் kāraṇṭam, *n.* < *kāraṇḍava.* Little cormorant. See நீர்க்காக்கை. (சூடா.)

காரணக்குறி kāraṇa-k-kuṟi, *n.* < *kāraṇa* +. 1. (Gram.) Noun conveying the etymological sense, opp. to *iṭu-kuṟi;* காரணப்பெயர். *மழைக்க ணென்பது காரணக்குறியென வகுத்தாள்* (கம்பரா. காட்சி. 6). 2. Presage, omen, prognostic; முன்னறிகுறி. (W.)

காரணக்குறிமரபு kāraṇa-k-kuṟi-marapu, *n.* < id. +. (Gram.) Noun used in its etymological sense and sanctioned by long usage; காரணம் பற்றித் தோன்றுதொட்டு வழங்கும் பெயர்ச்சொல். (நன். 275.)

காரணக்குறியாக்கம் kāraṇa-k-kuṟi-y-ākkam, *n.* <id. +. (Gram.) Noun used in its etymological sense to suit an occasion; காரணம்பற்றிப் படைத்துக்கொள்ளும் பெயர்ச்சொல். (நன். 275, விருத்.)

காரணகர்த்தா kāraṇa-karttā, *n.* <id. +. The Supreme Being, the Cause of all things; முதற்கடவுள். (W.)

காரணகுரு kāraṇa-kuru, *n.* <id. +. Guru whose sole object is the spiritual benefit of his disciples, opp. to *kāriya-kuru;* மோக்ஷம் அடைதற்குக் காரணமான ஞானகுரு. (W.)

காரணகேவலம் kāraṇa-kēvalam, *n.* <id. +. (Śaiva.) The major condition of the soul in which it remains inert and united to *Āṇavam*, awaiting the Period of Creation, one of three *kāraṇāvattai*, q.v.; காரணவத்தைமூன்றனுள் ஆன்மாக்கள் சர்வசங்காரகாலத்தில் அசுத்தமாயா காரணத்திலேயொடுங்கி ஆணவமலத்தாலே மறைப்புண்டு சிருஷ்டிகாலமளவும் ஒன்றும் அறியாமற் கிடக்கும் அவத்தை. (சிவப். கட். 15.)

காரணச்சிறப்புப்பெயர் kāraṇa-c-ciṟappu-p-peyar, *n.* <id. +. (Gram.) Noun used in its etymological sense and applicable to a particular object in a class or group, dist. fr. *kāraṇa-p-potu-p-peyar;* காரணத்தால் ஓரினத்தில் ஒன்றற்குச் சிறப்பாகவரும் பெயர்ச்சொல். (நன். 62, உரை.)

காரணச்சொல் kāraṇa-c-col, *n.* <id. +. Story, narrative; கதை. (பிங்.)

காரணசகலம் kāraṇa-cakalam, *n.* <id. +. (Śaiva.) The major condition of the soul in which it is invested with bodies and subjected to births and deaths, one of three *kāraṇāvattai*, q.v.; காரணவத்தை மூன்றனுள் ஆன்மாக்கள் தேகமெடுத்துச் சனனமரணங்களுக்கு உட்படும் அவத்தை. (சிவப். கட். 15.)

காரணசரீரம் kāraṇa-carīram, *n.* <id. + *śarīra*. (Phil.) The subtlest and innermost rudiment of the body, causal frame; பஞ்சபூத பரிணமமான தூலசரீரத்திற்குக் காரணமாயுள்ள சூக்கும சரீரம்.

காரணசுத்தம் kāraṇa-cuttam, *n.* <id. +. (Śaiva.) The major condition of the soul in which it becomes united to the Feet of the Lord, freed from *mummalam*, one of three *kāraṇāvattai*, q.v.; காரணவத்தை மூன்றனுள் மல நீக்கம்பெற்ற ஆன்மா பதியின்திருவடிகளில் ஐக்கியப்படும் அவத்தை. (சிவப். கட். 15.)

காரணப்பெயர் kāraṇa-p-peyar, *n.* <id. +. (Gram.) Derivative name, dist. fr. *iṭu-kuṟi-p-peyar;* ஒருகாரணம்பற்றி வழங்கும் பெயர். (நன். 62, உரை.)

காரணப்பொதுப்பெயர் kāraṇa-p-potu-p-peyar, *n.* <id. +. (Gram.) Noun used in its etymological sense and applicable to a class or group, dist. fr. *kāraṇa-c-ciṟappu-p-peyar;* பலபொருட்குப் பொதுவாகவரும் காரணப்பெயர்ச்சொல். (நன். 62, உரை.)

காரணம் kāraṇam, *n.* <*kāraṇa*. 1. Principle, origin, source, cause, of three kinds, viz., *முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம்;* மூலம். 2. Reason, ground of an assertion or argument; ஏது. *கல்லார்க்கொன் றுகிய காரணம்* (நாலடி, 265) 3. Motive, object; நோக்கம். *நீ அவனை வருத்துங் காரணம் என்ன?* 4. Means; உபாயம். *இதனைத்தீருங் காரணம் யாது* (கம்பரா. நாகபா. 234). 5. An ancient Śaiva scripture in Sanskrit, one of 28 *civākamam*, q.v.; சிவாகமங்கள் இருபத்தெட்டனுள் ஒன்று. (சைவச. பொது. 331, உரை.)

காரணமரபு kāraṇa-marapu, *n.* <id. +. See காரணக்குறிமரபு. (நன். 275.)

காரணமாயை kāraṇa-māyai, *n.* <id. +. (Śaiva.) Māyā, as the primordial, original Principle from which all manifestations of matter are evolved, and into which they are finally resolved; தனுகரணபுவனபோகங்களுக்கு முதற்காரணமாயுள்ள மாயை. (சி. சி. 2, 50, சிவாப்.)

காரணமாலை kāraṇa-mālai, *n.* <id. +. (Rhet.) Figure of speech in which a chain of causes and corresponding effects occur; பின் பின்னுக வருவனவற்றிற்கு முன்முன்னுக வருவனவற்றைக் காரணங்களாகவேனும் காரியங்களாகவேனுஞ் சொல்லும் அணி. (அணியி. 46.)

காரணவணு kāraṇa-v-aṇu, *n.* <id. +. (Atheistic.) Primitive or original atoms by the fortuitous combination of which the worlds were originated; உலகத்திரட்டிக்கு ஒருங்குபல தோச்சுக் காரணமாகும் பரமாணுக்கள். (W.)

காரணவன் kāraṇavaṉ, *n.* <id. One who is the First Cause, God; மூலகாரணனான கடவுள். *ஏழுலகும் பரவுங் காரணவன்* (திருவாலவா. 27, 32).

காரணவாகுபெயர் kāraṇa-v-āku-peyar, *n.* <id. +. (Gram.) Noun literally signifying cause, used figuratively to denote the effect, as *Tiruvācakam*, dist. fr. *kāriya-v-āku-peyar;* திருவாசகம் என்றற்போலக் காரணம் காரியத்திற்கு ஆகி வரும் பெயர்ச்சொல். (நன். 290, உரை.)

காரணவாராய்ச்சி kāraṇa-v-ārāycci, *n.* <id. +. (Rhet.) Figure of speech in which an antecedent cause is represented as not producing its effect; காரணம் குறைவின்றியிருந்தும் காரியம்பிறவாமையைச் சொல்லும் அணி. (அணியி. 35.)

காரணவிடுகுறி kāraṇa-v-iṭu-kuṟi, *n.* <id. +. (Gram.) Noun used in its etymological sense but restricted in application, as *mukkaṇ-aṉ* for *civaṉ;* முக்கணன் என்றற்போல, சொல்லின் காரணங் கருதியவழிப் பலர்க்குஞ் செல்லினும், இடுகுறிபோல ஒருபொருட்கே செல்லும் பெயர்ச்சொல். (நன். 62, உரை.)

காரணன் kāraṇaṉ, *n.* <id. 1. One who is the First Cause, as the Supreme Being; மூலமானவன். *ஆழியிடைத் துயிலுங் காரண* (பாரத. மூன்ரும்போ. 17). 2. Chief, ruler, lord; தலைவன். (பிங்.) 3. A mineral poison; மிருதபாஷாணம். (மூ. அ.)

காரணாவத்தை kāraṇāvattai, *n.* <*kāraṇa* + *avasthā*. (Śaiva.) The major condition of the soul, three in number, viz., *காரணகேவலம், காரணசகலம், காரணசுத்தம்,* dist. fr. *kāriyāvattai;* காரியாவத்தைகட்குக் காரணமாக இருக்கும் அவத்தை. (சிவப். கட். 15.)

காரணி kāraṇi, *n.* <*Kāraṇa*. Pārvatī; பார்வதிதேவி. (யாழ். அக.)

காரணிக்கம் kāraṇikkam, *n.* perh. *kāra-ṇika*. 1. History; சரித்திரம். (W.) 2. Rosary; செபமாலை. *R. C.*

காரணிக்கன் kāraṇikkaṉ, *n.* <id. Accountant; கணக்கன். (Insc.)

காரணிக்கஜோடி kāraṇikka-jōṭi, *n.* <id. +. Quit-rent paid by the accountant; கணக்கன் செலுத்தும் வரி. (I.M.P. Tj. 1302.)

காரணிகன் kāraṇikaṉ, *n.* <id. Judge; arbitrator, umpire; நியாயமத்தியஸ்தன். *நமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும்* (இறை. 1, உரை).

காரத்திரி kāra-t-tiri, *n.* <காரம்¹ + திரி. A kind of seton with a corrosive or caustic preparation on it, inserted as in an abscess; அறுத்த புண்முதலியவற்றில் உட்செலுத்தும் காரமருந்து தோய்த்த சீலைத்திரி. *Colloq.*

காரத்திரியூசி kāra-t-tiri-y-ūci, *n.* <id. + id. +. Seton needle; காரத்திரியை உடம்பினுட் செலுத்தும் ஊசி.

காரப்பசை kāra-p-pacai, *n.* <id. +. Cement or solder of *kuṉṟi-maṇi* and alum, used by gold or silver smiths; குன்றிமணியையும் சீனிக்காரத்தையும் அரைத்துச்சேர்த்துத் தட்டார் உபயோகிக்கும் ஒருவகைப்பசை. (W.)

காரப்புந்தி kāra-p-punti, *n.* <id. + U. *būnd*. See காராபூந்தி. (இந்துபாக. 298.)

காரப்பொடி¹ kāra-p-poṭi, *n.* <id. +. Caustic powder; எரிவுண்டாக்கும் மருந்து.

காரப்பொடி² kāra-p-poṭi, *n.* <காறல் +. A small sea-fish; சிறுமீன்வகை.

காரம்¹ kāram, *n.* <*kṣāra*. [T. *kāramu*, K. Tu. *kāra*, M. *kāram*.] 1. Pungency; உறைப்பு. (சூடா.) 2. Caustic, corrosive; கார்ப்புப்பு. (W.) 3. Alkali, soda, potash, impure carbonate of soda; சாம்பலுப்பு. 4. Washerman's lye, lixivium; சீலையின் அழுக்குவாங்கும் காரம். 5. Mordant, alkaline preparation for securing fast colours; சாயமிடுங் காரம். 6. Alum; சீனிக்காரம். 7. cf. *taṅkara*. Borax; வெண்காரம். 8. Pellitory-of-Spain, a composite plant. See அக்கரகாரம். (தைலவ. தைல. 112.) 9. A mineral poison. See கோளகபாஷாணம். (சங். அக.) 10. Ruin, destruction; அழிவு. *பாவங்கள் யாவையுங் காரமாக்குதலால்* (திருக்காளத். பு. 26, 4). 11. Sacred ashes; திருநீறு. *காரமென்றுரைப்பர்* (திருக்காளத். பு. 26, 4). 12. Anger; கோபம். *அவன் என்மீது காரமாயிருக்கிறான்.* 13. Core of timber, hard or solid part of a tree; மரவைரம். (மூ. அ.)

காரம்² kāram, *part.* <*kāra*. 1. A particle added to the sounds of letters when pronouncing, as *ākāram;* ஆகாரம் என்றற்போல எழுத்தோடு சேர்ந்துவரும் சாரியைகளில் ஒன்று. (நன். 126.) 2. A particle added to onomatopoeic words, as *hāhākāram;* ஒலிக்குறிப்போடு சேர்ந்துவரும் ஒரு சாரியை.

காரம்³ kāram, *n.* <*bhṛṅgāra*. Gold; பொன். (பிங்.)

காரம்பூசு-தல் kāram-pūcu-, *v. intr.* <காரம்¹ +. To imbue cloth with alum that it may retain colour; நிறங்கெடாதபடி சாயத்துக்குச் சீனிக்காரமிடுதல். (W.)

காரம்போடு-தல் kāram-pōṭu-, *v. intr.* <id. +. 1. To apply caustic, lye, alkali, as in washing clothes; ஆடை முதலியவற்றிற்குக் காரம் வைத்தல். 2. To add pungent ingredients to eatables; உணவுப்பொருளுக்குக் காரஞ்சேர்த்தல்.

காரமருந்து kāra-maruntu, *n.* <id. +. 1. A medicinal preparation of vegetable stimulants given to women after child-birth; பிரசவித்த பெண்களுக்குக் கொடுக்குங் காயமருந்து. 2. Caustic; தோலை எரித்துத்தின்னும் மருந்து. (கால். வி.)

காரல் kāral, *n.* <கார்³-. See காறல்.

காரவல்லி kāravalli, *n.* <*kāra-vallī*. Balsam-pear. See பாகல். (சூடா.)

காரள-த்தல் kār-aḷa-, *v. intr.* <கார் +. To measure paddy; நெல்லளத்தல். *கோயிலில் காரளக்கும் ராஜராஜப்பல்லவரையனுக்கு* (S.I.I. ii, 310).

காரற்கத்தரி kāraṟ-kattari, *n.* <கார்²- +. Brinjal, m. sh., *Solanum melongena;* கத்தரிச்செடி வகை.

காரறிவு kār-aṟivu, *n.* <கார் +. Knowledge, wanting in discrimination or clouded by bias;

confused intellect; மயக்கம் பொருந்திய அறிவு. காரறிவாளர்முன் (காலடி, 311).

காரறு-த்தல் kār-aṟu-, *v. intr.* <id.+. To reap *kār* paddy; கார்நெற்பயிரை அறுவடைசெய்தல்.

காரன்[1] kāraṉ, *part.* <*kāra*. Masculine termination of certain nouns, meaning doer, possessor, as *vēlai-k-kāraṉ, paṇa-k-kāraṉ;* வேலைக்காரன் பணக்காரன் என்பவற்றிற்போல, வினைமுதல் உடைமை முதலிய பொருளில்வரும் ஆண்பாற்பெயர் விகுதி.

காரன்[2] kāraṉ, *n.* prob. *kṣāra*. A prepared arsenic; சோரபாஷாணம். (W.)

காரன்னம் kār-aṉṉam, *n.* <கார்+. Black swan; கரிய அன்னப்புள். (சீவக. 930, உரை.)

காரா kār-ā, *n.* <கரு-மை+ஆ[3]. [T. *kārāvu*, U. *kārā*.] Buffalo; எருமை. செங்கண் வன்கட் காரா (தஞ்சைவா. 380).

காராக்கருணை kārā-k-karuṇai, *n.* <கார்[2]-+ ஆ neg.+. Tahiti arrowroot. See காறுக்கருணை, 2.

காராகிரகம் kārā-kirakam, *n.* <*kārā-gṛha*. Prison, dungeon; சிறைச்சாலை. காராகிரகங் கழிவுற்றபினும் (தணிகைப்பு. பிரமன். 3).

காராச்சா kār-āccā, *n.* prob. கரு-மை+. Twin-leaved false copaiba. See காட்டுகேூ.

காராஞ்சி kārāñci, *n.* cf. காரம்பி. A kind of water-lift; நீரிறைக்கும் ஒருவகைக்கருவி. *Loc.*

காராஞிலி kārā-ñili, *n.* *Kāṭar*. 1. Travancore wood-oil tree, l. sh., *Dipterocarpus bourdilloni;* மரவகை. 2. Wild durian, l. tr., *Cullenia excelsa;* மரவகை.

காராடு kār-āṭu, *n.* <கரு-மை+ஆடு. Goat; வெள்ளாடு. (நன். 267, விருத்.)

காராண்மை kār-āṇmai, *n.* <கார்+. [M. *kārāḷma*.] 1. Cultivator's right; நிலத்தைப் பயிரிடுந் தடியுரிமை. (T. A. S. i, 7.) 2. An ancient tax; ஒரு பழைய வரி. காராண்மை உள்ளடங்க இறை கட்டின பொன் (S. I. I. ii, 92, 426).

காராபூந்தி kārā-pūnti, *n.* <U. *khārā-būnd*. Eatable in the form of small balls prepared from spiced salted flour in ghee or oil; ஒரு பணிகாரம்.

காராபூவந்தி kārā-pūvanti, *n.* <id. See காராபூந்தி.

காராம்பசு kār-ām-pacu, *n.* <கரு-மை+ஆம்+. [M. *kārāmbašu*.] Cow with black tongue and nipple; நாக்கும் முலைக்காம்பும் கருநிறமாக உள்ள பசுச்சாதி. (பதார்த்த. 145.)

காராம்பி kār-āmpi, *n.* <கார்+ஆம்பி. Water-lift, used with oxen; எருதுபூட்டி நீரிறைக்கும் கருவிவகை. (பிங்.)

காராமணி kārāmaṇi, *n.* [T. *kārāmaṇi*.] Chowlee bean, m. cl., *Vigna catiang;* ஒருவகைப் பயறு. (பிங்.)

காராமணிக்காய் kārāmaṇi-k-kāy, *n.* <காராமணி+. Whirling nut, m. tr., *Gyrocarpus jacquini;* ஒருவகை மரம். (L.)

காராமயத்திரிதயமோசனம் kārāmaya-t-tiritaya-mōcaṉam, *n.* <*kārāmaya*+*tritaya*+*mōcana*. Removing the three afflictions of captivity, viz., மலசலவாதை, restraint from the calls of nature, சரீரதண்டனை, corporal punishments, விலங்கிடுகை, chains, one of 14 *tayā-virutti*, q.v.; மலசலவாதை, சரீரதண்டனை விலங்கிடுகை என்ற சிறைத்துன்பம் மூன்றுந் தீர்க்கையாகிய தயாவிருத்திவகை. (W.)

காராளர்[1] kār-āḷar, *n.* <கார்+ஆள்-. 1. [M. *kārāḷar*.] Husbandmen, agriculturists; பூவைசியர். (பிங்.) 2. Sudras; சூத்திரர். (பிங்.)

காராளர்[2] kārāḷar, *n.* <*karāla*. 1. A rude tribe of ancient times; முற்காலத்திருந்த ஒரு முரட்டுச்சாதியார். காராளர் சண்பையில் (மணி. 7, 102). 2. A tribe of hunters and cultivators in the hills of Salem and S. Arcot; சேலம் தென்னார்க்காடு ஜில்லாக்களிலுள்ள மலைவாசிகளான ஒரு வேடச்சாதியார். (E. T.)

காரான் kār-āṉ, *n.* <கரு-மை+ஆன்[1]. See காரா. சென்றணிக் காரான் (குறுந். 181).

காரானை kār-āṉai, *n.* <id.+. The cloud brought down to the surface by a waterspout at sea; கடலின்மீதுகுவிந்து கீழிறங்கி நீரைமுகந்து பெருந்தூண்போல நிற்கும் மேகம். (J.)

காரி[1] kāri, *n.* <கரு-மை. 1. Blackness; கருமை. (பிங்.) 2. That which is black; கருநிறமுடையது. (திவா.) 3. King-crow; கரிக்குருவி. கட்சியுட் காரி கலும்ம் (பு. வெ. 1, 3). 4. Crow; காக்கை. (திவா.) 5. Saturn; சனி. காரிவாரத்தில் (குற்ற. தல. மூர்த்தி. 30). 6. Venom, poison; நஞ்சு. காரியுண்டிக் கடவுள தியற்கையும் (மலைபடு. 83). 7. Black bull; கரிய எருது. சுரிநெற்றிக் காரி (கலித். 101, 21). 8. Black lead; காரீயம். (சங். அக.) 9. Vāsudēva; வாசுதேவன். செங்கட்காரி (பரிபா. 3, 81). 10. Aiyaṉār; ஐயனார். (திவா.) 11. Bhairava; வயிரவன். (திவா.) 12. Indra; இந்திரன். காரி விருத்திரனைக் கொள்வினையும் (திருவாரு. 18). 13. A chief famed for liberality, one of seven *kaṭai-vaḷḷalkaḷ*, q.v.; கடைவள்ளல்களுள் ஒருவன். கழறொடித் தடக்கைக் காரியும் (சிறுபாண். 95). 14. See காரிநாயனார். காரிக்குமடியேன் (தேவா. 737, 8). 15. Horse of the chief Kāri; காரிவள்ளலின் குதிரை. காரிக்குதிரைக் காரியும் (சிறுபாண். 110). 16. A river; ஒரு நதி. காரியாற்றுக்கொண்ட (மணி. 19, 126).

காரி[2] kāri, *n.* Tanner's senna. See ஆவிரை. (மலை.)

காரி[3] kāri, *n.* <*kārī*. A prickly plant with diffuse branches. See கண்டங்கத்தரி. (மலை.)

காரி[4] kāri, *n.* <*kārin*. Doer, generally used in compounds; செய்பவன். *பாவகாரிகளைப் படைத்தவன்* (திவ். பெரியாழ். 4, 4, 1).

காரி[5] kāri, *part.* cf. *kāriṇī*. Fem. termination of certain nouns, meaning doer, possessor, as *vēlai-k-kāri, paṇa-k-kāri*; வேலைக்காரி பணக்காரி என்பவற்றிற்போல வினைமுதல் உடைமைமுதலிய பொருளில்வரும் ஒரு பெண்பாற்பெயர் விகுதி.

காரி[6] kāri, *n.* <*khārī*. A grain measure = 16 *paṭi*; பதினறுபடியளவு. (தைலவ. தைல. 114.)

காரி[7] kāri, *n.* <*kṣārin*. Borax; வெண்காரம். (சங். அக.)

காரிக்கத்தலை kāri-k-kattalai, *n.* <காரி[1]+. A sea-fish that ascends tidal rivers and estuaries, brownish-grey, attaining at least 5 ft. in length, *Sciaena diacanthus*; கடல்மீன் வகை.

காரிக்கம் kārikkam, *n.* See காரிக்கன்.

காரிக்கன் kārikkan, *n.* [T. *kārikamu*.] Unbleached plain cotton cloth, mostly imported; சலவைசெய்யாத ஒருவகைத்துணி.

காரிக்குதிரை kāri-k-kutirai, *n.* <id.+. Aiyaṉār's horse; ஐயனரது குதிரை. (பிங்.)

காரிக்கூன் kāri-k-kūṉ, *n.* prob. U. *ghārī* +. Agaric, a fungus, *Polyporus ignarius*; ஒரு வகைக் காளான்.

காரிகம்[1] kārikam, *n.* See காரகம்[3]. (M. L.)

காரிகம்[2] kārikam, *n.* <*gairika*. Red ochre, red dye; காவிக்கல். (திவா.)

காரிகை kārikai, *n.* <*kārikā*. 1. Woman, lady; பெண். *காலை யெய்தினிர் காரிகை தன்னுடன்* (சிலப். 11, 67). 2. Beauty, comeliness; அழகு. *கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்கு* (குறள், 1272). 3. Ornament; அலங்காரம். *கழல் யாப்புக் காரிகை நீர்த்து* (குறள், 777). 4. A *kali-t-tuṟai* verse. See கட்டளைக்கலித்துறை. (திவா.) 5. A treatise on prosody in *kali-t-tuṟai* verse by Amita-cākarar, 11th c.; 11-ம் நூற்றண்டில் அமிதசாகரரியற்றிய ஓர் யாப்பிலக்கணநூல்.

காரிண்டு kār-iṇṭu, *n.* <கரு-மை + இண்டு. Prickly climbing cockspur, l. sh., *Pisonia aculeata*; துறட்டிச்செடி.

காரிதாய் kāri-tāy, *n.* <காரி[1]+. Durgā, as mother of Bhairava; பைரவர் தாயாகிய காடுகிழாள். (பிங்.)

காரிநாயனுர் kāri-nāyaṉār, *n.* <id.+. Name of a canonized Šaiva saint, author of a Tamil *kōvai* work, one of 63; அறுபத்துமூவருள் ஒருவரும் கோவைப்பிரபந்தமொன்றின் ஆசிரியருமாகிய ஒரு நாயனர். (பெரியபு.)

காரிப்பிள்ளை kāri-p-piḷḷai, *n.* <id.+. See காரிப்புள். (சூடா.)

காரிப்புள் kāri-p-puḷ, *n.* <id.+. A species of king-crow; கரிக்குருவிவகை. (பிங்.)

காரிமாறன் kāri-māṟaṉ, *n.* <id.+. Nammālvār, son of Kāri; காரியின் புத்திரரான நம்மாழ்வார். (திவ். திருவாய். 4, 5, 11).

காரிமை kārimai, *n.* prob. காரி[1]-. Ceylon leadwort. See கொடுவேலி. (மலை.)

காரியக்கடிசு kāriya-k-kaṭicu, *n.* prob. *kārya* + கடு-மை. A mineral poison; கற்பாஷாணம். (W.)

காரியக்காரன் kāriya-k-kāraṉ, *n.* <id. +. 1. Agent; காரியஸ்தன். *அரசவைக் கண்டபின் காரியக்காரருக் கதிக பரிதான முதவி* (திருவேங். சத. 28). 2. A deputy of a village headman; கிராமாதிகாரியின் பிரதிநிதி. (G.Sm.D. i, 127.) 3. Man of business, one clever in business; வேலையில் திறமையுள்ளவன். (W.) 4. Selfish man; சுயநன்மை நாடுவோன்.

காரியக்கெட்டி kāriya-k-keṭṭi, *n.* <id.+. 1. Business ability; வேலைத்திறம். 2. Good business man; தொழிலில் வல்லவன். (W.)

காரியகர்த்தா kāriya-karttā, *n.* <id.+. 1. Maker, accomplisher, as in creating, sustaining and destroying worlds; agent; தொழில் நடத்துவோன். 2. Superintendent, overseer; மேலதிகாரி.

காரியகரம் kāriya-karam, *n.* <id.+. That which is worth doing; பயனுடைச்செயல். (சடு, 4, 10, பர.)

காரியகுரு kāriya-kuru, *n.* <id.+. Guru who seeks his own interest, whose living is his chief object, opp. to *kāraṇa-kuru*; பொருள் பெறும் நோக்கத்துடன் போதிக்கும் ஆசாரியன். (W.)

காரியகேவலம் kāriya-kēvalam, *n.* <id.+. (Šaiva.) A minor condition of the soul in its embodied state, when it seeks rest in *mūlādhāra*; சரீரத்தைப்பெற்ற ஆன்மா ஐம்புல நுகர்ச்சி நீங்கி இளைப்பாறும்பொருட்டு மூலாதாரத்தில் ஒடுங்கிக் கிடக்கும் நிலை.

காரியசகலம் kāriya-cakalam, *n.* <id.+. (Šaiva.) A minor condition of the soul in its embodied state, when it functions and enjoys objects of senses; சரீரத்தைப்பெற்ற ஆன்மா வியாபரித்து ஐம்புலன்களை நுகரும் நிலை.

காரியசாதகம் kāriya-cātakam, *n.* <id.+. That which helps the accomplishment of an object; காரியத்தைச் சித்திக்கச்செய்வது.

காரியசாதனம் kāriya-cātaṉam, *n.* <id. +. Means of accomplishing an object, instrument, implement, aid; துணைக்கருவி.

காரியசித்தி kāriya-citti, *n.* <id.+. Accomplishment, success in an undertaking; காரியங் கைகூடுகை.

காரியசுத்தம் kāriya-cuttam, *n.* <id.+. (Šaiva.) A minor condition of the soul in its embodied state, when it tries to purify itself by contemplating on God; சரீரத்தைப்பெற்ற ஆன்மா ஒடுக்கமும் வியாபாரமுமின்றி இறைவன் திருவடியை நினைந்துசெல்லும் நிலை.

காரியசேமம் kāriya-cēmam, *n.* <id.+. Circumstances, welfare, etc., as inquired into and reported; விசாரித்துத் தெரிந்துகொண்ட க்ஷேம சமாசாரம். (W.)

காரியஞ்செலுத்து-தல் kāriyañ-celuttu-, *v. intr.* <id.+. To transact business; தொழில் நடத்துதல். *Loc.*

காரியத்தடை kāriya-t-taṭai, *n.* <id.+. Impediment or obstacle to business; தொடங்கிய காரியத்திற்கு நேரும் இடையூறு.

காரியத்தலைவன் kāriya-t-talaivaṉ, *n.* <id. +. Superintendent, manager; மேலதிகாரி.

காரியத்தவறு kāriya-t-tavaṟu, *n.* <id.+. (W.) 1. Failure in business; கருமக் கேடு. 2. Ill-success, non-attainment of a desired object; விரும்பியது கைகூடாமை.

காரியத்தாழ்ச்சி kāriya-t-tāḻcci, *n.* <id.+. (W.) 1. Ill-success; கருமங் கைகூடாமை. 2. Loss; நஷ்டம்.

காரியத்துக்குவா-தல்[காரியத்துக்கு வருதல்] kāriyattukku-vā-, *v. intr.* <id.+. To answer the purpose, to be useful, profitable; உபயோகப்படுதல்.

காரியத்தைமடி-த்தல் kāriyattai-maṭi-, *v. intr.* <id.+. To pervert an argument; குதர்க்கம் பேசுதல். (W.)

காரியத்தோன் kāriyattōṉ, *n.* <id. Agent; காரியம்பார்க்கும் உத்தியோகஸ்தன். *வளவன் . . . காரியத்தோரை முன்னுறவேண்டும் பொருளொடு விடுப்ப* (திருவாலவா. 43, 2).

காரியதரிசி kāriya-tarici, *n.* <id.+*darśin.* Secretary; ஒரு சபையின் காரியங்களை நிர்வகிப்பவன். *Mod.*

காரியதுரந்தரன் kāriya-turantaraṉ, *n.* <id.+. Competent manager, able superintendent, one skilled in the conduct of business; காரியப்பொறுப்பு வகித்தலில் வல்லவன்.

காரியப்படு-தல் kāriya-p-paṭu-, *v. intr.* <id.+. 1. To be effected, produced, wrought, operated on; தொழிற்படுதல். 2. To succeed; கைகூடுதல்.

காரியப்பாடு kāriya-p-pāṭu, *n.* <id.+. Signification, purpose; பயன். *காரியப்பாடறக் கண்ணுலே அவனை ஒருகால் நோக்கினுல்* (ஈடு, 1, 5, 5).

காரியப்பெயர் kāriya-p-peyar, *n.* <id.+. See காரியப்பேர்.

காரியப்பேர் kāriya-p-pēr, *n.* <id.+. Responsible manager; காரியஸ்தர். (சீவக. 2110, உரை.)

காரியப்பைத்தியக்காரன் kāriya-p-paittiya-k-kāraṉ, *n.* <id.+. Dissembler, one who feigns madness with a purpose; பயன்கருதிப் பித்தன்போல் நடிப்பவன்.

காரியப்பொறுப்பு kāriya-p-poṟuppu, *n.* <id +. Responsibility; தொழிலை நிறைவேற்றுங் கடமை.

காரியபாகம் kāriya-pākam, *n.* <id.+. Success in an undertaking; காரிய அனுகூலம். *நம்முடைய வழக்கு இப்போது காரியபாகமாய்விட்டது. Loc.*

காரியம் kāriyam, *n.* <*kārya.* 1. Effect, result, issue; காரணத்தாலாவது. (குறள், 425, உரை.) 2. Action, deed; செய்கை. *போத காரியம் மறைத்து நின்றது* (சி. சி. 2, 84). 3. Affair, thing, business, concern, matter, subject; விஷயம். *ஈண்டோர் காரியமுண்மை நின்னைக் காணிய வந்தேன்* (கம்பரா. சூர்ப். 43). 4. That which is expedient, fit, profitable; செய்யத்தக்கது. *அது காரிய மன்று* (கம்பரா. சூளா. 26). 5. Object, purpose, design, end; நோக்கம். *அவன் வந்த காரியம் வேறு.* 6. Final ceremony on the 16th day after death. See கருமாந்தரம். *Madr.*

காரியம்பார்-த்தல் kāriyam-pār-, *v. intr.* <id.+. To look after a business, manage an affair; தொழிலைக் கவனித்தல்.

காரியமாயிரு-த்தல் kāriyam-ā-y-iru-, *v. intr.* <id.+. To be busy, intent on business; வேலையில் ஊன்றியிருத்தல். 2. To be useful; பயன்படுதல். (W.)

காரியமாயை kāriya-māyai, *n.* <id.+. (Šaiva.) Māyā, as the material cause of the world; மூலப்பிரகிருதி. (சி. சி. 2, 57, சிவாக்.)

காரியமுற்று-தல் kāriya-muṟṟu-, *v. intr.* <id.+. To get beyond one's control, as a dire disease; to become aggravated, as a grave offence; to be too far gone; எடுத்தகாரியம் கைகடந்துபோதல். (W.)

காரியமுன்னிடுதல் kāriya-muṉṉiṭutal, *n.* <id.+. Success, as in an undertaking; எடுத்த காரியம் கைகூடுகை. (W.)

காரியவாகுபெயர் kāriya-v-āku-peyar, *n.* <id.+. (Gram.) Noun literally signifying effect

used figuratively to denote the cause, dist. fr. *kāraṇa-v-āku-peyar;* காரியம் காரணத்திற்கு ஆகும் பெயர்ச்சொல். (நன். 290, உரை.)

காரியவாதி kāriya-vāti, *n.* <id.+. A self-seeker, one intent upon his own business; தன் காரியத்தைச் சாதித்துக்கொள்வோன்.

காரியவாராய்ச்சி kāriya-v-ārāycci, *n.* <id.+. (Insc.) 1. Superintendence of public affairs; அரசாங்க மேல்விசாரணை. *அரசங் காரியவாராய்ச்சியும்.* 2. An ancient tax; ஒரு பழையவரி.

காரியவிசாரணை kāriya-vicāraṇai, *n.* <id. +. Superintendence, supervision; மேற்பார்வை.

காரியவிலக்கணை kāriya-v-ilakkaṇai, *n.* <id.+. (Fig.) Metonymy in which the cause is put for the effect; காரணம் காரியத்துக்கு உபசரித்துக்கூறப்படுவது. (சி. சி. 4, 28, சிவஞா.)

காரியஸ்தன் kāriyastaṉ, *n.* <*kārya-stha.* 1. Agent, manager; காரியம் பார்ப்பவன். 2. One skilled in business; தொழிலில் வல்லவன். 3. Respectable man, as a man of affairs; மதிப்புள்ளவன். *Loc.*

காரியாசான் kāri-y-ācāṉ, *n.* <காரி[1]+. The author of Ciṟu-pañca-mūlam; சிறுபஞ்சமூலம் என்னும் நூலின் ஆசிரியர்.

காரியார் kāriyār, *n.* The author of the Kaṇakkatikāram; கணக்கதிகாரம் என்னும் நூலின் ஆசிரியர்.

காரியாவத்தை kāriyāvattai, *n.* <*kārya+avasthā.* 1. (Śaiva.) Minor conditions of the soul in its embodied state, three in number, viz., *காரியகேவலம், காரியசகலம், காரியசுத்தம்* dist. fr. *kāraṇāvattai;* காரியகேவலம் காரியசகலம் காரியசுத்தம் என முத்திறப்பட்டதாய்ச் சரீரத்தைப் பெற்ற ஆன்மாவிற்கு உரியதாயுள்ள நிலை. 2. (Śaiva.) Five states of the soul in each of the three minor conditions, viz., waking, dreaming, sleeping, sound sleeping and death-like trance; காரியாவத்தை மூன்றனுள் ஒவ்வொன்றிலும் ஆன்மாவிற்குளவாகிய சாக்கிராதி ஐந்துநிலைகள்.

காரிரத்தம் kārirattam, *n.* Worm-killer. See ஆடுதின்னாப்பாளை. (மலை.)

காரிருள் kār-iruḷ, *n.* <கார்+. Dense darkness; மிக்க இருள். *கயவன் காரிருட் டான்வர* (மணி. 23, 94).

காரிழைநாதம் kāriḻainātam, *n.* Sulphur; கந்தகம். (சங். அக.)

காரீயக்கல் kār-īya-k-kal, *n.* <கார்+. Graphite, a form of carbon; கரியம்லவாயு நிறையப்பெற்ற கருநிறமான ஒருவகை ஈயக்கல்.

காரீயம் kār-īyam, *n.* <id.+. Black lead; ஈயவகை. (பதார்த்த. 1175, தலைப்பு.)

காரு kāru, *n.* <*kāru.* Washerman; வண்ணான். *மலத்தான் மலமறுக்குங் காருவென்ன* (ஞானவா. தேவபூசை. 56).

காருகத்தம் kārukattam, *n.* <*gārhasthya.* The state of being a householder; இல்லற நிலை. (சிலப். 9, 28, உரை).

காருகத்தியம் kārukattiyam, *n.* <*gārhasthya.* See காருகத்தம். *நீதி நிலைபெறு காருகத்தியமா மாச்சிரமம்* (குற்றா. தல. மந்தமா. 34).

காருகத்தொழில் kāruka-t-toḻil, *n.* <*kāruka*+. Spinning, weaving; நெய்தற்றொழில். (சிலப். 5, 17, உரை.)

காருகபத்தியம் kārukapattiyam, *n.* <*gārhapatya.* The central sacrificial fire of a *tuvicaṉ*, one of three *vētākkiṉi*, q.v.; துவிசனுக்குரிய வேதாக்கினி மூன்றனுள் முதன்மையானது. *காருகபத்தியமாதி மூன்றழல்* (தணிகைப்பு அகத். 490).

காருகம்[1] kārukam, *n.* <*kāruka.* 1. Spinning and weaving; நெய்யுந்தொழில். (சிலப். 5, 17, உரை.) 2. Menial service, servile labour as carrying burdens; ஊழியவேலை. (W.)

காருகம்[2] kārukam, *n.* <*gārha.* Life of a householder; இல்லறம். *காருக மடந்தை* (மணி. 23, 105).

காருகவடி kāruka-v-aṭi, *n.* prob. *graha*+. Position of a planet; கிரகநிலை. *காருகவடிப் பயின்று* (சிலப். 26, 25).

காருகன்[1] kārukaṉ, *n.* <*kāruka.* 1. Weaver; நெய்வோன். *கட்டுநுண்வினைக் காருக ரிருக்கையும்* (சிலப். 5, 17). 2. Washerman; வண்ணான். (சூடா.) 3. Painter; ஓவியன். (யாழ். அக.)

காருகன்[2] kārukaṉ, *n.* <*ghāluka.* Murderer; கொலையாளன். (சூடா.)

காருச்சிவல் kāru-c-cival, *n.* <கரு-மை+. 1. Sponge attached to the bottom of sea-rocks; கடற்காளான். 2. Ceylon moss. See கடற்பாசி. (மலை.)

காருடதந்திரம் kāruṭa-tantiram, *n.* <*gāruḍa+tantra.* A work dealing with the art of removing poison with charms, etc.; விடம் தீர்க்கும் மந்திரங்கள் முதலியவற்றைக் கூறும் நூல்.

காருடம்[1] kāruṭam, *n.* <*gāruḍa.* 1. A flock of kites; கருடசமூகம். *காருடங் கண்டபாந்தட் கணமென* (கந்தபு. தாரகன்வ 54). 2. Art of removing poison with charms, mantras, etc., invoking Garuḍa, one of *aṟupattunālu-kalai*, q.v.; அறுபத்துநாலுகலையுள் விடந்தீர்க்கும் வித்தை. (சது.) 3. Name of an Upaniṣad; நூற்றெட்டு

உபநிடதங்களுள் ஒன்று. 4. A chief Purāṇa. See கருடபுராணம். (கந்தபு. பாயி. 55.) 5. Green stone, igneous rock, composed chiefly of felspar and hornblende; பச்சைக்கல். முத்தந் துப்புக் காருடம் (திருவிளை. மாணிக். 48).

காருடம்[2] kāruṭam, *n.* (மலை.) 1. Emetic-nut. See மருக்காரை. 2. Snake-gourd. See புடல்.

காருடம்[3] kāruṭam, *n.* <T. *gāradamu.* Jugglery. See காரடவித்தை[2].

காருடயூகம் kāruṭa-yūkam, *n.*<*gāruḍa*+. Garuda-shaped array of an army; கருடவுருவாக அமைக்கும் ஓர் படைவகுப்பு. வீமனும் வகுத்தான் கருங்கா ருடயூகம் (பாரத. மூன்றாம்போ. 2).

காருடவிஞ்சை kāruṭa-viñcai, *n.* <id.+. See காருடவித்தை[1]. காருடவிஞ்சை வித்தகர் (பெரியபு. திருஞான. 1062).

காருடவித்தை[1] kāruṭa-vittai, *n.* <id.+. Art of counteracting poison by charms, incantations, etc.; விஷவைத்தியம்.

காருடவித்தை[2] kāruṭa-vittai, *n.*<T. *gāradamu*+. Legerdemain, jugglery; ஜாலவித்தை.

காருடன் kāruṭaṉ, *n.* <id. Juggler. See காரடன். (W.)

காருண்ணி kāruṇṇi, *n.* Worm-killer. See ஆடுதின்னாப்பாளை.

காருண்ணியம் kāruṇṇiyam, *n.*<*kāruṇya.* See காருணியம்.

காருண்யமேகம் kāruṇya-mēkam, *n.*<id. +. One whose bounty flows without stint or expectation of recompense, as a cloud; மேகம் போற் கைம்மாறு எதிர்பாராது உபகரிப்பவன். (W.)

காருணி kār-uṇi, *n.* <கார்+உண்-. Skylark, as feeding on clouds; வானம்பாடி. (அக. நி.)

காருணிகன் kāruṇikaṉ, *n.* <*kāruṇika.* Kind, benevolent person; கருணையுள்ளவன். பரம காருணிகரான பெரியவாச்சான்பிள்ளை.

காருணியம் kāruṇiyam, *n.* <*kāruṇya.* Mercy, grace, compassion; கருணை. காருணி யத்தால் வாவென வந்து (திருப்போ. சந். பிள்ளை. செங் கீரை. 5).

காருணியன் kāruṇiyaṉ, *n.* <id. See காருணிகன். (பிங்.)

காருப்பு kār-uppu, *n.* <கார்[2]+. [T. M. *kāruppu.*] See கருந்திலாலவணம். (W.)

காருராசி kārurāci, *n.* Snake-gourd. See புடல். (மலை.)

காருவன் kāruvaṉ, *n.* See காருவாகன்.

காருவாகன் kāruvākaṉ, *n.* prob. *kāru*+ *vāka.* Washerman; வண்ணான். சாணகம் உவர் காரமுதலியவற்றால் காருவாகன் . . . நின்மலமாக்காநிற் பன் (சி. சி. 2, 52, மறை.).

காரூகம் kār-ūkam, *n.* <கார்+ஊகம். Black monkey; கருங்குரங்கு. (திவா.)

காரூமத்தை kār-ūmattai, *n.* <id.+. Purple stramony, s. sh., *Datura fastuosa;* கறுப்பு நிறமுள்ள ஊமத்தை. (W.)

காரெட்டு kār-eṭṭu, *n.*<id.+எட்டு. A poem of eight *veṇpā* stanzas by Nakkīra-tēvar included in *Patiṉorāṉ-tirumuṟai,* wherein Śiva is compared to a cloud; பதினோராந்திருமுறையுட் சேர்ந்ததும், மேகத்தைச் சிவபிரானோடு ஒப்பிட்டு எட்டு வெண்பாக்களால் நக்கீரதேவர் இயற்றியதுமான நூல்.

காரெலி kār-eli, *n.* <id.+. Black rat; கறுப்பெலி. (சூடா.)

காரெள் kār-eḷ, *n.* <id.+. [M. *kāreḷḷu.*] A black species of sesame; எள்ளின்வகை.

காரெனல் kār-eṉal, *n.* <id.+. 1. Expr. signifying lack-lustreness; ஒளிமழுங்குதற்குறிப்பு. காரெ னெக்கற் கடும்பசி யிரவல (புறநா. 141, 6). 2. Darkening, growing black; கருநிறமாகை. கனங் கனியைக் காரெனச் செய்தாருமில் (நாலடி, 103).

காரை[1] kārai, *n.* 1. A low shrub with sharp axillary spines met with in scrubby jungles and common waste places, *Canthium parviflorum;* காட்டுச்செடிவகை. முட்காற் காரை (புறநா. 258). 2. Emetic-nut. See மருக்காரை. (L.) 3. cf. காறல்[2]. A sea-fish; காறல்மீன். 4. Cloth; ஆடை. யானைப்பாகர் ஆடையைக் காரை யென்றலும் (சேமிநா சொல். 10, உரை).

காரை[2] kārai, *n.* [T. *gāra,* K. *gāre.*] 1. Mortar, plaster for building; சுண்ணச்சாந்து. காரையினால் விளக்குறு மேனிலத் தோகையர் கிதழும் (திருப்போ. சந். அலங்க. 17). 2. Concretions that encrust the teeth, tartar; பல்லில் இறுகப்பற்றிய ஊத்தை. *Colloq.*

காரை[3] kārai, *n.* prob. *kāravallī.* Balsam-pear. See பாகல். (இராசவைத்.)

காரைக்கட்டுவீடு kārai-k-kaṭṭu-vīṭu, *n.* <காரை[2]+. Building of brick and mortar; சுண்ணாம்பு செங்கல்களாற் கட்டப்பட்ட வீடு.

காரைக்காலம்மையார் kāraikkāl-ammaiyār, *n.* <காரைக்கால்+. Name of a canonized Śaiva saint, authoress of certain works included in the *Patiṉorāṉ-tirumuṟai,* one of 63; அறுபத்துமூவர் நாயன்மாருள் பெண்பாலரான வரும், பதினோராந்திருமுறையுட் சில பிரபந்தங்களுக்கு ஆசிரியருமான அடியார். (பெரியபு.)

காரைக்காற்பேயம்மையார் kāraikkāṟ-pēy-ammaiyār, *n.* <id.+. See காரைக்காலம்மை யார். (ஐங்குறு. முகவுரை, பக். 14.)

காரைக்காற்பேயார் kāraikkāṟ-pēyār, *n.* <id.+. See காரைக்காலம்மையார். (யாப். வி. 93.)

காரைச்செங்காரி kārai-c-ceṅkāri, *n.* Java almond, l. tr., *Canarium commune;* மரவகை. (A.)

காரோடன் kārōṭaṉ, *n.* 1. Sheath-maker; ஆயுதவுறைசெய்வோன். (திவா.) 2. Whetstone-maker; சாணைக்கல் செய்வோன். *சிறுகாரோடன் பயினொடு சேர்த்திய கற்போல்* (அகநா. 1).

காரோணம் kārōṇam, *n.* <*kāyārōhaṇa.* Sacred shrines, where Śiva had absorbed the souls into Himself at the time of the universal dissolution, as *Nākai, Kacci, Kuṭantai;* மகாசங்காரகாலத்திற் சிவபெருமான் ஆன்மாக்களைத் தம்முள் ஐக்கியமாக்கிக்கொண்ட தலம். (தேவா.)

கால்[1] kāl, *n.* [1 to 5 T. Tu. *kālu*, K. M. *kāl.*] 1. Quarter, one-fourth of a whole; நாலிலொன்று. 2. The symbol, 'வ' to denote ¼ in Tamil; தமிழில் நாலிலொன்றைக் குறிக்கும் 'வ' என்னும் பின்ன எண்குறி. 3. Leg, foot, of a person, animal or thing; பாதம். *கழாஅக் கால்* (குறள், 840). 4. Stem of a flower; பூவின்தாள். *திரள்கால் . . . அலரி* (நாலடி, 199). 5. Lower part, base, bottom; அடிப்பாகம். *களைகால் கழாலின்* (புறநா. 120, 5). 6. The symbol 'ா' in Tamil alphabet; எழுத்தின்கால். *புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினர்* (தொல். எழுத். 17, உரை). 7. [K. *gāli.*] Car-wheel, carriage-wheel; தேருருள். *கடலோடா கால்வ னெடுந்தேர்* (குறள், 496). 8. Cart; வண்டி. *கலத்தினுங் காலினும்* (சிலப். 2, 7). 9. Pole, staff; கோல். 10. Peg, pin, stake; குறுந்தறி. (சூடா.) 11. (Weav.) Treadle in a loom; நெசவுத்தறியின் மிதி. 12. Shaft; handle; கைப்பிடி. *குடைக்கால்போல்* (நாலடி, 368). 13. Post; தூண். *தருநிரை நிமிருங் கால்களாய்* (கந்தபு. வரைபுனை. 6). 14. Prop, support; பற்றுக்கோடு. (சூடா.) 15. Shoot, sprout; முளை. (பிங்.) 16. Sapling; மரக்கன்று. (பிங்.) 17. Son; மகன். (பிங்.) 18. Family, relationship; வமிசம். *கால் வழி.* 19. Degree of consanguinity or affinity; இனமுறை. *இரண்டாங் கால்முறை.* 20. Place of origin, source; பிறப்பிடம். *மணிக்கா லறிஞர்* (கல்லா. முரு.). 21. Irrigation channel; streamlet; வாய்க்கால். *சரயுவும் பலகாலி னோடியும்* (கம்பரா. நாட்டுப். 60). 22. Division; பிரிவு. *தேசிக்குரிய கால்களும்* (சிலப். 3, 16, உரை.) 23. Way, road, path; வழி. (பிங்.) 24. Pace, as of a horse; நடை. *காறாய் மையில்லாக் கலிமாவும்* (திரிகடு. 46). 25. Place, room; இடம். *புனல் கால் கழீஇய பொழில்* (பெரும்பாண். 380). 26. Forest; வனம். (சூடா.) 27. Point; end, as of a bow; முனை. *ஒருதனு விருகால் வளைய* (தேவா. 142, அடி, 14). 28. A measure of capacity for grain; மரக்கால். *கால்பெருத்துப் பொலி சிறுத்தாலும்* (திருவிருத். 58, வ்யா. பக். 324). 29. Measure, degree; அளவு. (பிங்.) 30. Lock of hair in plaiting; பின்னுதற்கு வகுத்த மயிரின்பகுதி. *இரண்டுகோற் பின்னல். Colloq.* 31. Ray; கிரணம். *நிலாக்கால் விழுந்தனைய* (மீனாட். பிள்ளைத். ஊசற். 1). 32. The descent of rain; மழைக்கால்.

கால்[2](லு)-தல் kāl-, *3 v. intr.* 1. To flow, as saliva from the mouth, poison from a serpent's fang; to issue, as blood from a vein; to flow out, as tears from the eyes; வெளிப்படுதல். (திவா.) *உருமுகான் றென்னப் பல்லியங்களு மார்த்தன* (கந்தபு. முதனாட். 3). 2. To leap forth, as a waterfall; குதித்தல். *விடர்கா லருவி வியன்மலை* (சிறுபாண். 170).—*tr.* 1. [M. *kāluka.*] To vomit, disgorge; கக்குதல். (திவா.) 2. To bring to public view; to reveal; to shoot forth, as ears of corn; தோற்றுவித்தல். *பகல்கான்றெழுதரு பல்கதிர்ப் பரிதி* (பெரும்பாண். 2).

கால்[3] kāl, *n.* <கால்-. [T. *gāli.*] 1. Wind, air, any of the vital airs; காற்று. *கால்கடிப் பாகக் கடலொலித் தாங்கு* (பதிற்றுப். 68, 1). 2. Rheumatic affection; வாதரோகம். *காற்சானோய் காட்டி* (நாலடி, 372). 3. The five elements. See பஞ்சபூதம். *காலெனப் பாகென* (பரிபா. 3, 77).

கால்[4] kāl, *n.* <*kāla.* [M. *kāl.*] 1. Time; பொழுது. (பிங்.) 2. Bloom, freshness, beauty; செவ்வி. *கான்மலியும் நறுந்தெரியல்* (பு. வெ. 8, 18). 3. Turn; தடவை. *சென்றே யெறிப வொருகால்* (நாலடி, 24). 4. Kāla, minister and attendant of Yama; காலன். (சூடா.) 5. Yama; இயமன். *காலொக்குஞ் சில* (இரகு. யாகப். 71). 6. Black colour; கருநிறம். *கால்தோய்மேனிக் கண்டகர்* (கம்பரா. வானர. 21).

கால்[5] kāl, *part.* 1. (Gram.) A locative ending; ஏழனுருபுளொன்று. (நன். 302.) 2. Ending of the verbal participle meaning if, provided, while, when; ஒரு வினையெச்சவிகுதி. *பழவினை வந்தடைந்தக் கால்* (நாலடி, 123). 3. A prefix meaning in, at, about, in the vicinity of; ஓர் உபசர்க்கம். *நூல் கால்யாத்த* (பி. வி. 45).

கால்கடியன் kāl-kaṭiyaṉ, *n.* <கால்[1]+. Lit., fleet-footed person, person of ability; வல்லவன். *கால்கடியரானவர்கள்-வத்தப்புக்கால்* (ஈடு, 3, 1, 7).

கால்கடு-த்தல் kāl-kaṭu-, *v. intr.* <id.+. To have an aching sensation in the leg; பாதம் நோதல்.

கால்கழுவு-தல் kāl-kaḻuvu-, *v. intr.* <id. +. [M. *kālkaḻuka.*] 1. To wash the feet of a guest; பாத்தியமளித்து உபசரித்தல். (சூடா.) 2. To wash oneself after evacuation; மலங்கழுவுதல். *Colloq.*

கால்கிளர்-தல் kāl-kiḷar-, *v. intr.* <கால்[5]+. 1. To run; ஓடுதல். *கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து*

திரிதரும் (பெரும்பாண். 21). 2. To set out on an expedition, as an army; படையெடுத்துச்செல்லு தல். அரைச கால்கிளர்ந்தன்ன (கலித். 149, 3).

கால்கூசு-தல் kāl-kūcu-, *v. intr.* <id.+. To feel shy of stepping into a house, as a stranger; பிறவிடஞ்செல்ல மனங்கூசுதல்.

கால்கெஞ்சு-தல் kāl-keñcu-, *v. intr.* <கால்[1] +. To feel exhausted and unable to proceed further as after a hard, long walk; அடிவருந்து தல். *Loc.*

கால்கைப்பிடிப்பு kāl-kai-p-piṭippu, *n.* <id.+. Rheumatism; வாதநோய்.

கால்கொள்(ளு)-தல் kāl-koḷ-, *v. tr.* <கால்[1] +. 1. To commence, as a festival; to begin; திருவிழாமுதலியவற்றுக்கு ஆரம்பஞ்செய்தல். இந்திர விழவிற்குக் கால்கொண்டு (சிலப். 6, 6, உரை). 2. To begin sculpturing the image of a deity in stone; சிலையிற் கடவுள்வடிவமைக்கத் தொடங்குதல். பத்தி னிக்கற் கால்கொண்டனன் (சிலப். 26, 254, அரும்.). 3. To spread, increase; இடங்கொள்ளுதல். முலை கால்கொளக் கண்டு (தஞ்சைவா. 53). 4. To get into; to mount, as a horse; ஆரோகணஞ்செய்தல். மயின்மேற் கால்கொளுங் குகனே (அருட்பா, v, தரிசனை. 1). 5. To be filled, flooded; பெருக்கெடுத்தல். கால்கொண்டு நீர்வருகிறது. *Loc.*

கால்கோள் kālkōḷ, *n.* <கால்கொள்-. 1. Beginning, commencement, as planting a pole for a festival; தொடக்கம். கால்கோள்விழவின் கடை நிலைசாற்றி (சிலப். 5, 144). 2. (Puṟap.) Theme of commencing the sculpture of the figure of a warrior who died in battle, on a memorial stone; போரில் இறந்தவீரனுருவைக் கல்லில் வகுக் கத்தொடங்குதலைக் கூறும் புறத்துறை. (தொல். பொ. 60.)

கால்சாய்-தல் kāl-cāy-, *v. intr.* <கால்[5] +. To perish utterly, to be completely ruined; அடியோடழிதல். குலமுழுதுங் கால்சாயப் பெயர்ப்ப னன்றே (பிரபோத. 38, 28).

கால்சிதை-தல் kāl-citai-, *v. intr.* <கால்[1] +. To scratch with the legs; காலாற் பறண்டுதல். கால்சிதைந்து நீலவல்லேறு பொராநின்ற வானம் (திவ். இயற். திருவிருத். 7).

கால்சீ[1]-த்தல் kāl-cī-, *v. tr.* <id.+. To scratch, as a fowl; காலினாற் கீறுதல். கோழி கால் சீத்து உண்ணும்.

கால்சீ[2]-த்தல் kāl-cī-, *v. tr.* <கால்[5] +. 1. To root out, exterminate; அடியோடு போக்குதல். மாவிருள் கால்சீப்ப (பரிபா. 10, 112). 2. To efface, obliterate, brush away; துடைத்தல். (W.)

கால்செய்வட்டம் kāl-cey-vaṭṭam, *n.* <கால்[3] +. Large circular fan; பேராலவட்டம். (பிங்.)

கால்தடுக்கு-தல் kāl-taṭukku-, *v. intr.* <கால்[1] +. To stumble; அடியிடறுதல்.

கால்தாங்கு-தல் kāl-tāṅku-, *v. intr.* <id. +. To have the feet drawn up, stiffened, as by a fall, by disease; to hobble, limp, as bullock, because of pain in the hoof; காலை இழுத்துநடத்தல். மாடு கால்தாங்கி நடக்கிறது.

கால்தாழ்-தல் kāl-tāḻ-, *v. intr.* <கால்[5] +. 1. To delay; தாமதித்தல். இழந்தவையடைய மீட்ப தாகச் சொல்லிப்போன நெஞ்சினரும் அங்கே கால்தாழ்ந் தார் (ஈடு, 7, 3, 4). 2. To be absorbed, engrossed; ஈடுபடுதல். ஓரோகுணங்களிலே கால்தாழ்ந்து (ஈடு, 4, 2, 4). 3. To be immersed, drowned; to be steeped thoroughly; முழ்கிவிடுதல். புண்ணீர் வெள் ளத்துக் காருழ்ந்து (திருவிளை. பழியஞ்சி. 10).

கால்நடை kāl-naṭai, *n.* <கால்[1] +. [T. M. *kālnaḍa.*] 1. Walking, going on foot; காலால் நடக்கை. 2. Cattle, sheep and goats; ஆடுமாடு கள். *Colloq.*

கால்நடைதருவார் kāl-naṭai-taruvār, *n.* <id.+. Those who are able to walk; நடக்குஞ் சத்தியுள்ளவர். கால்நடைதருவார்காலிலே விழுந்து (ஈடு, 6, 1, ப்ர.).

கால்நோக்கு kāl-nōkku, *n.* <id.+. One-fourth aspect of a planet; கிரகங்களின் காற்பார் வை. (சங். அக.)

கால்நோய் kāl-nōy, *n.* <id.+. Lymphangitis in the leg; பாதநோவு. (M.L.)

கால்பரி-தல் kāl-pari-, *v. intr.* <கால்[5] +. To break, to give way, as a rope; அறுபடுதல். கயிறு கால்பரிய (மணி. 4, 31).

கால்பாவு-தல் kāl-pāvu-, *v. intr.* <கால்[1] +. 1. To set foot, as on the ground; காலூன்றுதல். நெருப்பிலே கால்பாவினாற்போலே (திவ். திருமாலை, 4, 24, வ்யா.). 2. To settle down, rest, as in a place; நிலைகொள்ளுதல். ஊரிற் கால்பாவ ஒட்டவில்லை.

கால்பிடி-த்தல் kāl-piṭi-, *v. tr.* <id.+. 1. To press and rub the legs to induce sleep, to shampoo; பாதத்தைவருடுதல். 2. [M. *kālpiḍikka.*] To fall at one's feet for a favour; காலைப் பற்றிக் கெஞ்சுதல். பால்குடிக்கக் கால்பிடிக்க வேண்டி யிருக்கிறது (ஈடு). 3. To do service; தொண்டு புரிதல். கேசவநம்பியைக் கால்பிடிப்பா ளென்னு மிப் பேறு (திவ். நாய்ச். 1, 8). 4. To excavate or dig a channel; வாய்க்கால்வெட்டுதல். 5. To castrate; விதையடித்தல். *Madr.*

கால்பின்னு-தல் kāl-piṉṉu-, *v. intr.* <id. +. 1. To become cross-legged, as a result of extreme physical debility; கால்கள் முறுக்கிக் கொள்ளுதல். 2. To be knock-kneed, as a donkey from carrying too heavy a burden; முட்டிக் கால்தட்டுதல்.

கால்மட்டம் kāl-maṭṭam, *n.*<id.+. Feeling the way with the feet, as a blind man or as in the dark; கட்பார்வையின்றிக் காலால் தடவிநடக்கை. (J.)

கால்மடக்கு kāl-maṭakku, *n.*<id.+. Clubfoot in which the heel is elevated and the foot bent or turned inward, *Talipes equinovarus;* கடப்புக்கால். (M.L.)

கால்மர-த்தல் kāl-mara-, *v. intr.* <id.+. To get benumbed, as the feet; பாதம் உணர்ச்சியற்றுக் கட்டைபோலாதல்.

கால்மாடு kāl-māṭu, *n.* <id.+. 1. Cattle as distinguished from *māḍu* meaning gold; பசு. *இராஜராஜதேவர் கொடுத்த கால்மாட்டிலும்* (S.I.I. ii, 2, 49). 2. Place near the foot of a bed, or of a person in bed; காற்பக்கம். *Colloq.*

கால்மிதி kāl-miti, *n.* <id.+. 1. A pose of foot in dancing; அடிவைப்பு. 2. Track, footmark, footprint; அடிச்சுவடு. 3. Well-staircase, steps cut for the feet inside the well; அடிவைக்கும் வரை. *Loc.* 4. Door-mat; காலிற்பட்ட தூசியைத்துடைத்துக்கொள்வதற்கு இடப்படும் தென்னைநார்த்தடுக்கு.

கால்முளை-த்தல் kāl-muḷai-, *v. intr.* <id. +. To begin to walk, as a child; குழந்தை நடைகற்கத்தொடங்குதல். *Colloq.*

கால்மெட்டிடுகை kāl-meṭṭiṭukai, *n.* <id. +. Putting a ring, mostly of silver, on the bridegroom's toe during marriage; விவாகத்தில் மணமகன்கால்விரலில் மோதிரமிடுகை. *Loc.*

கால்மேசு kāl-mēcu, *n.* <id.+ prob. T. *mējōḍu.* Socks or stockings; மேஜோடு. (J.)

கால்யா-த்தல் kāl-yā-, *v.* <கால்[5]+. *intr.* To be close, crowded; நெருங்குதல். *கால்யாத்த பல் குடிகெழீஇ* (பெரும்பாண். 399).—*tr.* 1. To conceal; மறைத்தல். *சொன்றி . . . வறைகால்யாத்தது* (பெரும்பாண். 133). 2. To fill with water, as a channel; தேக்குதல். *நீர்கால்யாத்தல்* (குறள், 1038, உரை).

கால்வடம் kāl-vaṭam, *n.* <கால்[1]+. Foot-ornament strung with pearls; காலணிவகை. *திருக்கால்வட மொன்றிற் கோத்த* (S.I.I. ii, 397, 205).

கால்வழி kāl-vaḻi, *n.* <id.+. 1. Footpath; ஒற்றையடிப்பாதை. 2. Footprint; காற்சுவடு. *யானைக்கால்வழி* (புறநா. 368). 3. See கால்வாசி, 2. 4. Lineage, family; வமிசம். *நோய்பழியிலாததோர் கால்வழியில் வந்தவளுமாய்* (அறப். சத. 2).

கால்வளைவி-த்தல் kāl-vaḷaivi-, *v. tr.* <id. +. To bend, as the bow; வளைத்தல். *சிலைகால் வளைவித்த* (திவ். பெரியதி. 8, 6, 4).

கால்வாங்கு[1]-தல் kāl-vāṅku-, *v. intr.* <id. +. 1. To have the leg cut off; காலைவெட்டுதல். 2. To slip, slide; கால்வழுக்குதல். 3. To write the symbol 'ா' to denote the lengthening of certain vowel-consonants in the Tamil alphabet; உயிர்மெய் நெடில் பெரும்பாலவற்றில் நெடிற்குறியாகக் காலைவரைதல்.

கால்வாங்கு[2]-தல் kāl-vāṅku-, *v. intr.* <கால்[5]+ 1. To retrace one's steps, withdraw; பின்வாங்குதல். *கண்ணநீரோடேபாய்த்துக் கால்வாங்குவது* (திவ். திருமாலை, 15, வ்யா.). 2. To die; இறத்தல். *Colloq.*

கால்வாசி kāl-vāci, *n.*<கால்[1]+. 1. A fourth part, quarter; நாலில் ஒருபங்கு. 2. Lit., the nature or quality of one's foot as gauged from the weal or woe that accompanies a person's first entry in any concern, the nature of one's entry in any concern on which its good or evil prospects are supposed to depend; அடிவைத்த பலன். *அவன் கால்வாசி நல்லது.*

கால்வாய் kāl-vāy, *n.* <id.+. [T. *kāluva.*] A channel branching from a river or tank, for irrigation; வாய்க்கால். *கால்வாய்த்தலையின் கண்கள் போலும்* (பாரத. முதற்போ. 72).

கால்வாய்க்கோமாரி kāl-vāy-k-kōmāri, *n.* <id.+வாய்+. Disease that affects the foot and mouth of cattle, *Eczema epizootica;* கால்நடையின் பாதம்வாய்களிற் காணும் கோமாரி நோய்வகை.

கால்வாயடுப்பு kālvāy-aṭuppu, *n.* <கால் வாய்+. A fire-place or oven in the form of a ditch, cooking trench; காடியடுப்பு.

கால்வாயன் kāl-vāyaṉ, *n.* <கால்[1]+. One who cannot hold his own in a learned discussion; insufficiently educated person; a person of little knowledge and poor speech; தெரிந்து பேசும் வன்மையற்றவன். *Loc.*

கால்விடு[1]-தல் kāl-viṭu-, *v. intr.* <id+. 1. To have the feet crippled; கால்கள் செயலறுதல். 2. To place a support, as to a falling roof; முட்டுக்கொடுத்தல். 3. To be removed some degrees in relationship; தூரபந்துவாதல். (C.G.)

கால்விடு[2]-தல் kāl-viṭu-, *v. tr.* <கால்[5]+. To renounce or give up entirely, to forsake; அறவொழித்தல்.

கால்விரல் kāl-viral, *n.* <கால்[1]+. [M. *kāl-viral.*] Toe; பாதத்துள்ள விரல்.

கால்விலங்கு kāl-vilaṅku, *n.* <id.+. Fetters; காலுக்கிடும் தளை.

கால்விழு-தல் kāl-viḻu-, *v. intr.* <id.+. 1. To descend, as rainclouds on the horizon; மழைக்கால் இறங்குதல். *கால்விழுந்தமேகம் மழைபெய்

ளத்தைத் கரும் (பு. வெ. 9, 16, உரை). 2. To shed rays of light; ஒளிவீசுதல். நிலாக்கால் விழுந்தனைய (மீனாட். பிள்ளைத். வருசற். 1).

கால்விழுந்துபோ¹-தல் kāl-viḻuntu-pō-, *v. intr.* <id.+. To be rendered powerless, as one's legs by paralytic attack; பாரிசவாயு முதலியவற்றால் கால் அசைவற்றுப்போதல்.

கால்விழுந்துபோ²-தல் kāl-viḻuntu-pō-, *v. intr.* <கால்⁵+. To be spent up or thoroughly exhausted, as at the time of death; செயலற்றுப் போதல்.

கால்வீச்சு kāl-vīccu, *n.* <கால்¹+. Sweeping motion of legs, as in strut, generally due to one's arrogance; கால்வீசி நடக்கை.

கால்வீசு¹-தல் kāl-vīcu-, *v. intr.* <id.+. To shed rays, as the moon; கிரணம்வீசுதல்.

கால்வீசு²-தல் kāl-vīcu-, *v. intr.* <கால்³+. To blow, as the wind; காற்றடித்தல். கால்வீசி மின்னிப் படர்ந்து (தாயு. சுகவாரி. 8).

கால்வெடிப்பு kāl-veṭippu, *n.* <கால்¹+. Fissure in feet, as due to excess of bile in one's system; காலிற்காணும் பித்தவெடிப்பு. (M.L.)

கால்வை-த்தல் kāl-vai-, *v. intr.* <id.+. Lit., to place the foot, to step in, enter; பிரவேசித்தல். அவன்வீட்டில் நான் கால்வைக்கமாட்டேன்.

காலக்கடவுள் kāla-k-kaṭavuḷ, *n.* <*kāla*+. 1. Yama, as the deity that puts an end to life; யமன். 2. Śiva, as the god of destruction; சங்காரக் கடவுளாகிய சிவன். காலக்கடவுட் குயர்கமா வலனே (தொல். பொ. 81, உரை).

காலக்கணிதம் kāla-k-kaṇitam, *n.* <id.+. Astronomy; காலகணனம்பற்றிய வானசாத்திரம். காலக்கணிதமுங் கலைகளின் றுணிவும் (மணி. 2, 29).

காலக்கணிதர் kāla-k-kaṇitar, *n.* <id.+. Astronomers, as calculators of time; காலத்தைக் கணித்தற்குரிய சோதிடர். மாலைக்காலருங் காலக்கணிதரும் (மணி. 28, 40).

காலக்கழிவு kāla-k-kaḻivu-, *n.* <id.+. 1. Delay, postponement, putting off; தாமதம். ஞானக்கைதா காலக்கழிவு செய்யேலே (திவ். திருவாய். 2, 9, 2). 2. Wasting or killing time; வீண்பொழுது போக்குகை.

காலக்கனல் kāla-k-kaṉal, *n.* <id+. See காலத்தீ. காலக்கனல் கட்கடை கக்குங் கணங்கள் (கூர்ம பு. அந்தகா. 102).

காலக்கிரமம் kāla-k-kiramam, *n.* <id.+. 1. Course of time; நாளடைவு. 2. Chronological order; சரித்திரகால வரன்முறை.

காலக்கிரயம் kāla-k-kirayam, *n.* <id.+. Current price; தற்காலவிலை.

காலக்குறி kāla-k-kuṟi, *n.* <id.+. Seasonal indications, signs of weather; பருவத்துக்குரிய அடையாளம்.

காலக்கொடுமை kāla-k-koṭumai, *n.* <id. +. Evil time; hardness of the times; காலத்தின் தீமை.

காலகட்கம் kāla-kaṭkam, *n.* <id.+. A hell; ஒரு நரகம். (சி. போ. பா. 2, 3, பக். 203.)

காலகதி kāla-kati, *n.* <id.+. 1. Lit., the results brought about by time in its course, fate; விதி. 2. Death; மரணம்.

காலகம் kālakam, *n.* prob. *kālaka.* See சேங்கொட்டை. (மலை.)

காலகரணம் kāla-karaṇam, *n.* <*kāla*+*haraṇa.* See காலஹரணம்.

காலகாலன் kāla-kālaṉ, *n.* <id.+*kāla.* Śiva, as one who subdued Yama; சிவன். காலகாலனைக் கம்பனெம்மானை (தேவா. 1048, 1).

காலகூடம் kālakūṭam, *n.* <*kāla-kūṭa.* The poison that came out when the ocean of milk was churned; deadly poison; பாற்கடலில் தோன்றிய விஷம்.

காலங்கண்டவன் kālaṅ-kaṇṭavaṉ, *n.* <*kāla*+. [M. *kālamkaṇḍavan.*] Aged and experienced person; வயதிலும் அநுபவத்திலும் முதிர்ந்தவன்.

காலங்கழி¹-தல் kālaṅ-kaḻi-, *v. intr.* <id. +. To pass away, as time; பொழுதுபோதல்.

காலங்கழி²-த்தல் kālaṅ-kaḻi-, *v. intr.* <id. +. 1. To pass one's life-time; வாழ்நாள் போக்குதல். (திருக்கருவைக்கலித்.) 2. To make a living; சீவனம்பண்ணுதல்.

காலங்காட்டி kālaṅ-kāṭṭi, *adv.* <id.+. See காலங்காட்டியும். *Vul.*

காலங்காட்டியும் kālaṅ-kāṭṭilum, *adv.* <id.+. Early in the morning; விடியற்காலையில். *Loc.*

காலங்கார்த்தாலே kālaṅ-kārttālē, *adv.* <id.+காலத்தாலே. Very early in the morning; அதிகாலையில். *Colloq.*

காலங்கிட்டு-தல் kālaṅ-kiṭṭu-, *v. intr.* <id.+. See காலங்கூடு-. *Colloq.*

காலங்கூடு-தல் kālaṅ-kūṭu-, *v. intr.* <id. +. To approach or overtake, as death near one's end; சாதந்தருணம் நெருங்குதல்.

காலசக்கரம் kāla-cakkaram, *n.* <id.+. *cakra.* 1. Sphere in which planets move; கிரகங்கள் சுழன்றுவருதற்குரிய மண்டலம். 2. The

influence of planets on one's life at different periods; கிரகநிலையால் ஒருவனுக்கு உண்டாகும் பலன். 3. Cycle of time, whirligig of time; விடாது சுழன்றுவருங் காலம்.

காலசங்கதி kāla-caṅkati, *n.* <id. +. Current news, events of the day; நடப்புச்செய்தி. (W.)

காலசங்கை kāla-caṅkai, *n.* <id.+. 1. Approximate time, as guessed; உத்தேச கால வளவு. 2. Reckoning of time; காலக்கணக்கு. (W.) 3. Specified period, time-limit; காலாவதி. *Loc.*

காலசந்தி[1] kāla-canti, *n.* <id. + *sandhyā.* Lit., junction of times, worship in temples in the interval between every two of the six parts into which a day is divided; ஒருநாளின் ஆறுபாகங்களுள் இரண்டிரண்டு பாகங்கள் கூடும் சந்திக்காலங்களிற் கோயில்களிலே செய்யும் பூசை.

காலசந்தி[2] kāla-canti, *n.* <காலை+id. Morning worship; காலைவழிபாடு.

காலசம் kālacam, *n.* prob. கால்[3] + அசை. (அக. நி.) 1. Large circular fan; பேராலவட்டம். 2. Wind; காற்று.

காலசூத்திரம் kāla-cūttiram, *n.* <*kāla*+. A hell; ஒரு நரகம். *காலசூத்திர நரகிடைவீழ்த்தினர்* (குற்று. தல கவுற்சன. 68).

காலசேயம் kālacēyam, *n.* <*kālašēya.* Buttermilk; மோர். (பிங்.)

காலஞ்செய்-தல் kālañ-cey-, *v. intr.* <*kāla*+. [M. *kālamceyya.*] To cease to exist, to die; மரணமடைதல். *காலாந்தரத் திருவர் தங்காலஞ் செய்ய* (திருவாச. 12, 11).

காலஞ்செல்(லு)-தல் kālañ-cel-, *v. intr.* <id.+. 1. To depart this life, die; இறந்துபோதல். 2. To be late; தாமதப்படுதல். (J.) 3. To be barred by limitation; காலாவதியாதல். *Colloq.*

காலஞ்சொல்லி kālañ-colli, *n.* <id.+. (சங். அக.) 1. Crow, as foretelling events; காக்கை. 2. Lizard; பல்லி.

காலட்சேபம் kālaṭcēpam, *n.* <id. + *kṣēpa.* See காலக்ஷேபம்.

காலடி[1] kāl-aṭi, *n.* <கால்[1]+. [M. *kālaḍi.*] 1. Sole of the foot; உள்ளங்கால். 2. Step or trace of the foot, footprint; காற்சுவடு. *நடந்த பெருங்காலடி மேலடி* (தனிப்பா. ii, 4, 7).

காலடி[2] kālaṭi, *n.* A town in the Chera country, the birth-place of Šaṅkara; சங்கராசாரியர் அவதரித்த தலம்.

காலடியில் kāl-aṭi-y-il, *adv.* <கால்[1]+. 1. In close proximity; மிகச்சமீபத்தில். *இதோ, காலடியில் உள்ளது அவ்வூர்.* 2. Under one's protection; ஆதரவில். *அவன் என்காலடியில் வாழ்பவன்.*

காலணி kāl-aṇi, *n.* <id.+. Anklet, ankle rings or bells; பாதத்தில் அணியும் ஆபரணம். *கரந்தியான் கொண்ட காலணி* (சிலப். 16, 127).

காலத்தால் kālattāl, *adv.* <*kāla.* 1. Seasonably, in proper time; உரியபோதில். *காலத்தால் தக்க தறிவதாந் தூது* (குறள், 686). 2. Early, betimes; காலம்பெற. *காலத்தாற் கொண்டெய்ம்மின்* (நாலடி, 20).

காலத்தாலே kālattālē, *adv.* <id. In the morning; காலையில். *காலத்தாலே வாருங்கள்.*

காலத்திரயம் kāla-t-tirayam, *n.* <id.+ *traya.* Threefold division of time, as past, present and future; இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூவகைக் காலம்.

காலத்தீ kāla-t-tī, *n.* <id.+. Destructive fire that is believed to prevail at the dissolution of the universe; ஊழித்தீ. *காலத்தீப் பெய ருருத்திரன்* (கந்தபு. கணங். 4).

காலதண்டம் kāla-taṇṭam, *n.* <id.+. Yama's staff; யமனது தண்டாயுதம். *காலதண்டஞ் சுழற்றி* (உபதேசகா. சிவபுண்ய. 222).

காலதத்துவம் kāla-tattuvam, *n.* <id.+. (Šaiva.) Category of time, which determines the duration of soul's experiences, one of seven *cuttācutta-tattuvam*, q.v.; ஆன்மபோகங்களை அளக்கும் காலம் என்னும் சுத்தாசுத்ததத்துவம். (சி. போ. பா. 2, 2, பக். 144.)

காலதர் kāl-atar, *n.* <கால்[3] + அதர். Window, as an air passage; சாளரம். *காலதர் மாளிகை* (சிலப். 5, 8).

காலதருமம் kāla-tarumam, *n.* <*kāla*+. Spirit of the age; காலவியல்பு.

காலதாமதம் kāla-tāmatam, *n.* <id.+. Delay; காலந்தாழ்வு.

காலதானம் kāla-tāṉam, *n.* <id.+ *dāna.* Gifts to propitiate Yama to avert death; மரணத்தினின்றும் உய்யுமாறு யமனுக்குப்பிரீதியாகச் செய்யப்படுந் தானம். (திவ். நான்மு. 52, வ்யா. அரும்.)

காலதுரிதம் kāla-turitam, *n.* <id.+. 1. Rapid flux of time; காலவிரைவு. 2. Quickness; வேகம். *Colloq.*

காலதேசவர்த்தமானம் kāla-tēca-vartta-māṉam, *n.* <id.+. Lit., time, place and circumstance, milieu, environment, surrounding circumstances; காலஇடங்களின் நிலைமை.

காலந்தள்ளு-தல் kālan-taḷḷu-, *v. intr.* <id. +. 1. To pass one's days, maintain oneself; சீவனஞ்செய்தல். *பிச்சைவேண்டிக் . . . காலந்தள்ளாமல்* (தனிப்பா. i, 396, 7). 2. To delay; தாமதித்தல். 3. To waste time; வீண்காலம்போக்குதல்.

காலந்தாழ்த்து-தல் kālan-tālttu-, *v. intr.* <id.+. To delay; காலதாமதஞ்செய்தல்.

காலநிரூபணம் kāla-nirūpaṇam, *n.* <id. +. 1. Determination of time, age, date; காலத்தை வரையறுக்கை. 2. Chronology; காலகணிதம். (சங். அக.)

காலநுட்பம் kāla-nuṭpam, *n.* <id.+. A moment of time; காலத்தின் நுண்ணிய பகுதி.

காலநேமி kāla-nēmi, *n.* <id.+. 1. The wheel of time; காலசக்கரம். *காலநேமிப் பிரமையிற் றிரிவன்* (கைவல்ய. தத். 19). 2. An Asura slain by Viṣṇu; திருமாலாற் கொல்லப்பட்ட ஓர் அசுரன். *காலநேமி காலனே* (திவ். திருச்சந். 31).

காலநேரம் kāla-nēram, *n.* <id.+. Time with reference to the influence of planets upon one's fortune or health; கிரகபலன். (W.)

காலப்பண் kāla-p-paṇ, *n.* <id.+. (Mus.) Mode appropriate to particular time; அவ்வக் காலத்திற்கு உரிய பண்.

காலப்பயிர் kāla-p-payir, *n.* <id.+. Lit., seasonal crop, wet-season crop, opp. to *kōṭai-p-payir;* பருவத்தில் விளையும் பயிர்.

காலப்பழக்கம் kāla-p-paḻakkam, *n.* <id. +. [M. *kālappaḻakkam.*] 1. Time-honoured usage; பழமையான ஆசாரம். 2. Long-standing habit; நாட்பட்ட பழக்கம்.

காலப்பிரமம் kāla-p-piramam, *n.* <id.+ *brahman.* Time, as the Supreme Being; காலமாகிய பரம்பொருள்.

காலப்பிரமாணம் kāla-p-piramāṇam, *n.* <id.+. Measure of time; காலவளவை.

காலப்பெயர் kāla-p-peyar, *n.* <id.+. 1. (Gram.) Noun denoting time, as *சித்திரை;* காலத்தைக்குறிக்கும் பெயர்ச்சொல். (நன். 290.) 2. Name derived from a noun denoting time, as *ஆதிரையான்;* காலத்தினடியாக வந்த பெயர். (நன். 132, உரை.)

காலபடர் kāla-paṭar, *n.* <id.+*bhaṭa.* Yama's messengers; யமதூதர். *காலபடரெனப் படரிற் பட்டார்* (திருவிளை. யானையெய். 32).

காலபரிச்சேதம் kāla-pariccētam, *n.* <id. +*paricchēda.* 1. Determination or ascertainment of anything from time; காலத்தால் ஒரு பொருளை அளவிடுகை. *ஒருகாலத்துண் டின்றொருகாலத் தெனுங் காலபரிச்சேதம்* (வேதா. சூ. 36). 2. Time-limitation; காலவரையறை.

காலபரிபாகம் kāla-paripākam, *n.* <id.+. Fulness of time; காலத்தின் பக்குவநிலை.

காலபாசம் kāla-pācam, *n.* <id.+. Yama's noose, as an instrument of death; கயிற்றின் வடிவான யமனாயுதம்.

காலபுருஷதானம் kāla-puruṣa-tāṉam, *n.* <id.+. See காலதானம். (சுநி, 10, 3, 5, ஜீ.)

காலபேதம் kāla-pētam, *n.* <id.+. Change of times, mostly for the worse; நற்காலம் மாறியநிலை. *அவனுடைய காலபேதத்தாலே இப்படி நேர்ந்தது.*

காலபோகம் kāla-pōkam, *n.* <id.+. 1. Crop of grain, fruit, etc., proper to a season; பருவத்திற்குரிய பயிர் கனிமுதலியன. 2. Enjoyment or suffering at the destined time, resulting from the actions of previous birth; காலப்பயனை நுகர்கை. (W.)

காலபோசனம் kāla-pōcaṉam, *n.* <id.+. Timely meal; காலத்திற்கொள்ளும் உணவு.

காலம் kālam, *n.* <*kāla.* 1. Time, duration; பொழுது. (தொல். சொல். 58). 2. Proper time, opportune moment; தக்க சமயம். *காலமன்றிவன் வருகாலம்* (கம்பரா. விபீடண. 94). 3. Season of the year, of life; specific time; பருவம். *சென்றதுகாலம் சிதைந்த திளமைநலம்* (திருக்கருவைவெண்.). 4. Wet-season, crop, opp. to *kōṭai;* பருவப்பயிர். *Loc.* 5. cf. காலை. Daybreak; விடியல். (பிங்.) 6. Time of death; மரணகாலம். *அவனுக்குக் காலம் நெருங்கியது.* 7. See காலதத்துவம். 8. (Gram.) Tense, three in number, viz., *இறப்பு, நிகழ்வு, எதிர்வு;* தொழினிகழ்ச்சியைக் குறிக்கும் முக்காலம். (தொல். சொல். 201.) 9. (Mus.) Tempo, a measure of time, three in number, viz., *விளம்பம், துரிதம், மத்திமம்;* இசைக்குரிய திரிகாலம். 10. (Mus.) The element of time-measure which specifies duration, being of ten varieties, viz., *கணம், இலவம், காட்டை, நிமிடம், துடி, துரிதம், லகு, குரு, புலுதம், காகபதம்,* one of ten *tāḷa-p-pirāṇam,* q.v.; தாளப்பிராணத்தொன்று. (பரத. தாள. 26).

காலம்பண்ணிப்போ-தல் kālam-paṇṇi-p-pō-, *v. intr.* <காலம்+. See காலம்பண்ணு-. (W.)

காலம்பண்ணு-தல் kālam-paṇṇu-, *v.intr.* <id.+. To live out one's time, to die; ஆயுள் முடிதல். (W.)

காலம்பார்-த்தல் kālam-pār-, *v. intr.*<id. +. 1. To look out for a suitable time, watch for an opportunity; சமயநோக்குதல். *காலம் பார்த் திறைவேலை கடவாத கடலொத்தான்* (கம்பரா. ஊர்தே. 222). 2. To calculate the time of death; ஒருவனது இறுதிக்காலத்தைக் கணக்கிடுதல். *காலனுங் காலம்பார்க்கும்* (புறநா. 41).

காலம்பெற kālam-peṟa, *adv.* <id.+. 1. At the right time; தக்க காலத்தில். *காலம்பெற வென்னைக் காட்டுமின்கள்* (திவ். திருவாய். 7, 3, 6). 2. Early in the morning; விடியற்காலையில். *காலம் பெறநீறணி மாமுனி* (கோயிற்பு. வியா. 15).

காலம்போக்கு-தல் kālam-pōkku-, *v. intr.* <id. +. To spend time; காலங்கழித்தல்.

காலமடை-தல் kālam-aṭai-, *v. intr.* <id. +. To die, as reaching the end of one's time; மரணமாதல்.

காலமயக்கம் kāla-mayakkam, *n.* <id. +. (Gram.) Deviation in the use of tenses sanctioned by usage; காலவழுவமைதி. (புறநா. 138, உரை.)

காலமயக்கு kāla-mayakku, *n.* <id. +. 1. See காலமயக்கம். 2. (Akap.) Theme of a confidante convincing the heroine that the winter season when her lord should return has not arrived, though it is actually otherwise; பிரிந்த தலைவன் வருதற்குரிய கார்காலம் இதன்றென்றெனத் தலைவிக்குத் தோழி காலத்தை மயக்கிக்கூறும் அகத்துறை. (திவ். இயற். திருவிருத். 7, பெரியவாச்.)

காலமல்லாக்காலம் kālam-allā-k-kālam, *n.* <id. +. Unseasonable, improper time; அகாலம். காலமல்லாக்காலத்தில் காய்ச்சதாம் பேய்ச்சுரைக்காய்.

காலமலைவு kāla-malaivu, *n.* <id. +. (Gram.) Mistake in regard to time, as in the statement that the lotus blooms at night; ஒருகாலத்துக்குரியதை மற்றொருகாலத்துக்குரியதாகக் கூறும் வழு. (தண்டி. 117, உரை.)

காலமழை kāla-maḻai, *n.* <id. +. Seasonal rain; பருவமழை.

காலமறி-தல் kālam-aṟi-, *v. intr.* <id. +. 1. To ascertain the time suitable for the accomplishment of one's object; வினைசெயற்கேற்ற காலத்தையறிதல். கருவியாற் கால மறிந்து செயின் (குறள், 483). 2. To know of events past, present or future, intuitively or by spiritual vision, as Yōgis; முக்காலத்தும் நிகழ்வனவற்றைத் தமது விசேடசத்தியால் அறிதல்.

காலமா-தல் kālam-ā-, *v. intr.* <id. +. To pass away, as having one's life-time spent out; மரணமடைதல். *Colloq.*

காலமாறு kāla-māṟu, *adv.* <காலை + மாறு. Every morning; காலைதோறும். (W.)

காலமானம் kāla-māṉam, *n.* <*kāla* +. Measure of time; காலவளவு.

காலமிருத்து kāla-miruttu, *n.* <id. + *mṛtyu*. Death at the destined moment, dist. fr. *akāla-miruttu*; விதித்த காலத்தில் அடையும் மரணம்.

காலமே kālamē, *adv.* <காலை. [M. *kālame*.] In the morning, early, betimes; விடியற்காலையில்.

காலமேகம் kāla-mēkam, *n.* <*kāla* +. Black cloud appearing at the end of a yuga. See காளமேகம். காலமேக மென்னவே யிடித்ததிர்ந்து (திருவாலவா. 36, 19).

காலமேகாட்டியும் kālamē-kāṭṭiyum, *adv.* <காலை +. Very early in the morning; அதிகாலையில். *Loc.*

காலயுத்தி kālayutti, *n.* <*Kālayukti*. The 52nd year in the Indian cycle of sixty years. See காளயுக்தி. *Colloq.*

காலர் kālar, *n.* <*kāla*. (Śaiva.) Tutelary deity of wind; வாயுவை அதிஷ்டித்துநிற்கும் மூர்த்தி. (சித்தா. சாராவளி. சுலோ. 4.)

காலராத்திரி kāla-rāttiri, *n.* <id. +. 1. The long night that envelopes the whole world at its final destruction; கற்பமுடிவிலுள்ள நீண்ட இரவு. 2. Night of distress, as seemingly long; துன்பம் விளைக்கும் இரவு. 3. One of the manifestations of Durgā; துர்க்காசத்தியின் ஒரு பேதம்.

காலருத்திரன் kāla-ruttiraṉ, *n.* <id. +. 1. Śiva, as destroyer at the end of a *kalpa*; ஊழிக்காலத்துச் சர்வசங்கார மூர்த்தியான மகாருத்திரன். காலருத்திரப்பெயர் தேற்றமா முனக்கே (திருவிளை. குண்டோ. 19). 2. (Śaiva.) Name of a minor Rudra performing the function of Śiva on a smaller scale. See குணருத்திரர்.

காலலம்பு-தல் kāl-alampu-, *v. intr.* <கால்[1] +. 1. To wash one's feet; கால்கழுவுதல். 2. To wash after stool; சௌசஞ்செய்தல்.

காலவகை kāla-vakai, *n.* <காலம் +. (W.) 1. Times, seasons; காலக்கூறு. 2. Circumstances depending on time; காலவேறுபாடு. வழுவல காலவகையினானே (நன். 462).

காலவம் kālavam, *n.* <கால்[3]. Fire; நெருப்பு. (அக. நி.)

காலவர்த்தமானம் kāla-varttamāṉam, *n.* <*kāla* +. Events of the time; நடப்புச்செய்தி.

காலவரை kāla-varai, *n.* <id. + வரை. See காலவரையறை.

காலவரையறை kāla-varai-y-aṟai, *n.* <id. +. 1. Fixing a time; காலநியமிப்பு. 2. Time-limit; specified period; காலாவதி. 3. Settlement of a historical date; சரித்திரகாலத்தை நிர்ணயிக்கை. *Mod.*

காலவழக்கம் kāla-vaḻakkam, *n.* <id. +. Time-honoured usage; நடப்பு வழக்கமுறை.

காலவழு kāla-vaḻu, *n.* <id. +. (Gram.) Incorrect use of tense, as the past for the future; ஒரு காலச்சொல் தன்னோடு இயையாக் காலமொடு புணருங் குற்றம். (தொல். சொல். 11, சேனா.)

காலவழுவமைதி kāla-vaḻu-v-amaiti, *n.* <id.+. (Gram.) Deviation in the use of tenses, sanctioned by usage; காலவழுவை இலக்கணமுடையதாக அமைப்பது. (நன். 383.)

காலவாகுபெயர் kāla-v-āku-peyar, *n.* <id. +. (Gram.) Noun literally signifying time or season used figuratively to denote anything connected therewith, as the month *Kārttikai* for a plant which blossoms in the month; ஒரு காலத்தின்பெயர் அக்காலத்தோடு இயைபுடைய பொருளுக்கு ஆகிவருவது. (நன். 390.)

காலவிடைநிலை kāla-v-iṭai-nilai, *n.* <id. +. Tense-sign; காலத்தைக்காட்டும் இடைநிலை.

காலவித்தியாசம் kāla-vittiyācam, *n.* <id. +. 1. Change of circumstances; காலவேறுபாடு. 2. Times of misfortune; தீயகாலம். *என் காலவித்தியாசம் கஷ்டப்படுகிறேன். Colloq.*

காலவிதி kāla-viti, *n.* <id.+. Misfortune; தீவினை. *Colloq.*

காலவிரயம் kāla-virayam, *n.* <id.+*vyaya*. Waste of time; வீண்காலம்போகை.

காலவைரவன் kāla-vairavaṉ, *n.* <id.+. A form of Bhairava; பைரவமூர்த்தி பேதம்.

காலளப்பான் kāl-aḷappāṉ, *n.* <கால்[1]+. One who measures grain with a *mara-k-kāl;* தானியமளப்போன். *காலளப்பானுக்குத் திருக்கொட்டாரத்திலே காலளவும் பெரியகோவிலுக்கு அமுதுபடியெடுக்கிறது* (கோயிலொ. 90).

காலளவு kāl-aḷavu, *n.* <id.+. Measurement with a *mara-k-kāl;* மரக்காலால் அளக்கை. (கோயிலொ. 90.)

காலளவுப்பாட்டம் kāl-aḷavu-p-pāṭṭam, *n.* <id.+. An ancient tax on *kāl-aḷavu;* காலளவின்பேரில் விதித்துவந்த ஒரு பழையவரி. (I.M.P. Cg. 1023.)

காலன் kālaṉ, *n.* <*kāla*. 1. Yama; யமன். *காலனென்னுங் கண்ணிலி யுய்ப்ப* (புறநா. 240, 5). 2. Yama's messenger; யமகிங்கரன். (சீவக. 1487, உரை.) 3. Gift made with a view to propitiate Yama; காலதானம். *காலன்கொண்டு* (ஈடு, 10, 3, 5). 4. Saturn; சனி. (சது.) 5. One of the unseen heavenly bodies; காந்துறைகோள்களுள் ஒன்று. (W.) 6. A mineral poison. See காந்தபாஷாணம். (மூ. அ.) 7. A prepared arsenic. See நீலபாஷாணம். (W.)

காலன்கொம்பு kālaṉ-kompu, *n.* <காளை +. Ox-horn; மாட்டுக்கொம்பு. (W.)

காலன்கொள்(ளு)-தல் kālaṉ-koḷ-, *v. intr.* <காலன்+. To accept a gift made for the purpose of propitiating Yama to avert death; காலதானம் வாங்குதல். *காலன்கொண்டு மோதிரமிடுவாரைப்போலே* (ஈடு, 10, 3, 5).

காலனூர் kālaṉ-ūr, *n.* <id.+. Hell, the abode of Yama; யமபுரம். (திவ். திருச்சந். 28.)

காலக்ஷேபம் kāla-kṣēpam, *n.* <*kāla-kṣēpa*. 1. Passing one's time or days; காலங்கழிக்கை. (W.) 2. Means of subsistence; சீவனம். *Colloq.* 3. Reading sacred books; சமயநூல் ஓதுகை. *Vaiṣṇ.* 4. Exposition of devotional stories with music; புண்ணியகதையை இசைப்பாட்டுக்களுடன் எடுத்துக்கூறுகை. *ஹரிகதா காலக்ஷேபம்.*

காலஹரணம் kāla-haraṇam, *n.* <*kāla* +*haraṇa*. 1. Delay; காலதாமதம். 2. Expiry of the limitation period; காலாவதி கழிகை.

காலா kālā, *n.* A genus of sea-fish, *Polynemus;* ஒருவகைக் கடல்மீன்.

காலாக்கினி kālākkiṉi, *n.* <*kālāgni*. 1. See காலத்தீ. 2. A supernal world under the regency of *Kālākkiṉi;* ஓர் காலாக்கினி புவனம். (W.)

காலாக்கினிருத்திரபுவனம் kālākkiṉi-ruttira-puvaṉam, *n.* <id.+. (Śaiva.) Region over which *Kālākkiniruttiraṉ* presides; காலாக்கினிருத்திரனூற் காக்கப்பெறும் உலகம்.

காலாக்கினிருத்திரம் kālākkiṉi-ruttiram, *n.* <*Kālāgni-rudra*. Name of an Upaniṣad; நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று.

காலாக்கினிருத்திரன் kālākkiṉi-ruttiraṉ, *n.* <id. Rudra, the god of destruction, one of the presiding deities in the lower regions; சங்காரகருத்தாவான உருத்திரன். (சி. சி. 1, 34, ஞானப்.)

காலாகாலத்தில் kālā-kālattil, *adv.* cf. *kāla*+*kāla*. 1. At the proper time; உரிய சமயத்து. *காலாகாலத்தில் உண்ணவேண்டும்.* 2. Occasionally, not frequently; சிற்சிலசமயம். *அது காலாகாலத்தில் கிடைக்கும். Loc.*

காலாகோலம் kālā-kōlam, *n.* prob. கால+ கோலம். Disorder; அலங்கோலம்.

காலாங்கரை kālāṅ-karai, *n.* <கால்[1]+. Inlet to lakes, tanks, etc.; ஏரிக்கு நீர் கொண்டுவருங்கால்வாய். *Loc.*

காலாங்கி kālāṅki, *n.* <*kālāgni*. A Vēdic mantra to *Kālākkiṉiruttiraṉ;* காலாக்கினிருத்திர மந்திரம். *காலாங்கி மனுநவின்று* (சைவச. பொது. 319).

காலாசு kālācu, *n.* <கால்[1]+ ஆசு[1]. Greaves; காற்கவசம். *காலாசோ டறவெறிந்த கனைகழற்கால்* (சீவக. 2236).

காலாசுவரம் kālā-cuvaram, *n.* <U. *kālā* +U. *hazar*. Black fever; கொடிய சுரநோய் வகை. (M.L.)

காலாட்டம் kāl-āṭṭam, *n.* <கால்[1]+. Activity in business, and consequent prosperity; முயற்சி. (W.)

காலாடி kāl-āṭi, *n.* <id.+. 1. Energetic man, one who is active in business; முயற்சியுடையோன். (W) 2. Title given to the chief of the Sāliya weavers, Paḷḷas, etc.; சிலசாதிகளின் தலைவர்க்குரிய பட்டப்பெயர். 3. Village Paḷḷa who attends to the distribution of water for irrigation; நீர்பாய்ச்சுங் கிராம ஊழியக்காரன். *Loc.* 4. Vagrant; idle and disorderly person; தொழிலற்றுத்திரிபவன். *Colloq.*

காலாடு-தல் kāl-āṭu-, *v. intr.* <id.+. To become prosperous by industry; முயற்சியாற்செல்வஞ் செழித்திருத்தல். *காலாடு போழ்திற் கழிகிளைஞர் . . . பலராவர்* (நாலடி, 113).

காலாணி kāl-āṇi, *n.* <id.+. 1. Callosity of the sole caused by the frequent pricking of thorns and sharp-edged stones; கல் முள் அழுத்தலால் உள்ளங்காலில்தோன்றும் தடிப்புத்தோல். 2. Peg in the beam of a house supporting the roof; மேற்கூரைதாங்கும் முளைக்கட்டை.

காலாணிக்குடிசை kāl-āṇi-k-kuṭicai, *n.* <காலாணி+. Hut, resting for its support mainly on posts; முளைக்கட்டைகளின்மேல் அமைக்கப்படுங் குடிசை. (C.G.)

காலாணியறு-தல் kāl-āṇi-y-aṟu-, *v. intr.* <id.+. To become weak, destitute or poor; வலிசெல்வம் முதலியன குன்றித் தளர்தல். *காலாணியற்றுப்போனவன்.* (W.)

காலாதீதம் kālātītam, *n.* <*kāla+atīta*. 1. That which is unlimited by time; காலங்கடந்தது. 2. That which is time-barred; காலாவதியானது.

காலாதீதன் kālātītaṉ, *n.* <id.+. God, as unlimited by time; காலங்கடந்த கடவுள். *காலாதீதனை ஈசுவரன்* (சி. சி. 2, 54, சிவாக்.).

காலாந்தகன் kālāntakaṉ, *n.* <id.+*antaka*. 1. Śiva, as the slayer of Yama; சிவன். *காலாந்தகனும் வெருவுந் திறற் காளை* (பாரத. அருச்சுனன் தீர். 81). 2. Atrociously wicked person; a terror among men; மிக்க கொடியவன். *Colloq.*

காலாந்தரம் kālāntaram, *n.* <id.+*antara*. 1. Another occasion; வேறுபட்ட காலம். *காலாந்தரத்திருவர் தங்காலஞ்செய்ய* (திருவாச. 12, 11). 2. Intervening time, interval; இடைப்பட்ட காலம்.

காலாயுதம் kāl-āyutam, *n.* <கால்[1]+. cf. *caraṇāyudha*. Cock, as using the feet as weapons; கோழி. (பிங்.)

காலாரி kālāri, *n.* <*kāla+ari*. Śiva, as the destroyer of Yama; யமனைச்சங்கரித்தற்காக எடுத்த சிவமூர்த்தம்.

காலாவதி kālāvati, *n.* <id.+*avadhi*. Lit., time-limit, (*a*) season of cultivation at the expiry thereof fresh arrangements are made with the ryots; விவசாயகாலம். (C.G.); (*b*) period of limitation when rights become barred; வியாச்சியந் செய்தற்குரிய காலவரையறை.

காலாழ் kāl-āḻ, *n.*<கால்[1]+ஆழ்-. Mud; சேறு. (திவா.)

காலாழி kāl-āḻi, *n.* <id.+. Toe-ring; கால்விரல் மோதிரம். *கண்டியதேசத்திற் பண்டொன் பெற்ற காலாழி* (குற்ளு. குற. 123, 14).

காலாள் kāl-āḷ, *n.*<id.+. 1. [K. M. *kālāḷ*.] Foot-soldier, infantry; பதாதி. *பகடுதேர் புரவிகாலாள்* (பாரத. பதினொராம்போ. 6). 2. One who attends to the supply of water from channels for irrigation purposes; பாசனக்காலில் நீர்பாய்ச்சுவோன்.

காலாறு[1]-தல் kāl-āṟu-, *v. intr.* <id.+. 1. To rest from walking; நடை ஓய்ந்திருத்தல். 2. To walk about for overcoming numbness of feet; காலில் இரத்தவோட்டம் உண்டாக உலாவுதல். *குதிரை சிறிது காலாறட்டும். Colloq.*

காலாறு[2] kāl-āṟu, *n.*<id.+ஆறு[3]. Beetle, as having six legs; வண்டு. *செந்தாமரையினிற்றேன் காலாறு பாயுங் கலைசையே* (கலைசைச். 13).

காலாறு[3] kāl-āṟu, *n.* <id.+ஆறு[1]. Rivulet, stream; சிற்றாறு. *காவிரியாய்க் காலாறாய்க் கழியுமாகி* (தேவா. 1227, 3).

காலி[1] kāli, *n.* <id. [M. *kāli*.] 1. Herd of cows, as being quadrupeds; பசுக்கூட்டம். *காலிப்பின் போவார்க்கோர் கோல்கொண்டுவா* (திவ். பெரியாழ். 2, 6, 1). 2. Cow; பசு. *கன்றுமுட்டி யுண்ணச் சுரந்த காலி யவைபோல* (தேவா. 745, 3).

காலி[2] kāli, *n.* perh. காவாலி. 1. Vicious life; துன்மார்க்கம். *காலிச் சிறுநெறிபோய்க் கழிவீர்* (திருநூற். 33). 2. Worthless fellow; உபயோகமற்றவன். *Loc.*

காலி[3] kāli, *n.* 1. Cowhage. See பூனைக்காலி. (தைலவ.) 2. Palas tree, m. tr., *Butea frondosa*; புனமுருங்கைவகை. (மலை.)

காலி[4]-த்தல் kāli-, *11 v. intr.* prob. *kālya*. To rise with lustre above the horizon, as sun, moon, etc.; கிரகங்கள் உதயமாதல். (W.)

காலி[5] kāli, *adj.* <U. *khālī*. Empty, vacant, unoccupied, ruined; வெறுமையான. *காலிமனை.*

காலிகோபுரம் kāli-kōpuram, *n.* prob. T. *gāli*+. Tower of great height at the entrance of

a temple, especially in Tiruppati and Tiru-k-kā-ḷatti, as standing exposed to the violence of wind; திருப்பதி திருக்காளத்தி முதலிய மலைகளின் மேல் முகப்பிலுள்ள கோபுரம். *Loc.*

காலிங்கராயன்சம்பா kāliṅka-rāyaṉ-campā, *n.* <*kaliṅga*+. A kind of paddy maturing in 4 to 6 months; நான்குமுதல் ஆறுமாதங்களில் விளையும் சம்பாநெல்வகை. *Loc.*

காலிடு-தல் kāl-iṭu, *v. intr.* <கால்¹+. To set foot, enter; கால்வைத்தல். *அவர்கள் தாங்களுங் காலிடமாட்டாத பூமி* (ஈடு, 1, 3, 9).

காலிமாடு kāli-māṭu, *n.* <காலி¹+. Stray cattle, cattle herded in woods; காட்டில் வளர்க்கப்படுங் கால்நடை.

காலியம் kāliyam, *n.* <*kālya.* Daybreak; விடியல். (சங். அக.)

காலியமாடு kāliya-māṭu, *n.* <காலி¹+. See காலிமாடு. (W.)

காலியா-தல் kāli-y-ā-, *v. intr.* <U. *khālī* +. To become vacant, as a situation, a house; வீடு உத்தியோகம் முதலியன ஒருவர் வசப்படாமல் ஒழிந்திருத்தல்.

காலியாங்குட்டி kāliyāṅkuṭṭi, *n.* 1. A common harmless snake, *Tropidonotus stolatus;* ஒருவகைப் பாம்பு. *Loc.* 2. Any innocuous reptile; தீங்குசெய்யுஞ் சக்தியற்ற அற்பப்பிராணி. Tp.

காலியாந்துவரை kāli-y-āṉ-tuvarai, *n.* <*kālī*+ஆம்+துவரை. Black dhal, low turning-weed, *Rhynchosia minima;* துவரைவகை. (M.M. 274.)

காலிராணுவம் kāli-rāṇuvam, *n.* <கால்¹+. Infantry, foot-soldiers; காலாட்படை.

காலில்விழு-தல் kālil-viḻu-, *v. intr.* <id.+. 1. To fall prostrate, do homage at one's feet; பாதத்தில் விழுந்து வணங்குதல். 2. To implore, seek forgiveness; மன்னிப்புவேண்டுதல். 3. To take refuge; புகலடைதல்.

காலிலி kāl-ili, *n.* <id.+இலி. 1. One who is lame; முடவன், முடத்தி. 2. Aruṇa, the lame charioteer of the sun; அருணன். (சூடா.) 3. Snake, as having no legs; பாம்பு. (சூடா.) 4. Wind; காற்று. (சூடா.)

காலிறங்கு-தல் kāl-iṟaṅku-, *v. intr.* <id. +. 1. To develop elephantiasis; யானைக்கால் உண்டாதல். 2. To descend in torrents, as a cloud heavy with water; மழைக்காலிறங்குதல். 3. To have cross-threads on the borders of coloured cloths worn by Indian women; சீலையின் விளிம்புகள் குறுக்கிழைக்கோடுகோள் ளுதல்.

காலிறால் kāl-iṟāl, *n.* Prawn with long legs, *Astacus jamaicensis;* இறால்மீன்வகை. (M. M. 373.)

காலுழற்றி kāl-uḻaṟṟi, *n.* <கால்¹+. Spasms in the leg; காலிற்காணும் வாதநோய். (W.)

காலுளைவு kāl-uḷaivu, *n.* <id.+. Ache or pain in legs, as from cold; கால்நோவு.

காலூரம் kālūram, *n.* <*śālūra.* Frog; தவளை. (சது.)

காலூறு-தல் kāl-ūṟu-, *v. intr.* <கால்¹+. 1. To feel an itching sensation in feet, as foreboding an impending journey; பிரயாணக் குறியாகக் காலில் தினவுண்டாதல். 2. To be impatient, restless to walk, run or move about, as a child; ஓடியாடப் பிள்ளைகள் இச்சித்தல். *Colloq.*

காலூன்று-தல் kāl-ūṉṟu-, *v. intr.* <id. +. 1. To set foot firmly on the ground, to become established; நிலையுறுதல். 2. See காலிறங்கு-, 2. *ககனவட்டத்தினின்று காலூன்றி மழைபொழியும்* (தாயு. சித்தர்க. 4). 3. To have a decorated post planted in front of a house as a preliminary to a marriage, festival, etc.; பந்தற்கால் நாட்டுதல்.

காலெடு¹-த்தல் kāl-eṭu-, *v. intr.* <id.+. 1. To dig irrigation-channels; வாய்க்கால் வெட்டுதல். 2. To divide the hair into locks for braiding it; பின்னும்படி மயிரை வகிர்ந்தெடுத்தல்.

காலெடு²-த்தல் kāl-eṭu-, *v. intr.* <கால்⁵+. 1. To commence, as setting forth; ஆரம்பித்தல். 2. To yield, give consent; அனுமதிகொடுத்தல். *ஒன்றின் நினைவுக்கு ஒன்று காலெடுக்க அமைந்திருக்கை* (ஈடு, 6, 1, 4).

காலேகம் kālēkam, *n.* 1. Pearl; முத்து. *காலேகஞ் செம்பொன் வளமனை பாழாக வாரி* (பு. வெ. 3, 15). 2. See காலேகவண்ணம். (W.)

காலேகவண்ணம் kālēka-vaṇṇam, *n.* prob. *kālēya*+. Paste composed of various perfumes; கலவைச்சாந்து. (திவா.)

காலேசம் kālēcam, *n.* prob. கால்¹. See காலேயம்¹. *குஞ்சரமுதலிய காலேசங்களும்* (தொல். பொ. 152, உரை.)

காலேசுரவாதி kālēcura-vāti, *n.* <*kāla*+*īśvara*+. (Phil.) One who maintains that Time is the Supreme Being; காலத்தையே கடவுளென வாதிப்பவன். (சி. சி. 8, 12, ஞானப்.)

காலேணி kāl-ēṇi, *n.* <கால்¹+. Ladder with two supporting legs; குறுக்குப்படிகளைக் கொண்ட இருகால்களுடைய ஏணி. (W.)

காலேந்திரம் kālēntiram, *n.* <*kāla*+*yantra.* A contrivance to show time, as the sun-dial or the hour-glass; காலத்தைப் புலப்படுத்தும்

யந்திரம். காலேந்திரமுங் கைவயிற் பிரியா நாலேந்திரமும் (பெருங். இலாவாண 2, 153).

காலேமிந்தரம் kālēmintaram, n. <Sinh. *kalumediriya*. 1. Red ebony of South India, l. tr., *Diospyros hirsuta;* கரிக்கட்டைமரம். 2. Calaminder wood, l. tr., *Diospyros quaesita;* இலங்கையிலுண்டாகும் ஒருவகைமரம்.

காலேயம்[1] kālēyam, n. cf. காலேசம். Herbivorous quadrupeds; பசு யானை முதலிய புல்லுண்ணும் நாற்காற்பிராணிகள். புல்லினுனின்புறாஉங் காலேயம் (நான்மணி. 67).

காலேயம்[2] kālēyam, n. <*kālēya*. 1. Eagle-wood. See அகில். (மலை.) 2. Yellow zedoary. See கஸ்தூரிமஞ்சள். (மலை.)

காலேயம்[3] kālēyam, n. <*kālaśēya*. (மூ. அ.) 1. Buttermilk; மோர். 2. Toddy; கள்.

காலை[1] kālai, <*kāla*. n. 1. Time; பொழுது. (பிங்.) 2. Life-time; வாணாள். கோகோ யானே தேய்கமா காலை (புறநா. 234). 3. Season, opportunity; தருணம். காலைய தறிந்தனே (கந்தபு. திருவவ. 14). 4. Occasion, turn; முறை. முக்காலைக் கொட்டினுள் (நாலடி, 24). 5. cf. *kālya*. Early part of the morning; விடியற்காலம். காலைக்குச் செய்தநன் றென்கொல் (குறள், 1225) 6. Sun; சூரியன். காலை யன்ன சீர்சால் வாய்மொழி (பதிற்றுப். 21, 4). 7. Day-time; பகல். எல்லியிது காலையிது வென்ப தறிகல்லாள், (சீவக. 1877). 8. Waking-drum; பள்ளியெழுச்சி முரசம். மேல்வந்தான் காலைபோல் . . . துயிலோ வெடுப்புக (கலித். 70).—*adv*. 1. Early, betimes, early in life; காலம்பெற. (W.) 2. When, while; பொழுதில். அடுங்காலை நீர்கொண்ட வெப்பம்போல் (நாலடி, 68).

காலை[2] kālai, n. <Sinh. *kālē*. Enclosure, area enclosed; அடைப்பு. (J.)

காலைக்கடன் kālai-k-kaṭaṉ, n. <காலை[1]+. Morning observances; காலையனுஷ்டானம்.

காலைச்சுற்று-தல் kālai-c-cuṟṟu-, v. tr. <கால்[1]+. To cling to one's feet; to hold persistently; தொடர்ந்துபற்றுதல். பிரமகத்திதோஷம் காலைச்சுற்றுகிறது.

காலைச்செபம் kālai-c-cepam, n. <காலை[1]+. Morning prayer; உதயத்திற்புரியும் பிரார்த்தனை. *Chr.*

காலைஞாயிறு kālai-ñāyiṟu, n. <id.+. Rising sun; உதயசூரியன். காலை ஞாயிற்றுக் கதிர்போற் றோன்றிய (மணி. 9, 45).

காலைமுரசம் kālai-muracam, n. <id.+. Morning drum sounded to awaken kings; பள்ளியெழுச்சி முரசு. காலை முரசக் கனைகுர லோதையும் (சிலப். 13, 140).

காலைமுழவு kālai-muḻavu, n. <id.+. See காலைமுரசம். (சிலப். 3, 27, உரை.)

காலையடை-த்தல் kālai-y-aṭai-, v. intr. <காலை[2]+. To make an enclosure; அடைப்பிடுதல். (J.)

காலையந்தி kālai-y-anti, n. <*kāla*+*sandhyā*. Morning twilight; காலையையடுத்த அந்திப்பொழுது. காலையந்தியு மாலையந்தியும் (புறநா. 34, 8).

காலைவெள்ளி kālai-veḷḷi, n. <id.+. Venus, as the morning star; விடியற்காலத்தில் உதிக்குஞ் சுக்கிரன்.

காலொட்டு-தல் kāl-oṭṭu-, v. intr. <கால்[1] +. Lit., to restore a lame leg, to make up for deficiencies; குறைவைக் காட்டாமற் சரிப்படுத்துதல். *Loc.*

காலொற்று-தல் kāl-oṟṟu-, v. intr. <கால்[3] +. To blow gently, as the wind; காற்றுவீசுதல். கடிகாலிற் காலொற்ற வொல்கி (கலித். 92, 51).

காலோசிதம் kālōcitam, n. <*kāla*+*ucita*. That which is suited to the time; காலத்துக்கு ஏற்றது.

காலோடிகையோடி kālōṭi-kaiyōṭi, n. <கால்[1]+. Vagabond, vagrant; தொழிலற்றுத் திரிபவன். *Tinn.*

காலோடு-தல் kāl-ōṭu-, v. intr. <id.+. 1. To slip, as the leg; வழுக்குதல். காலோடுமிடங் களையுடைய (மலைபடு. 215, உரை). 2. To pursue a business actively with keen interest; காரியமுயற்சி யுண்டாதல். அந்தக் காரியத்தில் எனக்குக் காலோடவில்லை.

காலோர் kālōr, n. <id. Infantry; காலாட்கள். காலோர் காப்ப (மதுரைக். 441).

காலோலம் kālōlam, n. prob. *kākōla*. Raven, *Corvus corax;* அண்டங்காக்கை. (பிங்.)

காவகா kāvakā, n. cf. காலகம். Marking-nut. See சேங்கொட்டை. (மலை.)

காவட்டம்புல் kāvaṭṭam-pul, n. <காவட்டை+. Citronella grass, *Andropogon nardus;* காமாட்சிப்புல். (மலை.)

காவட்டை kāvaṭṭai, n. [M. *kāvaṭṭa*.] See காவட்டம்புல்.

காவடி kāvaṭi, n. prob. காவு[1]- + தடி. [T. *kāvaḍi*, M. *kāvaṭi*.] 1. Pole or stave of wood used for carrying burdens; காத்தண்டு. 2. A decorated pole of wood with an arch over it, carried on shoulders with offerings mostly for Muruka's temple, commonly with some parade; பிரார்த்தனைக்கு எடுக்குங் காவடி. 3. That which is carried on the shoulder with a pole; காவுதடியிற் கொண்டுபோகும் பொருள். (W.)

காவணப்பத்தி kāvaṇa-p-patti, n. <காவணம்+. Ornamental roof of a mansion; மண்ட

பத்தின் அலங்காரமான மேற்றளம். குறட்டின்மேலே திருக்காவணப்பத்தித் திருமண்டபமும் (கோயிலொ. 14).

காவணம் kāvaṇam, *n.* prob. கா³+perh. அணம் term. [K. *kāvaṇa.*] 1. Shed with a flat roof, pandal; பந்தல். *காவணங்களிற் றோன்றின பச்சிளங் கமுகம்* (பாரத. கிருட். 56). 2. Grove, tope; சோலை. *காவண மிலங்கு மந்தண் காசி* (காசிக. வியாதன் சா. 23).

காவணவன் kāvaṇavaṉ, *n.* prob. காவணம். A small insect that spreads among trees and growing corn, binds leaves to its nest and thus destroys the crop; ஒருவகைப்புழு. (J.)

காவதம் kāvatam, *n.* Distance of about ten miles. See காதம். *காவதங்கடந்து* (சிலப். 10, 36).

காவதன் kāvataṉ, *n.* A masquerade dance; வரிக்கூத்துவகை. (சிலப். 3, 13, பக். 88.)

காவந்து kāvantu, *n.* <U. *khāwand.* Protection. See காபந்து. (W.)

காவல் kāval, *n.* <கா-. [T. *kāvali*, K. M. *kāval.*] 1. Defence, protection, preservation, keeping; பாதுகாப்பு. *காவலன் காவல்* (மணி. 22, 209). 2. Enclosing fence, hedge; வேலி. (பிங்.) 3. Surrounding wall, fortification; மதில். (பிங்.) *காவல்வேவக் கணையொன் றெய்தார்* (தேவா. 1087, 10). 4. Prison, jail; சிறை. *அவனைக் காவலில் வைத்தார்கள்.* 5. Watchman, guard; காவலாள். 6. Platform raised for watching fields; பரண். (உரி. நி.) 7. Dominion of a king as protected by him; காக்கப்படும் நாடு. *காவல் குழவிகொள் பவரி னோம்புமதி* (புறநா. 5, 6). 8. Coat of mail; கவசம். *வான் புலங் காவல்கொண்டார்* (சீவக. 793).

காவல்கட்டு kāval-kaṭṭu, *n.* <காவல்+. 1. Strong guard, strict watch; தக்க காப்பு. 2. Strict attention to the diet of a sick person; நோயாளியின் பத்தியப்பாதுகாப்பு. (J.)

காவல்கா-த்தல் kāval-kā-, *v. tr.* <id.+. To watch, guard, protect; காவற்றொழில்செய்தல்.

காவல்செய்-தல் kāval-cey-, *v.* <id.+. *tr.* 1. To guard, defend; பாதுகாத்தல். 2. To imprison, put in jail, confine; சிறைவைத்தல். *கணிகை மகளையுங் காவல்செய் கென்றனன்* (மணி. 22, 214).—*intr.* To protect a heap of grain from demons, by passing a straw-rope over the heap in the field, or making diagrams with the rope on the ground, or placing on the heap a handful of moist cowdung representing Gaṇēsa; களத்து நெற்குவியலில் அடையாளம்வைத்துப் பூதம் முதலியன அணுகாதபடி பாதுகாப்புச்செய்தல். (J.)

காவல்மாளிகை kāval-māḷikai, *n.* <id.+. [M. *kāvalmāḷika.*] Watch-tower, a small turret where sentinels or watch-guards are stationed; காவற்காரர்கள் இருந்துகொண்டு காவல் புரிவதற்காக ஏற்பட்ட சிறுகோபுரம்.

காவல்மாற்று-தல் kāval-māṟṟu-, *v. intr.* <id.+. To relieve the guard, change sentinels; இளைப்பாறுதற்பொருட்டுக் காவலாளரை முறைமாற்றி நியமித்தல்.

காவல்மிராசு kāval-mirācu, *n.* <id.+. Hereditary right of watchmen; காவல்செய்வதற்காகப்பெறும் பரம்பரைச் சுதந்திரம்.

காவல்மேரை kāval-mērai, *n.* <id.+. Share of produce given to the village watchman on the threshing-floor (R.F.); காவலுக்காகக் கொடுக்கும் களசுதந்திரம்.

காவலறை kāval-aṟai, *n.* <id.+. 1. Public treasury, as guarded; காக்கப்படுவதாகிய பொக்கிஷசாலை. *காவலறை யழித் தரும்பொருள் கவர்ந்தே* (திருவாலவா. 25, 4). 2. [M. *kāvalaṟa.*] Watch-house; காவல்காத்து நிற்கும் அறை.

காவலன் kāvalaṉ, *n.* <id. 1. Protector, guardian; பாதுகாப்போன். *அருட்காவலன்பாலொன்றி* (தாயு. காண்பே. 2). 2. King; அரசன். *காவலன் காவா னெனின்* (குறள், 560). 3. Body-guard; மெய்காப்போன். (சூடா.) 4. Husband; கணவன். *பொலங்குழையார் காவலர்சொற் போற்றல் கடன்* (இலக். வி. 658, உரை).

காவலாள் kāval-āḷ, *n.* <id.+. See காவற்காரன்.

காவலாளன் kāval-āḷaṉ, *n.* <id.+. Watchman, guard. See காவற்காரன்.

காவலாளி kāval-āḷi, *n.* <id.+. [M. *kāvalāḷi.*] 1. See காவற்காரன். 2. Husband; கணவன். (J.)

காவலி kāvali, *n.* <id. Police duty; போலிசுவேலை. *Loc.*

காவற்கட்டு kāvaṟ-kaṭṭu, *n.* <id.+. 1. Custom regulating village-watch; காவல்செய்வதற்குரிய நிபந்தனை. *Loc.* 2. Bundle of paddy sheaves given to watchmen as dues; காவலாளர்க்குக் கதிர்க்கட்டாகக் கொடுக்கும் மானியம். (J.)

காவற்கட்டை kāvaṟ-kaṭṭai, *n.* <id.+. (J.) 1. A log of wood kept burning to ward off the female demon *koṟṟi* from a woman in child-birth; ஈன்றபெண்டிர்க்குக் காவலாக எரிக்கும் விறகுக்கட்டை. 2. Clump of wood kept burning throughout the night near a patrol-hut; காவலுக்காகக் குடிசையின்பக்கத்துவைத்து எரிக்கும் விறகு.

காவற்கடவுள் kāvaṟ-kaṭavuḷ, *n.* <id.+. Viṣṇu, as preserver of the world; திருமால். (திவா.)

காவற்கணிகை kāvaṟ-kaṇikai, *n.* <id.+. A class of dancing-girls; களத்தாடுங் கூத்தி. (சிலப். 5, 50.)

காவற்கப்பல் kāvaṟ-kappal, n. <id.+. Guard-ship, reconnoitering vessel; காவல்செய் யுங் கப்பல். (W.)

காவற்கலி kāvaṟ-kali, n. perh. காவின் + *kadalī*. Plantain; வாழை. (மலை.)

காவற்காடு kāvaṟ-kāṭu, n. <காவல்+. 1. Jungle or forest serving as defence; கோட்டையைச்சூழக் காவலாக வளர்க்கப்படும் காடு. (தொல். பொ. 65, உரை.) 2. Reserved forest; அரசாங்கத்தினரால் பாதுகாக்கப்படுங் காடு.

காவற்காரன் kāvaṟ-kāraṉ, n. <id.+. [M. *kāvalkāran*.] Watchman, sentinel, patrol; காவல்செய்வோன்.

காவற்கூடம் kāvaṟ-kūṭam, n. <id.+. Prison house; சிறைச்சாலை.

காவற்கூடு kāvaṟ-kūṭu, n. <id.+. Sentry-box; காவலாளர் தங்குமிடம். *Colloq.*

காவற்சாலை kāvaṟ-cālai, n. <id.+. [M. *kāvalcāḷa*.] See காவற்கூடம். வலிதிற் காவற்சாலையி லாக்கினர்கள் (திருவாத. பு. திருப்பெருந். 119).

காவற்சோலை kāvaṟ-cōlai, n. <id. +. Royal park or grove, as guarded; அரசர்விளையாடற்குரிய உத்தியானவனம். (சிலப். 14, 127, உரை.)

காவற்பிரிவு kāvaṟ-pirivu, n. <id.+. (Akap.) Major theme which describes the husband's parting from his wife to defend his country; தலைவன் நாடுகாவற்பொருட்டுத் தலைவியைப்பிரியும் பிரிவு. (திருக்கோ. 312, தலைப்பு.)

காவற்புரி kāvaṟ-puri, n. <id.+. 1. Scare-crow made of twisted or plaited straw; வயலில் காவலாக வைத்கோலால் செய்துவைக்கப்படும் பாவை. 2. Straw rope thrown over a heap of grain in a field to protect it from demons; நெற்குவியலின்மேல் பூதபிசாசங்கள் அணுகாமல் தடுக்க இடும் வைக்கோற்பழுதை. (J.)

காவற்பெண்டு kāvaṟ-peṇṭu, n. <id.+. 1. Nurse; செவிலி. (சிலப். 29, காவற்பெண்டுசொல்.) 2. An ancient poetess, author of a poem in Puṟanāṉūṟu; பெண்பாற்புலவருள் ஒருவர். (புறநா. 86.)

காவற்றண்டனை kāvaṟṟaṇṭaṉai, n. <id. +. Sentence of imprisonment; சிறையிலிடுந் தண்டனை.

காவற்றெய்வதம் kāvaṟṟeyvatam, n. <id. +. Tutelary deity; காக்குந் தெய்வம். காவற்றெய்வதங் கண்டுவெந் தெய்தி (மணி. 25, 159).

காவன் kāvaṉ, n. perh. கா-. Spider; சிலந்திப்பூச்சி. (பிங்.)

காவன்மகளிர் kāvaṉ-makaḷir, n. <காவல்+. Captive wives of enemies; பகைவர் மனையோராய்ச் சிறைபிடிக்கப்பட்ட மகளிர். (சீவக. 154, உரை, விசேடக்குறிப்பு.)

காவன்மரம் kāvaṉ-maram, n. <id.+. Favourite tree of a royal dynasty, as the object of special care by its kings; அரசர்க்குரியதாய்ப் பகைவர் அணுகாமல் அவராற் காக்கப்படும் மரம். (புறநா. 23, உரை.)

காவன்முரசம் kāvaṉ-muracam, n. <id. +. Royal drum; காத்தற்றொழிலுக்கு அறிகுறியான அரசாங்கமுரசு. காவன்முரசம் காட்காலையிலே முழங்க (பு. வெ. 9, 14, உரை).

காவன்முல்லை kāvaṉ-mullai, n. <id.+. (Puṟap.) Theme of extolling the king's rule; அரசனுட்சியைச் சிறப்பிக்கும் புறத்துறை. (பு. வெ. 8, 24.)

காவனிகுதி kāvaṉikuti, n. <id.+நிகுதி. Duty paid by village watchmen for enjoyment of their privileges; காவற்காரர் கொடுக்குங் கடமை. (C.G.)

காவா kāvā, n. cf. காவாளி. Wild jasmine, m. cl., *Jasminum angustifolium;* காட்டுமல்லிகை. (M. M. 384.)

காவாங்கரை kāvāṅ-karai, n. <கால்வாய்+ கரை. Bank of a channel; வாய்க்காற்கரை. *Loc.*

காவாய் kāvāy, n. A kind of grass; புல்வகை. (W.)

காவாலி[1] kāvāli, n. <*Kapālin*. Śiva; சிவன். கற்று வஞ்சாடு காவாலி (பதினொ. சிவ. திருவந். 90).

காவாலி[2] kāvāli, n. <U. *qawwālī*. Vagabond; மனம்போனபடி நடப்பவன்.

காவாளர் kā-v-āḷar, n. <கா[4]+. Carriers of *kāvaṭi;* காவடிசுமப்போர். (சிலப். 15, 205.)

காவாளி kāvāḷi, n. See காவாளை. (மலை.)

காவாளை kāvāḷai, n. 1. See காவா. (மலை.) 2. An annual herb growing in waste lands. See வேளை. (மூ. அ.)

காவி[1] kāvi, n. [T. K. M. Tu. *kāvi*.] 1. Red ochre; காவிக்கல். (பிங்.) 2. Light yellowish-brown colour in garments consequent on frequent washing; ஆடையிலேறும் பழுப்பு. 3. Colour of the teeth as from chewing betel; தாம்பூலம் முதலியவற்றல் பல்லில் ஏறும் பழுப்புநிறம். 4. Blue nelumbo. See கருங்குவளை. காவிசேருங் கயற்கண்ணாள் பங்கா (திருவாச. 32, 5). 5. Indigo cake; அவுரிமருந்துருண்டை. (மூ. அ.)

காவி[2] kāvi, n. perh. காவு-. Toddy; கள். (பிங்.)

காவி[3] kāvi, n. <Port. *gavea*. cf. E. *gaff*. Topsail; கப்பலின் தலைப்பாய். *Naut.*

காவிக்கல் kāvi-k-kal, n. <காவி[1]+. Ochre, reddle; ஒருவகைச் சிவப்புத்தாது. அடலுறுகற் காவிக்கல் (பதார்த்த. 1132).

காவிடோல் kāvi-ṭōl, *n.* <காவி³. See காவிப்பருவான். *Naut.*

காவிதி kāviti, *n.* 1. Ancient title bestowed on Vēḷāḷas by Pāṇḍya kings; வேளாளர்க்குப் பாண்டியர் கொடுத்துவந்த ஒரு பட்டம். (தொல். பொ. 30, உரை.) 2. Title conferred on Vaiśya ladies; வைசியமாதர்பெறும் பட்டவகை. எட்டி காவிதிப் பட்டந்தாங்கிய மயிலியன் மாதர் (பெருங். இலாவாண. 3, 144). 3. Minister; மந்திரி. (திவா.) 4. Accountant caste; கணக்கர் சாதி. (சூடா.) 5. Collector of revenues; வரிதண்டும் அரசாங்கத்தலைவர்.

காவிதிப்புரவு kāviti-p-puravu, *n.* <காவிதி +. Land bestowed upon the king's ministers; அரசரால் காவிதியர்க்குக் கொடுக்கப்பட்ட ஊர். (நன். 158, மயிலை.)

காவிதிப்பூ kāviti-p-pū, *n.* <id.+. Gold flower, the badge of the title *kāviti;* காவிதியென்னும் பட்டத்துடன் அரசர் அளிக்கும் பொற்பூ. (தொல். எழுத். 154, உரை.)

காவிதிமை kāvitimai, *n.* <id. Accountant's work; கணக்குவேலை. காவிதிமைசெய்ய ஒருவனுக்கு அரையன் மணவிலிங்கனை செம்பியன் பெருங்காவிதிக்குப் பங்கு அரையும் (S.I.I. ii, 277).

காவிதோய்-த்தல் kāvi-tōy-, *v. tr.* <காவி¹ +. To dye or tinge with ochre, as ascetic's cloth; காஷாயமூட்டுதல்.

காவிப்பருவான் kāvi-p-paruvāṉ, *n.* <காவி³ +. Topsail-yard; கப்பலின் தலைப்பாய்மரம்.

காவிபிடி-த்தல் kāvi-piṭi-, *v. intr.* <காவி¹ +. To acquire an yellowish-brown colour, as cloth by daily washing in water; to acquire a reddish colour, as teeth from betel, as from ochre; பழுப்புநிறம் ஏறுதல்.

காவிமண் kāvi-maṇ, *n.* <id.+. Red ochre in the shape of loose earth; செம்மண்.

காவியகுணம் kāviya-kuṇam, *n.* <*kāvya* +. Merits of poetic composition, which are ten in number, viz., செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில்பொருண்மை, காந்தம், வலி, சமாதி; செய்யுட்குணம். (தண்டி. 13.)

காவியம் kāviyam, *n.* <*kāvya.* 1. Epic poem; பழையதோர் கதைபற்றிய தொடர்நிலைச்செய்யுள். (திவா.) 2. Minor poetic composition; கலம்பகம் பரணி முதலிய சிறுகாப்பியம். (தண்டி.)

காவியன் kāviyaṉ, *n.* <id. *Cukkiran,* as the son of Kavi or Bhṛgu; சுக்கிரன். (இராசவைத்.)

காவியா kāviyā, *n.* See காவியாக்கட்டை.

காவியாக்கட்டை kāviyā-k-kaṭṭai, *n.* <காவி³ +. Wooden beam of an anchor; நங்கூரக் கட்டை.

காவியேறு-தல் kāvi-y-ēṟu-, *v. intr.* <காவி¹ +. To have the yellowish-brown colour produced, as in a white cloth by constant washing; ஆடையில் நீர்ப்பழுப்பேறுதல்.

காவிரி kāviri, *n.* <*Kāvēri.* See காவேரி. காவிரிவாயிலில் (மணி. 22, 43).

காவிரிப்பட்டினம் kāviri-p-paṭṭiṉam, *n.* <id.+. See காவிரிப்பூம்பட்டினம்.

காவிரிப்பூம்பட்டினம் kāviri-p-pūm-paṭṭiṉam, *n.* <id.+. Ancient sea-port and capital of the Chola kingdom, the Khaberis of Ptolemy; சோழர்க்குரிய தலைநகரமும் பழைய துறைமுகப்பட்டினமுமாகிய புகார்நகரம். காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் (அகநா. 107).

காவிரிபுதல்வர் kāviri-putalvar, *n.* <id. +. Vēḷāḷas, as the sons of the soil fertilised by the Kāvēri; வேளாளர். (சிலப். 10, 148, உரை.)

காவிவஸ்திரம் kāvi-vastiram, *n.* <காவி¹ +*vastra.* Brown-red cloth worn by ascetics; காஷாயவஸ்திரம்.

காவிளாய் kāviḷāy, *n.* See காவிளை. (மலை.)

காவிளை kāviḷai, *n.* cf. காய்வேளை. 1. An annual herb growing in waste lands. See வேளை. 2. Purple wild indigo. See கொழிஞ்சி.

காவு¹-தல் kāvu-, *5 v. tr.* 1. To carry on the shoulder, as a palanquin, a pole with a weight at each end; தோளாற் காத்தண்டு சுமத்தல். காவினெங் கலனே (புறநா. 206). 2. To bear or sustain anything heavy, on the arms or on the head; சுமத்தல். ஊனைக்காவி யுழிதர்வர் (தேவா. 338, 1).

காவு²-தல் kāvu-, *5 v. tr.* prob. *kām.* To long for desire; இச்சித்தல். தேனைக்காவி யுண்ணார் சிலதெண்ணர்கள் (தேவா. 338, 1).

காவு³ kāvu, *n.* <Pkt. *ghāu.* 1. Sacrifice, oblation to inferior deities; சிறுதெய்வங்களுக்கு இடும் பலி. காளிக்குக் காவுகொடுத்தார்கள். 2. Magic ointment used for mark on the forehead; காவுப் பொட்டுக்குரிய மை.

காவுதடி kāvu-taṭi, *n.* <காவு¹-+. Pole for carrying burdens on the shoulder; காவடித்தண்டு.

காவுப்பொட்டு kāvu-p-poṭṭu, *n.* <காவு³ +. A mark of magic ointment worn on the forehead by the temple priest; பூசாரி நெற்றியிலணியும் அஞ்சனப்பொட்டு. (W.)

காவுவோர் kāvuvōr, *n.* <காவு¹-. Palanquin-bearers; பல்லக்குச்சுமப்பவர்.

காவேட்டைக்காரன் kā-vēṭṭai-k-kāraṉ, *n.* prob. கா-+. Head huntsman of the Ūrāḷi

caste who distributes every animal that is killed; ஊராளிச்சாதியில் வேட்டைக்காரர் தலைவன்.

காவேரி kāvēri, *n.* < *Kāvērī*. Kāvēri river, as the daughter of Kavēra; கவேரன் மகளாகிய காவிரிநதி. *வாழிகாவேரி* (சிலப். 7, பாடல், 2).

காவேரிப்பட்டணம் kāvēri-p-paṭṭaṇam, *n.* < id. +. See காவிரிப்பூம்பட்டினம்.

காவேரிமணல் kāvēri-maṇal, *n.* < id. +. Iron sand; அயமணல். (W.)

காவேரிமான்மியம் kāvēri-māṉmiyam, *n.* < id. +. Name of a Purāṇa on the Kāvēri river; காவிரியின்பெருமை கூறும் ஒரு புராணம்.

காவேளை kāvēḷai, *n.* < காய்வேளை. An annual herb growing in waste places. See வேளை. (W.)

காவோலை kāvōlai, *n.* prob. காழ்- +. Ripe palm leaf; முற்றின ஓலை. *ஓலிகாவோலை* (நற். 38).

காழ்[1]**-த்தல்** kāḻ-, *11 v. intr.* 1. To become hard, mature; முற்றுதல். *காழ்த்த மரம்* (திரிகடு. 75). 2. To be firm, strong in mind, implacable; மனவைரங்கொள்ளுதல். *காழ்த்த பகைவர் வணக்கமும்* (திரிகடு. 24). 3. To increase beyond measure, abound; அளவுகடந்து மிகுதல். *ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க்கு* (குறள், 760). 4. To be pungent, acrid; உறைத்தல். (திவா.)

காழ்[2] kāḻ, *n.* < காழ்-. cf. *kāṣṭha*. 1. Hardness; solidity, close grain, as of timber; core; மரவைரம். (திவா.) 2. Strength of mind; மனவுறுதி. *காழிலா மம்மர்கொள் மாந்தர்* (நாலடி, 14). 3. Post to which a cow is tied; கட்டுத்தறி. *கவைத்தாம்பு தொடுத்த காழூன் றல்குல்* (பெரும்பாண். 244). 4. Pillar; தூண். *மர்த்திரட்டிண்காழ்* (நெடுநல். 111). 5. Oar; ஓடஞ்செலுத்தற்குரிய தண்டு. *வணங்குகாழ் வங்கம் புகும்* (கலித். 92, 47). 6. Iron rod; இருப்புக் கம்பி. *காழிற் சுட்ட கோலூன்* (பொருந. 105). 7. Elephant goad; யானையைச் செலுத்தும் பரிக்கோல். *காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்* (கலித். 2, 26). 8. Bolt, bar, as of a door; கதவிற் செறியுந் தாழ். (திவா.) 9. Firewood; விறகு. (பிங்.) 10. Handle, stem; காம்பு. *காழெஃகம் பிடித்தெறிந்து* (பதிற்றுப். 90, 37). 11. Rafter; கழி. (சிறுபாண். 133, உரை.)

காழ்[3] kāḻ, *n.* prob. *kāś*. 1. Brightness, lustre; ஒளி. (திவா.) 2. Gem; இரத்தினம். *பருக்காழுஞ் செம்பொன்னும்* (பு. வெ. 9, 14). 3. Pearl; முத்து. *பரூஉக்காழாரம்* (சிலப். 4, 41). 4. Crystal; பளிங்கு. (பிங்.) 5. Garland of pearls, of gems; மணிவடம். *முப்பத்திருகாழ்* (சிலப். 6, 87). 6. Garland of flowers; பூமாலை. *ஒருகாழ் விரன்முறை சுற்றி* (கலித். 54, 7). 7. Thread, string; நூற்சரடு. *திருக்கோவை காழ்கொள* (பரிபா. 6, 15).

காழ்[4] kāḻ, *n.* cf. *karṣa*. 1. Seed; விதை. *வித்திடினுங் காஞ்சிரங்காழ் தெங்காகா* (நாலடி, 243). 2. Stone, nut, kernel, as of fruits; கொட்டை. *ஈந்தின்காழ் கண்டன்ன* (பெரும்பாண். 130). 3. Skin, as of a fruit; rind; கனித்தோல். (பிங்.) 4. Gravel; பருக்கைக்கல். (திவா.)

காழ்[5] kāḻ, *n.* cf. *kāla*. 1. Blackness; கருமை. *கதுப்புவிரித் தன்ன காழக நுணங்கறல்* (சிறுபாண். 6). 2. Blemish, defect, fault; குற்றம். *எக் காழு மிகந்தல கின்பமுற* (காஞ்சிப்பு. கழுவாய். 300). 3. Box-leaved satin ebony. See இரும்பிலி. (மலை.)

காழ்கொள்(ளு)-தல் kāḻ-koḷ-, *v. intr.* < காழ்- +. To mature, come to a climax; முதிர்தல். *நிறையு முண்டோ காமங் காழ்கொளின்* (மணி. 5, 20).

காழ்கோளி kāḻ-kōḷi, *n.* < id. +. Indian mast tree. See நெட்டிலிங்கம். (L.)

காழ்ப்பு kāḻppu, *n.* < id. 1. Pungency; உறைப்பு. (திவா.) 2. Close grain, as of the heart, of timber; வைரம். (பிங்.) 3. Implacable hatred; மனவைரம். *காழ்ப்பு மருட்கை மதத்தோடு* (சேதுபு. மங்கல. 15). 4. Scar; தழும்பு. *Loc.* 5. Essence; சாரம். *வெளிறுங் காழ்ப்புமாகச் சொல்லி* (ஈடு, 6, 7, 1).

காழ்வை kāḻvai, *n.* < காழ்[4]. Tiger's-milk. See அகில். *ஆரங் காழ்வை கடியிரும் புன்னை* (குறிஞ்சிப். 93). (M.M. 892.)

காழகம்[1] kāḻakam, *n.* Burmah; கடாரம். *காழகத்தாக்கமும்* (பட்டினப். 191). (திவா.)

காழகம்[2] kāḻakam, *n.* < காழ்[3] + அகம். cf. *śāṭakam*. 1. Cloth; ஆடை. *புலராக் காழகம் புலர வுடீஇ* (திருமுரு. 184). 2. Glove put on while handling an arrow; கைக்கவசம். *வினைமாண் காழகம் வீங்கக் கட்டி* (கலித். 7).

காழகம்[3] kāḻakam, *n.* < *kālaka*. Blackness; கருமை. *காழகமூட்டப்பட்ட* (சீவக. 1230).

காழம் kāḻam, *n.* prob. காழகம்[2]. A garment; உடைவிசேடம். *காழ மிட்ட குறங்கினன்* (கம்பரா. கங்கைப். 31).

காழி[1] kāḻi, *n.* < காழ்-. Great strength, toughness, hardness; உறுதி. *காழிக்கினர் காவலர் தீவில்* (ஞானவா. கற்கடி. 8).

காழி[2] kāḻi, *n.* < சீகாழி. Shiyāli. See சீகாழி. (தேவா.)

காழியர்கோன் kāḻiyar-kōṉ, *n.* < காழி[2] +. Saint Sambandha. See திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். *கண்ணுருங் காழியர்கோன் கருத்தார்வித்த* (தேவா. 190, 11).

காழியன்[1] kāḻiyaṉ, *n.* prob. காழ்-. cf. *kṣāl*. Washerman, dhoby; வண்ணான். *காழியர் கவ்வைப் பரப்பின் வெவ்வுவர்ப் பொழிய* (அகநா. 89, 7).

காழியன்[2] kāḻiyaṉ, *n.* prob. *kṣāra.* 1. Dealer in the rice-preparation *piṭṭu*; பிட்டுவாணிகன். (மணி. 28, 32.) 2. Dealer in salt; உப்பு வாணிகன். (சூடா.)

காழூன்றுகடிகை kāḻ-ūṉṟu-kaṭikai, *n.* <காழ்[2]+. Military machine fitted with spears; குத்துக்கோல். *கானப்படமுங் காழூன்று கடிகையும்* (சிலப். 14, 173). 2. Tent; கூடாரம். (சிலப். 14, 173, அரும்.)

காழோர் kāḻōr, *n.* <id. Mahouts; பரிக்கோலினராகிய யானைப்பாகர். *காழோர் வாதுவர் கடுக்கே ரூருநர்* (சிலப். 22, 12).

காளகண்டம் kāḷa-kaṇṭam, *n.* <*kala-kaṇṭha.* Koel, Indian cuckoo, *Eudynamis honorata*; குயில். (பிங்.)

காளகண்டன் kāḷa-kaṇṭaṉ, *n.* <*Kāla-kaṇṭha.* Šiva, as having azure-coloured neck; சிவன். (உரி. நி.)

காளகண்டி kāḷa-kaṇṭi, *n.* <*kālakaṇṭhī.* 1. Durgā; துர்க்கை. 2. An inauspicious day; ஓர் அமங்கல நாள். (*விதான. குணகுண.* 78.)

காளகம்[1] kāḷakam, *n.* <*kālaka.* 1. Blackness; கருமை. *காளக வுடையினன்* (சீவக. 320). 2. Marking-nut. See சேங்கொட்டை. (L.) 3. Emetic-nut. See மருக்காரை. (மலை.)

காளகம்[2] kāḷakam, *n.* prob. *kāhala.* Long trumpet, ram's horn; எக்காளம். (W.)

காளகூடம் kāḷa-kūṭam, *n.* <*kāla-kūṭa.* 1. Poison from the sea of milk kept by Šiva in His throat in order to save the Dēvas from destruction; ஆலாகலம். (பிங்.) 2. A hell; ஒரு நரகம். *கோளனைக் காளகூட நரகிற் கவிழ்த்தனர்* (குற்றா. தல. கவுற். 64).

காளங்கன்று kāḷaṅ-kaṉṟu, *n.* <காளை+. Bull-calf, very young steer; காளைக்கன்று.

காளச்சிலை kāḷa-c-cilai, *n.* prob. *kāla*+. Cat's-eye, a variety of chalcedony; வைடூரியம். (சங். அக.)

காளத்தி kāḷatti, *n.* <*Šrī-kāla-hastin.* Kālahasti, a Šiva shrine in North Arcot District; சீகாளத்தி என்னுந் சிவதலம். *மகிழ்ச்சி பொங்கக் காளத்தி கண்டுகொண்டு* (பெரியபு. கண்ணப்ப. 100).

காளபதம் kāḷa-patam, *n.* prob. *kāla*+. Blue rock pigeon, as black-footed. See மாடப்புறா. (திவா.)

காளபந்தம் kāḷa-pantam, *n.* <*gāḍha*+*bandha.* Big torch used on festive occasions. See காடபந்தம். (W.)

காளபம் kāḷapam, *n.* cf. *களபம்*[2]. Battle, fight, warfare; போர். (சூடா.)

காளம்[1] kāḷam, *n.* <*kāla.* 1. Blackness, darkness; கருமை. *காளமாகிருளை* (சீவக. 2245). 2. Poison, venom; நஞ்சு. (திவா.) 3. Serpent; பாம்பு. (சங். அக.) 4. Strychnine tree. See எட்டி. (சூடா.) 5. Indian indigo. See அவுரி. (மலை.) 6. Cloud; மேகம். (சது.)

காளம்[2] kāḷam, *n.* cf. *kāla-mukhī.* Heavy shower productive of good crops; நல்விளைவுக்குக் காரணமான பெருமழை. (W.)

காளம்[3] kāḷam, *n.* perh. காழ்-. cf. *kāla.* (பிங்.) 1. Trident; சூலம். 2. Impaling stake; கழு.

காளம்[4] kāḷam, *n.* <*kāhala.* Trumpet, horn; ஊதுகொம்பு. *சங்கபடகம் பேரிதாரை காளம் தாளம்* (பெரியபு. திருஞான. 620).

காளம்பிடி-த்தல் kāḷam-piṭi-, *v. intr.* <காளம்[4]+. To blow the trumpet; எக்காளமூதுதல். *குலக்கலிக்குக் காளம் பிடித்திடிற் சின்னம்படும்* (தமிழ்நா. 83).

காளமுகி kāḷa-muki, *n.* <*kāla-mukhī.* A cloud which rains hail-stones, one of *catta-mēkam*, q.v.; கல்மழை பொழியும் மேகம். (திவா.)

காளமேகப்புலவர் kāḷa-mēka-p-pulavar, *n.* <*kāla-mēgha*+. A distinguished Tamil poet of the 15th c., so called from his pouring forth poems in great abundance, his real name being Varataṉ; வரதன் என்னும் இயற்பெயருடையராய்ப் பெருமேகம்போற் கவிகளைப் பொழிந்து 15-ம் நூற்றாண்டில் விளங்கிய புலவர்.

காளமேகம் kāḷa-mēkam, *n.* <*kāla*+*mēgha.* 1. Black cloud heavy with water; கார் மேகம். *இழிந்தெழு காளமேகம்* (கம்பரா. நாகபா. 217). 2. See காளமேகப்புலவர். *சக்தி வரதா . . . கவிகாளமேகமே* (தமிழ்நா. 222).

காளயுக்தி kāḷayukti, *n.* <*Kālayukti.* The 52nd year of the Indian cycle of 60 years; வருஷம் அறுபதில் ஐம்பத்திரண்டாவதாண்டு.

காளயுத்தி kāḷayutti, *n.* <id. See காளயுக்தி.

காளவனம் kāḷa-vaṉam, *n.* <*kāla*+. Burning-ground; சுடுகாடு. (சூடா.)

காளவாய்[1] kāḷa-vāy, *n.* prob. *kāhala*+. Ass, as being trumpet-mouthed; கழுதை. (பிங்.)

காளவாய்[2] kāḷavāy, *n.* [M. *kāḷavāy.*] Kiln for lime or brick; சுண்ணாம்பு செங்கல்கள் சுடுஞ் சூளை.

காளவாய்க்கல் kāḷavāy-k-kal, *n.* <காளவாய்[2]+. Bricks fresh from the kiln; சுட்ட புதுச் செங்கல். (W.)

காளவாயன் kāḷa-vāyaṉ, *n.* <*kāhala*+. Person with a trumpet tongue or a loud voice; one who blabs out secrets, babbler; சத்தமிட்டுப்பேசுபவன். (W.)

காளவிளக்கு kāḷa-viḷakku, *n.* <*gāḍha*+. Lamps used for the illumination of gardens and grounds on great festive occasions; திருவிழாமுதலிய விசேடகாலங்களில் உபயோகிக்கும் பெருவிளக்கு.

காளன்[1] kāḷaṉ, *n.* <*kāla*. The commander-in-chief of Mahā Šāstā; மாசாத்தாவின் சேனுபதியாகிய மாகாளன். (*கந்தபு. மகாசாத்.* 67.)

காளன்[2] kāḷaṉ, *n.* <M. *kāḷan*. A savoury fluid treated with vegetables and spices; பச்சடிவகை. *Loc.*

காளா kāḷā, *n.* cf. *காலா*. Robaul fish, *Polynemus*; மீன்வகை. (M.M. 761.)

காளாஞ்சி[1] kāḷāñci, *n.* [T. K. M. *kāḷānji*.] 1. Spittoon; தம்பலந் துப்புங் கலசம். 2. Betel-holder; தாம்பூலமெடுக்குங் கலம். *பைம்பொனிற் றிகழ் தனிகை காளாஞ்சி* (*பிரபோத.* 11, 31).

காளாஞ்சி[2] kāḷāñci, *n.* perh. *கால்*[3]. A kind of rheumatism; வாதநோய்வகை. (W.)

காளாத்திரி kāḷāttiri, *n.* A poisonous fang of a serpent, one of four *naccu-p-pal*, q.v.; பாம்பின் நான்கு நச்சுப்பற்களுள் ஒன்று. (*சீவக.* 1288, *உரை.*)

காளாம்பி kāḷāmpi, *n.* prob. *kāla*+ஆம்பி. Mushroom. See காளான். *ஆவுதை காளாம்பிபோன்ற* (*களவழி.* 36).

காளாமுகம் kāḷāmukam, *n.* <*kālāmukha*. (Šaiva.) One of the minor systems of Šaivaism closely allied to *māviratam*; மாவிரதத்தைப் பெரும்பாலும் ஒத்த சைவசமய உட்பகுதி.

காளாமுகர் kāḷāmukar, *n.* <id. (Šaiva.) Saiva sect following the *kāḷāmukam* system; சைவருள் ஒருசாரரான காளாமுகவகுப்பினர். (*பிங்.*)

காளான் kāḷāṉ, *n.* Fungus, mushroom, toadstool, the harmless variety being *Agaricus campestris*; நாய்க்குடை.

காளான்சம்பா kāḷāṉ-campā, *n.* <காளான்+. A kind of paddy with fungus odour; காளான் நாற்றமுள்ள சம்பாநெல்வகை. (*பதார்த்த.* 815.)

காளி[1] kāḷi, *n.* <*Kālī*. 1. Durgā, as being black; துர்க்கை. *சிற்றக் காளிக டொகையும்* (*கந்தபு. அசுரர்யாக.* 40). 2. Pārvatī; பார்வதி. (*சது.*) 3. Lion; சிங்கம். (*சது.*) 4. (Šaiva.) The Sakti of *Kāla*, the Vāyumūrtti; வாயுமூர்த்தியான காளனின்சக்தி. (*சித். சா. ஞானபா. வ்யா.* 4.) 5. A secondary Purāṇa, one of 18 *upa-purāṇam*, q.v.; உபபுராணம் பதினெட்டனுள் ஒன்று. (*திவா.*) 6. Parimaḷakanti, the mother of Vyāsa. See பரிமளகந்தி. (*பாரத. குருகுல.* 100.) 7. A poisonous fang of a serpent, one of four *naccu-p-pal*, q.v.; பாம்பின் நச்சுப்பல் நான்கனுள் ஒன்று. (*சீவக.* 1288, *உரை.*) 8. Strychnine tree. See எட்டி. (*மூ. அ.*)

காளி[2] kāḷi, *n.* <மணித்தக்காளி. Black nightshade. See மணித்தக்காளி. (*இராசவைத்.*)

காளி[3] kāḷi, *n.* 1. Palas tree. See காட்டுமுருக்கு. (L.) 2. Kakri melon. See கக்கரி. (*மலை.*)

காளிக்கங்கூட்டு-தல் kāḷikkaṅ-kūṭṭu-, *v. intr.* <காளிக்கம்[1]+. To prepare dark-blue dye by compounding the necessary ingredients; கருஞ்சாயங் கூட்டுதல். (W.)

காளிக்கம்[1] kāḷikkam, *n.* <*kālika*. Dark-blue dye for cloth; கருஞ்சாயம். (*யாழ். அக.*)

காளிக்கம்[2] kāḷikkam, *n.* A mountain containing copper ores; செம்புத்தாது உள்ள மலை.

காளிக்கமெழுது-தல் kāḷikkam-eḻutu-, *v. intr.* <காளிக்கம்[1]+. To delineate on chintz with *kāḷikkam* pigment; சீலைத்துணியில் கருஞ்சாயரேகை எழுதுதல். (W.)

காளிகம்[1] kāḷikam, *n.*<*Kālikā*. A secondary Purāṇa, one of 18 *upa-purāṇam*, q. v.; உபபுராணம் பதினெட்டனுள் ஒன்று. (*பிங்.*)

காளிகம்[2] kāḷikam, *n.* cf. *காளி*[2]. Black nightshade. See மணித்தக்காளி. (*மலை*)

காளிங்கமர்த்தனன் kāḷiṅka-marttaṉaṉ, *n.*<*Kāliṅga*+. Kṛṣṇa, as dancing on the hood of the serpent Kāḷiyaṉ; காலிங்கனென்னும் நாகத்தின்மீது பாதங்களைவைத்து ஆடித்துவைத்த கண்ணபிரான்.

காளிங்கராயன் kāḷiṅka-rāyaṉ, *n.* <*kaliṅga*+. An ancient title borne by high officials of the time of Cōlas and Pāṇḍyas; சோழபாண்டியர்காலத்து இராசாங்கத்தலைவர் சிலர்க்கு வழங்கிய பட்டப்பெயர். (Insc.)

காளிங்கன் kāḷiṅkaṉ, *n.*<*kāliṅga*. 1. Inhabitant of the Kalinga country; கலிங்கதேசத்துள்ளவன். 2. A serpent in the Jumna subdued by Kṛṣṇa; யமுனைநதியில் கண்ணனால் அடக்கப்பட்ட ஒரு துஷ்டசர்ப்பம்.

காளிசக்கரம் kāḷi-cakkaram, *n.* <*kālī*+. An ancient gold coin, as stamped with the figure of Kāḷi; காளியுருவம் பதித்த பழைய நாணயவகை.

காளித்தனம் kāḷi-t-taṉam, *n.* <id.+. Cruelty, hard heartedness; மூர்க்கத்தன்மை. *Loc.*

காளிதம் kāḷitam, *n.* prob. *kāliman*. Verdigris, dross; களிம்பு. *தாமிரத்துக்குக் காளிதஞ் சகசமாயிருக்குமாறு* (சி. சி. 2, 79, *மறை.*).

காளிதாசன் kāḷi-tācaṉ, *n.* <*Kāli-dāsa.* Kaḷidāsa, a famous Sanskrit poet and dramatist; வடமொழிப்பெருங்கவிகளுள் ஒருவர். *வன்றிசைக் காளி தாசன் வடமொழி* (இரகு. பாயி. 8).

காளிந்தம் kāḷintam, *n.* cf. ***kāla.*** Cardamom plant. See ஏலம். (மலை.)

காளிந்தி[1] kāḷinti, *n.* <*Kālindi.* The Jumna; யமுனை.

காளிந்தி[2] kāḷinti, *n.* 1. Siris. See வாகை. (மலை.) 2. Teak. See தேக்கு.

காளிந்திமர்த்தனன் kāḷinti-marttaṉaṉ, *n.* <*Kālindi*+. Balarāma, as having tormented the river Jumna by turning her course with his plough; தனது கலப்பையாயுதத்தால் யமுனையின் செருக்கடக்கிய பலராமன்.

காளிப்பணம் kāḷi-p-paṇam, *n.* <*kālī*+. Ancient coin = 3 as. 4 ps.; மூன்று அணு நான்துபை மதிப்புள்ள பழையநாணயங்களுள் ஒன்று. (E.T.)

காளிமம் kāḷimam, *n.* <*kāliman.* 1. Blackness, black colour; கறுப்பு. *தனதுகாளிமங் கழிப்ப* (கந்தபு. திருநகரப். 72). 2. Verdigris, dross; களிம்பு. *தாம்பிர காளிம மென்ன* (பிரபோத. 46, 8).

காளிமை kāḷimai, *n.* <*kālimā* nom. sing. of ***kāliman.*** See காளிமம். *காளிமைப் பிழம்பு போத* (கம்பரா. நாகபா. 217).

காளியன் kāḷiyaṉ, *n.* <*Kāliya.* A serpent on whose hood Kṛṣṇa danced; கண்ணபிரான் தன் பாதங்களால் தலையில் மிதித்தாடப்பெற்ற சர்ப்பம். *காளியன் பொய்கை கலங்க* (திவ். பெரியாழ். 3, 9, 7).

காளினி kāḷiṉi, *n.* See காளினியம். (மூ. அ.)

காளினியம் kāḷiṉiyam, *n.* Brinjal. See கத்தரி. (மலை.)

காளை kāḷai, *n.* cf. ***gadi.*** 1. Steer, young bullock; இளவெருது. 2. [M. ***kāḷa.***] Bull, ox; எருது. (பிங்.) 3. Young man, in his prime; கட்டிளமைப்பருவத்தினன். (திவா.) 4. Man; ஆண்மகன். (திவா.) 5. Chief of a desert tract; பாலைநிலத்தலைவன். (திவா.) 6. Warrior; வீரன். *உரவு வேற்காளையும்* (புறநா. 334).

காளைக்கன்று kāḷai-k-kaṉṟu, *n.* <காளை+. Bull-calf; பசுவின் ஆண் கன்று.

காளைமாடு kāḷai-māṭu, *n.* <id.+. Ox, bullock; எருது.

காளையங்கம் kāḷai-y-aṅkam, *n.* <id.+ ***aṅka.*** Battle, fight, warfare; போர். (சது.)

காளையம் kāḷaiyam, *n.* prob. ***kalaha.*** cf. காளபம். [K. Tu. ***gāḷaga.***] Uproar, tumult as in a battle; போராரவாரம். *இதனிலும் பெரியதோர் காளையம்விளையுமா காண்மினோ* (கலிங். 479).

காற்கட்டு[1]**-தல்** kāṟ-kaṭṭu-, *v. tr.* <கால்[1]+. 1. To press one to do a thing, as by preventing him from going further; காரியத்தின் பொருட்டு நிர்ப்பந்தித்தல். *என்னையே காற்கட்டி அவிழ்த்துக் கொள்ளவேணும்* (ஈடு, மஹாப்ர.). 2. To marry, marriage being regarded as a hobble to one apt to stray; கலியாணஞ்செய்தல்.

காற்கட்டு[2] kāṟ-kaṭṭu, *n.* <id.+. [K. ***kāl-gaṭṭu.***] 1. Obstruction; தடை. 2. Marriage, as fetters; கலியாணம்.

காற்கடுப்பு kāṟ-kaṭuppu, *n.* <id.+. Aching pain in the feet, as from cold or too much walking; காலுளைச்சல்.

காற்கடுவன் kāṟ-kaṭuvaṉ, *n.* <id.+. A disease of feet in children, chronic eczema; குழந்தைகட்குவரும் கால்நோய்வகை. (பாலவா. 687.)

காற்கடைகொள்(ளு)-தல் kāṟkaṭai-koḷ-, *v. intr.* <id.+. To discard, despise; அலட்சியஞ்செய்தல். *அறிந்து வைத்துக் காற்கடைகொள்வாயே* (திவ். திருப்பா. 7, வ்யா.).

காற்கணை kāṟ-kaṇai, *n.* <id.+ கணை[2]. See காற்கோமாரி. *Loc.*

காற்கவசம் kāṟ-kavacam, *n.* <id.+. Sandals; பாதரட்சை. (பதார்த்த. 1457, தலைப்பு.)

காற்காந்தல் kāṟ-kāntal, *n.* <id.+. Abscess in the foot; காற்புண். (M.L.)

காற்காப்பு kaṟ-kāppu, *n.* <id.+. Anklet; காலில் அணியும் காப்பு.

காற்காறை kāṟ-kāṟai, *n.* <id.+. Footrings for the idol; விக்கிரகங்களின் பாதங்களிற் சாத்தும் திருவாபரணம். *திருக்காற்காறை நாற்பொன் இக்கழஞ்சு* (S.I.I. ii, 397).

காற்குடைச்சல் kāṟ-kuṭaiccal, *n.* <id.+. Rheumatism, aching pain in the legs; காலுளைவு.

காற்குப்பாயம் kāṟ-kuppāyam, *n.* <id.+. [M. ***kālkuppāyam.***] Trousers; காற்சட்டை.

காற்குழைச்சு kāṟ-kuḻaiccu, *n.* <id.+. Fetlock; மாடு குதிரைகளின் காற்குளம்புக்கு மேலிடத்துள்ள மயிர்க்கரண். (கால். வி. 74.)

காற்குளம் kāṟ-kuḷam, *n.* <id.+. The eighth *nakṣatra*; பூச நட்சத்திரம். (திவா.)

காற்கூலி kāṟ-kūli, *n.* <id.+. Wage for walking; நடைக்கூலி. *அடுத்தடுத்துப் பின்சென்ருலீவது காற்கூலி* (தமிழ்நா. 33).

காற்கொட்டை kāṟ-koṭṭai, *n.* <id.+. Small bolster for the legs and feet; காலுக்கு இடும் திண்டு. (W.)

காற்கோமாரி kāṟ-kōmāri, *n.* <id.+. Soreness of hoofs, foot disease of cattle; கால்நடைகளுக்கு வரும் கால்வியாதிவகை. (கால். வி. 51.)

காற்சட்டை kāṟ-caṭṭai, *n.* <id.+. [M. *kārcaṭṭa.*] Trousers, pantaloons; கால்களுக்கு இடும் நிஜார்.

காற்சப்பை kāṟ-cappai, *n.*<id.+. 1. Foot-and-mouth disease, *Aphthae epiizooticae;* கால் நடைகட்கு வரும் தொத்துவியாதிவகை. (M. Cm. D. 247.) 2. Hips. See சப்பை. *Colloq.*

காற்சரி kāṟ-cari, *n.* <id.+. An ornament for ankles; பாதசரம். (*கலித். 85, 1, உரை.*)

காற்சவடி kār-cavaṭi, *n.* <id.+. A kind of anklet; பாதசாலம். (சிலப். 6, 84, உரை.)

காற்சிராய் kāṟ-cirāy, *n.* <id.+U. *she'ār.* Trousers; காற்சட்டை.

காற்சிலம்பு kāṟ-cilampu, *n.*<id.+. Sounding anklets; காலணி வகை.

காற்சீப்பு kāṟ-cīppu, *n.* <id.+. Hip bone; இடுப்புச் சந்தெலும்பு. (W.)

காற்சுவடு kāṟ-cuvaṭu, *n.* <id.+. [M. *kālcuvaḍu.*] Foot-print; அடிவைப்பின் குறி. *Colloq.*

காற்சுற்று kāṟ-cuṟṟu, *n.* <id.+. Small circular metal ring mostly of silver worn by women on the toes; மகளிர் கால்விரலில் அணியும் அணிவகை.

காற்படம் kāṟ-paṭam, *n.*<id.+prob. *paṭa.* (W.) 1. Forepart of the sole of the foot; விரலையடுத்திருக்கும் பாதத்தின் அடிப்பக்கம். 2. The instep down to the toes; புறவடி.

காற்படு-தல் kāṟ-paṭu-, *v. intr.* <கால்[5]+. To perish; அழிதல். *எவையுங் காற்படப் புடைபெயர் கடல்* (கம்பரா. எழுச்சி. 10).

காற்படை kāṟ-paṭai, *n.*<கால்[1]+. 1. Cock, as using its foot for a weapon; கோழி. *காற் படைக் கொடியினன்* (கல்லா. 60, 11). 2. Infantry; காலாட்படை.

காற்பரடு kāṟ-paraṭu, *n.* <id.+. The roof or upper part of the foot; புறவடி.

காற்பனிகம் kāṟpaṉikam, *n.* <*kālpanika.* That which is invented, newly fashioned; கற்பிக்கப்பட்டது. *தியான பூசாநிமித்தம் காற்பனிக தேகம்* (சி. சி. 1, 47, ஞானப்.).

காற்பாசம் kāṟpācam, *n.* <*kārpāsa.* Indian cotton plant; பருத்தி.

காற்பாதை kāṟ-pātai, *n.* <கால்[1]+. Foot-path; ஒற்றையடிப் பாதை. *Colloq.*

காற்பிடி-த்தல் kāṟ-piṭi-, *v. tr.* <id.+. To geld, castrate; விதையடித்தல். (W.)

காற்பிடிப்பு kāṟ-piṭippu, *n.* <id.+. Rheumatic stiffness in legs, *Anchylosis;* வாதத்தினாற் காலிற்காணும் பிடிப்புநோய்.

காற்பித்தவெடிப்பு kāṟ-pitta-veṭippu, *n.* <id.+. Fissure in the foot, cracked foot; காலில் உண்டாகும் பித்தவிரி. (M.L.)

காற்புத்தி kāṟputti, *n.* Yellow sulphuret of arsenic; தாளகம். (*தைலவ. தைல.* 80.)

காற்புரவு kāṟ-puravu, *n.* <கால்[1]+. Land irrigated by channels; ஆற்றுப்பாசன நிலம்.

காற்புள்ளி kāṟ-puḷḷi, *n.* <id.+. Punctuation mark ',' which indicates the least separation between parts of a sentence; ஒரு வாக்கியத்தை வாசிக்கும்பொழுது சிறிதளவு நிறுத்தவேண்டும் இடத்தைக் குறித்தற்கு இடும் ',' குறி. *Mod.*

காற்பெட்டி kāṟ-peṭṭi, *n.* <id.+. Back-box in a carriage for putting in things; வண்டியின் பின்பெட்டி. *Tinn.*

காற்பெய்-தல் kāṟ-pey-, *v. intr.* <கால்[5]+. To run away; ஓடுதல். *கருவினை காற்பெய்தன வே* (சீவக. 3102).

காற்றண்டை kāṟṟaṇṭai, *n.*<கால்[1]+தண்டை. Tinkling trinket for ankles; காலணிவகை.

காற்றருந்து-தல் kāṟṟaruntu-, *v. intr.* <காற்று + அருந்து-. 1. To feed on air, as snakes; காற்றைப்புசித்தல். 2. To be gaping, listless, idle; சோம்பியிருத்தல். (W.)

காற்றழும்பு kāṟṟaḻumpu, *n.*<கால்[1]+தழும்பு. Bunion, inflamed swelling on foot; வலியோடு கூடிய கால்வீக்கம். *Loc.*

காற்றன் kāṟṟaṉ, *n.* Blue vitriol; துரிசு. (சங். அக.)

காற்றாடவை-த்தல் kāṟṟāṭa-vai-, *v. tr.* <காற்று+ஆடு-+. To expose to open air; to air a thing; காற்றுப்படுமாறு பண்டங்களை வைத்தல்.

காற்றாடி kāṟṟāṭi, *n.* <id.+. 1. [M. *kāṟṟāṭi.*] That which whirls in the wind; சுழல் காற்றடிக்கும் மடிப்பு(?). (திவா.) 2. See காற்றாடிப்பட்டம். *Loc.* 3. Windmill; கறங்கின் சுழற்சியால் நீரிறைக்கும் யந்திர விசேடம். 4. Restless, fidgety person; waverer; நிலையில்லாதவன். (W.) 5. Whip tree. See சவுக்கு. 6. Silk oak, l. tr., *Grevillea robusta;* மரவகை.

காற்றாடிப்பட்டம் kāṟṟāṭi-p-paṭṭam, *n.* <காற்றாடி+. Paper-kite; காற்றிற் பறக்கவிடும் பட்டம்.

காற்றாய்ப்பற-த்தல் kāṟṟāy-p-paṟa-, *v. intr.* <காற்று+. *Colloq.* 1. To roam, fly about, as the wind; விரைந்தோடுதல். 2. To be over-active in gaining one's ends; to be industrious, zealous; சுறுசுறுப்பாய்த் தொழில்செய்தல்.

காற்றிளவல் kaṟṟiḷaval, *n.*<id.+. Gentle breeze; இளங்காற்று. (யாழ். அக.)

காற்றின்சகாயன் kāṟṟiṉ-cakāyaṉ, *n.* <id. +. Fire, as the friend of wind; தீ. (சூடா.)

காற்றினாள் kāṟṟiṉāḷ, *n.* <id.+நாள். Svātī, the 15th *nakṣatra*, as having Wind-god for its presiding deity, Arcturus; வாயுவைத் தேவதையாகக் கொண்ட சுவாதிநாள். (பிங்.)

காற்று¹-தல் kāṟṟu-, 5 *v. tr.* Caus. of கால்-. 1. To make manifest, reveal, put forth; வெளிப்படுத்துதல். பொலிகதிர் காற்றியும் (கல்லா. 13). 2. To destroy, ruin; அழித்தல். ஆற்றல் காற்றுஞ் செயல் (தணிகைப்பு. நந்தியுப. 129).

காற்று² kāṟṟu, *n.* <கால்-. 1. Air, wind; வாயு. காற்றியமானன் வானம் (திருவாச. 5, 63). 2. Breath; உயிர்ப்பு. மூச்சுக்காற்று (சூடா. 3, 49). 3. Gas generated in bowels, by indigestion, etc. flatulence; அபானவாயு. காற்றுப் பரிகிறது. 4. Ghost, apparition, spectre, spirit; பிசாசு. *Loc.* 5. See காற்றினாள். (சூடா.)

காற்றுக்கடுவல் kāṟṟu-k-kaṭuval, *n.* <காற்று +. Violent wind; பெருங்காற்று. (யாழ். அக.)

காற்றுக்கரப்பு kāṟṟu-k-karappu, *n.* <id.+. Demoniacal possession; பேய்க்கோளாறு. அவளைக் காற்றுக்கரப்புப் பிடித்து ஆட்டுகிறது. *Loc.*

காற்றுக்காலம் kāṟṟu-k-kālam, *n.* <id.+. Windy weather, especially in Āṭi; ஆடிமாதத்திற்போலப் பெருங்காற்று வீசுங்காலம்.

காற்றுக்கொள்(ளு)-தல் kāṟṟu-k-koḷ-, *v. intr.* <id.+. To gain publicity, as an affair taking wind; வெளிப்பரவுதல். சங்கதி காற்றுக்கொண்டது. *Loc.*

காற்றுச்சங்கை kāṟṟu-c-caṅkai, *n.* <id.+ *śaṅkā*. See காற்றுக்கரப்பு.

காற்றுநோவு kāṟṟu-nōvu, *n.* <id.+. Rinderpest; கால்நடைகளுக்குவரும் வெக்கைநோவு. (M. Cm. D. 247.)

காற்றுப்பு kāṟṟuppu, *n.* prob. கால்- + துப்பு-. Spitting, expectoration; காறியுமிழ்கை. கையொடு கொட்டாவி காற்றுப்புத் தும்மல் (ஆசாரக். 74).

காற்றுப்பெயர்-தல் kāṟṟu-p-peyar-, *v. intr.* <காற்று +. To set in, as monsoon; காற்றுக்காலந் தொடங்குதல். காற்றுப்பெயர்ந்துவிட்டது.

காற்றுப்பேத்தை kāṟṟuppēttai, *n.* A sea-fish, greenish, attaining 1 ft. in length, *Tetrodon immaculatus;* கடல்மீன்வகை.

காற்றுப்போ-தல் kāṟṟu-p-pō-, *v. intr.* <காற்று +. 1. To have the air escape, as from bladder; அடைப்பினின்றும் காற்று வெளியேறுதல். *Colloq.* 2. To break wind; அபானவாயுவை வெளியிடுதல்.

காற்றுமழை kāṟṟu-maḻai, *n.* <id.+. Tempest; காற்றோடுகூடிவரும் மழை.

காற்றுமாரியாயி kāṟṟu-māri-y-āyi, *n.* <id. +. Syphilitic node, congenital or acquired; கிரந்திப்புண்கட்டி. (M.L.)

காற்றுமுந்துநாள் kāṟṟu-muntu-nāḷ, *n.* <id.+. Viśākha, the 16th *nakṣatra*, as succeeding *kāṟṟiṉāḷ;* காற்றைத் தேவதையாகக்கொண்ட சுவாதியை முற்பட்டநாளாகவுடைய விசாகநட்சத்திரம். (சூடா.)

காற்றுவாக்கு kāṟṟu-vākku, *n.* <id.+. 1. Direction of the wind; காற்றடிக்குந் திசை. காற்று வாக்கிலே நின்று (சீவக. 1568, உரை). 2. Leeward, used when a current of offensive effluvia is conveyed by the wind, as from a passing fisherwoman; காற்றுத்தோன்றும் பக்கம். (J.) 3. Neglect of duty; அசட்டை. 4. Mere chance; தற்செயல். (J.)

காற்றுவாங்கு-தல் kāṟṟu-vāṅku-, *v. intr.* <id.+. To take an airing, enjoy breeze; காற்றை அனுபவித்தல். கடற்கரைக்குக் காற்றுவாங்கப் போனேன்.

காற்றுவாட்டம் kāṟṟu-vāṭṭam, *n.* <id.+. Windward; காற்றுக்கு எதிர்முகம்.

காற்றுவாரி kāṟṟu-vāri, *n.* <id.+. Ventilator, window without shutters; கதவில்லாத சிறு சாளரம். *Loc.*

காற்றுவாரிப்பந்தல் kāṟṟu-vāri-p-pantal, *n.* <id.+. Shed with an upward slope so as to let in breeze plentifully; காற்றுமிகுதியாக வரும்படி அமைக்கப்படும் பந்தல். *Madr.*

காற்றுவாரிப்பலகை kāṟṟu-vāri-p-palakai, *n.* <id.+. Movable wooden shutter of a ventilator or of a window near the roof; காற்றை வரவுந் தடுக்கவும் அமைக்கப்படும் முகட்டுச் சாளரப் பலகை. *Loc.*

காற்றேறு kāṟṟēṟu, *n.* <id.+ஏறு. A flaw in pearls; காற்றினால் தோன்றும் ஒருவகை முத்துக்குற்றம். (சிலப். 14, 193, உரை.)

காற்றொடுக்கம் kāṟṟoṭukkam, *n.* <id.+ ஒடுக்கம். Calm, lull, subsidence of wind; காற்று அடியாது ஓடுங்குகை. (W.)

காற்றொதுக்கு kāṟṟotukku, *n.* <id.+ ஒதுக்கு. Shelter from the wind; காற்றடைப்பு. (W.)

காற்றொழில் kāṟṟoḻil, *n.* <கால்¹ + தொழில். Menial service, as performed by footmen; அற்ப வேலை. காற்றொழி லென்று கருதற்க (நாலடி, 193).

காற்றோட்டம் kāṟṟōṭṭam, *n.* <காற்று + ஓட்டம். Ventilation, free circulation of air; காற்றின் தாராளமான சஞ்சாரம். இது காற்றோட்டமில்லாத வீடு.

காற்ரோட்டி kāṟṟōṭṭi, *n.* 1. Thorny caper, m. cl., *Capparis horrida*; கொடி வகை. 2. Ceylon caper, m. sh., *Capparis zeylanica*; செடி வகை.

காறடி kāṟaṭi, *n.* cf. *karahāṭa*. Emetic-nut. See மருக்காரை. (மலை.)

காறல்[1] kāṟal, *n.* <காறு-. cf. *kṣāra*. 1. Pungency; bitter musty flavour producing a tendency to hawk and spit; an itching sensation in the throat; தொண்டையில் உண்டாகுங் கறகறப்பு. 2. Pungent substance, that which causes irritation in the throat; காறும்பொருள். 3. See காறற்கொட்டி. (மலை.)

காறல்[2] kāṟal, *n.* cf. காரை. A sea-fish, silvery, *Equula fasciata*; கடல்மீன்வகை.

காறற்கத்தரி kāṟaṟ-kattari, *n.* <காறல்[1]+. Brinjal, m. sh., *Solanum melongena*; கத்தரி வகை.

காறற்கொட்டி kāṟaṟ-koṭṭi, *n.* <id.+. cf. காணைக்கொட்டி. A medicinal plant, *Arum minutum*; ஒருவகை மருந்துச்செடி. (மலை.)

காறாக்கருணை kāṟā-k-karuṇai, *n.* <காறு-+. 1. Tuberous-rooted herb, *Amorphophattus campanulatus*; சேனைச்செடி. (K. R.) 2. Tahiti arrowroot, *Tacca pinnatifida*; சேனைச்செடி வகை. (பதார்த்த. 416.)

காறாப்பி-த்தல் kāṟāppi-, *v. intr.* <id. See காறியுமிழ்-. (J.)

காறியுமிழ்-தல் kāṟi-y-umiḻ-, *v. intr.* <id. + உமிழ்-. To hawk and spit; காறித்துப்புதல்.

காறு[1]**-தல்** kāṟu-, 5 *v. intr.* [K. M. *kāṟu*.] 1. To taste bitter, musty or rancid, as stale food; காறற்சுவையாதல். 2. To hawk, bring up phlegm; கோழையை மிடற்றினின்று கொணர முயலுதல். 3. To be blackened; கறுத்தல். *காறு கண்டத்தர்* (தேவா. 1088, 3). 4. To harbour revenge; வைரங்கொள்ளுதல். *காறின வுள்ள சோவ* (கம்பரா. இராவணன்கள. 20).

காறு[2] kāṟu, *n.* 1. Limit, point, measure, or extent of time, often used as an adverbial suffix; காலவளவு. *அன்னைசொற்காறும் . . . ஆண்டு போய்முடிந்த* (கம்பரா. மீட்சி. 140). 2. Ploughshare; கொழு. 3. Bar; சலாகை. *வெள்ளிக்காறு.*

காறுகருணை kāṟu-karuṇai, *n.* <காறு-+. Elephant-yam, *Typhonium orixense*; கருணைக்கிழங்கு. (பதார்த்த. 415.)

காறுபாறாயிரு-த்தல் kāṟu-pāṟāy-iru-, *v. intr.* <U. *kārbār* + ஆ-+. To keep a strict eye, as upon a person; கவனிப்பாயிருத்தல். (W.)

காறுபாறு kāṟu-pāṟu, *n.* <id. Superintendence, management. See கார்பார். (W.)

காறுபாறுபடி-த்தல் kāṟu-pāṟu-paṭi-, *v. intr.* <id.+. To learn how to manage business; காரிய நிர்வாகஞ்செய்யப் பழகுதல். (W.)

காறுவடி-த்தல் kāṟu-vaṭi-, *v. tr.* <காறு + வடி-. To sharpen the coulter of a ploughshare; கொழுமுனை தீட்டுதல். (W.)

காறை kāṟai, *n.* prob. காறு. 1. Gold or silver collar, necklet for women and children; பெண்களும் குழந்தைகளும் கழுத்தில் அணிந்துகொள்ளும் ஒரு வகை அணி. *கழுத்தினிற் காறையொடும் . . . பொலிந்த விருடிகேசன்* (திவ். பெரியாழ். 1, 8, 3). 2. Iron rings round the hub of a cart-wheel; வண்டிக்குடத்தைச் சுற்றியிடும் இருப்புவளையம். *Loc.* 3. Cart; வண்டி. *காறை முரிபோருக்குக் காப்பிட வேணுமிறே* (திவ். திருப்பா. 24, ஆறா). 4. Mustiness; mould; பூஞ்சாளம். 5. A blade of grass or straw; வைக்கோல் முதலியவற்றின் தாள். *Loc.*

காறைக்குட்டி kāṟai-k-kuṭṭi, *n.* A sea-fish, pale dull red, attaining 1 ft. in length *Scolopsis vosmeri*; ஒருவகைக் கடல்மீன்.

காறையெலும்பு kāṟai-y-elumpu, *n.* <காறை+. Collar bone, clavicle; கழுத்தெலும்பு.

கான்[1] kāṉ, *part.* A particle used to facilitate the pronunciation of letters in Tamil, as in அஃகான்; எழுத்துச் சாரியைகளில் ஒன்று. (தொல். எழுத். 134.)

கான்[2] kāṉ, *n.* prob. கால்[1]. (J.) 1. Gutter; சலதாரை. 2. Channel; வாய்க்கால். 3. Cabin in a ship, hold; மரக்கலத்தின் அறை.

கான்[3] kāṉ, *n.* 1. cf. *kānana*. Jungle; காடு. (திவா.) 2. Smell, odour; வாசனை. *கான் பொழில்* (மதுரைக். 337). 3. Flower, blossom; பூ. *கான்முகம் புதைத்த தெண்ணீர்* (சீவக. 2415).

கான்சாகிப் kāṉ-cākip, *n.* <U. *khān* + *sāhib*. A title of honour bestowed on distinguished Muhammadans; முகம்மதியர்க்கு அரசாங்கத்தார் கொடுக்கும் பட்டப்பெயர்களுள் ஒன்று.

கான்பகதூர் kāṉ-pakatūr, *n.* <id. + Pkt. *bahādūra*. A title of honour, higher than *kāṉ-cākib*, bestowed on distinguished Muhammadans; முகம்மதியர்க்கு அரசாங்கத்தார் கொடுக்கும் உயர்தரப் பட்டப்பெயர்களுள் ஒன்று.

கான்படுதிரவியம் kāṉ-paṭu-tiraviyam, *n.* <கான்[3] + படு-+. Products of the forest, viz., அரக்கு, இறால், தேன், மயிற்பீலி, நாவி; காட்டில் உண்டாகும் அரும்பொருள்கள். (பிங்.)

கான்புலி kāṉ-puli, *n.* <id.+. Wild cat; காட்டுப்பூனை. (பிங்.)

கான்பூனை kāṉ-pūṉai, *n.* <id.+. See கான்புலி. (பிங்.)

கான்மரம் kāṉ-maram, *n.* < கால்[1] +. Banyan tree, as having branches which root themselves over great extent. See ஆல்[1]. (திவா.)

கான்மா kāṉ-mā, *n.* < கான்[3] +. Wild boar; காட்டுப்பன்றி. (W.)

கான்மாறு-தல் kāṉ-māṟu-, *v. intr.* < கால்[5] +. To pass way, disappear, as the rays of the sun; கழிந்துபோதல். *சுடர் கான்மாறிய செவ்வி நோக்கி* (சிறுபாண். 171).

கான்மிகம் kāṉmikam, *n.* < *kārmika*. See கான்மியம். (சி. சி. 2, 39, சிவாக்.)

கான்மியம் kāṉmiyam, *n.* < *kārmya*. (Šaiva.) One of the three eternal obstructive principles which creates bondage for the soul as a result of good and evil deeds; மும்மலத்துள் ஒன்றாய் அநாதியாயுள்ள கன்மமலம். (சி. சி. 2, 39, ஞானப்.)

கான்மிரம் kāṉmiram, *n.* < *Kāšmīra*. Kashmir. See காசுமீரம். *இப்போ தணிகான்மிரநாட்டில்* (திருவிளை. கல்லானை. 7).

கான்முரி-தல் kāṉ-muri-, *v. intr.* < கால்[5] + To be utterly ruined, as breaking the leg; அடியோடு கெடுதல். *பேதையான் வீழ்வானேற் கான் முரியும்* (நான்மணி. 74).

கான்முளை kāṉ-muḷai, *n.* < கால்[1] +. Son, child, as offshoot of the family; மகன். *பின்னோர்க் கான்முளை மன்னுத விலரே* (ஞானா. 21, 12).

கான்மோதிரம் kāṉ-mōtiram, *n.* < id. +. Ring usually worn on the second toe; கால் விரலணிகளுள் ஒன்று. (சிலப். 6, 83, உரை.)

கான்யாறு kāṉ-yāṟu, *n.* < கான்[3] +. River in a sylvan tract; முல்லைநிலத்துள்ள யாறு. *விரவுமல ரணிந்த வேனிற் கான்யாற்று* (ஐங்குறு. 367).

கான்றல் kāṉṟal, *n.* < கால்-. 1. Vomiting; வாந்திசெய்கை. (திவா.) 2. Coughing and ejecting phlegm; இருமிக் கோழைதுப்புகை. *வெண்ணரை பொரக்கான்று* (வேதாரணி. வீரசேன. 24).

கான்றியம் kāṉṟiyam, *n.* prob. காந்து-. Heat; உஷ்ணம். (W.)

கான்றை kāṉṟai, *n.* A kind of tree; மரவகை. *கான்றையுஞ் சூரையுங் கள்ளியு மடர்ந்து* (மணி. 6, 81).

கானக்கல் kāṉa-k-kal, *n.* < கானம்[3] +. See கானகக்கல். (சங். அக.)

கானக்குதிரை kāṉa-k-kutirai, *n.* < id. +. 1. Yak, *Bos grunniens;* காட்டுமான்வகை. (பிங்.) 2. Wild horse; காட்டுக்குதிரை. (W.)

கானக்குறத்திமுலைப்பால் kāṉa-k-kuṟatti-mulai-p-pāl, *n.* < id. +. Honey; தேன். (W.)

கானக்கூபரம் kāṉa-k-kūparam, *n.* A kind of emerald. See நாகப்பச்சை. (யாழ். அக.)

கானக்கைதை kāṉa-k-kaitai, *n.* < கானம்[3] +. Travancore lancewood, l. tr., *Sageraea dalzelli;* ஒருவகைப் பெருமரம். *Kāṭar.*

கானக்கோழி kāṉa-k-kōḻi, *n.* < id. +. Grey jungle fowl, *Gallus soneratii;* காட்டுக்கோழி. *கானக்கோழியு நீர்நிறக் காக்கையும்* (சிலப். 10, 116).

கானகக்கல் kāṉaka-k-kal, *n.* < கானகம்[1] + கல். A kind of metallic ore; கரும்புள்ளிக்கல். (W.)

கானகக்கூத்து kāṉaka-k-kūttu, *n.* < id. +. A kind of dancing; கூத்துவகை. *கானகக்கூத்துங் கழைக்கூத்தும் ஆடுபவராகச் சாதிவரையறையிலராதலின்* (தொல். பொ. 91, உரை).

கானகச்சங்கம் kāṉaka-c-caṅkam, *n.* < id. + prob. *šaṅkha*. A kind of beetle. See நாகரவண்டு. (யாழ். அக.)

கானகத்தட்டான் kāṉaka-t-taṭṭāṉ, *n.* < id. +. Tawny leech; செவ்வட்டைவகை. (யாழ். அக.)

கானகத்தும்பி kāṉaka-t-tumpi, *n.* < id. +. A kind of black beetle; கருவண்டுவகை. (W.)

கானகதூமம் kāṉaka-tūmam, *n.* A mineral poison; கற்பாஷாணம். (W.)

கானகநாடன் kāṉaka-nāṭaṉ, *n.* < கானகம்[1] +. 1. Chief of a sylvan tract; முல்லைநிலத் தலைவன். (திவா.) 2. Chief of a mountain tract; குறிஞ்சிநிலத் தலைவன். *கானகநாடன் வரவும்* (ஐங்குறு. 217).

கானகப்பச்சை kāṉaka-p-paccai, *n.* < id. +. A kind of emerald; ஒருவகைப் பச்சைமணி. (W.)

கானகம்[1] kāṉ-akam, *n.* < கான்[3] + அகம். 1. cf. *kānana*. Forest, wood; காடு. *கானகத்தே நடக்குந் திருவடி* (திருவாச. 40, 8). 2. Black cumin. See கருஞ்சீரகம். (மலை.)

கானகம்[2] kāṉakam, *n.* < கால்[1] + *nakha*. Toe-nail; காலின் நகம். (W.)

கானகுப்பிசம் kāṉa-kuppicam, *n.* < *Kānya-kubja*. Kanouj, one of *pañca-kauṭam*, q.v.; பஞ்ச கௌடத்துள் ஒன்றாகிய கானியகுப்ஜ நாடு. (சங். அக.)

கானங்கோழி kāṉaṅ-kōḻi, *n.* < கானம்[3] +. 1. See கானக்கோழி. (இறை. 1, 18.) 2. Bald coot, *Fulica atra;* வழுக்கைத்தலையையுடைய புள்வகை. (W.)

கானசரம் kāṉa-caram, *n.* < id. + *šara*. Kaus, a large and coarse grass. See நாணல். (பிங்.)

கானடா kāṉaṭā, *n.* A musical mode; ஓர் இராகம்.

கானத்தேறு kāṉa-t-tēṟu, *n.* <கானம்[3]+தேறு. Turmeric, *Curcuma longa*; மஞ்சள். (மலை.)

கானநாடன் kāṉa-nāṭaṉ, *n.* <id.+. Chief of a sylvan tract; முல்லைநிலத்தலைவன். (சூடா.)

கானப்படம் kāṉa-p-paṭam, *n.* <id.+*paṭa.* 1. Shield adorned with the picture of a forest; காடெழுதின கேடயம். *கானப்படமுங் காழூன்று கடிகையும்* (சிலப். 14, 173). 2. Wooden frame with figures of elephant, lion, etc. painted thereon; யானைசிங்கமுதலிய சித்திரமெழுதின கிடுகு. 3. Net with large meshes. See பெருவாரல்வலை. (சிலப். 14, 173, அரும்.)

கானப்பலா kāṉa-p-palā, *n.* <id.+. Jungle jack. See காட்டுப்பலா. (சங். அக.)

கானப்பேர் kāṉa-p-pēr, *n.* <id.+. Kāḷaiyārkōil, as a forest city in Ramnad District; காளையார்கோயில். *அருங்குறும் புடுத்த கானப்பேர்* (புறநா. 21, 6).

கானம்[1] kāṉam, *n.* cf. *yāna.* Car; தேர். (சூடா.)

கானம்[2] kāṉam, *n.* <*kānana.* 1. Woodland, grove, forest tract; காடு. (திவா.) 2. Flower-garden; நந்தவனம். *காவுங் கானமுங் கடிமல ரேந்த* (சிலப். 14, 114). 3. Fragrance, scent, odour; வாசனை. (திவா.) 4. Heap, crowd, collection, bevy; தொகுதி. *செங்காற் பறவைக் கானத்து* (மணி. 5, 129). 5. Ignorant, rude person; பேதை. (சூடா.)

கானம்[3] kāṉam, *n.* <*gāna.* 1. Song, musical composition; இசைப்பாட்டு. (திவா.) 2. Skylark; வானம்பாடி. (சூடா.)

கானமயிலை kāṉa-mayilai, *n.* <கானம்[2]+. Wild ramboutan, l.tr., *Nephelium stipulaceum*; மரவகை. (L.)

கானமல்லிகை kāṉa-mallikai, *n.* <id.+. Wild jasmine. See காட்டுமல்லிகை. (இலக். வி. 170, உரை.)

கானமௌவல் kāṉa-mauval, *n.* <id.+. Wild jasmine. See காட்டுமல்லிகை. (மலை.)

கானயூகம் kāṉa-yūkam, *n.* <id.+. Wild monkey; காட்டுக்குரங்கு. (W.)

கானரசம் kāṉa-racam, *n.* <*gāna*+. Sweet charm of music; இசைச்சுவை.

கானல்[1] kāṉal, *n.* <கான்[3]. 1. Scent, odour; வாசனை. *கானலங் காவும்* (பரிபா. 16, 17). 2. Sea-shore; கடற்கரை. *புலவுமணற் பசுங்கானல்* (பட்டினப். 94). 3. Grove or forest on the sea-shore; கடற்கரைச்சோலை. *கானலுங் கடலுங் கரையுந் தேர்வுழி* (மணி. 25, 196). 4. Salt marsh; கழி. (திவா.) 5. Salt-pan; உப்பளம். (பிங்.) 6. Saline soil; உவர் நிலம். (பிங்.) 7. Forest on the slope of a hill; மலைசார்ந்த சோலை. (திவா.)

கானல்[2] kāṉal, *n.* <கனல்-. 1. Heat; வெப்பம். *இங்கே கானலடிக்கிறது.* 2. Sun's ray; சூரிய கிரணம். (திவா.) 3. Light, lustre, brightness; ஒளி. *தேங்குகானற் கிளிச்சிறை* (இரகு. நகர. 67). 4. Mirage; பேய்த்தேர். (திவா.) 5. Gravelly soil; பரல் நிரம்பிய நிலம். (பிங்.)

கானல்வரி kāṉal-vari, *n.* <கானல்[1]+. Love-songs of fishermen, sung in coastal regions; கழிக்கரைப்பாடல். (சிலப். 6, 35, உரை.)

கானல்வீசு-தல் kāṉal-vīcu-, *v. intr.* <கானல்[2]+. 1. See கானலோடு-. (W.) 2. See கானலடி-.

கானலடி-த்தல் kāṉal-aṭi-, *v. intr.* <id.+. To have heat-wave, radiation of heat; வெக்கையடித்தல்.

கானலிந்திரன் kāṉal-intiraṉ, *n.* <id.+*indra.* Ceylon leadwort. See கொடுவேலி. (மலை.)

கானலோடு-தல் kāṉal-ōṭu-, *v. intr.* <id.+. To have the mirage float before the eyes; பேய்த்தேரோடுதல். (W.)

கானவன் kāṉavaṉ, *n.* <கானம்[2]. 1. Inhabitant of a mountain, forest or desert tract; குறிஞ்சி, முல்லை அல்லது பாலைநிலத்துமகன். (பிங்.) 2. Monkey; குரங்கு. (உரி. நி.)

கானவாரணம் kāṉa-vāraṇam, *n.* <id.+. Jungle fowl. See காட்டுக்கோழி. *கான வாரண மீனுங் காடாகி* (புறநா. 52, 16).

கானவாழை kāṉa-vāḻai, *n.* <id.+. Traveller's palm. See நீர்வாழை. (பிங்.)

கானவிருக்கம் kāṉa-virukkam, *n.* <id.+. Trumpet flower. See பாதிரி. (மலை.)

கானற்சலம் kāṉaṟ-calam, *n.* <கானல்[2]+. See கானனீர். (W.)

கானனம் kāṉaṉam, *n.* <*kānana.* Forest, woods, grove; காடு. (பிங்.)

கானனீர் kāṉaṉīr, *n.* <கானல்[2]+நீர். Mirage, as mistaken for a sheet of water; கானலில் தோன்றும் நீர்த்தோற்றம். (தாயு. பொருள்வ. 6.)

கானனுசாரி kāṉ-aṉucāri, *n.* prob. கான்[3]+*anusārin.* Indian sarsaparilla. See நன்னாரி. (மலை.)

கானா kānā, *n.* <Pkt. *kāna.* Tiller, handle of a rudder; சுக்கான்கைப்பிடி. (W.)

கானாங்கள்ளி kāṉāṅ-kaḷḷi, *n.* <கான்[3]+ஆம்+. Spiral five-tubercled spurge. See இலைக்கள்ளி. (சங். அக.)

கானாங்கீரை kāṉāṅ-kīrai, *n.* <id.+id.+. See கானாங்கோழை.

கானாங்கெளிறு kāṉāṅ-keḷiṟu, *n.* prob. id.+id.+. A fresh-water fish, *Macrones*; நன்னீரில்வாழும் மீன்வகை. (சங். அக.)

கானங்கெளுத்தி kāṉāṅ-keḷutti, *n.* prob. id. + id. +. Species of sea-fish (*a*) mackerel, greenish, attaining 10 in. in length, *Scomber microlepidotus*: (*b*) mackerel, greenish with light spots behind the eyes, attaining $8\frac{1}{2}$ in. in length, *Scomber brachysoma;* கடல்மீன்வகைகள்.

கானங்கோழி kāṉ-āṅ-kōḻi, *n.* <id. + id. +. 1. Jungle fowl. See காட்டுக்கோழி. (தொல். எழுத். 405, உரை.) 2. Turkey; வான்கோழி. (W.)

கானங்கோழை kāṉ-āṅ-kōḻai, *n.* <id. + id. + prob. கொழு-மை. 1. Calf's-grass, *Commelina communis;* கானவாழைவகை. (M. M.) 2. Common spiderwort, *Commelina bengalensis;* பூடுவகை. (W.)

கானங்கோனன் kāṉāṅkōṉāṉ, *n.* Want of method, confusion; குழப்பம். (W.)

கானத்தடி kāṉā-t-taṭi, *n.* <கானு +. See கானு. (W.)

கானமுசல் kāṉā-mucal, *n.* <கான்³ +. Jungle hare, stone-plover, swift like a hare, *Pedicnemus crepitans;* வேகமாய்ப்பறக்கும் பறவைவகை. (M. M.)

கானமுருங்கை kāṉā-muruṅkai, *n.* <id. +. Jungle moringa, senna-leaved French honeysuckle, l. sh., *Ormocarpum sennoides;* காட்டுமுருங்கை. (M.M. 518.)

கானவாழை kāṉ-ā-vāḻai, *n.* <id. +. See கானங்கோழை.

கானன் kāṉāṉ, *n.* A kind of creeper; ஒரு வகைக் கொடி. (இராசவைத்.)

கானிலம் kāṉilam, *n.* prob. கான்³ + perh. *anala.* Ceylon leadwort. See கொடுவேலி. (மலை.)

கானிலிந்திரன் kāṉil-intiraṉ, *n.* cf. கான லிந்திரன். See கானிலம். (மலை.)

கானீனன் kāṉīṉaṉ, *n.* <*kānīna.* 1. Son of an unmarried woman, as Vyāsa, one of 12 *puttiraṉ*, q.v.; கன்னிபெற்ற மகன். (திவா.) 2. Karṇa, son of Sūrya by Kunti, born during her maidenhood; கன்னன். (பிங்.)

கானுகோ kāṉu-kō, *n.* <U. *khānun* + *go.* Village or district officer who, under Muhammadan governments, recorded full details regarding landed property within his sphere; முகம்மதிய அரசாங்கத்தில் ஓர் உத்தியோகஸ்தன். (C. G.)

கானூன் kāṉūṉ, *n.* <U. *khānun.* [Pkt. *kānū.*] Rule, regulation, statute; சட்டம். (C.G.)

கானெள் kāṉ-eḷ, *n.* <கான்³ +. Ramtil. See காட்டெள். *Loc.*

கானெறி kāṉeṟi, *n.* <கால்³ + நெறி. Window, as passage for air; சாளரம். கானெறியாயினுனே (சீவக. 2291).

கானை¹ kāṉai, *n.* <கால்¹ + நோய். Foot disease in cattle; காலிற்காணும் மாட்டுநோய்வகை. *Loc.*

கானை² kāṉai, *n.* See கானப்பேர். கானையம் பதி யடைந்தார் (திருவாலவா. 27, 31).

காஜாமண்டிகை kājā-maṇṭikai, *n.* <U. *gajā* +. A kind of cake made of wheat and rice flour; கோதுமைமாவினாலும் அரிசிமாவினாலும் செய்யப்படும் ஒருவகைப் பணியாரம். (இந்துபாக. 326.)

காஜி kāji, *n.* <U. *qāzi.* See காசியார்.

காஜியார் kājiyār, *n.* <id. Muhammadan judge. See காசியார்.

காஷ்டம் kāṣṭam, *n.* <*kāṣṭha.* 1. Wood; கட்டை. 2. Firewood for cremation; ஈமவிறகு.

காஷ்டாக்கினி kāṣṭākkiṉi, *n.* <id. + *agni.* Fire produced from sticks by friction; கட்டையைக் கடைந்து உண்டாக்கும் தீ.

காஷ்டாசாரி kāṣṭācāri, *n.* <id. + *ācārya.* Carpenter; தச்சன்.

காஷ்டை¹ kāṣṭai, *n.* <*kāṣṭhā.* 1. A measure of time = $\frac{1}{30}$ *kalā;* ஒரு நுட்பமான காலவளவு. 2. Boundary, limit; எல்லை.

காஷ்டை² kāṣṭai, *n.* <*kāṅkṣā.* Desire; விருப்பம். *Colloq.*

காஷாயங்கொடு-த்தல் kāṣāyaṅ-koṭu-, *v. intr.* <*kāṣāya* +. To initiate one into the order of sanyāsis, as by giving him a cloth dyed brown-red; காவிவஸ்திரங்கொடுத்துச் சன்னியாசியாக்குதல்.

காஷாயம் kāṣāyam, *n.* <*kāṣāya.* Brown-red cloth of a sanyāsi; காவிவஸ்திரம்.

காஷாயம்வாங்கிக்கொள்(ளு)-தல் kāṣāyam-vāṅki-k-koḷ-, *v. intr.* <id. +. To be admitted to the order of sanyāsis; காவிவஸ்திரம் பெற்றுத் துறவியாதல்.

காஷாயமூட்டு-தல் kāṣāyam-ūṭṭu-, *v. intr.* <id. +. To dye a cloth with ochre; காவியேற்றுதல்.

காஸா kāsā, *adj.* <U. *khāsā.* Excellent, pure, good; முதல்தரமான.

கி

கி ki, The compound of க் and இ.

கிக்கிரி kikkiri, *n.* <*tittiri.* Kingfisher; மீன்கொத்திப்புள். (யாழ். அக.)

கிகிணி¹ kikiṇi, *n.* prob. *giri-karṇi.* Mussell-shell creeper. See காக்கணம். (திவா.)

கிகிணி[2] kikiṇi, *n.* King-crow; வலியன் என்னும் கரிக்குருவிப் புள். (பிங்.)

கிங்கரன் kiṅkaraṉ, *n.* <*kiṅkara*. Servant, attendant; ஏவலாள். *நமனுர் கிங்கரர்* (பதினொ. பொன்வண். 66).

கிங்கிணி kiṅkiṇi, *n.* <*kiṅkiṇī*. cf. கிண்கிணி. 1. Tinkling ornament for the ankle; பாத சதங்கை. (பிங்.) 2. Girdle of small bells; அரைச் சதங்கை. *மாணிக்கக் கிங்கிணி தன்னரை யாட* (திவ். பெரியாழ். 1, 8, 2). 3. A species of rattlewort, m. sh., *Crotalaria pulcherrima*; கிலுகிலுப்பை வகை.

கிங்கிலியன் kiṅkiliyaṉ, *n.* <*kiṅkara*. See கிங்கரன். (W.)

கிச்சடி kiccaṭi, *n.* <Mhr. *khicaḍī*. 1. [T. *kiccidi*.] A dainty made of rice and split pulse boiled together with ghee and spices; சித்திரான்னவகை. (கோயிலொ. 31.) 2. Curry prepared with fresh curds, coconut and green chillis; கறிவகை. 3. A kind of rice gruel for sick people and children; கூழ்வகை. (W.)

கிச்சலாட்டம் kiccalāṭṭam, *n.* Molestation; தொந்தரவு. (W.)

கிச்சாட்டம் kiccāṭṭam, *n.* See கிச்சலாட்டம். (W.)

கிச்சிலாட்டம் kiccilāṭṭam, *n.* See கிச்சலாட்டம். (W.)

கிச்சிலி kiccili, *n.* [T. *kiccili*.] 1. Sylhet orange, s. tr., *Citrus aurantium-nobilis-chrysocarpa*; கொழிஞ்சி. 2. Seville orange, m. tr., *Citrus vulgaris*; நாரத்தை. (மலை.) 3. Spiked garland flower. See கிச்சிலிக்கிழங்கு. (J.) 4. Long zedoary. See பூலாங்கிழங்கு. (தைலவ. தைல. 59.)

கிச்சிலிக்கரணை kiccili-k-karaṇai, *n.* <கிச்சிலி +. Lopez root. See காட்டுமிளகு. (L.)

கிச்சிலிக்கிழங்கு kiccili-k-kiḻaṅku, *n.* <id. +. Camphor zedoary, l. sh., *Hedychium coronarium*; வாசனைதரும் வேருள்ள செடிவகை. (தைலவ. தைல. 119, உரை.)

கிச்சிலிப்பனை kiccili-p-paṉai, *n.* Malayan sugar-palm, m. tr., *Arenga saccharifera*; குமுதிப் பனை. (L.)

கிச்சு kiccu, *n.* cf. *kṛśānu* [T. *ciccu*, K. *kiccu*.] Fire; நெருப்பு. *கிச்சிடை யிடுமெனக் கிளக்கின் றார்சிலர்* (கம்பரா. பிணிவீட். 3).

கிச்சுக்கிச்சுத்தம்பலம் kiccu-k-kiccu-t-tampalam, *n.* <கிச்சுக்கிச்சு onom. +. A child's play. See கிச்சுகிச்சுத்தாம்பாளம்.

கிச்சுக்கிச்சுப்பண்ணு-தல் kiccu-k-kiccu-p-paṇṇu-, *v. tr.* <id. +. See கிச்சுக்கிச்சுமூட்டு-.

கிச்சுக்கிச்சுமூட்டு-தல் kiccu-k-kiccu-mūṭṭu-, *v. tr.* <id. +. To tickle with a view to make one laugh; கூச்சமுண்டாகும்படி பிறர் அவயவங்களைத் தொடுதல். *Colloq.*

கிச்சுக்கிச்செனல் kiccu-k-kicceṉal, *n.* Onom. expr. signifying chirping, as lizards; ஓர் ஒலிக்குறிப்பு. (W.)

கிசம் kicam, *n.* <*kisala*. See கிசலயம். (W.)

கிசலம் kicalam, *n.* <*kisala*. See கிசலயம். (தைலவ. தைல. 50.)

கிசலயம் kicalayam, *n.* <*kisalaya*. Tender leaf, sprout; தளிர். *கிசலயம்புரை சீறடி* (கந்தபு. இரணியன்பு. 56).

கிசலை kicalai, *n.* <*kisala*. See கிசலயம். (W.)

கிசனி kicaṉi, *n.* Rising in flight from a branch, one of the movements of a bird; மரக்கிளையினின்றும் பறந்தெழுவதாகிய ஒருவகைப் பறவைக் கதி. (காசிக. திரிலோ. 6.)

கிசிமிசி kicimici, *n.* <E. Christmas. See கிறிஸ்மஸ். *Vul.*

கிசில் kicil, *n.* Tar, pitch; கீல். (W.)

கிசிற்கயிறு kiciṟ-kayiṟu, *n.* <கிசில் +. Tarred rope; தாரெண்ணெய் பூசின கயிறு. (W.)

கிசுகிசுத்தான் kicu-kicuttāṉ, *n.* Small paper-kite without a tail; வாலில்லாக்காற்றாடி. (J.)

கிசுகிசுப்பான் kicu-kicuppāṉ, *n.* A paper-kite with a tail; வாலுள்ள காற்றாடி. (J.)

கிசுகிசெனல் kicu-kiceṉal, *n.* Onom. expr. signifying hissing as a rocket, rustling as a starched garment when walking briskly; ஓர் ஒலிக்குறிப்பு.

கிசுமிசு kicumicu, *n.* <U. *kishmish*. Small seedless raisins, originally imported from Persia, *Sultana raisin*; விரையில்லாத் திராட்சைப்பழம்.

கிஞ்சபன்னி kiñca-paṉṉi, *n.* <*kīśa-parṇī*. A plant growing in hedges and thickets. See நாயுருவி. (மலை.)

கிஞ்சம்[1] kiñcam, <*kiñcit*. *n.* 1. Small quantity; சிறிது. (W.) 2. Smallness, littleness; சிறுமை. (சங். அக.)

கிஞ்சம்[2] kiñcam, *n.* <*ciñcā*. 1. Tamarind. See புளி. (W.) 2. Indian hog-plum, l. tr., *Spondias mangifera*; புளிமா. (மலை.)

கிஞ்சல் kiñcal, *n.* prob. *kuñc*. Limit, bounds; சுருக்கம். *கிஞ்சலிலா வஞ்சிடத்தும்* (ஒழிவி. பொதுவி. 33).

கிஞ்சன் kiñcaṉ, *n.* See கிஞ்சனன். (சங். அக.)

கிஞ்சனன் kiñcaṉaṉ, *n.* < *a-kiñcana.* Poor, destitute man, as having very little; ஏழை. (நிகண்டு.)

கிஞ்சி kiñci, *n.* Margosa tree. See வேம்பு. (மலை.)

கிஞ்சிக்கியத்துவம் kiñcikkiyattuvam, *n.* < *kiñcij-jña-tva.* See கிஞ்சிஞ்ஞத்துவம். (W.)

கிஞ்சிக்கினம் kiñcikkiṉam, *n.* < *kiñcij-jñya.* See கிஞ்சிஞ்ஞம். (W.)

கிஞ்சிக்கினன் kiñcikkiṉaṉ, *n.* < *kiñcij-jña.* See கிஞ்சிஞ்ஞன். (W.)

கிஞ்சிஞ்ஞத்துவம் kiñciññattuvam, *n.* < *kiñcij-jña-tva.* State of being limited in knowledge, opp. to *carvaññattuvam;* சிற்றறிவுடைமை. (சி. சி. 4, 21, ஞானப்.)

கிஞ்சிஞ்ஞம் kiñciññam, *n.* < *kiñcij-jña.* Limited knowledge, opp. to *carvaññam;* சிற்றுணர்வு. (W.)

கிஞ்சிஞ்ஞன் kiñciññaṉ, *n.* < id. 1. One having limited knowledge, opp. to *carvaññaṉ;* சிற்றறிவினன். 2. *Āṉmā,* the individual soul; சீவான்மா.

கிஞ்சித்தாகப்பேசு-தல் kiñcittāka-p-pē-cu-, *v. tr.* < *kiñ-cit* + ஆ- +. To speak in disparagement of; இழித்துக்கூறுதல். (W.)

கிஞ்சித்து[1] kiñcittu, < *kiñ-cit. adv.* In small quantity, a little; கொஞ்சமாக.—*n.* Anything narrow, limited and mean, smallness; சிறுமை. (W.)

கிஞ்சித்து[2] kiñcittu, *n.* cf. *ciñcā.* Hog-plum. See புளிமா. (மலை.)

கிஞ்சித்தேனும் kiñcittēṉum, *adv.* < *kiñ-cit* + ஏனும். Even a little; சிறிதும். கிஞ்சித்தேனும் இரக்கமில்லாதவன்.

கிஞ்சிதம் kiñcitam, *adv.* < id. In small quantity, a little. See கிஞ்சித்து[1]. (W.)

கிஞ்சில் kiñcil, < id. [M. *kiñcil.*] *adv.* 1. Very little; கொஞ்சம். ஆமதை கிஞ்சிலுங் கிடையாது (ஞானவா. வைராக். 74).—*adj.* A little; சிறிதான. மிஞ்சிய தலமுங் கிஞ்சில் விருப்புடைத் தலமேயாகும் (திருவாலவா. 20, 10).

கிஞ்சு kiñcu, *adj.* < *kiñ-cit.* A little; சிறிதான. கிஞ்சளவு கேட்கலுமாம் (ஒழிவி. பொதுவி. 24).

கிஞ்சுகம் kiñcukam, *n.* < *kiṃśuka.* 1. Coral tree of the Western Ghats, m. tr., *Erythrina stricta;* முண்முருக்கு. (பிங்.) 2. Indian coral tree, m. tr., *Erythrina indica;* கலியாண முருக்குவகை. 3. Palas tree. See பலாசு. (L.) 4. Red, crimson; சிவப்பு. (பிங்.)

கிஞ்சுகி kiñcuki, *n.* < id. Palas tree. See பலாசு. (தைலவ. தைல. 48.)

கிஞ்ஞா kiññā, *n.* A kind of shrub with small evergreen leaf; செடிவகை. (J.)

கிட்கிந்தாபுரி kiṭkintā-puri, *n.* < *Kiṣkindhā* +. Kiṣkindhā, an ancient town on Mt. Kiṣkindhā, the capital of Vāli and Sugrīva, the monkey chiefs of Rāmayana fame; வாலி சுக்கிரீவர்களுடைய இராசதானி.

கிட்கிந்தை kiṭkintai, *n.* < id. 1. A mountain in the north of Mysore; மைசூர்க்கு வடபாலுள்ள மலை. 2. See கிட்கிந்தாபுரி.

கிட்ட kiṭṭa, *adv.* < கிட்டு-. Near, close by; அருகே. கிட்ட வாவென (கைவல்ய. தத். 87).

கிட்டக்கல் kiṭṭa-k-kal, *n.* < கிட்டம்[2] +. 1. Iron dross; இரும்புத்துரிசு. (W.) 2. Overburnt brick; கருகவெந்துள்ள செங்கல்.

கிட்டங்கி kiṭṭaṅki, *n.* < Malay. *gaḍong.* [T. K. *giḍḍangi.*] Storehouse, warehouse; பண்டசாலை. *Loc.*

கிட்டடி kiṭṭaṭi, *n.* < கிட்ட + அடி[3]. Proximity, vicinity; சமீபம். (W.)

கிட்டத்தட்ட kiṭṭa-t-taṭṭa, *adv.* Redupl. of கிட்ட. Nearly, about; ஏறக்குறைய.

கிட்டப்பார்வை kiṭṭa-p-pārvai, *n.* < கிட்டு- +. Shortsightedness, *myopia,* opp. to *tūra-p-pārvai;* சமீபத்திலுள்ளதுமட்டுந்தெரியும் பார்வைக் குற்றம்.

கிட்டப்பிடி-த்தல் kiṭṭa-p-piṭi-, *v. intr.* < id. +. (W.) 1. To keep near, as a ship to the shore; சமீபமாயிருத்தல். 2. To get near the end, as an undertaking; வேலை முடிவுக்குவருதல்.

கிட்டம்[1] kiṭṭam, *n.* < id. Nearness, vicinity; சமீபம். *Colloq.*

கிட்டம்[2] kiṭṭam, *n.* < *kiṭṭa.* 1. Ore, lump of metal; உலோகக்கட்டி. இரண்டுகிட்டஞ் சேரக் கிடக்க (ஈடு, 5, 1, ப்ர.). 2. Dross or crust upon a precious stone; கடையப்படாத இரத்தினத்திலுள்ள கரடு. (ஸ்ரீவசன. பக். 79, ஆய். வ்யா.) 3. Dross, scoria, scum of metal; இரும்புமுதலியவற்றின் துரு. (பதார்த்த. 1269.) 4. Sediment, lees, residuum; வண்டல். (W.) 5. Coating, crust; சேறுமுதலியவற்றின் ஏடு. (W.) 6. State of being dry and hard; இறுக்கம். (W.)

கிட்டம்பிடி-த்தல் kiṭṭam-piṭi-, *v. intr.* < கிட்டம்[2] +. To be dried, as the surface of a garden-bed; உலர்தல். (W.)

கிட்டமுட்ட kiṭṭa-muṭṭa, *adv.* < கிட்டு- + முட்டு-. 1. Nearly, about; ஏறக்குறைய. அதன் விலை கிட்டமுட்ட எவ்வளவு தொகையாகும்? 2. Near, close by, in the near past; சமீபத்தில். அவனைக் கிட்டமுட்டக் காணோம்.

கிட்டலர் kiṭṭalar, *n.* <id. + அல் neg. +. Enemies, foes; பகைவர்.

கிட்டாக்கனிக்கொட்டை kiṭṭā-k-kaṉi-k-koṭṭai, *n.* < id. + ஆ neg. + கனி +. Marking-nut tree, *Semecarpus anacardium;* சேராங்கொட்டை. (தைலவ. தைல. 80.)

கிட்டார் kiṭṭār, *n.* <id. + id. +. Foes; பகைவர்.

கிட்டாலம் kiṭṭālam, *n.* <*kiṭṭāra.* A kind of copper vessel; செப்புப்பாத்திர வகை. (சங். அக.)

கிட்டி[1] kiṭṭi, *n.* <கிட்டு-. [K. M. *kiṭṭi.*] 1. Clamps used to press hands, feet, etc. in torture, to castrate bulls, to press out medicinal oils, etc.; இறுக்குங்கோல். *கையுந் தாள்களுங் கிட்டி யார்த்தார்* (திருவிளை. நரிபரி. 9). 2. See கவரிறுக்கி. 3. Iron cramp; கொல்லர்கருவிவகை. (C. E. M.) 4. Pegs that confine the bullock's neck to the ends of the yoke in drawing carts, etc.; நுகமுளை. (சங். அக.) 5. Cat in the game of tip-cat; பிள்ளைகளின் விளையாட்டுக்கருவியுள் ஒன்று. 6. Cymbal; கைத்தாளம். (திவா.) 7. Clepsydra; நாழிகை வட்டில். (W.) 8. Indian shrubby copper leaf. See சின்னி. *கிட்டிக்கிழங்காற் கிளர்தீபன முண்டாம்* (பதார்த்த. 435).

கிட்டி[2] kiṭṭi, *n.* <*ghṛṣṭi.* Hog; பன்றி. (சூடா.)

கிட்டி[3] kiṭṭi, *n.* <*gṛṣṭi.* Young cow that has calved once; தலையீற்றுப் பசு. (பிங்.)

கிட்டிக்கயிறு kiṭṭi-k-kayiṟu, *n.* <கிட்டி[1] +. Yoke ropes, bands; பூட்டுக்கயிறு. (யாழ். அக.)

கிட்டிக்கலப்பை kiṭṭi-k-kalappai, *n.* <id. +. Small kind of plough worn out by use and age; தேய்ந்த சிறுகலப்பை. (W.)

கிட்டிக்கொள்(ளு)-தல் kiṭṭi-k-koḷ-, *v.* <கிட்டு- +. *intr.* To approach, draw near, as an evil hour; நெருங்கிவிடுதல்.—*tr.* To attack, as a robber; நெருங்கி யெதிர்த்தல். (W.)

கிட்டிக்கோல் kiṭṭi-k-kōl, *n.* <கிட்டி[1] +. [M. *kiṭṭikkōl.*] See கிட்டி[1], 1, 3.

கிட்டிகட்டு-தல் kiṭṭi-kaṭṭu-, *v. tr.* <id. +. 1. To torture with *kiṭṭi;* இறுக்குகோலிட்டு வருத்துதல். 2. To press hard, as for a debt; to screw; நெருக்கி வருத்துதல்.

கிட்டிணம் kiṭṭiṇam, *n.* <*kṛṣṇa.* Blackness; கறுப்பு. (சங். அக.)

கிட்டிணன் kiṭṭiṇaṉ, *n.* <*Kṛṣṇa.* Kṛṣṇa. See கிருஷ்ணன். (W.)

கிட்டிப்பந்து kiṭṭi-p-pantu, *n.* <கிட்டி[1] +. A boy's game, a kind of rounders with bat and ball; சிறுவர் ஆடும் பந்து விளையாட்டுவகை. (G. Tj. D. 65.)

கிட்டிப்புள் kiṭṭi-p-puḷ, *n.* <id. +. 1. A short piece of wood tapering to a point at each end, and made to rise from the ground when tipped or struck at one end with a stick, and while in the air knocked as far away as possible, in the game of tip-cat; ஒருவிளையாட்டுக்கருவி. 2. The game of tip-cat; கிட்டிப்புள்ளால் ஆடும் விளையாட்டு.

கிட்டிப்புள்ளி kiṭṭi-p-puḷḷi, *n.* <id. +. See கிட்டிப்புள்.

கிட்டிபூட்டு-தல் kiṭṭi-pūṭṭu-, *v.* <id. +. *tr.* To torture with clamps; கிட்டிக்கோல் பூட்டி வருத்துதல்.—*tr.* & *intr.* To fix the yoke on the bullock's neck; எருதைப்பூட்ட நுகமுளைபோடுதல்.

கிட்டிமுட்டி kiṭṭi-muṭṭi, *adv.* < கிட்டு- + முட்டு-. Closely, pressingly near; மிகநெருக்கமாக. *அவன் கிட்டிமுட்டிவந்தால் வட்டியைத்தள்ளிவிட்டு முதலைமாத்திரம் வாங்குவேன்.* *Colloq.*

கிட்டியடி-த்தல் kiṭṭi-y-aṭi-, *v. intr.* < கிட்டி[1] +. 1. To play tip-cat; கிட்டிவிளையாடுதல். 2. To misspend or waste time, as in play; வீணிற்போதுபோக்குதல். *Loc.* 3. See கிட்டிபூட்டு-. *Tinn.*

கிட்டியிழைப்புளி kiṭṭi-y-iḻaippuḷi, *n.* <id. +. Joiner's plane; தச்சுக்கருவியாகிய இழைப்புளி வகை. (C. E. M.)

கிட்டிரம் kiṭṭiram, *n.* cf. *śva-daṃṣṭrā.* A small prostrate herb. See நெருஞ்சி. (மலை.)

கிட்டினர் kiṭṭiṉar, *n.* <கிட்டு-. Relations, friends, associates, allies; உறவினர். (சங். அக.)

கிட்டினவுறவு kiṭṭiṉa-v-uṟavu, *n.* <id. +. Near relation, close relationship, opp. to *tūra-v-uṟavu;* நெருங்கிய சுற்றம்.

கிட்டினன் kiṭṭiṉaṉ, *n.* <*kṛṣṇā.* Long pepper. See திப்பலி. (மலை.)

கிட்டு-தல் kiṭṭu-, *5 v.* [K. M. *kiṭṭu.*] *intr.* 1. To draw near, in time or place; சமீபமாதல். *தீவினை கிட்டிய போதினில்* (கம்பரா. விபீடண. 67). 2. To be on friendly terms with, closely related to; உறவு நெருங்குதல். 3. To be attained, accomplished; கிடைத்தல். *கிட்டாதாயின் வெட்டென மற* (கொன்றைவே.). 4. To be clenched, as the teeth in lock jaw; பல்முதலியன ஒன்றுடனொன்று பூண்டு இறுகுதல்.—*tr.* 1. [T. *kiṭṭu.*] To approach; அணுகுதல். *அவ்வூரைக்கிட்டினான்.* 2. To attack, meet; எதிர்த்தல். 3. To tie, bind; கட்டுதல். (சூடா.)

கிட்டுமானம் kiṭṭu-māṉam, *n.* <கிட்டு- +. Nearness, proximity, vicinity; சமீபம். (W.)

கிட[1]**-த்தல்** kiṭa-, *12 v.* [M. *kiṭa.*] *intr.* 1. To lie, lie down, as in sleep, in inactivity; படுத்

தல். *மால் யாழ்கேளாக் கிடந்தான்போல்* (கலித். 123). 2. To sleep, rest, repose; உறங்குதல். *தாவி னல் லிசைகருதிய கிடந்தோர்க்கு* (தொல். பொ. 91). 3. To dwell, abide, haunt; தங்குதல். *புலிகிடந்த தூறு* (வாக்குண். 21). 4. To be bed-ridden, as from disease; நோயால் படுத்தபடுக்கையாதல். *அவர் நிரம் பக்கிடக்கிறார்.* 5. To be unworthy of any attention; அலட்சியஞ்செய்து ஒதுக்கற்குரியதாதல். *அவன் கிடக்கிறான், நீ போ.*—*aux.* To be possible, appropriate; கூடியதாதல். *கொந்தார் செயக்கிடந்த தில்* (திரிகடு. 67).

கிட[2] kiṭa, *part.* A present tense sign, as in உண்ணாநின்றான்; ஒரு நிகழ்காலவிடைநிலை. (தொல். சொல். 204, உரை.)

கிடக்க kiṭakka, *imp. v. intr.* <கிட- See கிடக்கட்டும்.

கிடக்கட்டும் kiṭakkaṭṭum, *imp. v. intr.* <id. Never mind, let it lie; 'அதைத்தள்ளு' என்னும் அலட்சியக் குறிப்பு.

கிடக்கிடு kiṭakkiṭu, *imp. v. intr.* <id.+ இடு-. See கிடக்கட்டும். *இச்சேனை கிடக்கிடு* (கம்பரா. குகப். 20).

கிடக்கிடும் kiṭakkiṭum, *imp. v. intr.* <id.+. See கிடக்கட்டும். *உம்முடைய மேன்மை கிடக்கிடும்* (திவ். பெரியதி. 8, 2, 1. வ்யா.).

கிடக்கை kiṭakkai, *n.* <id. 1. Recumbent posture; படுத்திருக்குநிலை. *கிடந்ததோர் கிடக்கை கண் டும்* (திவ். திருமாலை, 23). 2. Bed, couch; படுக்கும் அணை. (பிங்.) 3. Sleeping place; படுக்குமிடம். *மணைபாய் கிடக்கையோ டிவ்வைந்தும்* (ஆசாரக். 55). 4. Earth; பூமி. (பிங்.) 5. Broad expanse; long stretch of land; பரப்பு. *முருகமர் பூமுரண் கிடக்கை* (பட்டினப். 37). 6. Place; இடம். *கரிபுறக்கிடக்கையும்* (சிலப். 11, 77). 7. Subject-matter, contents; உள்ளுறுபொருள். *உரைநூற் கிடக்கை* (மணி. 2, 31).

கிடகு kiṭaku, *n.* <*kiṣku*. Cubit of 24 finger-breadths; இருபத்துநான்கு விரல்கொண்ட முழம். (சர்வா. சிற். 27.)

கிடங்கர் kiṭaṅkar, *n.* <கிடங்கு[1]. 1. Moat; அகழி. 2. Ocean; கடல். *திரைக்கிடங்கர்சூழ் குவலயப்பரப்பில்* (உபதேசகா. விபூதி. 35).

கிடங்காடு-தல் kiṭaṅkāṭu-, *v. intr.* <id.+. To go round the corpse on the pyre just before cremation; மயானத்தில் பிணத்தைச்சுற்றிவருதல். *Loc.*

கிடங்கு[1] kiṭaṅku, *n.* <கிட-. 1. [M. *kiḍaṅṅu.*] Ditch, trench, moat; அகழ். *பூங்கிடங்கி னீள்கோவல்* (திவ். இயற். முதற். 77). 2. Pond, tank; குளம். (சூடா.) 3. Pit, depression; குழி. (W.)

கிடங்கு[2] kiṭaṅku, *n.* <Malay. *gaḍong.* [T. *giḍḍaṅgi.*] Warehouse, storehouse; பண்டசாலை. *அரிசிக்கிடங்கு.* (அக. நி.)

கிடங்கு[3] kiṭaṅku, *n.* [M. *kiḍaṅṅu.*] Prison, jail, dungeon; சிறைச்சாலை. (W.)

கிடத்தல் kiṭattal, *n.* <கிட-. Recumbent posture; படுத்திருக்கும் ஆசனவகை. (சிலப். 14, 11, உரை.)

கிடத்தியள-த்தல் kiṭatti-y-aḷa-, *v. tr.* <கிடத்து-+. To measure a heap of grain by diving the measure deep into it; தானியமுதலிய வற்றில் அளவுகருவியைப் பாய்ச்சியளத்தல். (W.)

கிடத்து-தல் kiṭattu-, *5 v. tr.* Caus. of கிட-. [M. *kiṭattu.*] To place in a recumbent posture, lay to rest, stretch oneself on the ground; கிடக்கச்செய்தல். *தருப்பையிற் கிடத்தி* (மணி. 23, 13).

கிடந்தகிடையாய் kiṭanta-kiṭai-y-āy, *adv.* <id.+. Bed-ridden, as from a disease; வியாதியால் படுத்தபடுக்கையாய்.

கிடந்ததிருக்கோலம் kiṭanta-tiru-k-kōlam, *n.* <id.+. Recumbent posture of Viṣṇu, one of three *tiru-k-kōlam*, q. v.; திருமால் பள்ளிகொண்ட நிலை.

கிடந்துருளி kiṭanturuḷi, *n.* <கிடந்து+ உருள்-. Pulley for drawing water; நீரிறைக்கும் இராட்டின உருளை. *Loc.*

கிடப்பு[1] kiṭappu, *n.* <கிட-. [M. *kiṭappu.*] 1. Resting, sleeping; கிடந்து துயில்கை. *மக்கள் கிடப்பிடம்.* (திவா.) 2. Circumstance, condition, significance; நிலை. *ஈசன் . . . பால்கொடுத்த கிடப் பறிவார்* (திருவாச. 43, 6). 3. Stationary condition, standstill; மேற்போகாத நிலைமை. *காரியத்தைக் கிடப்பிலே போட்டுவிட்டான்.*

கிடப்பு[2]**-தல்** kiṭappu-, *5 v. tr.* Caus. of கிட-. To cause to lie down, lay down; கிடத்துதல். *திறம்புரி பசும்புற் பரப்பினர் கிடப்பி* (புறநா. 93).

கிடப்புத்தொகை kiṭappu-t-tokai, *n.* <கிட-+. Cash reserve; இருப்புத்தொகை.

கிடவாக்கிடை kiṭavā-k-kiṭai, *n.* <id.+ ஆ neg.+. 1. Unusual hardship, as from hunger, poverty, etc.; பெருந்துன்பநிலை. (W.) 2. Extreme illness; நோய்முற்றிப் படுக்கையிலிருக்கை.

கிடா kiṭā, *n.* <கடா[2]. [M. *kiṭāvu.*] Buffalo, bull, ram. See கடா[2]. (சிலப். 15, 98, உரை.)

கிடாக்காலன் kiṭā-k-kālaṉ, *n.* <கிடா+ perh. *kāla.* Buffalo-horn; எருமைக்கொம்பு. (சங். அக.)

கிடாசு-தல் kiṭācu-, *5 v. tr.* <கடாவு-. [K. *kaḍāy,* M. *kiṭavu.*] 1. To drive in, as a nail; ஆணிமுதலியன அறைதல். 2. To cast off, throw away; விட்டெறிதல். *Madr.*

கிடாய்[1] kiṭāy, *n.* <கடாய்[1]. Male of sheep; ஆட்டின் ஆண். *கிடாய்விரவுகின்ற செம்மறித்திரள்* (மலைபடு. 414, உரை).

கிடாய்[2] kiṭāy, *part.* 1. Sign of the optative; ஒரு வியங்கோள்விகுதி. *கழிந்த கழிகிடாய்* (பதிறெ. கைலை. பா. 21). 2. Expletive used only in the 2nd pers. sing. meaning see! behold! காண் என்னும் பொருளில்வரும் முன்னிலை யொருமை உரையசை. *சார்ப்பங்கிடாய்* (சூடு).

கிடாரம் kiṭāram, *n.* <கடாரம். Cauldron, boiler; கொப்பரைவிசேடம். (S.I.I. ii, 3.)

கிடாரவன் kiṭāravaṉ, *n.* prob. id. Eagle-wood, used as incense; அகில்வகை. (சிலப். 14, 108, உரை.)

கிடாரி kiṭāri, *n.* cf. கடாரி. Heifer. See கடாரி. *Colloq.*

கிடாரை kiṭārai, *n.* prob. கடாரம். Seville orange. See கடாரநாரத்தை. *Colloq.*

கிடி kiṭi, *n.* <*kiṭi*. Hog; பன்றி. (பிங்.)

கிடிகி kiṭiki, *n.* <Mhr. *khiḍaki*. [K. *kiṭiki*.] Window; சன்னல். (C.G.)

கிடிகோள் kiṭikōḷ, *part.* <கிட-. Expletive used only in the 2nd pers. pl. meaning see! behold! காண்மின் என்னும் பொருளில் வரும் முன்னிலைப்பன்மை உரையசை. *இழக்கவேண்டா கிடிகோள்* (சூடு, 5, 1, 7).

கிடிச்செவி kiṭi-c-cevi, *n.* <*kiṭi*+. cf. *varāha-karṇi*. Indian winter cherry. See அமுக்கிரா. (சங். அக.)

கிடீர் kiṭīr, *part.* <கிட-. See கிடிகோள். *வெண்ணெய் விலக்கினர் புக்க லோகம் புகுவீர் கிடீர்* (சூடு, 1, 5, அவ.).

கிடுக்கட்டி[1] kiṭukkaṭṭi, *n.* <கிடுக்கு onom. 1. Sound of something shaking in a hollow vessel; ஓர் ஒலி. (சங். அக.) 2. Small drum as an accompaniment; ஒருவகைமுழவு. (J.)

கிடுக்கட்டி[2] kiṭukkaṭṭi, *n.* Cake of the mahwa flower mixed with seasoning ingredients and then roasted and pounded in a mortar; இருப்பைப்பூவின் இடித்த கட்டி. (சங். அக.)

கிடுக்கு kiṭukku, *n.* Onom. [M. *kiṭukku*.] See கிடுக்கட்டி[1], 2. (சங். அக.)

கிடுக்குக்கிடுக்கெனல் kiṭukku-k-kiṭukkeṉal, *n.* Onom. expr. signifying hollow sound; ஓர் ஒலிக்குறிப்பு.

கிடுகிடாய்-த்தல் kiṭu-kiṭāy-, *11 v. intr.* <கிடுகிடு-. 1. To be amazed, thunderstruck; பிரமித்தல். 2. To tremble with fear; நடுநடுங்குதல். கிடுகிடாய்க்கும்படி பேசினான்.

கிடுகிடாயமானம் kiṭukiṭāya-māṉam, *n.* <கிடுகிடாய்-+. Tremor; அதிர்ச்சி. (W.)

கிடுகிடு[1]**-த்தல்** kiṭukiṭu-, *11 v. intr.* <கிடு கிடு onom. [M. *kiṭukiṭu*.] 1. To tremble, shake; to totter, as a loose wall; நடுங்குதல். 2. To sound, as the rolling of a carriage; to rumble, as a thundercloud; ஒலித்தல். 3. To chatter, as the teeth with cold; to shiver, quake; பல்லோடுபல் கொட்டுதல். (W.)

கிடுகிடு[2] kiṭukiṭu, *n.* <கிடுகிடு-. 1. A small drum; ஒரு சிறுபறை. *தவளந் தப்புடனே கிடுகிடு* (திருப்பு. 590). 2. Quaking, trembling; நடுக்கம். (W.)

கிடுகிடுபாதாளம் kiṭukiṭu-pātāḷam, *n.* <id.+. Abysmal depth, as causing fright; பயத்தை யுண்டுபண்ணும் மிக்க ஆழம்.

கிடுகிடெனல் kiṭukiṭeṉal, *n.* 1. Onom. expr. signifying rumbling sound; ஓர் ஒலிக்குறிப்பு. (பிங்.) 2. Expr. signifying (*a*) tremor; அச்சக்குறிப்பு. *புலி காடி கிடுகிடென நடுநடுங்க* (குற்றா. குற. 80): (*b*) rapidity, quickness; விரைவுக்குறிப்பு.

கிடுகின்படம் kiṭukiṉ-paṭam, *n.* <கிடுகு[1]+. Leather shield; தோற்கேடகம். *எனப் படமுங் கிடுகின்படமும்* (சிலப். 14, 172).

கிடுகு[1] kiṭuku, *n.* <*khēṭaka*. 1. Shield, buckler; கேடகம். *வார்மயிர்க் கிடுகொடு* (சீவக. 2218). 2. A wooden frame; சட்டப்பலகை. *பவளத்திண்காழ் கம்பலக் கிடுகி னூன்றி* (சீவக. 113). 3. Boards round the body of a car; தேர்மரச்சுற்று. (ஞானா. 7, 16.)

கிடுகு[2] kiṭuku, *n.* prob. கிட-. [M. *kiṭil*.] Braided coconut leaf for thatching, etc., cadjan; முடைந்த ஓலைக்கீற்று. (W.)

கிடுகு[3] kiṭuku, *n.* <*giḍuga*. An oval tabor; வட்டவடிவான பறைவகை. *கிடுகு கொட்டின* (பாரத. அணி. 15).

கிடுகுபின்னு-தல் kiṭuku-piṉṉu-, *v. intr.* <கிடுகு[2]+. To braid coconut leaves; ஓலை முடைதல்.

கிடுகோலை kiṭukōlai, *n.*<id.+ஓலை. Coconut leaves fit for braiding; கீற்றுக்குரிய தென்னையோலை.

கிடுபிடி[1] kiṭupiṭi, *n.* <K. *giḍibiḍi*. A tambourine of oval form; வட்டவடிவான ஒருவகை வாத்தியம். (W.)

கிடுபிடி[2] kiṭupiṭi, *n.* [U. *gadbad*, K. *gidibidi*, M. *kidubidi*.] Uproar, loud noise; ஆர்ப்பாட்டம். *Colloq.*

கிடுமுடி kiṭumuṭi, *n.* <Mhr. *gaḍamaḍa*. A small drum as an accompaniment; ஒருவகைச் சிறுபறை. *கொம்பு கிடுமுடி முரசம்* (அறப். சத. 63).

கிடேச்சு kiṭēccu, *n.* <கிடை[3]. Pith; நெட்டி. (புறநா. 75, உரை.)

கிடேச்சை kiṭēccai, *n.* <id. See கிடேச்சு.

கிடேரி kiṭēri, *n.* <கிடாரி. Heifer; பசுவின் கன்று.

கிடை¹-த்தல் kiṭai-, *11 v.* [M. *kiṭekka.*] *intr.* 1. To be obtained, recovered, found; to come into one's possession; அடைதல். திங்க ளெட்டாவதிற் கிடைக்கும் (சுஞ. 2). 2. To join, come together; இயைதல். காத்தொடு காதலங் கிடைப்பப் பூட்டி (கம்பரா. யுத். மந்திர. 100).—*tr.* 1. To come near, approach; சமீபித்தல். கிடந்தா னைக் கிடைத்திரு தடங்கை கூப்பினன் (கம்பரா. கிட்கிந் தை. 23). 2. To encounter, oppose, meet in battle-field; எதிர்த்தல். இருபடைகளு மெதிர் கிடைக் கவே (கலிங். 393).

கிடை² kiṭai, *n.* <கிட-. 1. [M. *kiṭappu.*] Lying down; கிடக்கை. கிடைகொள் குசைப்புற் பள்ளியுள் (சேதுபு. தீர்த்தம. 18). 2. Falling ill; நோயில்விழுகை. *Colloq.* 3. cf. *ghara.* Abode; இருப்பிடம். மறையவர் கிடைக ளோறும் (குற்ற. தல. திருமால். 55). 4. School for reciting Vēdas; வேதமோதும் பாடசாலை. மறையரு கிடையெங்கும் (திருவிளை. வாதவூ. 3). 5. Band of disciples reciting a Vēda; வேதமோதுங் குழாம். ஓதி கிடையி னுடன்போவார் (பெரியபு. சண்டே. 17). 6. School where fencing is taught; ஆயுதம் பயிலிடம். இளங் கிடை காப்பரொடு (பெருங். உஞ்சைக். 37, 11). 7. cf. *gaḍḍarikā.* Flock of sheep, sheepfold; ஆட்டுக் கிடை. 8. Subject-matter, contents; உட்கிடை. அறநூற் கிடைநோக்கி (சேதுபு. வேதாள. 10). 9. Doubt; சந்தேகம். பெருமை கிடையறக் கிளக்க லுற் றனனால் (வாயுசங். இருடிகள்பிர. 4). 10. Comparison, likeness, equality; உவமை. கீதங் கிடையிலான் பாட (சீவக. 731).

கிடை³ kiṭai, *n.* 1. Sola pith. See சடை மரம். (பிங்.) 2. Pith; நெட்டி. கிழியினுங் கிடையி னுந் தொழில்பல பெருக்கி (சிலப். 5, 32).

கிடைக்காரன் kiṭai-k-kāraṉ, *n.*<கிடை²+. cf. *gaḍḍara.* 1. Owner of a flock of sheep; ஆட்டுக்கிடைக் குரியவன். 2. Owner of the land on which a flock of sheep or goats is penned; ஆட்டுக்கிடை வைக்கும் நிலத்துக்குரியவன். *Loc.*

கிடைகொடு-த்தல் kiṭai-koṭu-, *v. intr.* <id.+. To allow to copulate; பசுமுதலியன பொலியெருதின் சேர்க்கைக்கு இடங்கொடுத்தல்.

கிடைச்சரக்கு kiṭai-c-carakku, *n.* <id.+. Old stock of goods; நாட்பட்ட சரக்கு.

கிடைச்சி kiṭaicci, *n.*<கிடை³. See கிடேச்சு. (W.)

கிடைச்சு kīṭaiccu, *n.* See கிடேச்சு.

கிடைச்சை kiṭaiccai, *n.* See கிடேச்சு. (W.)

கிடைப்படு-தல் kiṭai-p-paṭu-, *v. intr.* <கிட-+. 1. To be caught, bound, enthralled; கட்டுப்படுதல். கிளர்சுருதி மயக்கத்தாற் கிடைப்பட்டா லும் (ஞானவா. முமுட்சு. 26). 2. To fall sick, become ill; நோயுறுதல். (W.)

கிடைப்பாடு kiṭai-p-pāṭu, *n.* <கிடைப்படு-. Disease; வியாதி. (W.)

கிடைப்பிசகு kiṭai-p-picaku, *n.*<கிடை²+. Sprain from wrong position in sleep cramp; படுத்திருக்கும்போது நிலைமாறியதால் நேருஞ் சுளுக்கு.

கிடைமறி-த்தல் kiṭai-maṟi-, *v. intr.* <id. +. To herd cattle in the fields for manuring; உரத்திற்காகக் கால்நடைகளை வயல்களிற் கூட்டுதல்.

கிடைவை-த்தல் kiṭai-vai-, *v. intr.* <id+. See கிடைமறி-.

கிண்கிணி kiṇkiṇi, *n.* <கிண்கிண் onom. See கிங்கிணி. தவளை வாய பொலஞ்செய் கிண்கிணி (குறுந். 148).

கிண்கிணித்தாமம் kiṇkiṇi-t-tāmam, *n.* <கிண்கிணி+. See கிண்கிணிமாலை. தவளைக் கிண் கிணித் தாமஞ் சேர்த்தியும் (சீவக. 3126).

கிண்கிணிமாலை kiṇkiṇi-mālai, *n.* <id.+. String of small tinkling bells, for the waist or ankles of woman, for the neck of horse or other animal; சதங்கைமாலை.

கிண்கிணிவாய்க்கொள்(ளு)-தல் kiṇ-kiṇi-vāy-k-koḷ-, *v. intr.* <id.+. See கிண்கிணி வாய்ச்செய்-. கிண்கிணிவாய்க்கொள்ளுங் . . . கழுநீர் மலர் (திருக்கோ. 123).

கிண்கிணிவாய்ச்செய்-தல் kiṇ-kiṇi-vāy-c-cey-, *v. intr.*<id.+. To open slightly, as the mouth of a tinkling bell; சிறுசதங்கையின் வாய் போலச் சிறிதே மலரத் தொடங்குதல். கிண்கிணிவாய்ச் செய்த தாமரைப்பூப்போல (திவ். திருப்பா. 22).

கிண்கிணெனல் kiṇkiṇ-eṉal, *n.* Onom. expr. signifying tinkling sound; ஓர் ஒலிக் குறிப்பு.

கிண்டல் kiṇṭal, *n.* <கிண்டு-. [M. *kiṇḍal.*] Stirring, setting one to do some mischief; தூண்டிவிடுகை. அவன் கிண்டல்பண்ணுகிறான். *Madr.*

கிண்டல்கிளறல் kiṇṭal-kiḷaṟal, *n.* <id.+. 1. Digging up, as yams; தோண்டியெடுக்கை. (W.) 2. Prying out; உட்புகுந்து கிளறுகை.

கிண்டன் kiṇṭaṉ, *n.* <Mhr. *gaṇḍa.* [K. *gaṇḍa.*] 1. Fat man, strong person; தடியன். 2. [K. *ginta,* M. *kiṇṭan.*] A kind of coarse cotton cloth, striped or checkered gingham; உரப்பான பஞ்சுத்துணி. (W.)

கிண்டான் kiṇṭāṉ, *n.*<கிண்டன். Cuddalore check, red and black, used for mattresses and pillows; ஒருவகை உரப்புத்துணி. கூடலூர்க்கிண்டான். *Loc.*

கிண்டி kiṇṭi, *n.* <Mhr. *giṇḍī.* [M. *kiṇṭi.*] Small drinking vessel with a nozzle, used for children to drink from; மூக்குத்துளையால் நீர்விழும் சிறுகலம். பொற்கிண்டியைக்கொண்டு உதகம்பண்ணப் புக (திவ். திருநெடு 13, வ்யா.).

கிண்டிக்கிளறு-தல் kiṇṭi-k-kiḷaṟu-, *v. tr.* <கிண்டு-+. See கிண்டிக்கோடு-.

கிண்டிக்கொடு-த்தல் kiṇṭi-k-koṭu-, *v. tr.* <id.+. 1. To stir, keep stirring, as fire, pap; கிளறிக்கொடுத்தல். 2. To stir up, incite, as to a quarrel; தூண்டிவிடுதல். 3. To prompt; நினைப்பூட்டுதல். அவனுக்குச் சற்றே கிண்டிக்கொடு. (W.)

கிண்டிப்பார்-த்தல் kiṇṭi-p-pār-, *v. tr.* <id.+. 1. To dig and look for, as yams; தோண்டிப்பார்த்தல். 2. To thoroughly investigate; சோதித்தல். சமாசாரத்தைக் கிண்டிப்பார்.

கிண்டிவிடு-தல் kiṇṭi-viṭu-, *v. tr.* <id.+. 1. To dig up, to break the ground with a hoe, to grub up; கொத்திக்கொடுத்தல். 2. To stir up, incite, as to a quarrel; தூண்டிவிடுதல். 3. To bring to notice, suggest; ஞாபகப்படுத்துதல். (W.)

கிண்டு-தல் kiṇṭu-, *5 v. tr.* [M. *kiṇṭu.*] 1. To poke; to stir with a ladle; to scratch, as a fowl; to peck at, as a crow; to dig up, as with a stick or iron bar; to burrow in, as rats, as worms; to penetrate, as bees into flowers; கிளறுதல். (பிங்.) 2. To excavate, as a pit; to hoe up, hollow out, dig out, as a hole in a wall; தோண்டுதல். மண்கிண்டி வயிறு வளர்க்கிறவன். (W.) 3. To probe, scrutinize, investigate, inquire, pry into, search, examine; ஆராய்தல். அவன் ஒவ்வொரு விஷயத்தையும் கிண்டிப் பார்க்கிறவன். 4. To remind, prompt; நினைப்பூட்டுதல். (W.) 5. To incite, as to a quarrel; தூண்டுதல். (W.)

கிண்ணகம் kiṇṇakam, *n.* Flood, deluge; பிரவாகம். கிண்ணகத்திலிழிய அஞ்சு (பெரியதி. 3, 1, 1, வ்யா.).

கிண்ணம் kiṇṇam, *n.* prob. Mhr. *kiṇṇa.* [T. *ginne*, M. *kiṇṇam.*] 1. Small cup made of metal, as perhaps producing a tinkling sound when struck; சிறுவட்டில். மழக்கை யிலங்குபொற் கிண்ண மென்றலால் (திருவாச. 5, 92). 2. Brass bowl with a hole in the bottom placed in water so as to fill and sink in a given time, used to calculate time, clepsydra; நாழிகைவட்டில். (பிங்.)

கிண்ணரங்கொட்டு-தல் kiṇṇāraṅ-koṭṭu-, *v. intr.* <*kinnara*+. To play on a small fiddle or lute; கின்னரம்வாசித்தல்.

கிண்ணாரம் kiṇṇāram, *n.* <*kinnara.* Stringed instrument, small fiddle or lute; ஒரு நரம்பிசைக்கருவி.

கிண்ணி kiṇṇi, *n.* <கிண்ணம். [T. *ginne.*] 1. See கிண்ணம், 1. *Colloq.* 2. See கிண்ணம், 2. (G. Sm. D. i, 290.) 3. Cover of the hilt of a sword; கத்தியின்கைப்பிடியுறை. (சங். அக.) 4. Any one of the eight small legs of a crab; நண்டின்கால். (W.) 5. Extra claw on the hind leg of some dogs; நாயின் கின்னிக்கால். (W.) 6. Horny protuberance above the hoof and on the hind part of the leg of certain animals, as the ox, deer, etc.; பசுமுதலிய ஒருசார்விலங்குகளின் குளம்பின் மேல் உள்ள திரட்சி. (யாழ். அக.)

கிண்ணிக்கர்ப்பூரம் kiṇṇi-k-karppūram, *n.* <கிண்ணி+. 1. Sublimate of mercury. See இரசகர்ப்பூரம். (சங். அக.) 2. Refined camphor; சுத்தகர்ப்பூரம்.

கிண்ணிடு-தல் kiṇ-ṇ-iṭu-, *v. intr.* <கிண் onom.+இடு-. To tinkle, ring, as in the ear; கின்னேனென்னும் ஒலியுண்டாதல். (யாழ். அக.)

கிண்ணித்தேர் kiṇṇi-t-tēr, *n.* <கிண்ணி+. A kind of car, the upper part of which is decorated all over with brass plates; மேற்பாகம் பித்தளைத்தகட்டால் அமைந்த ஒருவகைத் தேர். (W.)

கிண்ணெனல் kiṇ-ṇ-eṉal, *n.* Onom. expr. signifying tinkling, clinking sound; ஓர் ஒலிக்குறிப்பு. கிண்ணென் றிசைமுரலுங் திருக்கேதாரம் (தேவா. 1154, 7).

கிணகன் kiṇakaṉ, *n.* perh. *kiṇa.* Slave, menial; அடிமை. (பிங்.)

கிணம்[1] kiṇam, *n.* perh. கீள்-. See கிணறு. *Loc.*

கிணம்[2] kiṇam, *n.* <*kiṇa.* Scar, scab; தழும்பு. (சீவ, 4, 2, 5, ஜீ.)

கிணற்றாமை kiṇaṟṟāmai, *n.* <கிணறு+ஆமை. Common terrapin, *Emys trijuga*, dist. fr. *kaṭal-āmai*; கிணறு கேணிகளில் வாழும் ஆமை வகை.

கிணற்றுக்கட்டு kiṇaṟṟu-k-kaṭṭu, *n.* <id.+. Parapet wall of a well, well curb; கிணற்றின் சுற்றுக்கட்டடம். (W.)

கிணற்றுத்தானம் kiṇaṟṟu-t-tāṉam, *n.* <id.+. (Astrol.) The fourth house from the ascendant; இராசிசக்கரத்தில் பிறந்த இலக்கினத்திலிருந்து நாலாமிடம். (சங். அக.)

கிணற்றுப்பொங்கல் kiṇaṟṟu-p-poṅkal, *n.* <id.+. Boiled rice offered to Bhairava of the lower region at the sight of water in the course of sinking a well; கிணறுவெட்டுகையில்தண்ணீர் கண்டவுடன் பாதாளவைரவனுக்கு இடும் பொங்கல். (W.)

கிணற்றுமிதி kiṇaṟṟu-miti, *n.* <id.+. Foothold for one who draws out water from a well; கிணற்றில் நீரிறைக்கும்போது நிற்குமிடம். (W.)

கிணற்றுவாரகம் kiṇaṟṟu-vārakam, *n.* <id. +. Loan by Government given to farmers for sinking wells; கிணறுவெட்டுவதற்காக அரசாங்கத்தார் விவசாயிகளுக்குக் கொடுக்கும் கடன்.

கிணற்றுறை kiṇaṟṟuṟai, *n.* <id. + உறை. Potring of a well; மண்பானைகளாலமைத்த கிணற்றுள் இறக்கும் உறை. (C. E. M.)

கிணறு kiṇaṟu, *n.* perh. கீள்-. [M. *kiṇaṟu.*] Well; கேணிவகை. உவரில் கிணற்றின்கட் சென் றுண்பர் (நாலடி, 263).

கிணறெடு-த்தல் kiṇaṟeṭu-, *v. intr.* <கிணறு + எடு-. 1. To dig or sink a well; கிணறுவெட்டுதல். 2. To select a spot for a well, with reference to the situation of house and other surrounding objects, the nature of the soil, the depth at which water may be found, etc.; கிணறுவெட்டுதற்கேற்ற இடந்தேர்தல். (W.)

கிணாங்கு kiṇāṅku, *n.* A species of grass, *Rotboella corymbosa;* புல்வகை. (W.)

கிணாட்டு kiṇāṭṭu, *n.* cf. குணாட்டு. (J.) 1. Chip or nip of ola leaf; ஓலைநறுக்கு. 2. Any small thing resembling an ola chip, as the bony appendage in the gills of a fish; மீன் செவுப்பு முதலியன. 3. Small sub-division of a spike of grain or cluster of grapes; கதிர்முதலியவற்றின் சிறுதலை. (W.)

கிணி kiṇi, *n.* <கிண் onom. Cymbal; கைத்தாளம். (W.)

கிணிதி kiṇ-iti, *n.* perh. id. + *iti.* Rattlewort, *Crotalaria;* கிலுகிலுப்பை. (மலை.)

கிணினெனல் kiṇiṉ-eṉal, *n.* <கிணின் onom. +. See கிணீரெனல். இருமணி கிணினென விசைத்தன (சீவக. 1841).

கிணீரெனல் kiṇīr-eṉal, *n.* <கிணீர் onom. +. Onom. expr. signifying ringing, tinkling, clinking sound; ஓர் ஒலிக்குறிப்பு.

கிணீலெனல் kiṇīl-eṉal, *n.* <கிணீல் onom. +. See கிணீரெனல்.

கிணுக்குக்கிணுக்கெனல் kiṇukku-k-kiṇukkeṉal, *n.* <கிணுக்கு onom. +. Onom. expr. signifying tinkling sound, as a hand-bell; ஓர் ஒலிக்குறிப்பு. (W.)

கிணுகிணு-த்தல் kiṇu-kiṇu-, *11 v. intr.* <கிணுகிணு onom. 1. To buzz, as mosquitoes; to hum, as bees; கொசுமுதலியன ஒலித்தல். 2. To whimper; அனுங்கிச்சொல்லுதல். (W.)

கிணை kiṇai, *n.* prob. கிண் onom. 1. Drum used in agricultural tract; ஒருவகை மருதப்பறை. (பு. வெ. 8, 32, உரை.) 2. Small drum shaped like an hour-glass; உடுக்கை. நுண்கோற் றகைத்த தெண் கண் மாக்கிணை (புறநா. 70).

கிணைநிலை kiṇai-nilai, *n.* <கிணை +. (Puṟap.) Theme of singing the praises of a Vēḷāḷa chief, to the accompaniment of a *kiṇai* drum; கிணைமகன் மருதநிலத்து வேளாளனைக் கிணைகொட்டிப் புகழும் புறத்துறை. (பு. வெ. 8, 32.)

கிணைநிலைப்பொருநர் kiṇai-nilai-p-porunar, *n.* <கிணைநிலை +. See கிணைப்பொருநர். கிணைநிலைப்பொருநர்தஞ் செல்லல் கீழ்ப்பட (சீவக. 61).

கிணைப்பொருநர் kiṇai-p-porunar, *n* <கிணை +. Dancing minstrels who sing the praises of Vēḷāḷas, to the accompaniment of a *kiṇai* drum; கிணைப்பறை கொட்டிக்கொண்டு வேளாளரைப் புகழ்ந்துபாடும் பொருநர். (சிறுபாண். 203, உரை.)

கிணைமகள் kiṇai-makaḷ, *n.* <id. +. Female minstrel of ancient times, dancing and singing to the accompaniment of a drum; விறலி. கிணைமகட் கெளிதாற் பாடினள் வரினே (புறநா. 111, 4).

கிணைமகன் kiṇai-makaṉ, *n.* <id. +. A *kiṇai* drummer, of ancient times; கிணைப்பறை வாசிப்பவன். இருமபறைக் கிணைமகன் (புறநா. 388, 3).

கிணையன் kiṇaiyaṉ, *n.* <id. See கிணைமகன். அங்கட் கிணையன் றுடியன் (பு. வெ. 1, 16).

கிணைவன் kiṇaivaṉ, *n.* <id. See கிணைமகன். நின்கிணைவன் கூற (புறநா. 379, 11).

கித்த kitta, *adv.* prob. கித்து-. Hastily; விரைவாக. கித்தக் கருங்குவளைச் செவ்வியோடிக் கெழு மினவே (திருக்கோ. 388).

கித்தம் kittam, *n.* <*kṛta.* That which is made; செய்யப்பட்டது. (திருக்கோ. 388, உரை.)

கித்தாப்பு[1] kittāppu, *n.* <U. *kitāb.* Book. See கிதாப்பு.

கித்தாப்பு[2] kittāppu, *n.* <U. *khiṭāb.* Title, degree, honour; கண்ணியமான பட்டம்.

கித்தார் kittār, *n.* <E. *guitar.* Fiddlewood, m.tr., *Citharexylon subseratum;* மரவகை. (L.)

கித்தான் kittāṉ, *n.* <U. *katān.* [M. *kittān.*] Linen, canvas; ஒருவகை உரப்புத்துணி.

கித்தான்கட்டில் kittāṉ-kaṭṭil, *n.* <id. +. Canvas cot; கித்தான்துணிவைத்துத் தைத்த கட்டில்.

கித்தான்கயிறு kittāṉ-kayiṟu, *n.* <id. +. Hemp rope; சணற்கயிறு.

கித்தான்பஞ்சு kittāṉ-pañcu, *n.* <id. +. Tow, oakum for caulking ships; கப்பலிற் கித்தானடைப்பு. (W.)

கித்தான்பாய் kittāṉ-pāy, *n.* <id. +. Canvas sail; கப்பற்பாய். (W.)

கித்தில் kittil, *n.* <Sinh. *kitul.* (J.) 1. Jaggery-palm, m. tr., *Caryota urens;* கூந்தற்கமுகு

வகை. 2. Kittul-fibre obtained from the leaf-stalks of the jaggery-palm; கூந்தற் கமுகின் நார்.

கித்து-தல் kittu-, 5 v. intr. [M. *kittu.*] To hop, leap about on one leg, as boys in the game of *kinti-y-aṭittal*; ஒற்றைக்காலால் தாவிநடத்தல். கித்தி கின்றடு மரிவையர் (திருவிசை. கருவூ. திருக்கீழ்க். 11).

கித்துள் kittuḷ, n. <Sinh. *kitul.* Wide-spreading areca-palm. See கூந்தற்கமுகு. (மலை.)

கிதயுகம் kita-yukam, n. <*kṛta*+. See கிருதயுகம்.

கிதாப்பு kitāppu, n. <U. *kitāb.* 1. Title of a book; நூற்பெயர். (W.) 2. Book; நூல்.

கிந்திகம் kintikam, n. <*granthika.* Long pepper root; திப்பலிமூலம். (மலை.)

கிந்திநட-த்தல் kinti-naṭa-, v. intr. <கிந்து-+. 1. To walk on tip-toe; முன்னங்காலால் நடத்தல். (W.) 2. To hobble, limp; நொண்டி நடத்தல்.

கிந்திநில்-தல்[கிந்திநிற்றல்] kinti-nil-, v. intr. <id.+. To stand on tip-toe; முன்னங் காலை ஊன்றிநிற்றல். (W.)

கிந்தியடித்தல் kinti-y-aṭittal, n. <id.+. Game of hopping about in a square traced on sand and trying to touch others while so engaged, a boy's game; பிள்ளைகள் நொண்டியடித்து ஒருவரையொருவர் பிடிக்கும் ஒருவகை விளையாட்டு. (J.)

கிந்து-தல் kintu-, 5 v. intr. <கித்து-. (W.) 1. To stand or walk on toes of one foot or both; to go on tip-toe; படங்குந்தி நடத்தல். 2. To hop, to leap about on one leg, as boys in the game of *kinti-y-aṭittal*; நொண்டி விளையாடுதல். 3. To limp, halt, hobble; நொண்டி நடத்தல்.

கிந்துக்கினம் kintukkiṉam, n. <*kintughna.* (Astrol.) A division of the day, the first half of the first day of the bright fortnight, one of 11 *karaṇam*, q.v.; பஞ்சாங்க கரணங்களுள் ஒன்றாய்ச் சுக்கிலபக்ஷத்தின் முதனாளின் முற்பகுதியாகிய வேளை. (விதான. பஞ்சாங்க. 29.)

கிந்துகாலன் kintu-kālaṉ, n. <கிந்து-+. One who limps in his walk, who hobbles on tip-toe or on one foot; கொந்திநடப்பவன்.

கிபாயத்து kipāyattu, n. <U. *kifāyat.* Profit, advantage, gain from lands held at reduced rent or tax; இலாபம். (W.)

கிம்புரி kimpuri, n. 1. Ornamental ring on an elephant's tusk; யானைத்தந்தத்திலிடும் பூண். சித்திரக்கிம்புரி வைரஞ் சேர்த்துநர் (சீவக. 83). 2. Ornamental boss of a crown, one of five *muṭi-y-uruppu*, q.v.; முடியுறுப்புள் ஒன்று. (திவா.) 3. Spout shaped like the mouth of a shark; நீர் விழுதற்கு மகரவாய் வடிவில் அமைக்கப்பெற்ற தூம்பு. கிம்புரிப்பகுவா யம்பணம் (நெடுநல். 96). 4. A kind of ornament; மகரவாயென்னும் ஆபரணம். கை விளை யேசறுகிம்புரி யெயிறு வெண்ணிலா (கம்பரா. கடிமண. 66). 5. Man's ornament for the upper arm, a kind of epaulet; தோளணி. (W.)

கிம்புரிமுகம் kimpuri-mukam, n. <கிம்புரி+. Ornamental knob, as part of a jewel; ஆபரணமுகப்பின் உறுப்புள் ஒன்று. (S.I.I. ii, 430).

கிம்புருடர் kimpuruṭar, n. <*kimpuruṣa.* A class of demigods, celestial lyrists, supposed to have the form of a horse and the head of a man, one of *patiṉeṇ-kaṇam*, q.v.; பதினெண் கணத்துள் ஒருவராய் மானுடமுகமும் குதிரையினுடலும் படைத்த தேவசாதியார். (சிலப். 5, 176, உரை.)

கிம்புருடவருடம் kimpuruṭa-varuṭam, n. <id.+. Land between *ēmakūṭam* and *imācalam*, one of *nava-varuṭam*, q.v.; நவவருடங்களுள் ஒன்று. (கந்தபு. அண்டகோ. 37.)

கிமாச்சிமாவெனல் kimā-c-cimā-v-eṉal, n. Onom. expr. signifying muttering, grumbling sound; முருமுருத்தற்குறிப்பு. *Loc.*

கிமாவெனல் kimā-v-eṉal, n. See கிமாச்சிமாவெனல். கிமாவென்பாரில்லை. (W.)

கிமித்துக்கினம் kimittukkiṉam, n. <*kintughna.* (W.) 1. See கிந்துக்கினம். 2. Worm; புழு.

கிய்யாங்கிய்யாமெனல் kiyyāṅ-kiyyām-eṉal, n. (W.) 1. Onom. expr. signifying peeping of chickens, etc.; ஓர் ஒலிக்குறிப்பு. குழந்தை கிய்யாங்கிய்யாமென்று அழுகின்றது. 2. Expr. signifying the state of being in a fix; தடுமாறுதற் குறிப்பு. கிய்யாங்கிய்யாமென்று விழிக்க.

கியாதம் kiyātam, n. <*khyāta.* See கியாதி, 1. (பிங்.)

கியாதி kiyāti, n. <*khyāti.* 1. Fame; புகழ். (சூடா.) 2. Khyāti, wife of Bhṛgu; பிருகுவின் மனைவி. (கம்பரா. தாடகை. 60.)

கியால் kiyāl, n. <U. *khiyāl.* A Hindustani musical composition, or anything similar to it in Tamil; ஒருவகை இந்துஸ்தானிப்பாட்டு.

கியாழம் kiyāḻam, n. <*kaṣāya.* Decoction; கஷாயம். கலிகக் கியாழம் (திருவேங். சத. 68).

கிரக்கம் kirakkam, n. <கிறங்கு-. Dizziness, giddiness, exhaustion; களைப்பு. *Loc.*

கிரகக்கழிப்பு kiraka-k-kaḻippu, n. <*graha*+. See கிரகசாந்தி. (W.)

கிரககதி kiraka-kati, n. <id.+. (Astron.) Planetary motion; கிரகத்தின் நடை.

கிரகங்கழி-த்தல் kirakaṅ-kaḻi-, v. intr. <id.+. To perform a propitiatory ceremony

to avert or mitigate the evil influence of planets; கிரகசாந்திசெய்தல். (W.)

கிரகச்சித்திரம் kiraka-c-cittiram, n.<gṛha +. Family dissensions; குடும்பச்சச்சரவு. சென்மித்த வருடமு முண்டான வத்தமுங் தீதாங் கிரகச்சித்ரமும் (அறப். சத. 39).

கிரகச்சுற்று kiraka-c-cuṟṟu, n. <graha+. Revolution of planets; கிரகத்தின் சுற்றுநடை. (W.)

கிரகசம் kirakacam, n. <krakaca. A hell; ஒரு நரகம். (சிவதரு. சுவர்க்கந. 115.)

கிரகசாந்தி kiraka-cānti, n. <graha+. Propitiation of planets by offering oblation, prayer, etc.; கிரகத்தால்வருந் தீமைகழியச் செய்யும் பரிகாரம்.

கிரகசாரம் kiraka-cāram, n. <id.+. (Astron.) 1. Planetary motion; கிரகநடை. 2. Evil influence of planets, as pain, poverty, sickness; தீக்கோளின் பலன். *Colloq.* 3. Planetary ephemeris; கிரகநிலைக்குறிப்பு.

கிரகசெபம் kiraka-cepam, n. <id.+. Prayer offered to planets to propitiate them to ward off their evil influence; கிரகத்தால் உண்டாகுந் தீமைகழியச் செய்யுஞ் செபம்.

கிரகணச்சந்துக்கட்டு kirakaṇa-c-cantu-k-kaṭṭu, n. <*grahaṇa+sandhi*+கட்டு. Duration of an eclipse; கிரகணம் தொடங்கி விடுமளவும் உள்ள காலம். (C.G.)

கிரகணசக்தி kirakaṇa-cakti, n. <id.+. Power of comprehension; உணர்ந்துகொள்ளுந் திறமை.

கிரகணதோஷம் kirakaṇa-tōṣam, n. <id. Harelip in a child, supposed to be the result of the mother's seeing an eclipse when pregnant; கர்ப்பகாலத்தில் தாய் கிரகணத்தைப் பார்த்தலால் குழந்தைக்கு உண்டாவதாகக் கருதப்படும் மேலுதட்டுப் பிளவுநோய். (பைஷஜ. 207.)

கிரகணம் kirakaṇam, n. <*grahaṇa*. 1. Holding fast, grasping, seizure; பற்றுகை. 2. Comprehension; மனத்திற்கிரகிக்கை. 3. Eclipse, as the seizing of the sun or moon by the nodes *irāku* or *kētu*; சந்திரசூரியர்களின் கிரகணம்.

கிரகணமோசனம் kirakaṇa-mōcaṉam, n. <id.+. See கிரகணமோக்ஷம்.

கிரகணமோக்ஷம் kirakaṇa-mōkṣam, n. <id.+. End of an eclipse; கிரகணத்தின் நீக்கம்.

கிரகணி kirakaṇi, n. <*grahaṇi*. Continual looseness of the bowels, chronic diarrhœa of six kinds, viz., பித்தக்கிராணி, உஷ்ணவாதக்கிராணி, சிலேட்டுமவாதக்கிராணி, மேகக்கிராணி, மூலக்கிராணி, வாதக்கிராணி; அசீரணபேதிவகை. (பைஷஜ.)

கிரகதானம் kiraka-tāṉam, n. <*graha*+. Gift intended to avert the malignant influence of planets; நவக்கிரகங்களின் பிரீதிக்காகச் செய்யுந் தானம்.

கிரகதோஷம் kiraka-tōṣam, n. <id.+. Affliction, calamity, suffering from the malignant influence of planets; கிரகத்தினால் விளையுந் தீங்கு.

கிரகநடை kiraka-naṭai, n.<id.+. (Astron.) Planetary motion; கிரக கதி.

கிரகநிலை kiraka-nilai, n. <id.+. (Astrol.) Aspect of planets of which there are five, viz., கட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம்; கிரகம் நிற்கும் நிலைமை.

கிரகநோக்கு kiraka-nōkku, n. <id.+. (Astrol.) Relative aspect of planets, one to another; configuration, in four aspects, viz., கால்நோக்கு, அரைநோக்கு, முக்கால்நோக்கு, முழுநோக்கு; கிரகத்தின் பார்வை.

கிரகப்பாடு kiraka-p-pāṭu, n. <id.+. (Astron.) The conjunction of the sun and a planet; சூரியனோடு வேறுகிரகமொன்று சேர்ந்து ஓர் இராசியில் நிற்கை. (யாழ். அக.)

கிரகப்பிரீதி kiraka-p-pirīti, n.<id.+*prīti*. Propitiation of planets, by prayer, offerings, etc.; கிரகத்துக்குத் தானம்முதலியவற்றல் திருப்தி செய்கை.

கிரகப்பிழை kiraka-p-piḻai, n.<id.+. See கிரகதோஷம். (W.)

கிரகப்பெயர்ச்சி kiraka-p-peyarcci, n.<id. +. Transit of a planet from one zodiacal sign to another; கிரகம் இடமாறுகை.

கிரகபதனம் kiraka-pataṉam, n. <id.+ *patana*. Latitude of a planet; அட்சரேகை. (W.)

கிரகபதி kiraka-pati, n. <id.+. Sun, as lord of planets; சூரியன்.

கிரகபரிவிருத்தி kiraka-parivirutti, n.<id. +. Revolution of a planet; கிரகத்தின் சுற்று.

கிரகபலம் kiraka-palam, n. <id.+*bala*. Planetary influence; கிரகத்தின் அதிகாரம். (C.G.)

கிரகபீடை kiraka-pīṭai, n. <id.+. See கிரகதோஷம்.

கிரகபுடம் kiraka-puṭam, n. <id.+. See கிரகஸ்புடம்.

கிரகம்[1] kirakam, n. <*graha*. 1. Planets, of which there are nine in the Hindu system, viz., ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது; கோள்கள். 2. (Mus.) The element of time-measure which specifies the starting beat of a song, of four kinds, viz., அதீதம், அநாகதம், சமம், விஷமம், one of ten *tāḷa-p-pirāṇam*, q.v.; கீர்த்தனத்தின் ஆரம்பகாலத்தை

யுணர்த்துவதாகிய தாளப்பிராணத்தொன்று. (பரத. தாள. 42.)

கிரகம்[2] kirakam, *n.* <*gṛha*. House, habitation. See கிருகம்.

கிரகமண்டலம் kiraka-maṇṭalam, *n.* <*graha*+. See கிரகவீதி.

கிரகமாலிகை kiraka-mālikai, *n.* <id.+. See கிரகமாலை.

கிரகமாலை kiraka-mālai, *n.* <id.+. (Astrol.) Position of two or more planets in the zodiacal signs following each other as a garland in their own order; கிரகங்கள் மாலைபோல் தொடர்ந்து நிற்கும் நிலை. (W.)

கிரகவக்கிரம் kiraka-vakkiram, *n.* <id.+. Retrogression of a planet; கிரகம் பின்னோக்கிச் செல்லும் கதி.

கிரகவட்டம் kiraka-vaṭṭam, *n.* <id.+. 1. See கிரகவீதி. 2. Revolution of a planet; கிரகச்சுற்று.

கிரகவீதி kiraka-vīti, *n.* <id.+. Planetary orbit; கிரகஞ்செல்லும் வழி.

கிரகஸ்புடம் kiraka-spuṭam, *n.* <id.+. (Astrol.) Determining the correct position of planets, at the time of one's birth; ஜாதகத்தில் கிரகங்களின் நிலையை வரையறுக்கை.

கிரகஸ்வரம் kiraka-svaram, *n.* <id.+. Initial note of a melody-type; எடுப்புஸ்வரம்.

கிரகாராதனை kirakārātaṉai, *n.* <id.+ *ā-rādhanā*. Prayer, etc., offered to planets; நவக்கிரகபூசை.

கிரகி-த்தல் kiraki-, *11 v. tr.* <*grah*+. 1. To seize, grasp; பற்றுதல். 2. To comprehend, discern, understand; நுண்ணிதின் உணர்ந்துகொள்ளுதல். 3. To receive, accept; ஏற்றுக்கொள்ளுதல். (W.) 4. To infer, deduce, conjecture; குறிப்பாலறிதல். 5. To draw out, as secrets; to get information about; துப்பறிதல். (W.) 6. To extract, as essence; சாரம்வாங்குதல்.

கிரங்கு-தல் kiraṅku-, *5 v. intr.* prob. கிறங்கு-. To get fatigued, jaded; to look withered; சோர்வடைதல். *அவன் பசியால் கிரங்கிப்போய்விட்டான். Loc.*

கிரசேமிரம் kiracēmiram, *n.* Crude camphor; பச்சைக்கர்ப்பூரம். (மூ. அ.)

கிரஞ்சனம் kirañcaṉam, *n.* cf. *gṛñjana*. Horse-radish. See முருங்கை. (மலை)

கிரணம் kiraṇam, *n.* <*kiraṇa*. 1. Ray of light, beam; கதிர். 2. Light, brightness, brilliancy; ஒளி. *கிரணக் கலாபி* (கந்தரலங். 21). 3. An ancient Śaiva scripture in Sanskrit, one of 28 *civākamam*, q. v.; சிவாகமங்கள் இருபத்தெட்டனுள் ஒன்று. (சைவச. பொது. 335, உரை.)

கிரணம்வீசு-தல் kiraṇam-vīcu-, *v. intr.* <id.+. To emit rays; ஒளியடித்தல்.

கிரணமாலி kiraṇa-māli, *n.* <*kiraṇa-mālin*. Sun, as emitting rays; சூரியன். (சூடா.)

கிரணன் kiraṇaṉ, *n.* <*kiraṇa*. Sun, as having rays; சூரியன். *கிளைத்த பல்பெருங் கிரணனில் வயங்கொளி கிளர்ந்தான்* (பாரத. பதினான்காம். 108).

கிரது kiratu, *n.* <*kratu*. 1. Sacrifice; யாகம். *கிரதுக்கடவுடானும்* (அரிசமய. பத்திசா. 93). 2. A hell; நரகவகை. (சிவதரு. சுவர்க்கந. 115.) 3. An ancient Ṛṣi; ஒரு முனிவர்.

கிரந்தகர்த்தா kiranta-karttā, *n.* <*grantha* +. Author of a book, writer; நூலாசிரியன்.

கிரந்தகாரன் kiranta-kāraṉ, *n.* <id.+. 1. See கிரந்தகர்த்தா. 2. Impudent fellow; அதிகப்பிரசங்கி. (W.)

கிரந்தகாலக்ஷேபம் kiranta-kālakṣēpam, *n.* <id.+. Study of religious works; சமயநூல்களை ஓதுகை. *Colloq.*

கிரந்தம் kirantam, *n.* <*grantha*. 1. Book, treatise; நூல். 2. A verse or prose containing 32 syllables, ślōka; ஒற்றொழித்து உயிரும் உயிர்மெய்யுமாகக் கொள்ளப்படும் 32 எழுத்தின் கூட்டம். *இத்தருபுராண கிரந்தத்தின் றொகை யோரிலக்கமாம்* (சூத. சிவமான். புராண. 34). 3. Grantha-script, used by Tamilians in writing Sanskrit; வடமொழியை எழுதுதற்குத் தமிழ்மக்கள் வழங்கிய எழுத்து. 4. Sanskrit language; வடமொழி. *Colloq.*

கிரந்தி[1] kiranti, *n.* <*granthi*. 1. Knot, tie, joint of the body; முடிச்சு. 2. Intersection of the three veins இடை, பிங்கலை, சுழுமுனை; நாடிமூன்றின்பொருத்து. (W.) 3. Ulcer, tumour, venereal swelling, etc., syphilis; கிரந்திப்புண்வகை. *ஒட்டுங் கிரந்திநோயாதி* (திருவானைக். தீர்த்தவி. 10). 4. Kernel of emblic myrobalan; நெல்லிப்பருப்பு.

கிரந்தி[2] kiranti, *n.* cf. கிரேந்தி. Capsule, husk of cardamom; ஏலத்தோலி. (W.)

கிரந்திக்கட்டு kiranti-k-kaṭṭu, *n.* <கிரந்தி[1] +. Venereal swelling or tumour; மேகவிரணம். (W.)

கிரந்திகம் kirantikam, *n.* <*grandhi-ka*. Long pepper root; திப்பலிமூலம். (மலை.)

கிரந்திதகரம் kiranti-takaram, *n.* [T. *granthitagaramu*.] East Indian rosebay. See நந்தியாவட்டை. (சங். அக.)

கிரந்திநாயகம் kiranti-nāyakam, *n.* <கிரந்தி[1] +. A plant, as curing cutaneous eruptions; சோறிபுண்களை நீக்கும் ஒருவகைப்பூடு. (பதார்த்த. 290.)

கிரந்திப்பண்டம் kiranti-p-paṇṭam, *n.* <id. +. Highly flavoured comestibles producing bad humours or cutaneous eruptions; புண்களை யுண்டாக்குந் தின்பண்டம்.

கிரந்திப்புண் kiranti-p-puṇ, *n.* <id.+. Venereal ulcer, bubo, chancre; மேகக்கட்டி. (W.)

கிரந்திமூலம் kiranti-mūlam, *n.* prob. *grandhi-ka* +. Long pepper root; திப்பலிமூலம். (மலை.)

கிரந்திவாயு kiranti-vāyu, *n.* <*granthi* +. Flatulence attended with eruptions and difficulty of breathing, especially in children; குழந்தை நோய்வகை.

கிரந்து kirantu, *n.* <*Kunthu.* A Jaina Arhat, one of 24 *tirttaṅkarar*, q.v.; தீர்த்தங்கரருள் ஒருவர். (திருக்கலம். காப்பு, உரை.)

கிரமக்காரன் kirama-k-kāraṉ, *n.* <*krama* +. Well-behaved person, man of good conduct; ஒழுங்காக நடப்பவன். (யாழ். அக.)

கிரமச்சா kirama-c-cā, *n.* <id.+*jyā*. (Astron.) Sine of a planet's declination; கிரக கணிதத்தின் உறுப்பு.

கிரமசிருட்டி kirama-ciruṭṭi, *n.* <id.+. Creation of elements one after another, dist. fr. *yukapar-ciruṭṭi;* பிரகிருதிமுதற் பிருதிவிவரை ஒன்றன்பின்னொன்று அடைவே படைக்கப்படுகை. (வேதா. சூ. 80.)

கிரமதாடி kirama-tāṭi, *n.* <id.+*dhāṭi*. One well-versed in the *krama* method of reciting the Vēda; வேதத்தின் கிரமபாடமோதுவதில் வல்லவன். இவனவதானி யிவன் கிரமதாடி (பிரபோத. 11, 5).

கிரமதாவா kirama-tāvā, *n.* <id.+. Original suit, regular suit; ஒழுங்கு வியாச்சியம்.

கிரமப்பிரசவம் kirama-p-piracavam, *n.* <id.+. Normal, easy delivery; சுகமான பிரசவம். (இங். வை. 393.)

கிரமம் kiramam, *n.* <*krama.* 1. Order, propriety, rule, method, regularity, sequence; ஒழுங்கு. கிரமமாக வரிவண்டு பண்செய்யும் (தேவா. 1153, 8). 2. Proper course of action, good conduct, strict observance of religious or moral rules; நீதி முறை. எக்கிரமங்களுங் கலங்கி (உத்தரரா. சம்புவன். 29). 3. Particular method of reciting Vēdic texts, in the formula ab, bc, cd, etc.; வேத சம்மிதைகளின் பதங்களை மேன்மேலுங் கூட்டி ஓதுமுறை. சாம்பதங் கிரமஞ்சடை (பிரபோத. 11, 4).

கிரமவழக்கு kirama-vaḻakku, *n.* <id.+. See கிரமதாவா.

கிரமவித்தன் kirama-vittaṉ, *n.* <*krama-vitta.* Ancient Brāhman title, as one skilled in the *krama* method of reciting the Vēdas; வேதத்தின் கிரமபாடத்தில் வல்ல பார்ப்பனரது பழைய பட்டப் பெயர். சூர்யதேவ கிரமவித்தன் (S.I.I. ii, 255).

கிரமுகம் kiramukam, *n.* <*kramuka.* Areca-palm. See கமுகு. (மலை.)

கிரமேண kiramēṇa, *adv.* <*kramēṇa.* In regular course; முறையே. கிரமேண சிவத்துவாபி வியத்தி உண்டு (சிவசம. 39).

கிரயக்காரன் kiraya-k-kāraṉ, *n.* <*kraya* +. Seller, vendor; விற்பவன்.

கிரயச்சீட்டு kiraya-c-cīṭṭu, *n.* <id.+. See கிரயசாஸனம்.

கிரயசாஸனம் kiraya-cāsaṉam, *n.* <id.+. Bill of sale, sale-deed; விற்பனைப்பத்திரம்.

கிரயசேஷம் kiraya-cēṣam, *n.* <id.+. Balance of sale proceeds; ஒத்தித்தொகைமுதலியவை யொழிய கிரயத்தில் மிச்சமுள்ள தொகை.

கிரயபத்திரம் kiraya-pattiram, *n.* <id.+. See கிரயசாஸனம்.

கிரயம் kirayam, *n.* <*kraya.* 1. Sale; விற்பனை. 2. Selling price; விலைத்தொகை.

கிரவுஞ்சகிரி kiravuñca-kiri, *n.* <*krauñca* +. The Eastern part of the Himālaya range, in Assam, as split by Skanda; இமயமலைத்தொடரின் கீழ்ப்பாகத்துள்ள ஒரு மலை. (பு. வெ. 6, 9, உரை.)

கிரவுஞ்சத்தீவு kiravuñca-t-tīvu, *n.* <id. +. The fifth annular continent surrounded by the ocean of milk (கந்தபு. அண்டகோ. 19.), or ocean of ghee (திவா.), as containing the *kiravuñca-kiri*, one of *eḻu-tīvu*, q.v.; எழுதீவுள் ஒன்று.

கிரவுஞ்சம் kiravuñcam, *n.* <*krauñca.* 1. Indian love-bird; அன்றில். (திவா.) 2. Distance measured by a single flight of a fowl; கோழிபறக்கும் அளவுள்ள தூரம். (திவா.) 3. See கிரவுஞ்சத்தீவு. சம்புசாகங் குசைகிர வுஞ்சம் (கந்தபு. அண்டகோ. 19.) 4. See கிரவுஞ்சகிரி. (கந்தபு. தாரக. 108.)

கிராக்கி kirākki, *n.* <U. *khiragi.* High price; அருவிலை.

கிராகதி kirākati, *n.* cf. *kirātaka.* A medicinal plant. See நிலவேம்பு. (மலை.)

கிராகியம் kirākiyam, *n.* <*grāhya.* That which is worth knowing, accepting, receiving; கொள்ளத்தக்கது.

கிராசம் kirācam, *n.* <*grāsa.* Mouthful; கவளம். ஒருகிராசங்கூட அன்னங் கிடைக்கவில்லை.

கிராசாங்குலம் kirācāṅkulam, *n.* <id.+ *aṅgula*. The number of digits in shadow at an eclipse; கிரகணவளவு. (W.)

கிராணம்[1] kirāṇam, *n.* <*ghrāṇa*. Nose; மூக்கு. (திவா.)

கிராணம்[2] kirāṇam, *n.* <*grahaṇa*. 1. Eclipse; கிரகணம். (சூடா.) 2. Small brass basin; சிறுவட்டில். (பிங்.)

கிராணி[1] kirāṇi, *n.* Clerk; குமாஸ்தா. (J.)

கிராணி[2] kirāṇi, *n.* <*grahaṇi*. See கிரகணி.

கிராணிக்கழிச்சல் kirāṇi-k-kaḻiccal, *n.* <id.+. Chronic diarrhoea; கிராணி நோயால் உண்டாகும் வயிற்றுப்போக்கு. (M.L.)

கிராதகன் kirātakaṉ, *n.* <*kirātaka*. Hard-hearted villain; கொடியவன். *Colloq.*

கிராதம் kirātam, *n.* <*Kirāta*. Name of a country, one of 56 *tēcam*, q.v.; ஐம்பத்தாறு தேசங்களுள் ஒன்று. (திருவேங். சத. 97.)

கிராதமூர்த்தி kirāta-mūrtti, *n.* <*Kirāta*+. Śiva, as a hunter; வேட்டுவக்கோலங்கொண்ட சிவபிரான். (சங். அக.)

கிராதன் kirātaṉ, *n.* <*kirāta*. 1. Hunter, inhabitant of a desert tract; வேடன். (திவா.) 2. Mountaineer; மலைக்குறவன். *கிராதர்க்கெல்லாம் நாயகன்* (கந்தபு. வள்ளி. 18). 3. Cruel villain; கொடியவன். *இடாதபலதேடுங் கிராதர்பொருள்போல்* (திருப்பு. 186).

கிராதி kirāti, *n.* <Port. *grāde*. [M. *kirāti*.] Lattice, trellis, railing; அளியடைப்பு.

கிராந்தம் kirāntam, *n.* <*krānta*. A particular aspect of a planet when it is in conjunction with the moon; கிரகங்களி லொன்று சந்திரனோடு சேர்ந்திருக்கும் நிலை. (C.G.)

கிராந்தி kirānti, *n.* <*krānti*. 1. (Astron.) Declination of a planet; கிரகச்சாய்வு. 2. Ecliptic. See கிராந்திவீதி.

கிராந்திச்சா kirānti-c-cā, *n.* <id.+*jyā*. See கிரமச்சா.

கிராந்திபாதகதி kirānti-pāta-kati, *n.* <id. +. (Astron.) Precession of the equinoxes; சூரியன் சுகோளக் குறுக்கு ரேகையிற் செல்லுகை.

கிராந்திபாதம் kirānti-pātam, *n.* <id.+. (Astron.) The equinoctial points; மேஷாயன கடகாயனத்தைக் குறிக்கும் இடம்.

கிராந்திமண்டலம் kirānti-maṇṭalam, *n.* <id.+. See கிராந்திவீதி. (W.)

கிராந்திவீதி kirānti-vīti, *n.* <id.+. Circle of the sun's course, ecliptic; சூரியவீதி. (C. G.)

கிராந்து-தல் kirāntu-, *5 v.intr.* (J.) To skulk about, lie in concealment; மறைந்துகொள்ளுதல். —*tr.* To splice, join or interweave the end of a cord with that of another; இணைத்தல்.

கிராம் kirām, *n.* prob. *grāha*. Bridle; கடிவாளம். (பிங்.)

கிராம்பாணி kirāmpāṇi, *n.* <கிராம்பு+ ஆணி. Nail resembling a clove; கிராம்புவடிவான ஆணிவகை. (W.)

கிராம்பு kirāmpu, *n.* <U. *qaranful*. cf. Gr. *karnophullon*. Clove. See இலவங்கம், 1, 2.

கிராம்புப்பூடி kirāmpu-p-pūṭi, *n.* <கிராம்பு +. Clove-shaped ear-jewel; கிராம்பின் உருவுடைய காதணிவகை.

கிராம்புப்பூண்டு kirāmpu-p-pūṇṭu, *n.* <id. +. Primrose willow, m. sh., *Jussiœa suffruticosa*; காட்டுக்கிராம்பு. (L.)

கிராமக்கணக்கன் kirāma-k-kaṇakkaṉ, *n.* <*grāma*+. Village accountant; ஊர்க்கணக்குவேலைபார்ப்போன்.

கிராமக்காவல் kirāma-k-kāval, *n.* <id.+. 1. Service of a village watchman; ஊர்க்காவல். 2. Village watchman; ஊர்க்காவற்காரன்.

கிராமச்சாவடி kirāma-c-cāvaṭi, *n.* <id.+. Public building in a village; ஊர்ப்பொதுவிடம்.

கிராமச்செலவு kirāma-c-celavu, *n.* <id. +. Village contribution for the performance of public functions like festivals; ஊர்ப்பொதுச்செலவு. (M. M. 331.)

கிராமசமுதாயம் kirāma-camutāyam, *n.* <id.+. Rights enjoyed in common by villagers, as the produce or income from trees on common land, tanks, fisheries, etc.; வருமானமுள்ள ஊர்ப்பொதுச்சொத்து. *Colloq.*

கிராமசாந்தி kirāma-cānti, *n.* <id.+. Propitiatory ceremony to the tutelary deity of a village; கிராமத்தின் நன்மைக்காகக் கிராமதேவதைக்குச் செய்யுஞ் சடங்கு.

கிராமசிம்மம் kirāma-cimmam, *n.* <id.+. Dog, as the lion of the village; நாய். *கிராமசிம்மம்போலே படுத்திருந்து* (குருபரம். பன்னீ. 177).

கிராமணி kirāmaṇi, *n.* <*grāmaṇi*. 1. Headman of a village; கிராமத்தலைவன். 2. Leader or chief; தலைமையானவன். (கூர்மபு. ஆதவர். 4.) 3. Peasant, villager; கிராமத்தான். (W.) 4. Title of some Shānārs and Kaikkōḷas; சான்றாரிலும் கைக்கோளரிலும் ஒருசாரார்க்கு வழங்கும் பட்டப்பெயர்.

கிராமத்தார் kirāmattār, *n.* <*grāma*. Inhabitants of a village; ஊர் மகாசனம்.

கிராமத்தான் kirāmattāṉ, *n.* <id. Rustic, uncivilized person; நாட்டுப்புறத்தான்.

கிராமதேவதை kirāma-tēvatai, *n.* <id.+. Tutelary deity of a village; ஊர்காக்குந் தேவதை.

கிராமநத்தம் kirāma-nattam, *n.* <id.+. Ground in a village set apart for building houses, village site (R. F.); ஊரையடுத்து வீடுகள் கட்டக்கூடிய இடம்.

கிராமப்பிரதட்சிணம் kirāma-p-piratațci-ṇam, *n.* <id.+. Procession round a village from left to right; ஊர்வலம்.

கிராமப்பிரவர்த்திகம் kirāma-p-piravart-tikam, *n.* <id.+. Village council; கிராமச்சபை. (G. Tj. D. i, 193.)

கிராமபாகம் kirāma-pākam, *n.* <id.+*bhā-ga*. Portion of the crop delivered to the miras-dars of a village in lieu of their miras rights; தாங்கள் விட்டுக்கொடுத்த சில உரிமைகட்காக மிராசு தாரர்க்குக் கிராமத்தார் செலுத்தும் விளைவுப்பகுதி. (M. M.)

கிராமம்[1] kirāmam, *n.* <*grāma*. 1. Village in an agricultural tract; மருதநிலத்தூர். *அந்தண குறைதரும் கிராமம்* (மணி. 13, 102-3). 2. Village; ஊர். 3. (Mus.) Combination of musical notes going up and down the scale; ஸ்வரங்களின் சேர்க்கைவகை. (பரத. இராக. 80.)

கிராமம்[2] kirāmam, *n.* perh. Pāli *girā*. Waterfowl; நீர்ப்பறவை. (பிங்.)

கிராமமானியம் kirāma-māṉiyam, *n.* <*grāma*+*mānya*. Land enjoyed rent-free by a hereditary proprietor of a part of the village lands; பரம்பரையாக இனம்தார் அநுபவிக்கும் இறையிலி நிலம். (C. G.)

கிராமமுன்சீபு kirāma-muṉcīpu, *n.* <id. +. Head of a village, vested with judicial, criminal and police powers, an office created by the British; ஊரதிகாரஞ்செலுத்தும் உத்தியோகஸ்தன்.

கிராமமேரை kirāma-mērai, *n.* <id.+. Allowance of a portion of the crop to the village officers and servants; கிராமவேலைக்காரரின் சுதந்திரம். (C. G.)

கிராமாதிகாரி kirāmātikāri, *n.* <id.+ *adhi-kārin*. See கிராமாதிபதி.

கிராமாதிபதி kirāmātipati, *n.* <id.+*adhi-pati*. Head of a village, either the proprietor, headman or collector of the revenue on government account (R. F.); ஊர்த்தலைவன்.

கிராமாந்தரம் kirāmāntaram, *n.*<id.+*an-tara*. Rural parts; நாட்டுப்புறம்.

கிராமியம் kirāmiyam, *n.* <*grāmya*. 1. Rustic, vulgar speech; language of uncultured people; இழிசினரது கொச்சைப்பேச்சு. (இலக். வி. 635, உரை.) 2. Barbarism; that which is corrupt; இழிவானது. *கிராமியமாங் கருமச்சழக்கில்* (ஞானவா. திருவா. 11).

கிராமியன் kirāmiyaṉ, *n.* <id. Villager, rustic, peasant; நாட்டுப்புறத்தவன். (சூடா.)

கிராய்[1]**-த்தல்** kirāy-, *11 v. intr.* To make level and smooth by rubbing, polishing; கவர் முதலியவற்றைத் தேய்த்துத் துலக்குதல். (W.)

கிராய்[2] kirāy, *n.* cf. கிருய். 1. Turf; புற்கரடு. 2. A kind of soil in agricultural tract, black and marshy; கருஞ்சேற்றுநிலம். (J.)

கிராயடி-த்தல் kirāy-aṭi, *v. intr.* <கிராய்+ To turf; புற்பற்றைபோடுதல். *Colloq.*

கிராயது kirāyatu, *n.* <*kairāta*. Chiretta. See நிலவேம்பு. (M. M.)

கிரான் kirāṉ, *adj.* <U. *girān*. Dear, high priced; விலைபெற்ற. (C. G.)

கிரி[1] kiri, *n.* <*kiri*. Hog, boar; பன்றி. *கரியுங் கிரியும் பேரையுஞ் சிரையுங் கேட்டு* (வெங்கைக்கோ. 122).

கிரி[2] kiri, *n.* <*giri*. Hill, mountain; மலை. *கொண்டல்கொள் கிரி* (ஞானு. 50, 10).

கிரி[3] kiri, *n.* perh. கரி. Hostage; பிணையாளி. *கிரியிருக்கிறவன். Loc.*

கிரிகரன் kirikaraṉ, *n.* <*kṛkara*. A vital air of the body. See கிருகரன். *தும்மலுட னிரு மல்வரும் கிரிகரனல்* (வேதா. சூ. 76).

கிரிகன்னி[1] kiri-kaṉṉi, *n.* <*giri*+. Durgā, as a form of Pārvatī; துர்க்கை. *விந்தை கிரிகன்னி கரியென்பர்* (பாரத. பன்னிரண்டாம். 90).

கிரிகன்னி[2] kiri-kaṉṉi, *n.* <*giri-karṇi*. White flowered mussell-shell creeper. See வெள்ளைக்காக்கணம். (மலை.)

கிரிகிரி kiri-kiri, *n.* prob. *giri*+*kiri*. Wild hog; மருட்டுப்பன்றி. (திவா.)

கிரிகை kirikai, *n.* <*kriyā*. See கிரியை. (W.)

கிரிகோலம் kiri-kōlam, *n.* prob. கரி[1]+. Disorderliness, slovenliness, confusion, want of decorum, uncomeliness; அலங்கோலம். (J.)

கிரிச்சம் kiriccam, *n.* <*kṛcchra*. Difficulty, trouble, hardship; வருத்தம். *காளை கிரிச்சமெல் லாங் கழித்தி* (கம்பரா. திருமுடி. 28).

கிரிச்சரம் kiriccaram, *n.* <id. See கிருச்சிரம், 1. *கிரிச்சர மென்ப மன்னே* (காசிக. வியாதன். சாப. 14).

கிரிச்சரரோகம் kiriccara-rōkam, *n.* <id. +. A urinary disease; மூத்திரரோகவகை. (சீவரட்.)

கிரிச்சரீடம் kiriccarīṭam, *n.* True nutmeg. See சாதிக்காய். (மலை.)

கிரிச்சிரம் kiricciram, *n.* < *kṛcchra.* See கிருச்சிரம், 1. சாந்திராயண கிரிச்சிரம் (காஞ்சிப்பு. சிவபு. 57).

கிரிச்சிரீட்டம் kiricciriṭṭam, *n.* See கிரிச்சரீடம். (யாழ். அக.)

கிரிசம் kiricam, *n.* < *kṛśa.* Slenderness, thinness, tenderness; மென்மை. (யாழ். அக.)

கிரிசரம் kiri-caram, *n.* < *giri* + *cara.* Elephant, as born in mountain; மலையிற் பிறந்த யானை. (திவா.)

கிரிசன் kiricaṉ, *n.* < *Giri-śa.* Šiva, as dwelling in Mt. Kailāsa; சிவன். கிரிசனை யுன்னி (பாரத. அருச்சனன்றவ. 26).

கிரிசு kiricu, *n.* < T. *kirusu.* See கிரிசுக்கத்தி.

கிரிசுக்கத்தி kiricu-k-katti, *n.* <id. +. Malay dagger, small double-edged sword; குறுவாள். (W.)

கிரிசை[1] kiricai, *n.* < *giri-jā.* Pārvatī, as born of the Himālaya; பார்வதி. பார்ப்பதியே வம்பறு கிரிசை (திருவானைக். கோச்செங். 81).

கிரிசை[2] kiricai, *n.* < *kriyā.* See கிரியை. நம்பாவைக்குச் செய்யுங் கிரிசைகள் கேளீரோ (திவ். திருப்பா. 2).

கிரிதசாக்கிரி kirita-cākkiri, *n.* A musical mode including several tunes; ஒருவகைப் பண். (W.)

கிரிதுர்க்கம் kiri-turkkam, *n.* < *giri* + *durga.* Hill fort, mountain stronghold; மலையரண். போரணுனை கிரிதுர்க்க நீக்குதல் (ஒருதுறைக். 41).

கிரிப்பிரதட்சிணம் kiri-p-piratatciṇam, *n.* <id. +. Going round a sacred hill from left to right; க்ஷேத்திரமாயுள்ள மலையை வலம்வருகை.

கிரிமல்லிகை kiri-mallikai, *n.* < *giri-mallikā.* 1. Conessi bark. See வெட்பாலை. (மலை.) 2. Indian cork. See மலைமல்லிகை. (W.)

கிரிமிஞ்சி kirimiñci, *n.* < U. *qirmiz.* Cochineal, the dried female insect; scarlet dyestuff; ஒருவகைச் சிவப்புச்சாயம். (G. Tj. D. i, 120.)

கிரிமிஞ்சிப்புழு kirimiñci-p-puḻu, *n.* <id. +. Cochineal insect, *Coccus cacti;* புழுவகை. (M. M.)

கிரியாசத்தி kiriyā-catti, *n.* < *kriyā* +. (Šaiva.) Šiva's Energy which provides the souls with gross and subtle bodies and with experience-planes according to their *karma*, one of *pañca-catti*, q.v.; பஞ்சசத்திகளுள் ஒன்றாகி உலக சிருட்டியாதிகளைச்செய்து கன்மங்களுக்கு ஈடாகத் தனுகரணங்களை ஆன்மாக்களுக்குக் கொடுக்குஞ் சிவசத்தி. (சி. சி. 1, 63.)

கிரியாசைவம் kiriyā-caivam, *n.* <id. +. (Šaiva.) A Šaiva sect which gives prominence to rites and ceremonies, one of 16 *caivam*, q.v.; சைவம் பதினாறனுள் கிரியைகளையே முக்கியமாகக் கொள்ளுஞ் சமயம். (த. நி. போ. 256.)

கிரியாத்து kiriyāttu, *n.* < *kairāta.* [M. *kiriyāttu.*] Chiretta. See நிலவேம்பு. (மலை.)

கிரியாதீக்ஷை kiriyā-tīkṣai, *n.* < *kriyā* +. (Šaiva.) See கிரியாவதி.

கிரியாபதம் kiriyā-patam, *n.* <id. +. Finite verb, as the word denoting action; வினைமுற்றுச்சொல்.

கிரியாபாதம் kiriyā-pātam, *n.* <id. +. (Šaiva.) The section of the *civākamam*, which deals with the modes of worship; சிவாகமத்தில் பராபரக்கிரியைகளின் வகைகளைக்கூறும் பகுதி.

கிரியாபூசை kiriyā-pūcai, *n.* <id. +. (Šaiva.) The worship offered to Šiva through *kiriyai;* கிரியாபாதத்தான் புரியும் பூசை. (W.)

கிரியாமார்க்கம் kiriyā-mārkkam, *n.* <id. +. (Šaiva.) Rites and ceremonies as the means to attain salvation; முத்திக்குரிய கிரியையாகிய உபாயம். (W.)

கிரியாலோபம் kiriyā-lōpam, *n.* <id. +. Omission to perform duties ordained by Šruti, etc.; வைதிகக்கடங்கை அனுட்டிக்கும்போது சுருதிமுதலியவை விதித்த அங்ககாரியங்களில் நேருங் குறை.

கிரியாவதி kiriyāvati, *n.* < *kriyāvatī.* (Šaiva.) Initiatory ceremony in which the guru actually performs the necessary rites, as dist. fr. *ñāṉavati*, a kind of *auttiri-tītcai*, q.v.; குண்டமண்டலாதிகளையும் வேதிகளையும் புறத்தே அமைத்து ஆகமத்திற்கூறியபடி செய்யும் ஔத்திரிதீக்ஷைவகை. (சி. சி. 8, 3, சிவாக்.)

கிரியாவான் kiriyāvāṉ, *n.* < *kriyāvān* nom. sing. of *kriyāvat.* One who duly performs his duties as ordained in Hindu śāstras; அனுஷ்டானமுள்ளவன்.

கிரியாவுத்திரி kiriyāvuttiri, *n.* < *kriyā* + *hautrī.* (Šaiva.) An initiatory ceremony, dist. fr. *ñāṉavuttiri.* See கிரியாவதி.

கிரியை kiriyai, *n.* < *kriyā.* 1. Act, action, deed; செய்கை. 2. (Šaiva.) Second of the fourfold means of attaining salvation, which consists in worshipping Šiva with rites and ceremonies prescribed in the Āgamas; சிவனை ஆகமங்களில் விதித்தவாறு புறத்தொழிலானும் அகத்தொழிலானும் வழிபடுகை. (சி. போ. பா. 359.) 3. Funeral rites and solemnities; ceremony of offering oblations

to the deceased ancestors; உத்தரகிரியை. 4. (Mus.) Mode of measuring time, one of ten *tāḷa-p-pirāṇam*, q.v.; தாளப்பிராணத்தொன்று. (பரத. தாள. 30.) 5. (Gram.) Verb; வினை. 6. See கிரியாசத்தி. 7. See கிரியாவதி. (சி. சி. 8, 3.)

கிரியைக்கேடு kiriyai-k-kēṭu, *n.* <id.+. Slovenliness, debauchery, disorderliness; முறைக்கேடு. (W.)

கிரியைகெடு-தல் kiriyai-keṭu-, *v. intr.* <id.+. To be disorderly, slovenly, destitute of good conduct, irregular in habits; ஒழுங்கறுதல். *கிரியைகெட்டவன்.*

கிரியையில்ஞானம் kiriyaiyil-ñāṉam, *n.* <id.+. (Šaiva.) Ecstatic condition during mental worship; அந்தரியாக உறைப்பின்கண் நிகழும் ஓர் அனுபவ உணர்வு. (சி. போ. பா. 8, 1, 2, பக். 358.)

கிரியையில்யோகம் kiriyaiyil-yōkam, *n.* <id.+. (Šaiva.) Mental worship of Šiva; மானசபூசையாகிய அந்தரியாகம். (சி. போ. பா. 8, 1, 2, பக். 358.)

கிரியையிற்கிரியை kiriyaiyiṟ-kiriyai, *n.* <id.+. (Šaiva.) Worshipping Šiva in liṅga form after the purificatory ceremonies enjoined in Āgamas; சிவாகமத்திற் கூறிய சுத்திமுன்னாக சிவ லிங்கவடிவிற் செய்யும் பூசனை. (சி. போ. பா. பக். 357.)

கிரியையிற்சரியை kiriyaiyiṟ-cariyai, *n.* <id.+. (Šaiva.) Collecting materials for the worship of Šiva; சிவபூசைக்கு வேண்டப்படும் உப கரணங்களெல்லாம் செய்துகோடல். (சி. போ. பா. பக். 357.)

கிரிராசன் kiri-rācaṉ, *n.* <*giri-rāja*. Himālaya, as the king of mountains; இமயமலை. (பிங்.)

கிரிவாணம் kiri-vāṇam, *n.* prob. id.+ வாழ்-. Antimony; நீலாஞ்சனக்கல். (W.)

கிரீச்செனல் kiriccenal, *n.* Onom. expr. signifying creaking sound; ஓர் ஒலிக்குறிப்பு.

கிரீசன் kirīcaṉ, *n.* <*giri+īśa*. Šiva, as lord of Mt. Kailāsa; சிவன். (பிங்.)

கிரீட்டி kirīṭṭi, *n.* cf. கிருட்டி[3]. Square-stalked vine. See பிரண்டை. (மலை.)

கிரீட்டுமம் kirīṭṭumam, *n.* <*grīṣma*. Hot season, the months of *Āṉi* and *Āṭi*; முதுவேனிற் காலம். (பிங்.)

கிரீட்மசுந்தரி kirīṭma-cuntari, *n.* <*grīṣma-sundara*. Medicinal plant common in rice fields. See செருப்படி. (தைலவ. தைல. 106.)

கிரீடதாரணம் kirīṭa-tāraṇam, *n.* <*kirīṭa* +. Crowning, coronation; முடிதரிக்கை.

கிரீடதாரி kirīṭa-tāri, *n.* <id.+*dhārin*. One who wears a diadem, crowned prince, king; முடிதரித்தவன்.

கிரீடம்[1] kirīṭam, *n.* <*kirīṭa*. Crown, diadem; மணிமுடி. (திவா.)

கிரீடம்[2] kirīṭam, *n.* Hedge cotton. See வேலிப்பருத்தி. (மலை.)

கிரீடாதிபதி kirīṭātipati, *n.* <*kirīṭa+adhi-pati*. Crowned king; முடிசூடிய மன்னன்.

கிரீடாப்பிரமவாதி kirīṭā-p-pirama-vāti, *n.* <*krīḍā*+. A sect of Vēdantists who hold that all the manifestations in the universe are but the sport of Brahman; உலகத்திலுள்ள தோற்றங்களெல்லாம் பிரமத்தின் விளையாட்டென்று வாதிக்கும் சமயத்தான். (தத்துவநிஜா. 94.)

கிரீடாபர்வதம் kirīṭā-parvatam, *n.* <id.+. Mound erected for pastime; விளையாடுதற்கு அமைக்கப்பெற்ற செய்குன்று.

கிரீடி[1] kirīṭi, *n.* <*Kirīṭin*. 1. Arjuna; அருச்சுனன். (திவா.) 2. King; அரசன். (W.)

கிரீடி[2]**-த்தல்** kirīṭi-, ***11 v. intr.*** <***krīḍ***. 1. To sport, play; விளையாடுதல். *கிரீடிக்கும் பாமும்* (பதிறெ. பொன்வண். 47). 2. To copulate; புணர்தல்.

கிரீடை kirīṭai, *n.* <***krīḍā***. 1. Play, sport, amusement; விளையாட்டு. 2. Pastime of women; மகளிர்விளையாட்டு. (திவா.) 3. Copulation, coition; புணர்ச்சி. (சூடா.)

கிரீதன் kirītaṉ, *n.* <***krīta***. Son purchased from his natural parents and adopted, one of 12 *puttiraṉ*, q.v.; பெற்றோரிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்ட சுவீகாரபுத்திரன். (வலா. 31.)

கிரீவம் kirīvam, *n.* <***grīvā***. Neck; கழுத்து. (திவா.)

கிரீஷ்மருது kirīṣma-rutu, *n.* <***grīṣma+ṛtu***. Summer, the months of *Āṉi* and *Āṭi*, one of six *rutu*, q.v.; முதுவேனிற்காலம்.

கிருக்கன் kirukkaṉ, *n.* <கிருக்கு-. Crazy fellow. See கிறுக்கன்.

கிருக்கு-தல் kirukku-, *5 v. intr.* See கிறுக்கு-. *Colloq.*

கிருகச்சித்திரம் kiruka-c-cittiram, *n.* <*gṛha+chidra*. Family dissension; குடும்பச் சச்சரவு.

கிருகசாரி kiruka-cāri, *n.* <*gṛha-cārin*. Householder; இல்லற நிலையிலுள்ளவன். *பேரற மோம்பிடுங் கிருகசாரியை யூட்டிய கேண்மையர்* (சிவ தரு. கோபுர. 179).

கிருகத்தன் kirukattaṉ, *n.* <***gṛha-stha***. Householder. See கிருகஸ்தன். *கலன்கழியா மகளிர் கிருகத்தர்* (ஏகாதசி. காலநிர். 40).

கிருகதேவதை kiruka-tēvatai, *n.* <*gṛha* +. Household deity; இல்லுறைதெய்வம்.

கிருகப்பிரதிஷ்டை kiruka-p-piratiṣṭai, *n.*<id.+. Settling a poor family by providing it with house, provisions, etc.; புது வீடு கட்டிக்கொடுத்து ஏழைக்குடும்பத்தை ஸ்தாபிக்கை.

கிருகப்பிரவேசம் kiruka-p-piravēcam, *n.* <id.+. 1. Ceremony performed when occupying a newly built house; புதுவீட்டிற் குடிபுகும் போது செய்யுஞ் சடங்கு. 2. Ceremony performed when a bride is first taken to her husband's house; மணப்பெண்ணைக் கணவன்வீட்டிற்கு முதன் முறை அழைத்துக்கொள்ளும்போது செய்யுஞ் சடங்கு.

கிருகபதி kiruka-pati, *n.*<id.+. 1. Master of the house; வீட்டுத்தலைவன். 2. Householder; இல்லறத்தான். *பரிகாரங் கிருகபதிக்கும் பிரமசரிக்கும் பகர்ந்திடுவோம்* (சிவதரு. பரிகார. 2).

கிருகம் kirukam, *n.* <*gṛha.* House; வீடு. *கிருகத்தின் மைந்தர்கண் மேவுறுமையில்* (விநாயகபு. 20, 10).

கிருகரன் kirukaraṉ, *n.* <*kṛkara.* A vital air of the body, causing hunger, anger, etc., one of *taca-vāyu*, q.v.; பசி கோபம் முதலியவற்றை யுண்டாக்குந் தசவாயுக்களுள் ஒன்று. (சிலப். 3, 26, உரை.)

கிருகஸ்தம் kirukastam, *n.* <*gṛha-stha.* Life of a householder, one of four *ācciramam*, q. v.; ஆச்சிரமம் நான்கனுள் ஒன்றான இல்லறநிலை.

கிருகஸ்தன் kirukastaṉ, *n.* <*gṛha-stha.* 1. Householder, one in the second stage of life or *ācciramam;* இல்வாழ்வான். 2. Honest, worthy man; man of status; கௌரவநிலையிலுள்ளவன். *Colloq.*

கிருகாராதனை kirukārātaṉai, *n.* <*gṛha*+*ā-rādhanā.* Worship in the house; வீட்டுத் தெய்வ வழிபாடு.

கிருகி kiruki, *n.* <*gṛhin* Householder; கிருகஸ்தன். *பிரமசரி கிருகியென்னவே பேச மிருவரு மே* (சைவச. ஆசா. 60).

கிருகிணி kirukiṇi, *n.* <*gṛhiṇī.* Mistress of the house, wife; மனைவி.

கிருச்சிரம் kirucciram, *n.* <*kṛcchra.* 1. Religious observance for the expiation of sin; பிராயச்சித்தமாக அனுஷ்டிக்கப்படும் விரதம். *கிருச் சிரஞ் சாந்தபன முதலரிதாய விரதம்* (பிரபோத. 13, 19). 2. Urethral stricture; நீர்ச்சுருக்குநோய். (M.L.)

கிருசம் kirucam, *n.* <*kṛśa.* Leanness, thinness, weakness; இளைப்பு. (சூடா.)

கிருசரான்னம் kirucarāṉṉam, *n.* <*kṛsara*+*anna.* A dainty made of sesamum and rice; அன்னத்துடன் எள்ளுப்பொடிகலந்த உணவு. (சைவச. பொது. 544, உரை.)

கிருசரோகம் kiruca-rōkam, *n.* <*kṛśa*+*rōga.* Emaciating disease; தேகத்தை வற்றி யொடுக்கும் நோய். (பைஷஜ. 230.)

கிருட்டி[1] kiruṭṭi, *n.* <*gṛṣṭi.* Young cow that has calved once; தலையீற்றுப் பசு. (சூடா.)

கிருட்டி[2] kiruṭṭi, *n.* <*ghṛṣṭi.* Hog; பன்றி. *எதிர்த்த கிருட்டியின்* (அரிச். பு. வேட்டஞ். 70).

கிருட்டி[3] kiruṭṭi, *n.* 1. cf. கிரீட்டி. Square-stalked vine. See பிரண்டை. (மலை.) 2. A kind of bird; பறவைவகை. (பதார்த்த. 893.)

கிருட்டிணசகாயன் kiruṭṭiṇa-cakāyaṉ, *n.* <*Kṛṣṇa*+. Arjuna, as having Kṛṣṇa for his comrade; அருச்சுனன். (பிங்.)

கிருட்டிணசீரகம் kiruṭṭiṇa-cīrakam, *n.* <id.+. Black cumin. See கருஞ்சீரகம். (மலை.)

கிருட்டிணபக்கம் kiruṭṭiṇa-pakkam, *n.* <id.+. See கிருஷ்ணபக்ஷம்.

கிருட்டிணபாணம் kiruṭṭiṇa-pāṇam, *n.* prob. *kṛṣṇa-parṇī.* Strychnine tree. See எட்டி. (மலை.)

கிருட்டிணபேடம் kiruṭṭiṇa-pēṭam, *n.* <*kṛṣṇa-bhedā.* Christmas rose. See கடுரோகிணி. (மலை.)

கிருட்டிணம் kiruṭṭiṇam, *n.* <*kṛṣṇa.* 1. Blackness, darkness, dark-blue colour; கறுப்பு. 2. Pepper; மிளகு. (மலை.)

கிருட்டிணமிருகம் kiruṭṭiṇa-mirukam, *n.* <id.+. Black antelope *Antilope bezoartica;* கருநிறமுள்ள மான்வகை.

கிருட்டிணமூர்த்தி kiruṭṭiṇa-mūrtti, *n.* <id.+. Lord Kṛṣṇa; கண்ணபிரான்.

கிருட்டிணமூலி kiruṭṭiṇa-mūli, *n.* prob. *kṛṣṇa-mūlī.* Holy basil; துளசி. (மலை.)

கிருட்டிணராயன் kiruṭṭiṇa-rāyaṉ, *n.* <*Kṛṣṇa*+. Krishna Rāya, the famous king of the Narasimha dynasty of Vijayanagar, 1509-1530; 16-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விஜயநகர ராஜ்யத்தை ஆண்ட பிரசித்த அரசருள் ஒருவர். *கிருட் டிணராயன் கைபோற் கொடைமடமென்பது* (சூடா. 9, 10).

கிருட்டிணவர்ணம் kiruṭṭiṇa-varṇam, *n.* <id.+. 1. Black colour; கறுப்புநிறம். 2. Iron sand, as black; இரும்புமணல். (W.)

கிருட்டிணவல்லி kiruṭṭiṇa-valli, *n.* <*kṛṣṇa-valli.* Indian sarsaparilla. See நன்னாரி. (மலை.)

கிருட்டிணன் kiruṭṭiṉaṉ, *n.* <*Kṛṣṇa*. 1. Kṛṣṇa. See கிருஷ்ணன். (சூடா.) 2. Arjuna; அருச்சுனன். (பிங்.)

கிருட்டிணாப்பிரகம் kiruṭṭiṇāppirakam, *n.* <id. + *abhraka*. Mica; அப்பிரகவிசேடம். (W.)

கிருட்டிணி kiruṭṭiṇi, *n.* perh. id. Mussell-shell creeper. See காக்கணம். (மலை.)

கிருட்டிணை kiruṭṭiṇai, *n.* <*Kṛṣṇā*. 1. Draupadi; திரௌபதி. 2. The river Krishna; கிருஷ்ணாநதி. 3. Indian mustard. See கடுகு. (மலை.) 4. Cashew tree. See முந்திரிகை. (மலை.) 5. Cubebs. See வால்மிளகு. (மலை.)

கிருட்டினபக்கம் kiruṭṭiṉa-pakkam, *n.* <*kṛṣṇa*+. See கிருஷ்ணபக்ஷம். (சிலப். 23, 133. அரும்.)

கிருட்டிணாசினம் kiruṭṭiṇāciṉam, *n.* <id. + *ajina*. Skin of the black antelope. See கிருஷ்ணாஜினம். (திருமுரு. 129, உரை.)

கிருத்தம் kiruttam, *n.* <*kṛta*. That which is done, made, produced; செய்யப்பட்டது. *சத்த மனித்தங் கிருத்தத் தாலெனின்* (மணி. 29, 395).

கிருத்தி kirutti, *n.* <*kṛtti*. Skin, hide; தோல். (சூடா.)

கிருத்திகாதீபம் kiruttikā-tīpam, *n.* <*kṛttikā*+. Lights lit on the evening of *tiru-k-kārttikai*; கார்த்திகைவிளக்கு.

கிருத்திகை kiruttikai, *n.* <*Krittikā*. The third *nakṣatra*. See கார்த்திகை.

கிருத்திமம்[1] kiruttimam, *n.* prob. *kṛtti*. See கிருத்தி. (திவா.)

கிருத்திமம்[2] kiruttimam, *n.* <*kṛtrima*. 1. That which is artificial; செயற்கையானது. (சூடா.) 2. Falsehood, lie, fraud; பொய். (சூடா.) 3. A class of demons; பூதம். *கிருத்திம வினம் பல குதித் தன கிளைத்தே* (இரகு. திக்குவி. 113).

கிருத்தியம் kiruttiyam, *n.* <*kṛtya*. 1. Act, action, operation, function; தொழில். *பூதங்கள் கிருத்தியகர்த்தாவென் று* (சி. சி. 1, 4, மறைஞா.). 2. Five-fold functions of God. See பஞ்சகிருத்தியம். 3. Funeral rites, obsequies; உத்தரக்கிரியை. *Colloq.*

கிருத்திரசிவாதம் kiruttiraci-vātam, *n.* <*gṛdharasī* + *vāta*. Sciatica; துடைநரம்புகளைப் பற்றிய வியாதி. (இங். வை. 227.)

கிருத்திரம் kiruttiram, *n.* <*gṛdhra*. Eagle; கழுகு. (நிகண்டு.)

கிருத்திரிமபுத்திரன் kiruttirima-puttiraṉ, *n.* <*kṛtrima*+. See கிருத்திரிமன்.

கிருத்திரிமம் kiruttirimam, *n.* <*kṛtrima*. 1. That which is artificial, sham; போலியானது. கிருத்திரிமவேடம். 2. Deception, fraud; வஞ்சனை. *கன்னியர் கிருத்திரிமத்தைக்காணரிது* (பஞ்ச. அர்த்தசா 61). 3. Mischief; சேட்டை. *Colloq.*

கிருத்திரிமன் kiruttirimaṉ, *n.* <id. Artificial or adopted son; adult son adopted without the consent of his natural parents, one of 12 *puttiraṉ*, q.v.; பெற்றோர் அனுமதியின்றிச் சுவீகாரபுத்திரனாகச் செய்துகொள்ளப்பட்டவன்.

கிருதக்கினதை kirutakkiṉatai, *n.* <*kṛta-ghna-tā*. Ingratitude; செய்ந்நன்றிகோறல்.

கிருதக்கினன் kirutakkiṉaṉ, *n.* <*kṛta-ghna*. Ungrateful person; நன்றிகொன்றவன்.

கிருதக்கு kirutakku, *n.* perh. Pkt. *kṛtaka*. Roguery, perversity; வக்கிரம். *Loc.*

கிருதகிருத்தியன் kiruta-kiruttiyaṉ, *n.* <*kṛta-kṛtya*. One who has done his duty; செய்தற்குரிய கடமையைச் செய்து முடித்தவன். (சிலப். 10, 177, உரை.)

கிருதஞ்ஞதை kirutaññatai, *n.* <*kṛtajña-tā*. Gratitude; செய்ந்நன்றியறிகை.

கிருதஞ்ஞன் kirutaññaṉ, *n.* <*kṛta-jña*. Grateful person; செய்ந்நன்றியறிபவன்.

கிருதம்[1] kirutam, *n.* <*kṛta*. 1. That which is done, made; செய்யப்பட்டது. 2. The first yuga. See கிருதயுகம்.

கிருதம்[2] kirutam, *n.* <*ghṛta*. 1. Ghee; நெய். (திவா.) 2. A medicinal preparation having ghee as the vehicle; நெய்கலந்த குழம்புவடிவான மருந்து.

கிருதம்[3] kirutam, *n.* cf. *haritaśakha*. Red Indian laburnum. See செம்முருங்கை. (மலை.)

கிருதயுகம் kiruta-yukam, *n.* <*kṛta*+. The first of four yugas, golden age of the Hindus, consisting of 17,28,000 years; நான்குயுகங்களுள் **17,28,000** வருடங்கொண்ட முதல் யுகம்.

கிருதன் kirutaṉ, *n.* prob. *ahaṅ-kṛta*. Arrogant, insolent fellow; கருவமுள்ளவன். (W.)

கிருதா kirutā, *n.* <U. *girdā*. Ringlets on the cheeks almost touching the curls of moustache, whiskers; கன்னமீசை.

கிருதாமீசை kirutā-mīcai, *n.* <id. +. See கிருதா.

கிருதார்த்தன் kiruttārtaṉ, *n.* <*kṛta* + *artha*. One who has attained his object; பேறுபெற்றவன்.

கிருதி kiruti, *n.* <*kṛti*. Musical composition; கீர்த்தனம். இரண்டுகிருதி பாடினான்.

கிருது kirutu, *n.* cf. *ahaṅ-kṛti.* 1. Arrogance, haughtiness, self-conceit; செருக்கு. அம் பட்டக்கிருதும் வண்ணர ஒயிலும். 2. Affectation, foppery; ஒய்யாரம். வீண்செருக்கோ பெறுகிருதோ (தனிப்பா. ii, 55, 134).

கிருதுக்காரன் kirutu-k-kāraṉ, *n.* < கிருது +. Arrogant, insolent person; self-conceited man; கருவமுடையவன்.

கிருதுநடை kirutu-naṭai, *n.* < id. +. Proud strutting gait, affectation; ஒய்யாரநடை. (W.)

கிருதுப்பாகை kirutu-p-pākai, *n.* < id. +. Turban slipped on one side of the head; ஒருபக்கமாகத் தரிக்கும் தலைப்பாகை. (W.)

கிருதுப்பேச்சு kirutu-p-pēccu, *n.* < id. +. Impertinent talk, insolent speech; செருக்குமொழி.

கிருதுவுடை kirutu-v-uṭai, *n.* < id. +. Foppish dress, finery; இடம்பமான உடை. (W.)

கிருபணத்துவம் kirupaṇattuvam, *n.* < *kṛpaṇa-tva.* Niggardliness, miserliness; உலோபம்.

கிருபணம் kirupaṇam, *n.* < *kṛpaṇa.* See கிருபணத்துவம். (யாழ். அக.)

கிருபணன் kirupaṇaṉ, *n.* < id. Niggard, miser; உலோபி.

கிருபன் kirupaṉ, *n.* < *Kṛpa.* See கிருபாசாரியன். கேதமில் சிந்தையான் கிருபனென்றுளான் (பாரத. வாரணா. 29).

கிருபாகடாக்ஷம் kirupā-kaṭākṣam, *n.* < *kṛpā* +. Benign, gracious look; look of mercy, compassion; அருட்பார்வை.

கிருபாகரம் kirupākaram, *n.* < id. + *kr.* Divine grace; திருவருள். உனது கிருபாகரமேதோ (திருப்பு. 499.)

கிருபாகரன் kirupākaraṉ, *n.* < id. + *ākara.* The fountain of mercy or grace, as God; அருளுக்கு இருப்பிடமானவன். கிருபாகர ஞானகர (கந்தரலங். 21).

கிருபாசமுத்திரம் kirupā-camuttiram, *n.* < id. +. Ocean of grace, as God; கருணைக்கடல்.

கிருபாசனம் kirupācaṉam, *n.* < id. + *āsana.* Lit., mercy-seat, God, as the seat of mercy and grace; அருளுக்கு இருப்பிடமான கடவுள். *Chr.*

கிருபாசாரியன் kirupācāriyaṉ, *n.* < *Kṛpa* + *ācārya.* A Brahman preceptor who taught archery to the Kauravas and Pāṇḍavas, one of seven *cirañcīviyar*, q. v.; கௌரவ பாண்டவர்களுக்கு வில்லாசிரியராயிருந்தவருள் ஒருவர். (பாரத.)

கிருபாமூர்த்தி kirupā-mūrtti, *n.* < *kṛpā* +. One who is the embodiment of mercy; கருணையே உருவானவன்.

கிருபாளு kirupāḷu, *n.* < id. Merciful, compassionate person; கருணையுள்ளவன். மாம்ஸத்தை மாற்றி அன்னுதிகளினுல் உருசிக்கப்பண்ணிற் கிருபாளுவாவான் (சி. சி. பர. சௌத். மறு. 6).

கிருபை kirupai, *n.* < *kṛpā.* Grace, mercy, clemency, compassion, benevolence; கருணை. (பிங்.)

கிருபைக்கண் kirupai-k-kaṇ, *n.* < id. +. Gracious or merciful look; அருட்பார்வை. (யாழ். அக.)

கிருமி kirumi, *n.* < *kṛmi.* Worm, insect, maggot; புழு. ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும் (திருவாச. 4, 14).

கிருமிக்கிரந்தி kirumi-k-kiranti, *n.* < id. +. Canker, an eating, spreading sore; அரிபுண். (யாழ். அக.)

கிருமிக்குன்றம் kirumi-k-kuṉṟam, *n.* prob. id. + குன்று-. Black-oil tree. See வாலுளுவை. (மலை.)

கிருமிச்சுரம் kirumi-c-curam, *n.* < id. +. Fever caused by worms; கிருமிகளால் உண்டாம் காய்ச்சல்வகை. (மூ. அ.)

கிருமிச்சூலை kirumi-c-cūlai, *n.* < id. +. Gnawing pain caused by intestinal worms; கிருமிகளாலுண்டாகுஞ் சூலைவகை. (மூ. அ.)

கிருமிச்சொறி kirumi-c-coṟi, *n.* < id. +. Itching caused by worms; கிருமிகளாலுண்டாகுஞ் சொறிநோய் வகை. (மூ. அ.)

கிருமிசத்துரு kirumi-catturu, *n.* < id. +. 1. Palas tree, m. tr., *Butea frondosa;* பலாசு. (L.) 2. Palas seed; பலாசம்விதை. (W.)

கிருமிநாசம் kirumi-nācam, *n.* < id. +. 1. Black henbane, *Hyoscyamus niger;* குராசானியோமம். (மலை.) 2. Palas seed; பலாசம்விதை. (மூ. அ.) 3. Strainer vine. See பேய்ப்பீர்க்கு. (மலை.) 4. Worm-killer. See பங்கம்பாளை. (மலை.)

கிருமிநாசி kirumi-nāci, *n.* prob. id. + *nāśin.* Tinnevelly senna. See நிலவாகை. (மலை.)

கிருமிநிசயம் kirumi-nicayam, *n.* < id. +. (Śaiva.) A hell, one of eight *irācanarakam*, q. v.; இராசநரகம் எட்டில் ஒன்று. (சி. போ. பா. 2, 3, 1.)

கிருமிமலடு kirumi-malaṭu, *n.* < id. +. Sterility from animalculæ in the uterus; கருப்பாசயத்திற் கிருமிகளிருத்தலாலுண்டாகும் மலட்டுத்தன்மை. (மூ. அ.)

கிருமியரி kirumi-y-ari, *n.* < id. + *hari.* Windberry. See வாயுவிளங்கம்.

கிருமியுணா kirumi-y-uṇā, *n.* < id. +. A hell where souls in the form of worms eat and

are eaten by worms; ஒருவகை நரகம். கிருமியுணு வெனுநரகந் தனிற்புகுந்து . . . கிருமிகளுக்குணவாகித் தாமு மவைதின்று (சேதுபு. தனுக். 12).

கிருமியோமம் kirumi-y-ōmam, *n.* <id.+. A vermifuge containing omum; மருந்துவகை. (W.)

கிருமிரோகம் kirumi-rōkam, *n.* <id.+. Worms, as a disease; நாக்குப்பூச்சியை உண்டாக்கும் நோய். (பைஷஜ. 231.)

கிருமிவை-த்தல் kirumi-vai-, *v. intr.* <id +. To breed maggots, as in a sore; புண்ணிற் புழுவுண்டாதல்.

கிருஷ்ணசர்ப்பம் kiruṣṇa-carppam, *n.* <*kṛṣṇa*+. Black cobra; கருநாகம்.

கிருஷ்ணதுளசி kiruṣṇa-tuḷaci, *n.* <id.+. Purple-stalked basil. See கருந்துளசி.

கிருஷ்ணதோஷம் kiruṣṇa-tōṣam, *n.*<id. +. Typhus fever; ஒருவகை விஷசுரம்.

கிருஷ்ணபக்ஷம் kiruṣṇa-pakṣam, *n.* <id. +. Dark half of a lunar month or the period of the waning moon; அபரபட்சம்.

கிருஷ்ணபாணம் kiruṣṇa-pāṇam, *n.* prob. *kṛṣṇa-parṇa*. Strychnine tree. See எட்டி.

கிருஷ்ணபோளம் kiruṣṇa-pōḷam, *n.* <*kṛṣṇa*+. Socotrine aloe. See கரியபோளம்.

கிருஷ்ணம் kiruṣṇam, *n.* <*kṛṣṇa*. 1. Blackness, darkness, dark blue colour; கறுப்பு. (W.) 2. Name of an Upaniṣad; நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று.

கிருஷ்ணமண்டலம் kiruṣṇa-maṇṭalam, *n.* <id.+. See கிருஷ்ணமணி.

கிருஷ்ணமணி kiruṣṇa-maṇi, *n.* <id.+. Iris of the eye; கண்மணிப்பாவை. (இங். வை.)

கிருஷ்ணமூர்த்தி kiruṣṇa-mūrtti, *n.* <id. +. Lord Kṛṣṇa; கண்ணபிரான்.

கிருஷ்ணயசுர்வேதம் kiruṣṇa-yacur-vētam, *n.*<id.+. The black Yajurvēda, as having the Mantras and Brāhmaṇas mixed up, dist. fr. *cukkila-yacur-vētam*; எசுர்வேதத்தின் இருபகுதிகளுள் மந்திரமும் பிராமணமும் கலந்துகிடக்கும் பகுதி.

கிருஷ்ணன் kiruṣṇaṉ, *n.* <*Kṛṣṇa*. 1. Kṛṣṇa, son of Vasudēva, one of ten incarnations of Viṣṇu; கண்ணபிரான். 2. Iris of the eye; கண்மணிப்பாவை.

கிருஷ்ணஜயந்தி kiruṣṇa-jayanti, *n.* <id. +. Celebration of Kṛṣṇa's birthday; ஸ்ரீஜயந்தி.

கிருஷ்ணா kiruṣṇā, *n.* <*Kṛṣṇā*. The river Krishna; ஒரு நதி.

கிருஷ்ணார்ப்பணம் kiruṣṇārppaṇam, *n.* <*kṛṣṇa*+*arppaṇa*. Expression used generally at the close of ablutions, rituals, etc., dedicating them to Śrī Kṛṣṇa; கிரியைமுடிவில் அதனைக்கண்ணபிரானுக்கு அர்ப்பித்ததோடர்.

கிருஷ்ணாஷ்டமி kiruṣṇāṣṭami, *n.* <id.+ *aṣṭamī*. Birthday of Kṛṣṇa, the eighth day of the dark half of the month *Śrāvaṇa*; கிருஷ்ணபகவான் அவதரித்த தினமாகிய கோகுலாஷ்டமி.

கிருஷ்ணாஜினம் kiruṣṇājiṉam, *n.* <id. +*ajina*. Skin of black antelope, used as a seat during religious meditation; கறுப்புமானின் தோல்.

கிருஷ்ணை kiruṣṇai, *n.* <*Kṛṣṇā*. 1. Draupadi; திரௌபதை. 2. A form of *Parā-śakti*, one of 4; நான்கு பராசத்திகளுள் ஒன்று. (சைவச. பொது. 74, உரை.)

கிருஷி kiruṣi, *n.* <*kṛṣi*. 1. Cultivation of soil, tillage, agriculture; வேளாண்மை. 2. Effort, activity; முயற்சி.

கிருஷிகன் kiruṣikaṉ, *n.* <*kṛṣika*. Cultivator, ryot, farmer; வியவசாயி.

கிரேதம் kirētam, *n.* <*kṛta*. See கிருதயுகம். கிரேத திரேத துவாபர கலியுக மிவை நான்குமு ளனாய் (திவ். பெரியதி. 7, 7, 6).

கிரேதயுகம் kirēta-yukam, *n.* <id.+. See கிருதயுகம். செப்பு முதற்கிரேதயுகாதியில் (மச்சபு. மச்சா. 19).

கிரேதாயுகம் kirētā-yukam, *n.* <id.+. See கிருதயுகம். *Colloq.*

கிரேதை kirētai, *n.* <id. See கிரேதம். (சூடா. உள்.)

கிரேந்தி kirēnti, *n.* cf. கிராந்தி[2]. Cardamom husk; ஏலத்தோல். (மூ. அ.)

கிரேனிடல் kirēṉ-iṭal, *n.* Expr. signifying startling, standing aghast, being panic-stricken; அஞ்சியோடுங்குதற் குறிப்பு. (J.)

கிரேஸ்தன் kirēstaṉ, *n.* <*gṛha-stha*. Honest, worthy man; கௌரவமுள்ளவன். (W.)

கிரௌஞ்சத்துவீபம் kirauñca-t-tuvīpam, *n.* <*krauñca*+. One of the seven island-continents. See கிரவுஞ்சத்தீவு.

கிரௌஞ்சம் kirauñcam, *n.*<*krauñca*. See கிரவுஞ்சம்.

கிரௌரியம் kirauriyam, *n.* <*kraurya*. Cruelty, hard-heartedness; கொடுமை.

கில்[1]-தல்[கிற்றல்] kil-, *10 v. intr.* To be able; ஆற்றல்கொள்ளுதல். கிற்பன் கில்லேன் (திவ். திருவாய். 3, 2, 6).

கில்[2] kil, *part.* Verbal infix indicating ability; ஆற்றலுணர்த்தும் இடைநிலை. வெம்ப வருகிற்பதன்று கூற்ற நமமேல் (தேவா. 1229, 2).

கில்கில்லெனல் kil-kil-l-eṉal, *n.* Onom. expr. signifying clinking sound; ஓர் ஒலிக்குறிப்பு.

கில்பிஷம் kilpiṣam, *n.* <*kilbiṣa.* Sin; பாவம். (கோயிலொ. 45.)

கில்லம் killam, *n.* cf. *gala.* 1. Neck; கழுத்து. (பிங்.) 2. The hollow just below Adam's apple; தொண்டைக்குழி. *Loc.*

கில்லாடி killāṭi, *n.* <Mhr. *khilāḍī.* Vagabond, scamp; அயோக்கியன். *Colloq.*

கில்லி killi, *n.* Tip-cat. See கிட்டிப்புள். *Madr.*

கில்லேதார் killētār, *n.* <U. *qiladār.* Commandant of a fort; கோட்டை விசாரணைத்தலைவன். (W.)

கில kila, *part.* <*kila.* A Sanskrit word signifying expectation, probability, etc.; எதிர்பார்த்தல் முதலிய பொருளை யுணர்த்தும் வடமொழி யிடைச்சொல். சுவாகதங் கிலவென்று (திருவிளை. இரசவாத. 15).

கிலம் kilam, *n.* <*khila.* 1. That which is ruined, dilapidated, laid waste, destroyed; சிதைந்தது. வீடு கிலமாய்விட்டது. 2. That which is insufficient; trifle; அற்பம். (சூடா.)

கிலாசு kilācu, *n.* <U. *khalāsī.* Lascar; Indian sailor; கப்பல்தொழிலாளி. *Naut.*

கிலாம் kilām, *n.* <கலாம். Anger, indignation, vexation; கோபம். கிலாத்தோற்றச் சொல்லுகிறான் (ஈடு, 6, 1, 1).

கிலாய்-த்தல் kilāy-, *11 v. intr.* <கலாய்-. 1. To be angry, indignant; கோபித்தல். பிரணய ரோஷந் தலையெடுத்துக் கிலாய்ப்பதும் (ஈடு, 8, 1, 2). 2. To be distressed, afflicted; to grieve; அங்கலாய்த்தல். தனிமையைப்பார்த்துக் கிலாய்க்கையும் (திவ். திருநெடுந். 9, வ்யா.).

கிலி kili, *n.* [T. K. *gili.*] Fear, fright; பயம். கிலிகொள்மக னுத்தியினால் (இராமநா. உயுத். 57).

கிலிகோலம் kili-kōlam, *n.* <கிலி +. Slovenliness, disorder, confusion; அலங்கோலம். (J.)

கிலிசம்பறை kilicampaṟai, *n.* <id. + சம்பலை. See கிலிகோலம். (J.)

கிலிசைகெட்ட kilicai-keṭṭa, *adj.* <*kriyā* +. Idle, unemployed, good-for-nothing; வேலையற்ற.

கிலிபிடி-த்தல் kili-piṭi-, *v. intr.* <கிலி +. To be frightened, alarmed; மனத்திற் பேரச்சங் கொள்ளுதல். *Colloq.*

கிலிமண்டு-தல் kili-maṇṭu-, *v. intr.* <id. +. See கிலிபிடி-. (W.)

கிலியம்பறை kiliyampaṟai, *n.* <id. + சம்பலை. See கிலிசம்பறை. (J.)

கிலிஷ்டம் kiliṣṭam, *n.* <*kliṣṭa.* (Rhet.) Obscurity of a passage, unintelligibility; எளிதிற் பொருள்விளங்காமையாகிய குற்றம்.

கிலீபம் kilīpam, *n.* <*klība.* Person or animal that is neither male nor female, hermaphrodite; அலி. (உரி. நி.)

கிலுக்கம் kilukkam, *n.* A kind of bird; பறவைவகை. கின்னரங் குரண்டங் கிலுக்கஞ் சிரல் (கம்பரா. வரைக்காட்சி. 151).

கிலுக்கு[1]-தல் kilukku-, *5 v. tr.* Caus. of கிலுங்கு-. [K. *giluku.*] To ring, rattle, clink; ஒலிக்கச்செய்தல்.

கிலுக்கு[2] kilukku, *n.* <கிலுக்கு-. 1. Rattling, tinkling, clinking; ஒலிக்கை. (W.) 2. [T. *giluka,* K. *gilike.*] Rattling sticks of school boys, used especially in *nava-rāttiri* in soliciting presents for their teacher; children's rattle-box; படிக்கும் சிறுபிள்ளைகள் நவராத்திரிகாலத்திற் கையிற் கொள்ளும் ஒருவகைக் கிலுகிலுப்பை.

கிலுக்குத்தடி kilukku-t-taṭi, *n.* <கிலுக்கு +. Staff with jingles at one end, used by post-runners and mendicants; அஞ்சலோடுத்துச் செல்வோர் கையிற்கொண்டு ஒலிசெய்யும் தடி.

கிலுகிலி kilukili, *n.* <கிலுகில் onom. Children's rattle-box; பிள்ளைகளாட்டுங் கிலுகிலுப்பை. கிளர்பூட் புதல்வரொடு கிலுகிலி யாடும் (சிறுபாண். 61).

கிலுகிலு-த்தல் kilu-kilu-, *11 v. intr.* <id. 1. To rattle; to make a tinkling, clinking sound; கிலுகிலென்று ஒலித்தல். 2. To resound with noise; ஆரவாரித்தல். நகர் கிலுகிலுத்தது (சூளா. சுயம். 161).

கிலுகிலுப்பு kilu-kiluppu, *n.* <கிலுகிலு-. See கிலுகிலுப்பை.

கிலுகிலுப்பை kilu-kiluppai, *n.* <id. 1. Child's rattle; ஒலிசெய்யும் ஒரு விளையாட்டுக்கருவி. 2. Species of rattlewort as having, when ripe, seeds that rattle in the pod (*a*) rattlewort, m. sh., *Crotalaria pulcherrima*: (*b*) laburnum-leaved rattlewort, m. sh., *Crotalaria laburnifolia*; செடிவகைகள். (குறிஞ்சிப். 88, உரை.) (L.) 3. A copiously branching shrub with quadrangular stems, *Crotalaria Verrucosa;* கொடிவகை. (K. R.)

கிலுகிலுப்பைக்குட்டான் kilu-kiluppai-k-kuṭṭāṉ, *n.* <கிலுகிலுப்பை +. Child's basket-rattle; பிள்ளைகளின் விளையாட்டுக்கருவிவகை. (J.)

கிலுகிலெனல் kilu-kileṉal, *n.* Onom. expr. signifying rattling, tinkling, jingling sound; ஓர் ஒலிக்குறிப்பு.

கிலுங்கி kiluṅki, *n.* <கிலுங்கு-. See கிலு கிலுப்பை. (மலை.)

கிலுங்கு-தல் kiluṅku-, *5 v. intr.* To tinkle, ring, clink, rattle, jingle; ஒலித்தல். (W.)

கிலுத்தம் kiluttam, *n.* 1. Wrist; மணிக் கட்டு. *கிலுத்தங் கூர்ப்பரங்க ளென்னுமிரண்டனுள்* (சீவக. 1645). 2. A kind of tree whose fruit assumes human form; மக்கள் வடிவான பழமுள்ள மரவகை. *மானிடம் பழுத்தன கிலுத்தம்* (சீவக. 1900).

கிலுப்தம் kiluptam, *n.* <*klpta.* Readiness, settled order, certainty; நியதம். *அந்தக்காரியம் கிலுப்தமாய் நடக்கும்.*

கிலுமொலெனல் kilumol-eṉal, *n.* 1. Onom. expr. signifying buzzing, humming sound; வண்டு முதலியவற்றின் ஒலிக்குறிப்பு. 2. Expr. signifying crowding, swarming, as vermin in the head, maggots in a carcass; அடர்ச்சிக் குறிப்பு. (W.)

கிலேசம் kilēcam, *n.* <*klēśa.* Affliction, distress, pain, anguish, sorrow, grief; துக்கம்.

கிலேசி-த்தல் kilēci-, *11 v. intr.* <id. To be in anguish, distress; to be afflicted; துன்பப்படுதல்.

கிலேதம் kilētam, *n.* <*klēda.* Lotion; உடலின்மேலிடும் மருந்துநீர். (இங். வை. 21.)

கிழக்கத்தி kiḻakkatti, *adj.* <கிழக்கு. Eastern, used in compounds as கிழக்கத்திக் காற்று, கிழக்கத்தியான்; கீழ்த்திசைக்குரிய.

கிழக்கத்திய kiḻakkattiya, *adj.* See கிழக்கத்தி.

கிழக்கதை kiḻa-k-katai, *n.* <கிழம்+. Stale, old story, stories of old people; பழங்கதை. (W.)

கிழக்கன் kiḻakkaṉ, *n.* 1. See கிழங்கான். (J.) 2. A kind of tobacco; புகையிலைவகை.

கிழக்கா kiḻakkā, *n.* See கிழங்கான். (J.)

கிழக்கி kiḻakki, *n.* See கிழங்கான்.

கிழக்கு kiḻakku, *n.* <கீழ். [M. *kiḻakku.*] 1. East; கீழ்த்திசை. (திவா.) 2. Bottom, foot: low place; கீழிடம். *கிளைஇய குரலே கிழக்கு வீழ்ந்தனவே* (குறுந். 337). 3. Lowness, plainness, humbleness; இழிவு. *கிழக்கிடு பொருளொடு* (தொல். பொ. 280). 4. Depression, pit; பள்ளம். (திவா.)

கிழக்குக்கணவாய் kiḻakku-k-kaṇavāy, *n.* <கிழக்கு+. The Eastern Ghats; கிழக்குத் தொடர்ச்சிமலை. (C.G.)

கிழக்குவெளு-த்தல் kiḻakku-veḷu-, *v. intr.* <id.+. To dawn, as to light the east; கிழக்குத் திசையில் இருள்நீங்கத் தொடங்குதல். *பகற்கண்டேன் என்கிற தோற்றரவுக்குக் கிழக்குவெளுக்கிறபடி* (ஈடு, 6, 1, 11).

கிழங்கான் kiḻaṅkāṉ, *n.* Whiting sea-fish, olive-green, attaining 1 ft. in length, *Sillago sihama;* கடல்மீன்வகை. (பதார்த்த. 941.)

கிழங்கிரு-த்தல் kiḻaṅkiru-, *v. intr.* <கிழங்கு +. To remain unimpaired in root; அடிமூலம் பெயர்க்கப்படாது தங்குதல். *கீழுலகி லசுரர்களைக் கிழங்கிருந்து கிளராமே யாழிவிடுத்து* (திவ். பெரியாழ். 4, 8, 6).

கிழங்கு kiḻaṅku, *n.* <கீழ். [M. *kiḻaṅṅu.*] 1. Esculent or bulbous root, as potato, yam, turnip, parsnip, palmyra root; செடிகொடிமுதலிய வற்றின் மூலம். *தீங்கனி கிழங்கு செழுங்காய் நல்லன* (மணி. 17, 58). 2. Cause; காரணம். *நாபிக்கமல முதற்கிழங்கே* (திவ். திருவாய். 10, 10, 3).

கிழங்குமஞ்சள் kiḻaṅku-mañcaḷ, *n.* <கிழங்கு+. Turmeric with round root; மஞ்சள்வகை. (W.)

கிழங்கெடு-த்தல் kiḻaṅkeṭu-, *v. tr.* <id.+ எடு-. To destroy, root and branch; அடியோடு அழித்தல். *அநாஸ்ரிதரைக் கிழங்கெடுத்துப் போகட்டானித்தனை* (ஈடு, 8, 1, 4).

கிழடன் kiḻaṭaṉ, *n.* <கிழடு. Old fellow, old chap, used in contempt; கிழவன். *Colloq.*

கிழடு kiḻaṭu, *n.* <கிழம். 1. Old age, senility; முதுமை. *ஒரு கிழட்டந்தணன்* (உபதேசகா. சிவபுண்ணிய. 217). 2. Old thing, said of an animal, of a tree, and contemptuously of a person; முதியது.

கிழடுகட்டை kiḻaṭu-kaṭṭai, *n.* <கிழடு+. Old useless person, as a time-worn log of wood; வயது முதிர்ந்து உபயோகமற்றவ-ன்-ள். *கிழடு கட்டைகளை யமன் கொண்டுபோகான்.* *Colloq.*

கிழண்டுபோ-தல் kiḻaṇṭu-pō-, *v. intr.* <id.+. To grow old; கிழத்தன்மையடைதல். *Loc.*

கிழத்தனம் kiḻa-t-taṉam, *n.* <id.+. Old age, senility; முதுமை.

கிழத்தி kiḻatti, *n.* <கிழ-மை. 1. Proprietress, she who has a right; உரியவள். *செம்புலக் கிழத்திக் காவி யன்னது* (பாரத. சிறப்பு. 13). 2. (Akap.) Mistress, lady-love; தலைவி. *தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல் . . . கிழத்திக் கில்லை* (தொல். பொ. 118).

கிழப்பிணம் kiḻa-p-piṇam, *n.* <கிழம்+. Old person, as a living corpse; செயலற்ற கிழத்தனமுள்ளவ-ன்-ள். *இந்தக்கிழப்பிணம் சும்மா இருக்கப்படாதா?* *Colloq.*

கிழம் kiḻam, *n.* cf. கிழவு. 1. Old age, senility, decrepitude; முதுமை. *கிழமுதி ரிளநலம் (கந்தபு. கடவுள். 17).* 2. Aged person, aged animal or thing; used as a term of contempt; முதுமை யடைந்த-வன்-வள்-து. *இந்தமாடு கிழம்.*

கிழம்படு-தல் kiḻam-paṭu-, *v. intr.* <கிழம் +. To grow old; to become worn out or useless by age; முதுமையடைதல். *மரங் கிழம்படுத லின் (பிரபோத். 7, 30).*

கிழமழை kiḻa-maḻai, *n.* <id.+. Rain about to cease; பெய்து ஓயும்நிலையிலுள்ள மழை. *Loc.*

கிழமேல் kiḻa-mēl, *adv.* <கிழக்கு+. From east to west; கிழக்கிலிருந்து மேற்குவரை. *Colloq.*

கிழமை[1] kiḻamai, *n.* 1. Claim, right, propriety; உரிமை. *உணர்ச்சிதா னட்பாங் கிழமை தரும் (குறள், 785).* 2. Relation, connection; உறவு. *அவனுக்கும் இவனுக்கும் என்ன கிழமை?* 3. Friendship, alliance; சினேகம். *எமர்தம ரெழுவர்காறு நின்றது கிழமை (சீவக. 544).* 4. (Gram.) Relation of one thing to another as denoted by the possessive case, being of two kinds, viz., *தற்கிழமை, பிறிதின்கிழமை;* ஒன்றற்கும் மற்றொன்றற்கு முள்ள தொடர்பைத் தெரிவிப்பதாகிய ஆறாம்வேற்றுமைப்பொருள். (நன். 300.) 5. Quality, property, attribute; குணம். (திவா.) 6. [M. *kiḻama.*] Day of the week, as related to each of the seven planets *ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி;* வாரநாள். (திவா.)

கிழமை[2] kiḻamai, *n.* cf. கிழவு. Old age; முதுமை. (சூடா.)

கிழமைக்கழு-தல் kiḻamaikkaḻu-, *v. intr.* <கிழமை[1]+அழு-. To mourn for the dead specially on the eighth day after death; இறந்துபட்ட எட்டாம்நாள் துக்கங் கொண்டாடுதல். *Tinn.*

கிழமைச்சூனியம் kiḻamai-c-cūṉiyam, *n.* <id.+. (Astrol.) Inauspicious, unpropitious day when the moon is in conjunction with the constellation or *nakṣatra* unfavourable to that day of the week; வாரசூனியம். (W.)

கிழமைவட்டம் kiḻamai-vaṭṭam, *n.* <id. +. Week, as the cycle of seven *kiḻamai;* மண்டலித்துவரும் வாரம். (W.)

கிழலை kiḻalai, *n.* (J.) 1. Quarter, part, region; திசை. *இந்தக்கிழலையில் அவனைக் காணவில்லை.* 2. prob. கீழ். The lower side of a vessel, the side on which the sail is hoisted; மரக்கலத்தின் சாய்வுப்பக்கம்.

கிழவது kiḻavatu, *n.* <கிழ-மை. That which pertains to; உரியது. *குழவி மருங்கினுங் கிழவ தாகும் (தொல். பொ. 84).*

கிழவன்[1] kiḻavaṉ, *n.* <id. 1. Owner; உரியவன். *செல்லான் கிழவ னிருப்பின் (குறள், 1039).* 2. Lord, master, husband; தலைவன். *கிழவனுங் கிழத்தியுஞ் சிறந்தது பயிற்றல் (தொல். பொ. 192).* 3. Chief of an agricultural tract; மருதநிலத் தலைவன். (திவா.)

கிழவன்[2] kiḻavaṉ, *n.* <கிழவு. [M. *kiḻavan.*] Aged man; வயதுமுதிர்ந்தவன். *மூத்துட னடுங்கிநிற்கு மிக்கிழவனை (தேவா. 648, 4).*

கிழவன்[3] kiḻavaṉ, *n.* prob. கீழ். Black sediment in oil; எண்ணெய்க்கசடு. *Oilmonger.*

கிழவன்[4] kiḻavaṉ, *n.* Corr. of *காடுகிழவோள்.* The second *nakṣatra.* See பரணி. (சூடா.)

கிழவி[1] kiḻavi, *n.* <கிழ-மை. Wife, mistress; தலைவி. *கிழவிநிலையே வினையிடத்துரையார் (தொல். பொ. 186).*

கிழவி[2] kiḻavi, *n.* <கிழவு. [M. *kiḻavi.*] Old woman; முதியவள். *கிழவி கருந்துணி மேலிடு வெண் பிட்டு (குமர. பிர. மதுரைக். 11).*

கிழவி[3] kiḻavi, *n.* Horse-radish tree. See முருங்கை. (மலை.)

கிழவு kiḻavu, *n.* <கிழ-மை. Old age; கிழத்தனம். *பின்னைக் கிழவுதான் விளைக்கும் (சீவக. 379).*

கிழவோன்[1] kiḻavōṉ, *n.* <id. 1. Proprietor, owner; உரியவன். *பழமுதிர் சோலை மலைகிழவோனே (திருமுரு. 317).* 2. Lord, master, husband; தலைவன். (தொல். பொ. 234.)

கிழவோன்[2] kiḻavōṉ, *n.* <கிழவு. Old man; முதியவன். *கிழவோன்றன் செயலினை (கந்தபு. தவங் காண். 5).*

கிழாஅன் kiḻāaṉ, *n.* 1. Curd; தயிர். (பிங்.) 2. Curd-pot; தயிர்த்தாழி. *வெண்டயிருந் தண்டயிரும் விராய்க்கிடந்த கிழாஅன்போல (கலிங். 506, புதுப்.).*

கிழாத்தி kiḻātti, *n.* cf. கெளிறு. 1. A sea-fish, silvery, *Tricanthus strigilifer;* கடல்மீன் வகை. 2. A fresh-water shark of catfish family, *Siluridae;* நன்னீரில்வாழும் மீன்வகை.

கிழார்[1] kiḻār, *n.* Ancient Vēḷāḷa title; வேளாளர்பட்டப்பெயர். *எத்தனையேனுங் கிழார்கிழார்க்கும் (சுடு, 6, 3, 7).* (தொல். பொ. 629, உரை.)

கிழார்[2] kiḻār, *n.* 1. Water-lift for irrigation, drawn by bullocks; பூட்டைப்பொறி. *ஆம்பியுங் கிழாரும் வீங்கிசை யேற்றமும் (சிலப். 10, 110).* 2. Garden; தோட்டம். *வேளாட்டார் தோட்டத்தைக் கிழா ரென்றும் (நன். 272, மயிலை.).*

கிழாலை kiḻālai, *n.* Hard kind of earth; களர்நிலம். (J.)

கிழாள் kiḻāḷ, *n.* <கிழ-மை. Feminine of *கிழான்.* Proprietress; உரியவள்.

கிழான் kiḻāṉ, *n.* <id. Owner, proprietor; உரியவன். மங்கை மங்கலக்கிழானென (திருவிளை. வலை வீசி. 42).

கிழான்பச்சை kiḻāṉ-paccai, *n.* A kind of sandal; சந்தன வகை. (சிலப். 14, 108, உரை.)

கிழி[1]-தல் kiḻi-, *4 v. intr.* [M. *kiḻi.*] 1. To be torn, rent in shreds; to be scratched; பீறுண்டுபோதல். 2. To give way, burst out, split; பிளந்து போதல். 3. To be broken; பேர்தல். முழந்தாள் கிழிந்தானை (பழமொ. 19). 4. To be defeated, to meet with repulse; தோல்வியுறுதல். வானவர்போர்கிழிந்து புறந்தர (கம்பரா. முதற்போ. 65). 5. To perish; அழிதல். என்றுங் கிழியாதென் பாட்டு (தமிழ்நா. 53).

கிழி[2]-த்தல் kiḻi-, *v. tr.* Caus. of கிழி[1]-. 1. To tear, rend, split, cut, pull to pieces, rip up, lacerate; பீறச்செய்தல். தரியினங்கடம் மெயிற்றிறைச் சிதையக் கிழித்த பேரிருல் (கந்தபு ஆற்று. 23). 2. To split, break, cleave, uproot; பேர்த்தல். நெடுங்கிரி கிழித்து (கம்பரா. நிகும். 88). 3. To scratch, as with claws or thorns; கீறுதல். காலை முள் கிழித்தது. 4. To mark, to line, to indent, to paint; to draw, as a line; கோடுவரைதல். நான் கிழித்தகோடு. 5. To accomplish, used in contempt; சாதித்தல். செய்து கிழித்துவிட்டாயோ? 6. To rebuke; சொல்லாற்கண்டித்தல். சிலவசனங்கள் சொல்லிக்கிழிப்பதும் (கவிகுஞ். 2). 7. To open the mouth wide; அங்காத்தல். வா யுழுவை கிழித்தது (திருக்கோ. 72). 8. To eat, consume; தின்னுதல். குறுமுயற் கொழுஞ் சூடு கிழித்த வொக்கலொடு (புறநா. 34, 11).

கிழி[3] kiḻi, *n.* <கிழி[2]-. 1. Piece; கீறு. (சூடா.) 2. Piece of cloth torn off; கிழிபட்ட துகில். (திவா.) 3. Figure painted on cloth; சீலையில் எழுதிய சித்திரப்படம். கிழிபிடித்து (திருக்கோ. 74). 4. [M. *kiḻi.*] Gold or other valuables tied up in a piece of cloth and exhibited as a prize inviting competition in any work of skill; வெற்றிபெறுவோர்க்குப் பரிசாகச் சீலையில்முடித்த நிதிப்பொதி. (திவா.) 5. First fruits of grain tied in a bunch and suspended in a temple or dwelling; கதிர்க்கிழி. (W.) 6. Strip of cloth tied round the waist of a mendicant, mendicant's loin-cloth; கீளுடை. (W.)

கிழிக்கட்டு kiḻi-k-kaṭṭu, *n.* <கிழி+. Prize, treasure, sacred ashes, as tied in a strip of cloth; துணியிற்கட்டிய நிதி முதலியன. (W.)

கிழிகட்டு-தல் kiḻi-kaṭṭu-, *v. intr.* <id.+. To hang up a prize tied in a piece of cloth inviting competitors; கிழியில்முடித்த பந்தயப் பொருளைப் பலருங் காணும்படி தூக்கிக்கட்டுதல்.

கிழிச்சீரை kiḻi-c-cīrai, *n.* <id.+. Pouch containing money, purse; பணம்பொதிந்த சீலை. கிழிச்சீரையிலே பணங்கிடக்க (ஈடு, 4, 7, 6).

கிழிசல் kiḻical, *n.* <கிழி[1]-. See கிழியல் 1, 2.

கிழிதம் kiḻitam, *n.* <கிழி. Gold or other valuables tied up in a piece of cloth; நிதிக்கிழி. (திருக்கோ. 183, உரை.)

கிழிதீட்டு-தல் kiḻi-tīṭṭu-, *v. tr.* <id.+. To draw a picture; படம்வரைதல். (W.)

கிழிப்பு kiḻippu, *n.* <கிழி[2]-. 1. Rending, tearing, ripping; கிழிக்கை. 2. Cleft, as in a mountain; பிளப்பு. 3. Cavern, cave; குகை. வரைக்கிழிப்பன்ன (நற். 154).

கிழிப்புக்காயம் kiḻippu-k-kāyam, *n.* <கிழிப்பு+. Lacerated wound; கீறுண்ட புண்.

கிழிமுறி kiḻi-muṟi, *n.* <கிழி[2]-+. Mutilated or cancelled bond or indenture; கிழிக்கப்பட்ட சாஸனம். (W.)

கிழியல் kiḻiyal, *n.* <கிழி[1]-. 1. Tear, rent in cloth; கிழிவு. 2. That which is torn, tattered garment; கிழிந்தது. 3. Good-for-nothing fellow, useless sluggard; பயனற்றவன். (W.)

கிழியறு-த்தல் kiḻi-y-aṟu-, *v. intr.* <கிழி+. To win a contest and secure the prize, as cutting the cord with which it is suspended; வாதத்தில்வென்று பொற்கிழிபெறுதல். வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான் (திவ். திருப்பல். தனியன்).

கிழியீடு kiḻi-y-īṭu, *n.* <id.+. Valuables tied up in a piece of cloth; நிதிப்பொதி. கிழிச் செய்தவத்தாற் கிழியீடு நேர்பட்டு (திருவாச. 40, 9).

கிழிவு kiḻivu, *n.* <கிழி[1]-. 1. Rent, tear, laceration; கிழிகை. 2. Failure, ill-success; வாய்க்காமை. (W.)

கிள்ளட்டிகை kiḷḷaṭṭikai, *n.* <கிள்ளு+அட்டிகை. Ornament for the neck made of thin gold pieces strung together; நகக்கிள்ளுவடிவான பொன்னுருக்களமைந்த கழுத்தணிவகை.

கிள்ளாக்கு kiḷḷākku, *n.* <T. *killāku.* Piece of palm-leaf given by a person in authority, as a passport, a warrant, a token of authority; அதிகாரச்சீட்டு. மும்மண்டலத்தினுங் கிள்ளாக்குச்செல்ல (தாயு. சித்த. 6).

கிள்ளாப்பிராண்டு kiḷḷā-p-pirāṇṭu, *n.* <கிள்ளு-+. 1. A child's game; பிள்ளைகளின் விளையாட்டுவகை. 2. Want of proper attention to guests at a feast, meagre distribution of food; அற்பமாகப் பரிமாறுகை. (J.)

கிள்ளாப்பிராண்டுபண்ணு-தல் kiḷḷā-p-pirāṇṭu-paṇṇu-, *v. intr.* <கிள்ளாப்பிராண்டு+. (W.) 1. To supply too sparingly, as giving only a pinch; அற்பமாகப் பரிமாறுதல். 2. To eat sparingly at a feast from modesty, delicacy: விருந்

திற் சிறுக உண்ணுதல். 3. To stint in charity; சிறிதளவு தருமஞ்செய்தல்.

கிள்ளி kiḷḷi, *n.* perh. கிள்ளு-. Title of some Cola kings; சோழர்க்கு வழங்கிய சிறப்புப்பெயர். (திவா.)

கிள்ளிக்காட்டு-தல் kiḷḷi-k-kāṭṭu-, *v. intr.* <id.+. 1. To give a hint, signal, as by pinching; குறிப்புக்காட்டுதல். 2. To be niggardly in giving food; சிறிதளவு பரிமாறுதல்.

கிள்ளிக்காய் kiḷḷi-k-kāy, *n.* Wing-shell, a mollusc, *Avicula*; நத்தைவகை. (G. Tn. D. 22.)

கிள்ளிக்கொடு-த்தல் kiḷḷi-k-koṭu-, *v.* <கிள்ளு-+. *intr.* To give a little from a great quantity, as a pinch; சிறுகக்கொடுத்தல்.—*tr.* To stir up, instigate, incite; தூண்டிவிடுதல். *Colloq.*

கிள்ளித்தெளி-த்தல் kiḷḷi-t-teḷi-, *v. intr.* <id.+. To give a small quantity, as a pinch; சிறிதுகொடுத்தல். கிள்ளித்தெளிக்கமாட்டான். (W.)

கிள்ளிவிடு-தல் kiḷḷi-viṭu-, *v. tr.* <id.+. To stir up, incite, instigate; தூண்டிவிடுதல். *Colloq.*

கிள்ளு[1]-தல் kiḷḷu-, *5 v. tr.* [T. *gillu*, M. *kiḷḷu*.] 1. To pinch with the finger and thumb, with the nails; to pluck, nip, pick off, as a leaf; நகத்தாலெடுத்தல். கற்கிள்ளிக் கையிழந் தற்று (நாலடி, 336). 2. To dig out, scoop; தோண்டுதல். கிள்ள வெழுகின்ற புனல் (கம்பரா. வரைக். 23). 3. To destroy, as by nipping off the head; அழித்தல். பொல்லா வரக்கனைக் கிள்ளிக் களைந்தானை (திவ். திருப் பா. 13). 4. To hold, carry, as with the beak, with the fingers and thumb; to take up a little, a pinch; சிறிதளவு எடுத்தல். (W.)

கிள்ளு[2] kiḷḷu, *n.* <கிள்ளு-. 1. Pinching, nipping; கிள்ளுகை. 2. That which is nipped off, as a little piece of betel leaf or tobacco; கிள்ளப்பட்டது. புகையிலையில் ஒருகிள்ளுக் கொடு.

கிள்ளுக்கீரை kiḷḷu-k-kīrai, *n.* <id.+. 1. Feeble-rooted greens, as easily plucked; கிள்ளியெடுக்கப்படும் கீரைவகை. 2. Anything easily handled, often used in reference to a weak man; எளிமையான-வன்-வள்-து. அவன் உனக்குக் கிள்ளுக்கீரையோ?

கிள்ளுக்கீரைபண்ணு-தல் kiḷḷu-k-kīrai-paṇṇu-, *v. tr.* <கிள்ளுக்கீரை+. To insult, treat insultingly; தாழ்மைப்படுத்துதல். (W.)

கிள்ளுங்கிழியுமாய் kiḷḷuṅ-kiḻiyum-āy, *adv.* <கிள்ளு-+. Utterly useless, as shreds of anything; பயனற்றதாய். இந்த வேலை கிள்ளுங் கிழியுமாய்ப் போகக்கடவது. (W.)

கிள்ளுவடை kiḷḷu-vaṭai, *n.* <id.+. Cake offered to manes in *Śrāddha*. See காக்காய்வடை. *Loc.*

கிள்ளை[1] kiḷḷai, *n.* prob. கிள-. 1. Parrot, *Palaeornis*; கிளி. கிள்ளை வளைவா யுகிரின் (சீவக. 2439). 2. A dark species of parrot; கருங்கிளி. (திவா.)

கிள்ளை[2] kiḷḷai, *n.* perh. கிள்ளு-+. 1. Horse; குதிரை. (திவா.) 2. Mace; சாதிபத்திரி. (மலை.)

கிள்ளைச்சாதம் kiḷḷai-c-cātam, *n.* <கிள்ளை[1] +*jāta*. Young parrot; கிளிக்குஞ்சு. செஞ்சொற் றேனினைத் தஞ்செவிப் படுத்திய கிள்ளைச்சாதமே (இரகு. குறை. 31).

கிள்ளைவிடுதூது kiḷḷai-viṭu-tūtu, *n.* <id. +. Poem in which the heroine languishing from love sends a parrot as messenger to her lover; தலைவி தன் காதலுக்கு உரிய தலைவனிடத்துக் கிளியைத் தூதுவிடுத்தலைக் கூறும் பிரபந்தம்.

கிள-த்தல் kiḷa-, *12 v. tr.* 1. To express clearly; புலப்படக் கூறுதல். கிளக்தாங் குரைத்தல் (தொல். பொ. 211). 2. To make special mention of, to state specifically; விதந்துகூறுதல். (சி. போ. 4, 1, பக். 85, சிற்.)

கிளத்து-தல் kiḷattu-, *5 v. tr.* See கிள-, 1. குலமுறை கிளத்துபடலம் (கம்பரா.).

கிளப்பம் kiḷappam, *n.* <கிளம்பு-. Rising, heaving, swelling; கிளர்ச்சி. திரைக் கிளப்பம்போ லே (திவ். திருவாய். 5, 9, 3, பன்னீ.).

கிளப்பு[1]-தல் kiḷappu-, *5 v. tr.* Caus. of கிளம்பு-. 1. To raise up some heavy thing, as with a lever; எழுப்புதல். கல்லைக் கிளப்பினான். 2. To raise, as a wall; to erect, cause to grow high; சுவர்முதலியன எழச்செய்தல். *Loc.* 3. To turn out, discharge, dismiss; நீக்குதல். அவனை வேலையைவிட்டுக் கிளப்பினான். 4. To excite, as a disturbance; to induce, as fever; to bring about; உண்டாக்குதல். அந்த மலைக்காற்றுச் சுரத்தைக் கிளப் பிற்று. 5. To rouse, animate, urge, incite; தூண்டிவிடுதல். கிளப்பிவிட்டு வேடிக்கை பார்க்கிறான்.

கிளப்பு[2] kiḷappu, *n.* <கிளப்பு-. Raising, rousing; எழுப்புகை.

கிளப்பு[3] kiḷappu, *n.* <கிள-. Speech, utterance; சொல்லுகை. கிளப்பருஞ் சிறையில் வைத்த (பாரத. இராசசூய. 87).

கிளப்பு[4] kiḷappu, *n.* <E. *club*. A restaurant, an eating-house, a hotel; சோற்றுக்கடை. *Colloq.*

கிளப்போசு kiḷappōcu, *n.* <E. *club-house*. See கிளப்பு[4]. *Colloq.*

கிளபுறம் kiḷa-puṟam, *n.* perh. கீழ்+புறம். Leeward; காற்றுப்படாத பக்கம். *Naut.*

கிளம்பல் kiḷampal, *n.* < கிளம்பு-. 1. Rising; எழுகை. 2. Register of newly improved pieces of land; பதிவுப்புத்தகத்தில் புதிதாகச்சேர்த்த நிலங்களின் அட்டவணை. (J.)

கிளம்பிவிடு-தல் kiḷampi-viṭu-, *v. intr.* < id. +. (J.) 1. To be persuaded with difficulty; to agree reluctantly; மனமின்றிச் சம்மதித்தல். 2. To leave or desert a house or village; குடிபோதல்.

கிளம்பினவாள் kiḷampiṉa-v-āḷ, *n.* < id. + ஆள். Tall grown-up person; வயதால் வளர்ச்சியுள்ளவன். (W.)

கிளம்பினவேலை kiḷampiṉa-vēlai, *n.* < id. +. Bas-relief, work with figures somewhat raised; கட்டடத்தில் எழும்பிநிற்கும் சித்திரப்பணி. (W.)

கிளம்பு-தல் kiḷampu-, *5 v. intr.* [M. *kiḷambu.*] 1. To rise in air or water, ascend, get up, soar high, shoot up, sprout; மேலெழுதல். *இந்தச்செடி இப்போதுதான் கிளம்புகிறது.* 2. To emerge from obscurity; to become prominent; to rise to, or gain, eminence; to prosper; to be elevated; பிரசித்தமாதல். *அவனுடையபேர் கிளம்பிற்று.* 3. To rise above the surface; பூமிமட்டத்திற்குமேல் வருதல். *இந்தக்கட்டடம் நாற்புறமும் கிளம்பிவிட்டது.* 4. To be stirred, agitated, roused by excitement or anger; மூண்டெழுதல். *அவன்மீது பகை கிளம்பிற்று.* 5. To crop up, break out, appear; உண்டாதல். *ஊரில் வியாதி கிளம்பியிருக்கிறது.* 6. To set out, start, leave for another place; புறப்படுதல். *அந்தச்சேனை கிளம்பிவிட்டது.* 7. To increase; அதிகப்படுதல். *விலை கிளம்பவில்லை.* 8. To become loose, detached, as a brick that still adheres; to scale off; to flake, peel off, as mortar; எடுபடுதல். *பழங்கட்டடத்தில் செங்கல் கிளம்பிவிடும்.*

கிளர்[1]**-தல்** kiḷar-, *4 v. intr.* [M. *kiḷara.*] 1. To rise, ascend, emerge, swell upwards; மேலெழுதல். *ஆழி கிளர்ந்ததோ* (கம்பரா. மிதிலைக். 67). 2. To spring up, grow higher and higher, shoot up; மேன்மேல் வளர்தல். *கொள்ளென்று கிளர்ந்தெழுந்த* (திவ். திருவாய். 4, 9, 4). 3. To be intense, abundant, to surpass, increase; மிகுதல். *பொலம்பூவேங்கை நலங்கிளர் கொழுநிழல்* (சிலப். பதி. 4). 4. To shine, to be conspicuous, resplendent; விளங்குதல். *மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை* (திருவாச. 8, 18). 5. To be exalted, elevated, great, dignified; சிறத்தல். (W.) 6. To become spirited, enthusiastic, zealous; உள்ளக்கிளர்ச்சிகொள்ளுதல். *வீடு செய்யும் கிளர்வார்க்கே* (திவ். திருவாய். 2, 9, 11). 7. To be roused, infuriated; சினத்தல். *காலன் கிளர்ந்தாலும் போல்வார்* (பு. வெ. 2, 2). 8. To become vain, conceited; இறுமாப்புக்கொள்ளுதல். (W.)

கிளர்[2] kiḷar, *n.* < கிளர்-. 1. Light, lustre, brightness; ஒளி. (பிங்.) 2. Farina, pollen; பூந்தாது. (பிங்.)

கிளர்ச்சி kiḷarcci, *n.* < id. 1. Rising, ascent; எழும்புகை. 2. Enthusiasm, zeal; உள்ளக்கிளர்ச்சி. *அவன் பிரசங்கம் கேட்டபோது மனத்திற் கிளர்ச்சியுண்டாயிற்று.* 3. Growth, increase, prosperity; விருத்தி. *அவனுக்குக் கிளர்ச்சியான காலம்.* 4. Fertility, luxuriance; செழிப்பு. *தண்கா வல்லையிற் கிளர்ச்சி யெய்தி* (கந்தபு. இந்திரனருச். 12). 5. Anger; கோபம். *கடுஞ்செய்கையைக் கண்டு அவனுக்குக் கிளர்ச்சியுண்டானது.* 6. Agitation; கலவரம். *இராசாங்கவிஷயமாக நாட்டிற் கிளர்ச்சி உண்டாயிருக்கிறது.* *Mod.* 7. Conceit, vanity; இறுமாப்பு. (W.)

கிளர்த்தி kiḷartti, *n.* < id. Rising in tumult; கொந்தளித்தெழுகை. *ஸ்வஸங்கிதாநத்தாலே கிளர்த்தியை யுடைத்தாயிருக்கை* (ஈடு, 3, 6, 3).

கிளர்த்து-தல் kiḷarttu-, *5 v. tr.* Caus. of கிளர்-. (W.) 1. To raise up, rouse; எழுப்புதல். 2. To fill, satiate; நிறைத்தல்.

கிளர்வரி kiḷar-vari, *n.* < கிளர்- +. (Dram.) Posture assumed by an offended lover or love, when an intermediary tries to conciliate; நடுநின்றார் மாறுபட்ட இருவருக்குஞ் சந்துசொல்லக் கேட்டு நிற்பதாக நடிக்கும் நடிப்பு. (சிலப். 8, 101.)

கிளர்வி kiḷarvi, *n.* perh. கிளர்-. Door; கதவு. (பிங்.)

கிளராலயம் kiḷar-ālayam, *n.* Name of a mathematical work in Tamil; ஒரு தமிழ்க்கணித நூல். (கணக்கதி. பாயி.)

கிளவரி kiḷavari, *n.* cf. *dhīvari.* A common climber with many thick fleshy roots. See தண்ணீர்விட்டான். (மலை.)

கிளவி kiḷavi, *n.* < கிள-. 1. Word, term; மொழி. *கிளவியாக்கம்* (தொல்.). 2. Speech; பேச்சு. *அந்திங்கிளவி* (ஐங்குறு. 490). 3. Language; பாஷை. *பதினெண் கிளவி* (கல்லா. 38, 3). 4. (Akap.) Theme, subject, section in amatory compositions; அகப்பொருட்டுறை. *களவிற்குரிய கிளவித்தொகை* (நம்பியகப். 123).

கிளவிக்கொத்து kiḷavi-k-kottu, *n.* < கிளவி +. Division of a *kōvai* comprising many themes; கோவைப்பிரபந்தத்தின் பலதுறைகொண்ட அதிகாரம். *இவ்விருபத்தைந்தும் இந்நூற்குக் கிளவிக் கொத்து எனப்படும் அதிகாரங்களாம்* (திருக்கோ. உரை, அவ.).

கிளவிக்கோவை kiḷavi-k-kōvai, *n.* < id. +. (Akap.) Amatory poem, comprising many themes; அகப்பொருட்கோவை. *கிளவிக்கோவையின்*

எடுத்துக்கோடற்கண் காட்சி முதலாயின சொல்லுதல் வனப்புடைமையின் (திருக்கோ. 4, உரை).

கிளவித்தலைவன் kiḷavi-t-talaivaṉ, *n.* <id.+. (Akap.) Hero, chief male character in a love-poem, dist. fr. *pāṭṭuṭai-t-talaivaṉ*; அகப்பொருட்டலைவன். (கலித். 68, உரை.)

கிளவியாக்கம் kiḷavi-y-ākkam, *n.* <id.+. The first chapter in *collatikāram* of Tolkāppiyam dealing with words sanctioned by usage, etc.; தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் வழுவற மொழிகளை ஆக்கதந்திரிய விதிகளைக்கூறும் முதற் பகுதி.

கிளறிப்பார்-த்தல் kiḷaṟi-p-pār-, *v. tr.* <கிளறு-+. 1. To search by digging up; to ransack, rummage; ஆராய்ந்து தெரிதல். 2. To probe, as a wound; to pry into, as a person's affairs; கிண்டிப்பார்த்தல். 3. To incite, stir up; தூண்டிவிடுதல்.

கிளறிவிடு-தல் kiḷaṟi-viṭu-, *v. tr.* <id.+. 1. To turn up, rake up, agitate; கிண்டிவிடுதல். 2. To stir up, incite; தூண்டிவிடுதல். 3. To disclose, expose, reveal a secret; மறைபொருளை வெளியாக்குதல். (W.)

கிளறு-தல் kiḷaṟu-, *5 v. tr.* [T. *kelaku*, K. *kelar.*] 1. To poke, ransack, dig up; கிண்டுதல். ஏனமோ டன்னமாய்க் கிளறியும் பறந்தும் (தேவா. 101, 9). 2. To disturb, derange, confuse; கலக்குதல். (W.) 3. To stir, as with a ladle; துழாவுதல். மாட்டுத்தொட்டியைக் கிளறினான். 4. To probe, search, pry into; துருவியாராய்தல். 5. To disclose, expose; வெளியாக்குதல். (W.)

கிளா kiḷā, *n.* <களா. See களா, 1 to 4. (L.)

கிளாசுக்காரன் kiḷācu-k-kāraṉ, *n.* <U. *khalāsī*+. 1. Lascar; கப்பல்வேலையாள். (C.E.M.) 2. One who attends to packing of things by stitching, etc; மூட்டைகளைத்தைத்து ஒழுங்குபடுத்துபவன். *Loc.*

கிளாத்தி kiḷātti, *n.* cf. கெளிறு. 1. See கிழாத்தி. 2. A sea-fish, rich brown, *Triacanthus strigilifer*; கடல்மீன்வகை.

கிளாய் kiḷāy, *n.* Pods or stalks of sesamum, left after threshing; எள்ளுக்காய்க் கோது. (J.)

கிளி kiḷi, *n.* prob. கிள-. [T. *ciluka*, M. *kiḷi.*] 1. Parrot, parakeet, *Palaeornis*; பறவைவகை. கிளிமரீஇய வியன்புனத்து (புறநா. 138, 9). 2. Rose-ringed parakeet, *Palaeornis torquatus*; கிளிவகை. (M.M.) 3. Grasshopper, locust; வெட்டுக்கிளி. (W.) 4. See கிளிமீன். 5. One who goes round patrolling the squares in the game of *kiḷi-t-taṭṭu*; கிளித்தட்டுவிளையாட்டில் தன் சதுரக்கோட்டெல்லையைச் சுற்றிக்கொண்டு மறிக்கப்பட்ட ஆட்டக்காரரைத் தொட முயல்பவன். *Colloq.*

கிளிக்கத்தி kiḷi-k-katti, *n.* <கிளி+. [M. *kiḷikkatti.*] A kind of knife, billhook; கத்திவகை. (I.M.P. Tp. 842.)

கிளிக்கூடு kiḷi-k-kūṭu, *n.* <id.+. 1. Parrot cage; கிளியை அடைத்துவளர்க்கும் பஞ்சரம். 2. Cage with spikes pointed inward for torturing criminals; குற்றவாளிகளை அடைத்துத் துன்புறுத்துங் கூடு. 3. Witness-box, prisoners' bar; நியாயஸ்தலத்தில் சாட்சிகளேனும் கைதிகளேனும் நிற்கும் அடைப்பிடம். *Loc.* 4. Temporary wooden enclosure for *mūlavar* or stationary idol, when the temple is under repair; கோயிலைப் பிரித்துத் திருப்பணி செய்யும்போது மூலமூர்த்திகளுக்குக் காப்பாகச் சுற்றியிடும் மரக்கூடு. *Loc.*

கிளிக்கொம்பன் kiḷi-k-kompaṉ, *n.* <id.+. Ox with short horns turned downwards; வளைகொம்புள்ள மாடு. (W.)

கிளிக்கொம்பு kiḷi-k-kompu, *n.* <id.+. Short and crooked horn like a parrot's beak; கிளிமூக்குப்போல வளைந்த விலங்குக்கொம்பு. (W.)

கிளிகடிகருவி kiḷi-kaṭi-karuvi, *n.*<id.+. Contrivance to scare away parakeets; கிளியோட்டுங் கருவி. (புறநா. 49, உரை.)

கிளிகடிகோல் kiḷi-kaṭi-kōl, *n.* <id.+. A kind of rod to scare away parrots; கிளியோட்டுங் கருவியுளொன்று. (உரி. நி.)

கிளிகொஞ்சு-தல் kiḷi-koñcu-, *v. intr.* <id.+. To be beautiful, charming, as the talk of a parrot; அழகியதாதல். வீடு கிளிகொஞ்சுகிறது. *Loc.*

கிளிச்சல் kiḷiccal, *n.* perh. கிழி[1]-. A sea-fish, bluish-green, *Caesio cuning*; கடல்மீன்வகை.

கிளிச்சிறை kiḷi-c-ciṟai, *n.* <கிளி+. Gold resembling the parrot's wing in colour, one of four kinds of *poṉ*, q.v.; கிளிச்சிறகுபோன்ற நிறமுள்ள பொன்வகை. (பிங்.)

கிளிஞ்சான் kiḷiñcāṉ, *n.* See கிளிமீன்.

கிளிஞ்சில் kiḷiñcil, *n.* perh. கிழி[1]-. [M. *kiḷiñci.*] Bivalve, mussel or shell, oyster-shell; கடல்வாழ்சாதிவகை. (தொல். பொ. 584, உரை.)

கிளிஞ்சிற்சுண்ணம் kiḷiñciṟ-cuṇṇam, *n.* <கிளிஞ்சில்+. See கிளிஞ்சிற்சுண்ணாம்பு.

கிளிஞ்சிற்சுண்ணாம்பு kiḷiñciṟ-cuṇṇāmpu, *n.* <id.+. Shell lime, lime from sea-shells; கிளிஞ்சிலை நீற்றியெடுக்கும் நீறு.

கிளித்தட்டு kiḷi-t-taṭṭu, *n.* < கிளி+. The game of *uppu-k-kōṭu;* நிலத்திற் சதுரக்கோடு கீறி ஆடும் ஒருவகை விளையாட்டு.

கிளிப்பிள்ளை kiḷi-p-piḷḷai, *n.* < id.+. 1. Young parrot; இளங்கிளி. (தொல். பொ. 559, உரை.) 2. Parrot; கிளி. *சொன்னதைச் சொல்லுமாங் கிளிப் பிள்ளை.*

கிளிப்பூச்சி kiḷi-p-pūcci, *n.* < id.+. A pest that damages the maize crop; சோளப்பூச்சிவகை.

கிளிமீன் kiḷi-mīṉ, *n.* < id.+. A sea-fish, green, *Pseudoscarus chrysopoma;* கடல்மீன் வகை.

கிளிமூக்கன் kiḷi-mūkkaṉ, *n.* < id.+. 1. Man with an aquiline nose; வளைந்த மூக்குடைய வன். (W.) 2. Aloe. See கற்றாழை. (மலை.)

கிளிமூக்கு kiḷi-mūkku, *n.* < id.+. (W.) 1. [M. *kiḷimūkku.*] Anything resembling parrot's beak; கிளிமூக்கைப் போன்றது. 2. Piece of ola-rib used to keep in the leaves of an ola book when strung together; சுவடிகளில் ஏடு விழாமல் தடுக்கவைக்கும் ஓலையீர்க்குத்துண்டு.

கிளிமூக்குக்கிழங்கு kiḷi-mūkku-k-kiḻaṅku, *n.* < id.+. Root of *Bryomia epegea;* ஆகாச கருடன்கிழங்கு. (W.)

கிளிமூக்குமா kiḷi-mūkku-mā, *n.* < id.+. Mango, whose fruit is of the shape of a parrot's beak; கிளிமூக்குப்போல் நுனிவளைந்த காயையுடைய மாவகை.

கிளிமூக்கெழுத்தாணி kiḷi-mūkkeḻuttāṇi, *n.* < id.+. A style with a hooked knife at the top for cutting olas; தலைப்பக்கம் கிளிமூக்குப் போன்ற கத்தியையுடைய எழுத்தாணிவகை.

கிளியட்டிகை kiḷi-y-aṭṭikai, *n.* < id.+. Necklace of gold threads ornamented with golden parrots; பொற்கிளியுருக்கள் அமையச்செய்த அட்டிகையணி. *Loc.*

கிளியந்தட்டு kiḷiyan-taṭṭu, *n.* < id.+. See கிளித்தட்டு. (G. Tn. D. 105.)

கிளியீடு kiḷi-y-īṭu, *n.* < id.+. Grain stored by parrots in the hollows of trees; கிளியினாற் பொந்துகளில் சேர்த்துவைக்கப்பட்ட கதிர்கள். (புறநா. 138, உரை.)

கிளியூறற்பட்டை kiḷi-y-ūṟaṟ-paṭṭai, *n.* A medicinal bark used for fever; ஒருவகை மருந்துப்பட்டை. (பதார்த்த. 508.)

கிளுகிளு-த்தல் kiḷu-kiḷu-, *v. intr.* < கிளுகிளு onom. To feel joy, inwardly rejoice; மகிழ்தல். *கெண்டைத் தடங்கண்ணு ளுள்ளே கிளுகிளுத்தான்* (கம்பரா. மாயாசனக. 87).

கிளுகிளெனல் kiḷu-kiḷeṉal, *n.* 1. Onom. expr. signifying giggling, laughing, tittering, chuckling sound; சிரித்தல்முதலிய ஒலிக்குறிப்பு. 2. Expr. signifying (*a*) thriving, flourishing; செழித்தற்குறிப்பு. *பயிர்கள் கிளுகிளென்று வளர்ந்தன:* (*b*) glowing brilliance; பிரகாசித்தற் குறிப்பு. *கிளுகிளென்று விளக்கு எரிந்துகொண்டிருந்தது.*

கிளுவை kiḷuvai, *n.* 1. Common teal, *Querquedula crecca;* பறவைவகை. (பதார்த்த. 895.) 2. Indian balm of gilead, common hedge plant, l. sh., *Balsamodendron berryi;* செடிவகை. (சீவக. 3076, உரை.) 3. Hill balsam tree, m. tr., *Balsamodendron caudatum;* மரவகை. 4. A kind of eel, grig; மீன்வகை.

கிளை[1]**-தல்** kiḷai-, *4 v. tr.* < களை[1]-. 1. To remove, purge; நீக்குதல். *மனத்து மாசு கிளைவானை* (தேவா. 682, 3.) 2. To wash, as rice; அரிசி களைதல். (W.) 3. To put off, as garments; ஆடைகளைதல். (W.) 4. To pry out, as a thorn from the flesh with a needle; கிளறுதல். (J.)

கிளை[2]**-த்தல்** kiḷai-, *11 v.* [M. *kiḷu.*] *intr.* 1. To ramify, branch out; மரம் கப்புவிடுதல். *விண்பெருஞ் சென்னிக் கிளைஇய காந்தள்* (குறிஞ்சிப். 196). 2. To multiply, increase in number, as families; பெருகுதல். *அவர்கள் கிளைத்து விட்டார்கள்.* 3. To be close, to throng; to crowd, grow thick or close, as the beard, boughs, herbage, grain; நெருங்குதல். *கிருத்திம வினம்பல குதித்தன கிளைத்தே* (இரகு. திக்கு. 113). 4. To come into being, appear; விளைதல். *உழுநீர் வயலுட் பொன் கிளைப்ப* (திவ். பெரியதி. 8, 8, 5). 5. To abound, to be copious, plenteous; நிறைதல். (பிங்.)—*tr.* To dig up, to stir, scratch up, as fowls; to root up, as pigs; to burrow into, as rats; to excavate; கிளறுதல். *கேழ லுழுத விருஞ்சேறு கிளைப்பின்* (புறநா. 176, 2).

கிளை[3] kiḷai, *n.* < கிளை[2]-. 1. Branch, bough; கப்பு. *தாருவின் கிளைக ளென்ன* (கந்தபு. ஆற்றுப். 31). 2. [M. *kiḷa.*] Sprout, shoot, bud; தளிர். (திவா.) 3. Bouquet, bunch of flowers; பூங்கொத்து. *கிளைமலர்* (சிறுபாண். 160). 4. Kindred, relations; சுற்றம். *கேளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி* (நாலடி, 30). 5. Section, division; பகுப்பு. *கிளையமை புவன மூன்றும்* (கம்பரா. கும்பக. 16). 6. Class, group, herd, flock, shoal, company, family, horde, race; இனம். *களிறு . . . கிளைபுகலத் தலைக்கூடி யாங்கு* (புறநா. 17, 19). 7. Bamboo; மூங்கில். (பிங்.) 8. A kind of flute; ஓர் இசைக்கருவி. *தண்ணுமை யாழ்முழவங் கிளைதுந்துபி* (பெரியபு. திருநாவுக். 76). 9. The fifth note in the gamut; ஓர் இசை. *கிளைக் குற்ற வுழைச்சுரும்பின்* (பரிபா. 11, 127).

கிளைக்கதை kiḷai-k-katai, *n.* < கிளை+. One story branching out of another, incidental narrative, episode; உபாக்கியானம்.

கிளைக்கொம்பு kiḷai-k-kompu, *n.* <id.+. Tusk of a boar; பன்றியின் கோரப்பல். (சங். அக.)

கிளைக்கோரை kiḷai-k-kōrai, *n.* <id.+. A kind of sedge; கோரைவகை.

கிளைகூட்டு-தல் kiḷai-kūṭṭu-, *v. intr.* <id. +. To screech simultaneously, as two or more owls together; ஆந்தைகள் கூட்டமாய்ச் சத்த மிடுதல்.

கிளைச்சங்கம் kiḷai-c-caṅkam, *n.* <id.+. Branch society; உபசபை.

கிளைஞர் kiḷaiñar, *n.* <id. 1. Kinsfolk, relations; உறவினர். *காலாடு போழ்திற் கழிகிளைஞர் . . . பலராவர்* (நாலடி, 113). 2. Friends, companions; நட்பினர். *கிளைஞரை நீட்டியளப்பதோர் கோல்* (குறள், 796). 3. Inhabitants of an agricultural tract, husbandmen; மருதநிலமாக்கள். (திவா.)

கிளைநதி kiḷai-nati, *n.* <id.+. Branch stream; ஆற்றினின்று பிரியும் நதி.

கிளைநரம்பு kiḷai-narampu, *n.* <id.+. Collective name for the first, second, third, fifth and sixth notes of the gamut; குரல், இளி, துத்தம், விளரி, கைக்கிளை என்ற யாழ் நரம்புகள்.

கிளைப்பு kiḷaippu, *n.* <கிளை[2]-. 1. Branching, ramification; கப்புவிடுகை. 2. Digging, scratching, burrowing; கிண்டுகை. *குப்பை கிளைப்போவாக் கோழிபோல்* (நாலடி, 341).

கிளைப்பெயர் kiḷai-p-peyar, *n.* <கிளை+. (Gram.) Nouns signifying relationship; சுற்றத்தை உணர்த்தும் பெயர்.

கிளைமை kiḷaimai, *n.* <id. Relationship; உறவு. (சீவக. 330, உரை.)

கிளையடுப்பு kiḷai-y-aṭuppu, *n.* <id.+. Side-hearth; கோடியடுப்பு. (W.)

கிளையிதழ் kiḷai-y-ital, *n.* <id.+. Outer petal of a flower; புறவிதழ். *கிளையிதழ் பறியா* (குறிஞ்சிப். 101).

கிளையோடு-தல் kiḷai-y-ōṭu-, *v. intr.* <id. +. See கிளைவிடு-.

கிளைவழி kiḷai-vaḻi, *n.* <id.+. 1. Lineage, pedigree; family; வமிசம். *Colloq.* 2. Branching road, forked road; பிரியும்வழி.

கிளைவிடு-தல் kiḷai-viṭu-, *v. intr.* <id.+. To ramify, branch off; கப்பு உண்டாதல்.

கிளைவிளக்கு kiḷai-viḷakku, *n.* <id.+. Lamp with many branching lights used in marriage ceremony; பலகிளையுடைய மணவிளக்கு வகை. *Loc.*

கிற்பு kiṟpu, *n.* <கில்-. 1. Strength, power, ability; வலிமை. *கிற்புறு மாயை* (கந்தபு. திருக்கல். 61). 2. Workmanship; வேலைப்பாடு. *கிற்புறு செய்பூண் கிழியை நோக்கினன்* (கந்தபு. குமாரபுரி. 23). 3. Action, act, performance; செய்கை. (W.)

கிற்றல் kiṟṟal, *n.* <id. Being able to do; செய்யுந்திறங் கொள்ளுகை. (சிலப். 16, 183.)

கிறாக்கி kiṟākki, *n.* <U. *khiragi.* High price; விலையேற்றம்.

கிறாக்கிபண்ணு-தல் kiṟākki-paṇṇu-, *v. tr.* <கிறாக்கி+. To affect reserve; அருமைபடுத்திக் கொள்ளுதல். *Colloq.*

கிறாகிறாவெனல் kiṟā-kiṟā-v-eṉal, *n.* Onom. expr. signifying calling repeatedly, crying sound, as of a peacock; ஓர் ஒலிக்குறிப்பு. (W.)

கிறாம் kiṟām, *n.* Mischievous person; துஷ்டன். *அவன் வலுத்த கிறாம்.* (J.)

கிறாம்பு-தல் kiṟāmpu-, *5 v. intr.* To plane, smooth off; மெல்லச்செதுக்குதல். (யாழ். அக.)

கிறாய் kiṟāy, *n.* cf. கிராய். Green clod, sod, turf; புற்கரடு. (W.)

கிறாவு-தல் kiṟāvu-, *5 v. intr.* To cry, as a peacock; ஒலித்தல். (W.)

கிறாளித்தனம் kiṟāḷi-t-taṉam, *n.* <*karāli* +. Cruelty, hard-heartedness; கொடுமை. *Loc*

கிறி[1] kiṟi, *n.* 1. Way, path; வழி. (பிங்.) 2. Coral wristlet; குழந்தைகளின் முன்கையிலணியும் சிறு பவளவடம். *கிண்கிணிகட்டிக் கிறிகட்டி* (திவ். பெரியாழ். 1, 9, 2).

கிறி[2] kiṟi, *n.* cf. *kṛtrima.* 1. Falsehood, lie; பொய். *கிறிபேசி மடவார் பெய்வளைகொள்ளும்* (தேவா. 228, 6). 2. Stratagem, artifice; தந்திரம். *மூவடிமண் வேண்டிச் சென்ற பெருங்கிறி* (திவ். இயற். திருவிருத். 91). 3. Deceit, fraud, playful mischief, practical joke; மாயம். *கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்* (திருவாச. 8, 6).

கிறி[3]-த்தல் kiṟi-, *11 v. tr.* <கிறி[2]. To play pranks; மாயஞ்செய்தல். *பொய்யர்களைப் பொய் செய்து போதுபோக்கிக் கிறிப்பானை* (தேவா. 684, 10).

கிறிச்சல் kiṟiccal, *n.* A prepared arsenic. See தீமுறுகற்பாஷாணம். (சங். அக.)

கிறிச்சான் kiṟiccāṉ, *n.* <கிறிச்சு onom. Watch-man's rattle, child's rattle; கிறிச்சென்று ஒலிக்குங் கருவி. (W.)

கிறிச்சிடு-தல் kiṟicciṭu-, *v. intr.* <id.+. To creak, as new shoes, a wheel, an oil mill, a door; to sound, as a watchman's rattle; கிறிச்சென்று ஒலித்தல். (W.)

கிறிச்சு kiṟiccu, *n.* onom. Creaking sound; ஒலிவகை. *கிறிச்சுச் சோடு.*

கிறிச்சுக்கிறிச்செனல் kiṟiccu-k-kiṟicce-ṉal, *n.* Onom. expr. signifying creaking noise; ஓர் ஒலிக்குறிப்பு.

கிறிச்சுச்சடா kiriccu-c-caṭā, *n.* < கிறிச்சு +. Creaking shoes; கிறிச்சென்றெலிக்குங் காற்சோடு வகை.

கிறிச்சுச்சாட்டை kiriccu-c-cāṭṭai, *n.* < id. +. A large whip creaked before the chief officers of the Kandyan country; கண்டிநாட்டுத் தலைமையதிகாரிகள் முன்பு கிறிச்சென்று ஒலிக்கச் செய்யுஞ் சாட்டை. (J.)

கிறிச்சுத்தலையணை kiriccu-t-talai-y-aṇai, *n.* < id. +. Creaking pillow; கிறிச்சென்று ஒலியிடுந் தலையணை.

கிறிசு kiricu, *n.* < Malay. *krīs*. Malay dagger. See கிரிசுக்கத்தி.

கிறிஸ்தவன் kiristavaṉ, *n.* < கிறிஸ்து. Christian; கிறிஸ்துமார்க்கத்தான்.

கிறிஸ்து kiristu, *n.* < Gr. *Kristos*. Christ, the Messiah; இயேசுகிறிஸ்துநாதர்.

கிறிஸ்துமார்க்கம் kiristu-mārkkam, *n.* < கிறிஸ்து +. Christianity; கிறிஸ்துவமதம்.

கிறிஸ்துவம் kiristuvam, *n.* < id. See கிறிஸ்துமார்க்கம்.

கிறிஸ்மஸ் kirismas, *n.* < E. Christmas; கிறிஸ்துபிறந்த திருநாள்.

கிறு kiru, *part.* (Gram.) Sign of the present tense; ஒரு நிகழ்கால இடைநிலை. (நன். 143.)

கிறுக்கட்டி[1] kirukkaṭṭi, *n.* Confection made of fried Mahwa flowers, etc.; இலுப்பைப் பூ முதலான பூக்களை வறுத்துப் பாகில் செய்யும் பணியாரம். *Loc.*

கிறுக்கட்டி[2] kiru-k-kaṭṭi, *n.* prob. கண் + கட்டி. Sty in the eye. See கட்கட்டி.

கிறுக்கல் kirukkal, *n.* < கிறுக்கு-. 1. Scribbling, writing hastily and clumsily; தாறுமாறாக எழுதுகை. 2. Scoring out; எழுத்தின் அடிப்பு.

கிறுக்கன் kirukkaṉ, *n.* < கிறுக்கு. [T. *kiruku.*] 1. Crazy fellow, crank, lunatic; பைத்தியக்காரன். 2. Conceited, arrogant fellow; கருவமுடையவன். (W.)

கிறுக்காஸ்பத்திரி kirukkāspattiri, *n.* < id. + ஆஸ்பத்திரி. Lunatic asylum; பைத்தியத்துக்குச் சிகிற்சைசெய்யும் வைத்தியசாலை.

கிறுக்கு[1]**-தல்** kirukku-, 5 *v.* < கிறு onom. *tr.* [T. *giruku.*] 1. To write; எழுதுதல். (பிங்.) 2. To scribble, write illegibly; உருத்தெரியாமல் எழுதுதல். 3. [M. *kirukka.*] To cancel, score out; வரைந்த எழுத்தை அடித்தல். (W.)—*intr.* To feel giddy, to be delirious, dizzy; தலைசுற்றுதல்.

கிறுக்கு[2] kirukku, *n.* < கிறுக்கு-. 1. Scribble; உருத்தெரியாத எழுத்து. 2. Scoring out anything written; எழுதிய எழுத்தைக் கீறியடிக்கை. 3. Giddiness, dizziness; தலைச்சுற்று. 4. cf. E. *crack*. Craziness, eccentricity, lunacy; பைத்தியம். (பெருந்தொ. 1301.) 5. Passion, as for a thing; மிக்க ஆசை. *Loc.* 6. Egotism, self-conceit, arrogance; அகங்காரம். (W.)

கிறுக்குநோவு kirukku-nōvu, *n.* < கிறுக்கு +. A disease of sheep; ஒருவகை ஆட்டுநோய். (M. Cm. D. [1887] 249.)

கிறுகிறு-த்தல் kiru-kiru-, 11 *v. intr.* < கிறுகிறெனல். [T. *giragira.*] 1. To be giddy, dizzy; to swim, as the head; மயக்கமாதல். தலை சுழன்று கிறுகிறுத்து (பிரபோத. 18, 54). 2. To be confounded, confused, disconcerted; தடுமாறுதல். (W.)

கிறுகிறுப்பு kiru-kiruppu, *n.* < கிறுகிறு-. 1. Giddiness, dizziness, swimming of the head, vertigo; தலைச்சுழற்சி. இந்த மையலுங் கிறுகிறுப்புந் தையலர்க்குண்டோ (குற்றா. குற. 73, 3). 2. Pride, haughtiness; செருக்கு. (W.)

கிறுகிறெனல் kiru-kir-eṉal, *n.* Expr. signifying (*a*) being giddy, dizzy; தலைசுற்றற்குறிப்பு: (*b*) moving rapidly; விரைவுக்குறிப்பு.

கிறுங்கு-தல் kiruṅku-, 5 *v. intr.* To move, stir, shake, stagger; அசைதல். அவன்சற்றுங் கிறுங்கவில்லை. *Loc.*

கிறுசன்[1] kirucaṉ, *n.* cf. *ghusṛṇa*. The flower of a bulbous-rooted plant; குங்குமப்பூ. (மலை.)

கிறுசன்[2] kirucaṉ, *n.* prob. *gharṣaṇī*. Turmeric, *Curcuma longa;* மஞ்சள். (மலை.)

கிறுத்துவம் kiruttuvam, *n.* Eagle-wood. See அகில். (மலை.)

கிறுது kirutu, *n.* See கிருது. கிறதுபடு மொழி பழகி (திருப்பு. 790).

கிறுதுவேதன் kirutuvētaṉ, *n.* Sponge-gourd. See பீர்க்கு. (மூ. அ.)

குச்சுப்பிடி-த்தல் kuccu-p-piṭi-, *v.tr.*<குச்சு³+. 1. To make folds in cloth when putting it on; ஆடையைக் கொய்துவைத்தல். 2. To make tassels; குஞ்சம்வைத்தல்.

குச்சுப்புல் kuccu-p-pul, *n.* <id.+. 1. Cluster-grass, *Cynosurus indicus;* ஒருவகைப் புல். குச்சுப்புல் நிரைத்தாற்போன்ற நிறம்பொருந்திய மயிரினையுடைய தாடியினையும் (புறநா. 257, உரை). 2. Tassel of grass; கொத்தாயுள்ள புல்.

குச்சுப்புற்சாத்து-தல் kuccu-p-puṟ-cāttu-, *v. tr.* <குச்சுப்புல்+. To wipe an idol with fine grass; விக்கிரகத்தைக் குச்சுப்புல்லாற் சுத்தஞ்செய்தல். (W.)

குச்சுமட்டை kuccu-maṭṭai, *n.* <குச்சு⁴+. 1. Painter's coarse brush; சித்திரகாரரின் கருவிவகை. 2. Brush used in whitewashing; சுண்ணாம்புவெள்ளையடித்தற்குரிய மட்டை. *Loc.*

குச்சுமணி kuccu-maṇi, *n.* prob. குச்சு³+. A neck-ornament of women; மகளிர் கழுத்தணிவகை. *Parav.*

குச்சுவாங்கு-தல் kuccu-vāṅku-, *v.tr.* prob. குற்றி+. To polish gems in setting them in a stick; குற்றியிற் பதித்து இரத்தினங்களை ஒப்பஞ்செய்தல்.

குச்செறி-தல் kucceṟi-, *v. intr.* <கூச்சு+எறி-. To horripilate, bristle, as the hair of the body from excitement; மயிர்சிலிர்த்தல்.

குச்சை kuccai, *n.* cf. *guccha.* Fold or plait of a woman's cloth; கொய்சகம். (R.)

குசக்கணக்கு kuca-k-kaṇakku, *n.* <குசம்¹+. 1. Wrong, clumsy reckoning, pottering in calculation; வழுவான கணக்கு. (W.) 2. A sub-sect among potters, as doing the duties of an accountant; குயவரில் கணக்குப்பார்க்கும் ஒருவகையினர்.

குசக்கருவி kuca-k-karuvi, *n.* <id.+. Potter's implements; குயவர் உபயோகிக்கும் கருவி.

குசக்கலம் kuca-k-kalam, *n.* <id.+. [M. *kuśakkalam.*] Earthenware, potter's vessel; மட்பாண்டம்.

குசக்காணம் kuca-k-kāṇam, *n.* <id.+. Tax on potters; குயவர் செலுத்திவந்த பழைய வரி. (S.I.I. ii, 509.)

குசக்குழாய் kuca-k-kuḻāy, *n.*<id.+. Brick tube; சுடுமண்ணாலான குழாய். *Madr.*

குசத்தனம் kuca-t-taṉam, *n.* <id.+. Stupidity, dullness, used in contempt; அறிவீனம்.

குசத்தி¹ kucatti, *n.* <id. [M. *kuśatti.*] A female potter. See குயத்தி.

குசத்தி² ku-catti, *n.* prob. *ku*+*śakti.* Earth impregnated with soda; பூவழலை. (W.)

குசத்தீவு kuca-t-tīvu, *n.* <*kuśa*+. See குசைத்தீவு.

குசத்துவீபம் kuca-t-tuvīpam, *n.* <id.+. See குசைத்தீவு.

குசந்தனம் kucantaṉam, *n.* <*ku-candana.* Red sandalwood. See செஞ்சந்தனம். (மலை.)

குசப்புத்தி kuca-p-putti, *n.* <குசம்¹+. Stupidity, dullness, as a term of contempt; மடமை. *Colloq.*

குசம்¹ kucam, *adj.* <குயம். Pertaining to the potter's class, always used as the first part of compounds such as குசக்கருவி, குசப்புத்தி; குயவர்க்குரிய.

குசம்² kucam, *n.* <*kuśa.* 1. Darbha. See தருப்பை. ஈரக் குசங்கள் இழிக்குந்தொழிற் கேற்றவாலோ (பாரத. சம்பவ. 55). 2. Water; நீர். (பிங்.)

குசம்³ kucam, *n.* <*ku-ja.* Tree; மரம். (சூடா.)

குசம்¹ kucam, *n.* <*kuca*. Woman's breast; ஸ்தனம். *பாரக்குசங்கள் பலதைவரும் பான்மை நீங்கி* (*பாரத. சம்பவ.* 55).

குசமசக்கு kuca-macakku, *n.* prob. குசம்¹ + மயக்கு. 1. Confusion, chaotic condition; குழப்பம். *Loc.* 2. Intricacy, difficulty; காரியச்சிக்கல்.

குசர் kucar, *n.* <U. *khusr*. Anything extra obtained from shopkeeper as a bargain; பிசிர்.

குசலக்காரன் kucala-k-kāraṉ, *n.* <*kuśala* +. 1. Sorcerer, wizard; மந்திரக்காரன். (W.) 2. Crafty person; வஞ்சகன். (J.)

குசலப்பிரசினம் kucala-p-piraciṉam, *n.* <id.+. Friendly enquiry after a person's welfare; க்ஷேமவிசாரணை.

குசலபுத்தி kucala-putti, *n.* <id.+. 1. Sharp intelligence, acuteness of intellect; கூர்மையான புத்தி. 2. Crafty, cunning wit; தந்திர புத்தி. (J.)

குசலம் kucalam, *n.* <*kuśala*. 1. Well-being, prosperity; க்ஷேமம். *குசலவார்த்தை பேசி* (*உத்தரா. சம்பு.* 37). 2. Virtue, goodness; நற்குணம். (பிங்.) 3. Excellence; மாட்சிமை. (பிங்.) 4. Ability, skill, dexterity; சாமர்த்தியம். 5. Craftiness, cunning, wile, trickiness; தந்திரம். (J.) 6. Witchcraft, magic, sorcery; மாந்திரிகம். (J.)

குசலம்பண்ணு-தல் kucalam-paṇṇu-, *v. intr.* <id.+. To practise the black art, work magic; மந்திரவாதஞ்செய்தல். (J.)

குசலவர் kuca-lavar, *n.* <*kuśa*+*lava*. Kuca and Lava, the twin sons of Rāma; இராமபிரானது இரட்டைமைந்தரான குசனும் லவனும். (*உத்தரா. இலவண.* 75.)

குசலவித்தை kucala-vittai, *n.* <*kuśala*+. 1. Accomplishments of women, being five, viz., *எண்ணல், எழுதல், இலைகிள்ளல், பூத்தொடுத்தல், யாழ் வாசித்தல்;* மகளிர்க்குரிய விநோதக்கைத்தொழில்கள். (பிங்.) 2. Black art, magic, sorcery; மந்திர வித்தை. (J.)

குசலவேதனை kucala-vētaṉai, *n.* <id.+. Pleasurable sensation; இன்பவுணர்ச்சி. (W.)

குசலன் kucalaṉ, *n.* <*kuśala*. Skilful person, expert; மிகவல்லோன். (திவா.)

குசலாகுசலவேதனை kucalākucala-vētaṉai, *n.* <id.+*a-kuśala*+. Pleasurable and painful sensations; இன்பதுன்பவுணர்ச்சி. (W.)

குசலை kucalai, *n.* [T. K. *kusi*.] Coping of a wall; சுவர்த்தலையிற் கட்டும் ஆரல். *Loc.*

குசவம் kucavam, *n.*<கொய்சகம். cf. *guccha*. Folds of cloth put on by Indian women. See கொய்சகம். (G. Tj. D. 63.)

குசவன் kucavaṉ, *n.* <குயம். [M. *kuśavaṉ*, Tu. *kusave*.] Potter. See குயவன்.

குசவோடு kuca-v-ōṭu, *n.* <id.+. Pot tile; குசவன் செய்த ஓடு. (C. E. M.)

குசன் kucaṉ, *n.* <*ku-ja*. The planet Mars, as born of the earth; செவ்வாய். (திவா.)

குசாக்கிரபுத்தி kucākkira-putti, *n.* <*kuśa* +*agra*+. Keen intellect, acumen, shrewdness, intelligence, sharp as the point of *kuśa* grass; தருப்பைநுனிபோற் கூரிய அறிவு.

குசாண்டு kucāṇṭu, *n.* perh. *kutsa*+. Meanness, littleness; அற்பத்தன்மை. *நன்மைநிலைகளைக் கணக்கிட்டுப் படிவைக்கும் குசாண்டுள்ள சம்வாசகோஷ்டியை* (*திவ். திருப்பா.* 4, *மூவா.*).

குசாமத்தி kucāmatti, *n.* <U. *khuṣāmad*. Flattery, coaxing, wheedling; முகஸ்துதி. *குசாமத்தித்தனம்.* (W.)

குசால் kucāl, *n.* <U. *khuṣāl*. 1. Merriment, gladness, joy; மனக்களிப்பு. *குசாலொடு சாய்ந்துகொண்டவர்* (*மதுரகவி.* 70). 2. Stylishness, gaudiness, finery, as in furniture, in dress, in perfumery; நடையுடைகளின் மினுக்கு.

குசாற்காரன் kucāṟ-kāraṉ, *n.* <id.+. 1. A merry, care-free, happy-go-lucky person; மனக்களிப்புள்ளவன். 2. Beau, fop; ஆடம்பரக்காரன்.

குசிகன் kucikaṉ, *n.* <*kuśika*. A sage, the father of Viśvāmitra; விசுவாமித்திரரின் தந்தையாகிய ஒரு முனிவன்.

குசினி¹ kuciṉi, *n.* [T. *kūsu*, K. *kusi*.] Anything very small, tender, slender; சிறியது. (J.)

குசினி² kuciṉi, *n.* <Fr. *cuisine*. 1. Cook-room, kitchen, galley; சமையலறை. 2. See குசினிக்காரன்.

குசினிக்காரன் kuciṉi-k-kāraṉ, *n.* <id.+. 1. Cook, house-keeper, as working in the kitchen; சமையற்காரன். 2. Syce, horse-groom; குதிரைக்காரன். *Colloq.*

குசினிப்பயிர் kuciṉi-p-payir, *n.*<குசினி¹+. Seedling, tender plant; இளம்பயிர். (J.)

குசினிமேட்டி kuciṉi-mēṭṭi, *n.* <குசினி²+. E. *matey*. Cook's matey or underservant; சமையற்காரனுடைய உதவியாள்.

குசு kucu, *n.* Onom. [K. *hūsu*.] Fart, wind or gas generated in the bowels and broken downwards; அபானவாயு.

குசுகுசு-த்தல் kucu-kucu-, 11 *v. intr.* <குசுகுசு onom. [K. *kucukucu*.] To whisper; காதுக்குள் முணுமுணென்று ஓதுதல்.

குசுகுசுப்பு kucu-kucuppu, *n.* <குசுகுசு-. Whispering; காதுக்குள் ஓதுகை.

குசுகுசெனல் kucu-kucenal, *n.* [K. M. *kucukucu.*] Onom. expr. signifying whispering; காதுக்குள் ஓதுதற்குறிப்பு.

குசும்பம் kucumpam, *n.* See செந்துருக்கம். குசும்பமலர்க் கந்தம் (திருமந். 2818).

குசும்பா kucumpā, *n.* <*kusumbhā.* Safflower. See செந்துருக்கம்.

குசும்பாச்சேலை kucumpā-c-cēlai, *n.* <id. +. Cloth dyed red in a solution of safflower seeds; குசும்பாச்சாயம் ஏற்றிய சேலை.

குசும்பாவெண்ணெய் kucumpā-v-eṇṇey, *n.* <id.+. Safflower oil, used in confectionery; குசும்பாவிதையினின்று வடிக்கும் எண்ணெய்.

குசும்பு kucumpu, *n.* <குறும்பு. Mischief; குறும்புத்தனம். *Loc.*

குசும்பை kucumpai, *n.* <*kusumbhā.* See குசும்பா. குசும்பையி னறுமலர் (கம்பரா. அதிகாய. 89).

குசுமம் kucumam, *n.* <*kusuma.* 1. Flower; பூ. (திவா.) 2. See காயா. (மலை.)

குசூர் kucūr, *n.* <U. *khusūr.* Neglect, carelessness, default; அசாக்கிரதை. (C. G.)

குசேசயம் kucēcayam, *n.* <*kuśē-śaya.* Lotus; தாமரை. (சூடா.)

குசேலன் kucēlaṉ, *n.* <*kū-cēla.* A poverty-stricken Brahman sage who, through the friendship of Kṛṣṇa, became exceedingly rich; கண்ணனது நண்பனும் அவரால் வறுமைநீங்கிப் பெருஞ் செல்வம்பெற்றவனுமாகிய ஒருமுனிவன். (பாகவத. 10, 45, 1.)

குசை[1] kucai, *n.* <*kuśa.* Darbha. See தருப்பை. குசைசுடு மறையோர் (பிரபுலிங். கோரக்கர். 1).

குசை[2] kucai, *n.* <*kuśā.* 1. Rein; குதிரையின் வாய்க்கருவியிற் கோத்துமுடியுங் கயிறு. (நெடுநல். 178, உரை.) 2. Bridle, bit; கடிவாளம். அசைவிரு டையடி கலசகுசை (பாரத. பதினெரும்போ. 27).

குசை[3] kucai, *n.* [U. *khuṣi.*] Gladness, joy; மகிழ்ச்சி. குசைதரு விநோதம் (ஞானவா. தாசூர. 85).

குசை[4] kucai, *n.* perh. *guccha.* Horse's mane; குதிரைப் பிடர்மயிர். (பிங்.)

குசைக்கயிறு kucai-k-kayiṟu, *n.* <குசை[2]+. Rein; குதிரையின் வாய்வடம். (திவா.)

குசைக்கிரந்தி kucai-k-kiranti, *n.* <குசை[1] +. Knot in a finger-ring made of darbha grass; தருப்பைப்பவித்திரமுடிச்சு. கண்டிவிசிட்டங் குசைக்கிரந்தி கனிட்டம் (சிவதரு. இவகை. 4).

குசைத்தீவு kucai-t-tīvu, *n.* <*kuśa*+. The fourth annular continent believed to have sprung from Brahma's *kuśa* grass and to be surrounded by the ocean of ghee (திவா.), or ocean of curds (கந்தபு.), one of *eḻu-tīvu*, q.v.; பிரமாவினது தருப்பையிலிருந்து உண்டானதும் நெய் அல்லது பாற்கடலாற் சூழப்பெற்றதும் எழுதீவுகளுள் ஒன்றுமாகிய தீவு.

குசோத்தியம் kucōttiyam, *n.* <*ku-cōdya.* 1. Inappropriate question; நேர்மையற்ற கேள்வி. 2. Fraud, stratagem; தந்திரம். (W.) 3. Joke, jest; பரிகாசம். (W.)

குஞ்சக்குறவர் kuñca-k-kuṟavar, *n.* <*kūrca* +. The Kuravas who manufacture weaver's brushes from roots, and are employed as shikaris; பாவாற்றி செய்யும் குறவர்வகையினர். (E. T.)

குஞ்சங்கட்டு-தல் kuñcaṅ-kaṭṭu-, *v. intr.* <*guccha*+. To hang up tassels, as ornaments; அலங்காரத்தூக்குத் தொங்கவிடுதல்.

குஞ்சட்டி kuñcaṭṭi, *n.* prob. குறு-மை+ சட்டி. Small earthen vessel; சிறுசட்டி. (J.)

குஞ்சம்[1] kuñcam, *n.* <*kubja.* 1. Dwarf; குறள். (திவா.) 2. Hump-back; கூன். (அக. நி.) 3. Calumny, aspersion, slander; குறளை. (திவா.)

குஞ்சம்[2] kuñcam, *n.* <*guccha.* (W.) 1. Bunch of flowers; பூங்கொத்து. 2. Tassel, cluster of grass; புல்லின்குச்சு. 3. (Weav.) A measure in the width of cloth = 120 threads of the warp; புடைவையகலத்தின் அரைக்காற்பாகம். 4. Fold of cloth; கொய்சகம்.

குஞ்சம்[3] kuñcam, *n.* <*kūrca.* 1. Chowry, bushy tail of the yak, often set in a richly decorated handle for use as a fly-flapper, as an insignia of royalty; ஈயோட்டி. (சூடா.) 2. Weaver's brush; பாவாற்றி. (W.)

குஞ்சம்[4] kuñcam, *n.* <*gunjā.* Crab's eye. See குன்றி. (திவா.)

குஞ்சம்[5] kuñcam, *n.* <*kuñci.* A measure of capacity; நாழி. (திவா.)

குஞ்சம்[6] kuñcam, *n.* 1. Bristly trifoliate vine. See புளிநறளை. (மூ. அ.) 2. A mineral poison. See சீதாங்கபாஷாணம். (மூ. அ.)

குஞ்சம்வீசு-தல் kuñcam-vīcu-, *v. tr.* <குஞ்சம்[3]+. To fan with a chowry; ஈயோட்டியாற் பணிமாறுதல். (W.)

குஞ்சரக்கன்று kuñcara-k-kaṉṟu, *n.* <குஞ்சரம்[1]+. Young elephant; குட்டியானை. நற்குஞ்சரக்கன்று நண்ணின் (அருட்பா, காப்பு).

குஞ்சரத்தீ kuñcara-t-tī, *n.* <id.+. A disease causing great hunger. See யானைத்தீ. (சீவக. 396.)

குஞ்சரம்[1] kuñcaram, *n.* <*kuñjara.* 1. Elephant; யானை. குஞ்சரவொழுகை பூட்டி (பதிற்றுப்.

5, பதி.). 2. An epithet to denote excellence used in compounds like *கவிகுஞ்சரம்*; ஒருசொல் லைச்சார்ந்து உயர்வுகுறிக்கும் மொழி.

குஞ்சரம்[2] kuñcaram, *n.* Blue nelumbo. See கருங்குவளை. (மலை.)

குஞ்சரமணி kuñcara-maṇi, *n.* perh. குஞ்சம்[4] +. Necklace worn by women; கழுத்தணிவகை. *Parav.*

குஞ்சரவொழுகை kuñcara-v-oḻukai, *n.* <குஞ்சரம்[1] +. Elephant cart; யானைகட்டிய சகடம். *குஞ்சரவொழுகை பூட்டி* (பதிற்றுப். 5, பதி.).

குஞ்சராசனம் kuñcarācaṉam, *n.* <*kunjarāšana.* Pipal, as elephant's food. See அரசு. (பிங்.)

குஞ்சரி kuñcari, *n.* <*kuñjarī.* 1. Female elephant; பெண்யானை. 2. A consort of Skanda; முருகக்கடவுளின் தேவியான தெய்வயானை. *குஞ்சரி குயம் புயம்பெற* (திருப்பு.).

குஞ்சன் kuñcaṉ, *n.* <*kubja.* Dwarf; குறளன். (பிங்.)

குஞ்சாமணி kuñcāmaṇi, *n.* <குஞ்சு + ஆம் + மணி. A waist ornament of male children; ஆண்குழந்தைகளின் அரையிற்கட்டும் மணிவிசேடம்.

குஞ்சாலாடு kuñcālāṭu, *n.* <id. +. [K. *guñjālāḍu.*] A kind of sweet-meat made of dough of dhal or Bengal gram flour fried in ghee, and shaped like a ball of abrus-seeds; கடலைமாவைச் சலித்துச்செய்த சிறுமணிகளைச் சருக்கரைப்பாகிற்கலந்து செய்த உருண்டைவடிவமான ஒரு தின்பண்டம்.

குஞ்சான் kuñcāṉ, *n.* <id. Membrum virile, especially of a child; குழந்தையின் ஆண்குறி. (J.)

குஞ்சி[1] kuñci, *n.* <குஞ்சு. 1. Anything small; சிறுமையானது. குஞ்சிப்பெட்டி. 2. Young bird, chicken; பறவைக்குஞ்சு. *கரியகுஞ்சியின் ருக மார் பசி* (சி. சி. பர. மாயாவாதிமறு. 1). 3. Mother's younger sister; தாயின்தங்கை. (J.) 4. Father's younger brother; சிற்றப்பன். (J.) 5. Membrum virile, as small; ஆண்குறி.

குஞ்சி[2]**-த்தல்** kuñci-, *11 v.* <*kuñc. tr.* To upraise and bend, as the leg; to cause to bend; காலைத்தூக்கிவளைத்தல். *கால்குஞ்சித் தாடி ஞானும்* (தேவா. 521, 4).—*intr.* To stand on tip-toe; காற்படங் குந்திநிற்றல். (சூடா.)

குஞ்சி[3] kuñci, *n.* <குச்சி[1]. 1. Pit for erecting a flagstaff; கொடிநாட்டுங் குழி. *குஞ்சிமாண்கொடி* (சீவக. 143). 2. Flagstaff; கொடிக்கழை. (சீவக. 143, உரை.)

குஞ்சி[4] kuñci, *n.* cf. *kūrca.* 1. Tuft of hair, especially man's; குடுமி. (திவா.) 2. Hair, as on the head of an elephant, crest of a peacock; யானை மயில் முதலியவற்றின் உச்சிமயிர். *குஞ்சிக் களியானை* (சீவக. 2792). *குஞ்சிமா மஞ்ஞை* (சீவக. 301). 3. Head; தலை. *குஞ்சி குறங்கின்மேற் கொண்டிருந்து* (பதினொ. க்ஷேத். 5). 4. Tassels, as insignia of royalty; சிற்றரசுக்கனேன்னும் விருது. *புனைமயிற் குஞ்சு பிச்சமின்றவழ் கொடியோ டிட்டு* (சீவக. 437).

குஞ்சி[5] kuñci, *n.* <*guñjā.* Crab's eye. See குன்றி.

குஞ்சிக்கூடை kuñci-k-kūṭai, *n.* <குஞ்சி[1] +. Wicker-basket, small ola basket; சிறுகூடை. (W.).

குஞ்சிதநடம் kuñcita-naṭam, *n.* <*kuñcita* +. The dance of Naṭarāja with one foot upraised and bent; ஒருகாலைத்தூக்கி வளைத்து ஆடும் நடராசர் கூத்து. *மன்றிற் சதிக் குஞ்சித நடத்தான்* (மறைசை. 93).

குஞ்சிதபாதம் kuñcita-pātam, *n.* <id. +. (Nāṭya.) The bent and upraised foot, as in the dancing posture of Naṭarāja; நடனத்தில் வளையத் தூக்கின நடராசர் தாள்.

குஞ்சிதம் kuñcitam, *n.* <*kuñcita.* That which is bent, curved, crooked; வளைந்தது. *குஞ்சித சரண மிலங்க* (கோயிற்பு. பதஞ். 41).

குஞ்சிமணி kuñci-maṇi, *n.* <குஞ்சி[1] +. See குஞ்சாமணி.

குஞ்சியப்பன் kuñci-y-appaṉ, *n.* <id. +. (J.) 1. Father's younger brother; தந்தையின் தம்பி. 2. Mother's younger sister's husband; தாயின் தங்கை கணவன். 3. Step-father; தாயின் இரண்டாம் கணவன்.

குஞ்சியப்பு kuñci-y-appu, *n.* <id. +. See குஞ்சியப்பன். *Loc.*

குஞ்சியன் kuñciyaṉ, *n.* <id. See குஞ்சியப்பன்.

குஞ்சியாத்தை kuñci-y-āttai, *n.* <id. +. See குஞ்சியாய்ச்சி. *Loc.*

குஞ்சியாய்ச்சி kuñci-y-āycci, *n.* <id. +. (J.) 1. Mother's younger sister; தாயின் தங்கை. 2. Father's younger brother's wife; தந்தையின் தம்பிமனைவி. 3. Step-mother; தந்தையின் இரண்டாந் தாரம்.

குஞ்சியாயி kuñci-y-āyi, *n.* <id. +. See குஞ்சியாய்ச்சி. (J.)

குஞ்சிரிப்பு kuñcirippu, *n.* <குறு-மை +. Smile; புன்னகை. (W.)

குஞ்சு kuñcu, *n.* [M. *kuññu.*] 1. Young of birds; பறவைக்குஞ்சு. (பிங்.) 2. Young of any living being, as fish, oysters, rats, lizards, frogs, squirrels, etc.; எலி அணில் முதலியவற்றின் பிள்ளை. 3. Membrum virile; ஆண்குறி. 4. See குஞ்சி[1], 1.

குஞ்சுக்கடகம் kuñcu-k-kaṭakam, *n.* < குஞ்சு +. Small ola basket; சிறிய ஓலைப்பெட்டி. (J.)

குஞ்சுக்குவை-த்தல் kuñcukku-vai-, *v. tr.* < id. +. To set eggs for hatching; முட்டையைக் குஞ்சுபொரிக்கும்படி செய்தல். (J.)

குஞ்சுகுழந்தைகள் kuñcu-kuḻantaikaḷ, *n.* < id. +. Infants and children; சிறியவும் பெரியவுமான குழந்தைகள். குஞ்சு குழந்தைகளெல்லாம் சௌக்கியமா? *Colloq.*

குஞ்சுங்குழுமானும் kuñcuṅ-kuḻumāṉ-um, *n.* < id. + குழு +. 1. Swarm of insects; பூச்சித்திரள். 2. A group of children of different ages; பலவயசிலுள்ள குழந்தைகளின் கூட்டம். குஞ்சுங்குழுமானுமாக வீடு கலகலவென்றிருக்கின்றது. *Colloq.*

குஞ்சுங்குழுவானும் kuñcuṅ-kuḻuvāṉ-um, *n.* < id. + குழு +. See குஞ்சுங்குழுமானும்.

குஞ்சுங்குழுவும் kuñcuṅ-kuḻu-v-um, *n.* < id. +. See குஞ்சுங்குழுமானும்.

குஞ்சுச்சிப்பி kuñcu-c-cippi, *n.* < id. +. Immature bivalves, as young mussels, oysters; முற்றாத முத்துச்சிப்பி. (J.)

குஞ்சுநறுக்கு-தல் kuñcu-naṟukku-, *v. intr.* < id. +. To circumcise; சுன்னத்துச்செய்தல். (M. L.)

குஞ்சுப்பெட்டி kuñcu-p-peṭṭi, *n.* < id. +. Small ola basket; சிறிய ஓலைப்பெட்டி. (J.)

குஞ்சுபொரி-த்தல் kuñcu-pori-, *v. intr.* < id. +. To hatch, produce young from eggs; முட்டையினின்று குஞ்சினை வெளிவிடுதல்.

குஞ்சுரம் kuñcuram, *n.* prob. *gunjā*. Crab's eye. See குன்றி.

குஞ்சுறை kuñcuṟai, *n.* < குஞ்சு + உறை-. Bird's nest; பறவைக்கூடு. (சூடா.)

குஞ்சை kuñcai, *n.* cf. குஞ்சம்[3]. (Weav.) The big, broad, heavy-sized brush of which the *pā* is twined into the *veṇṭi*, sometimes double-handled, with which men run swiftly back and forth; நெய்வோர் பாவில்தேய்க்கும் குஞ்சம்.

குட்சி[1] kuṭci, *n.* < *kukṣi*. Stomach; வயிறு.

குட்சி[2] kuṭci, *n.* cf. குஷ்டி. [T. *guḍḍi.*] The number marked one that is turned upwards in a game played with cowries, etc.; உருட்டியாடுங்கருவியில் விழும் ஒற்றைத்தாயம். *Colloq.*

குட்டக்கரப்பான் kuṭṭa-k-karappāṉ, *n.* < *kuṣṭha* +. White scabby scurf, a kind of eruption spreading over the whole surface of the body; படர்நோய்வகை.

குட்டக்குறடு kuṭṭa-k-kuṟaṭu, *n.* < குட்டம்[3] +. A kind of brazier's pincers; சிறு குறடு. (J.)

குட்டநாசனம் kuṭṭa-nācaṉam, *n.* < *kuṣ-ṭha* + *nāśana*. White mustard. See வெண்கடுகு. (மலை.)

குட்டநாடு kuṭṭa-nāṭu, *n.* < குட்டம்[1] +. [M. *kuṭṭanāṭu.*] The region full of lakes, where a vulgar dialect of Tamil was spoken, corresponding to the modern towns of Kottayam and Quilon in Travancore, one of 12 *koṭun-tamiḻ-nāṭu*, q.v.; திருவாங்கூர் ஸமஸ்தானத்தைச்சேர்ந்ததும் கோட்டயம் கொல்லமென்று வழங்குகின்ற நகரங்களைக்கொண்டதும் ஏரிகளை மிகுதியாக உடையதுமாகிய ஒரு கொடுந்தமிழ்நாடு. குட்டநாட்டுத் திருப்புலியூர் (திவ். திருவாய். 8, 9, 1).

குட்டம்[1] kuṭṭam, *n.* cf. *kuṇḍa*. 1. Depth, profundity; ஆழம். இருமுந்நீர்க் குட்டமும் (புறநா. 20, 1). 2. Tank, pond; மடு. நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து (புறநா. 243, 9). 3. See குட்டநாடு. தென்பாண்டி குட்டம் (நன். 272, மயிலை.). 4. Expanse, region; பரப்புள்ள இடம். பெருங்கடற் குட்டத்து (மதுரைக். 540).

குட்டம்[2] kuṭṭam, *n.* prob. கூட்டம். 1. Multitude, collection, heap; திரள். அழற்குட்டம்போல (சீவக. 1079). 2. Assembly; சபை. படைக்கலம் பிடித்துக் குட்டத்துக்குச் செல்லப்பெறுர் (T.A.S. i, 9).

குட்டம்[3] kuṭṭam, *n.* prob. குறு-மை. 1. [K. Mhr. *guḍḍa.*] Smallness, littleness; சிறுமை. 2. The young of a monkey; குரங்குக்குட்டி. தன்குட்டங்களை . . . மந்திகள் கண்வளர்த்தும் (திவ். பெரியாழ். 3, 5, 7). 3. Verse-line with less than the required number of *cīr*; குறைந்தசீருள்ள அடி. (தொல். பொ. 427.) 4. A member in a *kali* verse. See தரவு.

குட்டம்[4] kuṭṭam, *n.* < *kuṣṭha*. 1. Leprosy. See குஷ்டம். குட்டநோய் (சீவக. 253). 2. Arabian costum. See கோஷ்டம். (மலை.)

குட்டமிடு-தல் kuṭṭam-iṭu-, *v. tr.* < குட்டம்[1] +. To dig out; பள்ளந் தோண்டுதல். குட்டமிட்டிடந்தான் காணும் (சேது, 10, 6, 4).

குட்டாரி kuṭṭari, *n.* prob. *kuṭṭāra*. Hill, mountain; மலை. (W.)

குட்டன் kuṭṭaṉ, *n.* prob. குறு-மை. 1. [K. *guḍḍa*, M. *kuṭṭan.*] Laddie, lassie, as a term of endearment; சிறுபிள்ளை. என் சிறுக்குட்டன் (திவ். பெரியாழ். 1, 4, 2). குயிலெனப் பேசு மெங்குட்ட னெங்குற்றது (திருக்கோ. 224). 2. Kid or lamb; ஆட்டுக்குட்டி. (திவா.)

குட்டான் kuṭṭāṉ, *n.* < id. Little ola case, basket or sheath, of various forms and uses; சிறிய ஓலைப்பெட்டி. (J.)

குட்டான்கட்டு-தல் kuṭṭāṉ-kaṭṭu-, *v. intr.* < குட்டான் +. To put a cover over fruits for protection from birds; பறவைமுதலியன கோதாதபடி காய்களின்மீது மூடிகட்டுதல். (W.)

குட்டி[1] kuṭṭi, *n.* prob. குறு-மை. [K. *guḍḍi*, M. *kuṭṭi*.] 1. Young of dog, pig, tiger, etc.; நாய் பன்றி புலி முயல் நரி இவற்றின் இளமை. (தொல். பொ. 565.) 2. Young of animals; விலங்கின்பிள் ளைப்பொது. 3. Compendiousness, smallness; சிறுமை. குட்டித்தொல்காப்பியம். 4. Little girl, young woman; சிறுபெண். 5. Child, especially the youngest, in endearment; கடைசிமக-ன்-ள். (W.)

குட்டி[2] kuṭṭi, *n.* prob. *kuṣṭha*. Arabian costum. See கோஷ்டம். பருங்காயங்குட்டி (தைலவ. தைல. 77).

குட்டி[3] kuṭṭi, *n.* 1. cf. குட்சி[2]. Additional coin or seed which a player gets in excess of another in games like *pallāṅkuḻi*, etc.; பல் லாங்குழிமுதலிய விளையாட்டில் அதிகமாகக் கூடுங்காய். (W.) 2. Additional sum claimed or allowed in respect of a debt, as a share of the net profit; ஆதாயம். (J.) 3. Esculent-leaved false kamela. See காக்கைப்பலா. (L.) 4. Downy-leaved false kamela. See கடிச்சை. (L.)

குட்டிக்கரணம் kuṭṭi-k-karaṇam, *n.* <குட்டி[1]+. [M. *kuṭṭikkaraṇam*.] 1. Performing a somersault on the ground, as minor acrobatics; தலைகீழாக மறிந்துவிழும் ஒரு வித்தை. 2. Making strenuous efforts; using all possible means; taking the utmost pains; பெருமுயற்சி. குட்டிக்கரணம் போட் டென்னுலானமட்டும் (இராமநா. உயுத். 77).

குட்டிக்கலகம் kuṭṭi-k-kalakam, *n.*<id.+. 1. Squabble, domestic quarrel, as rising out of trifles; சிறுகலகம். 2. Quarrel arising from backbiting, talebearing; கோட்சொல்லால் விளை யுங் கலகம். *Colloq.*

குட்டிக்கிழங்கு kuṭṭi-k-kiḻaṅku, *n.* <id.+ Small esculent root growing by the side of a large one; ஒரு கிழங்கின்பக்கத்தில் அதனை யொட்டி யுண்டாகும் கிழங்கு. (W.)

குட்டிக்கும்பிடு-தல் kuṭṭi-k-kumpiṭu-, *v. intr.* <குட்டு-+. To cuff the head three times, and raise the hands in worship of Gaṇēśa; தலை யிற்குட்டிக்கொண்டு விநாயகரை வணங்குதல்.

குட்டிக்கொக்கான் kuṭṭi-k-kokkāṉ, *n.* <குட்டி[1]+. A kind of play with pebbles; சிறு கற்களைக்கொண்டு ஆடும் விளையாட்டுவகை. (J.)

குட்டிச்சாத்தன் kuṭṭi-c-cāttaṉ, *n.* <id.+. [K. *kuṭṭicāta*, M. *kuṭṭiccāttan*.] Elf, imp, little goblin invoked in performing jugglery, etc.; குறளித்தேவதை.

குட்டிச்சாத்திக்காரன் kuṭṭi-c-cātti-k-kāraṉ, *n.* <id.+. Enchanter, sorcerer, one who is supposed to have power over familiar spirits; பேயோட்டும் மந்திரவாதி. (W.)

குட்டிச்சுவர் kuṭṭi-c-cuvar, *n.* <id.+. 1. [M. *kuṭṭiccuvar*.] Ruined wall; இடிந்த சிறுசுவர். குட்டிச்சுவரெனிலோ மாடுமுறைஞ்சு மறைவாகும் (பெருந்தொ. 288). 2. Ruins of a building; பாழ்மனை. அந்தக்குட்டிச்சுவரிற் கழுதை மேய்கிறது. 3. Damage, ruin; பழுது. காரியம் குட்டிச்சுவராயிற்று.

குட்டித்தக்காளி kuṭṭi-t-takkāḷi, *n.*<id.+. Black nightshade. See சிறுதக்காளி. (W.)

குட்டித்தாய்ச்சி kuṭṭi-t-tāycci, *n.* <id.+. Pregnant animal; சினையான விலங்கு. (W.)

குட்டித்திருவாசகம் kuṭṭi-t-tiruvācakam, *n.*<id.+. *Antāti* on Śiva at Karuvai, three in number, ascribed to Ativīra-rāma-pāṇṭiyaṉ and considered as Tiruvācakam in miniature; கருவைச்சிவபிரான்மேல் அதிவீரராமபாண்டியர் பாடி யனவாக வழங்கும் மூன்று அந்தாதிகள்.

குட்டித்தொல்காப்பியம் kuṭṭi-t-tolkāppiyam, *n.* <id.+. The Ilakkaṇa-viḷakkam by Vaittiya-nāta-tēcikar, as a compendium of the great Tolkāppiyam; தொல்காப்பியத்தைத் தழுவி ஐந்திலக்கணங்களையுங்கொண்டதாக வைத்தியநாத தேசிகர் இயற்றிய இலக்கணவிளக்கம்.

குட்டிப்பல் kuṭṭi-p-pal, *n.* <id.+. Extra or dwarf tooth; ஒட்டிமுளைக்கும் சிறுபல். (J.)

குட்டிப்பலா kuṭṭi-p-palā, *n.* <id.+. Paper-tree, s. tr., *Streblus asper;* பிராய்மரம்.

குட்டிப்பாடம் kuṭṭi-p-pāṭam, *n.*< T. *guḍḍi+pāṭhamu*. Blind recital, learning by rote; பொருளுணராது பாராமல் ஒப்பிக்கும்படி பண்ணும் நெட்டுரு.

குட்டிப்பிடவம் kuṭṭi-p-piṭavam, *n.* <குட்டி[1]+. Bedaly emetic-nut, s. tr., *Randia malabarica;* ஒருவகை மரம். (சிலப். 13, 158, உரை.)

குட்டிபடல்[1] kuṭṭi-paṭal, *n.* <id.+. Becoming pregnant, as a sheep, goat, dog; சினைப் படுகை. (J.)

குட்டிபடல்[2] kuṭṭi-paṭal, *n.* prob. T. *guḍḍi* +. Striking a wrong coin or seed in games; விளையாட்டில் தவறியடிக்கை. (J.)

குட்டிபோடு[1]-தல் kuṭṭi-pōṭu-, *v. intr.* <குட்டி[1]+. To bring forth young, as beasts; விலங்கு குட்டியீனுதல்.

குட்டிபோடு[2]-தல் kuṭṭi-pōṭu-, *v. intr.* <குட்டி[3]+. To put down a forfeited seed or coin in gambling as stakes to be played for; விளை யாட்டில் அதிகப்பந்தயம் இறுத்தல். (J.)

குட்டிமணியம் kuṭṭi-maṇiyam, *n.* <குட்டி[1] +. Assistant to *maṇiyakāraṉ;* உதவிமணிய காரன்.

குட்டிமம் kuṭṭimam, *n.* <*kuṭṭima*. Paved floor, pavement, ground paved with mosaic,

ground smoothed and plastered; தற்பாவின தரை. கோயிற்குட்டிம வன்றலத்து (கம்பரா. கிட்கிங். 109).

குட்டியடி-த்தல் kuṭṭi-y-aṭi-, v. intr. prob. T. guḍḍi+. See குட்டிவை¹-. (J.)

குட்டியப்பன் kuṭṭi-y-appaṉ, n. <குட்டி¹+. Father's younger brother; சிறிய தகப்பன். (W.)

குட்டியழி-த்தல் kuṭṭi-y-aḻi-, v. intr. <id. +. To cause miscarriage, abortion of a child conceived in adultery; சோரக்கருவை மருந்திட்டுக் கரைத்தல். Colloq.

குட்டியாண்டவன் kuṭṭi-y-āṇṭavaṉ, n. <id.+. Sea-god of the Paṭṭiṉavar caste, represented by a small conical heap of wet sand and mud; பட்டினவர் வணங்குந் தெய்வம்.

குட்டியாத்தாள் kuṭṭi-y-āttāḷ, n. <id.+. Mother's younger sister; சிறியதாய். Parav.

குட்டியிடு-தல் kuṭṭi-y-iṭu-, v. intr. <id. +. [M. kuṭṭiyiṭu.] To bring forth young, especially said of animals; விலங்குமுதலியன கருவுயிர்த்தல். Colloq.

குட்டியிடுக்கி kuṭṭi-y-iṭukki, n. 1. Lesser galangal, m. sh., Alpinia officinarum; சிற்றரத்தைவகை. (மலை.) 2. cf. குட்டி². Arabian costum. See கோஷ்டம். (மலை.) 3. A kind of grass or weed in rice fields; பயிருடன் வளரும் புல்வகை. (W.)

குட்டிவிரல் kuṭṭi-viral, n.<குட்டி¹+. Sixth or extra finger or toe as smaller than the rest; கால் கைகளில் ஐந்துக்கு அதிகமாகவுள்ள விரல். (W.)

குட்டிவிளா kuṭṭi-viḷā, n. <id.+. 1. Wood-apple. See விளா. (L.) 2. Musk-deer plant. See நாய்விளா.

குட்டிவை¹-த்தல் kuṭṭi-vai-, v. intr. prob. T. guḍḍi+. To hit the wrong coin or seed; விளையாட்டில் தவறான காயை அடித்தல். (J.)

குட்டிவை²-த்தல் kuṭṭi-vai-, v. intr. prob. குட்டி³+. To forfeit a coin or seed in gambling; சூதிற் பந்தயமிழத்தல்.

குட்டினம் kuṭṭiṉam, n. prob. kṛṣṇā. Black cumin. See கருஞ்சீரகம். (மலை)

குட்டினி kuṭṭiṉi, n. <kuṭṭinī. 1. Unchaste woman; கற்பழிந்தவள். (சூடா.) 2. Bawd, procuress; கூட்டிக்கொடுப்பவள். (W.)

குட்டு¹-தல் kuṭṭu-, 5 v. tr. of. kuṭṭa. [T. K. M. Tu. kuṭṭu.] To cuff, strike with the knuckles on the head or temples; கைமுட்டியால் தலையில் இடித்தல். அவன் தலையில் குட்டினான். (பிங்.)

குட்டு² kuṭṭu, n.<குட்டு-. [T. K. M. Tu. kuṭṭu.] Blow with the knuckles or the fist on the head, cuff; கைமுட்டியால் தலையில் இடிக்கை.

குட்டு³ kuṭṭu, n. [T. K. Tu. guṭṭu.] 1. Secret; இரகசியம். (விறலிவிடு. 108.) 2. Honour, dignity; மானம். (W.)

குட்டு⁴ kuṭṭu, n. <kuṣṭha. 1. Leprosy; குஷ்டம். (தைலவ. தைல. 124.) 2. Arabian costum. See கோஷ்டம். (தைலவ. தைல. 43.)

குட்டுணி kuṭṭuṇi, n. <குட்டு²+உண்-. Intractable, shameless person, as cuffed about by everyone; பிறரால் குட்டுண்பவ-ன்-ள். (W.)

குட்டுப்பட்டவன் kuṭṭu-p-paṭṭavaṉ, n. <குட்டுப்படு-. One who grows wise by experiencing reverses; ஒருதொழிலில் இடர்ப்பட்டு அனுபவம் பெற்றவன்.

குட்டுப்படு-தல் kuṭṭu-p-paṭu-, v. intr. To undergo reverses; அடிக்கடி இடருறுதல். Colloq.

குட்டுவன் kuṭṭuvaṉ, n. <குட்டம்¹. 1. Inhabitant of the kuṭṭam country; குட்டநாட்டிலுள்ளவன். பல்குட்டுவர் வெல்கோவே (மதுரைக். 105). 2. Chēra king, as ruling over kuṭṭam; சேரன். எழுவுறழ்திணிதோ ளியறோர்க் குட்டுவன் (சிறு பாண். 49).

குட்டேறு kuṭṭēṟu, n. <குட்டம்³+ஏறு. 1. Small bull; சிறிய காளை. குட்டேற்றைக் கோவர்த்தனனைக் கண்டீரே (திவ். நாய்ச். 14, 2). 2. Hump of an ox; எருத்தின் திமில். (கலித். 102, 24, உரை.)

குட்டை¹ kuṭṭai, n. <id. 1. Shortness, dwarfishness; குறுகிய உருவம். 2. See குட்டேறு, 1. 3. [T. guḍḍa.] Kerchief, towel, small strip of cloth; சிறுதுணி. 4. Pool, small pond; சிறுகுளம். 5. See குட்டைமரம். குட்டையிற்கட்டி அடித்தான். 6. A dry measure of capacity; குறுணி. (தொல். சொல். 400, உரை.)

குட்டை² kuṭṭai, n. <kuṣṭha. White leprosy; வெள்ளைக்குஷ்டம். (W.)

குட்டைச்சி kuṭṭaicci, n. <குட்டை¹. Short woman; குள்ளமானவள்.

குட்டைப்புடல் kuṭṭai-p-puṭal, n. <id.+. Short snake-gourd, climber, Trichosanthes nervifolia; கொம்புப்புடல். Colloq.

குட்டைமரம் kuṭṭai-maram, n. <id.+. Stocks for legs or hands, as an instrument of punishment; தொழுமரம். Loc.

குட்டையன் kuṭṭaiyaṉ, n. <id. Dwarf, short man; குள்ளன்.

குட்டையாடு kuṭṭai-y-āṭu, n. <id.+. A species of dwarf goat; பள்ளையாடு.

குட்டையிலடி-த்தல் kuṭṭaiyil-aṭi-, v. tr. <id.+. To confine in stocks; தொழுமரத்திற் கட்டியடித்தல்.

குட kuṭa, adj. cf. kuṭ. Curved, bent; வளைந்த. (திருமுரு. 229, உரை.)

குடக்கம் kuṭakkam, *n.* <குட. Bend, curve, crookedness; வளைவு. (யாழ். அக.)

குடக்கனி kuṭa-k-kaṉi, *n.* <குடம்[1]+. Jack fruit, as being pot-shaped; பலாப்பழம். சுளைபழுத்த மென் குடக்கனி (ஆசிக. அருணகி. 22).

குடக்கால் kuṭa-k-kāl, *n.* <id.+. Pot-shaped lamp-stand; குடம்போன்ற விளக்குத் தண்டு. (சிலப். 6, 138, உரை.)

குடக்கி kuṭakki, *n.* <குட. 1. That which is crooked; வளைவானது. (யாழ். அக.) 2. Brass; பித்தளை. (J.)

குடக்கியன் kuṭakkiyaṉ, *n.* <குடக்கி. Hump-back; கூனன். (J.)

குடக்கினி kuṭakkiṉi, *n.* 1. Downy-foliaged cutch. See காசுக்கட்டி. 2. Glabrous-foliaged cutch. See கருங்காலி. (மலை.)

குடக்கு kuṭakku, *n.* prob. குட. [M. *kuṭakku.*] West; மேற்கு. (திவா.) தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும் (புறநா. 6).

குடக்கூத்து kuṭa-k-kūttu, *n.* <குடம்[1]+. A dance with pots performed by Kṛṣṇa when Vāṇaṉ imprisoned his grandson Aniruttaṉ, one of 11 *kūttu*, q.v.; தனது பேரனாகிய அநிருத்தனை வாணன் சிறைப்படுத்த அவனது நகரவீதியிற்சென்று கண்ணன் குடமெடுத்தாடிய கூத்து. (சிலப். 6, 55, உரை.)

குடக்கூலி kuṭa-k-kūli, *n.* [M. *kuṭakkūli.*] See குடிக்கூலி. *Madr.*

குடக்கோ kuṭa-k-kō, *n.* <குடக்கு+கோ. Chēra king, as ruling the western country; சேரன். குடக்கோ நெடுஞ்சேரலாதற்கு (பதிற்றுப். 60, பதி.).

குடக்கோன் kuṭa-k-kōṉ, *n.* <id.+. See குடக்கோ.

குடகச்செலவு kuṭaka-c-celavu, *n.* prob. குடகு+. One of several modes of playing the *yāḻ*; யாழில் இசைபட வாசிக்கும்வகையுள் ஒன்று. (சீவக. 657, உரை.)

குடகம் kuṭakam, *n.* <குட. [M. *kuṭakam.*] 1. West; மேற்கு. குடக வானின் வயங்கிய . . . திங்கள் (கம்பரா. ஒற்றுக். 20). 2. Coorg, the hill country west of Mysore, forming the western boundary of the Tamil country; தமிழ்நாட்டின்மேல்பாலுள்ள ஒருநாடு. (நன். 272, மயிலை.) 3. A mountain in Coorg; குடகுமலை. (புறநா. 166, உரை.) 4. A mineral poison. See கோளகபாஷாணம். (மலை.)

குடகரம் kuṭakaram, *n.* Hedge cotton. See வேலிப்பருத்தி. (மலை.)

குடகன் kuṭakaṉ, *n.* <குடக்கு. 1. Chēra king as ruler of *kuṭa-nāṭu;* சேரன். (சூடா.) 2. Westerner; மேல்நாட்டான். குடகர் குணகடலென் றார்த்தார் (தமிழ்நா. 157).

குடகாற்று kuṭa-kāṟṟu, *n.* <குடக்கு+. Westerly wind; மேல்காற்று. குடகாற் றெறிந்து கொடிநுடங்கு மறுகின் (சிலப். 14, 70).

குடகு kuṭaku, *n.* <குட. See குடகம்.

குடகோளார்த்தம் kuṭa-kōḷārttam, *n.* <குடக்கு+*gōla*+*ardha*. Western hemisphere, dist. fr. *kuṇa-kōḷārttam;* பூகோளத்தின் மேற்குப் பாதி. *Mod.*

குடங்கர்[1] kuṭaṅkar, *n.* <குடம்[1]. 1. Water-pot; குடம். குடங்கர் கொணர்ந்திடா . . . கொண்டு கொண்டனர் (கந்தபு. தேவகிரி. 24). 2. Aquarius, a constellation of the zodiac; கும்பராசி. (சூடா.)

குடங்கர்[2] kuṭaṅkar, *n.* <*kuṭaṅgaka*. Hut, cottage; குடிசை. குடங்கருட் பாம்பொ டுடனுறைந் தற்று (குறள், 890).

குடங்கவிழ்-தல் kuṭaṅ-kaviḻ-, *v. intr.* <குடம்[1]+. To be upset, be overturned, tip over, tip up on end, fall topsy-turvy, as a cart; வண்டி குடஞ்சாய்ந்து விழுதல்.

குடங்கால் kuṭa-ṅ-kāl, *n.* <குட+. Lap; மடி. மருவிக் குடங்கா லிருந்து (திவ். பெரியதி. 10, 4, 3).

குடங்கு-தல் kuṭaṅku-, 5 *v. intr.* <id. To bend; வளைதல். (யாழ். அக.)

குடங்கை kuṭa-ṅ-kai, *n.* <id.+. 1. Palm of the hand; உள்ளங்கை. தன் குடங்கை நீரேற்றான் தாழ்வு (திவ். இயற். 3, 62). 2. (Nāṭya.) A pose with a single hand in which all the fingers are joined and the palm is hollowed like a cup, one of 33 *iṇaiyā-viṉaikkai*, q. v.; எல்லாவிரலுங் கூட்டி உட்குழிக்கும் இணையாவினைக்கை. (சிலப். 3, 18, உரை.)

குடச்சிப்பி kuṭa-c-cippi, *n.* < id. +. Rounded shell; வளைவுள்ள இப்பி. (W.)

குடச்சூல் kuṭa-c-cūl, *n.* <குடைச்சூல். Tinkling anklet; பாதச்சிலம்புவகை. (திவா.)

குடசப்பாலை kuṭaca-p-pālai, *n.* <*kuṭaja* +. 1. Conessi bark, s. tr., *Holarrhena antidysenterica;* கசப்புவெட்பாலை. (பதார்த்த. 235.) 2. Green wax-flower. See கொடிப்பாலை. (L.) 3. Wild olive. See கறிப்பாலை. (W.)

குடசம் kuṭacam, *n.* <*kuṭaja*. 1. See குடசப்பாலை, 1. வடவனம் வாகை வான்பூங் குடசம் (குறிஞ்சிப். 67). 2. Indian cork, l. tr., *Millingtonia hortensis;* மலைமல்லிகை. (மலை.)

குடஞ்சாய்-தல் kuṭañ-cāy-, *v. intr.* <குடம்[1] +. See குடங்கவிழ்-.

குடஞ்சுட்டவர் kuṭañ-cuṭṭavar, *n.* <குடஞ்சுட்டு. Cowherds; பசுநிரைமேய்க்கும் இடையர். புல்லினத்தார்க்குங் குடஞ்சுட்டவர்க்கும் (கலித். 107, 2).

குடஞ்சுட்டு kuṭañ-cuṭṭu, *n.* <குடம்[1]+ சுட்டு-. Cow, as offering a *kuṭam* of milk; பசு. நீரார்நிழல குடஞ்சுட் டினத்துள்ளும் (கலித். 109, 3).

குடத்தண்டு kuṭa-t-taṇṭu, *n.* <id.+. See குடக்கால். (சிலப். 6, 138, உரை.)

குடத்தி[1] kuṭatti, *n.* prob. *huḍa-vatī.* Fem. of குடவன். Shepherdess; இடைச்சி. (குடா.)

குடத்தி[2] kuṭatti, *n.* <கழுதைக்குடத்தி. Hyena; கழுதைப்புலி. (W.)

குடதாடி kuṭa-tāṭi, *n.* <குடம்[1]+. Capital of a pillar; தூணின்மேல்வைக்குங் குடவடிவான உறுப்பு. (சீவக. 593, உரை.)

குடதேவர் kuṭa-tēvar, *n.* <id.+. Agastya, as born of a pitcher; அகஸ்தியர். (S. I. I. ii, Introduction p. 41.)

குடந்தம் kuṭantam, *n.* <குட. 1. Joining the hands together and bending the body, in worship; கைகூப்பி மெய்வளைத்துச்செய்யும் வழிபாடு. குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி (திருமுரு. 229). (திவா.) 2. Clenching the fingers and placing the ends of the thumbs on the chest; நால்விரல் முடக்கிப் பெருவிரல்நிறுத்தி நெஞ்சிடை வைக்கை. (திருமுரு. பக். 47, கீழ்க்குறிப்பு.) 3. Pot; குடம். (பிங்.)

குடந்தம்படு-தல் kuṭantam-paṭu-, *v. tr.* <குடந்தம்+. To bow in reverence, make obeisance; வழிபடுதல். குடந்தம்பட்டெதிர் நின்றிடும் . . . அரசன் (காஞ்சிப்பு. கழுவாய். 96).

குடந்தை[1] kuṭantai, *n.* <குட. Curve; வளைவு. குடந்தையஞ் செவியகோட்டெலி (புறநா. 321).

குடந்தை[2] kuṭantai, *n.* <குடமூக்கு. Kumbakonam. See கும்பகோணம். கன்னூர் மதில்சூழ் குடந்தைக் கிடந்தாய் (திவ். திருவாய். 5, 8, 3).

குடநாடன் kuṭa-nāṭaṉ, *n.* <குடக்கு+. Chēra king; சேரன். (திவா.)

குடநாடு kuṭa-nāṭu, *n.* <id.+. 1. Western region; மேல்நாடு. (புறநா. 17, உரை.) 2. The region where a dialect of Tamil was spoken, probably a portion of modern Malabar, one of 12 *koṭun-tamiḻ-nāṭu*, q.v.; கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுள் ஒன்று. (நன். 273, உரை.)

குடப்பம் kuṭappam, *n.* perh. *guḍā-puṣpa.* cf. குடவளப்பம். South Indian mahua. See இருப்பை. (மலை.)

குடப்பறை kuṭa-p-paṟai, *n.* <குடம்[1]+. Pot-shaped drum; குடவடிவான பன்றிப்பறை. (திவா.)

குடப்பாம்பிற்கையிடு-தல் kuṭa-p-pāmpiṟ-kai-y-iṭu-, *v. intr.* <id.+. To demonstrate by the ordeal of inserting one's hand into a pot containing a serpent; பாம்பை அடைத்த குடத்திற் கையிட்டுச் சபதஞ்செய்தல். குடப்பாம்பிற் கையிட்டவன் . . . கொல்லிகாவலன் (திவ். பெருமாள். தனியன்).

குடப்பாம்பு kuṭa-p-pāmpu, *n.* <id.+. A machine mounted on a fort as a defence; மதிற்பொறிவகை. (சிலப். 15, 216, உரை.)

குடப்பாலை kuṭa-p-pālai, *n.* <*kuṭaja*+. Conessi bark. See குடசப்பாலை. (W.)

குடப்பிழுக்கை kuṭa-p-piḻukkai, *n.* A kind of masquerade dance; வரிக்கூத்துவகை. (சிலப். 3, 13, உரை.)

குடப்பெட்டி kuṭappeṭṭi, *n.* A kind of paddy; நெல்வகை. (A.)

குடபலை kuṭa-palai, *n.* cf. *guḍaphala.* Black nightshade. See மணித்தக்காளி. (தைலவ. பாயி. 57.)

குடபுலம் kuṭa-pulam, *n.* <குடக்கு+. Western region; மேல்நாடு. குடபுலங் காவலர் மருமான் (சிறுபாண். 47).

குடம்[1] kuṭam, *n.* <குட. cf. *kuṭa* [T. *kuṭamu*, K. *kuṭa*, M. *kuṭam.*] 1. Water-pot; நீர்வைக்குங் குடம். (பிங்.) 2. Aquarius, a sign of the zodiac; கும்பராசி. (பன்னிருபா. 163.) 3. A dance of Kṛṣṇa. See குடக்கூத்து. நீணில மளந்தோ னாடிய குடமும் (சிலப். 6, 55). 4. See குடதாடி. 5. Hub of a wheel; வண்டிக்குடம். 6. Globe, ball, sphericity; திரட்சி. (W.) 7. cf. குடஞ்சுட்டு. Cow; பசு. (குடா.)

குடம்[2] kuṭam, *n.* cf. *kūṭa.* 1. Town; நகரம். (பிங்.) 2. The eighth *nakṣatra.* See பூசம்.

குடம்[3] kuṭam, *n.* <குடக்கு. See குடநாடு. தென்பாண்டி குட்டங் குடங் கற்கா (நன். 273, உரை).

குடம்[4] kuṭam, *n.* <*guḍa.* Jaggery; கருப்புக்கட்டி. (பிங்.)

குடம்[5] kuṭam, *n.* <*guḍā.* Square spurge. See சதுரக்கள்ளி. (தைலவ. தைல. 9.)

குடம்பை kuṭampai, *n.* <குட. 1. Nest; கூடு. குடம்பைநூ றெற்றி (கல்லா. கணபதிதுதி, வரி, 26). 2. Egg; முட்டை. (பிங்.) குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே (குறள், 338).

குடம்விட்டுக்கட்டு-தல் kuṭam-viṭṭu-k-kaṭṭu-, *v. tr.* <குடம்[1]+. To decorate the marriage pole with stiffened cloth, so as to resemble a column of pots placed one over another; கலியாணத்திற்கு நடுங் காலை அடுக்குக்குடம் போலச் சீலையால் அலங்கரித்தல். (J.)

குடம்வைத்தல் kuṭam-vaittal, *n.* <id.+. Playing with the fists one on another, and knocking them off in succession, a child's play; முட்டியான கைகளை ஒன்றன்மேலொன்றாகவைத்துத் தயிர்க்குடம் பாற்குடம் என்றுகூவித் தட்டி ஆடும் பிள்ளைவிளையாட்டு.

குடமண் kuṭamaṇ, *n.* White sand; வெண் மணல். (W.)

குடமணம் kuṭa-maṇam, *n.* perh. குடம்[1]+. cf. *bahu-gandhā.* Black cumin. See கருஞ்சீரகம். (மலை.)

குடமல்லிகை kuṭa-mallikai, *n.* <id.+ *mallikā.* Arabian jasmine, m. sh., *Jasminum sambac;* மல்லிகைவகை.

குடமலை kuṭa-malai, *n.* <குடக்கு+. A mountain in Coorg, source of the Kāvēri; குடகு மலை. குடமலைப் பிறந்த கொழும்பல் ஞாரமொடு (சிலப். 10, 106).

குடமலைநாடு kuṭa-malai-nāṭu, *n.* <குடமலை +. Coorg; குடகநாடு. குடமலைநாடுங் கொல்லமுங் கலிங்கமும் (S.I.I. ii, 68).

குடமாடல் kuṭam-āṭal, *n.* <குடம்[1]+. See குடக்கூத்து.

குடமாலை kuṭa-mālai, *n.* <id.+. Round garland; உருட்சியான மாலைவகை. (கோயிலொ. 87.)

குடமிளகாய் kuṭa-miḷakāy, *n.* <id.+. Bell-pepper, s. sh., ***Capsicum grossum;*** மிளகாய் வகை.

குடமுடைத்தல் kuṭam-uṭaittal, *n.* <id. +. The ceremony of breaking water-pots before a corpse in a funeral rite; கொள்ளிவைப்பவன் பிணத்தைச்சுற்றிவந்து நீர்க்குடமுடைக்கும் மரணச்சடங்கு. கொன்பெற்ற மைந்தரும் பின்வலம்வந்து குடமுடைத்தார் (பட்டினத். திருப்பா. பொது. 28).

குடமுழ kuṭa-muḻa, *n.* <id.+. See குடமுழா. குடமுழ நந்தீசனை (தேவா. 1233, 11).

குடமுழவம் kuṭa-muḻavam, *n.* <id.+. See குடமுழா. வான் குடமுழவமாதிப் பல்லியம் (கந்தபு. ஏமகூட. 21).

குடமுழவு kuṭa-muḻavu, *n.* <id.+. See குடமுழா. குடமுழ வென்பது பயிற்றினேன் (பெருங். மகத. 14, 187).

குடமுழா kuṭa-muḻā, *n.* <id.+. Large hemispherical loud-sounding drum; முழவு வாத்தியவகை. குடமுழாத் திமிலை மொந்தை (சேதுபு. இராமதீ. 65).

குடமூக்கில் kuṭa-mūkkil, *n.* <id.+மூக்கு. See குடமூக்கு. குடமூக்கில் கோயிலாக் கொண்டு (திவ். இயற். 2, 97).

குடமூக்கு kuṭa-mūkku, *n.* <id.+. Kumbakonam. See கும்பகோணம். தண்குடமூக் கமர்ந்தான் (தேவா. 431, 11).

குடமூது-தல் kuṭam-ūtu-, *v. intr.* <id.+. To make a sound by blowing into pots, as an accompaniment to dancing among low caste women at marriages, and in some places at temples; குடத்தினுள்ளே ஊதி ஒலி பிறப்பித்தல். (J.)

குடர் kuṭar, *n.* <குடல். [M. *kuṭar.*] Bowels. See குடல். குடருங் கொழுவும் (நாலடி, 46).

குடராசம் kuṭa-rācam, *n.* perh. *kīṭa+rāja.* A kind of centipede; பூரான்வகை. (சங். அக.)

குடல் kuṭal, *n.* <குட. [M. *kuṭal.*] 1. Bowels, intestines, entrails; வயிற்றுள் இரைப்பையைத் தொடர்ந்துள்ள குழாய். 2. Fungus matter, as in the hollow of a gourd; காயின்குடல். குடலழுகின பூசணிக்காய். (W.) 3. Pith in the body of trees; மரக்குடல். (W.) 4. Streaks running down in the interior of plantains and other fruits; பழக்குடல். (W.)

குடல்காய்கை kuṭal-kāykai, *n.* <குடல்+. Shrinkage of the intestines from starvation; பசியால் வயிறு ஒட்டிக்கொள்ளுகை.

குடல்தட்டு-தல் kuṭal-taṭṭu-, *v. intr.* <id. +. To pat the bowels by way of massage; குடலின்பிறழ்வைத் தட்டி ஒழுங்குபடுத்துதல்.

குடல்பதறு-தல் kuṭal-pataṟu-, *v. intr.* <id. +. Lit., to feel as if the bowels would jump out of their place, to feel frightened, to feel troubled from excessive grief; துக்கமிகுதி முதலியவற்றால் வயிறு கலங்குதல்.

குடல்வலி kuṭal-vali, *n.* <id.+. Pain in bowels, as from over-eating, indigestion, etc.; உணவுமிகுதி முதலியவற்றாற் குடலிற்காணும் நோவு.

குடல்வாதம் kuṭal-vātam, *n.* <id.+. [M. *kuṭarvātam.*] See குடல்வாயு.

குடல்வாயு kuṭal-vāyu, *n.* <id.+. Hernia; அண்டவாதம். (M. L.)

குடல்விளக்கஞ்செய்-தல் kuṭal-viḷak-kañ-cey-, *v. tr.* <id.+. Lit. to cause the womb to shine, to bring fame, as a son to his mother who gave him birth by himself becoming illustrious; பிறந்தவயிற்றைப் பெருமை பெறச்செய்தல். தாயைக் குடல்விளக்கஞ்செய்த தாமோதரனை (திவ். திருப்பா. 18).

குடலண்டம் kuṭal-aṇṭam, *n.* <id.+. See குடல்வாயு.

குடலண்டவிருத்தி kuṭal-aṇṭa-virutti, *n.* <id.+. See குடல்வாயு. (பைஷஜ.)

குடலளைச்சல் kuṭal-aḷaiccal, *n.* <id.+. Uneasy sensation in the larger intestine as a result of gastric irregularities; பெருங்குடலில் தோன்றும் நோய்வகை.

குடலிரைச்சல் kuṭal-iraiccal, *n.* <id.+. Flatulence, rumbling of the bowels; வயிற்றிரைவு.

குடலிறக்கம் kuṭal-iṟakkam, *n.* <id.+. See குடல்வாயு. (பைஷஜ.)

குடலெடு-த்தல் kuṭal-eṭu-, *v. intr.* <id. +. See குடல்தட்டு-.

குடலெரிச்சல் kuṭal-ericcal, *n.* <id.+. 1. Inflammation of bowels; வயிறுகாந்துகை. 2. Heart-burning; வயிற்றெரிச்சல். *Colloq.*

குடலேற்றம் kuṭal-ēṟṟam, *n.* <id.+. [M. *kuṭalēṟṟam.*] Twisting or derangement of the intestines, especially in children; குடல் இடம் மாறி மேலேறுதலால் உண்டாகும் நோய்.

குடலேறு-தல் kuṭal-ēṟu-, *v. intr.* <id.+. To have intestinal disorder; குடல் இடம்மாறி மேலேறுதல்.

குடலை kuṭalai, *n.*<குட. 1. Long cylindrical basket of palm leaf for fruits and flowers; பூக்குடலை. 2. Ears of grain swollen and ready to shoot forth; கதிர்க்குடலை. (J.) 3. Ring of wicker-work for a well; கிணற்றுக்குடலை. (J.) 4. Cover or screen for fruits; பழக்கூடு. (J.) 5. Cover of palm leaf carried as a protection against rain; கீற்றுக்கூடு. (J.) 6. Intestines, entrails; குடல். (J.)

குடலைக்கிணறு kuṭalai-k-kiṇaṟu, *n.* <குடலை+. Well walled with wicker-work; ஒருவகை உறைகிணறு.

குடலைக்குழப்பு-தல் kuṭalai-k-kuḻappu-, *v. intr.* <குடல்+. To affect the stomach as to create a vomiting sensation, to produce nausea; வாந்திசெய்யும்படி வயிற்றைப்புரட்டுதல்.

குடலைப்பிடுங்கு-தல் kuṭalai-p-piṭuṅku-, *v. intr.*<id.+. 1. To painfully affect or pinch the bowels, as hunger; பசியால் வயிறு கிண்டப்படுதல். *பசி குடலைப்பிடுங்குகிறது.* 2. To cause retching; வாந்தியெடுக்கவருதல். *நாற்றம் குடலைப்பிடுங்குகிறது.* 3. To be unclean, unsightly; அசங்கியமாகுதல்.

குடலைப்பூச்சி kuṭalai-p-pūcci, *n.* prob. id.+. A kind of worms; பூச்சிவகை. (யாழ். அக.)

குடலையாகு-தல் kuṭalai-y-āku-, *v. intr.* <குடலை+. To be ready to shoot forth as corn-ears; கதிர்னுதல். (J.)

குடலையுங்கதிரும் kuṭalai-y-uṅ-katir-um, *n.* <id.+. Corn-ears or spikes partially shot forth; கருக்கொண்டதும் கொள்ளும் நிலையில் உள்ளதுமான கதிர். (J.)

குடலைவயிறு kuṭalai-vayiṟu, *n.* <id.+. Shrivelled abdomen; குழைந்த வயிறு. *Colloq.*

குடவண்டிபோடு-தல் kuṭa-vaṇṭi-pōṭu-, *v. intr.* <குடம்[1]+. *Loc.* 1. To have the cart capsized; குடங்கவிழ்தல். 2. To capsize, overturn, upset; தலைகீழாய்க்கவிழ்தல்.

குடவண்டியடி-த்தல் kuṭa-vaṇṭi-y-aṭi-, *v. intr.* See குடவண்டிபோடு-. *Loc.*

குடவண்டிவை-த்தல் kuṭa-vaṇṭi-vai-, *v. intr.* <id.+பண்டி+. To become pot-bellied; தொந்திதள்ளுதல். *Loc.*

குடவப்புரசு kuṭava-p-puracu, *n.* Satin-wood. See முதிரை. (L.)

குடவம் kuṭavam, *n.* prob. குட. cf. குடவன்[2]. Brass; பித்தளை. (W.)

குடவர் kuṭavar, *n.*<id. People of the western country, *kuṭa-nāṭu;* மேற்கிலுள்ள குடநாட்டினர். *வடவர் வாடக் குடவர் கூம்ப* (பட்டினப். 276).

குடவரை kuṭa-varai, *n.* <குடக்கு+. The western mountain. See அஸ்தகிரி. *குடவரை நெற்றி பாய்ந்த கோளரி போன்று* (சீவக. 980).

குடவரைவாசல் kuṭa-varai-vācal, *n.* prob. குடை-+வரை+. Gateway under the tower of a temple; கோபுரவாயில். *Colloq.*

குடவளப்பம் kuṭa-vaḷappam, *n.* prob. *guḍa-puṣpa.* cf. குடப்பம். South Indian mahua. See இருப்பை. (மலை.)

குடவறை kuṭa-v-aṟai, *n.* <குடைவு+அறை. 1. Underground cellar, cave; நிலவறை. (யாழ். அக.) 2. Small room; சிற்றறை.

குடவன்[1] kuṭavaṉ, *n.*<குடம்[1]. cf. *huḍa-vān.* Cowherd, shepherd; இடையன். *ஆம்பாற் குடவர் மகளோ* (சீவக. 492).

குடவன்[2] kuṭavaṉ, *n.* 1. See குடவம். (J.) 2. Palmyra or mahua fruit with a single stone or seed; பனங்காய் முதலிய ஒற்றைக்கொட்டைக்காய். (J.) 3. Dancing girl; கணிகை. *குடவற்குத் தாட்டிக்குங் கொத்திட்டு மாய்வதல்லால்* (தனிப்பா. i, 87, 171). 4. A kind of cattle-tick; குடவுண்ணி. *வாய்ப்படைக் குடவனும்* (குமர. பிர. காசிக். 57).

குடவன்[3] kuṭavaṉ, *n.* cf. *kuṣṭha.* Arabian costum. See கோஷ்டம். (மலை.)

குடவன்பனங்காய் kuṭavaṉ-paṉaṅkāy, *n.* <குடவன்[2]+. See குடவன்[2], 2. (J.)

குடவியிடு-தல் kuṭavi-y-iṭu-, *v. tr.* <குடவு-+. cf. *kuṭ.* To coax, entice, inveigle; வளைத்து அகப்படுத்துதல். *குடவியிடு மரிவையர்கள்* (திருப்பு. 514).

குடவிளக்கு kuṭa-viḷakku, *n.* <குடம்[1]+. 1. Hanging lamp with the oil-can shaped like a small water-pot; தொங்கவிடுவதும் உலோகத்தால் அமைந்ததுமான குடவடிவுள்ள விளக்கு. 2. Light placed on a pot in the south-east corner of a marriage dais; மணவறையில் அக்கினி மூலையில் குடத்தின்மேல் வைக்கும் விளக்கு. *Loc.*

குடவு[1]-தல் kuṭavu-, *5 v. intr.* <குட To be crooked, bent, curved; வளைவாதல். (W.)

குடவு[2] kuṭavu, *n.* <id. 1. Bend, curve; வளைவு. 2. Cave, grotto; குகை. (W.)

குடவுண்ணி kuṭa-v-uṇṇi, *n.* prob. குடம்[1]+. A large kind of tick; ஒருவகைப் பெரியவுண்ணி. (W.)

குடவுழுந்தர் kuṭa-v-uḻuntar, *n.* <id.+ உழுந்து. A reputed poet, who in his youth took as much time in learning a lesson by rote as was required to fill a pot with *uḻuntu* grain, one for every time he repeated it, as an example of great perseverance; ஒவ்வோர் உருவுக்கும் ஒவ்வொன்று விதம் குடம்நிறையுமளவும் உழுந்தையிட்டுப் பாடம்வரப்பண்ணிக் கல்விநிரம்பியவராகச்சொல்லப்படும் ஒரு புலவர். (W.)

குடவெழுத்தாணி kuṭa-v-eḻuttāṇi, *n.* <id.+. Iron style with knobs or balls at the top, one above another, tapering to a point; தலையிடம் குண்டுகுண்டாய்த்திரண்டிருக்கும் எழுத்தாணி. (W.)

குடவோலை kuṭa-v-ōlai, *n.* <id. + ஓலை. Vote by ballot, as recorded on ola and cast into a pot; சபையோரைத் தேர்ந்தெடுக்கக் குடத்திலிடுஞ் சீட்டு. *குடவோலை எழுதிப் புக இடுவதாகவும்* (சோழவமி. 53).

குடற்கிருமி kuṭaṟ-kirumi, *n.* <குடல்+. A kind of worm; ஒருவகைக் கிருமி. (கால். வி.)

குடற்சவ்வு kuṭaṟ-cavvu, *n.* <id.+. Omentum, caul; வயிற்றின் உறுப்பை மூடியிருக்குஞ் சவ்வு.

குடற்படுவன் kuṭaṟ-paṭuvaṉ, *n.* <id.+. An intestinal disease of children; குழந்தையின் குடர்நோய்வகை. *இருகு குடற்படுவன் நீர்ப்பாடுந் தீரும்* (பாலவா. 452).

குடற்பிடுங்கி kuṭaṟ-piṭuṅki, *n.* <id.+. Blue vitriol, as causing vomiting sensation; வாந்தியெடுக்கச்செய்வதாகிய துரிசு. (சங். அக.)

குடற்பிரிவு kuṭaṟ-pirivu, *n.* <id.+. Dislodgement of the bowels; குடல்பிறழுகை. (J.)

குடற்புரை kuṭaṟ-purai, *n.* <id.+. Hollow, tubular space inside the intestines; குடலின் துவாரம். (W.)

குடற்பை kuṭaṟ-pai, *n.* <id.+. See குடற்போர்வை. (W.)

குடற்போர்வை kuṭaṟ-pōrvai, *n.* <id.+. Womb, uterus; கருப்பப் பை. *குடற்போர்வைக்குள்* (சூடா. 12, 20).

குடற்றுடக்கு kuṭaṟṟuṭakku, *n.* <id.+ தொடக்கு. Consanguinity, kinship, relationship; இரத்தக்கலப்புள்ள உறவு. *இவற்றினுடைய ரட்சணம் உன் பெரும்படியான குடற்றுடக்கையுடையவனே* (ஈடு, 4, 9, 2).

குடனோவு kuṭaṉōvu, *n.* <id.+ நோவு. A cattle disease involving congestion of the lungs and swelling of the belly with the respiration checked; கோலைமுட்டி என்னும் கால்நடை நோய். (M. Cm. D. [1887] 247.)

குடா kuṭā, *n.* <குட cf. *kuṭ.* 1. Bend, curve; வளைவு. *எண்கின் குடாவடிக் குருளை* (மலைபடு. 501). 2. Cavity, hollow, cavern; குடைவு. (W.) 3. See குடாக்கடல். *மன்னார்குடா. Mod.* 4. Remote part of a large country or field; nook, corner; recess· மூலை. (W.)

குடாக்கடல் kuṭā-k-kaṭal, *n.* <குடா+. Bay, gulf; மூன்றுபக்கம் தரைசூழ்ந்த கடல்.

குடாக்கு kuṭākku, *n.* <Mhr. *guḍākū.* cf. U. *gurākū.* 1. Hookah; உக்கா. 2. Ball made of tobacco, treacle, plantain and sandal, used in a hookah; புகையிலை, பாகு, பழம், சந்தனம் இவற்றைச்சேர்த்துத்திரட்டிய உக்காமருந்து. (W.)

குடாக்கை kuṭākkai, *n.* perh. குடா. Corner of a field; வயலின் மூலை. (J.)

குடாகாயம் kuṭākāyam, *n.* <குடம்[1]+ ஆகாயம். (Phil.) Space limited by a pot, a term frequently used in Indian philosophy; குடத்தால் அளவுபடுத்தப்பட்ட ஆகாயம். *குடாகாயவாகாயக்கூத்து* (சி. போ. 2, 3, 2).

குடாசகம் kuṭācakam, *n.* <குடாசு-. (J.) 1. Fraud, duplicity, guile, dissimulation; கபடம். 2. Deception, cheating; ஏமாற்று. 3. Ill advice, bad counsel; துர்ப்போதனை.

குடாசு-தல் kuṭācu-, *5 v. intr.* To commit fraud; தந்திரம்பண்ணுதல். (J.)

குடாது kuṭātu, *n.* <குடக்கு. 1. That which is in the west; மேற்கிலுள்ளது. *குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின்* (புறநா. 6). 2. West; மேற்கு. *குடாதுங் குணாது மவற்றுட்படு கோணநான்கும்* (பாரத. பதின்மூ. 80).

குடாப்பு kuṭāppu, *n.* prob. குட. Plaited coop for fowls, pigs, lambs, etc., shaped like a cone; கூடு. (W.)

குடாரம்[1] kuṭāram, *n.* <*kuṭhāra.* Axe, hatchet; கோடாலி. *மழுவுந் தறுகட் குடாரமும்* (சூளா. சீய. 72).

குடாரம்[2] kuṭāram, *n.* <*kuṭara.* 1. Fixed post used to keep the churning stick in position; தயிர்கடைவதற்கு நட்ட தறி. 2. Churning pot; தயிர்கடை தாழி. (திவா.)

குடாரி[1] kuṭāri, *n.* <*kuṭhāra.* 1. Axe; கோடாலி. *குடாஅரிக் கோவலர்* (தொல். பொ. 329, உரை). 2. Elephant-hook; யானைத்தோட்டி. (பிங்.)

குடாரி[2] kuṭāri, *n.* perh. *kuṭhāra.* Long pepper, m. cl., *Piper longum*; திப்பலி. (மலை.)

குடாவடி kuṭā-v-aṭi, *n.* <குடா+. Bear, as having crooked feet; வளைந்த அடியையுடைதாகிய கரடி. (திவா.)

குடாவு kuṭāvu, *n.* <குட-. See குடா, 2. (W.)

குடான் kuṭāṉ, *n.* Thorny nail dye. See செம்முள்ளி. (மலை.)

குடி[1]**-த்தல்** kuṭi-, *11 v.tr.* cf. *kuḍ.* [K. *kuḍi*, M. *kuṭi.*] 1. [T. *kuḍucu.*] To drink, as from a cup, from the breast; பருகுதல். கடலைவற்றக் குடித்திடுகின்ற செவ்வேற் கூற்றம் (கந்தபு. தாரக. 183). 2. To inhale, absorb, imbibe, as air, tobacco, smoke; உட்கொள்ளுதல். புகைச்சுருட்டைக் குடிக்கிறான். *Loc.*

குடி[2] kuṭi, *n.* <குடி-. [M. *kuṭi.*] 1. Drinking; பருகுகை. பால்குடி மறந்த பிள்ளை. 2. Drink, beverage; மதுபானம். 3. Drunkenness, intoxication; மதுவுண்ட மயக்கம்.

குடி[3] kuṭi, *n.* cf. *bhru-kuṭī.* Eyebrow; புருவம். (பிங்.)

குடி[4] kuṭi, *n.* cf. *kuṭi.* [M. *kuṭi.*] 1. Ryot; குடியானவன். கூடு கெழீஇய குடிவயினான் (பொருந. 182). 2. Tenants; குடியிருப்போர். 3. Subjects, citizens; ஆட்சிக்குட்பட்ட பிரசைகள். மன்னவன் கோனோக்கி வாழுங் குடி (குறள், 542). 4. Family; குடும்பம். ஒருகுடிப்பிறந்த பல்லோருள்ளும் (புறநா. 183). 5. Lineage, descent; கோத்திரம். (பிங்.) 6. Caste, race; குலம். (பிங்.) 7. House, home, mansion; வீடு. சிறுகுடி கலக்கி (கந்தபு. ஆற்று. 12). 8. Town, village; ஊர். குன்றகச்சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து (திருமுரு. 196). 9. [T. K. *kuṭi.*] Abode, residence; வாழ்விடம். அடியாருள்ளத் தன்புமீதூரக் குடியாக்கொண்ட (திருவாச. 2, 8).

குடிக்கசூரி kuṭi-k-kacūri, *n.* <குடி[4]+U. *gusūr.* Negligence or remissness of ryots; குடிகளின் அக்கறையின்மை. (C. G.)

குடிக்காசு kuṭi-k-kācu, *n.* <id.+. A village cess; குடிவரி. (I. M. P. Cg. 1068.)

குடிக்காடு kuṭi-k-kāṭu, *n.* <id.+. Village; ஊர். ஐவர்க்கு மைந்து குடிக்காடு நல்குதியோ கூறு (பாரதவெண். வாசுதேவன்றூ. 69). (பிங்.)

குடிக்காணம் kuṭi-k-kāṇam, *n.* <id.+. A fee paid by tenants; குடிவரி. (I. M. P. Cm. 22.)

குடிக்காவல் kuṭi-k-kāval, *n.* <id.+. The system of village watch; ஊர்க்காவல். (G. Tn. D. 134.)

குடிக்குச்சகுனி kuṭikku-c-cakuṉi, *n.* <id. + Prickly poppy, s. sh., *Argemone mexicana*; குடியோட்டிப்பூண்டு. கொல்லைக்குப் பல்லி குடிக்குச் சகுனி. *Pro.*

குடிக்கூலி kuṭi-k-kūli, *n.* <id.+. 1. House rent; வீட்டுவாடகை. 2. Hire; வாடகை. *Madr.*

குடிக்கூலிக்கெடு-த்தல் kuṭi-k-kūlikkeṭu-, *v. tr.* <குடிக்கூலி+எடு-. To obtain for rent, as a house, for hire, as a cart; வாடகைக்கு வாங்குதல். *Madr.*

குடிகாரன் kuṭi-kāraṉ, *n.* <குடி[2]+. Drunkard; குடியன்.

குடிகெடு-தல் kuṭi-keṭu-, *v. intr.* <குடி[4]+. To be utterly ruined, as a family; குடும்பம் அடியோடு அழிதல். குடிகெடினு நள்ளே னினதடியாரொடல்லால் (திருவாச. 5, 2).

குடிகேடன் kuṭi-kēṭaṉ, *n.* <id.+கேடு. One who spoils the fair name of a family by his foul deeds; தீயொழுக்கத்தால் குலத்தையழிப்போன்.

குடிகேடி kuṭi-kēṭi, *n.* <id.+. One who is the ruin of a family; குலத்தையழிப்பவ-ன்-ள். விலைமாதர்கள் இளைஞர்கள் குடிகேடிகள் (திருப்பு. 625).

குடிகேடு kuṭi-kēṭu, *n.* <id.+. Ruin of a family; குடும்பநாசம். குதிரையின் மேல்வந்து கூடிடுமேற் குடிகேடு கண்டீர் (திருவாச. 36, 2).

குடிகை[1] kuṭikai, *n.* <*kuṭikā.* 1. Hut made of leaves, hermitage; பர்ணசாலை. உண்டு கண்படுக்கு முறையுட் குடிகையும் (மணி. 6, 63). 2. Temple; கோயில். முதியாள் குடிகையும் (மணி. 24, 161).

குடிகை[2] kuṭikai, *n.* prob. *niṣkuṭikā.* Cardamom seed; ஏலவரிசி. (மலை.)

குடிகை[3] kuṭikai, *n.* *kuṇḍikā.* Ascetic's pitcher; கமண்டலம். அரும்புனற் குடிகைமீது (கந்தபு. காவிரி. 49).

குடிகொள்(ளு)-தல் kuṭi-koḷ-, *v. intr.* <குடி[4]+. To occupy, take possession of the mind, as a deity; to haunt, infest as demons, bats, snakes; to be deep-seated, as a chronic disease; நிலையாகத் தங்கியிருத்தல். குரைகழல்கள் குறுகினம் நங்கோவிந்தன் குடிகொண்டான் (திவ். திருவாய். 10, 6, 7).

குடிகோள் kuṭi-kōḷ, *n.* <id.+. Ruining a family by deep-laid schemes; உபாயஞ்சூழ்ந்து குடியைக் கெடுக்கை. உறுப்பறை குடிகோ ளலைகொலை (தொல். பொ. 258).

குடிங்கு kuṭiṅku, *n.* perh. *kuṭi-ga.* Bird; பறவை. கோட்டகம் பரிதியங் குடிங்கு கூடுமே (இரகு. நாட்டுப். 40).

குடிச்செருக்கு kuṭi-c-cerukku, *n.* <குடி[4]+. 1. Pride of birth; குடிப்பிறப்பாலுண்டான கருவம். (W.) 2. Dense population; குடிவளம். *Rd.*

குடிசல் kuṭical, *n.* <*kuṭikā.* Hut; குடிசை. (C. G.)

குடிசனம் kuṭi-caṉam, *n.* <குடி[4]+. Inhabitants, subjects; பிரசைகள்.

குடிசாய்தல் kuṭi-cāytal, *n.* <id.+. Ruin of a family; குடியின் அழிவு. *Colloq.*

குடிசெய்-தல் kuṭi-cey-, *v. intr.* <id.+. 1. To bring credit to one's family, as making it; பிறந்தகுடியை உயர்த்துதல். குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானை (குறள், 1025). 2. To dwell, reside, settle; வசித்தல். மனவாரமுடையார் குடிசெயுந் திரு நலூரே (தேவா. 413, 10).

குடிசை kuṭicai, *n.* <*kuṭikā.* [T. *guṭiśe.*] Small hut, cottage; சிறுகுடில். (பிங்.)

குடிசைதூக்கு-தல் kuṭicai-tūkku-, *v. intr.* <குடிசை+. 1. See குடிசையெடு-. 2. To change habitation; இருப்பிடம் மாற்றுதல். *Colloq.*

குடிசையெடு-த்தல் kuṭicai-y-eṭu-, *v. intr.* <id.+. To remove one's hut to another place; குடிசையை வேற்றிடம் மாற்றுதல். (W.)

குடிஞை[1] kuṭiñai, *n.* perh. குடி-. cf. *kuṭilā.* River; நதி. கொண்மூ வரவொத் தினதக் குடிஞை (கந்தபு. காளிந்தி. 3). (பிங்.)

குடிஞை[2] kuṭiñai, *n.* <*kuṭikā.* See குடிசை. தூசக் குடிஞையும் (பெருங். இலாவாண. 12, 43).

குடிஞை[3] kuṭiñai, *n.* 1. cf. Mhr. *ghuḍagē.* Rock horned-owl, *Bubo bengalensis;* கோட்டான். குடிஞை யிரட்டு நெடுமலை யடுக்கத்து (மலைபடு. 141). 2. Bird; பறவை. (பிங்.)

குடிஞைக்கல் kuṭiñai-k-kal, *n.* <குடி[4]+நல்+கல். A standard weight current during Cōḻa sovereignty; சோழர்காலத்து வழங்கிய ஒருவகை எடைக்கல். ஆடவல்லானென்னுங் குடிஞைக்கல்லால் (S.I.I. ii, 69).

குடிஞைப்பள்ளி kuṭiñai-p-paḷḷi, *n.* <குடிஞை[2]+. (Dram.) A portion in green-room occupied by *kaṇṇuḷāḷar;* கண்ணுளாளர் தங்குதற்குரிய நாடகவரங்கின் பகுதி. (சிலப். 3, 105, உரை.)

குடித்தரம் kuṭi-t-taram, *n.* <குடி[4]+. Separate assessment for each individual ryot, dist. fr. *motta-p-paical;* தனித்தனியான குடித்தீர்வை. *Colloq.*

குடித்தனக்காரன் kuṭittaṉa-k-kāraṉ, *n.* <குடித்தனம்+. 1. Cultivator, farmer; பயிரிடுவோன். 2. Man of wealth and influence in a village; ஊரில் செல்வாக்கு உள்ளவன். அந்தக் கிராமத்தில் அவர் பெரியகுடித்தனக்காரர். 3. Householder, landlord; வீட்டுத்தலைவன். (W.)

குடித்தனப்படு-தல் kuṭittaṉa-p-paṭu-, *v. intr.* <id.+. To enter married life; இல்வாழ்க்கை நிலையை அடைதல். (J.)

குடித்தனப்பாங்கு kuṭittaṉa-p-pāṅku, *n.* <id.+. Domestic propriety; domestic economy; இல்வாழ்க்கையொழுங்கு.

குடித்தனம் kuṭi-t-taṉam, *n.* <குடி[4]+. 1. Family, domestic life; household affairs; இல்வாழ்க்கை. ஓரஞ்சொன்னவன் குடித்தனம்போற் றேயுந் து (இராமநா. உயுத். 29). 2. Tenancy; வாடகைக்குடி. இந்த வீட்டில் நாலு குடித்தனம் உண்டு. *Loc.* 3. Domestic economy, domestic order; குடிவாழ்க்கையின் ஒழுங்கு. (W.)

குடித்தனவுறுப்பு kuṭittaṉa-v-uṟuppu, *n.* <குடித்தனம்+. Things necessary for a family, as chattels, furniture, dependants, servants, cattle; குடும்பத்திற்கு அங்கங்களான இடம் பொருள் ஏவல் முதலியன. (J.)

குடித்தெய்வம் kuṭi-t-teyvam, *n.* <குடி[4]+. Family deity; குலதெய்வம். நங்குடித் தெய்வங் கண்டீர் (சீவக. 547).

குடிதாங்கி kuṭi-tāṅki, *n.* <id.+. The mainstay of a family; குலத்தைத் தாங்குபவன். என்னிருங்கலியின் குறும்பைத் தூரத்துங் குடிதாங்கியை (பெருந்தொ. 1153).

குடிதாங்கிக்கோல் kuṭi-tāṅki-k-kōl, *n.* <id.+. An ancient measuring-rod; ஒரு பழைய அளவுகோல். (Insc.)

குடிதிருத்து-தல் kuṭi-tiruttu-, *v. intr.* <id.+. 1. To secure the welfare of one's subjects; ஆட்சிக்குட்பட்ட குடிகளை நன்னிலையில் நிறுத்துதல். துளங்குகுடி திருத்திய (பதிற்றுப். 37, 7). 2. To advance one's family in wealth, status, reputation, etc.; பிறந்தகுலத்தை மேம்படுத்துதல்.

குடிநற்கல் kuṭi-naṟ-kal, *n.* <id.+, See குடிஞைக்கல். (S.I.I. iii, 142.)

குடிநாட்டு-தல் kuṭi-nāṭṭu-, *v. intr.* <id.+. To plant a colony; குடியேற்றுதல்.

குடிநிலம் kuṭi-nilam, *n.* <id.+. 1. House site, house premises; குடியிருக்கும் மனைநிலம். 2. Building sites, as an item in dowry; சீதனமாகக் கொடுத்த மனை. (J.)

குடிநிலை kuṭi-nilai, *n.* <id.+. (Puṟap.) Theme of extolling the greatness of a warrior's family; வீரக்குடியின் பழமையையும் அஞ்சாமையையுங் கூறும் புறத்துறை. (பு. வெ. 2, 14.)

குடிநிலையுரைத்தல் kuṭi-nilai-y-uraittal, *n.* <id.+. See குடிநிலை. (புறநா. 290)

குடிநீர் kuṭi-nīr, *n.* <குடி-+. 1. Drinking-water; குடித்தற்குரிய நீர். இட்ட குடிநீ ரிருநாழி (பதினொ. க்ஷேத். 16). 2. Decoction, tincture, medicinal infusion; கஷாயமருந்து. நோய்க்குத் தாயே குடிநீர் குடிப்பாள் (திவ். பெருமாள். 5, 1, வ்யா.).

குடிநீர்த்திரவியம் kuṭi-nīr-t-tiraviyam, *n.* <குடிநீர்+. Ingredients of a tincture; கஷாயச் சரக்குகள். (பைஷஜ.)

குடிப்படை kuṭi-p-paṭai, *n.* <குடி[4]+. Militia, volunteer corps as opposed to a mercenary army; குடிகளாலான சேனை. (W.)

குடிப்பழி kuṭi-p-paḻi, *n.*<id.+. Stigma, disgrace, slur, disrepute, on family; குலத்துக்கு ஏற்பட்ட நிந்தை. காணிற் குடிப்பழியாம் (நாலடி, 84).

குடிப்பழுது kuṭi-p-paḻutu, *n.* <id.+. See குடிப்பழி. (W.)

குடிப்பறையன் kuṭi-p-paṟaiyaṉ, *n.* <id.+. Barber who shaves Pariahs; பறையர்க்குச் சவரஞ்செய்யும் அம்பட்டன். (M.M.)

குடிப்பாங்கு kuṭi-p-pāṅku, *n.* <id.+. 1. See குடித்தனப்பாங்கு. 2. Orderly or proper conduct of a farmer; குடியானவன் பின்பற்றுதற்குரிய ஒழுங்கு. 3. Usage, customs of cultivators or agriculturists; குடிகளின் ஏற்பாடு. (W.)

குடிப்பாழ் kuṭi-p-pāḻ, *n.* <id.+. 1. Ruin of a village owing to depopulation, one of three kinds of *pāḻ*, q.v.; குடிகள் விட்டுநீங்குதலால் ஊருக்கு உண்டாகும் அழிவு. 2. A deserted village; குடிகளற்றுப்போன ஊர். அந்த ஊர் குடிப்பாழ். *Loc.*

குடிப்பிள்ளை kuṭi-p-piḷḷai, *n.*<id.+. 1. A division of Pariahs, generally doing the duty of barbers; பறையருள் அம்பட்டவேலைசெய்யும் ஒரு சாரார். (E.T.) 2. Sects which trace their origin to particular castes and adopt their titles; ஒரு சாதியில் தாங்கள் சேர்ந்துள்ளவர்களாகச் சொல்லிக்கொண்டு அதன் பட்டப்பெயரால் தங்களை வழங்கிக் கொள்ளும் இனத்தார். *Loc.*

குடிப்பிறப்பாளர் kuṭi-p-piṟappāḷar, *n.* <id.+. Persons of birth, of noble lineage; உயர்குடியிற்பிறந்தோர். குடிப்பிறப்பாளர் தங்கொள்கையிற் குன்றார் (நாலடி, 141).

குடிப்பிறப்பு kuṭi-p-piṟappu, *n.* <id.+. Noble birth, nobility, birth in a distinguished family; உயர்குடியில் தோன்றுகை. குடிப்பிறப் பழிக்கும் (மணி. 11, 76).

குடிப்பெண் kuṭi-p-peṇ, *n.* <id.+. Woman of birth and respectability; wedded lawful wife; குலஸ்த்ரீ. (யாழ். அக.)

குடிப்பெயர் kuṭi-p-peyar, *n.*<id.+. Family name as *cēraṉ*, *cōḻaṉ*, *pāṇṭiyaṉ*; சேரசோழ பாண்டியர் என்றற்போல பிறந்த குலம்பற்றி வழங்கும் பெயர். (பன்னிருபா. 145: சிலப் 1, 33, அரும்.)

குடிபடை kuṭi-paṭai, *n.* <id.+. Inhabitants; குடிசனங்கள். *Colloq.*

குடிபுகு-தல் kuṭi-puku-, *v. intr.* <id.+. 1. To occupy a new home; வேறுவீட்டிற்கு வசிக்கச் செல்லுதல். 2. To immigrate, settle and colo-ize, seek a fresh refuge; புதுக்குடிசேர்தல். தாமரை திறந்து குடிபுக்காளென (கம்பரா. வரைக். 12). 3. To occupy a newly-built house with appropriate ceremonies, to do house-warming; கிருகப்பிரவேசஞ் செய்தல்.

குடிபோ-தல் kuṭi-pō-, *v. intr.* <id.+. 1. To remove oneself to a new home; வேறு வீட்டிற்கு வசிக்கச்செல்லுதல். 2. See குடிபுகு, 3. 3. To quit, give up, abandon, as a house; இருப்பிடத்தைவிட்டு வெளியேறுதல். ஆவிகுடிபோன வவ்வடிவும் (சிலப். 20, வெண்பா.). 4. To emigrate, flee from home; வலசைபோதல். (W.) 5. To evaporate, escape, as essential oil, camphor; காற்றாகவேனும் ஆவியாகவேனும் பண்டங்கரைதல். (W.)

குடிமக்கள் kuṭi-makkaḷ, *n.* <id.+. 1. Sub-castes rendering service in a village, being 18 in number, viz., வண்ணான், நாவிதன், குயவன், தட்டான், கன்னான், கற்றச்சன், கொல்லன், தச்சன், எண்ணெய்வாணிகன், உப்புவாணிகன், இலைவாணிகன், பள்ளி, பூமாலைக்காரன், பறையன், கோவிற்குடியான், ஓச்சன், வலையன், பாணன்; பணிசெய்தற்குரிய பதினெண்வகைக் கிராமக்குடிகள். (W.) 2. Slaves; அடிமைகள். இந்திரியங்களுக்குக் குடிமக்களாய் வர்த்திக்கிற லீலாவிபூதி (திவ். திருமாலை, 13. வ்யா.).

குடிமக்கள்மானியம் kuṭi-makkaḷ-māṉiyam, *n.* <id.+. Land given free of rent to washermen, barbers, etc. for the services rendered by them to villagers; பணிசெய்யும் வண்ணான் அம்பட்டன் முதலிய குடிமக்கட்கு விடப்பட்ட இறையிலி நிலம்.

குடிமகன் kuṭi-makaṉ, *n.* <id.+. 1. Person of noble birth; நற்குடிப்பிறந்தவன். பொருளைக் குடிமகனல்லான்கை வைத்தல் (பழமொ. 209). 2. A slave owning perpetual hereditary allegiance

to a landlord under certain conditions; பரம்பரை யடிமை. 3. Hired servant, one whose wages are paid by grain. See படியாள். *குடிமகனொருவனுக்கு ஐயனுரேறி வலித்து கவிந்தவாறே* (ஈடு, 4, 6, 2). 4. Barber; அம்பட்டன். *Loc.*

குடிமதிப்பு kuṭi-matippu, *n.* <id.+. Valuation of property for purposes of taxation; கிராமவரித்திட்டம். (W.)

குடிமராமத்து kuṭi-marāmattu, *n.* <id.+. Customary contribution of labour by ryots for petty repairs to channels, tank-bunds, sluices, etc. (R. F.); கால்வாய் குளக்கரை முதலியவற்றைச் சீர்ப்படுத்துவதற்காக வழக்கமாய்க் குடிகள் செய்தற்குரிய அமஞ்சிவேலை.

குடிமார்க்கம் kuṭi-mārkkam, *n.* <id.+. (W.) 1. Married life; இல்வாழ்க்கை. 2. Duties relating to a household; குடித்தனக்கடமை.

குடிமிராசி kuṭi-mirāci, *n.* <id.+. See குடிமிராசு.

குடிமிராசு kuṭi-mirācu, *n.* <id.+. Right or privilege of a hereditary occupant; பரம்பரை நிலவுரிமை.

குடிமுழுகிப்போ-தல் kuṭi-muḻuki-p-pō-, *v. intr.* <id.+. To ruin utterly, as a family completely washed away by flood; குடும்பநிலை முதலாயின முழுதும் அழிதல்.

குடிமை kuṭimai, *n.* <id. 1. Manners and customs of the higher classes, of nobility; உயர்குலத்தாரது ஒழுக்கம். (தொல். பொ. 273.) 2. Supreme quality of advancing the status of a family; பிறந்தகுடியை உயரச்செய்யுந் தன்மை. *மடிமை குடிமைக்கட் டங்கின்* (குறள், 608). 3. Lineage, family, descent; குடிப்பிறப்பு. *குணனுங் குடிமையும்* (குறள், 793). 4. Allegiance, homage, as of subjects to their sovereign; அரசரது குடியாயிருக்குந் தன்மை. *குடிமை மூன்றுலகுஞ் செயுங் கொற்றத்து* (கம்பரா. நிந்தனை. 37). 5. Domestic economy; குடித்தனப்பாங்கு. (W.) 6. Slavery, servitude, feudal dependence, feudatory in reference to his chief; அடிமை. *குடிமைசெய்யுங் கொடும்புலையன்* (அரிச். பு. சூழ்வினை. 70). 7. A tax, certain dues from tenants; குடிகளிடமிருந்து பெறும் ஒருவகை வரி. (S.I.I. iii, 110.)

குடிமைப்பாடு kuṭimai-p-pāṭu, *n.* <குடிமை +. Service; ஊழியம். (S.I.I. iii, 48.)

குடியம்பலம் kuṭi-y-ampalam, *n.* <குடி[4] +. Village office established with a view to assist the ryots in keeping accounts of payments made by them to the government; குடிகள் அரசாங்கத்திற்குச் செலுத்தும் வரிகளின்கணக்கை ஒழுங்குபடுத்தற்கு உதவிசெய்ய நியமிக்கப்படும் ஒரு கிராமஉத்தியோகம். *Loc.*

குடியரசு kuṭi-y-aracu, *n.* <id.+. Republican government; government by the people; democracy; பிரசைகளால் நடத்தப்பெறும் அரசாங்கம்.

குடியழிவு kuṭi-y-aḻivu, *n.* <id.+. 1. Ruin of a family; குடும்பக்கேடு. 2. Great evil; பெருங்கேடு. (W.)

குடியன் kuṭiyaṉ, *n.* <குடி-. Drunkard; குடிகாரன்.

குடியாயக்கட்டு kuṭi-y-āya-k-kaṭṭu, *n.* <குடி[4]+. Total number of families in a village; கிராமக் குடும்பங்களின் மொத்தத்தொகை.

குடியாள்[1] kuṭi-y-āḷ, *n.* <id.+. [M. *kuṭiyāl.*] Tenant; பண்ணையாள்.

குடியாள்[2] kuṭi-y-āḷ, *n.* <id.+ஆள்-. Yellow sulphuret of arsenic; தாளகம். (சங். அக.)

குடியான் kuṭiyāṉ, *n.* See குடியானவன். *Loc.*

குடியானகவுண்டர் kuṭiyāṉa-kavuṇṭar, *n.* <குடி[4]+. Koṅku-vēḷāḷa caste; கொங்குவேளாளர். (G. Sm. D. i, 144.)

குடியானவன் kuṭiyāṉavaṉ, *n.* <id.+. 1. Cultivator, farmer, ryot; பயிரிடுவோன். 2. Caste Šudra, opp. to *paṟaiyaṉ*; சூத்திரக்குடி. *Loc.*

குடியிரு-த்தல் kuṭi-y-iru-, *v. intr.* <id.+. [M. *kuṭiyiri.*] 1. To reside, settle down; வசித்தல். *எப்படியினிக் குடியிருப்பது* (உபதேசகா. சூராதி. 28). 2. To live in rented quarters; குடிக்கூலிக்கிருத்தல். *Colloq.*

குடியிருக்கை kuṭi-y-irukkai, *n.* <id.+. 1. Living, residing; குடியாகத் தங்கியிருக்கை. 2. Quarters occupied by the ryots in a village; கிராமத்தில் குடிகள்வாழும் இடம். *இவ்வூர் நத்தங் குடியிருக்கையும்* (S.I.I. ii, 57).

குடியிருப்பு kuṭi-y-iruppu, *n.* <id.+. [M. *kuṭiyirippu.*] 1. Living, residing; குடியிருக்கை. 2. Life, existence; வாழ்வு. *குடியிருப்புச்சுகமில்லை.* *Colloq.* 3. Village; கிராமம். *அதன் பகுதியாகிய குடியிருப்பும்* (தொல். பொ. 114, உரை). 4. Quarters occupied by a special class, as ryots; சில இனத்தார்கள் தனியாக வாழ்ந்துவரும் இடம்.

குடியிருப்புநத்தம் kuṭi-y-iruppu-nattam, *n.* <id.+. The portion of a village site where

villagers have their places of residence; கிராம வாசிகள் வாழும் இடம்.

குடியிலார் kuṭiyilār, *n.* <id. Tenants, ryots; குடிகள். (T. A. S.)

குடியிறங்கு-தல் kuṭi-y-iṟaṅku-, *v. intr.* <id. +. To fix or establish permanently one's abode; to settle down, as a family; நிலைக்குடியாகத் தங்குதல். (W.)

குடியிறை kuṭi-y-iṟai, *n.* <id. +. Tax imposed upon ryots; குடிகள் செலுத்தும் வரி. (திவா.)

குடியுடம்படிக்கை kuṭi-y-uṭampaṭikkai, *n.* <id. +. 1. Title-deed, registry of holdings. See பட்டா. *Loc.* 2. Lease-deed; குத்தகைச் சீட்டு.

குடியுந்தடியும் kuṭiyun-taṭiyum, *n.* <id. +. Houses and lands; வீடும் நிலமும். *ஸம்ஸாரத்திலே குடியுந்தடியுமாயிருக்க நினைத்தார் (திவ். இயற். திருவிருத். 6, ஸ்வா. வ்யா. பக். 56).*

குடியெழும்பு-தல் kuṭi-y-eḻumpu-, *v. intr.* <id. +. To evacuate a house, leave a village, commonly from disastrous events or anticipations; கலகம் முதலிய நிகழ்ச்சிகளால் குடிநீங்கிப் போய்விடுதல். (W.)

குடியேற்றநாடு kuṭi-y-ēṟṟa-nāṭu, *n.* <குடியேற்றம்+. Colony; சனங்கள் புதிதாகக் குடியேறிய தேசம். *Mod.*

குடியேற்றம் kuṭi-y-ēṟṟam, *n.* <குடி[4] + ஏறு-. Colonization, newly populating a country; புதிதாக ஒருநாட்டிற் குடியேறுகை.

குடியேற்று-தல் kuṭi-y-ēṟṟu-, *v. tr.* Caus. of குடியேறு-. To people, populate, colonize; குடியேறச்செய்தல். *பொன்னெடு நாட்டை யெல்லாம் புதுக்குடி யேற்றிற் றன்றே (கம்பரா. இந்திரசித். 48).*

குடியேறு-தல் kuṭi-y-ēṟu-, *v. intr.* <குடி[4] + ஏறு-. 1. To colonize, settle in a new country; தம்நாடுவிட்டு வேற்றுநாடுசென்று வசித்தல். 2. To secure a sure place or footing; to be firmly rooted; நிலைத்துவிடுதல். *சிந்தை குடியேறியிருக்கின்ற மாலொழியும் (ஏகாம். உலா, 168).*

குடியோட்டி kuṭi-y-ōṭṭi, *n.* <id. +. See குடியோட்டுப்பூண்டு. (I. P.)

குடியோட்டுப்பூண்டு kuṭi-y-ōṭṭu-p-pūṇṭu, *n.* <id. +. Prickly poppy, s. sh., ***Argemone mexicana***; பூடுவகை. (*பதார்த்த.* 293.)

குடிரம் kuṭiram, *n.* A low shrub with sharp axillary spines. See காரை[1]. (மலை.)

குடில்[1] kuṭil, *n.* prob. *kuṭīra*. 1. Hut, shed; குடிசை. *என்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடில் (பாரத. கிருட். 80).* 2. Movable, conoidal roof for sheltering beasts or stacks of straw or gate-ways from the weather; ஆட்டுக்கிடை முதலியவற்றை மூடுதற்கு உதவும் குடில். (W.) 3. Abode, dwelling place; வீடு. *குடிலுறுகாமர் பொன்னகர் (கந்தபு. கடவுள். 14).* 4. A cone-shaped block of wood used to prevent big cars from running fast and to turn them at street-corners; தேர்ச்சக்கரங்களைத் திருப்பிச்செலுத்தற்குக் கொடுக்கும் மரக்கட்டை. *Loc.*

குடில்[2] kuṭil, *n.* <*kuṭila*. Space; ஆகாசம். (திவா.)

குடிலச்சி kuṭilacci, *n.* 1. A black beetle; கருவண்டுவகை. (W.) 2. A prepared arsenic; இந்திரபாஷாணம். (*சங். அக.*)

குடிலம்[1] kuṭilam, *n.* <*kuṭila*. 1. Bend, curve, flexure; வளைவு. (திவா.) 2. Space; ஆகாசம். (சூடா.) 3. Tangled, matted hair; சடை. (பிங்.) 4. Deceit, guile, cunning; வஞ்சகம். *பெருங் குடிலமெல்லாங் குடியிருக்குங் கருவிழியாள் (குற்றா. தல. தருமசாமி. 47).* 5. (Mus.) A modulation of voice in singing; உள்வாங்கிப் பாடும் இசைத்தொழில். *குடிலமுள் வாங்கிப் பாடல் (சீவக. 735, உரை)* 6. Common bottle-flower. See துரா. (திவா.)

குடிலம்[2] kuṭilam, *n.* (*சங். அக.*) 1. See நாகபாஷாணம். 2. Lead ore; ஈயமணல். 3. White lead; வெள்ளீயம்.

குடிலை kuṭilai, *n.* <*Kuṭilā*. 1. Pure Māyā. See சுத்தமாயை. (*சி. போ. பா.* 2, 2, *பக்.* 133, *புதுப்.*) 2. The mystic syllable *Ōm*; பிரணவம். *குடிலையம்பொருட்கு (கந்தபு. கடவுள்வா. 14).*

குடிவா-தல்[குடிவருதல்] kuṭi-vā-, *v. intr.* <குடி[4]+. To settle, take residence; குடியேறுதல். *மேவினன் குடிவர (கந்தபு. கடவுள். 14).*

குடிவாங்கு-தல் kuṭi-vāṅku-, *v. intr.* <id. +. To remove, shift, abandon one's home, change place; இருப்பிடம்விட்டுப் பெயர்தல்.

குடிவாரநிலம் kuṭi-vāra-nilam, *n.* <id. +. Land over which tenants have a vested right to cultivate; குடிகட்குப் பயிரிடும் பாத்தியதையுள்ள நிலம்.

குடிவாரம் kuṭi-vāram, *n.* <id. +. [M. ***kuṭivāram***.] 1. Occupancy right, opp. to ***mel-vāram***; நிலத்தை உழுது பயிரிடுவதற்குக் குடிகளுக்குரிய உரிமை. 2. The share of the produce to which a ryot having such right is entitled, opp. to ***mel-vāram***; குடிவாரத்தில் குடியானவன் பங்குக்குரிய மாதுல்.

குடிவாழ்க்கை kuṭi-vāḻkkai, *n.* <id.+. 1. Domestic life; இல்வாழ்க்கை. *மாந்தர் குடிவாழ்க்கை . . . சாந்தனையுஞ் சஞ்சலமே* (*நல்வழி*, 28). 2. Domestic economy, house-keeping; குடும்ப நிருவாகம். (W.) 3. Life, mode or manner of life; வாழ்வின் ஒழுங்கு.

குடிவிளங்குதல் kuṭi-viḷaṅkutal, *n.* <id. +. 1. Flourishing state of a family, the people of a town, village, etc.; குலம் முதலியன செழிக்கை. 2. Increase of children; சந்ததி விருத்தியாகுகை.

குடிவெறி kuṭi-veṟi, *n.* <குடி²+. Intoxication, inebriety, drunkenness, *Delirium tremens*; மதுபானமயக்கம்.

குடிவை-த்தல் kuṭi-vai-, *v. intr.* <குடி¹+. 1. To let a house for rent; வீட்டைக் குடிக் கூலிக்கு விடுதல். 2. To settle or establish a family; குடியை நிலைபெறச்செய்தல். *அமரர்பதியின்னிய குடிவைத்தற் குற்ற* (*திருப்பு*. 632).

குடீசகம் kuṭīcakam, *n.* <*kuṭīcaka*. A kind of asceticism, the lowest of four orders of *caṉṉiyācam*, q.v., which permits the ascetic to get his meals through his sons or relations, though living separately in a hermitage; நால்வகைத்துறவுகளுள் மிக எளிதானதும் தன் புத்திரர் அல்லது சுற்றத்தாரால் உண்டிமுதலியன பெற்றுப் பர்ணசாலையில் வசித்தற்குரியதுமான சன்னியாசம். *பட்டதுயர்கெடுங் குடீசகம்* (*கைவல். சந்தே*. 158).

குடீசகன் kuṭīcakaṉ, *n.* <id. An ascetic who lives in a hermitage and is fed by his sons or relations, the lowest of four kinds of *caṉṉiyāci*, q.v.; நால்வகைச் சன்னியாசிகளுள் கடைசியானவனும் தன் புத்திரர் அல்லது சுற்றத்தாரால் உண்டிமுதலியன பெற்றுப் பர்ணசாலையில் வசிக்குந் துறவி.

குடீரகம் kuṭīrakam, *n.* <*kuṭīraka*. See குடீரம். *குறியுறுஞ் செபத்தர்மேவுங் குடீரகங் குலவி* (*வேதாரணிய. பலபத்*. 21).

குடீரம் kuṭīram, *n.* <*kuṭīra*. 1. Hut, cottage; குடிசை. *படகுடீரபாவம்* (*த. நி. போ*. 115). 2. Hermitage; பர்ணசாலை.

குடு kuṭu, *n.* cf. *guḍala*. Toddy, fermented liquor; கள். (*அக. நி.*)

குடுக்கம் kuṭukkam, *n.* (Mus.) A secondary time-beat, one of five *upa-tāḷam*, q.v.; உபதாளம் ஐந்தனுள் ஒன்று. (*பரத. தாள*. 3.)

குடுக்கை kuṭukkai, *n.* cf. *kuṇḍikā*. [T. *guḍaka*, K. *kuḍike*, M. *kuṭukka*.] 1. Coconut or other hard shell used as a vessel; தேங்காய் முதலியவற்றலான குடுவை. 2. Earthen or wooden pitcher of an ascetic; கமண்டலம். 3. A hand drum; இடக்கையென்னும் தோற்கருவி. (*சிலப்*. 3, 27, *உரை*.) 4. Belly of a lute; வீணையின் உறுப்பு.

குடுகு kuṭuku, *n.* See குடுக்கை, 1. (W.)

குடுகுடா kuṭukuṭā, *n.* Onom. See குடுகுடி.

குடுகுடி kuṭukuṭi, *n.* Onom. Hookah, as producing a gurgle, hubble-bubble; உக்கா. (W.)

குடுகுடு-த்தல் kuṭukuṭu-, *11 v. intr.* Onom. 1. To rumble, rattle; ஒலித்தல். 2. To be in a great hurry; அவசரப்படுதல். (W.)

குடுகுடுக்கை kuṭukuṭukkai, *n.* <குடுகுடு-. Ripe coconut in which the kernel rattles; கொப்பரைத்தேங்காய். (W.)

குடுகுடுகிழவன் kuṭukuṭu-kiḻavaṉ, *n.* <id. +. Tottering, decrepit old man; தடுமாறிநடக்கும் கிழவன். *Colloq.*

குடுகுடுத்தான் kuṭukuṭuttāṉ, *n.* <id. One who is always in a hurry; அவசரக்காரன். *Colloq.*

குடுகுடுப்பாண்டி kuṭukuṭuppāṇṭi, *n.* <குடுகுடுப்பை + ஆண்டி. Professional beggar who goes about rattling a *kuṭukuṭuppai* and telling fortunes; குடுகுடுப்பை அடித்துக்கொண்டு குறிகூறும் பிச்சைக்காரன். *Colloq.*

குடுகுடுப்பு kuṭukuṭuppu, *n.* <குடுகுடு-. Hurry, haste; பரபரப்பு. *Colloq.*

குடுகுடுப்பை kuṭukuṭuppai, *n.* <id. 1. Anything making a rattling sound; குடுகுடு என்று ஒலிக்கும் பொருள். 2. A small tambourine; குடுகுடுப்பாண்டி ஆட்டியொலிக்கும் சிறிய உடுக்கை. 3. Wooden clapper for scaring birds; பறவையோட்டும் மரத்தட்டை. (J.) 4. A person who is always in a hurry; எப்பொழுதும் அவசரப்படுபவன். 5. Shell used as a receptacle for bhang; கஞ்சாக்குடுக்கை. (*யாழ். அக*.) 6. Dryness; வறட்சி. *தலை குடுகுடுப்பை பற்றியது*. (J.)

குடுகுடுப்பைக்காரன் kuṭu-kuṭuppai-k-kāraṉ, *n.* <குடுகுடுப்பை+. See குடுகுடுப்பாண்டி. (*பாத. பாவ*. 38, *உரை*.)

குடுகுடெனல் kuṭu-kuṭeṉal, *n.* 1. Onom. expr. signifying gurgling, rattling sound; ஓர் ஒலிக்குறிப்பு. 2. Expr. signifying great haste; விரைவுக்குறிப்பு.

குடுத்தா kuṭuttā, *n.* <U. *kurtā.* See குடுத்துணி.

குடுத்துணி kuṭuttuṇi, *n.*<U. *kurtī.* Half-arm jacket, shirt without sleeves; அரைக்கைச் சட்டை.

குடுப்பம் kuṭuppam, *n.* <*kuḍapa.* A dry measure of capacity=4 *palams;* நான்கு பல முள்ள அளவு. (தைலவ. தைல. 59.)

குடுப்புக்கார் kuṭuppu-k-kār, *n.* A kind of paddy; கார்நெல்வகை. (W.)

குடும்பத்தானம் kuṭumpa-t-tāṉam, *n.* <*kuṭumba*+. (Astrol.) Second house from the ascendant indicating the condition of one's family; இராசிசக்கரத்தில் குடும்பத்தின் நிலைமையை உணர்த்துவதும் இலக்கினத்திற்கு இரண்டாவதும் ஆகிய இடம்.

குடும்பத்தியாச்சியம் kuṭumpa-t-tiyācciyam, *n.* <id.+. Renunciation of family ties, as an ascetic; இல்லறத்தை முற்றும் துறக்குந் துறவு.

குடும்பப்பிரதிஷ்டை kuṭumpa-p-piratiṣṭai, *n.* <id.+. Maintaining or stabilising a family by rescuing it from distress; நிலையழிந்த குடும்பத்தைத் தாபிக்கை.

குடும்பபாரம் kuṭumpa-pāram, *n.* <id.+. Burden or responsibility of a family; குடும்பத்தைத் தாங்கும் பொறுப்பு. இவரொடு நெடுநாட் டங்கினன் குடும்பபாரத்தில் (ஞானவா. சித்த. 20).

குடும்பம் kuṭumpam, *n.* <*kuṭumba.* 1. Household; family including husband, wife and children; சமுசாரம். குடும்பத்தைக் குற்ற மறைப்பான் (குறள், 1029). 2. Relations, kindred, connections; உறவினர். குடும்பந் தாங்குங் குடிப்பிறந்தாரினே (கம்பரா. சேதுப. 53). 3. Caste, family; குலம். அவன் என் குடும்பத்தைச் சேர்ந்தவன். 4. Wife; மனைவி. பாகத்தார் குடும்ப நீக்கி (சீவக. 1437).

குடும்பன் kuṭumpaṉ, *n.* <id. 1. Head of a family; குடும்பத்தலைவன். 2. Householder; சமுசாரி. ஏழைக் குடும்பனுகி (தாயு. தேசோ. 4). 3. Headman of the Paḷḷa caste; பள்ளர்தலைவன். (W.)

குடும்பாண்டி kuṭumpāṇṭi, *n.* <id.+ஆண்டி. Professional beggar who begs from house to house ringing a bell; வீடுதோறும் மணியடித்துக் கொண்டு பரம்பரையாகவே பிச்சையெடுத்துச் சீவிப்பவன்.

குடும்பி[1] kuṭumpi, *n.* <*kuṭumbin.* Householder, head of a large family; சமுசாரி. குடும்பியெனுங் குறிப்பை மாற்றி (ஞானவா. உற்ப. 69).

குடும்பி[2] kuṭumpi, *n.* Vul. for குறும்பி. (J.)

குடும்பினி kuṭumpiṉi, *n.* <*kuṭumbinī.* Wife; மனைவி. (பிங்.)

குடும்பு kuṭumpu, *n.* <*kuṭumba.* Cluster of fruits; காய்முதலியவற்றின் குலை. (பிங்.)

குடுமி[1] kuṭumi, *n.* [M. *kuṭuma.*] cf. *cūḍā.* 1. Tuft of hair, especially of men; ஆண்மக்களது மயிர். (திவா.) 2. Summit or peak of a mountain; மலையுச்சி. வடவரைக் குடுமி (கம்பரா. திருவவ. 8). 3. Top of a building; மாடத்தின் உச்சி. புயலுறுகுடுமி . . . மாடத்து (கம்பரா. நகர. 4). 4. Crown of the head; தலையுச்சி. குடுமிக்கூந்தலில் நறுநெய்பெய்து (இறை. 1, உரை). 5. Bird's crest; உச்சிக்கொண்டை. குடுமிக்கூகை (மதுரைக். 170). 6. Tip, end; நுனி. குடுமிக் கூர்ங்கல் (அகநா 5). 7. Crown, diadem; கிரீடம். குடுமிகொண்ட மண்ணு மங்கலம் (தொல். பொ. 68). 8. Projecting corners on which a door swings; கதவின் குடுமி. தேயத் திரிந்த குடுமியவே (பெருந்தொ. 603). 9. Handle of a plough; மேழிக்குடுமி. (W.) 10. Name of a Pāṇḍya king, Mutu-kuṭumi-p-peru-vaḻuti; முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டியன். குடுமிக்கோமாற் கண்டு (புறநா. 64). 11. Determination, resolve; முடிபு. அவன் கொண்ட குடுமித்து (புறநா. 32, 10). 12. Victory, success; வெற்றி. (பிங்.)

குடுமி[2] kuṭumi, *n.* <T. *kuḍimi.* Snake-charmer and dealer in antidotes for snake-bite; பாம்பாட்டி. *Loc.*

குடுமிக்கதவு kuṭumi-k-katavu, *n.* <குடுமி[1] +. Door that turns on projecting corners instead of hinges, dist. fr. *kīṟ-katavu;* கீலின்றிக் கீழும்மேலும் உள்ள முனைகளால் ஆடி அடைக்கவும் திறக்கவும் பெறுங் கதவு.

குடுமிக்கலியாணம் kuṭumi-k-kaliyāṇam, *n.*<id.+. Tonsure or tuft-providing ceremony of the Hindus; குடுமிவைக்குஞ் சௌளச்சடங்கு.

குடுமிக்காரன் kuṭumi-k-kāraṉ, *n.* <id.+. One who has a luxuriant growth of hair on the head, as actors; குடுமிமயிர் மிகுதியுமுள்ளவன்.

குடுமிக்குயவன் kuṭumi-k-kuyavaṉ, *n.* <id.+. Chief of potters; குயவர்தலைவன். *Loc.*

குடுமிக்கூந்தல் kuṭumi-k-kūntal, *n.* <id. +. Hair on the crown of the head; உச்சிக் கூந்தல். குடுமிக்கூந்தலில் நறுநெய்பெய்து (இறை. 1, உரை).

குடுமிகளை-தல் kuṭumi-kaḷai-, *v. intr.* <id.+. 1. To shave, as in *caulam;* சௌளச் சடங்கில் தலைமயிர் நீக்குதல். குடுமிகளைந்த நுதல்

(புறநா. 77, 2). 2. To dress and tie the *kuṭumi;* மயிர்ச்சிகையைக் கூட்டி முடித்தல். குடுமிகளைந்தா னெங்கோ (பு. வெ. 9, 21).

குடுமிகொள்(ளு)-தல் kuṭumi-koḷ-, *v. tr.* <id.+. Lit., to hold in check by forelock. To win, conquer; வெல்லுதல். புத்திசேனன் . . . மன்னரைக் குடுமிகொண்டான் (சீவக. 2249).

குடுமிதட்டு-தல் kuṭumi-taṭṭu-, *v.intr.*<id.+. 1. Lit., to stroke the tuft. To get oneself ready for starting a fight; சண்டைக்குச் சித்தமாதல். (W.) 2. To strike off the top in measuring grain; அளக்கும்போது மரக்காலின் தலையிடத்துள்ள தானியத்தை வழித்தல்.

குடுமிப்பருந்து kuṭumi-p-paruntu, *n.* <id.+. Ceylonese crested falcon, *Spizachus cirrhatus;* உச்சிச்சூட்டுடைய ஒருவகைப் பருந்து. (J.)

குடுமியன் kuṭumiyaṉ, *n.* <id.+. See குடுமிப்பருந்து. (J.)

குடுமியைப்பிடி-த்தல் kuṭumiyai-p-piṭi-, *v. intr.* <id.+. To quarrel, as by grappling another's hair tuft; சண்டையிடுதல்.

குடுமியைமுடிந்துவிடு-தல் kuṭumiyai-muṭintu-viṭu-, *v. tr.* <id.+. To create a quarrel between two persons, as by tying their *kuṭumi* together; to set persons by the ear or at loggerheads; சண்டைமூட்டுதல்.

குடுமிவாங்கு-தல் kuṭumi-vāṅku-, *v.* <id.+. *intr.* To have a complete shave of the head in fulfilment of a vow; பிரார்த்தனையாகச் சிகையை எடுத்தல்.—*tr.* To disgrace, divest one of office and power, as causing the removal of the *kuṭumi;* அவமதித்தல். (W.)

குடுமிவை-த்தல் kuṭumi-vai-, *v. intr.* <id.+. To perform the ceremony of providing a child with a tuft of hair on the crown after tonsure; சௌளச்சடங்கு செய்தல்.

குடுவை¹ kuṭuvai, *n.* prob. குட. 1. Vessel with a small narrow mouth; வாய்குறுகிய தண்டுப்பாத்திரம். (திவா.) 2. Pitcher of an ascetic; கமண்டலம். குடுவைச் செங்கையினானை (கந்தபு. அயனைச்சிறைநீக். 9). 3. Small pot used in collecting palmyra juice or toddy; கள்ளிறக்கும் சிறுகலசம். குடுவையிற் றென்னங் கள்ளும் (குற்று. குற. 118, 3).

குடுவை² kuṭuvai, *n.* <கொடு-. A game at cards in which a player having two or more jacks is prohibited from bidding, but is given the option of assisting the bidder or remaining passive; இரண்டு அல்லது மூன்று ஜாக்கிபெற்றுள்ள ஓர் ஆட்டக்காரன் தான் கேள்விகேளாமலிருந்து கேட்டவற்கு உதவிபுரிந்து விளையாடும் ஒருவகைச் சீட்டாட்டம். *Colloq.*

குடை¹-தல் kuṭai-, *4 v.* cf. *kuṭṭ. tr.* 1. To work through, as bees in gathering honey from flowers; கிண்டுதல். குடைந்து வண்டுண்ணுந் துழாய் முடியானை (திவ். திருவாய். 1, 7, 11). 2. To scoop, hollow out; to bore with a tool; to perforate; to make holes, as beetles in wood; துளைத்தல். வண்டு உத்திரத்தைக் குடைந்துவிட்டது. 3. To churn; கடைதல். நெய்குடை தயிரின் (பரிபா. 16, 3). 4. To worry, harass, trouble; மிகவருத்துதல். அவன் என்னைக் குடைகிறான். 5. To meddle, interfere; வேண்டாதவற்றில் தலையிடுதல். என் இந்த விஷயத்திற் குடைந்துகொண்டிருக்கிறாய். 6. To search through and through; துருவுதல். புஸ்தகமெல்லாம் குடைந்துபார்க்கிறான்.—*intr.* 1. To work one's way, penetrate; உட்புகுதல். குடைந்துல கனைத்தையுங் காமம் (கம்பரா. உருக்காட். 23). 2. To dive, bathe, plunge in water; நீரில் மூழ்குதல். குடைந்து நீராடு மாதர் (கம்பரா. நீர்வி. 12). 3. To pain, as the ear, the leg; உளைவுநோவெடுத்தல். கால் குடைகிறது.

குடை² kuṭai, *n.* <குட. [T. *goḍugu*, M. *kuṭa.*] 1. Umbrella, parasol, canopy; கவிகை. குடைநிழன்மரபு (தொல். பொ. 91). 2. Government; அரசாட்சி. குடையுங் கோலும் பிழைத்தவோ (சிலப். 27, 77). 3. A dance of Skanda. See குடைக்கூத்து. குடைவீழ்த் தவர்மு னாடிய குடையும் (சிலப். 6, 53). 4. Knob in sandals; பாதக்குறட்டின் குமிழ். (சூடா.) 5. Ola basket for eating and drinking from; நீர் முதலியனவுண்ணும் ஓலைப்பட்டை. வேணீருண்ட குடையோ ரன்னர் (கலித். 23). 6. (Astrol.) See கவிப்பு. (சினேந். 430.) 7. Umbrella thorn babul. See குடைவேல். (L.) 8. Anything hollow; உள்ளிடம் குடைவுபட்ட பொருள். (W.)

குடைக்கல் kuṭai-k-kal, *n.* <குடை+. Ortholithic stone with a wide cross slab used for covering graves; கல்லறையின் மூடுகல். (M. M.)

குடைக்காம்பு kuṭai-k-kāmpu, *n.* <id.+. Handle of an umbrella; குடையின் கைப்பிடி.

குடைக்காளான் kuṭai-k-kāḷāṉ, *n.*<id.+. Mushroom, as umbrella-shaped; நாய்க்குடை.

குடைக்கிழங்கு kuṭai-k-kiḻaṅku, *n.* Lesser galangal. See சிற்றரத்தை. (மலை.)

குடைக்கூத்து kuṭai-k-kūttu, *n.* <குடை+. Skanda's dance with an umbrella, when the Asuras unable to withstand His furious onslaught threw down their weapons and beat a

retreat, one of 11 *kūttu*, q.v.; தன்னோடுபோருத அசுரர் பின்வாங்கித் தம் ஆயுதங்களைக் கீழே போகட்ட காலத்துக் குடையைச்சாய்த்து அதனையே திரையாகக் கொண்டு ஆடிய முருகனுடல். (சிலப். 6, 53, உரை.)

குடைக்கொள்[1]**(ளு)-தல்** kuṭai-k-koḷ-, *v. intr.* <id.+. To overflow, as milk; to come to the surface, as some cakes in frying; to be pushed up, as a cloth in water; மேலெழுதல். (J.)

குடைக்கொள்[2]**(ளு)-தல்** kuṭai-k-koḷ-, *v. intr.* prob. குடம்[1]+. To capsize, to be upset, as a cart; தடஞ்சாய்தல். (J.)

குடைகரி kuṭai-kari, *n.* <குடை-+ Piece of charcoal bored into a cup for melting small nuggets of gold or silver; பொன்னுருக்கும் கரிக்துகை. படரிருட்குழாங் குடைகரியா . . . என் பொன்னை யுருக்குமாறு (பெருந்தொ. 1278).

குடைகவிழ்-தல் kuṭai-kaviḻ-, *v. intr.* prob. குடம்[1]+. To be upset, as a cart; to be overturned; to tip over; வண்டி குடங்கவிழ்தல்.

குடைச்சல் kuṭaiccal, *n.* <குடை-. Neuralgia, gnawing pain; வாயுவால் உண்டாகும் குடைச்சல் நோவு. (தைலவ. தைல. 15.)

குடைச்சூல் kuṭai-c-cūl, *n.* <id.+. 1. Anklet; சிலம்பு. அவ்வரிக் குடைச்சூல் (பதிற்றுப். 68, 18). 2. The state of being hollow; உள்ளிடம் குடைவுபடுகை. குடைச்சூற் சித்திரச்சிலம்பின் (சிலப். 16, 118.)

குடைச்செலவு kuṭai-c-celavu, *n.* <குடை+செல்-. (Puṟap.) Theme of a king sending the royal umbrella in advance in an auspicious hour, before he actually sets out to defend his territory from an advancing enemy; எதிர்த்து வந்தபகையைத் தடுத்துக்காக்கச் செல்லும்முன் தன் கொற்றக்குடையை நல்வேளையிற் புறவீடுவிடும் காஞ்சித்திணைத்துறை. (பு. வெ. 4, 8.)

குடைச்செவி kuṭai-c-cevi, *n.* <குட+. Ears pricked up and bent forward, as those of an elephant, tiger, horse, in surprise or rage; கோபம் முதலிய காரணங்களால் வளைவுபட்ட விலங்குகளின் செவி. (W.)

குடைந்தாடு-தல் kuṭaintāṭu-, *v. intr.* <குடை-+ To bathe by immersion; அமிழ்ந்து நீராடுதல். புனல் குடைந்தாடினோ மாயின் (சிலப். 24, பாட்டுமடை).

குடைநாட்கோள் kuṭai-nāṭ-kōḷ, *n.* <குடை+. (Puṟap.) Theme of a king sending the royal umbrella in advance in an auspicious hour, before he actually sets out to capture his enemy's fortress; பகையரணைக்கொள்ளநினைந்து மேற்சென்ற வேந்தன் தன்குடையை நல்வேளையிற் புறவீடுவிடும் உழிஞைத்துறை. (பு. வெ. 6, 2.)

குடைநிலை kuṭai-nilai, *n.* <id.+. (Puṟap.) Theme of a king sending the royal umbrella in advance in an auspicious hour, before he actually sets out on an expedition; பகைமேற் செல்லும் அரசன் தன்குடையை நல்வேளையிற் புறவீடுவிடும் வஞ்சித்திணைத்துறை. (பு. வெ. 3, 3.)

குடைப்பனை kuṭai-p-paṉai, *n.* <id.+. [M. *kuṭappana.*] Talipot palm. See தாளிப்பனை. (W.)

குடைப்புல் kuṭai-p-pul, *n.* <id.+. Trail grass. See மயிற்கொண்டைப்புல்.

குடைமங்கலம் kuṭai-maṅkalam, *n.* <id.+. (Puṟap.) Theme of eulogizing the state umbrella of a king whose fame has spread far and wide; நான்குதிக்கும் கீர்த்திமிக வீற்றிருந்த அரசனது குடையைப் புகழ்ந்துகூறும் பாடாண்டுறை. (பு. வெ. 9, 34.)

குடைமிளகாய் kuṭai-miḷakāy, *n.* <id.+. Bell-pepper, s. sh., *Capsicum grossum*; காப்பிரிமிளகாய். (L.)

குடைமுல்லை kuṭai-mullai, *n.* <id.+. (Puṟap.) Theme of eulogizing the state umbrella of a king who returned from battle laden with victory; போரில் வெற்றிகொண்ட அரசனது குடையைப்புகழ்ந்து கூறும் வாகைத்துறை. (பு. வெ. 8, 28.)

குடையடி-த்தல் kuṭai-y-aṭi-, *v. intr.* prob. குடம்[1]+. See குடங்கவிழ்-. *Loc.*

குடையாணி kuṭai-y-āṇi, *n.*<குடை+. [M. *kuṭayāṇi.*] 1. Pin or nail with round head, opp. to *caṭai-y-āṇi*; தலையிடம் உருண்டையான ஆணி. 2. Large pin used to keep a temple-umbrella open; கோயிற் குடையிற் செருகும் ஆணி.

குடையோலை kuṭai-y-ōlai, *n.* <id.+. Ola basket out of which low-caste people eat and drink; இழிந்தசாதியார் உண்டற்குரிய கலமான ஓலைப்பட்டை. (இவா.)

குடைவண்டு kuṭai-vaṇṭu, *n.* <குடை-+. Perforating beetle, borer; துளைக்கும் வண்டுவகை. (W.)

குடைவு kuṭaivu, *n.* <id. 1. Hollow; பொந்து. 2. Cavity; துகை. (W.)

குடைவிருத்தி kuṭai-virutti, *n.* <குடை+. Grant of land for holding the ornamental umbrella over the village deity during festivals; திருவிழாக்காலங்களில் சுவாமிக்குக் குடைபிடிப்பதற்காக ஏற்பட்ட மானியம். (M. M.)

குடைவேல் kuṭai-vēl, *n.* <id.+. 1. Umbrella thorn babul. See உடை[5], 1. (திவா.) 2. Buffalo thorn cutch, s. tr., *Acacia latronum;* நீருடைமரம்.

குடோரி kuṭōri, *n.* prob. *kuṭṭa.* (W.) 1. Slitting, scratching; கீறுகை. 2. Scarifying the skin of the skull and inserting mercurial or other medicinal pill to revive suspended animation; பாம்புக்கடி முதலியவற்றால் நின்றுபோன உயிர்ப்பு மீளுதற்காக மண்டையைக்கீறி மருந்து இடுகை. 3. Lead ore; வங்கமணல். 4. Borax; வெங்காரம். 5. A prepared arsenic; வெள்ளைப் பாஷாணம்.

குடோரியாடு-தல் kuṭōri-y-āṭu-, *v. intr.* <குடோரி+. See குடோரிவை-. (W.)

குடோரிவை-த்தல் kuṭōri-vai-, *v. intr.* <id.+. To perform the *kuṭōri* operation; மண்டையைக்கீறி மருந்துபதித்தல். (W.)

குண்டக்கணிகை kuṇṭa-k-kaṇikai, *n.* <*kuṇḍa*+. Prostitute; கற்பழிந்து வேசையானவள். (சிலப். 10, 219, உரை.)

குண்டக்கம் kuṇṭakkam, *n.* prob. id. 1. Slander, calumny; கோள். 2. Fraud, duplicity; வஞ்சனை. (யாழ். அக.)

குண்டக்கமண்டக்கம் kuṇṭakka-maṇṭakkam, *n.* prob. குண்டலமண்டலம். State of lying down in a crooked manner; சுருண்டுகிடக்கும் நிலை. குண்டக்க மண்டக்கமாய்க் கிடக்கிறது. *Loc.*

குண்டக்கிரியா kuṇṭakkiriyā, *n.* See குண்டக்கிரியை.

குண்டக்கிரியை kuṇṭakkiriyai, *n.* (Mus.) A specific melody-type; ஓர் இராகம். (பரத. இராக. 56.)

குண்டகம் kuṇṭakam, *n.* <T. *guṇṭaka.* Garden hoe, scuffler; மண்பறிக்குங் கருவிவகை.

குண்டகன் kuṇṭakaṉ, *n.* <*kuṇḍaka.* Son born in adultery; bastard of an adulteress; சோரபுருஷனுக்குப் பிறந்தவன். (திவா.)

குண்டஞ்சு kuṇṭañcu, *n.* <குண்டு[1]+T. *añu.* A kind of cloth with fine border worn by men; கரைக்கோடு அமைந்த ஆடவர் உடுக்கும் ஆடைவகை.

குண்டடி-த்தல் kuṇṭaṭi-, *v. intr.* <id.+ அடி-. 1. To play with marbles, small metal balls, etc.; கோலி இரும்புக்குண்டு முதலியவற்றால் விளையாடுதல். 2. To take in bhang; பங்கியடித்தல். (W.) 3. To fail, as in an examination; பரீட்சைமுதலியவற்றில் தவறுதல். பரீட்சையில் அடிக்கடி குண்டடிக்கிறான். *Colloq.*

குண்டடியன் kuṇṭaṭiyaṉ, *n.* prob. id.+ அடியன். Male hunting leopard, *Felis jubata;* ஆண்சிவிங்கி. (W.)

குண்டடுப்பு kuṇṭaṭuppu, *n.* <*kuṇḍa*+. Earthen oven like a pit, with a side opening for putting in fuel; ஒருவகைக் குழியடுப்பு. (இந்துபாக.)

குண்டணி kuṇṭaṇi, *n.* [M. *kuṇṭaṇi.*] Slander, calumny; குறளைச்சொல். (W.)

குண்டப்பணிவிடை kuṇṭa-p-paṇiviṭai, *n.* prob. *kuṇḍa*+. Menial service; கீழ்த்தரமான ஊழியம். *Loc.*

குண்டம் kuṇṭam, *n.* <*kuṇḍa.* 1. Hollow in the ground for the sacred fire of the Hindus; ஓமகுண்டம். மறையவன் குண்ட முறைமுறை வாய்ப்ப (கல்லா. 94, 12). 2. [M. *kuṇṭam.*] Deep cavity, pit; குழி. (W.) 3. Pool, tank; வாவி. (திவா.) 4. Small hollow vessel with a narrow mouth; குடுவை. (திவா.) 5. Pot; பானை. (பிங்.) 6. Unchaste woman; கற்பழிந்து வேசையானவள். (சிலப். 10, 219, உரை.)

குண்டம்பாய்-தல் kuṇṭam-pāy-, *v. intr.* <குண்டம்+. To walk on fire in fulfilment of a vow; பிரார்த்தனையாகத் தீக்குழியில் நடத்தல். (W.)

குண்டரம் kuṇṭaram, *n.* <குண்டு[1]+அரம்[1]. Round file; திரட்சியுள்ள அரம். (C. G.)

குண்டலக்கடுக்கன் kuṇṭala-k-kaṭukkaṉ, *n.* <*kuṇḍala*+. A large ear-ring; வட்டக்கடுக்கன்வகை.

குண்டலகேசி kuṇṭala-kēci, *n.* <id.+. 1. A Buddhistic nun who stabilised Buddhism by vanquishing the representatives of other religions in disputation; பிறமதத்தவரை வாதில் வென்று தன் மதத்தை நிலைநாட்டிய ஒரு பௌத்தப்பெண் துறவி. (நீலகேசி.) 2. An epic poem by Nātakuttaṉār describing the life and work of Kuṇṭala-kēci, one of *pañca-kāviyam,* q. v.; பஞ்சகாவியத்துள் ஒன்றனதும் நாதகுத்தனார் இயற்றியதும் குண்டலகேசியின் சரிதமுணர்த்துவதுமான நூல். (யாப். வி.)

குண்டலகேசிவிருத்தம் kuṇṭala-kēci-viruttam, *n.* <குண்டலகேசி+. The poem Kuṇṭala-kēci, as composed in *viruttam* metre; விருத்தயாப்பினால் இயன்ற குண்டலகேசி யென்னும் நூல். (மணி. பக். 448.)

குண்டலதீக்ஷிதர் kuṇṭala-tīkṣitar, *n.* <*kuṇḍala*+. One who wears the *kuṇṭalam* in token of his having performed Sōma sacrifice; சோமயாகம்புரிந்ததற்கு அடையாளமாகக் குண்டலக் கடுக்கன் அணிந்த வேதியர்.

குண்டலப்புழு kuṇṭala-p-puḻu, *n.* <id.+. See சுண்டலப்பூச்சி. *கோழிவிட்டெறி குழையினைக் குண்டலப்புழுவென்று* (திருவானைக். திருநாட். 122).

குண்டலப்பூச்சி kuṇṭala-p-pūcci, *n.* <id. +. A kind of worm that rolls itself up; வளைந்து சுருண்டுகொள்ளும் புழுவகை. *சண்பேிர விலே குண்டலப்பூச்சி சுருண்டு கிடப்பானேன்* (குற்றா. குற. 123, 13).

குண்டலம் kuṇṭalam, *n.* <*kuṇḍala*. 1. Gold ear-ring worn by men; ஆடவர்காதணிவகை. *குண்டல மொருபுடை குலாவி வில்விட* (சீவக. 1009). 2. Sky, atmosphere, heavens; ஆகாயம். (பிங்.) 3. Circle; வட்டம். 4. *Zero*; சுன்னம்.

குண்டலமண்டலம் kuṇṭala-maṇṭalam, *n.* <id.+. Coiling round; சுருண்டுவளைகை.

குண்டலவுழுவை kuṇṭala-v-uḻuvai, *n.* <id.+. A fish found in fresh water and in back-waters, yellowish, *Gobius straitus;* நன்னீரிலும் கழியிலும்வாழும் மஞ்சள்நிறமுள்ள மீன்வகை.

குண்டலன் kuṇṭalaṉ, *n.* <id. One who wears the *kuṇṭalam;* குண்டலந்தரிப்போன். *ஓர் குண்டலன்* (சூடா. 1, 10).

குண்டலி[1] kuṇṭali, *n.* prob. *kuṇḍalin*. 1. Umbilical region; நாபித்தானம். *குண்டலியா னன லையோம்பி* (சி. சி. 9, 8). 2. Mystic circle situated between the anus and the generative organ; குய்யத்திற்கும் குதத்திற்கும் நடுவில் இருப்பதாகக் கருதும் மூலாதாரம். (ஔவை. கு. நினைப்புறு. 2.)

குண்டலி[2] kuṇṭali, *n.* <*kuṇḍalī*. 1. Gulancha. See சீந்தில். (தைலவ. தைல. 56.) 2. Mistletoe berry-thorn. See சங்கஞ்செடி. (மலை.)

குண்டலி[3] kuṇṭali, *n.* <*kuṇḍalinī*. Primal Māyā, as the presiding power in *kuṇṭali*. See சுத்தமாயை. (சி. போ. பா. 2, 2, பக். 133.)

குண்டலிசக்தி kuṇṭali-cakti, *n.* <குண்டலி[3] +. See குண்டலி[3].

குண்டலினி kuṇṭaliṉi, *n.* <*kuṇḍalinī*. 1. Primal Māyā; மகாமாயை. (சி. சி. 1. 57, சிவாக்.) 2. (Yōga.) A Śakti or principle in the form of a serpent, abiding in the *mūlādhāra;* மூலாதாரத்திலுள்ள பாம்பின் வடிவமைந்த ஒரு சத்தி. (பிரபோத. 44, 20.)

குண்டவண்டன் kuṇṭa-vaṇṭaṉ, *n.* <குண்டன்+. Short, stumpy person; குள்ளமாய்த் தடித்தவன். (J.)

குண்டற்கச்சி kuṇṭaṟkacci, *n.* A kind of coconut; தென்னைவகை. (பதார்த்த. 71.)

குண்டன் kuṇṭaṉ, *n.* <*kuṇḍa*. 1. Son born in adultery; வியபிசாரத்திற் பிறந்த மகன். (பிங்.) 2. Strong, stout person; பருத்துவலுத்தவன். *Colloq.* 3. Man low in caste or character; இழிந்தோன். *சமண்குண்டர்* (திவ். பெரியதி. 2, 6, 5).

குண்டா kuṇṭā, *n.* <Mhr. *guṇḍā*. See குண்டான்சட்டி. *Colloq.*

குண்டாக்கன் kuṇṭākkaṉ, *n.* perh. குண்டு[1] + ஆக்கையன். Leader, chief; தலைவன். *சமணர்க்கோர் குண்டாக்கனாய்* (தேவா. 963, 8).

குண்டாச்சட்டி kuṇṭā-c-caṭṭi, *n.* <குண்டா +. See குண்டான்சட்டி.

குண்டாஞ்சட்டி kuṇṭāñ-caṭṭi, *n.* <id.+. See குண்டான்சட்டி. *Colloq.*

குண்டாணி kuṇṭāṇi, *n.* <குண்டு[1] + ஆணி. See தடையாணி, 1.

குண்டாணிக்கொடி kuṇṭāṇi-k-koṭi, *n.* See குந்தாணிக்கொடி. (W.)

குண்டாந்தடி kuṇṭān-taṭi, *n.* <குண்டு[1] + ஆம் +. Short stout stick; பருத்துக்குறுகிய கைத்தடி.

குண்டாமண்டி kuṇṭāmaṇṭi, *n.* Mischief; குறும்பு. *Colloq.*

குண்டாலரோகம் kuṇṭāla-rōkam, *n.* [T. *kuṇḍālarōgamu*.] Tumour in the head; தலையிலுண்டாகும் செவ்வாப்புக்கட்டி. (பைஷஜ.)

குண்டான் kuṇṭāṉ, *n.* <குண்டா. See குண்டான்சட்டி.

குண்டான்சட்டி kuṇṭāṉ-caṭṭi, *n.* <குண்டான்+. Vessel with wide mouth; வாய் அகன்ற பாத்திரவகை.

குண்டி kuṇṭi, *n.* 1. [T. *kuṭṭe*, K. *kuṇḍe*, M. *kuṇṭi*.] Buttocks; posteriors; rump of an animal; any rump-like protuberance; ஆசனப் பக்கம். *Colloq.* 2. The end of a fruit or nut opposite to the stalk; bottom, as of a vessel; அடிப்பக்கம். *Colloq.* 3. [T. *guṇḍe*.] Heart; இரத்தாசயம். (W.) 4. Kidney; மூத்திராசயம். 5. Roe of fish, spawn; மீன்சினை. (W.)

குண்டிக்காய் kuṇṭi-k-kāy, *n.* <குண்டி + காய். 1. [M. *kuṇṭikkāyi*.] Kidneys; மூத்திராசயம். (கால். வி.) 2. Heart; இரத்தாசயம். (C. G.) 3. Buttocks, posteriors; பிருட்டபாகம். *Loc.*

குண்டிக்காயெரிச்சல் kuṇṭikkāy-ericcal, *n.* <குண்டிக்காய்+. Inflammation of kidneys; மூத்திராசயத்திற் காணும் ஒருநோய்.

குண்டிக்கொழுப்பு kuṇṭi-k-koḻuppu, *n.* <குண்டி + Lit., fatness of buttocks. Pride, wantonness, arrogance, sauciness, insolence; இறுமாப்பு. *Vul.*

குண்டிகாய்-தல் kuṇṭi-kāy-, *v. intr.* <id. +. Lit., to be thinned in the buttocks. To become emaciated on account of insufficient food, etc.; to grow lean; உணவின்மையால் வயிறு காய்தல்.

குண்டிகை kuṇṭikai, *n.* <*kuṇḍikā*. 1. Ascetic's pitcher; கமண்டலம். *நான்முகன் குண் டிகைநீர் பெய்து* (திவ். இயற். நான். 9). 2. Coconut or other shell, used as a receptacle; குடுக்கை. *குண்டிகைப் பருத்தி* (தொல். பாயி. உரை). 3. Name of an Upaniṣad; நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று.

குண்டித்துணி kuṇṭi-t-tuṇi, *n.* <குண்டி + Waist cloth; அரைத்துணி.

குண்டிப்பட்டை kuṇṭi-p-paṭṭai, *n.* <id. +. Buttocks; பிருட்டபாகங்கள். *Vul.*

குண்டியம் kuṇṭiyam, *n.* perh. *kuṇḍa*. 1. Slander; குறளை. (உரி. நி.) 2. Exposure of secrets; இரகசியத்தை வெளிப்படுத்துகை. 3. Falsehood, lie; பொய். (R.)

குண்டியெலும்பு kuṇṭi-y-elumpu, *n.* <குண்டி +. Os sacrum; ஆசன எலும்பு. (W.)

குண்டில் kuṇṭil, *n.* <குண்டு[1] +. 1. Small field or plot; சிறுசெய். (திவா.) 2. Back; முதுகு. (W.)

குண்டிவற்று-தல் kuṇṭi-vaṟṟu-, *v. intr.* <குண்டி +. See குண்டிகாய்-.

குண்டு[1] kuṇṭu, *n.* 1. [T. *kuṇḍa*, K. Mhr. *guṇḍa*.] Ball; anything globular and heavy; பந்துபோல் உருண்டு கனப்பது. 2. A standard weight; நிறைகல்வகை. (பிங்.) 3. Scales; துலாக் கோல். (பிங்.) 4. Round vessel of medium size; உருண்டை வடிவான ஒருவகைப்பாத்திரம். *Colloq.* 5. Cannon ball, bullet; பீரங்கிக்குண்டு. 6. Globular gold bead; உருண்டையான பொன்மணி. *பொன் னின்பட்டைமேற் குண்டுவைத்து* (S. I. I. ii, 182). 7. Bolus of bhang or other narcotic drug; கஞ்சா முதலிய லகிரியுருண்டை. 8. Testicle of beasts; விலங்குகளின் விதை. 9. Stallion, adult male horse; ஆண்குதிரை. (சூடா.) 10. A kidney-shaped graft mango; காதர்ப்பசந்து என்னும் மாவகை.

குண்டு[2] kuṇṭu, *n.* cf. *kuṇḍa*. [M. *kuṇṭu*.] 1. Depth; ஆழம். *வண்டுணு மலர்ந்த குண்டுநீ ரிலஞ்சி* (மணி. 8, 8). 2. Sinking in, hollow, lowness; தாழ்வு. (சூடா.) 3. A small field; சிறுசெய். (S. I. I. iii, 105.) 4. A land measure = 1089 sq. ft. = 1/40 acre (R. F.); **1089** சதுர அடியுள்ள ஒரு நில வளவு. 5. Pool, pond; குளம். (சங். அக.) 6. Manure-pit; உரக்குழி. *Loc.*

குண்டுக்கட்டு kuṇṭu-k-kaṭṭu, *n.* <குண்டு[1] +. 1. Tying anything en masse; திரளச்சேர்த் துக்கட்டுங் கட்டு. *Colloq.* 2. Binding one's neck and heels and forcing him into a position like a ball; ஒருவனுடைய கழுத்தையும் காலையும் ஒன்று சேர்த்துத் திரளாகக்கட்டுங் கட்டு.

குண்டுக்கட்டை kuṇṭu-k-kaṭṭai, *n.* <id. +. Unhewn or unsplit pieces of wood; பிளக் காத உருண்டைவிறகு. *Colloq.*

குண்டுக்கல் kuṇṭu-k-kal, *n.* <id. +. 1. Unshaped or undressed stone, rubble; வேலை செய்து செப்பனிடப்படாத கல். 2. Weights of a balance; தராசின் நிறைகல்.

குண்டுக்கலம் kuṇṭu-k-kalam, *n.* <குண்டு[2] +. A standard measure of capacity = 24 *marak-kāl*; **24** மரக்கால்கொண்ட ஓரளவு. (C. G.)

குண்டுக்கழுதை kuṇṭu-k-kaḻutai, *n.* <குண்டு[1] +. He-ass; ஆண்கழுதை. (பஞ்சதந்.)

குண்டுக்காயம் kuṇṭu-k-kāyam, *n.* <id. +. Gunshot wound; துப்பாக்கிக்குண்டு பட்டதனால் உண்டான புண்.

குண்டுக்காளை kuṇṭu-k-kāḷai, *n.* <id. +. Covering bull; பொலியெருது. *Loc.*

குண்டுக்கிராமம் kuṇṭu-k-kirāmam, *n.* <id. +. Villages, 11 in number, included within the 'randome shott' of a brass gun fired from Ft. St. David at Cuddalore in 1690, and forming the territory sold to the East India Company by the Mahrattas; **1690**-ஆம் வருஷத்தில் கூடலூரி லுள்ள செண்ட் டேவிட் கோட்டையிலிருந்து சுடப் பெற்ற குண்டு விழுந்ததூரத்திற்கு உட்பட்டவையும், மகாராட்டிரர்களால் கும்பெனியாருக்கு விற்கப்பட்ட வையுமான **11** கிராமங்கள். (G. S.A. D. i, 43.)

குண்டுக்குதிரை kuṇṭu-k-kutirai, *n.* <id. +. Stallion, adult male horse; ஆண்குதிரை.

குண்டுக்குழல் kuṇṭu-k-kuḻal, *n.* <id. +. See குண்டுக்குழாய். (W.)

குண்டுக்குழாய் kuṇṭu-k-kuḻāy, *n.* <id. +. Small cannon, blunderbuss; ஒருவகைத் துப் பாக்கி. (W.)

குண்டுக்கெம்பு kuṇṭu-k-kempu, *n.* <id. +. See குச்சுக்கெம்பு. (C. G.)

குண்டுங்குழியுமாய் kuṇṭuṅ-kuḻi-y-um-āy, *adv.* <id. +. Uneven; மேடும்பள்ளமுமாய்.

குண்டுச்சம்பா kuṇṭu-c-campā, *n.* <id. +. A kind of *campā* paddy that matures in six months; ஆறுமாதத்தில் விளையும் சம்பாநெல் வகை

குண்டுச்சுழி kuṇṭu-c-cuḻi, *n.* <id.+. The circular portion of *kompu* which forms part of the symbols of certain vowel-consonants, as in கெ, கோ, etc.; உயிர் மெய்யெழுத்துக்களின் கொம்பில் வளைக்குந் சுழி.

குண்டுச்சூளை kuṇṭu-c-cūḷai, *n.* <id.+. Circular kiln; வட்டமாக அமைக்கப்படுங் காளவாய். *Loc.*

குண்டுசட்டி kuṇṭu-caṭṭi, *n.* <id.+. Round earthen vessel; உருண்டையான சட்டிவகை. *கூனையுங் குடமுங் குண்டுசட்டியும்* (தனிப்பா. i, 169, 20).

குண்டுணி kuṇṭuṇi, *n.* cf. குண்டணி. 1. Inciting, instigating to a quarrel; கலகமூட்டுகை. *கோளுங் குண்டுணிப்பேச்சும்* (இராமநா. உயுத். 81). 2. Slander, calumny; கோட்சொல். (R.) 3. Talebearer; கோட்சொல்லுவோன். *யாரோடுங் குண்டுணியாய்த் திரியவேண்டாம்* (உலக.).

குண்டுணிநாரதர் kuṇṭuṇi-nāratar, *n.* <குண்டுணி+. Lit., Nārada, the talebearer. Talebearer, instigator of quarrels; கோட்சொல்லிக் கலகமூட்டுபவன். *Colloq.*

குண்டுதலையணை kuṇṭu-talai-y-aṇai, *n.* <குண்டு[1]+. Small round pillow; வட்டத்தலையணை. *Loc.*

குண்டுதைரியம் kuṇṭu-tairiyam, *n.* <id.+. Rash courage, foolhardiness; முரட்டுத்தைரியம். *Loc.*

குண்டுநீர் kuṇṭu-nīr, *n.* <குண்டு[2]+. The sea, as being deep; கடல். *குண்டுநீர்வையத்து* (நாலடி, 94).

குண்டுநூல் kuṇṭu-nūl, *n.* <குண்டு[1]+. Plumb line used by masons; நுனியில் ஈயக்குண்டு கட்டப்பட்டிருக்கும் அளவுநூற்கயிறு. *Colloq.*

குண்டுப்பிணையல் kuṇṭu-p-piṇaiyal, *n.* prob. id.+. A kind of hinge; கீல்வகை. (J.)

குண்டுபடு-தல் kuṇṭu-paṭu-, *v. intr.* <id.+. To be shot, to be wounded with bullet; வெடிகுண்டால் தாக்கப்படுதல். *குண்டுபட்டுச் செத்தான்.*

குண்டுபாய்-தல் kuṇṭu-pāy-, *v. intr.* <குண்டு[2]+. To become hollow; ஆழம்படுதல். *முள்ளுக் குத்திய இடம் குண்டுபாய்ந்துவிட்டது.* *Colloq.*

குண்டுபோடு-தல் kuṇṭu-pōṭu-, *v. intr.* <குண்டு[1]+. 1. To fire a salute as a sign of honor to distinguished persons, etc.; அரசாங்கத்தில் உயர்ந்தபதவியில் இருப்போர்கள் வருங்காலங்களிலும் பிற விசேஷகாலங்களிலும் மரியாதையின் பொருட்டு வெடிபோடுதல். 2. To mark the time of day by gun-fire; காலத்தை உணர்த்துவதற்காக வெடிபோடுதல். 3. To die; இறத்தல். *Loc.* 4. To fail, to be unsuccessful, as in an undertaking, examination, etc.; தொழில், பரீட்சைமுதலியவற்றில் தோல்வியடைதல்.

குண்டுமணி kuṇṭu-maṇi, *n.* Corr. of குன்றிமணி.

குண்டுமரக்கால் kuṇṭu-marakkāl, *n.* <குண்டு[2]+. A grain measure of capacity = 8 *paṭi*; எட்டுப்படிகொண்ட ஓரளவு. (G. Tn. D. I. 238.)

குண்டுமரம் kuṇṭu-maram, *n.* <குண்டு[1]+. (Weav.) Lower half of the batten, the heavy round bottom piece of the batten of which the upper part is the *palakai*, which gives it its force; நெசவுத்தறியின் ஓர் உறுப்பு.

குண்டுமருந்து kuṇṭu-maruntu, *n.* <id.+. Bullet and powder, gunpowder; வெடிமருந்து.

குண்டுமல்லிகை kuṇṭu-mallikai, *n.* <id.+. Tuscan jasmine. See குடமல்லிகை. (மூ. அ.)

குண்டுமாலை kuṇṭu-mālai, *n.* <id.+. Necklace of beads; மணியாலமைந்த கழுத்தணிவகை. *Loc.*

குண்டுமாற்றுக்குழிமாற்று kuṇṭu-māṟṟu-k-kuḻi-māṟṟu, *n.* <குண்டு[2]+. [T. *kuṇḍamārpu.*] *Loc.* Lit., exchange of lands. 1. Exchange between families, of daughters in marriage; பெண்ணைக்கொடுத்துப் பெண்வாங்குகை. 2. Deceitful action; மோசடியான காரியம்.

குண்டுரம் kuṇṭuram, *n.* <id.+. Manure of cow-dung etc., as stored in a pit, dist. fr. *kuḷai-y-uram*; குழியிற்சேர்த்துவைக்கும் சாணமுதலிய உரம்.

குண்டுருட்டாய்க்கட்டு-தல் kuṇṭuruṭ-ṭāy-k-kaṭṭu-, *v. tr.* <குண்டு[1]+. 1. To tie anything en masse; திரளச்சேர்த்துக்கட்டுதல். 2. To tie up head to heel, as rolling one into a ball; ஒருவனுடைய தலைகால்களை ஒன்றுசேர்த்துத் திரளக் கட்டுதல். *Colloq.*

குண்டுரோசனை kuṇṭu-rōcaṉai, *n.* prob. id.+*rocanā*. An odoriferous root growing in circular masses; வாசனையும் உருண்டைவடிவுமுள்ள ஒருவகை மருந்துக்கிழங்கு. (மலை.)

குண்டுவட்டில் kuṇṭu-vaṭṭil, *n.* <குண்டு[2]+. A hollow dish; உட்குழிந்த வட்டில். (W.)

குண்டுளகரம் kuṇṭu-ḷakaram, *n.* <குண்டு[1]+. The Tamil letter ள, as beginning with a loop; சுழித்துத்தொடங்குவதாகிய பொது ளகரம். *Loc.*

குண்டூசி kuṇṭūci, *n.* <id.+ஊசி. Pin; தலைதிரண்டுள்ள ஊசி.

குண்டெழுத்தாணி kuṇṭeḻuttāṇi, *n.* <id. + எழுத்தாணி. Style with knob at the top, dist. fr. *maṭakkeḻuttāṇi*; தலைப்பக்கம் திரண்டுள்ள எழுத்தாணிவகை.

குண்டெழுத்து kuṇṭeḻuttu, *n.* <id.+. Bold round hand; திரண்டு தடித்த எழுத்து.

குண்டேறு kuṇṭēṟu, *n.* perh. id.+ஏறு-. A kind of fish; மீன்வகை. (W.)

குண்டை kuṇṭai, *n.* prob. id. 1. Bull, ox; எருது. வையம் பூண்கல்லா சிறுகுண்டை (நாலடி, 350). 2. Taurus, a sign of the zodiac; இடபராசி. (பிங்.) 3. That which is short and stout; குறுகித்தடித்தது. குண்டைக் குறட்பூதம் (தேவா. 944, 1). 4. Shortness; குறுமை. குண்டைக் கோட்ட குறுமுட்கள்ளி (அகநா. 184.) 5. A species of mimosa. See ஈகை², 1. (L.)

குண்டைச்சம்பா kuṇṭai-c-campā, *n.* <குண்டை+. A kind of *campā* paddy; சம்பா நெல்வகை. (W.)

குண்டோசனை kuṇṭōcaṉai, *n.* See தண்டு ரோசனை. (W.)

குண்டோதரன் kuṇṭōtaraṉ, *n.* <*kuṇḍa* + *udara*. 1. A short gluttonous goblin in the host of Śiva, having a capacious round belly; பெருவயிறும் குறுவடிவும் உடையனான சிவகணத்தவருள் ஒருவன். குண்டோதரனெனு நாமம் பூண்டு (திருவாலவா. 4, 22). 2. A stout big-bellied glutton; பெருந்தீனிக்காரன்.

குண்ணவாடை kuṇṇa-vāṭai, *n.* prob. குணக்கு+. North-east wind; வடகீழ்க்காற்று. குண்ணவாடை கூட்டினாலும் கூட்டும், கலைத்தாலும் கலைக்கும். *Loc.*

குண்ணியம் kuṇṇiyam, *n.* <*guṇya.* (Arith.) Multiplicand; பெருக்கப்படும் எண்.

குணக்காய்ப்பேசு-தல் kuṇakkāy-p-pēcu-, *v. intr.* <குணக்கு+. To talk perversely, advance captious argument; விதண்டாவாதஞ்செய்தல்.

குணக்கிராகி kuṇa-k-kirāki, *n.* <*guṇa* + *grāhin*. One who recognises and appreciates the good points only; நற்குணத்தையே கொள்பவன்.

குணக்கு¹ kuṇakku, *n.* prob. குட. 1. East; கிழக்கு. கரைபொரு தொடெடற் குணக்கும் (புறநா. 6, 3). 2. Crookedness, curvature; கோணல். காயின்வாலைக் குணக்கெடுக்கலாமா? 3. Crossness, opposition; எதிரிடை. குணக்குப்பண்ண. 4. Complication in sickness; வியாதி சிக்கலாய் முற்றுகை. அவனுக்கு உடம்பு குணக்காயிருக்கிறது. *Loc.*

குணக்கு²-தல் kuṇakku-, *5 v. tr.* Caus. of குணகு-. To bend; வளைத்தல். (W.)

குணக்குன்று kuṇa-k-kuṉṟu, *n.* <*guṇa*+. Lit., a mountain of good qualities. Person of noble character; நற்குணம் மிக்கவன்.

குணக்கேடன் kuṇa-k-kēṭaṉ, *n.* <id.+. Ill-natured person; நற்குணமற்றவன். இரங்காக் குணக்கேடன் (சைவச. ஆசா. 17).

குணக்கேடு kuṇa-k-kēṭu, *n.* <id.+. 1. Bad disposition, ill-nature; கெட்ட குணம். 2. Unfavourable symptom in disease; நோய் அசாத்தியமாக மாறும் நிலை.

குணகண்டி kuṇakaṇṭi, *n.* Indian jalap. See சிவதை. (மலை.)

குணகாங்கி kuṇakāṅki, *n.* See குணகாங்கியம். குணகாங்கி யென்னுங் கருநாடகச் சந்தமும் (யாப். வி. 96, பக். 490).

குணகாங்கியம் kuṇa-kāṅkiyam, *n.* prob. *Guṇa-gaṅga*. An ancient treatise on prosody in Kanarese; பழையதோரு கன்னட யாப்புநூல். குணகாங்கியமென்னுங் கருநாடகச்சந்தமேபோல மகடூஉ முன்னிலைத்தாய் (காரிகை, பாயிரவுரை).

குணகாரம் kuṇa-kāram, *n.* <*guṇa-kāra.* (Arith.) Multiplication; பெருக்கல். (குடா.)

குணகு¹-தல் kuṇaku-, *5 v. intr.* perh. குட. cf. குனுகு-. (W.) 1. To become bent or crooked; வளைதல். 2. To sink, faint, fade, droop; சோர்தல். 3. To be dejected; மனந்தளர்தல். 4. To feel uneasy, to be vexed; மனந்தடுமாறுதல்.

குணகு² kuṇaku, *n.* cf. *kuṇapa*. See குணங்கு.

குணகுணிபாவம் kuṇa-kuṇi-pāvam, *n.* <*guṇa* + *guṇī-bhāva*. State of inseparableness as an object and its attributes; பண்பும் பண்பியும்போலப் பிரியாமலிருக்கும் நிலை. அனல் வெம்மையும்போல் . . . குணகுணிபாவமாகி (சி. சி. 4, 6).

குணகோளார்த்தம் kuṇa-kōḷārttam, *n.* <குணக்கு + *gōla* + *ardha*. Eastern hemisphere; பூமியின் கிழக்குப்பாதிக்கோளம்.

குணங்கர் kuṇaṅkar, *n.* <குணங்கு-. Devil, goblin, evil spirit; பூதபிசாசம். திரண்டன குணங்கரீட்டம் (கந்தபு. முதனாட்பானு. 312).

குணங்காட்டு-தல் kuṇaṅ-kāṭṭu-, *v. intr.* <*guṇa*+. 1. To come out in one's true colours, reveal one's true character; இயற்கைக்குணத்தை வெளிப்படுத்துதல். 2. To show signs of cure, as diseases; வியாதியில் சொஸ்தக்குறிகாட்டுதல்.

குணங்கு¹-தல் kuṇaṅku-, *5 v. intr.* See குணகு-.

குணங்கு² kuṇaṅku, *n.* <குணகு. Devil, goblin; பூதபிசாசம். குணங்கினம்கானம்பாடி (கல்லா. 34, 4). (பிங்.)

குணங்குறி kuṇaṅ-kuṟi, *n.* <*guṇa*+. Form and attribute; characteristics; தன்மையும் வடிவும். குணங்குறியற் றின்பநிட்டை கூடவன்றே (தாயு. நின்றநிலை. 3).

குணசந்தி kuṇa-canti, *n.* <id.+. (Gram.) Sandhi or euphonic combination in Sanskrit of 'a' or 'ā' with 'i' and 'u' short or long, resulting respectively in 'ē' and 'ō,' as தேவேந்திரன், ஞானோதயம்; அ ஆ முன், இ ஈ வந்தால் அவ்விரண்டுங்கெட ஏகாரமும், உ ஊ வந்தால் அவ்வாறே ஓகாரமுந் தோன்றும் வடமொழிச் சந்தி. (நன். 239, உரை.)

குணசாகரர் kuṇa-cākarar, *n.* <*Guṇa-sāgara*. Commentator of Yāpparuṅkala-k-kārikai; யாப்பருங்கலக்காரிகையின் உரையாசிரியர்.

குணசாலி kuṇa-cāli, *n.* <*guṇa*+. Good and virtuous person, one of noble character; நற்குணமுள்ளவன்.

குணசீலன் kuṇa-cīlaṉ, *n.* <id.+. A man of noble character and actions; நற்குண நற்செயலுடையவன்.

குணசைவம் kuṇa-caivam, *n.* <id.+. (Śaiva.) A Śaiva sect which holds that salvation is for those who contemplate Śiva as having eight attributes and worship Him as His devoted slaves, one of 16 *caivam*, q. v.; பதினறுவகைச் சைவசமயங்களுள் சிவபிரானை எண்குணங்களுடையவராகத் தியானித்து அடிமைசெய்பவர்க்கே வீடு என்னுங் கொள்கையுள்ள சைவசமயம். (த. நி. போ. வாதிகள்சமயம், 200.)

குணஞ்ஞன் kuṇaññaṉ, *n.* <*guṇa-gña*. 1. One who understands and appreciates the good qualities of others; பிறர்குணங்களை அறிந்து மகிழ்பவன். 2. Pleasant, good-natured, agreeable person; one of sweet disposition; இனிய குணமுள்ளவன். *Colloq.*

குணட்டு[1]-தல் kuṇaṭṭu-, 5 *v.* perh. *ku-naṣṭa. tr.* To coax, wheedle, speak amorously, as a courtesan; மயக்கிப்பேசுதல். (J.)—*intr.* 1. To whine in jest; to speak saucily, as petted children; செல்லங்கொஞ்சுதல். (J.) 2. To caper about; குதித்து விளையாடுதல். (J.) 3. To fascinate, attract by fine dress, etc.; பகட்டுப்பண்ணுதல். *Loc.*

குணட்டு[2] kuṇaṭṭu, *n.* cf. கிணட்டு. Small bunch in a spike of grain or a cluster of grapes; கதிர் முதலியவற்றின் சிறுகொத்து. (J.)

குணத்திரயம் kuṇa-t-tirayam, *n.* <*guṇa*+. The three-fold fundamental qualities, viz., சாத்துவிகம், இராசதம், தாமதம்; மூவகையாகிய மூலகுணங்கள். குணத்திரயங் குலஞ்சு (மருதூ. 59).

குணத்துக்குவா-தல்[குணத்துக்குவருதல்] kuṇattukku-vā-, *v. intr.* <id.+. 1. To grow better, reform; சீர்ப்படுதல். 2. To recover health, as from illness; நோயினின்று சுகப்படுதல். 3. To yield, assent; இணங்குதல்.

குணத்தொகை kuṇa-t-tokai, *n.* <id.+. An appositional compound in which the first member stands in adjectival relation to the second; பண்புத்தொகை. (நன். 365.)

குணத்தொனி kuṇa-t-toṉi, *n.* <id.+. Twang of a bowstring; வில்லின் நாணோசை.

குணதத்துவம் kuṇa-tattuvam, *n.* <id.+. 1. Condition in which the Primordial Matter manifests in itself the three-fold division of primary qualities, *satva, rajas, tamas*, in equal proportion; விளங்காமல் நின்ற மூலப்பகுதி முக்குணமாய்ப் பகுப்படைந்து விளங்கிச் சமமாய் நின்ற நிலை. (சி. போ. பா. 2, 2, பக். 161). 2. The world in which the above condition prevails; குணதத்துவத்திற்குரிய உலகம்.

குணதரன் kuṇa-taraṉ, *n.* <id.+. 1. Person of noble character; நற்குணமுள்ளவன். குணதரனாகிய குசனும் (இரகு. வாகு. 1). 2. Sage, Ṛṣi; முனிவன். குணதரரே முனிமங்கையரே (திருநூற். 59).

குணதிசை kuṇa-ticai, *n.* <குணக்கு+. East; கிழக்கு. குணதிசை பாதநீட்டி (திவ். திருமாலை, 19).

குணதோஷம் kuṇa-tōṣam, *n.* <*guṇa*+. Virtue and vice; merits and demerits; நன்மை தீமைகள்.

குணநாற்பது kuṇa-nāṟpatu, *n.* <id.+. An ancient poem of 40 stanzas, not extant; நாற்பது பாடலாலாகிய இறந்துபட்ட ஒரு பழைய நூல். (தொல். பொ. 246, உரை.)

குணநிதி kuṇa-niti, *n.* <id.+. Lit., storehouse of good qualities. Person of noble character; நற்குணம் நிறைந்தவன்.

குணநூல் kuṇa-nūl, *n.* prob. id.+. An ancient treatise on the art of dancing; நாடகத்தமிழ்நூல்களுள் ஒன்று. (சிலப். 3, 12, உரை.)

குணப்படு-தல் kuṇa-p-paṭu-, *v. intr.* <id.+. 1. To change for the better; to reform; சீர்ப்படுதல். 2. To recover health, as from disease; வியாதியினின்று சுகமடைதல். 3. To improve, grow, thrive, as crops; செழிப்படைதல். (W.) 4. To repent, to become penitent; கழிவிரக்கங்கொள்ளுதல். *Chr.*

குணப்படுத்து-தல் kuṇa-p-paṭuttu-, *v. tr.* Caus. of குணப்படு-. 1. To make better, reform; சீர்ப்படுத்துதல். 2. To effect a cure, as of a disease; வியாதியை சௌக்கியப்படுத்துதல்.

குணப்பண்பு kuṇa-p-paṇpu, *n.* < *guṇa*+. (Gram.) Attributes, as qualities of objects, dist. fr. *toḻiṟ-paṇpu;* தன்மைகுறிக்கும் பண்புச் சொல். (சீவக. 11, உரை).

குணப்பிழை kuṇa-p-piḻai, *n.* <id.+. Bad temper; குணக்கேடு. (W.)

குணப்பெயர் kuṇa-p-peyar, *n.* <id.+. 1. (Gram.) Nouns of qualities, abstract nouns, as *கருமை, அழகு;* பண்பு குறிக்கும் பெயர்ச்சொல். (நன். 132.) 2. Nouns derived from abstract nouns, as *கரியன், அழகன்;* பண்பினடியாகப் பிறந்த பெயர்ச்சொல். 3. Names given by poets to persons on account of their special qualities; சிறப்பியல்புபற்றி மக்கட்குப் புலவரால் கொடுக்கப் பட்டு வழங்கும் பெயர். (பன்னிருபா. 147.)

குணபம் kuṇapam, *n.* <*kuṇapa.* 1. Corpse; பிணம். *கோழைய ரவரே யல்லாற் குணபம் வேறுலகத் துண்டோ* (பிரபோத. 31, 28). 2. cf. *kuṇapāśin.* Spirit supposed to haunt burning-grounds; சுடுகாட்டிலுள்ள பிசாசு. (பிங்.)

குணபலம் kuṇa-palam, *n.* Atees. See அதிவிடையம். (மலை.)

குணபாகம் kuṇa-pākam, *n.* <*guṇa*+ *bhāga.* 1. Favourable turn, as of a disease; அனுகூலமான நிலை. *வியாதி குணபாகமாயிருக்கிறது.* 2. Suitableness of preparation, as in medicine; ஏற்றபக்குவம். *மருந்தைக் குணபாகமாகச் செய்க.* *Colloq.*

குணபாசி kuṇapāci, *n.* <*kuṇapāśin.* Evil spirit, demon, as devouring corpses; பிணந் தின்னும் பிசாசு. *குணபாசி . . . நடித்து நின்றயின் றன புறணி* (அரிசமய. பரகா. 37).

குணபாடல் kuṇa-pāṭal, *n.* <*guṇa*+. See குணவாகடம். (W.)

குணபேதம் kuṇa-pētam, *n.* <id.+. 1. Change of disposition for the worse, degeneracy; குணம் கெடுகை. 2. Unfavourable symptom of a disease; வியாதி அசாத்தியமாக மாறும் நிலை. (W.)

குணம்[1] kuṇam, *n.* <*guṇa.* 1. Attribute, property, quality; பொருளின் தன்மை. *அதன் குணங்கருதி* (தொல். சொல். 416). 2. Character; ஒழுக்கத்தன்மை. *மாண்ட குணத்தொடு மக்கட்பே றில் லெனினும்* (நாலடி, 56). 3. Fundamental quality; சாத்துவிக இராசத தாமதமாகிய மூலகுணங்கள். 4. Opinion, belief; கொள்கை. (திவா.) 5. (Rhet.) Inherent excellence of style in a poetic composition; காப்பியத்தைச் சிறப்பிக்கும் செறிவு தெளிவு முதலிய தன்மை. *அவற்றுள் சொற்சுவை குணம் அலங் காரமென இருவகைத்து* (குறள், 420, உரை). 6. Favourableness; அனுகூலம். *காரியம் குணமாயிற்று.* 7. Convalescence; சௌக்கியம். *வியாதி குணமாயிற்று.* 8. Excellence, merit, virtue; மேன்மை. *Colloq.* 9. Soundness of intellect; புத்தித்தெளிவு. (W.) 10. Colour; நிறம். (பிங்.) 11. Rope, cord; கயிறு. (திவா.) 12. Bow-string; வில்லின் நாண். *தன்சிலை . . . குணத்தினிசை காட்டினன்* (கந்தபு. அமரர்சிறை. 44). 13. See குணவிரதம். *குணநூற்றுக்கோடியும்* (சீவக. 2818).

குணம்[2] kuṇam, *n.* cf. *kuṭa.* Water-pot, pitcher; குடம். (பிங்.)

குணமணி kuṇa-maṇi, *n.* <*guṇa*+. Person of excellent character; நற்குணமுள்ளவன்.

குணமா-தல் kuṇam-ā-, *v. intr.* <id.+. To become cured, healed, restored to health; சௌக்கியமாதல்.

குணமாக்கு-தல் kuṇam-ākku-, *v. tr.* Caus. of *குணமா-.* 1. To cure, heal, restore to health; சௌக்கியப்படுத்துதல். 2. To reform, amend, correct; சீர்திருத்துதல். (W.)

குணமுள்ளவன் kuṇam-uḷḷavaṉ, *n.* <id. +. Person of noble character; நற்குணம் உடையவன்.

குணருத்திரர் kuṇa-ruttirar, *n.* <id.+. (Śaiva.) The Lord of Relative Destruction who functions in the region of *kuṇa-tattuva;* குணதத்துவ நிலையராய் அவாந்தர சங்காரத்தொழிலைச் செய்யும் உருத்திரர். (சதாசிவ. 77).

குணலி kuṇali, *n.* cf. *kuṇḍalī.* Gulancha. See சீந்தில். (மலை.)

குணலை[1] kuṇalai, *n.* <*kuṇ.* cf. குணலம்[1]. 1. A dance attended with shouting; ஆரவாரத்துடன் நடிக்குங் கூத்து. *அந்தணர் குணலை கொள்ள* (திருவால வா. 4, 22). 2. Warrior's shout of triumph, valour, or defiance; வீராவேசத்தாற் கொக்கரிக்கை. (W.)

குணலை[2] kuṇalai, *n.* cf. *kūṉ.* Bending of the body through bashfulness; நாணத்தால் உடல்வளைகை. *கூச்சமுமாய்ச் சற்றே குணலையுமாய்* (பணவிடு. 310).

குணலையிடு-தல் kuṇalai-y-iṭu-, *v. intr.* <குணலை[1]+. (W.) 1. To shout; கொக்கரித்தல். 2. To dance and shout; இரைந்து கூத்தாடுதல்.

குணவதம் kuṇa-vatam, *n.*<*guṇa*+*vrata.* 1. See குணவிரதம். 2. Good qualities, nobility; நற்குணம். *களியுணர் வினைக் குணவதங் கொளுத்த லாமோ* (சீவக. 378).

குணவதன் kuṇavataṉ, *n.* <id.+. 1. Person of noble character; நற்குணமுடையவன். *பரமன் குணவதன் பாத்தி லொளியோன்* (சிலப். 10,

181). 2. One who observes *kuṇa-viratam;* குண விரதத்தை அனுட்டிப்பவன். (சிலப். 10, 181, உரை.)

குணவதி kuṇavati, *n.* <*guṇa-vatī.* Woman of noble character; நற்குணமுள்ளவள்.

குணவந்தன் kuṇavantaṉ, *n.* <*guṇa-vantaḥ* nom. pl. of *guṇa-vat.* See குணவான்.

குணவாக்கு kuṇa-vākku, *n.* <*guṇa*+. Peculiar character; விசேஷமாயமைந்த குணம்.

குணவாகடம் kuṇa-vākaṭam, *n.* <id.+. A medical treatise on the symptoms of diseases; நோய்க்குறிகளைப்பற்றிக் கூறும் ஒரு வைத்தியநூல். *பேர்பெறுங் குணவாகடஞ் சோதித்து* (அறப். சத. 51).

குணவாகுபெயர் kuṇa-v-āku-peyar, *n.* <id.+. (Gram.) Noun literally signifying abstract quality used figuratively to denote the concrete object having that quality, as *நீலஞ்சூடினன்;* பண்புப்பெயர் பண்பிக்கு ஆகிவருவது.

குணவான் kuṇavāṉ, *n.* <*guṇa-vān* nom. sing. of *guṇa-vat.* Man of noble character; நற்குணமுள்ளவன்.

குணவியது kuṇaviyatu, *n.* <*guṇa.* That which is superior; மேன்மையானது. *குணவியது ஒன்ற உட்பட நிறை* (S.I.I. ii, 431).

குணவிரதம் kuṇa-viratam, *n.* <id.+. (Jaina.) Vow of secondary importance, dist. fr. *makā-viratam;* மகாவிரதத்துக்கு அடுத்தபடியாகக் கொள்ளும் ஒரு சைனநோன்பு. (சீவக. 2818, உரை.)

குணவீரபண்டிதர் kuṇa-vīra-paṇṭitar, *n.* <id.+. The author of Nēmi-nātam, who lived in the 13th c.; 13-வது நூற்றாண்டிலிருந்த நேமிநாத நூலாசிரியர்.

குணன் kuṇaṉ, *n.* <id. Person possessing attributes, qualities, used usually in compounds, as *எண்குணன்;* குணமுள்ளவன்.

குணனம் kuṇaṉam, *n.* <*guṇana.* (Math.) Multiplication, one of *aṭṭa-kaṇitam,* q. v.; அட்டகணிதத்துள் ஒன்றாகிய பெருக்கல். (திவா.)

குணனீயம் kuṇaṉīyam, *n.* <*guṇanīya.* (Arith.) Multiplicand; பெருக்கப்படுந்தொகை.

குணாக்கரநியாயம் kuṇākkara-niyāyam, *n.* <*ghuṇa + akṣara + nyāya.* Illustration of letters formed by chance by worm-mark on wood, leaf of a book, etc., to denote any fortuitous or chance occurrence; மரம் புஸ்தகம் முதலியவற்றில் புழுவின் அரிப்பு எழுத்தாதல்போலத் தற்செயலாக நேர்வதைக்குறிக்கும் நெறி. (தண்டபொருண்மாலை.)

குணாகுணம் kuṇākuṇam, *n.* <id.+*a-guṇa.* Good and evil; merit and defect; நன்மையுந் தீமையும்.

குணாட்டம் kuṇāṭṭam, *n.* perh. *kuṇapa*+ஆட்டம். A kind of masquerade dance; ஒருவகை வரிக்கூத்து. (சிலப். 3, 13, உரை, பக். 89.)

குணாதிசயம் kuṇāticayam, *n.* <*guṇa + atiśaya.* Excellence of character, qualities; predominant characteristics; குணவிசேடம்.

குணாதீதம் kuṇātītam, *n.* <id.+*atīta.* That which is absolute, above all attributes, as referring to God; குணங்கடந்தது.

குணாது kuṇātu, *n.* <குணக்கு. That which is in the east; கிழக்கிலுள்ளது. *குணாஅது கரைபொரு தொடுகடல்* (புறநா. 6, 3).

குணாம்பி kuṇāmpi, *n.* <குணாம்பு-. Ludicrous, comical, droll fellow; buffoon; கோமாளி. (W.)

குணாம்பு[1]**-தல்** kuṇāmpu-, *5 v. intr.* To speak insultingly; to taunt; to use invective, irony, sarcasm; பகடிபேசுதல். (W.)

குணாம்பு[2] kuṇāmpu, *n.* <குணாம்பு-. Merry talk, drollery, idle joke; பகடி. (W.)

குணாலங்கிருதன் kuṇālaṅkirutaṉ, *n.* <*guṇa + alaṅ-kṛta.* One adorned with good qualities; நற்குணமே அலங்காரமாகவுடையவன்.

குணாலம்[1] kuṇālam, *n.* cf. குணலை[1]. 1. Riotous dancing; ஒருவகை மகிழ்ச்சிக்கூத்து. *குணாலமாடித் திரிமினே* (திவ். பெரியாழ். 4, 6, 9). 2. Warrior's shout of triumph; வீராவேசத்தாற் கொக்கரிக்கை. *குணாலமிடு சூரன்* (திருப்பு. 185).

குணாலம்[2] kuṇālam, *n.* A bird; ஒருபறவை. *காகங் குணாலஞ் சிலம்புமே* (கம்பரா. வரைக்காட்சி. 151).

குணாலயன் kuṇālayaṉ, *n.* <*guṇa + ā-laya.* One who is the abode of all virtues; குணங்களுக்கு இருப்பிடமானவன்.

குணாலை kuṇālai, *n.* See குணலை[1]. (சிலப். 3, 13, உரை, பக். 89.)

குணாளன் kuṇāḷaṉ, *n.* <*guṇa*+ஆள்-. Person of noble character; நற்குணமிக்கவன். *ரட்சிக்குங் குணாளனே* (கவிகுஞ். 10).

குணி[1] kuṇi, *n.* <*guṇin.* 1. Object, as possessing attributes; பண்பி. *குணத்தின்பெயர் குணிமேல் நின்றது* (குறள், 53, உரை). 2. One endowed with good qualities; நற்குணமுடையவன்.

குணி[2] kuṇi, *n.* <*kuṇi.* 1. That which is lame; முடமானது. (சூடா.) 2. Person with a withered hand, useless arm; சோத்தைக்கையன். *கஞ்சன் குணி கூனன்* (சைவச. ஆசா. 10).

குணி³-த்தல் kuṇi-, *11 v. tr.* <*guṇ.* 1. To estimate, calculate, compute, reckon; கணித்தல். *அவர்குழுக் குணிக்கின் (கந்தபு. அசுரர்தோ. 25).* 2. To reflect, consider; ஆலோசித்தல். *கொணரும் வகை யாவதெனக் குணிக்கும் வேலை (கம்பரா. திருவவ. 38).* 3. To determine, define, limit; வரையறுத்தல். (திவா.) 4. (Arith.) To multiply; பெருக்குதல்.

குணிதம் kuṇitam, *n.* <*guṇita.* 1. (Arith.) Product of multiplication; பெருக்கிவந்த தொகை. 2. fold, as in two-fold; மடங்கு. *இவற்றி னிரு குணிதஞ் செய்திடுக (சைவச. பொது. 16).*

குணிப்பு kuṇippu, *n.* <குணி-. 1. Estimate, reckoning; அளவு. *சேனையின் குணிப்பிலாமையும் (கம்பரா. பிணிவீ. 23).* 2. Investigation, consideration; ஆராய்ச்சி. *குணிப்பின்றி . . . பணித்த பிரான் (திருநூற். 23).* 3. Esteem, regard; மதிப்பு. *குணிப்பான மனிதன். Loc.*

குணிப்பெயர் kuṇi-p-peyar, *n.* <குணி¹ +. (Gram.) Concrete noun, dist. fr. *kuṇa-p-peyar*, as *கரியன்;* பண்பியைக்காட்டும் பெயர்ச்சொல்.

குணில் kuṇil, *n.* cf. *kuṇ.* 1. Short stick, cudgel; குறுந்தடி. *கரும்பு குணிலா மாங்கனி யுதிர்க்கும் (ஐங்குறு. 87).* 2. Drum-stick; பறையடிக்குங் கடிப்பு. *குணில்பாய் முரசி னிரங்கு மருவி (புறநா. 143, 9).* 3. Sling; கவண். (பிங்.)

குணு kuṇu, *n.* <*ghuṇa.* Worm, maggot; புழு. (அக. நி.)

குணுக்கம் kuṇukkam, *n.* <குணுங்கு-. Suffering, distress; வருத்தம். (யாழ். அக.)

குணுக்கன் kuṇukkaṉ, *n.* <குணு onom. One who talks through his nose; மூக்கால் பேசுவோன். (யாழ். அக.)

குணுக்கு¹-தல் kuṇukku-, *5 v. tr.* (யாழ். அக.) 1. To bend; வளைத்தல். 2. To powder; நுணுக்குதல்.

குணுக்கு² kuṇukku, *n.* prob. குணுக்கு-. 1. An ear-ornament. See கடிப்பிணை. (பிங்.) 2. Ring of lead or brass suspended in the lobe of the ear to stretch it; செவி வடித்தற்கு இடும் குதம்பை. (சினேந். 109, உரை.) 3. Lead for a fish-net; மீன்வலையின் ஈயக்குண்டு. (W.) 4. Silver; வெள்ளி. (W.) 5. A kind of sweet-meat; பணியாரவகை. *Loc.*

குணுக்குத்தடி kuṇukku-t-taṭi, *n.* <குணுக்கு +. Club or heavy stick with an iron ferrule; இருப்புப்பூணிட்ட கனத்த கழி. (W.)

குணுகு-தல் kuṇuku-, *5 v. intr.* <T. *goṇugu.* cf. குணகு-. To caress, prattle, talk pleasantly; கொஞ்சுதல். *குணுகியிட்டனை பொருள் பறித்து (திருப்பு. 676).*

குணுகுணு-த்தல் kuṇu-kuṇu-, *11 v. intr.* <குணுகுணு onom. (W.) 1. To speak through the nose; மூக்கால்பேசுதல். 2. To whine, murmur, grumble; முணுமுணுத்தல்.

குணுகுணெனல் kuṇu-kuṇeṉal, *n.* Onom. expr. signifying whimpering, whining; முணுமுணுத்தற்குறிப்பு. (W.)

குணுங்கர் kuṇuṅkar, *n.* prob. குணுங்கு-. 1. Base, vile persons; இழிந்தோர். 2. Low caste men; புலையர். *கல்வித்தோ றின்னுங் குணுங்கர்காய் (நாலடி, 322).* (திவா.) 3. Drummers; தோற்கருவியாளர். (திவா.) 4. Lute-players; தமிலுவர். (சூடா.)

குணுங்கு¹-தல் kuṇuṅku-, *v. intr.* cf. குணகு-. To suffer; to be in distress; வருந்துதல். (யாழ். அக.)

குணுங்கு² kuṇuṅku, *n.* <குணுங்கு-. 1. Devil, goblin; பேய். (உரி. நி.) 2. [M. *kuṇukku-maṇam.*] Smell of cattle, butter, etc.; கொச்சை நாற்றம். *வெண்ணெ யளைந்த குணுங்கும் (திவ். பெரியாழ். 2, 4, 1).*

குணைவண்டு kuṇai-vaṇṭu, *n.* A kind of beetle; வண்டுவகை. *Loc.*

குத்தகை kuttakai, *n.* <U. *guttā.* [T. Tu. *gutta*, K. *guttige*, M. *kuttaka.*] 1. Contract of lease; கவுலொப்பந்தம். *பொழில் குத்தகையாத்தந்தீர் (குமர. பிர. திருவாரூர். 27).* 2. Lease amount; குத்தகைத்தொகை.

குத்தகைக்கடை-த்தல் kuttakaikkaṭai-, *v. tr.* <குத்தகைக்கு + அடை²-. To let out, farm, lease out, as land; கவுலாகக் கொடுத்தல்.

குத்தகைக்காரன் kuttakai-k-kāraṉ, *n.* <குத்தகை +. Contractor, lessee; கவுல் வாங்குபவன்.

குத்தகைச்சரக்கு kuttakai-c-carakku, *n.* <id. +. Goods secured by contract; ஒப்பந்தஞ் செய்த சரக்கு.

குத்தகைச்சீட்டு kuttakai-c-cīṭṭu, *n.* <id. +. Lease deed; கவுல் பத்திரம்.

குத்தகைதார் kuttakai-tār, *n.* <id. +. See குத்தகைக்காரன்.

குத்தகைதாரன் kuttakai-taraṉ, *n.* <id. +. See குத்தகைக்காரன்.

குத்தகைப்பொருள் kuttakai-p-poruḷ, *n.* <id. +. Money payable by a lessee for the lease; குத்தகைக்கு ஒப்பந்தப்படிக் கட்டவேண்டிய பொருள்.

குத்தகைமாறுதல் kuttakai-māṟutal, *n.* <id.+. Expiry of the period of lease; குத்தகைக் காலம் முடிவுபெறுகை. *Loc.*

குத்தகையெடு-த்தல் kuttakai-y-eṭu-, *v. tr.* <id.+. To obtain a contract of lease; குத்தகைக்கு வாங்குதல்.

குத்தம் kuttam, *n.* cf. *kakud-vat.* Bull; எருது. (பிங்.)

குத்தரசம் kuttaracam, *n.* Asafoetida; பெருங்காயம். (மூ. அ.)

குத்தல் kuttal, *n.* <குத்து-. 1. Internal pain, aching, throbbing; உடம்பின் உள்நோவு. *உடம்பிற் குத்தலுங் குடைச்சலும் பொறுக்கமுடியவில்லை.* 2. Hitting, wounding; மனம் நோவச்செய்கை. *அவன் பேச்சு எப்பொழுதும் குத்தல்தான்.* 3. Inauspicious position, as of a house opposite to a street, a well opposite to a doorway; தெருவிற்கு எதிராக வீடு அமைந்திருப்பது முதலிய குற்றம். 4. Land or site exposed to the dash of water-currents; நீர்க்குத்தலான இடம். 5. See குத்தலரிசி. (இந்துபாக. 54.)

குத்தலரிசி kuttal-arici, *n.* <id.+. Husked rice; குற்றித்தீட்டிய அரிசி. *குத்தலரிசி இருநாழியும்* (S.I.I. iii, 96).

குத்தன் kuttaṉ, *n.* <*gupta.* 1. Protector; காப்பவன். *விசுவ குத்தனுகி* (சேதுபு. சேதுயாத். 13). 2. A Vaiśya title; வைசியர் பட்டப்பெயர். *அரதன குத்த னென்னும் . . . பெருங்குடி வணிகன்* (செவ்வந்திப்பு. தாயான. 8). 3. King of the Gupta family; குப்தவமிசத்து அரசன். (கலிங். 319, புதுப்.)

குத்தா kuttā, *n.* A herring. See குத்துவா.

குத்தாங்கல் kuttāṅ-kal, *n.* <குத்து-+ஆம் +. Stone or brick laid upright on edge; செங்குத்தாக வைக்குங் கல் அல்லது செங்கல்.

குத்தாணி kuttāṇi, *n.* <id.+. A long needle with a wooden handle; மரக்கைப்பிடியமைந்து நீண்ட ஊசிவகை.

குத்தாமற்குத்து-தல் kuttāmaṟ-kuttu-, *v. tr.* <id.+. To make a covert, sarcastic hit at a person; குறிப்பாகக் குற்றத்தைச் சொல்லிக் காட்டுதல். *Colloq.*

குத்தார்க்கு kuttārkku, *n.* <id.+ஆர்க்கு. Palmyra withe or cord used for stitching with *kuttūci*; குத்தூசியால் வாங்கித் தைக்கும் பனைமட்டைநார்.

குத்தாலம் kuttālam, *n.* <*kuddāla.* Holy mountain ebony. See திருவாத்தி. (மலை.)

குத்தாலா kuttālā, *n.* Christmas rose. See கடுரோகிணி. (மலை.)

குத்தாளை kuttāḷai, *n.* A paddy growing only with the help of rain; மானவாரியாக விளையும் நெல்வகை. (G. Tj. D. i, 95)

குத்தி[1] kutti, *n.* <குற்றி. See குற்றி. *Loc.*

குத்தி[2] kutti, *n.* <குத்து-. 1. Iron probe to test the contents of a sack, as of grain, sugar, etc.; கோணிமூட்டையினின்றும் அரிசிமுதலியவற்றைக் குத்தியெடுக்குங் கருவி. 2. Coulter of a plough; கலப்பைக்கூர். (செங். 4, 212.)

குத்தி[3] kutti, *n.* <*gupti.* Restraint, as in thought, speech or deed; திரிகரண அடக்கம். *குற்றம்விட்டார் குத்தி மூன்றுடையார்* (திருநூற். 75).

குத்தி[4] kutti, *n.* 1. Bottle; குப்பி. *குத்தியிலரக்குங் கள்ளும்* (குற்று. குற. 118, 3). 2. Cruet, vial for oil or ointment; எண்ணெய் வைத்தற்குதவுஞ் சிறுகுடுவை. *Loc.*

குத்தி[5] kutti, *n.* prob. *gōtrā.* Earth, ground, soil; மண். (சூடா.)

குத்தி[6] kutti, *n.* <U. *kushtī.* Wrangle; மாறுபாடு. *குத்திபடும் வாதுபொரு ளொத்த மருங்கினுள்* (காளத். உலா, 427).

குத்திக்காட்டு-தல் kutti-k-kāṭṭu-, *v. tr.* <குத்து-+. To wound one's feelings by bluntly pointing out his weakness; ஒருவன் குற்றத்தைச்சுட்டிக்காட்டி அவன் மனத்தைப் புண்படச்செய்தல்.

குத்திக்கொல்லன் kutti-k-kollaṉ, *n.* prob. *gupti*+T. *golla.* A person with the *ciṅkāṇi* bow employed to carry treasure; ஆயுதபாணியாய்ப் பொக்கிஷங்கொண்டு செல்பவன். (J.)

குத்திச்செருப்பு kutti-c-ceruppu, *n.* <குதி +. Shoes with thick soles; குதியிற் கனமுள்ள செருப்பு. (W.)

குத்திடி kuttiṭi, *n.* perh. குத்து-+இடி[2]-. 1. A genus of sea-fish, *Trachynotus;* கடல்மீன்வகை. 2. A sea-fish, more or less golden, attaining 20 in. in length, *Trachynotus ovatus;* பொன்னிறங் கொண்ட கடல்மீன்வகை.

குத்திப்பிடுங்குதல் kutti-p-piṭuṅku-, *v. intr.* <id.+. To have a tendency to vomit; வாந்திசெய்யவருதல். *சோற்றைக்கண்டால் அவனுக்குக் குத்திப்பிடுங்குகிறது.* *Colloq.*

குத்திப்பேசு-தல் kutti-p-pēcu-, *v. tr.* <id. +. To make a cutting remark; நோவும்படி ஒருவரைச்சுட்டிப்பேசுதல். *Colloq.*

குத்தியள-த்தல் kutti-y-aḷa-, *v. tr.* <id.+. To measure by diving the measure deep into the grain; அளவுகருவியைத் தானியத்திற் பாய்ச்சியளத்தல். *Colloq.*

குத்தியோட்டம் kutti-y-ōṭṭam, *n.* <id.+. Fulfilment of a vow by going round a temple with sharp spikes thrust on the sides; இரண்டு விலாப்பக்கங்களிலும் கூரான கம்பிகளைக் குத்திக் கொண்டு கோயிலை வலம்வரும் ஒரு பிரார்த்தனை. *Loc.*

குத்திரக்காரன் kuttira-k-kāraṉ, *n.* <*kṣudra*+. Deceitful, crafty fellow; வஞ்சகன்.

குத்திரப்பேச்சு kuttira-p-pēccu, *n.* <id.+. Sarcastic language, cutting speech; இகழ்ந்துரைக்குஞ் சுடுசொல்.

குத்திரம்[1] kuttiram, *n.* <*kṣudra*. 1. Deceit, guile, craftiness; வஞ்சகம். (திவா.) 2. Vileness, baseness; இழிவு. *குத்திரமெய்ப் புற்றகத்து* (தாயு. எங்காட். அன்புநிலை. 4). 3. Sarcasm, irony, cutting speech or allusion, insinuation; ஏளனச்சொல். (W.) 4. Cruelty, inhumanity; குரூரம். (W.)

குத்திரம்[2] kuttiram, *n.* <*ku-dhra*. Hill, mountain; மலை. (பிங்.)

குத்திரம்[3] kuttiram, *n.* cf. *kaṭu-tiktaka*. Sunn-hemp. See சணல். (மலை.)

குத்திரவித்தை kuttira-vittai, *n.* <*kṣudra*+. 1. Craftiness, subtlety; knavery; தந்திரம். 2. Sorcery, black magic; சூனியவித்தை.

குத்திருமல் kuttirumal, *n.* <குத்து-+இருமல். Whooping cough, *Pertussis;* க்க்குவானிருமல். (M. L.)

குத்திலை kuttilai, *n.* <id.+இலை. Cup made of leaf; தொன்னை. *Loc.*

குத்தினி kuttiṉi, *n.* <U. *khutnī*. [Mhr. *khutanī*.] A kind of striped silk; ஒருவகைப் பட்டுச்சீலை. (W.)

குத்தீட்டி kuttīṭṭi, *n.* <குத்து-+ஈட்டி. Poniard; ஈட்டி விசேடம். (W.)

குத்து[1]**-தல்** kuttu-, *5 v.* cf. குற்று-. *tr.* 1. To puncture, pierce, bore, perforate; ஊசி முதலியவற்றால் துளையிடுதல். *உன்னைக் காதுகுத்த* (திவ். பெரியாழ். 2, 3, 1). 2. To stab, wound; ஆயுதங்களாற் குத்துதல். 3. To sew; தைத்தல். *பூம்புன லுரையும் புரையக் குத்தி* (பெருங். வத்தவ. 12, 48). 4. To gore; கொம்பினால் முட்டுதல். *மாடு குத்திற்று.* 5. To strike with the fist, cuff, buffet, box; முஷ்டியினாற் குத்துதல். *குத்த மோதை* (கம்பரா. வாலிவ. 43). 6. To insert punctuation marks, to draw a line of dots; புள்ளி குத்துதல். (W.) 7. To stamp, impress; முத்திரை குத்துதல். 8. To pound, as in a mortar; உலக்கையால் இடித்தல். 9. To ram down, as in a gun; துப்பாக்கி முதலியன கெட்டித்தல். (W.) 10. To pick off, pluck, as young coconuts; பறித்தல். *குரும்பை குத்தினன்.* (J.) 11. To remove; களைதல். (பிங்.) 12. To peck, strike with beak, as a stork, a crow; பறவை கொத்துதல். 13. To feed on, pick up, as a bird; தின்னுதல். *கானக்கோழி கதிர்குத்த* (பொருந. 222). 14. To plant, set, fix in the ground; ஊன்றுதல். *பூந்தலைக் குந்தங் குத்தி* (முல்லைப். 41). 15. To set on edge, as bricks in arching, terracing; செங்கல் முதலியவற்றைச் செங்குத்தாக வைத்தல். *கல்லைக் குத்திக்கட்டு.* 16. To dig, break up, hollow out; கிண்டுதல். *வையை கொதித்தகன் கரை குத்தி* (திருவிளை. விடை. 10). 17. To make cutting remarks; to use wounding words; சுடுசொற்சொல்லுதல். *அவனை அடிக்கடி குத்தாதே.* 18. To pour out, as a liquid, in small quantities; சிறுக வார்த்தல். *Colloq.* 19. To afflict, injure; வருத்துதல். *அவன் செய்தபாவம் அவனைக் குத்துகிறது.* 20. To thwart, defeat, as a design; to oppose, as a measure or scheme; தடைசெய்தல். (W.)—*intr.* 1. To pain, ache, as the head; தலைமுதலியன குத்துநோவெடுத்தல். 2. To puke, vomit, belch up; எதிர்க்கெடுத்தல். *உண்டசோறு நெஞ்சிற் குத்துகிறது.*

குத்து[2] kuttu, *n.* <குத்து-. [T. *guddu*, K. M. Tu. *kuttu*.] 1. Blow with the fist, cuff, buffet, box; கைமுட்டியால் தாக்கும் இடி. *கைக்குத்தது படலும்* (கம்பரா. முதற்போ. 176). 2. Thrust, stab, puncture, prick, incision, goading; ஈட்டி முதலியவற்றால் தாக்குகை. 3. Pounding, as in a mortar; உரலிற் குத்துகை. 4. Dot, point, stop, punctuation mark; புள்ளி. 5. Acute pain, twinge, ache; நோவு. *தலைகுத்தித் தீர்வு சாத்தற்கு* (வள்ளுவமா. 11). 6. Handful; பிடி. *ஒருகுத்துச் சோறு.* 7. Perpendicularity, steepness; செங்குத்து. 8. Inauspicious position, as of a house opposite to a street, or a well opposite to a doorway; தெருமுதலியவற்றின் பாய்ச்சல்.

குத்துக்கட்டை kuttu-k-kaṭṭai, *n.* <id.+. Log of wood planted, as a prop; ஒன்றைத்தாங்குவதற்கு நட்டு நிறுத்தப்படும் கட்டை.

குத்துக்கம்பி kuttu-k-kampi, *n.* <id.+. Wire used to pierce the ear or nose; காதுமுதலியன குத்துங் கம்பி.

குத்துக்கம்பு kuttu-k-kampu, *n.* <id.+. Stick with a sharp end; நுனி கூர்மையான கழி.

குத்துக்கரணம் kuttu-k-karaṇam, *n.* perh. குட்டி+. Somersault; குட்டிக்கரணம். (W.)

குத்துக்கரந்தை kuttu-k-karantai, *n.* prob. குத்து+. A species of fleabane, *Erigeron obliquum;* செடிவகை. (W.)

குத்துக்கல் kuttu-k-kal, *n.* <id.+. 1. Stone standing on edge; செங்குத்தான கல். 2. Bricks placed on edge, as in arching, terracing; செங்குத்தாகவைத்துக்கட்டுஞ் செங்கல். 3. Stone marking the depth of water in a tank; ஏரிநீரின் ஆழத்தைக்காட்டும் அளவுகல்.

குத்துக்கழி kuttu-k-kaḻi, *n.* <id.+. Short stout stakes planted on either side of a topless cart; கட்டைவண்டியின் பாரில் இருபக்கத்திலும் நடும் கழி.

குத்துக்காயம் kuttu-k-kāyam, *n.* <id.+. Incised wound, stab; ஆயுதங்கொண்டு குத்துவதனால் உண்டாகிய புண்.

குத்துக்காரி kuttu-k-kāri, *n.* <id.+. Woman whose work is to pound paddy, lime etc.; கூலிக்கு நெல்முதலியன குற்றுபவள். *Colloq.*

குத்துக்காரை[1] kuttu-k-kārai, *n.* <id.+ *காரை*[1]. A small species of *kārai* shrub; காரைச் செடிவகை. (W.)

குத்துக்காரை[2] kuttu-k-kārai, *n.* <id.+ *காரை*[2]. Mortar mixed and pounded; குற்றிய கலவைச் சுண்ணாம்பு.

குத்துக்கால் kuttu-k-kāl, *n.* <id.+. 1. Upright stand of a frame, as of a car; side post; support, as of a roof; தாங்கு கால். (C. E. M.) 2. Upright post of a loom; நெசவுத்தறியின் ஓர் உறுப்பு. (M. M. 41.) 3. Obstruction, impediment, hindrance; தடை. *பணி குத்துக்காற்படாது செய்விப்பது* (T. A. S. i, 6).

குத்துக்காலிடு-தல் kuttu-k-kāl-iṭu-, *v. intr.* <id.+. To sit upright with folded legs; காலைக் குத்திட்டு உட்கார்தல்.

குத்துக்குடைச்சல் kuttu-k-kuṭaiccal, *n.* <id.+. Pinching or shooting moving pain, as from rheumatism; வாயுவால் உண்டாம் நோவு.

குத்துக்குநில்-தல்[குத்துக்குநிற்றல்] kuttukku-nil-, *v. intr.* <id.+. 1. To buffet and oppose; to contend; to contest hotly; எதிர்த்து நிற்றல். *உண்பான் உடுப்பான் சிவப்பிராமணன் குத்துக்கு நிற்பான் வீரமுஷ்டி.* 2. To haggle, as in purchases; வாதாடுதல். *Colloq.*

குத்துக்குளம்பு kuttu-k-kuḷampu, *n.* <id. +. Hoof of a horse or an ox, slightly vertical, as indicative of its high speed in running; குதிரைமுதலிய விலங்கின் நெட்டான குளம்பு. (W.)

குத்துக்கூலி kuttu-k-kūli, *n.* <*குத்து-* +. Wages for husking paddy; நெல்முதலியவை குற்றுவதற்குக் கொடுக்குங் கூலி.

குத்துக்கொம்பு kuttu-k-kompu, *n.* <*குத்து* +. Straight, erect horn; விலங்கின் நேர்கொம்பு.

குத்துக்கோரை kuttu-k-kōrai, *n.* <id.+. Wet-land sedge, ***Cyperus compressus;*** கோரை வகை. (W.)

குத்துக்கோல் kuttu-k-kōl, *n.* <*குத்து-* +. 1. Goad; தாற்றுக்கோல். 2. Elephanthook; பரிக்கோல். (*திருக்கோ.* 111, *உரை.*) 3. Pike-staff; முனையிற் கூரிய இரும்புள்ள கோல். (*சிலப்.* 16, 142, *அரும்.*)

குத்துச்சண்டை kuttu-c-caṇṭai, *n.* <id. +. See குத்துப்போர், 2.

குத்துச்செடி kuttu-c-ceṭi, *n.* prob. *குத்து* +. Low shrub; சிறுசெடி.

குத்துண்(ணு)-தல் kuttuṇ-, *v. intr.* <id. +. To stand upright; செங்குத்தாக நிற்றல். *இறுவரைபோலக் குத்துண்டு நிற்கும் இருகரை* (*பரிபா.* 7, *உரை*).

குத்துணி kuttuṇi, *n.* <id.+*உண்-*. (W.) 1. One who has been stabbed; குத்துப்பட்டவன். 2. A scorn to persons, despised person; இழிவுபட்டவன்.

குத்துத்திராய் kuttu-t-tirāy, *n.* <id.+. Wild Indian chickweed, edible herb, *Mollugo stricta;* கீரைவகை. (M. M. 902).

குத்துப்பகன்றை kuttu-p-pakaṉṟai, *n.* <id.+. A species of pinweed, ***Lechea verticillata;*** செடிவகை. (W.)

குத்துப்பசளை kuttu-p-pacaḷai, *n.* <id.+. Heart-leaved Malabar nightshade. See கொத்துப்பசளை. (W.)

குத்துப்பழி kuttu-p-paḻi, *n.* <id.+. Violent quarrel; பெருஞ்சண்டை. *Colloq.*

குத்துப்பாடு kuttu-p-pāṭu, *n.* <id.+. 1. Insinuation, covert insult; பிறர் மனத்தைத் துன்புறுத்துகை. *Loc.* 2. Fault, defect; குற்றம். *அந்த வேலைக்குக் குத்துப்பாடு சொல்லுகிறான்.*

குத்துப்பாறை kuttu-p-pāṟai, *n.* <id.+. 1. Steep rock; செங்குத்தான பாறை. 2. Shelf of rock where paddy is pounded; நெற்குற்றும் பாறை. *Loc.* 3. Small perpendicular heap of stones in the vicinity of a rock; மலைப்பக்கத்திலுள்ள செங்குத்தான கற்குவியல். (W.)

குத்துப்புரை kuttu-p-purai, *n.* <id.+. A shed where paddy is pounded; நெற்குற்றும் இடம்.

குத்துப்புள் kuttu-p-puḷ, *n.* <id.+. The place where the *puḷ* in the game of tip-cat falls on edge when struck; கிட்டிப்புள் செங்குத்தாய் விழும் இடம். (J.)

குத்துப்போர் kuttu-p-pōr, *n.* <id.+. 1. The first layer of sheaves in a stack, placed with ears uppermost; செங்குத்தாகவைக்கும் கதிர்ச் சூடு. (W.) 2. Boxing, fisticuffs; குத்துச்சண்டை. 3. Violent enmity; தீராப்பகை. அவ்விரு குடும்பத் துக்கும் எப்பொழுதும் குத்துப்போர்தான்.

குத்துமதிப்பாய் kuttu-matippāy, *adv.* <id.+. Approximately; சுமாராய். குத்துமதிப் பாய் அதன் விலையைச் சொல். *Colloq.*

குத்துமானம் kuttu-māṉam, *n.* <id.+. Brick-work just above an arch with bricks placed on edge; கட்டடக் கமானுக்குமேல் குத்தாக வைக்கும் செங்கல் வேலை.

குத்துமி kuttumi, *n.* <id.+. Husk with bran, separated from rice by pounding; தவிடு சலிக்கப்பெறாத உமி.

குத்துமுள் kuttu-muḷ, *n.* <id.+. Spur. See குதிரைமுள். (W.)

குத்துவல்லயம் kuttu-vallayam, *n.* <id. +. Hand javelin, opp. to *eri-vallayam;* கையிற்கொண்டு குத்துதற்கு உதவும் ஈட்டி. (W.)

குத்துவலி kuttu-vali, *n.* <id.+. Shooting, pinching pain; இசிவுநோவு. தேகமெல்லாம் குத்துவலியாயிருக்கிறது. *Colloq.*

குத்துவலை kuttu-valai, *n.* <id.+. A fishing-net; மீன்பிடிக்கும் வலைவிசேடம். *Parav.*

குத்துவா kuttuvā, *n.* A herring, golden, glossed with purple, ***Pellona brachysoma;*** கடல்மீன்வகை.

குத்துவாதை kuttu-vātai, *n.* <*kṣud-bādhā*. Pain of hunger; பசிவருத்தம். குத்துவாதை மிக நலிந்து (உத்தரரா. இராவணன்பிறப். 18).

குத்துவாமீன் kuttuvā-mīṉ, *n.* <குத்துவா +. See குத்துவா.

குத்துவாள் kuttu-vāḷ, *n.* <குத்து-+. Poniard, dagger; உடைவாள்.

குத்துவான் kuttuvāṉ, *n.* <id. Needle, the word being used only at nights from a superstitious fear; பயங் காரணமாக ஊசிக்கு இரவில்வழங்கும் பெயர். *Loc.*

குத்துவிளக்கு kuttu-viḷakku, *n.* <குத்து+. Standing brass lamp; நிலையாக நிறுத்தும் விளக்கு. குத்துவிளக்கெரிய (திவ். திருப்பா. 19).

குத்துவெட்டு kuttu-veṭṭu, *n.* <குத்து-+. 1. Stabs and cuts, as in fighting with deadly weapons; சண்டையிற்படுங் காயங்கள். 2. Violent enmity; தீராப்பகை. அவனுக்கும் இவனுக்கும் குத்து வெட்டா யிருக்கிறது. 3. Dots and strokes, as erasures; எழுத்துக்கிறுக்கு. *Loc.* 4. Blemishes, as in coins from wear and tear; நாணயம் முதலியவற்றில் படும் பழுது. *Colloq.*

குத்துனி kuttuṉi, *n.* <Mhr. *khutanī*. A cloth woven with a silk warp and cotton woof; பட்டுக்கலந்த துணிவகை. (G. Tj. D. 118.)

குத்தூசி kuttūci, *n.* <குத்து-+ஊசி. 1. A pricker, bradawl; குத்தித்தைக்கும் ஊசிவகை. 2. Long needle used for thatching or hedging; கூரைவேயும் ஊசி. 3. Testing needle for thrusting into a sack of grain and bringing out a few grains as a specimen; கோணிமூட்டைகளில் நெல் முதலியவற்றைக் குத்தியெடுக்கும் கருவி. *Loc.*

குத்தெனவிழு-தல் kutteṉa-viḻu-, *v. intr.* <குத்து+. (J.) 1. To fall headlong; தலைகீழாய் விழுதல். 2. To fall on edge or in a perpendicular position; செங்குத்தாக விழுதல்.

குத்தோக்காளம் kuttōkkāḷam, *n.* <id.+ ஓக்காளம். Vomiting attended with twisting pain in stomach; வயிற்றுப் புரட்டலோடு வரும் வாந்தி. *Colloq.*

குத்பா kutpā, *n.* <U. *khutba*. 1. Sermon at a mosque after prayers on Fridays, on the feast day after Ramzan or Bakrid; மகமதியப் பள்ளியிற் சில விசேடநாட்களில் நிகழும் மதப்பிரசங்கம். 2. The day of such sermons; மகமதியமதப் பிரசங்கம் நிகழும் நாள்.

குதக்கு-தல் kutakku-, 5 *v. tr.* See குதப்பு-.

குதகீலம் kuta-kīlam, *n.* <*guda*+*kīla*. Piles, hemorrhoids; மூலநோய். (பைஷஜ. 181.)

குதட்டு-தல் kutaṭṭu-, 5 *v. tr.* 1. See குதப்பு-. குமுதவாய் குதட்டிப் பழங்கொ டத்தை (கல்லா. 49). 2. To babble, prattle; குழறிப்பேசுதல். இஞ் சொல் . . . குதட்டியே (பெரியபு. கண்ணப். 22).

குதநெகிழ்ச்சி kuta-nekiḻcci, *n.* <*guda*+. Prolapsus; அண்டுதள்ளுகை. (பைஷஜ. 232.)

குதப்பிரம்சம் kuta-p-piramcam, *n.* <id. +. See குதநெகிழ்ச்சி. (பைஷஜ. 232.)

குதப்பு-தல் kutappu-, 5 *v. tr.* cf. உதப்பு-. To turn about food in the mouth, munch; மென்லுதல்.

குதபகாலம் kutapa-kālam, *n.* <*ku-tapa*+. See குதபம், 1.

குதபம் kutapam, *n.* <*ku-tapa.* 1. Midday, the eighth of the 15 divisions of the daytime; பதினைந்தாகப் பகுக்கப்பட்ட பகற்காலத்தின் எட்டாம் பாகம். (சங். அக.) 2. Darbha grass; தருப்பை. (மூ. அ.)

குதம்[1] kutam, *n.* <*huta.* Homa, oblation; ஹோமம். குதஞ் செய்யு மங்கி (திருமங். 423).

குதம்[2] kutam, *n.* <*kutha.* Darbha grass. See தருப்பை. (மலை.)

குதம்[3] kutam, *n.* <*guda.* Anus; மலங்கழியும் வாயில். இலிங்கத் தொருகா லலங்காற் குதத்தில் (காசிக. இல்லொழுக். 19).

குதம்[4] kutam, *n.* <*kṣuta.* Sneeze; தும்மல். கோவின் குதமது நாசம் (செகராச. யாத்திரை. 22: சங். அக.).

குதம்[5] kutam, *n.* cf. *su-kandaka.* Onion; வெங்காயம். (மலை.)

குதம்[6] kutam, *n.* <U. *gudām.* 1. See குதாம். (J.) 2. Plenty, abundance; மிகுதி. (W.)

குதம்பு-தல் kutampu-, *5 v.* (J.) *tr.* 1. To wash cloth gently in water, causing splash; துணியை நீரில் அலசுதல். 2. To wash the fibre, skin or other parts of palmyra fruit in order to get at the pulp; பனம்பழத்தின்தோலை அலசுதல்.—*intr.* 1. To boil up; to bubble up, as boiling water; கொதித்தல். 2. To get angry, furious; கோபமாதல்.

குதம்பை kutampai, *n.* perh. குதம்பு-. 1. Roll of palmyra leaves or cloth worn in the ear-lobe to widen the perforation; காதுபெருக்குவதற்காக இடும் ஓலை சீலை முதலியவற்றின் சுருள். சீலைக் குதம்பை யொருகாது (திவ். பெரியாழ். 3, 3, 1). 2. A kind of ear-ring; காதணிவகை. திருக்குதம்பை யொன்று பொன் இருகழஞ்சே எட்டுமஞ்சாடி (S.I.I. ii, 143).

குதம்பைச்சித்தர் kutampai-c-cittar, *n.* <குதம்பை+. A *cittar,* author of a small work named after him; தம்பெயரால் ஒரு சிறுநூல் இயற்றிய ஒரு சித்தர்.

குதர்[1]**-தல்** kutar-, *4 v. tr.* 1. To peck at, stroke; கோதியெடுத்தல். சேவல் . . . மென்பூக் குதர்செம்மலூரன் (திருக்கோ. 369). 2. To lift up, as a stone; to throw up, as clods in a furrow; அடியோடு எடுத்தல். திண்கோட்டின் வண்ணப்புற்றங் குதர்ந்து (திருக்கோ. 346). 3. To argue perversely; குதர்க்கவாதம் பண்ணுதல். (இனி. நாற். 12.)

குதர்[2] kutar, *n.* <குதர்-. Separation; பிரிவு. (W.)

குதர்க்கக்காரன் kutarkka-k-kāraṉ, *n.*<*ku-tarka*+. Frivolous disputant, sophist; disputatious person; விதண்டாவாதி.

குதர்க்கம் kutarkkam, *n.* <*ku-tarka.* 1. Fallacious, captious argument, sophistry; விதண்டா வாதம். கோதுறுங் குதர்க்கமென்ற கோரவீர வாளி (பிரபோத. 34, 22). 2. Impediment in business, embarrassment; குந்தகம். *Loc.*

குதர்க்கி kutarkki, *n.*<*ku-tarkin.* Frivolous disputant, sophist; விதண்டை பேசுபவன்.

குதர்செல்(லு)-தல் kutar-cel-, *v. intr.* prob. *ku*+அதர்+. To deviate from the right course, miss the way; நெறிதவறிச் செல்லுதல். குதர்சென்று கொள்ளாத கூர்மை (இனி. நாற். 12).

குதலை kutalai, *n.* perh. குழறு-. 1. Lisps, prattle of children; மழலைச்சொல். இதழ்குவித்துப் பணித்த குதலையுந் தெரியாது (கல்லா. 5). 2. Soft talk, pleasant speech, as of young girls; இனிய மொழி. குதலைச் செவ்வாய்க் குறுந்தொடி மகளிர் (சிலப். 30, 114). 3. Simpleton, ignorant fellow; அறிவில்லாஎன். (திவா.)

குதலைமை kutalaimai, *n.* <குதலை. 1. Indistinctness as in child's prattle; பொருள்விளங் காமை.' (திருக்கோ. 104, உரை.) 2. Failure of strength; straitened circumstances; தளர்ச்சி. குதலைமை தந்தைக்கட் டோன்றின் (காலடி, 197).

குதற்று kutaṟṟu, *n.* <குதறு-. Missing the way, deviating from the right course; நெறி தவறுகை. குதற்று வல்லசுரர்கள் கூற்றம் (திவ். திருவாய். 10, 1, 6).

குதறு-தல் kutaṟu-, *5 v.* cf. குதர்-. *tr.* (J.) 1. To dig up and scatter; to tear up; to scratch up and scatter, as fowls; to spill out; சிதறுதல். 2. To stir up, loosen, grub up, as earth about plants; கிண்டுதல்.—*intr.* 1. To deviate from the right course, to go astray, to miss the way; நெறிதவறுதல். (திவ். திருவாய். 10, 1, 6, அரும்.) 2. To be blistered, covered with sores; இரணமிகுதல். உடம்பெல்லாம் குதறிக்கிடக்கின்றது. 3. To become loose, rough, deranged, dishevelled, as the hair; to be disturbed, inflamed, as the eyes; குலைதல். (W.)

குதனம் kutaṉam, *n.* cf. *kutsana.* See குதனைக்கேடு. (J.)

குதனை kutaṉai, *n.* cf. id. See குதனைக்கேடு. (J.)

குதனைக்கேடு kutaṉai-k-kēṭu, *n.* <குதனை +. (J.) 1. Negligence, carelessness, slovenliness; அசட்டை. 2. Filthiness; துப்புரவின்மை. 3. Want of dexterity; clumsiness, awkwardness; சாதுரியமின்மை.

குதாங்குரம் kutāṅkuram, *n.* <*guda*+*aṅkura*. Piles; மூலமுளை. (பைஷஜ.)

குதாம் kutām, *n.* <U. *gudām*. Godown; பண்டசாலை. *Loc.*

குதாம்பு kutāmpu, *n.* See குதாம். *Loc.*

குதாவடை kutāvaṭai, *n.* See குதாவிடை.

குதாவிடை kutāviṭai, *n.* 1. Embarrassment; dislocation in business; அலங்கோலம். *காரியம் குதாவிடையாயிருக்கிறது.* (W.) 2. Delay; காலதாமதம். *Loc.*

குதானன் kutāṉaṉ, *n.* American bind-weed, *Ipomaea;* தாளிக்கொடிவகை. (மலை.)

குதி[1]**-த்தல்** kuti-, *11 v.* [K. *gudi*, M. *kuti*.] *intr.* 1. To jump, leap, spring, bound; பாய்தல். (திவா.) 2. To splash, as water; to spurt out; நீர்முதலியன எழும்பிவிழுதல். *மலர் தேன்குதிக்க* (தஞ்சைவா. 67). 3. To dance with joy, frolic; கூத்தாடுதல். 4. To be haughty, arrogant; செருக்குக்கொள்ளுதல். *அதிகமாகக் குதிக்கிறான்.*—*tr.* To leap over; overcome, escape from; கடந்துவிடுதல். *கூற்றங் குதித்தலுங் கைகூடும்* (குறள், 269).

குதி[2] kuti, *n.* <குதி-. 1. Jump, leap; குதிப்பு. *ஒருகுதி குதித்தான்.* 2. [T. K. *gudi*.] See குதிங்கால். *குதி பந்தி னிரம்பு பேரெழில் வாய்க்கிடில்* (காசிக. மகளிர். 10).

குதிக்கள்ளன் kuti-k-kaḷḷaṉ, *n.* <குதி+. Boil or abscess on the heel; குதிப்பிளவை. (M. L.)

குதிக்கால் kuti-k-kāl, *n.* <id.+. See குதிங்கால்.

குதிகள்ளம் kuti-kaḷḷam, *n.* <id.+. See குதிக்கள்ளன். (C. G.)

குதிகள்ளன் kuti-kaḷḷaṉ, *n.* <id.+. See குதிக்கள்ளன். *Loc.*

குதிகால் kuti-kāl, *n.* <id.+. See குதிங்கால். *Loc.*

குதிங்கால் kuti-ṅ-kāl, *n.* <id.+. Heel of the foot; உள்ளங்காலின் பின்பாகம்.

குதிங்கால்வெட்டி kuti-ṅ-kāl-veṭṭi, *n.* <குதிங்கால்+. Cheat, deceiver; மோசக்காரன். *Tinn.*

குதிங்காற்சிப்பி kuti-ṅ-kāṟ-cippi, *n.* <id. +. Heel bone; குதிங்காலெலும்பு. (W.)

குதிப்பு kutippu, *n.* <குதி-. 1. Leaping, jumping; குதிக்கை. 2. Haughtiness, arrogance; கர்வங்கொள்கை. 3. Milk-fish; சுதும்பு என்னும் மீன்.

குதிமுள் kuti-muḷ, *n.* <குதி+. Spur. See குதிரைமுள். (W.)

குதியாணி kuti-y-āṇi, *n.* <id.+. Corn on the heel; குதிங்காலில் உண்டாகும் புண்ணாணி. (W.)

குதிர்[1] kutir, *n.* 1. A low shrub with sharp axillary spines, m. sh., *Canthium parviflorum;* ஒருவகை மரம். *கரிகுதிர் மரத்த கானவாழ்க்கை* (அகநா. 75). 2. [K. *kudir*.] Large earthen receptacle for storing grain; நெல்முதலிய தானியம் வைக்குங் கூடு. *காப்பதற்கோர் குதிர்பண்ணி* (ஞானவா. மித்தை. 11).

குதிர்[2]**-தல்** kutir-, *4 v. intr.* [T. K. *kuduru*.] To be settled, determined, fixed up; தீர்மானப்படுதல். *வீட்டின்விலை குதிர்ந்தது.* *Loc.*

குதிர்ப்பாடு kutir-p-pāṭu, *n.* <குதிர்-+. [T. *kudurupāṭu*.] Settlement, arrangement; தீர்மானப்படுகை. *Loc.*

குதிரம் kutiram, *n.* 35 *kaḻañcu* of camphor; 35 கழஞ்சளவுள்ள கர்ப்பூரம். (கணக்கதி.)

குதிரி kutiri, *n.* prob. *ku-strī*. Unruly, refractory woman, virago; அடங்காதவள். *குதிரியாய் மடலூர்துமே* (திவ். திருவாய். 5, 3, 9).

குதிரை kutirai, *n.* prob. குதி-. 1. [T. *kudira*, K. Tu. *kuduṟe*, M. *kutira*.] Horse; பரி. *குதிரையு ளாணினை* (தொல். பொ. 623). 2. Twisting-stick for making rope, timber-frame for twisting cable; கயிறுமுறுக்குங் கருவி. (W.) 3. (Mus.) Bridge of a stringed instrument; யாழின் ஓர் உறுப்பு. 4. [K. *kuduṟe*.] Cock of a gun; hammer in the lock of a fire-arm; துப்பாக்கியின் உறுப்பு. 5. See குதிரைத்தறி. 6. Crate for casks; பீப்பாய் முதலிய தாங்கும் சட்டம். 7. Gymnastic horse-bar. See குதிரைமரம், 1. 8. Sparrow; ஊர்க்குருவி. (மூ. அ.) 9. A mountain which belonged to the ancient chieftain Atiyamāṉ; அதியமானுக்குரிய குதிரைமலை. (புறநா. 168.)

குதிரைக்கயிறு kutirai-k-kayiṟu, *n.* <குதிரை +. Halter of a horse; குதிரையின் வாய்வடம். (பிங்.)

குதிரைக்கலணை kutirai-k-kalaṇai, *n.* <id. +. Horse-saddle; குதிரைச்சேணம். (பிங்.)

குதிரைக்காசு kutirai-k-kācu, *n.* <id.+. 1. Coin bearing the impression of a horse; குதிரையுருப் பதிக்கப்பெற்ற நாணயவகை. (W.) 2. See குதிரைப்பவுன்.

குதிரைக்காரன் kutirai-k-kāraṉ, *n.* <id.+. [K. *kuduregāṟa*.] 1. Horse-keeper, groom;

குதிரையைப் பாதுகாப்போன். 2. Mounted warrior; குதிரைவீரன். 3. Plundering trooper, cavalier of the time of Tippu Sultan; திப்புசுல்தான் காலத்தில் கொள்ளையடித்துவந்த குதிரைவீரன். (I. M. P. Tj. 579.)

குதிரைக்குளம்படி kutirai-k-kuḷampaṭi, *n.* <id. +. Arrow-head. See நீர்ச்சேம்பு. (பதார்த்த. 288.)

குதிரைக்குளம்பு kutirai-k-kuḷampu, *n.* <id. +. 1. Horse's hoof; குதிரையின்குளம்பு. 2. See குதிரைக்குளம்படி. (W.)

குதிரைக்கொம்பு kutirai-k-kompu, *n.* <id. +. Anything non-existent or impossible of attainment, as a horse's horn; கிடைத்தற்கரியது. ஆபத்துக்கு உதவும்நண்பர்கள் குதிரைக்கொம்பானார்கள்.

குதிரைக்கோப்பு kutirai-k-kōppu, *n.* <id. +. Horse-trappings; சேணம். *Loc.*

குதிரைக்கௌசனை kutirai-k-kaucaṉai, *n.* <id. +. E. *caparison.* Horse-cloth, caparison; குதிரைத்த மேலிடும் அலங்காரப்போர்வை. (W.)

குதிரைகொல்லி kutirai-kolli, *n.* prob. id. +. Purple-wreath. See குதிரைவாலி, 2. (W.)

குதிரைச்சம்மட்டி kutirai-c-cammaṭṭi, *n.* <id. +. Horse-whip; குதிரைச்சவுக்கு.

குதிரைச்சயம் kutirai-c-cayam, *n.* <id. +. Glanders, a disease of horses; குதிரைக்கு வரும் க்ஷயரோகம்.

குதிரைச்சவரன் kutirai-c-cavaraṉ, *n.* <id. +. See குதிரைப்பவுன்.

குதிரைச்சாணி kutirai-c-cāṇi, *n.* <id. + E. *johnnie.* (W.) 1. Horse-keeper; குதிரைக்காரன். 2. Horse-doctor, farrier; குதிரைவைத்தியன்.

குதிரைச்சாரி kutirai-c-cāri, *n.* <id. +. Circuitous course of a horse; குதிரையின் சுற்றியோடும் கதி.

குதிரைச்சேவகன் kutirai-c-cēvakaṉ, *n.* <id. +. Cavalier; குதிரைவீரன். குதிரைச் சேவகனாகிய கொள்கையும் (திருவாச. 2, வரி, 45).

குதிரைத்தறி kutirai-t-taṟi, *n.* <id. +. Wooden contrivance stuffed with grass and straw to close up a breach in an embankment; நீருடைப்பை அடைத்தற்கு வைக்கோல் முதலியவற்றோடு நிறுத்தும் மரக்கட்டம். படுகுருதிக் கடும்புனலை யடைக்கப் பாய்ந்த பலகுதிரைத்தறி போன்ற (கலிங். புதுப். 463).

குதிரைநடை kutirai-naṭai, *n.* <id. +. Pace of a horse. See அசுவகதி.

குதிரைநிலை kutirai-nilai, *n.* <id. +. Place where horses are kept, stable; குதிரைலாயம். (சினேந். 174)

குதிரைப்பசிரி kutirai-p-paciri, *n.* <id. +. Dog milk-greens, *Trianthema crystallina;* சாரணைவகை. (W.)

குதிரைப்பட்டை kutirai-p-paṭṭai, *n.* <id. +. 1. Beam placed underneath the roof of a house to support the tiles; மேற்கூரை தாங்கும் கட்டை. *Loc.* 2. Thick construction of lime at the edge of a tiled roof to prevent tiles from slipping; கூரையின் ஓடு நழுவாமலிருக்கும்படி அடுக்கிய ஓட்டின்முகப்பில் பட்டையாகப் பூசப்படும் சாந்து.

குதிரைப்படை kutirai-p-paṭai, *n.* <id. +. Cavalry, as one of the four-fold division of an army; குதிரைச்சேனை. (சூடா.)

குதிரைப்பந்தயம் kutirai-p-pantayam, *n.* <id. +. Horse-race; குதிரைகளை ஓடவிடும் பந்தயம்.

குதிரைப்பந்தி kutirai-p-panti, *n.* <id. +. 1. See குதிரைநிலை. (திவா.) 2. Row of horses; குதிரைநிரை.

குதிரைப்பயிரி kutirai-p-payiri, *n.* <id. +. See குதிரைப்பசிரி. (W.)

குதிரைப்பரீட்சை kutirai-p-parīṭcai, *n.* <id. + *parīkṣā.* 1. Horsemanship; குதிரையேற்றம். 2. Science dealing with horse and its nature; குதிரையியல்பையறியும் வித்தை.

குதிரைப்பல்லன் kutirai-p-pallaṉ, *n.* <id. +. Garlic. See வெள்ளைப்பூண்டு. (மூ. அ.)

குதிரைப்பவுன் kutirai-p-pavuṉ, *n.* <id. +. Sovereign bearing the stamp of a horse on one side, dist. fr. *kōṭṭai-p-pavuṉ;* குதிரை முத்திரைகொண்ட பொன்நாணயம். *Colloq.*

குதிரைப்பற்பாஷாணம் kutirai-p-paṟpāṣāṇam, *n.* <id. + பல் + *pāṣāṇa.* A mineral poison, one of 32; பிறவிப்பாஷாணவகை. (மூ. அ.)

குதிரைப்பாய்ச்சல் kutirai-p-pāyccal, *n.* <id. +. Gallop of a horse; பாய்ந்து செல்லுங் குதிரையின் கதி.

குதிரைப்பிடுக்கன் kutirai-p-piṭukkaṉ, *n.* <id. +. Fetid tree. See பீநாறி. (மூ. அ.)

குதிரைமசாலி kutirai-macāli, *n.* prob. id. +. A kind of tree; மரவகை. (W.)

குதிரைமசாலை kutirai-macālai, *n.* <id. +. Mash, a mixture of certain ingredients used as a tonic or medicine for horses; குதிரைமருந்து.

குதிரைமட்டம் kutirai-maṭṭam, *n.* <id. +. A fleet-footed pony; வேகமுள்ள நட்டைக் குதிரை. (W.)

குதிரைமரம் kutirai-maram, *n.* <id.+. 1. Gymnastic horse-bar; தேகப்பயிற்சிக்குரிய தாண்டுமரம். 2. See குதிரைத்தறி. *Colloq.* 3. Sluice gate; மதகுக்கதவு. (யாழ். அக.) 4. (Weav.) Wooden frame, shaped like the letter 'X' and fixed to the ground to support the warp stretched out; நெசவிற் பாவு தாங்குதற்குரிய மரச்சட்டம்.

குதிரைமறம் kutirai-maṟam, *n.* <id.+. (Puṟap.) Theme describing the prowess of a war-horse; போர்க்குதிரையின் திறப்பாட்டைக்கூறும் புறத்துறை. (பு. வெ. 7, 7.)

குதிரைமறி kutirai-maṟi, *n.* <id.+. (W.) 1. Filly; குதிரைக்குட்டி. 2. Mare; பெட்டைக் குதிரை.

குதிரைமால் kutirai-māl, *n.* <id.+U. *mahāll.* Royal stable; அரண்மனையைச் சார்ந்த குதிரைலாயம்.

குதிரைமாற்று-தல் kutirai-māṟṟu-, *v. intr.* <id.+. To relieve horses by relays; கேடிதோறும் குதிரைகளை மாற்றிக்கொள்ளுதல்.

குதிரைமாறி kutirai-māṟi, *n.* <id.+. (W.) 1. Petty horse-dealer; குதிரை விற்பவன். 2. One who works in an underhand manner; வஞ்சகவேலைசெய்பவன்.

குதிரைமுகம் kutirai-mukam, *n.* <id.+. 1. Tibia, shin bone; முழந்தாளெலும்பு. 2. Prop of an embankment; குளத்தின் கரைக்கட்டிற்கு வலியுதவும் முட்டுக்கட்டடம். (W.)

குதிரைமுகவோடம் kutirai-muka-v-ōṭam, *n.* <id.+. Boat with a horse-shaped prow; குதிரையின் உருவை முகப்பிற்கொண்ட தோணி. (சிலப். 13, 176, உரை.)

குதிரைமுள் kutirai-muḷ, *n.* <id.+. Spur used by a horseman; குதிரையை விரைவுபடுத்தற்கு ஏறுவோர் காலில் இட்டுக்கொள்ளும் முட்கருவி.

குதிரையடி kutirai-y-aṭi, *n.* <id.+. Knight's move in the game of chess; சதுரங்க விளையாட்டில் குதிரையின் கதி.

குதிரையாளி kutirai-y-āḷi, *n.* <id.+. 1. Horseman; குதிரை ஏறி நடத்துவோன். 2. Bhairava; வைரவன். (R.)

குதிரையிராவுத்தன் kutirai-y-irāvuttaṉ, *n.* <id.+. Cavalier, trooper, equestrian; குதிரை வீரன். *கொன்றைமாலைக் குதிரையிராவுத்தன்* (திருவாலவா. 46, 28).

குதிரையுடலன் kutirai-y-uṭalaṉ, *n.* <id. +. Bull that has its belly pulled up straight and narrow, as that of a horse; குதிரையுடல் போலும் உடலுள்ள காளைமாடு. (J.)

குதிரையேற்றம் kutirai-y-ēṟṟam, *n.* <id. +. Horsemanship; குதிரையேறி நடத்தும் வித்தை. (பதார்த்த. 1452.)

குதிரையேறு-தல் kutirai-y-ēṟu-, *v. tr.* <id.+. 1. To mount a horse; குதிரைமேலேறிச் செலுத்துதல். 2. To play leap-frog; சிறுவர்கள் பச்சைக்குதிரை விளையாடுதல். *Colloq.* 3. To ride roughshod, domineer; பிறரைக் கீழ்ப்படுத்தி அடக்கியாளுதல். *அவனைக் குதிரையேறுகிறான்.* *Colloq.*

குதிரைவடிப்போர் kutirai-vaṭippōr, *n.* <id.+. Horse-drivers; குதிரை நடத்துவோர். (திவா.)

குதிரைவலி kutirai-vali, *n.* <id.+. Excessive labour pains; பெண்களுக்குப் பிரசவகாலத்தில் உண்டாகும் பெருவலி.

குதிரைவலிப்பு kutirai-valippu, *n.* <id. +. 1., See குதிரைவலி. 2. A horse-disease attended with quivering in the legs; குதிரையின் காற்சூண்டுவாதம். (M. Cm. D. [1887] 249.)

குதிரைவாய்க்கருவி kutirai-vāy-k-karuvi, *n.* <id.+. Bridle of a horse; கடிவாளம்.

குதிரைவாலி kutirai-vāli, *n.* <id.+. 1. Poor man's horse-tail millet, *Panicum verticillatum;* ஒருவகைப் புன்செய்ப்பயிர். 2. Purple-wreath. See குதிரைவாலிப்பூ. (W.)

குதிரைவாலிச்சம்பா kutirai-vāli-c-campā, *n.* <குதிரைவாலி+. A kind of paddy, like horse tail millet; சம்பா நெல்வகை. (W.)

குதிரைவாலிச்சாமை kutirai-vāli-c-cāmai, *n.* <id.+. See குதிரைவாலி, 1. (W.)

குதிரைவாலிப்புல் kutirai-vāli-p-pul, *n.* <id.+. A species of grass, *Panicum brizoides;* புல்வகை. (W.)

குதிரைவாலிப்பூ kutirai-vāli-p-pū, *n.* <id.+. Purple wreath, l. cl., *Petræa volubilis;* கொடிவகை. (A.)

குதிரைவிசிகயிறு kutirai-vici-kayiṟu, *n.* <குதிரை+விசி-+. (Weav.) Rope for fixing the *kutirai-maram* in position; குதிரை மரத்தை நிலைப்பட நிறுத்துதற்குக் கட்டுங் கயிறு. *Loc.*

குதிரைவிடு-தல் kutirai-viṭu-, *v. intr.* <id.+. 1. To set off in a gallop or trot; குதிரையைச் சாரியாகவிடுதல். 2. To compete in a horse-race; குதிரைப்பந்தயம் விடுதல். (W.)

குதிரைவீரர் kutirai-vīrar, *n.* <id.+. Cavalry, troopers, cavaliers; குதிரைப்படையாளர்.

குதிரைவையாளிவீதி kutirai-vaiyāḷi-vīti, *n.* <id.+. The place where horses are trained in different kinds of exercise; குதிரை செலுத்தற்குரிய சேண்டுவெளி. (சூடா.)

குதிவாதம் kuti-vātam, *n.* <குதி+. Neuralgia in the heels; குதிங்கால்வாதம்.

குதுகலம் kutukalam, *n.* <*kutūhala*. See குதூகலம். குதுகலம் பொங்க (தணிகைப்பு. பிரமன் சிருட். 83).

குதுகலி-த்தல் kutukali-, *11 v. intr.* <id. See குதூகலி-. குதுகலித் தாவியை யாகுலஞ்செய்யும் (திவ். காய்ச். 5, 7).

குதுகலிப்பு kutukalippu, *n.* <குதுகலி-. Ecstasy, joyfulness, rapture; மகிழ்ச்சி.

குதுகுது-த்தல் kutukutu-, *11 v. tr.* To desire eagerly; ஆசைப்படுதல். நாற்றங் குதுகுதுப்ப (பரிபா. 20, 13).—*intr.* To shiver from cold; குளிரால் நடுங்குதல்.

குதுகுதுப்பு kutukutuppu, *n.* <குதுகுது-. 1. Desire, eagerness; ஆவல். குதுகுதுப்பின்றி நின்று (திருவாச. 6, 34). 2. Shivering with cold; குளிரால் நடுங்குகை. *Loc.*

குதுகுதெனல் kutu-kuteṉal, *n.* Expr. signifying feverishness attended with shivering; குளிர்சுரக் குறிப்பு. *Loc.*

குதுகுலம் kutukulam, *n.* <*kutūhala*. See குதூகலம். குதுகுலத் துளவின் ஞமம் (அரிசமய. பதுமை. 103).

குதும்பகர் kutumpakar, *n.* Bitter toombay. See தும்பை. (மலை.)

குதுவை kutuvai, *n.* <T. *kuduva*. Mortgage. See கோதுவை. *Loc.*

குதூகலம் kutūkalam, *n.* <*kutūhala*. Joy, delight, rapture; அகக்களிப்பு.

குதூகலி-த்தல் kutūkali-, *11 v. intr.* <id. To rejoice, to delight in; அகமகிழ்தல். அருளின் மூழ்கிக் குதூகலித் திடுதலோடும் (கந்தபு. வீரவாகு. 51)

குதை[1] kutai, *n.* cf. *guda*. [M. *kuta*.] 1. Notch at the end of a bow to secure the loop of a bowstring; விற்குதை. குதைவரிச் சிலைநுதல் (கம்பரா. நகர. 49). 2. Notch at the feather end of an arrow; அம்பினடி. (சங். அக.) 3. Arrow; அம்பு. குதையொன் றினைத் தூரந்தே (கந்தபு. அக்கினி. 85). 4. Bow, loop, running knot, button or clasp of a bracelet; ஆபரணத்தின் பூட்டு. (W.) 5. Effort; முயற்சி. கொண்ட குதை மாறுதே (ஈடு, 6, 10, 2).

குதை[2]**-த்தல்** kutai-, *11 v. intr.* <குதை[1]. To fasten the bow-string at the notch; விற்குதையில் நாணைப்பூட்டுதல். குதைக்கின்றன நிமிர்வெஞ்சிலை (கம்பரா. இராவணன்வ. 46).

குதை[3]**-தல்** kutai-, *4 v. intr.* prob. உதை-. To discharge, propel; செலுத்துதல். குதைந்தவார் பகழிவேடன் (பிரமோத். 17, 12).

குதை[4]**-தல்** kutai-, *4 v. intr.* prob. *kṣud*. To cause bewilderment, embarrassment; தடுமாறச்செய்தல். குதையும் வினையாவிதீர்ந்தேன் (திவ். இயற். நான்மு. 81).

குதை[5] kutai, *n.* <*kṣudhā*. Hunger; பசி. (அக. நி.)

குதைபோடு-தல் kutai-pōṭu-, *v. intr.* <குதை[1]+. To button, to fasten as with a button; முடிச்சுப்போடுதல். (W.)

குதைமணி kutai-maṇi, *n.* <id.+. A kind of hook, button; கொக்கிவகை. (W.)

குதைமுடிச்சு kutai-muṭiccu, *n.* <id.+. Button of a running knot or noose; சுருக்குமுடிச்சு. (W.)

குதையாணி kutai-y-āṇi, *n.* <id.+. Fastening pin or bolt in jewelry; சுரையாணி. (W.)

குந்தக்கம் kuntakkam, *n.* See குந்தகம். *Vul.*

குந்தகம் kuntakam, *n.* prob. Mhr. *kunda*. [T. *kundakamu*, K. *kundaka*.] 1. Obstruction, obstacle; தடை. *Colloq.* 2. Low price; குறைந்த விலை. *Loc.*

குந்தணை kuntaṇai, *n.* prob. குந்து[1]-+அணை. Special iron cauldron holding the vessel in which medicinal oil is prepared and serving as receptacle if the vessel gives way; காய்ச்சும் போது பாத்திரம் சிதையுமாயின் அதிலுள்ள தைலம் வீணகாமற் காத்தற்பொருட்டு அப்பாத்திரத்துக்கு ஆதாரமாய் வைக்கப்படும் இரும்பண்டா. (தைலவ. பாயி. 19.)

குந்தந்தள்ளுகை kuntan-taḷḷukai, *n.* <குந்தம்[4]+. Staphyloma; கண்ணிற் குந்தநோய் விழுகை. *Colloq.*

குந்தம்[1] kuntam, *n.* perh. *kuntala*. Horse; குதிரை. வெற்றிசேர் குந்தம் (திருவிளை. நரிபரி. 106).

குந்தம்[2] kuntam, *n.* perh. *kunta*. 1. See கற்பாஷாணம். 2. See தாலம்பபாஷாணம். 3. See கோளகபாஷாணம். (மூ. அ.) 4. A standard weight = 4 *palam*; நான்கு பலங்கொண்ட ஒரு நிறை. (தைலவ. தைல. 100.)

குந்தம்[3] kuntam, *n.* perh. *kuñja*. Haystack; வைக்கோற்படைப்பு. *Loc.*

குந்தம்[4] kuntam, *n.* <*kunth*. 1. Tubercle on the cornea of the eye, protrusion of any part of the globe of the eye, staphyloma; **கண்ணோய்வகை.** (மூ. அ.) 2. That which gives distress; **துக்கந்தருவது.** *மெய்குந்தமாக* (திவ். இயற். 4, 79).

குந்தம்[5] kuntam, *n.* <*kunta*. 1. Javelin for throwing; barbed dart; **எறிகோல்.** *வைவாளிருஞ்சிலை குந்தம்* (சீவக. 1678). 2. Spear, lance; **வேல்.** *குந்தமலியும் புரவி யான்* (பு. வெ. 4, 7). 3. Pike, stake; **குத்துக்கோல்.** *பூந்தலைக் குந்தங் குத்தி* (முல்லைப். 41).

குந்தம்[6] kuntam, *n.* <*kunda*. 1. Wild lime. See **குருந்து.** (திவா.) 2. One of the nine treasures of Kubera; **குபேரனது நவநிதிகளில் ஒன்று.** 3. Konkany resin. See **குந்துருக்கம்.** (W.)

குந்தரிக்கம் kuntarikkam, *n.* <***kunduruka***. See **குந்துருக்கம்.**

குந்தலவராளி kuntala-varāḷi, *n.* <***kuntala*** +. A musical mode; **ஓர் இராகம்.** (பரத. இராக. 55.)

குந்தலிக்கம் kuntalikkam, *n.* prob. *kunduruka*. Myrrh-resin, ***Gummi resina myrrha;*** **வெள்ளைப்போளமரத்தின் பிசின்.** (யாழ். அக.)

குந்தலிங்கம் kuntaliṅkam, *n.* prob. id. Benzoin tree. See **சாம்பிராணி.** (W.)

குந்தளம் kuntaḷam, *n.* <*kuntala*. 1. Woman's hair; **பெண்டிர் தலைமயிர்.** *சந்தமலி குந்தளநன் மாதினொடு* (தேவா. 107, 1). 2. Hair crinkles, curls; **மயிர்க்குழற்சி.** (பிங்.) 3. Woman's locks; **குழற்கொத்து.** (பிங்.) 4. Country of the Chālukyas; **சளுக்கராசரது தேசம்.** (Insc.)

குந்தளர் kuntaḷar, *n.* <id. Chālukyas, as rulers of Kuntaḷam; **குந்தளதேசத்தில் ஆட்சிபுரிந்த சளுக்கியவேந்தர்.** *குந்தளரைக் கூடற் சங்கமத்து வென்ற* (கலிங். 193, புதுப்.).

குந்தன் kuntaṉ, *n.* <*Kunda*. 1. Viṣṇu; **திருமால்.** *வல்வினை மாய்ந்தறச்செய் குந்தன்றன்னை* (திவ். திருவாய். 7, 9, 7). 2. Holy person; **தூயதன்மையுடையவன்.** *வண்டீங் கவிசெய்குந்தன்* (திவ். திருவாய். 7, 9, 7).

குந்தனக்காரன் kuntaṉa-k-kāraṉ, *n.* <T. ***kundanamu*** +. One who enchases or sets precious stones; **இரத்தினம் பதிப்போன்.** *Loc.*

குந்தனம் kuntaṉam, *n.* <T. ***kundanamu***. 1. Interspace for enchasing or setting gems in a jewel; **இரத்தினம் பதிக்கும் இடம்.** *குந்தனத்திலழுத்தின . . . ரத்தினங்கள்* (திவ். திருநெடுந். 21, வ்யா. பக். 175). 2. Gold, fine gold; **தங்கம்.** (சங். அக.)

குந்தா kuntā, *n.* <U. ***kunda***. (W.) 1. Stock of a gun; **துப்பாக்கியின் அடி.** 2. Stern of a vessel; **கப்பலின் பின்பக்கம்.**

குந்தாங்குச்சி kuntāṅ-kucci, *n.* <**குந்து**[1]-+. Game in which a player hops on one foot in order to touch or catch any of the other players within bounds; **சிறுவர்கள் நொண்டியாடித் தொடும் விளையாட்டு.** *Cm.*

குந்தாடு-தல் kuntāṭu-, *v. intr.* <id. + **ஆடு-**. To play hopping on one foot; **நொண்டிக்கொண்டு விளையாடுதல்.** *Cm.*

குந்தாணி[1] kuntāṇi, *n.* 1. [M. ***kuntāṇi***.] Large mortar; **பேருரல்.** *குந்தாணிபோல் இருக்கிறாள். Colloq.* 2. Protective ring placed over a mortar to prevent the grain from scattering; **உரலின் வாய்க்கூடு.** (இந்துபாக. 44.)

குந்தாணி[2] kuntāṇi, *n.* <**குந்தம்**[4] + **ஆணி.** An eye disease; **கண்ணோய்வகை.** (W.)

குந்தாணிக்கொடி kuntāṇi-k-koṭi, *n.* <**குந்தாணி**[1] +. Mortar-flower bindweed, s. cl., *Ipomaea bracteata;* **கொடிவகை.**

குந்தாணிப்பீரங்கி kuntāṇi-p-pīraṅki, *n.* <id. +. Mortar for throwing shells at high angles; **வெடிகுண்டுகளை மேலெறிந்துவீசும் உரல்வடிவான பீரங்கி.** (W.)

குந்தாலம் kuntālam, *n.* <*kuddāla*. See **குந்தாலி**, 1. (W.)

குந்தாலி kuntāli, *n.* <id. [M. ***kuntāli***.] 1. Pick-axe with one prong, pick-axe; **குத்தித் தோண்டுங் கருவிவகை.** *குந்தாலிக்கும் பாரை வலிது* (திருமந். 2909). 2. Battle-axe; **கணிச்சி.** (பு. வெ. 9, 38, உரை.)

குந்தாளி[1] kuntāḷi, *n.* <id. See **குந்தாலி**, 1. (J.)

குந்தாளி[2]**-த்தல்** kuntāḷi-, ***11*** *v. intr.* <**கொக்களி-**. To leap for joy; **களித்துக் கூத்தாடல்.** (W.)

குந்தி[1] kunti, *n.* Toddy, fermented liquor; **கள்.** (திவா.)

குந்தி[2] kunti, *n.* <*Kuntī*. Kuntī, the first wife of Pāṇḍu; **பாண்டுவின் மனைவியருள் மூத்தாள்.** (பாரத.)

குந்திநட-த்தல் kunti-naṭa-, *v. intr.* <**குந்து**[1]-+. [M. *kundinaṭa*.] To walk on tiptoe; **முன்னங்காலை மாத்திரம் ஊன்றி நடத்தல்.** *Loc.*

குந்திநில்-தல் [குந்திநிற்றல்] kunti-nil-, *v. intr.* <id. +. 1. To stand on one leg; **ஒற்றைக்**

காலால் நிற்றல். (பிங்.) 2. To stand on tiptoe; முன்னங்காலால் நிற்றல்.

குந்திபுதல்வன் kunti-putalvaṉ, *n.*<*Kuntī*+. Lit. son of Kuntī. Yudhiṣṭhira; [குந்தியின் புதல்வன்.] தருமன். (சூடா.)

குந்திரா kuntirā, *n.* See குந்திராத்தீவு.

குந்திராத்தீவு kuntirā-t-tīvu, *n.*<குந்திரா+. Maldive Islands; மாலைத்தீவு. (W.)

குந்திராத்தோணி kuntirā-t-tōṇi, *n.* <id. +. Canoe in the Maldives constructed wholly from the coconut tree; மாலைத்தீவார் தென்னை மரத்தாற்செய்யும் படகு. (W.)

குந்திரிகம் kuntirikam, *n.* See குந்துருக்கம். (பைஷஜ.)

குந்திருக்கம் kuntirukkam, *n.* See குந்துருக்கம். (W.)

குந்திவை-த்தல் kunti-vai-, *v. tr.* <குந்து[1]-+. To walk on tiptoe; முன்னங்காலைமாத்திரம் ஊன்றி நடத்தல். கெட்டடி குந்திவைத்து (பிரபோத. 11, 17).

குந்து[1]-தல் kuntu-, *5 v. intr.* 1. To sit on the heels with legs folded upright; இருகாலையும் ஊன்றவைத்து உட்காருதல். 2. [K. *kuntu.*] To sit, squat; உட்காருதல். 3. [M. *kuntu.*] To stand on tiptoe; முன்னங்கால்களைமட்டும் ஊன்றி நிற்றல். குந்தி யுறித்தயி ருண்டவர் (பாரத. கிருட். 199). 4. To hop on one leg; நொண்டிநடத்தல். அடியொன்று கடிதோட்டிக் குந்திவந்தனன் (கம்பரா. கும்பக. 348). 5. To bend, as a bow; வளைதல். குந்து வன்னெடுஞ் சிலைமுதற் படைகளும் (கம்பரா. பிரமாத். 56).

குந்து[2] kuntu, *n.* <குந்து[1]-. (W.) 1. Sitting on the heels, squatting; உட்காருகை. 2. Pial or raised floor of a verandah used as a seat; திண்ணையோட்டு. 3. Hopping; நொண்டுகை.

குந்து[3]-தல் kuntu-, *5 v. intr.* <குன்று-. To fail, to miss; தவறுதல். குந்தாவருந் தீமை (திவ். திருவாய். 2, 6, 1).

குந்து[4] kuntu, *n.* prob. கூந்தல். Fibre in fruits or roots; பழத்தின் சிம்பு. (J.)

குந்துகால் kuntu-kāl, *n.* <குந்து[1]-+. 1. Tiptoe; முன்புறமாத்திரம் ஊன்றிய பாதம். 2. Squatting, sitting on the heels; குந்தியிருக்கை. (W.)

குந்துகாலன் kuntu-kālaṉ, *n.* <குந்துகால். 1. One who walks with raised heels; முன்கால்களால் நடப்பவன். *Colloq.* 2. One who hobbles or limps; காலை இழுத்துநடப்பவன்.

குந்துத்தடி kuntu-t-taṭi, *n.* <குந்து[4]+. Stick with several prongs or forks to extract fibre from the palmyra; பனைநாருரிக்கும் முட்கருவி. (J.)

குந்துதிண்ணை kuntu-tiṇṇai, *n.*<குந்து[1]-+. A small platform or pial adjoining a verandah used as a seat; ஒட்டுத்திண்ணை. (J.)

குந்துப்பு kuntuppu, *n.* <id.+உப்பு. A boy's game of hopping on one leg; ஒற்றைக் காலால் நடந்தாடும் சிறுவர் விளையாட்டு. *Loc.*

குந்துமணி kuntu-maṇi, *n.* Corr. of குன்றிமணி.

குந்துரு kunturu, *n.* <*kunduru.* See குந்துருக்கம். (L.)

குந்துருக்கம் kunturukkam, *n.* <*kunduruka.* 1. Salai tree. See பறங்கிச்சாம்பிராணி. (மலை.) 2. Konkany resin. See வெள்ளைக்குங்கிலியம். (L.)

குந்துருகம் kunturukam, *n.* <id. See குந்துருக்கம். (I. P.)

குநகி kunaki, *n.* <*ku-nakhin.* One whose nails are rotten; சொத்தை நகமுள்ளவன். சிந்திய குநகியாவான் செம்பொனைத் திருடினானும் (சிவதரு. சுவர்க்கநரகசேட. 10).

குப்தி kupti, *n.* <*gupti.* Restraint. See குத்தி[3].

குப்பஅஞ்சனா kuppa-añcaṉā, *n.* <T. *kuppa-añcana.* Estimate of the produce of a field after the crop is gathered in, but before it is measured; நெற்பொலியின் மதிப்பு. (C. G.)

குப்பக்காட்டான் kuppa-k-kāṭṭāṉ, *n.* <குப்பம்[1]+. Rustic, boor; நாட்டுப்புறத்தான்.

குப்பக்காடு kuppa-k-kāṭu, *n.* <id+. Rural parts; village with straggling huts; பட்டிக்காடு.

குப்பங்குடியேற்று-தல் kuppaṅ-kuṭi-y-ēṟṟu-, *v. intr.* <id.+. To establish a *kuppam* or petty village; குக்கிராமம் உண்டாக்குதல். (J.)

குப்பத்தம் kuppattam, *n.* <T. *kuppa-attamu.* Mirasdar's share of the produce or yield; மிராசுதாரர்க்குரிய துண்டுவாரம். (C. G.)

குப்பம்[1] kuppam, *n.* <T. *kuppamu.* 1. Village; ஊர். (திவா.) 2. Small village of fishermen and other low caste people; செம்படவர் முதலியோர் வாழுஞ் சிற்றூர். 3. cf. Mhr. *kumpa.* Jungle; காடு. (பிங்.) 4. A coin from Acheen; அச்சுதேசத்து நாணயம். (W.)

குப்பம்[2] kuppam, *n.* cf. *gumpha.* [T. *kuppa*, K. *kuppe.*] 1. Multitude; கூட்டம். குப்ப மந்திரங்களெல்லாம் (குற்ற. தல. கவுற்சன. 8). 2. Heap; குவியல். *Tinn.*

குப்பமரம் kuppa-maram, *n.* prob. id.+. (Weav.) Vertical peg with a hole to fit in the rounded centre in the left end of the web beam; நெசவுக்கருவிவகை.

குப்பல் kuppal, *n.* cf. id. [T. *kuppa*, K. *kuppe.*] 1. Heap, as of manure; குவியல். 2. High ground, mound; மேடு. (திவா.) 3. Multitude, company; கூட்டம். (W.)

குப்பல்விளையாட்டு kuppal-viḷaiyāṭṭu, *n.* <குப்பல்+. A child's play in sand; பிள்ளைகளின் விளையாட்டுவகை.

குப்பா kuppā, *n.* prob. T. *kuppasamu.* The bag forming part of a shore-net; மீன்கள் வந்து விழும்படி தூரிவலையிற் சேர்த்துள்ள பை. *Loc.*

குப்பாசம் kuppācam, *n.* <*kurpāsa.* [T. *kuppasamu.*] 1. Coat, bodice, jacket, cuirass; மெய்ச்சட்டை. குப்பாசமிட்டுக் குறுக்கே கவசமிட்டு (தமிழ்நா. 192). 2. Slough, cast-off skin of serpent; பாம்புச்சட்டை. பாம்பு குப்பாசங் கழற்றின பொழுது (சி. சி. பாயி. பக். 42).

குப்பாயம் kuppāyam, *n.* <id. Jacket, coat; சட்டை. வெங்க ணேக்கிற் குப்பாய மிலேச்சனை (சீவக. 431).

குப்பான் kuppāṉ, *n.* prob. குப்பை. Fool; மூடன். *Loc.*

குப்பி[1] kuppi, *n.* <U. *kuppī.* [K. M. Tu. *kuppi.*] 1. Vial, flask, bottle; ஒருவகைக் குடுவை. (புறநா. 56, உரை.) 2. An ornament worn on hair-tuft. See சடைக்குச்சு. குருகையூரார் தந்த குப்பியுந் தொங்கலும் (குற்ற. குற. 124). 3. Ear-ring of a particular shape; குப்பிக்கடுக்கன். 4. Jewel-case; சிமிழ். குப்பியில் மாணிக்கம்போலே (ஈடு, 1, 8, 5). 5. A species of diamond; வயிரவகை. குருவிந்தமூன்றுங் குப்பிமூன்றும் (S. I. I., ii, 429). 6. Adjusting screw of a lute; யாழின் முறுக்காணி. (W.) 7. Ferrule at the end of a scabbard, on the horn of an ox, on the tusk of an elephant, on the end of a pestle; cover on the spout of a kettle; மாட்டுக்கொம்பு முதலியவற்றிற் செருகும் பூண். *Loc.* 8. cf. *gō*+பி. [T. *gobbi.*] Cowdung; சாணி. மார்கழி மாதத்தில் சிறுமிகள் குப்பி முட்டை தட்டுவார்கள்.

குப்பி[2] kuppi, *n.* <சங்கங்குப்பி. Smooth volkameria. See சங்கங்குப்பி. (தைலவ. தைல. 125.)

குப்பிக்கடுக்கன் kuppi-k-kaṭukkaṉ, *n.* <குப்பி[1]+. A kind of ear-ring; ஒருவகைக் கடுக்கன்.

குப்பிக்குட்சமைந்தகன்னி kuppikkuṭ-camainta-kaṉṉi, *n.* A prepared arsenic; பஞ்ச பட்சிப்பாஷாணம். (W.)

குப்பிச்சரக்கு kuppi-c-carakku, *n.* <குப்பி[1] +. Medicinal powder prepared in bottles; குப்பியில் வைத்து நீற்றிய சிந்தூரவகை.

குப்பிச்சாரம் kuppi-c-cāram, *n.* <id.+. Mineral salt; காசிச்சாரம். (W.)

குப்பித்தைலம் kuppi-t-tailam, *n.* <id.+. Medicinal oil seasoned by being buried in paddy for several months; நெற்குவியலிற் பலமாதங்களாகப் புதைத்துவைத்து வேகமாற்றிய தைலம்.

குப்பிப்பொங்கல் kuppi-p-poṅkal, *n.*<id. +. Feast observed by Hindu girls on the first day of the month of *Tai* when they prepare *poṅkal* using *kuppi* cakes as fuel; தைமாதம் முதல்தேதியில் குப்பியெருவை யெரித்துப் பொங்கல் சமைத்து உண்ணும் சிறுமிகளின் பண்டிகை.

குப்பிமா kuppi-mā, *n.* <id.+. Soap-stone; மாக்கல். (சங். அக.)

குப்பிமுடி-த்தல் kuppi-muṭi-, *v. intr.* <id. +. To fasten the *caṭai-k-kuccu* ornament in the hair-tuft; சடைக்குச்சு என்னும் அணியைக் கூந்தலில் வைத்துப் பின்னுதல். (W.)

குப்பிலவணம் kuppi-lavaṇam, *n.*<*kūpi*+. A mineral salt, *Fel vitri;* வளையலுப்பு. (W.)

குப்பிவயிரம் kuppi-vayiram, *n.* <குப்பி[1]+. A species of diamond; வயிரவகை. குப்பிவயிரம் இருபத்தாறும் பளிங்குவயிரம் நாலும் (S.I.I. ii, 431).

குப்பிவைப்பு kuppi-vaippu, *n.* <id.+. (W.) 1. Process of chemical preparation in an alembic; a kind of sublimation; ஓர் இரசாயன முறை. 2. Materials for chemical preparation; இரசாயனச்சரக்கு.

குப்புகுப்பெனல் kuppu-kuppeṉal, *n.* Onom. expr. signifying jerking, effervescing, bubbling, crackling noise, as of flames, etc.; தீ முதலியன மூண்டெழும்போது உண்டாகும் ஓர் ஒலிக்குறிப்பு.

குப்புழாய் kuppuḻāy, *n.* See குப்புழை. (J.)

குப்புழை kuppuḻai, *n.* A creeper whose leaves serve as food for cattle; கால்நடைகட்கு உணவாகும் இலைகளையுடைய கொடிவகை. (J.)

குப்புறக்கிட-த்தல் kuppuṟa-k-kiṭa-, *v. intr.* <குப்புற-+. To lie prone or face downwards; கவிழ்ந்துகிடத்தல். *Colloq.*

குப்புறத்தள்ளு-தல் kuppuṟa-t-taḷḷu-, *v. intr.* <id.+. To throw or push down; தலை கீழாக விழும்படி தள்ளுதல். *Colloq.*

குப்புறவிழு-தல் kuppuṟa-viḻu-, *v. intr.* <id.+. To trip and fall forward, to fall flat on the face; தலைகவிழ விழுதல்.

குப்புறு-தல் kuppuṟu-, *v. tr.* To traverse, cross; கடத்தல். குப்புறற் கருமையாலக் குலவரைச் சாரல்வைகி (கம்பரா. வரைக். 35).—*intr.* 1. To spring or leap across; பாய்ந்துகடத்தல். குறுமுனி குடித்தவேலை குப்புறுங் கொள்கைத்தாதல் (கம்பரா. கடறு. 15). (திவா.) 2. To fall headlong; தலைகவிழ விழுதல். கதிரவனும் . . . குடபாற் கடலிற் குப்புற் றான். 3. To hang one's face down; தலைகுனி தல்.

குப்பெனல் kuppeṉal, *n.* Expr. signifying suddenness; திடீரெனல். *Colloq.*

குப்பை[1] kuppai, *n.* cf. *gumpha.* [T. M. *kuppa*, K. *kuppe.*] 1. Collection, heap; குவியல். உப்பின் பெருங்குப்பை நீர்படியி னில்லாகும் (திரிகடு. 83). 2. Clump, group; கூட்டம். ஆம்பலங் குப்பை யை (கல்லா. 53, 28). 3. Stack of grain; தானியக் குவியல். குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை (பொருந. 244). 4. Sweepings, rubbish, refuse; சேத்தை. 5. Mound, high ground; மேடு. (சூடா.) 6. Dung, excrement, ordure; மலம். குப்பை எடுச் சிறவன்.

குப்பை[2] kuppai, *n.* <சதகுப்பை. Dill. See சதகுப்பை. (தைலவ. தைல. 24.)

குப்பைக்காட்சி kuppai-k-kāṭci, *n.* <குப் பை[1]+. Ground-rent payable by Pariahs for putting up huts on the lands; பறையர்நத்தத் தீர்வரிய நிலவரி. *Tinn.*

குப்பைக்காரன் kuppai-k-kāraṉ, *n.* <id. +. Street-sweeper, scavenger; குப்பை வாரு வோன்.

குப்பைக்காலன் kuppai-k-kālaṉ, *n.* <id. +. Auspicious person, one who brings good fortune, even as he comes; அதிர்ஷ்டக்காலுடைய வன். ஒருவன்செய்தது வாய்த்தவரைப் புக்கவாறே அவன் குப்பைக்காலன் காண் . . . என்னக்கடவது (ஈடு, 7, 9, 9).

குப்பைக்கீரை kuppai-k-kīrai, *n.* <id.+. 1. A weed of cotton soils, ***Amarantus viridis;*** குள்ளத் தண்டுக்கீரை. (K. R.) 2. A vigorous pot-herb much esteemed, ***Amarantus tristis;*** அறைக் கீரை. (M.M. 492.)

குப்பைகிளர்-த்தல் kuppai-kiḷar-, *v. intr.* <id.+. See குப்பைகிளை-. குப்பைகிளர்த்தன்ன செலவத்தை (திவ். திருவாய். 3, 9, 5).

குப்பைகிளறு-தல் kuppai-kiḷaṟu-, *v. intr.* <id.+. See குப்பைகிளை-. (ஈடு, 3, 9, 5).

குப்பைகிளை-த்தல் kuppai-kiḷai-, *v. intr.* <id.+. 1. To scratch up a heap of refuse, as a hen; குப்பையைக் கிண்டுதல். குப்பை கிளைப் போவாக் கோழிபோல் (நாலடி, 341). 2. To enquire into for exposing unsavoury details; குற்றம் வெளியாகத் துருவி விசாரித்தல்.

குப்பைகூளம் kuppai-kūḷam, *n.* <id.+. Sweepings, rubbish; சேத்தை முதலியன.

குப்பைப்பருத்தி kuppai-p-parutti, *n.* <id. +. A species of cotton; பருத்திவகை. (W.)

குப்பைமேடு kuppai-mēṭu, *n.* <id.+. Dung hill; heap of sweepings, of rubbish; கூளக்குவியல். (பிங்.)

குப்பைமேனி kuppai-mēṉi, *n.* <id.+. [M. *kuppamēni.*] Indian acalypha, s. sh., *Acalypha indica;* ஒருவகைப்பூடு. (M.M. 217.)

குப்பையன் kuppaiyaṉ, *n.* <id. Slovenly person, used in contempt; அழுக்கடைந்தவன் (W.)

குப்பைவாரி kuppai-vāri, *n.* <id.+. 1. Scavenger; குப்பைவாருவோன். 2. Stiff broom made of withes or bamboo, rake; சேத்தைகூட்டுங் கருவி.

குப்பைவை-த்தல் kuppai-vai-, *v. intr.* <id.+. To manure with sweepings, rubbish, refuse; உரம்போடுதல். *Loc.*

குபசுபா kupacupā, *n.* Strychnine tree. See எட்டி. (மலை.)

குபதன் kupataṉ, *n.* <*ku-patha.* One who treads the evil path; தீநெறியிற்செல்வோன். குணங் கோடிய குபதக் கொடுங்தேவர் (திருநூற். 66).

குபலம்[1] kupalam, *n.* <*ku-bala.* Weakness; வலியின்மை. (W.)

குபலம்[2] kupalam, *n.* <*ku-phala.* Loss, detriment; நஷ்டம். (W.)

குபார் kupār, *n.* <U. *gubār.* 1. Outcry, complaint; கூச்சலிடுகை. 2. Cholera; வாந்தி பேதி. *Loc.*

குபாரா kupārā, *n.* See குபார்.

குபிதன் kupitaṉ, *n.* <*kupita.* Angry man; கோபங் கொண்டவன். இகழ்ந்திட வவன் குபிதனும் (உத்தரரா. வரையெடு. 67).

குபீரெனல் kupīr-eṉal, *n.* Onom. expr. signifying burning fiercely, rushing suddenly,

flowing forcibly, gushing out in streams; வேக மாதற் குறிப்பு. *ஆலயத்தினிருந்து குபீர் குபீரென* (திருப்பு. 296).

குபீலெனல் kupīl-eṉal, *n.* Onom. See குபீரெனல்.

குபேரகம் kupērakam, *n.* perh. *kubēraka.* Indian shrubby copper leaf. See சின்னி. (மலை.)

குபேரசம்பத்து kupēra-campattu, *n.* < *Kubēra*+. Immense wealth, as that of Kubēra; குபேரனுக்கு உரியதுபோன்ற பெருஞ்செல்வம்.

குபேரன் kupēraṉ, *n.* < *Ku-bēra.* 1. Kubēra, the god of wealth, lord of Yakṣas, regent of the North, one of *aṣṭa-tikku-p-pālakar*, q.v.; அஷ்டதிக்குப்பாலகருள் வடதிசைக்கு உரியவனும் நிதிக்கிழவனும் இயக்கர்களுக்கு அதிபதியுமான தேவன். *ஒருவனே குபேர னின்னே டென்பிறந்தவர்கள்* (கம்பரா. சூர்ப். 53). 2. Rich man; பணக்காரன். *வாக்கினால் குபேரனுக்கினன்* (தமிழ்நா. 206). 3. Moon; சந்திரன். *சூரன் குலத்தோர் குபேரன் குலத்தோர்* (பாரத. இராச. 116).

குபேரிகை kupērikai, *n.* prob. *kubēraka.* Sickle leaf. See வட்டத்திருப்பி. (தைலவ. தைல. 4.)

குபையம் kupaiyam, *n.* A species of tick-trefoil. See சிறுபுள்ளடி. (மலை.)

கும்பகம்¹ kumpakam, *n.* < *kumbhaka.* (Yōga.) Retention, holding in of breath, suspension of breath, a part of *pirāṇāyāmam*, q.v.; பூரித்த வாயுவை உள்ளே நிறுத்தும் பிராணாயாம வகை. *ஆறுதல் கும்பகம்* (திருமந். 568).

கும்பகம்² kumpakam, *n.* (W.) 1. A prepared arsenic; தொட்டிப்பாஷாணம். 2. A mineral poison; காலாங்கபாஷாணம்.

கும்பகருணன் kumpa-karuṇaṉ, *n.* < *Kumbha-karṇa.* 1. Kumbhakarṇa, younger brother of Rāvaṇa, as pot-eared; இராவணன் தம்பியருள் ஒருவன். *கும்பகருணனுந் தோற்று முனக்கே பெருந்துயில்தான் தந்தானோ* (திவ். திருப்பா. 10). 2. Sound sleeper; பெருந்தூக்கமுள்ளவன். *Colloq.*

கும்பகலசம் kumpa-kalacam, *n.* < *kumbha* +. Pot of water used on ceremonial occasions, usually wound round with thread, placed on a heap of grain and purified by mantras; விசேடங்களில், நூல்சுற்றி மந்திரத்தாற் சுத்திசெய்து தானியக் குவியலின்மீது வைக்கும் மந்திரகலசம்.

கும்பகவிம்பம் kumpakavimpam, *n.* A prepared arsenic; தொட்டிப்பாஷாணம். (யாழ். அக.)

கும்பகாம்போதி kumpakāmpōti, *n.* perh. *kumbha-kāmbōji.* A musical mode; ஓர் இராகம். (W.)

கும்பகாமாலை kumpa-kāmālai, *n.* < *kumbha*+. A kind of jaundice; காமாலை நோய்வகை.

கும்பகாரன் kumpa-kāraṉ, *n.* < id.+. Potter; குயவன். (திவா.)

கும்பகோணம் kumpa-kōṇam, *n.* < *Kumbha-ghōṇa.* Kumbakonam, a place of pilgrimage in Tanjore District; தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருக்குடந்தை என்னும் ஸ்தலம்.

கும்பங்கொட்டு-தல் kumpaṅ-koṭṭu-, *v. intr.* < *kumbha*+ 1. To perform a ceremony to Durgā on recovery from small-pox or in fulfilment of a vow; துர்க்கைக்குப் பிரார்த்தனை செலுத்துதல். (W.) 2. To feed a glutton; பெருந்தீனி கொடுத்தல். *Loc.*

கும்பச்சுரை kumpa-c-curai, *n.* < id.+. A round gourd; சுரைவகை. (W.)

கும்பசம்பவன் kumpa-campavaṉ, *n.* < id. +*sam-bhava.* 1. Lit., pitcher-born. Agastya; [குடத்தினின்று பிறந்தவன்.] அகஸ்தியன். *கும்பசம்பவனுக்குபதேச நிகழ்த்தினுல்* (குற்றா. தல. புராணவர. 18). 2. Drōṇa; துரோணன்.

கும்பசலம் kumpa-calam, *n.* < id.+. Water in the sacred pot, sprinkled on people or sipped by them, believed to possess mystic virtues; மந்திரித்த கலசநீர்.

கும்பசன் kumpacaṉ, *n.* < *kumbha-ja.* See கும்பசம்பவன். (பிங்.)

கும்பஞ்சரி-தல் kumpañ-cari-, *v. intr.* < *kumbha*+. See கும்பஞ்சாய்-.

கும்பஞ்சாய்-தல் kumpañ-cāy-, *v. intr.* < id.+. To droop, as the head just at the point of death; மரணகாலத்துத் தலைசாய்ந்து விழுதல். (J.)

கும்பஞ்சான் kumpañcāṉ, *n.* cf. கும்பம்³. Indian jalap. See சிவதை. (மலை.)

கும்பஞ்செய்-தல் kumpañ-cey-, *v. intr.* < *kumbha*+. (W.) 1. To make a mound over a grave; சமாதியின்மேல் மண்ணைக் குவித்தல். 2. To inter the dead, especially such as have died of cholera; சவத்தைப் புதைத்தல்.

கும்பதட்சிணை kumpa-taṭciṇai, *n.* < id.+. Coin put into the sacred pot of water; மந்திர கும்பத்தில் இடும் நாணயம்.

கும்பதீபம் kumpa-tīpam, *n.* < id.+. Pot-shaped temple lamp used in worship; குடவடிவான ஆராதனைத்தீபம். (பாரத. ஒழிபி. 42.)

கும்பநிறுத்து-தல் kumpa-niṟuttu-, *v. intr.* <id. +. To set up, with mantras, a pot of water, on ceremonial occasions; மந்திரகும்பம் தாபித்தல்.

கும்பப்பிளவை kumpa-p-piḷavai, *n.* <id. +. Carbuncle on the upper part of the back; மேன்முதுகில் தோன்றும் பிளவை. (W.)

கும்பம்[1] kumpam, *n.* <*kumbha*. 1. Earthen pot, pitcher, jar; குடம். (திவா.) 2. See கும்பகலசம். 3. Frontal globe of an elephant's forehead; யானைமத்தகம். *கும்பத்தின் கரியைக் கோண்மா கொன்றென* (கம்பரா. இரணியன்வ. 125). (பிங்.) 4. Aquarius, a constellation of the zodiac; கும்பராசி. (பிங்.) 5. The 11th Indian month; மாசிமாதம். 6. Forehead; நெற்றி. (W.) 7. Upper part of the back between the shoulders; இருபுயங்கட்கும் இடையிலுள்ள முதுகின் மேற்பக்கம். (J.)

கும்பம்[2] kumpam, *n.* <*gumpha*. 1. Heap; குவியல். (W.) 2. A thousand million; நூறுகோடி. (திவா.)

கும்பம்[3] kumpam, *n.* 1. See பலண்டுருக பாஷாணம். 2. See தாலம்பபாஷாணம். 3. cf. கும்பஞ்சான். Indian jalap, l. cl., *Ipomaea turpethum;* சிவதை. (L.)

கும்பம்பாலை kumpam pālai, *n.* Ivory tree. See வெட்பாலை. (L.)

கும்பம்போடு-தல் kumpam-pōṭu-, *v. intr.* <*kumbha* +. See கும்பங்கொட்டு-. (W.)

கும்பமுனி kumpa-muṉi, *n.* <id. +. Sage Agastya, as pitcher-born; அகத்தியமுனிவர். *கும்பமுனி கும்பிடுந் தம்பிரானே* (திருப்பு. 57).

கும்பமெடு-த்தல் kumpam-eṭu-, *v. intr.* <id. +. To carry in procession sacred water-pot for a village deity; கிராமதேவதைக்காக நீர்க்கரகமெடுத்தல்.

கும்பயோனி kumpa-yōṉi, *n.* <id. +. See கும்பசம்பவன். *கும்பயோனி திருவருள் கூர்ந்து* (உபதேசகா. விபூதி. 145).

கும்பரத்தினம் kumpa-rattiṉam, *n.* <id. +. See கும்பக்கட்சிணை.

கும்பல்[1] kumpal, *n.* prob. *gumpha*. 1. Heap; குவியல். (W.) 2. Clump, cluster, tuft; திரள். (W.) 3. Company, crowd, collection, group, mass; கூட்டம். *கும்பலா வொருமிக்கக் கூட்டி* (இராமநா. உயுத். 33).

கும்பல்[2] kumpal, *n.* <கும்பு-. See கும்பனாற்றம்.

கும்பவஸ்திரம் kumpa-vastiram, *n.* <*kumbha* +. The cloth tied round the sacred pot of water; மந்திரகும்பத்திற்கட்டும் புதிய ஆடை.

கும்பவாதம் kumpa-vātam, *n.* <id. +. A disorder from flatulence; நோய்வகை.

கும்பளம் kumpaḷam, *n.* prob. *kumbhalā*. [K. M. Tu. *kumbaḷa*.] Wax-gourd. See கலியாணப்பூசணி. (M. M. 1021.)

கும்பளமோசு kumpaḷa-mōcu, *n.* <கும்பளா +. Tunny-fish cut and dried, brought from the Maldives; ஒருவகைக் கருவாடு. (J.)

கும்பளா kumpaḷā, *n.* prob. *kumbhalā*. Black rock-cod, silvery-grey, attaining 30 in. in length, *Sparus berda;* மீன்வகை. (W.)

கும்பற்காடு kumpaṟ-kāṭu, *n.* <*gumpha* +. Thick forest; அடர்ந்த காடு. *Loc.*

கும்பன் kumpaṉ, *n.* <*kumbha*. 1. Agastya; அகத்தியன். (கல்லா. 74.) 2. A chief of Śiva's host; சிவகணத் தலைவருள் ஒருவன். *பிறங்கிய நிகும்பன் கும்பன்* (கந்தபு. எமகூ. 15).

கும்பனாற்றம் kumpaṉāṟṟam, *n.* <கும்பல் + நாற்றம். Smell of charred rice, due to insufficient water for boiling; தீய்ந்துபோன உணவிலுண்டாகும் நாற்றம். *Colloq.*

கும்பஸ்தாபனம் kumpa-stāpaṉam, *n.* <*kumbha* +. Setting up a pot of water for worship; மந்திரகும்பம் நிறுவுகை.

கும்பா kumpā, *n.* <id. Urn-shaped silver or brass vessel; உண்கலவிசேடம். *கொப்பரை கிடாரகற் கும்பா* (பிரபோத. 11, 31).

கும்பாதிரி[1] kumpātiri, *n.* Lac tree, l. tr., *Schleichera trijuga;* பெரிய மரவகை. (L.)

கும்பாதிரி[2] kumpātiri, *n.* <Port. *compadre.* God-father, sponsor; ஞானத்தந்தையார். *R. C.*

கும்பாபிஷேகம் kumpāpiṣēkam, *n.* <*kumbha* + *abhi-ṣēka*. Ceremony of consecration or purification in a temple; கோயில்களில் பிரதிஷ்டைசெய்வதற்கும் சுத்திசெய்வதற்கும் உரிய சடங்கு.

கும்பாலத்தி kumpālatti, *n.* <id. + ஆரத்தி. Light placed on a pot used in temple worship; சுவாமிக்குமுன் எடுக்கும் கும்பதீபம். *கும்பாலத்திக்குத் திரி பரிமாறி* (கோயிலொ. 66).

கும்பாளை kumpāḷai, *n.* A paddy growing solely with the help of rain; மானவாரியாக விளையும் நெல்வகை. (G. Tj. D. 95.)

கும்பி[1] kumpi, *n.* <கும்பு-. 1. [T. *gummi*.] Mud, mire or slough emitting stinking smell; சேறு. (பிங்.) 2. [T. *kummu*.] Hot ashes; சுடுசாம்பல்.

கும்பி[2] kumpi, *n.* prob. *kumbhī*. Belly; வயிறு. ஒருசாண் கும்பி தூர்க்கின்ற கொடியரால் (பிர போத. 11, 13).

கும்பி[3] kumpi, *n.* <*kumbhin*. Elephant; யானை. (திவா.)

கும்பி[4] kumpi, *n.* <*kumbhī-pāka*. 1. See கும்பிபாகம். கும்பிநரகர்கள் (திவ். திருவாய். 3, 7, 8) 2. Hell; நரகம். (திவா.)

கும்பி[5] kumpi, *n.* <*gumpha*. [K. *gummi*.] Heap; குவியல். (W.)

கும்பி[6]**-த்தல்** kumpi-, *11 v. intr.* <*kumbha*. To hold or suppress the breath, suspend respiration, as a Yōgi; யோகமுறையில் மூச்சடக்குதல். உட்கும்பித்து வாங்கவே (திருமந். 572).

கும்பி[7] kumpi, *n.* Carey's myrtle bloom, l. tr., *Careya arborea*; மரவகை. (L.)

கும்பிகை kumpikai, *n.* prob. *kumbikā*. A kind of drum; வாத்திய வகை. (கம்பரா. பிரமாத். 5.)

கும்பிடரி kumpiṭari, *n.* <கும்பிடு+அரி. Bundle of sheaves presented by the ryot to the chief of a village or to the temple, as a mark of respect; பயிர்டுவோர் மிராசுதாரர்க்கேனும் ஆலயத்திற்கேனும் சமர்ப்பிக்கும் கதிர்க்கட்டு. *Loc.*

கும்பிடு[1]**-தல்** kumpiṭu-, *v. tr.* <கூம்பு-+இடு-. [M. *kumbiṭu*.] 1. To join hands in worship; to make obeisance with the hands joined and raised; கைகுவித்து வணங்குதல். தலையினாற் கும்பிட்டுக் கூத்துமாடி (தேவா. 727, 3). 2. To beg, solicit, entreat; கெஞ்சுதல். *Loc.*

கும்பிடு[2] kumpiṭu, *n.* <கும்பிடு-. Worship, obeisance with hands joined; வணக்கம். நான் கும்பிடும்போ தரைக்கும்பிடாதலால் (தாயு. கருணா. 6).

கும்பிடுகள்ளன் kumpiṭu-kaḷḷaṉ, *n.* <கும்பிடு-+. Servile hypocrite, cringing dissembler; வணக்கங்காட்டும் வஞ்சகன்.

கும்பிடுகிளிஞ்சில் kumpiṭu-kiḷiñcil, *n.* <id.+. A species of cockle, a bivalve shell; கிளிஞ்சில்வகை. (W.)

கும்பிடுசட்டி kumpiṭu-caṭṭi, *n.* <கும்பி[1]+இடு-+சட்டி. [T. *kumpaṭi*, K. *kumpaṭe*.] 1. Chafing-dish or portable furnace; கணப்புச்சட்டி. 2. Potsherd in which fire is kept by goldsmiths; தட்டார் நெருப்புவைக்கும் சட்டி. (W.)

கும்பிடுபூச்சி kumpiṭu-pūcci, *n.* <கும்பிடு-+. Praying insect, as holding its anterior legs in a manner suggesting hands clasped in prayer, *Mantis religiosa*; முன்னங்கால்களைக் கூட்டிக் கும்பிடுவதுபோல் தோன்றும் ஒருவகை இலைப்பூச்சி. (J.)

கும்பிடுபோடு-தல் kumpiṭu-pōṭu-, *v. tr.* <கும்பிடு+. To worship with joined hands; கைகுவித்து வணங்குதல்.

கும்பிநசம் kumpinacam, *n.* <*kumbhīnasa*. Snake; பாம்பு. (பிங்.)

கும்பிநாற்றம் kumpi-nāṟṟam, *n.* <கும்பி[1]+. See கும்பனாற்றம்.

கும்பிபாகம் kumpi-pākam, *n.* <*kumbhīpāka*. A hell in which the wicked are baked as if in potter's kiln, one of *eḻu-narakam*, q.v.; எழுநரகத்துள் ஒன்றனதும் பாவஞ்செய்தவரைத் குயச் சூளையிற் சுடுவதுபோல் வாட்டுவதுமாகிய நரகம். கும்பி பாக நரகத்திடைக் குளிப்ப (காசிக. சிவசன்மாவை. 31).

கும்பினி kumpiṉi, *n.* <E. *company*. See கும்பினியார். (I. M. P. Cg. 352.)

கும்பினியார் kumpiṉiyār, *n.* <id. The East India Company, as the Government; இந்திய அரசியலை நடத்திவந்த ஆங்கில வியாபாரக்கூட்டத்தார்.

கும்பீடு kumpīṭu, *n.* <கும்பிடு-. Worship. See கும்பிடு.

கும்பு[1]**-தல்** kumpu-, *5 v. intr.* To become overburnt, charred, smoked, as food when boiled with insufficient water; சமைத்த உணவு தீய்ந்துபோதல்.

கும்பு[2] kumpu, *n.* <T. *gumpu*. cf. *gumpha*. Crowd, collection, group; திரள்.

கும்பை[1] kumpai, *n.* 1. White emetic-nut, s. tr., *Gardenia lucida*; சிறுமரம். (J.) 2. Broad gardenia m. tr., *Gardenia latifolia*; பெருங்கம்பளிமரம். 3. Dikmali gum-plant, s. tr., *Gardenia gummifera*; திக்காமல்லிவகை. (J.)

கும்பை[2] kumpai, *n.* [T. *kompa*.] Settlement, especially of Pañcamas; சேரி. பறைக் கும்பை. *Loc.*

கும்பை[3] kumpai, *n.* <*Kumbha-ghōṇa*. Kumbakonam. See கும்பகோணம். (யாழ். அக.)

கும்மக்கு kummakku, *n.* <U. *kumak*. See குமக்கு[2].

கும்மட்டம்[1] kummaṭṭam, *n.* [T. *gummeṭa*.] A small drum; ஒருவகைச் சிறுபறை. (W.)

கும்மட்டம்[2] kummaṭṭam, *n.* <U. *gummat*. 1. Globe lights made of paper, Chinese lantern; காகிதத்தாலான கூட்டுவிளக்கு. 2. Cupola,

dome; விமானக்கூண்டு. 3. Arch, vault, arched roof; கட்டடவளைவு. (R.)

கும்மட்டி[1] kummaṭṭi, *n.* cf. கும்மாளம். 1. Romping, jumping; குதிக்கை. 2. A rustic dance; தம்மாளமடித்து ஆடுங் கூத்து. (J.)

கும்மட்டி[2] kummaṭṭi, *n.* See தும்மட்டம்[1]. (W.)

கும்மட்டி[3] kummaṭṭi, *n.* [T. *kumpaṭi*, K. *kumpaṭe.*] Chafing-dish; நெருப்புவைக்குஞ் சட்டி. (திவ். திருக்குறுந். 5, வ்யா.)

கும்மட்டி[4] kummaṭṭi, *n.* [M. *kummaṭṭi.*] A small water-melon. See கொம்மட்டி. (பதார்த்த. 700.)

கும்மட்டிகுத்து-தல் kummaṭṭi-kuttu-, *v. intr.* <கும்மட்டி[1]+. To jump and romp about; குதித்து விளையாடுதல். (W.)

கும்மல்[1] kummal, *n.* <கும்மு-. Washing cloth by plunging it into water and pressing it with hands; ஆடையை நனைத்து நெம்புகை.

கும்மல்[2] kummal, *n.* See தும்பல்[1]. *Loc.*

கும்மல்[3] kummal, *n.* cf. குமல். Sickle; அரிவாள். (W.)

கும்மலி[1]-த்தல் kummali-, *11 v. intr.* <*kumāla.* To revel, sport, flutter; விளையாடுதல். குருகினங் கூடியாங்கே கும்மலித் திறகுலர்த்தி (தேவா. 511, 8).

கும்மலி[2] kummali, *n.* Corpulent, stout woman; பருத்தவள். (J.)

கும்மாயம் kummāyam, *n.* 1. Well-boiled dhal; குழையச்சமைத்த பருப்பு. பயற்றுத்தன்மை கெடாது கும்மாய மியற்றி (மணி. 27, 185). 2. [M. *kummāyam.*] Lime, mortar; சுண்ணும்பு. *Loc.*

கும்மாளங்கொட்டு-தல் kummāḷaṅ-koṭṭu-, *v. intr.* <கும்மாளம்+. To jump and move sportively; குதித்து விளையாடுதல்.

கும்மாளம் kummāḷam, *n.* <*kumāla.* 1. Jumping, romping, moving sportively, as children, calves, etc.; குதித்து விளையாடுகை. 2. A rustic dance; குதித்தாடும் ஓர் அநாகரிகக்கூத்து. (J.)

கும்மி kummi, *n.* <கொம்மை. [M. *kummi.*] 1. Dance with clapping of hands to time and singing, especially among girls; மகளிர் கைகொட்டிப் பாடியாடும் விளையாட்டு. 2. Poem composed in a metre adapted to *kummi* dance; கும்மிப்பாட்டு.

கும்மியடி-த்தல் kummi-y-aṭi-, *v. intr.* <கும்மி+. To play the *kummi* dance; பாடிக்கொண்டு கைகொட்டியாடுதல். *Colloq.*

கும்மிருட்டு kummiruṭṭu, *n.* <கும் onom. +இருட்டு. Cimmerian, thick darkness; காரிருள்.

கும்மு-தல் kummu-, *5 v. tr.* [M. *kummu.*] 1. See துமுக்கு-. *Colloq.* 2. To pound in a mortar gently; உரலில் மெல்லக்குற்றுதல். 3. To knead; கையாற் பிசைந்து மெல்லிதாக்குதல்.

கும்மெனல் kummeṉal, *n.* Onom. expr. signifying being overwhelmed, as by excessive darkness, or being confused, as by a sound in the ears when partly filled with water; இருளடர்ச்சி காதடைப்பு முதலியவற்றைக் கூறுமிடத்து வரும் குறிப்பு. காது கும்மென அடைத்துக்கொண்டது.

குமஞ்சம் kumañcam, *n.* 1. Salai tree, l. tr., *Boswellia serrata typica;* பறங்கிச்சாம்பிராணி. 2. Frankincense; தூபவர்க்கம். (W.)

குமஞ்சான் kumañcāṉ, *n.* See குமஞ்சம்.

குமட்டு-தல் kumaṭṭu-, *5 v. intr.* 1. To have vomiting sensation, keck; வாந்திக்குவருதல். 2. To retch from over-eating; நிறையவுண்டு தெவிட்டுதல். பொழிந்த மாநிலம் புற்றாக் குமட்டிய புனிற்று (கம்பரா. கார்கா. 47).—*tr.* 1. To vomit, eject; கக்குதல். வடவை குமட்டி யெதிரெடுத்து வயங்குஞ் சூலப்படை (காசிக. வயிர. 22). 2. To loathe, detest; to feel repugnant about; அருவருத்தல். (W.)

குமட்டு[2] kumaṭṭu, *n.* <குமட்டு-. [K. *kumuṭu.*] Vomiting with loathing, kecking; அருவருப்பினால் உண்டாகும் வாந்தி. அதை உண்டதும் ஒருகுமட்டுக் குமட்டியது.

குமட்டூர்க்கண்ணனார் kumaṭṭūr-k-kaṇṇaṉār, *n.* The author of the second ten of Patiṟṟu-p-pattu; பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தினை இயற்றிய புலவர்.

குமடு kumaṭu, *n.* Cheek; கன்னம். (W.)

குமடெறிவான் kumaṭeṟivāṉ, *n.* A kind of camphor; கருப்பூரவகை. (சிலப். 14, 109, உரை.)

குமண்டை kumaṇṭai, *n.* perh. *ku*+மண்டை. 1. A dance of delight, merry dance; ஒருவகை மகிழ்ச்சிக்கூத்து. இட்டகுமண்டைய பேய் . . . உகளித்தனவே (பாரத. பதின்மூம். 51). 2. Head-strong haughty deed; செருக்குமேலிட்டுச் செய்யும் செயல். தக்கனார் கொண்ட வேள்விக் குமண்டையது கெட (தேவா. 441, 5).

குமண்டையிடு-தல் kumaṇṭai-y-iṭu-, *v. intr.* <குமண்டை+. 1. To cut capers; to leap for joy; மகிழ்ச்சியாற் குதித்தல். கூடு முயிருங் குமண்டையிடக் குனித்து (திருவாச. 40, 1). 2. To retch from over-eating; நிறையவுண்டு தெவிட்டுதல். (யாழ். அக.)

குமணன் kumaṇaṉ, *n.* An ancient chief, who was so liberal as to give away his sword to a needy poet for cutting his head off and taking it over to his brother who had set a price on it; தன்தலையை வெட்டி அதனை விரும்பிய தம்பி கையிற் கொடுத்து வேண்டியபொருளைப் பெறுமாறு தன்னிடம் இரந்த புலவனுக்குத் தன் வாளையீந்த ஒரு பெருவள்ளல். (புறநா. 164.)

குமதி kumati, *n.* <*ku-mati*. A perverse intellect, evil-minded person; அறிவுகேடன். குமதியாயினும் . . . பேர்சுமதி யென்பரால் (சேதுபு. கவி சம்பு. 18).

குமர் kumar, *n.* <*kumārī*. 1. Virginity; கன்னிமை. குமரிருக்குஞ் சசிபோல்வாள் (குற்று. தல தருமசாமி. 47). 2. Virgin; grown-up unmarried girl; கன்னி. *Loc.* 3. Impregnability, unsullied condition; அழியாத்தன்மை. குமருறப் பிணித்த பைம்பொற்கொடி (பாரத. இந்திரப். 32).

குமரகச்சாணம் kumara-kaccāṇam, *n.* cf. *kumara-gadiyāṇaka*. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. iii, 115).

குமரகண்டம் kumara-kaṇṭam, *n.* Epileptic fits attended with violent convulsions; ஒருவகை வலிப்பு. குமரகண்ட வலிப்புவருஞ் சிலநேரம் (தனிப்பா. i, 264, 2).

குமரகண்டன் kumara-kaṇṭaṉ, *n.* See குமரகண்டம். குமரகண்டன் முதலியன விடும்பையினைப் பெருக்கும் (சேதுபு. துராசார. 35).

குமரகம் kumarakam, *n.* <*kumāraka*. Garlic pear. See மாவிலிங்கை. (மலை.)

குமரகுருபரர் kumara-kuru-parar, *n.* <*kumāra+guru+para*. The author of Nīti-neri-viḷakkam and other poems, 17th c.; நீதிநெறி விளக்கம் முதலிய பிரபந்தங்களியற்றியவரும் பதினேழாம் நூற்றண்டில் விளங்கியவருமான ஆசிரியர்.

குமரகோட்டம் kumara-kōṭṭam, *n.* <id. +. A shrine in Conjeevaram sacred to Skanda; கச்சியிலுள்ள முருகக்கடவுள் கோயில். குமரகோட்டம்வா ழாறுமாமுகப்பிரான் (கந்தபு. கடவுள் 18).

குமரதண்டம் kumara-taṇṭam, *n.* <id. +. Army of gods under Skanda's command; குமரக்கடவுளைச் சேனபதியாகக்கொண்ட தேவர்படை. குமரதண்டம் புகுந்தீண்டிய வெள்ளம் (திவ். திருப்பள்ளி. 6).

குமரப்பாரை kumarappārai, *n.* Horse mackerel, glossy green, attaining 5 ft. in length, *Caranx rottleri;* பெரிய கடல்மீன்வகை. (M. M. 668.)

குமரம்[1] kumaram, *n.* perh. *kumāra*. Hornless animal; கொம்பில்லாத விலங்கு. (சூடா)

குமரம்[2] kumaram, *n.* <குமரன். A fictitious work on Tamil grammar believed to have perished; பூர்வத்திலிருந்ததாகச் சிலர் கருதுகின்ற ஓர் தமிழ் இலக்கண நூல்.

குமரமூக்கன் kumara-mūkkaṉ, *n.* Krait. See கொம்பேறிமூக்கன்.

குமரவேள் kumara-vēḷ, *n.* <*Ku-māra*+. Skanda; முருகக்கடவுள். வலவனை . . . குமரவேள் முன்னருய்த்தான் (கந்தபு. ஏமகூட. 6)

குமரன் kumaraṉ, *n.* <*ku-māra*. 1. Young man, youth; இளைஞன். இருந்த குலக்குமரர்தமை . . பருக நோக்கு (கம்பரா. மிதிலைக். 157). 2. Son; புதல்வன். வாசவற்காகிய குமரன் (பாரத. பதின்மூன். 191). 3. Skanda, as son of Śiva; முருகன். குன்றுதோறாடிய குமரற் போற்றுவாம் (கந்தபு. கடவுள். 16). 4. Bhairava; வைரவன். (சூடா.)

குமரி[1] kumari, *n.* <*kumārī*. 1. Virgin, maid; கன்னி. குமரிமணஞ் செய்துகொண்டு (திவ். பெரியாழ். 3, 8, 3). 2. Grown-up unmarried girl; பருவமடைந்த பெண். 3. Daughter; புதல்வி. தக்கனீன்ற . . . குமரியான (கந்தபு. பாயி. 57). 4. Durgā; துர்க்கை. விழிநுதற் குமரி (சிலப். 11, 214). 5. A river. See குமரியாறு. வடவேங்கடந் தென்குமரி (தொல். பாயி.). 6. Cape Comorin; குமரிமுனை. 7. Sacred waters at Cape Comorin; கன்னியாகுமரி தீர்த்தம். தென்றிசைக்குமரி யாடியவருவோள் (மணி. 13, 7) 8. Perpetual youthhood; uncorrupt, unspoilt condition; அழிவின்மை. குமரிக் கூட்டிற் கொழும் பல்லுணவு (சிலப். 10, 123). 9. Aloe; கற்றாழை. (திவா)

குமரி[2] kumari, *n.* Cultivation in hills; மலைநிலத்துச் செய்யும் விவசாயம்.

குமரிக்கடல் kumari-k-kaṭal, *n.* <குமரி[1]+. Sea near *Kumari;* குமரியருகிலுள்ள கடல். (சிலப். 8, 1, உரை.)

குமரிக்கோடு kumari-k-kōṭu, *n.* <id. +. A mountain or banks of a river said to have existed near *Kumari:* குமரிக்கடற்பக்கத்திருந்த ஒரு மலை. குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள (சிலப். 11, 20).

குமரிகண்டம் kumari-kaṇṭam, *n.* <id. + *khaṇḍa*. India, one of *nava-kaṇṭam*, q.v., as bearing the name of Kumari, Bharata's daughter; பரதசக்ரவர்த்தியால் தன்பெண்ணான குமரியின் பெயரிடப்பெற்றதும் பாரதவருடத்தின் ஒரு பகுதியும் ஆகிய பூபாகம். மெய்ந்நெறி சேர்வது குமரிகண்டம் (கந்தபு. அண்டகோ. 47)

குமரிச்சுறா kumari-c-cuṟā, *n.* Zebra shark, tawny, attaining 15 ft. in length, *Stegostoma tigrinum;* 15 அடி நீளமுள்ள குரங்கன்சுறாமீன். (M.M. 851.)

குமரிச்சேர்ப்பன் kumari-c-cērppaṉ, *n.* <குமரி+. The Pāṇḍya king, as lord of Cape Comorin; குமரித்துறைக்குரிய பாண்டியன். (திவா.)

குமரிஞாழல் kumari-ñāḻal, *n.* <id. +. (L.) 1. Jasmine, *Jasminum;* மல்லிகை. 2. Cinnamon. See சங்கபுட்பி.

குமரித்துறை kumari-t-tuṟai, *n.* <id. +. The bathing-ghat at Cape Comorin; கன்னியா குமரி தீர்த்தத்துறை. பொருநைத்துறைவியொடு குமரித் துறையவள் புதுநீராடுகவே (மீனாட். பிள்ளைத். நீராடற். 10).

குமரித்தெய்வம் kumari-t-teyvam, *n.* <id. +. The goddess Kumari at Cape Comorin; கன்னியாகுமரித்தேவதை.

குமரிப்பகவதி kumari-p-pakavati, *n.* <id. +. See குமரித்தெய்வம்.

குமரிப்படை kumari-p-paṭai, *n.* <id. +. Invincible army; அழியாச்சேனை. குமரிப்படைதழீஇய (புறநா. 294).

குமரிப்போர் kumari-p-pōr, *n.* <id. +. First military engagement of a prince. See கன்னிப்போர். குமரிப்போருள் . . . கொன்றதன்றே (சீவக. 806).

குமரிமதில் kumari-matil, *n.* <id. +. Impregnable fortress; அழியாக்கோட்டை. (சீவக. 336.)

குமரிமூ-த்தல் kumari-mū-, *v. intr.* <id. +. 1. To live and die as a virgin; to live one's days in virginity; கன்னிகையாகவேயிருந்து மூப் படைதல். குமரிமூத்தவக் கொடுங்குழை நல்லாள் (மணி. 22, 143). 2. To be wasted, to lie fruitless; பயனின்றிக் கழிதல். குமரி மூத்தவென் பாத்திரம் (மணி. 14, 77).

குமரியாடு-தல் kumari-y-āṭu-, *v. intr.* <id. +. 1. To perform sacred ablutions at Cape Comorin; கன்னியாகுமரிநீரில் ஸ்நானம் தீர்த்தசிராத் தம் முதலியவை செய்தல். தென்றிசைக் குமரியாடிய வருவோள் (மணி 13, 7). 2. To copulate with a virgin; கன்னியோடு மருவுதல். சிந்தை நலிகின்ற திரு நீர்க் குமரியாட (சீவக. 2020).

குமரியாறு kumari-yāṟu, *n.* <id. +. The Kumari river mentioned in Tamil literature as having been once the southern boundary of the Tamil land, and afterwards submerged in the Indian ocean; தமிழகத்துக்குத் தெற்கெல் லையாய்க் கடலாற் கொள்ளப்பட்டதாகக் கூறப்படுங் கன்னியாறு. குமரியாறும் பனைநாட்டோடு கெடுவதற்கு முன்னையது (தொல். பொ. 649, உரை)

குமரியிருட்டு kumari-y-iruṭṭu, *n.* <id. +. Darkness just before dawn. See கன்னியிருட்டு. (W.)

குமரிரு-த்தல் kumar-iru-, *v. intr.* <குமர் +. To pass away unused; to be wasted; வீணே கழிதல். ஆத்மகுணங்கள் குமரிருந்துபோமித் தனை (ஈடு, 2, 8, 1).

குமரிருட்டு kumar-iruṭṭu, *n.* <id. +. Darkness just before dawn. See கன்னியிருட்டு. *Colloq.*

குமரிவாழை kumari-vāḻai, *n.* <குமரி +. Young plantain that has not yet yielded; ஈனாத இளவாழை. குமரிவாழையின் குருத்தகம் விரித்து (சிலப். 16, 42).

குமரேசசதகம் kumarēca-catakam, *n.* <*Kumarēśa* +. Ethical poem of 100 stanzas addressing Kumarēcaṉ, by Kuru-pāta-tācar; குமரேசனை முன்னிலைப்படுத்திக் குருபாததாசர் இயற் றிய சதகநூல்.

குமல் kumal, *n.* cf. கும்மல்[3]. Sickle; அரிவாள். (அக. நி.)

குமலி kumali, *n.* cf. குமிலி, குமுலி. Basil. See துளசி. (மலை.)

குமளம்பாசு kumaḷampācu, *n.* Tawny-fish, bluish, attaining 2 ft. in length, *Thynnus thunnina;* இரண்டடி நீளமுள்ள கடல்மீன்வகை.

குமஸ்தா kumastā, *n.* <U. *gumāshta.* See குமாஸ்தா.

குமார்க்கம் ku-mārkkam, *n.* <*ku-mārga.* Wrong course, evil ways; தீநெறி.

குமாரசுவாமி kumāra-cuvāmi, *n.* <*Kumāra* +. Skanda, as the son of Śiva; முருகக் கடவுள். நக்கீரனரால் உரைகண்டு குமாரசுவாமியாற் கேட்கப்பட்டதென்க (இறை. 1, உரை, பக் 8).

குமாரசுவாமியம் kumāra-cuvāmiyam, *n.* <*Kumārasvāmiya.* A treatise in astrology by Nallūr-k-kumāracuvāmi-tēcikar; நல்லூர்க் குமார சுவாமிதேசிகர் இயற்றிய ஒரு சோதிடநூல்.

குமாரத்தி kumāratti, *n.* <*kumārī.* Daughter; மகள்.

குமாரதந்திரம் kumāra-tantiram, *n.* <*Kumāra* +. An Agama in Sanskrit dealing with Skanda and His worship; முருகக்கடவுளின் வழி பாட்டுநெறியைத் தெரிவிக்கும் ஆகமம். குமாரதந்திர நெறிப்படி . . . பூசனைபுரிந்தனர் (கந்தபு. மீட்சி. 21).

குமாரதெய்வம் kumāra-teyvam, *n.* <id. +. See குமாரசுவாமி. அவன் குமாரதெய்வம் (இறை. 1, உரை, பக். 7).

குமாரப்பல்லக்கு kumāra-p-pallakku, *n.* <id. +. Small palankeen; சிறுபல்லக்கு. (W.)

குமாரபோசனம் kumāra-pōcaṉam, *n.* <id.+. Feast given to a Brahman boy along with some bachelors just before his initiation to Brahmanhood; உபநயனச்சடங்கில் காயத்திரி உபதேசஞ்செய்வதற்குமுன் அச்சடங்குபெறும் மாணவனுக்கு உடனொத்த சில பிரமசாரிகளோடு அளிக்கும் உணவு.

குமாரம் kumāram, *n.* Gold melted and refined; உருக்கி ஓடவிட்ட பொன். (யாழ். அக.)

குமாரமடைப்பள்ளி kumāra-maṭai-p-paḷḷi, *n.*<*ku-māra*+. A sub-caste of *maṭai-p-paḷḷi* who got their name from their ancestors having been cooks of princes; இராச குமாரர்க்குச் சமையல்செய்த்தாரது மரபில்வந்த சாதியார். (J.)

குமாரராஜா kumāra-rājā, *n.* <id.+. Prince; இராசபுத்திரன்.

குமாரவர்க்கம் kumāra-varkkam, *n.* <id. +. Lineage, progeny; வமிசம். (W.)

குமாரன் kumāraṉ, *n.* <*ku-māra.* 1. Son; புதல்வன். 2. Young man; இளைஞன். 3. Skanda, as son of Śiva; முருகக்கடவுள். கோயில்செல்லுபு குமார னிருந்தான் (கந்தபு. குமார. 16.)

குமாரி kumāri, *n.* <*kumārī.* 1. Daughter; புதல்வி. 2. Kāḷī; காளி. (W.) 3. Woman of perpetual youth, ever in the prime of life; அழியா இளமையினள். அமர்செய் கயற்கட் குமாரியைக் காக்க (மீனாட். பிள்ளைத். காப்பு. 4). 4. Solvent of gold; சுவர்ணபேதி. (W.)

குமான் kumāṉ, *n.*<U. *gumān.* Suspicion; சந்தேகம். (C. G.)

குமானிநபர் kumāṉi-napar, *n.* <U. *gumānī*+. See குமானியாசாமி.

குமானியாசாமி kumāṉi-y-ācāmi, *n.* <id. +. Suspected character, suspect; சந்தேகிக்கப்பட்டவன். (C. G.)

குமாஸ்தா kumāstā, *n.* <U. *gumāshta.* 1. Agent, steward; காரியஸ்தன். 2. Writer, clerk; எழுத்துமுதலிய வேலைபார்க்கும் கீழ் உத்தியோகஸ்தன்.

குமி[1]-தல் kumi-, *4 v. intr.* <குவி-. [T. *gumi,* M. *kumi.*] To accumulate; to be heaped up; to crowd; திரளுதல். *Colloq.*

குமி[2]-த்தல் kumi-, *11 v. tr.* Caus. of குமி[1]-. To accumulate, heap up, gather; திரளச்செய்தல்.

குமி[3]-த்தல் kumi-, *11 v. tr.* <குமை[2]-. To over-pound, as rice; அரிசிமுதலியவற்றை அதிகமாகக் குற்றுதல். (W.)

குமிகை kumikai, *n.* 1. Immature sesamum; முதிராத எள்ளு. (பிங்.) 2. White sesamum; வெள்ளெள்ளு. (மலை.)

குமிட்டி-த்தல் kumiṭṭi-, *11 v. intr.* <குமிழ்-. To swell, form, as a tumour: குமிழ் போலாதல். (W.)

குமிடக்கல் kumiṭa-k-kal, *n.* Iron dross; கிட்டம். (W.)

குமிண்சிரிப்பு kumiṇ-cirippu, *n.*<குமிழ்+. Gentle smile; புன்சிரிப்பு. குனித்த புருவமுங் குமிண்சிரிப்பும் (தேவா. 11, 4).

குமிண்டி kumiṇṭi, *n.* A kind of greens; கீரைவகை. குமிண்டியும் பண்ணையுங் கூடமுளைக்கின்ற (தனிப்பா i, 142, 38).

குமிதம் kumitam, *n.* <*kumudi.* See குமிதிகம். (மு. அ.)

குமிதிகம் kumitikam, *n.* <*kumudikā.* Teak. See தேக்கு. (மலை.)

குமிலம் kumilam, *n.* prob. *tumula.* Uproar, tumult, great noise, roar, acclamation, shout; பேரொலி. (பிங்.)

குமிலவோதை kumila-v-ōtai, *n.* <குமிலம்+. Tremendous noise, uproar; பேராரவாரம். சாப நாணொறு குமில வோதை (இரகு. யாக. 87).

குமிலி kumili, *n.* cf. குமலி, குமுலி. Sacred basil. See துளசி. (மலை.)

குமிழ்[1]-த்தல் kumiḻ-, *11 v. intr.* 1. To grow into a conical shape; to be spherical, globular; to form into bubble; குமிழ்ப்படுதல். செழுங்குருதி கொழித்திழிந்து குமிழ்த்தெறிய (திவ். பெரியாழ். 4, 8, 7). 2. To stand on end, as hair; to horripilate; மயிர்சிலிர்த்தல். (பிங்.)—*tr.* 1. To cause to sound; ஒலிக்கச்செய்தல். அதிர்முகமுடைய வலம்புரி குமிழ்த்து (திவ். பெரியாழ். 4, 7, 3). 2. To winnow; கொழித்தல். (தைலவ. வைத்திய. 12.)

குமிழ்[2] kumiḻ, *n.* <குமிழ்-. 1. Water bubble; நீர்க்குமிழி. (பிங்.) 2. [M. *kumiḻ.*] Knob, as of wooden sandals; stud; pommel; anything round or convex, as the head of a nail; உருண்டு திரண்ட வடிவம். (W.) 3. Hump of an ox; எருத்தின் திமில். (W.) 4. Swelling in the sole of the foot; உள்ளங்கால் வீக்கம். (W.) 5. [M. *kumiḻ.*] Small Cashmere tree. See நிலக்குமிழ். 6. [T. *gumudu.*] Coomb teak. See பெருங்குமிழ். (தொல். எழுத். 386.) 7. Mucilaginous shrub that yields water, *Gruelina parviflora;* நீரைவடிக்கும் செடிவகை. 8. Kaus, a large and coarse grass. See நாணல். (மலை.)

குமிழ்க்கட்டை kumiḻ-k-kaṭṭai, *n.* <குமிழ் +. Knobbed or studded wooden sandals; பாதக்குறடு.

குமிழ்க்கொடி kumiḻ-k-koṭi, *n.* <id.+. Small Cashmere tree. See நிலக்குமிழ்.

குமிழ்குமிழ்-த்தல் kumiḻ-kumiḻ-, *v. tr.* <id.+. To hide from others, hush; பிறர்க்குத் தோன்றாமல் மறைத்தல். கோட்டமின் முற்றங் குமிழ் குமிழ்த்திரைப்ப (பெருங். உஞ்சைக். 34, 184).

குமிழ்ப்பிடி kumiḻ-p-piṭi, *n.* <id.+. Rounded handle, knob; கதவுமுதலியவற்றில் தைத்த குமிழ்க்கைப்பிடி. *Colloq.*

குமிழ்ப்பு kumiḻppu, *n.* <குமிழ்-. 1. Bubbling up; குமிழெழுகை. 2. Hairs standing on end, horripilation; மயிர்ச்சிலிர்ப்பு. (உரி. நி.) 3. Winnowing; கொழிக்கை. (தைலவ. வைத்திய. 12.)

குமிழ்ரோகம் kumiḻ-rōkam, *n.* <குமிழ்+. Tubercle in the cornea of the eye; குமிழ்போற் படலத்தைப் புடைப்பிக்குங் கண்ணோய். (சீவரட். 270.)

குமிழ்வண்டு kumiḻ-vaṇṭu, *n.* <id.+. Carpenter bee, *Xylocopa tenisocapa;* வண்டு வகை. (W.)

குமிழஞ்சுளுந்து kumiḻañ-cuḷuntu, *n.* <id. +. See குமிழஞ்சூழ். *Colloq.*

குமிழஞ்சூழ் kumiḻañ-cūḻ, *n.* <id.+. Torches made of *kumiḻ* sticks; குமிழங்கழியில் ஏற்றும் தீப்பந்தம். (சங். அக.)

குமிழாணி kumiḻ-āṇi, *n.* <id.+. 1. Stud-nail; தலையிற் குமிழ்கொண்ட ஆணி. (C. E. M.) 2. See குமிழ்ப்பிடி. (W.)

குமிழி[1] kumiḻi, *n.* <குமிழ்-. 1. Bubble; நீர்முதலியவற்றிலெழுங் குமிழ். குமிழிவிட் டெமிழ் குருதி (சீவக. 2239). 2. Boss; knob, as of wooden sandals; பாதக்குறட்டின் குமிழ். (J.) 3. Spring, as the source of a stream; ஊற்றுவாய். கின்ண கத்தில் குமிழிக்கீழே சாவிபோமாபோலே (ஈடு, 5, 3, 7).

குமிழி[2]**-த்தல்** kumiḻi-, *11 v. intr.* <குமிழி. To bubble; to rise in bubbles, in pustules; குமிழி கொள்ளுதல். (W.)

குமிழிநீருண்ணு-தல் kumiḻi-nīr-uṇṇu-, *v. intr.* <id.+. Lit., to dive deep causing bubbles. To dive deep into a subject; ஒரு விஷயத்தில் கருத்து முழ்கிநிற்றல். கிடாம்பியாச்சானோடு அல்லாதாரோடு வாசியறக் குமிழ்நீருண்டது (ஈடு, 10, 6, 1).

குமிறு-தல் kumiṟu-, *5 v. intr.* <குமுறு-. To resound, roar; ஒலித்தல். (சூடா.)

குமின்குமினெனல் kumiṉ-kumiṉ-eṉal, *n.* Onom. expr. signifying tinkling sound, as of anklets; சிலம்புமுதலிய அணிகலன்களின் ஒலிக் குறிப்பு. மின்னனார் குமின் குமின் னலங்காரம் பெறந டஞ்செய் (கம்பரங். 6).

குமுக்கு[1] kumukku, *n.* 1. Whole, total, lump, gross, wholesale; மொத்தம். பண்டங்களை யெல்லாம் குமுக்காய் வாங்கினேன். (W.) 2. Lion's share; large number; considerable quantity; பெருந்தொகை. (W.) 3. Band, clan, crowd, party; கூட்டம். *Loc.*

குமுக்கு[2] kumukku, *n.* <U. *kumak.* Aid, help, assistance; உதவி. குமுக்குப்பண்ண. (W.)

குமுக்கு[3] kumukku, *n.* Secrecy. See கமுக்கம்.

குமுக்கு[1]**-தல்** kumukku-, *5 v. tr.* Caus. of குமுங்கு-. 1. [T. *gumuku.*] To beat with fists, pommel; ஊமைக்காயம்படக் கையாற் குத்தல். 2. To wash cloth by wetting and gently pressing it with hands; ஆடை கும்முதல். துணியைச் சற்றுக் குமுக்கு.

குமுகுமு-த்தல் kumu-kumu-, *11 v. intr.* cf. கமகம-. To spread fragrance, to send whiffs of odour; மணம் மிகவீசுதல். பசுமஞ்சள் குமுகுமுக்க (அழகர்கல. 10).

குமுகுமெனல் kumu-kumeṉal, *n.* 1. Onom. expr. signifying uproar; பேரொலிக் குறிப்பு. குடமுழ வாண வீராயிரங் கரங்கொண்டு குமு குமெனவே முழக்க (திருப்போ. சந். பிள்ளைத். சிறுபறை. 2). 2. Expr. signifying sending out whiffs of odour; மணம் வீசுதற்குறிப்பு. மணந்தான் குமுகு மென் றடிக்கவில்லை (தனிப்பா. i, 389, 44).

குமுங்கு-தல் kumuṅku-, *5 v. intr.* 1. To mash; மசிதல். உரலிற் குமுங்க விடித்து (தைலவ. தைல. 49). 2. To sink, as a building; உள்ளாக இறங்குதல். கட்டடம் குமுங்கிவிட்டது. *Colloq.*

குமுசியார் kumuciyār, *n.* <Fr. *commissaire.* French Commissioner of Police; பிரஞ்சி இலாகா போலீசுத்தலைவர். *Pond.*

குமுதகம் kumutakam, *n.* cf. குமுதம்[1]. (Arch.) A kind of moulding; கட்டடத்தின் எழுதக வகை. (W.)

குமுதச்சிலந்தி kumuta-c-cilanti, *n.* <*kumuda*+. A kind of ulcer; கொப்புளமாகாமல் சீவடியும் புண்வகை. (சீவரட். 352.)

குமுதசகாயன் kumuta-cakāyaṉ, *n.* <id. +. See குமுதநாதன். (பிங்.)

குமுதநண்பன் kumuta-naṇpaṉ, *n.* <id. +. See குமுதநாதன். (சூடா.)

குமுதநாதன் kumuta-nātaṉ, *n.* <id.+. Lit. lord of the water-lily. Moon; [அல்லிப்

பூவுக்கு நாதன்.] சந்திரன். காமக்கருத்தாக் குமுதநாதன் கங்குல்வரக்கண்டு (தனிப்பா. i, 334, 40).

குமுதப்படை kumuta-p-paṭai, *n.* <id.+. 1. Decorated part at the bottom of the wall of the inner sanctuary of a Hindu temple; கர்ப்பக்கிருகத்து வெளிப்புற மதிலில் வேலைப்பாடமைந்த அடிப்பகுதி. குமுதப்படையிலே கல்வெட்டிக் கொடுத்த படி (S.I.I. i, 138). 2. See குமுதம்[1], 7.

குமுதப்பிரியா kumuta-p-piriyā, *n.* <id. +*priyā*. A musical mode; ஓர் இராகம்.

குமுதம்[1] kumutam, *n.* <*kumuda*. 1. Esculent white water-lily. See வெள்ளாம்பல். (திவா.) 2. Red Indian water-lily. See செவ்வாம்பல். தவரித மலர்வன குமுதம் (கம்பரா. காட்டுப். 43). 3. Elephant at the south-west quarter, one of *aṣṭa-tik-kacam*, q.v.; தென்மேற்றிசை யானை. (பிங்.) 4. A mineral poison. See வயிக்கிராந்தபாஷாணம். 5. See வெள்ளைப்பாஷாணம். 6. See கற்பாஷாணம். 7. An army consisting of 9 elephants, 9 chariots, 27 horses and 45 infantry; 9 யானையும், 9 தேரும், 27 குதிரையும், 45 காலாட்களும் கொண்ட படை. (பிங்.) 8. An army consisting of several thousands of *akkurōṇi*; பல்லாயிரம் அக்குரோணி கொண்ட சேனைத்தொகை. (பிங்.) 9. Abundance, as of produce; largeness, as of income; மிகுதி. (J.) 10. (Arch.) A kind of moulding; கட்டடத்தின் எழுதகவகை. (W.) 11. A disease of the pupil of the eye; கருவிழியில் உண்டாகும் ஒருவகை நோய். (W.)

குமுதம்[2] kumutam, *n.* [T. *kumpaṭi*, K. *kumpaṭe*.] Oven, stove; அடுப்பு. (திவா.)

குமுதம்[3] kumutam, *n.* cf. *tumula*. Uproar, confusion; பேரொலி. கதறிமிகு குமுதமிடு பாசமயம் (திருப்பு. 948).

குமுதம்[4] kumutam, *n.* prob. *ku-muda*. Darbha grass; தருப்பை. (பிங்.)

குமுதிப்பனை kumuti-p-paṉai, *n.* Malayan sago palm. See கிச்சிலிப்பனை. (L.)

குமுந்தம் kumuntam, *n.* A mineral poison; கற்பாஷாணம். (மூ. அ.)

குமுலி kumuli, *n.* cf. குமலி, குமிலி. Sacred basil. See துளசி. (W.)

குமுறக்காய்-தல் kumuṟa-k-kāy-, *v. intr.* <குமுறு-+. To be boiling hot, as oil heated to a high degree; to boil up; நன்றாகக் காய்தல். *Loc.*

குமுறப்பிழி-தல் kumuṟa-p-piḻi-, *v. tr.* <id. +. To press out hard, as juice; இறுகப்பிழிதல். *Loc.*

குமுறல் kumuṟal, *n.* <id. Roaring, rumbling, resounding; பேரொலி. (திவா.)

குமுறலண்டம் kumuṟal-aṇṭam, *n.* <id.+. Rupture, hernia; அண்டவாதவகை. (சீவரட். 112.)

குமுறவிடி-த்தல் kumuṟa-v-iṭi-, *v. tr.* <id. +. To pound, comminute forcibly in a mortar, as grain; நெல் முதலியவற்றை நன்கு இடித்தல்.

குமுறு-தல் kumuṟu-, *5 v. intr.* [M. *kumuṟu*.] 1. To resound; to trumpet, as an elephant; to bellow; to rumble, crash, as thunder; அதிரொலி செய்தல். குத்திடக் குமுறிப் பாயும் (கம்பரா. வரைக். 34). 2. To have confused uproar; கலப்போசையெழுதல். குமுறு மோசை விழவு (திவ். திருவாய். 6, 5, 2). 3. To burst with distress; மனத்தினுள்ளேயே வருந்துதல். கண்கணீர் மல்க நின்றுநின்று குமுறுமே (திவ். திருவாய். 6, 5, 1). 4. To gush out, as milk from the breast; பீரிடுதல். வெம்முலை குமுறு பாலுக (கம்பரா. பள்ளி. 118). 5. To effervesce, bubble up, as in boiling; கொதித்தல். (W.)

குமேரு kumēru, *n.* <*ku-mēru*. South Pole as the region of Demons; பேய்பிசாசுகளுக்கு இருப்பிடமான தென்துருவம்.

குமை[1]**-தல்** kumai-, *4 v. intr.* 1. To be over-boiled; to be boiled soft to a mash, as greens; குழையவேகுதல். சோறுகுமையச் சமைத்தான். 2. To be in a state of confusion; to be mixed up; குழம்புதல். எல்லாம் ஒன்றாய்க் குமைந்துகிடக்கின்றன. (W.) 3. To be hot, sultry; வெப்பத்தாற் புழுங்குதல். 4. To close together, as the eyelids from heat in the system; கண்முதலியன இறுகிக் கொள்ளுதல். (W.) 5. To faint, droop, as one in a swoon; சோர்தல். 6. To be destroyed; அழிதல். (W.) 7. To be distressed, worried; வருந்துதல். கொசுகுகடியாலுங் குமைந்தோம் (தமிழ்நா. 259).

குமை[2]**-த்தல்** kumai-, *11 v. tr.* Caus. of குமை[1]-. 1. To tread down, tread out into a mash; துவைத்தல். கூற்றைக் குமைகழலா லன்று குமைத்தார் போலும் (தேவா. 44, 6). 2. [M. *kume*.] To beat or pound in a mortar; உரலில் வைத்து இடித்தல். (W.) 3. To over-boil, boil soft, reduce to a mash by boiling; குழைய வேகச்செய்தல். (W.) 4. To annoy, afflict, vex; வருத்துதல். ஆவி திகைக்க வைவர் குமைக்குஞ் சிற்றின்பம் (திவ். திருவாய். 6, 9, 9). 5. To destroy; அழித்தல். வெளிற்றறி விரண்டுங் குமைப்ப (தணிகைப்பு. விநா காப்பு, 2).

குமை[3] kumai, *n.* <குமை[2]-. 1. Destruction, ruin; அழிவு. குமைத்தொழில் புரிந்த வீரர் (கம்பரா. பிரமாத். 23). 2. Trouble, distress; துன்பம். ஐவராற் குமைதீர்த்து (திவ். திருவாய் 7, 1, 1) 3. Blow, stroke, lash; அடி. குமை தின்பர்கள் (திவ்.

திருவாய். 4, 1, 2) 4. Clothes-basket; அழுக்குத் துணி முதலியன இடும் பெட்டி. *Loc.*

குமைதின்(னு)-தல் kumai-tiṉ-, *v. intr.* <குமை+. To suffer thrashing; அடியுண்ணுதல். கானகம்போய்க் குமை தின்பர்கள் (திவ். திருவாய். 4, 1, 2)

குய் kuy, *n.* prob. onom. 1. Seasoning with spices; தாளிப்பு. கமழ்குய் யடிசில் (புறநா. 10). 2. Spicy, seasoned curry; தாளித்த கறி. பொரியுங் குய்யும் வறைகளு நிவந்த வாசம் (சீவக. 2971). 3. Burnt odours, incense, odorous smoke; நறும்புகை. (பிங்.) 4. Frankincense; சாம்பிராணி. (தைலவ. தைல. 94.)

குய்மனத்தாளர் kuy-maṉattāḷar, *n.* <*guhya*+. Deceitful persons: வஞ்சகர். குய்மனத் தாளர் குறைப்பிணங் காட்டி (பெருங். இலாவண. 19, 57).

குய்யகர் kuyyakar, *n.* <*guhyaka*. A class of demigods in the service of Kubēra to whose custody his treasures are committed; குபேரன் நிதியைக் காவல்புரியும் தேவகணத்தார்.

குய்யதராட்டகபுவனம் kuyyatarāṭṭaka-puvaṉam, *n.* <*guhya-tara*+. (Śaiva.) The world situate in the aerial regions of ***pratiṭṭā-kalai***, being eight in number, viz., கயை, குருக் கேத்திரம், நாகலம், நகலம், விமலம், அட்டகாசம், மகேந் திரம், பீமேசம்; பிரதிட்டாகலையின்பகுதியாய் வாயு வண்டத்திலுள்ள புவனம். (சி போ. பா 2, 3, 214).

குய்யபீசகம் kuyya-pīcakam, *n.* perh. ***guhya*** + ***bījaka***. Strychnine nut. See எட்டி. (மலை.)

குய்யம் kuyyam, *n.* <*guhya*. 1. That which is secret, mystical, hidden, private; மறைவானது. (சூடா.) 2. Generative organ especially of women; உபஸ்தம். மென்றுகிற் குய்யத் தடம்படிந்து (சூளா. சீய. 49). 3. Anus; அபானவாயில். (பிங்.) 4. Dissimulation, deceitfulness, hypocrisy; வஞ்சகம். நட்பிடைக் குய்யம் வைத்தான் (சீவக. 253).

குய்யரோகம் kuyya-rōkam, *n.* <id.+. Venereal disease peculiar to women, as chancre; பெண்குறியில் வரும் ரோகம். (சீவரட். 313).

குய்யோமுறையோவெனல் kuyyō-muṟaiyō-v-eṉal, *n.* Onom. expr. signifying loud complaint; கூச்சலோடு முறையிடுதற் குறிப்பு.

குயக்கலம் kuya-k-kalam, *n.* 1. See குசக் கலம். 2. A treatise; ஒரு நூல். (நன். 274, மயிலை.)

குயக்காலம் kuyakkālam, *n.* A small shrub. See நிலக்கடம்பு. (மலை.)

குயக்குண்டு kuya-k-kuṇṭu, *n.* <குயம்[1]+ குண்டு[2] Pit wherefrom clay is taken by potters to make pots; குயவர் மண்ணெடுக்குங் குழி. *Colloq.*

குயத்தி kuyatti, *n.* <குயம்[1] Female potter; குசத்தி. சக்கரந்தான் சுழற்றத்தகுங் குயத்தி (சிவப். பிரபந். பிக்ஷாடன. 6).

குயத்தினலகை kuyattiṉalakai, *n.* Tinnevelly senna. See நிலவாகை. (மலை.)

குயம்[1] kuyam, *n.* perh. கொய்-. 1. Sickle, reaping-hook, curved knife, அரிவாள். கொடுவாய்க் குயத்து (சிலப். 16, 30) 2. Razor; நாவிதன் கத்தி. அருங்குயந் நான்கனைந்து (சீவக 2500). 3. Potter caste; குயச்சாதி.

குயம்[2] kuyam, *n.* prob. குழ Juvenility, youth; இளமை. (திவா.)

குயம்[3] kuyam, *n.* <*kuca*. Woman's breast; முலை. குச்சிலியமாதர் குயமும் (தனிப்பா. ii, 75, 190).

குயம்[4] kuyam, *n.* <*kuśa*. Darbha grass. See தருப்பை.

குயமயக்கு kuya-mayakku, *n.* <குயம்[1]+. Disorder, lack of method; தாறுமாறு. (W.)

குயலன் kuyalaṉ, *n.* <*kuśala*. Man of great skill, dexterity; தேர்ந்தவன். வஞ்சக் குயலர்க் கென்றுங் காவனும் (தேவா. 406, 4).

குயவரி kuya-vari, *n.* <குயம்[1]+. Tiger, as having sickle-shaped stripes; [அரிவாள்போன்ற வரிகளுடையது.] புலி. வேழங் குயவரி கோட்பிழைத்து (திணைமாலை. 25).

குயவன்[1] kuyavaṉ, *n.* <id. [M. ***kuyavaṉ***.] Potter; குசவன். திருநீலகண்டத்துக் குயவனுர்க் கடி யேன் (தேவா. 736, 1).

குயவன்[2] kuyavaṉ, *n.* <*guhya*. God, the Invisible; மறைபொருளானவன். யானோர் குயவன் (சிவப். பிரபந். பிக்ஷாடன. 6).

குயவன்மணை kuyavaṉ-maṇai, *n.* <குயவன்[1]+. Foot of a potter's wheel; குயவனது சக் கரத்தின் அடிக்கட்டை.

குயவு kuyavu, *n.* prob. உயவு. Car, chariot; தேர். (பிங்.)

குயா kuyā, *n.* False tragacanth. See கோங்கு. (பிங்.)

குயில்[1](லு)-தல் kuyil-, *3 v. tr.* perh. ***kūj***. 1. To utter, tell; சொல்லுதல். பொய் குயிலினுஞ் சோம்பினும் (சிவப். பிரபந். நிரஞ்ச. 18). 2. To call, whoop, halloo; கூவுதல். (சூடா.)

குயில்[2](லு)-தல் kuyil-, *3 v. tr.* [1-+ cf. ***kuc***.] 1. To make, execute, shape, construct; செய்தல். (பிங்.) 2. To weave; நெய்தல். ஊசியொடு

குயின்ற தூசும் பட்டும் (தொல். சொல். 74, உரை). 3. To plait, braid, intwine; பின்னுதல். (W.) 4. cf. *kuth*. To bore, perforate, tunnel; துளைத்தல். (பிங்.) குன்று குயின்றன்ன வோங்குநிலைவாயில் (நெடு நல். 88). 5. cf. *kuth*. To enchase, set, as precious stones; இரத்தினம் முதலியவை பதித்தல். சுடர்மணியின் பத்திகுயின்றிட்ட பழுப்பேணியில் (கந்தபு. வள்ளி. 50).—*intr*. 1. To take place; நடைபெறுதல். தெய்வ நடன மெதிர்குயில (தணிகைப்பு. அகத்திய. 83). 2. To be thick, close, crowded; செறிதல். (திவா.) 3. To sound, play; வாத்தியமோலித்தல். வீணை குழலொடு குயில (சீவக. 1255).

குயில்[3] kuyil, *n.* <குயில்[1]-. 1. Word; சொல். (திவா.) 2. cf. *kōkila*. [T. *kukkil*, K. *kukil*, M. *kuyil*, Mhr. *kōiḷa*.] Koel, Indian cuckoo, *Eudynamis honorata*; கோகிலம். (திவா.)

குயில்[4] kuyil, *n.* <குயில்[2]-. Hole, perforation; துளை. (பிங்.)

குயில்[5] kuyil, *n.* <குயின்[1]. Cloud; மேகம். (சூடா.)

குயில்கூவு-தல் kuyil-kūvu-, *v. intr.* <குயில்[3]+. To present a pleasing, thriving aspect, as a field with luxuriant crop; கண்ணுக்கினிதாய்த் தோற்றுதல். (J.)

குயிலாயம்[1] kuyilāyam, *n.* <*kulāya*. (W.) 1. Bird's nest; பறவைக்கூடு. 2. Niche in a wall; சுவருள் அறை.

குயிலாயம்[2] kuyilāyam, *n.* prob. *kulāla* + *ā-laya*. Pottery, potter's workshop; மட்கலம் வனையுங் கூடம். (W.)

குயிலுவக்கருவி kuyiluva-k-karuvi, *n.* <குயிலுவம்+. Musical instruments with accompaniments; இசைக்கருவிகள். கூடிய குயிலுவக் கருவி கண்டுயின்று (மணி. 7, 45).

குயிலுவத்தொழில் kuyiluva-t-toḻil, *n.* <id.+. See குயிலுவம். (பிங்.)

குயிலுவம் kuyiluvam, *n.* <குயில்[2]-. Playing on stringed musical instruments, drums, tabrets, clarionets, horns; வாத்தியம் வாசிக்கை. (திவா.)

குயிலுவர் kuyiluvar, *n.* <id. Players on stringed instruments, drums, tabrets, clarionets, horns; வாத்தியம் வாசிப்போர். பயிறொழிற் குயிலுவர் நிற்ப (சிலப். 5, 52. அரும்.).

குயிற்று[1]**-தல்** kuyiṟṟu-, 5 *v. tr.* <குயில்[1]-. 1. To tell, say, utter; to lay down, as rules; சொல்லுதல். சுமார்த்தத்திற் குயிற்றுபல கருமத்தும் (விநாயகபு. 73, 24).

குயிற்று[2]**-தல்** kuyiṟṟu-, 5 *v. tr.* <குயில்[2]-. 1. To make, construct, form, perform; செய்தல். அருநடங் குயிற்று மாதி வானவனே (பதினொ. பட்டினத். கோயினான். 32). 2. To enchase, set, as gems; இரத்தினம் பதித்தல். மணியொடு வயிரங் குயிற்றிய (சிலப். 5, 147).

குயின்[1] kuyiṉ, *n.* Cloud; மேகம். குயினென் கிளவி யியற்கை யாகும் (தொல். எழுத். 335).

குயின்[2] kuyiṉ, *n.* <குயில்[2]-. Deed, work; செயல். (இலக். வி. 126, உரை.)

குயின்மூக்கெலும்பு kuyiṉ-mūkkelumpu, *n.* <குயில்[3]+ Coccyx, as resembling the koel's beak; முதுகின் அடியெலும்பு. (இங். வை. 4.)

குயின்மொழி kuyiṉ-moḻi, *n.* <id.+. 1. Soft, sweet words, like the notes of the koel; இன்மொழி. (W.) 2. Liquorice; அதிமதுரம். (மலை.)

குயினர் kuyiṉar, *n.* <குயில்[2]-. 1. Those who polish and perforate gems; இரத்தினந் துளையிடுவோர். திருமணி குயினரும் (மதுரைக். 511). 2. Tailors; தையற்காரர். (பிங்.)

குயுக்தி kuyukti, *n.* <*ku-yukti*. Perverted intelligence; fallacious reasoning; நேர்மையற்ற யுக்தி.

குர்ணாப்பட்டை kurṇā-p-paṭṭai, *n.* <குறுமை + நாகம் +. See குருநாப்பட்டை. (விறலிவிடு. 530.)

குர்த்தனம் kurttaṉam, *n.* (Nāṭya.) A kind of gesticulation in dancing; கூத்தின் அங்கக் கிரியைகளுள் ஒன்று. (சிலப். 81, கீழ்க்குறிப்பு.)

குரக்களி-த்தல் kurakkaḷi-, *v. intr.* See குரக்குவலி-. *Loc.*

குரக்கன் kurakkaṉ, *n.* <Sinh. *kurrakan*. Ragi. See கேழ்வரகு. (மலை.)

குரக்கன்சாறு-தல் kurakkaṉ-cāṟu-, *v. intr.* <குரக்கன்+. 1. To hoe in *kurakkaṉ* grain lightly after sowing; கேழ்வரகு விதைத்தபின் வயலைக் கிளறிக்கொடுத்தல். (J.) 2. To sow *kurakkaṉ*; கேழ்வரகு விதைத்தல். (W.)

குரக்குக்கை kurakku-k-kai, *n.* <குரக்கு+. Arms affected by cramps due to weakness, cold, etc.; குரக்குவாதம் பிடித்த கை. குரக்குக் கைகொடு கூழ் திழாவி (ஈடு, 9, 2, 4).

குரக்குவலி[1] kurakku-vali, *n.* <id.+. 1. A disease with which monkeys are commonly said to be afflicted; குரங்குக்குவரும் வலிப்பு நோய். (W.) 2. Pain in the limbs attended with

shivering; spasmodic affection; கைகால்களில் வரும் ஒருவகை வலிப்பு.

குரக்குவலி²-த்தல் kurakku-vali-, *v. intr.* <id. +. To suffer from *kurakkuvali*; குரக்குவலி உண்டாதல். *Colloq.*

குரக்குவாதம் kurakku-vātam, *n.* <id.+. See குரக்குவலி. குரக்குவாதம் பிடித்து வலித்து (கலிங். 138, புதுப்.).

குரக்கொளி kurakkoḷi, *n.* See குரக்குவலி. கைகால் குரக்கொளி வாங்குகிறது. *Vul.*

குரகதம் kurakatam, *n.* <*khura-gata.* 1 Horse; குதிரை. குரகத முகம்புரை குலைக வேங்கிய . . . வாழை (கந்தபு. உரைபுனை. 9). 2. A mineral poison; குதிரைப்பற்பாஷாணம். (மூ. அ.)

குரகம் kurakam, *n.* (சது.) 1. Common myna, starling, *Acridotheres tristis*; மைனாப் புள். 2. Aquatic birds; நீர்வாழ்பறவைப்பொது.

குரகுமஞ்சள் kuraku-mañcaḷ, *n.* Arnotto. See சாப்பிராவிரை. (M.M. 776.)

குரங்கம்¹ kuraṅkam, *n.* prob. குரங்கு-. Strychnine tree. See எட்டி. (மூ. அ.)

குரங்கம்² kuraṅkam, *n.* <*kuraṅga.* (பிங்.) 1. Deer, antelope; மான். 2. Quadruped, beast; விலங்கு.

குரங்கன்¹ kuraṅkaṉ, *n.* <குரங்கு². Mischievous fellow, as a monkey; குரங்குபோலக் குறும்புத்தனம் செய்பவன்.

குரங்கன்² kuraṅkaṉ, *n.* See குரங்கம்¹. (மலை.)

குரங்கன்சுறா kuraṅkaṉ-curā, *n.* <குரங்கு² +. 1. Zebra shark, tawny with spots, attaining 15 ft. in length, *Stegostoma tigrinum*; சுறாமீன் வகை. 2. Fawn-coloured shark, grey, *Chiloscyllium indicum*; ஒருவகைக் கடல்மீன். (M.M. 850.)

குரங்காட்டம் kuraṅkāṭṭam, *n.* <id.+ ஆட்டம். Apish tricks; antics; குரங்கின் கூத்து. அவனைக் குரங்காட்டம் ஆட்டி வைக்கிறான்.

குரங்காட்டி kuraṅkāṭṭi, *n.* <id.+. One who lives by exhibiting monkeys; குரங்கை ஆடச்செய்துகாட்டி சீவிப்போன்.

குரங்கி kuraṅki, *n.* <*kuraṅgin.* Lit. one having antelope-spot. Moon. [மான்போன்ற கறையையுடையவன்.] சந்திரன். (பிங்.)

குரங்கு¹-தல் kuraṅku-, 5 *v. intr.* 1. To bend, incline; வளைதல். பாடினுள் . . . இலைப் பொழில் குரங்கின (சீவக. 657). 2. To droop, wither; தாழ்தல். சுடப்பட்டுக் குரங்கிவெந்தது (சீவக. 719). 3. To hang down, dangle; தொங்குதல். குரங்குளைப் பரிமா (திருவிளை. மெய்க்கா 26) 4. To repose, rest, lie; தங்குதல். நிகள மூழ்கிக் கோட்டத்துக் குரங்க (சீவக. 262). 5. To diminish; குறைதல். குரங்கா வாற்ற லெம்பியோ தேய்ந்தான் (கம்பரா. பாசப். 5). 6. To relent, grieve, feel sorry; இரங்குதல். (சது.)

குரங்கு² kuraṅku, *n.* <குரங்கு-. 1. Bending, inclining; வளைவு. குரங்கமை யுடுத்த மரம்பயி லடுக்கத்து (சிலப். 10, 157). 2. [K. *kuraṅgi*, M. *kuraṉṉu.*] Monkey, ape; வானரம். குரங்கு செய்கடற் குமரியம் பெருந்துறை (மணி. 5, 37). 3. Bristly bryony. See முசுமுசுக்கை. (மலை.) 4. Hook, clasp, link, in jewelry; கொக்கி. *Loc.*

குரங்கு³ kuraṅku, *n.* <*kuraṅga.* Quadruped, beast; விலங்கு. (சூடா.)

குரங்குகடியன் kuraṅku-kaṭiyaṉ, *n.* <குரங்கு² + கடி-. A coconut injured at the top, as by a monkey or squirrel; குரங்காலேனும் அணிலாலேனும் முனையில் தீண்டப்பட்டுப் பழுதுற்ற தேங்காய். (J.)

குரங்குச்சிணி kuraṅku-c-ciṇi, *n.* <id.+. Smell of monkeys; குரங்கின் நாற்றம். (J.)

குரங்குச்சேட்டை kuraṅku-c-cēṭṭai, *n.* <id.+. Mean, monkeyish tricks, apish mischief; குறும்புச்செய்கை.

குரங்குடாப்பு kuraṅku-ṭāppu, *n.* <id.+ E. *top.* Projection over a window or door for protection from sun and rain; கதவுசாளரங்களின்மேல் மழைவெயில்களைத் தடுக்க அமைக்கும் மறைவு. *Loc.*

குரங்குத்தாழ்ப்பாள் kuraṅku-t-tāḻppāḷ, *n.* <id.+. Door hook; கொக்கித்தாழ்ப்பாள். *Loc.*

குரங்குதின்னி kuraṅku-tiṉṉi, *n.* <id.+. An aboriginal tribe in the hills of Coimbatore, as eaters of the black monkey; கருங்குரங்குகளைத் தின்பவராகிய கோயம்புத்தூர்ஜில்லாவின் மலைகளில் வாழும் ஒருசாதி.

குரங்குப்பட்டை kuraṅku-p-paṭṭai, *n.* <id.+. Long narrow construction of lime running parallel from the top to the base of the roof to prevent the tiles from being dislodged; கூரையோடுகள் கலைந்துபோகாதபடி முகட்டிலிருந்து அடிவரையிற் கட்டும் சுண்ணாம்புப்பட்டை. *Loc.*

குரங்குப்பிடி kuraṅku-p-piṭi, *n.* <id.+. Lit., grasp of a monkey. 1. Firm grasp,

grip; [குரங்கினது பிடி.] விடாப்பிடி. 2. Doggedness, stubbornness, pertinacity, obstinacy; பிடிவாதம்.

குரங்குப்புத்தி kuraṅku-p-putti, *n.* <id.+. Roving tendency, unsteadiness; நிலையற்ற புத்தி.

குரங்குமச்சு kuraṅku-maccu, *n.* <id.+. Loft under the thatched roof of a house; கூரையின்கீழ் அமைக்கும் மச்சு. *Loc.*

குரங்குமஞ்சணாறி kuraṅku-mañcaṇāṟi, *n.* <id.+. Kamela, s. tr., *Mallotus philippinensis;* ஒருவகைச் சிறுமரம். (L.)

குரங்குமார்க்கம் kuraṅku-mārkkam, *n.* <id.+. A particular pace of the horse; குதிரை நடையுள் ஒன்றான வானரகதி. கூறரு மல்லமார்க்க மயின்மார்க்கங் குரங்குமார்க்கம் (திருவாலவா. 28, 58).

குரங்குமூஞ்சி kuraṅku-mūñci, *n.* <id.+. 1. Monkey face, ugly face; விகாரமான முகம். 2. See குரங்குமஞ்சணாறி. (L.)

குரங்குமூஞ்சிக்காய் kuraṅku-mūñci-k-kāy, *n.* <id.+. Red-cheeked mango fruit; முகப்பிற்சிவந்த மாங்காய். *Loc.*

குரங்குவலி kuraṅku-vali, *n.* <id.+. See குரக்குவலி. (W.)

குரச்சை kuraccai, *n.* <*khura.* See குரசு. (பிங்.)

குரசு kuracu, *n.* <id. [T. *gorijja.*] Horse's hoof; குதிரைக்குளம்பு. (பிங்.)

குரண்டகம் kuraṇṭakam, *n.* <*kuraṇṭaka.* 1. Henna. See மருதோன்றி. (W.) 2. A species of conehead. See பெருங்குறிஞ்சி. (பிங்.)

குரண்டம்[1] kuraṇṭam, *n.* <*kuraṇṭa.* See குரண்டகம், 1. (L.)

குரண்டம்[2] kuraṇṭam, *n.* perh. *kāraṇḍava.* Indian crane, *Ardea sibirica;* கொக்குவகை. (திவா.)

குரத்தம் kurattam, *n.* cf. *kuraṭha.* Noise, clamour, uproar; ஆரவாரம். (சது.)

குரத்தி kuratti, *n.* <*guru.* Fem. of குரவன். 1. Wife of a preceptor or priest; குருபத்தினி. குரத்தியை நினைத்த நெஞ்சை (திருவிளை. அங்கம். 19). 2. Preceptress, priestess; ஆசாரியபதவி வகிப்பவள். (Insc.) 3. Mistress, lady of the house; தலைவி. (திவா.)

குரதாரம் kuratāram, *n.* A hell, one of eight *makā-narakam,* q.v.; மகாநரகங்கள் எட்டனுள் ஒன்று. (சி. போ. பா. 2, 3.)

குரப்பம் kurappam, *n.* [T. *korapamu,* K. *korapa,* M. *kurappa.*] Currycomb; குதிரை தேய்க்குங் கருவி. (W.)

குரம்[1] kuram, *n.* (மலை.) 1. cf. *kṣura-patra.* Darbha grass. See தருப்பை. 2. Balsam pear. See பாகல்.

குரம்[2] kuram, *n.* <*khura.* 1. Horse's hoof; குதிரைக்குளம்பு. குரந்தரு விசையினீர் மொண்டு (இரகு. இரகுவுற். 56). 2. Cow; பசு. (திவா.)

குரம்பு kurampu, *n.* 1. Artificial bank, dam, causeway, bund; அணைக்கட்டு. 2. Dam of sand, brushwood, loose stones, etc., running out from the banks of a river diagonally for a distance upstream, to turn the water into an irrigation channel; ஆற்றினின்று பாசனக்கால்களுக்கு நீரைத்திருப்பும் அணை. (C. G.) 3. Ridge in a rice field or garden; வரப்பு. மாநீர்க் குரம்பெலாம் செம்பொன் (கம்பரா. நாட்டுப். 2). 4. Boundary, limit; எல்லை. குரம்பெழுந்து குற்றங்கொண் டேறுார் (நாலடி, 153).

குரம்பை kurampai, *n.* 1. Small hut, hovel, shed; சிறுகுடில். இலைவேய் குரம்பை (மதுரைக். 310). 2. [M. *kurambu.*] Bird's nest; பறவைக்கூடு. (சது.) 3. Body; உடல். பொருந்திய குரம்பை தன்னைப்பொருளெனக் கருதவேண்டா (தேவா. 488, 1). 4. Granary, storehouse for grain; தானியக்கூடு. நெற்குவை குரம்பையி னிரப்புவித்தனர் (கந்தபு. நாட்டுப். 26).

குரமடம் kuramaṭam, *n.* prob. *rāmaṭha.* Asafoetida. See பெருங்காயம். (W.)

குரல்[1] kural, *n.* 1. [Tu. *koralu.*] Corn-ear, spike; கதிர். வரகி னிருங்குரல் (மதுரைக். 272). 2. Flower-cluster; பூங்கொத்து. கமழ்குரற் றுழாய் (பதிற்றுப். 31, 8). 3. Link, tie, band; ஒன்றோடொன்றற்றுள்ள சேர்க்கை. குரலமை யொருகாழ் (கலித். 54, 7). 4. Stalk, sheath of millet or plantain; தினை வாழை முதலியவற்றின் தோகை. பருஉக்குரற் சிறுதினை (புறநா. 168, 6). 5. [T. *korra,* K. *koraḷe.*] Italian millet; தினை. (மலை.) 6. See பாதிரி. (மலை.)

குரல்[2] kural, *n.* cf. *kurala.* 1. Woman's hair; பெண்டிர் தலைமயிர். (பிங்.) நல்லார் குரனாற்றம் (கலித். 83). 2. One of the five modes in which a woman dresses her hair; மகளிர் குழல்முடிக்கும் ஐவகையுள் ஒன்று. (பு. வெ. 9, 35, உரை.) 3. Feather, plumage; பறவையின் இறகு. (திவா.)

குரல்[3] kural, *n.* cf. *kura.* 1. [T. *kurru,* K. *koral,* M. *kuṟal.*] Voice; பேச்சொலி. சேவல் மயிற்பெடைக்குப் பேசும் சிறுகுரல்கேட்டு (நளவெண். சுயம்வ 41). 2. Word; மொழி. யாவருந் தண்குரல் கேட்ப (கலித். 142, 9). 3. Tone in singing;

சாரீரம். காமன் காமுறப்படுங் குரறருமிது (சீவக. 1218). 4. (Mus.) First note of the Indian gamut; ஏழிசையுள் முதலாவது. (திவா.) 5. Throat, windpipe; மிடறு. மணிக்குர லறுத்து (குறுந். 263). 6. Sound; ஓசை. இடிகுரன் முரசு (கம்பரா. எழுச்சி. 1). 7. String of jingling bells. See கிண்கிணிமாலை. (பிங்.)

குரல்காட்டு-தல் kural-kāṭṭu-, *v. intr.* <குரல்[3] + 1. To call a person by hemming and hawking; அழைத்தற்பொருட்டுக் குறிப்பொலிகாட்டுதல். 2. To crow, as a cock; to screech, as an owl; பறவை யொலித்தல். 3. To cry aloud, whoop, roar, bellow; பெருஞ்சத்தமிடுதல்.

குரல்குளிறு-தல் kural-kuḷiṟu-, *v. intr.* <id. +. To jar, to be in disharmony, as instruments out of tune; யாழ்முதலியவற்றில் சுருதிகலைதல். (W.)

குரல்பாய்ச்சு-தல் kural-pāyccu-, *v. intr.* <id. +. To prolong the voice unrestrainedly in wailing; அழுகையிற் குரல்நீட்டுதல். *Loc.*

குரல்வளை kural-vaḷai, *n.* <id. +. Adam's apple; projection of the thyroid cartilage of the larynx; மிடற்றின் உறுப்பு. மணிக்காற் குரல்வளைக் கழுத்தில் (பெருங். மகத. 14, 55).

குரல்வளைத்தாபனம் kural-vaḷai-t-tāpaṉam, *n.* <id. +. Laryngitis; கண்டத்தில் உண்டாகும் ஒருநோய். (இங். வை. 231.)

குரல்வாங்கு-தல் kural-vāṅku-, *v. intr.* <id. +. See குரல்விடு. *Loc.*

குரல்விடு-தல் kural-viṭu-, *v. intr.* <id. +. See குரலெடு-. குரல்விட்டுப் பாடு.

குரலடைப்பு kural-aṭaippu, *n.* <id. +. 1. Hoarseness; குரல் கம்முகை. 2. Loss of speech; பேசமுடியாமற்போகை.

குரலெடு-த்தல் kural-eṭu-, *v. intr.* <id. +. To lift up the voice, ascend the musical scale, maintain a high pitch in singing; குரலை ஸ்தாயியில் நிறுத்துதல். குரலெடுத்துப் பாடுகிறான்.

குரவகம் kuravakam, *n.* <*kuravaka*. 1. A plant whose flower does not change colour in withering. See வாடாக்குறிஞ்சி. (பிங்.) 2. Henna; மருதோன்றி. (மலை.)

குரவம் kuravam, *n.* <குரா. 1. cf. *kurava*. Common bottle-flower. See குரா. பலகுரவ மழனகுவன (சூளா. தூது. 2). 2. Date palm. See பேரீந்து. (மலை.) 3. Putchock, fragrant root of the costum plant; கோட்டம். (சூடா.)

குரவம்பாவை kuravam-pāvai, *n.* <குரவம் +. Common bottle-flower blossom, as shaped like a doll; பாவையின் வடிவுடைய குரவம்பூ. குரவம்பாவை கொப்புளித்து (சீவக. 2690).

குரவரம் kuravaram, *n.* prob. *kuravaka*. Indian ipecacuanha. See நறிஞ்சா. (மலை.)

குரவன் kuravaṉ, *n.* <*guravaḥ* nom. pl. of *guru*. 1. Elderly person qualified by age, family connection, respectability, knowledge or authority, to give advice and exercise control; any one of *aiṅ-kuravar*; அரசன், உபாத்தியாயன் அல்லது குரு, தாய், தந்தை, தமையன் என்ற ஐங்குரவருள் ஒருவர். நிகரில் குரவரிவர் (ஆசாரக். 17). 2. Minister; மந்திரி. (பிங்.) 3. Brahmā, as the father of all; பிரமன். (திவா.)

குரவு[1] kuravu, *n.* <குரா. cf. *kurava*. See குரா. குரவுவார் குழன்மடவாள் (திருவாச. 5, 17).

குரவு[2] kuravu, *n.* <*guru*. Office of a guru; ஆசிரியத்தன்மை. அருந்தமிழ்க் குரவுபூண்ட (காஞ்சிப்பு. கடவுள்வா. 9).

குரவை kuravai, *n.* perh. *ku-rava*. 1. Dance in a circle prevalent among the women of sylvan or hill tracts; முல்லை அல்லது குறிஞ்சி நிலமகளிர் தம்முட் கைகோத்தாடும் கூத்துவகை. ஆய்ச்சியர்குரவை, குன்றக்குரவை. (சிலப்.) 2. cf. குலவை. [M. *kurava*.] Chorus of shrill sound made by women by wagging the tongue, uttered on festive occasions; மகளிர் விசேடகாலங்களில் நாவாற் குழறி இடும் மகிழ்ச்சியொலி. 3. Sea; கடல். பவத்தனிப் பரவைக் குரவையை . . . கடப்பரிதால் (வைராக். தீப. 18).

குரவைக்கூத்து kuravai-k-kūttu, *n.* <குரவை +. See குரவை, 1. (சிலப். 3, 12, உரை.)

குரவைப்பறை kuravai-p-paṟai, *n.* <id. +. A drum of the hilly tracts; ஒருவகைக் குறிஞ்சிப் பறை. (இறை. 1, 17, உரை.)

குரவையிடு-தல் kuravai-y-iṭu-, *v. intr.* <id. +. To utter in chorus a shrill sound by wagging the tongue as done by women on festive and religious occasions; நாவாற்குழறி மகிழ்ச்சியொலிசெய்தல். *Loc.*

குரா kurā, *n.* cf. *kurava*. Bottle-flower, s. tr., *Weberd corymbosa*; குராமரம். குராநற் செழும்போது கொண்டு (திவ். இயற். 2, 31)

குராசானி kurācāṉi, *n.* <U. *khurāsāni*. See குரோசானியோமம். (மூ. அ.)

குராசானியோமம் kurācāṉi-y-ōmam, *n.* <id. +. Black henbane, *Hyoscyamus niger*;

குராசானி என்னும் ஓமமுண்டாகும் ஒருவகைப் பூடு. (M.M. 15)

குராதர் kurātar, *n.* (Śaiva.) One of the eight ruling chiefs of *kuṇa-tattuvam*; குணதத்துவ அதிபர் எண்மரில் ஒருவர். (சி. சி. 8, 2, மறைஞா.)

குரால் kurāl, *n.* 1. Dim, tawny colour; புகர்நிறம். (திவா.) 2. Cow; பசு. குஞ்சர மெண்கு குராலரி யேனம் (சேதுபு. மங்கல. 27). 3. A kind of owl; கோட்டான். பலவூன் பொருந்திய குராலின் குரலும் (மணி. 6, 76).

குராற்பசு kurāṟ-pacu, *n.* <குரால் + Tawny cow; கபிலைநிறப்பசு. குராற்பசுவைக் கொன்றான் பாவத்தை (S.I.I. iii, 121).

குரிகிற்ருளி kurikiṟṟāḷi, *n.* prob. குருகு + A kind of root; ஒருவகைக் கிழங்கு. (W.)

குரிச்சி kuricci, *n.* <U. *kursī*. Chair; நாற்காலி.

குரிசில் kuricil, *n.* perh. *guru*. 1. Person of dignity, illustrious person; பெருமையிற்சிறந்தோன். (திவா.) 2. Philanthropist, benefactor; உபகாரி. குரிசினீ நல்கயாங் கொள்ளும் பரிசில் (பு. வெ. 9, 5). 3. Lord, chief; தலைவன். போர்மிகு பொருந குரிசிலென (திருமுரு. 276).

குரிசு kuricu, *n.* <Span. *cruz*. See குருசு. *Chr.*

குரிந்தை kurintai, *n.* prob. *kunda*. Common delight of the woods. See குருக்கத்தி. (மலை.)

குரிவியாலன் kurivi-y-ālan, *n.* <குருவி + ஆல். A common avenue-fig having stout air-roots, m. tr., *Ficus*; ஆலமரவகை. (B. 91.)

குரீஇ kurīi, *n.* <குருவி. 1. Small bird; குருவி. குன்றத் திறுத்த குரீஇயினம் (புறநா. 19). 2. Bird; பறவை. (பிங்.)

குரீஇப்பூளை kurīi-p-pūḷai, *n.* <குரீஇ +. Woolly caper. See சிறுபூளை. குரீஇப்பூளை குறுநறுங்கண்ணி (குறிஞ்சிப். 72).

குரு[1]-த்தல் kuru-, *11 v. intr.* cf. உரு[1]-. 1. To appear; தோன்றுதல். அதினின்று மொரு புருடன் குருத்தான் (விநாயகபு. 72, 4). 2. To break out, as prickly heat; வேர்க்குரு உண்டாதல்.

குரு[2]-த்தல் kuru-, *11 v. intr.* prob. *krudh*. To be indignant, enraged; கோபங்கொள்ளுதல். (W.)

குரு[3] kuru, *n.* <குரு[1]-. [1 to 3 T. *kurupu*, K. M. *kuru*.] 1. Pustule, blister, any eruptive disease, as small-pox, measles; வைசூரிமுதலிய கொப்புளங்காணும் நோய். வெப்புநோயுங் குருவுந் தொடர (சிலப். உரைபெறுகட்டுரை). 2. Boil, sore; புண். கிருமி குருவின் மிளிர்தந்து (திவ். இயற். திருவிருத். 48). 3. Prickly heat; வேர்க்குரு. (பிங்.) 4. Horripilation; புளகம். மயிர்க்கண் குருக்கொண்டு (அரிச். பு. விவாக. 288). 5. Nut; கொட்டை. பலாவின் குரு. *Loc.*

குரு[4] kuru, *n.* cf. *ghṛ*. 1. Brilliancy, lustre, effulgence; ஒளி. குருமணித் தாலி (தொல். சொல். 303, உரை). 2. A flaw in pearls; முத்துக்குற்றங்களிலொன்று. குருவும் சப்பிரமும் உட்பட முத்து (S.I.I. ii, 81). 3. Blue vitriol; துரிசு. (மூ. அ.) 4. (Alch.) Philosopher's powder, a compound of various metals; உலோகங்களைப்பேதிக்கும் சிந்துரம். (W.) 5. Mercury; இரசம். (W.) 6. A mineral poison; பலண்டுறுகம். (W.)

குரு[5] kuru, *n.* <*guru*. 1. Spiritual preceptor; ஞானாசாரியன். பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து (திவ். பெரியாழ். 5, 2, 8). 2. Teacher; உபாத்தியாயன். (சூடா.) 3. Family priest; புரோகிதன். குருவின் வாசகங் கொண்டு கொற்றவன் (கம்பரா. கையடை 16) 4. Father; தகப்பன். குருமொழி சிரத்திற் றாங்கினன் (காஞ்சிப்பு. இரேணு. 11). 5. King; அரசன். (பிங்.) 6. The planet Jupiter, as the priest of the gods; [தேவகுரு.] வியாழன். (திவா.) 7. The 8th *nakṣatra*; பூசநாள். (விதான. பஞ்சாங்க. 18.) 8. Heaviness, weight; கனம். பசுமட் குரூஉத்திரள் போல (புறநா. 32) 9. Largeness; பருமன். (W.) 10. Eminence, excellence, exaltedness; பெருமை. (உரி. நி.) 11. (Gram.) Long vowel; நெடில். 12. (Pros.) A syllabic instant; நெடிலும் நெடிலொற்றும் குறிலொற்றுமாகிய அசைகள். (வீரசோ. யாப். 26.) 13. (Mus.) Quantity of a long note; இரண்டுமாத்திரையின் அளவு. (அக. நி.) 14. (Mus.) A variety of *aṅkam*, q.v., which consists of eight *akṣara-kālam*; எட்டு அக்ஷரகாலங்கொண்ட தாள அங்கவகை. (பரத. தாள. 35.)

குரு[6] kuru, *n.* <*kuru*. 1. A prince of the lunar race after whom his family was called *kuru-kulam*; குருகுலத் தலைவன். குருவுமக் குலத்திலங்குரித்தான் (பாரத. குருகுல 31). 2. A certain continent. See குருவருடம். 3. The county of the Kurus, one of 56 *tēcam*, q.v.; குருவமிசத்தார் ஆண்ட தேசம். (சூடா.)

குருக்கண் kuru-k-kaṇ, *n.* prob. குரு[1]- +. Woman's breast; ஸ்தனம். (திவா.)

குருக்கத்தி kurukkatti, *n.* Common delight of the woods, m. cl., *Hiptage madabloia*; மாதவிக்கொடி. குடந்தைக் கிடந்த கோவே குருக்கத்திப்பூச் சூட்டவாராய் (திவ். பெரியாழ். 2, 7, 7).

குருக்கள்[1] kurukkaḷ, *n.* <*guru*. 1. Priests; ஆசாரியர். (சீவக கடவுள்வா 1, உரை.) 2. Officiating Brahman priests in Śiva temples; சிவன் கோயிலிற் பூசனைபுரியும் சிவப்பிராமணர். *Colloq.* 3. Śaiva Vēḷāḷa priests who minister

to Non-Brahmans; பார்ப்பனரல்லாத சைவர்க்குக் கிரியை செய்விக்கும் சைவவேளாளர். *Loc.*

குருக்கள்² kurukkaḷ, *n.* < *kuru.* Kauravas, as descendants of Kuru; கௌரவர். குருக்கள் தமக்குப் படைத்தலைவரை வகுத்தது (தொல். பொ. 72, உரை, பக். 231).

குருக்கன் kurukkaṉ, *n.* A prepared arsenic. See காகபாஷாணம். (சங். அக.)

குருக்கி kurukki, *n.* A disease of the horse in which there is swelling just above the knees; முழங்கார்த்தமேல் வீக்கங்காணுங் குதிரைநோய்வகை. (அசுவசா. 111.)

குருக்கு¹ kurukku, *n.* Prickly poppy, s. sh., *Argemone mexicana;* பிரமதண்டுச்செடி. உன் வீட்டிலே எருக்குங் குருக்கும் முளைக்க.

குருக்கு² kurukku, *n.* perh. குறுகு-. Plantation thick with young palm trees; இளம்பனை முதலியவை நெருங்கிய தோப்பு. *Loc.*

குருக்குத்தி kurukkutti, *n.* (W.) 1. See குருத்து¹. 2. A disease causing blight to growing grain; பயிரில்விழும் நோய்வகை.

குருக்கேத்திரம் kuru-k-kēttiram, *n.* < *kuru* + *kṣētra.* 1. See குருக்ஷேத்திரம். குளியீருளங் குருக்கேத்திரங் கோதாவிரி குமரி (தேவா. 1154, 6). 2. (Śaiva.) A world in the aerial regions, one of *kuyyatarāṭṭakapuvaṉam,* q. v.; வாயுமண்டலத்திலுள்ள குய்யதராட்டகபுவனத்தில் ஒன்று. (சி. போ. பா. 2, 3.)

குருக்கொடு-த்தல் kuru-k-koṭu-, *v. intr.* < *guru* +. 1. To offer puja in temples; கோயிற்பூசைபுரிதல். குருக்கொடுக்கும் நம்பிமா ரென்றிருந் தோம் (தமிழ்நா. 216). 2. To incite, commonly to evil deeds; கொடுமைசெய்யத் தூண்டுதல். (W.)

குருக்கொள்(ளு)-தல் kuru-k-koḷ-, *v. intr.* < id. +. To arrogate the function of a teacher; குருவின்தன்மையை மேற்கொள்ளுதல். இராசநீதி குருக்கொண்டு முதிர்ந்தனையோ (பாரத. சூதுபோர். 241).

குருகு kuruku, *n.* < குரு¹-. 1. [T. M. Tu. *kuru.*] Young, as of an animal; விலங்குமுதலிய வற்றின் இளமை. (சூடா.) 2. Young of a beast; குட்டி. சிங்கக்குருகு (திவ். திருப்பா. 1, வ்யா.). 3. Pith, as of tree or elephant's tusk; குருத்து. குருகு பறியா நீளிரும் பனைமிசை (பரிபா. 2, 43). ஆளிநன்மான் . . . வேழத்து வெண்கோடு வாங்கிக் குருத்தருந்தும் (அகநா. 381). 4. Whiteness; வெண்மை. (திவா.) 5. Bird; பறவை. (சூடா.) 6. Heron, stork, crane; நாரை. வான்பறைக் குருகினெடுவரி பொற்ப (பதிற்றுப். 83, 2). 7. cf. *kukkuṭa.* Gallinacious fowl; கோழி. (பிங்.) 8. cf. *krauñca.* The *aṉṟil* bird; அன்றில். குருகுபெயர்க் குன்றம் (மணி 5, 13) 9. The 19th *nakṣatra;* மூலநாள். (திவா.) 10. Hole in the centre of the smith's forge for the nozzle of the bellows; துருத்திவைத் தூதும் கொல்லுலைமூக்கு. ஊதுலைக் குருகி னுயிர்த்தனர் (சிலப். 4, 59) 11. Bracelet, armlet; கைவளை. கைகுவிபிடித்தக் குருகணி செறித்த (கல்லா. 44, 22). 12. Common delight of the woods. See குருக்கத்தி. குருகுந் தளவமும் (சிலப். 13, 155). 13. White fig; கல்லால்வகை. (L.) 14. Name of a country; ஒரு தேசம். (W.) 15. A poem of the Middle Sangam; இடைச்சங்க நூல்களுள் ஒன்று. (இறை. 1, உரை.)

குருகுக்கிழங்கு kuruku-k-kiḻaṅku, *n.* < குருகு +. Very young yams or other edible roots; உண்ணுதற்குரிய இளங்கிழங்கு. (W.)

குருகுபெயர்க்குன்றம் kuruku-peyar-k-kuṉṟam, *n.* < id. +. Krauñca, a mountain. See கிரவுஞ்சகிரி. குருகுபெயர்க்குன்றங் கொன்றோன் (மணி. 5, 13).

குருகுமண் kuruku-maṇ, *n.* < id. +. White earth; வெள்ளைமண். (W.)

குருகுமணல் kuruku-maṇal, *n.* < id. +. Fine white sand; வெண்பொடிமணல். (W.)

குருகுரு¹-த்தல் kuru-kuru-, *v. intr.* < குரு³ + குரு¹-. To break out, as prickly heat; வேர்க்குரு உண்டாதல்.

குருகுரு²-த்தல் kurukuru-, **11** *v. intr.* < குருகுரு. 1. To itch and tingle; நமைத்தல். 2. To rankle in one's mind; நெஞ்சை உறுத்துதல். அவன்பேசியது நெஞ்சில் குருகுருக்கிறது.

குருகுலம்¹ kuru-kulam, *n.* < *kuru* +. The Kuru dynasty; குருவமிசம். குருகுலத்தவ ரியற்கை நன்று (பாரத. கிருட்டிண. 118)

குருகுலம்² kuru-kulam, *n.* < *guru* +. Residence or home of a guru; குருவின் வாழ்விடம்.

குருகுலவாசம் kuru-kula-vācam, *n.* < id. +. Residence or life of a pupil in the guru's home; கல்வியின்பொருட்டு மாணாக்கன் ஆசிரியன் மனையில் வசிக்கை.

குருகூர் kurukūr, *n.* < குருகு + ஊர். Alwar-tirunagari, the birth-place of Caṭakōpar in Tinnevelly district; சடகோபர் அவதரித்த தலமாகிய ஆழ்வார்திருநகரி. குருகூர்ச் சடகோபன் சொல் (திவ். திருவாய். 1, 1, 11).

குருகூர்நம்பி kurukūr-nampi, *n.* < குருகூர் +. See சடகோபர். குருகூர் நம்பி பாவி னின்னிசை (திவ். கண்ணிநுண். 2).

குருகூரார் kurukūrār, *n.* < id. See சடகோபர். (இலக். வி. 900, உரை.)

குருகை kurukai, *n.* <id. See குருகூர். குருகைக்கோன் சடகோபன்சொல் (திவ். திருவாய். 3, 6, 11).

குருச்சி[1] kurucci, *n.* < U. *kursī*. See குரிச்சி.

குருச்சி[2] kurucci, *n.* Alum; சீனக்காரம். (W.)

குருசந்திரயோகம் kuru-cantira-yōkam, *n.* <*guru*+. (Astrol.) Conjunction of Jupiter and moon; வியாழனுஞ் சந்திரனும் ஓர் இராசியிற் கூடுவது. (சங். அக.)

குருசம் kurucam, *n.* Malabar glory lily. See வெண்டோன்றி. (மலை.)

குருசம்பாவனை kuru-campāvaṉai, *n.* <*guru*+. Honor or present offered to the preceptor; ஆசாரியனுக்குச் செய்யும் மரியாதை.

குருசாமி kuru-cāmi, *n.* <id.+. 1. The most revered of masters, chief of preceptors; குருசிரேட்டன். 2. See குருநாதன், 2.

குருசில் kurucil, *n.* prob. id. See குரிசில். போர்மிகு குருசில் (பதிற்றுப். 31, 36).

குருசு kurucu, *n.* <Spt. *cruz* <Lat. *crux*. Cross; சிலுவை. *Chr.*

குருசேடம் kuru-cēṭam, *n.* <*guru*+. Leavings of a guru's food; குரு அருந்தியபின் கலத்தில் எஞ்சியபிரசாதம். (W.)

குருசேவை kuru-cēvai, *n.* <id.+. Service to a guru, of four kinds, viz., ஆத்தம், அங்கம், தானம், சற்பாவம்; ஆசாரியனை வழிபடுகை. அதிகாரிசெயுங் குருசேவையினை (வேதா. சூ. 11).

குருட்டடியாய் kuruṭṭaṭi-y-āy, *adv.* <குருடு[1] + அடி. By chance; தற்செயலாய்.

குருட்டாட்டம் kuruṭṭāṭṭam, *n.* <id.+ ஆட்டம். Blind, ineffective act, as the blind leading the blind; கண்மூடித்தனமான செய்கை. குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடி (திருமந். 1680).

குருட்டீ kuruṭṭī, *n.* <id.+ ஈ. Gad-fly, horsefly, *Tabanus bovinus;* மாடுமுதலியவற்றின் மேல் தங்கும் ஒருவகை ஈ. (W.) 2. A kind of fly that cannot see in the night; இருட்டிற் கண்தெரியாத ஓர் ஈவகை.

குருட்டுக்கண்ணாடி kuruṭṭu-k-kaṇṇāṭi, *n.* <id.+. Unserviceable looking-glass; mirror that has lost its reflective power; முகந்தெரியாத கண்ணாடி.

குருட்டுக்கல் kuruṭṭu-k-kal, *n.* <id.+. Turbid or dim gem; ஒளிமங்கின மணி. (W.)

குருட்டுக்கொக்கு kuruṭṭu-k-kokku, *n.* <id.+. [T. *guḍḍikonga.*] Blind heron, squint-eyed, *Ardeola leucoptera;* தோள்ளை மடையான் என்ற கொக்கு. (M.M. 640.)

குருட்டுச்சாயம் kuruṭṭu-c-cāyam, *n.* <id. +. Faint colours in dyeing; மங்கலான சாயம்.

குருட்டுத்தனம் kuruṭṭu-t-taṉam, *n.* <id. +. Blindness, foolishness, recklessness; கண்மூடித்தனம். *Colloq.*

குருட்டுத்தீர்ப்பு kuruṭṭu-t-tīrppu, *n.* <id. +. Undiscerning judgment; அவிவேகமான தீர்மானம்.

குருட்டுநாள் kuruṭṭu-nāḷ, *n.* <id.+. Tuesday and Saturday, as being considered blind; செவ்வாயும் சனியும். (சோதிட. சிந். பக். 36.)

குருட்டுநியாயம் kuruṭṭu-niyāyam, *n.* <id. +. Blind, thoughtless argument; கண்மூடித்தனமான நியாயம்.

குருட்டுப்பக்கம் kuruṭṭu-p-pakkam, *n.* <id. +. Reverse side of a printed cloth, as the blind side; அச்சடிச்சீலையின் மங்கலான பக்கம். *Loc.*

குருட்டுப்பணம் kuruṭṭu-p-paṇam, *n.* <id. +. Worn out coin; தேய்ந்த நாணயம். *Colloq.*

குருட்டுப்பத்தி kuruṭṭu-p-patti, *n.* <id.+. Blind faith, superstition; மூடபத்தி.

குருட்டுப்பலகை kuruṭṭu-p-palakai, *n.* <id.+. Dirty slate; அழுக்கடைந்த எழுதுபலகை. *Loc.*

குருட்டுப்பனங்காய் kuruṭṭu-p-paṉaṅkāy, *n.* <id.+. Pulpless palmyra fruit; உள்ளீடற்ற பனங்காய். *Loc.*

குருட்டுப்பாடம் kuruṭṭu-p-pāṭam, *n.* <id. +. Lesson blindly committed to memory without regard to the meaning; anything learnt by rote; பொருளுணர்ச்சியில்லாமற் செய்யும் மனப்பாடம்.

குருட்டுப்பாவலி kuruṭṭu-p-pāvali, *n.* <குருடு[2]+. Ear ornament worn in the tragus; ஒருவகைக் காதணி.

குருட்டுப்போக்காய் kuruṭṭu-p-pōkkāy, *adv.* <குருடு[1]+. 1. Aimlessly, blindly; கண்மூடித்தனமாய். 2. By chance; தற்செயலாய்.

குருட்டுமுத்து kuruṭṭu-muttu, *n.* <id.+. Dim lustreless pearl; மங்கலான முத்து. (W.)

குருட்டுமை kuruṭṭu-mai, *n.* <id.+. Pale ink; எழுத்துத்தெரியாத மசி. (W.)

குருட்டுயோகம் kuruṭṭu-yōkam, *n.* <id. +. Fluke, stroke of fortune; முயற்சியின்றிச் செல்வமுண்டாதற்குக் காரணமான யோகம்.

குருட்டுவவ்வால் kuruṭṭu-vavvāl, *n.* <id. +. Bat, *Noctilionidæ*, as blind at daytime; பகலிற் கண்தெரியாத வாவல்வகை. (M.M. 156.)

குருட்டுவழி kuruṭṭu-vaḻi, *n.* <id. +. [M. *kuruṭṭuvaḻi.*] Blind procedure; கண்மூடித்தன மான முறை.

குருட்டுவாக்கில் kuruṭṭu-vākkil, *adv.* <id. +. By chance; தற்செயலாய்.

குருட்டெழுத்து kuruṭṭeḻuttu, *n.* <id. + எழுத்து. Indistinct script or letter; மங்கலான எழுத்து. (W.)

குருடன் kuruṭaṉ, *n.* <id. 1. [K. *kuruḍu*, M. *kuruṭan.*] Blind man; கண்ணில்லாதவன். எதிலா ரிற்கட் குருடனாய் (நாலடி, 158). 2. Cukkiraṉ, as squint-eyed or with oblique vision; சுக்கிரன். (அக. நி.) 3. Dhṛtarāṣṭra, as congenitally blind; பிறவிக்குருடனாகிய திருதராட்டிரன்.

குருடி kuruṭi, *n.* <id. [K. M. *kuruḍi.*] Blind woman; கண்ணில்லாதவள்.

குருடு[1] kuruṭu, *n.* [T. *guḍḍi*, K. M. Tu. *kuruḍi.*] 1. Blindness, absence of vision; பார்வையின்மை. கூனுங் குருடும் (தமிழ்நா. 58). 2. Dimness in gems; opacity; ஒளியின்மை. (W.) 3. The wrong side of a cloth; unfinished, unpolished, undressed side of a thing; ஆடை முதலியவற்றின் குருட்டுப்பக்கம். (W.) 4. Blind ignorant fellow, used in contempt; மூடன். (W.)

குருடு[2] kuruṭu, *n.* 1. Tragus; காதின் வெளிப்புறத்துள்ள சேவிள். 2. See குருட்டுப்பாவலி.

குருத்தடை-த்தல் kuruttaṭai-, *v. intr.* <குருத்து + அடை[2]-. 1. To be stunted, as grain, putting forth no new leaves; நெல்முதலிய பயிர் கள் குருத்து விடாதிருத்தல். (W.) 2. To be big with sprouts; கதிர்போதி நிரம்புதல். *Loc.*

குருத்திறகு kuruttiṟaku, *n.* <id. + இறகு. Soft feathers, down; மெல்லிய உள்ளிறகு.

குருத்து kuruttu, *n.* <குரு[1]-. 1. [M. *kuruttu.*] Sprout; white tender leaves of a tree; shoots of grain and leguminous plants; மரமுதலியவற் றின் குருத்து. குருத்திற் கரும்புதின் றற்றே (நாலடி, 211) 2. Tender part of the internal ear, tympanum; காதுக்குருத்து. 3. Pith, as of elephant's tusk, brain matter; தந்தம் மூளை யிவற்றின் குருத்து. 4. Whiteness; வெண்மை. (பிங்.) 5. Tenderness; இளமை. (W.)

குருத்துக்கக்கு-தல் kuruttu-k-kakku-, *v. intr.* <குருத்து +. To part from the roots and perish, as tender shoots of grain by early flooding; தானியக்குருத்துப் பிரிந்து அழிவுறுதல். (J.)

குருத்துப்பூச்சி kuruttu-p-pūcci, *n.* <id. +. A pest that damages chōlam; சோளப்பயிரை யழிக்கும் பூச்சிவகை. *Loc.*

குருத்துமணல் kuruttu-maṇal, *n.* <id. +. Fine sand; பொடிமணல்.

குருத்துரோகம் kuru-t-turōkam, *n.* <*guru* +. Treachery towards one's guru; ஆசிரியனுக் குச் செய்யுந் துரோகம்.

குருத்துவம் kuruttuvam, *n.* <*guru-tva.* 1. State of a guru, priesthood; ஆசாரியத்தன்மை. 2. Honor, nobility; பெருமை. குருத்துவமான மனத்தின் (ஞானவா. சித். 3). 3. Heaviness of a body; gravity; கனம். 4. Gratitude; நன்றி. குருத்துவங் கெட்டவன். *Loc.*

குருத்துவாங்கு-தல் kuruttu-vāṅku-, *v. intr.* <குருத்து +. To shoot forth ears; குருத்து விடுதல். பயிர் குருத்து வாங்குகிறது.

குருத்தெலும்பு kuruttelumpu, *n.* <id. + எலும்பு. Cartilage; இளவெலும்பு.

குருத்தோலை kuruttōlai, *n.* <id. + ஓலை. [M. *kuruttōla.*] Young, tender, unexpanded palm leaf; பனைமுதலியவற்றின் குருத்தாயுள்ள ஓலை.

குருத்தோலைஞாயிறு kuruttōlai-ñāyiṟu, *n.* <குருத்தோலை +. Palm Sunday, the Sunday next before Easter, in commemoration of Christ's triumphal entry into Jerusalem; ஞாயிறன்று கிறிஸ்துநாதர் எருசலேம் நகர்க்குள் ஜயகோஷத்தோடு பிரவேசித்ததைக் கொண்டாடும் கிறிஸ்தவத்திருநாள். *Chr.*

குருத்தோலைப்பெருநாள் kuruttōlai-p-peru-nāḷ, *n.* <id. +. See குருத்தோலைஞாயிறு. *Chr.*

குருதட்சிணை kuru-taṭciṇai, *n.* <*guru* +. Present to a guru by his pupil after completing his Vēdic studies under him; வேதாத்தியயனஞ் செய்து முடிந்தபின் சீடன் தன் ஆசிரியனுக்குச் சமர்ப் பிக்குந் தட்சிணை.

குருதி kuruti, *n.* perh. குரு[1]-. 1. cf. *rudhira.* [M. *kuruti.*] Blood; இரத்தம். (திவா.) 2. Red colour; சிவப்பு. குருதித்துகிலின் னுறையை (சீவக. 926). 3. Mars; செவ்வாய். (திவா.) 4. cf. குருத்து. Brain; மூளை. (W.)

குருதிக்காந்தள் kuruti-k-kāntaḷ, *n.* <குருதி +. Malabar glory lily. See செங்காந்தள். (சீவக. 1651, உரை.)

குருதிப்பலி kuruti-p-pali, *n.* <id. +. Oblation in which a warrior makes an offering of his own blood to Durgā; வீரன் தன் இரத்தத் தைக் கொற்றவைக்குக் கொடுக்கும் பலி. (தொல். பொ. 59, உரை.)

குருதிப்புனல் kuruti-p-puṉal, *n.* <id.+. [M. *kurutippunal.*] Blood; உதிரநீர். விழுந்து கொழுங்குரு திப்புனலென்று (கலிங். புதுப். 156).

குருதியூட்டு-தல் kuruti-y-ūṭṭu-, *v. intr.* <id.+. Lit., to feed with blood. To offer animal sacrifice; மிருகபலிகொடுத்தல். *Loc.*

குருதிவாரம் kuruti-vāram, *n.* <id.+. Tuesday; செவ்வாய்க்கிழமை. புதியசிலை . . . குருதி வாரந்தனக்குக் கொஞ்சநாளிற் கிழியும் (அறப். சத. 61).

குருது[1] kurutu, *n.* <குதிர். Receptacle for grain, granary; தானியக்குதிர். (W.)

குருது[2] kurutu, *n.* <*ghṛta*. Clarified butter, ghee; நெய். (மூ. அ.)

குருந்தக்கல் kurunta-k-kal, *n.* <*kuruvinda*+. 1. Corundum emery, adamantine spar; மாணிக்கவகையுள் ஒன்று. (W.) 2. See குருவிந்தக்கல், 3.

குருந்தம்[1] kuruntam, *n.* <id. See குருந்தக்கல்.

குருந்தம்[2] kuruntam, *n.* prob. *kunda.* See குருந்து[2]. குருந்தமொன் றொசித்தானொடுஞ்சென்று (திவ். பெரியாழ். 4, 4, 7).

குருந்தம்பொடி kuruntam-poṭi, *n.* <குருந்தம்[1]+. Emery powder; குருந்தக்கற் பொடி. (W.)

குருந்து[1] kuruntu, *n.* <குருத்து. (பிங்.) 1. White tender leaf; tender shoots; வெண்குருத்து. 2. Infant; குழந்தை.

குருந்து[2] kuruntu, *n.* prob. *kunda.* 1. Wild lime, *Atalantia;* புனவெலுமிச்சை. (பிங்.) 2. A species of wild lime, s.tr., *Atalantia racemosa;* காட்டெலுமிச்சைவகை. (L.) 3. A species of wild lime, s. tr., *Atalantia missionis;* ஒருவகைச் சிறு மரம். (L.) 4. Common delight of the woods, m. cl., *Hiptage madablota;* குருக்கத்தி. (பிங்.)

குருந்து[3] kuruntu, *n.* prob. *kuruvinda.* See குருந்தக்கல். (W.)

குருநகை kuru-nakai, *n.* <குரு[1]-+. cf. குறுநகை. Smile; புன்சிரிப்பு. குருநகையி னந்தி மகிழ் கொள்ள (தணிகைப்பு. நந்தியு. 7).

குருநமச்சிவாயர் kuru-namaccivāyar, *n.* <*guru*+. A saint and poet, the author of Aṇṇāmalai-veṇpā, 16th c.; 16-ஆவது நூற்றண்டில் வாழ்ந்தவரும் அண்ணாமலைவெண்பாவை இயற்றியவருமாகிய ஒரு ஞானி.

குருநாடி kuru-nāṭi, *n.* <id.+. 1. A treatise dealing with the diagnosis of diseases by feeling the pulse; நாடிகொண்டு நோயியல்பு அறியும்வகையை யுணர்த்தும் ஒரு வைத்திய நூல். 2. A treatise on augury believed to be inspired by Bṛhaspati; தேவகுருவின் அருளால் இயற்றப்பெற்றதாகக் கூறும் ஆருடநூல்.

குருநாடு kuru-nāṭu, *n.* <*kuru*+. The country of the Kurus; குருவமிசத்தார் ஆண்டதேசம்.

குருநாத்தகடு kuru-nā-t-takaṭu, *n.* <குறு-மை+*nāga*+. Foliated tinsel; ஒளியுள்ள ஒருவகை மெல்லிய வர்ணத்தகடு.

குருநாதன் kuru-nātaṉ, *n.* <*guru*+. 1. Exalted guru, great master; பரமகுரு. 2. Skanda, as having once initiated His father Śiva into the mystic explanation of *Praṇavam;* தம் தந்தையாகிய சிவபெருமானுக்குப் பிரணவத்தின் தன்மையை ஓரவசரத்தில் உணர்த்திய முருகக்கடவுள். முகமாறுடைக் குருநாதன் (கந்தரலங். 71).

குருநாப்பட்டை kuru-nā-p-paṭṭai, *n.* <குறு-மை+*nāga*+. See குருநாத்தகடு.

குருநாள் kuru-nāḷ, *n.* <*guru*+. 1. Thursday as Jupiter's day; [தேவகுருவுக்குரியது.] வியாழக்கிழமை. 2. The 8th *nakṣatra*. See பூசம். (பிங்.)

குருநிந்தை kuru-nintai, *n.* <id.+. Disrespect towards or speaking ill of, one's guru, one of *aim-perum-pātakam*, q.v.; ஐம்பெரும் பாதகங்களுளொன்றாகிய குருவைப் பழிக்கை.

குருநிலம் kuru-nilam, *n.* <*kuru*+. Country of the Kurus; குருவமிசத்தாரது நாடு. குருநிலத்திற் பாதியினிக் கொடாதிருந்தால் (பாரத. கிருட்டிண. 7).

குருநோய் kuru-nōy, *n.* <குரு[3]+. Eruptive disease, as small pox; வசூரி முதலிய கொப்புளங் காணும் நோய். (சிலப். உரைபெறு. 1.)

குருப்பட்டம் kuru-p-paṭṭam, *n.* <*guru*+. Title of an ordained Christian minister; கிறிஸ்தவ குருவுக்குக் கொடுத்தற்குரிய பட்டம். *Chr.*

குருப்பி-த்தல் kuruppi-, *11 v. intr.* <குருப்பு. [M. *kuruppu.*] To break out, as pimples; பருவுண்டாதல். (W.)

குருப்பிரசாதம் kuru-p-piracātam, *n.* <*guru*+. 1. Favour, grace, blessing of the guru; குருவின் அருள். 2. Leavings of a guru's food; குரு உண்ட உணவின்சேடம். (W.)

குருப்பு kuruppu, *n.* <குரு[1]-. [T. *kurupu.*] Pimple, pustule; பரு. (W.)

குருப்பூச்சி kuru-p-pūcci, *n.* <குரு[3]+. A kind of spotted wasp; புள்ளியோடுகூடிய குளவிவகை. (W.)

குருபத்தி kuru-patti, *n.* <*guru*+. Reverence towards guru; குருவினிடங்கொள்ளும் அன்பு.

குருபரம்பரை kuru-paramparai, *n.* <id.+. 1. See குருபாரம்பரியம். 2. A hagiology of Ālwārs and Ācāryas; ஆழ்வாராசாரியர்களின் வரலாறு கூறும் நூல்.

குருபரன் kuru-paraṉ, *n.* <id.+. Great, supreme guru; குருசிரேட்டன். *மெய்த்தவ நிலைமைத் தாய குருபரன்* (இரகு. இந்துமதி. 87).

குருபன்னி kuru-paṉṉi, *n.* <id.+*patnī*. Wife of a guru; குருவின் மனைவி.

குருபாததாசர் kuru-pāta-tācar, *n.* <id. +. The author of Kumarēca-catakam; குமரேச சதகம் இயற்றிய ஆசிரியர்.

குருபாரம்பரியம் kuru-pārampariyam, *n.* <id.+. Regular succession of gurus; ஆசாரிய பரம்பரை.

குருபீடம் kuru-pīṭam, *n.* <id.+. Seat or office of a guru; குருவினது ஸ்தானம்.

குருபூசை kuru-pūcai, *n.* <id.+. Annual worship of a deceased guru on the day of his death, often accompanied with the feeding of devotees, chiefly in Śaiva mutts; சமாதியடைந்த குருவின் வருஷத்திருநக்ஷத்திரந்தோறும் சைவமடங்களில் மகேசுரபூசையுடன் அக்குருவிற்குச்செய்யும் ஆராதனை.

குரும்பட்டி kurumpaṭṭi, *n.* <குரும்பை. Immature coconuts or palmyra nuts; தென்னை பனைகளின் குரும்பை. (W.)

குரும்பி kurumpi, *n.* Comb of white ants' nest; புற்றஞ்சோறு. *பாம்புறை புற்றிற் குரும்பி யேய்க்கும்* (பெரும்பாண். 277).

குரும்பை[1] kurumpai, *n.* prob. குறு-மை. [K. *kurumbe*, M. *kurumba*.] 1. Immature coconuts or palmyra nuts; fruit buds; தெங்கு பனைகளின் இளங்காய். *இரும்பனையின் குரும்பை நீரும்* (புறநா. 24, 2). 2. Young coconut; இளநீர். *குன்றங் குரும்பையும் வெறுத்தநின் னிளமுலை* (கல்லா. 52, 8). 3. See குரும்பி. (W.) 4. Bow-string hemp. See பெருங்குரும்பை. (தைலவ. தைல. 24.)

குரும்பை[2] kurumpai, *n.* <குறு-மை+பி. Ear-wax; காதினுள் திரளுங் குறும்பி. *Loc.*

குரும்பைகுத்து-தல் kurumpai-kuttu-, *v. intr.* <குரும்பை[1]+. To pluck young coconuts; தென்னங்குரும்பையைப் பறித்தல். *Loc.*

குருமகன் kuru-makaṉ, *n.* <*guru*+. 1. Priest; குரு. *எங் குருமக னிருந்தோ னவன்பால்* (மணி. 16, 64). 2. Priest's son; குருவின்புத்திரன்.

குருமணி kuru-maṇi, *n.* <id.+. Exalted guru, highly esteemed guru, as a gem among gurus; குருசிரேட்டன். *குருமணிதன் றாள்வாழ்க* (திருவாச. 1, 3).

குருமன் kurumaṉ, *n.* <குறு-மை. The young of certain animals and birds; ஒருசார் விலங்கு பறவைகளின் இளமைப்பெயர். (W.)

குருமான் kurumāṉ, *n.*<id. See குருமன்.

குருமி-த்தல் kurumi-, *11 v. intr.* To make a crash, as a ship dashing against a rock; பேரொலிசெய்தல். *குருமித்து மதலை பொங்கி* (சீவக. 512).

குருமிளகு kuru-miḷaku, *n.* <குரு[5]+. Superior pepper; நல்லமிளகு.

குருமுகறன் kuru-mukaṟaṉ, *n.* <குரு[3]+ *mukha*. See குருமூஞ்சி. (W.)

குருமுடி-த்தல் kuru-muṭi-, *v. intr.* prob. குரு[5]+. 1. To make a preparation helpful for calcining minerals; உலோகங்களை நீற்றுதற்குதவும் மருந்து செய்தல். (யாழ். அக.) 2. To make a mercurial preparation for purposes of alchemy; இரசவாதத்திற் பொன்னுக்குதற்கு மருந்துசெய்தல்.

குருமுறை kuru-muṟai, *n.* cf. T. *gurumulu*. (W.) 1. Soap; சவர்க்காரம். 2. A prepared arsenic; கோடாசோரி.

குருமூஞ்சி kuru-mūñci, *n.* <குரு[3]+. One whose face is pockpitted; அம்மைவடுவுள்ள முகத்தவ-ன்-ள். (W.)

குருமூர்த்தம் kuru-mūrttam, *n.* <*guru*+. Manifestation of God in the form of a guru to His devotees; குருவாக உபதேசிக்கவந்த கடவுளின் திருமேனி. (தனிப்பா. ii. 246, 581.)

குருமூர்த்தி kuru-mūrtti, *n.* <id.+. 1. Guru; குரு. 2. See தக்ஷிணாமூர்த்தி.

குருமை[1] kurumai, *n.*<*ghṛ*. Lustre, brightness; நிறம். (தொல். சொல். 303.)

குருமை[2] kurumai, *n.* <*guru*. Dignity, superiority; பெருமை. *குருமையெய்திய குணநிலை* (சீவக. 2748).

குருலிங்கசங்கமம் kuru-liṅka-caṅkamam, *n.* <id.+*liṅga*+*saṅ-gama*. (Śaiva.) Aggregate of the spiritual guru, Śiva's emblem and the devotees of Śiva; குருவும் சிவமும் திருக்கூட்டமும்.

குருவண்டு kuru-vaṇṭu, *n.* <குரு[3]+. A kind of spotted wasp; புள்ளியுள்ள குளவிவகை. (W.)

குருவரன் kuru-varaṉ, *n.* <*guru*+*vara*. See குருபரன். *குருவானிடத் துரைத்தான்* (திருவாலவா. 1, 2).

குருவருடம் kuru-varuṭam, *n.* <*kuru*+ *varṣa*. A division of the earth situate between

Śṛṅgavāṉ and the Northern Ocean, one of *nava-varuṭam*, q.v.; நவவருடங்களுள் ஒன்று. வட கடல் முதலாச் சிருங்கவ்காறும் குருவருடம் (கந்தபு. அண்டகோ. 36).

குருவன் kuruvaṉ, *n.* <*guru*. Priest; குரு. வானோர் குருவனே போற்றி (திருவாச. 5, 68).

குருவாக்கு kuru-vākku, *n.* <id.+. Word or command of guru; குருமொழி.

குருவாரம் kuru-vāram, *n.* <id.+. Thursday, as Jupiter's day; வியாழக்கிழமை.

குருவி kuruvi, *n.* perh. குழ-மை. 1. [M. *kuruvi*.] Small bird; பறவைவகை. குருவிசேர் வரை (சீவக. 2237). 2. cf. குருகு. The 19th *nakṣatra*; மூலநாள். (அக. நி.) 3. Crab's eye. See குன்றி. (மலை.)

குருவிக்கண் kuruvi-k-kaṇ, *n.* <குருவி+. *Loc.* 1. Small eyes; சிறுகண். 2. Small hole, eyelet; சிறுதுவாரம்.

குருவிக்கல் kuruvi-k-kal, *n.* <id.+. Red soil; ஒருவகைச் செம்மண். *Loc.*

குருவிக்கார் kuruvi-k-kār, *n.* <id.+. A small kind of black paddy; கார்நெல்வகை. (W.)

குருவிக்காரன் kuruvi-k-kāraṉ, *n.* <id.+. 1. Bird-catcher, bird-fancier; குருவிபிடிப்போன். 2. A class of bird-catchers, who decoy birds by concealing themselves and successfully imitating their cries; மறைந்திருந்து குருவிகளைப் போலச் சத்தஞ்செய்து குருவிபிடிக்கும் ஒருவகைச் சாதியான்.

குருவிக்குடல் kuruvi-k-kuṭal, *n.* <id.+. Frequent craving for food as the result of eating too little at a time; அடிக்கடி உண்டாகும் உணவு விருப்பம். (W.)

குருவிக்கூடு kuruvi-k-kūṭu, *n.* <id.+. Small bird's nest; குருவிகட்டும் கூடு.

குருவிச்சி kuruvicci, *n.* See குருவிச்சை.

குருவிச்சை kuruviccai, *n.* 1. See குருவிஞ்சி. (M.M. 2.) 2. Ovate-leaved ivory wood, m. tr., *Ehretia laevis*; ஒருவகை மரம். (M.M. 223.) 3. A semi-parasite. See புல்லுருவி. (W.)

குருவிஞ்சி kuruviñci, *n.* 1. Box-leaved ivory wood, m. sh., *Ehretia buxifolia*; காட்டு வெற்றிலே. (D.) 2. Box-leaved satin ebony, l. sh., *Maba buxifolia*; பூடுவகை. (M.M.)

குருவித்தலை kuruvi-t-talai, *n.* <குருவி+. 1. Small head; சிறியதலை. 2. Inner mound of a fortification, as a protection for bowmen; வில்லாளிகட்குப் பாதுகாவலாயமையும் ஞாயில் என்னும் மதிலுறுப்பு. (சிலப். 15, 217, உரை.)

குருவித்தலைப்பாக்கு kuruvi-t-talai-p-pākku, *n.* <id.+. A kind of arecanut; பாக்கு வகை. (J.)

குருவித்தலைப்பாகல் kuruvi-t-talai-p-pākal, *n.* <id.+. Small balsam pear. See மிதிபாகல். (J.)

குருவித்தலைப்பாகை kuruvi-t-talai-p-pākai, *n.* <id.+. Small turban; சிறிய தலைக் குட்டை. *Loc.*

குருவித்தலைப்பைத்தியக்காரன் kuruvi-t-talai-p-paittiya-k-kāraṉ, *n.* <id.+. Idiot, weak-headed or hare-brained person; மூடன். *Loc.*

குருவித்திருக்கை kuruvi-t-tirukkai, *n.* <id.+. Ray, greenish-brown, disk about twice as wide as long, tail three times as long as disk, *Rhinoptera adspersa*; கடல்மீன்வகை. (M. M. 891.)

குருவித்தேங்காய் kuruvi-t-tēṅkāy, *n.* <id.+. 1. Small coconut; சிறுதேங்காய். 2. A kind of tree, *Phyllanthus*; ஒருவகை மரம். (W.)

குருவிந்தக்கல் kuruvinta-k-kal, *n.* <*kuruvinda*+. 1. See குருவிந்தம், 1. 2. Grey flint, emery; சாணைக்கல் செய்வதற்குதவும் ஒருவகைக் கல். (M.M. 247.) 3. Red ochre; காவிக்கல். இரத்தின மறியாதா னொருவன் குருவிந்தக்கல்லோ டொக்கும் இது என்றால் (ஈடு, 3, 1, 2).

குருவிந்தம் kuruvintam, *n.* <*kuruvinda*. 1. Inferior kind of ruby; தாழ்ந்ததர மாணிக்க வகை. (சிலப். 14, 186, உரை.) 2. Crab's eye, m. cl., *Abrus precatorius*; குன்றி. 3. A corn of barley; வாற்கோதுமை மணி. (W.) 4. Vermilion; சாதிலிங்கம். (W.) 5. Straight sedge, *Cyperus pertennis*; முத்தக்காசு. (மலை.)

குருவிப்பாக்கு kuruvi-p-pākku, *n.* <குருவி+. See குருவித்தலைப்பாக்கு. (J.)

குருவிப்பாகல் kuruvi-p-pākal, *n.* <id.+. See குருவித்தலைப்பாகல்.

குருவிப்பேத்தை kuruvi-p-pēttai, *n.* <id.+. A sea-fish, greenish, attaining 1 ft. in length, *Tetrodon immaculatus*; கடல்மீன்வகை.

குருவிரசு kuruviracu, *n.* 1. Ivory wood, *Ehretia*; ஒருசாதிமரம். 2. Ovate-leaved ivory wood. See பட்டைவிரசு. (L.)

குருவிவாலான் kuruvi-vālāṉ, *n.* <குருவி+. A large kind of bearded paddy; பெருநெல் வகை. *Loc.*

குருவுக்காதி kuruvukkāti, *n.* prob. குருவுக்கு + ஆதி. Crude camphor; பச்சைக்கற்பூரம். (மூ. அ.)

குருவெறும்பு kuru-v-eṟumpu, *n.* <குரு[5] +. Large red ant, *Formica smaragdina;* முசிறு. (W.)

குருள்[1] kuruḷ, *n.* prob. *kurula.* 1. Woman's hair; பெண்டிர் தலைமயிர். (பிங்.) 2. Curl, lock of hair, especially on the forehead, lovelock; நெற்றியில் மயிர்ச்சுருள். (W.)

குழிசோதனை kuḻi-cōtaṉai, *n.* <குழி+. Estimation of the total produce of a field from that of a single *kuḻi* harvested; விளைந்தவயலில் குழியளவுள்ள இடத்தில்வளர்ந்த கதிரை அறுத்தளந்து விளைவுமொத்தத்தை மதிப்பிடுகை. *Loc.*

குழித்தருப்பணம் kuḻi-t-taruppaṇam, *n.* <id.+. Libation offered to the deceased, for ten days from the day of death, in a pit in which is placed a stone representing the deceased; இறந்தது முதல் பத்துநாள முடிய, இறந்தவர்பொருட்டு நட்ட கல்லுள்ள குழியிற் செய்யும் நீர்க்கடன்.

குழித்தாமரை kuḻi-t-tāmarai, *n.* <id.+. Rootless nelumbo, floating in tanks and ditches, *Pistia stratiotes;* கொட்டைப்பாசி. (மலை.)

குழித்தைலம் kuḻi-t-tailam, *n.* <id.+. Lit., pit oil. Oil extracted by burying and heating the pot containing medicinal herbs; குடத்தில் மூலிகைகளை நிரப்பி எரித்துவடிக்குந் தைலம். *காந்தட்கிழங் கைக் குழித்தைலமாக இறக்கி* (இராசவைத். 96, உரை).

குழிதிற-த்தல் kuḻi-tiṟa-, *v. intr.* <id.+. To open the sacred fire-pit with appropriate ceremonies, as in Muharram feast; மொகரம் முதலிய சில விழாக்களின் முடிவில் தீயில் நடந்து சென்று பிரார்த்தனை நிறைவேற்றுவதற்காகக் குழிகளில் தழல்பரப்பிவைத்தல். (W.)

குழிந்தெடு-த்தல் kuḻinteṭu-, *v. tr.* <குழி[1]+. To scrutinize, dive deep; to be very inquisitive about; ஆராய்ந்துபார்த்தல். (J.)

குழிநரி kuḻi-nari, *n.* <குழி+. [M. *kuḻinari.*] 1. See குள்ளநரி. *காயுஞ் சிந்தைக் குழிநரிக் கள ளத்தான்* (குற்றா. தல. வேடன்வலம். 13). 2. Ant-lion, neuropterous insect the larva of which makes in the sand a pitfall to capture ants, *Myrmeleon formicarius;* மணலிற் குழிசெய்துகொண்டு அதனுள் விழும் எறும்புமுதலியவற்றை உணவாகக்கொள்ளும் சிறுபூச்சி.

குழிநாவல் kuḻi-nāval, *n.* <id.+. Common myrtle, m. sh., *Myrtus communis;* நாவல் மரவகை. (பிங்.)

குழிப்பணம் kuḻi-p-paṇam, *n.* <id.+. A Madura coin, current in the 18th c.; 18-ஆம் நூற்றண்டில் மதுரைப்பிரதேசத்தில் வழங்கிவந்த ஒரு வகை நாணயம். (I.M.P. Mr. 3—A.)

குழிப்பறங்கிக்காய் kuḻi-p-paṟaṅki-k-kāy, *n.* <id.+. A species of pumpkin; கோடைப் பூசனி. (பதார்த்த. 699.)

குழிப்பறை kuḻi-p-paṟai, *n.* <id.+. A Pariah caste; பறையர் சாதிவகை. (W.)

குழிப்பன்னா kuḻi-p-paṉṉā, *n.* Species of sea-fish, (*a*) brownish-red, attaining more than 2½ ft. in length, *Otolithus ruber;* (*b*) greyish, attaining 16 in. in length, *Otolithus maculatus;* (*c*) silvery-grey, attaining 9 in. in length, *Sciæna aneus;* கடல்மீன்வகைகள்.

குழிப்பாடி kuḻi-p-pāṭi, *n.* Cloth made in the town of Kuḻi-p-pāṭi; குழிப்பாடி என்னும் ஊரில் நெய்யப்பெறும் ஒருவகை ஆடை. (தொல். சொல். 116, உரை.)

குழிப்பாம்பு kuḻi-p-pāmpu, *n.* See குழி மீன்.

குழிப்பாறை kuḻi-p-pāṟai, *n.* <குழி+. Ledge with hollow cavities for pounding grain; தானியங் குற்றுதற்குரிய குழியுள்ள பாறை. *Loc.*

குழிப்பிள்ளை kuḻi-p-piḷḷai, *n.* <id.+. Young coconut tree planted deep; ஆழத்தில் நடுந் தென்னங்கன்று. (W.)

குழிப்பு kuḻippu, *n.* <குழி[2]-. (W.) 1. Forming pits, hollows; குழிசெய்கை. 2. Hollow, depression; தாழ்வு. 3. A peculiar harmonic rhythm in verse, as *அணியுடன்றபரி பரியுடன்ற கரி கரியுடன்றகொடி;* செய்யுட் சந்தவகை.

குழிப்புண் kuḻi-p-puṇ, *n.* <குழி+. 1. Ulcer in which holes are formed; குழிவிழுந்த புண். *காணுவாழைக்கு மூலக்கண்குழிப்பு ணறிவிடும்* (பதார்த்த. 365). 2. Inflammation in the mouth; வாய்ப்புண். *Loc.*

குழிப்பெருக்கம் kuḻi-p-perukkam, *n.* <id. +. See குழிமாற்று.

குழிபறி-த்தல் kuḻi-paṟi-, *v. intr.* <id. +. 1. To dig a pit; குழிதோண்டுதல். *குழிபறித் தாக்கரோடு மல்லரை யிருத்தி* (பாரத. கிருட். 179). 2. To try to ruin, undermine; சதியாலோசனை செய்து பிறர்க்குத் தீங்குசெய்ய முயலுதல்.

குழிமாந்தம் kuḻi-māntam, *n.* <id.+. A child's disease in which the fontanel of the head sinks; உச்சியில் குழிவிழுமாறு தோன்றும் மாந்த நோய் வகை. (சீவரட்.)

குழிமாற்று kuḻi-māṟṟu, *n.* <id.+. (Arith.) 1. Table of squares; வருக்க வாய்பாடு. 2. Multiplication table; பெருக்கல் வாய்பாடு.

குழிமாறு-தல் kuḻi-māṟu-, *v. tr.* <id.+. 1. To square; வருக்கித்தல். 2. To multiply; பெருக்குதல். (W.)

குழிமி kuḻimi, *n.* (W.) 1. Sluice; மதகு. 2. Spout of a vessel; பாத்திரத்தின் மூக்கு.

குழிமிட்டான் kuḻimiṭṭāṉ, *n.* 1. Bristly button weed. See நத்தைச்சூரி. (மலை.) 2. A common climber with many thick fleshy roots. See தண்ணீர்விட்டான். 3. Rough basil, m. sh., *Ocimum sanctum hirsutum;* செடிவகை. (L.)

குழிமீட்டான் kuḻimīṭṭāṉ, *n.* See குழிமிட் டான். (பதார்த்த. 295.)

குழிமீன் kuḻi-mīṉ, *n.* Conger eel, olive, attaining more than 10 ft. in length, *Murænesox talabon;* பாம்புவடிவான மீன்வகை.

குழிமுயல் kuḻi-muyal, *n.* <குழி +. Rabbit, *Lepus cuniculus;* முயல்வகை. (W.)

குழியச்சு kuḻi-y-accu, *n.* <id. +. Mould for making gold beads; பொன்மணி யுருவாக்கும் அச்சு. (W.)

குழியடிச்சான் kuḻi-y-aṭiccāṉ, *n.* <id. +. A coarse paddy sown in *Āvaṇi-Puraṭṭāci*, maturing in four months; ஆவணி புரட்டாசி மாதங்களில் விதைக்கப்பெற்று நான்குமாதத்தில் விளையும் நெல்வகை. *Loc.*

குழியம் kuḻiyam, *n.* <குழுவு-. cf. *gulī.* 1. Globular, round shape; திரள்வடிவு. (திவா.) 2. Perfume ball; வாசனையுண்டை. (சிலப். 14, 171, அரும்.) 3. A kind of curved bludgeon; வளைதடி. (W.)

குழியம்மி kuḻi-y-ammi, *n.* <குழி +. Oval stone for macerating medicines; மருந்தரைக்கும் கலுவம்.

குழியல் kuḻiyal, *n.* <குழி¹- + A kind of hollow metallic vessel; உலோகத்தாற் செய்யப்பட்ட ஒருவகைக் குழிவான பாத்திரம். *Loc.*

குழியவிடு-தல் kuḻiya-v-iṭu-, *v. tr.* <id. +. To form the halves of hollow gold beads to be afterwards soldered together, in jewelry; பொன்னைக் குழியுண்டாம்படி அச்சிலிடுதல். (J.)

குழியானை kuḻi-yāṉai, *n.* <குழி +. See குழிநரி, 2.

குழியில்விழு-தல் kuḻiyil-viḻu-, *v. intr.* <id. +. Lit., to fall into a pit. To fall into evil ways, vice; தீநெறிப்படுதல்.

குழிவித்துவை-த்தல் kuḻi-vittu-vai-, *v. intr.* <id. +. To sow grain in small quantities as the land is furrowed, and cover it with dust; உழவுசாலில் கொஞ்சங்கொஞ்சமாக விதையையிட்டுப் புழுதிமண்ணைக்கொண்டு மூடிவைத்தல். *Loc.*

குழிவு kuḻivu, *n.* <குழி¹-. 1. Hollowness, depression; குழிந்திருக்கை. 2. A flaw in ruby; மாணிக்கக்குற்றங்களுள் ஒன்று. *மாணிக்கம் குழிவும் பிராஹாரமும்* (S.I.I. ii, 81).

குழிவெட்டி kuḻi-veṭṭi, *n.* <குழி +. Grave-digger; பிரேதக்குழி தோண்டுபவன்.

குழிவெட்டு kuḻi-veṭṭu, *n.* <id. +. Digging in a field for the purpose of levelling it; வயல்நிலத்தைச் சமப்படுத்த மேட்டைவெட்டும்வெட்டு. (G. Tj. D 97.)

குழு¹ kuḻu, *n.* <குழுவு-. cf. *kula.* [M. *kuḻu.*] 1. Class, society, band, assembly; மக்கட்கூட்டம். (திவா.) 2. Assembly or gathering of women; மாதர்கூட்டம். (பிங்.) 3. Flock, herd, swarm, shoal; ஆடுமுதலியவற்றின் கூட்டம். (W.) 4. Bundle, heap; தொகுதி. *இந்தனக்குழுவை* (ஞானா. 63, 11).

குழு² kuḻu, *n.* cf. *ghuṣ.* (W.) 1. Ingenuity; தந்திரம். 2. Shrewd utterance; தந்திரமான வார்த்தை. 3. Wit, witty expression; சாதுரியச் சொல்.

குழுக்காலி kuḻu-k-kāli, *n.* <கொழு- +. Well-shaped, intractable bull in a herd; கட்டுக் கடங்காமற் கொழுத்திருக்கும் மந்தைமாடு. *Loc.*

குழுகூலி kuḻu-kūli, *n.* prob. கொள்- +. Share of money paid to the village watchman for acting as intermediary and restoring the stolen property to the owner; களவுபோனதை மீட்டுக்கொடுப்பதற்காகப் பொருட்குரியவர் கொடுக்கும் பொருளில் இடைநின்று அக்காரியத்துக்கு உதவிய கிராமக்காவற்காரனுக்குரிய பங்கு. (G. Tp D. i, 257.)

குழுதாடி kuḻu-tāṭi, *n.* See குழுதாழி. *Vul.*

குழுதாழி kuḻu-tāḻi, *n.* <குழி +. [M. *kuḻi-t-tāḻi.*] Cattle trough, made of clay and burnt; மாட்டுத்தொட்டி. *Loc.*

குழும்பு¹ kuḻumpu, *n.* prob. குழி¹-. Pit; குழி. *ஆழ்ந்த குழும்பிற் றிருமணி கிளர* (மதுரைக். 273).

குழும்பு² kuḻumpu, *n.* <குழுமு-. Herd, flock, swarm, crowd; திரள். *களிற்றுக் குழும்பின்* (மதுரைக். 24)

குழுமல் kuḻumal, *n.* <id. 1. Assembling, crowding; கூடுகை. *விண்ணவர் யாவருங் குழுமலுற்று* (கந்தபு. தேவகிரி. 21). 2. Assembly, crowd; கூட்டம். (பிங்.)

குழுமு-தல் kuḻumu-, 5 *v. intr.* cf. *kul.* 1. To collect in large numbers, as men, ani-

mals; கூடுதல். *மாதரெண்ணிலார் குழுமி* (காஞ்சிப்பு. பன்னிரு. 134). 2. To gather together, mix; கலத்தல். *கொன்றையும் தளவமுங் குழுமத் தொடுத்த* (சிலப். 12, உரைப்பாட்டுமடைக்குப் பின்செய்யுள், 10). 3. cf. குமுறு-. To roar in company, as tigers; கூடி முழங்குதல். *கூட்டுறை வயமாப் புலியொடு குழும* (மதுரைக். 677).

குழுமுரால் kuḻu-mural, *n.* prob. குழு[1]+. A species of thick needle-fish; ஒருவகை முரல்மீன். (J.)

குழுவல் kuḻuval, *n.* <குழுவு-. 1. Crowding, assembling; கூடுகை. *குமரரு மங்கைமாருங் குழுவலால்* (கம்பரா. வரைக். 28). 2. Crowd, assembly; கூட்டம்.

குழுவன் kuḻuvaṉ, *n.* prob. குழு[1]+. See குளுவன். (சங். அக.)

குழுவு-தல் kuḻuvu-, *5 v. intr.* cf. *kul.* 1. To assemble in large numbers, to crowd; கூடுதல். *மள்ளர் குழீஇய விழவினானும்* (குறுந். 31). 2. To associate, mingle; கலத்தல். *இகலில ரெஃகு டையார் தம்முட் குழீஇ* (நாலடி, 137).

குழூஉ kuḻūu, *n.* <குழுவு-. Class, assembly, crowd; கூட்டம். *சாதிகுழூஉ* (நன். 211).

குழூஉக்குறி kuḻūu-k-kuṟi, *n.* <குழூஉ+. (Gram.) Conventional term, peculiar to a society or profession, one of three *takuti-vaḻakku*, q.v.; சிற்சில கூட்டத்தார்க்குள் வழங்கும் சங்கேத மொழி. (நன். 267.)

குழூஉநிலை kuḻūu-nilai, *n.* <id.+. Series of storeys in a building; கோபுரமுதலிய கட்டடத் தின் தளநிலைகள். *குழூஉநிலைப் புதவின்* (பதிற்றுப். 53, 16).

குழூஉப்பெயர் kuḻūu-p-peyar, *n.* <id.+. (Gram.) Collective noun; கூட்டம் பற்றிவரும் பெயர்ச்சொல். *சாதி குழூஉப்பெயர்* (நன. 211).

குழை[1]-தல் kuḻai-, *4 v. intr.* [K. *koḻe*, M. *kuḻayu.*] 1. To become soft, mashy, pulpy, as well-cooked; இளகுபதமாதல். *குழையச் சமைத்த பருப்பு* (திவ். பெரியாழ். 3, 1, 3, வ்யா.). 2. To melt, become tender, as the mind; மனமிளகுதல். *தொண்டரினங் குழையாத்தொழும்* (பதினொ. பட்டினத். திருவே. 28). 3. cf. *kuth.* To be overboiled, as rice; சோறு அளிதல். 4. cf. *kuś.* To be in close intimacy, to be hand in glove with; நெருங்கி உறவாடுதல். *குழைந்து பரிமாறுகிறார்கள்.* 5. cf. *kuṭ.* To be bent, as a bow; வளைதல். *திண்சிலை குழைய* (சூளா. அரசியற். 319). 6. To fade, languish, become spoilt, as flowers or twigs; வாடுதல். *மோப்பக் குழையு மனிச்சம்* (குறள், 90). 7. To wave, as a flag, to sway to and fro; துவளுதல். *குழைந்த நுண்ணிடை* (கம்பரா. சித்திர. 9). 8. To be tired, to be weighed down; தளர்தல். *கோதைசூழ் கொம்பிற் குழைந்து* (பு. வெ. 12, பெண்பாற். 14). 9. To be troubled; வருந்துதல். *மகளிர் குழைகின்ற குழைவை* (கம்பரா. பிரமாத். 31).

குழை[2]-த்தல் kuḻai-, *11 v. tr.* Caus. of குழை[1]-. [M. *kuḻekka.*] 1. To macerate, mash, reduce to pulp, make soft by mixing with water; குழையச்செய்தல். *சோற்றைக் குழைத்துவிட்டாள்.* 2. To mix, as powder with a liquid; சூரணப்பொருளைத் தேன் முதலியவிட்டுக் கலத்தல். 3. To melt and blend in union, fuse; கலக்கப்பண்ணுதல். *உன்னையென்னுள்ளே குழைத்த வெம்மைந்தா* (திவ். திருவாய் 2, 6, 9). 4. To cause to sprout or shoot forth; தழையச்செய்தல். *மழை குடக்கேர்பு குழைத்த சிறுகோல்* (நற். 140). 5. cf. *kul.* To gather in a lump, as boiled rice; திரட்டுதல். *கருனையாற் குழைக்குங் கைகள்* (சீவக. 257). 6. To cause to melt; இளகுவித்தல். *அத்தன்மெய் குழைத்த நங்கை* (கந்தபு. மேரு. 16). 7. cf. *kuṭ.* To bend, as a bow; வளைத்தல். *பொன்வரை குழைத்து* (கூர்மபு. பிரமவிஷ். 20). 8. To wave, as the chowry fan; to wag, as a dog its tail; அசைத்தல். *குழைக்கின்ற கவரி யின்றி* (கம்பரா. நகர்நீ. 2).

குழை[3] kuḻai, *n.* <குழை[1]-. 1. Tender leaf, sprout, shoot; தளிர். *பொலங்குழை யுழிஞை* (புறநா. 50). 2. [K. *koḻaci.*] Soft mud, mire; சேறு. (திவா.) 3. Hole; துளை. *கோடிநுண் டுகிலுங் குழையும்* (சீவக. 1369). 4. Tube, pipe; குழல். (பிங்.) 5. Conch; சங்கு. (பிங்.) 6. Ear; காது. *மணித்தோடுங் குழையி லாட* (அஷ்டப். சீரங்கநாயகி. ஊச. 3). 7. A kind of earring; குண்டலம். *மின்னுக்குழையும் பொற்றோடும்* (சீவக. 1658). 8. Sky; ஆகாசம். (பிங்.) 9. cf. *guhina.* Jungle; காடு. (பிங்.) 10. Indian water-lily, *Nymphaea lotus alba*; நெய்தல். (W.)

குழைக்காட்டான் kuḻai-k-kāṭṭāṉ, *n.* <குழைக்காடு. Rustic, boor; நாட்டுப்புறத்தான். (J.)

குழைக்காடு kuḻai-k-kāṭu, *n.* <குழை+. (J.) 1. Country, as distinct from city; நாட்டுப்புறம். 2. Jungle, as distinct from cultivated tract; காட்டுப்புறம்.

குழைகறி kuḻai-kaṟi, *n.* <குழை[1]-+. Vegetable curry softened by boiling; குழைந்த கறி.

குழைகுழை-த்தல் kuḻai-kuḻai-, *v. intr.* <குழகுழ. To be confused; குழம்பிக்கிடத்தல். *குழைகுழைத்த கல்வியினுங் கேள்வியினுங் கல்லாமை குணமே* (தண்டலை. 83).

குழைச்சரக்கு kuḻai-c-carakku, *n.* <குழை[1]-+. 1. Worthless stuff; சாரமற்ற பண்டம். *குழைச்சரக்கே யாகிலும் விடவொண்ணாத* (திவ். திருப் பா. 4, வ்யா). 2. That which is protected, preserved; காக்கப்படும் பொருள். *நாங்கள் உனக்குக் குழைச்சரக்கானபடி* (திவ். திருப்பா. 10, வ்யா.).

குழைச்சல் kuḻaiccal, *n.*<id. Obsequiousness, servility; வணக்கங் காட்டுகை. *Colloq.*

குழைச்சான்கொட்டுக்கொட்டு-தல் kuḻaiccāṉ-koṭṭu-k-koṭṭu-, *v. intr.* <id.+. To behave in a servile or obsequious manner; அடிமைபோல் வணக்கவோடேக்கமாய் நடத்தல்.

குழைச்சி[1] kuḻaicci, *n.* prob. id. Comb of white ant's nest; புற்றுஞ்சோறு. (சங். அக.)

குழைச்சி[2] kuḻaicci, *n.* See குழைச்சு. (J.)

குழைச்சு kuḻaiccu, *n.* <குழை[1]-. 1. Loop, noose in a string or cord; கயிற்றுச்சுருக்கு. 2. Tie, knot; முடிச்சு. 3. Joint of the body, especially the socket joint of the shoulder or thigh; உடம்பிலுள்ள எலும்பின் சந்து. (W.) 4. Eye or socket of a hoe, adze, etc.; ஆயுதக்குளசு.

குழைச்சுப்படு-தல் kuḻaiccu-p-paṭu-, *v. intr.* <குழைச்சு+. 1. To be coiled, looped, as a rope; சுருக்கிடப்படுதல். 2. To be knotted, tangled; சிக்குப்படுதல். *Loc.*

குழைச்சுமண்வெட்டி kuḻaiccu-maṇ-veṭṭi, *n.*<id.+. Hoe with a socket for the handle; மண்வெட்டிவகை. (W.)

குழைச்சுவிடு-தல் kuḻaiccu-viṭu-, *v. intr.* <id.+. (W.) 1. To be disjointed, dislocated; உடல் மூட்டுவிடுதல். 2. To be broken, as the socket of a hoe; மண்வெட்டியின் காது முறிதல்.

குழைசாந்து kuḻai-cāntu, *n.* <குழை[2]-+. Softened mortar, as used in rough plastering; கட்டடம் பூசுதற்கு உதவுங் கலவைச்சாந்து.

குழைசேறு kuḻai-cēṟu, *n.* <குழை[1]-. Soft mire, slime; கலங்கற்சேறு. (திவா.)

குழைநாற்றம் kuḻai-nāṟṟam, *n.* <id.+. Unpleasant smell of rotten leaf or grass; அழுகிய இலைநாற்றம்.

குழைபிடி-த்தல் kuḻai-piṭi-, *v. intr.* <id. +. Lit., to hold a bough. To obstruct an affair; காரியத்தைத் தடைசெய்தல். (J.)

குழைமறைவு kuḻai-maṟaivu, *n.* <id.+. (W.) 1. Dense foliage, shrubbery or trees, as intercepting vision; பார்வையை மேற்செல்லவிடாது தடுக்கும் தழையின்செறிவு. 2. Skulking, evading; மறைந்து ஒதுங்குகை.

குழைமுகப்புரிசை kuḻai-muka-p-puricai, *n.* <id.+. Lit., the apartment guarded by women. Women's apartment in a palace, zenana; அந்தப்புரம். குழைமுகப் புரிசையுட் குரிசிலுலாகப்பட (சீவக. 275).

குழையடி-த்தல் kuḻai-y-aṭi-, *v. tr.* <id.+. 1. To effect a magic cure by passing a handful of neem twigs over the body; வேப்பிலையால் உடம்பில் அடித்து மந்திரித்து நோய்தீர்த்தல். *Loc.* 2. To wheedle, use artful means to secure a selfish interest; வசப்படுத்தத் தந்திரஞ் செய்தல். *Loc.* 3. To apply green manure to paddy fields; தழையை உரமாக இடுதல்.

குழையல் kuḻaiyal, *n.*<குழை[1]-. That which is mashed or softened, as overboiled rice; குழைந்தபொருள். குழையற் சோறு.

குழையற்கறி kuḻaiyaṟ-kaṟi, *n.* <குழையல் +. (J.) 1. Mashy or pulpy curry; குழைய வெந்த கறி. 2. Curry overboiled; அதிகமாக வெந்த கறி.

குழையற்பனாட்டு kuḻaiyaṟ-paṉāṭṭu, *n.*<id. +. Juice of palmyra fruits, dried into a jelly; பனம்பழச்சாற்றின் இறுகல். (J.)

குழையாணி kuḻai-y-āṇi, *n.* <குழை+. Stub-nail; கொண்டையாணி. (C.E.M.)

குழையுரம் kuḻai-y-uram, *n.*<id.+. Green manure; மரக்குழையாகிய உரம்.

குழைவு kuḻaivu, *n.* <குழை[1]-. 1. Mashy condition; நெகிழ்கை. (சூடா.) 2. Tenderness of mind, pity; இரக்கம். கொடுமை தலைக்கொண்டு சற்றுங் குழைவிலாமல் (சிவரக. சித்திரகேது. 1). 3. Fading, languishing; வாடுகை. கொடிபோ லுருவாள் குழைவுற்றனளோ (சிவரக. கணபதிவந். 4).

குழைவுளி kuḻaivuḷi, *n.* <id.+. Socket-chisel; உளிவகை. (C.E.M.)

குள்ளக்குடை-தல் kuḷḷa-k-kuṭai-, *v. intr.* Redupl. of குடை-. To dive deep, plunge; நீருள் மிகவும் குடைந்து முழ்குதல். (அகநா. 63, உரை.)

குள்ளக்குளிர்-தல் kuḷḷa-k-kuḷir-, *v. intr.* Redupl. of குளிர்-. To be intensely cool and refreshing; மிகக் குளிர்ந்திருத்தல். குள்ளக்குளிரக் குடைந்துநீ ராடாதே (திவ். திருப்பா. 13).

குள்ளக்குறுகவிரு-த்தல் kuḷḷa-k-kuṟuka-v-iru-, *v. intr.* <குள்ளம்+. To be very short, dwarfish; மிகக் குட்டையாகவிருத்தல். *Loc.*

குள்ளக்கெண்டை kuḷḷa-k-keṇṭai, *n.* <id. +. 1. Carp. See குறுங்கெண்டை. 2. Carp, silvery, small, *Barbus dorsalis;* குறுங்கெண்டை மீன்வகை.

குள்ளத்தண்டுக்கீரை kuḷḷa-t-taṇṭu-k-kīrai, *n.*<id. +. A weed of cotton soils, *Amarantus viridis;* குப்பைக்கீரை. (M.M.)

குள்ளத்தாரா kuḷḷa-t-tārā, *n.* <id.+. A species of short duck; ஒருவகைச் சிறுவாத்து.

குள்ளநரி kuḷḷa-nari, *n.* <id.+. Jackal, *Vulpes bengalensis;* நரிவகை.

குள்ளம் kuḷḷam, *n.* prob. குறு-மை. cf. *khullaka.* 1. Shortness in stature, dwarfishness; குறள். 2. Wickedness, cruelty; கொடுமை. (W.) 3. Craft, cunning; தந்திரம். (W.)

குள்ளம்பாய்-தல் kuḷḷam-pāy, *v. intr.* <குள்ளம்+. 1. To become shorter and shorter; குறுகிக்கொண்டுவருதல். 2. To be crafty and cunning beyond detection; பிறர் அறியமுடியாதபடி தந்திரமாயிருத்தல். கள்ளனுக்குள் குள்ளம்பாய்தல். *Loc.*

குள்ளல் kuḷḷal, *n.* <id. Shortness in stature, dwarfishness; குள்ளம். *Loc.*

குள்ளவண்டு kuḷḷa-vaṇṭu, *n.* <id.+. *Loc.* 1. Small black bee; சிறு கருவண்டு. 2. Prompt and diligent person, one who is swift and businesslike; காரியங்களில் விரைவுள்ளவன்.

குள்ளன் kuḷḷaṉ, *n.* <id. [M. *kuḷḷan.*] 1. Short, undersized man; dwarf; குறளன். 2. Artful, cunning fellow; தந்திரகாரன்.

குள்ளன்கம்பு kuḷḷaṉ-kampu, *n.* <id.+. A short species of kambu. See அரிசிக்கம்பு. (G. Sm. D. I, i, 219.)

குள்ளாரால் kuḷḷārāl, *n.* <id. + ஆரால். Sand eel. See சேற்றாரால்.

குள்ளி kuḷḷi, *n.* <id. A short-statured woman; குள்ளமானவள். *Colloq.*

குள்ளிருமல் kuḷ-ḷ-irumal, *n.* prob. குள் onom. + இருமல். Whooping-cough; கக்கிருமல். (M. L.)

குளக்கட்டியெனல் kuḷa-k-kaṭṭi-y-eṉal, *n.* Expr. signifying the falling of anything infirm or loosely set, as the head of an infant; உறுதியற்றுத் தளர்தலையுணர்த்தும் குறிப்பு. *Loc.*

குளக்கட்டு kuḷa-k-kaṭṭu, *n.* <குளம்[1] +. (W.) 1. Constructing the bund of a tank; குளத்தின் கரையைக் கட்டுகை. 2. Artificial bund of a tank; குளத்திற்குக் கட்டப்பட்ட கரை.

குளக்கால் kuḷa-k-kāl, *n.* <id.+. Feeding channel of a tank; குளத்துக்கு நீர்வரும் வாய்க்கால். (W.)

குளக்கீழ் kuḷa-k-kīḻ, *n.* <id.+. Field in front of the sluice-gate of a tank; குளத்தின் மதகையடுத்துள்ள வயல். *Loc.*

குளக்குத்தல் kuḷa-k-kuttal, *n.* <id.+. Insecurity to a house from its proximity to a tank; குளத்தை அடுத்திருப்பதால் மனைகட்டு உண்டாம் கேடு. *Loc.*

குளக்கெழுத்தி kuḷa-k-keḻutti, *n.* <id.+ கெளிறு. 1. Large river-fish, silvery, attaining more than 4 ft. in length, *Pemilodus buchanani;* ஆற்றுமீன்வகை. (M.M. 389.) 2. Cat-fish, *Macrones;* மீன்வகை.

குளக்கொட்டி kuḷa-k-koṭṭi, *n.* <id.+. A tank-plant, *Aponogeton monostachyum;* ஒருவகை நீர்ப்பூடு. (A.)

குளக்கொட்டு kuḷa-k-koṭṭu, *n.* prob. களைக்கொட்டு. A kind of small hoe or spade for cutting weeds; களைக்கொட்டு. *Loc.*

குளக்கோரை kuḷa-k-kōrai, *n.* <குளம்[1]+. A glabrous rush-like sedge. See பெட்டிக்கோரை. (W.)

குளகம்[1] kuḷakam, perh. கொள்- + அகம். cf. *kulija.* [T. *kola,* K. *koḷaga,* M. *koḷaka.*] 1. Standard grain measure; மரக்கால். (பிங்.) 2. Dry or liquid measure = ⅛ *nāḻi;* ஆழாக்கு. (W.)

குளகம்[2] kuḷakam, *n.* <*kulaka.* Combination of three or more stanzas having a single finite verb, dist. fr. *muttakam;* பலபாட்டுக்கள் ஒருவினை கொள்ளும் அமைதி. (தண்டி. 3.)

குளகம்[3] kuḷakam, *n.* perh. *kṣullaka.* A poem consisting only of short sounds; குற்றெழுத்துத் தொடர்ந்த செய்யுள். (பிங்.)

குளகம்[4] kuḷakam, *n.* <*gula.* See குளம்[2]. *Loc.*

குளகன் kuḷakaṉ, *n.* <குழகன். Youth; வாலிபன். குளகன் வந்துழி (கந்தபு. குமார. 1).

குளகு kuḷaku, *n.* cf. குழை. 1. Herbs, grass, anything that serves as food for herbivorous animals; விலங்கின் இலையுணவு. வாரணமுன் குளகருந்தி (கலித். 42). 2. Foliage, serving as clothes for women of the hill tract; குறிஞ்சிநில மகளிர் உடையாகக்கொள்ளும் தழை. குளகரைச்சுற்றிய குறமடந்தையர் (காசிக. 44, 16). 3. Greens, potherbs; இலைக்கறி. (W.)

குளகுள-த்தல் kuḷa-kuḷa-, 11 *v. intr.* <குள குள onom. To grow soft, as jaggery; to become pulpy; to be loosely set; நெகிழ்ந்திருத்தல்.

குளகுளவெனல் kuḷa-kuḷa-v-eṉal, *n.* Onom. See குளகுளெனல். குளகுளவென்று கொதிக்கிறது. (W.)

குளகுளெனல் kuḷa-kuḷeṉal, *n.* 1. Onom. expr. signifying gurgling sound, as water when boiled; ஓர் ஒலிக்குறிப்பு. 2. Growing

soft, as jaggery; becoming pulpy; நெகிழ்ந் திருக்கை. வாழைப்பழம் குளகுளென்று போயிற்று.

குளங்கரை kuḷaṅ-karai, n. < குளம்¹ +. Bank or bund of a tank; தடாகத்தின் கரை. (சீவக. 1488, உரை.)

குளங்கோவை kuḷaṅ-kōvai, n. < id. +. Cultivation in the bed of a tank; நீர்ப்பிடியில் உண்டாகும் குளநெல் சாகுபடி. *Loc.*

குளச்சு kuḷaccu, n. < குழைச்சு. See குழைச்சு.

குளச்செந்நெல் kuḷa-c-cennel, n. < குளம்¹ +. See குளநெல். (W.)

குளசு kuḷacu, n. < குழைச்சு. See குழைச்சு. (W.)

குளஞ்சி kuḷañci, n. < கொழுஞ்சி. Sylhet orange. See கிச்சிலி. (W.)

குளத்தங்கரை kuḷattaṅ-karai, n. < குளம்¹ +. Bank or bund of a tank; குளத்தின் கரை.

குளத்தாங்கரை kuḷattāṅ-karai, n. < id. +. See குளத்தங்கரை.

குளத்துக்குப்போ-தல் kuḷattukku-p-pō-, v. intr. < id. +. Lit., to go to a tank. To go to stool, evacuate; மலங்கழித்தல். *Colloq.*

குளத்துக்குருவி kuḷattu-k-kuruvi, n. < id. +. See குளநண்டு.

குளத்துள்வாய் kuḷattuḷvāy, n. < id. + உள்வாய். 1. Bed of a tank; குளத்தின் உள்ளிடம். 2. Deep part of a tank near the flood-gate; குளத்தின் மடையருகில் ஆழ்ந்துள்ள உள்ளிடம். (W.)

குளநண்டு kuḷa-naṇṭu, n. < id. +. Pond crab, *Potamon;* நண்டுவகை.

குளநெல் kuḷa-nel, n. < id. +. Wild rice, *Oryza mutica*, growing spontaneously in the bed of a tank; குளத்தின் நீர்ப்பிடியில் தானாக விளையும் நெல். மெல்விரன் மெலியக் கொய்த குள நெல்லும் (சீவக. 355)

குளப்பச்சை kuḷa-p-paccai, n. < id. +. Tattoo on the arm in the shape of a tank; குளத்தின்வடிவாகக் கையில் ஊசியால் குத்தியெழுதும் பச்சைக்குத்து. *Loc.*

குளப்படி kuḷappaṭi, n. < குளம்பு + அடி. 1. Hoof-marks; குளம்புபடிந்த சுவடு. குளப்படிநீரு ளைப்பருந் தன்மைப் பிரளய சலதியும் (பதினொ. திருவி டைம. 7). 2. Puddles in hoof-marks; குளம்புச் சுவட்டில் தேங்கிய நீர். அவர்கள் வியசனம் குளப்படி யென்னும்படி (அஷ்டாதச. தத்வத். ஈச. 11).

குளப்படிக்கோரை kuḷa-p-paṭi-k-kōrai, n. < குளம்¹ +. A sedge growing on the banks of a tank, *Cyperus;* குளக்கரையில் உண்டாகுங் கோரை வகை.

குளப்படுகை kuḷa-p-paṭukai, n. < id. + படுகை. Lands adjacent to tanks; குளத்துக்கருகி லுள்ள நிலம். (J.)

குளப்பயறு kuḷa-p-payaṟu, n. < id. +. A kind of pulse; பயறுவகை.

குளப்பற்றுநெல் kuḷa-p-paṟṟu-nel, n. < id. +. See குளநெல். *Loc.*

குளப்பறிப்பு kuḷa-p-paṟippu, n. < id. +. Hollow dug out in the bed of a tank; ஏரியின் வெட்டுக் கிடங்கு. குளமுங் குளப்பறிப்பும் உட்பட்ட நிலத்தில் (Insc.).

குளப்பாகல் kuḷa-p-pākal, n. < id. +. Balsam pear. See மிதிபாகல். (W.)

குளப்பாடு kuḷa-p-pāṭu, n. < id. +. See குளப்படுகை. (J.)

குளப்பாலை kuḷa-p-pālai, n. prob. *kuṭaja* +. Conessi bark. See குடசப்பாலை. (பதார்த்த. 236.)

குளப்பிரமாணம்¹ kuḷa-p-piramāṇam, n. < குளம்¹ +. Area of cultivation irrigable by a tank; ஏரிநீரால் சாகுபடியாகும் மொத்தநிலம். *Loc.*

குளப்பிரமாணம்² kuḷa-p-piramāṇam, n. prob. *guḍa* +. An ancient standard weight for gold; முற்காலத்து வழங்கிய ஒருவகைப் பொன் னிறை. (S.I.I. i, 81.)

குளப்புக்கூறுகொள்(ளு)-தல் kuḷappu-k-kūṟu-koḷ-, v. tr. < குளம்பு +. Lit., to trample with hoofs. To cause great misery; பெருந்துன்ப முறுத்துதல். திருமாலாற் குளப்புக்கூறுகொளப்பட்டு (திவ். நாய்ச். 13, 6).

குளப்புரவு kuḷa-p-puravu, n. < குளம்¹ +. The whole extent of land irrigable under a tank; குளத்தின் நீர்பாய்ந்து சாகுபடியாகத்தகுந்த நிலம். *Loc.*

குளப்பொருக்கு kuḷa-p-porukku, n. < id. +. Chapped mud in a tank, used for manure; ஏரிக்குள் உண்டாகும் கரம்பைமண்.

குளபாகம் kuḷa-pākam, n. < *gula-pāka*. Lit., sugar-like style. Easy flowing style of composition; இலளிதமான செய்யுள் நடை. (W.)

குளம்¹ kuḷam, n. prob. கொள்-. cf. *kūla*. [T. *kolanu*, K. *koḷa*, M. *kuḷam*.] 1. Tank, pond, reservoir; தடாகம். (பிங்.) 2. Lake; ஏரி. குளக் கீழ் விளைந்த . . . வெண்ணெல் (புறநா. 33, 5). 3.

The month *Mārkaḻi;* மார்கழி. (பரிபா. 11, 76, உரை.) 4. Forehead; நெற்றி. *திருக்குள முளைத்த கட்டாமரை* (கல்லா. 31, 9).

குளம்² kuḷam, *n.* <*gula.* 1. Sugar; சர்க்கரை. (திவா.) 2. Jaggery; வெல்லம். (சூடா.)

குளம்பழுகல் kuḷampaḻukal, *n.* <குளம்பு + அழுகு-. Foot-rot, ulcer in the feet of sheep and goats; கால்நடையின் குளம்புநோய்வகை. (கால். வி. 132.)

குளம்பாசி kuḷam-pāci, *n.* <குளம்¹ +. Fishing right in a tank; குளத்தில் மீன்பிடிக்கும் உரிமை. *Loc.*

குளம்பு kuḷampu, *n.* cf. *khura.* [K. *koḷaga,* M. *kuḷambu.*] Hoof of an animal; ஒருசார் விலங்குகளின் பாதம். *வெள்ளுளைக் கலிமான் கவிகுளம் புகள* (புறநா. 15).

குளம்புக்களிம்பு kuḷampu-k-kaḷimpu, *n.* <குளம்பு +. Ointment for hoof; குளம்பிலிடும் பூச்சுமருந்து. (கால். வி. 132.)

குளம்புகிள்ளு-தல் kuḷampu-kiḷḷu-, *v. intr.* <id. +. To clip off the edge of a calf's hoof as soon as it is born; கன்றின் குளம்புமுனையைச் சீவுதல். *Colloq.*

குளம்புச்சிலந்தி kuḷampu-c-cilanti, *n.* <id. +. Foul, a hoof disease; கால்நடைகளின் குளம்பிலுண்டாகும் புண்வகை. (கால். வி. 132.)

குளமழி-தல் kuḷam-aḻi-, *v. intr.* <குளம்¹ +. To have the water in a tank considerably reduced to allow easy fishing; மீன்பிடிக்கும்படி குளம் நீர்வற்றுதல். (W.)

குளவட்டை kuḷa-v-aṭṭai, *n.* <id. + அட்டை. Small kind of leech; நீரட்டை. (W.)

குளவடம்பு kuḷa-v-aṭampu, *n.* <id. + அடம்பு. A creeper in tanks; குளத்திலுண்டாகுங் கொடிவகை. (W.)

குளவடை kuḷa-v-aṭai, *n.* <id. + அடை. An ancient tax on tanks; பழைய ஏரிவரி. (S.I.I. ii, 247.)

குளவரகு kuḷa-varaku, *n.* <id. +. Tank millet; வரகுவகை. (W.)

குளவார் kuḷavār, *n.* <U. *kulwār.* Settlement made with ryots individually; குடியானவர்களோடு தனித்தனியாகச் செய்துகொள்ளும் தீர்வைத் திட்டம். (C. G.)

குளவாழை kuḷa-vāḻai, *n.* <குளம்¹ + வாழ்-. A coarse tank-paddy, sown in *Āṉi-Āvaṇi,* maturing in six months; ஆனி ஆவணி மாதங்களில் விதைக்கப்பெற்று ஆறுமாதத்திற் பயிராகும் குளநெல் வகை. *Colloq.*

குளவி kuḷavi, *n.* perh. கொள்-. [K. *koḷavi,* M. *kuḷavi.*] 1. Wasp, clay-building fly, *Sphegidae;* கோட்டுமியல்புள்ள ஈ வகை. *சுற்றுங் கருங்குளவிச் சூரைத்தூறு* (தனிப்பா. i, 107, 44). 2. Carpenter bee, *Xylocopa tenisocapa;* வண்டு வகை. 3. Wild jasmine. See காட்டுமல்லிகை. *காந்தை குளவி கடிகமழ் கலிமா* (குறிஞ்சிப். 76). 4. Indian cork. See மலைமல்லிகை. *கூதளங்கவினிய குளவி* (புறநா. 168, 12). 5. Mysore gamboge. See பச்சிலைமரம். (L.)

குளவிதைப்பு kuḷa-vitaippu, *n.* <குளம்¹ +. Sowing in a tank bed; குளநேற் சாகுபடி. (W.)

குளவிந்தம் kuḷavintam, *n.* A kind of turmeric, used medicinally; மருந்தாக உதவும் மஞ்சள் வகை. (W.)

குளவிமண் kuḷavi-maṇ, *n.* <குளவி +. Mud in a wasp's nest; குளவிக்கூட்டுமண். (W.)

குளவெட்டு kuḷa-veṭṭu, *n.* <குளம்¹ +. 1. Tank repair; ஏரிமராமத்து. 2. A cess paid by the ryots to the land-holders on account of tank repair; ஏரிமராமத்துக்குக் குடிகள் செலுத்தும் வரி. *Rd.*

குளவெட்டுமானியம் kuḷa-veṭṭu-māṉiyam, *n.* <குளவெட்டு +. Inam granted for the service of procuring workmen for tank repair; ஏரிவெட்டுக்கு ஆள் அமர்த்த விடப்படும் மானியநிலம். (C. G.)

குளவெள்ளரி kuḷa-veḷḷari, *n.* <குளம்¹ +. Cucumbers raised in tank beds; ஏரியின் உள்வாயில் உண்டாகும் வெள்ளரி. (W.)

குளறியடி-த்தல் kuḷaṟi-y-aṭi-, *v. intr.* <குளறு- +. To wail and beat the breasts in mourning; மார்பில் அடித்தழுதல். (J.)

குளறு-தல் kuḷaṟu-, *5 v.* <குழறு-. *intr.* 1. To stammer through fear, anger, confusion of mind; பயம் முதலியவற்றால் மொழி தடுமாறுதல். 2. To howl, yell, make a hideous noise, as jackals; நரிமுதலியன ஊளையிடுதல். (W.)—*tr.* 1. To falter, to stumble in one's speech; தடுமாறிப் பேசுதல். *பயனின்மொழிகள் குளறுமுன்* (சிவப். பிரபந். வெங்கைக்கலம். 96). 2. To spoil; கெடுத்தல். *காரியத்தைக் குளறுதே. Colloq.*

குளறுபடி kuḷaṟu-paṭi, *n.* <குளறு- +. See குழறுபடை.

குளறுபடை kuḷaṟu-paṭai, *n.* <id. +. See குழறுபடை. *நானெனைக் குளறுபடை புடைபெயர்த் திடவும்* (தாயு. மௌன. 5).

குளாம்பல் kuḷāmpal, *n.* < குளம்¹ + ஆம்பல். Water-lily, *Nymphaea lotus;* குளத்தில் உண்டாகும் ஆம்பல். (நன். 256, மயிலை.)

குளி¹-த்தல் kuḷi-, *11 v.* [M. *kuḷi.*] *intr.* 1. To bathe; நீராடுதல். களிப்பர் குளிப்பர் (பரிபா. 6, 103). 2. To wash one's body up to the neck; கண்டஸ்நானஞ்செய்தல். *Loc.* 3. To take purificatory bath after menstruation; ருதுஸ்நானம் செய்தல். அவள் குளித்து நான்குமாதம் ஆயிற்று. *Colloq.* 4. To pierce, as an arrow; தைத்தல். கூர்ங்கணை குளிப்ப (பு. வெ. 10, சிறப்பிற். 10, கொளு). 5. To press against; அழுந்துதல். மென்கொங்கை யென் னங்கத்திடைக் குளிப்ப (திருக்கோ. 351). 6. To enter the thick of a fight; வலிய உட்புகுதல். கடற் படை குளிப்ப மண்டி (புறநா. 6). 7. To hide, conceal oneself; மறைதல். யானறித லஞ்சிக் குளித்து (கலித். 93). 8. To be defeated; தோல்வியுறுதல். மீன் குளிக்குங் கற்பின் (சீவக. 2141).—*tr.* To dive for pearls; முத்துக்களை முழ்கியெடுத்தல். பணிலம் பலகுளிக்கோ (திருக்கோ. 63).

குளி² kuḷi, *n.* < குளி-. [M. *kuḷi.*] 1. Bath, ablution; ஸ்நானம். இது எத்தனைகுளிக்கு நிற்கும் (ஈடு, 4, 5, 1). 2. Diving, as for pearls or chanks; முத்துக்குளி.

குளிககாலம் kuḷika-kālam, *n.* < குளிகன் +. The period of time in each day extending to an hour and a half from the rising of *kuḷikaṉ*, considered auspicious for marriage ceremonies and inauspicious for funeral ceremonies; கலியாணச்சடங்குகளுக்குச் சுபமானதும், பிரேதக்கிரியைகள் தொடங்க அசுபமானதும், ஒவ்வொரு தினத்திலும் குளிகனுதயத்திலிருந்து 3¾ நாழிகைவரை உள்ளதுமான காலம்.

குளிகன் kuḷikaṉ, *n.* < *kulika.* 1. A divine serpent, one of *aṣṭa-mā-nākam*, q. v.; அஷ்டமா நாகத்தொன்று. குளிகாதி . . . வெங்கணுகம் (கம்பரா. நாகபா. 62). 2. Name of an invisible planet; காணுக்கோள்களுள் ஒன்று.

குளிகாசித்தி kuḷikā-citti, *n.* < *gulikā* +. The power of flying through the air at an enormous speed believed to be acquired by means of mercurial or other pills; இரசகுளிகை முதலியவற்றாற் பெறக்கூடியதாகக் கருதும் ஆகாசகமன சக்தி. (W.)

குளிகாரன் kuḷi-kāraṉ, *n.* < குளி +. Diver for pearls or chanks; முத்துக்குளிப்பவன்.

குளிகுளி-த்தல் kuḷi-kuḷi-, *v. intr.* < id. +. To be delivered of a child; பிரசவித்தல். *Colloq.*

குளிகை kuḷikai, *n.* < *gulikā.* 1. Pill; மாத்திரை. 2. Magic pill supposed to have supernatural powers; மந்திரசக்தியுள்ள மாத்திரை. குளிகையிட்டுப் பொன்னுக்குவன் (திருமந். 2709).

குளிகைகட்டு-தல் kuḷikai-kaṭṭu-, *v. intr.* < குளிகை +. (W.) 1. To make pills; மாத்திரை செய்தல். 2. To fasten a magical pill on the body, either as an amulet against poisonous bites or as a means to attain supernatural power such as flying through the air; சித்திக் குளிகையை உடலிற் கட்டிக்கொள்ளுதல்.

குளிகையிடு-தல் kuḷikai-y-iṭu-, *v. intr.* < id. +. To insert a pill in an incision made in the body in order to counteract the influence of poisonous bites or to communicate supernatural power; சித்திக்குளிகையை உடம்பைக்கீறி உட்புகுத்துதல். (W.)

குளிசங்கு kuḷi-caṅku, *n.* < குளி- +. Chank obtained by diving; நீருட் குளித்தெடுத்த சங்கு. (W.)

குளிசதோஷம் kuḷica-tōṣam, *n.* prob. *gulika* +. A child's ailment believed to be the result of encountering a woman when an amulet is fastened on her for favouring pregnancy; கருப்பமாதலைவேண்டும் மகளிர் குளிசங் கட்டிக்கொள்ளும்பொழுது எதிர்ப்பட்ட குழந்தைகளுக்கு வரும் ஒருநோய். (சீவரட். 221.)

குளிசம் kuḷicam, *n.* prob. *gulika.* 1. Amulet; இரட்சையாகக் கட்டிக்கொள்வது. (G. Sm. D. I, i, 145.) 2. Thin piece of metal with magical characters worn as a charm against evil spirits or disease; இரட்சாபந்தனத்துக்குரிய மெல்லிய உலோகத்தகடு. 3. Root tied round the finger of a snake-charmer or poison-charmer, as an amulet; பாம்பாட்டிகள் விஷமிறக்குவோர்முதலானவர் கையில் இரட்சையாகக் கட்டிக்கொள்ளும் வேர். (W.) 4. Magical rites for securing the full medicinal efficacy of certain plants; சில மூலிகைகள் நன்றாகப் பலன்படுவதற்கு மந்திர பூர்வமாகச் செய்யும் இரட்சை. *Loc.*

குளிசீலை kuḷi-cīlai, *n.* < குளி- +. Loin-cloth; கோவணம். *Colloq.*

குளிதுறை kuḷi-tuṟai, *n.* < id. +. Bathing ghat; ஸ்நானகட்டம். குளிதுறையிற் சிதடனுர்க்கு வலம்புரியின் மணிகிடைத்தவாறு (குற்று. தல. திருமால். 84).

குளிதோஷம் kuḷi-tōṣam, *n.* < id. +. Malignant influence on an infant of being looked at by a woman with an empty stomach on her bath after menstruation; தூரஸ்திரீ குளித்தபின் வெறும்வயிற்றோடு பார்த்தலால் குழந்தைக்கு உண்டாவதாகக் கருதப்படுந் தோஷம். (பாலவா. 117, தலைப்பு.)

குளிப்பச்சை kuḷi-p-paccai, n. prob. கிளி + A green stone; ஆற்றுப்பச்சை. (W.)

குளிப்பாட்டு-தல் kuḷippāṭṭu-, v. tr. <குளிப்பு + ஆட்டு-. To bathe or wash; நீராட்டுதல். பொருநைநீர் குளிப்பாட்டி (காஞ்சிப்பு. தழுவ. 283).

குளிப்பிடப்பாறு kuḷippiṭa-p-pāṟu, n. <id. + இடம் + பார். The banks of a pearl or chank fishery; முத்துக்குளிக்குந் துறை. (J.)

குளிப்பு kuḷippu, n. <குளி-. Washing, bathing; நீராடுகை.

குளியம்[1] kuḷiyam, n. Man-eater; வேங்கைப் புலி. (அக. நி.)

குளியம்[2] kuḷiyam, n. prob. gulika. 1. Ball, globe; உருண்டை. (அக. நி.) 2. Medicine; மருந்து. (பிங்.)

குளியல் kuḷiyal, n. <குளி-. Bathing; நீராடுகை. காலைமாலைக் குளியல் (பதார்த்த. 1307, தலைப்பு)

குளியாமலிரு-த்தல் kuḷiyāmal-iru-, v. intr. <id. +. Lit., to be without menstrual bath. To be pregnant; கருப்பமாயிருத்தல். *Colloq.*

குளியாள் kuḷi-y-āḷ, n. <id. + ஆள். Pearl or chank diver; முத்துக்குளிப்போன்.

குளியோடு-தல் kuḷi-y-ōṭu-, v. intr. <id. +. To dive for pearls or chanks; முத்துச்சிப்பி முதலியவை எடுத்தற்காகக் குளித்தல். (W.)

குளிர்[1]-தல் kuḷir-, 4 v. intr. [K. M. *kuḷir.*] 1. To feel cold, chilly, as breeze; பனிக்காற்று உறைத்தல். குளிர்வாடை. 2. To be cool, refreshing; குளிர்ச்சியுறுதல். சிங்கி குளிர்ந்துங் கொலும் (நீதிநெறி. 59). 3. To get numbed, as in death; உடம்பு சில்லிடுதல். 4. To be pleasant to the sense of touch, sight or hearing; கண்முதலிய பொறிகளுக்கு இனியதாதல். என்புறக் குளிரு நெஞ்சுருகும் (கம்பரா. விபீடண. 21). 5. To be benignant, as the countenance; கருணையால் முகங்கனிதல். 6. To be consoled, comforted; to be satisfied; ஆறுதலடைதல். இப்போதுதான் என்மனம் குளிர்ந்தது. 7. To die, as of an epidemic like small-pox; வதூரி முதலியவற்றால் மரித்தல். குழந்தை அம்மைவார்த்துக் குளிர்ந்துபோயிற்று.

குளிர்[2] kuḷir, n. <குளிர்[1]-. [K. M. *kuḷir.*] 1. Coldness, chilliness; குளிர்ச்சி. (திவா.) 2. Ague, cold fits; சுரக்குளிர். 3. Dewy chill blast; பனிக்காற்று. (திவா.) 4. Shivering, trembling, shuddering, as with fear; நடுக்கம். என்னைக்கண்டால் அவனுக்குக் குளிர்தான். 5. White umbrella; வெண்குடை. (சூடா.) 6. Shoal, school of fish; மீனொழுங்கு. (சூடா.)

குளிர்[3]-தல் kuḷir-, 4 v. intr. <K. *kuḷir.* To seat, rest; தங்குதல். குளிரு மரப்பலகை (சீவக. 1782).

குளிர்[4] kuḷir, n. <குளிர்[3]-. Seating, resting; தங்குகை. (சூடா.)

குளிர்[5] kuḷir, n. <குளிறு-. 1. Kettle-drum; குடமுழவு. (திவா.) 2. Contrivance to scare away parrots; கிளிகடிகருவி. தட்டையும் குளிரும் (குறிஞ்சிப். 43). 3. Sling; கவண். (பிங்.)

குளிர்[6] kuḷir, n. cf. *kuliśa* or *śūla*. 1. Battle-axe; மழு. (சூடா.) 2. Trident; சூலம். (W.) 3. Sickle; அரிவாள். குளிர்புரை கொடுக்காய் (மலைபடு. 110). 4. Knife for cutting the stems of leaves; இலைமூக்கரிகத்தி. (திவா.)

குளிர்[7] kuḷir, n. <*kulīra*. 1. Crab, lobster; நண்டு. (பிங்.) 2. Cancer, a sign of the zodiac; கர்க்கடகராசி. (திவா.) 3. The month *Āṭi;* ஆடி மாதம். (தைலவ. பாயி.)

குளிர்காணல் kuḷir-kāṇal, n. <குளிர்[2] +. 1. Being affected with cold; குளிர்ச்சி தாக்குகை. 2. Becoming cold, as the body in serious illness; உடம்பு நோயாற்சில்லிடுகை. (W.)

குளிர்காய்-தல் kuḷir-kāy-, v. intr. <id. +. To bask in the sun, to warm oneself; குளிர் வருத்தாதபடி வெப்பம் பிடித்தல். *Colloq.*

குளிர்காய்ச்சல் kuḷir-kāyccal, n. <id. +. Ague, fever attended with chill; குளிரோடு தோன்றும் சுரநோய். (பதார்த்த. 842.)

குளிர்காலம் kuḷir-kālam, n. <குளிர்[1]- +. Cold season; பனிக்காலம்.

குளிர்காற்று kuḷir-kāṟṟu, n. <id. +. Cold wind; கூதற்காற்று. குளிர்காற்றைப் பொறுக்கமுடியவில்லை.

குளிர்குளிர்ந்துபோ-தல் kuḷir-kuḷirntu-pō-, v. intr. <குளிர்[2] +. (J.) 1. To be benumbed of cold; குளிர்ச்சியால் உடல்விறைத்துப் போதல். 2. To become cold, as a dying person; உடம்பு சில்லிடுதல்.

குளிர்ச்சி kuḷircci, n. <குளிர்[1]-. 1. Coolness, cold, coldness; சீதளம். 2. The act of cooling, refreshing with cordials, fans, etc.; சைத்தியோபசாரம். (சீவக. 1810, உரை.) 3. That which is sweet, gratifying or pleasing; இனிமையானது. (W.) 4. Numbness, frigidity, as in death; மரத்துப்போய்ச் சில்லிடுகை. உடம்பில் குளிர்ச்சி கண்டுவிட்டது.

குளிர்ச்சிமருந்து kuḷircci-maruntu, n. <குளிர்ச்சி +. Cooling medicine; உஷ்ணசாந்தி செய்யும் மருந்து.

குளிர்சுரம் kuḷir-curam, n. <குளிர்[2] +. See குளிர்காய்ச்சல்.

குளிர்த்தி kuḷirtti, *n.* <குளிர்[1]-. See குளிர்ச்சி. *காற்றங்குளிர்த்தி மென்மைகளைக் கொண்டு* (சூடு, 1, 2, 2).

குளிர்தேசம் kuḷir-tēcam, *n.* <id.+. Cold country; குளிர்ச்சிமிகுந்த நாடு.

குளிர்ந்தகுரல் kuḷirnta-kural, *n.* <id.+. Pleasant or delectable voice, as in singing; இனிய சாரீரம்.

குளிர்ந்தகொள்ளி kuḷirnta-koḷḷi, *n.* <id. +. Lit., extinguished fire-brand. Honey-tongued villain, person with a fair exterior but a foul interior; நயவஞ்சகன். *Loc.*

குளிர்ந்தநிறம் kuḷirnta-niṟam, *n.* <id.+. Agreeable, pleasant, fine colour; கண்ணுக்கினிய நிறம்.

குளிர்ந்தநீர் kuḷirnta-nīr, *n.* <id.+. 1. Cold water; பச்சைத்தண்ணீர். 2. Water cooled after boiling; சுடவைத்தாறின நீர். (W.) 3. Fine water, as in gems; இரத்தினங்களிலுள்ள நீரோட்டம். (S.I.I. ii, 431.)

குளிர்ந்தபரிமளம் kuḷirnta-parimaḷam, *n.* <id.+. 1. Cool sweet scent; இனிய வாசனை. 2. Animal poison; சீதாங்கபாஷாணம். (W.)

குளிர்ந்தபார்வை kuḷirnta-pārvai, *n.* <id. +. Benignant look, look full of sweetness; இனிய நோக்கம்.

குளிர்ந்தபூமி kuḷirnta-pūmi, *n.* <id.+. See குளிர்தேசம்.

குளிர்ந்தபேச்சு kuḷirnta-pēccu, *n.*<id.+. Sweet words; pleasant, comforting, soothing words; இனிய பேச்சு.

குளிர்ந்தமனம் kuḷirnta-maṉam, *n.*<id.+. Kind, benevolent heart; கருணையுள்ள நெஞ்சம்.

குளிர்ந்தமுகம் kuḷirnta-mukam, *n.*<id.+. Benignant countenance; அருள் விளங்கும் முகம்.

குளிர்ந்துகிட-த்தல் kuḷirntu-kiṭa-, *v. intr.*<id.+. 1. To become cool, as water after boiling; சூடாறியிருத்தல். *Loc.* 2. To become cold, as a dying person; கைகால் சில்லிடுதல். 3. To die, used euphemistically; மரித்தல்.

குளிர்ந்துகொல்லி kuḷirntu-kolli, *n.* <id. +. See குளிர்ந்தகொள்ளி.

குளிர்ப்பு kuḷirppu, *n.* <id. [M. *kuḷirppu.*] See குளிர்மை.

குளிர்மை kuḷirmai, *n.*<id. [M. *kuḷirmma.*] 1. Coolness; குளிர்ச்சி. 2. Kindness, benevolence; அன்பு. *அவர்கள் குளிர்மையில்லாதவர்கள்.* (W.)

குளிர்மைக்கட்டி kuḷirmai-k-kaṭṭi, *n.* <குளிர்மை+. Mumps; பொன்னுக்குவீங்கி. (J.)

குளிர்விடு-தல் kuḷir-viṭu-, *v. intr.* <குளிர்[2] +. To be freed from fear; பயம்நீங்குதல். *Colloq.*

குளிரநோக்கு-தல் kuḷira-nōkku-, *v. intr.* <குளிர்[1]-+. To cast a gracious look on; அருளோடு பார்த்தல். *திருக்கண்களாலே குளிரநோக்கி* (சூடு, 1, 10, 10).

குளிரம் kuḷiram, *n.* <*kulīra.* Crab. நண்டு. (சூடா.)

குளிரி[1] kuḷiri, *n.* <குளிர்[1]-. 1. Fan made of peacock's-feathers; பீலிக்குஞ்சம். (பிங்.) 2. Arrowhead, aquatic plant, *Sagittaria obtusifolia;* நீர்ச்சேம்பு. (W.)

குளிரி[2] kuḷiri, *n.* <குளிறு-. See குளிர்[5], 2. *குளிரிப் புடைப்பொலி* (தஞ்சைவா. 73).

குளிவை kuḷivai, *n.* See குளுவை. *குளிவையும் புதாவும்* (பெருங். உஞ்சைக். 51, 70).

குளிறு[1]-தல் kuḷiṟu-, *5 v. intr.* cf. *ghuṣ.* To sound, rattle; ஒலித்தல். (திவா.)

குளிறு[2] kuḷiṟu, *n.* <குளிறு-. Sound, rattling noise; ஒலி. (சூடா.)

குளுகுளு-த்தல் kuḷukuḷu-, *11 v. intr.* 1. To grow luxuriantly; செழித்து வளர்தல். *பயிர்கள் குளுகுளுத்திருக்கின்றன.* 2. To become pale, sallow, wan, bloated, as in jaundice; to become weak through morbid state of the body; சோகைபற்றுதல். *Vul.* 3. To become rotten, putrid, as fruits; அழுகிப்போதல். (J.)

குளுகுளுப்பை kuḷukuḷuppai, *n.* <குளுகுளு-. The state of being pale and bloated in countenance, a kind of jaundice; காமாலைநோய். (W.)

குளுத்தி kuḷutti, *n.* <குளிர்-. See குளிர்த்தி. *Vul.*

குளுத்திமருந்து kuḷutti-maruntu, *n.* <குளிர்த்தி+. See குளிர்ச்சிமருந்து.

குளுத்தியெண்ணெய் kuḷutti-y-eṇṇey, *n.* <id.+. A cooling medicine in the form of oil; சூடுதணிக்கும் மருந்தெண்ணெய்.

குளுந்தை kuḷuntai, *n.* <*kulatthā.* Musk that resembles horse gram, one of 5 kinds of *kastūri,* q.v.; கொள்ளுப்போலிருக்கும் கஸ்தூரி வகை. (பதார்த்த. 1081.)

குளுப்பை kuḷuppai, *n.* perh. குமேவை. Being bloated, as the face in jaundice; நோயால் முகம் ஊதுகை. *Colloq.*

குளுப்பைதட்டு-தல் kuḷuppai-taṭṭu-, *v. intr.* <குளுப்பை+. To become bloated, as the face in jaundice; நோயால் முகம் ஊதித்தோன்றுதல். *அவன் முகம் குளுப்பைதட்டியிருக்கிறது. Colloq.*

குளும்பாறை kuḷumpāṟai, *n.* Horse-mackerel, greenish, attaining 28 in. in length, *Caranx gymnostethoides*; ஒருவகைக் கடல்மீன்.

குளுமை kuḷumai, *n.* <குளிர்-மை. Coldness, chilliness; குளிர்ச்சி. *Colloq.*

குளுவன் kuḷuvaṉ, *n.* perh. குழு. A fowler's attendant; குறவனுடைய பாங்கன். குளுவசிங்கன் வந்தான் (குற்கு. குற. 79).

குளுவை kuḷuvai, *n.* A water-bird; ஊரற்பறவை. (சிலப். 10, 117, உரை.)

குளைச்சக்கரம் kuḷai-c-cakkaram, *n.* perh. சூளைச்சக்கரம். Tile; ஓடு. (சங். அக.)

குளைச்சு kuḷaiccu, *n.* One-fourth; நாலிலொன்று. (J.)

குளோப்பர் kuḷōppar, *n.* <E. *globe*. Globe-lamp; உருண்டைவடிவாய்த் தொங்கும் ஒருவகைக் கண்ணாடி விளக்கு.

குளோப்பு kuḷōppu, *n.* <id. See குளோப்பர்.

குற்குலு kuṟkulu, *n.* <*guggulu*. Konkany resin. See குங்கிலியம். குற்குலுத்தாவ முற்றெழுந்த குய் (சேதுபு. கந்தமா. 67).

குற்சிதம் kuṟcitam, *n.* <*kutsita*. That which is deformed, disgusting, loathing; அருவருப்பானது. (திவா.)

குற்சை kuṟcai, *n.* <*kutsā*. 1. Abhorrence, loathing, disgust; அருவருப்பு. 2. (Rhet.) Sentiment of disgust, one of *nava-racam*, q.v.; நவரசத்துளொன்றாகிய இளிவரலென்னும் அருவருப்புச் சுவை. (திவா.)

குற்பகம் kuṟpakam, *n.* Kaus, a large and coarse grass. See நாணல். (மலை.)

குற்றங்காட்டு-தல் kuṟṟaṅ-kāṭṭu-, *v. intr.* <குற்றம்+. To expose faults; குற்றத்தை எடுத்துச் சொல்லுதல்.

குற்றங்காண்(ணு)-தல் kuṟṟaṅ-kāṇ-, *v. intr.* <id+. To find fault, pick holes; தவறு கண்டுபிடித்தல்.

குற்றச்சாட்டு kuṟṟa-c-cāṭṭu, *n.*<id.+. See குற்றப்பத்திரிகை.

குற்றச்சாத்து kuṟṟa-c-cāttu, *n.* <id.+சார்த்து-. See குற்றப்பத்திரிகை. *Loc.*

குற்றஞ்சாட்டு-தல் kuṟṟañ-cāṭṭu-, *v. tr. & intr.* <id.+prob. id. See குற்றஞ்சுமத்து-.

குற்றஞ்சுமத்து-தல் kuṟṟañ-cumattu-, *v. tr. & intr.* <id.+. To accuse, charge with a fault or crime, incriminate; ஒருவன்மீது குற்றத்தை ஏற்றுதல்.

குற்றத்தண்டம் kuṟṟa-t-taṇṭam, *n.* <id+. Penalty; செய்த குற்றத்திற்குரிய தண்டனை. (I.M.P. N.A. 341, 2.)

குற்றப்படு-தல் kuṟṟa-p-paṭu-, *v. intr.* <id. +. To be in fault, be guilty; குற்றத்திற்குள்ளாதல். குடிக்குற்றப்பட்டாரை (சிலப். 14, 146, உரை).

குற்றப்பத்திரம் kuṟṟa-p-pattiram, *n.* <id. +. See குற்றப்பத்திரிகை.

குற்றப்பத்திரிகை kuṟṟa-p-pattirikai, *n.* <id.+. Charge sheet; நியாயசபையில் ஒருவன்மீது குற்றத்தின் விவரங்காட்டிப் படிக்கப்படும் பத்திரம்.

குற்றப்பாடு kuṟṟa-p-pāṭu, *n.* <id.+. 1. Being in fault, being accused; குற்றத்திற்கு உட்படுகை. 2. Fault, crime; குற்றம்.

குற்றம் kuṟṟam, *n.* prob. குறு-மை. [T. *korata*, K. *korate*, M. *kuṟṟam*.] 1. Fault, moral or physical blemish, defect, flaw, error; பிழை. ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பின் (குறள், 190). 2. Reproach, stigma, blame; பழி. குற்றமின் முனிவரும் (கந்தபு. வரைபுனை. 218). 3. Pain, distress; துன்பம். குடும்பத்தைக் குற்றமறைப்பான் (குறள், 1029). 4. Bodily deformity; அங்கக்குறை. உறுப்புக்குற்ற முள்ளவன். 5. Crime, offence; தீங்கு. கோடாதவேதனுக் கியான்செய்த குற்றமென் (கந்தரலங். 76). 6. Impurity, ceremonial or mora defilement, as cause of offence to the deity, o blight to plants; தெய்வகோபமுதலியவற்றிற்குக் காரணமான தீட்டு. (W.) 7. Penalty, mulct, fine; அபராதம். குற்றமிறுத்தல். (W.)

குற்றம்பாராட்டு-தல் kuṟṟam-pārāṭṭu-, *v. intr.* <குற்றம்+ To exaggerate one's faults, dwell too much upon one's faults, magnify guilt; பிறர் குற்றத்தை மிகுதிப்படுத்துதல்.

குற்றம்போடு-தல் kuṟṟam-pōṭu-, *v. intr.* <id.+. To impose a fine, mulct; அபராதம் விதித்தல். (W.)

குற்றவாளி kuṟṟa-v-āḷi, *n.*<id.+ஆள்-. 1. Delinquent, offender, culprit, criminal; குற்றஞ்செய்தோன். 2. (Legal.) Accused person; குற்றஞ்சாட்டப்பட்டவன். (C.G.)

குற்றவீடு kuṟṟa-vīṭu, *n.* <id. + வீடு. Faultlessness, sinlessness, suppression of human passions; காமம்வெகுளிமுதலிய குற்றங்கள் நீங்குகை. குற்றவீடெய்தி (மணி. 26, 51).

குற்றாக்குரவையர் kuṟṟā-k-kuravaiyar, *n.* <குற்று- + ஆ neg. + prob. குரவர். A sect of Tamil-speaking Brahmins who postpone the ear-boring ceremony of their boys till *upanayanam*; ஆண் குழந்தைகளுக்குக் காதுகுத்துஞ் சடங்கை உபநயனம் வரை செய்யாதிருக்கும் ஒருசார் பிராமணவகுப்பினர். *Loc.*

குற்றாலம்[1] kuṟṟālam, *n.* prob. *ku-tāla.* A village in Tinnevelly district, sacred to Śiva and famous for its waterfall, a sanatorium; அருவியால் பெயர்பெற்றதும் ஆரோக்கியத்திற் கேற்றதும் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ளதுமான ஒரு சிவதலம். குற்றாலத்துறை கூத்தன் (தேவா. 1181, உற்ற.).

குற்றாலம்[2] kuṟṟālam, *n.* A kind of paddy, sown between *Āṉi* and *Puraṭṭāci*, maturing in five months; ஆனிமுதல் புரட்டாசிவரையுள்ள மாதங்களில் விதைக்கப்பெற்று ஐந்து மாதத்தில் விளையும் ஒருவகை நெல். *Loc.*

குற்றி kuṟṟi, *n.* <குறு-மை. Stump, stub, stake, block, log; மரக்கட்டை. கொல்லை யிரும் புனத்துக் குற்றி யடைந்த புல் (நாலடி, 178).

குற்றிசை kuṟṟicai, *n.* <id. + இசை. 1. Short metre in *viruttam* verse, opp. to *neṭṭicai*; குறுகிய சந்தம். (W.) 2. (Puṟap.) Theme describing the impropriety of the hero of a poem in neglecting his wife; தலைவன் மனைவியைப் புறக்கணித்து அறநெறிபிறழ்ந்தொழுகுவதைக் கூறும் புறத்துறை. (பு. வெ. 12, இருபாற். 17.)

குற்றிமரம் kuṟṟi-maram, *n.* <குற்றி +. Plank placed in a house parallel to a wall as a support for utensils; கோக்காலிமரம். *Tinn.*

குற்றியலிகரம் kuṟṟiyal-ikaram, *n.* <குறு-மை + இயல் +. (Gram.) Shortened 'இ' having only half a *māttrai* as in words கேண்மியா, நாகியாது, one of *cārpeḻuttu*; சார்பெழுத்துள் ஒன்றாய் அரைமாத்திரையாகக் குறுகிய இகரம். (தொல். எழுத். 2.)

குற்றியலுகரம் kuṟṟiyal-ukaram, *n.* <id. + id. +. (Gram.) Shortened 'உ' having only half a *māttrai* found generally at the end of words, one of *cārpeḻuttu*; சார்பெழுத்துள் ஒன்றாய்ப் பெரும்பாலும் மொழிகளின் ஈற்றில் அரைமாத்திரையாய்க் குறுகிவரும் உகரம். (தொல். எழுத். 2.)

குற்று-தல் kuṟṟu-, *5 v. tr.* 1. To pound; இடித்தல். (சூடா.) 2. To strike, hit, butt; தாக்குதல். மூரற் பகுவாயிற் குற்று கிற்குஞ் சிலவரை (கந்தபு. சிங்கமு. 139). 3. To crush, as lice; நெரித்தல். (W.) 4. To puncture, prick, pierce; ஊடுருவக் குத்துதல். (W.)

குற்றுகரம் kuṟṟukaram, *n.* <குறு-மை + உகரம். See குற்றியலுகரம். (தொல். எழுத். 45, உரை.)

குற்றுடைவாள் kuṟṟuṭai-vāḷ, *n.* <id. + உடைவாள். Small poniard; சுரிகை. குற்றுடைவாள் ஆசுங் கண்டமும் பொன்கட்டிற்று (S.I.I. ii, 185).

குற்றுநெல் kuṟṟu-nel, *n.* <குற்று- +. Cess paid for pounding paddy; நெற்குற்றுதற்கு ஏற்பட்ட ஒரு பழையவரி. (I.M.P. Cg. 1000.)

குற்றுமி kuṟṟumi, *n.* <id. + உமி. Broken husk; குற்றி நீக்கிய உமி. (W.)

குற்றுயிர் kuṟṟuyir, *n.* <குறு-மை + உயிர். 1. [T. *kuṭṭusuru.*] State of being half-dead; குறையுயிர். 2. Short vowel. See குற்றெழுத்து. குற்றுயிரளபி னீறாம் (நன். 108).

குற்றுவாய் kuṟṟuvāy, *n.* A herring, golden, glossed with purple. See குத்துவா.

குற்றுழிஞை kuṟṟuḻiñai, *n.* <குறு-மை + உழிஞை. (Puṟap.) Theme of a warrior standing on the enemy's fortification all alone and displaying his valour and prowess; பகைவரது கோட்டைமதிலின்மேல் வீரனொருவன் தனியனாகவே நின்று தன் வீரப்பெருமையைக் காட்டுவதுகூறும் புறத்துறை. (பு. வெ. 6, 13.)

குற்றெழுத்து kuṟṟeḻuttu, *n.* <id. +. Short vowel; ஒரு மாத்திரையுள்ள உயிரெழுத்து. (தொல். எழுத். 3.)

குற்றேல் kuṟṟēl, *n.* See குற்றேவல். குலங்கெழு குமரரைக் குற்றே லருளி (பெருங். உஞ்சைக். 32, 15).

குற்றேவல் kuṟṟēval, *n.* <குறு-மை +. Menial service; பணிவிடை. குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாது (திவ். திருப்பா. 29).

குற்றொற்று kuṟṟoṟṟu, *n.* <id. + ஒற்று. (Gram.) Consonant succeeding a short vowel; குற்றெழுத்தின் பின்வரும் மெய்யெழுத்து.

குற-த்தல் kuṟa-, *12 v. tr.* cf. கற-. To emit, give out; வெளிப்படுத்துதல். கொந்தக் குழலைக் குறந்த புழுகட்டி (திவ். பெரியாழ். 2, 5, 8).

குறக்கூத்து kuṟa-k-kūttu, *n.* <குறம் +. Dance of Kuṟavar; குறவராடுங் கூத்து. (W.)

குறக்கெஞ்சு kuṟa-k-keñcu, *n.* <id. +. Cringing attitude of a Kuṟavaṉ; குற்றஞ்செய்த குறவனது கெஞ்சுஞ்செயல்.

குறங்கறு-த்தல் kuṟaṅkaṟu-, *v. intr.* <குறங்கு +. To branch out, as channels; கால்வாயினின்று வேறு தனிக்கால் பிரிதல். *கண்ணனன்வாய்நின்றும் இவ் வூர்நிலத்தாறே குறங்கறுத்துப் புறவூர்க்கு நீர்பாயும் வாய்க் காலும்* (S.I.I. ii, 57, 13).

குறங்கு kuṟaṅku, *n.* perh. குறுகு-. 1. [T. *kuruvu.*] Thigh; துடை. *செறிந்த குறங்கின் . . . அல்கை* (அகநா. 96). 2. [K. *koṟakalu.*] Branch channel; கிளைக்கால். (S.I.I. ii, 352.) 3. Clasp, catch, link; கொக்கி. (W.)

குறங்குசெறி kuṟaṅku-ceṟi, *n.* <குறங்கு+. Ornament for the thigh; துடையாபரணம். *குறங்கு செறிதிரள் குறங்கினிற் செறித்து* (சிலப். 6, 86).

குறங்கொட்டி kuṟaṅkoṭṭi, *n.* prob. id.+ ஒட்டு-. Short piece or strip of wood tied to the end of a well-sweep, to a rafter or to the broken leg of a chair; துலாமுதலியவற்றோடு இணைக்கும் மரக்கட்டை. (J.)

குறச்சாதனை kuṟa-c-cātaṉai, *n.* <குறம்+. Stubborn inflexible nature, as of a Kuṟavaṉ; குற்றஞ்செய்த குறவனைப்போற் செய்யும் சாதனை.

குறஞ்சனம் kuṟañcaṉam, *n.* cf. *ṭaṅkaṇa.* Borax; வெண்காரம். (மூ. அ.)

குறஞ்சால் kuṟañcāl, *n.* <குறை+. Land partially ploughed; குறையுழவுடைய நிலம். (யாழ். அக.)

குறஞ்சி kuṟañci, *n.*<குறிஞ்சி. 1. cf. *kuraṇṭa.* Henna. See மருதோன்றி. (மலை.) 2. Common yellow nail dye. See செம்முள்ளி. (மலை.) 3. Date palm. See ஈந்து. (மலை.)

குறட்டரியம் kuṟaṭṭariyam, *n.* perh. குறை +தா-. Complaint, murmur, expression of dissatisfaction or discontent; குறையை மெல்ல வெளியிடுகை. *அவன் குறட்டரியம் பண்ணுகிறான்.* (J.)

குறட்டாழிசை kuṟaṭṭāḻicai, *n.* <குறள்+ தாழிசை. Verse of two unequal lines, of five or more feet, the second line being always shorter than the first; நாற்சீரின் மிக்கசீர்களால்வரும் அடி யிரண்டாய் ஈற்றடி குறைந்துவருவனவும், வேற்றுத் தளைதட்டுக் குறள்வெண்பாவிற் சிதைந்து வருவனவுமா கிய பாவினம். (காரிகை, செய். 9, உரை.)

குறட்டுச்சுவர் kuṟaṭṭu-c-cuvar, *n.* <குறடு +. Retaining wall; மண்தாங்கிச்சுவர். (C. E. M.)

குறட்டுச்செருப்பு kuṟaṭṭu-c-ceruppu, *n.* <id.+. A kind of sandals with a loop to admit the great toe; பெருவிரலில் மாட்டத்தக்க மோதிர முள்ள செருப்பு. (J.)

குறட்டுப்பாக்குவெட்டி kuṟaṭṭu-p-pāk-kuveṭṭi, *n.* <id.+. Arecanut-cracker with a forked mouth; பாக்குவெட்டி வகை. (W.)

குறட்டுவாதம் kuṟaṭṭu-vātam, *n.* cf. குரக்கு வாதம். A kind of spasm, convulsion; வலிப்பு நோய்வகை.

குறட்டை[1] kuṟaṭṭai, *n.* 1. Bitter snake-gourd, l. cl., *Trichosanthes palmata;* சவரிக் கொடி. (M. M. 842.) 2. A kind of rat; எலிவகை. (W.)

குறட்டை[2] kuṟaṭṭai, *n.* perh. *ku+raṭa.* Snoring, snorting; நித்திரையில் மூச்சுவிடும் ஒலி. *கோட்டுவா யோடிவடியக் குறட்டைவிட்டு* (இராமநா. உயுத். 32).

குறட்பா kuṟaṭ-pā, *n.* <குறள்+. See குறள் வெண்பா. *வள்ளுவனு ரோது குறட்பா* (வள்ளுவமா. 43).

குறடா kuṟaṭā, *n.* <Port. *corda.* [K. *koraḍā,* Mhr. *koraḍā.*] Horsewhip; குதிரைச்சவுக்கு.

குறடு[1] kuṟaṭu, *n.* [T. *koraḍu.*] 1. Pincers, tongs, forceps; கம்மியரது பற்றுக்குறடு. *கொட்டி யுண்பாருங் குறடுபோற் கைவிடுவர்* (நாலடி, 208). 2. Satchel-pin, hook for hanging up school boy's ola books; சுவடிதூக்குங் கயிற்றுக்குறடு. 3. Crab; நண்டு. (W.) 4. Sandals; பாதக்குறடு. (யாழ். அக.)

குறடு[2] kuṟaṭu, *n.* perh. குறை-. [T. K. *koṟaḍu.*] 1. Small block or clump of wood; மரத்துண்டு. *சந்தன மென்குறடு* (வாக்குண். 28). 2. Plank, board; பலகை. (சூடா.) 3. Block for cutting meat; இறைச்சி கொத்தும் பட்டடைமரம். *ஊனமர் குறடு போல* (சீவக. 2281). 4. Axle-box of a cart; தேர் முதலியவற்றின் அச்சுக்கோக்கும் இடம். *கோன்குறட் டாரஞ் சூழ்ந்த . . . நேமி* (சிறுபாண். 252). 5. Grinding-stone for preparing sandal perfume; சந்த னக்கல். *செழுமலைக் குறடுரிஞ்சிச் செய்ய சந்தனத்தின்* (சேதுபு. திருநாட். 26).

குறடு[3] kuṟaṭu, *n.* perh. குறள். 1. Edge of a verandah, extension of a verandah; திண்ணை யோட்டு. *Colloq.* 2. Raised floor or verandah, pial; pedestal; திண்ணை. (பிங்.) 3. Cornice on a wall or column; சுவர்முதலியவற்றிலுள்ள எழுதகம். (R.) 4. A kind of drum; பறைவகை. *குமிகை தியிலை செண்டை குறடு* (கம்பரா. பிரமாத். 5).

குறண்டல்வாதம் kuṟaṇṭal-vātam, *n.* <குறண்டு-+. A kind of rheumatic affection attended with spasms; ஒருவகை வலிப்புநோய். (J.)

குறண்டற்கிழவன் kuṟaṇṭaṟ-kiḻavaṉ, *n.* <id.+. Hunch-backed old man; கூனற்கிழ வன். (J.)

குறண்டி[1] kuraṇṭi, *n.* <id. A secondary melody-type of the *cevvaḻi* class; செவ்வழிப் பண்வகை. (பிங்.)

குறண்டி[2] kuraṇṭi, *n.* cf. *kuraṇḍa.* 1. A thorny shrub, *Lepidagathis;* முட்செடிவகை. (M. M. 227.) 2. Barb of a fishhook; தூண்டில் முள். *Loc.*

குறண்டிப்பிடி-த்தல் kuraṇṭi-p-piṭi-, *v. intr.* <குறண்டு-+. To be close-fisted, grasping, miserly; உலோபஞ்செய்தல். (J.)

குறண்டிப்போ-தல் kuraṇṭi-p-pō-, *v. intr.* <id.+. To grow crooked; to be bent, hunch-backed; கூனலாதல். (J.)

குறண்டிவளையம் kuraṇṭi-vaḷaiyam, *n.* <குறண்டி[2]+. Double hooks fixed to a roof-beam for hanging a cradle; தொட்டிற்சங்கிலி மாட்டும் வளையம். *Loc.*

குறண்டு-தல் kuraṇṭu-, *5 v. intr.* cf. குறழ்-. (J.) 1. To be crooked or bent, as horns, fingers, limbs, fruits; வளைதல். 2. To be convulsed, to have spasms; வலிப்புக்கொள்ளுதல். 3. To coil up, as a small reptile; சுருண்டுகொள்ளுதல்.

குறத்தனம் kuṟa-t-taṉam, *n.*<குறம்+. Pretence, dissimulation; பாசாங்கு.

குறத்தி[1] kuṟatti, *n.* <குறம். 1. Woman of the hilly tract; குறிஞ்சிநிலப்பெண். (இறை. 1, உரை.) 2. Woman of the Kuṟava tribe; குறச்சாதிப்பெண்.

குறத்தி[2] kuṟatti, *n.* A plant common in sandy tracts. See நிலப்பனை. (மலை.)

குறத்திப்பாசி kuṟatti-p-pāci, *n.* Job's-tears, a small coarse grass, *Coix lachryma,* having large, round, white, shining fruits; வெண்மையும் உருட்சியுமான காய்களையுடைய புல்வகை. (M. M. 669.)

குறத்திப்பாட்டு kuṟatti-p-pāṭṭu, *n.* <குறத்தி+. A poem in which a Kuṟava woman is represented as describing to a maiden her fortune in her love-affair; தலைவிக்கு அவளது காதல் முதலியவற்றைப்பற்றிக் குறத்தி குறிசொல்வதைக்கூறும் ஒரு பிரபந்தம். (தொன். வி. 283.)

குறப்பாசாங்கு kuṟa-p-pācāṅku, *n.* <குறம் +. Pretended simplicity or feigned innocence, as the trick of a Kuṟavaṉ; குற்றஞ்செய்த குறவன் ஒன்றும் அறியாதவன்போற் காட்டும் போலிநடிப்பு.

குறம் kuṟam, *n.* perh. குற-. 1. Kuṟava tribe; குறச்சாதி. 2. Palmistry, fortune-telling, as practised by Kuṟava women; குறத்திசொல்லுங் குறி. (சங். அக.) 3. A theme in *kalampakam* as representing the speech of Kuṟavaṉ; குறவர் கூற்றகவரும் கலம்பகவுறுப்புள் ஒன்று. *தவங்குற மறம் பாண்* (இலக். வி. 812). 4. See குறத்திப்பாட்டு. *மீனாட்சியம்மைகுறம்.*

குறமகளிளவெயினி kuṟa-makaḷ-iḷa-v-eyiṉi, *n.* <குறம்+. A Kuṟava poetess who composed the 157th stanza in Puṟa-nāṉūṟu; புறநானூற்றில் 157-ம் பாடலியற்றியவரும் குறச்சாதியினருமான ஒரு பெண்புலவர்.

குறவஞ்சி kuṟa-vañci, *n.* <id.+. [T. *kora-vañji.*] 1. Woman of the Kuṟava tribe; fortune-teller; குறிசொல்லும் குறமகள். (W.) 2. A kind of dramatic poem. See குறத்திப்பாட்டு.

குறவணவன் kuṟavaṇavaṉ, *n.* Large white grub found in dung heaps; எருக்குவியலில் தோன்றும் வெண்புழு. (J.)

குறவழக்கு kuṟa-vaḻakku, *n.* <குறம்+. 1. Complicated, involved lawsuit; தீராவழக்கு. (W.) 2. Baseless contention obstinately maintained; பிடிவாதமாய் மேற்கொள்ளும் தூர்வழக்கு. *Loc.*

குறவன் kuṟavaṉ, *n.* <id. [T. *korava,* K. *korava,* M. *kuṟavaṉ.*] 1. Inhabitant of the hilly tract; குறிஞ்சிநிலமகன். *குறவரு மருளுங் குன்றத்து* (மலைபடு. 275). 2. Inhabitant of the desert tract; பாலைநிலமகன். (பிங்.) 3. Kuṟava, a caste of fowlers, snake-catchers, basket-makers and fortune-tellers; வலைவைத்தல் பாம்புபிடித்தல் கூடைமுடைதல் குறிசொல்லுதல் முதலிய தொழில்கள் செய்யும் சாதியினன். 4. Pretender, cringing hypocrite; பாசாங்குபண்ணுகிறவன். *Colloq.* 5. Mercury, quicksilver; பாதரசம். (மூ. அ.)

குறவாணர் kuṟa-vāṇar, *n.* <id.+. The Kuṟava tribe of the mountain; மலைக்குறவர். *முடிந்தபொழுதிற் குறவாணர்* (திவ். இயற். 3, 89).

குறவி kuṟavi, *n.* <id. [K. *koravañji.*] Fem. of குறவன். A woman of kuṟava caste; குறச்சாதிப்பெண். *குறவிதோண் மணந்த செல்வக் குமரவேள்* (தேவா. 758, 3).

குறவை kuṟavai, *n.* [T. *koṟṟa.*] 1. Black murrel. See வரால். 2. Murrel, greenish, attaining more than 1 ft. in length, *Ophiocephalus punctatus;* வரால்மீன் வகை. (பதார்த்த. 914.)

குறழ்-தல் kuṟaḻ-, *4 v. intr.* To stoop, bend low; குனிதல். *அவனுக்கே பாராக் குறழா* (கலித். 65, 10).

குறள் kuṟaḷ, *n.* <குறு-மை. [M. *kuṟaḷ.*] 1. Shortness, dwarfishness; குறுமை. *குண்டைக் குறட்பூதம்* (தேவா. 944, 1.). 2. Dwarf, about 2 ft. high, dist. fr. *cintu;* ஈரடி உயரமுள்ள குள்ளன். *தேரை நடப்பனபோற் குறள்* (சீவக. 631). 3. Imp, goblin; பூதம். (பிங்.) 4. Smallness; சிறு

மை. வாகின் குறளவிழ்ச் சொன்றி (பெரும்பாண். 193). 5. See குறளடி. (இலக். வி. 720.) 6. See குறள் வெண்பா. (இலக். வி. 730.) 7. See திருக்குறள். உலகங் கொள்ள மொழிந்தார் குறள் (வள்ளுவமா. 33).

குறள்வெண்பா kuṟaḷ-veṇpā, *n.* <குறள் +. Distich of *veṇpā* metre, the first line consisting of four and the second of three feet; முதலடி நாற்சீரும் இரண்டாமடி முச்சீருமாகவரும் ஈரடி வெண்பா. (இலக். வி. 730, உரை.)

குறளடி kuṟaḷ-aṭi, *n.* <id.+. A line consisting of two *cīr;* இருசீரான்வரும் அடி. (இலக். வி. 719.)

குறளடிவஞ்சிப்பா kuṟaḷ-aṭi-vañci-p-pā, *n.* <id.+. A kind of *vañci* verse consisting of three or more lines of *kuṟaḷaṭi*, with a detached foot and *akavaṟ-curitakam;* குறளடியால் மூன்று முதற் பலவடிகொண்டு, தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்று வரும் வஞ்சிப்பா. (காரிகை, செய். 24.)

குறளன் kuṟaḷaṉ, *n.* <id. cf. *khullaka.* [M. *kuṟaḷan.*] (பிங்.) 1. Short person, dwarf; குள்ளன். 2. Viṣṇu, as a dwarf; வாமனனாக அவதாரமெடுத்த திருமால்.

குறளி kuṟaḷi, *n.* <id. 1. Dwarfish woman; குறியவள். ஒருதொழில் செய்யுங் குறளி வந்து (சீவக. 1653, உரை). 2. See குறளிப்பிசாசு. வாயிலிடிக்குது குறளி யம்மே (குற்றா. குற. 71). 3. See குறளி வித்தை. 4. Unchaste woman; கற்பழிந்தவள். (சூடா.)

குறளிக்கூத்து kuṟaḷi-k-kūttu, *n.* <id+. Mischievous devilish act; குறும்புச் செயல்கள். *Loc.*

குறளிப்பந்தம் kuṟaḷi-p-pantam, *n.* <குறளி +. Burning ball of rags supposed to be used by the *kuṟaḷi* devil to set fire to houses; குறளிப் பேயால் வீடுகொளுத்த இடப்படுந் தீப்பந்தம்.

குறளிப்பிசாசு kuṟaḷi-p-picācu, *n.* <id.+. Dwarf-demon supposed to revel in magical performances; மாயவித்தைசெய்யும் பேய்வகை.

குறளிவித்தை kuṟaḷi-vittai, *n.* <id.+*vidyā.* Magical tricks, legerdemain, as aided by the *kuṟaḷi* devil; குறளியின் உதவியாற் செய்யப்படும் மாயவித்தை.

குறளை kuṟaḷai, *n.* <குறு-மை. 1. [M. *kuṟala.*] Calumny, aspersion, backbiting; கோட்சொல். பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்சொல் லென (மணி. 30, 68). 2. Poverty, adversity; வறுமை. குறளையு ளட்பனவு தோன்றும் (திரிகடு. 37). 3. Sarcastic expressions, censure, reproach; நிந்தனை. (J.) 4. Dwarfishness; குள்ளம். (W.)

குறாவு-தல் kuṟāvu-, *5 v. intr.* <குறு-. 1. cf. உருவு-. To sink, as the spirit by disappointment, hunger; to droop, as plants by drought; வாடுதல். (W.) 2. To shrink, contract, recede; ஒடுங்குதல். (யாழ். அக.) 3. To become reduced, lean, as a person, animal; மெலிதல். (யாழ். அக.) 4. To heal, as a sore, cicatrice; புண் ஆறி வடுவாதல். (W.)

குறாள் kuṟāḷ, *n.* <குறு-மை + ஆள்-. 1. Virgin; கன்னி. *Loc.* 2. Ewe lamb; பெண் ஆட்டுக்குட்டி. (W.)

குறான் kuṟāṉ, *n.* <U. *Qorān.* The sacred book of the Muhammadans; இஸ்லாம்சமயத்தின் முதனூல்.

குறி[1]**-த்தல்** kuṟi-, *11 v. tr.* [T. Tu. *guri*, K. M. *kuṟi.*] 1. To design, intend, contemplate, consider, think; கருதுதல். கொலைகுறித்தன்ன மாலை (அகநா. 364). 2. To meditate; தியானித்தல். ஞானியர்தாங் குறியெட்டக் கரத்தார் (அஷ்டப். திருவேங்கடமா. 57). 3. To determine, ascertain; வரையறுத்தல். (பிங்.) 4. To draw, as a line; கோடு வரைதல். புழுக்குறித்தது எழுத்தானாற்போல (ஈடு, 2, 4, 3). 5. To note down; to make the first draft in writing; to sketch an outline in painting; to trace; குறித்துக்கொள்ளுதல். இந்நூலின் அரும்பதங்களைக் குறிக்க. 6. To refer to, denote, suggest, specify; சுட்டுதல். 7. To pertain, relate to; பற்றுதல். எதைக்குறித்துப் பேசினாய்? 8. To aim at, as in shooting; இலக்குவைத்தல். வெய்யோன் குறித்தெறி பிறங்கல் (கந்தபு. கயமுகன்வ. 38). 9. To reach, attach oneself to; அடைதல். குரவன் பதத்தைக் குறித்து (சைவச. பொது. 125). 10. To regard, fancy; பாவித்தல். குறித்துச் சிவனெனக் கோபுரத்தை (சைவச. பொது. 126). 11. To narrate briefly, tell; சொல்லுதல். உற்றது குறித்தான் (கம்பரா. அகலிகை. 41). 12. To foretell, predict, forebode; முன்னறிவித்தல். தீச்சகுனம் பொல்லாங்கைக் குறிக்கும். 13. To blow, as a conch; to sound; ஊதியொலித்தல். வலம்புரி குறித்து (பாரத. பதினேழாம். 12).

குறி[2] kuṟi, *n.* <குறி-. 1. Mark, sign, stamp, emblem, token, symbol, indication, designation; அடையாளம். (பிங்.) 2. Aim, mark to shoot at; இலக்கு. கூரிய குணத்தார் குறிநின்றவன் (தேவா. 356, 3). 3. (Akap.) Secret appointment by lovers, tryst; குறியிடம். (தொல். பொ. 130.) 4. Goal, destination; உத்தேசித்த இடம். சென்று மீளாக் குறி (கம்பரா. கடிமண. 49). 5. Motive, intention; நோக்கம். 6. Suggestion, hint, insinuation; குறிப்பு. 7. Doctrine; மதக்கொள்கை. குறிபலவுங் கொளுவினர் (பெரியபு. திருநா. 38). 8. Omen, presage, prognostic; முன்னறிந்துகூறும் நிமித்தம். குறியிறைப் புதல்வரோடு (குறுந். 394). 9. Assembly, village council; சபை. மத்யஸ்தரைக்கொண்டு குறிகூட்டி (சோழவமி. 55). 10. Turn, occasion;

தடவை. ஒருகுறி கேட்போன் (நன். 42). 11. Time, days, season, as in இக்குறி, now-a-days; காலம். (W.) 12. Character, principle of conduct; ஒழுக்கம். குறிகெட்டவன். (W.) 13. Generative organ; ஆண்குறி அல்லது பெண்குறி. 14. Stripes, lashes; அடி. (J.) 15. Definition, accurate description; இலக்கணம். குறியறிந்தோரே (தொல். பொ. 47).

குறிக்கொள்(ளு)-தல் kuṟi-k-koḷ-, v. <id. +. tr. 1. To grasp, seize, hold; கைக்கொள்ளுதல். கோதுபடவில்ல குறிக்கொண்டு (சீவக. 499). 2. To comprehend, understand; மனத்துக்கொள்ளுதல். ஏத்தமில்லா குறிக்கொண்மினிடரே (திவ். திருவாய். 8, 6, 6). 3. To guard carefully; கவனித்துப் பாதுகாத்தல். பறவையரையா வுறகல் பள்ளியறை குறிக்கொண்மின் (திவ். பெரியாழ். 5, 2, 9). 4. To fix the mind steadily on one object, to concentrate; ஒன்றையே குறியாகப்பற்றுதல். குறிக்கொள் ஞானங்களால் (திவ். திருவாய். 2, 3, 8) —intr. To be remarkable, distinguished; மேன்மைப்படுதல். (W.)

குறிக்கொள்வோன் kuṟi-k-koḷvōṉ, n. <குறி+. One who sets his heart on one pursuit or object, one who concentrates his attention on one thing; ஒன்றையே இடைவிடாது சிந்திப்பவன். (பிங்.)

குறிக்கோள் kuṟi-k-kōḷ, n. <id.+. 1. Single-minded devotion, concentration; மனவொருமை. (திவா.) 2. Cherishing in memory, remembering; ஞாபகத்தில் வைக்கை. (திவா.) குறிக்கோட் டகையது கொள்கெனத் தந்தேன் (சிலப். 30, 63). 3. Comprehension or power of understanding; அறியுந்திறம். என்றுணரும் குறிக்கோளில்லா (கம்பரா. சூர்ப். 140). 4. Ideal; உயர்ந்த இலட்சியம். குறிக்கோளிலாது கெட்டேன் (தேவா. 632, 9). 5. Wisdom, good sense, sagacity; நல்லுணர்வு. கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோளொன் றிலாமையினால் (திவ். பெரியதி. 1, 9, 3). 6. Acts needed to play upon a violin properly, numbering 8, viz., பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு; யாழ்வாசிணையிற் கருத்தோடு செய்யவேண்டிய பண்ணல்முதலிய தொழில்கள். (சிலப். 3, 16, உரை.) 7. The state of being distinguished or illustrious; மேன்மைப்பாடு. (W.)

குறிகாண்(ணு)-தல் kuṟi-kāṇ-, v. intr. <id.+. 1. To appear, as symptoms, signs; அறிகுறிதோன்றுதல். 2. To forebode, betoken, typify; குறிப்பிடுதல். (W.) 3. To have slight discharges at or before the presentation at childbirth; பிரசவக்குறிதோன்றுதல். (W.)

குறிகாரன் kuṟi-kāraṉ, n. <id.+. 1. Good marksman; குறிப்பாக அடிப்பவன். 2. Soothsayer, diviner; குறிசொல்வோன்.

குறிகூடு-தல் kuṟi-kūṭu-, v. intr. <id.+. To realise, achieve, as an object; நோக்கம் நிறைவேறுதல். குமபிடவே குறிகூடும் (தேவா. 314, 5).

குறிகெட்டவன் kuṟi-keṭṭavaṉ, n. <id.+. Dishonest, shameless, unprincipled man; நெறியற்றவன்.

குறிகேள்-தல்[குறிகேட்டல்] kuṟi-kēḷ-, v.tr. & intr. <id.+. To consult a fortune-teller, diviner; குறிசொல்லுமாறு நிமித்திகளை வினவுதல்.

குறிச்சி kuṟicci, n. <குறிஞ்சி. [M. kuṟicci.] 1. Village in the hilly tract; குறிஞ்சிநிலத்தூர். குறிச்சிபுக்க மான்போலவும் (இறை. 1, உரை). 2. [K. kuṟike.] Village; ஊர். (திவா.)

குறிச்சூத்திரம் kuṟi-c-cūttiram, n. <குறி+. (Gram.) *Sūtra* dealing with the technical terms employed in a treatise, one of six kinds of *cūttiram*, q.v.; ஒரு நூலிற் பயின்றுவருங் குறியீடுகளைத் தெரிவிக்கின்ற சூத்திரம். (நன். 20.)

குறிசாற்றல் kuṟi-cāṟṟal, n. <id.+. Convening a meeting of the village assembly by blowing a horn; கொம்பையூதிக் கிராமசபையைக் கூட்டுகை. Loc.

குறிசுடு-தல் kuṟi-cuṭu-, v. intr. <id.+. 1. To shoot without missing the mark; குறிதவறாது துப்பாக்கியாற் சுடுதல். 2. To brand marks upon cattle; மாட்டுக்குச் சூடு இடுதல். (W.)

குறிசொல்(லு)-தல் kuṟi-col-, v. intr. <id.+. To tell one's fortune, to divine; ஒருவரது அதிருஷ்டம் முதலியவற்றைப்பற்றிக் குறிபார்த்துக் கூறுதல்.

குறிஞ்சா kuṟiñcā, n. 1. Common delight of the woods. See குருக்கத்தி. 2. A species of scammony swallow wort. See பெருங்குறிஞ்சா. (W.) 3. Indian ipecacuanha. See நஞ்சறுப்பான். (W.) 4. Green wax-flower. See குடகப்பாலை. (L.)

குறிஞ்சி kuṟiñci, n. 1. Hilly tract, one of five kinds of *nilam*, q.v.; ஐவகை நிலத்துள் ஒன்றாகிய மலையும் மலைசார்ந்த நிலமும். குறிஞ்சி யெல்லையி னீங்கி (சீவக. 1563). 2. See குறிஞ்சிப்பண். குறிஞ்சி பாடி (திருமுரு. 239). 3. (Mus.) A specific melody-type; ஓர் இராகம். (பரத. இராக. 56.) 4. Clandestine union of lovers assigned by poetic convention to the hilly tract; புணர்தலாகிய உரிப்பொருள். குறிஞ்சி சான்ற . . . மலை (மதுரைக். 300). 5. A poem. See குறிஞ்சிப்பாட்டு. கோல் குறிஞ்சி பட்டினப்பாலை (பத்துப்பா. தனிப்பா.). 6. Henna. See மருதோன்றி. (மலை.) 7. A species of conehead. See பெருங்குறிஞ்சி. (L.) 8. A species of conehead. See சிறுகுறிஞ்சி. (L.) 9. Thorny nail dye. See செம்முள்ளி. (சூடா.) 10. Conehead,

shrub, *Strobilanthes;* பூவேகை. (L.) 11. Square-branched conehead, m. sh., *Strobilanthes kunthianus;* மரவகை. (L.) 12. Dwarf wild date-palm; ஈந்து. (மலை.)

குறிஞ்சிக்கிழவன் kuriñci-k-kilavan, *n.* <குறிஞ்சி+. Murukan, as the god of the hilly tracts; குறிஞ்சிநிலத்துத் தெய்வமான முருகக்கடவுள். (பிங்.)

குறிஞ்சிக்கிறைவன் kuriñcikkiraivan, *n.* <id.+இறைவன். See குறிஞ்சிக்கிழவன். (திவா.)

குறிஞ்சிப்பண் kuriñci-p-pan, *n.* <id.+. One of the four melody-types; நால்வகைப் பெரும்பண்களுள் ஒன்று. (பிங்.)

குறிஞ்சிப்பறை kuriñci-p-parai, *n.* <id.+ (Akap.) A kind of drum peculiar to the hilly tracts; குறிஞ்சிநிலத்துக்குரிய தொண்டகப் பறை.

குறிஞ்சிப்பாட்டு kuriñci-p-pāttu, *n.* <id. +. A poem in Pattu-p-pāttu by Kapilar treating of the tactful way in which the confidante communicates to the fostermother, the heroine's love-affair; பத்துப்பாட்டுள் ஒன்றனதும் தலைவியின் வேற்றுமைகண்டு வருந்திய செவிலிக்குப் பாங்கி அறத்தொடுநிற்குங் கூற்றாகக் கபிலர் பாடியதுமான செய்யுள்.

குறிஞ்சிமன் kuriñci-man, *n.* <id.+. See குறிஞ்சிக்கிழவன். (திவா.)

குறிஞ்சியாழ் kuriñci-yāl, *n.* <id.+. See குறிஞ்சிப்பண். (பிங்.)

குறிஞ்சியாழ்த்திறம் kuriñci-yāl-t-tiram, *n.* <id.+. Secondary melody-type of the *kuriñci* class played on a reduced scale, of which there are 8, viz., *நைவளம், காந்தாரம், படுமலை, பஞ்சுரம், மருள், அயிர்ப்பு, அரற்று, செந்திறம்;* எண்வகைத்தாய்க் குறைந்த ஸ்வரங்கள்கொண்ட குறிஞ்சிப்பண். (திவா.)

குறிஞ்சில் kuriñcil, *n.* A prepared arsenic; தொட்டிப்பாஷாணம். (மூ. அ.)

குறிஞ்சிலி kuriñcili, *n.* prob. குறிஞ்சி. A kind of flower worn as an ear-ornament; காதில் அணிதற்குரிய பூவகை. *காதிடைக் குற்றமில் குறிஞ்சிலிக் கொத்தும்* (திருவாலவா. 54, 20).

குறிஞ்சிலைக்கல் kuriñcilai-k-kal, *n.* <குறிஞ்சிலைக்கல். Red stone; ஈரக்கல். (W.)

குறிஞ்சிவேந்தன் kuriñci-vēntan, *n.* <குறிஞ்சி+. See குறிஞ்சிக்கிழவன். (சூடா.)

குறித்தகள்ளன் kuritta-kallan, *n.* <குறி-+. Notorious robber or thief; பேர்போன பழந் திருடன். *Loc.*

குறித்தழை-த்தல் kurittalai-, *v. tr.* <id. +அழை-. 1. To call or beckon one out of an assembly; கூட்டத்திலுள்ள ஒருவனைக் குறிப்பிட்டழைத்தல். 2. To call upon one for protection; பாதுகாக்கும்படி அழைத்தல். (W.) 3. To invoke a deity by name to appear; பிரத்தியக்ஷமாகும்படி தேவதையைப் பேராலழைத்தல். (W.)

குறித்து kurittu, *adv.* <id. With the intention of; towards; நோக்கி.

குறிநிலையணி kuri-nilai-y-ani, *n.* <குறி+. (Rhet.) A figure of speech in which an object worth knowing is referred to by association in the course of extolling a different object; புகழ் பொருளை யுணர்த்துஞ் சொற்களால் குறித்தறிதற்குத் தகுதியாகிய பிறிதொரு பொருளையும் சொல்லும் அணி. (அணியி. 73)

குறிப்பறி-தல் kurippari-, *v. intr.* <குறிப்பு+ அறி-. To guess one's intentions; நோக்க மறிதல். *குறிப்பறிந்து காலங்கருதி* (குறள், 696).

குறிப்பாளி kurippāli, *n.* <id.+ஆள்-. Person of quick discernment; one who shrewdly reads hints and signs; ஊகித்துணர்பவன்.

குறிப்பி-த்தல் kurippi-, *11 v. tr.* Caus. of குறி-. To remind, call to mind by sign or hint; குறிப்பினால் நினைப்பூட்டுதல்.

குறிப்பிடம் kurippitam, *n.* <குறிப்பு+இடம். 1. Appointed place, the place of assignation; குறித்த இடம். 2. Summary, compendium, epitome; சுருக்கம். (யாழ். அக.) 3. Image representing the sufferings of Christ; கிறிஸ்து பட்ட பாடுகளைக் காட்டும் படிமம். *R. C.* 4. Catechism; வினவிடையாயமைந்த மதபோதனை நூல். *Chr.*

குறிப்பு kurippu, *n.* <குறி-. 1. Intention, inmost thought, real purpose or motive; உள்ளக் கருத்து. *இனியென் திருக்குறிப்பே* (திவ். பெரியாழ். 5, 4, 1) 2. Object of mental apprehension, dist. fr. *panpu;* பொறியானன்றி மனத்தாற் குறித்துணரப்படுவது. (தொல். சொல். 297, சேனா.) 3. (Rhet.) Mental response to the nine sentiments; ஒன்பதுவகைச் சுவைகளில் உண்டாகும் மனநிலை. (சிலப். 3, 13, உரை.) 4. Concentration of thought; மனவொருமை. (பிங்.) 5. Internal emotion attended with external gestures; இங்கிதம். *குறிப்பறிந்து* (குறள், 696). 6. Gesture; significant look or word; சைகை. *உணர்த்தியே குறிப்பால்* (கந்தபு. கணங்கள். 29). 7. Capacity to read into the minds of others; sharp, penetrative intellect; பிறர்கருதியதனைக் காணவல்ல கூரிய அறிவு. *குறிப்பிற் குறிப்புணராவாயின்* (குறள், 705). 8. [M. *kurippu.*] Summary, abstract; சுருக்கம். 9. Word suggestive of sound or colour, onomatopoea; ஓசை நிறம் முதலிய பொருளைக் குறிப்பது. *வினையே குறிப்பே யிசையே பண்பே* (தொல். சொல். 260). 10. (Gram.) That which is implied or understood, opp. to *veli-p-patai;* வெளிப்படையாகவின்றிப் பொருளு

ணர்த்துஞ் சொல். இன்ன பிறவுங் குறிப்பிற் றருமொழி (நன். 269). 11. [K. *kuṟipu*.] Mark, sign; அடையாளம். 12. Memorandum; கைக்குறிப்புப் புத்தகம். 13. Journal, in book-keeping; தினசரிக் குறிப்பு. 14. Horoscope; ஜாதகம். *Loc.* 15. Description, distinguishing marks or characteristics; சிறப்பியல்பு. 16. Symbolic terms, abbreviations, shorthand writing; குறிப்புக்குறியீடு. (W.) 17. Aim, mark, target; இலக்கு. (சங். அக.) 18. (Buddh.) Mind and the five senses, as elements of a being, one of *pañca-kantam*, q.v.; பஞ்சகந்தங்களுள் ஐம்பொறிகளும் மனமுமாகிய ஆறன்றொகுதி. *உருவு நுகர்ச்சி குறிப்பே பாவனை* (மணி. 30, 189). 19. Sketch in painting; outlines, tracings; சித்திரத்தில் உருவக்குறிப்பு. (W.)

குறிப்புக்கட்டை kuṟippu-k-kaṭṭai, *n.* <குறிப்பு+. A post or block at a ford to indicate danger from quicksand, etc.; ஆபத்தைக் காட்ட நீரில்நடும் மரம். (W.)

குறிப்புக்காரன் kuṟippu-k-kāraṉ, *n.* <id. +. Marksman. See குறிகாரன், 1. (W.)

குறிப்புச்சொல் kuṟippu-c-col, *n.* <id.+. (Gram.) Word indicating a meaning by implication; சொல்லுவோன் குறிப்பினல் நேர்பொருளன்றி வேறுபொருளை உணர்த்துஞ் சொல். (குறள், 711, உரை.)

குறிப்புத்தொழில் kuṟippu-t-toḻil, *n.* <id. +. Significant gesture; இங்கிதச் செய்கை. *இவள் செய்த இக்குறிப்புத் தொழிலால்* (பரிபா. 12, 90–92, உரை).

குறிப்புநிலை kuṟippu-nilai, *n.* <id.+. See குறிப்புச்சொல். (நன். 460, மயிலை.)

குறிப்புப்பெயரெச்சம் kuṟippu-p-peyar-eccam, *n.* <id.+. (Gram.) Relative participle of an appellative verb; செயலையுங் காலத்தையும் வெளிப்படையாகக் காட்டாத பெயரெச்சம்.

குறிப்புப்பொருள் kuṟippu-p-poruḷ, *n.* <id.+. (Gram.) Implied meaning; குறிப்பாலுணரப்படும் பொருள். (நன். 259, விருத்.)

குறிப்புமுற்று kuṟippu-muṟṟu, *n.* <id.+. (Gram.) See குறிப்புவினைமுற்று. (நன். 351.)

குறிப்புமொழி kuṟippu-moḻi, *n.* <id.+. See குறிப்புச்சொல். *எழுத்தொடுஞ் சொல்லொடும் புணராதாகிப் பொருட்புறத்ததுவே குறிப்புமொழியென்ப* (தொல். பொ. 491).

குறிப்புருவகம் kuṟippuruvakam, *n.* <id. +. Implied metaphor; குறிப்பினாற் பெறப்படும் உருவகவணி. (குறள், 1030, உரை.)

குறிப்புவமை kuṟippuvamai, *n.* <id.+. (Rhet.) Implied simile, metaphor; குறிப்பாலுணரப்படும் உவமையணி. (தொல் பொ. 278, உரை.)

குறிப்புவினை kuṟippu-viṉai, *n.* <id.+. (Gram.) Appellative verb; பொருட்பெயர் இடப்பெயர் முதலியவற்றின் அடியாகப் பிறந்து செயலையும் காலத்தையும் வெளிப்படையாகக் காட்டாமல் வினைத்தன்மையைக் கொண்டுள்ள சொல். (நன். 321, உரை.)

குறிப்புவினைமுற்று kuṟippu-viṉai-muṟṟu, *n.* <id.+. (Gram.) See குறிப்புவினை. (நன். 323, உரை)

குறிப்புவினையாலணையும்பெயர் kuṟippu-viṉaiyāl-aṇaiyum-peyar, *n.* <id.+. (Gram.) Appellative verb declined as a noun, as *பண்டைச் செல்வனைக் கண்டேன்;* முன்பு குறிப்புவினையாய்ப் பின்பு பொருள்களைக் குறித்தற்கு வரும் பெயர். (நன். 321, விருத்.)

குறிப்புவினையெச்சம் kuṟippu-viṉai-y-eccam, *n.* <id.+. (Gram.) Verbal participle of an appellative verb; தொழில்காலங்களைக் குறிப்பாகக் காட்டும் வினையெச்சம். (நன். 342, உரை.)

குறிப்பெச்சம் kuṟippeccam, *n.* <id.+எச்சம். Suggested sense; கூறிய சொற்களைக்கொண்டு அவற்றின் கருத்தாகக்கொள்ளும்பொருள். (குறள், 411, உரை.)

குறிப்பெழுத்து kuṟippeḻuttu, *n.* <id.+. Abbreviation, contraction of names, words, etc., as எ-று for என்றவாறு; சுருக்கெழுத்து. (W.)

குறிப்பெழுது-தல் kuṟippeḻutu-, *v. intr.* <id.+. 1. To write memoranda, notes, index, etc.; விஷயக்குறிப்பு எழுதுதல். 2. To note down the date, hour, etc., of a child's birth; சாதகக் குறிப்பெழுதுதல். 3. To make entries in day-book; பேரேட்டில் எழுதுவதன்முன் கணக்கைக் குறிப்புப்புஸ்தகத்தில் எழுதுதல்.

குறிப்பேடு kuṟippēṭu, *n.* <id.+ஏடு. 1. Day-book, the items of which are transferred to ledger; தினசரி வரவுசெலவுக் கணக்குகளைப் பதியும் புத்தகம். 2. Memorandum book; ஞாபகக் குறிப்புப் புஸ்தகம்.

குறிப்போலை kuṟippōlai, *n.* <id.+ஓலை. 1. Cadjan memorandum; கணக்குக்குறிப்பு எழுதிய ஓலை. (W.) 2. Ola record of a child's birth, for casting its nativity; சாதகக்குறிப்பு எழுதிய ஓலை.

குறிபார்-த்தல் kuṟi-pār-, *v. intr.* <குறி+. 1. To observe signs, omens; நிமித்தம் பார்த்தல். 2. To tell fortunes; நன்மை தீமைகளைக் குறிபார்த்துச் சொல்லுதல். 3. To aim at a mark; இலக்குப்பார்த்தல்.

குறிபிழை-த்தல் kuṟi-piḻai-, *v. intr.* <id. +. 1. To miss the mark, as in shooting; இலக்குத்தவறுதல். 2. To fail, as signs of rain; மழைக்குறிதோன்றியும் மழைபெய்யாது விடுதல். (W.)

குறிபோடு-தல் kuṟi-pōṭu-, *v. intr.* <id. +. 1. To mark, sign; அடையாளம் இடுதல். 2. To make marks for helping calculation; எண்ணுதற்குக் கோடு இடுதல். *Colloq.*

குறியிடம் kuṟi-y-iṭam, *n.* <id. +. (Akap.) Place of assignation by lovers; tryst; தலைவனுந் தலைவியும் கூடுதற்குக் குறித்த இடம்.

குறியிடையீடு kuṟi-y-iṭai-y-īṭu, *n.* <id. +. (Akap.) Obstacles preventing lovers from meeting at the place of assignation; தலைவனுந்தலைவியுங் குறித்தவிடத்துக் கூடாதவாறு நேரும் இடையூறு. (நம்பியகப். 155.)

குறியீடு kuṟi-y-īṭu, *n.* <id. +. Name given to a thing or concept; குறியாக இட்டாளும் பெயர். *அளபெடை யென்னுங் குறியீடே* (நன். 91, விருத்.).

குறியெதிர்ப்பை kuṟi-y-etirppai, *n.* <id. +. Exact return of things borrowed; அளவு குறித்துவாங்கி வாங்கியவாறே எதிர் கொடுப்பது. *மற்றெல்லாங் குறியெதிர்ப்பை நீரதுடைத்து* (குறள், 221).

குறியோன் kuṟiyōṉ, *n.* <குறு-மை. 1. [M. *kuṟiyavan.*] Person of short stature; குள்ளன். 2. Agastya, as short; அகத்தியன். *குறியோனிருந்த மலைபயில் வார்தமிழ்* (தஞ்சைவா. 109).

குறில் kuṟil, *n.* <id. 1. (Gram.) Short vowel, opp. to *neṭil;* குற்றெழுத்து. (நன். 64.) 2. Shortness, dwarfishness; குறுமை. *குறினெடி லளவுசான்ற கூளியும்* (கந்தபு. விண்குடி. 44).

குறு[1]**-தல்** kuṟu-, *6 v. tr.* 1. To pluck; பறித்தல். *பூக்குற் றெய்திய புனலணி யூரன்* (ஐங்குறு. 23). 2. To pull up; மேலிழுத்துவாங்குதல். *கயிறு குறு முகவை* (பதிற்றுப். 22, 14). 3. To abandon, leave off, give up; ஒழித்தல். *இச்சைமற் றுச்சிரயங் குற்றேன்* (ஞானு. 61, 19). 4. To pound in a mortar, husk; நெல் முதலியன குற்றுதல். *வெதிர் நெற் குறுவாம்* (கலித். 42).

குறு[2]**-த்தல்** kuṟu-, *11 v. intr.* <குறுகு-. [T. K. M. *kuṟu.*] To become short; to contract, diminish, shrink; குறுகுதல். (W.)

குறுக்கடி kuṟukkaṭi, *n.* <குறுக்கு + அடி-. 1. Short cut; குறுக்குப்பாதை. 2. Anything done by way of short cut or in a compendious method; நேர்வழியாலன்றிக் குறுக்கேபுகுந்து செய்யுஞ் செயல். 3. Short, abrupt speech; unreasoned talk; ஒழுங்கற்ற பேச்சு. *குறுக்கடியாய்ப் பேசுகிறான்.*

குறுக்கம் kuṟukkam, *n.* <குறுகு-. 1. Shortness; குறுகிய நிலை. *ஐ ஔக்குறுக்கம்* (நன். 99). 2. Abridgement, abbreviation, contraction, epitome, summary; சுருக்கம். 3. Measure of dry land varying in different parts of Tamil country from ¾ acre to 7 acres (R.F.); ¾ முதல் 7 ஏகர்வரை பல விடங்களில் பல்வேறு வகையாக வழங்கும் புன்செய் அளவு வகை. 4. A prepared arsenic; கௌரி பாஷாணம். (W.)

குறுக்கல் kuṟukkal, *n.* <குறுக்கு-. 1. Reduction, contraction; குறைக்கை. 2. (Gram.) Shortening a long vowel; நெடிலைக் குறிலாக்குஞ் செய்யுள் விகாரம். (நன். 155.)

குறுக்களவு kuṟukkaḷavu, *n.* <குறுக்கு + அளவு. Measurement across, diameter; குறுக்குத் தூரம். *அந்தவீட்டின் குறுக்களவு என்ன?*

குறுக்கிடு-தல் kuṟukkiṭu-, *v. intr.* <id. + இடு-. [M. *kuṟukkīṭu.*] 1. To pass across, as animals of bad omen; குறுக்கே செல்லுதல். *பூனை குறுக்கிட்டது.* 2. To interfere in another's affair; பிறர்காரியத்தில் தலையிடுதல். 3. To cross the path of, to intervene; தடையாக எதிர்ப்படுதல். *மீன்களைக் குறுக்கிட்டு மறித்துப்படுக்கும் வலையையுடைய பரதவர்* (சிலப். 6, 142, உரை).

குறுக்கீடு kuṟukkīṭu, *n.* <குறுக்கிடு- +. Crossing, intervention, interference; குறுக்கிடுகை.

குறுக்கு[1]**-தல்** kuṟukku-, *5 v.* Caus. of குறுகு-. *tr.* [M. *kuṟukku.*] 1. To shorten, curtail, reduce, contract, lessen, retrench; குறையச்செய்தல். *செலவைக் குறுக்கவேண்டும்.* 2. To abbreviate, abridge, epitomise, abstract; சுருக்குதல். *அந்தநூலைக் குறுக்கியெழுதுக.* 3. To cause to draw near, to bring within easy reach; நெருங்கச்செய்தல். *திருநாவாய் குறுக்கும்வகை யுண்டுகொலோ* (திவ். திருவாய். 9, 8, 1).—*intr.* To be near, close by; சமீபமாதல். *திருநாவாய் எததனையிடம போரு மென்று எதிரேவருகின்றார் சிலரைக்கேட்டருள குறுக்கும் என்றார்களாய்* (ஈடு, 9, 8, 1).

குறுக்கு[2] kuṟukku, *n.* <குறு-மை. [M. *kuṟukku.*] 1. Transverseness, breadth; நெடுமைக்கு மாறான அகலம். 2. Diameter; குறுக்களவு. *நெடுமையுங் குறுக்கு நூற்றெட் டங்குலம்* (காசிக. சிவ. அக. 17). 3. Shortness of distance; குறுமை. *நீண்ட நெடுமையு மகலக்குறுக்கும் காட்டா* (தாயு. சிதம்பர. 13). 4. Contraction; சுருக்கம். (W.) 5. Opposition, objection, hindrance; மாறு. *அவன் எதற்குங் குறுக்குப் பேசுகிறவன்.* 6. Hips, loins; இடுப்பு. *Loc.*

குறுக்குக்கட்டு kuṟukku-k-kaṭṭu, *n.* <குறுக்கு +. 1. Tying transversely or crosswise, as

in fastening a case; பெட்டி முதலியவற்றைக் குறுக்காகக் கயிற்றாற் கட்டுங் கட்டு. 2. Tying a cloth a little above the breasts and around the body, as women in bathing; மகளிர் நீராடும் போது மார்புக்குமேலே கட்டுஞ் சீலைக்கட்டு. (W.)

குறுக்குக்கிளை kuṟukku-k-kiḷai, *n.* <id.+. Lateral branch; பக்கக்கிளை.

குறுக்குக்கேள்வி kuṟukku-k-kēḷvi, *n.* <id. +. 1. Cross-questioning, cross-examination; வழக்கில் சாட்சியை மடக்கிக்கேட்குங் கேள்வி. 2. Irrelevant question; perverse question; ஒழுங்கற்ற கேள்வி. 3. Question by way of interruption or intrusion; இருவர் வினவிக்கொண்டிருக்க இடையில் பிறனொருவன் கேட்குங் கேள்வி.

குறுக்குச்சட்டம் kuṟukku-c-caṭṭam, *n.* <id.+. (W.) 1. Cross piece in a frame; குறுக்காகப் போடுஞ் சட்டம். 2. Brace to connect a pair of rafters; கூரையின் குறுக்குக்கட்டை. 3. Cross beam; குறுக்காக இடும் உத்திரம்.

குறுக்குச்சார் kuṟukku-c-cār, *n.* <id.+. Short or cross side of house; raised floor on either side of the shorter wall of a house; வீட்டின் குறுக்கிடம். (J.)

குறுக்குச்சாலோட்டு-தல் kuṟukku-c-cāl-ōṭṭu-, *v. intr.* <id.+. Lit., to run a furrow transversely. To interfere with another's work for gaining one's own ends; தன்னலங்கருதிப் பிறர்காரியத்தில் ஊடேவிழுதல். *Loc.*

குறுக்குச்சுவர் kuṟukku-c-cuvar, *n.* <id.+. Party-wall; பாகஞ் செய்துகொண்டமனையில் எல்லைகுறித்தற்குக் குறுக்கே இடும் சுவர். (C.E.M.)

குறுக்குச்சூத்திரம் kuṟukku-c-cūttiram, *n.* <id.+. Formula, brief comprehensive rule, theorem, expressing the shortest method of performing a calculation; கணிதத்தில் சுருக்கமாய் அறிதற்கு ஏற்ற வழியைத் தெரிவிக்குஞ் சூத்திரம். (W.)

குறுக்குநிமிர்-தல் kuṟukku-nimir-, *v. intr.* <id.+. *Loc.* Lit., to make hipbones stand firm. 1. To have one's powers overtaxed, to be overworked; சக்திக்கு மிஞ்சி வேலைவாங்குதல். 2. To grow lazy; சோம்பேறியாதல். *வேலையில்லாமல் குறுக்கு நிமிர்ந்துவிட்டான்.*

குறுக்குநெடுக்கும் kuṟukku-neṭukkum, *adv.* <குறுக்கும்+. Lit., lengthwise and breadthwise. Here and there; இங்குமங்கும்.

குறுக்குப்பாடு kuṟukku-p-pāṭu, *n.* <குறுக்கு+. Transverse direction; குறுக்கான பக்கம். (W.)

குறுக்குப்பாதை kuṟukku-p-pātai, *n.* <id. +. Short cut; குறுக்குவழி.

குறுக்குப்புத்தி kuṟukku-p-putti, *n.* <id. +. Cross-grained mentality; கோணலறிவு.

குறுக்குமறுக்கும் kuṟukku-maṟukkum, *adv.* Redupl. of *குறுக்கும்.* See குறுக்குநெடுக்கும். *Colloq.*

குறுக்குவலி-த்தல் kuṟukku-vali-, *v. intr.* <குறுக்கு+. To suffer from labour-pains; பிரசவவேதனைப்படுதல்.

குறுக்குவழி kuṟukku-vaḻi, *n.* <id.+. [M. *kuṟukkuvaḻi.*] 1. See குறுக்குப்பாதை. 2. Crooked way, path of evil; கோணல்வழி.

குறுக்குவிசாரணை kuṟukku-vicāraṇai, *n.* <id.+. Cross-examination; வழக்கில் சாட்சியை மடக்கிக்கேட்குங் கேள்வி.

குறுக்குவினா kuṟukku-viṉā, *n.* <id.+. Cross-examination; குறுக்குக்கேள்வி.

குறுக்கே kuṟukkē, *adv.* <id. 1. Crosswise, transversely, athwart, across; இடையே. *பூனை குறுக்கே போயிற்று.* 2. Between, in the middle; மத்தியில். *பெரியோர்கள் பேசுகையிற் குறுக்கே பேசலாகாது.* 3. In opposition to; எதிராக. *நான் சொல்வதற்கெல்லாம் அவன் குறுக்கே சொல்லுகிறான்.*

குறுக்கேநில்-தல்[குறுக்கேநிற்றல்] kuṟukkē-nil-, *v. intr.* <id.+. To be obstructive, to be a hindrance; இடையூறாக இருத்தல். *காரியம் முடியவொட்டாமல் அவன் குறுக்கேநிற்கிறான்.*

குறுக்கேமடக்கு-தல் kuṟukkē-maṭakku-, *v. tr.* <id.+. 1. To interrupt rudely and refute; to interrupt and silence one by a curt reply; இடையிற் பேசி வாயடக்குதல். 2. To create confusion in the mind of a person while he is thinking out a question; ஒரு பொருளை ஆலோசித்துக்கொண்டிருக்கும்பொழுது மயங்க அடித்தல்.

குறுக்கேமுறி-த்தல் kuṟukkē-muṟi-, *v.* <id.+. *Colloq. tr.* To break off in the middle of a business, to leave a work unfinished; காரியத்தை இடையே விட்டொழித்தல்.—*intr.* To leave a company in displeasure; வெறுப்பால் கூட்டத்தினின்று இடையேபிரிதல்.

குறுக்கேவிழு-தல் kuṟukkē-viḻu-, *v. intr.* <id.+. To interfere, meddle; ஒருகாரியத்தின் இடையே தலையிடுதல்.

குறுக்கேற்றமாய் kuṟukkēṟṟam-āy, *adv.* <id.+. Irrelevantly, at a tangent; பொருத்தமில்லாமல். *Loc.*

குறுக்கை[1] kuṟukkai, *n.* A shrine in Tanjore district where Śiva burnt Kāmaṉ to ashes,

one of *aṭṭa-vīraṭṭam*, q.v.; அட்டவீரட்டங்களுள் ஒன்றானதும் சிவபிரான் காமனை எரித்ததுமான சோணாட்டுத்தலம். குறுக்கை வீரட்டனாரே (தேவா. 191, 1).

குறுக்கை² kuṟu-k-kai, *n.* <குறு-மை + கை³. 1. Tiger; புலி. (பெருங். இலாவாண. 18, 18, அரும்.) 2. Dagger, poniard; உடைவாள். குறுக்கை புக்க கொளுவமை கச்சையன் (பெருங். இலாவாண. 18, 18).

குறுக்கையர் kuṟukkaiyar, *n.* <குறுக்கை¹. Members of the family in the Vēḷāḷa caste to which Tiru-nāvukkaracar belonged; வேளாள மரபில் திருநாவுக்கரசுநாயனார் அவதரித்த குடியைச் சார்ந்தவர். வேளாண் குலத்தின்கண் வரும்பெருமைக் குறுக்கையர்தங் குடிவிளங்கும் (பெரியபு. திருநா. 15).

குறுகக்காய்ச்சு-தல் kuṟuka-k-kāyccu-, *v. tr.* <குறுகு- +. To boil down a liquid; சுண்டக் காய்ச்சுதல். (J.)

குறுகப்பிடி-த்தல் kuṟuka-p-piṭi-, *v. tr.* <குறுகு- +. (W.) 1. To make short; to curtail, as expenses; to retrench; to shorten, as a story; சுருக்குதல். 2. To hold near or close to; கிட்டப் பிடித்தல்.

குறுகல் kuṟukal, *n.* <id. That which is short, dwarfish, stunted; குறுகிய பொருள். (W.)

குறுகலர் kuṟukalar, *n.* <id. + அல் neg. +. Enemies, foes; பகைவர். குறுகல ரூர் (திருக்கோ. 13).

குறுகாதவர் kuṟukātavar, *n.* <id. + ஆ neg. +. See குறுகலர். குறுகாதவரூர் . . . சரத்தாற்செற்றவன் (தேவா. 169, 1).

குறுகார் kuṟukār, *n.* <id. +. See குறுகலர். குறுகார் தடந்தோளிரண்டுந் துணிந்து (பாரத. முதற்போ. 29).

குறுகு-தல் kuṟuku-, *5 v.* [T. *kuruca*, M. *kuṟuku*.] *intr.* 1. To grow short, stumpy, dwarfish; குள்ளமாதல். குறுகுகுறுகென விருத்தி (கந்தபு. திருக்குற்றாலப். 15). 2. To shrink, contract; to be reduced; to decrease, diminish, decline; சிறுகுதல். உரைகுறுக நிமிர்கீர்த்தி (கம்பரா. குலமுறை. 4). 3. (Gram.) To be shortened, as a long vowel; மாத்திரை குறைதல். இடைப்படிற் குறுகுமிடனுமாருண்டே (தொல். எழுத். 37).—*tr.* To approach, draw near; அணுகுதல். இளங்கோவேந்தனிருப்பிடங் குறுகி (மணி. 18, 42).

குறுகுத்தாளி kuṟuku-t-tāḷi, *n.* <குறுகு- +. Hairy-leaved creamy-white bindweed. See சிறுதாளி. (மலை.)

குறுகுறு-த்தல் kuṟu-kuṟu-, *11 v. intr.* 1. To mutter in displeasure, murmur; வெறுப்புத் தோன்ற முருமுருத்தல். (W.) 2. To be pricked by conscience; மனம் உறுத்திக்கொண்டிருத்தல். குற்றமுள்ளநெஞ்சு குறுகுறுக்கும். 3. To be perturbed by fear of detection; அச்சம் உறுத்திக்கொண்டிருத்தல். 4. To feel an itching or irritating sensation, as in the ear, in a sore; தினவுறுதல். காது குறுகுறுக்கிறது.

குறுகுறுநட-த்தல் kuṟu-kuṟu-naṭa-, *v. intr.* <குறுகுறு- +. To wobble with short steps, as a child; குறுகக்குறுக நடந்துசெல்லுதல். குறுகுறு நடந்து சிறுகை நீட்டி (புறநா. 188).

குறுகுறுப்பு kuṟukuṟuppu, *n.* <id. 1. Muttering in displeasure; விருப்பின்மை தோன்ற முருமுருக்கை. (W.) 2. [T. *gurru*.] Snoring, stertorous breathing; குறட்டை. (W.) 3. Showing signs of perturbation with fear; அச்சக்குறி காட்டுகை. 4. Briskness; bustling activity; சுருசுருப்பு.

குறுகுறுப்பை kuṟukuṟuppai, *n.* <id. Snoring, stertorous breathing; குறட்டை. (W.)

குறுகுறென்றுவிழி-த்தல் kuṟu-kuṟeṉṟu-viḻi-, *v. intr.* <id. +. To have a look of fear, a thievish look; திருட்டுவிழிவிழித்தல். புதுத்திருடன் குறுகுறென்று விழிக்கிறான்.

குறுகுறெனல் kuṟukuṟeṉal, *n.* Onom. expr. signifying (*a*) showing signs of haste; விரைவுக்குறிப்பு. அவன் குறுகுறென்று நடக்கிறான்: (*b*) tingling, as in the ears, a sore; தினவுதின்னுதற்குறிப்பு. காது குறுகுறென்கிறது: (*c*) muttering in displeasure; கோபக்குறிப்பு: (*d*) being perturbed with fear; அச்சக் குறிப்பு: புலியைக்கண்டால் மனம் குறுகுறென்கிறது: (*e*) being brisk and active; சுருசுருப்பாயிருத்தற் குறிப்பு.

குறுங்கண் kuṟu-ṅ-kaṇ, *n.* <குறு-மை +. A kind of lattice-window, with small apertures; சாளரம். குறுங்க ணடைக்குங் கூதிர்க்காலையும் (சிலப். 14, 101).

குறுங்கண்ணி kuṟu-ṅ-kaṇṇi, *n.* <id. +. Wreath for the tuft; முடியிலணியும் மாலை. குழவித்திங்களைக் குறுங்கண்ணியாகவுடைய (இறை. களவி. 1, உரை).

குறுங்கணக்கு kuṟu-ṅ-kaṇakku, *n.* <id. +. Simple letters of the Tamil alphabet, viz., 12 vowels and 18 consonants, opp. to *neṭu-ṅ-kaṇakku*; உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டுமாகிய முதலெழுத்து.

குறுங்கலி kuṟu-ṅ-kali, *n.* <id. +. 1. An ancient melody-type of the *pālai* class; பாலையாழ்த்திறத்தொன்று. (திவா.) 2. (Puṟap.) Theme of addressing a hero with a view to turn him away from his illicit loves; தன் மனைவியை விடும்படி விகற்பித்த ஒருவனுடைய காதல் கெடும்படி சொல்லும் புறத்துறை. (பு. வெ. 12, இருபாற்பெ. 18.)

குறுங்கலித்தொகை kuṟu-ṅ-kali-t-tokai, *n.* <id.+. An ancient Tamil classic. See கலித்தொகை. (புறநா. முகவுரை, பக். 5.)

குறுங்கற்றலை kuṟu-ṅ-kaṟṟalai, *n.*<id.+. A sea-fish, silvery-grey, attaining 1 ft. in length, *Sciæna maculata*; கடல்மீன் வகை. (W.)

குறுங்காடு kuṟu-ṅ-kāṭu, *n.* <id.+. [M. *kuṟunkāṭu*.] Thicket, small forest or jungle, copse, underwood; சிறுகாடு. குறுங்காட் டின்னகை மனையோள் (ஐங்குறு. 410).

குறுங்காலெலி kuṟu-ṅ-kāl-eli, *n.* <id.+. A rat; எலிவகை. (W.)

குறுங்கிண்ணி kuṟuṅkiṇṇi, *n.* Bell-metal; வெண்கலம். (யாழ். அக.)

குறுங்குடியாள் kuṟu-ṅ-kuṭi-y-āḷ, *n.* prob. குறு-மை + குடி + ஆள்-. Yellow sulphuret of arsenic; தாளகம். (மூ. அ.)

குறுங்கூலி kuṟu-ṅ-kūli, *n.*<குறு-+. Husking wages; நெல்முதலியன குற்றுங் கூலி. (சன். 400, மயிலை)

குறுங்கெண்டை kuṟu-ṅ-keṇṭai, *n.* <குறு மை. 1. A fresh-water fish, silvery, attaining 5 in. in length, *Barbus chola*; நன்னீரில்வாழும் மீன்வகை. 2. A small river-fish, silvery, *Barbus dorsalis*; ஆற்றுமீன்வகை.

குறுங்கை kuṟuṅkai, *n.* (L.) 1. Conehead. See குறிஞ்சி. 2. Square-branched conehead, m. sh., *Strobilanthes kunthianus*; குறிஞ்சிச்செடி வகை.

குறுங்கொள்ளி kuṟu-ṅ-koḷḷi, *n.* <குறு-மை+. Firebrand partially consumed; குறைக் கொள்ளி.

குறுங்கோல் kuṟu-ṅ-kōl, *n.* <id.+. 1. A tiny rod, small stick; சிறிய கோல். குறுங்கோ லெறிந்த நெடுஞ்செவிக் குறுமுயல் (புறநா. 339). 2. A yard-measure; கஜக்கோல். *Loc.*

குறுஞ்சம்பா kuṟu-ñ-campā, *n.* <id.+. A sub-species of *campā* paddy; சம்பா நெல்வகை. குறுஞ்சம்பா பித்தங் குடியிருக்கச் செய்யும் (பதார்த்த. 812.)

குறுஞ்சிரிப்பு kuṟu-ñ-cirippu, *n.* <id.+. Smile; புன்சிரிப்பு.

குறுஞ்சிலைக்கல் kuṟu-ñ-cilai-k-kal, *n.*<id. +. Red stone; ஈரக்கல். (சங். அக.)

குறுஞ்சீட்டு kuṟu-ñ-cīṭṭu, *n.* <id.+. Chits cast into a pot and taken at random; குடத்தில் இட்டுக் குலுக்கியெடுக்குஞ் சீட்டு.

குறுஞ்சீர்வண்ணம் kuṟu-ñ-cīr-vaṇṇam, *n.* <id.+. (Pros.) A rhythm effected by using only short syllables; குற்றெழுத்துப் பயின்றுவருஞ் சந்தம். (தொல். பொ. 533.)

குறுஞ்சுருட்டை kuṟu-ñ-curuṭṭai, *n.*<id. +. Variety of *Echis carinata*, short carpet-snake, as being the smallest; சுருட்டைப்பாம்பிற் சிறிய சாதி. (M. M. 134.)

குறுஞ்சூலி kuṟuñcūli, *n.* A kind of shrub; ஒருவகைப் பூடு. (சன். 259, மயிலை.)

குறுணல் kuṟuṇal, *n.* <குறு-மை+ prob. நெல் Broken rice, bruised grain, grit; குறுநொய். (W.)

குறுணி kuṟuṇi, *n.* prob. id. A grain measure=1 *marakkāl* or 8 measures; [க] எட்டுப்படிகொண்ட தானியவளவு.

குறுணிப்பாடு kuṟuṇi-p-pāṭu, *n.* <குறுணி +. Land requiring one *kuṟuṇi* of paddy to sow it; குறுணி விதைப்பாடுள்ள நிலம். (T.A.S. i, 8.)

குறுணை kuṟuṇai, *n.*<குறு-மை+நொய். See குறுநொய்.

குறுந்தடி kuṟu-n-taṭi, *n.* <id.+. 1. Short stick; சிறிய கழி. (திவா.) கோழிவெண் முட்டைக் கென்செய்வ தெந்தாய் குறுந்தடி (திவ். பெரியதி. 10, 9, 7). 2. Drum stick; பறையடிக்குங் கோல். கன்னைக் குறுந்தடியாகக்கொண்டு (சிலப். 17, பாட்டு, 1, உரை.) 3. See குறுந்தறி, 3. (அக. நி.)

குறுந்தறி kuṟu-n-taṟi, *n.* <id.+. 1. Ornamental capital of a column or pillar; போதிகை. (திவா.) 2. Stake; சிறுமுளை. 3. Blocks built in a wall to support timbers; உத்திரத்தைத் தாங்கும் படி சுவரோடு ஒட்டித் தூண்போல் எழுப்பிய கட்டடம். (W.)

குறுந்தாள் kuṟu-n-tāḷ, *n.* <id.+. Narrow steps; குறுகிய படிக்கட்டு. குறுந்தாண் ஞாயில் (பதிற்றுப். 71, 12).

குறுந்தாளி kuṟu-n-tāḷi, *n.* <id.+. Hairy-leaved creamy-white bindweed. See சிறுதாளி. (மலை.)

குறுந்திரட்டு kuṟu-n-tiraṭṭu, *n.* <id.+. An anthology by Tattuva-rāyar, treating of Vēdānta, dist. fr. *peru-n-tiraṭṭu*; தத்துவராயர் தொகுத்த ஒரு வேதாந்தநூல்.

குறுந்துழாய் kuṟu-n-tuḻāy, *n.* <id.+. See குறுந்துளசி. (மலை.)

குறுந்துளசி kuṟu-n-tuḷaci, *n.* <id.+. A small species of basil; சிறுதுளசி. (மலை.)

குறுந்தேங்காய் kuṟu-n-tēṅkāy, *n.* <id.+. A fruit resembling a small coconut. See சமுத்திராப்பழம். (W.)

குறுந்தொகை kuṟu-n-tokai, *n.*<id.+. An ancient anthology of Tamil stanzas 402 in number compiled by Pūrikkō. treating of *aka-p-poruḷ*, one of *eṭṭu-t-tokai;* அகப்பொருளைப் பற்றியதும், அகவற்பாக்கள்-**402** கொண்டு பூரிக்கோ என்பவரால் தொகுக்கப்பெற்றதும், எட்டுத்தொகையிற் சேர்ந்ததுமாகிய ஒருநூல். *நற்றிணை நல்ல குறுந்தொகை* (புறநா. முகவுரை, பக். 1).

குறுந்தொகைநானூறு kuṟu-n-tokainā-ṉūṟu, *n.* <id.+. See குறுந்தொகை. (இறை. பாயி. பக். 5.)

குறுந்தொட்டி kuṟu-n-toṭṭi, *n.* <id.+. 1. Rose-coloured sticky mallow. See சிற்றுமுட்டி. (L.) 2. Small climbing nettle. See சிறுகாஞ்சொறி. (மலை.)

குறுந்தொடி kuṟu-n-toṭi, *n.*<id.+. Maiden wearing small bracelets; சிறுதொடியினைப்பூண்ட பெண். *தொடலைக் குறுந்தொடி* (குறள், 1135).

குறுந்தோட்டி kuṟu-n-tōṭṭi, *n.* <id.+. Short goad, dist. fr. *neṭu-n-tōṭṭi;* சிறிய அங்குசம். *குறுந்தோட்டியையும் நெடுந்தோட்டியையுந் தம்மிற் பிணைத்து* (சீவக. 1835, உரை).

குறுநகை kuṟu-nakai, *n.* <id.+. Smile; புன்சிரிப்பு. *குருபரன் . . . குறுநகைகொண்டுகூறும்* (பிரபுலிங். வசவண்ணர்கதி, 30).

குறுநடை kuṟu-naṭai, *n.* <id.+. Short, quick, graceful pace, as of a child; குறுகியநடை. *குதலைச்செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்க்கு* (மணி. 7, 57).

குறுநணி kuṟu-naṇi, *n.*<id.+நண்ணு-. Close proximity; மிக்க அணிமை. *நம்முட் குறுநணி காண்குவதாக* (புறநா. 209, 15).

குறுநர் kuṟunar, *n.*<குறு[1]-. Pluckers, as of weeds; களைமுதலியன பறிப்போர். *குறுந ரிட்ட குவளை* (சிலப். 10, 86).

குறுநறுங்கண்ணி kuṟu-naṟu-ṅ-kaṇṇi, *n.* <id.+. Crab's eye. See குன்றி. *குரீஇப்பூளை குறுநறுங்கண்ணி* (குறிஞ்சிப். 72).

குறுநாத்தகடு kuṟu-nā-t-takaṭu, *n.* <id.+ *nāga*+. Foliated tinsel; பொன்போல் ஒளியுள்ள மெல்லிய தகடு.

குறுநாப்பட்டை kuṟu-nā-p-paṭṭai, *n.*<id. +id.+. See குறுநாத்தகடு.

குறுநிகழ்ச்சி kuṟu-nikaḻcci, *n.* <id.+. Short duration of time taken by a sharp chisel to pass from the sixth lotus leaf to the seventh in a bunch of seven lotus leaves placed on a stone when the chisel is forcibly thrust into it by a strong man, opp. to *neṭu-nikaḻcci;* ஏழு செங்கழுநீர்தழை ஒருதநட்டி லடுக்கிப் பலவானுயிறு நேரவன் மிகவுங் கூரியதோருளிவைத்துக் கூட மிட்டுப்புடைத்தால் ஆறாம்புரையற்று ஏழாம்புரையிற் செல்லுகற்த வேண்டும் மிக நுண்ணிய அளவுள்ள காலம். *கணிகமெனுங் குறுநிகழ்ச்சியும்* (மணி. 27, 191).

குறுநிலமன்னன் kuṟu-nila-maṉṉaṉ, *n.* <id.+. Petty, tributary chief; சிற்றரசன். (பிங்.)

குறுநிலைவழக்கு kuṟu-nilai-vaḻakku, *n.* <id.+. Terms peculiar to any class; conventional terms; குழூஉக்குறிவழக்கு. (சேமி. சொல். 10, உரை.)

குறுநெளிப்பு kuṟu-neḷippu, *n.* <id.+. Affected twisting of the body, as in mimicry; கேலியாக உடலை நெளித்துக்காட்டுகை. (J.)

குறுநெறி kuṟu-neṟi, *n.* <id.+. Wave of curls of hair; குறுகிய மயிர்நெறிப்பு. *குறுநெறிக் கொண்ட கூந்தல்* (பெரும்பாண். 162).

குறுநொய் kuṟu-noy, *n.* <id.+. Broken rice, bruised grain, grit; அரிசிமுதலியவற்றின் சிறுநொய்.

குறும்படி kuṟu-m-paṭi, *n.* <id.+. Threshold, sill; வாசற்படி. *நிலையும் குறும்படியும். Loc.*

குறும்படை kuṟumpaṭai, *n.* prob. குறும்பு+ அடை. Fort; கோட்டை. *குறும்படைமழவர்* (அகநா. 35).

குறும்பர் kuṟumpar, *n.* <id. 1. Petty chieftains; குறுநிலமன்னர். *குறும்பருங் குழீஇய* (பெருங். உஞ்சைக். 43, 55). 2. cf. *kulambhara.* An aboriginal tribe; ஒருபழமையான சாதியார். 3. [M. *kuṟumban.*] Hunters, those who live by chase; வேடர். *கோண்டரு குறும்பர் வெம்போர்* (சீவக. 1079). 4. [T. *kurupa*, K. *kuruba*, M. *kuṟumban*, Tu. *kurubi.*] A caste of shepherds who weave coarse blankets; இடைச்சாதியில் முரட்டுக்கம்பளி நெய்யும் ஒரு பிரிவினர். 5. A subdivision of the Paḷḷa caste; பள்ளச்சாதியில் ஒரு பிரிவினர். (G. Tj. D. i, 90.)

குறும்பர்கோட்டம் kuṟumpar-kōṭṭam, *n.* <குறும்பர்+. Stronghold of the Kurumbas; குறும்பரின் கோட்டை. (W.)

குறும்பலா kuṟu-m-palā, *n.*<குறு-மை+. 1. A kind of short jack tree; ஒருவகைக் கூழைப்பலா மரம். 2. Śiva shrine at Tirukkuṟṟālam; திருக்குற்றாலத்திலுள்ள சிவாலயம். *குறும்பலா மேவிய கொல்லேற் றண்ணல்* (தேவா. 911, 11).

குறும்பறை kuṟu-m-paṟai, *n.* <id.+பறை. Hen, female of the feathered kind as probably short in stature; பறவைப்பேடு. *குறும்பறை யசைஇ* (புறநா. 67, 9).

குறும்பன் kuṟumpaṉ, *n.* <குறும்பு. 1. See குறும்பு, 3. 2. See குறும்புக்காரன்.

குறும்பனைநாடு kuṟu-m-paṉai-nāṭu, *n.* <குறு-மை+. An ancient province of the Tamil land believed to have been submerged; முற்காலத்தில் கடல்கொள்ளப்பட்ட தமிழ்நாடுகளுள் ஒன்று. *ஏழ்குறும் பனை நாடும் (சிலப். 8, 1, உரை).*

குறும்பாட்டம் kuṟumpāṭṭam, *n.* <குறும்பு + ஆட்டம். Vileness, wickedness, mischievousness; துஷ்டத்தனம்.

குறும்பாடு[1] kuṟumpāṭu, *n.* <id.+ஆடு-. See குறும்பாட்டம். *குறும்பாட்டைய் மோதிடும் (அழகர் கல. 41).*

குறும்பாடு[2] kuṟumpāṭu, *n.* <id.+ஆடு. Short, woolly sheep with twisted horns; ஒரு வகை யாடு. *குறும்பாட்டையு மோதிடும் (அழகர்கல. 41).*

குறும்பி kuṟum-pi, *n.* <குறு-மை+பீ. 1. Ear wax, cerumen; காதுள் அழுக்கு. *உள்ளுங் குறும்பி யொழுகுங்காதை (பட்டினத் திருப்பா. கச்சித்திருவகவல், வரி 37.)* 2. Excretion of the body, as urine and faeces; மலம் மூத்திரமுதலியன. *குறும்பி யூர்வதோர் கூட்டகத் திட்டு (தேவா. 370, 6).*

குறும்பிடி kuṟu-m-piṭi, *n.* <id.+. 1. [M. *kurumbiti.*] A very short handle; சிறுகைப்பிடி. 2. Short scimitar; உடைவாள். *குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடி (மதுரைக். 637).*

குறும்பிவாங்கி kuṟumpi-vāṅki, *n.* <குறும்பி+. Ear pick; காதுக்குறும்பி எடுக்குங் கருவி.

குறும்பின்மை kuṟumpiṉmai, *n.* <குறும்பு + இன்மை. Freedom from petty troublesome chieftains, as promoting the prosperity of a state, one of six *nāṭṭamaiti*, q.v.; துன்பம் விளைக்குங் குறும்பரசர் இல்லாமையாகிய நாட்டமைதி வகை. (பிங்.)

குறும்பு kuṟumpu, *n.* <குறு-மை. 1. Village in a desert tract; பாலைநிலத்தூர். (பிங்.) 2. Village; ஊர். (திவா.) 3. Petty chieftains; குறுநிலமன்னர். *குறும்படைந்த வரண் (புறநா. 97).* 4. Enemy; பகைவர். *இருட்குறும் பெறியும் வெய்யோன் (கூர்மபு. பதிக. 10).* 5. Small pieces, as of tobacco; சிறிய துணுக்கு. *புகையிலைக்குறும்பு.* 6. Stronghold, fort; அரண். *குறும்பல் குறும்பிற் றதும்ப வைகி (புறநா. 177).* 7. Strength, power; வலிமை. *அரவுக் குறும் பெறிந்த சிறுகட் டீர்வை (மலைபடு. 504).* 8. A class of savages supposed to form a part of the aborigines of South India, divided into காட்டுக் குறும்பு, நாட்டுக்குறும்பு; தென்னாட்டிலுள்ள புராதன மக்களுள் ஒருபிரிவினராகக் கருதப்படும் அநாகரிக சாதி. (W.) 9. [K. M. *kurumbu.*] Wickedness, mischief; விஷமம். *Colloq.* 10. Battle, fight, war; போர். (W.)

குறும்புக்காரன் kuṟumpu-k-kāraṉ, *n.* <குறும்பு+. [K. *kurumbugāra.*] Mischief-maker; விஷமஞ்செய்பவன்.

குறும்புத்தனம் kuṟumpu-t-taṉam, *n.* <id. +. [K. *kurumbatana.*] Wickedness, mischief; துஷ்டத்தனம்.

குறும்புவன்னியன் kuṟumpu-vaṉṉiyaṉ, *n.* <id. +. A sub-caste of Vaṉṉi tribe; வன்னியருள் ஒரு வகையார். (W.)

குறும்புழை kuṟu-m-puḻai, *n.* <குறு-மை+. Trap-door, small entrance; சிறிய வாயில். *குறும் புழை போயினன் (பெருங். உஞ்சைக். 36, 371).*

குறும்பூழ் kuṟu-m-pūḻ, *n,* <id. + பூழ். Quail; காடை. *குறும்பூழ்போற் கொழுங்கான் முகை சுமந்தன (சீவக 1651).*

குறும்பொறி kuṟu-m-poṟi, *n.* <id.+. Girdle, sash; உதரபந்தம். *குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல் (திருமுரு. 213).*

குறும்பொறை kuṟu-m-poṟai, *n.* <id. +. 1. Hillock; சிறுமலை. (பிங்.) *வரையக நண்ணிக் குறும் பொறை நாடி (பதிற்றுப். 74, 7).* 2. The hilly tract; குறிஞ்சிநிலம். (பிங்.) 3. Town in a hilly tract; குறிஞ்சிநிலத்தூர். (பிங்.) 4. Forest, jungle; காடு. *குருந்தவிழ் குறும்பொறை (நற். 321).*

குறும்பொறைநாடன் kuṟu-m-poṟai-nāṭaṉ, *n.* <id. +. Chief of the sylvan tract; முல்லைநிலத்தலைவன். (இறை. 1, 18.)

குறும்போக்கு kuṟu-m-pōkku, *n.* <id.+. A mode of playing on the lute; யாழ் வாசிக்கும் முறைகளுள் ஒன்று. (சீவக. 657, உரை.)

குறும்போது kuṟu-m-pōtu, *n.*<id. +. Bud about to blossom; மலரும் பருவமுள்ள அரும்பு. (பெருங். இலாவாண. 15, 21.)

குறுமக்கள் kuṟu-makkaḷ, *n.* <id.+. [M. *kurumbu.*] Children, youngsters; சிறுபிள்ளைகள். (சூடா.)

குறுமகள் kuṟu-makaḷ, *n.*<id. +. 1. Girl, young woman; இளம்பெண். *வண்டிமிர் சுடர்நுதற் குறுமகள் (ஐங்குறு. 254).* 2. Wife; மனைவி. *மெல் லியற் குறுமகள் (புறநா. 196, 14).*

குறுமடல் kuṟu-maṭal, *n.* <id.+. Small receptacle for sacred ashes; விபூதிவைக்குஞ் சிறிய மடல். *குறுமடல் ஒன்று பொன் இருபதின் கழஞ்சரை (S.I.I. ii, 144).*

குறுமணல் kuṟu-maṇal, *n.* <id.+. Sand containing minute particles of silver; இரசத மணல். (யாழ். அக.)

குறுமல் kuṟumal, *n.* <குறு[1]-. Powder; பொடி. (பிங்.)

குறுமா kuṟumā, *n.* < U. *kormā*. A kind of stew seasoned with condiments; குழம்புணவின் வகை. *Loc.*

குறுமாக்கள் kuṟu-mākkaḷ, *n.* < குறு-மை +. See குறுமக்கள். ஊர்க்குறுமாக்கள் வெண்கோடு கழாஅலின் (புறநா. 94)

குறுமாந்தம் kuṟu-māntam, *n.* < id. +. Croup, *Trachitis;* குழந்தைநோய்வகை. (இங். வை.)

குறுமீன் kuṟu-mīṉ, *n.* < id. +. A kind of fish; மீன்வகை. (W.)

குறுமுட்டன் kuṟu-muṭṭaṉ, *n.* < குறுமுட்டு. One daringly insolent, brute, savage; முருடன். (W.)

குறுமுட்டானவேலை kuṟu-muṭṭāṉa-vēlai, *n.* < id. +. Work on a very small scale with insufficient materials; வேண்டிய கருவிகளின்றிச் சுருக்கத்திற் செய்யப்படும் வேலை. (W.)

குறுமுட்டு kuṟu-muṭṭu, *n.* < குறு-மை +. (W.) 1. Gross insolence, impertinence; அளவு கடந்த செருக்கு. 2. Great urgency, as for business put off until the last moment; ஒரு தொழிலைச் செய்யாமலே நாமதித்திருந்து கடைசியில் முடித்தற்கு விரையும் அவசரம். 3. Narrowness, closeness; ஒடுக்கம். 4. Coercion, compulsion; பலாற்காரம். 5. Sudden encounter, as at a corner; திடீரென்று எதிர்ப்படுகை.

குறுமுடிகுடி kuṟu-muṭi-kuṭi, *n.* < id. +. Family of petty chiefs; சிற்றரசுரிமையுடைய குலம். குறுமுடிகுடிப் பிறந்தோர் முதலியோருமாய் (தொல். பொ. 30, உரை).

குறுமுயல் kuṟu-muyal, *n.* < id. +. See குழிமுயல்.

குறுமுறுவல் kuṟu-muṟuval, *n.* < id. +. Smile; புன்சிரிப்பு.

குறுமுனி kuṟu-muṉi, *n.* < id. +. See குறுமுனிவன். அகப்பொரு ளமுதினைக் குறுமுனி தேறவும் (கல்லா 62, 20).

குறுமுனிவன் kuṟu-muṉivaṉ, *n.* < id. +. Lit., dwarfish sage. Agastya; [குறுகிய வடிவுடையவன்] அகத்தியன். படிகோர் கிறுவவரு குறுமுனிவன் (சேதுபு. நாட்டுப் 1)

குறுமை kuṟumai, *n.* [K. *kurucu*, M. *kuṟuppu.*] 1. Shortness, brevity, conciseness; குறுகிய தன்மை. குறுமையாய் நெடுமையாகி (காசிக. ஓங்காரவிலிங். 22). 2. Dwarfishness, low stature; குள்ளம். 3. Defectiveness, imperfection; குறைவு. ஒருதான் மனடிய குறுமையும் (தொல். பொ 67). 4. Nearness, closeness, proximity; அண்மை. (பட்டினப். 28.)

குறுமொழிக்கோட்டி kuṟu-moḻi-k-kōṭṭi, *n.* < குறு-மை + Band of riff-raffs who spend their time in mocking and reviling others; பிறரை இகழ்ந்து நகையாடுதலையே பொழுதுபோக்காகவுடைய கீழ்மக்கள் கூட்டம். குறுமொழிக்கோட்டி நெடுநகைபுக்கு (சிலப். 16, 64).

குறுவஞ்சி kuṟu-vañci, *n.* < id. +. (Puṟap.) Theme of a petty king securing the welfare of his kingdom by paying tribute to an invading monarch; படையெடுத்துவந்தபெருவேந்தனுக்குச் சிறுவேந்தன் பணிந்து திறைகொடுத்துத் தன் குடிகளைப் புரக்கும் புறத்துறை. (பு. வெ. 3, 17.)

குறுவட்டம் kuṟu-vaṭṭam, *n.* < id. +. Diameter; குறுக்களவு. (கணக்கதி.)

குறுவளை kuṟu-vaḷai, *n.* prob. id. +. A sea-fish, greenish, *Pellona indica;* கடல்மீன் வகை.

குறுவா kuṟuvā, *n.* A sea-fish. See வரிக்கற்றலைமீன்.

குறுவால் kuṟu-v-āl, *n.* < குறு-மை + ஆல். Jointed ovate-leaved fig. See இச்சி.

குறுவாழ்க்கை kuṟu-vāḻkkai, *n.* < id. + 1. Poverty; தரித்திரம். (திவா.) 2. Short-lived enjoyment; அற்பகால இன்பம். (W.)

குறுவிசனம் kuṟu-vicaṉam, *n.* < id. +. Gloomy state of mind, melancholy; அறுவசியமான கவலை மிகுதி.

குறுவிசாரம் kuṟu-vicāram, *n.* < id. +. See குறுவசனம்.

குறுவியர் kuṟu-viyar, *n.* < id. +. Slight perspiration. See குறுவேர்வை. குறுவியர் பொடித்த கோலவாண் முகத்தன் (மணி. 18, 40).

குறுவிரியன் kuṟu-viriyaṉ, *n.* < id. +. Short viper; விரியன்பாம்பிற் சிறியவகை. (M. M.)

குறுவிலை kuṟu-vilai, *n.* < id. +. Scarcity, dearth; விலைக்குப் பண்டங்கள் அருமையாகக் கிடைக்கை. (W.)

குறுவிழிக்கொள்(ளு)-தல் kuṟu-viḻi-k-koḷ-, *v. intr.* < id. +. To close, as eye-lids, flowers; இதழ்குவிதல். குவளையஞ்சிக் குறுவிழிக்கொள்ளும் வாட்கண் (சீவக. 2998).

குறுவிழிவிழி-த்தல் kuṟu-viḻi-viḻi-, *v. intr.* < id. +. To stare, look intently through anger or fear; கோபம் பயம் முதலியவற்றல் வெறித்துப் பார்த்தல்.

குறுவீற்று kuṟu-v-īṟṟu, *n.* < id. + ஈன்-. Cow that calves frequently; அடுத்தடுத்து ஈனும் பசு. *Loc.*

குறுவேர்[1] kuṟu-vēr, *n.* <id.+வேர். [T. *kuruvēru.*] Black cuscus grass, *Anathereum muricatum*; ஒருவகை வாசனைவேர். (M. M. 255.)

குறுவேர்[2] kuṟu-vēr, *n.* <id.+வேர்-. See குறுவேர்வை.

குறுவேர்வை kuṟu-vērvai, *n.* <id.+. Slight perspiration through fear or any strong emotion; அச்சம் முதலியவற்றாற் சிறிதாகத்தோன்றும் வியர்வை. *முகங் குறுவேர் பொடித்த வாறும்* (திருவாச. 6, 57).

குறுவை kuṟuvai, *n.* [M. *kuṟuva.*] *Loc.* 1. A dark species of paddy sown in *Vaikāci* and reaped in two months; வைகாசியில் விதைத்து இரண்டுமாதத்தில் அறுவடையாகும் கறுப்புநெல்வகை. 2. An inferior reddish paddy, maturing in three months; மூன்றுமாதத்திற் பயிராகும் ஒருவகைச் செந்நெல்.

குறுவைநோவு kuṟuvai-nōvu, *n.* Malignant sore throat, a disease of cattle; கால்நடை கட்குத் தொண்டையில் உண்டாகும் நோய்வகை. (M. Cm. D. [1887] 248.)

குறை[1]**-தல்** kuṟai-, *4 v. intr.* [K. *koṟe*, M. *kuṟayu.*] 1. To diminish, decrease, abate, wane, dwindle, decline; சிறுகுதல். *மன்னுயிர்கண் முற்று காடொறுங் குறைந்தவன்றே* (கந்தபு. மேரு. 28). 2. To be reduced, in value, in estimation, in circumstances, in rank; மதிப்பு இடம் பொருள் ஏவல்முதலியவற்றால் தாழ்தல். *அவன் பெருமை குறைந்துவிட்டது.* 3. To be wanting; to prove insufficient; to be short, in weight, measure, or number; பற்றமற் போதல். *சாமான்வாங்கக் கையிற் பணங் குறைவாயுள்ளது.* 4. To be imperfect, unfinished, defective, deficient; அரைகுறையாதல். *இது குறை வேலை.* 5. To be dear, difficult of attainment, scarce; விலையேறும்படி பண்டம் அருகுதல். 6. (Gram.) To be dropped, elided, as a letter; எழுத்துக்கெடுதல். *ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே* (நன். 156). 7. To droop in affliction; வருந்தி உயிரோடுங்குதல். *கணவன் குறையக்குறைவாள்* (கம்பரா. நகர்நீங். 53). 8. To languish from worries; குறைவுற்று வருந்துதல். *நாளுமிகும் பணிசெய்து குறைந்தடையு நன்னாளில்* (பெரியபு. திருநாவு. 45). 9. To lose courage; தைரியங்குன்றுதல். *அரிகுரலோசையஞ்சி . . . ஆனை குறையுமனமாகி* (தேவா. 883, 9). 10. To be cut off; வெட்டப்படுதல். *கையுறிற் கால்குறையும்* (நாலடி, 84). 11. To suffer defeat; தோல்வியுறுதல். *எத்தனைபோரிடைக் குறைந்தான்* (கம்பரா. யுத். மந்திரப். 112). 12. To be ruined, destroyed; அழிதல். *அன்னார்குறைவது சாதம்* (கம்பரா. நிந்தனை. 56).

குறை[2]**-த்தல்** kuṟai-, *11 v.tr.* Caus. of குறை[1]-. [M. *kuṟekka.*] 1. To lessen, shorten, curtail; சுருக்குதல். *செலவைக் குறைத்தான்.* 2. To cut, fell, hew down; தறித்தல். *மாந்தர் குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து மறைக்குமாங் கண்டீர் மரம்* (வாக்குண். 30). 3. To reap, as a crop; அறுத்தல். *கதிர்ச்சாலி குறைக்குநர்* (காஞ்சிப்பு. இருபத். 60). 4. To file; அராவுதல். *இருப்பரங்குறைத்திடு மெஃகவேல்* (கந்தபு. கடவுள். 12). 5. To draw, as water; முகத்தல். *மேகந்தான் அதனைக்குறைத்து அதன்கட் பெய்யாதுவிடுமாயின்* (குறள், 17, உரை).

குறை[3] kuṟai, *n.* <குறை[1]-. [T. *koṟa*, K. *koṟe*, M. *kuṟa.*] 1. Deficiency, imperfection, want, default; குறைபாடு. *குறைதவிர் நிலைமையாற் குயிற்றுஞ் சாலையுள்* (கந்தபு. வரைபுனை. 20). 2. Fault, defect, flaw; குற்றம். *என்பாற் குறையை நினைந்து மருளுது* (தஞ்சைவா. 388). 3. Indigence, poverty; வறுமை. (பிங.) 4. Complement, balance, arrears, remainder; எஞ்சியது. *நிறைதவத்தின் குறை முடித்து* (கம்பரா. சூர்ப்ப. 114). 5. Dissatisfaction, grievance; மனக்குறை. *என்ன குறை நமக்கே* (திவ். திருவாய். 6, 4, 1). 6. Vow requiring fulfilment; பிரார்த்தனைக்கடன். *திருப்பதிக்குக் குறைசெலுத்தப்போனேன்.* 7. That which is indispensable; இன்றியமையாப்பொருள். *வினைக்குறை தீர்ந்தாரின்* (குறள், 612). 8. Business that has to be done; காரியம். *கொற்றநீ கொடுக்கல் வேண்டுங் குறையென* (சீவக. 1647). 9. Request; வேண்டுகோள். *எம்மனந் தெளியக்காட்டுதல் குறையென* (பெருங். மகத. 15, 37). 10. Needs; வேண்டுவது. *உறைசிறியாருண்ணடுங்க லஞ்சிக் குறைபெறின்* (குறள், 680). 11. Piece, section; துண்டம். *கருப்புக்குறையும்* (சேதுபு. முத்தீர். 18). 12. Small isle, ait in a river; ஆற்றிடைக்குறை. *குறையெவாஞ் சோலை* (கம்பரா. பூக்கொய். 2). 13. (Gram.) Omission of a letter, as syncope, apocope, aphæresis; சொல்லின் எழுத்துக்குறை. *கடைக்குறை* (நன். 156). 14. (Gram.) Genitive case; ஆறாம்வேற்றுமை. *விளிகுறை யிரண்டையும் விட்ட வேற்றுமைகள்* (இலக். கொத். 14). 15. Piece of flesh, as prepared for table; உண்ணுதற்குப் பக்குவப் படுத்திய தசை. *வல்லோ னட்ட பல்லூன் கொழுங்குறை* (பெரும்பாண். 472). 16. A kind of vocal music; ஒரு தாக்குடைய மிடற்றுப்பாடல்வகை. *நிறைகுறை தோன்ற* (பரிபா. 17, 18). 17. Tribute, revenue; அரசிறை. (W.)

குறைக்கருமம் kuṟai-k-karumam, *n.* <குறை+. See குறைக்காரியம். *உறுகுறைக்கருமம் உள்ளக மருங்கின்* (பெருங். இலாவாண. 10, 27).

குறைக்காரியம் kuṟai-k-kāriyam, *n.* <id.+. 1. Unfinished part of a business, affair, etc.; காரியத்தின் முடியாத பகுதி. 2. Half-finished work or business; அரைகுறையாயிருக்குங் காரியம்.

குறைக்கொள்ளி kuṟai-k-koḷḷi, *n.* <id.+. 1. [K. *koṟakoḷḷi.*] Fire-brand partially consumed; பாதிவெந்த கட்டை. 2. Imp that is believed to set fire to houses; வீடுகளில் தீவைப் பதாகக் கருதும் ஒருவகைப் பிசாசு. *Loc.*

குறைகுடம் kuṟai-kuṭam, *n.* <குறை[1]-+. Lit., a pot half-filled with water. A self-conceited person, lacking in sound education and good manners, opp. to *niṟai-kuṭam;* கல்வி கேள்விகளால் நிரம்பாதோன். *அவன் ஒரு குறைகுடம்.*

குறைகொள்(ளு)-தல் kuṟai-koḷ-, *v. intr.* <குறை+. 1. To take a thing amiss; to be piqued; to feel aggrieved; to complain; மனக் குறையைப் பாராட்டுதல். 2. To represent one's wants, needs; தன்குறையைக் கூறிக்கொள்ளுதல். *மந்திரி குறைகொண்டிரப்ப* (பெருங். மகத. 21, 104).

குறைகோள் kuṟai-kōḷ, *n.* <id.+. Begging, petitioning, mendicancy; யாசிக்கை. (சூடா.)

குறைச்சல் kuṟaiccal, *n.* <குறை[1]-. *Colloq.* 1. [K. *koṟaṭe,* M. *kuṟaccal.*] Deficiency; scarcity, as of an article; curtailment; குறைவு. *அவனுக்குச் செலவு குறைச்சல்.* 2. Discredit, disparagement; இழிவு. *என்னைப்பற்றிக் குறைச்சலாய்ப் பேசினான்.*

குறைச்சால் kuṟai-c-cāl, *n.* <குறை+. Balk in ploughing; உழவுநிலத்தில் சாலோடாத இடம். (W.)

குறைசெய்-தல் kuṟai-cey-, *v. tr.* <id. +. 1. To treat with disrespect; மரியாதைத் தாழ்வு பண்ணுதல். 2. To cut off, disfigure by cutting off; வெட்டுதல். *எனைச்செங்கை தீண்டிக் குறைசெய்து போவதுவோ* (கந்தபு. அசமுகிபுலம். 10).

குறைசொல்(லு)-தல் kuṟai-col-, *v. intr.* <id.+. 1. To complain, state grievances, pray for redress, express dissatisfaction; மனத்திலுள்ள குறையைப் பிறரறியக் கூறுதல். 2. To represent one's wants; தனக்கு வேண்டுவனவற்றைச் சொல் லிக்கொள்ளுதல். 3. To charge with fault, censure, criticise, blame; குற்றஞ்சாட்டுதல்.

குறைஞ்சால் kuṟai-ñ-cāl, *n.* <id.+. See குறைச்சால். (யாழ். அக.)

குறைத்தலை kuṟai-t-talai, *n.* <id.+. Headless body, believed to dance on the battle-field; தலையில்லாத பிணம். *குரக்குபட மேதினிகுறைத்தலை பட* (கம்பரா. யுத்த. மந்திரப். 61).

குறைதீர்-தல் kuṟai-tīr-, *v. intr.* <id.+. 1. To have wants supplied, to be satisfied; மனக்குறை நீங்குதல்.—*குறைதீர்ந்த கொடையேய பகையை யுறவாக்கும்* (காஞ்சிப்பு. புராணவர. 15). 2. To be finished, completed; முற்றுப் பெறுதல். *Loc.*

குறைநய-த்தல் kuṟai-naya-, *v. intr.* <id. +. See குறைநேர்-. *கொலைவேற்கண்ணி குறைநயத்து* (திருக்கோ. 158, கொளு).

குறைநரம்பு kuṟai-narampu, *n.* <குறை[1]- +. Lit., lute with less than the normal number of strings. A musical mode deficient in notes, opp. to *niṟainarampu;* குறைந்த ஸ்வர முள்ள யாழ்த்திறம். (திவா.)

குறைநாள் kuṟai-nāḷ, *n.* <குறை+. Remaining portion of the day, month, year or life-time; நாள் மாதம் வருஷம் ஆயுள் இவற்றில் மீதியிருக்குங் காலம். *குறைநாளும் கழிக்கவேணும்.*

குறைநிறை kuṟai-niṟai, *n.* <id.+. 1. Defect and excess; ஏற்றக்குறைவு. 2. Domestic wants and comforts; குடும்பத்திலுள்ள சௌகரிய அசௌ கரியங்கள்.

குறைநேர்-தல் kuṟai-nēr-, *v. intr.* <id. +. To consent to make up one's wants; குறையைநீக்க உடன்படுதல். *முனியுமக் குறைநேர்ந் தான்* (பாரத சம்ப. 10).

குறைநோய் kuṟai-nōy, *n.* <குறை[2]-+. Leprosy, as eating away one's limbs; குஷ்ட ரோகம்.

குறைப்பக்கம் kuṟai-p-pakkam, *n.* <குறை +. Dark fortnight, period of waning moon; தேய்பிறை நாள்.

குறைப்பட்டவர் kuṟai-p-paṭṭavar, *n.* <குறைப்படு-. Lit., persons bereaved of their near relations. Persons who have suffered great affliction; குடும்பத்தில்நேர்ந்த சாவுமுதலியவற்றால் துக்கப்பட்டவர்.

குறைப்பட்டவள் kuṟai-p-paṭṭavaḷ, *n.* <id.+. Widow; கைம்பெண்.

குறைப்படு-தல் kuṟai-p-paṭu-, *v. intr.* <குறை+. To be displeased, discontented; மனக் குறை யுறுதல். *குறைப்பட்டுக்கொண்டிருக்கிறான்.*

குறைப்பிணம் kuṟai-p-piṇam, *n.* <id.+. Half-burnt corpse; அரைகுறையாய் எரிந்துகிடக்கும் சவம். *குய்ம்மனத்தாளர் குறைப்பிணங்காட்டி* (பெருங். இலாவாண. 19, 7).

குறைப்பிராணன் kuṟai-p-pirāṇaṉ, *n.* <id. +. Life almost extinct; குற்றுயிர்.

குறைப்பிள்ளை kuṟai-p-piḷḷai, *n.* <id.+. Undeveloped foetus delivered before time; பருவம்நிரம்புமுன்பெற்ற கருப்பிண்டம். *அவள் குறைப் பிள்ளை பெற்றாள்.*

குறைப்பேர் kuṟai-p-pēr, *n.* <id.+. 1. Other persons, rest, as of a company; மற்றவர். *நீ வந்தாயே, குறைப்பேரெல்லாம் எங்கே? Colloq.* 2. Abbreviated name, as கிட்டு for கிருஷ்ணன்; சுருக்கிக்கூறும் இயற்பெயர். *Loc.*

குறைபடு[1]-தல் kuṟai-paṭu-, *v. intr.* <id. +. 1. To be wanting; to diminish; to become scarce; குறைவாதல். 2. To be broken in pieces; to be shivered into fragments; துணிபடுதல். *நீர் கல்குறைபட வெறிந்து (பரிபா. 20).*

குறைபடு[2]-த்தல் kuṟai-paṭu-, *v.* Caus. of *குறைபடு[1]-. intr.* To fail in rendering what is due; to cause deficiency; குறைவுண்டாக்குதல். —*tr.* 1. To draw up, as water by the clouds; முகத்தல். *கடல் குறைபடுத்த நீர் (பரிபா. 20).* 2. To put one to shame; அவமானப்படுத்துதல். *Colloq.*

குறைபாடு kuṟai-pāṭu, *n.* <*குறைபடு[1]-*. 1. Deficiency, defect; குறைவு. *ஈசன்பூசை யியற்றி னேன் குறைபாடின்றி (பிரமோத். 17, 19).* 2. Want, need, discontent; மனக்குறை.

குறைமகன் kuṟai-makaṉ, *n.* <*குறை* +. One who has lost his status in life; நிலைமை யிழந்த வன். *செல்வந்த்த குறைமகன் (பெருங். இலாவாண. 8, 32.)*

குறைமதி kuṟai-mati, *n.* <*குறை[1]-* +. Waning moon; தேய்பிறை. *குறைமதிநீரோ நின்போராற் றல் (கந்தபு. அசமுகிபு. 11).*

குறைமாதக்காரி kuṟai-māta-k-kāri, *n.* <id. +. Woman who has given birth to a child prematurely; மாதவளவு நிரம்புமுன் பிரசவித்தவள்.

குறைமாதப்பிள்ளை kuṟai-māta-p-piḷḷai, *n.* <id. +. Child born prematurely; மாதவளவு நிரம்புமுன் பிறந்த பிள்ளை.

குறைமாதம் kuṟai-mātam, *n.* <id. +. 1. Remaining part of the month; மாதத்தின் மிச்சம். 2. Deficiency in the period required for the full development of foetus, as in premature delivery; கருமுற்றிப் பிரசவித்தற்குரிய காலவளவிற் குறைவுபட்ட மாதம்.

குறையணிகொள்(ளு)-தல் kuṟai-y-aṇi-koḷ-, *v. intr.* <*குறை* +. To be imperfectly dressed or adorned; அரைகுறையாக அலங்கரித்துக்கொள்ளுதல். *குறையணி கொண்டவாறே (சீவக. 2537).*

குறையரவு kuṟai-y-aravu, *n.* <*குறை[1]-* + *அரவு*. A kind of serpent, as being short. See குக்குடசர்ப்பம். *குறையரவு தீண்டி (சீவக. 1271).*

குறையலாளி kuṟaiyal-āḷi, *n.* <*குறையல்* + *ஆள்-*. Tirumaṅkai-y-āḻvār, as the chief of Kuṟaiyal. See திருமங்கைமன்னன். *மங்கையர்கோன் குறையலாளி (திவ். பெரியதி. 4, 4, 10).*

குறையவை kuṟai-y-avai, *n.* <*குறை[1]-* + *அவை*. Assembly of inferiors, opp. to *niṟai-y-avai*; அறிவுகுணங்களாற் குறைவுபட்டார் கூடியசபை. *(யாப். வி. 96, 515.)*

குறையறு[1]-தல் kuṟai-y-aṟu-, *v. intr.* <*குறை* +. To be freed from wants, anxiety, etc.; மனக்குறை நீங்குதல்.

குறையறு[2]-த்தல் kuṟai-y-aṟu-, *v. tr.* Caus. of *குறையறு[1]-*. To bestow liberally and free one from wants, anxiety, etc.; குறைநீங்கக் கொடுத்தல். *சோறுந் தண்ணீருங் குறையறுத்துக்கொண்டிருக்குமா போலே (ஈடு, 9, 3, 1).*

குறையாக்கேள்வி kuṟaiyā-k-kēḷvi, *n.* <*குறை-* + *ஆ* neg. +. Perfect learning, sound erudition; நிரம்பிய ஞானம். *குறையாக்கேள்வி மாடலன் (சிலப். 28, 111).*

குறையிர-த்தல் kuṟai-y-ira-, *v. tr.* <*குறை* +. To beg, supplicate, petition for one's wants; தன்குறைகூறி வேண்டுதல். *மாலைக் குறையிரந்து (திவ். இயற். 2, 17).*

குறையுடல் kuṟai-y-uṭal, *n.* <*குறை[1]-* +. Headless body believed to dance on the battle-field; தலையிலாத உடல். *குறையுடலுங் கும்பிட்டு நிற்குமாலோ (கலிங். 97).*

குறையுறவு kuṟai-y-uṟavu, *n.* <*குறை* + *உறு-*. Being in distress; மனக்குறை கொண்டிருக்கை. *தோழியிடைச் சென்று . . . பின்னுங் குறையுறவு தோன்றநின்று (திருக்கோ. 90, அவ.).*

குறையுறு-தல் kuṟai-y-uṟu-, *v. tr.* <id. +. To beg, entreat, supplicate for one's wants; குறைகூறி வேண்டுதல். *இரந்து குறையுற்ற கிழவனை (தொல். பொ. 237).*

குறைவயிறு kuṟai-vayiṟu, *n.* <*குறை[1]-* +. Stomach inadequately fed; குறையாக உண்ட வயிறு. *அரைவயிறு குறைவயிறாக உண்பவன். Colloq.*

குறைவாளர் kuṟai-v-āḷar, *n.* <*குறைவு* + *ஆள்-*. Persons in want; குறைவுடையவர். *மாதா பிதாக்கள் ப்ரஜைகளில் குறைவாளர்பக்கலிலேயிறே இரங்குவது (ஈடு, 4, 5, 8).*

குறைவில் kuṟai-vil, *n.* <*குறை* +. Rainbow; வானவில். *வானத்துக் குறைவி லேய்ப்ப (பெரும்பாண். 292).*

குறைவிலறிவுடைமை kuṟaivil-aṟivuṭaimai, *n.* <*குறைவு* + *இல்* neg. +. Possession of unlimited wisdom, one of *iṟaivaṉ-eṇ-kuṇam*, q.v.; குறைவில்லாத அறிவைக் கொண்டிருக்கையாகிய இறைவனெண்குணத்துள் ஒன்று. (பிங்.)

குறைவு kuṟaivu, *n.* <*குறை[1]-*. [M. *kuṟavu.*] 1. Lack, want, deficiency, dearth, limit; குறைபாடு. *நாடக நடித்ததோ குறைவில்லை (தாயு. எங்குநிறை. 5).* 2. Defect; default; குற்றம். 3. Little, small quantity; குறைந்த அளவுள்ளது. 4. Indigence, poverty; தரித்திரம். (திவா.) 5. Use, value, pro-

fit; காரியபலன். மாறுளன் கவராத மணிமாமை குறைவிலமே (திவ். திருவாய். 4, 8, 1).

குறைவேண்டுநர் kuṟai-vēṇṭunar, *n.* <குறை+. Persons petitioning for their wants; அனுகூல காரியங்களை விரும்புவோர். முறை வேண்டுநர்க்குங் குறைவேண்டுநர்க்கும் (பெரும்பாண். 443).

குறோக்கை kuṟōkkai, *n.* [T. *guraka.*] Snoring; குறட்டை. குறங்கு குத்திக்கொண்டு குறோக்கை கத்தி (ஒழிவி. யோக. 10).

குறோட்டை kuṟōṭṭai, *n.* (மலை.) 1. Mussell-shell creeper. See காக்கணம். 2. See பீச்சுவிளாத்தி.

குன்மக்கட்டி kuṉma-k-kaṭṭi, *n.* <*gulma*+. Glandular enlargement in the abdomen, tumour; வயிற்றில் உண்டாகும் ஒருவகைக் கட்டி.

குன்மக்குடோரி kuṉma-k-kuṭōri, *n.* <id.+*kuṭhāra*. A water-plant capable of curing chronic dyspepsia; குன்மத்தைப் போக்கவல்ல ஒருவகை நீர்ப்பூடு. (பதார்த்த. 244.)

குன்மசூலை kuṉma-cūlai, *n.* <id.+. See குன்மம், 1. (இங். வை.)

குன்மப்புரட்டு kuṉma-p-puraṭṭu, *n.* <id.+. Chronic dyspepsia, acute pain attending the *kuṉmam* disease causing vomiting; குன்மத்தால் வாந்தியுண்டாக்கும் வயிற்றுநோய்வகை. (J.)

குன்மம் kuṉmam, *n.*<*gulma*. 1. Chronic dyspepsia; glandular enlargement in the abdomen, as of the mesenteric gland, causing indigestion, colic and emaciation; அசீரணம் வயிற்றுவலி முதலியன காணும் வயிற்று நோய். (சீவரட்.) 2. A division of an army consisting of 9 elephants, 9 chariots, 27 horses and 45 foot soldiers; 9 யானை, 9 தேர், 27 குதிரை, 45 பதாதி கொண்ட படைவகுப்பு. (சூடா.) 3. Dense thicket, bush; அடர்ந்த தூறு. (சூடா.)

குன்மவலி kuṉma-vali, *n.* <id.+. Colic pains or gripes consequent on chronic dyspepsia; குன்மத்தால்வரும் வயிற்றுவலி. (W.)

குன்மவாயு kuṉma-vāyu, *n.* <id.+. Flatulency connected with chronic dyspepsia; குன்மத்தோடுகூடிய வாயு.

குன்றக்கூறல் kuṉṟa-k-kūṟal, *n.* <குன்று-+. Incomplete statement, a defect in composition, one of ten *nūr-kuṟṟam*, q.v.; பத்துவகை நூற்குற்றங்களுள் கூறவேண்டியதைக் குறைவுபடச் சொல்லுகையாகிய குற்றம். (தொல். பொ. 664.)

குன்றத்துச்சித்தி kuṉṟattu-c-citti, *n.* <குன்றம்+. A mineral poison; தாலம்பபாஷாணம். (W.)

குன்றம் kuṉṟam, *n.* <குன்று. [T. *konda*, K. Tu. *gutta*, M. *kunnam*.] Hill, mountain; மலை. பொதியிற் குன்றத்துக் கற்கால் கொண்டு (சிலப். 25, 122).

குன்றர் kuṉṟar, *n.* <id. See குன்றவாணர். குன்றர் முழங்குங் குரவை (திருக்கோ. 127).

குன்றல் kuṉṟal, *n.*<குன்று-. 1. Diminishing, decreasing; குறைகை. 2. (Gram.) Elision, omission; கெடுதல்விகாரம். மெய்பிறிதாதல் மிகுதல் குன்றலென்று (தொல். எழுத். 109).

குன்றவர் kuṉṟavar, *n.* <குன்று. See குன்றவாணர். (திவா.)

குன்றவாணர் kuṉṟa-vāṇar, *n.*<குன்றம்+. Mountaineers, inhabitants of the hilly tract; குறிஞ்சிநிலமாக்கள். இருங்குன்றவாண ரிளங்கொடியே (திருக்கோ. 15).

குன்றவில்லி kuṉṟa-villi, *n.* <id.+. Śiva, as having Mt. Mēru for His bow; [மேருமலையை வில்லாகக்கொண்டவன்] சிவன். (திவா.)

குன்றாவாடை kuṉṟā-vāṭai, *n.* perh. குன்று+ஆம்+. North-east wind, dist. fr. *kuṉṟu-vāṭai*; வடகீழ்காற்று. *Loc.*

குன்றி kuṉṟi, *n.* prob. குன்று-. [M. *kunni.*] 1. Crab's eye, m. cl., *Abrus precatorius;* குன்றிச்செடி. 2. See குன்றிமணி, 1. 3. See குன்றிமணி, 3. குன்றுவ குன்றியனைய செயின் (குறள், 965). 4. A mineral poison; மனோசிலை. (W.)

குன்றிநிறக்கண்ணன் kuṉṟi-niṟa-k-kaṇṇaṉ, *n.* <குன்றி+. 1. One whose eyes are as red as the *kuṉṟi;* குன்றிமணிபோற் சிவந்த கண்ணுடையவன். (W.) 2. Indian wild hog, *Sus indicus*, as having red eyes; [சிவந்தகண்களையுடையது] காட்டுப்பன்றி. (W.)

குன்றிமணி kuṉṟi-maṇi, *n.* <id.+. 1. The red seed of crab's eye; குன்றிச்செடியின் சிவப்பு விதை. 2. Crab's eye. See குன்றி, 1. 3. A standard weight for gold = 4 paddy grains = 2 gr. troy = ½ *mañcāṭi* = $\frac{1}{32}$ pagoda; 4 நெல் அல்லது ½ மஞ்சாடி யெடையுள்ள பொன்நிறுக்கும் நிறைவகை. (கணக்கதி.) 4. Liquorice plant. See அதிமதுரம். (W.)

குன்றிமணிச்சம்பா kuṉṟi-maṇi-c-campā, *n.*<குன்றிமணி+. A kind of reddish *campā* paddy; செந்நிறமுள்ள சம்பாநெல்வகை. (பதார்த்த. 319.)

குன்றியலுகரம் kuṉṟiyal-ukaram, *n.*<குன்று-+இயல்+. See குற்றியலுகரம். குறுதெறவென்னுங் குன்றிய லுகரமொடு (நன். 331).

குன்றிவேர் kuṉṟi-vēr, *n.* <குன்றி+. Liquorice root; அதிமதுரம். (தைலவ. தைல. 4.)

குன்று[1]**-தல்** kuṉṟu-, *5 v. intr.* cf. *kṣud.* [K. *kundu.*] 1. To decrease, diminish, become reduced; குறைதல். 2. To be ruined; அழிவடைதல். குன்ற முதகுன்றுடையான் (சிவப். பிரபந். பிக்ஷாட 2). 3. To fall from high position; நிலைகெடுதல். குன்றினனையாருங் குன்றுவர் (குறள், 965). 4. (Gram.) To be omitted, as a letter; எழுத்துக்கெடுதல். (தொல். எழுத். 109.) 5. [T. *kundu.*] To droop, languish; to be dispirited; வாடுதல். அவன் துயரத்தால் மனங்குன்றினன். 6. To become stunted; to be arrested in growth; வளர்ச்சியறுதல். சிறுகன்றுகளின் முதுகிற் கையைவைத்தாற் குன்றிவிடும்.

குன்று[2] kuṉṟu, *n.* <குன்று-. 1. [M. *kuṟu.*] Deficiency; குறைவு. (சூடா.) 2. [T. K. *koṇḍa*, M. *kuṉṉu.*] Hill; சிறுமலை. குன்றுமலை காடு காடு (புறநா. 17). 3. Mountain; மலை. (திவா.) 4. Hilltop; சிறு துவடு. (திருக்கோ. 95, உரை.) 5. The 24th *nakṣatra*; சதயம். (பிங்.)

குன்றுகூப்பிடு-தல் kuṉṟu-kūppiṭu-, *v. intr.* <குன்று+. To rouse the echoes of the hill by shouting in play; குன்றனது எதிரொலி செய்யுமாறு கூவி விளையாடுதல். (W.)

குன்றுபயன் kuṉṟu-payaṉ, *n.* prob. குன்று+. Clandestine union, as of lovers; களவொழுக்கம். கொள்ளாரிக் குன்றுபயன் (பரிபா. 9, 26).

குன்றுவர் kuṉṟuvar, *n.* <குன்று. 1. People of the hilly tract; mountaineers; குறிஞ்சிநில மக்கள். (தொல். பொ. 20, உரை.) 2. Name of the principal cultivating caste on the Palni hills; பழனிமலையிற் பயிரிட்டு வாழும் ஒரு சாதியார். (G. Mr. D. i. 103.)

குன்றுவாடை kuṉṟu-vāṭai, *n.* prob. id.+. cf. குண்ணவாடை. North-west wind, dist. fr. *kuṉṟā-vāṭai*; வடமேல் காற்று. *Naut.*

குன்றெறிந்தோன் kuṉṟeṟintōṉ, *n.* <id. +எறி-. Lit., one who clove a mountain with his lance. Skanda; [குன்றத்தைத் தனது வேலால் எறிந்தவன்] முருகக்கடவுள். (பிங்.)

குன்றைவில்லாக்கினோன் kuṉṟai-vil-l-ākkiṉōṉ, *n.*<id.+. Blue vitriol; துரிசு. (சங். அக.)

குன்னம் kuṉṉam, *n.* perh. குன்று-. cf. *kṣunna.* 1. Disgrace, dishonour; அவமானம். இங்கே யொருத்திநானிருந்ததே பெருங்குன்னம் (இராமநா.). 2. Scandal; பழி. கன்னிமேலே யெறிந்தாற் குன்னஞ் சொல்லாரோ (இராமநா. உயுத். 82).

குன்னல் kuṉṉal, *n.* <id. A cattle disease with cold and fever; குளிசுரத்தோடு மாட்டுக்குவரும் நோய். *Loc.*

குன்னா-த்தல் kuṉṉā-, *11 v. intr.* prob. கூன்+ஆக்கு-. To shrink and crouch with cold, to contract limbs and look small; குளிரால் உடம்பு கூனிப்போதல். (நெடுநல். 9, உரை.)

குனகு-தல் kuṉaku-, *5 v. intr.* To prattle sweetly; கொஞ்சிப்பேசுதல். குனகியவ ருடனிருந்து (திருப்பு. 20).

குனட்டம் kuṉaṭṭam, *n.* Atees. See அதிவிடையம். (மலை.)

குனட்டு kuṉaṭṭu, *n.* See குனஷ்டை. (W.)

குனட்டை kuṉaṭṭai, *n.* See குனஷ்டை. (W.)

குனஷ்டை kuṉaṣṭai, *n.* cf. *ku-naṣṭa.* [K. *kuniṣṭa*, M. *kuniṣṭam.*] *Colloq.* 1. Mischief, pranks; குறும்பு. 2. Unfavourable turn, as of a disease; வியாதி கொடியதாக மாறுகை.

குனா kuṉā, *n.* <U. *gunāh.* Fault, crime; குற்றம். (W.)

குனாசகம் kuṉācakam, *n.* <*kunāśaka.* Small climbing nettle. See சிறுகாஞ்சொறி. (மலை.)

குனாசம் kuṉācam, *n.* <*kunāśa.* Crab's eye. See குன்றி. (மலை.)

குனி[1]**-தல்** kuṉi-, *4 v. intr.* [T. *kuṅgu*, K. M. *kuni.*] 1. To bend, as a bow; வளைதல். குனிவளர் சிலை (சீவக. 486). 2. To bow, make obeisance; வணங்குதல். (சூடா.) 3. To stoop; to descend low; தாழ்தல். (சூடா.) குனிந்த வூசலிற் கொடிச்சி (கம்பரா. சித்திர. 24). 4. To fall, as in battle; வீழ்தல். குஞ்சரங் குனிய நூறி (சீவக. 2293). 5. To pity, commiserate, relent; இரங்குதல். (சது.)

குனி[2]**-த்தல்** kuṉi-, *11 v.* Caus. of குனி[1]-. *tr.* To bend, curve; வளைத்தல். குனித்த புருவமும் (தேவா. 11, 4).—*intr.* 1. To dance; ஆடுதல். அன்பரென்பூமுருகக் குனிக்கும் . . . பரன் (திருக்கோ. 11). 2. To quaver, quiver, shake, as the voice in singing; குரல் நடுங்குதல். (W.)

குனி[3] kuṉi, *n.* <குனி[1]-. [K. M. *kuni.*] 1. Curvature; வளைகை. குனிகொள் பாக வெண்மதி (சீவக. 704). 2. Bow; வில். (சது.)

குனிப்பாய்ப்பார்-த்தல் kuṉippāy-p-pār-, *v. tr.* <குனிப்பு+. Lit., to stoop and look. To look narrowly into a matter, pay special attention to; கவனமாக உற்றுப்பார்த்தல்.

குனிப்பு[1] kuṉippu, *n.* <குனி[1]-. Bending; வளைகை.

குனிப்பு[2] kuṉippu, *n.* <குனி[2]-. 1. Dance; ஆடல். ஆநந்தத் தேன்சொரியுங் குனிப்புடை யானுக்கே (திருவாச. 10, 3.) 2. A kind of dance; கூத்துவகை. (பிங்.)

குனிப்பு[3] kuṉippu, *n.* <குழிப்பு <குளிப்பு. A peculiar rhythm in verse. See தழிப்பு. (W.)

குனுகு-தல் kuṉuku-, *5 v. intr.* See துனகு-. (W.)

குனை kuṉai, *n.* cf. கொனை. The sharp point or tip of a thing; கூர்மையான பக்கம். பிரம்பின் குனைபடலால் (அஷ்டப். திருவரங். மா. 88).

குனைபுல்மேய்-தல் kuṉai-pul-mēy-, *v.intr.* <குனை + புல் +. To have a cursory or superficial study; மேலெழுந்தவாறாகப் படித்தல்.

குனைவண்டு kuṉai-vaṇṭu, *n.* A cotton pest; பருத்தியில்விழும் பூச்சிவகை. *Loc.*

குஜன் kujaṉ, *n.* <*ku-ja.* The planet Mars; செவ்வாய்.

குஜாரத்து kujārattu, *adv.* <U. *guzāra.* Through a person; கைவழி.

குஜிலி kujili, *n.* <U. *guzrī.* See குஜிலிக் கடை.

குஜிலிக்கடை kujili-k-kaṭai, *n.* <குஜிலி +. Evening bazaar; அந்திக்கடை. *Loc.*

குஜிலிப்பொட்டு kujili-p-poṭṭu, *n.* <id. +. Small round piece of thin glass stuck on the forehead by young girls; பெண்கள் நெற்றியில் இட்டுக்கொள்ளும் ஒருவகைக் கண்ணாடித் தகட்டுப் பொட்டு.

குஷ்கி kuṣki, *n.* <U. *khuṣkī* <*śuṣka.* Dry or unirrigated land, opp. to *tari*; காடாரம்ப மான நிலம். (C. G.)

குஷ்டம் kuṣṭam, *n.* <*kuṣṭha.* Leprosy; பெருவியாதி.

குஷ்டி kuṣṭi, *n.* Throw of number one in a game played with cowries, etc. See தட்சி, 2.

குஷால் kuṣāl, *n.* <U. *kuṣāl.* See குஷி.

குஷி kuṣi, *n.* <U. *khuṣi.* Gaiety, merriment; சந்தோஷம்.

குஸ்தி kusti, *n.* <U. *kuṣtī.* Wrestling; மல் யுத்தம்.

குஸ்தூர் kustūr, *n.* Seam between the planks of a boat; கப்பற்பலகைகள் சேருமிடத் துள்ள ஒட்டு. *Naut.*

குஹ்யம் kuhyam, *n.* <*guhya.* 1. That which needs to be hidden; மறைத்தற்குரியது. 2. Secret, mystery; இரகசியம்.

கூ

கூ[1] kū. Compound of க் and ஊ.

கூ[2] kū, *n.* <*ku.* Earth; பூமி. கூவின் றனைத்த குறளென்ப (வள்ளுவமா. 14).

கூ[3] kū, *n.* <கூவு-. cf. *kū.* [K. M. *kū.*] Cooing, as of a dove; கூவுகை. கோகிலங்கள் கூக் கொண்டு சேருங் குளிர்பிண்டியானை (திருநூற். 1).

கூ[4] kū, *n.* Corr. of கூழ். Porridge; கூழ். *Loc.*

கூக்குரல்[1] kū-k-kural, *n.* <கூ[3] +. [M. *kūkkural.*] 1. Shout, outcry, uproar, clamour; பேரொலி. நம்மேங்கு கூக்குரல் கேட்டுமே (திவ் திருவாய். 9, 5, 3). 2. Piteous cry, as in seeking redress; குறைதீர்க்கவேண்டி முறையிடும் நலி.

கூக்குரல்[2] kū-k-kural, *n.* <கூ onom +. Cry, as of children or koel; குழந்தைகள் கத்துவது போன்ற கூவென்னுஞ் சத்தம். குழவி யேங்கிய கூஉக் குரல் கேட்டு (மணி. 13, 17).

கூக்கேட்டல் kū-k-kēṭṭal, *n.* <கூ[3] +. Lit., responding to a call. Waiting one's command, serving; ஏவல் கேட்கை. காப்பொருவழித்தாய்க் கூக் கேட்ப (பு. வெ. 6, 31).

கூகம் kūkam, *n.* prob. *gūḍha.* The state of being hidden, disguised, secret; மறைவு. கூகமாய்ச் சொன்னான். *Loc.*

கூகனம் kūkaṉam, *n.* <*gūhana.* 1. A term of hidden significance; மறைந்த பொருளுடைய சொல். (W.) 2. Indecent term; அசப்பியமொழி.

கூகாகம் kū-kākam, *n.* <*gūvāka.* Areca-palm. See கமுகு. (மலை.)

கூகாவெனல் kū-kā-v-eṉal, *v.intr.* Onom. expr. signifying (*a*) bawling, screeching; பேரொலிக்குறிப்பு. கூகாவென வென்கிளை கூடியழ (கந்தரநு. 11): (*b*) complaining, lamenting; முறையிடு தற்குறிப்பு.

கூகூ kū-kū, *n.* Onom. Clamour, outcry; ஓர் ஒலிக்குறிப்பு. எற்றெழுந்த கூகூவொலித்திரள் (காஞ்சிப்பு. அரிசாப. 4).

கூகூவெனல் kū-kū-v-eṉal, *n.* Onom. See கூகாவெனல். நல்லடிக் கன்பாகாதவரெனக் கூகூ வென்று (வெங்கைக்கோ. 210).

கூகை[1] kūkai, *n.* cf. *ghūka.* Rock horned-owl, *Bubo bengalensis*; கோட்டான். கோழி கூகை யாயிரண் டல்லவை (தொல். பொ. 610).

கூகை[2] kūkai, *n.* East Indian arrowroot. See கூவை. கூகையுங் கோட்டமும் . . . பரந்து (சீவக. 1905).

கூகைக்கட்டு kūkai-k-kaṭṭu, *n.* <கூகை[1] +. Mumps, as making the face look like an owl; கூகைபோல முகத்தை வீங்கச்செய்வதான போன் னுக்கு வீங்கி என்னும் அம்மைக்கட்டு.

கூகைகுழறு-தல் kūkai-kuḷaṟu-, *v. intr.* <id. +. To hoot, as an owl; ஆந்தை ஒலித்தல்.

கூகைநீர்க்கட்டி kūkai-nīr-k-kaṭṭi, *n.* <id. +. See கூகைக்கட்டு. (W.)

கூகைநீறு kūkai-nīṟu, *n.* <கூகை² +. Arrow-root flour; கூவைமா. கூகைநீற்றுல் . . . மார்புநோ யண்டுமோ (பதார்த்த. 1013).

கூகைவீக்கம் kūkai-vīkkam, *n.* <கூகை¹ +. Mumps. See கூகைக்கட்டு. (W.)

கூச்சக்காரன் kūcca-k-kāraṉ, *n.* <கூச்சம்¹ +. 1. Shy, bashful, person; வெட்கப்படுபவன். 2. Ticklish person; உடற்கூச்சமுள்ளவன்.

கூச்சங்காட்டு-தல் kūccaṅ-kāṭṭu-, *v. intr.* <id. +. To tickle, titillate; உடற்கூச்சம் உண் டாக்குதல்.

கூச்சம்¹ kūccam, *n.* <கூசு-. [M. *kūccal.*] 1. Shyness, bashfulness, modesty, delicacy, shame; நாணுகை. கைதொழூஉங் கூச்சங் கைளேந்து (சைவச. ஆசாரிய. 68). 2. Ticklishness; உடல் கூசு கை. 3. Delicacy, as of an eye; unpleasant tingling, as of a tooth; கண் பல் முதலியன கூசு கை. 4. Hesitating, shrinking; மனமெழாமை. அந்தக் கொடியவனதுவீட்டிற் புகக் கூச்சம் உண்டாயிற்று. 5. Tremulousness, timidity, fear; அச்சத்தாலுண் டாகும் நடுக்கம். அவனைப் பார்க்கும்போதே கூச்ச மெடுக்கிறது. *Colloq.*

கூச்சம்² kūccam, *n.* [T. *gutjju*, K. *kūcu.*] Small-sized post, used in building; கட்டடத்திற்கு உதவும் சிறு மரக்கட்டை. *Loc.*

கூச்சல் kūccal, *n.* <கூவு-. cf. *kūja.* [T. *kūta.*] *Colloq.* 1. [K. *kūkalu.*] Outcry, clamour, hue and cry; பேரொலி. 2. Cholera; வாந்திபேதி. *Loc.*

கூச்சி kūcci, *n.* Pulp of wood-apple; விளாம் பழத்தின் சதை. (W.)

கூச்சிதம் kūccitam, *n.* See கூச்சிரம். (W.)

கூச்சிரம் kūcciram, *n.* Seaside Indian oak, *Barringtonia racemosa;* வெண்கடம்பு. (மலை.)

கூச்சு¹ kūccu, *n.* prob. கூர்-. cf. *kūrca.* [T. *kūci.*] Sharp point; கூரிய முனை.

கூச்சு² kūccu, *n.* <கூசு-. [M. *kūccu.*] Horripilation, bristling of the hair; புளகம். மயிர்க் கூச்சமறு (திவ். பெரியாழ். 5, 3, 5).

கூசம் kūcam, *n.* <id. Shyness; கூச்சம். பேசுமின் கூசமின்றி (திவ். திருவாய். 10, 2, 4).

கூசல்¹ kūcal, *n.* <id. [M. *kūšal.*] 1. Shyness; கூச்சம். பேசிமீர் கூசலின்றி (திருவாலவா. 27, 72). 2. Perplexity, confusion; மனக்குலைகை. (பிங்.) 3. Fear; அச்சம். (திவா.)

கூசல்² kūcal, *n.* <கூவு-. See கூச்சல்.

கூசா kūcā, *n.* <U. *kūzā.* A kind of goglet. See கூஜா.

கூசிப்பார்-த்தல் kūci-p-pār-, *v. tr.* <கூசு- +. See கூசிவிழி-.

கூசிவிழி-த்தல் kūci-viḻi-, *v. tr.* <id. +. 1. To look with dazzled eyes; கண்கூச்சத்துடன் நோக்குதல். 2. To look with eyes of grace; அரு ளுடன் பார்த்தல். (W.)

கூசு-தல் kūcu-, *5 v. intr.* cf. *kuc.* [M. *kūcu.*] 1. To be shy, bashful, coy; நாணுதல். அச்சமுங் கொண்டு கூசி (திருவிளை. திருநாட். 31). 2. To be ticklish; உடல் கூச்சங்கொள்ளுதல். 3. To be tender, weak, sensitive, as an eye, a limb; to be set on edge, as a tooth; கண் பல் முதலியன கூசு தல். காணக்கண் கூசுதே (தனிப்பா.). 4. To recoil, shrink back, as from fear; அஞ்சிப் பின்வாங்குதல். கூசினவல்ல பேச நாணின (கம்பரா. பூக்கொய். 6). 5. To be routed, as an army; நிலைகுலைதல். (பிங்.)

கூசுகண் kūcu-kaṇ, *n.* <கூசு- +. A kind of nearsightedness, causing one to keep the eyes nearly shut; இடுங்கப்பார்க்கும்படி செய்யும் கண்ணோய்வகை. (W.)

கூசுமாண்டர் kūcumāṇṭar, *n.* <*kūṣmāṇḍa.* (Śaiva.) Lord of hells; நரகலோகங்களுக்குத் தலைவர். கூசுமாண்டர் முப்பத்திரண்டு நரகங்களுக்கும் அதிபதியாய் (சி. போ. பா. 2, 3, பக். 204).

கூட்டக்கட்டு kūṭṭa-k-kaṭṭu, *n.* <கூட்டம்¹ +. Ties of blood, the bond of union among relations; ஒற்றுமையோடு உதவக்கூடிய சுற்றத்தார்ன் கட்டுப்பாடு.

கூட்டக்கலகம் kūṭṭa-k-kalakam, *n.* <id. +. Riot; சனங்கள் கூட்டமிட்டு விளைக்கும் கலகம்.

கூட்டக்கொள்ளை kūṭṭa-k-koḷḷai, <id. +. Dacoity; கூட்டமாகச்சேர்ந்து புரியுங்கொள்ளை.

கூட்டச்சாலை kūṭṭa-c-cālai, *n.* <id. +. Public road shaded with thickly grown trees on its sides, avenue; இருபக்கங்களிலுமுள்ள மரநெ ருக்கத்தால் நிழல்செறிந்த பாதை. (W.)

கூட்டடி kūṭṭaṭi, *n.* <id. +. Place in a salt-pan where salt is heaped up; அளத்தில் உப்பைக் குவியலாக இட்டிருக்கும் இடம்.

கூட்டத்தார் kūṭṭattār, *n.* <id. 1. Members of a tribe; ஒருவகுப்பினர். 2. Members of a society; ஒரு சமூகத்தின் அங்கத்தினர்.

கூட்டநாட்டம் kūṭṭa-nāṭṭam, *n.* Redupl. of கூட்டம்¹. Possibility of people gathering; சனங்கள் கூடுதற்குரிய நிலைமை.

கூட்டம்[1] kūṭṭam, *n.* <கூடு-. [T. *kūṭamu*, K. Tu. *kūṭa*, M. *kūṭṭam*.] 1. Union, combination, meeting; கூடுகை. 2. Crowd, flock, herd, clump, swarm, group; திரள். (திவா.) 3. Association, society, assembly, confederation; சபை. (பிங்.) 4. Kindred, relations, tribe; இனத்தார். 5. Friends, companions; நட்பினர். (சூடா.) 6. Class, kind, series, set, species, genus; வகை. (W.) 7. See கூட்டவணி. (திவா.) 8. Battle, fighting; போர். (திவா.) 9. Copulation, sexual intercourse; மெய்யுறு புணர்ச்சி. *எல்வளை யாள் கூட்டம் புணராமல்* (பு. வெ. 11, ஆண்பாற். 8). 10. Abundance, numerousness; மிகுதி. (W.) 11. Oil-cake; பிண்ணாக்கு. (அக. நி.)

கூட்டம்[2] kūṭṭam, *n.* <*kūṭa*. Summit of a mountain, peak; மலையுச்சி. (பிங்.)

கூட்டமை[1]**-தல்** kūṭṭamai-, *v. intr.* <கூட்டு- + அமை[1]-. To be mixed, as the ingredients of sandal paste; to be set in order, as the different parts of a musical instrument; பல வகை உறுப்புக்களும் சேர்ந்தமைதல். *கூட்டமை வனப்பிற் கோடபதிக்குரல்* (பெருங். வத்தவ. 3, 123).

கூட்டமை[2] kūṭṭamai, *n.* <id. +. Cooked vegetable food; கறிவர்க்கம். (பிங்.)

கூட்டமைதீ kūṭṭamai-tī, *n.* <id. +. Sacrifical fire at the wedding ceremony; மண வேள்வித்தீ. *கூட்டமை தீமுதற் குறையா நெறிமையின்* (பெருங். வத்தவ. 17, 113).

கூட்டமைவு kūṭṭamaivu, *n.* <கூட்டு + அமை[1]-. Residing together; கூடியிருக்கை. *அவனொடு பின்கூட்டமைவும்* (பெருங். இலாவாண. 17, 16).

கூட்டர் kūṭṭar, *n.* <கூடு-. [M. *kūṭṭar*.] 1. Companions; தோழர். 2. Members of the same clan or tribe; இனத்தார். *உன் கூட்டரா மரக்கர்* (கம்பரா. சடாயுவு. 84).

கூட்டரக்கு kūṭṭarakku, *n.* <கூட்டு- + அரக்கு. Red lac; செவ்வரக்கு. *கூட்டரக் கெறிந்த பஞ்சின்* (சீவக. 1166).

கூட்டரவு kūṭṭaravu, *n.* <கூடு- + அரவு suff. 1. Uniting, joining; கூடுகை. 2. Association, acquaintance; சகவாசம். *போதமிக்கவர் கூட்டரவு* (ஞானவா. முமுட். 25). 3. Collection, aggregate, series; பொருட்கூட்டம். (W.) 4. Combination, union; சேர்க்கை. *இவற்றின் கூட்டரவின் ஒருணர் வுண்டாம்* (சி. போ. பா. அவையடக். பக். 36).

கூட்டல் kūṭṭal, *n.* <கூட்டு-. 1. Uniting, joining; கூடுகை. 2. Seeking the alliance of powerful kings; வலிய அரசரது துணையைத் தேடுகை. *கூடினரைப் பிரித்தல் கூட்டல்* (பு. வெ. 9, 37, உரை). 3. (Arith.) Addition; எண்களை ஒன்றோடொன்று கூட்டுதலாகிய கணிதவகை.

கூட்டவணி kūṭṭa-v-aṇi, *n.* <கூட்டம்[1] + (Rhet.) A figure of speech which consists in enumerating together various actions or causes associated with some common object or result; ஒருகாலத்திலுண்டாகும் பலதொழில்களின் கூட்டத்தைக் கூறுவதாகவேனும் தனித்தனியே தொழிலை விளைத் தற்குரிய பல காரணங்கள் ஒன்றுகூடியதால் ஒரு தொழில் பிறப்பதாகக் கூறுவதாகவேனும் வரும் ஓரலங்காரம். (அணியி. 55.)

கூட்டவியல் kūṭṭaviyal, *n.* <கூட்டு + அவியல். A kind of curry in semiliquid form made of vegetables, curd, etc.; காய்கறிகள் தயிர் முதலியவற்றால் செய்யப்படும் ஒருவகைக் கூட்டுக்கறி.

கூட்டற்றவன் kūṭṭaṟṟavaṉ, *n.* <கூடு- + அறு[1]-. (W.) 1. One unfit for company; சேரத்தகாதவன். 2. Useless person; ஒன்றுக்கும் உதவாதவன். 3. Outcaste, excommunicated person; சாதிவிலக்குண்டவன்.

கூட்டாக்குழப்பம் kūṭṭā-k-kuḻappam, *n.* <கூட்டு- + ஆ neg. +. Confusion of things, disorder; தாறுமாறு. (W.)

கூட்டாஞ்சோறு kūṭṭāñ-cōṟu, *n.* <கூடு- + ஆம் +. *Loc.* 1. Common meal, as at a picnic; கூடியுண்ணும் உணவு. 2. Rice boiled with vegetables, etc.; கறிப்பதார்த்தங்கள் சேர்த்துப் பொங்கிய சோறு.

கூட்டாணி kūṭṭāṇi, *n.* <கூட்டு- + ஆணி. Nail for joining two or more pieces of wood; மரப்பலகை முதலியவற்றை இணைக்கும் ஆணி.

கூட்டாளன் kūṭṭāḷaṉ, *n.* <கூட்டு +. [M. *kūṭṭāḷan*.] See கூட்டாளி, 1, 2. *கூட்டாளா சிவ காமக்கொடிக்கிசைந்த கொழுநா* (அருட்பா, vi, அருள்வி. 14).

கூட்டாளி kūṭṭāḷi, *n.* <id. +. [M. *kūṭṭāḷi*.] 1. Associate, companion; சிநேகிதன். 2. Partner in trade, coparcener; பங்காளி. 3. Agent of a money-lending business; காரியஸ்தன். *C. N.* 4. Equal, compeer; உடனொத்தவன். *என் கூட்டாளி யானால் அக்காரியம் எளிதில் முடியும்.* 5. Fellow, one of a pair, as oxen, horses; ஜதையில் ஒன்று. (W.)

கூட்டிக்கட்டு-தல் kūṭṭi-k-kaṭṭu-, *v. tr.* <கூட்டு- +. 1. [M. *kūṭṭikkeṭṭu*.] To gather and tie together; சேர்த்துக் கட்டுதல். 2. To encroach on another's land; பிறர் நிலத்தைத் தன்னதாகச் சேர்த்துக்கொள்ளுதல்.

கூட்டிக்கொடு-த்தல் kūṭṭi-k-koṭu-, *v. tr.* <id. +. [M. *kūṭṭikkoṭu*.] 1. To give more, increase, add to; முன்னிருந்ததோடு சேர்த்துக்கொடுத்தல். 2. To play the pimp, pander; பெண்களை வியபிசாரத்திற்குக் கூட்டிவிடுதல்.

கூட்டிக்கொள்(ளு)-தல் kūṭṭi-k-koḷ-, *v. tr.* <id.+. 1. To take, admit one, as into society, company, etc.; கூட்டமுதலியவற்றில் சேர்த்துக்கொள்ளுதல். 2. To add ingredients, as in medicine, food, etc.; மருந்து உணவு முதலியவற்றில் வேண்டும் பொருள்களைச் சேர்த்தல். 3. To take in, as food; உணவு உட்கொள்ளுதல். *இன்று என்ன கூட்டிக்கொண்டாய்?*

கூட்டிப்பிடி-த்தல் kūṭṭi-p-piṭi-, *v. tr.* <id.+. 1. To hold together, as by the hand; சேர்த்துப்பற்றுதல். 2. To encroach upon, as another's lands; பிறர்க்குரிய நிலத்தைத் தன்னதாக்குதல். (W.) 3. To grasp too much, as in measuring cloth; துணிமுதலியவற்றை அதிகமாக அளப்பதற்கு இழுத்துப்பிடித்தல். (W.) 4. To receive and treat with kindness, as a repenting prodigal; ஒருவனை மன்னித்து ஏற்றுக்கொள்ளுதல். *Loc.*

கூட்டிப்போ-தல் kūṭṭi-p-pō-, *v. tr.* <id. +. To take along; கூட அழைத்துக்கொண்டு செல்லுதல்.

கூட்டிமுடி-த்தல் kūṭṭi-muṭi-, *v. tr.* <id. +. 1. To gather and tie, as the hair; கூந்தல் முதலியவற்றைச் சேர்த்துக்கட்டுதல். 2. To accomplish, achieve; முற்றுவித்தல்.

கூட்டியுரை-த்தல் kūṭṭi-y-urai-, *v. tr.* <id.+. To construe a sentence by importing into it a word or phrase from a neighbouring passage; ஒரு சொல்லை மற்றோரிடத்தும் சேர்த்துப் பொருள் கூறுதல். (புறநா. 140, உரை.)

கூட்டிவாசி-த்தல் kūṭṭi-vāci-, *v. tr.* <id. +. [M. *kūṭṭivāyikka.*] To read with difficulty, as letter by letter, to spell out words; எழுத்துக் கூட்டிப் படித்தல்.

கூட்டிவிடு-தல் kūṭṭi-viṭu-, *v. tr.* <id. +. 1. To send one along with another; கூட்டியனுப்புதல். 2. See **கூட்டிக்கொடு-**, 2. 3. See கூட்டிவை-, 3.

கூட்டிவை-த்தல் kūṭṭi-vai-, *v. tr.* <id.+. 1. To accumulate, lay up, hoard; சேர்த்துவைத்தல். 2. To bless with success; to bestow prosperity on one; வேண்டியன புரிந்து அநுகூலஞ் செய்தல். *கடவுள் உனக்குக் கூட்டிவைப்பார்.* 3. To effect reconciliation, as between hostile parties; மாறுபட்டாரை இணங்கிச் சமாதானப்படுத்துதல்.

கூட்டு[1]**-தல்** kūṭṭu-, *5 v.* Caus. of கூடு-. [M. *kūṭṭu.*] *tr.* 1. To unite, join, combine, connect; இணைத்தல். *திருவடிக்கட் கூட்டினை* (திவ். திருவாய். 4, 9, 9). 2. To compound, mingle, mix, amalgamate; கலத்தல். 3. To add, sum up; தொகைகூட்டுதல். 4. To increase; அதிகப்படுத்துதல். *பேசியதற்குமேல் வட்டி கூட்டித்தரவேண்டும்.* 5. To convene, convoke, as an assembly; சபை கூட்டுதல் 6. To gather up with a broom; துடைப்பத்தாற் பெருக்குதல். 7. To finish; முடித்தல். *கூறுமாக்கதை கூட்டுமுன்* (பிரமோத். 22, 23).—*intr.* To form, as pus; சீழ்முதலியன உண்டாதல். (J.)

கூட்டு[2] kūṭṭu, *n.* <கூட்டு-. [M. *kūṭṭu.*] 1. Persons or things of the same class; ஓரினமான பொருள். *மனுஷ்யர்களுக்குக் கூட்டலல்லர்* (ஈடு, 9, 8, 9). 2. Companionship, fellowship, friendship; சினேகம். *அம்புக்குங் காலனுக்குமென்ன கூட்டா* (இராமநா. உயுத். 31). 3. Assistance, help; துணை. *கூட்டொருவரையும் வேண்டா* (கம்பரா. வாலிவ. 81). 4. Relationship, consanguinity; உறவு. (W.) 5. See கூட்டுவியாபாரம். *Colloq.* 6. Horde, throng; திரள். *கொடியணிதேர்கூட்டணங்கும் போழ்தின்* (பு. வெ. 10, பொதுவியற். 2). 7. Illicit intercourse; பரஸ்திரீ கமனம். *கூட்டென்னத்தேறும் பஞ்சபாதகத்தை* (பிரமோத். 16, 35). 8. Likeness, comparison; ஒப்புமை. *மடங்கல் கூட்டறவெழுந்தெரி வெகுளியான்* (கம்பரா. அதிகாய. 1). 9. Compound, mixture; கலப்பு. 10. Curry stuffs ground together; கறிமசாலை. 11. [K. *kūṭu.*] Curry boiled in semiliquid form; கூட்டுக்கறி. 12. Clod, lump of moist clay; நீராற்பதப்பட்ட மண் திரள். *கூட்டுறமுறுக்கிவிட்ட குயமகன் றிகிரிபோல* (சீவக. 786). 13. A kind of lubricant for the wheels; வண்டிமுதலியவற்றின் சக்கரத்துக்கு இடும் மை. (சீவக. 786, உரை.) 14. Plenty, abundance; கொள்ளைப் பொருள். *புணர்கூட்டுண்ட . . . சிறப்பின்* (மதுரைக். 762). 15. Tribute; திறை. *தார்மன்னருங் கூட்டளப்ப* (பு. வெ. 8, 29). 16. Strip of cloth used as a waist-band; அரையிற்கட்டுந் துகிலாலாகிய அரைஞாண். *கூட்டு மகப்படக் கோவண செய்து* (பதினொ. நம்பியாண். திருத்தொண்டர்திருவந். 80). 17. Roof-frame, etc. of a house; வீட்டின் மேற்கோப்பு கீழ்க்கோப்பு முதலியன. *Loc.*

கூட்டுக்கச்சவடம் kūṭṭu-k-kaccavaṭam, *n.* <கூட்டு+. See கூட்டுவியாபாரம்.

கூட்டுக்கணக்கு kūṭṭu-k-kaṇakku, *n.* <id. +. (Arith.) Addition; கூட்டல்.

கூட்டுக்கறி kūṭṭu-k-kaṟi, *n.* <id.+. [M. *kūṭṭukari.*] A vegetable curry in semiliquid form; காய்கறியும் பருப்புங்கலந்து செய்த கறியுணவு. *கூட்டுக்கறியிலே கலந்த பேராசை* (அருட்பா, vi, அவாவறு. 4).

கூட்டுக்காரன் kūṭṭu-k-kāraṉ, *n.* <id.+. [M. *kūṭṭukāran.*] Partner, associate; கூட்டாளி.

கூட்டுக்கால் kūṭṭu-k-kāl, *n.* <id.+. Gallop; பாய்ந்தோடுகை. *குதிரை கூட்டுக்காலிற் செல்லுகிறது. Loc.*

கூட்டுக்கால்கட்டு-தல் kūṭṭu-k-kāl-kaṭṭu-, *v. intr.* <id.+. 1. To tie a beast's fore-legs together; விலங்கின் முன்னங்கால்களைக் கூட்

டிக் கட்டுதல். 2. To set up an additional prop as a support to a weak pillar; வலியற்ற தூணிற்கு முட்டுக்கொடுத்தல். *Loc.*

கூட்டுக்குடும்பம் kūṭṭu-k-kuṭumpam, *n.* <id.+. Joint family; பிரிவினையாகாத ஏககுடும்பம். *Loc.*

கூட்டுக்கூட்டு-தல் kūṭṭu-k-kūṭṭu-, *v. intr.* <id.+. To mix scents in preparing sandal paste; சந்தனத்தில் வாசனை சேர்த்தல். *Loc.*

கூட்டுண்(ணு)-தல் kūṭṭuṇ-, *v.* <id.+. *tr.* 1. To dine together, as at a feast; கூடியுண்ணுதல். வரிவண்டு பண்ணலங் கூட்டுண்ணும் (பு. வெ. 9, 49). 2. To enjoy to the full; முற்றும் அனுபவித்தல். என்னுண்ணலங் கூட்டுண்டான் (பு. வெ. 9, 49).—*intr.* 1. To accept tribute; திறைகொள்ளுதல். கொடித்திண்டேர் மன்னராற் கூட்டுண்டு வாழ்வார் (பழ. 266). 2. To have sexual intercourse; கலவிசெய்தல். கூட்டுண்டு நீங்கிய . . . கண்ணன் (திவ். திருவாய். 9, 5, 7).

கூட்டுத்தட்டு kūṭṭu-t-taṭṭu, *n.* <id.+. Tray with a set of compartments for holding curry powders; கறிக்குரிய அம்பாரப்பொடிகள் வைக்கும் பல அறைகளையுடைய தட்டு. (W.)

கூட்டுப்பங்கு kūṭṭu-p-paṅku, *n.* <id.+. Share in a partnership concern; வியாபாரத்தில் சேர்ந்துகொள்ளும் பங்கு. *Loc.*

கூட்டுப்படகு kūṭṭu-p-paṭaku, *n.* <id.+. Boats provided with movable tops, to carry about 16 passengers or cargo varying from 3 to 7 tons; 16 பிரயாணிகள் வரை செல்லுதற்கோ அல்லது 3 முதல் 7 டன்வரை சாமான்கள் ஏற்றுதற்கோ உதவுவதும் மேற்கூடுள்ளதுமான தோணிவகை. (M. M. 915.)

கூட்டுப்படை kūṭṭu-p-paṭai, *n.* <id.+. [M. *kūṭṭuppaṭa.*] Auxiliary force; துணைப்படை. (சூடா. 10, 3, 5.)

கூட்டுப்பயிர் kūṭṭu-p-payir, *n.* <id.+. Joint cultivation; பிறருடன் சேர்ந்துசெய்யும் சாகுபடி. *Loc.*

கூட்டுப்பல்லக்கு kūṭṭu-p-pallakku, *n.* <கூடு+. Palankeen with sliding doors; சோருகதவுள்ள பல்லக்கு.

கூட்டுமா kūṭṭu-mā, *n.* <கூட்டு+. Flour used in curry; கறியிற் சேர்க்கும்மா. *Loc.*

கூட்டுமாறு kūṭṭu-māṟu, *n.* <கூட்டு-+. Broom; விளக்குமாறு. *Loc.*

கூட்டுமூட்டு kūṭṭu-mūṭṭu, *n.* Redupl. of கூட்டு. (W.) 1. Combination and co-operation of persons for effecting an object; ஒரு காரியத்தை முடிப்பதற்குப் பலரும் கூடுகை. 2. League, confederacy, conspiracy; சதியாலோசனைக்கூட்டம். 3. Slander, aspersion, calumny; பழிப்புரை.

கூட்டுவண்டி kūṭṭu-vaṇṭi, *n.* <கூடு+. Cart with hood or curved top, opp. to *moṭṭai-vaṇṭi*; மேற்கூடுள்ள வண்டி. *Loc.*

கூட்டுவர்த்தகம் kūṭṭu-varttakam, *n.* <கூட்டு+. See கூட்டுவியாபாரம்.

கூட்டுவாய் kūṭṭu-vāy, *n.* <கூட்டு-+. Dovetail joint in a metal vessel, etc.; செம்புபாத்திரம் முதலியவற்றின் பொருத்து. *Loc.*

கூட்டுவான் kūṭṭuvāṉ, *n.* <id. [M. *kūṭṭuvāṉ.*] *Loc.* 1. Condiments; கறியிற் கூட்டப்படும் பதார்த்த வகைகள். 2. Curry; கறி.

கூட்டுவியாபாரம் kūṭṭu-viyāpāram, *n.* <கூட்டு+. Joint concern, partnership in trade; பலர்கூடிச்செய்யும் வர்த்தகம்.

கூட்டுறவு kūṭṭuṟavu, *n.* <id.+. 1. Intimate connection; நெருங்கிய சம்பந்தம். கொள்ளைவினைக் கூட்டுறவால் (அருட்பா, vi, அருள்விள. 84). 2. Friendship, alliance; சிநேகம்.

கூட்டுறவுச்சங்கம் kūṭṭuṟavu-c-caṅkam, *n.* <id.+. Co-operative society; ஐக்கிய நாணயசங்கம். *Mod.*

கூட்டெழுத்து kūṭṭeḻuttu, *n.* <id.+. 1. Cursive writing, running hand; விரைவாகக் கூட்டியெழுதும் எழுத்து. 2. Two or more letters written conjointly; பல எழுத்துக்களைச் சேர்த்தெழுதும் எழுத்து. 3. Conjunct consonants, as க்ஷ (kṣ); இரண்டுமுதலாகிய மெய்கள் இணைந்த வடவெழுத்து. (நன். 146, மயிலை.)

கூட்டை kūṭṭai, *n.* A kind of dance; ஒருவகைக் கூத்து. (அக. நி.)

கூட்டோடு kūṭṭōṭu, *adv.* <கூடு. Completely, root and branch; அடியோடு. கொன்றூன் காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ (திருவாச. 12, 16).

கூட kūṭa, <கூடு-. [T. K. Tu. *kūḍa*, M. *kūṭa.*] *adv.* 1. With, together with; உடன். கூட நின்று (குற்றா. தல. கவுற்சன. 65). 2. More than due, more than enough, in addition to; மேற்பட. நான்கேட்டதற்குக் கூடக்கொடுத்தான்.—*part.* A particle having the force of also, even; உம்மைப்பொருள்தரும் இடைச்சொல். பிரியமொடு பகையாளி கூட வுறவாகுவன் (குமரேச. சத. 67).

கூடகம் kūṭakam, *n.* <*kūṭa*. Fraud, deceit; வஞ்சகம். கூடகத்தொழில் செய்யுங் கொடியனை (குற்றா. தல. கவுற்சன. 65).

கூடகாரம் kūṭakāram, *n.* <*kūṭāgāra.* 1. Hall in the topmost floor of a house; மேன்மாடம். (இறை. 21, 112.) 2. Balcony; மாளிகையின் நெற்றிக்கூடு. (சீவக. 2328, உரை.)

கூடச்சித்திரி kūṭa-c-cittiri, *n.* prob. *gūḍha* + *chidra*. Square spurge. See சதுரக்கள்ளி. (சங். அக.)

கூடசதுக்கம் kūṭa-catukkam, *n.* <id. + *catuṣka*. See கூடசதுர்த்தம். (திவா.)

கூடசதுர்த்தம் kūṭa-caturttam, *n.* <id. + *caturtha*. Stanza of four lines in which the letters constituting the last line are all found among those of the first three lines; நான்காமடியிலுள்ள எழுத்துக்கள் யாவும் ஏனை மூன்றடிகளுள்ளும் மறைந்து நிற்குமாறு பாடப்பெறுஞ் சித்திரகவி. (தண்டி. 95.)

கூடசன் kūṭacaṉ, *n.* <*gūḍha-ja*. Son born secretly of a woman when her husband is absent, the real father being unknown, one of twelve *puttiraṉ*, q.v.; பன்னிரண்டுவகைப் புத்திரருள் கணவன் வீட்டிலில்லாத காலத்தில் இன்னானென் றறியப்படாத ஒருவனுக்கு ஒருத்தியிடம் தோன்றிய மகன்.

கூடசன்மலி kūṭa-caṉmali, *n.* <*kūṭa-śālmali*. A hell abounding in thorny red-silk-cotton; முள்ளிலவு நிரம்பிய நரகவகை. *கூடசன்மலிக் கும்பியிற் றள்ளி* (குற்றா. தல. கவுற்சன. 65).

கூடசாலம் kūṭa-cālam, *n.* prob. id. A hell, one of *eḻu-narakam*, q.v.; எழுநரகத்தொன்று. (சூடா.)

கூடத்தன் kūṭattaṉ, *n.* <*kūṭa-stha*. See கூடஸ்தன். *தம்முடைய கூடத்தர் கூறிய வாக்குக்களே* (சித். மரபுகண். 19).

கூடப்பிறப்பு kūṭa-p-piṟappu, *n.* <கூட + . Brother or sister; சகோதரம்.

கூடபாகலம் kūṭa-pākalam, *n.* <*kūṭa-pākala*. Bilious fever which elephants are subject to; யானைக்கு வரும் ஒருவகைக் கடுஞ்சுரநோய். *கூடபாகலந்தெளித்து மெல்லக் கயக் தெளிவுற்றதென்ன* (பாரத. பதின்மூ. 159).

கூடம்[1] kūṭam, *n.* <*kūṭa*. 1. House; வீடு. (பிங்.) 2. Drawing-room, hall; வீட்டின்கூடம். 3. Verandah; தாழ்வாரம். *Loc.* 4. Elephant-stall; யானைக்கூடம். *மதலைகட் டமைத்த தன்பழங்கூடம்* (கல்லா. 60, 22). 5. Top; மேலிடம். *கூடக் கூம்பு* (பெருங். உஞ்சைக். 40, 72). 6. Temple tower, palace tower; கோபுரம். (பிங்.) 7. Open space under trees, considered as a shrine; மன்றாக அமைந்த தேவகோட்டம். *கூடஞ்செய் சாரல்* (திருக்கோ. 129). 8. Blacksmith's sledge, hammer; சம்மட்டி. (பிங்.) 9. Mountain peak; மலையுச்சி. (பிங்.) 10. Shell supposed to envelop the world; அண்டகோளகை. (பிங்.) 11. Heap, multitude; திரள். (உரி. நி.)

கூடம்[2] kūṭam, *n.* <*gūḍha*. 1. Concealment, privacy, secrecy; மறைவு. (பிங்.) 2. Secret; anything hidden, concealed, mysterious; மறைபொருள். 3. Fraud, deception; வஞ்சகம். *கூடம் மடியோம்பு மாற்றலுடைமை* (ஏலா. 17). 4. Falsehood, untruth; பொய். *கூடசாட்சியார்* (வேதாரணி. நிரையவ. 18). 5. Dullness of tone in lute-strings; இசைவாராது ஓசைமழுங்கல். *செம்பகை யார்ப்பே கூட மதிர்வே* (சிலப். 8, 29).

கூடம்[3] kūṭam, *n.* 1. A mineral poison; கோளகபாஷாணம். (சங். அக.) 2. Sesame. See எள். (W.)

கூடம்பில் kūṭampil, *n.* cf. *tumbikā*. Calabash. See சுரை. (மலை.)

கூடரணம் kūṭaraṇam, *n.* <கூடு- + அரணம். Tiripuram. See திரிபுரம். *அழலுணச் சிறிய கூடரணம்* (பு. வெ. 5, 1).

கூடல் kūṭal, *n.* <id. 1. Joining, uniting; பொருந்துகை. (உரி. நி.) 2. Sexual union; புணர்ச்சி. *கூடற்கட் சென்றதென் னெஞ்சு* (குறள், 1284). 3. Mouth of a river; நதியின் சங்கமுகம். *மலியோதத் தொலிகூடல்* (பட்டினப். 98). 4. Confluence of rivers; நதிகள் ஒன்றோடொன்று கூடும் இடம். 5. Seeking; தேடுகை. (பிங்.) 6. (Akap.) Loops drawn on sand by a love-lorn lady for divining the safe arrival of her lord; தலைவனைப் பிரிந்தமகளிர் அவன்வரும் நிமித்தமறியத் தரையில் சுழிக்குஞ் சுழிக்குறி. *வசுதேவர்தம் கோமகன் வரிற்கூடிடு கூடலே* (திவ். நாய்ச். 3). 7. Madura; மதுரை. *கூடனெடுங்கொடி யெழவே* (கலித். 31). 8. Thick grove, commonly of palmyras; அடர்த்தியான தோப்பு. *செயலைக் கூடலே* (இரகு. தேனுவர். 70).

கூடல்வாய் kūṭal-vāy, *n.* <id. + . Hip of a roof; கூரையின் சேர்க்கை மூலை. *Loc.*

கூடல்வாயோடு kūṭal-vāy-ōṭu, *n.* <id. + . Gutter tiles; கூடல்வாய்மூலையைமூட உதவும் ஓடு. (C.E.M.)

கூடலர் kūṭalar, *n.* <id. + அல் neg. + . [M. *kūṭalar*.] See கூடார். *கூடலர் குடர்மாலை சூட்டி* (பு. வெ. 2, 9, கொளு).

கூடலி-த்தல் kūṭali-, *11 v. intr.* <id. To overhang, as the eyebrows; கீளர்ந்து வளைதல். *குறுவெயர்ப் புருவங் கூடலிப்ப* (திவ். பெரியாழ். 3, 6, 8).

கூடலிழை-த்தல் kūṭal-iḻai-, *v. intr.* <கூடல் + . To draw *kūṭal* on sand; கூடற்சுழி வரைதல். *நீடலந் தறையிற் கூட லிழைத்தது* (திருக்கோ. 186).

கூடலூர்கிழார் kūṭalūr-kiḻār, *n.* <கூடலூர் + . The poet who composed Mutumoḻi-k-kāñci and compiled Aiṅ-kuṟu-nūṟu; முதுமொழிக்காஞ்சி இயற்றியவரும் ஐங்குறுநூறு தொகுத்தவருமான புலவர்.

கூடற்கோமான் kūṭaṟ-kōmāṉ, *n.* <கூடல் + . Pandyan, the king of Madura; [மதுரைக்கு இறைவன்] பாண்டியன். (திவா.)

கூடற்சங்கமம் kūṭaṟ-caṅkamam, *n.* <id. +. Confluence or junction of the Tungabhadra and the Krishna; துங்கபத்திரை கிருஷ்ணாநதியுடன் கூடும் இடம். குந்தளரைக் கூடற்சங்கமத்து வென்றே (கலிங். புதுப். 193).

கூடற்பற்றை kūṭaṟ-paṟṟai, *n.* <id.+. Thicket; புதர். (J.)

கூடற்றெய்வம் kūṭaṟṟeyvam, *n.* <id.+. The deity contemplated while drawing *kūṭal*; கூடற்சுழிக்குரிய தேவதை. (திருக்கோ. 186, உரை.)

கூடன் kūṭaṉ, *n.* <*gūḍha.* See கூடசன். கானீனன் கூடன் (ஏலா. 30).

கூடஸ்தசைதன்னியம் kūṭasta-caitaṉṉiyam, *n.* <*kūṭa-stha*+. The immutable Brahman, as the embodiment of Supreme Knowledge; நிர்விருஞானரூபமாயுள்ள நிர்விகாரப் பிரமம்.

கூடஸ்தப்பிரமம் kūṭasta-p-piramam, *n.* <id.+. The immutable Brahman; நிர்விகாரப் பிரமம்.

கூடஸ்தன் kūṭastaṉ, *n.* <*kūṭa-stha.* 1. Supreme soul, eternal and unchangeable; பரப்பிரமம். (வேதா. சூ. 79, உரை.) 2. The founder of a family; குலத்தின் மூலபுருஷன்.

கூடா-தல் kūṭā-, *v. intr.* <கூடு+ஆ-. To become lifeless, as body; to die; உயிர்நீங்கி வேற்றுடலாதல். கூடலான் கூடாயினான் (சிலப். 20, வெண்பா. 2).

கூடாக்கு kūṭākku, *n.* <U. *gurākū.* Ball of tobacco, etc. used in hookah. See குடாக்கு. (W.)

கூடாதார் kūṭātār, *n.* <கூடு-+ஆ neg.+. See கூடார். கூடாதார் சேனை (சினேந். 379).

கூடாநட்பு kūṭā-naṭpu, *n.* <id.+id.+. Insincere and unreal friendship; அகத்தாற்கூடாது புறத்தாற் கூடியொழுகும் நட்பு. (குறள், அதி. 83.)

கூடார் kūṭār, *n.* <id.+id.+. Enemies, foes; பகைவர். கூடா ரரணெறி கூட (திருக்கோ. 161).

கூடாரக்கட்டில் kūṭāra-k-kaṭṭil, *n.* <கூடாரம்[1]+. Bed with tester and curtains; மூடுகட்டில். (J.)

கூடாரப்பண்டி kūṭāra-p-paṇṭi, *n.* <id. +. See கூடாரவண்டி. (சிலப். 6, 120, அரும்.)

கூடாரப்பண்டிகை kūṭāra-p-paṇṭikai, *n.* <id.+. Feast of tabernacles; ஒரு கிறிஸ்தவத் திருநாள். *Chr.*

கூடாரம்[1] kūṭāram, *n.* cf. *kuṭaru.* [T. *gudāramu*, K. Tu. *guḍāra*, M. *kūṭāram.*] 1. Tent, pavilion, tabernacle, booth, awning, tester; conical covering for a bed; படக்கிருகம். 2. Hood or covering of a cart; வண்டிக்கூடு. *Loc.*

கூடாரம்[2] kūṭāram, *n.* <*kūṭāgāra.* See கூடகாரம். கூடார மாட மயில்போல (சீவக. 2328).

கூடாரம்[3] kūṭāram, *n.* cf. *śūlari.* Asafoetida. See பெருங்காயம். (W.)

கூடாரம்போடு-தல் kūṭāram-pōṭu-, *v. intr.* <கூடாரம்[1]+. 1. To pitch a tent; படக்கிருகம் அமைதல். 2. To put a covering or hooded top over a cart; வண்டிக்கு மேற்கூடு இடுதல். *Loc.*

கூடாரவண்டி kūṭāra-vaṇṭi, *n.* <id.+. Cart with a hooded top; மேற்கூடுள்ள வண்டி. *Loc.*

கூடாவொழுக்கம் kūṭā-v-oḻukkam, *n.* <கூடு-+ஆ neg.+. Improper or immoral conduct, as inappropriate to one's *āśrama*; தகாத ஒழுக்கம். (குறள், அதி. 28.)

கூடிநாடித்திரி-தல் kūṭi-nāṭi-t-tiri-, *v. intr.* <id.+. To be always in the company of; பிறருடன் விடாது சேர்ந்திருத்தல்.

கூடியமட்டும் kūṭiya-maṭṭum, *adv.* <id. +. See கூடியவரை.

கூடியவரை kūṭiya-varai, *adv.* <id.+. As far as possible, as much as one is able; to the utmost; இயன்றவரை. *Colloq.*

கூடியற்பெயர் kūṭiyaṟ-peyar, *n.* <id.+ இயல்+. Collective noun; கூட்டத்தைக் குறிக்கும் பெயர். (சேமி. சொல். 31.)

கூடிலி kūṭili, *n.* prob. *kauṭilika.* Flesh-eater; புலால்தின்போன். (பிங்.)

கூடிவா-தல்[கூடிவருதல்] kūṭi-vā-, *v. intr.* <கூடு-+. 1. To accompany, move in company; சேர்ந்துவருதல். 2. To succeed, be prosperous, as in an undertaking; கைகூடி வருதல். 3. To increase; மிகுதியாதல்: அவனுக்கு நாளுக்குநாள் பொருள் கூடிவருகிறது. *Colloq.*

கூடினரைப்பிரித்தல் kūṭiṉarai-p-pirittal, *n.* <கூடினரை+. Separating enemy-kings by creating dissensions between them; பகையரசர் களைத் தம்முட் பிளவுண்டாக்கிப் பிரிக்கை. (பு. வெ. 9, 37, உரை.)

கூடு[1]**-தல்** kūṭu-, 5 *v.* [T. K. Tu. *kūḍu*, M. *kūṭu.*] *intr.* 1. To come together, join, meet; to become one, as rivers; ஒன்றுசேர்தல். அங்கைமலர் கூடத் தலைமேற் குவித்தருளி. 2. To collect, crowd together, assemble, congregate, muster; திரளுதல். கூடிய வண்டினங்காள் (திவ். திருவாய். 6, 8, 3). 3. To combine, coalesce, reunite, as broken bones; பொருந்துதல். (திவா.) 4. To be available; கிடைத்தல். உவமை யிவ்வுலகிற் கூடுமோ (கம்ப பா. உருக்கா. 44). 5. To be possible, practicable, attainable; இயலுதல். ஈவது கூடாவெல்லை (கந்தபு. மேரு. 20). 6. To come to pass, to

happen; நேர்தேல். திருவாறன்விளை கைதொழக் கூடுங்கொலோ (திவ். திருவாய். 7, 10, 3). 7. To become reconciled, pacified, conciliated; இணங்குதல். 8. To be fit, suitable, appropriate, proper, decent, expedient; தகுதியாதல். 9. To accumulate; to be hoarded, stored up; தொகைசேர்தல். 10. To abound, swell, increase; மிகுதியாதல். உள்ளங் கூடின துயரம் (கந்தபு. காமத. 97). 11. To commence, begin; தொடங்குதல். (W.) 12. To be achieved; கைகூடுதல். 13. To agree, consent; உடன்படுதல். கொன்றிடக் கூடாதுள்ளம் (திருவாலவா. 1, 15).—*tr.* 1. To associate or befriend; சிநேகித்தல். கூடிப்பிரியேல் (ஆத்திசூடி). 2. To cohabit; புணர்தல். கொம்மைத்துணை மென்முலை யண்ணலைக்கூட (கந்தபு. மகாசாத். 17). 3. To reach, arrive at; அடைதல். நகரங் கூடினன் (பிரமோத். 13, 64).

கூடு[2] kūṭu, *n.* < கூடு-. [T. K. Tu. *gūḍu*, M. *kūḍu*.] 1. Nest, bird-cage, coop, hive, cocoon, shell of a testaceous animal; பறவை முதலியவற்றின் கூடு. (திவா.) 2. Pen, sty, kennel, cage for animals; விலங்குக்கூடு. கூடார் புலியும் (சீவக. 2328). 3. Receptacle for grain; நெற்கூடு. கூடு கெழீஇய குடிவயினன் (பொருந. 182). 4. Hollow, globular or prismatical case, as a balloon, as the lamp of a light-house; உருண்டு திரண்டு கூடுபோலுள்ளது. 5. (Arch.) Dome, cupola; கட்டடத்தின் ஸ்தூபி. 6. Quiver, sheath, case, envelope; ஆயுதம் முதலியவற்றின் உறை. கோறுவக்குங் கூடு குறைத்த கொடுமதனை (சிவப். பிர. வெங்கைக்கலம். 93). 7. Small receptacle, as an inkstand; மைக்கூடு. 8. Covering or top of a cart; வண்டிக்கூடு. 9. Top of the drill for boring holes; துரப்பணக்கூடு. 10. [K. *gūḍe*, M. *kūḍa*.] Basket for catching fish; மீன்பறி. 11. Witness-box; சாட்சிக்கூடு. 12. Mortise, groove, in carpentry; கழுந்துக்கூடு. (W.) 13. Body, as the sheath encasing the soul; உடம்பு. கூட்டைவிட்டுயிர் போவதன் முன்னமே (தேவா. 376, 2).

கூடுகொம்பன் kūṭu-kompaṉ, *n.* <id.+. Ox whose horns almost meet at the points; முனைப்பாகம் தம்முட் கூடிய கொம்புகளுள்ள மாடு. (W.)

கூடுதல் kūṭutal, *n.*<id. 1. Excess; அதிகம். அவனுக்குக் கூடுதலாகவே கொடுத்திருக்கிறது. 2. Success; அனுகூலம். அவனுக்கு எல்லாம் கூடுதலாயிருக்கிறது.

கூடுதலை[1] kūṭutalai, *n.* <id. [K. *kūḍudale*.] See கூடுதல். *Colloq.*

கூடுதலை[2] kūṭu-talai, *n.* <id.+தலை. An asylum; தருமசாலை. *Loc.*

கூடுபூரி-த்தல் kūṭu-pūri-, *v. tr.* <கூடு+. To fill up, stuff; நிரப்புதல். அதிருஷ்டத்துக்குத் தாரித்ரயத்தைக் கூடுபூரித்த இத்தனை (திவ். திருமாலை, 6, வ்யா. 33).

கூடுவாய்முலை kūṭu-vāy-mūlai, *n.* <கூடு+. The ridge of a roof; மேற்கூரையிணையும் மூலை.

கூடுவிடு-தல் kūṭu-viṭu-, *n.* <கூடு+. 1. Lit., to leave the body. To die; இறத்தல். கூடுவிட்டிங் காவிதான் போயினபின்பு (நல்வழி, 22). 2. To become emaciated, to be reduced to a skeleton; எலும்பு தோன்ற இளைத்தல். அவனுடைய மார்பு கூடுவிட்டிருக்கிறது.

கூடை[1] kūṭai, *n.* <id. [T. *gūḍa*, K. Tu. *gūḍe*, M. *kūṭa*.] 1. Basket made of rattan, ola or bamboo: பிரம்பு முதலியவற்றாற் பின்னப்படும் பெட்டி. 2. Palm-leaf cover worn over the person, as a protection from rain; மழைநீர்படாத படி உடல்மேல் இட்டுக்கொள்ளும் சம்பைக் கொங்காணி.

கூடை[2] kūṭai, *n.* prob. கூடு-. 1. (Nātya.) A kind of hand-pose; அபிநயக்கைவகை. (சிலப். 3, 20.) 2. (Mus.) See கூடைப்பாடல். (சிலப். 3, 67 உரை.)

கூடைக்காரன் kūṭai-k-kāraṉ, *n.* <கூடை[1] +. 1. One who sells vegetables, carrying them in a basket; கூடையிற் காய்கறி விற்போன். 2. Coolie with a basket for carrying goods; கூடையிற் சாமான் எடுத்துவருங் கூலிக்காரன்.

கூடைக்குத்தகை kūṭai-k-kuttakai, *n.*<id. +. Lit., lease by the basket. Rental fixed on a rough estimate; மதிப்பாகத் தீர்மானிக்கும் குத்தகை. (C. G.)

கூடைச்சாதம் kūṭai-c-cātam, *n.* <id.+. Basketfuls of food and dainties presented by the bride's people to the bridegroom's party when the latter depart homeward; கலியாணத்திற் சம்பந்திகள் தம்வீடு செல்லும்பொழுது அவர்களுக்குப் பெண்வீட்டார் அனுப்பும் சித்திரான்னம். *Loc.*

கூடைப்பணியாரம் kūṭai-p-paṇiyāram, *n.* <id.+. Basketfuls of confections presented to the bridegroom by the bride's people at the time of marriage; கலியாணத்தில் மணையிலுள்ள மாப்பிள்ளைக்குமுன் கூடைகளில் வைக்கும் பக்ஷணம். *Loc.*

கூடைப்பாடல் kūṭai-p-pāṭal, *n.* <கூடை[2] +. (Mus.) A song which combines wealth of words with richness of melody; சொற்செறிவும் இசைச்செறிவுமுடைய பாடல். (சிலப். 3, 67, உரை.)

கூண்டடுப்பு kūṇṭaṭuppu, *n.* <கூண்டு+அடுப்பு. Covered brick oven. See அனலடுப்பு. (இந்துபாக. 67.)

கூண்டா-தல் kūṇṭā-, *v. intr.* <id.+ஆ-. To get matted or interlocked, as the hair; மயிர் சிக்குப்படுதல்.

கூண்டு kūṇṭu, *n.* < கூடு. See கூடு.

கூண்டுப்புழு kūṇṭu-p-puḻu, *n.* < கூண்டு +. Chrysalis; புழுவகை.

கூத்தச்சாக்கையன் kūtta-c-cākkaiyaṉ, *n.* < கூத்து +. A person of Cākkaiya caste whose profession is dancing and acting; கூத்து நிகழ்த்துஞ் சாக்கையர்குலத்தான். கொட்டிச் சேதம் . . . பறையூர்க் கூத்தச் சாக்கைய னாடலின் (சிலப். 28, 77).

கூத்தநூல் kūtta-nūl, *n.* <id.+. Treatise on gesticulation in dancing; அபிநயத்தைப் பற்றிய நூல். (சீவக. 124, உரை.)

கூத்தப்பள்ளி kūtta-p-paḷḷi, *n.* <id.+. Theatre hall attached to a palace; அரண்மனையைச்சார்ந்த நாடகவரங்கு. (இறை. 21, பக். 112.)

கூத்தம்பலம் kūttampalam, *n.* <id. + அம்பலம். Theatre hall in temple; அபிநயித்தாடுதற்குரிய கோயிலரங்கு. (T. A. S. ii, 143.)

கூத்தர் kūttar, *n.* <id. Actors, dancers; கூத்துநடிப்போர். கூத்தரும் பாணரும் (தொல். பொ. 91).

கூத்தராற்றுப்படை kūttar-āṟṟuppaṭai, *n.* < கூத்தர் +. (Puṟap.) Theme of a dancer, himself a recipient of unstinted favours at the hands of a king or chieftain, directing and exhorting his brother in the profession to avail himself of the royal bounty; பரிசில்பெறச் சமைந்த கூத்தனைப் பரிசில்பெற்றவன் ஒரு தலைவனிடம் ஆற்றுப்படுக்கும் புறத்துறை. (பு. வெ. 9, 29.) 2. The tenth poem of the Pattu-p-pāṭṭu; பத்துப்பாட்டினுள் பத்தாவதாகிய மலைபடுகடாம். (தொல். சொல். 462, சேனா.)

கூத்தரிசி kūttarici, *n.* <குத்து- +. Rice cleaned from the husk by pounding, usually for sale; குற்றரிசி. (W.)

கூத்தரிசிக்காரி kūttarici-k-kāri, *n.* < கூத்தரிசி +. Woman who pounds and sells rice; அரிசிகுற்றி விற்பவள். (W.)

கூத்தன் kūttaṉ, *n.* < கூத்து. 1. [M. *kūttan.*] Dancer, actor; நடன். குழியும்ப ரேத்துமெங் கூத்தன் (திருக்கோ. 135). 2. Lit., the stage-manager who enacts the great drama of life. Soul, spirit; [வாழ்வாகிய பெருநாடகத்தை நடத்துவிப்பவன்] சீவான்மா. கூத்தன் புறப்பட்டக்கால் (நாலடி, 26). 3. Śiva; சிவன். சிற்றம்பலத்து மாணிக்கக் கூத்தன் (திருக்கோ. 23). 4. Oṭṭakkūttar, the famous poet. See ஒட்டக்கூத்தர். கூத்தன் கவிச்சக்கரவர்த்தி வாழியே (தக்கயாகப்பரணி, முடிவு). 5. Sulphate of copper; துரிசு. (சங். அக.)

கூத்தன்குதம்பை kūttaṉ-kutampai, *n.* Pointed-leaved hogweed. See மூக்கொற்றி. (பாலவா. 508.)

கூத்தாட்டு kūttāṭṭu, *n.* < கூத்து + ஆடு-. [M. *kūttāṭṭu.*] Dancing, acting on the stage; நடிப்பு. கூத்தாட் டவைக்குழாத் தற்றே (குறள், 332).

கூத்தாடி kūttāṭi, *n.* <id.+. [M. *kūttāṭi.*] 1. Dancer, player, actor; நடன். கூத்தாடிப் பையலுக்கோ (தனிப்பா. ii, 7, 14). 2. Pole-dancer, acrobat; கழைக்கூத்தன். 3. Reckless, self-willed, unprincipled person; மனம்போனபடி நடப்பவன்.

கூத்தாடிச்சி kūttāṭicci, *n.* <id.+. [M. *kūttāṭicci.*] 1. Dancing-girl; கூத்துநடிப்பவள். 2. Boisterous, unruly woman; அடங்காது சத்தமிட்டுத் திரிபவள். *Loc.*

கூத்தாடு-தல் kūttāṭu-, *v. intr.* <id.+. [M. *kūttāṭu.*] 1. To dance, act on the stage; நடித்தல். (சிலப். 12. பக். 319, அரும்.) 2. To be elated with success, etc.; மகிழ்ச்சிமிகுதல். (W.) 3. To prosper, thrive; செழித்திருத்தல். அவ்வீட்டில் செல்வம் கூத்தாடுகிறது. 4. To importune, persistently request; பிடிவாதமாய் வேண்டுதல். தனக்கு அது வேண்டுமென்று கூத்தாடுகிறான்.

கூத்தாண்டவர் kūttāṇṭavar, *n.* <id.+. A village deity; ஒரு கிராமதேவதை. *Loc.*

கூத்தி kūtti, *n.* <id. [M. *kūtti.*] 1. Female actor, dancer, dancing-girl; நாடகக்கணிகை. (திவா.) 2. Courtesan, prostitute; வேசை. *Colloq.* 3. Concubine, kept mistress; வைப்பாட்டி. நட்டணை சேர் கூத்திமாரோடு (பணவிடு. 225).

கூத்திக்கள்ளன் kūtti-k-kaḷḷaṉ, *n.* < கூத்தி +. Whoremonger; கூத்திகளோடு மிகவும் உறவாடுபவன். *Loc.*

கூத்தியார் kūttiyār, *n.* <id. Concubine, kept mistress; வைப்பாட்டி. *Colloq.*

கூத்து kūttu, *n.* cf. *kūrdda.* [K. *kūtu*, M. *kūttu.*] 1. Dance, dancing; நடனம். ஆடுதங் கூத்தே (திவ். திருவாய். 10, 1, 5). 2. Divine dances, eleven in number, viz., அல்லியம், கொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல், துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை; பதினொருவகைக் கூத்து. கடையம் . . . கொட்டியிவை காண் பதினோர் கூத்து (சிலப். 3, 14, உரை.) 3. Dramatic performance, action; நாடகம். பிறவி மாமாயக் கூத்தினையே (திவ். திருவாய். 8, 4, 11). 4. Strange event or incident; அதிசயச் செயல். அங்கே ஏதாவது கூத்து நடக்கும். 5. Droll or ludicrous action, as a pantomime; கேலிக்கூத்து. 6. Confusion; குழப்பம். 7. A treatise of the last Sangam, on the art of dancing; நாடகம்பற்றியமைந்த ஒரு கடைச்சங்க நூல். (இறை. 1, பக். 5.)

கூத்துக்களரி kūttu-k-kaḷari, *n.* < கூத்து +. Play-house, theatre; நாடகசாலை.

கூத்துக்காரன் kūttu-k-kāraṉ, *n.* < id. +. 1. Actor, dancer; கூத்தாடுவோன். 2. Dancing-master; கூத்தாட்டுவோன். (W.) 3. Buffoon, mimic, comical person; விகடக்காரன். (W.)

கூத்துப்பண்ணு-தல் kūttu-p-paṇṇu-, *v. intr.* < id. +. 1. To make fun; to sport; to do a droll or funny action; வேடிக்கைப்பண்ணுதல். 2. To confound, derange; குழப்பஞ்செய்தல். (W.)

கூத்துப்பாட்டு kūttu-p-pāṭṭu, *n.* < id. +. Songs sung in dancing and dramatic performances; நாடகப்பாடல். (W.)

கூத்துப்பொட்டல் kūttu-p-poṭṭal, *n.* < id. +. Maidan or the open space for dramatic performances; நாடகவெளி.

கூத்துவிடு-தல் kūttu-viṭu-, *v. intr.* < id. +. 1. To introduce the actors in a play; நாடக பாத்திரங்களை அவைக்கு அறிவித்தல். (W.) 2. To say something odd or droll; to do a funny or humorous thing; to amuse an audience; வேடிக்கைசெய்தல். (J.)

கூத்துள்படுவோன் kūttuḷ-paṭuvōṉ, *n.* < id. + உள்படு-. One who teaches dancing; ஆடலாசிரியன். *கூத்துள்படுவோன் காட்டிய முறைமையின் . . . இருக்கலநல்கி* (சிலப். 26, 125).

கூதல் kūtal, *n.* < கூதிர். 1. Sensation of cold, chillness; குளிர். *கூர்மழைபோற்பனிக்கூதல்* (திவ். பெருமாள. 6, 1). 2. Chills before intermittent fever; காய்ச்சற்குளிர். (W.)

கூதளம் kūtaḷam, *n.* 1. Three-lobed nightshade. See தூதுளை. (மலை.) 2. Convolvulus. See கூதாளி. *கூதளங் கவினிய குளவிமுன்றில்* (புறநா. 168, 12). 3. cf. கூதாரி. Mottled melon. See வெள்ளரி. (மலை.)

கூதற்காய்-தல் kūtaṟ-kāy-, *v. intr.* < கூதல் +. To warm oneself; குளிர்காய்தல். *Loc.*

கூதறை kūtaṟai, *n.* prob. *kūdara*. 1. That which is mean, base, vulgar; இழிந்தது. *Loc.* 2. Base, vulgar, disreputable person; இழிந்த குணமுடையவ-ன்-ள். *மாண்ட மனமுடைய ராகாத கூதறைகள்* (பழ. 106). 3. Mutilation; கிழிவு. (சங். அக.)

கூதனம் kūtaṉam, *n.* prob. *gūhana*. Indecent, obscene terms; இடக்கர்ச்சொல். (திவா.)

கூதாரி kūtāri, *n.* cf. *urvāru*. Mottled melon. See வெள்ளரி. (மலை.)

கூதாளம் kūtāḷam, *n.* See கூதாளி. (திவா.)

கூதாளி kūtāḷi, *n.* 1. Convolvulus, *Ipomea*; செடிவகை. (திவா.) 2. Three-lobed nightshade. See தூதுளை. (W.)

கூதி kūti, *n.* cf. *guda* [M. *kūti*, Tu. *kūdi*.] Pudendum muliebre; பெண்குறி.

கூதிர் kūtir, *n.* 1. Chill wind; பனிக்காற்று. (பிங்.) 2. cf. *ūti*. Wind; காற்று. (பிங்.) 3. Autumn, the months of *Aippaci* and *Kārttikai*, one of six *paruvam*, q.v.; சரற்காலம் எனப்படும் ஐப்பசிகார்த்திகைமாதங்கள். (தொல். பொ. 6.) 4. Sensation of cold; குளிர். (W.)

கூதிர்ப்பாசறை kūtir-p-pācaṟai, *n.* < id. +. Winter encampment of a king waging war; போர்மேற்சென்ற அரசன் கூதிர்க்காலத்தில் தங்கும் படைவீடு. (தொல். பொ. 76.)

கூதை kūtai, *n.* cf. ஊதை. Wind; காற்று. (திவா.)

கூதைசெய்-தல் kūtai-cey-, *v. tr.* To mutilate the ear; காதை முளியாக்குதல். *காது செய்வான் கூதைசெய்து* (திவ். திருவாய். 9, 1, 9).

கூந்தல் kūntal, *n.* < *kuntala*. 1. [K. *kūdal*, M. *kūntal*.] Long, flowing tresses of a woman; பெண்டிர் தலைமயிர். (பிங்.) 2. Peacock's tail; மயிற்றோகை. *கூந்தன் மென்மயில்* (கம்பரா. சித்திரகூட. 31). 3. Horse's mane; குதிரைப் பிடர்மயிர். *கூந்தற் குதிரை* (கலித். 103, 53). 4. Hair on an elephant's neck; யானைக்கழுத்துமயிர். *கூந்தலம் பிடியின்* (கைடத. அன். தூது. 23). 5. Horse; குதிரை. *கூந்தலென்னும் பெயரொடு* (பரிபா. 3, 31). 6. An Asura slain by Kṛṣṇa; கேசியென்னும் அசுரன். *கூந்தலெரி சினங் கொன்றோய்* (பரிபா. 3, 31). 7. Head, as of plants; தலையிடம். *கூந்த லேந்திய கமுகங் காய்க்குலை* (சீவக. 2403). 8. Jaggery-palm. See கூந்தற்பனை. (W.) 9. Leaves of palmyra and areca palms; கமுகுபனை இவற்றின் ஓலை. (W.) 10. Tender coconut leaves formed into festoons and used to decorate arched portals on festive occasions; விசேடகாலங்களில் வாசலை அலங்கரிக்கும் குருத்தோலைத்தோரணம். (J.) 11. Spathe of arecanut trees; கமுகங்குலைக் கூந்தல். (W.) 12. Filaments, threads, fibres, fringes; பூமுதலிய வற்றின் மெல்லியதோர் உறுப்பு.. 13. Horse-tail millet, *Panicum verticillatum*; குதிரைவாற்சாமை. (தைலவ. தைல. 17.) 14. Sea-fish, pale, dull-red, attaining 1 ft. in length, *Scolopsis vosmeri*; காரைக்குட்டிமீன்.

கூந்தல்கொள்(ளு)-தல் kūntal-koḷ-, *v. intr.* < கூந்தல் +. Lit., to lay hold of a woman's tresses. To embrace a woman; மகளிரைத் தழுவுதல். *யாரிவனெங் கூந்தல்கொள்வான்* (கலித். 89).

கூந்தல்தொடு-தல் kūntal-toṭu-, *v. intr.* <id.+. See கூந்தல்கோள்-. பூங்கோதை வேண்டேங் கூந்தல் தொடேல் (சீவக. 1229).

கூந்தல்வேல் kūntal-vēl, *n.* <id.+. Elephant thorn, s. tr., *Acacia tomentosa*; வேல மரவகை. (L.)

கூந்தலறுகு kūntal-aṟuku, *n.* <id.+. Hairy-grass, *Agrostis bifaria*; அறுகம்புல்வகை. (W.)

கூந்தலாற்று-தல் kūntal-āṟṟu-, *v. intr.* <id.+. To loosen and dry one's hair after bathing; ஈரமயிரைக் கோதி உலர்த்துதல்.

கூந்தளம்பாவை kūntaḷam-pāvai, *n.* Convolvulus flower; பூவகை. காந்தமணி கூந்தளம் பாவை நீண்டு (சீவக. 1671).

கூந்தற்கணவாய் kūntaṟ-kaṇavāy, *n.* <கூந்தல்+. A species of cuttlefish, *Octapis vulgaris*; மீன்வகை. (W.)

கூந்தற்கமுகு kūntaṟ-kamuku, *n.* <id.+. 1. Areca palm, m. tr., *Areca catechu*; கமுகு வகை. (பிங்.) 2. Talipot palm. See தாளிப்பனை. (R.)

கூந்தற்பனை kūntaṟ-paṉai, *n.* <id.+. 1. Talipot palm. See தாளிப்பனை. (பிங்.) 2. Jaggery palm. See திப்பிலிப்பனை. (I.F.)

கூந்தற்பாசி kūntaṟ-pāci, *n.* Trailing moss, *Zannichellia indica*; நீர்ப்பூடுவகை. (யாழ். அக.)

கூந்தற்பூகம் kūntaṟ-pūkam, *n.* <கூந்தல்+. See கூந்தற்கமுகு, 1. (சூடா.)

கூந்தன்மா kūntaṉ-mā, *n.* <id.+. Horse; குதிரை. கூந்தன்மாவென்று கண்டார் சொல்லும்படி (பரிபா. 3, 31, உரை).

கூந்தாலம் kūntālam, *n.* See கூந்தாலி.

கூந்தாலி kūntāli, *n.* <*kuddāla*. Crow-bar, pick-axe; கடப்பாரை. (W.)

கூந்து kūntu, *n.* See கூந்தல், 3, 4. கூந்திளம் பிடி (சூளா. நாட்டு. 19).

கூப்பாடு kūppāṭu, *n.* <கூ[3]+படு[1]-. 1. Call, summoning; கூப்பிடுகை. 2. cf. T. *kūpeṭṭu*. Clamour, great noise; பேரொலி.

கூப்பாடுதூரம் kūppāṭu-tūram, *n.* <கூப்பாடு+. See கூப்பிடுதூரம். (C.G.)

கூப்பிடு[1]-தல் kūppiṭu-, *v.* <கூவு-+இடு-. *tr.* 1. To call, call by name, summon; அழைத்தல். 2. To invite; வரவழைத்தல்.—*intr.* 1. To call out, cry out, halloo, shriek, whoop, cry for help; அச்சம் துயரம் முதலியவற்றாற் கத்துதல். கூப்பிடுமே யத்தக் குயில் (தனிப்பா. ii, 73, 183). 2. To utter loud sounds; to shout together; பேரொலி செய்தல். (பிங்.)

கூப்பிடு[2]-தல் kūppiṭu-, *v.tr.* <கூப்பு-+. To join hands in worship; தொழுதற்குக் கைகுவித்தல். கூப்பிட்டேன் செங்கைதனை (தனிப்பா. ii, 28, 251).

கூப்பிடு[3] kūppiṭu, *n.* <கூப்பிடு[1]-. 1. Calling for aid, supplication; முறையீடு. எழுந்தன ஏமரர் கூப்பிடால் (உத்தரரா. வரையெடு. 77). 2. Calling distance; கூப்பிடுதூரம். கூப்பிடு கடக்கும் கூர்ங்கல் லம்பின் (மலைபடு. 421).

கூப்பிடுதூரம் kūppiṭu-tūram, *n.* <id.+. Lit., the distance at which a shout can be heard. Indian league; [ஒருவன் கூப்பிட்டாற் பிறன் கேட்குந்தூரம்] ஒரு குரோசவளவு. (திவா.)

கூப்பிடுவான் kūppiṭuvāṉ, *n.* <id. A kind of lung disease, especially among goats, causing continuous bleating and sudden death; கதறிக்கொண்டே திடீரென்று இறக்கச் செய்வதாகிய ஆட்டுநோய். (J.)

கூப்பீடு kūppīṭu, *n.* <id. 1. Call, whoop; கூப்பாடு. வருத்திக் கூப்பிடுங் கூப்பீட்டைக் கேட்கவும் (புறநா. 44, உரை). 2. Calling distance; கூப்பிடுதூரம். முழநான்குகோல் அக்கோலைஞ்ஞூறு கூப்பீடு (வீரசோ. யாப். 33, உரை).

கூப்பு[1]-தல் kūppu-, 5 *v.tr.* Caus. of கூம்பு-. [M. *kūppu*.] 1. To join hands as in worship; கைகுவித்தல். வாளொடுங் கோலொடுங்கூப்பு (சீவக. 430). 2. To heap up, as sand or grain; குவித்தல். கூப்பிய கனகமாழையால் (சீவக. 913). 3. To close, contract, shut in, as an umbrella; to withdraw, draw in, as the sun his rays; சுருக்குதல். சூரியன் கிரணங்களைக் கூப்பிக்கொண்டு அஸ்தமித்தான். (W.)

கூப்பு[2] kūppu, *n.* <கூப்பு-. [M. *kūppu*.] Joining hands as in worship; குவியச்செய்கை. என்கைகூப்புச் செய்கையே (திவ். திருவாய். 4, 3, 2).

கூபகம் kūpakam, *n.* prob. *kūpaka*. 1. Pelvis; இடுப்பிலுள்ள எலும்புக்கூட்டின் குழிவிடம். (இங். வை. 13.) 2. Name of a country whose capital was Quilon; மலைநாட்டிற் கொல்லத்தைத் தலைநகராகக்கொண்ட ஒரு தேசம். கூபக மிரட்டமொட்டம் (பாரத. படை. 19). (T. A. S. ii, 16.)

கூபம் kūpam, *n.* <*kūpa*. Well; கிணறு. (திவா.)

கூபரம் kūparam, *n.* <*kūrpara*. Elbow; முழங்கை.

கூம்பல் kūmpal, *n.* perh. கூம்பு-. Coomb teak, l. tr., *Gmelina arborea*; குமிழ்மரம். (திவா.)

கூம்பு[1]**-தல்** kūmpu-, *5 v. intr.* cf. *kumb.* [M. *kūmpu.*] 1. To close; to shut, as a flower; குவிதல். செய்ய கமல மலர்கூம்ப (நைடத. சந்திரோ 2). 2. To contract, shrink; ஒடுங்குதல். (சூடா.) 3. To lose courage, zeal, or enthusiasm; ஊக்கங் குறைதல். வடவர் வாடக் குடவர் கூம்ப (பட்டினப். 276).

கூம்பு[2] kūmpu, *n.* <கூம்பு-. [M. *kūmpu.*] 1. [Tu. *kūve.*] Mast of a vessel; பாய் மரம். கூம்பு முதன்முறிய வீங்குபிணி யவிழ்ந்து (மணி. 4, 30). 2. Cone-shaped pinnacle of a chariot; தேர்மொட்டு. (திவா.) 3. Bud; பூமொட்டு. தாழைக் கூம்பவிழ்ந்த வொண்பூ (ஐங். ஐம். 49). 4. Mud; சேறு. கூம்பினிற் புதைத்த கல். (W.)

கூமரை kūmarai, *n.* False tragacanth. See காட்டிலவு. (மலை.)

கூமா kūmā, *n.* See கூவமா. (J.)

கூமுட்டாள் kū-muṭṭāḷ, *n.* prob. கூழ்+. Stupid fool, a term of abuse; பெருமூடன். *Loc.*

கூமுட்டை kū-muṭṭai, *n.* See கூழ்முட்டை. *Vul.*

கூர்[1]**-தல்** kūr-, *4 v. intr.* <கூர்-மை. 1. cf. *gūr.* To be abundant, excessive; மிகுதல். பெரு வறங் கூர்ந்த கானம் (பெரும்பாண். 23). 2. [K. *kūr.*] To covet, hanker after; விருப்பங்கொள்ளுதல். எங்கையர்தோள் கூடினன்பின் பெரிது கூர்ந்து (திணை மாலை. 124). 3. To bend; வளைதல். மெய்கூர்ந்த பனியொடு (கலித். 31, 6). 4. To contract with cold; குன்றுத்தல். (நெடுநல். 9, உரை.) 5. cf. *kṣur.* See கூர்[2]-, 2, 3. (W.)

கூர்[2]**-த்தல்** kūr-, *11 v. intr.* <id. 1. To be abundant, excessive; மிகுதல். கூர்ப்புங் கழிவு முள்ளது சிறக்கும் (தொல். சொல். 314). 2. cf. *kṣur.* To be sharp, as the edge or point of an instrument; கூர்மையாதல். கூர்க்குநன் மூவிலைவேல் (தேவா. 367, 8). 3. cf. *kṣur.* To be keen, acute, penetrating, as the intellect; அறிவுநுட்பமாதல். கூர்த்த வறிவு. 4. cf. கார்[3]-. To be saltish, brackish; உவர்த்தல். மென்றுறைப்புனல் கூர்ப்புறக் கடலேறி (தணிகைப்பு. திருநாட். 164). 5. cf. *jūr.* To be enraged, become furious; சினத்தல். கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் (நாலடி, 70).

கூர்[3] kūr, <id. *n.* 1. Exuberance, abundance; மிகுதி. கூரி லாண்மைச் சிறியேன் (புறநா. 75, 4). 2. [T. K. M. *kūr.*] Sharpness, as of a point or edge; கூர்மை. கூர்வேற்கோன் (திவ். பெரியாழ். 4, 2, 7). 3. Pointed edge; கூர்மையுள்ள நுனி. *Loc.* 4. The stand or support of a potter's wheel; குயவன் சக்கரத்தைத் தாங்கும் ஓர் உறுப்பு. கூரினை யிழந்துபோய்க் குலாலன் சக்கர நீர் மையதானது (கந்தபு. தாரக. 136). 5. Fibre, leaf rib, as of the neem; இலையின் நடுநரம்பு. (J.) 6. Awn, beard of grain; கதிர்க்கூர். (W.) 7. Projecting pivots on which a door swings; கதவுக்குடுமி. 8. Pungency; காரம். (W.) 9. Cutting or sarcastic speech; குத்துப்பாடான பேச்சு.—*adj.* 1. Intense, excessive; மிக்க. கூரிருட் பிழம்பே (நைடத. மாலை. 11). 2. Fine; சிறந்த. கூர்ஞ்செக்கரே (திருக்கோ. 346).

கூர்க்கறுப்பன் kūr-k-kaṟuppaṉ, *n.* <கூர் +. A kind of bearded paddy of superior quality; உயர்ந்த நெல்வகை. (W.)

கூர்கெடு-தல் kūr-keṭu-, *v. intr.* <id.+. 1. To become blunt, dull, to lose point, as a tool; நுனிமழுங்குதல். 2. To become dull-witted; to lose one's sharpness of intellect, as in old age; அறிவுமழுங்குதல்.

கூர்கேவு kūr-kēvu, *n.* White mustard. See வெண்கடுகு. (மலை.)

கூர்ங்கண் kūr-ṅ-kaṇ, *n.* <கூர்+. Sharp, piercing eyes; ஊடுருவிப் பார்க்கும் கண்.

கூர்ச்சம்[1] kūrccam, *n.* Small-sized post used in building; கட்டடத்திற்கு உதவுஞ் சிறுகால். *Loc.*

கூர்ச்சம்[2] kūrccam, *n.* <*kūrca.* 1. Darbha grass; தருப்பை. (பிங்.) 2. Bundle of darbha grass used in ceremonies and sacrifices; வைதிக கருமங்களில் உபயோகிக்கும் தருப்பைக்கொத்து. கோ லும் புல்லு மொருகையிற் கூர்ச்சமும் (தேவா. 497, 8).

கூர்ச்சரம் kūrccaram, *n.* <*Gurjara.* Gujarat, one of 56 *tēcam*, q.v.; 56 தேசங்களுள் ஒன்று. (திருவேங். சத. 97.)

கூர்ச்சரி kūrccari, *n.* <*gurjarī.* (Mus.) A specific melody-type; ஓர் இராகம். (பரத. இராக. 56.)

கூர்ச்சி[1] kūrcci, *n.* <U. *kursi.* Chair. See குருச்சி[1]. (M. M.)

கூர்ச்சி[2] kūrcci, *n.* <கூர். Sharpness, keenness, pointedness; கூர்மை. கூர்ச்சிவா யரவம் வீழ்த்தி (குற்று. தல. கவுற். 10).

கூர்ச்சு kūrccu, *n.* <கூர்[2]-. 1. See கூர்ச்சி[2]. *Colloq.* 2. Pointed stick, stake; கூரிய முளை. கூர்ச்சுக் கட்டையாய்ப் போயிற்று. *Loc.*

கூர்ச்சுக்குல்லா kūrccu-k-kullā, *n.* <கூர்ச்சு +. Conical shaped cap; நெடுங்குல்லா. (W.)

கூர்ச்சேகரம் kūr-c-cēkaram, *n.* <*kūrca-śekhara.* Coconut palm. See தென்னை. (மலை.)

கூர்சீட்டு kūr-cīṭṭu, *n.* <கூறு +. Partition deed. See கூறுசீட்டு.

கூர்சீவு-தல் kūr-cīvu-, *v.* <கூர்+. *tr.* 1. To sharpen, make pointed; கூராக்குதல். 2. To scrape, slice off, as areca nut; சீவுதல். *கூர்சீவின பாக்கு* *Loc.*—*intr.* To incite, as to a quarrel; பகைமூட்டுதல். *Loc.*

கூர்த்திகை kūrttikai, *n.* perh. கூர்[2]-. (திவா.) 1. A weapon shaped like a sledge-hammer; மட்டிப்படைக்கலம். 2. Arms, weapons; ஆயுதப்பொது.

கூர்ந்தபஞ்சமம் kūrnta-pañcamam, *n.* <கூர்[1]-+. An ancient secondary melody-type of *marutam* class; மருதயாழ்த்திற வகை. (பிங்.)

கூர்ப்பகழி kūr-p-pakaḻi, *n.* prob. கூர்+. A mineral poison; சரகாண்டபாஷாணம். (சங். அக.)

கூர்ப்பரம் kūrpparam, *n.* <*kūrpara*. Elbow; முழங்கை. (பிங்.)

கூர்ப்பிடு-தல் kūrppiṭu-, *v. intr.* <கூர்ப்பு + இடு-. To sharpen, as a tool; தீட்டிக் கூர்மையாக்குதல். *படையைக் கூர்ப்பிடுதலோடும்* (சீவக. 2303).

கூர்ப்பு kūrppu, *n.* <கூர்[2]-. 1. Abundance, excess; improvement; உள்ளது சிறந்து மிகுகை. (தொல். சொல். 314.) 2. [K. *kūrpu*, M. *kūrppu*.] Sharpness, pointedness; கூர்மை. *கூர்ப்புக் கொண்ட கட் கொடிச்சியர்* (கந்தபு. திருநாட்டு. 45). 3. Keenness of perception, acuteness of intellect; புத்திநுட்பம். *கூர்ப்பில்லா மனுடனும்* (சூடா. 11, 132). 4. Brackishness, saltness; உவர்ப்பு.

கூர்மக்கை kūrma-k-kai, *n.* <*kūrma*+. (Nāṭya.) Gesticulation in dancing in which the thumb is held straight and the other fingers are bent and pointed downwards; பெருவிரலைநீட்டி மற்றைவிரல்களை வளைத்துக் கீழ்நோக்கிப்பிடிக்கும் அபிநயக்கை. (பரத. பாவ. 39.)

கூர்மத்துவாதசி kūrma-t-tuvātaci, *n.* <id.+. A fast on the 12th lunar day of the month *Āṉi*; ஆனிமாதத்துத் துவாதசியில் அனுஷ்டிக்கும் ஒருவிரதம்.

கூர்மபுராணம் kūrma-purāṇam, *n.*<id.+. 1. A chief Purāṇa narrated by Viṣṇu, in His incarnation as tortoise, one of *patiṉeṇ-purāṇam*, q.v.; பதினெண்புராணங்களுள் திருமால் கூர்மாவதாரம் எடுத்தபொழுது உபதேசித்த புராணம். 2. A metrical translation of the above in Tamil by Ativīrarāma-pāṇṭiyaṉ; வடமொழியிலிருந்து அதிவீரராமபாண்டியன் செய்யுளுருவமாகத் தமிழிலியற்றிய நூல்.

கூர்மம் kūrmam, *n.* <*kūrma*. 1. Tortoise; ஆமை. (திவா.) 2. Tortoise-incarnation of Viṣṇu, one of *tacāvatāram*, q.v.; திருமாலின் தசாவதாரத்தொன்று. (பிங்.) 3. A chief Purāṇa. See கூர்மபுராணம். (திவா). 4. A mineral poison; அஞ்சனபாஷாணம். (சங். அக.) 5. A mineral poison; சாலாங்கபாஷாணம்.

கூர்மயோகம் kūrma-yōkam, *n.* <id.+. (Astrol.) A peculiar conjunction of planets at the time of one's birth indicative of great success in life; ஒருவன் பிறக்குங்காலத்து அவனுக்கு உயர்ந்த நிலையைக்கொடுக்குமாறு கிரகங்கள் சேர்ந்த ஒரு யோகம். (சங். அக.)

கூர்மன் kūrmaṉ, *n.* <id. The vital air of the body which causes closing and opening of eyelids, one of *taca-vāyu*, q.v.; தசவாயுக்களுள் இமைத்தல் விழித்தல்களைச் செய்யும் வாயு. (பிங்.)

கூர்மஜயந்தி kūrma-jayanti, *n.* <id.+. The sacred day on which Viṣṇu incarnated Himself as tortoise, a day of festivity; திருமால் எடுத்த கூர்மாவதாரத்தைக் கொண்டாடுதற்குரிய திருநாள்.

கூர்மாண்டர் kūrmāṇṭar, *n.* <*kūṣmāṇḍa*. One of Šiva's host. See கூசுமாண்டர். *பாரிடப் படையுடைக் கூர்மாண்டர்* (திருவிளை. திருமணப். 82).

கூர்மாதனம் kūrmātaṉam, *n.* <*kūrma*+ *ā-sana*. 1. Squatting on the floor with the legs crossed; கால்மடித்து உட்காருகை. 2. Wooden seat in the form of a tortoise or with the figure of tortoise on it, used for meditation; அனுஷ்டானாதிகளுக்கு உபயோகிப்பதும் ஆமையின் வடிவம் அமைந்ததுமான ஆசனவகை. *வில்வாதியினாற் செய்க . . . கூர்மாதனம்* (சைவச. பொது. 57).

கூர்மிகை kūrmikai, *n.* <*kūrmikā*. A kind of lute; வீணைவகை. (பரத. ஒழிபி. 15.)

கூர்முள் kūr-muḷ, *n.*<கூர்+. Spurs; குதிரை செலுத்துங் கருவி. *கூர்முட்பிடித்துத் தேர்முனின்ற திசைமுகன்* (சிலப். 6, 44, உரை).

கூர்மை kūrmai, *n.* <id. [M. *kūrmma*.] 1. Sharpness, pointedness; ஆயுதம்முதலியவற்றின் கூர். *கூர்மையின் முல்லை யலைக்கு மெயிற்றாய்* (நாலடி, 287). 2. Keenness of sight; acuteness of intellect; penetration; subtlety; நுண்மை. (திவா.) 3. Excellence, superiority; சிறப்பு. (திருக்கோ. 346, உரை.) 4. Rock-salt; கல்லுப்பு. (சங். அக.) 5. Saltpetre; வெடியுப்பு. (சங். அக.)

கூர்மைக்கரிவாள் kūrmaikkarivāḷ, *n.* Soap; சவுக்காரம். (W.)

கூர்மைபார்-த்தல் kūrmai-pār-, *v. intr.* <கூர்-மை+. To try the sharpness of an instrument; ஆயுதக்கூரைச் சோதித்தல்.—*tr.* To test one's acuteness of intellect or ability; ஒருவன் திறமையைச் சோதித்தல்.

கூர்மையில்லோன் kūrmai-y-illōṉ, *n.* <id.+. Dullard, stupid person; மந்தன். (பிங்.)

கூர்வாங்கு-தல் kūr-vāṅku-, *v. tr.* <கூர் +. To sharpen the edge, whet; ஆயுதம் முதலிய வற்றைக் கூர்மையாக்குதல். *Loc.*

கூர்வாயிரும்பு kūr-vāy-irumpu, *n.* <id.+. Knife blade fastened to a piece of wood for cutting vegetables; அரிவாள்மணை. (பிங்.)

கூர்வை kūrvai, *n.* perh. id. Transom, beam across the stern post of a ship; கப்பலின் துறுக்குக்கட்டை. *Naut.*

கூரணம் kūraṇam, *n.* perh. id.+அணவு-. Coromandel gendarussa. See கோடகசாலை. (மலை.)

கூரம்[1] kūram, *n.* perh. id. 1. See கோடகசாலை. (மலை.) 2. cf. கூலம்[1]. cf. *kāra-vallī*. Balsam pear. See பாகல். (தைலவ. பாயி. 59.)

கூரம்[2] kūram, *n.* <*krūra*. 1. Cruelty, severity; கொடுமை. கூரமிக்கவன் (தேவா. 893. 5). 2. Envy, jealousy; பொறாமை. (திவா.)

கூரம்[3] kūṟam, *n.* perh. *kūrmikā*. A kind of stringed musical instrument; யாழ். கூரநாண் குரல் (பரிபா. 19. 44.)

கூரம்பு kūr-ampu, *n.* <கூர்+. A hell; ஓர் நரகம். கூரம்பு வெம்மணல் (ஏலா. 67).

கூரல்[1] kūral, *n.* <குரல். (பிங்.) 1. Woman's hair; பெண்களது தலைமயிர். 2. Feathers; இறகு. (பிங்.)

கூரல்[2] kūral, *n.* A large fish from whose intestines is made a glue called *paṇṇai*; பண்ணையென்னும் பசை செய்தற்கு உதவும் பெரு மீன்வகை. (W.)

கூரறுக்கும்வாள் kūr-aṟukkum-vāḷ, *n.* <கூர் +. Dovetail saw; இரம்பவகை. (C. E. M.)

கூரன்[1] kūraṉ, *n.* <கூர். cf. *kūra*. A bearded kind of paddy; நெல்வகை. (W.)

கூரன்[2] kūraṉ, *n.* perh. குரன். cf. *kukkura*. Dog; நாய். (பிங்.)

கூராணி kūr-āṇi, *n.* <கூர்+. Sharp nail or pin; ஆணிவகை. (W.)

கூராம்பாய்ச்சி kūrām-pāycci, *n.* See கூராம்பிளாச்சு.

கூராம்பிளாச்சு kūrām-piḷāccu, *n.* <கூர்+. A kind of pointed wooden shovel for grubbing up the earth; மண்கோத்தும் மரக்கருவி. (J.)

கூரியம் kūriyam, *n.* <கூர்-மை. Sharpness; கூர்மை. (யாழ். அக.)

கூரியவன்னி kūriya-vaṉṉi, *n.* <id.+. Ceylon leadwort. See கொடிவேலி. (சங். அக.)

கூரியன் kūriyaṉ, *n.* <id. 1. Sharp, clever person; கூர்மையுள்ளவன். கூரியருங் கூரிய ரை யல்லாரை (சிவதரு. பாயிர. 6). 2. The planet Mercury; புதன். சுக்கில பக்க மேவுங் கூரியன் (சேதுபு. இராமனரு. 87).

கூரிலவணம் kūr-ilavaṇam, *n.* <id.+. Salt taken from urine; அமரியுப்பு. (W.)

கூருமி kūr-umi, *n.* <கூர்+. Sharp tip of the husk; உமி மூக்கு. (W.)

கூரெள் kūr-eḷ, *n.* <id.+. A variety of sesame, s. sh., *Sesamum indicum;* எள்வகை.

கூரை kūrai, *n.* [M. *kūra*.] 1. Sloping roof, commonly thatched with grass or palm leaf; இறப்பு. குறுங்கூரைக் குடிநாப்பண் (பட் டினப். 81). 2. Small hut, shed, cottage; சிறு குடில். (பு. வெ. 10, முல்லைப். 9, உரை.)

கூரைக்கட்டு kūrai-k-kaṭṭu, *n.* <கூரை+. Thatched building; கூரைவீடு. (W.)

கூரைக்கொட்டில் kūrai-k-koṭṭil, *n.* <id. +. Thatched cattle-shed; மாட்டுக்கொட்டில்.

கூரைதட்டு-தல் kūrai-taṭṭu-, *v. intr.* <id. +. To tap the roof for joy, as the uncle or other relations do when a boy is born; ஆண் பிள்ளை பிறந்தமைபற்றி மாமனே அல்லது மற்றை உற் றோரோ மகிழ்ச்சிக்குறியாகக் கூரையைத்தட்டுதல். (J.)

கூரைவீடு kūrai-vīṭu, *n.* <id.+. Thatched building; ஓலையாலேனும் புல்லாலேனும் வேய்ந்த வீடு.

கூலக்கடை kūla-k-kaṭai, *n.* <கூலம்[1]+. Grain bazaar; பலதானியக்கடை. (சிலப். 14, 211, உரை.)

கூலங்கஷமாய் kūlaṅkaṣam-āy, *adv.* <*kūlaṅ-kaṣa*+. Lit., washing off both the banks. Completely; [இரண்டுகரையும் உராய்ந்து கொண்டு] முழுதும்.

கூலபிந்து kūlapintu, *n.* cf. *kālatindu*. Strychnine tree. See எட்டி. (சங். அக.)

கூலம்[1] kūlam, *n.* <*kula*. 1. Grains, especially of 18 kinds, viz., நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, துவரை, இராகி, எள்ளு, கொள்ளு, பயறு, உழுந்து, அவரை, கடலை, துவரை, மொச்சை; நெல்முதலிய பதினெண்வகைப் பண்டம். கூலங்குவித்த கூலவீதியும் (சிலப். 14, 211). 2. Asparagus bean. See காராமணி. (திவா.) 3. Street having shops and stalls on either side, bazaar street; கடைத்தெரு. விளக்கொளி பரந்த வெறிகமழ் கூலத்து (பெருங். உஞ்சைக். 33, 82). 4. Confectionery; பண்ணிகாரம். (பிங்.) 5. cf. *kaṭhilla*. Balsam pear. See பாகல். (திவா.)

கூலம்[2] kūlam, *n.* <*kūla*. 1. Bank of a river or tank, seashore; நீர்க்கரை. (திவா.) 2.

Ridge in a paddy field; வரம்பு. (பிங்.) 3. Regulation, rule; முறை. கூல நீங்கிய விராக்கதப் பூசுரர் (கம்பரா. பிரமாத். 164).

கூலம்[3] kūlam, *n.* <*lāṅgūla.* 1. Tail of a quadruped; விலங்கின் வால். (திவா.) 2. Monkey; குரங்கு. (பிங்.)

கூலம்[4] kūlam, *n.* prob. *kula.* 1. Cow; பசு. (பிங்.) 2. Elk; மரை. (W.)

கூலவாணிகன்சாத்தனார் kūla-vāṇikaṉ-cāttaṉār, *n.* <கூலம்[1]+. The trader-poet who wrote Maṇi-mēkalai; கூலவியாபாரஞ்செய்தவரும் மணிமேகலையை இயற்றியவருமான சங்கப்புலவர்.

கூலி kūli, *n.* [T. K. M. Tu. *kūli.*] 1. Wages, pay; வேலைக்குப் பெறும் ஊதியம். முயற்சி மெய்வருத்தக் கூலி தரும் (குறள், 619). 2. Fare, hire, freight; வாடகை. (W.) 3. See கூலிக்காரன். *Colloq.*

கூலிக்காரன் kūli-k-kāraṉ, *n.* <கூலி+ [K. *kūlikāra*, M. *kūlikkāran.*] Cooly, day-labourer; கூலிக்காக வேலைசெய்பவன்.

கூலிக்குமாரடி-த்தல் kūlikku-mār-aṭi-, *v. intr.* <id.+மார்பு+. Lit., to beat the breasts for hire, at a funeral. To work insincerely; மனமின்றித் தொழில் செய்தல். *Colloq.*

கூலிப்படை kūli-p-paṭai, *n.* <id.+. 1. Mercenary force, one of *aṟu-vakai-p-paṭai*, q.v.; கூலிக்கு அமர்த்தும் சேனை. (குறள், 762, உரை.) 2. Company of hired labourers; கூலிக்காரரின் கூட்டம். *Colloq.*

கூலிப்பாடு kūli-p-pāṭu, *n.* <id.+. See கூலிப்பிழைப்பு.

கூலிப்பிழைப்பு kūli-p-piḻaippu, *n.* <id. +. Life of a hired labourer, making a living by day-labour; அற்றைக்கூலிபெற்றுச் செய்யுஞ் சீவனம். (W.)

கூலியாள் kūli-y-āḷ, *n.*<id.+. [M. *kūliyāḷ.*] Hired labourer, cooly; கூலிக்காரன். கூலியாளாய் வன்கரை யடைப்பா ரில்லை (திருவாத. பு. மண்சு மந்த. 28).

கூவகர் kūvakar, *n.* <*kūpaka.* Inhabitants of Kūpaka country; கூபகநாட்டார். கூவகர் சாவகர் (கலிங். புதுப். 316).

கூவநூல் kūva-nūl, *n.* <*kūpa*+. See கூவனூல். (சங். அக)

கூவம் kūvam, *n.* <*kūpa.* Well; கிணறு. கூவத்தின் சிறுபுனலைக் கடலயிர்த்த தொவ்வாதோ (கம்பரா. விபீடண. 103).

கூவமா kūvamā, *n.* A kind of tree; மரவகை. (J.)

கூவல்[1] kūval, *n.* <கூவு-. Crying aloud, bawling, crowing; கூவுகை. தேவிமாரொடுங் கூவல் செய் தொழிலினர் (கம்பரா. சடாயுவுயிர். 31).

கூவல்[2] kūval, *n.* <*kūpa.* 1. Well; கிணறு. கூவலன்ன விடாகம் (மலைபடு. 366). 2. Hollow, hole, pit; குழி. (W.)

கூவனூல் kūvaṉūl, *n.* <கூவல்+நூல். Science of determining sites suitable for sinking wells; கிணறுவெட்டுதேற்குரிய இடமுதலியவற்றை யுணர்த்தும் நூல்.

கூவனூலோர் kūvaṉūlōr, *n.* <கூவனூல். Persons skilled in the science of *kūvaṉūl*; கூவனூலில் வல்லவர். (திவா.)

கூவியர் kūviyar, *n.* perh. கூவு-. 1. Cooks; உணவு சமைப்போர். (திவா.) 2. Pancake sellers; அப்பவாணிகர். தீஞ்சேற்றுக் கூவியர் தூங்குவன ருறங்க (மதுரைக். 627).

கூவிரம்[1] kūviram, *n.* cf. கூவிளம். 1. Bael, m. tr., *Aegle marmelos*; வில்வம். (பிங்.) 2. A mountain tree; மலைமரவகை. (குறிஞ்சிப். 66.)

கூவிரம்[2] kūviram, *n.* <*kūvara.* 1. Ornamental stake in the form of a lotus-bud fixed in front of the seat in a chariot and held by the hand for support; தேரில் ஆசனத்துக்கு எதிராக நடப்பெற்றுக் கையாற்பற்றிக்கொள்ளுதற்கு உதவுவதும் தாமரைமொட்டு வடிவில் அமைந்ததுமான ஓர் உறுப்பு. கூவிரஞ் செறி . . . தேரொடும் (கம்பரா. இராவ 176). 2. Chariot, car: தேர். (பிங்.) 3. Streamers or banners of a car; தேர்க்கொடி. (சூடா.) 4. Decorated pinnacle of a chariot; தேரின் தலையலங்காரம். கூவிரத்திகிரி யூர்வோன் (ஞானா. 7, 17).

கூவிரி kūviri, *n.* prob. *kūvarin.* Lit., one having *kūviram.* Chariot, car; [கூவிரத்தை யுடையது] தேர். (திவா.)

கூவிளங்கனி kūviḷaṅ-kaṉi, *n.*<கூவிளம்+. Mnemonic for the metrical foot of *nēr-nirai-nirai* (- ⏑⏑ ⏑⏑); நேர் நிரை நிரை குறிக்கும் வாய்பாடு. (காரிகை, உறுப். 7, உரை.)

கூவிளங்காய் kūviḷaṅ-kāy, *n.* <id.+. Mnemonic for the metrical foot of *nēr-nirai-nēr* (-⏑⏑ -); நேர்நிரை நேர் குறிக்கும்வாய்பாடு. (காரிகை, உறுப். 7, உரை.)

கூவிளந்தண்ணிழல் kūviḷan-taṇṇiḻal, *n.* <id.+. Mnemonic for the metrical foot of *nēr-nirai-nēr-nirai* (-⏑⏑-⏑⏑); நேர் நிரை நேர் நிரை குறிக்கும் வாய்பாடு. (காரிகை, உறுப் 8, உரை.)

கூவிளந்தண்பூ kūviḷan-taṇ-pū, *n.* <id. +. Mnemonic for the metrical foot of *nēr-nirai-nēr-nēr* (-⏑⏑--); நேர் நிரை நேர் நேர் குறிக்கும் வாய்பாடு. (காரிகை, உறுப். 8, உரை.)

கூவிளநறுநிழல் kūviḷa-naṟu-niḻal, *n.* <id.+. Mnemonic for the metrical foot of *nēr-nirai-nirai-nirai* (-◡◡◡◡◡◡); நேர் நிரை நிரை நிரை குறிக்கும் வாய்பாடு. (*காரிகை, உறுப்.* 8, *உரை.*)

கூவிளநறும்பூ kūviḷa-naṟum-pū, *n.* <id. +. Mnemonic for the metrical foot of *nēr-nirai-nirai-nēr* (-◡◡◡◡-); நேர் நிரை நிரை நேர் குறிக்கும் வாய்பாடு. (*காரிகை, உறுப்.* 8, *உரை.*)

கூவிளம் kūviḷam, *n.* perh. *ku*+*vil.* [M. *kūvaḷam.*] 1. Bael. See வில்வம். (குறிஞ்சிப். 65.) 2. A species of garlic pear. See பெரிய மாவிலங்கம். (L.) 3. Mnemonic for the metrical foot of *nēr-nirai* (-◡◡); நேர் நிரை குறிக்கும் வாய்பாடு. (*காரிகை, உறுப்.* 7, *உரை.*) 4. See கற்பாஷாணம். (*சங். அக.*) 5. See கோளகபாஷாணம். (*சங். அக.*)

கூவிளி kū-viḷi, *n.* <கூவு-+விளி-. 1. Long continuous roar or trumpet, as of an elephant; கூப்பிடும் ஓசை. *நிறையழி யானை நெடுங்கூவிளியும்* (மணி. 7, 67). 2. Calling distance; கூப்பிடுதூரம். *அஞ்சு கூவிளிச் சேய்த்தென்ன* (திருவிளை. யானை. 29).

கூவிளை kūviḷai, *n.* 1. See கூவிளம், 1. (திவா.) 2. See கூவிளம், 5. (*யாழ். அக.*)

கூவு-தல் kūvu-, *5 v.* cf. *kū.* [T. *kūyu*, K. *kūgu*, M. *kūvu.*] *intr.* 1. To crow, as a cock; to scream, as a peacock; to cry, as a cuckoo or birds in general; பறவைகூவுதல். *கூவின பூங்குயில்* (திருவாச. 20, 3). 2. To call out, whoop, halloo; சத்தமிடுதல். 3. To trumpet, as an elephant; யானை முதலியன பிளிறுதல். *கூவ்கைமதமா* (பரிபா. 10, 49). 4. To cry out for help; ஓலமிடுதல். *வந்த வீரன் கூவிய சசியைநோக்கி* (கந்தபு. மகாசாஸ். 6).—*tr.* To call, summon; அழைத்தல். *மழலை முற்றாத விளஞ்சொல்லா ளுன்னைக் கூவுகின்றான்* (திவ். பெரியாழ். 1, 4, 5).

கூவுதூரம் kūvu-tūram, *n.* <கூவு-+. Calling distance; கூப்பிடுதூரம். *Loc.*

கூவுவான் kūvuvāṉ, *n.* <id. Lit., that which crows. Cock; [கூவுதல்செய்வோன்] சேவல். (W.)

கூவை[1] kūvai, *n.* [Tu. *kūvě.*] East Indian arrowroot, *Curcuma angustifolia;* செடிவகை. *புலவுவிற் பொலிகூவை* (மதுரைக். 142).

கூவை[2] kūvai, *n.* <குவை. Crowd, horde, gathering; கூட்டம். *விற்கூளியர் கூவைகாணின்* (மலைபடு. 422).

கூவைநீறு kūvai-nīṟu, *n.* <கூவை[1]+. Arrowroot flour. See கூகைநீறு. *கூவைநீறுங் கொழுங்கொடிக் கவலையும்* (சிலப். 25, 42).

கூழ்[1] kūḻ, *n.* <குழை[1]-. <*kūra.* [T. *kūḍu*, K. M. *kūḷ*, Tu. *kūḷu.*] 1. Thick gruel, porridge, semiliquid food; மா முதலியவற்றிற் குழையச் சமைத்த உணவுவகை. (திவா.) 2. Food; பலவகையுணவு. *கொளக்கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்* (புறநா. 70, 7). 3. cf. *kuḍ.* Growing crop; பயிர். (திவா.) 4. cf. *kōśa.* Wealth; பொருள். *கூழுங் குடியு மொருங்கிழக்கும்* (குறள், 554). 5. cf. *kuś.* Gold; பொன். (திவா.)

கூழ்[2]**-த்தல்** kūḻ-, *11 v. tr.* prob. கூழ். To doubt, suspect; சந்தேகித்தல். *அவனிவனென்று கூழேன்மின்* (திவ். திருவாய். 3, 6, 9).

கூழ்ப்பசை kūḻ-p-pacai, *n.* <கூழ்+. 1. Rice gruel for starching clothes; கஞ்சிப்பசை. 2. Paste; மாப்பசை.

கூழ்ப்பு kūḻppu, *n.* <கூழ்-. Doubt, suspicion; சந்தேகம். *எல்லையிலாதன கூழ்ப்புச் செய்யு மத்திற நிற்க* (திவ். திருவாய். 8, 2, 6).

கூழ்படு-தல் kūḻ-paṭu-, *v. intr.* <கூழ்+. To be confused; கலக்கமுண்டாதல். *செல்படையின்றிக் கூழ்படவறுப்ப* (பெருங். மகத. 27, 31).

கூழ்முட்டை kūḻ-muṭṭai, *n.* <id.+. Addled egg; கெட்டுப்போன முட்டை.

கூழ்முன்னை kūḻ-muṉṉai, *n.* cf. கூழாமணி. Ovate-leaved firebrand teak of the Dekhan, s. tr., *Premna corymbosa;* தென்னாட்டிலுள்ள ஒரு சிறுமரவகை. (மலை.)

கூழ்வடகம் kūḻ-vaṭakam, *n.* <கூழ்+. See கூழ்வடாம்.

கூழ்வடாம் kūḻ-vaṭām, *n.* <id.+. Wafer cakes of flour, seasoned and dried in the sun; அரிசிமாக்கூழால் செய்யப்படும் வடகவற்றல்.

கூழ்வரகு kūḻ-varaku, *n.* <id.+. Ragi. See கேழ்வரகு. (மலை.)

கூழக்கெளுத்தி kūḻa-k-keḷutti, *n.* prob. கூழை+கெளிறு. A riverfish, silvery, attaining 4 ft. in length, *Pangasius buchanani;* கெளுத்தி மீன்வகை.

கூழங்கை kūḻaṅ-kai, *n.* <கூழை+அம்+கை[5]. Maimed hand; முடமான கை. *கூழங்கைத் தம்பிரான்.*

கூழம் kūḻam, *n.* <கூலம்[1]. Sesame. See எள். (மலை.)

கூழன்[1] kūḻaṉ, *n.* <குழை-. 1. See கூழன் பலா. 2. See கூழான். (*சங். அக.*)

கூழன்[2] kūḻaṉ, *n.* <கூழ்-. One who is devoid of clear understanding; தெளிந்த அறிவில்லாதவன். (பெருங். பக். 732, நீலகேசியுரை.)

கூழன்பலா kūḻaṉ-palā, *n.* <கூழன்+. A kind of jack tree; பலாவகை. (J.)

*கூழா*¹*-தல்* kūḻ-ā-, *v. intr.* <கூழ்+. 1. To be over-boiled, as rice; சோறுகுழைதல். *Colloq.* 2. To become addled, as eggs; முட்டை பதனழிதல்.

*கூழா*² kūḻā, *n.* Sebesten. See நறுவிலி. (J.)

கூழாங்கல் kūḻ-āṅ-kal, *n.* perh. கூழ்+. Shingles, loose pebbles, especially those on the sea-shore; வழுவழுப்பான சிறு கல்வகை.

கூழாம்பாணி kūḻ-ām-pāṇi, *n.* <id.+. Treacle, molasses; சர்க்கரை கரைந்து கூழ்போ லுள்ள நீர். (J.)

கூழாமட்டி kūḻāmaṭṭi, *n.* <id.+. Dull, cowardly man; மந்தபுத்தியும் அச்சமுமுள்ளவன். (W.)

கூழாமணி kūḻāmaṇi, *n.* See கூழ்முன்னை. (மலை.)

*கூழை*¹ kūḻai, *n.* <குழை-. 1. Woman's hair; பெண்டிர் தலைமயிர். *கூழை விரித்தல்* (தொல். பொ. 262). 2. Feathers, plumage; இறகு. (திவா.) 3. Peacock's tail; மயிற்றோகை. (பிங்.) 4. Tail; வால். *புன்கூழையங் குறுநரி* (கல்லா. 89, 18). 5. Middle, centre; நடு. (திவா.)

*கூழை*² kūḻai, *n.* prob. *khulla.* 1. That which is short; குட்டையானது. *நாய் கூழைவா லாற் குழைக்கின்றதுபோல* (திவ். திருவாய். 9, 4, 3). 2. [T. *kūḻa*, K. *kūḻe*, Mhr. *khuḻa*.] Dullness of intellect, stupidity; புத்திக்குறைவு. *கூழைமாந்தர்தஞ் செல்கதி* (தேவா. 462, 9). 3. A mode of versification. See கூழைத்தொடை. *ஈறிலி கூழை* (காரிகை, உறுப். 19). 4. Dwarf snake. See கூழைப்பாம்பு. (சங். அக.)

*கூழை*³ kūḻai, *n.* <குழை¹-. 1. Mud, mire; சேறு. *கூழை பாய்வயல்* (தேவா. 473, 8). 2. cf. *kuś.* Gold; பொன். (அக. நி.)

*கூழை*⁴ kūḻai, *n.* cf. *kūla.* 1. Rear of an army; படையின் பின்னணி. *கூழைதார் கொண்டி யாம் பொருதும்* (புறநா. 88, 1). 2. Hindmost row, as of a herd of cows; கடைவரிசை. *அவன்றான் . . . பிற்கூழையிலே நிற்குமாய்த்து* (ஈடு, 9, 9, ப்ர.).

கூழைக்கடா kūḻai-k-kaṭā, *n.* <கூழை²+. See கூழைக்கிடா. *கொக்கு கோழி கூழைக்கடாமுகம்* (பரத. பாவ. 36).

கூழைக்கிடா kūḻai-k-kiṭā, *n.* <id.+. 1. Pelican, as tailless, *Pelecanus onocrotalus;* நீர் வாழ்பறவை வகை. 2. Tailless he-buffalo; வாலில் லாத எருமைக்கடா.

கூழைக்கும்பீடு kūḻai-k-kumpīṭu, *n.* <கு ழை-+. Hypocritical, insincere obeisance; போலி வணக்கம்.

கூழைக்குறும்பு kūḻai-k-kuṟumpu, *n.* <id. +. Secret mischief; பிறர் அறியாமற் செய்யுஞ் சேஷ்டை.

கூழைக்கை kūḻai-k-kai, *n.* <கூழை²+. Maimed hand; குறைக்கப்பட்ட கை.

கூழைக்கொம்பன் kūḻai-k-kompaṉ, *n.* <id.+. Ox with blunt horns; மழுங்கின கொம் புள்ள மாடு.

கூழைத்தனம் kūḻai-t-taṉam, *n.* <கூழை¹ +. [T. *kūḻatanamu*, K. *kūḻatana*.] False humility, dissimulation; போலியாகக் குழைந்து காட்டுகை. *நீங்கள் கோயிற்கூழைத்தனம் அடிக்கிறபடி இதுவோ* (திருவிருத். 99, வ்யா. 468).

கூழைத்தொடை kūḻai-t-toṭai, *n.* <கூழை² +. (Pros.) Versification which requires *mōṉai*, etc., to occur in the first three feet of a four-footed line of a verse; அளவடியுள் இறு திச் சீர்க்கணின்றி ஏழ்ந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது. (இலக். வி. 723, உரை.)

கூழைநரி kūḻai-nari, *n.* <id.+. Short-tailed fox; வால் குட்டையான நரி.

கூழைப்பாம்பு kūḻai-p-pāmpu, *n.* <id.+. Dwarf snake, whose head is not marked off from the body by constriction or neck, *Calamaridæ;* தலைக்கும் உடலுக்கும் இடையில் கழுத்தின்றி ஒன்றுபோல் தடித்துள்ள குள்ளமான பாம்புவகை. (M. M. 224.)

கூழைப்பார்வை kūḻai-p-pārvai, *n.* <கூ ழை¹+. Sly look; வஞ்சகப்பார்வை. *இன்றுணை நாரைக்கிரைதேடிக் கூழைப் பார்வைக் கார்வயல் மேயும்* (திவ். பெரியதி. 9, 6, 3).

கூழைமுட்டை kūḻai-muṭṭai, *n.* <கூழ்+. Rotten egg; அழுகின முட்டை. (R.)

கூழைமை kūḻaimai, *n.* <id. 1. Duties, business; கடமை. *கூத்தனுக் காட்பட் டிருப்பதன்றோ நந்தம் கூழைமையே* (தேவா. 11, 5). 2. Fondling, caressing; குழைந்துநடக்கை. *கொவ்வைக்கனிவாய் கொடுத்துக் கூழைமைசெய்யாமே* (திவ். பெரியாழ். 3, 2, 5).

கூழையன் kūḻaiyaṉ, *n.* <கூழை². 1. Short, stunted person; குள்ளன். 2. Dolt, booby; முழு மடையன்.

கூழைவாலன் kūḻai-vālaṉ, *n.* <id.+. Short-tailed snake which lives underground belonging to the family of *uropeltidæ;* குட்டை யான பாம்புவகை. (M. M. 224.)

கூள்(ளு)-தல் kūḷ-, 2 *v. intr.* <*kul.* To crowd together, assemble, muster; திரளுதல். *கூண்டன கரிகள்* (இரகு. மீட்சி. 42).

கூளப்படை kūḷa-p-paṭai, *n.* <கூளம்+. Army constituted of various classes of persons; **பலவகையினர் கலந்த கூட்டுப்படை.** (சூடா. 6, 6, 1, அரும்.)

கூளம் kūḷam, *n.* <கூள்-. [M. *kūḷam.*] 1. Broken pieces of straw, of hemp; chaff; **சண்டு.** *கூளம்பிடித் தெள்ளின் கோதுவைப்பான்* (தமிழ் நா. 83). 2. Sediment, lees, dregs, chips; **திப்பி.** (J.)

கூளன் kūḷaṉ, *n.* <கூளம். Worthless, useless person; **பயனற்றவன்.** *உனடிபேணுக் கூளன்* (திருப்பு. 109).

கூளி[1] kūḷi, *n.* <கூள்-. 1. Company, multitude; **கூட்டம்.** (பிங்.) 2. Family; **குடும்பம்.** (பிங்.) 3. Commander of an army; **படைத்தலைவன்.** (சூடா.) 4. [M. *kūḷi.*] Devil, demon; **பேய்.** *கணங்கொள் கூளியொடு* (பட்டினப். 259). 5. Dwarfish, malformed race of goblins constituting the army of Śiva; **சிவகணங்களாகிய பூதம்.** 6. Large species of eagle; **பெருங்கழுகு.** (W.)

கூளி[2] kūḷi, *n.* prob. Pkt. *khulla*. 1. Dwarfishness, shortness; **குள்ளம்.** (அக. நி.) 2. Fault; **குற்றம்.** (சூடா.) 3. Unchaste woman; **கற்பில்லாதவள்.** (சூடா.)

கூளி[3] kūḷi, *n.* [K. *gūḷi.*] 1. Ox; **எருது.** (பிங்.) 2. Covering bull; **பொலியெருது.** (பிங்.)

கூளிப்பனை kūḷi-p-paṉai, *n.* prob. கூளி[1] +. Talipot palm. See **தாளிப்பனை.** (சங். அக.)

கூளியர் kūḷiyar, *n.* <id. 1. Soldiers, warriors; **படைவீரர்.** (பிங்.) 2. Hunters, those who live by chase; **வேட்டுவோர்.** *காய்சின முன்பிற் கடுங்கட் கூளியர்* (மதுரைக். 691). 3. Highway robbers, plunderers; **வழிப்பறி செய்யுங் கள்வர்.** *குரங்கன்ன புன்குறுங் கூளியர்* (புறநா. 136, 13). 4. Mountaineers; **குறவர்.** (பிங்.) 5. Attendants; **ஏவல் செய்வோர்.** *வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்* (திருமுரு. 282). 6. Friends; **சிநேகிதர்.** (சூடா.)

கூற்றம்[1] kūṟṟam, *n.* <கூறு[2]. 1. Species, class; **பகுதி.** *கூற்றங்கள் பலவுந் தொக்க கூற்றத்தில்* (சீவக. 1143). 2. Lit., one who separates soul from body. Yama; [**உயிரை உடலினின்று பிரிப்பவன்**] **யமன்.** *மாற்றருங் கூற்றம்* (தொல். பொ. 79). 3. That which ruins, destroys; **அழிவுண்டாக்குவது.** *அல்லவை செய்வார்க் கறங்கூற்றம்* (நான் மணி. 84). 4. Division of a country, in ancient times; **தேசத்தின் ஒருபகுதி.** *மிழலைக்கூற்றத்தொடனே . . . முத்தூற்றுக் கூற்றத்தைக்கொண்ட* (புறநா. 24, உரை).

கூற்றம்[2] kūṟṟam, *n.* <கூறு-. [M. *kūṟṟam.*] Word; **வார்த்தை.** *அறைகின்ற கூற்றமு மொன்றே* (திருவிளை. பழியஞ். 27).

கூற்றரிசி kūṟṟarici, *n.* <கூறு[2]+. Pounded rice; **குத்தலரிசி.** *எற்சோறு கூற்றரிசி* (Insc.).

கூற்றன் kūṟṟaṉ, *n.* <id. [M. *kūṟṟan.*] Yama, the god of death; **யமன்.** *வெட்டுங் கடாமிசைத் தோன்றும் வெங்கூற்றன்* (கந்தரலங். 65).

கூற்றன்கொலையோன் kūṟṟaṉ-kolaiyōṉ, *n.* prob. கூற்றன்+. Blue vitriol; **துரிசு.** (சங். அக.)

கூற்றன்வாய் kūṟṟaṉ-vāy, *n.* <கூறு[2]+. Main sluice; **தலைமதகு.** *கூற்றன்வாய்மீதே உவன்றிசெய்து நீர்கொண்டு போந்து* (S.I.I. ii, 521).

கூற்று[1] kūṟṟu, *n.* <கூறு-. 1. Utterance, declaration, proclamation; **கூறுகை.** 2. Word, speech; **மொழி.** *கூற்றுக் கிளியே* (ஞானா. பாயி. 1, 8). 3. That which is fit to be spoken; **கூறத்தக்கது.** *திருநாமங் கூறுவதே யாவர்க்குங் கூற்று* (திவ். இயற். நான். 49)

கூற்று[2] kūṟṟu, *n.* <கூறு[2]. 1. Yama, the god of death; **யமன்.** *கூற்றுடன்று மேல்வரினும்* (குறள், 765). 2. Kāla, the chief attendant of Yama; **காலன்.** (பிங்.)

கூற்றுதைத்தோன் kūṟṟutaittōṉ, *n.* <கூற்று[2]+உதை-. Lit., one who trampled Yama under foot. Śiva; [*யமனைக் காலால் உதைத்தவன்*] **சிவன்.** *கூற்றுதைத்தார நெல்வேலி குறுகினரே* (பெரியபு. திருஞான. 886).

கூற்றுவநாயனார் kūṟṟuva-nāyaṉār, *n.* <id. +. A canonized Śaiva saint, one of 63; **அறுபத்துமூவர் நாயன்மாருள் ஒருவர்.** (பெரியபு.)

கூற்றுவன் kūṟṟuvaṉ, *n.* <கூறு[2]. Yama, the god of death; **யமன். இவன்** *வெங்கூற்றுவன்* (நைடத. நளன்றூது. 16).

கூற்றுவன்தங்கைச்சி kūṟṟuvaṉ-taṅkaicci, *n.* Amaranth. See **சிறுகீரை.** (சங். அக.)

கூறடை-த்தல் kūṟaṭai-, *v. tr.* <கூறு[2]+அடை[2]-. To divide into lots; **பகுதியாகப் பிரித்தல்.** *கூறடைத்த பரிசே* (S.I.I. i, 65).

கூறி kūṟi, *n.* Black rock-cod, silvery-grey, attaining 30 in. in length, *Chrysophrys berda;* **கறுப்புமட்டிவாய் மீன்.**

கூறிட்டுமொழிதல் kūṟiṭṭu-moḻital, *n.* <கூறு[2]+. Answering questions seriatim; **வினாக்களுக்கு ஏற்பப் பகுத்துக்கூறும் விடை.** *மிகக் கூறிட்டு மொழிதலென விளம்புவர்* (மணி. 30, 243).

கூறிடு-தல் kūṟiṭu-, *v. tr.* <id.+. 1. To cut into pieces or slices, bisect, divide; **துண்டாக்குதல்.** 2. To distribute in portions or

small quantities; பங்கிடுதல். மலைந்தார்க்கு மொற் றுயற் றுரைத்தார்க்கும் . . . புலவர்க்கும் . . . கூறிட் டார் கொண்டநிரை (பு. வெ. 1, 14).

கூறியதுகூறல் kūṟiyatu-kūṟal, *n.* <கூறு- +. Tautology, a defect in literary composition, one of ten *nūr-kuṟṟam*, q.v.; முன்மொழிந்ததனே யே பயனின்றிப் பின்னும்மொழிவதாகிய நூற்குற்றம். கூறியதுகூறன் மாறுகொளக்கூறல் (தொல். பொ. 664).

கூறியான் kūṟiyāṉ, *n.* <id. Headman of the *civiyār* or palanquin bearers proclaiming the titles of the person seated in it; சிவி கையில் ஏறிச்செல்லும் செல்வனது விருதுகளை யெடுத் துக்கூறுவோனுகிய சிவியார் வகுப்பினரின் தலைவன். (J.)

கூறு[1]-தல் kūṟu-, *5 v. tr.* [M. *kūṟu.*] 1. To speak, say, declare, assert; சொல்லுதல். கூறிய முறையின் (தொல். சொல். 70). 2. To cry out the price, as an auctioneer; விலைகூறுதல். (பிங்.) 3. To cry aloud, promulgate, proclaim; பிரசித்தஞ்செய்தல். (W.)

கூறு[2] kūṟu, *n.* prob. குறை[2]-. [K. M. *kūṟu.*] 1. Section, division, classification; கூறுபாடு. கூறிட்டு மொழிதல் (மணி. 30, 236). 2. Part, portion, lot, share; பங்கு. காற்கூறு காய்நீரால் (பதார்த்த. 78). 3. Broken pieces of anything; பிளவுபட்டதுண்டு. நெஞ்சம் கூறுகியோடாத இத்துணையே (கம்பரா. நகர்நீங். 104). 4. Half; பாதி. (பிங்.) 5. Properties, as of heat; effects; characteristic symptoms, as of disease; தன்மை. வியாதியின்கூறு அறிந்து மருந்து கொடு.

கூறு[3] kūṟu, *n.* perh. குறு-மை. Sesame. See எள். (மலை.)

கூறுகாசு kūṟu-kācu, *n.* <கூறு[2]+. Share-money; பங்குத்தொகை. *Loc.*

கூறுகொள்(ளு)-தல் kūṟu-koḷ-, *v. tr.*<id. +. [T. *kūrukonu.*] To stuff, cram; வாயில் திணித்துக்கொள்ளுதல். குழந்தை மண்ணைக் கூறுகொள் ளுகிறது. (W.)

கூறுச்சீட்டு kūṟu-c-cīṭṭu, *n.* <id. +. Deed of partition; பாகபத்திரம். *Loc.*

கூறுசீட்டு kūṟu-cīṭṭu, *n.* <id. +. See கூறுச் சீட்டு.

கூறுசெய்-தல் kūṟu-cey-, *v.* <id. +. *tr.* 1. To cut in pieces, divide; துண்டாக்குதல். 2. To distribute in portions or small quantities; பங்கிடுதல்.—*intr.* To exercise authority, as in the assessment of taxes, etc.; மணியம் பண்ணு தல். கூறுசெய்த ஊரிலே குறும்புசெய்து (அஷ்டாதச. 71).

கூறுசெய்வான் kūṟu-ceyvāṉ, *n.* <id. +. Lit., one who apportions. Village revenue-officer; மணியகாரன். ராஜாக்கள் ஊர்தோறுங் கூறு செய்வார்களை வைக்குமாபோலே (ஈடு, 5, 2, 8).

கூறுபடு-தல் kūṟu-paṭu-, *v. intr.* <id. +. To be divided; பிரிவுபடுதல்.

கூறுபடுத்து-தல் kūṟu-paṭuttu-, *v. tr.* Caus. of கூறுபடு-. To divide, analyse, classify; பிரிவுசெய்தல்.

கூறுபாடல் kūṟu-pāṭal, *n.*<கூறு-+. Vocal music; வாய்ப்பாட்டு. கூறுபாடலுங் குழலின் பாட லும் (கம்பரா. நாட்டுப். 56).

கூறுபாடு kūṟu-pāṭu, *n.* <கூறுபடு-. 1. Division, sub-division, classification; பாகுபாடு. 2. Portion, section; பகுதி. (திவா.) 3. Quality, nature; தன்மை. வியாதியின் கூறுபாடு தெரிந்து மருந்து கொடுக்க.

கூறுவிக்குறு-தல் kūṟuvikkuṟu-, *v. tr.*<கூறு விக்க+உறு-. To make another speak on one's behalf; பிறரைக்கொண்டு சொல்வித்தல். கொத்த விழ் கோதையாற் கூறுவிக்குற்றது (திருக்கோ. 263, கொளு).

கூறை kūṟai, *n.* <குறை[2]-. [M. *kūṟa.*] 1. Cloth, clothes, garment; ஆடை. அத்திட்ட கூறை யரைச்சுற்றி (நாலடி, 281). 2. See கூறைப்புடைவை.

கூறைகோட்படு-தல் kūṟai-kōṭ-paṭu-, *v. intr.* <கூறை+. To be robbed of one's clothes; ஆடையைப் பறிகொடுத்தல். இக்காட்டிற்போகிற்கூறை கோட்பட்டான் (நன். 383, மயிலை.).

கூறைநாடு kūṟai-nāṭu, *n.* <id. +. A village near Mayavaram noted for the manufacture of sarees; மாயவரத்திற்கு அருகில் சேலைகள் மிகுதியாக நெய்யப்படும் ஓர் ஊர்.

கூறைப்பாய் kūṟai-p-pāy, *n.*<id. +. Canvas sail; தோணிப்பாய். (W.)

கூறைப்புடைவை kūṟai-p-puṭaivai, *n.* <id. +. Cloth presented to the bride by the bridegroom's parents and worn by her before the *tāli* is tied; தாலிகட்டும் சமயத்திற்குமுன் மணமக ளுக்கு மணமகன் வீட்டார் கொடுக்கும் சேலை. *Brah.*

கூறைப்பை kūṟai-p-pai, *n.* <id. +. 1. Money-purse, made of cloth; துணியாற்செய்த பணப்பை. *Parav.* 2. Bag for keeping sarees; சேலைகள் வைக்கும் பை. தானே கூறைப்பையும் சுமந்து கொண்டுபோய் (ஈடு, 4, 1, 2).

கூறையுடுத்தல் kūṟai-y-uṭuttal, *n.* <id. +. Dressing the bride with the wedding cloth by the bridegroom's sister; நாத்தூனார் மணமகட்குக் கூறைப்புடைவை உடுத்துகை. *Brah.*

கூன் kūṉ, *n.* <கூனு-. [T. Tu. *gūnu*, K. M. *kūn.*] 1. Bend, curve; வளைவு. கூனிரும்பினிற் குறைத்து (நைடத. நாட்டுப். 10). 2. Hump on the back of the body; உடற்கூனல். (திவா.) 3. Humpback; கூனன். சிறுகுறுங் கூனுங் குறளுஞ் சென்று (சிலப். 27, 214). 4. Snail; நத்தை. (திவா.) 5. Owl; ஆந்தை. (உரி. நி.) 6. Cauldron; பெரும் பாத்திரம். குருதி சாறெனப் பாய்வது குரைகடற் கூனில் (கம்பரா. கிங்கர. 40). 7. Extra detached foot of a verse; செய்யுளில் அளவுக்குமேல்வரும் அசையுஞ் சீரும். சீர் கூனுதல் நேரடிக் குரித்தே (தொல். பொ. 361).

கூன்கிடை kūṉ-kiṭai, *n.* <கூன்+. Lying with the body disposed in a crooked posture, one of five *mey-k-kuṟṟam*, q.v.; ஐவகை மெய்க்குற்றங்களுள் ஒன்றாகிய உடல் கூனிக்கிடக்கை. (பிங்.)

கூன்பாண்டியன் kūṉ-pāṇṭiyaṉ, *n.* <id.+. The hunch-backed Pandya king, who was a contemporary of Tiru-ñāṉa-campantar; திருஞானசம்பந்தர்காலத்து அரசுசெய்த பாண்டியன்.

கூன்முதுகு kūṉ-mutuku, *n.* <id.+. Lit., back with a hunch. Tortoise shell; [கூனலான முதுகு] ஆமையோடு. (மூ. அ.)

கூன்வாள் kūṉ-vāḷ, *n.* <id.+. Scimitar, sickle; வளைவானவாள். (பிங்.)

கூனல் kūṉal, *n.* <id. See கூன், 1, 2, 3. கூனல் வான்கோடு நீட்டி (கம்பரா. வரைக். 34).

கூனலங்காய் kūṉal-aṅ-kāy, *n.* <கூனல்+. Green tamarind; புளியங்காய். கூனலங்காய் தினையவரை (திருவிளை. நாட்டு. 42).

கூனற்கிழவன் kūṉar-kiḻavaṉ, *n.* <id.+. Bent old man; உடல்வளைந்த முதியோன். கூனற் கிழவன் கொடுக்கும் பணயமதில் (விறலிவிடு.).

கூனன் kūṉaṉ, *n.* <கூன். [K. *kūna*, M. *kūnan.*] Humpback; கூனலுள்ளவன். (பிங்.)

கூனன்முதுகு kūṉaṉ-mutuku, *n.* <கூனல் +. See கூன்முதுகு. (பாலவா. 896.)

கூனாள் kūṉāḷ, *n.* <கூன். Hunch-backed woman; கூனி. (நன். 276, மயிலை.)

கூனி[1] kūṉi, *n.* <id. [K. M. *kūni.*] 1. Hunch-backed woman; கூனலுள்ளவள். கூனி தன்னொடு மணமனை புக்கு (சிலப். 3, 171). 2. Mantarai, a slave of Kaikēyi, who intrigued with her mistress on the eve of Rama's coronation and prevented it; இராமபிரான் முடிசூடுதலைச் சூழ்ச்சிசெய்து தடுத்த மந்தரை. 3. Rainbow; வானவில். கிழக்கில் ஆனிமாதம் கூனிபோட்டால் அறுபதுநாள் மழையில்லை. (J.) 4. See கூனியிறல். கூனிகொத்தி . . . கொக்கிருக்கும் பண்ணை (குற்றா. குற. 94).

கூனி[2] kūṉi, *n.* <பங்குனி. *Paṅkuṉi*, the 12th Tamil month, March-April; பங்குனி. ஆனி அடிகோலாதே கூனி குடிபோகாதே. *Pro.*

கூனி[3] kūṉi, *n.* <U. *khūnī.* Murder; கொலை. *Loc.*

கூனிதாரன் kūṉi-tāraṉ, *n.*<id.+. Murderer; கொலையாளி. *Loc.*

கேவலம் kēvalam, *n.* <*kēvala.* 1. Singleness, solitariness, isolation; தனிமை. (சூடா.) 2. Uniqueness; இணையற்றது. 3. Final emancipation, supreme bliss; மோக்ஷம். (பிங்.) 4. See கேவலஞானம். *திக்கறியப்பெற்றது கேவலம்* (திருநூற். 88). 5. That which is insignificant, common; அற்பமானது. *கேவலமல்ல விப்போர்* (பாரத. பதினெழ். 100). 6. Low status, meanness; தாழ்நிலை. *அவன் மிகக் கேவலமானவன்.* 7. Disgrace, dishonour; அவமானம். *அவரைக் கேவலம்பண்ணினான்.* 8. See கேவலாவத்தை. *கேவலஞ் சகலஞ் சுத்த மென்றமூன் றவத்தை யான்மா மேவுவன்* (சி. சி. 4, 37).

கேவலவுணர்வு kēvala-v-uṇarvu, *n.* <id. +. Knowledge of the Supreme Truth; பரஞானம். (குறள், 352, உரை.)

கேவலன் kēvalaṉ, *n.* <id. 1. One who attempts to obtain final emancipation; கைவல்ய பதவியடைய முயல்பவன். *கேவலன் . . . யாவதாத்ம பாவி அசரீரியாய்க்கொண்டு இரிவானொருவன்* (அஷ்டா

தச. அர்த்தபஞ். 26). 2. Ordinary man, average person; சாமானியன். ஆசிரியன் கேவலனல்லன் (திருவாலவா. 15, 11).

கேவலஸ்தன் kēvala-staṉ, *n.* <id.+. 1. Base, mean person; man of low status; தாழ்ந்த நிலையினன். *Colloq.* 2. Emaciated person; one weakened by ill-health; நோயால் வாடியவன். (W.)

கேவலாவத்தை kēvalāvattai, *n.* <id.+. 1. (Šaiva.) See கீழாலவத்தை. (சிவப். கட்.) 2. (Šaiva.) See காரணகேவலம். (திருவால. கட்.)

கேவலி[1] kēvali, *n.* <*kēvalin*. (Jaina.) Person possessing perfect knowledge; கேவலஞானமுள்ளவன். முதற்பொருள் கேட்டார்க் குரைக்குமெங் கேவலியே (திருநூற். 10).

கேவலி[2] kēvali, *n.* perh. கை[5]+வல்லி. Five-leaved yam. See வள்ளிக்கோடி. (மூ. அ.)

கேவு[1]**-தல்** kēvu-, *5 v. intr.* cf. *jēh*. To breathe heavily; to gasp for breath, as a dying person; மூச்சுத் திணறுதல். (W.)

கேவு[2] kēvu, *n.* White mustard. See வெண்கடுகு. (மலை.)

கேவு[3] kēvu, *n.* <U. *khewā*. [T. Tu. *kēvu.*] Charge for transporting goods by sea; freight; தோணிமுதலியவற்றில் ஏற்றுதற்குரிய கூலி.

கேவேடன் kēvēṭaṉ, *n.* prob. *kēvarta*. Fisherman; மீன்வலையன். கேவேடனாகிக் கெளிறதுபடுத்தும் (திருவாச. 2, 17).

கேழ் kēḻ, *n.* <கெழுவு-. cf. *ghat*. 1. Light, lustre, brilliance; ஒளி. (பிங்.) நயங்கேழ் பெருவளஞ்கல்கு கல்லூர (தஞ்சைவா. 392). 2. Bright colour, hue; நிறம். ஒண்கேழ் தூற்றித மலரின் (புறநா. 27). 3. Comparison; equality; ஒப்பு. கேழேவரையு மில்லோன் (திருக்கோ. 269).

கேழ்த்த kēḻtta, *adj.* <கேழ். 1. Bright-hued; நிறங்கொண்ட. கேழ்த்த வடித்தாமரை (திவ். இயற். 3, 96). 2. Abundant; மிகுந்த. கேழ்த்த சீரான் (திவ். திருவாய். 3, 1, 7).

கேழ்பவர் kēḻpavar, *n.* <id. Blessed persons; நன்மையுடையார். ஒருவர் நம்போல் வருக் கேழ்பவருளரோ (திருவிருத். 45).

கேழ்பு kēḻpu, *n.* <id. Blessing; நன்மை. (திருவிருத். 45, அரும்.)

கேழ்வரகு kēḻ-varaku, *n.* Ragi, a millet, *Eleusine coracana*; கேப்பை. (பதார்த்த. 1394.)

கேழ்வு kēḻvu, *n.* <U. *khewā*. Freight; தோணிக்கூலி. *Loc.*

கேழல் kēḻal, *n.* <கெழுவு-. 1. Bright colour, hue; நிறம். செங்கேழற் றுமனை (பதினொ. திருக்கைலா. உலா, அரிவை, 1). 2. cf. *krōda*. Hog, boar, swine; பன்றி. செங்காய் . . . கேழல் பாரக்கும் வெஞ்சுரக் கவலை (ஐங்குறு. 323). 3. Wild rice. See குளநெல். நீர்விளை கேழலும் (சீவக. 1422).

கேழற்பன்றி kēḻaṟ-paṉṟi, *n.* <கேழல்+. Boar; ஆண்பன்றி. கேழற்பன்றி என்பதனைக் களிற்றுப் பன்றி என்றுஞ் சொல்லுப (தொல். பொ. 589, உரை).

கேள்[1]**-தல்[கேட்டல்]** kēḷ-, *9 v.* [K. M. *kēḷ.*] *tr.* 1. To hear, hearken, listen to; செவிக்குப் புலனாக்குதல். சொல்லுநபோலவுங் கேட்குநபோலவும் (தொல். பொ. 513). 2. To learn, be instructed in; பாடங்கேட்டல். ஒரு குறி கேட்போன் (நன். பொது. 42). 3. To ask, inquire, question, catechise; வினாதல். என்னை நீ கேட்கையாலே (கைவல். 20). 4. To investigate; விசாரித்தல். களவு போனமை எங்ஙனே என்றுகேட்டு (Insc.) (சோழவ. 66). 5. To request, solicit, crave; வேண்டுதல். படிக்கப் புத்தகம் தருமாறுகேட்டான். 6. To be informed of; கேள்விப்படுதல். தருதி நீ யெனக் கேட்டேன் (பாரத. கன்ன. 238). 7. To require, demand, claim; உரிமை கொண்டாடிக் கொடுக்கச்சொல்லுதல். 8. To avenge, punish; தண்டித்தல். தீயரைத் தெய்வங்கேட்கும். 9. To effect a remedy, cure, as medicine; நோய்முதலியன நீக்குதல். செயச் செய ஆறுகேளாது . . . அரவுகான்ற வேகம் மிக்கிட்டதன்றே (சீவக. 1274). 10. To bid, offer, inquire the price of; விலைகேட்டல். 11. To accept, agree to; ஏற்றுக்கொள்ளுதல். கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய் (குறள், 643). 12. To tolerate, brook; பொறுத்தல். கேளாராயர் குலத்தவரிப்பழி (திவ். பெரியாழ். 3, 1, 8).—*intr.* 1. To come under the control of; to be cured; தணிதல். வாதநோய் அந்த மருந்துக்குக் கேட்கும். 2. To obey, be submissive, docile; கீழ்ப்படிதல். பொல்லாத மனங் கேளாது. 3. To be heard, as a call; to reach, as a sound; ஒலி எட்டுதல். குண்டுபோட்டால் இங்கே கேட்கும். 4. To have perception by the ear; செவிப்புலனுணர்வைப்பெறுதல். அவனுக்குக் காது கேட்கும். 5. To get permission; அனுமதி பெறுதல். கேளாதேவந்து கிளைகளாயிற்றோன்றி (நாலடி, 30).

கேள்[2] kēḷ, *n.* prob. கேள்-. 1. Kindred, relations; உறவு. தன்கே ளலறச் சென்றான் (நாலடி, 29). 2. Friendship; நட்பு. (திவா.) 3. Friend, companion; நண்பன். கேளன்றிக் கொன்றாரே கேளாகி (தொல். பொ. 72, உரை). 4. Husband; கணவன். அவளுந்தன் கேட்குச் சொன்னாள் (சீவக. 1052).

கேள்ணா kēḷṇā, *n.* <Mhr. *khēḷaṇē*. Doll hung on cradle to amuse babies; தொட்டிலில் தொங்கவிடும் பொம்மை. *Loc.*

கேள்வன் kēḷvaṉ, *n.* <கேள். 1. Husband, master, lord; நாயகன். தன் கேள்வனை யெங்கணு வென்னு வினைத்தேங்கி (சிலப். 18, 33). 2. Companion, comrade, friend; தோழன். (திவா.)

கேள்வி kēḷvi, *n.* <கேள்-. [K. *keḷike*, M. *keḷvi*.] 1. Hearing; கேட்கை. 2. Question; வினா. *உபாத்தியாயர் மாணவனைக் கேள்விகேட்டார். Colloq.* 3. Taking lessons, as in literature; listening to words of wisdom; நூற்பொருள் முதலிய கேட்கை. *கேள்வியாற் றோட்கப்படாத செவி* (குறள், 418). 4. Learning; கல்வி. (திவா.) 5. Sound; சத்தம். *எழுதாக்கேள்வியுங் கேள்வி* (ஞானா. பாயி. 5, 5). 6. Vēda; வேதம். *கெடுவில் கேள்வியு ணடுவாகுதலும்* (பரிபா. 2, 25). 7. Treatise; நூல். *கேள்வி கடுறைபோய்* (சீவக 2386). 8. Word; சொல். *எனோர் கேள்வியுங் கேள்வி* (ஞானா. பாயி. 5, 6). 9. Report, rumour; பிரஸ்தாபம். *Colloq.* 10. Ear, organ of hearing; காது. (திவா.) 11. Hearing or trial of a case, judicial inquiry; விசாரணை. (Insc.) 12. Bid, offer; ஏலம் முதலியன கேட்கை. 13. Pitch of a tune, keynote; இசைச்சுருதி. *கிளை யாய்ந்து பண்ணிய கேள்வியாழ்ப்பாணனும்* (பு. வெ. 7, 18). 14. Lute; யாழ். (அக. நி.)

கேள்விக்கடுதாசி kēḷvi-k-kaṭutāci, *n.* <கேள்வி+. 1. Written application to a court of justice; கோர்ட்டில் கொடுக்கும் எழுத்துமூலமான மனு. 2. Tender, proposal in writing; அபேக்ஷைப் பத்திரம். (J.)

கேள்விக்காரர் kēḷvi-k-kārar, *n.* <id.+. (J.) 1. Bidders at an auction; ஏலங்கேட்போர். 2. Persons who tender proposals at a purchase; விலைகேட்போர். 3. Applicants for a post; உத்தியோகத்துக்கு விண்ணப்பஞ்செய்வோர்.

கேள்விகேட்பாடு kēḷvi-kēṭpāṭu, *n.* <id. +. Moral control, administration of justice; நியாயவிசாரணை. *ஊரில் கேள்விகேட்பாடு இல்லை.*

கேள்விகொடுவை kēḷvi-koṭuvai, *n.* <id. +கொடு-. A game at cards. See துடுவை[2]. (G. Sm. D. I. i, 111.)

கேள்விகொள்(ளு)-தல் kēḷvi-koḷ-, *v. tr.* <id.+. To question by way of clearing doubts; ஐயங்கொண்டு கேட்டல். *சர்வேசுவரனைக் கேள்வி கொள்ள வேண்டாதபடி* (ஈடு, 1, 5, 3).

கேள்விச்சாட்சியம் kēḷvi-c-cāṭciyam, *n.* <id.+. Hearsay evidence; கேள்விப்பட்டதாகக் கூறும் சாட்சியம். *Loc.*

கேள்விச்செவியன் kēḷvi-c-ceviyaṉ, *n.* <id.+. One who readily believes hearsay reports, credulous person; கேள்வியுற்றதையெல்லாம் நம்புவோன். *கேள்விச்செவியன் ஊரைக்கெடுத்தான்.* (W.)

கேள்வித்தானம் kēḷvi-t-tāṉam, *n.* <id.+. (Astrol.) The 2nd or 3rd house from the ascendant; சாதகன் பிறந்த இலக்கினத்துக்கு இரண்டு அல்லது மூன்றாமிடம். (சங். அக.)

கேள்விப்படு-தல் kēḷvi-p-paṭu-, *v. tr.* <id.+. To learn through others; to learn by hearsay; பிறர் வாய்மூலமாகச் செய்தி தெரிந்துகொள்ளுதல்.

கேள்விப்பத்திரம் kēḷvi-p-pattiram, *n.* <id.+. Request, application, petition in writing; எழுத்துமூலமான விண்ணப்பம். (J.)

கேள்விப்பந்தர் kēḷvi-p-pantar, *n.* <id.+. Pandal for discussion of Śāstras; பலர்கூடி நூல்கள் கேட்டற்குரிய இடமும்படி அமைத்த பந்தர். *கிதசாலையுங் கேள்விப்பந்தரும்* (பெருங். இலாவாண. 7, 131).

கேள்விமுறை kēḷvi-muṟai, *n.* <id.+. See கேள்விகேட்பாடு.

கேள்வியருத்தாபத்தி kēḷvi-y-aruttāpatti, *n.* <id.+. Implication from a statement heard, dist. fr. *kāṉ-aruttāpatti*; ஒருவன் வீட்டில் இல்லை என்பதைக் கேட்டவன், வேறு இடத்தில் அவன் இருக்கிறான் என்று ஊகித்துக்கொள்வதுபோலும் பிரமாணம். *அக்கதினிலையுறு தேவதத்தனெனி விருப்ப னவன் வேறோரிடத்தி லெனத் தெரிந்தறிதல் . . . கேள்வி யருத்தாபத்தி* (வேதா. சூ. 22).

கேள்வியா-தல் kēḷvi-y-ā-, *v. intr.* <id.+. To be heard, reported; to reach the ears, as news; கேள்வியால் தெரியவருதல்.

கேள்வியாட்டம் kēḷvi-y-āṭṭam, *n.* <id. +. An adaptation of bezique, a game at cards; சீட்டாட்டவகை. *Loc.*

கேள்விவரி kēḷvi-vari, *n.* <id.+. Register of royal commands; அரசன் கட்டளைகளைப் பதியும் புத்தகம். (T. A. S. i, 165.)

கேள்வு kēḷvu, *n.* <U. *khewā*. [T. M. Tu. *kēvu*.] See கேவு. (J.)

கேளல்கேளிர் kēḷ-al-kēḷir, *n.* <கேள் + அல் neg. +. Those who are neither friends nor enemies; neutrals; பகையும் நட்புமில்லாத அயலார். *கேளல்கேளிர் கெழீஇயின ரொழுகவும்* (அகநா. 93).

கேளலர் kēḷalar, *n.* <id. + id. +. Enemies; பகைவர்.

கேளன் kēḷaṉ, *n.* <id. [K. *kēḷa*.] Friend, companion; தோழன். (W.)

கேளா kēḷā, *adv.* prob. கேள்- + ஆ neg. To no purpose, vainly; ஒருபயனு மின்றி. (சூடா.)

கேளார் kēḷār, *n.* <id. + id. + ஆர். 1. Enemies, foes; பகைவர். *கேளாரும் வேட்ப மொழிவதாஞ் சொல்* (குறள், 643). 2. Deaf persons; செவிடர். *காணார் கேளார்* (மணி. 13, 111).

கேளி[1] kēḷi, *n.* <*kēli.* Women's sport; மகளிர் விளையாட்டு. (பிங்.) *மலர்கொய் கேளி* (*இரகு. இந்தும.* 9).

கேளி[2] kēḷi, *n.* cf. *nārikēḷa.* Brahman coconut, l. tr., *Cocos nucifera coromandelina;* தென்னைவகை. (*பதார்த்த.* 65.)

கேளிக்கை kēḷikkai, *n.* <*kēlikā.* 1. Women's sport; கிரீடை. 2. Dancing of women; மகளிர் நடனம். (*உரி. நி.*)

கேளிதம் kēḷitam, *n.* perh. *galita.* Boulder, rock; பெருங்கல். (பிங்.)

கேளிர் kēḷir, *n.* <கேள்-. 1. Friends; நண்பர். *கேளிர் போலக் கேள்கொளல் வேண்டி* (*பொருந.* 74). 2. Relations; சுற்றத்தார். *வன்புலக் கேளிர்க்கு வருவிருந் தயரும்* (*புறநா.* 42, 17).

கேற்று kēṟṟu, *n.* <E. *kedge.* Light anchor used in warping; சிறுநங்கூரம். *Naut.*

கேனம்[1] kēṉam, *n.* <*kēna.* See கேனோபநிடதம்.

கேனம்[2] kēṉam, *n.* prob. கி(=கிறுக்கு)+ஆனம் *part.* Craziness, insanity; பைத்தியம். *Loc.*

கேனவாயன் kēṉa-vāyaṉ, *n.* <கேனம்[2]+. Lit., the open-mouthed. Simpleton, fool; பேதை. *Loc.*

கேனன் kēṉaṉ, *n.* <id. Crazy fellow; பைத்தியக்காரன். *Loc.*

கேனோபநிடதம் kēṉōpaniṭatam, *n.* <*Kēnōpaniṣad.* An Upaniṣad, one of 10; தசோபநிடதத் தொன்று.

கை

கை[1] kai. Compound of க் and ஐ.

கை[2]**-த்தல்** kai-, *11 v.* [K. M. *kai.*] *intr.* 1. To be bitter, astringent, unpleasant; கசத்தல். *தேனும் புளித்தறக் கைத்ததுவே* (*கந்தரலங்.* 6). 2. To be deeply afflicted; நைந்துவருந்துதல். *கைத்தன ளுள்ளம்* (*கம்பரா. மாயாசன.* 30).—*tr.* 1. To dislike; to be angry with; to hate; கோபித்தல். *மருவலரைக் கைக்கும்* (*தஞ்சைவா.* 423). 2. To vex, trouble, harass, torment; அலைத்தல். (W.)

கை[3]**-த்தல்** kai-, *11 v. tr.* cf. உகை-. 1. To produce, as a sound; to propel, shoot, as an arrow; செலுத்துதல். *சிலம்பிரங்கு மின்குரல் கைத்தெடுத்தலின்* (*சீவக.* 2683). 2. To feed with the hand; ஊட்டுதல். *காழோர் கடுங்களிறு கவளங் கைப்ப* (*மதுரைக்.* 659).

கை[4]**-த்தல்** kai-, *11 v. tr.* <கை[5]. cf. தை-. To adorn, decorate; அலங்கரித்தல். *மடமொழியோருங் கைஇ மெல்லிதி னொதுங்கி* (*மதுரைக்.* 419).

கை[5] kai, *n.* [T. K. M. Tu. *kai.*] 1. Hand, arm; கரம். *அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே* (*தொல். எழுத்.* 315). 2. Elephant's trunk; யானைத் துதிக்கை. *தூங்குகையா னோங்கு நடைய* (*புறநா.* 22). 3. Ray, as of the sun; கிரணம். *செங்கைநீட்டித் தினகரன் றோன்றலும்* (*திருவிளை. விடை.* 20). 4. Group, set, as in counting bricks, dry dung-cakes; செங்கல் முதலியவற்றை எண்ணும் ஓரளவு. *Colloq.* 5. Hand-pose in dancing; அபிநயக்கை. (*சிலப்.* 3, 18, *உரை.*) 6. Side, right or left; பக்கம். *இருகையு மிரைத்து மொய்த்தார்* (*கம்பரா. கைகேசி.* 83). 7. Faction, party; கட்சி. *எதிர்க்கையில் சேர்ந்திருப்பவர் யார்?* 8. Rafter; கைமரம். *கால் தொடுத் திருகையேற்றி* (*தேவா.* 838, 4). 9. Semaphore; ரயிலின் கைகாட்டி. *Colloq.* 10. Sleeve of a garment; சட்டையின் கை. *Colloq.* 11. Handle, as of an axe; கைப்பிடி. *நெடுங்கை நவியம் பாய்தலின்* (*புறநா.* 36, 7). 12. Handle, as of a fan; விசிறிக்காம்பு. *மணிக்கை யாலவட்டம்* (*பெருங். உஞ்சைக்.* 34, 217). 13. Wing of a bird; சிறகு. *கோழி கைத்தலத்தைக் கொட்டி* (*அரிச். பு. விவா.* 195). 14. Wing of an army; படையுறுப்பு. (பிங்.) 15. Army; சேனை. *கைவகுத்து* (*தணிகைப்பு. சீபரி.* 467). 16. Place; இடம். (*சூடா.*) 17. Money on hand; கைப்பொருள். *அவரன்பும் கையற்ற கண்ணே யறும்* (*நாலடி,* 371). 18. That which is fit to be done; செய்யத்தக்கது. *கையறியாமை யுடைத்தே* (*குறள்,* 925). 19. Decoration, dressing; ஒப்பனை. (பிங்.) 20. Strength, ability; ஆற்றல். *ஆரிடம் உன்கையைக் காட்டுகிறாய்.* 21. Handful; கையளவு. *Loc.* 22. Hands, workmen, assistants; ஆள். *எத்தனை கை வேலை செய்தன?.* 23. Littleness, smallness; சிறுமை. *கைஞ்ஞானங் கொண்டொழுகுங் காரறிவாளர்* (*நாலடி,* 311). 24. Custom, usage, way of the world; உலகவொழுக்கம். *கையொன்றறிகல்லாய்* (*கலித்.* 95). 25. Row, line; ஒழுங்கு. *கையமை விளக்கம்* (*முல்லைப்.* 49). 26. Younger sister; தங்கை. (பிங்.)

கை[6] kai, *part.* 1. Suffix at the end of verbal nouns as *செய்கை;* தொழிற்பெயர் விகுதி. 2. Auxiliary prefix to verbs, as in *கைபிசைந்து;* ஓர் தமிழுபசருக்கம்.

கைக்கட்டி kai-k-kaṭṭi, *n.* <கை[5]+. 1. Gloves; கைக்கவசம். (*சூடா.*) 2. Boil or tumour in the arm-pit; அக்குட்புண். *Loc.*

கைக்கட்டு[1]**-தல்** kai-k-kaṭṭu-, *v. intr.* <id.+. To fold the hands in reverence, obedience, etc.; கைகளைமடக்கிக்கொண்டு வணக்கங்காட்டு

நல். தாம் என்முன்னே கைக்கட்டிக்கொண்டு நின்றார் (திவ். திருநெடுந். 21, 188, வ்யா.).

கைக்கட்டு[2] kai-k-kaṭṭu, *n.* <id.+. [M. *kaiketṭu.*] 1. Folding the hands; கைகளைக் கட்டிக்கொள்கை. 2. [Tu. *kaikaṭṭu.*] Ornament for the arm or waist of a woman; மகளிர் கையணி வகை. (W.)

கைக்கட்டுபவளம் kai-k-kaṭṭu-pavaḷam, *n.* <id.+. Coral bracelet; பவளத்தாலான ஒரு வகைக் கையணி. *Parav.*

கைக்கடன் kai-k-kaṭaṉ, *n.* <id.+. 1. [Tu. *kaikaḍa.*] Temporary oral loan; கைமாற்றுக்கடன். 2. Obligation, duty; கடப்பாடு. உம்முடைய கைக்கடன்று னுயிர்காக்கக் கடவீர் (கம்பரா. கும்பகர். 355).

கைக்கடனாற்றல் kai-k-kaṭaṉ-āṟṟal, *n.* <id. +. Rendering assistance, helping, obliging, mentioned as a characteristic of the Vēḷāḷas; உதவிபுரிதலாகிய வேளாண்மாந்தரியல்பு. (சூடா.)

கைக்கடியாரம் kai-k-kaṭiyāram, *n.* <id. +. Watch; கையிலேவைத்தாளும் சிறுகடியாரம்.

கைக்கணக்கு kai-k-kaṇakku, *n.* <id.+. [M. *kaikkaṇakku.*] Memorandum of accounts; கணக்குக்குறிப்புப் புத்தகம்.

கைக்கணிசம் kai-k-kaṇicam, *n.* <id.+. Estimation of weight or quantity by the hand; கையால் மதிக்கும் மதிப்பு.

கைக்கத்தி kai-k-katti, *n.* <id.+. Pocket-knife, small knife; சிறுகத்தி.

கைக்கத்திரிகை kai-k-kattirikai, *n.* <id. +. Shears, clipping instrument; மயிர்வெட்டுங் கருவி. கைக்கத்திரிகையிட்டு கறுக்கின தலையாட்டத்தை யுடைய பரிகள் (பு. வெ. 3, 10, உரை).

கைக்கரடு kai-k-karaṭu, *n.* <id.+. Wrist; மணிக்கட்டு. (W.)

கைக்கரண்டி kai-k-karaṇṭi, *n.* <id.+. Small spoon, tea-spoon; சிறுகரண்டி.

கைக்கவசம் kai-k-kavacam, *n.* <id.+. Gloves; கையுறை.

கைக்காணி kai-k-kāṇi, *n.* <id.+. Present, gift; காணிக்கை. இடபவிலச்சினையைக் கைக் காணியாக இட்டு (கலித். 82, 12, உரை).

கைக்காப்பு kai-k-kāppu, *n.* <id.+. Wristlet, bracelet; கையிலணியுங் காப்பு.

கைக்காரன் kai-k-kāraṉ, *n.* <id.+. [M. *kaikkāran.*] 1. Man of ability or skill; சமர்த்தன். *Colloq.* 2. Wealthy person; செல்வன். *Loc.*

கைக்காரியம் kai-k-kāriyam, *n.* <id.+. Work on hand, immediate engagement; கைவேலை. *Colloq.*

கைக்காறை kai-k-kāṟai, *n.* <id.+. Bracelet, arm-ring; ஒருவகைக் கையணி. திருக்கைக்காறை யொன்று (S.I.I. ii, 144).

கைக்கிட்டி kai-k-kiṭṭi, *n.* <id.+. Instrument of torture for the hand; கைகளிலிட்டு இறுக்குங்கோல். (W.)

கைக்கிளவன் kai-k-kiḷavaṉ, *n.* <id.+. See கைக்கோளன். *Loc.*

கைக்கிளை kai-k-kiḷai, *n.* <id.+. 1. (Akap.) Unreciprocated sexual love, as one-sided; ஒருதலைக் காமம். கைக்கிளை முதலாப் பெருந்திணையிறு வாய் (தொல். பொ. 1). 2. Poem in five *viruttam* verses treating of unreciprocated love; ஐந்து விருத்தச் செய்யுளில் ஒருதலைக்காமத்தைப் பற்றிக்கூறும் பிரபந்தம். (இலக். வி. 827.) 3. The third note of the gamut, one of seven *icai*, q.v.; ஏழிசையுள் மூன்றாவதாகிய காந்தாரசுரம். (திவா.) 4. A kind of verse. See மருட்பா. கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுளோடு (தொல். பொ. 430).

கைக்கிளைத்திணை kai-k-kiḷai-t-tiṇai, *n.* <கைக்கிளை+. (Akap.) Theme treating of *kaikkiḷai*; கைக்கிளையைப்பற்றிக் கூறும் திணை. (தொல். பொ. 1, உரை.)

கைக்கீறல் kai-k-kīṟal, *n.* <கை[5]+. See கைக்கீறு.

கைக்கீறு kai-k-kīṟu, *n.* <id.+. Signature-mark made by an illiterate person; தற்குறிக் கீற்று.

கைக்குட்டை kai-k-kuṭṭai, *n.* <id.+. 1. Handkerchief; சிறுதுண்டு. 2. Handcuff; கைவிலங்கு. (W.)

கைக்குடை kai-k-kuṭai, *n.* <id.+. Parasol, small umbrella; சிறுகுடை. ஞாயிற்றைக் கைக் குடையுங் காக்கும் (அறநெறி. 43).

கைக்குத்து kai-k-kuttu, *n.* <id.+. [M. *kaikkuttu.*] Blow with the fist, cuff in boxing; கைமுட்டியால் தாக்குகை. கைக்குத்ததுபடலும் (கம்பரா. முதற்போ. 176).

கைக்குதவு-தல் kaikkutavu-, *v. intr.* <id. +உதவு-. To be opportunely useful, to be of timely help; சமயத்துக்கு உதவுதல்.

கைக்குநீர்கொள்(ளு)-தல் kaikku-nīr-koḷ-, *v. intr.* <id.+. Lit., to take water for washing hands. To pass urine, used euphemistically; சிறுநீர் விடுதல். (யாழ். அக.)

கைக்குவா-தல் [கைக்குவருதல்] kaik-ku-vā-, *v. intr.* <id.+. To come to hand; கையிற்கிட்டுதல்.

கைக்குழந்தை kai-k-kuḻantai, *n.* <id.+. Infant in arms; சிறுகுழந்தை.

கைக்குழவி kai-k-kuḻavi, *n.* <id.+. 1. See கைக்குழந்தை. *மூர்த்தி கைக்குழவியேபோல் முதற்புரி யாடல்* (கந்தபு. திருவவ. 111). 2. Small macerating stone; சிறிய அம்மிக்குழவி.

கைக்குழி kai-k-kuḻi, *n.* <id.+. Arm-pit; அக்குள். (யாழ். அக.)

கைக்குழித்தாமரை kai-k-kuḻi-t-tāmarai, *n.* <id.+. A tumour in the arm-pit; அக்குளில் தோன்றும் புண்வகை. (யாழ். அக.)

கைக்குழைச்சு kai-k-kuḻaiccu, *n.* <id.+. Wrist; மணிக்கட்டு. *Loc.*

கைக்குளசு kai-k-kuḷacu, *n.* <id.+. See கைக்குழைச்சு. (இங். வை. 12.)

கைக்குற்றம் kai-k-kuṟṟam, *n.* <id.+. 1. Slip of the hand; கைத்தவறு. 2. Lapse, slight, accidental mistake; சிறுபிழை.

கைக்குறி kai-k-kuṟi, *n.* <id.+. 1. Lines on the palms, as indicating one's career or course of life; வாழ்வின்போக்கினைக் குறிப்பதாகக் கருதும் கையிரேகை. 2. Handful; கையளவு. *கைக் குறி யாப்பை வாங்குவது* (ஈடு, 1, 4, 6).

கைக்குறிப்பு kai-k-kuṟippu, *n.* <id.+. Written record, memorandum; ஞாபகக்குறிப்பு.

கைக்கூட்டம் kai-k-kūṭṭam, *n.* <id.+. Battle array; அணிவகுப்புக் கூட்டம். *கைக்கூட்ட மிட்டாற்போலே என்னவுமாம்* (திவ். பெரியாழ் 5, 2, 1, வ்யா.).

கைக்கூட்டன் kai-k-kūṭṭaṉ, *n.* <id.+. Watchman, warder, prison guard; காவற்காரன். *ராஜபுத்ரனைச் சிறையிலே இட்டுவைத்தால் கைக்கூட்ட னுக்குப் பாலுஞ் சோறும் இடுவாரைப்போலே* (ஈடு, 7, 10, 8).

கைக்கூலி kai-k-kūli, *n.* <id.+. 1. Daily wages; அற்றைக்கூலி. 2. [M. *kaikkūli.*] Bribe; லஞ்சம். *கைக்கூலி தான்வாங்குங் காலறுவான்* (தனிப் பா. i, 108, 47). 3. Cash payment; கையிலே கொடுக்கும் விலைப்பொருள். *கைக்கூலிகொடுத்துக் கொள்ளவேண்டும்* (ஈடு, 4, 6, 1). 4. Money paid by the parents of the bride to the bridegroom; மணமகனுக்குப் பெண்வீட்டார் கொடுக்கும் தொகை. *Muham.* (W.)

கைக்கொட்டை kai-k-koṭṭai, *n.* <id.+. Cushion for the arm; கைத்திண்டு. (W.)

கைக்கொடு-த்தல் kai-k-koṭu-, *v. intr.* <id.+. See கைகொடு-. *நற்சவையிற் கைக்கொடுத் தல் சாலவு முன்னினிதே* (இனி நாற். 2).

கைக்கொள்(ளு)-தல் kai-k-koḷ-, *v. tr.* <id.+. [T. *kaikonu*, M. *kaikoḷ.*] 1. To take in hand, take up, occupy, have in charge; கையில் எடுத்துக்கொள்ளுதல். *கண விரமாலை கைக்கொண் டென்ன* (மணி. 5, 48). 2. To observe; to practise; to maintain; பேணிக்கொள்ளுதல். *தருமத்தைக் கைக்கொண்டு நடக்கிறார்கள்.* 3. To accept, adopt, admit; அங்கீகரித்தல். *சொன்ன வார்த்தை ஆப்த மென்று கைக்கொள்ளவேண்டும்படி* (ஈடு, 4, 7, ப்ர). 4. To seize, grasp; கவர்தல். *கணநிரை கைக்கொண்டு* (பு. வெ. 1, 9). 5. To surround; வளைந்துகொள்ளுதல். *கண்ணுதலோ னிருமருங்கு மொன்றாகக் கைக் கொண்டார்* (கோயிற்பு. பதஞ். 18).

கைக்கொளவன் kai-k-koḷavaṉ, *n.* <id.+. See கைக்கோளன். (W.)

கைக்கோடாலி kai-k-kōṭāli, *n.* <id.+. Hatchet; சிறுகோடாலி.

கைக்கோரணி kai-k-kōraṇi, *n.* <id.+. Signs with the hands, as of a dumb person or a dying man; கைச்சாடை. (W.)

கைக்கோல் kai-k-kōl, *n.* <id.+. [M. *kaikkōl.*] 1. Staff, walking-stick; ஊன்றுகோல். *தன்கைக்கோ லம்மனைக்கோ லாகிய ஞான்று* (நாலடி, 14) 2. Goldsmith's pincers; பற்றுக்கோடிறு. *கைக்கோற் கொல்லன்* (சிலப். 16, 108).

கைக்கோலிளையர் kai-k-kōl-iḷaiyar, *n.* <id.+. Watchmen, guards, as holding a staff; கையில் தண்டம்பிடித்துக் காவற்றொழில் புரிவோர். *காவற்றொழிலொடு கைக்கோ லிளையரும்* (பெருங். உஞ் சைக். 57, 70).

கைக்கோள்முதலி kai-k-kōḷ-mutali, *n.* <id.+. Chief of the Kaikkōḷa caste; கைக்கோளச்சாதியாரின் தலைவன். *கைக்கோளர்க்கும் கைக்கோள் முதலிகளுக்கும் . . . உள்ள மனையும்* (S.I.I. i, 121)

கைக்கோளன் kai-k-kōḷaṉ, *n.* <id.+. [T. *kaikōla*, M. *kaikkōḷan.*] A caste, now mostly weavers, found in all Tamil districts; நெசவுத் தொழில்செய்யும் ஒரு சாதியான். *கைக்கோளன் மனைவி யொருத்தி* (காசிக. கங்கையிலெ. 4).

கைகட்டிநில்-தல் [கைகட்டிநிற்றல்] kai-kaṭṭi-nil-, *v. intr.* <id.+. To stand submissively with folded arms; கைகளைக் கட்டிக் கொண்டு வணங்கிநிற்றல்.

கைகட-த்தல் kai-kaṭa-, *v. intr.* <id.+. 1. To pass beyond one's control; வசப்படாமல் மீறுதல். *நின்னைக்கைகடந்து நின்னுண்கண்களே எனக்*

குச் சொல்ல லுறவதொரு காரியம் (குறள், 1271, உரை). 2. To escape; to pass out of one's hands; to pass beyond one's reach; கைக்கு எட்டாமற்போதல். தோண் முயங்கிடாது . . . கைகடக்க விட்டிருந்து (கம்பரா. கார்மு. 54).

கைகண்ட kai-kaṇṭa, *adj*. <id.+. Efficacious; அனுபவசித்தமான. தீவினைக் கருக்கெடும்மிது கைகண்ட யோகமே (தேவா. 927, 5)

கைகண்டசாரம் kai-kaṇṭa-cāram, *n*. <id. +. Chloride of ammonium; நவச்சாரம். (சங். அக.)

கைகண்டயோகம் kai-kaṇṭa-yōkam, *n*. <id.+. Medicine tried and found to be efficacious, sovereign remedy; அனுபவசித்தமான ஔஷதம். கைகண்டயோகந் தடவத் தீரும் (திவ். நாய்ச். 12, 5).

கைகயன் kaikayaṉ, *n*. <*Kēkaya*. 1. King of Kēkaya; கேகய நாட்டரசன். கைகயன் மகள் விழுந் தரற்ற (கம்பரா. கிளைகண்டு. 40). 2. Inhabitant of Kēkaya; கேகயதேசத்தான். கைகயர் வேந்தன் (கம்பரா. எழுச். 64).

கைகர-த்தல் kai-kara-, *v. tr*. <கை[5]+கர-. To hide, conceal; ஒளித்தல். சான்றவர் கைகரப்ப (பழ. 242).

கைகல-த்தல் kai-kala-, *v. intr*. <id.+. 1. To unite, join; கூடுதல். ஆசையிற் கைகலந்து (திருப்பு. 296). 2. To engage in a hand-to-hand fight; நெருங்கிப் பொருதல். மதன் படையுங் கைகலக் குந் தானே (தனிப்பா. i, 326, 24).

கைகழி-தல் kai-kaḻi-, *v. intr*. <id.+. To go beyond, exceed the bounds, overstep the limits; எல்லை கடத்தல். அப்ராப்தமானதிலே கைகழி யப்போய் (ஈடு, 4, 6, 8).

கைகழுவு-தல் kai-kaḻuvu-, *v*.<id.+. *intr*. To wash the hands, as after meals; கையலம்புதல்.—*tr*. To wash one's hands of, relinquish, abandon; விட்டுவிடுதல்.

கைகாட்டி kai-kāṭṭi, *n*. <id.+. 1. See கைகாட்டிமரம். 2. A caste of accountants, so called from their custom of prohibiting a daughter-in-law from communicating with her mother-in-law except by signs; மாமியாரிடத்தில் மருமகள் கைகாட்டியல்லது வாயாற்பேசுதல் கூடாதென்னும் வழக்கத்தையுடைய ஒருசார் கணக்கச்சாதியார். *Loc*.

கைகாட்டிமரம் kai-kāṭṭi-maram, *n*. <id. +. Sign board, semaphore; அடையாளங் குறிக்கும் மரம்.

கைகாட்டு-தல் kai-kāṭṭu-, *v. intr*. <id.+. 1. To make signs with the hand; சைகை காட்டுதல். பேதையார் கைகாட்டும் பொன்னும் (நாலடி, 328). 2. To gesticulate with hands, as dancing-girls; அபிநயம் பிடித்தல். 3. To give a little; சிறிது கொடுத்தல். ஐயமும் பிச்சையு மாந்தனையுங் கைகாட்டி (திவ். திருப்பா. 2). 4. To offer to God; நிவேதனஞ் செய்தல். 5. To exhibit one's strength; திறமைகாட்டுதல். யாரிடத்தில் கைகாட்டுகிறாய்? *Colloq*. 6. To enable one to earn his livelihood; சீவனோபாயங் காட்டுதல். *Colloq*. 7. To wave the flag, as in railway stations; கொடியசைத்து அடையாளங் காட்டுதல். *Colloq*. 8. To bribe; லஞ்சங் கொடுத்தல். *Loc*.

கைகாட்டு kai-kāṭṭu, *n*. <id.+. Gesture with hands; கைச்சைகை. கடவுணீ யுணர்த்துவ தங் கைகாட்டு (தாயு. கல்லாலின். 1).

கைகாண்(ணு)-தல் kai-kāṇ-, *v. tr*. <id. +. To find out by experience; அனுபவத்தில் அறிதல். மருந்து கைகண்டேன் (பெரியபு. கண்ணப். 181).

கைகாய்த்து-தல் kai-kāyttu-, *v. tr*. <id. +. To burn; எரியச்செய்தல். காடு கைகாய்த்திய நீடுநா ளிருக்கை (பதிற்றுப். 82, 9).

கைகாரன் kai-kāraṉ, *n*.<id.+. See கைக்காரன்.

கைகாவல் kai-kāval, *n*. <id.+. That which is useful in emergency, as medicines, provisions, weapons; சமயத்திற்கு உதவுவது. *Loc*.

கைகாற்பிடிப்பு kai-kāṟ-piṭippu, *n*.<id.+. Rheumatism; வாதநோய்.

கைகுவி-த்தல் kai-kuvi-, *v. tr*. <id.+. See கைகூப்பு-.

கைகுளிர kai-kuḷira, *adv*.<id.+. Liberally, freely; தாராளமாய். கைகுளிரக் கொடுத்தான்

கைகுறண்டு-தல் kai-kuṟaṇṭu-, *v. intr*. <id.+. (W.) 1. To be affected by spasms in the hands; to be cramped in the hands; வலிப்பால் கை மடங்குதல். 2. To be stingy, parsimonious, close-fisted; உலோபஞ்செய்தல்.

கைகூசு-தல் kai-kūcu-, *v. intr*. <id.+. 1. To shrink, draw back, shirk out of fear or reserve; பயத்தால் அல்லது வெட்கத்தால் பின்னடைதல். (W.) 2. To be stingy, parsimonious; உலோபத்தனங் கொள்ளுதல்.

கைகூட்டு-தல் kai-kūṭṭu-, *v. tr*. <id.+. See கைகூப்பு-. வணங்கித் தன் கைகூட்டினனாகி (பெருங். வத்தவ. 13, 34-35).

கைகூடு-தல் kai-kūṭu-, *v*. <id.+. *intr*. To succeed, prosper; சித்தியாதல். காரியங் கை கூடிற்று.—*tr*. To approach, draw near; கிட்டுதல். கடுங்களிறு கண்கனலக் கைகூடி (பு. வெ. 7, 12).

கைகூப்பு[1]-தல் kai-kūppu-, *v. tr.* <id.+. To worship, adore, as by raising joined hands; கைகளைக்குவித்துக் கும்பிடுதல். (சூடா.)

கைகூப்பு[2] kai-kūppu, *n.* <id.+. 1. Worshipping, as with joined hands; கைகுவித்து வணங்குகை. என் கைகூப்புச் செய்கையே (திவ். திருவாய். 4, 3, 2). 2. Distance from the feet to the tip of the fingers of the hands joined and raised above the head; அடிமுதல் கூப்பிய கைவரையுள்ள அளவு. (W.)

கைகேசி kaikēci, *n.* <*Kaikēyī*. Daughter of the prince of Kēkaya, one of the wives of Daśaratha and mother of Bharata; கேகயவரசன்மகளும் தசரதன்மனைவியருள் ஒருத்தியும் பரதன் தாயுமானவள். உனைப்பயந்த கைகேசி தன்சொற்கேட்டு (திவ். பெருமாள். 9, 1).

கைகேயி kaikēyi, *n.* <id. See கைகேசி. கைகேயி நினைந்த கருத்திதுவோ (கம்பரா. பிராட்டிகளங். 15).

கைகொட்டு-தல் kai-koṭṭu-, *v. intr.* <கை[5] +. To clap the hands, as in ridicule or applause; கைகளைத் தட்டுதல். கைகட்டி வாய்பொத்தி நிற்பாரைக் கண்டே கைகொட்டிச் சிரிக்கின்றீர் (அருட்பா, vi, உறுதி. 9).

கைகொடு-த்தல் kai-koṭu-, *v. intr.* <id. +. 1. To lend a hand in aid or succour, render assistance; உதவிசெய்தல். உற்றுழியுங் கைகொடுக்கும் (நீதிநெறி. 2). 2. To support the arms, as of a king. See கைலாதுகொடு-. விடையாளர்க்குக் கைகொடுக்குந் தொழில்பூண்டான் (குற்றா. தல. யானைபூசித்த. 18, 40).

கைகோ-த்தல் kai-kō-, *v. intr.* <id.+. 1. To take another's arm, to be arm in arm; தோளோடுதோள் பின்னுதல். 2. To clasp one another's hands, join hands; கைபிணைதல். (சிலப். 5, 70, உரை.) 3. To make friends with; நட்புச்செய்தல். வஞ்சகக்காரர்கள் கைகோவாமல் நற்குணத்தார் கைகோத்து நான் பிரிவது (தாயு. எங்காட். அன்பர்நெறி, 12). 4. To start fighting, to come to blows; சண்டைபிடித்தல். *Colloq.*

கைகோலு-தல் kai-kōlu-, *v.* <id.+. *intr.* 1. To make effort; to attempt; முயலுதல். 2. To make a beginning; ஆரம்பஞ்செய்தல். *Loc.* —*tr.* 1. To resolve, determine; சங்கற்பித்தல். கைகோலி ஞாலமளந்து (திவ். இயற். 2, 47). 2. See கைகூப்பு-. (திவ். இயற். 2, 47, வ்யா.)

கைகோள் kai-kōḷ, *n.* <id.+. (Akap.) Conduct of lovers, comprising of clandestine intercourse as well as subsequent wedded life; தலைவன் தலைவியரின் களவு கற்பொழுக்கங்கள். (தொல். பொ. 498, உரை.)

கைங்கரியம் kaiṅkariyam, *n.* <*kaiṅkarya*. Service, office of a servant; தொண்டு.

கைச்சங்கிலி kai-c-caṅkili, *n.* <கை[5]+. Manacles, fetters, handcuffs; கைவிலங்கு. (W.)

கைச்சட்டம் kai-c-caṭṭam, *n.* <id.+. Cross pieces for rafters; கூரையின் குறுக்குச் சட்டம். (W.)

கைச்சட்டை kai-c-caṭṭai, *n.* <id.+. Short-sleeved shirt, bodice; அரைச்சட்டை.

கைச்சரக்கு kai-c-carakku, *n.* <id.+. Fabricated reports, exaggerations; கற்பித்துக் கூறும் வார்த்தை.

கைச்சரசம் kai-c-caracam, *n.* <id.+. 1. See கைச்சேட்டை. 2. Wanton sport, dallying; சரசவிளையாட்டு.

கைச்சரடு kai-c-caraṭu, *n.* <id.+ T. *cāṭu*. See கைச்சாடு. (பதிற்றுப். 19, உரை.)

கைச்சரி kai-c-cari, *n.* <id.+. A kind of bracelet worn by women; மகளிரது கையணிவகை. (பிங்.)

கைச்சல் kaiccal, *n.* <கை[2]-. Bitterness; கைப்பு.

கைச்சவளம் kai-c-cavaḷam, *n.* <கை[5]+. Javelin; கையீட்டி. (பு. வெ. 10, சிறப்பிற். 10, உரை.)

கைச்சற்றிராய் kaiccaṟṟirāy, *n.* <கைச்சல் + திராய். A kind of chickweed, as bitter; mollugo; திராய்வகை. (W.)

கைச்சற்றோடை kaiccaṟṟōṭai, *n.* <id.+ தோடை. See கைச்சனாரத்தை. (W.)

கைச்சனாரத்தை kaiccaṉārattai, *n.* <id.+ நாரத்தை. Bitter orange; புளிநாரத்தை. (மலை.)

கைச்சாடு kai-c-cāṭu, *n.* <கை[5]+T. *cāṭu*. Gloves; கைக்கவசம். தொழின் மாட்சிமைப்பட்ட கைச்சாட்டை இறுகக்கட்டி (கலித். 7, உரை)

கைச்சாத்து kai-c-cāttu, *n.* <id.+. [M. *kaiccāttu*.] 1. Signature; கையெழுத்து. தந்தைதன் தந்தைதான்வே றெழுதுகைச்சாத்து (பெரியபு. தடுத்தாட். 61). 2. Invoice, list of goods with the vendor's signature; சாமான்பட்டி. 3. Receipt for land tax paid; acknowledgment of payment; ரசீது. *Loc.*

கைச்சால் kai-c-cāl, *n.* <id.+. Hand bucket; நீரிறைக்குங் கைவாளி. (W.)

கைச்சி kaicci, *n.* <கை[2]-. Areca-nut palm; கமுகு. (மலை.)

கைச்சிட்டா kai-c-ciṭṭā, *n.* <கை[5]+. Rough day-book; தினசரிக்குறிப்புப் புத்தகம். *Loc.*

கைச்சித்தி kai-c-citti, *n.* <id.+. Success or skill in medical treatment; வைத்தியத்தில் கைராசி.

கைச்சித்திரம் kai-c-cittiram, *n.* <id.+. [M. *kaiccitram.*] 1. Dexterity of hand; skill in manual labour, in fine arts; தொழிற்றிறமை. 2. Sleight of hand; கைலாகவம்.

கைச்சிமிட்டு kai-c-cimiṭṭu, *n.* <id.+. (W.) 1. Secret gesture or sign with the hand; இரகசியமாகக் கைகாட்டுங் குறிப்பு. 2. Sleight of hand; கைலாகவம்.

கைச்சிறை kai-c-ciṟai, *n.* <id.+. That which is in one's hand or possession, as property; கைவசமானது. *கைச்சிறையான வரீகமும் விழுங்கப்பட்டு* (திருப்பு. 579).

கைச்சீட்டு kai-c-cīṭṭu, *n.* <id.+. [M. *kaiciṭṭu.*] Written acknowledgment, any short memorandum in writing; கையாலெழுதிய குறிப்புச்சீட்டு.

கைச்சீப்பு kai-c-cīppu, *n.* <id.+. Scapula, shoulder blade; தோட்பட்டை யெலும்பு. (W.)

கைச்சுத்தம் kai-c-cuttam, *n.* <id.+. Lit., cleanness of hand. 1. Non-stealing; திருடாமை. *அவனிடத்தில் கைச்சுத்தம் வாய்ச்சுத்தம் உண்டு. Loc.* 2. Non-taking of bribes; லஞ்சம் வாங்காமை. 3. Fine workmanship; திருத்தமான கைத்தொழில்.

கைச்சுத்தி kai-c-cutti, *n.* <id.+. See கைச்சுத்தியல்.

கைச்சுத்தியல் kai-c-cuttiyal, *n.* <id.+. Small hammer for working in gold; தட்டார் உபயோகிக்குஞ் சுத்தியல்வகை. (C. E. M.)

கைச்சுரிகை kai-c-curikai, *n.* <id.+. Dagger; உடைவாள். (சீவக. 558, உரை.)

கைச்சுருக்கு kai-c-curukku, *n.* <id.+. 1. Expertness, dexterity of hand in any craft or exercise; கைலாகவம். 2. Stinginess, close-fistedness; கையிறுக்கம்.

கைச்சுருள் kai-c-curuḷ, *n.* <id.+. *Loc.* 1. Roll of betel leaves offered to bride and bridegroom when going to bathe on the day of marriage and on similar auspicious occasions; கலியாணத்தில் நாகவல்லிக்குமுன்னும் மற்றும் சில சுபகாலங்களிலும் மணமக்களுக்குக் கொடுக்கும் வெற்றிலைச் சுருள். 2. A wedding gift of money presented with roll of betel leaves; மணமக்களுக்குத் தாம்பூலத்தோடு கொடுக்கும் பணம்.

கைச்சுழி kai-c-cuḻi, *n.* <id.+. Falling in handfuls, as seeds in sowing; விதைக்கும்போது விதைகள் ஒன்றுகூடி விழுகை. (J.)

கைச்சுழிப்படு-தல் kai-c-cuḻi-p-paṭu-, *v. intr.* <id.+. To grow in clumps, as grain sown by untrained hands; சரியாக விதையாமையால் பயிர் ஓரிடத்துக் குவிந்து வளர்தல். (J.)

கைச்சுழியா-தல் kai-c-cuḻi-y-ā-, *v. intr.* <id.+. See கைச்சுழிப்படு-. (J.)

கைச்சூடு[1] kai-c-cūṭu, *n.* <id.+சுடு-. 1. Heat produced in the hand by friction or by holding it to the fire; கையைத் தேய்த்தல் முதலியவற்றால் உண்டாக்குஞ் சூடு. (W.) 2. Bearable heat; பொறுக்கக்கூடிய சூடு.

கைச்சூடு[2] kai-c-cūṭu, *n.* <id.+சூடு-. Sheaf given to reapers; வயலறுப்பவர்களுக்குக் கொடுக்கும் அரிக்கட்டு. (J.)

கைச்செட்டு kai-c-ceṭṭu, *n.* <id.+. 1. Thrift, economy; சிக்கனம். (*யாழ். அக.*) 2. Retail trading; சில்லறை வியாபாரம். (*யாழ். அக.*)

கைச்செட்டை kai-c-ceṭṭai, *n.* <id.+. See கைச்சீப்பு. (W.)

கைச்செய்கை kai-c-ceykai, *n.* <id.+. Manual labour in field or garden; வயல் முதலியவற்றிற் செய்யுங் கைவேலை. (W.)

கைச்செலவு kai-c-celavu, *n.* <id.+. 1. Personal expense; சொந்தச் செலவு. 2. Sundry expenses; சில்லறைச்செலவு.

கைச்சேட்டை kai-c-cēṭṭai, *n.* <id.+. Mischievous acts of the hand; கையாற்செய்யுங் குறும்புச்செயல்.

கைச்சைகை kai-c-caikai, *n.* <id.+. 1. Sign made by the hand; கைச்சாடை. 2. Signature; கையொப்பம். *Loc.*

கைச்சோரம் kai-c-cōram, *n.* <*kacchōra.* Spiked garland-flower. See கச்சோரம், 2. (*தைலவ. தைல.* 77.)

கைச்சோலம் kaiccōlam, *n.* <Mhr. *kachōḷēm.* A kind of metal vessel; ஒருவகைப் பாத்திரம். *வெண்கலக் கைச்சோலமொன்று* (S.I.I. ii, 408, 9).

கைசருவு-தல் kai-caruvu-, *v. tr.* <கை[5]+. 1. To attack, assault; எதிர்த்தல். (J.) 2. To pilfer, steal; திருடுதல். 3. To commit indecent assault, as on a woman; தூர்த்தத்தனமாய்ப் பெண்களிடம் சேட்டைசெய்தல். *Loc.*

கைசலி-த்தல் kai-cali-, *v. intr.* <id.+. 1. To be tired, exhausted, wearied, as the arms in swimming; கையோய்தல். *வேதாவும் கைசலித்து விட்டானே* (பட்டினத். திருப்பா. பொது. பக். 172). 2. To be reduced to poverty, to be in straitened circumstances; வறுமையுறுதல். *Colloq.*

கைசளை-த்தல் kai-caḷai-, *v. intr.* <id.+. See கைசலி-.

கைசா kaicā, *n.* prob. Mhr. *kaichā.* A weight=2 *kaḻañcu;* இருகழஞ்சுகொண்ட நிறை. (கணக்கதி. 7, 8.)

கைசிகத்துவாதசி kaicika-t-tuvātaci, *n.* <*kaiśika*+. The twelfth day of the bright fortnight in the month of Kārttikai, sacred to Nampāṭuvāṉ, a feast day; கார்த்திகைச் சுக்கில பக்ஷத்துவருவதும் நம்பாடுவானுக்குரியதுமான துவாதசி.

கைசிகநிஷாதம் kaicika-niṣātam, *n.* <id. +. (Mus.) Middle variety of the seventh note of the gamut, one of *cōṭaca-curam;* சோடச சுரங்களுள் ஒன்று.

கைசிகம் kaicikam, *n.* <id. (Mus.) A musical mode; ஓர் இராகம். (பரத. இராக. 56.)

கைசிகவேகாதசி kaicika-v-ēkātaci, *n.* <id.+. The eleventh day of the bright fortnight in the month of Kārttikai, sacred to Nampāṭuvāṉ who sang the musical mode *kaicikam* and obtained salvation; கைசிகமென்ற பண்ணைப் பாடிக்கொண்டு நம்பாடுவானென்பான் திருமாலைவழிபட்டு முத்திபெற்ற நாளாகிய கார்த்திகை மாதத்துச் சுக்கிலபக்ஷத்து ஏகாதசி.

கைசிகி kaiciki, *n.* <*kaiśikī.* See கைசிகி விருத்தி.

கைசிகிவிருத்தி kaiciki-virutti, *n.* <id.+. (Dram.) A variety of dramatic composition in which a libertine is the hero, one of four kinds of *nāṭaka-virutti,* q.v.; காமம்பொருளாகக் காமுகராகிய மக்கள் தலைவராக வரும் நாடக நடை. (சிலப். 3, 13, உரை.)

கைசு kaicu, *n.* <கஂச. One-fourth of a palam; காற்பலம். சர்க்கரையமுது போது கைசாக (S.I.I. ii, 70, 14).

கைசெய்-தல் kai-cey-, *v.* <கை[5]+. *intr.* 1. To do manual labour, work with one's hands; தொழில் செய்தல். நம்மெய் வருத்திக் கைசெய்துய்ம்மினோ (திவ். திருவாய். 3, 9, 6). 2. To adorn, decorate, trick out; அலங்கரித்தல். மானிட மகளிர்க்கு . . . கைசெய்து பிறப்பிக்கும் அழகு (திருமுரு. 17, உரை). 3. To assist; உதவிசெய்தல். (சூடா, 4, 8, 7.)—*tr.* To conduct; நடத்துதல். பாரதங் கைசெய்த (திவ். பெரியாழ். 2, 1, 1).

கைசோர்-தல் kai-cōr-, *v. intr.* <id.+. See கைசலி-. *Colloq.*

கைசோர்ந்துபோ-தல் kai-cōrntu-pō-, *v. intr.* <id.+. 1. To slip out of one's hands; to be lost; கைவிட்டுப்போதல். 2. To become poor; வறுமைநிலையை அடைதல்.

கைஞ்ஞானம் kai-ñ-ñāṉam, *n.* <id.+. Shallow, superficial knowledge; அற்ப அறிவு. கைஞ்ஞானங் கொண்டொழுகுங் காரறிவாளர் (நாலடி, 311).

கைடவன் kaiṭavaṉ, *n.* <*Kaiṭabha.* An Asura slain by Viṣṇu; திருமாலாற் கொல்லப்பெற்ற ஓர் அசுரன். மதுகைடவரும் வயிறுருகி மாண்டார் (திவ். இயற். 3, 66).

கைத்தகோடரம் kaïtta-kōṭaram, *n.* <கை[2]-+. Strychnine tree. See எட்டி. (மலை.)

கைத்தடி[1] kai-t-taṭi, *n.* <கை[5]+. 1. Walking-stick; ஊன்றுகோல். ஒரு கைத்தடி கொண்டடிக்கவோ வலியிலேன் (அருட்பா, v, தெய்வமணி. 31). 2. Short stick; சிறுதடி. *Colloq.*

கைத்தடி[2] kai-t-taṭi, *n.* <id.+prob. தடி-. *Loc.* 1. Partition deed; பாகபத்திரம். 2. Mark of signature made by an illiterate person; தற்குறிக் கீற்று.

கைத்தண்டம் kai-t-taṇṭam, *n.* <id.+. [Tu. *kaidaṇḍa.*] 1. See கைதவ்டம். 2. Crutch; ஊன்றுகோல்.

கைத்தப்பு kai-t-tappu, *n.* <id.+. [Tu *kaitappu.*] See கைக்குற்றம்.

கைத்தராசு kai-t-tarācu, *n.* <id.+. Small balance used for weighing precious metals and stones; சிறு தராசு.

கைத்தலம் kai-t-talam, *n.* <id.+. Palm of the hand, metacarpus; கரதலம். கைத்தலமொத்தா (பெருங். வத்தவ. 14, 71).

கைத்தளம் kai-t-taḷam, *n.* <id.+. A kind of shield; கேடயவகை. (சீவக. 1561, உரை.)

கைத்தா kaittā, *n.* perh. கை[2]-. See காட்டா மணக்கு[1]. (மலை.)

கைத்தாங்கல் kai-t-tāṅkal, *n.* <கை[5]+. Supporting a person or thing by the arms; கையால் தாங்கி நிற்கை.

கைத்தாய் kai-t-tāy, *n.* <id.+. Foster-mother, one of *aivakai-t-tāyar,* q.v.; வளர்ப்புத் தாய். (பிங்.)

கைத்தாராளம் kai-t-tārāḷam, *n.* <id.+. Open-handedness, liberality; உதாரம்.

கைத்தாள் kai-t-tāḷ, *n.* <id.+. 1. Key; திறவுகோல். கைத்தாள்கொண் டாருந்திறந்தறிவாரில்லை (திருமந். 2605). 2. Bolt; கையாலிடுந் தாழ்ப்பாள்.

கைத்தாளம் kai-t-tāḷam, *n.* <id.+. [T. *kaitāḷamu,* M. *kaitāḷam,* Tu. *kaitāḷa.*] 1. Cymbals; தாளக்கருவி. கொக்கரை கைத்தாள மொந்தை (தேவா. 965, 7). 2. Beating time with the hand; கையாற்போடுந் தாளம். செத்தவரெழுவா ரென்று கைத்தாளம் போடு (அருட்பா, vi, சாமாவ. 161).

கைத்திட்டம் kai-t-tiṭṭam, *n.* <id.+. 1. Rough estimation of the weight or measure of a thing by the hand; கைமதிப்பு. 2. Balance struck in accounts; balance in hand; அறுதியிட்ட கையிருப்புத்தொகை.

கைத்திரி kai-t-tiri, *n.* <id.+திரி-. A small drum; இடக்கை என்னுந் தோற்கருவி. *குழையுடற் றிளைவிரி கைத்திரி கறங்க* (*கல்லா.* 8, 12).

கைத்திட்டு kai-t-tīṭṭu, *n.* <id.+. Document, deed, record of gift; பத்திரம். *மணற்குடி யூரோம் கைத்தீட்டு* (T. A. S.).

கைத்திபம் kai-t-tīpam, *n.*<id.+. 1. See கைத்தீவட்டி. (பிங்.) 2. Small, hand-lamp; கைவிளக்கு.

கைத்தீவட்டி kai-t-tīvaṭṭi, *n.* <id.+. Small torch; சிறு தீவட்டி.

கைத்தீவர்த்தி kai-t-tīvartti, *n.*<id.+. See கைத்தீவட்டி. (W.)

கைத்தீன் kai-t-tīṉ, *n.* <id.+ *தின்-*. Food given to calves, lambs, kids, etc., by hand; food for infants; கையில்வைத்து ஊட்டுமுணவு. (W.)

கைத்து[1] kaittu, *n.* <id. Lit., that which is in hand. Gold, riches, wealth; செல்வம். *கைத் துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்ம்மின்* (*நாலடி*, 19).

கைத்து[2] kaittu, *n.* <கை[2]-. Abhorrence; வெறுப்பு. (சூடா.)

கைத்துடுக்கு kai-t-tuṭukku, *n.* <கை[5]+. Bad habit of the hand, as fighting, pilfering, etc.; கையால் அடித்தல் முதலியன செய்யுந் தீய சுபாவம்.

கைத்துடுப்பு kai-t-tuṭuppu, *n.* <id.+. 1. Small ladle used in stirring liquid food; கூழ் முதலியன துழாவுங் கருவி. *கைத்துடுப்பால் . . . துழாவித் துழாவிக்கொள்ளீரே* (*கலிங்.* 537). 2. Small oar; படகுவலிக்குஞ் சிறியதண்டு.

கைத்துண்டு kai-t-tuṇṭu, *n.* <id.+. 1. Handkerchief; கைக்குட்டை. 2. Pair of rafters framed together with a joint at one end; கைமரம்.

கைத்துணிகரம் kai-t-tuṇikaram, *n.* <id.+. See கைத்துணிச்சல்.

கைத்துணிச்சல் kai-t-tuṇiccal, *n.*<id.+. Act of daring; துணிகரமான செயல். *Loc.*

கைத்துப்பாக்கி kai-t-tuppākki, *n.*<id.+. Pistol, revolver, hand-gun; சிறு துப்பாக்கி.

கைத்துவக்கு kai-t-tuvakku, *n.* <id.+. See கைத்துப்பாக்கி.

கைத்தூக்கு kai-t-tūkku, *n.* <id.+. So much weight as can be lifted by hand; கையிலெடுக்கக்கூடிய ஒருதூக்களவு.

கைத்தூண்[1] kai-t-tūṇ, *n.* <id.+. Small pillar; சிறுதூண்.

கைத்தூண்[2] kaittūṇ, *n.* <கைத்த + உண்-. Accepting food from another's hands; பிறர் கையால் உண்கை. *கடவ தன்றுநின் கைத்தூண் வாழ்க்கை* (*சிலப்.* 15, 57).

கைத்தேங்காய் kai-t-tēṅkāy, *n.* <கை[5]+. A new year's game in which coconuts are rolled forcibly one against another and broken; வருஷப்பிறப்பன்று தேங்காயை உருட்டியாடும் விளையாட்டுவகை. (W.)

கைத்தொண்டு kai-t-toṇṭu, *n.* <id.+. Manual service in temple; கையினாற் செய்யும் கோயிற் பணிவிடை. *காசு வாசியுடன் பெற்றார் கைத்தொண்டாகு மடிமையினால்* (*பெரியபு. திருநாவுக்.* 260).

கைத்தொழில் kai-t-toḻil, *n.* <id.+. 1. Manual art, industries, handicrafts; கையாற் செய்யும் வேலை. *கைத்தொழி லமைத்தபின்* (*பெருங். இலாவாண.* 10, 91). 2. Skilled accomplishments of women, such as *எழுதல், இலைகிள்ளல், பூத்தொடுத் தல், யாழ்வாசித்தல்;* எழுதுதல் முதலியனவாகக் கைத் திறங்காட்டுந் தொழில். (W.)

கைதட்டிப்பண்டாரம் kai-taṭṭi-p-paṇṭāram, *n.* <id.+. A Śaiva mendicant who wanders about mutely, clapping hands for alms; வாய்திறவாது கைதட்டிப் பிச்சைவாங்கும் சைவப்பண்டாரம். *Loc.*

கைதட்டிப்போடு-தல் kai-taṭṭi-p-pōṭu-, *v. tr.* <id.+. To forsake, give up; நீக்கிவிடுதல். (W.)

கைதட்டிவை-த்தல் kai-taṭṭi-vai-, *v. tr.* <id.+. To perform the rites connected with puberty to an immature girl; இருதுமதியாகாத பெண்ணை ஆனவளாகக்கொண்டு உரிய சடங்குசெய்தல். *Brah.*

கைதட்டு-தல் kai-taṭṭu-, *v. intr.* <id.+. 1. To clap or strike hands together in token of defiance, triumph, derision, admiration, etc.; வியப்பு வெறுப்பு நகைப்பு முதலியவற்றின் குறியாகக் கைகொட்டுதல். *கைதட்டி வெண்ணகை செய்வர்கண்டாய்* (*அருட்பா*, ii, *புறமொழிக்.* 10). 2.

To warn off, as an outcaste, a woman in menstruation; புலையர் தூரஸ்திரீகள் முதலியோரை ஒதுங்குவதற்குக் கையைத்தட்டுதல். 3. To affirm, confirm a promise. See கையடி-. *Loc.* 4. See கைதப்பு-. (W.)

கைதப்பு-தல் kai-tappu-, *v. intr.* <id.+. 1. To slip from the hand, as a thing; to escape or get out of control, as a person or animal; கையினின்று தவறிப்போதல். கானவர் வலையிற் பட்டுக் கைதப்பியோமே (கைவல். தத்து. 13). 2. To miss the mark; இலக்குத்தவறுதல். *Colloq.*

கைதல் kaital, *n.* <*kaitaka.* [M. *kaitā.*] Fragrant screw-pine. See தாழை. கைதல் சூழ் கழிக்கானல் (தேவா. 532, 2).

கைதலைவை-த்தல் kai-talai-vai-, *v. intr.* <கை[5]+. Lit., to place the hand on the head. To mourn, lament, grieve; [கையைத் தலைமீது வைத்தல்] பெருந்துக்கமடைதல். கறைகெழு குடிகள் கைதலைவைப்ப (சிலப். 4, 9).

கைதவம் kaitavam, *n.* <*kaitava.* 1. Cunning, craftiness; கபடம். மைதவழ் கண்ணி கைதவர் திருப்பா (பெருங். மகத. 15, 18). 2. Falsehood; பொய். கைதவம் புகலேன் (கந்தபு. வரவுகேள். 4). 3. Affliction, suffering; துன்பம். கைதவமே செய்யு மதுவின்களி (பிரமோத். சிவராத்திரி. 17).

கைதவறு-தல் kai-tavaṟu-, *v. intr.* <கை[5] +. 1. See கைதப்பு-, 1. *Colloq.* 2. To err or commit a mistake by a slip of the hand; கைப்பிழையாதல். 3. To be lost; தொலைந்துபோதல். என் புஸ்தகம் கைதவறிவிட்டது. 4. To die; இறந்தல். குழந்தை கைதவறியது.

கைதவன்[1] kaitavaṉ, *n.* Pandya king; பாண்டியன். கைதவனுஞ் சொன்னான் (பெரியபு. திருஞான. 749).

கைதவன்[2] kaitavaṉ, *n.* <*kaitava.* Deceitful, cunning person; வஞ்சகன். கைதவனுமிக் கானவனேயோ (திருவிளை. பழியஞ். 28).

கைதழுவு-தல் kai-taḻuvu-, *v. intr.* <கை[5] +. To clasp hand in hand; கைகோத்தல். தொடர்ந்து கைதழீஇ நடந்து (பெருங். உஞ்சைக். 41, 110).

கைதளர்-தல் kai-taḷar-, *v. intr.* <கை[5]+. To be reduced in circumstances; வறுமையுறுதல்.

கைதா-தல்[கைதருதல்] kai-tā-, *v. intr.* <id.+. 1. To render help, save, rescue, as from poverty, danger, etc.; வறுமை இடுக்கண் முதலியவற்றில் உதவிபுரிதல். காவலனுர் பெருங்கருணை கைதந்தபடியென்று (பெரியபு. திருஞான. 1118). 2. To give assurance; உறுதி செய்தல். எய்தவல்லேயேற் கைதருக (பாரத. குருகுல. 44). 3. To marry; மணம்புரிதல். கோதையா லுறவுகொண்டு கைதரல் குறித்த கோமகன் (பாரத. குருகுல. 131). 4. To increase; மிகுதல். உவகை கைதர (கம்பரா. மீட்சி. 268).

கைதாங்கியடி-த்தல் kai-tāṅki-y-aṭi-, *v. intr.* <id.+. *Loc.* 1. To beat or strike gently; மெதுவாயடித்தல். 2. To strike forcibly; ஓங்கிப் பலமாயடித்தல்.

கைதாங்கியுழு-தல் kai-tāṅki-y-uḻu-, *v. intr.* <id.+. To plough lightly; மேலாக உழுதல். (W.)

கைதாங்கு-தல் kai-tāṅku-, *v. tr.* <id.+. 1. To support one by the arm; கைலாகுகொடுத்தல். 2 To save from ruin; அழிவெய்தாமற் காத்தல்.

கைதி kaiti, *n.* <U. *qaidī.* Prisoner, captive, accused person; சிறைப்பட்ட குற்றவாளி.

கைதிட்டம் kai-tiṭṭam, *n.* <கை[5]+. 1. Exquisite adornment; திருந்திய அலங்காரம். கைதிட்டமாக வருபவளே (தனிப்பா. ii, 163, 404). 2. See கைத்திட்டம்.

கைதிருந்து-தல் kai-tiruntu-, *v. intr.* <id.+. To be trained, as the hand in writing; கையெழுத்து முதலியன நேர்மையாதல்.

கைதீண்டு-தல் kai-tīṇṭu-, *v. tr.* <id.+. 1. To beat; அடித்தல். 2. To commit indecent assault on a woman; தூர்த்தத்தனமாய்ப் பெண்டிரை அணுகுதல்.

கைது kaitu, *n.* <U. *qaid.* Imprisonment; சிறைக்காவல்.

கைதுசெய்-தல் kaitu-cey-, *v. tr.* <கைது +. To arrest, imprison; சிறைப்படுத்துதல்.

கைதுடை-த்தல் kai-tuṭai-, *v. tr.* <கை[5] +. To give up for good; to forsake, abandon; விட்டொழிதல். எமைக் கைதுடைத் தேகவும் (கம்பரா. நகர்நீ. 159).

கைதூக்கிவிடு-தல் kai-tūkki-viṭu-, *v. tr.* <id.+. 1. See கைதூக்கு-. 2. To drag out one by the hand, from an assembly; கூட்டத்தினின்று கையைப்பிடித்து வெளியே இழுத்துவிடுதல். *Colloq.*

கைதூக்கு-தல் kai-tūkku-, *v. tr.* <id.+. 1. To lend a helping hand; to save from ruin; to rescue from sinking; வறுமையால் வருந்துவோர் நீரில் அழுந்துவோர் முதலியோரைக் காத்தல். 2. To hold up the hand in voting; ஆமோதித்தற் குறியாகக் கையை உயர்த்துதல்.

கைதூவாமை kai-tūvāmai, *n.* <id.+. Incessant, unceasing work; கையொழியாமை. (திவா.)

கைதூவு[1]-தல் kai-tūvu-, *v. intr.* <id.+. To have rest or leisure, as from one's activities; கையொழிதல். புலவற்களியொடு . . . கைதூவலே (கலித். 50)

கைதூவு[2] kai-tūvu, *n.* <id.+. Rest or leisure from work; செயலற்றிருக்கை. கனிவிருந் தயருங் கைதூவின்மையின் (நற். 280).

கைதேர்-தல் kai-tēr-, *v. intr.* <கை[6]+. To become an adept; திறமையடைதல்.

கைதை[1] kaitai, *n.* <*kaitaka*. [M. *kaidā*.] Fragrant screw-pine. See தாழை. கைதையம் படப்பை (அகநா. 100, 18).

கைதை[2] kaitai, *n.* cf. *kēdāra*. Paddy field; வயல். (பிங்.)

கைதைச்சுரிகையன் kaitai-c-curikaiyaṉ, *n.* <கைதை[1]+. Lit., one having screw-pine for his dagger. Kāma, the god of love; [தாழையை வாளாக உடையவன்] மன்மதன். (பிங்.)

கைதொடல் kai-toṭal, *n.* <கை[5]+. 1. Taking food, eating; உண்கை. (பிங்.) 2. Food, as taken by the hand; ஆகாரம். கைதொடல் கண் படை வெய்துறு பெரும்பயம் (ஞானா. 35).

கைதொடன் kai-toṭaṉ, *n.* <id.+. 1. One who helps or serves; உதவிசெய்வோன். தாசித் தலைவிலவர்களே கைதொடராய் (ஈடு, 1, 4, 1). 2. One who does an act intentionally; புத்திபூர்வமாக ஒன்றைச் செய்வோன். ஜநகிபக்கல் அபராதத்திற் கை தொடனாயிருக்க (ஈடு, 6, 10, 10.)

கைதொடு[1]-தல் kai-toṭu-, *v. intr.* <id.+. 1. To touch with the hand; பரிசித்தல். சக்கர வர்த்தித் திருமகன் இத்தைக் கைதொட்டுச் சிட்சித்து (ஈடு, 4, 2, 8). 2. To lift one's hand in oath; to swear; சபதஞ்செய்தல். 3. To eat; உண்ணுதல். (பிங்.) 4. To commence, begin, enter upon; தொடங்குதல். அவன் கைதொட்ட காரியம் நல்லதே. 5. To marry; மணஞ்செய்தல். (W.)

கைதொடு[2]-த்தல் kai-toṭu-, *v. tr.* caus. of கைதொடு[1]-. To marry, join hands in marriage; விவாகஞ்செய்துவைத்தல். (W.)

கைதொடுமானம் kai-toṭu-māṉam, *n.* <கைதொடு[1]-+. Help, support; உதவி. தன் வெறு மையைக் கைதொடுமானமாகக்கொண்டு (ஈடு, 6, 10, 8).

கைதொழு-தல் kai-toḻu-, *v. tr.* <கை[5]+. 1. To adore, worship, as with the hands joined; வணங்குதல். காதலி தன்னொடு கைதொழு தெடுத்து (மணி. 13, 20). 2. To lift up the hands above the head, as in adoration; கும்பிடுவதற்காகக் கையைத் தலைமேல் உயர்த்துதல். கைதொழூஉப்பரவி (திருமுரு. 252).

கைதோய்வு kai-tōyvu, *n.* <id.+. Being within hand's reach; கையால் எட்டிப்பிடிக்கக் கூடிய நிலை. கைதோய்வன்ன கார்மழைத் தொழுதி (மலைபடு. 362).

கைந்தலை kaintalai, *n.* <கைம்மை+தலை suff. Widow; விதவை. கைந்தலை விரைந்துநோக்குந் தக்கபே ரன்பையும் (திருவாலவா. 41, 28).

கைந்நவிலாளர் kai-n-navilāḷar, *n.* <கை[5]+. Handicraftsmen; கையால் தொழில் செய்யப் பழகியவர். கைந்நவிலாளர் காடெறிந்து (பெருங். உஞ் சைக். 46, 66).

கைந்நாகம் kai-n-nākam, *n.* <id.+. Elephant, as having a trunk; [கையையுடைய நாகம்] யானை. ஊகந்நாகம் . . . கடல்வந்த தொர்காட்சி (கம்பரா. கடறுவ. 40).

கைந்நிதானம் kai-n-nitāṉam, *n.* <id.+. [M. *kainitāṉam*.] Estimation of weight, etc., by the hand; கையால் நிறை முதலியவற்றை மதிப் பிடுகை. *Colloq.*

கைந்நிலை kai-n-nilai, *n.* <id.+. An ancient love-poem by Pullaṅ-kāṭar, one of *patiṉeṉ-kīḻkkaṇakku*, q.v.; பதினெண்கீழ்க் கணக்கு ளொன்றும் அகப்பொருள்பற்றியதும் புல்லங் காடர் என்ற புலவ ரியற்றியதுமான நூல். காலடி நான் மணி . . . கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு (தனிப்பா.).

கைந்நிறுத்து-தல் kai-n-niṟuttu-, *v. tr.* <கை[6]+. 1. To establish; நிலைநிறுத்துதல். காப்புக் கைந்நிறுத்த வல்வேற் கோசர் (அகநா. 113). 2. To subdue, conquer; அடக்குதல். காமங் கைந்நிறுக் கல் லாது (அகநா. 198.)

கைந்நீட்டு kai-n-nīṭṭu, *n.* <கை[5]+. Handle, haft; கைப்பிடி. தமது இடுகைக் காம்புடனே கைந் நீட்டுச் செறிக்கவும் (புறநா. 98, உரை).

கைந்நீவு-தல் kai-n-nīvu-, *v. intr.* <id.+. To defy, disregard; அவமதித்துக் கடத்தல். மத மாக் கொடுந்தோட்டி கைந்நீவி (பரிபா. 10, 49).

கைந்நூல் kai-n-nūl, *n.* <id.+. Ceremonial thread worn on the wrist; கையிற்கட்டும் காப்பு நாண். கைந்நூல் யாவாம் (குறுந். 218).

கைந்நொடி kai-n-noṭi, *n.* <id.+. A unit of time marked by a snap of the finger; கையைநொடிக்கும் நேரவளவு. மாத்திரையுடைய கண்ணிமையுங் கைந்நொடியும் (நன். 99, மயிலை.).

கைநடுக்கம் kai-naṭukkam, *n.* <id.+. Tremulousness of the hand through age, nervousness, etc.; மூப்பு அச்சம் முதலியவற்றால் கை நடுங்குகை.

கைநம்பிக்கை kai-nampikkai, *n.* <id.+. [Tu. *kainambige.*] 1. Giving or striking the hand in token of a promise or assurance; கையடித்து உறுதிமொழி கூறுகை. *Colloq.* 2. Temporary oral loan; கைக்கடன். *கைநம்பிக்கையாகக் கொடு.*

கைநலப்பால் kai-nala-p-pāl, *n.* <id.+. Milk drawn by the hand without the help of the calf; கன்றின் உதவியின்றிக் கையாற் கறக்கும் பால். (யாழ். அக.)

கைநலம் kai-nalam, *n.* <id.+. 1. Auspiciousness of one's hand supposed to produce the desired end; கைராசி. 2. See கைநலப்பால். (யாழ். அக.)

கைநறுக்கு kai-naṟukku, *n.* <id.+. See கைச்சீட்டு.

கைநனை-த்தல் kai-naṉai-, *v. intr.* <id.+. Lit., to wet the hand. To partake of food in another's house; பிறர் வீட்டில் உணவுகொள்ளுதல்.

கைநஷ்டம் kai-naṣṭam, *n.* <id.+. 1. Loss of anything on hand; கையிலுள்ளதை இழக்கை. 2. Loss of capital in trade; கைம்முதலுக்கு நேரும் நஷ்டம்.

கைநாட்டு-தல் kai-nāṭṭu-, *v. intr.* <id.+. To affix or put one's signature, as in a bond; கையெழுத்திடுதல்.

கைநாட்டு kai-nāṭṭu, *n.* <id.+. Signature-mark of an illiterate person; தற்குறிக்கீறல்.

கைநிரை kai-nirai, *n.* <id.+. Screen of plaited palm leaves; நிரைச்சல். *கைநிரை கட்டிக்கொண்டிருக்கிற நாளிலே* (ஈடு, 4, 6, 6).

கைநிலை kai-nilai, *n.* <id.+. [M. *kainila.*] Soldiers' lines, military quarters in a camp; வீரர்கள் தங்குதற்குப் பாசறையில் தனித்தனியே அமைக்கப்பட்ட குடிசை. (பு. வெ. 4, 7, உரை.)

கைநிறை kai-niṟai, *n.* <id.+. Estimation of the weight of a thing by lifting it in hand; கையால் தூக்கிமதிக்கும் நிறை.

கைநீட்டம் kai-nīṭṭam, *n.* <id.+. *Loc.* 1. Presents; கொடை. 2. First cash-payment for the first article sold after opening the shop for the day; அன்றன்று கடைதிறந்தவுடன் முதன் முதலாக விற்கும் பண்டத்திற்கு வாங்கும் ரொக்கத் தொகை.

கைநீட்டு-தல் kai-nīṭṭu-, *v.* <id.+. *tr.* 1. To beg, pray for gift or charity; இரத்தல். 2. To steal, pilfer; திருடுதல்.—*intr.* 1. To lift one's hand against another; அடிக்கக் கையோங்குதல். 2. To condole; இழவு விசாரித்தல். (யாழ். அக.)

கைநீளம் kai-nīḷam, *n.* <id.+. 1. Liberality; தாராளம். *Loc.* 2. Thievish tendency; திருடுங்குணம். *Colloq.* 3. [M. *kainīḷam.*] Show of power; disposition to strike; அடிக்குங் குணம். *Colloq.*

கைநுணுக்கம் kai-nuṇukkam, *n.* <id.+. (W.) 1. Fine workmanship; அழகான வேலைப்பாடு. 2. Close-fistedness; உலோபத்தனம்.

கைநெரி-த்தல் kai-neri-, *v. intr.* <id.+. To wring one's hands in grief, fear, etc.; துக்கம் அச்சம் முதலியவற்றால் கையை நெரித்தல்.

கைநெல்லி kai-nelli, *n.* <id.+. Anything clear and certain, as the *nelli* fruit laid on the palm. See உள்ளங்கைநெல்லிக்கனி. *தோற்றா வடுக்குங் கைநெல்லிபோலெனல்* (மணி. 29, 83).

கைவழக்கம் kai-vaḻakkam, *n.* <id.+. 1. Liberality, munificence; கையின் கொடைக் குணம். *திருக்கை வழக்கம்.* 2. See கைவிளக்கம், 2. 3. Perquisites of the priest or servant of a temple; கோயிலில் பூசகர்முதலியோருக்கு உரிய உரிமை. 4. Money and other gifts to five of the *kuṭimakkaḷ* on the day after the funeral ceremony; ஈமக்கடனாற்றியபின்பு குடிமக்கள் ஐவர்க்குக் கொடுக்கும் பணமுதலியன. (J.)

கைவழங்கு-தல் kai-vaḻaṅku-, *v.* <id.+. *tr.* To give; கொடுத்தல்.—*intr.* See கையடி-, 1. *வெஞ்சமர் விளைக்கவே கைவழங்குகென* (பாரத. நிருட். 120).

கைவழி¹ kai-vaḻi, *n.* <id.+. 1. Lute, as an instrument held in the hand; [*கையினிடமிருப்பது*] யாழ். *கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி* (புறநா. 149, 3). 2. That which is sent by a person; ஒருவன் கைவசமாக அனுப்பிய பொருள். 3. Individual, person; ஆள். 4. See கைராசி. *Loc.* 5. Footpath; ஒற்றையடிப்பாதை. *Loc.* 6. Small branch of a river; சிறு கிளைநதி.

கைவழி² kaivaḻi, *n.* cf. கையொலி. See கைலி¹. *Colloq.*

கைவளச்சம்பா kai-vaḷa-c-campā, *n.* <கைவளம்+. A species of *campā* paddy with bright colour and pleasant taste; நிறமும் இனிமையு முள்ள சம்பாநெல்வகை. (W.)

கைவளம் kai-vaḷam, *n.* <கை⁵+. 1. See கைராசி. 2. Property on hand; கைப்பொருள். 3. Fertility, luxuriance, richness of soil; செழிப்பு. *கைவளமான தேசம். Loc.* 4. Skill in workmanship; கைத்தொழிலின் திறம். *கண்டோர் மருளக் கை வளங் காட்டி* (பெருங். இலாவாண. 4, 194).

கைவளர்-தல் kai-vaḷar-, *v. intr.* <id.+. 1. To be carefully tended; போற்றப்பட்டு வளர்தல். *கைவளர் மயிலனானை* (கம்பரா. கோலங். 18).

2. To be accustomed, habituated, experienced; பழக்கமுறுதல். விஷயாந்தரங்களிலே கைவளருகிற கரணங்களை (அஷ்டாதச. பக். 22).

கைவளை kai-vaḷai, *n.* <id.+. [M. *kai-vaḷa.*] 1. Armlet; கைத்தொடி. (பிங்.) 2. (Arch.) Wall-plate, horizontal beam upon a wall or upon projecting corbels, supporting the ends of other beams or roof-trusses; மேற்கூரையைத் தாங்குமாறு சுவர்முதலியவற்றிலமைக்குஞ் சட்டம்.

கைவற்று-தல் kai-vaṟṟu-, *v. intr.* <id.+. 1. To become reduced in circumstances; பொருளின்றி நிலைமை தாழ்தல். 2. To be empty-handed; கையிற்பொருளறுதல்.

கைவறள்(ளு)-தல் kai-vaṟaḷ-, *v. intr.* <id.+. See கைவற்று-. *Colloq.*

கைவன்மை kai-vaṉmai, *n.* <id.+. See கைவல்லபம்.

கைவா[1]-தல் [கைவருதல்] kai-vā-, *v. intr.* <கை[6]+. 1. To become proficient, expert; தேர்ச்சிபெறுதல். வேததாற்பரியங் கைவந் திருக்குமவர்கள் (ஈடு, 10, 1, 2). 2. To happen together; ஒருங்கே நிகழ்தல். காட்டிய பத்துங் கைவரு மெனினே (நம்பியகப். 36). 3. To be successful, attained; கைகூடுதல். இந்தப்பாவனை கைவாராதாகில் (சி. சி. 8, 34, மறைஞா.).

கைவா[2]-தல் [கைவருதல்] kai-vā-, *v. intr.* <கை[5]+. To be disposed to do a thing; ஒன்றைச் செய்யக் கையெழுதல். அடிக்கக் கைவரவில்லை.

கைவாக்கு kai-vākku, *n.* <id.+. See கைவாகு.

கைவாகு kai-vāku, *n.* <id.+. 1. See கைராசி. *Loc.* 2. [M. *kaivākku.*] Being ready to hand; கையால் ஆளுதற்கு உரிய நிலை.

கைவாங்கியுண்(ணு)-தல் kai-vāṅki-y-uṇ-, *v. tr.* <id.+. To eat in large quantities; நிறைய உண்ணுதல். *Loc.*

கைவாங்கு-தல் kai-vāṅku-, *v.* <id.+. *intr.* To withdraw; நீங்குதல். ரக்ஷணத்திலின்றும் கைவாங்கிலுயோ (திவ். திருநெடு. 16, 128, வ்யா.).—*tr.* To cut off the hand; to amputate; கையைவெட்டுதல்.

கைவாசி kai-vāci, *n.* <id.+. [M. *kai-vāśi.*] See கைராசி.

கைவாய்க்கால் kai-vāy-k-kāl, *n.* <id.+. Small channel branching out from the main one; சிறுகால்வாய். (தொல். பொ. 1, இளம்பூ.)

கைவாய்ச்சி kai-vāycci, *n.* <id.+. Little adze; சிறு வாய்ச்சிக்கருவி. (W.)

கைவாய்ப்பு kai-vāyppu, *n.* <id.+. See கைமாற்று, 1. மூன்று ரூபாய் கைவாய்ப்பாய் வாங்கியிருக்கிறேன். *Loc.*

கைவாரங்கொள்(ளு)-தல் kai-vāraṅ-koḷ-, *v. intr.* <id.+. 1. To assume authority; அதிகாரதோரணை கொள்ளுதல். 2. To raise and wave the hand as a signal to stop dance; கூத்தை நிறுத்தும்பொருட்டுக் கையை உயரவெடுத்து வீசுதல். (ஒழிவி. பொது. 1, உரை.)

கைவாரம் kai-vāram, *n.* <id.+. [T. *kai-vāramu.*] 1. Benediction, encomium, praise pronounced with raised hands; கைதூக்கிக் கூறும் வாழ்த்து. புறப்பட்டருளினவுடனே ஜயசப்தங்களாலே கைவாரம் பண்ணுகிறதும் (கோயிலொ. 89). 2. Wage in kind for pressing pulp of palmyra fruits or preparing palmyra roots; பனங்கிழங்கு உண்டாக்குதல் முதலியவற்றுக்குக் கொடுக்குங்கூலி. (J.) 3. Equal division of a crop; சரிவாரம். 4. Edge, as of a diamond; வயிரமுதலியவற்றின் முனை.

கைவாரிகள் kai-vārikaḷ, *n.* <கைவாரம். [T. *kaivāri.*] Panegyrists of a king, whose duty is to praise standing with raised hands; நின்றேத்துவார். (சிலப். 5, 48, அரும்.)

கைவாள் kai-vāḷ, *n.* <கை[5]+. [M. *kaivāḷ.*] 1. Hand-saw; கைரம்பம். *Loc.* 2. Short sword; சிறுவாள். (தொல். பொ. 1, இளம்பூ.)

கைவாளப்பை kai-vāḷa-p-pai, *n.* <id.+. See கைவாளை. பாக்கிட்ட கைவாளப்பையும் (விறலிவிடு. 661).

கைவாளம் kai-vāḷam, *n.* <id.+. See கைவாளை. தொங்கிய கைவாளமென்று தூக்கி (விறலிவிடு. 809).

கைவாளரம் kai-vāḷ-aram, *n.* <id.+. Handsaw-file; சிறிய அரவகை. (C.E.M.)

கைவாளை kai-vāḷai, *n.* <id.+ perh. வாழ்-. Pouch with a wrapper, betel pouch; அடைப்பை. தம்முடைய கைவாளையிலேயிருந்த தீர்த்தவிக்கிரகத்தை (குருபரம். 571, பன்னி.).

கைவாளைப்பை kai-vāḷai-p-pai, *n.* <id.+. See கைவாளை. (W.)

கைவாளைவட்டுவம் kai-vāḷai-vaṭṭuvam, *n.* <id.+. See கைவாளை. (W.)

கைவாறு kai-v-āṟu, *n.* <id. (J.) 1. Suitable opportunity; தக்கசமயம். 2. See கைலாகு.

கைவிசேடம் kai-vicēṭam, *n.* <id.+. 1. See கைராசி. மருத்துவர்க்கோ சயங் கைவிசேடந் தன்னிலே (அறப். சத. 33). 2. Present; பரிசு. *Loc.*

கைவிஞ்சு-தல் kai-viñcu-, *v. intr.* <id.+. To exceed the limit; அளவுகடத்தல். கைவிஞ்சி மோகமுற (திருவாய். நூற். 62).

கைவிட்டம் kai-viṭṭam, *n.* <id.+. Cross-piece, cross-beam, brace connecting two rafters; வீட்டின் குறுக்குவிட்டம். *Colloq.*

கைவிடாப்படை kai-viṭā-p-paṭai, *n.* <id.+. Hand-weapon, weapon held in hand, dist. fr. *kai-viṭu-paṭai;* சஸ்திரம். (பிங்.)

கைவிடு-தல் kai-viṭu-, *v. tr.* <id.+. [T. *kaividu*, M. *kaiviṭu*.] To forsake, abandon, desert, as dependents; to shun, eschew, as passions; விட்டொழிதல். பெரியோர் கண்டு கைவிட்ட மயல் (நாலடி, 43).

கைவிடுபடை kai-viṭu-paṭai, *n.* <id.+. Missile weapon, as an arrow, dist. fr. *kai-viṭā-p-paṭai;* அஸ்திரம். (பிங்.)

கைவிதிர்-த்தல் kai-vitir-, *v. intr.* <id.+. To shake one's hands in (a) denial, (b) fear, (c) surprise, (d) praise; மறுப்பு, அச்சம், வியப்பு, புகழ்ச்சி என்பவற்றின் குறியாகக் கையை அசைத்தல். *(a)* இனித்தவிர் விச்சையெனக் கைவிதிர்த்தலுமே (கலிங். 160). *(b)* அடியார் சூழ்ந்து கைவிதிர்க்கொண்டு (திருவாலவா. 37, 39). *(c)* வியந்து கைவிதிர்ப்ப (சீவக. 2366). *(d)* அங்கை விதிர்த்தாங் கரசவை புகழ (பெருங். உஞ்சைக். 32, 58).

கைவிதை[1] kai-vitai, *n.* perh. id.+. Fenugreek. See வெந்தயம். (மலை.)

கைவிதை[2] kai-vitai, *n.* <id.+. Cultivation without the process of transplantation; நாற்றைப் பெயர்த்துநடுகையின்றி விதைத்தபடியே பயிர்செய்கை. *Loc.*

கைவிதைப்பு kai-vitaippu, *n.* <id.+. Sowing in dry earth; புழுதிவிதைப்பு. *Loc.*

கைவியளம் kai-viyaḷam, *n.* <id.+*viśēṣa.* See கைவிசேடம், 2. *Loc.*

கைவிரசு kai-viracu, *n.* <id.+விரை-. [Tu. *kaibirsu.*] See கைவிரைவு.

கைவிரி-த்தல் kai-viri-, *v. intr.* <id.+. 1. To stretch out the hands in begging; யாசித்தற் காகக் கைநீட்டுதல். கைவிரித் தெவரளித்தாலும் நன் றெனவேற்ற வளநிதி (பிரமோத். 6, 54). 2. To indicate one's inability, disappoint; தன்னால் இயலாமை குறிப்பித்தல்.

கைவிரைவு kai-viraivu, *n.* <id.+. Quickness of hand, as in shuffling cards; கையினால் விரைந்து தொழில்செய்யுந் தன்மை.

கைவிலக்கம் kai-vilakkam, *n.* <id.+. Catamenia; சூதகம். *Loc.*

கைவிலக்கு kai-vilakku, *n.* <id.+. (J.) 1. Sending away beggars from the threshing-floor after giving them alms; களப்பிச்சை கொடுத்து யாசகர்களை அனுப்புகை. 2. Shading the eyes from the sun with the hands; சூரியகிரணம் கண்ணிற்படாதபடி கையால் மறைக்கை.

கைவிலங்கு kai-vilaṅku, *n.* <id.+. Manacles, handcuffs; கைக்கிடும் விலங்கு.

கைவிலை kai-vilai, *n.* <id.+. [M. *kai-vila*, Tu. *kaibile.*] Cash-price; ரொக்க விலை.

கைவிளக்கம் kai-viḷakkam, *n.* <id.+. 1. See கைராசி. அவன் கைவிளக்கமில்லாதவன். 2. Dexterity, workmanship; தொழிலின் திறமை.

கைவிளக்கு kai-viḷakku, *n.* <id.+. Hand-lamp, small portable lamp; சிறுவிளக்கு. கைவிளக் கேந்தி (சீவக. 1542).

கைவிளி kai-viḷi, *n.* <id.+. Whistle produced by applying the hand to the lips; கையால் உதட்டைமடித்து ஊதியெழுப்பும் சீழ்க்கை யொலி. மறவரழைத்த கைவிளி (சேதுபு. சங்கரபா. 7).

கைவிறிசு kai-viṟicu, *n.* <id.+. Hand-rocket, a kind of fire-work; ஒருவகை வாணம். (J.)

கைவினை kai-viṉai, *n.* <id.+. See கைவேலை. வித்தக ரியற்றிய . . . கைவினைச் சித்திரம் (மணி. 19, 5).

கைவினைஞன் kai-viṉaiñaṉ, *n.* <id.+. Artisan, mechanic, workman; தொழிலாளி.

கைவிஸ்தாரம் kai-vistāram, *n.* <id.+. Decoration; அலங்காரம். *Colloq.*

கைவீச்சு kai-vīccu, *n.* <id.+. 1. [M. *kaivīccu.*] Swing or free motion of the arms, as in walking; கைவீசுகை. கைவீச்சொன்றே பெறு மைம்பதுபொன் (தனிப்பா. ii, 132, 334). 2. Cash on hand; கையிருப்புத்தொகை. (W.) 3. Strength, ability; கைத்திறம். அரக்கன் கைவீச்சு (இராமநா. பாலகா. 5).

கைவீணை kai-vīṇai, *n.* <id.+. A kind of lute; ஒருவகை நரப்புக்கருவி. கைவீணை முழக்க (கொண்டல்விடு. 511).

கைவீது kaivītu, *n.* <U. *kaifiyat.* Detailed account or report. See கைபீது.

கைவேகம் kai-vēkam, *n.* <கை[5]+. See கைவிரைவு.

கைவேல் kai-vēl, *n.* <id.+. Dart, javelin; கப்பணம். கைவேல் களிற்றொடு போக்கி (குறள், 774).

கைவேலை kai-vēlai, *n.* <id.+. 1. Manual labour, handicraft; கைத்தொழில். 2. Workmanship; கைத்தொழிற்றிறம். 3. That which is wrought by hand; கையாற்செய்தது.

கைவை-த்தல் kai-vai-, *v.* <id.+. *intr.* 1. To enter, as on a disquisition; பிரவேசித்தல்.

பகவத்விஷயத்திற் கைவைத்தார் (ஈடு, 6, 2, ப்ர.). 2. To steal, embezzle; திருடுதல். *Colloq.* 3. To consecrate by laying hands on; கைவைத்துக் தரு புனிதமாக்குதல். *Chr.*—*tr.* 1. To beat, belabour; அடித்தல். 2. To seduce, as a woman; கற்பழித் தல். *Vul.*

கைனி[1] kaiṉi, *n.* <கைம்மை. Widow; கைம் பெண். (திவா.)

கைனி[2] kaiṉi, *n.* <கை[5]. The 13th *nakṣatra.* See அத்தம்[8]. (பிங்.)

கொ

கொ ko. The compound of க் and ஒ.

கொக்கட்டி kokkaṭṭi, *n.* Short and slightly crooked palmyra roots; துறுகிவ்வளைந்த பனங் கிழங்கு. (J.)

கொக்கரி[1]**-த்தல்** kokkari-, *11 v. intr.* [T. *kokkariñcu*, K. *kokkarisu.*] 1. To shout in triumph, to vaunt; ஆரவாரித்தல். கொக்கரித் தலகை சுற்ற (கலிங். 150). 2. [M. *kokku.*] To cluck, as hen; to cackle, as goose; to chuckle, as crow; கோழிமுதலியன கூவுதல். எருவைகூடிக் கொக்கரித் திட (இரகு. மீட்சிப். 47).

கொக்கரி[2] kokkari, *n.* <கொக்கரி-. Shouting, vaunting; கர்ச்சனை. குருதி குடிகாளி கொக்கரி செய் (திருப்பு. 179).

கொக்கரை kokkarai, *n.* [T. *kokkera*, K. *kokke*, M. *kokkara.*] 1. Crookedness, deformity; வளைவு. *Loc.* 2. Rake; வைக்கோலெடுக்குங் கருவி. *Loc.* 3. Chank with spiral turning to the right; வலம்புரிச்சங்கு. (திவா.) 4. A kind of musical instrument; வாத்தியவகை. தாளமலி கொக்கரை (தேவா. 1141, 7). 5. Bow; வில். (அக. நி.) 6. Snake; பாம்பு. (அக. நி.) 7. Net; வலை. (அக. நி.) 8. See தாளம். (அக. நி.) 9. Dried integument of the palmyra flower; பனை தெங்கு முதலியவற்றின் வற்றியுலர்ந்த இளமடல். (J.)

கொக்கரையுடும்பு kokkarai-y-uṭumpu, *n.* <கொக்கரை+. Lizard of the varanus species, as resembling a dried integument; ஒருவகை உடும்பு.

கொக்கறை kokkaṟai, *n.* See கொக்கரை, 9.

கொக்காட்டல் kokkāṭṭal, *n.* Fondling; சீராட்டுகை. (யாழ். அக.)

கொக்காம்பாளை kokkām-pāḷai, *n.* A shrub; செடிவகை. (J.)

கொக்கான் kokkāṉ, *n.* A game played by girls with seven pebbles; ஏழு கூழாங்கற்களைக் கொண்டு ஆடும் மகளிர்விளையாட்டுவகை. (J.)

கொக்கான்வெட்டு-தல் kokkāṉ-veṭṭu-, *v. intr.* <கொக்கான்+. To play with pebbles, as girls; கொக்கான் விளையாடுதல். (W.)

கொக்கி kokki, *n.* <கொக்கு[1]. cf. *kuc.* [T. *kokki*, K. Tu. *kokke*, M. *kokka.*] 1. Hook, clasp, as of a necklace or earring; கொளுவி. 2. Hooked knife attached to a long bamboo, for cutting leaves and twigs; துறட்டி நுனியிற்சேருதம் இருப்புக் கருவி. *Loc.*

கொக்கிப்புழு kokki-p-puḻu, *n.* <கொக்கி +. Hook-worm; கிருமிவகை.

கொக்கிப்பூட்டு kokki-p-pūṭṭu, *n.* <id. +. Lock of a clasp in an ornament; ஆபரணத்திலுள்ள பூட்டு. (W.)

கொக்கிமுள்ளு kokki-muḷḷu, *n.* <id.+. Hedge caper. See காட்டுக்கத்தரி. (L.)

கொக்கில் kokkil, *n.* <id. Hook of a clasp; ஆபரணக்கொக்குவாய்.

கொக்கிவாய் kokki-vāy, *n.* <id.+. See கொக்குவாய். கொக்கிவாய் முத்தாரமாகச் செய்து (சிலப். 6, 101, அரும்.).

கொக்கிறகு kokkiṟaku, *n.* See கொக்கு மந்தாரை. (புட்ப. 5.)

கொக்கிறகுமந்தாரை kokkiṟaku-mantārai, *n.* See கொக்குமந்தாரை. (M. M. 521.)

கொக்கு[1] kokku, *n.* <Pkt. *kokkai.* [T. *kokkera*, K. *kokkare*, M. *kokku*, Tu. *korṅgu.*] 1. Common crane, *Grus cinerea;* பறவைவகை. பைங்காற் கொக்கின் (புறநா. 342). 2. Stork; கொக்கு வகை. 3. Paddy-bird; கொக்குவகை. 4. The 19th *nakṣatra.* See மூலம். கொக்குச்சோதி (விதான. குணகுண. 12).

கொக்கு[2] kokku, *n.* <Tu. *kokku.* Mango tree, *Mangifera indica;* மாமரம். துளு மாமரத் தைக் கொக்கென்பது (தொல். சொல். 400, உரை).

கொக்கு[3] kokku, *n.* cf. *kōka.* Wild dog, *Canis dukhunensis;* செந்நாய். (பிங்.)

கொக்கு[4] kokku, *n.* perh. கொங்கு. Horse; குதிரை. (பிங்.)

கொக்குக்கல் kokku-k-kal, *n.* Agate. See சிலமான்கல். (W.)

கொக்குநோவு kokku-nōvu, *n.* perh. கொக்கு[1]+. 1. A blight affecting paddy; நெல் நோய்வகை. 2. A contagious disease among sheep; ஆடுகேட்துக் காணும் எரிநோவு. (M. Cm. D. 249.)

கொக்குமட்டி kokku-maṭṭi, *n.* perh. id. +. Cockle, *Cordium edule;* சிப்பிவகை. (W.)

கொக்குமந்தாரை kokku-mantārai, *n.* <id.+. 1. Taper-pointed mountain ebony,

m. sh., *Bauhinia acuminata;* வெள்ளைமந்தாரை. 2. A kind of woman's cloth; புடைவை வகை. *Colloq.*

கொக்குமீன் kokku-mīṉ, *n.* <id.+. Long-nosed fish. See ஊசிக்கழுத்தி. (M. M. 203.)

கொக்குவம் kokkuvam, *n.* <*kōkkōha*. See கோக்கோகம். *மையறு கொக்குவம் பரதமலி கணிதஞ் சத்தம்* (வள்ள. சுருதி. பாயி. 9).

கொக்குவாய் kokku-vāy, *n.* <கொக்கு[1]+. The hook of a clasp in an ornament held by the *paṭu-kaṇṇi;* ஆபரணத்திற் படுகண்ணியிற்சேருதும் பூட்டு. *கொக்குவாய் ஒன்றும்* (S. I. I, ii, 396, 150).

கொக்கேறி kokkēṟi, *n.* Sola pith. See நெட்டி. (L.)

கொக்கை kokkai, *n.* See கோக்கி. (J.)

கொக்கைக்கல் kokkai-k-kal, *n.* perh. *கொற்கை*+. Coral stone; ஆட்டுக்காற்கல். (W.)

கொக்கைச்சத்தகம் kokkai-c-cattakam, *n.* <*கொக்கை*+. Small bill-hook; ஒருவகைச் சிறு கத்தி. (W.)

கொக்கைச்சால் kokkai-c-cāl, *n.* perh. U. *kuṣki*+. Balk in ploughing; உழவுச்சால்படாத தரை. (J.)

கொக்கோகம் kokkōkam, *n.* <*kōkkōha*. A treatise on erotics translated from Sanskrit by Varakuṇarāma Pāṇṭiyaṉ; வரதுணராமபாண்டிய னால் வடமொழியினின்றும் மொழிபெயர்க்கப்பட்ட ஒரு காமநூல்.

கொக்கோவெனல் kokkō-v-eṉal, *n.* Onom. expr. of cackling, clucking; ஓர் ஒலிக்குறிப்பு.

கொகுடி kokuṭi, *n.* A variety of jasmine creeper; முல்லைக்கொடிவகை. *குவிமுகையன கொகுடி* (சூளா. தூது. 4).

கொங்கணம் koṅkaṇam, *n.* <*Kōṅkaṇa*. 1. Konkan, the low country of Western India between the Ghats and the Arabian Sea extending from Goa to Guzerat, one of 56 *tēcam*, q.v.; மேற்குத்தொடர்ச்சிமலைக்கு மேற்கும் அரபிக்கடலுக்குக் கிழக்கும் கூர்ச்சரத்துக்குத் தெற்கும் கோவாவுக்கு வடக்குமாக உள்ளதும் ஐம்பத்தாறு தேசங்களுள் ஒன்று மான நாடு. (நன். 272, மயிலை.) 2. Language of Konkan, one of 18 languages referred to in Tamil works; தமிழ்நூல்களிற் கூறப்படும் பதி னெட்டுப் பாஷைகளுள் ஒன்று. (திவா.)

கொங்கணர் koṅkaṇar, *n.* <id. 1. Inhabitants of Konkan; கொங்கணதேசத்தார். 2. An ancient Tamil Siddha; பண்டைத் தமிழ்ச் சித்தருள் ஒருவர்.

கொங்கணவர் koṅkaṇavar, *n.* <id. See கொங்கணர். *கொக்கென்று நினைத்தாயோ கொங் கணவா?*

கொங்கணி[1] koṅkaṇi, *n.* <id. Inhabitant of Konkan; கொங்கணதேசத்தான்.

கொங்கணி[2] koṅkaṇi, *n.* See கொங்காணி. (W.)

கொங்கம் koṅkam, *n.* <கொங்கு. (யாழ். அக.) 1. A portion of the Tamil country. See கொங்கு. 2. A mineral poison; கௌளகபாஷாணம்.

கொங்கராயர் koṅka-rāyar, *n.* prob. *கொங் கம்*+. 1. Title of poligars of the Uṭaiyār caste, probably from Koṅkarāya-pāḷaiyam in Kallak-kurichi taluq of S. Arcot; தென்னார்க்காடு ஜில்லா கள்ளக்குறிச்சித் தாலுகா கொங்கராயபாளையத்திலுள்ள உடையார்சாதியைச்சார்ந்த பாளையக்காரர்களின் பட்டப் பெயர். 2. Title of a Kaḷḷar sub-caste; கள்ளர் சாதிவகையினரின் பட்டப்பெயர். *Tj.*

கொங்கரி koṅkari, *n.* prob. *கொங்கு+அரி*. Cardamom; ஏல அரிசி. (மலை.)

கொங்கன் koṅkaṉ, *n.* <id. 1. Inhabitant of the Koṅku country; கொங்குநாட்டான். *ஒளிறு வாட் கொங்கர்* (குறுந். 393). 2. Cēra king; சேரன். (திவா.)

கொங்காணி koṅkāṇi, *n.* Covering against rain; made of palm leaf, grass or reeds; மழையைத் தாங்க உடலிற்கவிக்கும் சம்பங்கூடை.

கொங்காரம் koṅkāram, *n.* perh. *கொங்கு*+ ஆர்-. Arnotto, s. tr., *Bixa orellana;* குங்குமம். (மலை.)

கொங்காளன் koṅkāḷaṉ, *n.* <id.+. A breed of horses probably of the Koṅku country; குதிரைவகை. (அசுவசா. 151.)

கொங்கு koṅku, *n.* 1. [K. *koṅgu*, M. *koṅṅu*, Tu. *koṅga*.] The Tamil country comprising the districts of Coimbatore, Salem and a portion of Mysore; கோயம்புத்தூர் சேலம் ஜில்லாக் களும் மைசூர்ச்சீமையின் ஒரு பகுதியுமாக அடங்கிய தமிழ்நாடு. *கொங்கிளங் கோசர்* (சிலப். உரைபெறு. 2). 2. Farina, pollen of flowers; பூந்தாது. *கொங்கு முதிர் நறுவழை* (குறிஞ்சிப். 83). 3. Fragrance, odour; வாசனை. *கொங்கு விம்மூங் கோதை மாதரார்* (சீவக. 2680). 4. Honey; தேன். *கொங்குகவர் . . . சேவல்* (சிறுபாண். 184). 5. Toddy; கள். (பிங்.) 6. A dark kind of bottle-gourd; கருஞ் சுரை. (மலை.) 7. Husk; புறத்தோல். *Loc.*

கொங்குவேள் koṅku-vēḷ, *n.* <கொங்கு+. Author of a Tamil classical work known as

Peruṅkatai; பெருங்கதையென்னுந் தமிழ்க்காவியம் இயற்றிய ஆசிரியர். கொங்குவேள் மாக்கதையைக் கூறெம் (சீவக. முகவுரை, 13).

கொங்குவேளாளர் koṅku-vēḷāḷar, *n.* <id.+. Vēḷāḷas of the Koṅku country; கொங்கு நாட்டு வேளாளர்.

கொங்கை koṅkai, *n.* [M. *koṅka.*] 1. Woman's breast; முலை. *கொங்கை முன்றிற் குங்கும மெழுதாள்* (சிலப். 4, 49). 2. Protuberances or knobs of a tree; மரத்தின் முருடு. (W.) 3. Kambu husk; கம்புத்தானியத்தின் உமி. *Loc.*

கொச்சக்கயிறு kocca-k-kayiṟu, *n.* prob. *guccha*+. Rope made of coconut fibre; தேங்கின் கதம்பைநாராற் செய்யப்படுங் கயிறு. *Loc.*

கொச்சகக்கலிப்பா koccaka-k-kali-p-pā, *n.* <கொச்சகம்+. A species of *kali* verse, of five varieties, viz., *taravu, taraviṇai, ciṟṟāḻicai, paḵṟāḻicai, mayaṅkicai;* தரவு, தரவிணை, சிஃறாழிசை, பஃறாழிசை, மயங்கிசை என்னும் ஐம்பிரிவுடைய கலிப்பாவகை. (யாப். வி. 81.)

கொச்சகம்[1] koccakam, *n.* <கொய்சகம். 1. See கொச்சகக்கலிப்பா. (காரிகை, செய். 12.) 2. Ornamental pleating of a cloth when worn; ஆடையுள் ஒருவழிக் கொய்தடுக்கிக் கட்டுவது. (தொல். பொ. 433, உரை.) 3. One of the elements of *ampōtaraṅkam;* அம்போதரங்கவுறுப்புக்களுள் ஒன்று. (தொல். பொ. 464.) 4. One of the elements of *paripāṭal;* பரிபாடலுறுப்புக்களுள் ஒன்று. (தொல். பொ. 433.)

கொச்சகம்[2] koccakam, *n.* <கொச்சை. See கொச்சை, 1. *சிறப்பில்லாததனை ஒருசாரார் கொச்சையென்றும் கொச்சகமென்றும் வழங்குவர்* (யாப். வி. 79).

கொச்சம் koccam, *n.* See கொச்சக்கயிறு. *Loc.*

கொச்சன் koccaṉ, *n.* <கொச்சு[3]. Young boy; சிறுபையன்.

கொச்சாளை koccāḷai, *n.* A kind of fish; மீன்வகை. (W.)

கொச்சி[1] kocci, *n.* Pulp of the wood-apple; விளாம்பழத்தின் உள்ளீடு. (W.)

கொச்சி[2] kocci, *n.* <M. *kocci.* 1. Cochin State; சேரநாட்டிலுள்ள ஓர் இராச்சியம். 2. Town of Cochin; ஓர் ஊர். 3. Bird-pepper. See ஊசி மிளகாய். (மலை.)

கொச்சி[3] kocci, *n.* prob. K. *kiccu.* Fire; நெருப்பு. (அக. நி.)

கொச்சி[4] kocci, *n.* prob. காய்ச்சி. Dry shell of a young coconut after the kernel is taken out; இளங்கொட்டங்காய்ச்சி. (J.)

கொச்சிக்காய் kocci-k-kāy, *n.* <கொச்சி[2]+. See ஊசிமிளகாய். (M. M. 170.)

கொச்சிக்குழந்தை kocci-k-kuḻantai, *n.* perh. id. A prepared arsenic; வைப்பரிதாரம். (W.)

கொச்சித்தமரத்தை kocci-t-tamarattai, *n.* <id.+. Bilimbi tree. See புளிச்சைக்காய். (L.)

கொச்சிநாய் kocci-nāy, *n.* <id.+. A small species of dog from Cochin; கொச்சியி லிருந்துவரும் சிறுநாய்ச்சாதி. *Loc.*

கொச்சிமஞ்சள் kocci-mañcaḷ, *n.* <id.+. Wild turmeric, *Curcuma aromatica;* மஞ்சள் வகை. (W.)

கொச்சிமிளகாய் kocci-miḷakāy, *n.* <id. +. Bird-pepper. See ஊசிமிளகாய். (M. M. 170.)

கொச்சிலித்திப்புல் koccilitti-p-pul, *n.* <M. *koccilañcippullu.* Ringworm-killer, s. sh., *Xyris indica;* மேகப்படையைப்போக்கும் புல்வகை. (M. M. 229.)

கொச்சு[1] koccu, *n.* prob. *guccha.* [Tu. *goñju.*] Tassel; குஞ்சம். (கோயிலொ. 97.)

கொச்சு[2] koccu, *n.* <K. *gojju.* [Tu. *gojji.*] A thick mess of boiled brinjals, mangoes, etc., seasoned with tamarind, chillies, salt, etc.; கத்தரிக்காய் மாங்காய் முதலியவற்றில், புளி மிளகாய் உப்பு முதலியவற்றைச் சேர்த்துப் பதப்படுத்திய குழம்பு வகை.

கொச்சு[3] koccu, *adj.* <M. *koccu.* Small, young; சிறிய. *கொச்சுப் பையன். Loc.*

கொச்சை koccai, *n.* <*kutsā.* 1. [M. *koccu.*] Meanness, despicableness; இழிவு. *கொச்சை மானுடர்* (கம்பரா. யுத். மந்திரப் 101). 2. Mean, despicable person; இழிந்தவன். *கொச்சைத் தன் மதி* (கம்பரா. யுத். மந்திரப். 112). 3. Cīkāḻi; சீகாழி. *கொச்சை வேந்தன்* (தேவா. 1035, 11). 4. See கொச்சைச்சொல். 5. Sheep; ஆடு. (திவா.) 6. Goat; வெள்ளாடு. (திவா.) 7. See கொச்சை நாற்றம், 2.

கொச்சைக்கயிறு koccai-k-kayiṟu, *n.* See கொச்சக்கயிறு. *Loc.*

கொச்சைச்சொல் koccai-c-col, *n.* <கொச்சை+. 1. Lisping; rustic or unrefined speech; திருந்தாப்பேச்சு. 2. Vulgar language; இழிசொல்.

கொச்சைநாற்றம் koccai-nāṟṟam, *n.* <id. +. *Loc.* 1. Smell of sheep's milk; ஆட்டுப்பால் நாற்றம். 2. Offensive smell of milk, mother's milk, etc.; பால் முதலியவற்றின் முடைநாற்றம்.

கொச்சைமுனி koccai-muṉi, *n.* <id.+. Tiru-ñāṉacampantar, as born in Cīkāḻi;

[சீகாழியிற் பிறந்த முனிவர்] திருஞானசம்பந்தர். சிட்டர்புகழ் கொச்சைமுனி (திருவாலவா. 38, 1).

கொச்சையர் koccaiyar, *n.* <id. 1. Cow-herds, shepherds; இடையர். கொச்சையர் மனையில் விடைச்சியர் (திருப்பு. 255). 2. Young persons; இளையார். கொச்சைய ரெண்மர்கள் (திருமந். 1394).

கொச்சைவயம் koccai-vayam, *n.* <id.+. Cīkāḻi; சீகாழி. கொடியாடு கொச்சைவயமே (தேவா. 124, 1).

கொச்சைவீச்சம் koccai-vīccam, *n.* <id. +. See கோச்சைநாற்றம். கொச்சைவீச்சம் மாறுமல் போனாலும் பையன் பேச்சுத் தடுக்காயிருக்கிறது.

கொசக்காரன் koca-k-kāraṉ, *n.* <*kōśa*+. Pattadar; பட்டாதார். *Loc.*

கொசகம் kocakam, *n.* See கோய்சகம்.

கொசமசக்கு koca-macakku, *n.* See தசமசக்கு. (யாழ். அக.)

கொசர் kocar, *n.* <U. *khusr.* See தசர்.

கொசலை kocalai, *n.* See தசலை. (C. E. M.)

கொசவம் kocavam, *n.* See கோய்சகம். *Colloq.*

கொசறு kocaṟu, *n.* <U. *khusr.* See தசர்.

கொசாம் kocām, *n.* See கோய்சகம். *Colloq.*

கொசான் kocāṉ, *n.* See கோய்சகம்.

கொசிகம் kocikam, *n.* prob. கோசிகம். Cloth; ஆடை. (அக. நி.)

கொசு[1] kocu, *n.* <கொய்-. Loose inner end or corner of a cloth brought between the legs and tucked in behind; கச்சம். (W.)

கொசு[2] kocu, *n.* 1. Mosquito, gnat, *Culex;* பெருங்கொசுக. 2. Eyefly which gathers in clusters on hanging threads, *Muscidae;* சிறு கொசுகு. *Colloq.*

கொசுக்கட்டை kocu-k-kaṭṭai, *n.* A very small bird; நுண்ணிச்சிறை என்னும் குருவி. (யாழ். அக.)

கொசுகம் kocukam, *n.* See கோய்சகம். (W.)

கொசுகாந்தேன் kocukān-tēn, *n.* <கொசுகு +. See கோசுத்தேன். (J.)

கொசுகு kocuku, *n.* See கொசு[2]. கொசுகி . . . எய்திடம் (காசிக. 40, 17).

கொசுகுதலை kocuku-talai, *n.* <கொசுகு+. A kind of paddy; நெல்வகை. (A.)

கொசுத்தேன் kocu-t-tēṉ, *n.* <கொசு[2]+. Honey gathered and accumulated by eyeflies; சிறுகொசுகினங்கள் சேர்த்துவைக்குந் தேன். (J.)

கொசுத்தேனீ kocu-t-tēṉ-ī, *n.* <id.+. Mosquito bee, *Apis nigrocincta;* சிறுதேனீவகை. (M. M. 870.)

கொசுமிளகாய் kocu-miḷakāy, *n.* <id.+. Bird-pepper. See ஊசிமிளகாய். *Loc.*

கொசுமூட்டம் kocu-mūṭṭam, *n.* <id.+. Smoke to drive off mosquitoes; கொசுக்களைப் போக்குதற்கு மூட்டும் புகை. (W.)

கொசுவம் kocuvam, *n.* See கோய்சகம். *Colloq.*

கொசுவலை kocu-valai, *n.* <கொசு[2]+. Mosquito-net; கொசுவாராமல் தடுக்கும் வலை.

கொசுவு-தல் kocuvu-, 5 *v. tr.* <கொய்-. To plait, gather into folds, as the end of a cloth when wearing; ஆடையைக்கொய்து அடுக்குதல். *Colloq.*

கொசுவுள்ளான் kocu-v-uḷḷāṉ, *n.* <கொசு[2] +. Small snipe; சிறிய உள்ளான்வகை. கொசுவுள்ளான் றன் கறியை (பதார்த்த. 884).

கொசுறு kocuṟu, *n.* <U. *khusr.* See தசர்.

கொஞ்சங்கொஞ்சமாய் koñcaṅ-koñcamāy, *adv.* <கொஞ்சம்+. [T. *koñcemukoñcemugā.*] Little by little, by degrees; சிறிது சிறிதாய். *Colloq.*

கொஞ்சத்தனம் koñca-t-taṉam, *n.* <id. +. [T. *koñcetanamu.*] Sorry plight, pitiable condition; meanness; எளிமை. கொஞ்சத்தனத்தை யறிந்து (குற்ற. குற. 112, 1).

கொஞ்சநஞ்சம் koñca-nañcam, *n.* Redupl. of கொஞ்சம். A little, very small quantity; சிறிதளவு. கொஞ்சநஞ்சமிருந்ததையும் கொடுத்து விட்டான். *Colloq.*

கொஞ்சப்படுத்து-தல் koñca-p-paṭuttu-, *v. tr.* <கொஞ்சம்+. To slight, disregard, treat with contempt; இழிவுபடுத்துதல். *Loc.*

கொஞ்சப்பேர் koñca-p-pēr, *n.* <id.+. 1. Ill-fame, bad reputation; அபகீர்த்தி. (J.) 2. A few persons; சிலர்.

கொஞ்சம் koñcam, *n.* perh. *kiñcit.* [T. *koñcemu*, K. *koñca*, M. *koñcam*, Tu. *kondra.*] Little, small quantity; சிறிது. கொஞ்சந்தங் கின் பந்தந்து (திருப்பு. 609).

கொஞ்சல் koñcal, *n.* <கொஞ்சு-. [M. *koñcal.*] 1. [K. *koccu.*] Childish prattle; மழலைச் சொல். (திவா.) 2. Amorous talk; சரசப்பேச்சு. 3. Fondling, caressing; செல்லங் கொஞ்சுகை.

கொஞ்சவிலக்கம் koñca-vilakkam, *n.* <கொஞ்சம்+. Scanty menses; சிறிதாகவருஞ் சூதகநீர். (M. L.)

கொஞ்சன் koñcaṉ, *n.* <id. Mean person; அற்பன். வஞ்சன் கொஞ்சன் (திருப்பு. 609).

கொஞ்சி koñci, *n.* <T. *goñji.* (L.) 1. Opal orange, m. sh., *Glycosmis pentaphylla;* காட்டுக்கொஞ்சி. 2. China-box, m. sh., *Murraya exotica;* சீனைக்கொஞ்சி. 3. Gum-lac tree, l. tr., *Schleichera trijuga:* பூவைமரம்.

கொஞ்சிவஞ்சி koñci-vañci, *n.* <id.+. Lac tree. See தம்பாதிரி. (L.)

கொஞ்சு¹-தல் koñcu-, *5 v. intr.* [M. *koñcu.*] 1. To lisp, to prattle, as children; மழலைபேசுதல். கொஞ்சிய வுன்சொற் கேட்டு (உத்தரரா. சம்புவ. 21). 2. To talk softly or amorously, as young women; இன்பமாய்ப் பேசுதல். 3. To fondle, caress; செல்லங்கொஞ்சுதல். 4. To kiss; முத்தமிடுதல். (J.) 5. To sound sweetly; இனிதாய் ஒலித்தல். சிலம்பு கொஞ்சவே (பாரத. அருச்சுனன்றவ. 148).

கொஞ்சு² koñcu, *n.* A kind of fish; ஒருவகை மீன்.

கொஞ்சுகுதிரை koñcu-kutirai, *n.* <கொஞ்சு-+. Horse whose pace is easy; மென்னடையுள்ள குதிரை.

கொஞ்சுநடை koñcu-naṭai, *n.* <id.+. Easy pace; மெதுவான நடை. (W.)

கொட்கு-தல் koṭku-, *5 v. intr.* cf. *kuṭ.* 1. To whirl round; சுழலுதல். வளிவலங் கொட்கு மாதிரம் (மணி. 12, 91). 2. To move in an orbit, revolve; சூழவருதல். காலுணவாகச் சுடரொடு கொட்கும் (புறநா. 43, 3). 3. To roam, wander; திரிதல். கொடும்புலி கொட்கும்வழி (சிறுபஞ். 80). 4. To be revealed; to come to view; வெளிப்படுதல். கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை (குறள், 663).

கொட்டக்காரன் koṭṭa-k-kāraṉ, *n.* <கொட்டம்¹+. Mischievous person; அடாபிடிக்காரன். (W.)

கொட்டகம் koṭṭakam, *n.* <*gōṣṭhaka.* Shed, cow-stall. See கொட்டகை. (W.)

கொட்டகாரம் koṭṭakāram, *n.* prob. *kōṣṭha* + *agāra.* [T. *koṭāramu,* M. *koṭṭakāram,* Tu. *koṭṭāra.*] Store-room, granary; நெல்முதலிய பண்டம்வைக்கும் அறை. நெற்கூட்டி னிரைசெறிந்த புரிபலவா நிலைக்கொட்டகாரத்தில் (பெரியபு. இடங்கழி. 7).

கொட்டகை koṭṭakai, *n.* <*gōṣṭhaka.* [T. *koṭṭamu,* K. *koṭṭage,* Tu. *koṭya.*] Shed with sloping roofs, cow-stall, marriage-pandal; பந்தல் விசேடம். கொட்டகைத் தூண்போற் காலிலங்க (குற்செ. குற. 84, 4).

கொட்டங்காய் koṭṭaṅ-kāy, *n.* <கொட்டன் +. Coconut; தேங்காய். (மூ. அ.)

கொட்டங்காய்ச்சி koṭṭaṅ-kāycci, *n.* <id. + காய் + சில். [Tu. *koṭṭañji.*] Portion of a coconut shell; தேங்காய் ஓட்டின் ஒருபகுதி.

கொட்டங்கைச்சி koṭṭaṅ-kaicci, *n.* <id. +. See கொட்டங்காய்ச்சி.

கொட்டடி koṭṭaṭi, *n.* <U. *kōṭhari.* cf. Mhr. *kōṭhaḍi.* 1. Room, as kitchen, store-room; சமையல் முதலியவற்றிற்கு உதவும் அறை. 2. Cattle-shed; மாட்டுக்கொட்டில். 3. Prisoner's cell; சிறைச்சாலை அறை. 4. Check, silk cloth of a woman; சேலைவகை.

கொட்டடியாசாமி koṭṭaṭi-y-ācāmi, *n.* <id.+. Gymnast, athlete trained in the Muhammadan methods of bodily exercise, as practising in a *karaṭi-k-kūṭam;* கரடிக்கூடத்தில் பயின்ற பயில்வான். *Loc.*

கொட்டணக்காரி koṭṭaṇa-k-kāri, *n.* <கொட்டணம்+. Woman who lives by rice-pounding; கூலிக்கு நெற்குத்துபவள். *Loc.*

கொட்டணம் koṭṭaṇam, *n.* <Pāli. *koṭṭana.* 1. [T. *koṭnamu,* K. *koṭṭaṇa,* M. *koṭṭaṇam.*] Pounding or husking paddy; நெற்குத்துகை. 2. Carding; பஞ்சுகொட்டுகை. *Loc.*

கொட்டணை koṭṭaṇai, *n.* A herb growing in marshy places; கசிவு நிலத்தில் வளரும் ஒருவகைப் பூடு. (W.)

கொட்டம்¹ koṭṭam, *n.* <கொட்டு-. 1. Superciliousness, arrogance; இறுமாப்பு. வேடர் கொட்டம டங்க (தாயு. சிற்சு. 4). 2. [T. *goṭṭu.*] Mischievousness; சேட்டை. கொட்டக்காரன். 3. Petulance; கடுகடுப்பு. *Loc.* 4. cf. *ghōṣa.* Roaring, trumpeting; முழக்கம். கொட்ட மிடுங்கெசம் (இராமநா. பாலகா. 18). 5. Flowing, pouring; நீர் முதலியன ஒழுகுகை. கொடுங்காற் குண்டிகைக் கொட்ட மேய்ப்ப (பெருங். உஞ்சைக். 43, 130). 6. [T. *goṭṭamu,* K. *koṭṭa.*] Hollow piece of bamboo for giving medicine to cattle; மாடுகளுக்கு மருந்துகொடுக்கும் மூங்கிற்குழாய். *Loc.* 7. Spindle for twisting thread; நூற்குங்கோட்டை. (சிறுபாண். 166, உரை.) 8. Small ola basket; சிறிய ஓலைப்பெட்டி. கொழுங்குடி முசுண்டை கொட்டங் கொள்ளவும் (சிறுபாண். 166).

கொட்டம்² koṭṭam, *n.* <*gōṣṭha.* Cattle-shed; மாட்டுத்தொழுவம். எருது நினைத்தவிடத்திற் கொட்டங்கட்டுவார்களா?

கொட்டம்³ koṭṭam, *n.* <*kuṣṭha.* [M. *kōṭṭam.*] Costus root; ஒருவகை வாசனைப்பண்டம். கொட்டமே கமழும் . . . மொய்குழல் (சீவக. 2575).

கொட்டமடி-த்தல் koṭṭam-aṭi-, *v. intr.* <கொட்டம்[1]+. To be mischievous or turbulent, as an unruly boy; மனம்போனபடி துஷ்டத்தனஞ் செய்தல்.

கொட்டறை koṭṭaṟai, *n.* See கோட்டடி. (W.)

கொட்டன் koṭṭaṉ, *n.* <கொட்டு-. (J.) 1. Mallet; கொட்டாப்புளி. 2. Fat man or animal; பருத்த-வன்-து. 3. Coconut, as used at the threshing-floor; நெற்களமுதலியவற்றில் உபயோகிக்கும் தேங்காய்.

கொட்டன்கட்டை koṭṭaṉ-kaṭṭai, *n.* <கொட்டன்+. Mallet; கொட்டாப்புளி. (J.)

கொட்டாங்கச்சி koṭṭāṅ-kacci, *n.* 1. See கொட்டங்காய்ச்சி. 2. See கொட்டம்[1], 6. *Loc.*

கொட்டாங்கரந்தை koṭṭāṅ-karantai, *n.* <கொட்டை+. See கொட்டைக்கரந்தை. (யாழ். அக.)

கொட்டாங்கைச்சி koṭṭāṅ-kaicci, *n.* See கொட்டங்காய்ச்சி.

கொட்டாங்கோரை koṭṭāṅ-kōrai, *n.* A kind of sedge; கோரைவகை.

கொட்டாணிமறவன் koṭṭāṇi-maṟavaṉ, *n.* A sub-sect of Maṟavas; மறவருள் ஒரு சாதியார். (E. T.)

கொட்டாப்பி-த்தல் koṭṭāppi-, 11 *v. tr.* perh. கொட்டு-. To eat, as men or beasts; மக்கள் அல்லது விலங்குகள் உண்ணுதல். (J.)

கொட்டாப்பிடி koṭṭāppiṭi, *n.* See கொட்டாப்புளி.

கொட்டாப்புளி koṭṭāppuḷi, *n.* <கொட்டுப்பிடி. Beater, wooden mallet; உளிமேல் அடிக்கும் ஆயுதம்.

கொட்டாப்பெட்டி koṭṭā-p-peṭṭi, *n.* See கொட்டைப்பெட்டி.

கொட்டாம்பிளி koṭṭāmpiḷi, *n.* See கொட்டாப்புளி. *Loc.*

கொட்டாமட்டை koṭṭā-maṭṭai, *n.* <கொட்டு[2]+ஆம்+. Stem of a palmyra leaf grown fibrous and tough from the leaf being cut off when young; ஓலையை இளைதாயிருக்கும் பொழுது வெட்டிவிடுவதால் நார்நிரம்பிக் கடினமாயிருக்கும் பனைமட்டையின் அடிப்பகுதி. (J.)

கொட்டாய் koṭṭāy, *n.* prob. *gōṣṭha.* See கொட்டகை.

கொட்டாரம் koṭṭāram, *n.* cf. Mhr. *kōṭhāra.* [T. *koṭāramu*, K. Tu. *koṭṭāra*, M. *koṭṭāram.*] 1. cf. *kōṣṭhāgāra.* Granary; தானியக் களஞ்சியம். படைக்கலக் கொட்டிலும புடைக்கொட் டாரமும் (பெருங். மகத. 14, 19). 2. [K. *koṭārū.*] Place where paddy or other grains are husked; நெல் முதலிய தானியம் குத்துமிடம். 3. Elephant-stall; யானைக்கூடம். *Loc.* 4. Palace; அரண்மனை. *Loc.* 5. cf. *kōṭṭāra.* Principal entrance of a palace, etc.; porch; அரண்மனை முதலியவற்றின் தலைவாசல். (W.)

கொட்டாவி koṭṭāvi, *n.* <கொட்டு-+ஆவி. [M. *kōṭṭāvi.*] Yawn; வாயைத் திறந்து வெளிவிடும் நெட்டுயிர்ப்பு. கொட்டாவி கொள்கின்றான் (திவ். பெரியாழ். 1, 4, 6).

கொட்டாவிச்சுரம் koṭṭāvi-c-curam, *n.* <கொட்டாவி+. A fever attended with yawning and hiccoughing; கொட்டாவி முதலியவற்றோடு கூடிய சுரநோய்வகை. (சீவரட். 48.)

கொட்டாவிவிட்டிறுக்கி koṭṭāvi-viṭ-ṭiṟukki, *n.* <id.+. A plant growing in hedges and thickets. See நாயுருவி. (மலை.)

கொட்டாவிவிடு-தல் koṭṭāvi-viṭu-, *v. intr.* <id.+. 1. To yawn; வாயால் நெட்டுயிர்த்தல். 2. To die, suffer the last gasp, used in jest; இறத்தல். *Colloq.* 3. To be fatigued or exhausted, as by work; களைத்துப்போதல். *Loc.*

கொட்டாறு koṭṭāṟu, *n.* <T. *koṭāru.* Salt-pan; உப்பளம். (W. G.)

கொட்டான்[1] koṭṭāṉ, *n.* <கொட்டு-. See கொட்டன், 1. (J.)

கொட்டான்[2] koṭṭāṉ, *n.* Small ola case. See குட்டான்.

கொட்டி[1] koṭṭi, *n.* [T. M. *koṭṭi.*] An aquatic plant, *Aponogeton monostachyum;* நீர்க்கொடிவகை. கொட்டியு மாம்பலு நெய்தலும் (வாக்குண். 17).

கொட்டி[2] koṭṭi, *n.* <கொட்டு-. 1. A dance of Śiva. See கொடுகொட்டி. (சிலப். 3, 14, உரை.) 2. (Mus.) Time-measure; தாளம். கொட்டி யளந்தமையாப் பாடலும் (திரிகடு. 57).

கொட்டி[3] koṭṭi, *n.* cf. *kōṭṭāra.* 1. Tower-gate in a temple; கோபுரவாசல். 2. Gate; வாயில். (அக. நி.)

கொட்டி[4] koṭṭi, *n.* <*gōṣṭhī.* Gathering, assembly; கூட்டம். (அக. நி.)

கொட்டிக்கொடு-த்தல் koṭṭi-k-koṭu-, *v. tr.* <கொட்டு-+. 1. To give liberally; அதிகமாகக் கொடுத்தல். 2. To check or rebuke constantly; அடிக்கடி கண்டித்தல். *Loc.*

கொட்டிக்கொள்(ளு)-தல் koṭṭi-k-koḷ-, *v. tr.* <id.+. 1. To gulp down in large quantities; நிரம்ப உண்ணுதல். 2. To take the

responsibility of; to draw down upon oneself, as the consequence of an act; மேற்போட்டுக் கொள்ளுதல். என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளாதே. *Colloq.*

கொட்டிக்கோரை koṭṭi-k-kōrai, *n.* <கொட்டி¹+. A sedge, *Cyperus compressus;* கோரைவகை. (யாழ். அக.)

கொட்டிச்சேதம் koṭṭi-c-cētam, *n.* <கொட்டு-+. See கொடுகொட்டி. இமையவ னுடிய கொட்டிச்சேதம் (சிலப். 28, 75).

கொட்டிட்டை koṭṭiṭṭai, *n.* The shrine of Śiva in Karuvili in Tanjore District; தஞ்சாவூர் ஜில்லாவில் கருவிலி என்னும் தலத்தில் உள்ள சிவாலயம். கருவிலிக் கொட்டிட்டை யுறை வான் கழல் கூடுமே (தேவா. 602, 1).

கொட்டிப்பேசு-தல் koṭṭi-p-pēcu-, *v. tr.* <கொட்டு-+. To sting with cutting remarks; குத்திப்பேசுதல். *Loc.*

கொட்டிமத்தளம் koṭṭi-mattaḷam, *n.* <கொட்டி²+. Big drum; பெரியமத்தளம். கொட்டி மத்தளம் வாசிப்பான் (S. I. I. ii, 254).

கொட்டியம் koṭṭiyam, *n.* prob. *gōṣṭha.* [M. *koṭṭiyam.*] 1. Bull, ox; எருது. (சூடா.) 2. Herd of pack-bullocks; பொதிமாட்டுத்திரள். (W.)

கொட்டியம்பலம் koṭṭi-y-ampalam, *n.* <கொட்டி³+. A gate with a small roofing at the top; முகடு வேய்ந்த வாசல்நடை. *Nāñ.*

கொட்டியான் koṭṭiyāṉ, *n.* perh. கொட்டு-. *Loc.* 1. Carrier; சுமைகாரன். 2. A blight affecting growing paddy; பயிரில்விழும் நோய்வகை. 3. That which brings disaster; கேடுதியை உண்டு பண்ணுவது. அந்த ஊருக்கு அவன் குடியிருக்கப் போனது ஒரு கொட்டியான் விழுந்ததுபோலாயிற்று.

கொட்டில் koṭṭil, *n.* prob. *gōṣṭha.* [M. *koṭṭil.*] 1. Cow-stall; மாட்டுக்கொட்டம். ஏறு கட்டிய கொட்டி லரங்கமே (தனிப்பா. i, 88, 174). 2. School for archery; வில்வித்தை பயிற்றும் இடம். கல்லூரி நற்கொட்டிலா (சீவக. 995). 3. Shed; கொட்டகை. கொட்டில் விளங்குதேர் புக்கதன்றே (சீவக. 471). 4. Hut; சிறுகுடில். பன்னூறாயிரம் பாடிக் கொட்டிலும் (பெருங். உஞ்சைக். 43, 199).

கொட்டு¹-தல் koṭṭu-, *5 v.* [T. M. *koṭṭu.*] *tr.* 1. To beat, as a drum, a tambourine; வாத்திய முழக்குதல். மத்தளங் கொட்ட (திவ். நாய்ச். 6, 6). 2. [Tu. *koḍapuni.*] To hammer, beat, as a brazier; கம்மியர் சம்மட்டியால் அடித்தல். கொட்டு வினைக் கொட்டிலும் (பெருங். மகத. 4, 16). 3. To clap, strike with the palms; கையால் தட்டுதல். கொட்டினன் றேள் (கம்பரா. சம்புமா. 18). 4. To card out, as cotton; பஞ்சரைத்தல். கொட்டிய பஞ்சுபோல் (இராமநா. அயோத். 5). 5. To pound, as paddy; நெற்குத்துதல். கொட்டி வீழுமி குத்தல் போல் (பிரபுலிங். சித்தரா. 9). 6. To strike, beat; அடித்தல். 7. [Tu. *koḍapuni.*] To sting, as a scorpion, a wasp; தேள் குளவி முதலியன கொட்டுதல். கருங்குளவி கொட்டும் (அரிச். பு. நகர்நீங். 41). 8. To pour forth, shower down, shed; சொரிதல். 9. To cast out or empty the contents of a basket or sack, as grain, sand; கூடை சாக்கு முதலியவற்றினின்றும் பண்டங்களைக் கவிழ்த்தல். 10. To throw or cast into a vessel; பொருள்களைக் கலத்தில் ஒருசேர இடுதல். 11. To besmear, as sandal or other fragrant paste; அப்புதல். பூங்கேழ்த் தேய்வை . . . இளமுலை கொட்டி (திருமுரு. 35).—*intr.* 1. To beat, as upon the breast; அறைந்து கொள்ளுதல். கைகளான் முலைமேற் கொட்டி (கம்பரா. இராவணன்சோக. 44). 2. To chirp, as a lizard; பல்லிசொல்லுதல். கொட்டாய் பல்லிக்குட்டி (திவ். பெரியதி. 10, 10, 4). 3. To drop, as leaves; to fall off, as hair; உதிர்தல். மயிரெல்லாம் கொட்டிப்போயிற்று.

கொட்டு² koṭṭu, *n.* <கொட்டு-. 1. [T. M. *koṭṭu.*] Beat, stroke; அடி. 2. [M. *koṭṭu.*] Drum-beat; வாத்திய அடிப்பு. மள்ளர் கொட்டின் மஞ்ஞை யாலும் (ஐங்குறு. 371). 3. Drum, tomtom, tabour; வாத்தியம். பதினோராடலும் பாட்டுங் கொட்டும் (சிலப். 3, 14). 4. (Mus.) A duration of time-measure consisting of half a *māttirai;* தாளத்தில் அரைமாத்திரைக் காலம். (சிலப். 3, 16, உரை.) 5. Stinging; தேள்முதலிய கொட்டுகை. 6. [Tu. *koṭṭu.*] Hoe with short handle, weeding-hoe; தோண்டுகருவி வகை. (பழ. 388, உரை.) 7. Spade; மண்வெட்டி. யான்கல்லுங் கொட்டைப் பறித்தார் (பெரியபு. தண்டி. 16). 8. Pouring, throwing, emptying; சொரிகை. 9. Body; சரீரம். உயிர் அங்கே, கொட்டு இங்கே. (W.) 10. [T. *koṭṭu.*] Granary; நெற்கூடு. (பழ. 388, உரை.) 11. Basket made of rattan; பிரப்பங்கூடை. *Loc.* 12. Trunk of a palmyra; பனந்துண்டு. (J.)

கொட்டு³ koṭṭu, *n.* <T. *goḍḍu.* [Tu. *goḍḍu.*] Barren woman; மலடி. *Loc.*

கொட்டுக்கன்னார் koṭṭu-k-kaṉṉār, *n.* <கொட்டு²+. Braziers who work by beating plates into shape and not by casting; செம்படிக்குங் கன்னர். (W.)

கொட்டுக்காரன் koṭṭu-k-kāraṉ, *n.* <id. +. [M. *koṭṭukāran.*] 1. Drummer; மத்தள முதலிய வாசிப்பவன். *Loc.* 2. A caste of drummers; மேளகாரசாதி.

கொட்டுக்கிடாரம் koṭṭu-k-kiṭāram, *n.* <id. +. Large boiler of beaten brass; பெரிய கொப்பரை. (W.)

கொட்டுக்கிணறு koṭṭu-k-kiṇaṟu, *n.* <id. +. A well walled with hollow palmyra trunks; பனந்துண்டுகளை வைத்துக் கட்டிய கிணறு. (J.)

கொட்டுக்குடவை koṭṭu-k-kuṭavai, *n.* <id.+. A kettle-shaped vessel; உடுக்கைபோல் வடிவமைந்த பாத்திரம். *Tinn.*

கொட்டுக்கூடை koṭṭu-k-kūṭai, *n.* <id. +. 1. Cup-shaped basket; கிண்ணவடிவான கூடை. (W.) 2. A basket-shaped metal vessel; கூடைபோன்ற வடிவுள்ள உலோகபாத்திரம். *Loc.*

கொட்டுச்சீட்டு koṭṭu-c-cīṭṭu, *n.* <id. +. A chit transaction in which the prize at each instalment is determined by the drawing of lots, dist. fr. *ēla-c-cīṭṭu;* குலுக்கியெடுக்கும் சீட்டு. *Loc.*

கொட்டுச்செம்பு koṭṭu-c-cempu, *n.* <id. +. A copper pot made by beating plates into shape; தகடடித்துச்செய்த தாமிரச்செம்பு. (W.)

கொட்டுப்பிடி koṭṭu-p-piṭi, *n.* <id.+. Wooden mallet; கொட்டாப்புளி. *கொட்டுப்பிடி போலுங் கூனும் (சீவக. 2798).*

கொட்டுமண் koṭṭu-maṇ, *n.* <கொட்டு-+. Loose earth thrown to improve land, repair a road, etc., dist. fr. *nilai-maṇ;* எடுத்துக்கொண்டு வந்து இடும் மண்.

கொட்டுமரம் koṭṭu-maram, *n.* <id.+. Dyer's block for beating cloth and fixing colours; ஆடையைச் சாயத்தில் தோய்த்து அடிக்குங் கட்டை. (W.)

கொட்டுமுழக்கு koṭṭu-muḻakku, *n.* <கொட்டு²+. Sounding of drums and pipes on festive occasions; விசேடகாலங்களில் முழக்கும் வாத்தியகோஷம்.

கொட்டுமுறி koṭṭu-muṟi, *n.* perh. கொட்டு- +. A superior kind of brass; உயர்ந்த பித்தளை வகை. (W.)

கொட்டுமேளம் koṭṭu-mēḷam, *n.* <கொட்டு² +. Drums and pipes; மேளவாத்தியம்.

கொட்டுரசம் koṭṭu-racam, *n.* <T. *goḍḍu* +. A kind of pepper-water prepared without dholl; பருப்பிடாத இரசம்.

கொட்டுவாய் koṭṭu-vāy, *n.* <கொட்டு-+. 1. The spot stung by a scorpion or other poisonous insects; தேள் முதலியவை கொட்டின இடம். 2. Nick of time; நெருக்கடியான சமயம். *கொட்டுவாயில் வந்து கேட்கிறான்.*

கொட்டுவான் koṭṭuvāṉ, *n.* <id. 1. Scorpion; தேள். 2. Mallet; கொட்டாப்புளி. 3. Brazier who works by beating plates into shape; கொட்டுக் கன்னான்.

கொட்டுவேலை koṭṭu-vēlai, *n.* <id.+. Beaten work, dist. fr. *vārppu-vēlai;* கொட்டுக் கன்னார்வேலை. (W.)

கொட்டுளு koṭṭuḷu, *n.* perh. M. *koṭṭu*+ உள். Trunk-fish. See ஊமைச்சி, 2.

கொட்டை koṭṭai, *n.* 1. [T. K. Tu. *koṭṭe,* M. *koṭṭa.*] Seed of any kind not enclosed in chaff or husk, nut, stone, kernel; விதை. (பிங்.) 2. [Tu. *koṭṭe.*]. Testicles; அண்டம். 3. Pericarp of the lotus flower; தாமரைக்கொட்டை. *தாமரை வள்ளிதழ் பொதிந்த கொட்டை போல (பெருங். உஞ்சைக். 38, 258).* 4. Fruit-bud of the jack; very small green pumpkin; பலா பூசனிகளின் பிஞ்சு. *Colloq.* 5. Large rounded form, as in writing; உருண்டை வடிவம். *கொட்டையெழுத்து.* 6. A gold ornament for women's hair; மகளிர் தலையணிவகை. 7. See கொட்டையிலந்தை. (L.) 8. [M. *koṭṭa.*] Castor-plant. See ஆமணக்கு. 9. See கொட்டைக்கரந்தை. (மலை.) 10. Knob of wooden sandals; பாதக்குறட்டின் குமிழ். *பவழக் கொட்டைப் பொற்செருப் பேற்றி (பெருங். மகத. 22, 202).* 11. Knots made of warp threads at the end of a cloth, as ornament, etc.; அலங்காரம் முதலியவற்றிற்காக ஆடைத்தும்பினைத் திரளமுடிந்த முடிச்சு. *கொட்டைக்கரைய பட்டுடை நல்கி (பொருந. 155).* 12. Warp threads at the end of a cloth hanging loosely and not made into knots; ஆடைத்தும்பு. (பொருந. 155, உரை.) 13. Head of a pole used as a prop; கிடுதாங்குங் கால்முதலியவற்றின் தலைப்பகுதி. *மணிபுனை செம்பொற் கொட்டை (சீவக. 113).* 14. An ornament for elephant; யானையின் அணிவிசேடம். *பட்ட மடுத்த கொட்டையொடு (பெருங். மகத. 27, 75).* 15. Base of a hand-spindle; நூற்குங் கதிரின் கொட்டை. 16. Rolls of cotton prepared for spinning; பஞ்சுச்சுருள். *கொட்டைத் தலைப்பால் கொடுத்து (திவ். பெரியாழ். 3, 5, 1).* 17. Plug or tent of cloth to widen the ear-holes for jewels; காதுவளர்க்குந் திரி. *Loc.* 18. A kind of ear-ornament for women; மகளிர் காதணிவகை. (பிங்.) 19. Pad for the head in carrying a load; சும்மாடு. (W.) 20. Small round pillow, cushion; சிறு தலையணை. *பஞ்சின் மெட்டணை யருகாக் கொட்டைகள் பரப்பி (பதிறெ. திருவிடைம. மும். 19).*

கொட்டைக்கச்சி koṭṭai-k-kacci, *n.* See கொட்டங்காய்ச்சி. (J.)

கொட்டைக்கரந்தை koṭṭai-k-karantai, *n.* <கொட்டை +. Indian globe-thistle. See விஷ்ணுக்கரந்தை. (M. M. 910.)

கொட்டைக்காய் koṭṭai-k-kāy, *n.* <id. +. Fruit, the seeds or stones of which are disproportionately large or numerous; விதை பெருத் தேனும் நிறைந்தேனும் உள்ள காய்.

கொட்டைக்காய்ச்சி koṭṭai-k-kāycci, *n.* <id.+. A species of mango yielding fruits

of large stones with a small quantity of pulp; சதைப்பற்று அதிகமின்றிக் கொட்டைபருத்துள்ள காய் காய்க்கும் மாமரம்.

கொட்டைக்கையில் koṭṭai-k-kaiyil, *n.* <id.+. Portion of coconut shell; கொட்டங் காய்ச்சி. (J.)

கொட்டைகட்டு-தல் koṭṭai-kaṭṭu-, *v. intr.* <id.+. 1. To gamble with mahua seeds; இலுப்பைக்காய் வைத்துச் சூதாடுதல். (W.) 2. To checkmate the tiger in the game of *nāy-p-puli;* நாய்ப்புலியென்னும் ஆட்டத்திற் புலியைக் கட்டுதல். *Loc.*

கொட்டைச்செத்தல் koṭṭai-c-cettal, *n.* <id.+. See கொட்டைத்தேங்காய். (J.)

கொட்டைசெத்தவன் koṭṭai-cettavaṉ, *n.* <id.+. Lit., an emasculate person. Coward, nerveless man; [அண்டத்தில் வீரியமற்றவன்] கையாலாகாதவன். *Colloq.*

கொட்டைத்தணக்கு koṭṭai-t-taṇakku, *n.* <id.+. Whirling-nut, m. tr., *Gyrocarpus jacquini;* தணக்குவகை. (L.)

கொட்டைத்தேங்காய் koṭṭai-t-tēṅkāy, *n.* <id.+. Dry coconut in which the kernel rattles; கொப்பரைத்தேங்காய். (J.)

கொட்டைதாழ்த்து-தல் koṭṭai-tāḻttu-, *v. intr.* <id.+. To plant fruit-stones; பழக் கொட்டையைப் பூமியில் விதைத்தல். (W.)

கொட்டைநாகம் koṭṭai-nākam, *n.* <id. +. Jaumoon-plum, l. tr., *Eugenia jambolana;* நாவல்மரவகை. (L.)

கொட்டைநாவல் koṭṭai-nāval, *n.* <id. +. See கொட்டைநாகம். (L.)

கொட்டைநூல்-தல் [கொட்டைநூற்றல்] koṭṭai-nūl-, *v. intr.* <id.+. 1. To spin cotton; பஞ்சு நூற்றல். கப்பலோடிப் பட்டகடன் கொட்டைநூற்றுத் தீருமோ? 2. To be engaged in an unprofitable work; பயனற்றவேலை செய்தல். *Colloq.* 3. To waste or idle away one's time; வீண்காலம் போக்குதல். *Colloq.*

கொட்டைப்பயறு koṭṭai-p-payaṟu, *n.* <id.+. A kind of pulse raised in sandy soil, sown in Puraṭṭāci and maturing in four months; மணற்பாங்கான நிலத்தில் புரட்டாசியில் விதைத்து நான்கு மாதங்களில் விளையும் பயறுவகை. (M. M. 329.)

கொட்டைப்பாக்கு koṭṭai-p-pākku, *n.* <id.+. [M. *koṭṭakkā.*] Areca-nut dried without boiling, raw areca-nut; வேகவைக் காமல் உணக்கிய முழுப்பாக்கு. கொட்டைப்பாக் கென்றுரைக்கிற் கோழைமலம்போம் (பதார்த்த. 1437).

கொட்டைப்பாசி koṭṭai-p-pāci, *n.* <id. +. A kind of moss; நீர்ப்பாசிவகை. கொட்டைப் பாசியின் வேரையொத்த சிதரின சிரையை (பெரும் பாண். 468, உரை).

கொட்டைப்புளி koṭṭai-p-puḷi, *n.* <id. +. Pulp of tamarind fruits with the stones; விதையெடுக்காத புளி.

கொட்டைப்பெட்டி koṭṭai-p-peṭṭi, *n.* <id.+. (W.) 1. Betel-box, basket for betel, areca-nuts, etc.; தாம்பூலப்பெட்டி. 2. Basket for cotton yarn; நெசவுக்குரிய பஞ்சுச்சுருள் வைக்கும் பெட்டி. 3. A small basket of palmyra leaves or fibres; பனைநாராற் செய்த சிறுபெட்டிவகை.

கொட்டைபரப்பு-தல் koṭṭai-parappu-, *v. tr.* <id.+. Lit., to sow castor-oil seeds. To destroy completely, rase to the ground, as an enemy's town; [கொட்டைமுத்து விதைத்தல்] பகைவர் துநாட்டை அழித்துத் தரைமட்டமாக்குதல். திரிபுரஞ் சுட்டுக் கொட்டைபரப்புங் குரிசில் (திருப்பு.).

கொட்டைபோடு-தல் koṭṭai-pōṭu-, *v. intr.* <id.+. 1. To sow seeds in garden-beds; விதை விதைத்தல். 2. To shoot forth fruit-buds, as the jack tree; பலாமரம் முதலியன பிஞ்சுவிடுதல். *Loc.* 3. To be experienced, as in a profession; தொழில்முதலியவற்றில் பழக்கப்படுதல். *Colloq.* 4. To die; இறத்தல். *Loc.*

கொட்டைமுத்து koṭṭai-muttu, *n.* <id. +. Castor-bean; சிற்றாமணக்குவிதை. (மலை.)

கொட்டைமுந்திரி koṭṭai-muntiri, *n.* <id.+. Cashew-nut tree. See முந்திரி. (பதார்த்த. 742.)

கொட்டைமுந்திரிகை koṭṭai-muntirikai, *n.* <id.+. See கொட்டைமுந்திரி. (W.)

கொட்டையாசாசி koṭṭai-y-ācāci, *n.* perh. கொட்டை. Glaucous-backed round-leaved moonseed, m. cl., *Cocculus macrocarpus;* ஒருவகைக் கொடி. (L.)

கொட்டையிடு-தல் koṭṭai-y-iṭu-, *v. intr.* <id.+. 1. See கொட்டைபோடு-, 1, 2. 2. To prepare cotton yarn; பஞ்சுச்சுருள் செய்தல். (W.)

கொட்டையிலந்தை koṭṭai-y-ilantai, *n.* <id.+. Woody-fruited jujube, m. tr., *Zizyphus xylopyra;* இலந்தைமரவகை. (L.)

கொட்டையிலை koṭṭai-y-ilai, *n.* <id.+. See கொட்டைக்கரந்தை. (சங். அக.)

கொட்டைவாழை koṭṭai-vāḻai, *n.* <id. +. A kind of plantain yielding stony fruit,

not edible; கோட்டை மிகுந்திருத்தலால் உண்ண உதவாத கனியுடைய வாழைவகை. *Loc.*

கொட்பாட்டன் koṭ-pāṭṭaṉ, *n.* perh. கோ^{3} +. cf. கொப்பாட்டன். See கொள்ளுப்பாட்டன்.

கொட்பு^{1} koṭpu, *n.* <கொட்கு-. 1. Whirling, revolving; சுழற்சி. *கொட்புறு கலினப் பாய்மா* (*கம்பரா. மிதிலை.* 13). 2. Wandering, rambling, going about; சுற்றித்திரிகை. (*திவா.*) 3. Perturbation, agitation; மனச்சுழற்சி. (*சீவக.* 540, *உரை.*) 4. Inconstancy, instability; நிலையின்மை. *கொட் பின்றி யொல்லும்வா யூன்று நிலை* (*குறள்,* 789). 5. (Astrol.) See சரராசி. *கொட்புதய மாகின்* (*சினேந்.* 385). 6. Curve, bend; வளைவு. (W.)

கொட்பு^{2} koṭpu, *n.* <கொள்-. Intention, idea; கருத்து. *கூட வைக்கும் கொட்பின னாகி* (*மணி.* 21, 77).

கொட்பேரன் koṭ-pēraṉ, *n.* perh. கோ^{3}+. See கொள்ளுப்பேரன். *பிரமதேவனுக்குக் கொட் பேரன்* (*இராமநா. ஆரணி.* 19).

கொடகம் koṭakam, *n.* Indian ipecacuanha. See நறிஞ்சா, 3. (L.)

கொடகுத்துவா koṭa-kuttuvā, *n.* See கோடக்குத்துவா.

கொடவர் koṭavar, *n.* A class of temple-servants; கோயிற்கொத்துக்களுள் ஒரு பகுதியார். *கொடவர் கொடுவாளெடுப்பார்* (*கோயிலொ.* 44).

கொடாக்கண்டன் koṭā-k-kaṇṭaṉ, *n.* <கொடு- + ஆ neg. + *kaṇṭaka.* Confirmed miser, as stubborn in refusing to give, opp. to *viṭā-k-kaṇṭaṉ;* சிறிதும் ஈயாத உலோபி. *Colloq.*

கொடாரி koṭāri, *n.* <*kuṭhāra.* Axe; கோடாலி. *கிளையைச் சாடுங் கொடாரியின் காம்பு போன்றாய்* (*பிரபோத.* 2, 28).

கொடாலகம் koṭālakam, *n.* Malabar glory-lily. See வெண்டோன்றி. (*மலை.*)

கொடி koṭi, *n.* <கொடு-மை. 1. [M. *koṭi,* Tu. *koḍi.*] Creeper, climber; படர்கொடி. *நுடங்கு கொடி மருங்கின்* (*பெருங். உஞ்சைக்.* 41, 80). 2. Ceylon leadwort. See சித்திரமூலம். (*மூ. அ.*) 3. Clothes-line, clothes-post; ஆடை உலர்த்துங்கொடி. 4. [M. *koṭi.*] Umbilical cord; கொப்பூழ்க் கொடி. 5. Gold string or chain for women's neck; மகளிர் கழுத்தணிவகை. *மென்றோட் கொடி யென* (*பெருங். உஞ்சைக்.* 41, 71). 6. Gold or silver thread worn round a person's waist; அரைஞாண். (S. I. I. ii, 5.) 7. Rope or pole of a well-sweep; ஏற்றத்தின் கோல் அல்லது கயிறு. (W.) 8. Fine streaks of red capillary veins, as in the eye; கண்வரி முதலியன. (W.) 9. [M. *koṭi.*] Orderliness; ஒழுங்கு. *கருங்கொடிப் புருவம்* (*சீவக.* 658). 10. Length; நீளம். *பழன வெதிரின் கொடிப்பிணை யலளே* (*ஐங்குறு.* 91). 11. A small branch-channel; சிறு கிளைவாய்க்கால். *Loc.* 12. A channel for carrying off the surplus water of a reservoir; ஏரியிலிருந்து வழியும் நீரைக் கொண்டு செல்லும் வாய்க்கால். (W. G.) 13. [T. Tu. *koḍi,* M. *koṭi.*] Banner, flag, standard, streamer; துவசம். *கொடியுங் கவரியும்* (*பெருங். உஞ்சைக்.* 57, 57). 14. Kite, paper-kite; காற்றாடி. (J.) 15. Yama's ensign, an inauspicious yoga; காலத்துவசம் என்னும் யோகம். *பிரம தண்டங் கொடியென்று பொல்லா யோகங்கள்* (*விதான. குணகுண.* 34). 16. The descending node; கேது. (*பிங்.*) 17. Crow; காக்கை. *கடி சேட்டைக் குலக்கொடியே* (*திருக்கோ.* 235). 18. East; கிழக்குத்திசை. *கொடிக்கொண்ட கோடையால* (*கலித்.* 150, 15). 19. [T. *koḍi.*] Side-oven; கோடியடுப்பு. *கொடி யெரிகிறதா?* 20. The 23rd *nakṣatra.* See அவிட்டம். (*சங். அக.*)

கொடிக்கப்பல் koṭi-k-kappal, *n.* <கொடி +. [M. *koṭikkappal.*] Galley or cruiser flying a pennon; கொடிகட்டிய சிறுமரக்கலம். *Loc.*

கொடிக்கம்பம் koṭi-k-kampam, *n.* <id.+. Flagstaff in a temple; கோயில்களின் முன்புறம் கொடியேற்றுவதற்காக நடும் மரம். *திருக்கொடிக் கம்பத்திலே* (*கோயிலொ.* 73).

கொடிக்கயிறு koṭi-k-kayiṟu, *n.* <id.+. 1. Well-twined rope; முறுக்கேறின கயிறு. *கொடிக் கயிற்றொருடுங் கொணர்ந்தனர்* (*உபதேசகா. சிவநாம.* 155). 2. Rope used as a clothes-line; கொடியாகக்கட்டுங் கயிறு.

கொடிக்கரும்பு koṭi-k-karumpu, *n.* <id. +. Straight sugarcane; நேராக வளர்ந்த கரும்பு. *கொடிக்கரும் புடுத்த வேலி* (*சீவக.* 1184).

கொடிக்கவி koṭi-k-kavi, *n.* <id.+. A short treatise on the Śaiva Siddhānta philosophy, by Umāpati-civācāriyar, one of 14 *mey-kaṇṭa-cāttiram,* q.v., believed to have been composed for raising the temple-flag at Chidambaram; தில்லையிலுள்ள கோயிலிற் கொடியேறும்படி உமாபதிசிவாசாரியரால் இயற்றப்பெற்றதும் மெய்கண்டசாத்திரம் பதினான்கனுள் ஒன்றுமான சைவ சமய நூல்.

கொடிக்கழல் koṭi-k-kaḻal, *n.* <id.+. Molucca bean. See கழற்சி. (*பிங்.*)

கொடிக்கள்ளி koṭi-k-kaḷḷi, *n.* <id.+. 1. Moon-creeper, l. sh., *Sarcostemma brevistigma;* கொடிவகை. 2. Beak-flowered creeping milk-hedge, l. sh., *Sarcostemma intermedium;* கள்ளி வகை. *கொடிக்கள்ளிப் பாலுக்குக் கூறு* (*பதார்த்த.* 124).

கொடிக்காக்கட்டான் koṭi-k-kākkaṭṭāṉ, n. <id.+. Sky-blue bindweed, m. cl., *Ipomœa hederacea;* காக்கட்டான்வகை.

கொடிக்கால் koṭi-k-kāl, n. <id.+. 1. Stake or stick set to support the betel creeper; வெற்றிலைக்கொடி படருங் கொம்பு. (W.) 2. Betel pepper, m. cl., *Piper betel;* வெற்றிலை. (மலை.) 3. Betel garden; வெற்றிலைத் தோட்டம். *Colloq.* 4. Vegetable garden; காய்கறித் தோட்டம். *Loc.* 5. Flagstaff of a temple; கொடிக்கம்பம். *கோயிலின்முனுற்ற கொடிக்காலை* (தனிப்பா. i, 361, 98).

கொடிக்கால்மூலை koṭi-k-kāl-mūlai, n. <கொடிக்கால்+. Lit., betel-garden quarter. The north-west corner of a village; [*வெற்றிலைத்தோட்டமுள்ள திசை*] ஊரின் வடமேற்கு மூலை. *கொடிக்கால் மூலையில் மின்னுகிறது. Loc.*

கொடிக்கால்வேளாளன் koṭi-k-kāl-vēḷāḷaṉ, n. <id.+. A sub-division of Vēḷāḷas cultivating betel; கொடிக்காற்பயிர் செய்யும் வேளாள வகையினன்.

கொடிக்குறிஞ்சா koṭi-k-kuṟiñcā, n. <கொடி+. A climber. See குறிஞ்சா, 3. (பதார்த்த. 568.)

கொடிக்கூடை koṭi-k-kūṭai, n. <id.+. Wicker-basket; நாணற்கூடை. (W.)

கொடிக்கையான் koṭi-k-kaiyāṉ, n. <id. +. A plant growing in wet places, *Eclipta alba;* கையாந்தகரைவகை. (W.)

கொடிக்கொத்தான் koṭi-k-kottāṉ, n. <id.+. Parasitic leafless plant. See கோற்றான். (பிங்.)

கொடிகட்டிநில்-தல் [கொடிகட்டிநிற்றல்] koṭi-kaṭṭi-nil-, v. intr. <id.+. 1. See கொடிகட்டு-, 1, 2. 2. To set about a thing with the utmost zeal and promptness; உறுதிப்பாட்டுடன் முயற்சியை மேற்கொள்ளுதல். *Colloq.* 3. To stand by holding a rope attached to a beam, as a woman in labour, a sick person, etc.; நோயாளி முதலியோர் கயிற்றைப் பிடித்துக்கொண்டு நிற்றல். (J.)

கொடிகட்டிவாழ்-தல் koṭi-kaṭṭi-vāḻ-, v. intr. <id.+. Lit., to live hoisting a flag. To live in great prosperity; [*துவசம் நாட்டிவசித்தல்*] மிகுந்த செல்வவாழ்க்கையில் இருத்தல். *Colloq.*

கொடிகட்டு-தல் koṭi-kaṭṭu-, v. intr. <id.+. 1. See கொடியேடு-. 2. To declare hostility, challenge; போருக்கு வருதல். 3. See கொடியேற்று-. *Cm.*

கொடிச்சண்பகம் koṭi-c-caṇpakam, n. <id.+. See கொடிச்சம்பங்கி. (W.)

கொடிச்சம்பங்கி koṭi-c-campaṅki, n. <id.+. Cowslip creeper, l. cl., *Pergularia minor;* கொடிவகை.

கொடிச்சி[1] koṭicci, n. <id. 1. Woman of the hilly tract; குறிஞ்சிநிலத்துப் பெண். *கொடிச்சி காக்கும் பெருங்குரலேனல்* (ஐங்குறு. 296). 2. Ceylon leadwort. See கொடுவேலி. (மலை.) 3. Citronella grass. See காமாட்சிப்புல், 2. (மலை.)

கொடிச்சி[2] koṭicci, n. cf. கொடிறு. Jaws, mandibles; கொடிறு. (சங். அக.)

கொடிச்சிவால் koṭicci-vāl, n. Cow's tail white at the tip; நுனிவெண்மையான பசுவின்வால். (J.)

கொடிச்சிவாலி koṭicci-vāli, n. Cow with tail white at the tip; நுனி வெளுத்த வாலுள்ள பசு. (J.)

கொடிச்சீலை koṭi-c-cīlai, n. <கொடி+. Pennon, flag; கொடியின் சேண்டா.

கொடிச்சூரை koṭi-c-cūrai, n. <id.+. A creeper species of jujube; சூரைவகை. (W.)

கொடிசுற்றிப்பிற-த்தல் koṭi-cuṟṟi-p-piṟa-, v. intr. <id.+. To be born, as a child, with umbilical cord around the neck, deemed ominous to parents and maternal uncle; பெற்றோர்க்கும் தாய்மாமனுக்கும் தீங்குவிளைதற்கு அறிகுறியாகத் கொப்பூழ்க்கொடி சுற்றிக்கொண்டு குழந்தை பிறத்தல். *Colloq.*

கொடிஞ்சி koṭiñci, n. <id. 1. Ornamental staff in the form of a lotus, fixed in front of the seat in a chariot and held by the hand as support; கைக்குதவியாகத் தேர்த்தட்டின் முன்னே நடப்பட்டுத் தாமரைப்பூ வடிவுள்ள அலங்கார உறுப்பு. *மணித்தேர்க் கொடிஞ்சி கையாற் பற்றி* (மணி. 4, 48). 2. Car, chariot; தேர். *கொய்யுளை கொடிஞ்சி குஞ்சரம்* (ஞானா. 7, 18).

கொடிஞ்சில் koṭiñcil, n. See கொடிஞ்சிற்பலகை.

கொடிஞ்சிலடி-த்தல் koṭiñcil-aṭi-, v. intr. <கொடிஞ்சில்+. To dredge a river-channel with a shovel; கொடிஞ்சிற்பலகையால் ஆற்றுக்கால் தோண்டுதல். *Cg.*

கொடிஞ்சிற்பலகை koṭiñciṟ-palakai, n. <id.+. Large wooden shovel or scoop for dredging river-channels; எருதுகளைக்கொண்டு ஆற்றுக்கால் தோண்டும் பலகை. *Cg.*

கொடித்தக்காளி koṭi-t-takkāḷi, n. <கொடி +. Tomato, trailing plant introduced from S. America, *Lycopersicum esculentum;* தென் அமெரிக்காதேசத்துத் தக்காளிவகை. (மூ. அ.)

கொடித்தட்டு koṭi-t-taṭṭu, n. <id.+. Competition with two kites to see which cuts the other's string; காற்றடிச்சண்டை. (W.)

கொடித்தடக்கி koṭi-t-taṭakki, n. prob. id.+தடுக்கு-. A tree; மரவகை. (மூ. அ.)

கொடித்தடம் koṭi-t-taṭam, n. <id.+. Footpath; ஒற்றையடிப்பாதை. *Loc.*

கொடித்தடை koṭi-t-taṭai, n. <id.+. Lit., prohibition by a flag. Prohibition against travel during a temple-festival; [கொடியால் உண்டாகுந் தடை] கோடியேற்றுள்ள திருவிழாக் காலங்களில் பிரயாணங் கூடாதென்னுங் காப்புத்தடை.

கொடித்தண்டு koṭi-t-taṇṭu, n. <id.+. See கொடிக்கம்பம். கருடப்புள்ளொழுதிய கொடித் தண்டு (சிலப். 11, 136, உரை).

கொடித்தம்பட்டன் koṭi-t-tampaṭṭaṉ, n. <id.+. Fat-podded sword-bean, m. cl., *Canavalia ensiformis-turgida;* வாளவரை வகை. (L.)

கொடித்தரம் koṭi-t-taram, n. perh. *kōṭi* + *tāra*. The waxing or waning moon in the 8th, sometimes also in the 7th or 9th phase, when it is in the meridian at sunset or sunrise; சூரியனது உதயாஸ்தமன காலங்களில் உச்சியில் தோன்றும் அஷ்டமிசந்திரன். (W.)

கொடித்தாலி koṭi-t-tāli, n. <கொடி+. A kind of wedding badge. See சரட்டுத்தாலி. *Loc.*

கொடித்திரும்பு-தல் koṭi-t-tirumpu-, v. intr. <*kōṭi*+. To pass the meridian, as the sun or other heavenly body; கிரகங்கள் வான உச்சியைக் கடத்தல். கொடித்திரும்பின உடனே. (J.)

கொடித்தீ koṭi-t-tī, n. <கொடி+. Ceylon leadwort. See கொடிச்சி[1], 2. (தைலவ. தைல. 17.)

கொடித்துத்தி koṭi-t-tutti, n. <id.+. Membranous carpelled evening-mallow, m. sh., *Abutilon crispum;* சிறுதுத்திவகை. (W.)

கொடிநரம்பு koṭi-narampu, n. <id.+. Prominent vein; வெளியே தெரியும்படி ஓடியுள்ள உடல் நரம்பு.

கொடிநாய் koṭi-nāy, n. <id.+. Greyhound; சோணங்கிநாய். (W.)

கொடிநாவல் koṭi-nāval, n. <id.+. Species of jambolanum; நாவல்வகை. (W.)

கொடிநிலை koṭi-nilai, n. <id.+. 1. (Puṟap.) Theme eulogising the king's flag as resembling that of Brahmā, Viṣṇu or Śiva; திரிமூர்த்திகளின் கொடிகளுள் ஒன்றனோடு அரசன் கொடியை உவமித்துப் புகழும் புறத்துறை. (பு. வெ. 9, 39.) 2. The sun regularly rising in the east; கீழ்த்திசையில் நிலையாக உதிக்குஞ் சூரியன். கொடிநிலை கந்தழி வள்ளி (தொல். பொ. 88).

கொடிநெட்டி koṭi-neṭṭi, n. <id.+. Water mimosa. See நீர்ச்சுண்டி. (மலை.)

கொடிப்பசலை koṭi-p-pacalai, n. <id.+. 1. Thorny nail-dye, m. sh., *Barleria prionitis;* செடிவகை. (L.) 2. Heart-leaved Malabar nightshade, m. cl., *Basella cordifolia;* கொடிவகை. (M. M. 461.)

கொடிப்பசளை koṭi-p-pacaḷai, n. See கொடிப்பசலை. *Loc.*

கொடிப்பட்டை koṭi-p-paṭṭai, n. <கொடி+. Ola-bucket; நீரிறைக்கும் ஓலைப்பட்டை. (W.)

கொடிப்படை koṭi-p-paṭai, n. <id.+. Front rank of an army, van; சேனையின் முன் அணிப்படை. கொடிப்படை போக்கிப் படிப்படை நிறீஇ (பெருங். மகத. 24, 39).

கொடிப்பந்தர் koṭi-p-pantar, n. <id.+. A bower or shady retreat made of intertwining creepers; கொடிகள் படர்ந்த பந்தர். எழுநிலை மாடமு மிடைகொடிப்பந்தரும் (பெருங். இலாவாண. 15, 11).

கொடிப்பயறு koṭi-p-payaṟu, n. <id.+. A kind of pulse that puts forth tendrils; பயறுவகை. (W.)

கொடிப்பவழம் koṭi-p-pavaḻam, n. <id.+. Coral. See பவழம். கொளுவொடு படாஅக் கொடிப்பவழத்து (பெருங். இலாவாண. 2, 127).

கொடிப்பாசி koṭi-p-pāci, n. <id.+. A kind of moss creeping upon water, *Hydrilla verticillata;* நீர்ப்பாசிவகை. (M. M. 668.)

கொடிப்பாதை koṭi-p-pātai, n. <id.+. See கொடித்தடம். *Loc.*

கொடிப்பாலை koṭi-p-pālai, n. <id.+. [M. *koṭippāla*.] 1. Green wax-flower, *Dregea volubilis;* பாலைவகை. (L.) 2. (Mus.) An ancient secondary melody-type of the *pālai* class; பாலையாழ்த் திறவகை. (திவா.)

கொடிப்பிணை koṭi-p-piṇai, n. Lead ore; வங்கமணல். (யாழ். அக.)

கொடிப்பிள்ளை koṭi-p-piḷḷai, n. <கொடி+. (W.) 1. Young of a crow; காக்கைக் குஞ்சு. 2. A species of dwarf-goat; பள்ளையாடு.

கொடிப்புல் koṭi-p-pul, n. <id.+. Hariali grass. See அறுகு. கொடிப்புல் லென்று கறிப்பான் (சீவக. 932).

கொடிப்புலி koṭi-p-puli, n. <id.+. A tiger with a long and slender body like a grey-

hound; சோணங்கிநாய் போன்ற உடலுள்ள புலி வகை. (W.)

கொடிப்புன்கு koṭi-p-puṉku, n. <id.+. Hog creeper, l. cl., *Derris scandens;* கொடிவகை. (L.)

கொடிப்பூ koṭi-p-pū, n. <id.+. Flower of creepers, one of *nāl-vakai-p-pū,* q.v.; நால்வகைப்பூக்களுட் கொடிகளிற் பூப்பது. சினைப்பூ வணிந்துங் கொடிப்பூக் கொய்தும் (பெருங். இலாவாண. 12, 130).

கொடிப்பூளை koṭi-p-pūḷai, n. <id.+. A species of climbing wool-plant; பூளைவகை. (W.)

கொடிபோடு-தல் koṭi-pōṭu-, v. intr. <id. +. 1. To hoist a flag, as a challenge or signal of victory; போருக்கு அழைக்கவேனும் வெற்றி குறிக்கவேனும் துவசம் நாட்டுதல். 2. To be firm, determined; உறுதியாயிருத்தல். (W.)

கொடிமரம் koṭi-maram, n. <id.+. [M. *koṭimaram.*] See கொடிக்கம்பம். (சிலப். 11, 136, அரும்.)

கொடிமல்லிகை koṭi-mallikai, n. <id. +. 1. Arabian jasmine. See மல்லிகை. (பிங்.) 2. Large-flowered jasmine. See சாதிமல்லிகை. (L.)

கொடிமாசிகள் koṭi-mācikaḷ, n. <id.+ prob. மாசு. Flitting clouds; நிலையற்றோடும் மேகங்கள். (W.)

கொடிமாடு koṭi-māṭu, n. <id.+. Bullock, lank and long; நீண்டுதளர்ந்த உடலுள்ள மாடு. (W.)

கொடிமாதுளை koṭi-mātuḷai, n. <id.+. Lemon citron, m. tr., *Limoni-medica;* மரவகை. (மூ. அ.)

கொடிமின் koṭi-miṉ, n. <id.+. See கொடிமின்னல்.

கொடிமின்னல் koṭi-miṉṉal, n. <id.+. Extended streak of lightning; கொடிபோல வீசி ஒளிரும் மின்னல்.

கொடிமுடி koṭi-muṭi, n. <id.+. A shrub with intertwined branches; கிளைகள் பிணைந்திருக்குஞ் செடிவகை. (W.)

கொடிமுடிந்தவழக்கு koṭi-muṭinta-vaḻakku, n. <id.+. Intricate, never-ending dispute; ஓயாத சிக்கல்வழக்கு. *Loc.*

கொடிமுடியன் koṭi-muṭiyaṉ, n. <id. +. Tree snake. See கொம்பேறிமூக்கன். (J.)

கொடிமுந்திரி koṭi-muntiri, n. <id.+. Grape vine, l. cl., *Vitis vinifera;* திராட்சை. (பதார்த்த. 762.)

கொடிமுந்திரிகை koṭi-muntirikai, n. <id.+. See கொடிமுந்திரி.

கொடிமுறுக்கு koṭi-murukku, n. <id.+. Inextricable twist, as of a twine; நன்றாக ஏறின முறுக்கு. *Loc.*

கொடிமுன்னை koṭi-muṉṉai, n. <id.+. Pointed-leaved hogweed, s. cl., *Boerhavia repanda;* மூக்குத்திக்கொடி. (L.)

கொடிமூக்கு koṭi-mūkku, n. <id.+. Long, slender nose; நீண்ட மூக்கு. ஒழுகுபொற் கொடி மூக்கும் (சீவக. 165).

கொடியடுப்பு koṭi-y-aṭuppu, n. <id.+. 1. A kind of domestic oven; அடுப்புவகை. 2. Side-oven; பக்க அடுப்பு.

கொடியத்தி koṭi-y-atti, n. <id.+. Scabrid-lobed creeper fig. See நீரத்தி. (மலை.)

கொடியபீசம் koṭiya-pīcam, n. <கொடுமை+. A mineral poison; சீதாங்கபாஷாணம். (யாழ். அக.)

கொடியமன்னன் koṭiya-maṉṉaṉ, n. <id.+. A prepared arsenic. See கோடாசோரிப்பாஷாணம். (யாழ். அக.)

கொடியரசு koṭi-y-aracu, n. <கொடி+. 1. Wild pipal, m. tr., *Ficus arnottiana;* அரசுவகை. 2. Field-bean. See அவரை. (மலை.)

கொடியராகு koṭiya-rāku, n. Cinnamon stone, a species of garnet; கோமேதகம். (யாழ். அக.)

கொடியவீரன் koṭiya-vīraṉ, n. <கொடுமை+. A prepared arsenic. See கோடாசோரிப்பாஷாணம். (W.)

கொடியறுகு koṭi-y-aṟuku, n. <கொடி+. A species of Bermuda grass; அறுகுவகை.

கொடியன்[1] koṭiyaṉ, n. <கொடு-மை. Cruel man; தீயன். (சூடா.)

கொடியன்[2] koṭiyaṉ, n. <கொடி. The descending node, *Cauda draconis;* கேது. (சூடா.)

கொடியாடு koṭi-y-āṭu, n. <id.+. Long-legged goat which annually begets one kid, opp. to *pallāṭu;* வருஷத்துக்கு ஒருமுறை ஒருகுட்டி ஈனும் நீண்டகாலுள்ள ஆடு. கொடியாடு நற்கறியாம் (பதார்த்த. 845).

கொடியாடை koṭi-y-āṭai, n. <id.+. See கொடிச்சீலை. கொடியாடை முதலானதுகளைத் தைக்கிறதும் (கோயிலொ. 94).

கொடியார்கூந்தல் koṭiyār-kūntal, *n.* <கொடியார் +. Seeta's thread. See அம்மையார் கூந்தல். (L.)

கொடியால் koṭi-y-āl, *n.* <கொடி +. A kind of banyan; ஆலமரவகை. (W.)

கொடியாள்[1] koṭiyāḷ, *n.* <id. Woman, slender and beautiful as a vine; கொடிபோன்ற பெண். *கொடியாளை . . . மருமானுக் கருள்செய்ய* (சீவக. 1057).

கொடியாள்[2] koṭiyāḷ, *n.* <கொடு-மை. Cruel woman; கொடுமையானவள். *உள்ளமுங் கோடிய கொடியாள்* (கம்பரா. மந்தரை. 81).

கொடியாள்கூந்தல் koṭiyāḷ-kūntal, *n.* <கொடியாள்[1] +. See கொடியார்கூந்தல். (W.)

கொடியான் koṭiyāṉ, *n.* <கொடு-மை. Cruel man; கொடுமையானவன். *கொடியார் வருமென் று குலாவுவதோ* (கம்பரா. உருக்காட்டு. 9).

கொடியிலந்தை koṭi-y-ilantai, *n.* <கொடி +. A spreading shrub; இலந்தைவகை. (W.)

கொடியிறக்கு-தல் koṭi-y-iṟakku-, *v. intr.* <id. +. [M. *koṭiyiṟakku.*] 1. To strike or lower a flag; ஏற்றினகொடியைத் தாழ்த்துதல். 2. To take down the temple flag, as indicating the close of a festival; திருவிழாமுடிவாகக் கொடியைக் கீழிறக்கிவிடுதல். 3. To pull or haul down a kite; காற்றாடியை இறக்குதல். (J.)

கொடியீச்சு koṭi-y-īccu, *n.* <id. + ஈந்து. Sago. See கவ்வரிசி.

கொடியெடு-த்தல் koṭi-y-eṭu-, *v. intr.* <id. +. To raise the standard as signal of challenge or victory; அறைகூவுகை, வெற்றி என்பவற்றின் அறிகுறியாகத் துவசம் பிடித்தல். *தண்கலை நீத்த நீந்திக் கொடியெடுத் தவர்க்குநல்கு* (சீவக. 2911).

கொடியெலுமிச்சை koṭi-y-elumiccai, *n.* <id. +. Italian lemon, m. tr., *Citrus medica limonum-typica;* எலுமிச்சைவகை. (பதார்த்த. 678.)

கொடியேற்றம் koṭi-y-ēṟṟam, *n.* <id. +. Hoisting a flag in the temple at the commencement of a periodical festival; திருவிழாத்தொடக்கத்தில் கொடிமரத்தில் கொடியை யுயர்த்துகை.

கொடியேற்று[1]**-தல்** koṭi-y-ēṟṟu-, *v. intr.* <id. +. To hoist a flag in a temple indicating the beginning of a periodical festival; கோயிலில் திருவிழாத்தொடக்கத்தில் துவசம் உயர்த்துதல். *திருக்கொடியேற்று நான்று* (S. I. I. ii, 125).

கொடியேற்று[2] koṭi-y-ēṟṟu, *n.* <id. +. [M. *koṭiyēṟṟu.*] See கொடியேற்றம். *காமன் கொடியேற்றெண வியப்ப* (குமா. பிர. முத்துக். 77).

கொடியோடு-தல் koṭi-y-ōṭu-, *v. intr.* <id. +. *Loc.* 1. To shoot forth tendrils; கொடியுண்டாகிப் படர்தல். 2. To be marked with long lines, as palm; to be marked with fine red capillary streaks, as eyes, etc.; இரேகை நீளுதல். 3. To be feeble, as breath at the time of death; மரணகாலத்தில் மூச்சு இழைதல்.

கொடியோன்[1] koṭiyōṉ, *n.* <கொடு-மை. Cruel man; தீயவன். *கொடியோர்த் தெறுதலும்* (புறநா. 29, 9).

கொடியோன்[2] koṭiyōṉ, *n.* prob. கொடியோள். cf. *kumārī.* Aloe. See கற்றாழை. (மலை.)

கொடிவசலை koṭi-vacalai, *n.* See கொடிப் பசலை. (பதார்த்த. 597.)

கொடிவயலை koṭi-vayalai, *n.* See கொடிப் பசலை.

கொடிவலி-த்தல் koṭi-vali-, *v. intr.* <கொடி +. (J.) 1. To draw in the string of a kite; காற்றாடிக்கயிற்றை இழுத்தல். 2. To draw out a withe for use; வளார்களைச் செடியினின்றும் எடுத்தல்.

கொடிவழி koṭi-vaḻi, *n.* <id. +. *Loc.* 1. Footpath; ஒற்றையடிப்பாதை. 2. Genealogical tree; வமிசாவளி.

கொடிவழித்தீர்த்தம் koṭi-vaḻi-t-tīrttam, *n.* <id. +. A sacred spring on Tirupati hills; திருப்பதிமலையிலுள்ள ஒரு புண்ணிய தீர்த்தம். *கொடிவழித்தீர்த்த முதலிய மிக்க . . . வேங்கடம்* (சிலப். 11, 41, உரை).

கொடிவழுதலை koṭi-vaḻutalai, *n.* <id. +. A kind of nightshade, *Solanum;* வழுதுணைவகை. (யாழ். அக.)

கொடிவாகனன் koṭi-vākaṉaṉ, *n.* <id. +. Lit., one having the crow for his vehicle. Saturn; [காக்கையை வாகனமாகவுடையவன்] சனி. (சோதிட. சிந்.)

கொடிவிடு-தல் koṭi-viṭu-, *v. intr.* <id. +. 1. See கொடியோடு-, 1. 2. To increase, shoot up; மிகுதியாதல். *காமங் கொடிவிட* (பரிபா. 6, 103).

கொடிவீசு-தல் koṭi-vīcu-, *v. intr.* <id. +. See கொடியோடு-, 1.

கொடிவீடு koṭi-vīṭu, *n.* <id. +. Arbour, summer-house; படர்கொடிகளால் அமைந்த வீடு. (பெருங். உதயணன்சரித். பக். 199.)

கொடிவேலன் koṭi-vēlaṉ, *n.* Divi-divi. See திவிதிவி. (M. M. 278.)

கொடிவேலி koṭi-vēli, *n.* <கொடுவேலி. 1. Ceylon leadwort. See கொடுவேலி. (பதார்த்த. 484.) 2. Rosy-flowered leadwort; கொடுவேலி வகை. (L.)

கொடிற்றுக்கோல் koṭiṟṟu-k-kōl, *n.* <கொடிறு+. Jemmy, crow-bar, one of the implements of a burglar for removing stones from a wall; செங்கல் முதலியவற்றைப் பெயர்ப்பதற்குக் கள்வர் உபயோகிக்கும் கருவி. (சிலப். 16, 142, உரை.)

கொடிற்றுச்சன்னி koṭiṟṟu-c-caṉṉi, *n.* <id.+. Lock-jaw, tetanus; பற்கள் பூட்டிக்கொள்ளும்படி செய்யும் சன்னிவகை.

கொடிறு koṭiṟu, *n.* prob. கொடு-மை. 1. Cheek, jaw; கதுப்பு. *கொடிறுடைக்குங் கூன்கையர்* (குறள், 1077). 2. Marks of elephant's must; யானைமதச்சுவடு. (பிங்.) 3. Pincers; குறடு. *கொடிறும் பேதையுங் கொண்டது விடாது* (திருவாச. 4, 63). 4. The 8th *nakṣatra*. See பூசம். (திவா.)

கொடு-த்தல் koṭu-, *11 v. tr.* [K. *koḍu*, M. *koṭu*.] 1. To give, grant, supply; ஈதல். *கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க்கு* (குறள், 1005). 2. To bring forth; பெற்றெடுத்தல். *பார்வதியேழுலகுங் கொடுத்தாள்* (பிரமோத். 9, 61). 3. To divide, distribute, as a sum of money; பங்கிடுதல். *இந்தத் தொகையைப் பத்துப்பேருக்குக் கொடு.* 4. To sell; விற்றல். *தில்லை முன்றிற் கொடுக்கோ வளை* (திருக்கோ. 63). 5. To allow, permit; உடன்படுதல். *மலரன்றி மிதிப்பக் கொடான்* (திருக்கோ. 303). 6. To lose by death, as giving to Yama; சாகக்கொடுத்தல். *நீ பயந்த கோட்டானைத் தானே கொடு* (தனிப்பா. i, 35, 68). 7. To abuse roundly; திட்டுதல். *நன்றாய்க் கொடுத்தானா? வேணும், வேணும்.* 8. To belabour, thrash; அடித்தல்.—*aux.* An auxiliary verb, as in *சொல்லிக்கொடு, முடித்துக்கொடு;* ஒரு துணைவினை.

கொடுக்கல்வாங்கல் koṭukkal-vāṅkal, *n.* <கொடு-+. Money transactions, lending and borrowing; லேவாதேவி. *Colloq.*

கொடுக்கறு-த்தல் koṭukkaṟu-, *v. tr.* <கொடுக்கு¹+அறு²-. Lit., to cut off the sting of a scorpion. To break down one's mischievous tendency; [தேட்கொடுக்கை நறுக்குதல்] குறும்புத்தனத்தை அடக்குதல்.

கொடுக்கன் koṭukkaṉ, *n.* <id. A kind of scorpion; தேள்வகை. (J.)

கொடுக்காடுபிடிக்கை koṭukkāṭu-piṭikkai, *n.* <கொழு-+ஆடு+பிடி-. Game of jackal and sheep. See கொழுத்தாடுபிடிக்கை. (W.)

கொடுக்காய் koṭu-k-kāy, *n.* <கொடு-மை+. See கொடுக்காய்ப்புளி.

கொடுக்காய்ப்புளி koṭukkāy-p-puḷi, *n.* <கொடுக்காய்+. [M. *koṭukkāypuḷi.*] Manilla tamarind, m. tr., *Pithecolobium dulce;* மரவகை.

கொடுக்கான் koṭukkāṉ, *n.* <கொடுக்கு¹. See கொடுக்கன். (J.)

கொடுக்கி koṭukki, *n.* <id. 1. Hooked bar for fastening doors; கதவையடைத்து இடும் இரும்புப் பட்டை. (W.) 2. Clasp of an ornament; ஆபரணத்தின்பூட்டு. (W.) 3. See தேட்கொடுக்கி. (யாழ். அக.)

கொடுக்கு¹ koṭukku, *n.* <கொடு-மை. 1. [M. *koṭukku.*] Sting of a wasp, hornet, scorpion; தேள் முதலியவற்றின் கொட்டும் உறுப்பு. 2. Claws of a crab, lobster; நண்டு முதலியவற்றின் இடுக்கிக்கால். *Colloq.* 3. Mischievous lad; துஷ்டப்பையன். 4. Ornamental hangings or ends of cloth in wear; ஆடைமுதலியவற்றிற் சட்டிவிடுந் தொங்கல். *கச்சைபுனைந்ததிலே விட்டான் பெருங்கொடுக்கு* (திருவாலவா. 30, 9). 5. Cloth passed between the legs and tucked up behind; மூலத்தாறு.

கொடுக்கு² koṭukku, *n.* <T. *koḍuku.* Son; மகன். *Loc.*

கொடுக்குக்கட்டிநில்-தல் [கொடுக்குக்கட்டிநிற்றல்] koṭukku-k-kaṭṭi-nil-, *v. intr.* <கொடுக்கு¹+. 1. To stand with a firm resolve; to be resolute or determined; விடாப்பிடியாயிருத்தல். 2. To be earnestly engaged, as in an enterprise; ஊக்கமாயிருத்தல்.

கொடுக்குப்பிடி-த்தல் koṭukku-p-piṭi-, *v. tr.* <id.+. To act as a person's satellite or underling; ஒருவனை விடாது ஊழியன்போன்று பின்தொடர்ந்து திரிதல்.

கொடுக்குமதி koṭukkumati, *n.* <கொடு-. Debt, what is due; கொடுக்கவேண்டியது. (J.)

கொடுகு¹-தல் koṭuku-, *5 v. intr.* cf. ஒடுங்கு-. *Loc.* 1. To shrink or shiver with cold; குளிரால் ஒடுங்குதல். 2. To have the teeth set on edge; பற்கூசுதல்.

கொடுகு²-தல் koṭuku-, *5 v. intr.* <கொடு-மை. To be cruel, ruthless; கொடுமையாதல். *கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்* (தேவா. 918, 1).

கொடுகொட்டி koṭu-koṭṭi, *n.* <id.+கொட்டு-. 1. Śiva's dance on the destruction of Tiri-puram, one of 11 *kūttu*, q.v.; பதினோராடல்களுள் திரிபுரமெரித்தகாலையில் சிவனுடிய கூத்து. *கொடுகொட்டி யாடலும்* (சிலப். 6, 43). 2. A kind of drum; ஒருவகைப் பறை. *குடமுழவங் கொடுகொட்டி குழலு மோங்க* (தேவா. 225, 2).

கொடுகொடு-த்தல் koṭu-koṭu-, *11 v. intr.* <கொடுகொடு (onom.) 1. To shiver or tremble with cold; குளிரால் நடுங்குதல். 2. To be hasty; அவசரப்படுதல். *Loc.*

கொடுங்கண் koṭu-ṅ-kaṇ, *n.* <கொடு-மை+. Evil eye; தீமைவிளைக்கும் பார்வை. *Loc.*

கொடுங்காய் koṭu-ṅ-kāy, *n.* <id.+. Lit., crooked fruit. Cucumber. [வளைவுள்ள காய்] See வெள்ளரி. *வாள்வரிக் கொடுங்காய்* (சிலப். 16, 25).

கொடுங்குன்றம் koṭu-ṅ-kuṉṟam, *n.* <id. +. Pirāṉmalai, a hill and a town in the Ramnad district; இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள பிரான்மலை. (தேவா.)

கொடுங்கை koṭu-ṅ-kai, *n.* <id.+. [M. *koṭuṅkai.*] 1. Folded arm; மடித்த கை. *மன்னர் மன்னவன் கொடுங்கைமேற் றுயின் றனன்* (நைடத. கான்புகு. 21). 2. Curved cornice or projection on the sides or front of a building, car, etc.; வீடு முதலியவற்றின் வெளிப்புறம் நீண்டு வளைந்துள்ள உறுப்பு. *மரகதக் கொடுங்கை சுற்றமைய வைத்தனன்* (தணிகைப்பு. வள். 12). 3. Severity, harshness, oppression; கொடுமை. (J.)

கொடுங்கைத்தாடி koṭuṅkai-t-tāṭi, *n.* <கொடுங்கை+. A long, rounded beard; நீண்டு வளைந்த தாடி. (W.)

கொடுங்கோபிச்சிலை koṭu-ṅ-kōpi-c-cilai, *n.* prob. கொடு-மை+. A kind of yellow stone; ஒருவகை மஞ்சள்நிறக்கல். (W.)

கொடுங்கோல் koṭu-ṅ-kōl, *n.* <id..+. Lit., curved sceptre. Unjust or unrighteous rule, despotic government, tyranny, opp. to *ceṅ-kōl;* [வளைந்த கோல்] நீதிநெறிதவறிய அரசாட்சி. *கொடுங்கோ லுண்டுகொல்* (சிலப். 23, 111).

கொடுங்கோன்மை koṭu-ṅ-kōṉmai, *n.* <id.+. See கொடுங்கோல். (குறள், 56, அதி.)

கொடுசூரி koṭu-cūri, *n.* <id.+சூர். Cruel, wicked woman, as Kāḷi; முர்க்கம் மிக்கவள்.

கொடுசூலி koṭu-cūli, *n.* <id.+*śūla.* See கொடுசூரி.

கொடுசூலித்தனம் koṭu-cūli-t-taṉam, *n.* <id.+. Extreme wickedness or cruelty, applied to women; மிக்க முர்க்கத்தன்மை. *Colloq.*

கொடுஞ்சி koṭuñci, *n.* See கொடிஞ்சி. *பூண்ட பொன்னுகக் கொடுஞ்சி . . . கடுஞ்செல லாழித் திண்டேர்* (பெருங். உஞ்சைக். 48, 15).

கொடுஞ்சூரி koṭu-ñ-cūri, *n.* <கொடு-மை +. See கொடுசூரி. (W.)

கொடுஞ்சொறி koṭu-ñ-coṟi, *n.* <id.+. Mange, scab or itch in animals; மிருகங்களுக்குக் காணுஞ் சொறிநோய்வகை.

கொடுத்துவை-த்தல் koṭuttu-vai-, *v.* <கொடு-+. *tr.* To entrust or charge with; நம்பிக்கையா யொருவரிடம் பொருளை வைத்தல்.— *intr.* To merit or deserve by one's past deeds; பூர்வ புண்ணியத்தால் அதிருஷ்டம் பெற்றிருத்தல்.

கொடுதலை koṭutalai, *n.* <id. Giving, paying; பணம்முதலியன செலுத்துகை. *Loc.*

கொடுதலைமுடிச்சு koṭutalai-muṭiccu, *n.* <கொடு-மை+. See கொடுமுடிச்சு, 1. *Loc.*

கொடுதி koṭuti, *n.* Peg for fastening a tenon in a mortise; மரவாணி. (J.)

கொடுந்தமிழ் koṭu-n-tamiḻ, *n.* <கொடு-மை +. Tamil dialect current in regions surrounding *cen-tamiḻ-nāṭu;* செந்தமிழ்நாட்டைச் சூழ்ந்திருக்கும் நிலங்களில் வழங்கும் தமிழ்மொழி. (நன். 273, உரை.)

கொடுந்தமிழ்நாடு koṭu-n-tamiḻ-nāṭu, *n.* <கொடுந்தமிழ்+. Regions where *koṭun-tamiḻ* is spoken, 12 in number, viz., *teṉ-pāṇṭi, kuṭṭam, kuṭam, kaṟkā, vēṇāṭu, pūḻi, paṉṟi, aruvā, aruvā-vaṭatalai, cītam, malāṭu, puṉaṉāṭu;* Cēṉāvaraiyar giving *poṅkar-nāṭu* and *oḷi-nāṭu* instead of *vēṇāṭu* and *puṉaṉāṭu;* கொடுந்தமிழ் பேசப்படுவனவாகிய தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேணுடு, பூழி, பன்றி, அருவா, அருவாவடதலை, சீதம், மலாடு, புனனுடு என்னும் பன்னிரு நிலங்கள். (நன். 273, உரை; தொல். சொல். 400, சேனு.)

கொடுந்தலைப்பொருவா koṭu-n-talai-p-poruvā, *n.* <கொடு-மை+. Anchovy, a sea-fish, silvery, tinged with gold, attaining 6 in. in length, *Engraulis kammalensis;* ஆறங்குலநீளமும் பொன்மைகலந்தவெண்ணிறமும் உள்ள கடல்மீன்வகை.

கொடுந்துயர் koṭu-n-tuyar, *n.* <id.+. Lit., extreme pain. Death; [மிக்க துயரம்] சாவு. *குரவர்க் குற்ற கொடுந்துயர் கேட்டு* (மணி. 3, 18).

கொடுந்தொழிலாளன் koṭu-n-toḻil-āḷaṉ, *n.* <id.+. Lit., one given to cruel deeds. Yama; [கொடுஞ்செய்கையுள்ளவன்] யமன். *கொடுந் தொழிலாளன் கொன் றனன் குவிப்ப* (மணி. 6, 100).

கொடுநாக்கு koṭu-nākku, *n.* <id.+. See கருநாக்கு.

கொடுநாக்கெறி-தல் koṭu-nākkeṟi-, *v. intr.* <id.+. To lick one's lips in relish or anticipation of food; விருப்பக்குறியாக நாவால் வாய்ப்புறத்தைத் துழாவுதல். (அகநா. 56, உரை.)

கொடுநுகம் koṭu-nukam, *n.* <id.+. 1. Yoke; நுகத்தடி. *கொடுநுக நுழைந்த கணைக்கால லத்திரி* (அகநா. 350). 2. Plough; கலப்பை. (பிங்.) 3. The 10th *nakṣatra.* See மகம். (பிங்.)

கொடுப்பு[1] koṭuppu, *n.* <கொடு-. 1. Giving; கொடுக்கை. 2. Playful dealing of blows; விளையாட்டாக அடிக்கை. (W.)

கொடுப்பு[2] koṭuppu, *n.* cf. கதுப்பு. Cheek, jaws; கதுப்பு. (W.)

கொடுப்புப்பல் koṭuppu-p-pal, *n.* <கொடுப்பு²+. Molar teeth, grinders; கடைவாய்ப்பல். (W.)

கொடுப்புப்பீறி koṭuppu-p-pīṟi, *n.* <id. +. Cancerous tumour in a corner of the jaws; கதுப்பின் ஓரத்தில் உண்டாகும் சிலந்திவகை. (W.)

கொடுப்பை koṭuppai, *n.* A plant growing in damp places. See போன்னாங்காணி. (மலை.)

கொடுபடு-தல் koṭu-paṭu-, *v. intr.* <கொடு- +. To be discharged or paid, as a debt; to be returned, as a borrowed article; கடன் முதலியன செலுத்தப்படுதல்.

கொடுபாடு koṭu-pāṭu, *n.* <id. See கொடுதலை. *Loc.*

கொடுபோ-தல் koṭu-pō-, *v. tr.* <கொள்- +. To carry; கொண்டுசெல்லுதல்.

கொடும்பகல் koṭu-m-pakal, *n.* <கொடு-மை +. Midday; நண்பகல். *Loc.*

கொடும்பனிக்காலம் koṭu-m-paṉi-k-kālam, *n.* <id. +. The months of Māci and Paṅkuṉi, season of heavy dews; பனிமிகுந்துள்ள மாசி பங்குனி மாதங்கள். (பிங்.)

கொடும்பாடன் koṭu-m-pāṭaṉ, *n.* <id. +. Cruel man; கொடியவன். *கண்ணறையன் கொடும் பாட னென்றுரைக்க வேண்டா* (தேவா. 678, 9).

கொடும்பாடு koṭu-m-pāṭu, *n.* <id. +. 1. Cruelty, severity, hardship; கொடுமைப்பாடு. *கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை* (சிலப். 15, 121). 2. Perversity; மாறுபாடு. *கொடும்பா டறியற்க வெம்மறிவு* (பரிபா. 2, 76).

கொடும்பாவி¹ koṭu-m-pāvi, *n.* <id. + பாவி. Heinous sinner; பெரும்பாதகன். *பயமெனுமோர் கொடும்பாவிப் பயலே* (அருட்பா, vi, *தான்பெற்ற.* 17).

கொடும்பாவி² koṭu-m-pāvi, *n.* <id. + பாவை. Straw effigy representing the most heinous sinner, dragged through the village streets in time of drought and burnt to expiate public crime and bring rain; பஞ்சமுதலிய உண்டான காலங்களில் அவை தீரும்படி கிராமசாந்தியாகத் தெருக்களிற் கட்டியிழுத்துக் கொளுத்தப்படும் வைக்கோலுருவம். *Colloq.*

கொடும்பாவை koṭu-m-pāvai, *n.* <id. +. See கொடும்பாவி².

கொடும்பாளூர் koṭumpāḷūr, *n.* A village in Pudukkottah State noted for its historical interest; புதுக்கோட்டைச்சீமையில் சரித்திர விசேடமுள்ள ஓர் ஊர். *கோனாட்டுக் கொடிநகரங் கொடும் பாளூர்* (பெரியபு. *இடங்கழி.* 2).

கொடும்பு koṭumpu, *n.* <கொடு-மை. 1. Small fibrous rising on a surface of thread or string; சிம்பு. *வெண்சிறுகடுகளவும் கொடும்பில்லையாம்படி நீற்றி* (மலைபடு. 24, உரை). 2. Bran; தவிட்டுப்பொடி. *Loc.* 3. Cruelty, severity; கொடுமை. *Loc.*

கொடும்புரி koṭu-m-puri, *n.* <id. +. [M. *koṭumpiri.*] 1. See கொடிமுறுக்கு. 2. Deep-laid plot; கடுஞ்சூழ்ச்சி. (W.)

கொடும்புலி koṭu-m-puli, *n.* <id. +. 1. Lion; சிங்கம். (உரி. நி.) 2. Leo, a constellation of the zodiac; சிங்கராசி. (சூடா.)

கொடும்பை¹ koṭumpai, *n.* perh. id. 1. Waterfall; நீர் அருவி. (அக. நி.) 2. Hill, hillock; குன்றம். (அக. நி.) 3. Tank; குளம். (அக. நி.) 4. Gutter, drain; தூம்பு. (சது.) 5. Rope, halter; தாம்பு. (அக. நி.) 6. A kind of evergreen shrub; பச்சிலைப்பூவகை. (அக. நி.)

கொடும்பை² koṭumpai, *n.* See கொடும்பாளூர். *கொடும்பை நெடுங்குளக் கோட்டகம்* (சிலப். 11, 71).

கொடும்போக்கு koṭu-m-pōkku, *n.* <கொடு-மை +. Departure, as from home, with no intention of returning; வீட்டிற்குத் திரும்பிவருங் கருத்தின்றி வெளியேறுகை. *Loc.*

கொடுமடி koṭu-maṭi, *n.* <id. +. Cloth at the waist folded to hold things, as in a bag; பண்டம் இடுதற்காக வளைத்துக்கட்டிய மடி. *கொடுமடியுடையர் கோற்கைக் கோவலர்* (அகநா. 54, 10).

கொடுமணம் koṭumaṇam, *n.* An ancient town noted for the manufacture of jewellery; அணிகலங்களுக்குப் பேர்பெற்ற பழையதோர் ஊர். *கொடுமணம் பட்ட வினைமா ணருங்கலம்* (பதிற்றுப். 74).

கொடுமரம்¹ koṭu-maram, *n.* <கொடு-மை +. 1. Bow; வில். *கொடுமரந் தேய்த்தார்* (கலித். 12). 2. Sagittarius, a constellation of the zodiac; தனுராசி. (சூடா.) 3. Rung of a ladder; ஏணிப்படி. *கொடுமரம் பற்றி நெட்டிதண் பொலிந்தும்* (கல்லா. 22, 38).

கொடுமலையாளம் koṭu-malaiyāḷam, *n.* <id. +. 1. A Malayalam dialect considered difficult to be understood; அரிதிற்பொருள்படும் மலையாளமொழிவகை. 2. That part of Malabar where *koṭumalaiyāḷam* is spoken; கொடுமலையாளம்பேசும் மலைநாட்டுப்பகுதி. *கொடுமலையாளக் குடியிருப் புடையேன்* (மனோன். பாயி.).

கொடுமுடி koṭu-muṭi, *n.* <id. +. [M. *koṭumuṭi.*] 1. Summit of a mountain,

peak; மலையுச்சி. (பிங்.) 2. Terrace or top of a mansion; உப்பரிகை. கோடுயர் மாடத்துக் கொடுமுடி (பெருங். மகத. 8, 15). 3. A Śiva shrine in Coimbatore District. See பாண்டிக்கொடுமுடி.

கொடுமுடிச்சு koṭu-muṭiccu, *n.* <id.+. (W.) 1. Hard, inextricable knot; அவிழ்க்கமுடியாத முடிச்சு. 2. Malignant plot, vile conspiracy; கேடுசூழும் சூழ்ச்சி.

கொடுமுடிந்தவழக்கு koṭu-muṭinta-vaḻakku, *n.* <கொடி+. See கோடிமுடிந்தவழக்கு. *Loc.*

கொடுமுண்டி koṭumuṇṭi, *n.* Bushy roundish-leaved sweet thorn. See சொட்டைக்களா. (L.)

கொடுமுறுக்கு koṭu-muṟukku, *n.* <கொடு-மை+. Inextricable twisting of strands or inextricable knots in a string; நூலின் மிகச்சுற்றியேறிய முறுக்கு.

கொடுமூலை koṭu-mūlai, *n.* <id.+. Out-of-the-way corner; எளிதில் அறிந்து செல்லக்கூடாத மூலையிடம். *Loc.*

கொடுமை koṭumai, *n.* <கோடு-. [M. *koṭuma.*] 1. Cruelty, tyranny, inhumanity; குரூரம். கொடுமைபல செய்தன (தேவா. 945, 1). 2. Severity, harshness; கடுமை. (கந்தபு. பார். 6.) 3. Roughness, uncouthness; முருட்டுத்தன்மை. 4. Vileness, wickedness; தீமை. கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமை யிழைப்ப (கம்பரா. மந்திரப். 1). 5. Crookedness, obliquity; வளைவு. (சிலப். 11, 20.) 6. Partiality, bias; மனக்கோட்டம். கொடுமையுஞ் செம்மையும் (பரிபா. 4, 50). 7. Injustice; அநீதி. கொடியோர் கொடுமை (தொல். பொ. 147). 8. Sin; பாவம். *Loc.* 9. Harsh words, slander; வேண்டாவார்த்தை. (அக. நி.) 10. A mineral poison; வக்கிராந்தபாஷாணம். (சங். அக.)

கொடுமைசொல்(லு)-தல் koṭumai-col-, *v. intr.* <கொடு-மை+. To speak harsh or cruel words; நிஷ்டூரம் பேசுதல். *Colloq.*

கொடுமைத்தானம் koṭumai-t-tāṉam, *n.* <id.+. (Astrol.) Lit., place foreboding calamity. The eighth house from the ascendant; [துன்பந் தோற்றுவிக்கும் இடம்] இலக்கினத்துக்கு எட்டாமிடம். (சங். அக.)

கொடுவரி koṭu-vari, *n.* <id.+. Lit., that which has curved stripes. Tiger; [வளைந்த வரிகளுடையது] புலி. கொடுவரி வழங்குங் கோடுயர் நெடுவரை (புறநா. 135, 1).

கொடுவா-தல் [கொடுவருதல்] koṭu-vā-, *v. tr.* <கொள்-+. To bring; கொண்டுவருதல். கொடுவருதி ரிரதமெனக் கூறலோடும் (கந்தபு. தாரக. 31).

கொடுவாய்[1] koṭu-vāy, *n.* <கொடு-மை+. 1. Curved or bent edge, as of a bill-hook; வாள் முதலியவற்றின் வளைந்த வாய். கொடுவாய்க் குயத்து (சிலப். 16, 30). 2. Tale-bearing, back-biting; குறளை. (பிங்.) 3. Reproach, slander; பழிச்சொல். கன்னிகா காமியெனுங் கொடுவாய் (சீகாழித். கோச்சை. 31). 4. Cockup, grey, attaining 5 ft. in length, *Lates calcarifer;* ஐந்தடி நீளமும் சாம்பல்நிறமும் உள்ள மீன்வகை. (M. M. 195.) 5. A species of tiger; புலிவகை. *Loc.*

கொடுவாய்[2] koṭu-vāy, *n.* <கோடு-மை+. See கோடைவாய்.

கொடுவாயிரும்பு koṭu-vāy-irumpu, *n.* <id.+. Iron hook, as of an angle; தூண்டில் முதலியவற்றிலுள்ள இரும்புக்கோர்ச்சி. கொடுவாயிரும்பின் கோளிரை துற்றி (அகநா. 36, 2).

கொடுவாவல் koṭu-vāval, *n.* See கொடுவாய்[1], 4.

கொடுவாள் koṭu-vāḷ, *n.* <கொடு-மை+. [T. *koḍavali,* M. *koṭuvāḷ.*] 1. Pruning-knife, bill-hook, sickle; அரிவாள். 2. Battle-axe; மழு. வலக்கை யஞ்சுடர்க் கொடுவாள் பிடித்தோள் (சிலப். 23, 8).

கொடுவாளை koṭu-vāḷai, *n.* See கொடுவாய்[1], 4. (W.)

கொடுவினை koṭu-viṉai, *n.* <கொடு-மை+. Evil deeds of former births; முற்பிறப்பிற் செய்த தீவினை. கொடுவினையா ரென்றும் குறுகாவடி (தேவா. 969, 2).

கொடுவிஷம் koṭu-viṣam, *n.* <id.+. 1. Fatal poison, venom; கொல்லுந் தன்மையுள்ள விஷம். 2. A mineral poison; வெள்ளைப்பாஷாணம். (W.)

கொடுவேரி koṭu-vēri, *n.* <id.+வேர். [M. *koṭuvēri.*] See கொடுவேலி. செங்கொடுவேரி தேமா மணிச்சிகை (குறிஞ்சிப். 64).

கொடுவேலி koṭu-vēli, *n.* <id.+id. [M. *koṭuvēli.*] Ceylon leadwort, climber, *Plumbago zeylanica;* சித்திரமூலம் என்னுங் கொடி. (மலை.)

கொடுவை koṭuvai, *n.* <id. Wickedness, mischievousness; துஷ்டத்தனம். கொடுவைப் பசுக்களை (ஈடு, 4, 8, 4).

கொடூரம் koṭūram, *n.* <*kaṭhōra.* [M. *koṭūram.*] Cruelty, severity, harshness; குரூரம்.

கொடை koṭai, *n.* <கொடு-. [K. *kōḍu, koḍage.*] 1. Giving away, as a gift; donation; தியாகம். இல்லான் கொடையே கொடைப்பயன் (நாலடி, 65). 2. (Puṟap.) Theme of a king distributing liberally to the poor the enemy's cattle captured by him; கைக்கொண்ட நிரையை இரவலர்க்கு வரையாது கொடுக்கும் புறத்துறை. உண்டாட்டுக் கொடையென (தொல். பொ. 58). 3. Three days' festival of a village deity, dist. fr.

paṭukkai; கிராமதேவதைக்கு மூன்றுநாள் செய்யுந் திருவிழா. (G. Tn. D. I, 117.) 4. Round abuse; வசவு. அவள் கொடுத்த கொடை ஏழுசன்மத்துக்குப் போதும். 5. Round blows; அடி.

கொடைக்கடம் koṭai-k-kaṭam, *n.* <கொடை +. Charity-giving, considered a duty; கொடையாகிய கடமை. கொடைக்கடம் பூண்ட கொள்கைய ளாகி (பெருங். நரவாண. 8, 43).

கொடைக்கானல் koṭai-k-kāṉal, *n.* <கோடை +. See கோடைக்கானல்.

கொடைக்கை koṭai-k-kai, *n.* perh. கோடு +. Ridge of a roof; வீட்டின்முகடு. (பிங்.)

கொடைத்தம்பம் koṭai-t-tampam, *n.* <கொடை +. Column or pillar commemorating one's munificence; தியாகத்திற்கு அறிகுறியாக நாட்டுந் தம்பம். (W.)

கொடைநேர்-தல் koṭai-nēr-, *v.* <id. +. *tr.* To agree to give one's daughter in marriage; மகளை மணஞ்செய்துகொடுக்க உடன்படுதல். ஆர்வுற்றெமர் கொடைநேர்ந்தார் (கலித். 104).—*intr.* To promise or mentally resolve the celebration of a festive worship to a deity; தேவதைக்கு விழாச்செய்யத் தீர்மானித்தல். *Loc.*

கொடைப்பணக்காரன் koṭai-p-paṇa-k-kāraṉ, *n.* <id. +. Man of great wealth; மிகுந்த செல்வமுள்ளவன். *Loc.*

கொடைமடம் koṭai-maṭam, *n.* <id. +. Unrestricted munificence, unlimited liberality; வரைவின்றிக் கொடுக்கை. கொடைமடம் படுத லல்லது (புறநா. 142, 5).

கொடைமுடி koṭai-muṭi, *n.* Indian laburnum. See சரக்கொன்றை. (சங். அக.)

கொடைமை koṭaimai, *n.* <கொடை. Munificence, liberality; கொடைத்தொழில். கொடுத்த லெய்திய கொடைமையானும் (தொல். பொ. 63).

கொடையாளன் koṭai-y-āḷaṉ, *n.* <id. +. Munificent person; ஈகையுள்ளவன். கோலக்கா மேவுங் கொடையாளா (அருட்பா, i, விண்ணப். 16).

கொடையாளி koṭai-y-āḷi, *n.* <id. +. See கொடையாளன்.

கொடையெதிர்-தல் koṭai-y-etir-, *v. intr.* <id. +. 1. To make a gift or offering; கொடுத்தலை மேற்கொள்ளுதல். குத்தொக வரூஉங் கொடையெதிர் கிளவி (தொல். சொல். 99, இளம்பூர.). 2. To accept or receive a gift; கொடுப்பதனை யேற்றல். கொடையெதிர்கிளவியெனக் கொள்வோனுகவும் (இலக். கொத். பக். 5).

கொடையோன் koṭaiyōṉ, *n.* <id. See கொடையாளன். (பிங்.)

கொடைவஞ்சி koṭai-vañci, *n.* <id. +. (Purap.) Theme of a king liberally rewarding his panegyrists with the spoils of war; போரில் வென்றுகொண்ட பொருளைப் பாடிய பாணர்க்கு அரசன் பரிசாக அளிப்பதைக் கூறும் புறத்துறை. (பு. வெ. 3, 16.)

கொடைவினா koṭai-viṉā, *n.* <id. +. Question implying willingness to give, as 'Has he no dress?'; கொடுக்கும் நோக்கத்தோடு கேட்கும் வினா. சாத்தற்கு ஆடையில்லையோ என்பது கொடைவினா (நன். 385, உரை).

கொடைவீரம் koṭai-vīram, *n.* <id. +. Heroism in generosity, as the voluntary sacrifice of one's life for another; தியாகத்தில் காட்டும் வீரம். கொடைவீரமோ . . . சென்னி பண்பு (பெருந்தொ. 743).

கொண்கன் koṇkaṉ, *n.* <கொள்-. 1. Husband; கணவன். கூடிய கொண்கன் குறுக (பு. வெ. பெண்பாற். 12, 11). 2. Chief of the maritime tract; நெய்தனிலத் தலைவன். (திவா.)

கொண்கானம் koṇkāṉam, *n.* <*koṅkaṇa.* Mt. Koṅkaṇa; ஒரு மலை. பொன்படு கொண்கான நன்னன் (நற். 391).

கொண்ட koṇṭa, *pple.* <கொள்-. A word denoting comparison; ஓர் உவமவாசகம். யாழ் கொண்ட விமிழிசை (கலித். 29, 17).

கொண்டக்காரன் koṇṭa-k-kāraṉ, *n.* A sub-caste of fishermen; மீன்வலைஞரில் ஒரு வகுப்பினன். (யாழ். அக.)

கொண்டகுளம் koṇṭakuḷam, *n.* Strychnine tree. See எட்டி. (மலை.)

கொண்டங்கட்டிப்பாய்ச்சு-தல் koṇṭaṅ-kaṭṭi-p-pāyccu-, *v. tr.* <கொண்டம்[2] +. To irrigate a field on a high level by damming a river or channel and forming a small reservoir; அணைகட்டி மேட்டுநிலத்தில் நீர்பாய்ச்சுதல். *Loc.*

கொண்டச்சாணி koṇṭa-c-cāṇi, *n.* Indian ipecacuanha. See கொண்டைச்சாணி. (மலை.)

கொண்டச்சானி koṇṭa-c-cāṉi, *n.* See கொண்டைச்சாணி. (W.)

கொண்டபாடு koṇṭa-pāṭu, *n.* <கொள்- +. Opinion, belief; கோட்பாடு. நெறியன்றி ஒருவர் தம்மை மனத்தின்கட் கொண்டக்கால் அக்கொண்ட பாட்டினின்றும் மீட்டுத் தெருட்டுதல் (பழ. 37, உரை).

கொண்டம்[1] koṇṭam, *n.* See குறிஞ்சா, 3. (மலை.)

கொண்டம்[2] koṇṭam, *n.* <குண்டம். Small reservoir formed by damming a river or channel for irrigating field on a high level; மேட்டுநிலத்தில் பாய்ச்சுதற்காகத் தேக்கிய நீர்நிலை. *Loc.*

கொண்டல்[1] koṇṭal, *n.* <கொள்-. 1. Receiving, taking; கோள்ளுகை. உணங்கற் றலையிற் பலிகொண்ட லென்னே (தேவா. 614, 5). 2. [M. *koṇṭal.*] Cloud; மேகம். கொண்டல் வண்ணா குடக்கூத்தா (திவ். திருவாய். 8, 5, 6). 3. Rain; மழை. (ஞானா. 43, 14, உரை.) 4. [prob. மேஷ misread as மேஷ] Aries, a constellation of the zodiac; மேஷராசி. (சாதகசிந். காலநிக. 24.) 5. See கோண்டற்கல். (சங். அக.) 6. A girls' game; மகளிர் விளையாட்டுவகை. (W.)

கொண்டல்[2] koṇṭal, *n.* <குணக்கு. 1. East wind; கீழ்காற்று. கொண்டன் மாமழை பொழிந்த . . . துளி (புறநா. 34, 22). 2. Wind; காற்று. (பிங்.) 3. East; கிழக்கு. *Naut.*

கொண்டல்வண்ணன் koṇṭal-vaṇṇaṉ, *n.* <கொண்டல்[1]+. [M. *koṇṭalvaṇṇan.*] Viṣṇu, as the cloud-coloured; [மேகநிறமுடையவன்] திருமால். கொண்டல்வண்ணனை (திவ். அமலனாதி. 10).

கொண்டலாத்தி koṇṭalātti, *n.* <கொண்டை[1]+ உலாத்து-. [T. *koṇḍalāṭi*, M. *koṇṭalāṭi.*] 1. Hoopoe, having a beautiful crest erected at will, *Upupaepops;* குருவிவகை. (W.) 2. Hill bulbul, *Otocompsa jocosa;* ஒருவகைப் பறவை. (M. M. 102.) 3. Madras bulbul, *Pycnonotus haemorhous;* குருவிவகை. (M. M. 104.)

கொண்டலை koṇṭalai, *n.* perh. கொண்டல்[1]. Seaside Indian oak. See சமுத்திரக்கடம்பு. (L.)

கொண்டவன் koṇṭavaṉ, *n.* <கொள்-. Husband; கணவன்.

கொண்டற்கல் koṇṭaṟ-kal, *n.* <கொண்டல்[1] +. A kind of black stone; மந்தாரச்சிலை. (யாழ். அக.)

கொண்டாட்டக்காரன் koṇṭāṭṭa-k-kāraṉ, *n.* <கொண்டாடு-+. 1. Cheerful, jovial, sociable man; உற்சாகமுள்ளவன். 2. Associate, companion; தோழன். (W.)

கொண்டாட்டம் koṇṭāṭṭam, *n.* <id. [T. *koṇḍāṭamu*, M. *koṇṭāṭṭam.*] 1. See கொண்டாட்டு. காதலன் கொண்டாட்டத்தாலே களித்து (சீவக. 229, உரை). 2. Joy, delight; சந்தோஷம். 3. Celebration of a feast, any occasion of great eclat, festivity; உற்சவ முதலிய விசேடங்கள்.

கொண்டாட்டு koṇṭāṭṭu, *n.* <id. Praise, appreciation, fondling, caressing; பாராட்டல். கொண்டாட்டும் குலம்புனைவும் (திவ். திருவாய். 4, 9, 3).

கொண்டாடு-தல் koṇṭāṭu-, *v.* <கொள்-+ ஆடு-. [M. *koṇṭāṭu.*] *intr.* To enjoy a person's society, take pleasure in one's company; கூடிக் குலாவுதல்.—*tr.* 1. [T. *koṇḍāḍu*, Tu. *koṇḍāḍuni.*] To praise, appreciate; to fondle, caress; பாராட்டுதல். கொண்டாடுதல் புரியாவரு தக்கன் (தேவா. 908, 9). 2. To celebrate, as a festival; to observe, as a holiday; to solemnize, cherish, as grief; உற்சவமுதலியன கோண்டாடுதல்.

கொண்டாரணியம் koṇṭāraṇiyam, *n.* prob. T. *koṇḍa*+*araṇya.* Thick, impenetrable forest; நுழையமுடியாத பெருங்காடு. கொண்டாரணியமான பிரதேசம். *Colloq.*

கொண்டான் koṇṭāṉ, *n.* <கொள்-. 1. See கோண்டவன். கொண்டானிற் றுன்னிய கேளிர் பிற ரில்லை (நான்மணி. 56). 2. See கோண்டல்[1], 6. (W.)

கொண்டான்கொடுத்தான் koṇṭāṉ-koṭuttāṉ, *n.* <id.+. Persons who have entered into matrimonial alliance by the marriage of their sons and daughters; கோண்டுங்கோடுத்துஞ் சம்பந்தஞ் செய்தோர். *Colloq.*

கொண்டானடி-த்தல் koṇṭāṉ-aṭi-, *v. intr.* <கொண்டான்+. To dance in merriment; மகிழ்ச்சியால் கூத்தாடுதல். பேயெழும்பி யெழும்பிக் கொண்டானடிக்க (இராமநா. உயுத். 78).

கொண்டி[1] koṇṭi, *n.* <கொள்-. 1. Getting possession of, securing, as property; பிறர்பொருள் முதலியவற்றைக் கோள்ளுகை. நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர் (மதுரைக். 583). 2. Food; உணவு. கட்கொண்டிக் குடிப்பாக்கத்து (மதுரைக். 137). 3. [K. *koṭṭaja.*] Tribute; கப்பம். கொண்டி வேண்டுவ னாயின் (புறநா. 51, 6). 4. Theft; களவு. கொண்டியிலே பிடியுண்டு (ஈடு, 7, 7, 2). 5. [M. *koṇṭi.*] Plunder, pillage; கோள்ளை. கொண்டியும் பெரி தென (புறநா. 78). 6. Abundance; மிகுதி. கொண்டி யுண்டித் தொண்டையோர் (பெரும்பாண். 454). 7. [T. *koṇṭe*, K. *koṇḍegāra.*] Insubordinate, naughty person or animal; அடங்காதவன்-வள்-து. கொண்டி யாயினவா றென்றன் கோதையே (தேவா. 710, 7). 8. [M. *koṇṭi.*] Prostitute, concubine; பரத்தை. வீழ்ந்த கொண்டி மல்லன் மார்பு மடுத்தனன் (நற். 174). 9. [K. Tu. *koṇḍi.*] Corner pin of a door on which it swings; கதவுக்குடுமி. 10. Clamp, cleat of a door-lock; சங்கிலிமாட்டும் இரும்பு. 11. [T. *koṇḍi.*] The pin that holds the share to the plough; ஏர்க்கோழுமாட்டும் ஆணி. *Loc.*

கொண்டி[2] koṇṭi, *n.* <கொண்டியம். *Loc.* 1. Grievance; மனவருத்தம். உனக்கு அவன்மீது என்ன கொண்டி? இப்படியெல்லாம் அவதூறாகப் பேசுகிறாயே. 2. Ill-feeling, malice; பகைமை. நான் உண்மையைச் சொன்னேன். அவன் மீதுள்ள கொண்டியினால் ஒன்றுங் கூறவில்லை. 3. Tale-bearing, back-biting; புறங்கூறுகை.

கொண்டிக்கடுக்கன் koṇṭi-k-kaṭukkaṉ, *n.* <கொண்டி[1]+. A kind of ear-ring; காதணிவகை. *Parav.*

கொண்டிக்கதவு koṇṭi-k-katavu, *n.* <id. +. Door that turns on projecting pins at the corners; குமிக்கதவு. (W.)

கொண்டிசொல்(லு)தல் koṇṭi-col-, *v. intr.* <கொண்டி[2]+. See கொண்டிபேசு-. *Loc.*

கொண்டித்தனம் koṇṭi-t-taṉam, *n.* <கொண்டி[1]+. [T. *koṇṭetanamu*, K. *koṇḍetana*.] Insubordination; அடங்காத்தன்மை.

கொண்டித்தொட்டி koṇṭi-t-toṭṭi, *n.* <id. +. See கொண்டித்தொழு. *Loc.*

கொண்டித்தொழு koṇṭi-t-toḻu, *n.* <id. +. Cattle-pound; பட்டிமாட்டை அடைக்குந் தொழுவம்.

கொண்டிபேசு-தல் koṇṭi-pēcu-, *v. intr.* <கொண்டி[2]+. *Loc.* 1. To speak ill of any one out of ill-feeling or malice; பகைமையால் கோடுமைபேசுதல். 2. To tell tales, back-bite; கோட் சொல்லுதல். 3. To point out one's defect; குறை கூறுதல். 4. To accuse, impute guilt; குற்றம் சுமத்திப் பேசுதல்.

கொண்டிமகளிர் koṇṭi-makaḷir, *n.* <கொண்டி[1]+. 1. Captive women; சிறைபிடிக்கப் பட்ட மகளிர். கொண்டி மகளி ருண்டுறை மூழ்கி (பட்டினப். 246). 2. Prostitutes; பரத்தையர். வண்டிற் றுறக்குங் கொண்டி மகளிரை (மணி. 18, 109).

கொண்டிமாடு koṇṭi-māṭu, *n.* <id. +. Stray cattle; பட்டிமாடு.

கொண்டிமேய்-தல் koṇṭi-mēy-, *v. intr.* <id. +. To graze stealthily in prohibited areas; பட்டிமேய்தல்.

கொண்டியம் koṇṭiyam, *n.* perh. கொள்-. [T. *koṇḍemu*, K. *koṇḍeya*.] Tale-bearing, back-biting, calumny; குறளை. (பிங்.)

கொண்டியாரம் koṇṭiyāram, *n.* <id. +. (W.) 1. Invective; நிந்தைமொழி. 2. Meddling, officiousness; பிறர் காரியத்தில் தலையிடுகை. 3. Haughtiness, pride, insolence; செருக்கு. 4. Superbness, elegance, nicety; சிறப்பு.

கொண்டியோட்டி koṇṭi-y-ōṭṭi, *n.* <கொண்டி[1]+. Impounder of stray cattle; கொண்டித் தொழுவுக்குப் பட்டிமாட்டைச் செலுத்துவோன். (G. Tp. D. i, 241.)

கொண்டிலான் koṇṭilāṉ, *n.* <கொண்டை. Crested bulbul; பறவைவகை. (F.)

கொண்டின்னி koṇṭiṉṉi, *n.* Black gaub. See தும்பை. (சங். அக.)

கொண்டு koṇṭu, *part.* <கொள்-. 1. From, beginning with; முதல். அடியிற்கொண்டு முடிகாறும் (இறை. 3, 45). 2. Towards, in the direction of; குறித்து. குட திசைக்கொண்டு (சிலப். 10, 34). 3. A sign of the instrumental case; மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபு. (பி. வி. 6, உரை.) 4. Expletive; அசைநிலை. எனக்கு முன்றனக்குங் கொண்டு (திருவிளை. நரிபரி. 83).

கொண்டுகட்டுவியாபாரம் koṇṭu-kaṭṭu-viyāpāram, *n.* <id. +. Trading in articles bought cheap in retail and stored up awaiting a favourable market; பண்டங்களை மலிந்தபோது சில்லறையாக வாங்கிக்கட்டி விலையேறினகாலத்தில் விற்கை. *Loc.*

கொண்டுகண்மாறு-தல் koṇṭu-kaṇ-māṟu-, *v. tr.* <id. +. To make friends and then ignore; நட்புக்கொண்டு புறக்கணித்தல். கொண்டுகண் மாறல் கொடுமையிற் றுவ்வாது (முது. காஞ். 37).

கொண்டுகூட்டு koṇṭu-kūṭṭu, *n.* <id. +. (Gram.) Mode of construing a stanza in which words are appropriately transposed to arrive at the proper meaning, one of eight *poruḷ-kōl*, q.v.; எண்வகைப் பொருள்கோளுள் செய்யுளின் அடிகள் பலவற்றிலும் உள்ள சொற்களைப் பொருளுக்கு ஏற்ற விடத்தில் எடுத்துக்கூட்டிப் பொருள்கொள்ளுமுறை. கோப்புடைமொழிகளை யேற்புழியிசைப்பது கொண்டு கூட்டே (நன். 418).

கொண்டுகூற்று koṇṭu-kūṟṟu, *n.* <id. +. (Gram.) Direct speech; அயலார் நேரிற்சொல்வதாகக் கூறும் மொழி. கொண்டுகூற்றாகக் கூறப்படுவனவும் (தொல். பொ. 115, உரை).

கொண்டுகொடு-த்தல் koṇṭu-koṭu-, *v. tr.* <id. +. To give and take in marriage, as a girl; பெண்ணைக் கொண்டுங் கொடுத்துஞ் சம்பந்தஞ்செய்தல்.

கொண்டுகொடுப்பனை koṇṭu-koṭuppaṉai, *n.* <id. +. Giving and taking a girl in marriage; பெண்ணைக் கொண்டுங் கொடுத்துஞ் செய்யும் விவாகசம்பந்தம். *Loc.*

கொண்டுகொடுப்பு koṇṭu-koṭuppu, *n.* <id. +. See கொண்டுகொடுப்பனை. *Loc.*

கொண்டுசெல்(லு)-தல் koṇṭu-cel-, *v. intr.* <id. +. To be able to manage; நிர்வகித்தல். எனக்கு இனிமேற் கொண்டுசெல்லாது. *Loc.*

கொண்டுசெலுத்து-தல் koṇṭu-celuttu-, *v. tr.* <id. +. To bring to fruition or carry to completion though with difficulty, to succeed against odds or difficulties; காரியத்தை வருந்தியும் முடிவுவரை நடத்துதல். *Loc.*

கொண்டுணி koṇṭuṇi, *n.* <id.+உண்-. Tale-bearer. See குண்டுணி, 3. (யாழ். அக.)

கொண்டுநடத்து-தல் koṇṭu-naṭattu-, *v.* <id.+. *Loc. tr.* See கொண்டுசெலுத்து-.—*intr.* To do banking business; கொடுக்கல் வாங்கல் செய்தல்.

கொண்டுநிலை koṇṭu-nilai, *n.* <id.+. (Akap.) *Kuravai* song praying for the hero's union in wedlock with the heroine; குரவைக் கூத்தில் தலைவனது வரைவுவேண்டிப் பாடும் பாட்டு. என்றியாங் கொண்டுநிலைபாடி யாடுங் குரவையை (சிலப். 24, இறுதிப்பாட்டுமடை).

கொண்டுநிலைகூற்று koṇṭu-nilai-kūṟṟu, *n.* <id.+. (Akap.) Words of encouragement by the heroine's maid, dissuading the hero from desperate action; இறந்துபடாமல் தலைமகனைத் தாங்கிக்கூறுந் தோழியின் சொல். இதனைக் கொண்டு நிலைகூற்றென்று சொல்வது (இறை. 9, உரை).

கொண்டுபோ-தல் koṇṭu-pō-, *v. tr.* [T. *koṇṭcupōvu.*] <id.+. 1. To carry, convey, take away; எடுத்துக்கொண்டு செல்லுதல். கொண்டு போவான் வந்துநின்றூர் (திவ். பெரியாழ். 2, 2, 7). 2. To lead, conduct, escort; அழைத்துச்செல்லுதல். குருடனை வெளியிற்கொண்டுபோய் விடு. 3. To carry away, abduct; கவர்ந்து செல்லுதல். செங்கண்மால் தான் கொண்டுபோனான் (திவ். பெரியாழ். 3, 8, 4).

கொண்டுமுதல் koṇṭu-mutal, *n.* <id.+. Business-capital; வியாபார மூலதனம். *Loc.*

கொண்டுமொழி-தல் koṇṭu-moḻi-, *v. tr.* <id.+. To report a person's speech in the direct form; அயலார்சொல்லை அவர் சொல்வதாகவே எடுத்துக்கூறுதல்.

கொண்டுவில்-தல் [கொண்டுவிற்றல்] koṇṭu-vil-, *v. intr.* <id.+. 1. To carry on a petty trade by buying and selling things every now and then; அப்போதைக்கப்போது வியாபாரத்துக்காகப் பண்டங்களை வாங்கிவிற்றல். கொண்டுவிற்றல் கூலித்தொழில் (தனிகைப்பு. அகத். 197). 2. To carry on money-lending business, trade, etc., especially in foreign countries; லேவாதேவி வியாபாரம் முதலியவை செய்தல். *Nat. Chetti.*

கொண்டுவிலை koṇṭu-vilai, *n.* <id.+. Money-lending business, trade, etc.; லேவாதேவி வியாபாரம் முதலியன. *Nat. Chetti.*

கொண்டேசன் koṇṭēcaṉ, *n.* perh. கொண்டை[1]+*īśa*. Dry ginger; சுக்கு. (மூ. அ.)

கொண்டை[1] koṇṭai, *n.* [T. *koṇḍe*, K. Tu. *goṇḍe*, M. *koṇṭa*.] cf. Mhr. *gōṇḍa*. 1. Tuft, dressing of hair in large coil on the head, one of *aim-pāṉ-muṭi*, q.v.; மகளிரின் ஐம்பான்முடியுள் கூந்தலைத் திரளாகச் சேர்த்துக்கட்டும் முடிவகை. (பிங்.) 2. Dressing of hair by urning up and folding; சொருக்கு. 3. Fibre-ring used in dressing the hair of a child; குழந்தைகளுக்கு உச்சிக்கொண்டை கட்ட உதவும் நார்வளையம். *Loc.* 4. Crest of a bird; பறவைச்சூட்டு. 5. Head, as of a nail; knob, as of a cane; round top; ஆணி முதலியவற்றின் குமிழ்த் தலை.

கொண்டை[2] koṇṭai, *n.* <*ghōṇṭa*. Jujube tree. See இலந்தை. (பிங்.)

கொண்டைக்கரிச்சான் koṇṭai-k-kariccāṉ, *n.* <கொண்டை[1]+. Hair-crested king-crow, *Chibia hottentota;* உச்சிச்சூட்டுள்ள கரிக்குருவிவகை. (W.)

கொண்டைக்காரன் koṇṭai-k-kāraṉ, *n.* <id.+. 1. One who wears his hair in a knot; தலைமயிரைத் திரளாகமுடித்துக் கட்டியவன். 2. Respectable person; மேன்மையுடையவன். *Loc.* 3. Haughty man; செருக்குடையவன். (W.)

கொண்டைக்கிரி koṇṭaikkiri, *n.* prob. *kuṇḍakriyā*. A secondary melody-type of the *mullai* class; முல்லைநிலப்பண்வகை. (பிங்.)

கொண்டைக்கிளாறு koṇṭai-k-kiḷāṟu, *n.* <கொண்டை[1] + perh. கிளர்-. Bulbul. See கொண்டலாத்தி 1, 2. (J.)

கொண்டைக்குச்சு[1] koṇṭai-k-kuccu, *n.* <id.+குச்சு[3]. A hair-ornament with pendants. See சடைக்குச்சு.

கொண்டைக்குச்சு[2] koṇṭai-k-kuccu, *n.* <id.+குச்சு[1]. Ornamental hair-pin; கொண்டையிற் செருகும் ஊசிவகை. (W.)

கொண்டைக்குலாத்தி koṇṭai-k-kulātti, *n.* <id.+குலாவு-. See கொண்டலாத்தி. கொண்டைக்குலாத்தியும் மாடப்புறுவும் (குற்று. குற. 87, 2).

கொண்டைக்கோல் koṇṭai-k-kōl, *n.* <id.+. 1. A staff with a knob at its head; தலையிற் கொண்டையுள்ள கழி. 2. A post planted to indicate the depth of water; ஆழத்திற்கு அறிகுறியாக நீரிடையில் நடுங் கோல். ஆழங்காலிலே இழிந்து அமிழ்ந்தவார் அவ்விடத்தே கொண்டைக்கோல் நாட்டுமாபோலே (ஈடு, 10, 7, 1). 3. Staff with a cloth tied at its top, uplifted and flourished as a sign of joy; மகிழ்ச்சிக்குறியாக உயர்த்தியசைக்கும் ஆடை சுட்டிய கோல். கொண்டைக்கோலொடு குணலையிட்டார் (கோயிற்பு. இரணிய. 130).

கொண்டைகட்டி koṇṭai-kaṭṭi, *n.* <id.+. See கொண்டைகட்டிவேளாளர்.

கொண்டைகட்டிமறவன் koṇṭai-kaṭṭi-maṟavaṉ, *n.* prob. id.+. A sub-sect of *Maṟavar* caste; மறவர்வகை. (E. T.)

கொண்டைகட்டிவேளாளர் koṇṭai-kaṭṭi-vēḷāḷar, *n.* <id.+. A sub-sect of Vēḷāḷas who put up their hair in a peculiar fashion, during marriage; விவாகத்தில் கொண்டையாகத் தலைமயிரை முடிக்கும் வேளாளவகையினர். *Loc.*

கொண்டைகுலைந்துபோ-தல் koṇṭai-kulaintu-pō-, *v. intr.* <id.+. To suffer loss of honour; அவமானப்படுதல். *Loc.*

கொண்டைச்சன் koṇṭaiccan, *n.* <id. See கொண்டைச்சான். (யாழ். அக.)

கொண்டைச்சாணி koṇṭaiccāṇi, *n.* Indian ipecacuanha. See நஞ்சறுப்பான். (யாழ். அக.)

கொண்டைச்சான் koṇṭaiccāṉ, *n.* <கொண்டை[1]. See கொண்டலாத்தி. (யாழ். அக.)

கொண்டைச்சி koṇṭaicci, *n.* <id. See கொண்டைச்சான். (W.)

கொண்டைச்சுத்தியல் koṇṭai-c-cuttiyal, *n.* <id.+. Goldsmith's or brazier's hammer; தட்டார்கருவிகளுள் ஒன்று. (J.)

கொண்டைத்திருகு koṇṭai-t-tiruku, *n.* <id.+. Ornament for the hair in the shape of a chrysanthemum flower with a spiral wire underneath, worn by women; மகளிர் தலையி லணியும் செவ்வந்திப்பூவடிவினதான திருகணிவகை.

கொண்டைத்துலா koṇṭai-t-tulā, *n.* <id. +. Picottah with a crest-like projection at the end to prevent the rope from slipping; கயிறு நழுவிவிடாதபடி கொண்டைகட்டிய துலாவகை. (W.)

கொண்டைதிருகி koṇṭai-tiruki, *n.* <id. +. Hole in the sill into which the corner-pin of a door is fitted; கதவுக்குடுமி சேருதந் துவாரம். (W.)

கொண்டைப்புல் koṇṭai-p-pul, *n.* <id.+. Trail grass. See மயிற்கொண்டை. (M. M. 916.)

கொண்டைப்பூ koṇṭai-p-pū, *n.* <id.+. See கொண்டைத்திருகு.

கொண்டைமாறு koṇṭai-māṟu, *n.* <id. +. *Loc.* 1. Twigs of a shrub with knob-like root; கொண்டைபோன்ற அடிப்பக்கமுடைய வளார். 2. Twigs gathered from the topmost part of trees; மரத்தின் உச்சியிலிருந்தெடுக்கும் சிறு சுள்ளி. 3. A kind of broom with a knob-like handle; கொண்டையுள்ள விளக்குமாறு.

கொண்டைமுசு koṇṭai-mucu, *n.* <id.+. [T. *koṇḍamuccu.*] A large black-faced monkey; பெரிய கருங்குரங்கு வகை. (W.)

கொண்டைமுசுறு koṇṭai-mucuṟu, *n.* <id.+. [K. *koṇḍamusuḍi.*] See கொண்டை முசு. *Vul.*

கொண்டைமேற்காற்றடிக்க koṇṭai-mēṟ-kāṟṟaṭikka, *adv.* <id.+. Lit., so that the breeze may play about the tuft. In a happy, care-free mood; [தலைமயிரின்மேல் காற்று வீசும்படி] உல்லாசமாய். கொண்டைமேற்காற்றடிக்கத் திரியப்பெருதே (திருவிருத். 23, வ்யா. பக். 150).

கொண்டையங்கோட்டைமறவன் koṇṭaiyaṅ-kōṭṭai-maṟavaṉ, *n.* See கொண்டைகட்டி மறவன். (E. T.)

கொண்டையடுப்பு koṇṭai-y-aṭuppu, *n.* <கொண்டை[1]+. A kind of domestic oven; குட்டடுப்பு. *Loc.*

கொண்டையன் koṇṭaiyaṉ, *n.* <id. A species of crested kite; உச்சிக்கொண்டையுள்ள பருந்துவகை. (J.)

கொண்டையாணி koṇṭai-y-āṇi, *n.* <id.+. Nail with round head, stud; மேற் கொண்டையுள்ள ஆணி.

கொண்டையூசி koṇṭai-y-ūci, *n.* <id.+. 1. See கொண்டைக்குச்சு[2]. 2. Pin; குண்டூசி. *Loc.*

கொண்டைவலை koṇṭai-valai, *n.* <id.+. A kind of shore-net used in catching sea-fish; கடலின் கரையிலிருந்து வீசி மீனைப்பிடிக்கும் ஒருவகை வலை. *Loc.*

கொண்டைவாகை koṇṭai-vākai, *n.* <id. +. Doon siriss tree, l. tr., *Albizzia procera elata;* வாகைமர வகை. (L.)

கொண்டோன் koṇṭōṉ, *n.* <கொள்-. Husband; கணவன். கொண்டோ னல்லது தெய்வமும் பேணுப் பெண்டிர் (மணி. 18, 101).

கொண்மூ koṇmū, *n.* <id. 1. Cloud; மேகம். நீருடைக் கொண்மூ (பெருங். உஞ்சைக். 43, 101). 2. Sky; ஆகாயம். (பிங்.)

கொணங்கு koṇaṅku, *n.* See குறிஞ்சா.

கொணசில் koṇacil, *n.* <குணகு-. Bend, curve; கோணல். *Loc.*

கொணா-தல் [**கொணர்தல்**] koṇā-, 13 *v. tr.* prob. கொண்டுவா-. To bring, take, fetch, conduct; கொண்டுவருதல். அருந்தவனைக் கொணர்து மென (கம்பரா. திருவவ. 38; நன். 160, மயிலை).

கொணாரம் koṇāram, *n.* perh. *kuṇ.* Bellowing of a buffalo; எருமையின் சத்தம். *Loc.*

கொணிசல் koṇical, *n.* See கொணசில். *Loc.*

கொத்தச்சக்கை kotta-c-cakkai, *n.* <கொத்தை+. Tender jack-fruit; பலாப்பிஞ்சு.

கொத்தடிமை kottaṭimai, *n.* <கொத்து[3]+ அடிமை. Servitude of a family *en bloc;*

குடும்பத்தோடு அடிமையாகை. கொத்தடிமை யான குடி நான் பராபரமே (தாயு. பராபரக். 148).

கொத்தம்[1] kottam, *n.* Limit, boundary; எல்லை. (பிங்.)

கொத்தம்[2] kottam, *n.* See கொத்தமல்லி. (சங். அக.)

கொத்தமல்லி kottamalli, *n.* <*kustumburu.* [T. *kottamalli,* M. *kottabākari.*] 1. Coriander, *Coriandrum sativum;* ஒருவகைச் செடி. 2. Coriander seed used as a condiment; சம்பாரப்பண்டங்களுள் ஒன்றாகிய தனியாவிதை.

கொத்தமல்லிமணி kottamalli-maṇi, *n.* <கொத்தமல்லி +. A necklace worn by women; மகளிர் கழுத்தணிவகை. *Parav.*

கொத்தமல்லியம்மை kottamalli-y-ammai, *n.* <id. +. [M. *kottamalliyamma.*] Chicken-pox. See கொப்புளிப்பான். *Loc.*

கொத்தமல்லிவசூரி kottamalli-vacūri, *n.* <id. +. See கொத்தமல்லியம்மை.

கொத்தமுரி kottamuri, *n.* <*kustumburu.* [T. *kottimiri,* K. *kottumari.*] See கொத்தமல்லி. உருளரிசி கொத்தமுரி யென்றாற்போல (இறை. 2, உரை).

கொத்தரிவாள் kottarivāḷ, *n.* <கொத்து- + அரிவாள். A kind of sickle; அரிவாள்வகை.

கொத்தல் kottal, *n.* <id. Pecking, as of birds; பறவை முதலியன கொத்துகை. நெடுங்கணார் தோட்கிளி கொத்தலின் (சீகாளத். பு. நக்கீர. 30).

கொத்தலரி kottalari, *n.* <கொத்து[3] + அலரி. A species of oleander; அலரிவகை. (W.)

கொத்தவரங்காய்ப்பின்னல் kottavaraṅ-kāy-p-piṉṉal, *n.* <கொத்தவரை +. Plaiting the hair of a child in the form of a cluster-bean; கொத்தவரங்காய்போலக் குழந்தைகட்குப் பின்னும் பின்னல்வகை.

கொத்தவரை kottavarai, *n.* <கொத்து[3] + அவரை. [M. *kottavara.*] Cluster-bean, a shrub, *Cyamopsis psoralioides;* செடிவகை. (பதார்த்த. 688.)

கொத்தவால் kottavāl, *n.* <U. *kotwāl.* Chief police officer for a city or town, superintendent of markets; நகரமுதலியவற்றின் காவற்றலைவன்.

கொத்தவாற்சாவடி kottavāṟ-cāvaṭi, *n.* <கொத்தவால் +. [T. *kotwālcāvaṭi.*] 1. Police station or residence of a *kottavāl;* டாணா. *Loc.* 2. Central place in some towns serving as a market for provisions, etc.; நகரமத்தியில் உணவுப் பொருள்கள் முதலியன விற்கப்படும் வியாபாரஸ்தலம். *Colloq.*

கொத்தவாற்சேவகன் kottavāṟ-cēvakaṉ, *n.* <id. +. Police constable under a *kottavāl;* கொத்தவாலின்கீழ் வேலைபார்க்குங் காவலாள். *Loc.*

கொத்தழி-தல் kottaḻi-, *v. intr.* <கொத்து[3] + அழி[1]-. To lie waste or desolate; to be in ruins; நீர்மூலமாதல். (W.)

கொத்தள-த்தல் kottaḷa-, *v. intr.* <id. + அள-. To pay wages in kind, as to an artisan; கூலியாகத் தானியங் கொடுத்தல். கூலிவேலை செய்தால் கொத்தளக்குமாறுபோல (சி. சி. 2, 21, மறைஞா.).

கொத்தளம் kottaḷam, *n.* cf. Pāli *koṭṭhaka.* [T. *kottaḍamu,* K. *kottaḷa,* M. *kottaḷam.*] Part of a rampart, bastion, defensive erection on the top of a rampart; கோட்டைமதிலுறுப்புக்களுள் ஒன்று. (பிங்.)

கொத்தளி kottaḷi, *n.* prob. கொத்து[3] + அழி. See கொத்தளிப்பாய். (W.)

கொத்தளிப்பாய் kottaḷi-p-pāy, *n.* <கொத்தளி +. Mat made of rushes; புற்பாய். (பிங்.)

கொத்தன்[1] kottaṉ, *n.* <கொத்து-. Mason, brick-layer; கட்டடவேலை செய்வோன்.

கொத்தன்[2] kottaṉ, *n.* <கொத்து[3]. See சவண்டிக்கொத்தன்.

கொத்தன்[3] kottaṉ, *n.* See கொத்தச்சக்கை. *Loc.*

கொத்தனார் kottaṉār, *n.* <கொத்தன்[1]. Head mason; தலைமைக்கொத்தன். *Loc.*

கொத்தனை kottaṉai, *n.* <கொத்து[3] + அனை. A kind of small fish living in shoals; கூட்டமாகச்செல்லும் சிறுமீன்வகை. கொத்தனை புகளு நன்னீர் (பாரத. சூதுபோர். 14).

கொத்தாள் kottāḷ, *n.* <கொத்து- +. *Loc.* 1. Hired labourer in agricultural operations; வயலில் கூலிக்கு வேலைசெய்யும் ஆள். 2. Slave; அடிமை.

கொத்தான் kottāṉ, *n.* A parasitic leafless plant. See கொற்றான். (பிங்.)

கொத்தான்வாகை kottāṉ-vākai, *n.* A species of sirissa; வாகைவகை. (பு. வெ. 8, 2, கொளு, உரை.)

கொத்தித்தின்(னு)-தல் kotti-t-tiṉ-, *v. tr.* <கொத்து- +. Lit., to peck and eat. To harass, torment; [கொத்தி யுண்ணுதல்] மிதமீயாகத் துன்பப்படுத்துதல். *Colloq.*

கொத்திதழி kottitaḻi, *n.* <கொத்து[3] + இதழி. Indian laburnum. See சரக்கொன்றை. (தைலவ. தைல. 135, 26.)

கொத்திப்பறத்து-தல் kotti-p-paṟattu-, *v. tr.* <கொத்து- +. To torment and drive off; துன்பப்படுத்தி வெருட்டுதல்.

கொத்திப்பிடுங்கு-தல் kotti-p-piṭuṅku-, *v. tr.* <id.+. See கொத்தித்தின்-.

கொத்து[1]-தல் kottu-, *5 v. tr.* cf. *kuṭṭ.* [K. M. *kottu.*] 1. To grub up, hoe; பூமியைக் கிண்டுதல். 2. To peck, as a bird; அலகால் குத்தியெடுத்தல். *கழுகு கொத்திடக் களத் திடைக் கவிழ்ந்தனர் (காசிக. தக்கன்வேள்வியை. 48).* 3. To bite, as a snake; குத்திக் கடித்தல். 4. To chop, hack, mince; வெட்டுதல். *கொல்லிமலைப்பக் கங்களில் பலாக்காய் கொத்துகிறார்கள்.* 5. To carve, engrave; எழுத்துமுதலியன செதுக்குதல்.

கொத்து[2] kottu, *n.* <*கொத்து-*. [M. *kottu.*] 1. Grubbing; mincing; pecking, as birds; grabbing, as fish; biting, as a serpent; gashing; engraving; கொத்துகை. 2. Masonry, work of a mason; கொத்துவேலை. 3. A day's work of a mason; கொத்தனது ஒருநாள் வேலை. 4. A mason, dist. fr. *cittu;* கொத்துவேலை செய்பவன். *Loc.* 5. A small hoe used for rooting out weeds; களைபறிக்க உதவும் சிறுமண்வெட்டி. *Loc.*

கொத்து[3] kottu, *n.* cf. *guccha.* [T. *gottu,* K. M. *kottu.*] 1. Bunch, cluster, collection of things of the same kind; பூ முதலியவற்றின் தலை. *கொத்தறுபோது மிலைந்து (திருவாச. 6, 30).* 2. Assembly, multitude; திரள். *அனைத்துக் கொத் துப் பரிஜனங்களும் (குருபரம்.).* 3. Family; குடும் பம். *அவன் கொத்துக் கொடியை அறிவேன்.* (W.) 4. See சவண்டிக்கொத்தன். 5. A piece of cloth; ஆடையின் மடி. *Loc.* 6. Wages paid in kind, as grain, etc.; தானியமாகக் கொடுக்குங் கூலி. *Loc.* 7. Cooked rice; சோறு. *அரும்புக்கும் கொத்துக்கும் வந்தார் (தனிப்பா. i, 87, 174).* 8. Handful, as of cooked rice; கைப்பிடி யளவு. *ஒரு கொத்துச் சோறு கொடு.* 9. A standard measure=about a quart; நாழி. (J.)

கொத்துக்கட்டி kottu-k-kaṭṭi, *n.* <*கொத்து[2]*+. Clods hoed up; மண்கட்டி. (J.)

கொத்துக்கணக்கு[1] kottu-k-kaṇakku, *n.* <*கொத்து[3]*+. Hereditary office of accountant; பரம்பரைக் கணக்குவேலை. *Loc.*

கொத்துக்கணக்கு[2] kottu-k-kaṇakku, *n.* <*கொத்து[2]*+. Account of mason's wages; கொத்தன் சம்பளக் கணக்கு. *Loc.*

கொத்துக்கத்தரி kottu-k-kattari, *n.* <*கொத்து[3]*+. Turkey-berry. See சுண்டை. (L.)

கொத்துக்கம்பு kottu-k-kampu, *n.* <id. +. A variety of kambu; கம்புவகை. (G. Sm. D. I, i, 219.)

கொத்துக்கரண்டி kottu-k-karaṇṭi, *n.* <*கொத்து[2]*+. Mason's trowel; கொத்துவேலைக் குரிய அரசிலைக்கரண்டி.

கொத்துக்காடு kottu-k-kāṭu, *n.* <*கொத்து-* +. Land cultivable by hoeing and not by ploughing, opp. to *uḻavu-kāṭu;* உழவினாலன்றிக் கொத்திப் பயிரிடுதற்குரிய நிலம். (G. Sm. D. I, ii, 43.)

கொத்துக்காரன் kottu-k-kāraṉ, *n.* <*கொத்து[3]*+. *Loc.* 1. Head of a company of labourers, as of those engaged in reaping; வேலையாட்களின் தலைவன். 2. One who represents the deceased and the manes in *cavaṇṭi.* See சவண்டிக்கொத்தன்.

கொத்துக்காரி kottu-k-kāri, *n.* <id.+. Dancing-girl holding hereditary rights in a temple; கோயிலிற் பரம்பரை உரிமையுடைய தேவடி யாள். *Loc.*

கொத்துங்குறடு kottuṅ-kuṟaṭu, *n.* <*கொத்து-*+. Lit., that which has pincer-like mandibles to strike. Crab; [*கொத்துதற்குக் குறடு போன்ற உறுப்புடையது*] நண்டு. (*யாழ். அக.*)

கொத்துக்கூலி kottu-k-kūli, *n.* <*கொத்து[2]* +. 1. Wage for the various forms of agricultural work; விவசாயத் தொழில்களின் பொருட்டுக் கொடுக்குங் கூலி. 2. Wage for masonry work; கொத்தர்க்குக் கொடுக்குங் கூலி.

கொத்துக்கோரை kottu-k-kōrai, *n.* <*கொத்து[3]*+. Wet-land sedge, *Cyperus compressus;* கோரைவகை. (A.)

கொத்துங்குறையுமாய் kottuṅ-kuṟai-y-um-āy, *adv.* <*கொத்து[2]*+. In an incomplete or unfinished state; அரைகுறையாய். (W.)

கொத்துச்சரப்பணி kottu-c-carappaṇi, *n.* <*கொத்து[3]*+. A kind of gold chain for the neck, worn by women; மகளிர் கழுத்தணிவகை.

கொத்துச்சரப்பளி kottu-c-carappaḷi, *n.* <id.+. See கொத்துச்சரப்பணி.

கொத்துச்சவடி kottu-c-cavaṭi, *n.* <id. +. See கொத்துச்சரப்பணி. *Loc.*

கொத்துணி kottuṇi, *n.* <id.+உண்-. (J.) 1. Slave owned in common by several persons; பலர்க்குப் பொதுவான அடிமை. 2. Garden owned by several persons; பலர்க்குப் பொதுவான தோட் டம்.

கொத்துத்தாழ்வடம் kottu-t-tāḻvaṭam, *n.* <id.+. String of *rudrākṣa* beads interspersed with coral; பவளங்கள் இடையிட்டு முகப்பில் தங்கக்கட்டமைந்த உருத்திராக்கமாலை. *Loc.*

கொத்துத்தூர்வை kottu-t-tūrvai, *n.* <*கொத்து[2]*+. Looseness of earth caused by hoeing; கொத்துதலாலாகுந் தரையின் இளக்கம். (J.)

கொத்துப்பசளை kottu-p-pacaḷai, *n.* <கொத்து³+. Heart-leaved Malabar nightshade. See கொடிப்பசளை. (M. M. 461.)

கொத்துப்பற்று-தல் kottu-p-paṟṟu-, *v. intr.* <id.+. Lit., to receive wages in kind. To reap the fruit of one's labours; [கூலித்தானியம் பெறுதல்] பலனடைதல். *Loc.*

கொத்துப்புடல் kottu-p-puṭal, *n.* prob. id.+. A kind of snake-gourd, *Trichosanthes;* புடல்வகை. (W.)

கொத்துமல்லி kottumalli, *n.* See கொத்தமல்லி.

கொத்துமலி kottumali, *n.* See கொத்தமல்லி. (திவா.)

கொத்துமாலை kottu-mālai, *n.* <கொத்து³+. Garland of many wreaths; பலசரங்கள் சேர்த்து ஒன்றாகக் கட்டிய பூமாலை. *கொத்துமாலை நிறைந்த பெரிய தோளினையும் (திருக்கோ. 391, உரை).*

கொத்துமானம் kottu-māṉam, *n.* <கொத்து-+. Fine chisel-workmanship in gold or silver; நகாசுவேலை.

கொத்துமானவேலை kottu-māṉa-vēlai, *n.* See கொத்துமானம்.

கொத்துவால் kottuvāl, *n.* <U. *kotwāl.* See கொத்தவால். *Loc.*

கொத்துவானம் kottu-vāṉam, *n.* <கொத்து³+. Mackerel sky; மேகங்கள் கொத்துக்கொத்தாக உள்ள வானம். (W.)

கொத்துவேலை kottu-vēlai, *n.* <கொத்து-+. 1. Carved work, engraving, statuary; உளியாற் கொத்திச்செய்யும் சித்திரவேலை. 2. Masonry, bricklaying; கட்டடவேலை.

கொத்துவேலைச்செம்பு kottu-vēlai-c-cempu, *n.* <கொத்துவேலை+. A copper pot of fine workmanship; வேலைப்பாடுள்ள செம்பு. (W.)

கொத்தை kottai, *n.* cf. *kōtha.* [M. *kotta,* Tu. *kotte.*] 1. Rottenness; சொத்தை. 2. Blot, blemish, defect; ஈனம். *அவர் வமிசத்துக்குக் கொத்தையாங்காண் (ஈடு, 5, 4, 7).* 3. Fibrous rising on cloth, scab, scale; நூல் முதலியவற்றின் சிம்பு. *கொத்தையும் நெருடுமான சீலை.* (W.) 4. Incompleteness; அரைகுறை. *வெந்தது கொத்தையாக வாயிலிடுமாபோலே (ஈடு, 1, 3, 1).* 5. Blind man; குருடன். *கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டுவித்து (தேவா. 1040, 2).* 6. Spiritual ignorance; அஞ்ஞானம். *கொத்தை மாந்தர் (சங்கற்ப. பாடாணவாதிசங்கற்ப. வரி, 38).* 7. Sinner; பாவி. *கொத்தைபோ னிரயக்குழி கூடுவார் (சிவதரு. கோபுர. 217).*

கொத்தைநூல் kottai-nūl, *n.* <கொத்தை+. Ill-cleaned cotton yarn; சிம்புவிழுந்த பருத்திநூல். (W.)

கொதி¹-த்தல் koti-, *11 v. intr.* cf. *kvath.* [T. *kotuku,* M. *koti,* Tu. *kodi.*] 1. To boil, bubble up from heat, effervesce; நீர் முதலியன காய்ந்து பொங்குதல். *குண்டிகை யிருந்தநீருங் . . . கொதித்ததன்றே (கம்பரா. வருணனை. 61).* 2. To be heated, as the body, ground, etc.; சூடுடையதாதல். *பூமி கொதிக்கிறது.* 3. To be infuriated, enraged; to burn with indignation; கோபித்தல். (பிங்.) 4. To be offended; to be distressed; to be moved with pity; வருத்தமுறுதல். *அவன் செய்த தீங்கால் என் நெஞ்சு கொதிக்கிறது.* 5. To burn with desire, hanker after; ஆசைமிகக்கொள்ளுதல். *அவன் உன்னைப் பார்க்கக் கொதிக்கிறான். Loc.* 6. To have slight diarrhoea; வயிறு நழுக்குதல். (W.)

கொதி² koti, *n.* <கொதி-. [M. *koti,* Tu. *kodi.*] 1. Bubbling up, as of boiling water or oil; நீர் முதலியவற்றின் கொதிப்பு. *கொதியடக்கச் சிவிறி (தைலவ. வைத். 14).* 2. Heat, as of fire, weather, etc.; வெப்பம். 3. Sensation of heat in the body; உடம்பிற்காணும் காங்கை. 4. Fever; காய்ச்சல். *மாந்தக்கொதி, வாதக்கொதி.* (W.) 5. See கொதிக்கழிச்சல். (W.) 6. Anger, rage; கோபம். 7. Fierceness, as of anger; உக்கிரம். *கொதியினால் வரு காளிதன் கோபம் (தேவா. 485, 4).* 8. Grief, sorrow; வருத்தம். (W.) 9. Pride, arrogance; செருக்கு. *கொதியிறக்க. Loc.* 10. Desire, greed; ஆசை. *Loc.*

கொதிக்கண் koti-k-kaṇ, *n.* <கொதி+. See கொடுங்கண்.

கொதிக்கழிச்சல் koti-k-kaḻiccal, *n.* <id.+. Slight diarrhoea; உஷ்ணத்தால் உண்டாகும் பேதி.

கொதிகஞ்சி koti-kañci, *n.* <கொதி-+. Rice-water taken hot in cooking; உலைநீரில் கொதிக்கும் அரிசியினின்று வடிக்குங் கஞ்சி.

கொதிகருப்பநீர் koti-karuppa-nīr, *n.* <id.+ prob. கரும்பு+. Heated sweet toddy; சுடவைத்த இனிப்புச் சாராயம். (J.)

கொதிகுடலன் koti-kuṭalaṉ, *n.* <id.+. A man of insatiable appetite; பசிதணியாத வயிறுள்ளவன். (J.)

கொதிகொதி-த்தல் koti-koti-, *v. intr.* Redupl. of கொதி-. To bubble up, as boiling rice; உலைப்பெய்த அரிசிமுதலியவற்றினின்றும் கொதியெழும்புதல்.

கொதித்தைலம் koti-t-tailam, *n.* <கொதி+. Medicinal oil prepared by boiling pounded

castor-beans, etc., in water; முத்துக்கோட்டை முதலியவற்றை இடித்து நீரிற்கோதிக்கவைத்து இறக்குந் தைலம். (பைஷஜ. 3.)

கொதிதண்ணீர் koti-taṇṇīr, n. < கொதி- +. 1. Boiling water; வெந்நீர். (யாழ். அக.) 2. Seething water; கோதிக்கும் உலைநீர்.

கொதிப்பாற்றி kotippāṟṟi, n. < கொதிப்பு + ஆற்று-. Sedative, palliative; உஷ்ணந் தணிக்கும் மருந்து. Loc.

கொதிப்பு kotippu, n. < கொதி-. 1. Boiling, bubbling up, effervescence; பொங்குகை. 2. Heat; வெப்பம். 3. Fever; காய்ச்சல். 4. Rage, anger; கோபம். மறவன் கொதிப்பொழித்தன்று (பு. வெ. 8, 27, கொளு). 5. Grief, sorrow; வயிற்றெரிச்சல். 6. Flutter, flurried state of mind; பரபரப்பு. கொழுநனைத் தழுவுறுங் கொதிப்பால் (கம்பரா. இலங்கையெரி. 27).

கொதிபிடித்தல் koti-piṭittal, n. < கொதி +. Being affected in the appetite by the greedy eyes of a person looking on when one is taking meals; உண்ணும்போது நேர்ந்த தீக்கண் பார்வையால் உண்டி தின்றிப்போகை. Loc.

கொதிபோடு-தல் koti-pōṭu-, v. intr. < id. +. See கோதி-, 5. Loc.

கொதிமந்தம் koti-mantam, n. < id. +. Indigestion caused by excess of heat in the system; வெப்பால்வரும் மந்தநோய். (யாழ். அக.)

கொதியல் kotiyal, n. < கொதி-. 1. See கோதிப்பு. (W.) 2. The work of tightening the loose parts of an ornament; நெகிழ்ந்த ஆபரண வுறுப்பை இறுகச்செய்யும் வேலை.

கொதியல்போடு-தல் kotiyal-pōṭu-, v. tr. < கொதியல் +. To tighten the loose parts of an ornament; நெகிழ்ந்த ஆபரணவுறுப்பை இறுகச் செய்தல். Loc.

கொதியன் kotiyaṉ, n. < கொதி. One who hankers after food; உணவில் ஆசைமிக்கவன். Loc.

கொதியெண்ணெய் koti-y-eṇṇey, n. < கொதி- +. A medicinal oil, as boiled; கோதிக்கவைத்தெடுத்த மருந்தெண்ணெய்வகை. (W.)

கொதுகு kotuku, n. [M. *kotuku*.] Mosquito, gnat, fly; கொசுகு. கொதுகரூக் கண்ணினேன்பிகள் (தேவா. 381, 9).

கொதுகுலசவையார் kotukula-cavaiyār, n. The caste of Tūtar; தூதர் எனப்படுஞ் சாதியார். கொதுகுலசவையாரிற் சூரியன் (T. A. S.).

கொதுகொதுப்பு kotu-kotuppu, n. See துதுதுப்பு, 2.

கொதுகொதெனல் kotu-koteṉal, n. Onom. expr. of (a) throbbing, as with pain; நோவெடுத்தற்குறிப்பு. (W.) : (b) slight rise of temperature in the body; இலேசாய் உடம்பு காய்தற்குறிப்பு : (c) highly inflamed condition, as of a sore; விரணம் வீங்கிப் பழுத்திருத்தற் குறிப்பு.

கொதும்பு kotumpu, n. Coconut fibre; கதம்பை நார். Loc.

கொதுவை kotuvai, n. [T. *koduva*.] Pledge, pawn, mortgage; அடைமானம்.

கொந்தக்குலம் konta-k-kulam, n. < கொந்தை +. The family of Vēḷāḷas in Kontakai near Madura, formerly commanders under the Pāṇḍyas; மதுரைக்கு அருகிலுள்ள கோந்தையூரினரும் பாண்டியர்படைத்தலைவருமான பழையவேளாள மரபினர். உயர் கொந்தக்குலத்துட் டோன்றி (திருவாலவா. 39, 1).

கொந்தகன் kontakaṉ, n. < id. Commander of an army; படைத்தலைவன். கொந்தகன் வாக்கிது (திருவாலவா. 30, 45).

கொந்தம் kontam, n. prob. *kuntala*. Fine, wavy, dense curls of hair; மயிர்க்குழற்சி. கொந்தக் குழலை (திவ். பெரியாழ். 2, 5, 8).

கொந்தமணி konta-maṇi, n. < T. *gontu* +. A kind of necklace worn by women; மகளிர் கழுத்தணிவகை. Loc.

கொந்தரிவாள் kontarivāḷ, n. < கொந்து- +. Sickle, long-handled bill-hook, as for clearing prickly-pear; முட்செடிகளை அழித்து நீக்க உதவும் அரிவாள்வகை. Loc.

கொந்தல் kontal, n. < id. 1. Picking, nibbling; கோத்துகை. 2. Fruits injured by birds, reptiles, etc.; பறவை முதலியவற்றாற் கோத்துப்பட்ட கனி. 3. Wrath, fury; தணியாக்கோபம். (பிங்.) 4. Biting cold; கொடுங்குளிர். கொந்தலிற் கொடுகிக் கிடக்கிறான். 5. Feigned orthodoxy; போலியாசாரம். Loc.

கொந்தல்மாங்காய் kontal-māṅkāy, n. < கொந்தல் +. Mango fruit injured or stunted in growth; சேதப்பட்ட மாங்காய். (J.)

கொந்தழல் kontaḻal, n. < கொந்து- +. Raging fire; முறுகிய தீ. கொந்தழற் புண்ணொடு (பெருங். வத்தவ. 13, 71).

கொந்தளம்[1] kontaḷam, n. < *kuntala*. 1. Woman's hair; மாதர் தலைமயிர். (பிங்.) 2. Woman's lock of hair or curl; மாதர் தலைமயிர்ச்சுருள். (பிங்.) 3. Woman's hair gathered in a coil; மாதர் குழற்கொத்து. (பிங்.) 4. An ancient kingdom ruled by Chalukyas; சளுக்கியர் ஆண்ட நாடு. (S. I. I. ii, 230.)

கொந்தளம்[2] kontaḷam, *n.* <கொந்தளி-. 1. [T. *kondalamu.*] Confusion, perturbation, turmoil; குழப்பம். கொந்தள மாக்கி (திவ். நாய்ச். 12, 3). 2. A kind of dance; கூத்துவகை. (W.) 3. Rhinoceros; காண்டாமிருகம். (சங். அக.) 4. Young of an animal; விலங்கின்இளமை. (அக. நி.)

கொந்தளம்[3] kontaḷam, *n.* perh. கொத்தளம். A site with conveniences of every kind; எல்லாச் சௌகரியங்களுமுள்ள இடம். *Loc.*

கொந்தளி-த்தல் kontaḷi-, *11 v. intr.* [T. *kondaliñcu.*] To be rough or boisterous; to swell, as the sea; to be stormy, tumultuous; பொங்கியெழுதல். திரைகள் மேல்நோக்கிக் கொந் தளித்து (திருவிருத். 52, 292, வ்யா.).

கொந்தளை kontaḷai, *n.* Seaside Indian oak, l. tr., *Barringtonia racemosa;* கடற்படக்கத்து மர வகை. (L.)

கொந்தாலி kontāli, *n.* <*kuddāla.* Pick-axe. See குந்தாலி. (J.)

கொந்தாழை kontāḻai, *n.* prob. கொத்து[3] + தாழை. Sea-weed, *Algae;* கடற்றாழை. (W.)

கொந்தாளம் kontāḷam, *n.* An anti-poisonous drug; விடநீக்கும் மருந்துவகை. (J.)

கொந்தாளி-த்தல் kontāḷi-, *11 v. intr.* See கொந்தளி-. (யாழ். அக.)

கொந்தி konti, *n.* <கொந்து[1]-. [T. *gonḍili.*] Mask, masquerade dance; வரிக்கூத்துவகை. (சிலப். 3, 13, உரை.)

கொந்திக்காய் konti-k-kāy, *n.* A string of gold or coral beads worn by women above the elbow; மகளிர் கைமுட்டுக்குமேல் அணியும் ஆபரண வகை. *Tinn.*

கொந்து[1]-தல் kontu-, *5 v. tr.* 1. To peck, pick, mince; கொத்துதல். 2. To injure fruits by pecking, gnawing; பழமுதலியவற்றை அலகாற் குதறுதல். 3. To threaten, intimidate, terrify; அச்சுறுத்தல். கொந்தி யிரும்பிற் பிணிப்பர் கயத்தை (நான்மணி. 12). 4. To gore, pierce; குத்துதல். கொந்தியயி லலகம்பால் (பெரியபு. கண்ணப். 145). 5. To pick up shells, etc., from the floor before a thrown-up shell comes down, as in game played by girls; மகளிர் ஆட்டத்தில் மேலெறிந்தகாய் விழுவதற்குள் தரையிலுள்ள காய்களை எடுத்தல். அவள் புளியவிதையைக் கொந்தி விளையாடுகிறாள். *Colloq.* 6. To remove a cloth from the clothes' line with a stick; கொடியிலிருக்கும் ஆடையைக் கோல் கொண்டு எடுத்தல். *Colloq.—intr.* 1. cf. இந்து-. To hop, as in a game; ஒற்றைக்காலாற் குதித்தல். 2. To pretend to be very orthodox; மிக்க ஆசாரங் காட்டிக்கொள்ளுதல்.

கொந்து[2]-தல் kontu-, *5 v. intr.* prob. *kvath.* 1. To burn; to be in flames; எரிதல். கொந்தழல் (சீவக. 1499). 2. To be enraged, furious; to be inflamed with anger; கோபம் மூளுதல். (பிங்.)

கொந்து[3] kontu, *n.* <கொந்து[1]-. A hopping game; ஒற்றைக்காலாற் குதித்தாடும் விளையாட்டுவகை.

கொந்து[4] kontu, *n.* <கொந்து[2]-. 1. Anger, wrath; கோபம். இந்தனக் குழுவைக் கொந்தழ லுமிழும் (ஞானா. 63, 11).

கொந்து[5] kontu, *n.* <கொத்து[3]. 1. Cluster of flowers; கொத்து. கொந்தா ரிளவேனல் (சிலப். 8, வெண்பா. 1). 2. Gathering, multitude; திரள். கொந்திறைற் பொலியும் வீதி (இரகு. இரகுவ. 53). 3. Garland of many wreaths; கொத்துமாலை. கொந்தார் தடந்தோள் (திருக்கோ. 391).

கொந்து[6] kontu, *n.* Side, region; பிரதேசம். இந்த மழை கன்னியாகுமரிக்கொந்திற் பெய்யவில்லை.

கொப்பம்[1] koppam, *n.* cf. *kūpa.* [M. *koppam.*] Keddah for elephants; யானை பிடிப்பதற்காக வெட்டும் பெருங்குழி. கைம்மலைசெல் கொப்பத்து வீழ (குமா. பிர. மீனாட். பிள்ளை. 11).

கொப்பம்[2] koppam, *n.* 1. A country; ஒரு தேசம். பப்பரம் கொப்பம் வங்கம் (பாரத. படை. 19). 2. A town in the Nizam's Dominions bordering Bellary District; பெல்லாரி ஜில்லாவையடுத்து நிஜாம் இராச்சியத்திலுள்ள ஓர் ஊர். கொப்பத் தொருகளிற் ருற் கொண்டோனும் (விக்கிரம. உலா, 40).

கொப்பரம் kopparam, *n.* <*kūrpara.* [T. *kopparamu.*] (அக. நி.) 1. Elbow; முழங்கை. 2. A mode of grappling the arms in wrestling; மற்போர்வகை.

கொப்பரம்பாய்ச்சு-தல் kopparam-pāyccu-, *v.* <கொப்பரம் +. (யாழ். அக.) *intr.* To grapple an antagonist, as in wrestling; மல்லுக்குக் கைகோத்தல்.—*tr.* To upbraid, bluster; அதட்டுதல்.

கொப்பரி koppari, *n.* [K. *kopparige.*] See கொப்பரை[2]. (பிங்.)

கொப்பரை[1] kopparai, *n.* cf. *karpara.* [T. *koppera,* M. *koppara.*] Brass or copper boiler with rings for handles, cauldron; பிடியோடுகூடிய பெரும்பாத்திரம். கும்பம் வட்டகை கொப்பரை (பிரபோத. 11, 31).

கொப்பரை[2] kopparai, *n.* <U. *khōprā.* [T. *kobbera.*] Dried coconut-kernel, copra; நீர் வற்றிய தேங்காய்.

கொப்பளம் koppaḷam, *n.* <கொப்பளி-. Bubble. See கொப்புளம்.

கொப்பளி-த்தல் koppaḷi-, *11 tr. & intr.* [T. *kukkilintcu*, M. *koppaḷi.*] See கொப்புளி-. புறத்திற் கழுவிக்கை கொப்பளிக்க (சைவச. பொது. 314).

கொப்பறு koppaṟā, See கொப்பரை². (J.)

கொப்பாட்டன் koppāṭṭaṉ, *n.* prob. கோ³ +. cf. கொட்பாட்டன். Great-great-grandfather; மூன்றம்பாட்டன். (J.)

கொப்பாந்தேன் koppān-tēṉ, *n.* <கொம்பு + ஆம் +. See கொம்புத்தேன். (J.)

கொப்பி koppi, *n.* < T. *gobbi.* A game of young girls attended with clapping of hands, singing and dancing: கும்மியாட்டம்.

கொப்பிகொட்டு-தல் koppi-koṭṭu-, *v. intr.* <கொப்பி +. To clap hands in *kummi* dance; கும்மியடித்தல்.

கொப்பிப்பொங்கல் koppi-p-poṅkal, *n.* prob. *gō* + பீ +. cf. T. *gobbi.* Feast observed by Hindu girls on the first day of the month of Tai. See குப்பிப்பொங்கல். *Loc.*

கொப்பு¹ koppu, *n.* <கொம்பு. Branch of a tree; மரக்கிளை.

கொப்பு² koppu, *n.* [K. M. Tu. *koppu.*] 1. Women's ear-ornament worn at the top of the helix, as flower-shaped; மகளிர் காதணிவகை. கொப்பிட்ட வுமைபாகர் (தண்டலை. சத. 12). 2. [T. *koppu.*] Chignon, coil of hair; மயிர்முடி. (பிங்.)

கொப்புக்குடை koppu-k-kuṭai, *n.* <கொப்பு² +. Umbrella-shaped pendants hanging from *koppu* ornaments; கொப்பணியிலிருந்து தொங்கும் குடைவடிவான உறுப்பு. *Loc.*

கொப்புமயிர்மாட்டி koppu-mayir-māṭṭi, *n.* <id. +. Golden hair-hook connecting *koppu* ornament to a strand of hair behind the ear, worn by women; மகளிர் மயிரில் மாட்டும் காதணி வகை.

கொப்புவாளி koppu-vāḷi, *n.* <id. +. Woman's ornament for the helix of the ear, having a knob and a pendant; மகளிரணியும் வாளி என்னுங் காதணிவகை.

கொப்புள்¹ koppuḷ, *n.* See கொப்பூழ். (W.)

கொப்புள்² koppuḷ, *n.* [M. *koppuḷ.*] See கொப்புளம். வாதக் கொப்புளொடு வருத்தங் கொண்ட கோல் (பெருங். மகத. 8, 16).

கொப்புளம் koppuḷam, *n.* <கொப்புளி-. 1. Bubble; குமிழி. (பிங்.) 2. Pustule, blister, vesicle, as of chicken-pox; கொப்புளம் போன்ற பரு. கோவத்தன்ன கொப்புளம் (பெருங். உஞ்சைக். 54, 59).

கொப்புளி-த்தல் koppuḷi-, *11 v.* [M. *koppuḷi.*] *intr.* 1. To blister; கொப்புளங் கொள்ளுதல். எடுத்தடி கொப்புளிக்க (தனிப்பா. i, 146, 44). 2. To rise in bubbles, as water; நீர் முதலியவை குமிழியிட்டு வெளிவருதல். 3. To puff out the cheeks and blow; வாய் குமிழ்த்தல். செய்யவாய் கொப்புளிப்ப (திவ். பெரியாழ். 3, 6, 8).—*tr.* 1. To gargle, rinse; நீர் முதலியவற்றல் வாயை அலசி உமிழ்தல். 2. To discharge in jets; நீர் முதலியவற்றை வெளிவிடுதல். குருதி கொப்புளிக்கும் வேலான் (சீவக. 1889).

கொப்புளிப்பான் koppuḷippāṉ, *n.* <கொப்புளி-. Chicken-pox or measles; வசூரி வகை.

கொப்பூழ் koppūḻ, *n.* <கொப்புள்². 1. Navel, umbilicus; நாபி. மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரை (பரிபா. பக். 174). 2. See கொப்புளம், 2. நங்கை சீறடி நீர்க்கொப்பூழி னறியன தொடர்ந்து சென்று (கம்பரா. தைல. 53).

கொப்பூழ்க்கொடி koppūḻ-k-koṭi, *n.* <கொப்பூழ் +. Umbilical cord, navel string, *Funis;* நாபிக்கொடி. *Loc.*

கொப்பூழறு-த்தல் koppūḻ-aṟu-, *v. intr.* <id. +. To cut the umbilical cord of a new-born infant; பிறந்த குழந்தையின் நாபிக்கொடியை அறுத்தல்.

கொப்பெனல் koppeṉal, *n.* [T. *gobbuna.*] Onom. expr. of moving quickly, swiftly or suddenly; விரைவுக் குறிப்பு. கொப்பென வந்தார்கள். (W.)

கொப்பை koppai, *n.* See கோப்பை², 2. கொப்பையிற் பொருகளத்திலே (கலிங். 191).

கொம்படி-த்தல் kompaṭi-, *v. intr.* <கொம்பு +. (யாழ். அக.) 1. To fight with horns, as oxen, buffaloes, rams, goats; கொம்பால் முட்டிப் பொருதல். 2. To impose one's authority; அதிகாரம் செலுத்துதல்.

கொம்பத்தாள் kompattāḷ, *n.* <id. + ஆள். See கொம்பாள். (W.)

கொம்பர் kompar, *n.* <id. See கொம்பு. நாறு மலர்க் கொம்பர் (சீவக. 2019).

கொம்பரக்கு komparakku, *n.* <id. +. Stick lac; அரக்குவகை. (தைலவ. தைல. 94, 20.)

கொம்பன் kompaṉ, *n.* <id. [M. *kompan.*] 1. Tusked or horned animal; கொம்புள்ள விலங்கு. 2. Clever man, used ironically; சமர்த்தன். 3. A kind of cholera or small-pox; வசூரி அல்லது பேதிவகை.

கொம்பன்கெளுத்தி kompaṉ-keḷutti, *n.* <கொம்பன் +. See கொம்புக்கெளிறு.

கொம்பன்சம்பா kompaṉ-campā, *n.* <id. +. A kind of *campā* paddy, sown between Āṉi and Puraṭṭāci, maturing in 5 months; ஆனி புரட்டாசி மாதங்களில் விதைக்கப்பட்டு 5 மாதங்களில் விளையும் சம்பாநெல்வகை. *Loc.*

கொம்பன்சுறா kompaṉ-cuṟā, *n.* <id.+. [T. *kommasorra.*] Hammer-headed shark, deep grey, attaining 7 ft. in length, *Zygaena blochii;* சாம்பனிறத்துடன் 7 அடிவரை நீண்டு வளரக்கூடிய சுறமீன்வகை. (M. M. 850.)

கொம்பன்திருக்கை kompaṉ-tirukkai, *n.* <id.+. Sea-devil, deep purplish, attaining 18 ft. and upwards across the disc which is twice as broad as long, *Dicerobatis eregoodoo;* ஊதாநிறமுள்ளதும் 18 அடிக்குமேல் வளர்வதுமான கடல்மீன்வகை.

கொம்பன்பாகல் kompaṉ-pākal, *n.* <id. +. See கொம்புப்பாகல். *Colloq.*

கொம்பன்யானை kompaṉ-yāṉai, *n.* <id. +. Tusker; பெரிய கொம்புகளுடைய யானை. *Loc.*

கொம்பனார் kompaṉār, *n.* <கொம்பு+ அன்னார். Women, slender and supple as the twig of a plant; கொம்புபோல் ஒல்குந்தன்மையுள்ள பெண்டிர். *கொம்பனார்க் கெல்லாங் கொழுந்தே* (திவ். திருப்பா. 17).

கொம்பாபிள்ளை kompā-piḷḷai, *n.* <id. + ஆம் + பிள்ளை. Lit., man with horns. Man of rank or wealth, used ironically; [கொம்புமுளைத்தவன்] செல்வமுதலிய தகுதிகளால் உயர்ந்தவன்.

கொம்பாலயம் kompālayam, *n.* <id.+. Branch of certain trees considered as the seat of a deity and worshipped; தெய்வம் தங்குவதாகக் கொண்டு பூசிக்கப்பெறும் சில மரக்கிளைகள். *Loc.*

கொம்பாள் kompāḷ, *n.* <id. + ஆள். 1. Man engaged in watching from a tree; மரத்திலேறியிருந்து காவல்புரிவோன். (W.) 2. A look-out, spy; உளவாள். *Loc.*

கொம்பாஸ் kompās, *n.* <E. *compass.* Mariner's compass; திசையறிகருவி.

கொம்பாஸ்கூடு kompās-kūṭu, *n.* <கொம்பாஸ் +. Binnacle, box for a ship's compass; கப்பலில் திசையறிகருவி வைக்குங் கூடு. *Naut.*

கொம்பாஸ்பெட்டி kompās-peṭṭi, *n.* <id.+. See கொம்பாஸ்கூடு.

கொம்பி kompi, *n.* perh. கொம்பு. Saturn; சனி. *கொம்பி யருக்கன் குசன்* (சினேந். 198).

கொம்பிலேயேறு-தல் kompilē-y-ēṟu-, *v. intr.* <id.+. Lit., to climb upon a branch. To be haughty; [கிளையிலேறுதல்] வீண்கர்வங் கொள்ளுதல். *Loc.*

கொம்பினார் kompiṉar, *n.* <id. See கொம்பனார். *குளிர்மணற் கேணியுட் கொம்பினர் படர்ந்தும்* (கல்லா. 71, 31).

கொம்பு kompu, *n.* [T. *kommu*, K. Tu. *kombu*, M. *kompu.*] 1. Bough, branch, twig; மரக்கிளை. *வளியெறி கொம்பின் வருந்தி* (மணி. 24, 86). 2. Seedling; நாற்றுமுளை. *Loc.* 3. Stick, staff, pole; கோல். *Madr.* 4. Poles of a palanquin, etc.; பல்லக்கு முதலியவற்றின் கோம்பு. *முற்கொம்புதாங்கி முன்னடக்கும் . . . முனிவன்* (திருவிளை. இந்திரன். 65). 5. Horn of an animal; விலங்கின் கொம்பு. 6. Tusk of an elephant or hog; யானை முதலியவற்றின் தந்தம். *யானையின் கொம்பினைப் பறித்து* (திவ். பெரியதி. 4, 2, 4). 7. Horn, pipe, cornet; ஊது கொம்பு. *கொம்பு ஒலிப்ப* (மதுரைக். 185, உரை). 8. Squirt, tube for discharging fluids in jets; நீரைவீசுங் கருவி. *சிவிறியுங் கொம்புஞ் சிதறு விரைநீரும்* (மணி. 28, 10). 9. The symbol 'ெ' in certain Tamil letters as கெ, கொ; கெ, கோ முதலிய எழுத்துக்களில் முற்பகுதியாயமைந்திருக்கும் அடையாளக்குறி. *வரைந்திடுந் திறனடைந்த கொம்புபோல* (திருவேங். கலம். 27). 10. Farthest end of a tank bund; ஏரிக்கரையின் கோடி. *Loc.*

கொம்புக்கடமை kompu-k-kaṭamai, *n.* <கொம்பு+. Tax on fishing-boats; மீன்படகுக்கு உரிய வரி. (W.)

கொம்புக்கள்ளி kompu-k-kaḷḷi, *n.* <id. +. A variety of milk-hedge; கள்ளிவகை. (L.)

கொம்புக்காரன் kompu-k-kāraṉ, *n.* <id. +. *Loc.* 1. Horn-blower; கொம்புவாத்தியம் ஊதுபவன். 2. Cholera-deity; வாந்திபேதிக்குரிய தேவதை.

கொம்புக்கால் kompu-k-kāl, *n.* <id.+. 1. Forked support for a roof-tree; முகடு தாங்கும் கவட்டுமரம். 2. The symbols, 'ெ', 'ே' and 'ா', as in கொ, கோ, etc.; கொ, கோ முதலியவற்றில் உள்ள கொம்புங் காலும். (W.)

கொம்புக்கெளிறு kompu-k-keḷiṟu, *n.* <id.+. A fresh-water fish, bluish-leaden, attaining 6 ft. in length, *Macrones aor;* ஆறடி நீளமும் மங்கல்நீலநிறமும் உள்ளதாய் நன்னீரில் வாழும் கெளிற்றுமீன்வகை.

கொம்புகாவி kompu-kāvi, *n.* <id. + காவு-. Palanquin-bearer; பல்லக்குத் தூக்குவோன். (J.)

கொம்புகொள்(ளு)-தல் kompu-koḷ-, *v. intr.* <id.+. To be torn, as a cloth caught by

a nail; ஆணிமுதலியவற்றிற் பட்டு ஆடை கிழிதல். *Colloq.*

கொம்புச்சுத்தியல் kompu-c-cuttiyal, *n.* <id.+. A kind of hammer used by goldsmiths; தட்டார் உபயோகிக்குஞ் சுத்தியல் வகை. *Loc.*

கொம்புச்சுழி kompu-c-cuḻi, *n.* <id.+. The circular portion in the symbol 'ெ'. See சுழி.

கொம்புசாய்-தல் kompu-cāy-, *v. intr.* <id.+. To bow down with weight, as ripe corn; கதிர்முற்றிச் சாய்தல். (W.)

கொம்புசீவிவிடு-தல் kompu-cīvi-viṭu-, *v. tr.* <id.+. 1. To incite quarrel; சண்டை மூட்டி விடுதல். 2. To encourage; to egg on; உற்சாகப் படுத்துதல். *Loc.*

கொம்புத்தேன் kompu-t-tēṉ, *n.* <id.+. Lit., honey gathered from the honeycombs on the branch of a tree. Pure honey; [மரக்கொம்பி லுள்ள தேன்கூட்டிலிருந்து எடுக்கப்பட்ட தேன்] சுத்தமான தேன். (பதார்த்த. 198.)

கொம்புத்தேனீ kompu-t-tēṉ-ī, *n.* <id.+. Tree-bee, found on the plains and low hill-ranges, *Apis indica;* தேனீவகை. (M. M.)

கொம்புப்பயறு kompu-p-payaṟu, *n.* <id. +. A kind of pulse; தானியவகை. (W.)

கொம்புப்பாகல் kompu-p-pākal, *n.* <id. +. Long balsam-pear, climber, *Momordica charantia*, opp. to *miti-pākal;* நீண்ட பாகல்வகை. (பதார்த்த. 712.)

கொம்புப்பிடி kompu-p-piṭi, *n.* <id.+. Handle, as of a knife, made of horn, tusk, etc.; கத்திமுதலியவற்றிற்குக் கொம்புமுதலியவற்றாற் செய்த பிடி. *Loc.*

கொம்புப்பிறை kompu-p-piṟai, *n.* <id. +. The symbols 'ெ', 'ே' and '‿', as in ஞெ, ஞே; ஞெ, ஞே முதலிய எழுத்துக்களில் உள்ள கொம்பும் பிறையும். (W.)

கொம்புப்புடல் kompu-p-puṭal, *n.* <id. +. 1. Short snake-gourd, climber, *Trichosanthes nervifolia;* தட்டைப்புடல். (J.) 2. Palwal snake-gourd, extensive climber, *Trichosanthes dioica;* புடல்வகை.

கொம்புபடு-தல் kompu-paṭu-, *v. intr.* <id.+. See கொம்புகோள்-.

கொம்புபிடி-த்தல் kompu-piṭi-, *v. intr.* <id.+. To blow a horn; கொம்பையூதுதல். (W.)

கொம்புமுளை-த்தல் kompu-muḷai-, *v. intr.* <id.+. To have special merits or excellences, used ironically; பிறர்க்கில்லாத சிறப் புண்டாயிருத்தல். அவன் கொம்புமுளைத்தவன்.

கொம்புளவு kompu-ḷavu, *n.* <id.+. The letter 'ள' as beginning with the symbol ெ; கொம்பை முதலிற்கொண்ட எழுத்தாகிய ளகரம். *Loc.*

கொம்பூதி kompūti, *n.* <id.+ஊது-. 1. Horn-blower, trumpeter; கொம்பூதுவோன். (J.) 2. Snail; நத்தை. (சங். அக.)

கொம்பேறிமூக்கன் kompēṟi-mūkkaṉ, *n.* <id.+ஏறு-+*mūrkha*. Tree-snake, non-poisonous, *Dendrophis picta;* மரப்பாம்புவகை. (M. M. 206.)

கொம்பேறிமூர்க்கன் kompēṟi-mūrkkaṉ, *n.* See கொம்பேறிமூக்கன். (W.)

கொம்மட்டி kommaṭṭi, *n.* 1. A small water-melon, climber, *Citrullus;* கொடிவகை. (சைவச. பொது. 297.) 2. Country cucumber, climber, *Cucumis trigonus;* தும்மட்டி. (M. M. 371.)

கொம்மட்டிக்கீரை kommaṭṭi-k-kīrai, *n.* <கொம்மட்டி+. Cockscomb greens, *Amarantus atropurpurea;* செங்கீரை. (W.)

கொம்மட்டிச்சுரை kommaṭṭi-c-curai, *n.* <id.+. A gourd used for curry, *Lagenaria;* கறிக்குரிய சுரைச்செடிவகை. (W.)

கொம்மட்டிமாதுளை kommaṭṭi-mātuḷai, *n.* <id.+. Citron, a tree, *Citrus medica-medica;* மரவகை. (சிலப். 16, 25, உரை.)

கொம்மி kommi, *n.* <கொம்மை. A kind of dance accompanied with singing and clapping of hands. See கும்மி, 1. மடவார் கொம்மியே பாடி (அருட்பா, vi, மாயாவிள. 7).

கொம்மெனல் kom-m-eṉal, *n.* 1. An imitative sound; ஓர் ஒலிக்குறிப்பு. கூர நாண்குரல் கொம்மென வொலிப்ப (பரிபா. 19, 44). 2. Expr. denoting luxuriance; பெருக்கக் குறிப்பு. (தொல். சொல். 298, உரை.) 3. Expr. denoting haste; விரைவுக்குறிப்பு. கொம்மென வெழுந்தனள் (கந்தபு. தெய்வயானை. 9).

கொம்மை kommai, *n.* 1. cf. *gumpha.* Circle, circularity; வட்டம். (பிங்.) 2. Largeness, bigness; பெருமை. அம்மையு மழகுங் கொம்மை யொடு கழுமி (பெருங். உஞ்சைக். 40, 210). 3. cf. *gumpha.* Conicalness, roundness, rotundity; திரட்சி. (சூடா.) 4. Breast of a youthful woman; இளமுலை. வாரணி கொம்மை (பரிபா. 22, 30). 5. Youth; இளமை. (திவா.) 6. Beauty; அழகு. (பிங்.) 7. Breast, chest; மார்பு. (பிங்.) 8. Strength; வலிமை. (பிங்.) 9. Elevated place, mound; மேடு. (பிங்.) 10. House; வீடு. உன்கொம்மையிலே போய் முடங்கிக்கொள். *Loc.*

11. Rampart, bulwark; கோத்தளம். (W.) 12. Projecting knobs of an oven; அடுப்புக்குமிழ். *Loc.* 13. Projecting pin of a door; கதவுக்குமிழ். 14. Clothes-basket; அழுக்குத் துணியிடும் பெட்டி. *Loc.* 15. Clapping of hands, as in dancing; கை குவித்துக் கொட்டுகை. (திவா.) 16. A small water-melon, climber, *Citrullus;* கொம்மட்டி. (மலை.) 17. A variety of kambu, sown in Puraṭṭāci and harvested in Mārkaḻi; புரட்டாசியில் விதைத்து மார்கழியில் அறுவடை செய்யும் கம்புவகை. (G. Sm. D. I, i, 219.) 18. Thin and immature grain in the husk, chaff; பதர். *Loc.*

கொம்மைகொட்டு-தல் kommai-koṭṭu-, *v. tr.* <கொம்மை+. 1. To call a person by clapping hands; to invite; தட்டியழைத்தல். கூற்றத்தைக் கொம்மைகொட்டி (சீவக. 1109). 2. To pat on the back, as in appreciation; புகழ்தற்குறியாக முதுகுப்புறத்தைத் தட்டிக்கொடுத்தல். குடங்கையாற் கொம்மை கொட்டுவ போன்றவே (சீவக. 529).

கொமாரப்பாறை komāra-p-pāṟai, *n.* Horse-mackerel, glossy-green, attaining 5 ft. in length, *Caranx rottlerii;* ஐந்தடி நீளமுள்ளதும் பசுமைநிறத்ததுமான கடல்மீன்வகை.

கொய்[1]-தல் koy-, *1 v. tr.* [T. *kōyu,* K. *koy,* M. *koyka.*] 1. To pluck, cull, as flowers; பறித்தல். பனிமலர் கொய்தும் பாவை புனைந்தும் (பெருங். இலாவாண. 19, 161). 2. To cut, reap; அறுத்தல். சிறுதினை கொய்ய (மதுரைக். 271). 3. To shear, crop, as hair; to trim, as plants; to snip off; கத்தரித்தல். கொய்தார் மன்னவன் (பு. வெ. 3, 3, கொளு). 4. To choose, select; தேர்ந்தெடுத்தல். பொருந்துவதொன் றெமக்குக் கொய்துரை (கோயிற்பு. பதஞ். 54). 5. To plait, gather into folds, as ends of a cloth; சீலை கொய்தல். கோடிப் பூந்துகில் கொய்து (பெருங். இலாவாண. 5, 165). 6. To bristle, as manes of a horse; சிலிர்த்தல். கொய்சுவற் புரவி (மலைபடு. 572).

கொய்[2] koy, *n.* <U. *khowai.* A fresh-water fish, rifle-green, attaining 8½ in. in length, *Anabas scandens;* எட்டரை அங்குலம் நீளமுள்ளதும் நன்னீரில் வாழ்வதும் பசியநிறத்ததுமான மீன்வகை. செம்புனல் கொய்யனைத்துங் கொணரும் (தேவா. 196, 3).

கொய்சகம் koycakam, *n.* <கொய்-. Puckered or tucked-up ends of a cloth, as a woman's; ornamental pleating in a woman's dress hanging from the right hip; ஓரங்கொய்து சுருக்கப்பட்ட உடை. கொய்சக மருங்குறச் சேர்த்தி (கம்பரா. தேரே று. 6).

கொய்சுவனம் koycuvaṉam, *n.* See கொய்சகம். *Colloq.*

கொய்யகச்சட்டி koy-y-aka-c-caṭṭi, *n.* <கொய்-+. A kind of earthen pot with brim; விளிம்புள்ள சட்டிவகை. (W.)

கொய்யகம் koy-y-akam, *n.* <id.+அகம். 1. See கொய்சகம். 2. Ornamental folds of cloth used as hangings in a hall; மண்டபத்தில் அலங்காரமாகக்கொய்து மேலே தொங்கவிடப்பட்ட ஆடை. பசும்பொனுடுக்கை கொய்யக மீப்படநாற்றினர் (உபதேசகா. சிவபுண்ணிய. 62).

கொய்யடி koy-y-aṭi, *n.* <id.+. See கொய்யடிநாரை. (W.)

கொய்யடிநாரை koyyaṭi-nārai, *n.* <கொய்யடி+. Pelican ibis; வண்டானம் என்ற நாரை வகை. (திவா.)

கொய்யல் koyyal, *n.* See கொய்யா. கொங்கார் கோடலொடு கொய்யல் (பெருங். உஞ்சைக். 51, 51).

கொய்யா koyyā, *n.* <Braz. *guayaba.* [T. *goyyā,* K. M. *koyyā.*] Guava, a tree, ***Psidium guyava;*** மரவகை. (பதார்த்த. 744.)

கொய்யாக்கட்டை koyyā-k-kaṭṭai, *n.* prob. T. *koyya*+. 1. Cleat; இடுக்கிச் சட்டம். (C. E. M.) 2. Wooden pieces placed on either side of the axle supporting the cart-frame; அச்சின்மீது இரண்டருகுகளிலும் வண்டிச் சட்டத்தைத் தாங்கும்படி துருக்காக வைக்கப்படும் கட்டைகள். *Loc.*

கொய்யாக்கயிறு koyyā-k-kayiṟu, *n.* perh. id.+. A weaving instrument; நெசவு கருவிவகை.

கொய்யுளை koy-y-uḷai, *n.* <கொய்-+. 1. Horse's mane; குதிரைப் பிடரிமயிர். துஷ் சாமரக் கொய்யுளைப் புரவியும் (சிலப். 26, 134). 2. Horse; குதிரை. கொய்யுளை கொடிஞ்சி குஞ்சரம் (ஞானா. 7, 18).

கொய்னா koyṉā, *n.* <E. *quinine.* 1. Red cinchona bark, a tree, *Cinchona succirubra;* சுரப்பட்டை மரம். 2. Quinine, product of cinchona alkaloids; காய்ச்சல் மருந்து.

கொரடா koraṭā, *n.* <Port. *corda.* [T. *koraḍā,* M. *koraṭā.*] Horse-whip, whip, scourge; குதிரைச் சவுக்கு.

கொரநாடு kora-nāṭu, *n.* Corr. of கூறைநாடு.

கொரலி korali, *n.* <குரல்[1]. 1. Italian millet, *Setaria italica;* தினை. (M. M. 893.) 2. White Italian millet, *Panicum glaucum:* வெண்தினை. (M. M. 894.)

கொரவை koravai, *n.* See குரவை.

கொரான் korāṉ, *n.* <U. *Qurān.* The Koran. See குறான்.

கொரி kori, *n.* cf. கொறு. Muzzle of a young calf; கன்றின் வாய்ப்பூட்டு. *Loc.*

கொரிக்கம் korikkam, *n.* Style-plant. See எழுத்தாணி. (மலை.)

கொருக்காப்புளி korukkā-p-puḷi, *n.* <கொடுக்காய் +. Manilla tamarind. See கோடுக்காய்ப்புளி.

கொருக்கு korukku, *n.* [T. *koruku.*] Syphilis. See கோறுக்கு. (M. L.)

கொருடன் korutaṉ, *n.* cf. *garuḍa.* A common creeper of the hedges, *Cephalandra indica;* கோவைக்கொடிவகை. (மலை.)

கொல்[1](**லு**)-**தல்** kol-, 3 *v. tr.* [K. M. *kol.*] 1. To kill, slay, murder; வதைத்தல். கொன்றன்ன வின்னா செயினும் (குறள், 109). 2. To destroy, ruin; அழித்தல். கொன்றுன்காண் புரமூன்றும் (திருவாச. 12, 16). 3. To fell, cut down; வெட்டுதல். மரங்கொலை நச்சர் (சிலப். 5, 29). 4. To reap, as the heads of grain; கதிரறுத்தல். நெற்கதிரைக் கொன்று களத்திற் குவித்து (தொல். பொ. 76, உரை). 5. To afflict, tease; துன்பப் படுத்துதல். நின்னலங் காட்டி யெம்மைக் கொன்றுயென (சீவக. 642). 6. To neutralize metallic properties by oxidation; இரசமுதலியவற்றின் விஷத்தன்மையைக் கெடுத்தல்.

கொல்[2] kol, *n.* <கொல்-. 1. Act of killing, murdering; கொலைத்தொழில். கொல்லார் மழுவாட் படையாய் (தேவா. 966, 1). 2. Affliction; வருத்தம். (சூடா.) 3. Working in iron; கொற்றொழில். 4. Blacksmith; கொல்லன். 5. Lock; பூட்டு. (பிங்.) 6. Brass or iron bar nailed across a door or gate; கதவு முதலியவற்றில் தைக்கும் இரும்பு முதலியவற்றலாகிய பட்டை. *Loc.*

கொல்[3] kol, *part.* 1. An affix implying doubt; ஐயப்பொருளில் வரும் ஓர் இடைச்சொல். யாதுகொன் மற்றிவ் வேந்தல் பணி (பெருங். உஞ்சைக். 34, 70). 2. An expletive, chiefly in poetry; பெரும்பாலும் செய்யுளில் வரும் ஓர் அசைநிலை. (நன். 435.)

கொல்குறும்பு kol-kuṟumpu, *n.* <கொல்- +. Village in a desert tract, as inhabited by murderous tribes; [கொல்லும்வேடர் நிறைந்த சிற்றூர்] பாலைநிலத்தூர். (இறை. 1, 18.)

கொல்லங்கொவ்வை kollaṅ-kovvai, *n.* perh. கொல்லம் +. A climbing shrub, *Corallocarpus epigeia;* கொடிவகை. (பதார்த்த. 346.)

கொல்லச்சேவகன் kolla-c-cēvakaṉ, *n.* <T. *golla* +. See கொல்லா.

கொல்லம் kollam, *n.* [M. *kollam.*] 1. An ancient division of Tamil land believed to have been submerged under sea; கடல் கொண்டதாகக் கருதும் தென்றமிழ்நாடுகளுள் ஒன்று. குமரி கொல்ல முதலிய பன்மலைநாடும் (சிலப். 8, 1, உரை). 2. A town on the west-coast, in Travancore; சேர நாட்டிலுள்ள ஒரு கடற்கரைப் பட்டினம். 3. See கொல்லமாண்டு. (T. A. S. IV, 9.)

கொல்லம்பாகல் kollam-pākal, *n.* prob. கொல்லம் +. A kind of caper plant, *Bryonia garcini;* பாகல்வகை. (W.)

கொல்லமா kolla-mā, *n.* perh. id. +. 1. Cashew tree. See கொட்டைமுந்திரி. 2. A species of cinnamon. See ஆனைக்கரு. (L.)

கொல்லமாண்டு kollam-āṇṭu, *n.* <id. +. Kollam or Malabar Era, dating from September 824 A.D.; கி. பி. 824-ம் வருஷம் தொடங்கி தென்றமிழ் நாட்டிலும் மலைநாட்டிலும் வழங்கும் அப்தவிசேடம்.

கொல்லமிளகு kolla-miḷaku, *n.* <id. +. Chilly, *Capsicum frutescens;* மிளகாய் வகை. *Loc.*

கொல்லர் kollar, *n.* Watchmen at the entrance-gate of a palace; அரண்மனை வாயில்காப்போர். கொல்லரெனை யாரென்று ரப்பா நான் வித்துவானென்று சொன்னேன் (விறலிவிடு. 1035).

கொல்லற்றுக்காரன் kollaṟṟu-k-kāraṉ, *n.* <கொல்லறு +. Brick-layer, mason; கொத்தன். (C. E. M.)

கொல்லற்றுவேலை kollaṟṟu-vēlai, *n.* <id. +. Masonry; கொத்துவேலை.

கொல்லறு kollaṟu, *n.* Mason's trowel; கொத்தன் கரண்டி. (C. E. M.)

கொல்லன் kollaṉ, *n.* <கொல்[2]. [M. *kollan.*] Blacksmith; கருமான். மென்றோன் மிதியுலைக் கொல்லன் (பெரும்பாண். 207).

கொல்லன்கம்மாலை kollaṉ-kammālai, *n.* <கொல்லன் + *karma-śālā.* See கொல்லன்பட்டறை. (J.)

கொல்லன்கோவை kollaṉ-kōvai, *n.* 1. See கொல்லங்கொவ்வை. (பதார்த்த. 422.) 2. Mussell-shell creeper. See சாக்கணம். (மலை.)

கொல்லன்பகை kollaṉ-pakai, *n.* A mineral poison; அஞ்சனபாஷாணம். (மூ. அ.)

கொல்லன்பட்டடை kollaṉ-paṭṭaṭai, *n.* <கொல்லன் +. Anvil; அடைகல். (C. G.)

கொல்லன்பட்டறை kollaṉ-paṭṭarai, *n.* <id. +. Blacksmith's workshop, smithy; கொல்லன் உலைக்கூடம்.

கொல்லா kollā, *n.* <T. *golla.* A trustworthy employee in public treasuries; கஜானா வேலைபார்க்கும் நம்பிக்கையான வேலையாள். *Loc.*

கொல்லாக்கொலை kollā-k-kolai, *n.* <கொல்- + ஆ neg. +. Torture; சித்திரவதை. *Loc.*

கொல்லாப்பண்டி kollā-p-paṇṭi, *n.* prob. U. *khulā* +. [M. *kōlārvaṇṭi.*] A car-like vehicle drawn by bullocks, used in ancient times by persons of rank. See கோரதம். (சிலப். 6, 120, உரை.)

கொல்லாமை kollāmai, *n.* <கொல்- + ஆ neg. Abstinence from killing, as a virtue; உயிர்க்கொலை செய்யாமை. (குறள், அதி.)

கொல்லாவண்டி kollā-vaṇṭi, *n.* See கொல்லாப்பண்டி. உருவுதிரையையுடைய கொல்லா வண்டி (சீவக. 858, உரை).

கொல்லாவிரதம் kollā-viratam, *n.* <கொல்- + ஆ neg. +. Vow of abstaining from killing; உயிர்களைக் கொல்லாமையாகிய நோன்பு. கொல்லாவிரதங் குவலயமெல்லா மோங்க (தாயு. பராபர. 54).

கொல்லாவிரதியர் kollā-viratiyar, *n.* <id. +. 1. Those who have vowed to abstain from killing; கொல்லாமையை நோன்பாக உடையவர். கொல்லாவிரதியர் நேர்நின்ற முக்கட் குருமணியே (தாயு. பாயப்புலி. 22). 2. Jains; சைனர்.

கொல்லாவேதம் kollā-vētam, *n.* <id. +. Jain scriptures, as enjoining abstinence from killing; [கொல்லாமையை விதிக்கும் மறை] சைனாகமம். (W.)

கொல்லாவேதன் kollā-vētaṉ, *n.* <கொல்லாவேதம். Arhat, as the author of *Kollā-vētam;* [கொல்லாவேதத்தை அருளிச்செய்தவன்] அருகன். (சூடா.)

கொல்லி[1] kolli, *n.* <கொல்-. That which kills; கொல்லு-பவன்-பவள்-வது. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி (குறள், 306).

கொல்லி[2] kolli, *n.* 1. Range of hills in Trichinopoly district; திருச்சிறாப்பள்ளி ஜில்லாவிலுள்ள ஒரு மலை. கொல்லி யாண்ட வல்வி லோரியும் (புறநா. 158, 5). 2. (Mus.) An ancient secondary melody-type of the *marutam* class; மருதயாழ்த் திறவகை. (பிங்.) 3. See கொல்லிப்பாவை. வகையமை கொல்லியின் வசையறத் திடைத்த (பெருங். இலாவாண. 4, 185).

கொல்லிக்கௌவாணம் kolli-k-kauvāṇam, *n.* <கொல்லி[2] +. (Mus.) An ancient secondary melody-type; முற்காலத்து வழங்கிய ஒருவகைச் சிறுபண். (திவா.)

கொல்லிச்சிலம்பன் kolli-c-cilampaṉ, *n.* <id. +. Lit., lord of the Kolli hills. Cēra king; [கொல்லிமலைத் தலைவன்] சேரன். (திவா.)

கொல்லிட்டுப்போ-தல் kolliṭṭu-p-pō-, *v. intr.* <கொல் (onom.) +. To be struck dumb; to be calm and silent; ஒலியடங்குதல். *Loc.*

கொல்லித்திறம் kolli-t-tiṟam, *n.* <கொல்லி[2] +. (Mus.) An ancient secondary melody-type; முற்காலத்து வழங்கிய பண்வகை.

கொல்லிப்பாவை kolli-p-pāvai, *n.* <id. +. Woman-shaped statue in the Kolli hills believed to have been carved by the celestials and to have the power of fascinating all those who look at it; கொல்லிமலையில் தேவரால் நிருமிக்கப்பட்டு நோக்குவோரைத் தன் வசப்படுத்தும் மோகினிப் படிமை. (சிலப். 6, 61, உரை.)

கொல்லிவராடி kolli-varāṭi, *n.* <id. +. (Mus.) An ancient secondary melody-type of the *pālai* class; பாலையாழ்த் திறவகை. (பிங்.)

கொல்லிவெற்பன் kolli-veṟpaṉ, *n.* <id. +. See கொல்லிச்சிலம்பன். (சூடா.)

கொல்லுக்கொலை kollu-k-kolai, *n.* Redupl. of கொலை. Brutal murder; கோடுங்கொலை. அவன் கொல்லுக்கொலைக்கு அஞ்சாதவன். *Colloq.*

கொல்லுத்தடியாணி kollu-t-taṭi-y-āṇi, *n.* <கொல்[2] +. Large nail for studding doors or gates to add to their strength; கதவில்தைக்கும் ஆணிவகை. (W.)

கொல்லுலை kol-l-ulai, *n.* <id. +. Blacksmith's forge; கொல்லனுலை. கொல்லுலைக் கூடத் திஜெல் (குமர. பிர. நீதிநெறி. 14).

கொல்லெனல் kol-l-eṉal, *n.* Onom. 1. An imitative sound; ஓர் ஒலிக்குறிப்பு. (பிங்.) 2. Expr. denoting perfect calm; ஒலியடங்குதற் குறிப்பு. *Loc.*

கொல்லை kollai, *n.* <கொல்-. 1. Sylvan tract; முல்லைநிலம். கொல்லை பயின்று வல்லை யோங்கிய (பெருங். உஞ்சைக். 49, 110). 2. Dry land; புன்செய்நிலம். (திவா.) 3. Uncultivated land; தரிசு. (அகநா. 89, உரை.) 4. Enclosed garden, grove; தோட்டம். *Colloq.* 5. Backyard, open space behind and attached to a house; புழைக்கடை. 6. Latrine; மலங்கழிக்குமிடம். 7. Stool; மலம். குழந்தைக்குக் கொல்லை எப்படிப் போகிறது? *Loc.* 8. One who transgresses conventional bounds; வரம்புகடந்து ஒழுகுபவ-ன்-ள். கொல்லையென்பர்கொலோ குணமிக்கனளென்பர்கொலோ (திவ். திருவாய். 6, 7, 4).

கொல்லைக்காரன் kollai-k-kāraṉ, *n.* <கொல்லை +. 1. Gardener, farmer, cultivator; தோட்டம் வயல் முதலியவற்றில் வேலை செய்பவன். (பஞ்சதந்.) 2. Scavenger; குப்பை யெடுப்பவன். *Colloq.*

கொல்லைக்குப்போ-தல் kollaikku-p-pō-, *v. intr.* <id.+. Lit., to go to backyard. To go to stool; [கொல்லைப்புறஞ் செல்லுதல்] மலங்கழித்தல்.

கொல்லைப்பயறு kollai-p-payaṟu, *n.* <id. +. Wild horse-gram, a climber, *Phaseolus trilobus*; வயற்பயறு. (M. M. 329.)

கொல்லைப்பயிர் kollai-p-payir, *n.* <id.+. Corn growing on elevated ground; மேட்டுநிலப் பயிர். *Loc.*

கொல்லைப்பல்லி kollai-p-palli, *n.* <id.+. A parasitic plant, *Buchnera asiatica;* பூடுவகை. (W.)

கொல்லைமை kollaimai, *n.* <id. Act of transgressing or violating conventional bounds; வரம்பழிந்து ஒழுகுகை. ஆய்ச்சியர் தம்மொடுங் கொல்லைமை செய்து (திவ். திருவாய். 4, 2, 2).

கொல்லைவிளைவி-த்தல் kollai-viḷaivi-, *v. intr.* <id.+. To cultivate a garden; தோட்டம் பயிரிடுதல். (J.)

கொல்லைவெளி kollai-veḷi, *n.* <id.+. Open uncultivated plots; வயல்வெளி. *Loc.*

கொலு kolu, *n.* cf. கோலம். [T. *koluvu*, M. *kolu*.] 1. Royal presence, durbar, sitting-in-state; presence of the deity in a temple; ஓலக்க இருப்பு. இருந்திடுங் கொலுவில் (மச்சபு. வைமிசா. 5). 2. Decorations in a Hindu house at the time of the Navarātri festival; நவராத்திரிப் பண்டிகையில் பொம்மை முதலியவற்றை அலங்காரமாக அமைக்கை.

கொலுக்கூடம் kolu-k-kūṭam, *n.* <கொலு +. Audience chamber. See கொலுமண்டபம்.

கொலுகொலு-த்தல் kolu-kolu-, 11 *v. intr.* Onom. 1. To become loose, disjointed, rickety, deranged in parts; கலகலத்தல். (W.) 2. To moulder, crumble into dust, as a dead body; மட்கிப்போதல். (W.) 3. To be defeated or discomfited in argument; வாதத்தில் தோற்றல். (W.) 4. To chatter incessantly; ஓயாமல் வாய் பேசுதல். *Loc.*

கொலுகொலுப்பு kolu-koluppu, *n.* <கொலுகொலு-. 1. Affectation, ostentation, vanity; ஆடம்பரம். (J.) 2. Incessant chattering; ஓயாமல் வாய்பேசுகை. *Loc.* 3. Becoming loose or rickety; கலகலத்துப்போகை.

கொலுசு kolucu, *n.* <T. *golusu*. 1. Gold or silver chain for the arm or ankle; கைகால்களில் அணியும் பொன் அல்லது வெள்ளியாலான அணி. கொலுசுடன் சிலம்பசைய (திருப்பு. 786). 2. Chain measuring 22 yards, survey-chain; 22 கஜம் நீளமுள்ள அளவுச்சங்கிலி. (C. G.)

கொலுசெழுத்து koluceḻuttu, *n.* <கொலுசு+. Running hand; கூட்டெழுத்து. *Loc.*

கொலுமண்டபம் kolu-maṇṭapam, *n.* <கொலு+. Presence chamber, as of a deity or king; ஆஸ்தான மண்டபம். உயர் கொலுமண்டபத்திடையோ (சிவரக. விசையை. 13).

கொலை kolai, *n.* <கொல்-. [K. Tu. *kole*, M. *kolli*.] 1. Killing, slaying, murder, assassination; உயிர்வதை. கொலையே களவே (மணி. 24, 125). 2. Vexation, teasing, tormenting; இம்சை. படு கொலை புரிவ . . . குவளைக்கண்ணே (நைடத. நாட்டுப். 24).

கொலைக்கடம்பூட்டு-தல் kolai-k-kaṭam-pūṭṭu-, *v. tr.* <கொலை+கடம்+பூட்டு-. To carry out capital sentence; கொலைத்தண்டனை நிறைவேற்றுதல். குற்றங் காட்டிக் கொலைக்கடம்பூட்டுதும் (பெருங். மகத. 25, 103).

கொலைக்களம் kolai-k-kaḷam, *n.* <id.+. Place of execution; கொல்லப்படும் இடம். கொலைக்களக்காதை (சிலப். 16).

கொலைக்குற்றம் kolai-k-kuṟṟam, *n.* <id. +. Offence or crime of murder; உயிர்வதை செய்தலாகிய குற்றம். *Colloq.*

கொலைக்கேசு kolai-k-kēcu, *n.* <id.+. A murder-case; கொலையைப்பற்றிய வழக்கு.

கொலைகாரன் kolai-kāraṉ, *n.* <id.+. 1. Murderer, assassin; கொலைசெய்பவன். 2. One who will not flinch from any heinous crime; பழிபாவங்களுக்கு அஞ்சாதவன்.

கொலைச்சிறை kolai-c-ciṟai, *n.* <id.+. Prison-cell of criminals sentenced to death; சிறைச்சாலையில் கொலைத்தண்டனைக்குரிய குற்றவாளிகளை வைக்கும் அறை. கொலைச்சிறை யிருவரை (பெருங். இலாவாண. 17, 71).

கொலைசுற்று-தல் kolai-cuṟṟu-, *v. tr.* <id. +. To be encompassed, as a person or family, by the sin of murder; கொலைப்பாவம் வழிவழியாகத் தொடர்தல். *Colloq.*

கொலைசூழ்-தல் kolai-cūḻ-, *v. tr.* <id.+. 1. To plot against a person's life; கொல்லும் உபாயத்தை நாடுதல். 2. See கொலைசுற்று-.

கொலைஞன் kolaiñaṉ, *n.* <id. 1. See கொலைகாரன். கொலைஞ ருலையேற்றித் தீமடுப்ப (நாலடி, 331). 2. Hunter; வேடன். (சூடா.) 3. Caṇṭāḷaṉ, whose profession was to kill animals; சண்டாளன். (திவா.)

கொலைநன் kolainaṉ, *n.* <id. See கொலைகாரன். வாழுயிர்க் கூற்றமான கொலைநரை (சீவக. 2770).

கொலைநவில்(லு)-தல் kolai-navil-, *v. intr.* <id.+. To commit murder; கொலைசெய்தல். *கொலைநவில் வேட்டுவர் (மணி. 13, 31).*

கொலைப்பழி kolai-p-paḻi, *n.* <id.+. See கொலைப்பாதகம்.

கொலைப்பாதகம் kolai-p-pātakam, *n.* <id.+. 1. Crime or sin of murder; கொலையாலுண்டான பாவம். *Colloq.* 2. Any heinous crime; பெருந்தீச்செயல்.

கொலைப்பாதகன் kolai-p-pātakaṉ, *n.* <id.+. See கொலைகாரன். *Colloq.*

கொலைபாதகம் kolai-pātakam, *n.* <id.+. See கொலைப்பாதகம். *Colloq.*

கொலைபாதகன் kolai-pātakaṉ, *n.* See கொலைகாரன். *Colloq.*

கொலைமகள் kolai-makaḷ, *n.* <id.+. Durgā, as having slain the Asuras; [*அசுரரைக் கொன்றவள்*] துர்க்கை. *கொலைமகள் கவினை (பிரமோத். 7, 26).*

கொலைமலை kolai-malai, *n.* <id.+. Lit., murderous mountain. Elephant; [*கொலைசெய்யும் மலை*] யானை. *பெருமதக் கொலைமலை (கல்லா. 4).*

கொலைமறுத்தல் kolai-maṟuttal, *n.* <id.+. A poem by Cāntaliṅka-cuvāmikaḷ disapproving killing; கொலைசெய்தல் கூடாதென்பதைப் பற்றிச் சாந்தலிங்கசுவாமிகளால் பாடப்பெற்ற நூல்.

கொலைமுட்டி kolai-muṭṭi, *n.* <குலை[3]+. A cattle-disease involving congestion of lungs, swelling of abdomen and difficulty in breathing; சுவாசப்பை இறுகவும் வயிறுவீங்கவும் மூச்சுத்திணறவுஞ் செய்யும் கால்நடைநோய். (M. Cm. D. [1887] 249.)

கொலையாளன் kolai-y-āḷaṉ, *n.* <கொலை + ஆள்-. See கொலைகாரன். (பிங்.)

கொலையாளி kolai-y-āḷi, *n.* <id.+. See கொலைகாரன். (சூடா.)

கொலையுண்(ணு)-தல் kolai-y-uṇ-, *v. intr.* <id.+. To be killed, murdered; கொலை செய்யப்படுதல்.

கொலைவன் kolaivaṉ, *n.* <id. 1. See கொலைகாரன். *கொலைவ னல்லையோ கொற்றவ னுயினை (மணி. 25, 174).* 2. Hunter, one who lives by chase; வேடன். *கொலைவர் கொடுமரந் தேய்த்தார் (கலித். 12).* 3. Śiva, as the destroyer; [*சங்காரகர்த்தா*] சிவன். *கொலைவன் சூடிய குழவித் திங்கள் (கலித். 103, 14).*

கொவ்வங்காய்ப்பதம் kovvaṅ-kāy-p-patam, *n.* See கோவ்வைக்காய்ப்பதம். (J.)

கொவ்வை kovvai, *n.* cf. *கோவை.* A common creeper of the hedges, *Coccinia indica;* கோவ்வைக்கொடி. *கொவ்வைச் செவ்வாய் (திருவாச. 6, 2).*

கொவ்வைக்காய்ப்பதம் kovvai-k-kāy-p-patam, *n.* <கொவ்வை+. A stage in the growth of paddy when it is tender and green as a *kovvai* fruit; கோவ்வைக்காய்போற் பசுமையாய் நெற்பயிரில் தோன்றும் இளம்பதம். (J.)

கொவளை kovaḷai, *n.* Sulphur-flowered senna. See வெள்ளைத்தகரை. (L.)

கொவிந்தம் kovintam, *n.* cf. *கோரண்டம்.* Thorny nail-dye. See செம்முள்ளி. (L.)

கொவிள் koviḷ, *n.* White cutch, a tree, *Acacia suma;* மரவகை. (L.)

கொழி-த்தல் koḻi-, *11 v. tr.* 1. To sift in a winnowing fan; தெள்ளுதல். *குற்றபாகு கொழிப்பவர் கோள் (கம்பரா. நாட்டுப். 29).* 2. To waft ashore, as fine sand by the waves; ஒதுக்குதல். 3. To carry or wash away, as a river or flood; வாருதல். *கிளியுள வெல்லாங் கொழித்து வந்துற வணை தரும் பாலி (கந்தபு. ஆற்றுப். 23).* 4. To emit, as rays; to send forth, as showers; பொழிதல். *கொடிய வெண்டிங்காள் கொழிக்கு நின துகதிர் (நைடத. சந்திரோ. 6).* 5. To criticise, expose faults; குற்றங்கூறுதல். *வையங் கொழிக்கும் பழிக்கு (சீவக. 1149).* 6. of. *kuṣ.* To test, closely examine details of evidence, facts, etc.; ஆராய்தல். *கொழித்துக் கொளப்பட்ட நண்பினவரை (பழ. 130).* 7. To proclaim, publish; பாராட்டிச் சொல்லுதல். *அவன் தன்புகழைக் கொழித்துக் கொண்டிருக்கிறான். Colloq.* —*intr.* 1. To sound, resound; தொனித்தல். (பிங்.) 2. To come to the surface; to rise up; மேலே கிளம்புதல். *கடற்றி னன்பொன் கொழிப்ப (மதுரைக். 274).* 3. To be on the increase, flourish; செழிப்புறுதல். *செல்வங் கொழிக்கிறது.*

கொழிஞ்சி koḻiñci, *n.* <கொழு-மை. 1. Sylhet orange, a tree, *Citrus aurantium nobilis chrysocarpa;* கிச்சிலி. (L.) 2. Bitter orange. See நாரத்தை. (மலை.) 3. Purple wild indigo. See கொள்ளுக்காய்வேளை. (L.) 4. Trees or plants, as the figs which bear without blossoming; பூவாது காய்க்கும் மரம். (W.)

கொழிப்பு koḻippu, *n.* <கொழி-. 1. Sifting, wafting ashore; கொழிக்கை. 2. Prosperity; செழிப்பு. 3. Fault, defect; குற்றம். (திவா.)

கொழிப்பூண்டு koḻi-p-pūṇṭu, *n.* perh. குழி or கோழி+. Indian acalypha, a shrub, *Acalypha indica;* குப்பைமேனி. (மலை.)

கொழியல் koḻiyal, *n.* < கொழி-. See கொழியலரிசி. நெல்லு இடிசல் கொழியல் இல்லாமல் (கோயிலொ. 62).

கொழியலரிசி koḻiyal-arici, *n.* < கொழியல் +. Ill-cleaned rice; நன்றாகக் குத்தித் தீட்டப்படாத அரிசி. குற்றாத கொழியலரிசியை (பெரும்பாண். 275, உரை).

கொழு¹-த்தல் koḻu-, *11 v. intr.* [M. *koḻu.*] 1. To prosper, flourish; to be rich or fertile, as soil; செழித்தல். குடிகொழுத்தக்கண்ணும் (நாலடி, 96). 2. To grow fat; to be plump; உடற்கொழுப்பு மிகுதல். சிறுமியரெலாங் கொழுத்தே (தனிப்பா.). 3. To be of thick consistency, as sandal paste; குழம்பாயிருத்தல். சந்தனத்தைக் கொழுக்கப் பூசு. 4. To be saucy, impertinent, insolent; திமிர்கொள்ளுதல். *Colloq.* 5. To become too rich to be productive, as land; பூமி மதர்த்தல். *Colloq.*

கொழு² koḻu, *n.* < கொழு-. Fat; கொழுப்பு. குடருங் கொழுவும் (நாலடி, 46).

கொழு³ koḻu, *n.* cf. *kuṣ.* [K. *kuḷa.*] 1. [Tu. *koru.*] Bar of metal, bullion; உலோகக்கோல். 2. [M. *koḻu.*] Ploughshare; ஏர்க்காறு. 3. Awl; துளையிடும் பெரிய ஊசி. கொழுச்சென்ற வழித் துன்னூசி யினிதுசெல்லுமாறுபோல (தொல். பாயி. உரை).

கொழுக்கட்டு-தல் koḻu-k-kaṭṭu-, *v. intr.* < கொழு³ +. To fasten the share to the plough; கலப்பைக்காறு மாட்டுதல். (W.)

கொழுக்கட்டை koḻu-k-kaṭṭai, *n.* < கொழு² +. [M. *koḻukkaṭṭa.*] Bolus-like preparation of rice flour usually with coconut scrapings, sugar, etc.; வெல்லம் முதலியன சேர்த்து அரிசிமாவால் உருண்டைவடிவாகச் செய்யும் சிற்றுண்டி வகை.

கொழுக்கட்டைப்புல் koḻu-k-kaṭṭai-p-pul, *n.* < id. +. A kind of grass in Coimbatore district, very fattening for cattle, *Pennisetum cenchroides;* கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ளதும் கால்நடைகள் மேய்தற்கு உரியதுமாகிய புல்வகை.

கொழுக்கொம்பு koḻu-k-kompu, *n.* See கொழுகொம்பு. (W.)

கொழுகழுவுகாலம் koḻu-kaḻuvu-kālam, *n.* < கொழு³ +. Time of the year when ploughing is finished; உழவுமுடியுங்காலம். *Loc.*

கொழுகொம்பு koḻu-kompu, *n.* prob. கொள்கொம்பு. 1. Stick or pole for supporting a creeper; கொடிகள் ஏறிப்படர்தற்கு நடும் கொம்பு. வேதநறுங் கொடிபடருங் கொழுகொம்பே (செவ்வந்திப்பு. திருமலைச்ச. 9). 2. Help, support, aid; பற்றுக்கோடு. 3. Central upright branch of a tree; மரத்தின் நடுக்கொம்பு. (W.)

கொழுங்கிரி koḻuṅkiri, *n.* Jasmine; மல்லிகை. (மலை.)

கொழுச்சிராய் koḻu-c-cirāy, *n.* < கொழு³ +. Piece of wood which holds the share to the plough; கலப்பையிற் கொழுவை இணைக்கும் மரத்துண்டு. (J.)

கொழுஞ்சி koḻuñci, *n.* < கொழு-மை. See கொழிஞ்சி. (மலை.)

கொழுத்தட்டு-தல் koḻu-t-taṭṭu-, *v. intr.* < கொழு³ +. To sharpen the ploughshare; கொழுவைக் கூர்மையாக்குதல். (W.)

கொழுத்தமுரல் koḻutta-mural, *n.* Half-beak, attaining 7 in. in length, *Hemirhamphus limbatus;* 7 அங்குலநீளமுள்ள நீருவன்கோலாமீன்.

கொழுத்தாடுபிடிக்கை koḻuttāṭu-piṭikkai, *n.* < கொழுத்த + ஆடு +. Game in imitation of a fox capturing a sheep in a flock; நரி ஆட்டு மந்தையிற் புகுந்து பிடிப்பதுபோலும் விளையாட்டு.

கொழுத்தாடை koḻuttāṭai, *n.* < id. + perh. ஆடை. Head of a sugarcane stalk; கரும்பின் நுனிப்பகுதி. *Colloq.*

கொழுது-தல் koḻutu-, *5 v. tr.* 1. To peck, drill through, hollow out, as beetles in wood and flowers; துளைத்தல். கொழுதி வண்டிமிருந் தாரான் (நைடத. சுயம்வர. 155). 2. To pluck, cull out, pick off; பறித்தல். ஞாழ லஞ்சினைத் தாழிணர் கொழுதி (நற். 106). 3. To rend, tear; கிழித்தல். பௌவநீர்ச் சாய்க்கொழுதி (கலித். 76).

கொழுந்தன் koḻuntaṉ, *n.* < கொழுநன். 1. Husband; கணவன். கொழுந்தா வென்றாள் (கம்பரா. பிராட்டி. 9). 2. Husband's younger brother; கணவனுடைய இளைய சகோதரன். *Colloq.*

கொழுந்தன்பு koḻuntaṉpu, *n.* < கொழு-மை +. Tenderness, doting affection; இளகிய அன்பு. கொழுந்தன்பு செய்தருள் கூர (திருமந். 280).

கொழுந்தி koḻunti, *n.* prob. கொள்-. 1. Wife's sister; மனைவியின் சகோதரி. 2. Brother's wife; சகோதரன் மனைவி. எம்பி நின்றம்பி நீதோழன் மங்கைகொழுந்தி (கம்பரா. காட்சிப். 23).

கொழுந்தியாள் koḻuntiyāḷ, *n.* See கொழுந்தி.

கொழுந்து¹-தல் koḻuntu-, *5 v. intr.* < கொழுந்து. 1. To burn in a flame; to be ablaze; to be kindled, as fire; சுவாலித்தல். (W.) 2. To be heated, as iron by fire; காய்ச்சப்படுதல். எரியழற் கொழுந்தும் வேலுயத் திட்டென (இரகு. யாகப். 27). 3. To be burnt, scorched, as by the sun; வெயிலிற் கருகுதல். (W.)

கொழுந்து[2] koluntu, *n.* prob. கொழு-மை. 1. [M. *koluntu.*] Tender twig, tendril; tender leaf, shoot, sprout; இளந்தளிர். எற்ப விரீஇய விலையுங் கொழுந்தும் (பெருங். இலாவாண. 2, 143). 2. Anything young; இளமையானது. பிறைக் கொழுந்து (நைடத. அன். தூது. 12). 3. Tenderness; மென்மை. வாழை . . . மடல்போலக் கொழுந்தள செவி (சூடா. 12, 150). 4. Scion, shoot of plant cut for planting; நடுதற்குரிய பதியம். (W.) 5. Southernwood. See மருக்கொழுந்து. கொழுந்து செவ்வந்தி (கந்தபு. இந்திரன்க. 42). 6. Betel pepper. See வெற்றிலை. (J.) 7. cf. *kuṣ.* Flame; சுவாலை. அழற்கொழுந்து (கந்தபு. இரண்டா. சூர. 359). 8. Front rank, as of an army; சேனை முதலியவற்றின் முன்னிரை. சேனையின் கொழுந்து போய்க் கொடிமதின் மிதிலையி னெல்லை கூடிற்றே (கம்பரா. எழுச்சி. 24). 9. Ends, tips, as of a *kavari;* சாமரை முதலியவற்றின் நுனி. கொழுந்துடைய சாமரை (கம்பரா. கோலங். 25).

கொழுந்துக்கால் koluntu-k-kāl, *n.* <கொழுந்து+. Stick or pole planted to support the betel creeper; வெற்றிலைக்கொடிக்கு நடும் கொழுகொம்பு. (W.)

கொழுந்துநீரோட்டம் koluntu-nīr-ōṭṭam, *n.* <id.+. See கோலம்[2], 2.

கொழுந்துபதி-த்தல் koluntu-pati-, *v. intr.* <id.+. To plant a stoloniferous stem; கிளைத்தும்படி கொடியை நடுதல்.

கொழுந்துவிடு-தல் koluntu-viṭu-, *v. intr.* <id.+. 1. To send forth tender shoots; தளிர்விடுதல். கொழுந்துவிட் டோடிப் படரும் (திவ். இராமானுசநூற். 61). 2. To blaze up; to shoot up, as flames; சுவாலைவிடுதல். கொழுந்துவிட்டெரியும் பசித்தழல் (குசேலோ. குசேலர்மேல்கட. 52).

கொழுந்தோடு-தல் koluntōṭu-, *v. intr.* <id.+. See கொழுந்துவிடு-, 1. படர்ந்து கொழுந்தோடுதென் மனப்பந்தலிலே (தனிப்பா. ii. 137, 347).

கொழுநன் kolunaṉ, *n.* prob. கொள்-. 1. Husband; கணவன். தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் (குறள், 55). 2. Master. lord; இறைவன். (சூடா.)

கொழுநீர் kolu-nīr, *n.* <கொழு-மை+. 1. Abundance of water; பெருகிய நீர். கோமுகி யென்னுங் கொழுநீ ரிலஞ்சி (மணி. 11, 39). 2. Highly fermented liquor, as toddy; மிகப்புளித்த கள். (W.) 3. Sweat; வியர்வை. (யாழ். அக.)

கொழுப்பிறக்கு-தல் koluppiṟakku-, *v. tr.* <கொழுப்பு+இறக்கு-. To reduce or lower one's pride; செருக்கடக்குதல்.

கொழுப்பு koluppu, *n.* <கொழு-. [T. *kovvu*, K. *kobbu*, M. *koluppu.*] 1. Fulness, richness; செழிப்பு. (பிங்.) 2. Fat, grease, lard; நிணம். (பிங்.) 3. Plumpness, corpulency, fleshiness; புஷ்டி. கழிப்புநீ ராரலொடு கொழுப்பிருக் கொளீஇய (பெருங். மகத. 4, 42). 4. Thickness in consistency, as sandal paste; குழம்பாயிருக்கை. 5. Sauciness, impudence; திமிர். 6. State of soil being too rich to be productive; நிலத்தின் மதர்ப்பு.

கொழுப்புக்கட்டி koluppu-k-kaṭṭi, *n.* <கொழுப்பு+. Fatty tumour; நிணக்கழலை. (இங். வை. 306.)

கொழுப்புக்கல் koluppu-k-kal, *n.* <id. +. A soft red stone; சிவப்புக்கல்வகை. (W.)

கொழுப்புக்குடல் koluppu-k-kuṭal, *n.* <id.+. Small intestine of sheep or goats; ஆட்டின் சிறுகுடல். (W.)

கொழுப்புச்சதை koluppu-c-catai, *n.* <id.+. Obesity, flabbiness; ஊழற்சதை. (M.L.)

கொழும்பு kolumpu, *n.* cf. குழம்பு. Colombo, modern capital of Ceylon; இலங்கைத் தீவின் தலைநகரம். கயக்காவி நாறுங் கொழும்பிற் ப்ரசண்டா (தமிழ்நா. 146).

கொழும்புக்கிழங்கு kolumpu-k-kilaṅku, *n.* <கொழும்பு+. See கொழும்புவேர். (J.)

கொழும்புப்பாக்கு kolumpu-p-pākku, *n.* <id.+. See கொட்டைப்பாக்கு.

கொழும்புவேர் kolumpu-vēr, *n.* <id.+. Columbo root, *Jateorrhiza calumba;* ஒருவகைக் கொடி. (L.)

கொழுமரம் kolu-maram, *n.* <கொழு-மை +. Sage-leaved alangium. See செம்மரம். (மலை.)

கொழுமிச்சை kolumiccai, *n.* prob. id.+ cf. எலுமிச்சை. 1. Bitter orange. See நாரத்தை. (மலை.) 2. Sylhet orange, *Citrus aurantium-nobilis-chrysocarpa;* கிச்சிலிவகை. (W.)

கொழுமீதி kolu-mīti, *n.* <கொழு[3]+. The owner's share of the produce of a field after deducting the Government dues; சர்க்கார்தீர்வை போக நிலச்சுவான்தார் அடையும் நிலவருமானம். (W. G.)

கொழுமீன் kolu-mīṉ, *n.* <கொழு[2]+. [M. *kolumīn.*] A salt-water fish; கழிமீன்வகை. இருங்கழிவாய்க் கொழுமீ னுண்ட வன்னங்களே (திருக்கோ. 182).

கொழுமுதல் kolu-mutal, *n.* <கொழு-+. Stout stem of a tree; மரத்தின் பருத்த அடிப்பாகம். கொழுமுதற் றெங்கொடு (பெருங். மகத. 19, 40).

கொழுமை koḻumai, *n.* 1. Plumpness, luxuriance, richness, fertility; செழுமை. (பிங்.) 2. Freshness, as of shoots; இளமை. (சிலப். 4, 39.) 3. Beauty; அழகு. (பொருந. 26.) 4. Colour, agreeable colour; நிறம். (திவா.) 5. Coolness; குளிர்ச்சி. (மதுரைக். 406.)

கொழுமோர் koḻu-mōr, *n.* <கொழு³+. [M. *koḻumōr.*] Buttermilk heated by thrusting a hot iron spoon into it, and given to children when affected with sudden fright; குழந்தைகள் திடீரென்று கொண்ட அச்சத்தை நீக்குவதற்குக் காய்ச்சிய கொழுவைத் தோய்த்துக் கொடுக்கும் மோர். *Loc.*

கொழுலாபம் koḻu-lāpam, *n.* <id.+. Net income or gain from agriculture; விவசாயத்தில் கிடைக்கும் ஊதியம். *Loc.*

கொழுவுகதவு koḻuvu-katavu, *n.* <கொளுவு-+. Door with hinges; கீற்கதவு. *Loc.*

கொழுவுகோல் koḻuvu-kōl, *n.* See கொழுகொம்பு, 1. கொழுவுகோலுறுக் கொடியென (வரத. பாகவத. நாரசிங். 64).

கொள்¹(ளு)-தல் koḷ-, *2 v.* [T. *konu*, K. M. *koḷ.*] *tr.* 1. To seize, grasp; கையால் எடுத்துக்கொள்ளுதல். கொண்ட வாளொடும் (சீவக. 430). 2. To receive, as a gift; பெறுதல். நல்லா றெனினுங் கொளறீது (குறள், 222). 3. To buy, purchase; விலைக்கு வாங்குதல். கோதையினுங்கொள்வார் (நைடத. நகரப். 18). 4. To acquire, take possession of, occupy; உரிமையாகக் கொள்ளுதல். விடலையைக் காணவோடி . . . வீதிகொண்டார் (சீவக. 457). 5. To marry; விவாகம் செய்தல். தாங்கொண்ட மனையாளை (நாலடி, 3). 6. To abduct, carry off; கவர்தல். மனையாளை மாற்றார்கொள (நாலடி, 3). 7. To contain, hold; தன்னுட்கொள்ளுதல். சிதரிக் கண்கொண்ட நீர் (நாலடி, 394). 8. To draw in, gather up; முகத்தல். குணகடல் கொண்டு குடகடன் முற்றி (மதுரைக். 238). 9. To learn; கற்றுக்கொள்ளுதல். கொள்ளுநர் கொள்ள (கல்லா. 11, 21). 10. To consider, think; கருதுதல். யார்க்குங் கொடுத்தியெனக் கொள்கின்றிலம் (இலக். வி. 650, உரை). 11. To regard, esteem; நன்குமதித்தல். கொளப்பட்டே மென்றெண்ணி (குறள், 699). 12. To celebrate; கொண்டாடுதல். தண்பதங் கொள்ளுந் தலைநாட் போல (சிலப். 6, 160). 13. To accept, approve; அங்கீகரித்தல். உய்ஞ்சனிருத்தலு முலகங் கொள்ளுமோ (கம்பரா. உருக்கா. 17). 14. To adhere to, observe; மேற்கொள்ளுதல். குடிப்பிறந்தார் குன்று வொழுக்கமாக் கொண்டார் (நாலடி, 143). 15. To put up with, endure; மனம் பொறுத்தல். (தொல். பொ. 147, உரை, பக். 658.) 16. To resemble; ஒத்தல். வண்டினம் யாழ் கொண்ட கொளை (பரிபா. 11, 125).—*intr.* 1. To suit, befit; பொருந்துதல். கொள்ளாத கொள்ளாதுலகு (குறள், 470). 2. To strike, hurt; உடலிற் காயம்படுதல். கல்லுக் காலிற் கொண்டது. *Loc.*—*aux.* An auxiliary which makes a verb reflexive, as in அடித்துக்கொண்டான்; தற்பொருட்டில் வரும் ஒரு துணைவினை.—*expl.* An expletive added to neg. imp. sing. verb, as in அஞ்சாதேகொள்; எதிர்மறை ஏவலொருமை வினையொடு சேர்க்கப்படும் ஓர் அசை. (கலித். 115, உரை.)

கொள்² koḷ, *n.* 1. cf. *kulattha.* Horse-gram, a shrub, *Dolichos uniflorus;* காணம். (பிங்.) 2. Umbrella thorn-babul. See குடைவேல். உண்ணுவ ரகொடு கொள்வித்தின்று (பு. வெ. 6, 26, கொளு). 3. A small measure of weight used in ancient times; முற்காலத்து வழங்கிய சிறு நிறையளவு. (தொல். எழுத். 164, உரை.)

கொள்கலம் koḷ-kalam, *n.* <கொள்-+. 1. Receptacle; பண்டம் இடுங்கலம். இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ (குறள், 1029). 2. Basket made of palm leaf or bamboo; பனையோலை மூங்கில் இவற்றால் ஆகிய பிழா. (சது.)

கொள்கிரயம் koḷ-kirayam, *n.* <id.+. 1. See கொள்முதல். 2. Purchase, anything purchased; விலைக்குக்கொண்ட பொருள். (J.)

கொள்கை koḷkai, *n.* <id. 1. Taking, accepting; பெறுகை. பலியிடிற் கொள்கை பழுது (சைவச. பொது. 388). 2. Opinion, notion; principle; tenet, doctrine; கோட்பாடு. குடிப்பிறப்பாளர்தங் கொள்கையிற் குன்றார் (நாலடி, 141). 3. Observance, vow; விரதம். தாவில் கொள்கை (திருமுரு. 89). 4. Conformity to moral principles, good conduct; ஒழுக்கம். குலந்தீது கொள்கை யழிந்தக்கடை (நான்மணி. 94). 5. Event, happening; நிகழ்ச்சி. புகுந்த கொள்கை யுடனுறைந் தறிந்தானென்ன (கம்பரா. முதற்போர். 132). 6. Quality, nature, build; இயல்பு. கொம்பி னின்று நடங்குறு கொள்கையார் (கம்பரா. கிளை. 10). 7. Pride; செருக்கு. தங்கிய கொள்கைத் தருநிலைக் கோட்டத்து (சிலப். 5, 145). 8. Liking, fondness, regard, attachment, intimacy; நட்பு. (J.) 9. A kind of vessel; பாத்திரவகை. (I. M. P. Pd. 300.)

கொள்கையிடம் koḷkai-y-iṭam, *n.* <கொள்கை+. Monastery, mutt; தவச்சாலை. கோலங்குயின்ற கொள்கையிடங்களும் (மணி. 28, 67).

கொள்கொம்பு koḷ-kompu, *n.* <கொள்-+. See கொழுகொம்பு. கொள்கொம் பொடியக் கொடி வீழ்ந்ததுபோல் (கம்பரா. சடாயுவு. 130).

கொள்முதல் koḷ-mutal, *n.* <id.+. Cost price; வாங்கின விலை.

கொள்வனவு koḷvaṉavu, *n.* See கொள்வினை. (W.)

கொள்வனை koḷ-vaṉai, *n.* <கொள்- + perh. வினை. 1. Buying; borrowing; taking, receiving; கொள்ளுகை. *Colloq.* 2. Taking in marriage; பெண் கொள்ளுகை.

கொள்வனைகொடுப்பனை koḷvaṉai-koṭuppaṉai, *n.* <கொள்வனை +. 1. Borrowing and lending; கொடுக்கல் வாங்கல். 2. Giving and taking in marriage, intermarrying; பெண்ணைக் கொடுத்துப் பெண்ணைவாங்கும் கலியாண சம்பந்தம்.

கொள்விலை koḷ-vilai, *n.* <கொள்- +. See கொள்முதல். *Colloq.*

கொள்விலைக்காணி koḷ-vilai-k-kāṇi, *n.* <id. +. Land acquired by purchase; விலைக்கு வாங்கின நிலம். (J.)

கொள்வினை koḷ-viṉai, *n.* See கொள்வனை. *Colloq.*

கொள்வோன் koḷvōṉ, *n.* <கொள்-. 1. Buyer, one who accepts anything; வாங்குவோன். 2. Student, pupil; கற்போன். *கொள்வோன் கொள் வகை யறிந்து* (நன். பொது. 36). 3. (Gram.) Dative case; நான்காம் வேற்றுமை. *பலவு மறைந்த னர் கொள்வோன்* (இலக். கொத். 36).

கொள்ள koḷḷa, <id. *adv.* 1. More, further on; இன்னும். *கொள்ளக்கொடு.* (J.) 2. As much as required, in abundance; நிரம்ப. *உணவு கொள்ளக் கிடைத்தது.*—*v. pple.* An auxiliary used, for the sake of emphasis, along with another verbal participle denoting reason or time; காரணப்பொருளிலேனும் காலப்பொருளிலேனு முள்ள செயவெனெச்சத்துடன் கூடிவருந் துணைவினை. *நான் போகக்கொள்ளக் காரியம் நடந்தது. நான் வரக் கொள்ள மழைபெய்தது.* (W.)

கொள்ளட்டு koḷḷaṭṭu, *n.* Ciliate-leaved yellow horse-gram, *Dolichos ciliatus;* செடிவகை. (W.)

கொள்ளப்படு-தல் koḷḷa-p-paṭu-, *v.* <கொள்- +. *tr.* To take to heart; மனத்துக் கொள்ளுதல். *கொள்ளப்படாது மறப்ப தறிவிலென் கூற்றுக்களே* (திருக்கோ. 87).—*intr.* 1. To be held in esteem; நன்கு மதிக்கப்படுதல். *கொளப்பட்டே மென்றெண்ணி* (குறள், 699). 2. To be approved; அங்கீகரிக்கப்படுதல்.

கொள்ளம் koḷḷam, *n.* perh. கொள்-. Mud, slime; குழைசேறு. *பாசடை பூத்த கொள்ளம் புகுந்து* (கல்லா. 73, 17). (பிங்.)

கொள்ளற்பாடு koḷḷaṟ-pāṭu, *n.* <id. +. Respectability, worthiness; மேன்மை. (J.)

கொள்ளாக்கொள்ளி koḷḷā-k-koḷḷi, *n.* <id. + ஆ neg. +. A person with insatiable hunger for food; தணியாத உண்டிவிருப்புமுள்ளவன். *Loc.*

கொள்ளாகொள்ளை koḷḷā-koḷḷai, *n.* Redupl. of கொள்ளை. Superabundance, plenty; மிகுதி. (J.)

கொள்ளாதசிறை koḷḷāta-ciṟai, *n.* <கொள்- + ஆ neg. +. Slave-like, assiduous person; அடிமையைப்போல் உழைப்பவ-ன்-ள். (W.)

கொள்ளாமை koḷḷāmai, *n.* <id. + id. (W.) 1. Excessiveness, pre-eminence in good or evil; மிகை. 2. Disagreement, discordance, enmity; பகை.

கொள்ளார் koḷḷār, *n.* <id. + id. 1. Envious persons; மனம் பொறாதவர். *பொருறாரைக் கொள்ளாரென்பவாகலின்* (தொல். பொ. 147, உரை). 2. Enemies, foes; பகைவர். *கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும்* (தொல். பொ. 67).

கொள்ளி koḷḷi, *n.* prob. id. 1. [K. M. Tu. *koḷḷi.*] See கொள்ளிக்கட்டை. *புனவர் கொள்ளியில்* (ஐங்குறு. 295). 2. Fire; நெருப்பு. *கைக்கொள் கொள்ளியர்* (நெடுநல். 8). 3. Jealous, quick-tempered person; பொறாமையும் முன்கோபமுமுள்ளவன். 4. One who kindles strife; கலகம் மூட்டுபவன். *Loc.* 5. Son; மகன். *Tinn.* 6. Buffalo-tongue milk-hedge. See எருமைநாக்கி. (மலை.)

கொள்ளிக்கட்டை koḷḷi-k-kaṭṭai, *n.* <கொள்ளி +. Firebrand; எரிகட்டை.

கொள்ளிக்கட்டைத்தேக்கு koḷḷi-k-kaṭṭai-t-tēkku, *n.* Woolly-leaved firebrand teak. See பீநாறி. (L.)

கொள்ளிக்கண் koḷḷi-k-kaṇ, *n.* <கொள்ளி +. Evil eye; தீய கண்.

கொள்ளிக்கரப்பான் koḷḷi-k-karappāṉ, *n.* <id. +. A skin disease of children characterised by the development of blebs upon different parts of the body, *Pemphigus;* குழந்தைகட்கு வரும் கரப்பான்வகை.

கொள்ளிக்கருவாடு koḷḷi-k-karuvāṭu, *n.* <id. +. A kind of salted and dried fish; ஒரு வகைக் கருவாடு. (பதார்த்த. 929.)

கொள்ளிக்கால் koḷḷi-k-kāl, *n.* <id. +. 1. The defect of a horse in having one of its legs white; ஒற்றைக்கால் வெளுத்திருத்தலாகிய குதிரைக் குற்றம். *நஞ்சபாதங் கொள்ளிக்கால் வெள்ளிக் கண்* (திருவாத. பு. குதிரையிட். 35). 2. Unlucky foot; துரதிருஷ்டமுடைய கால். *அவன் கொள்ளிக் காலுள்ளவன்.*

கொள்ளிக்கொட்டான் koḷḷi-k-koṭṭāṉ, *n.* <id. +. See கொள்ளியெறும்பு. (W.)

கொள்ளிசொருகு-தல் koḷḷi-coruku-, *v. intr.* <id. +. 1. To insert a firebrand, as an

incendiary, in the roof of a house; தீவைத்தல். (J.) 2. To cause or bring about another's ruin; கேடுசெய்தல். (W.)

கொள்ளிடம் koḷḷiṭam, *n.* perh. *கொள்-* + *இடம்.* The Coleroon, a branch of the Kāvēri; காவிரியினின்று பிரியும் ஒருநதி. *குங்குமங்களுந்திவருங் கொள்ளிடத்தின்* (*தேவா.* 210, 6).

கொள்ளித்தேள் koḷḷi-t-tēḷ, *n.* <*கொள்ளி* +. A kind of scorpion causing intense pain by its sting; கடுமையாகக் கொட்டுந் தேள்வகை. *வெங்கொள்ளித் தேள்போன்ற வினை* (*அருட்பா,* ii, *எழுத்தறி.* 28).

கொள்ளிபெறு-தல் koḷḷi-peṟu-, *v. intr.* <id. +. To take fire from a temple for lighting the funeral pyre of a dancing-girl in temple service; இறந்த தேவதாசியின் தகனத்திற்காகக் கோயிலினின்று நெருப்புப்பெறுதல். *கொள்ளி பெற்றவர்களாயிருக்கிற எம்பெருமானடியாளுக்கு* (*கோயிலொ.* 94).

கொள்ளிமண்டிலம் koḷḷi-maṇṭilam, *n.* <id. +. See கொள்ளிவட்டம். *கொள்ளிமண்டிலம் போல் . . . திரிந்திடுவே* (*சீவக.* 1771).

கொள்ளிமாலை koḷḷi-mālai, *n.* <id. +. Wreath of flowers laid upon a corpse; பிணத்திற்கு அணியும் மாலை. *கொள்ளிமாலையுங் கொடிபடு கூறையும்* (*மணி.* 6, 94, *உரை*).

கொள்ளியம் koḷḷiyam, *n.* 1. Marsh-samphire. See உமரி. (*மலை.*) 2. Indian beech. See புன்கு.

கொள்ளியெறும்பு koḷḷi-y-eṟumpu, *n.* <*கொள்ளி* +. A species of small ant causing intense pain by its bite; கடியால் மிக்க கடுப்பை உண்டாக்கும் சிற்றெறும்புவகை. *Colloq.*

கொள்ளிவட்டம் koḷḷi-vaṭṭam, *n.* <id. +. Imaginary circle in the air caused by swinging round a firebrand; கொள்ளியைச் சுழற்றுதலிற்றோன்றும் வட்டவடிவு. *கறங்கோலை கொள்ளி வட்டம்* (*திருமங்.* 2313).

கொள்ளிவாய்க்குணங்கு koḷḷi-vāy-k-kuṇaṅku, *n.* <id. +. See கொள்ளிவாய்ப்பிசாசு. *கொள்ளிவாய்க்குணங் குள்ளுதோ றிவறிய* (*கல்லா.* 95, 11).

கொள்ளிவாய்ச்சர்ப்பம் koḷḷi-vāy-c-carp-pam, *n.* <id. +. See கொள்ளிவிரியன். (W.)

கொள்ளிவாய்ப்பிசாசு koḷḷi-vāy-p-picācu, *n.* <id. +. Jack-o'-lantern, *Ignis fatuus;* வாயில் நெருப்புடையதாகக் கருதப்படும் பேய் வகை.

கொள்ளிவாய்ப்பேய் koḷḷi-vāy-p-pēy, *n.* <id. +. See கொள்ளிவாய்ப்பிசாசு. *கொள்ளிவாய்ப் பேய் காக்குங் கோபுரமும்* (*கலிங்.* 90).

கொள்ளிவாயெறும்பு koḷḷi-vāy-eṟumpu, *n.* <id. +. See கொள்ளியெறும்பு. (W.)

கொள்ளிவாலி koḷḷi-vāli, *n.* <id. +. Cow or dog with dark body and white tail; கறுப்புடலும் வெள்ளைவாலுமுள்ள பசு அல்லது நாய். (J.)

கொள்ளிவிரியன் koḷḷi-viriyaṉ, *n.* <id. +. Russell's viper, *Vipera russellii;* விரியன் பாம்புவகை.

கொள்ளிவீங்கு koḷḷi-vīṅku, *n.* perh. id. +. Malignant sore throat of cattle; மாட்டுக்கு வரும் தொண்டைநோய் வகை. (M. Cm. D. [1887] 248.)

கொள்ளிவை-த்தல் koḷḷi-vai-, *v. intr.* <id. +. 1. To set fire to; நெருப்புவைத்தல். 2. To light the funeral pyre; to perform obsequies; தகனக்கிரியை செய்தல். 3. To injure a person, ruin a family; கேடுவிளைத்தல். 4. To kindle strife; கலகமூட்டுதல்.

கொள்ளு koḷḷu, *n.* [M. *koḷḷu.*] See கோள்.

கொள்ளுக்காய்வேளை koḷḷu-k-kāy-vēḷai, *n.* Purple wild indigo, s. sh., *Tephrosia purpurea;* செடிவகை. (L.)

கொள்ளுநர் koḷḷunar, *n.* <*கொள்-.* 1. Buyers; கொள்வோர். 2. Learners; கற்போர். *கொள்ளுநர் கொள்ளக் குறையா தாதலின்* (*கல்லா.* 11, 21).

கொள்ளுப்பாட்டன் koḷḷu-p-pāṭṭaṉ, *n.* perh. *கோ*[3] +. cf. *கொப்பாட்டன்.* Great-grandfather; பாட்டனுக்குத் தந்தை.

கொள்ளுப்பேரன் koḷḷu-p-pēraṉ, *n.* perh. id. +. Great-grandson; பேரன் மகன்.

கொள்ளெனல் koḷ-ḷ-eṉal, *n.* 1. Onom. expr. signifying the sound of a drum or other musical instruments; பறை முதலியவற்றின் ஒலிக்குறிப்பு. *கொள்ளென் குரலொடு கோட்பறை கொளீஇ* (*பெருங். வத்தவ.* 5, 62). 2. Expr. signifying abundance, plenty; மிகுதிக்குறிப்பு. *கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ் செல்வம்* (*திவ். திருவாய்.* 4, 9, 4).

கொள்ளை koḷḷai, *n.* <*கொள்-.* 1. [T. *kolla,* K. *koḷḷe,* M. *koḷḷa.*] Robbery, plunder, pillage; சூறைகொள்ளுகை. 2. [T. *kolla.*] Excess, abundance, copiousness, plenty; மிகுதி. *கொள்ளைமா மதத்த நால்வாய்க் குஞ்சரம்* (*பாகவ.* 1, 5, 14). 3. Crowd, throng; கூட்டம். *கொள்ளையிற் பலர் கூறலும்* (*கந்தபு. விண்குடி.* 14). 4. Plague, pestilence, epidemic; பெருவாரிநோய். 5. Hindrance, obstacle, difficulty; தடை. *அதைச்செய்ய உனக்கு என்ன கொள்ளை?* 6. Price; விலை. *சில்பத வுணவின் கொள்ளை சாற்றி* (*பெரும்பாண்.* 64). 7. Use, profit; பயன். *நானிருந்தென்ன கொள்ளை* (*இராமநா. பாலகா.* 9).

கொள்ளைக்காய்ச்சல் koḷḷai-k-kāyccal, n. <கொள்ளை +. Infectious fever; விஷசுரம்.

கொள்ளைக்காரன் koḷḷai-k-kāraṉ, n. <id. +. [K. kollegāra.] Plunderer, dacoit, robber; கொள்ளையடிப்பவன்.

கொள்ளைகொடு-த்தல் koḷḷai-koṭu-, v. tr. <id.+. To be robbed of; பறிகொடுத்தல்.

கொள்ளைகொள்(ளு)-தல் koḷḷai-koḷ-, v. tr. <id.+. 1. To plunder; கொள்ளையடித்தல். வேற்றுப் புலத்தைக் . . . கொள்ளைகொண்ட தொழிலை (பு. வெ. 3, 15, கொளு, உரை). 2. To engross the mind or affections, captivate; வசீகரித்தல். என் மனத்தைக் கொள்ளைகொண்டவள்.

கொள்ளைசாற்று-தல் koḷḷai-cāṟṟu-, v. tr. <id.+. See கொள்ளையூட்டு-.

கொள்ளைநோய் koḷḷai-nōy, n. <id.+. Epidemic, pestilence; பெருவாரிநோய்.

கொள்ளைபோ-தல் koḷḷai-pō-, v. intr. <id.+. 1. To be wasted in all ways, as wealth; பொருள்முதலியன பலவாறாக அழிபடுதல். கொள்ளை போகின்ற செல்வம் (கம்பரா. மாரீச. 77). 2. To be plundered; களவுபோதல்.

கொள்ளையடி-த்தல் koḷḷai-y-aṭi-, v. tr. <id.+. To plunder, sack, loot, pillage; சூறையாடுதல்.

கொள்ளையாடு-தல் koḷḷai-y-āṭu-, v. tr. <id.+. See கொள்ளையடி-. கொள்ளையாட்டயர் கொடியகோ லரசனை (காஞ்சிப்பு. பன்னிரு. 336).

கொள்ளையூட்டு-தல் koḷḷai-y-ūṭṭu-, v. tr. <id.+. To give over to plunder; கொள்ளை கொள்ளும்படி விடுதல். வேற்றுப்புலத்தைக் கொள்ளை யூட்டி (பு. வெ. 3, 15, கொளு, உரை).

கொள்ளைவை-த்தல் koḷḷai-vai-, v. tr. <id.+. See கொள்ளையடி-. Loc.

கொளகொள-த்தல் koḷa-koḷa-, 11 v. intr. <கொளகொளெனல். To be soft and loose, as an over-ripe fruit; இறுகலான தன்மைமாறி இளகிப் போதல். பழம் கொளகொளத்துப் போயிற்று.

கொளகொளெனல் koḷa-koḷeṉal, n. 1. Onom. expr. of (a) gurgling sound; ஓர் ஒலிக் குறிப்பு. (சூடா.): (b) speaking indistinctly and foolishly; குழறுதற்குறிப்பு. 2. Expr. of being loose and soft, as an over-ripe fruit; பதமாறி இளகியிருத்தற் குறிப்பு.

கொளபாத்திரம் koḷa-pāttiram, n. cf. gōla+. Cylindrical drinking-vessel; பஞ்சபாத்திரம். Vaiṣṇ. Brah.

கொளல்வினா koḷal-viṉā, n. <கொள்-+. Question implying a desire to obtain a thing, as 'Do you deal in carpets?'; ஒரு பண்டத்தைக் கொள்ளும் நோக்கத்தோடு கேட்கும் கேள்வி. (நன். 385, உரை.)

கொளாஅல் koḷāal, n. <id. Application, as of a grammatical rule; கொள்ளச்செய்கை. கொள்வழிக் கொளாஅல் (தொல். பொ. 307).

கொளு koḷu, n. <id. 1. Gist, as of a poem; செய்யுள் முதலியவற்றின் கருத்து விளக்கும் சொற்றொடர். (பு. வெ.) 2. Rib; பழுவெலும்பு. கொளுமிடை வீணைதண்டு (ஞானா. 7, 14). 3. Fastening-hook of a curtain; உருவுதிரையை மாட்டுங் கருவி. கஞ்சிகைக் கொளுவொடு கயிற்றுநிலை யமைத்து (பெருங். உஞ்சைக். 58, 52).

கொளுக்கி koḷukki, n. <கொளுவு-. [T. koliki.] Hook, clasp, hasp, staple, bow of a key, eye of a hook; கொக்கி. (J.)

கொளுகொம்பு koḷu-kompu, n. <கொள்-+. See கொழுகொம்பு. கொளுகொம்பிலாத தனிக் கொடிபோல் (கந்தரலங். 99).

கொளுஞ்சி koḷuñci, n. See கொழிஞ்சி, 1. (பதார்த்த. 683.)

கொளுத்து[1]-தல் koḷuttu-, 5 v. Caus. of கொள்-. tr. 1. To cause to hold; to apply; கொள்ளச்செய்தல். பூநாற்றத்தவாகிய புகையைக் கொளுத்தி அமைத்த ஊனையும் (புறநா. 14, உரை). 2. To explain; விளக்குதல். விதியோர் கொளுத்திய வீரியமுடையது (பெருங். உஞ்சைக். 38, 294). 3. To teach, impart; அறிவுறுத்துதல். சேணெறி செல்லக் கோணெறி கொளுத்தி (பெருங். உஞ்சைக். 58, 70). 4. To kindle, as a light; to fire, as a rocket; to set on fire, inflame, ignite; தீப் பற்றவைத்தல். 5. To play, as on a lute; வீணைமுதலியன வாசித்தல். நரம்பினுடைய கருவியைக் கொளுத்து மாக்கள் (சூடா. 2, 39). 6. To cause to enact, as a drama; நாடகமுதலியவற்றை நடப்பித்தல். கூடிய நெறியின கொளுத்துங் காலை (சிலப். 3, 17). 7. To reprove sharply; கண்டித்தல். நான் அவனை நன்றாய்க் கொளுத்திவிட்டேன். (W.) 8. To instigate quarrel, kindle strife; சண்டை மூட்டுதல். (W.) 9. To slander, calumniate; தூற்றுதல். (W.)—intr. 1. To burn; to scorch, as the sun; வெயில் கடுமையாகக் காய்தல். 2. To accomplish a task admirably; வியக்கும்படி காரியம் புரிதல். Colloq.

கொளுத்து[2] koḷuttu, n. <கொளுத்து-. [M. kolutlu.] 1. Joint of the body; உடற்சந்து. (திவா.) 2. Clasp of a jewel; ஆபரணங்களின் பூட்டு. கொளுத்துச்செறிந்த முன்கைக்கணிந்த கடகத் துடனே (புறநா. 150, உரை).

கொளுந்து-தல் koḷuntu-, 5 v. intr. <கொள்-. To burn, to be kindled, as fire; தீப் பற்றுதல். தீக்கொளுந்தினவுந் தெரிகின்றிலர் (கம்பரா. இலங்கையெரி. 5).

கொளுவி koḷuvi, n. <கொளுவு-. Hook, clasp; கொக்கி. (J.)

கொளுவிக்கொள்(ளு)-தல் koḷuvi-k-koḷ-, v. intr. <id.+. To become entangled or intertwined; பின்னிக்கொள்ளுதல். சங்கிலி கொளுவிக் கொண்டது. (W.)

கொளுவிப்பிடி-த்தல் koḷuvi-p-piṭi-, v. <id.+. tr. 1. To hook in; மாட்டிவிடுதல். (W.) 2. To entangle, catch, ensnare; வசப்படுத்துதல். (W.)—intr. To prosecute a law-suit; வழக்குத் தொடுத்தல். (R.)

கொளுவியிழு-த்தல் koḷuvi-y-iḻu-, v. tr. <id.+. (W.) 1. To challenge, provoke to a quarrel; சண்டைக்கிழுத்தல். 2. To entangle or bring one into trouble or difficulty; துன்பத்துக்கு உள்ளாக்குதல்.

கொளுவிவிடு-தல் koḷuvi-viṭu-, v. tr. <id.+. (W.) 1. To fasten on, as earrings; காதணி முதலியன பூட்டுதல். 2. To settle a person in trade, office, etc.; வேலையில் அமர்த்துதல். 3. To effect an unequal match; தகாத இடத்தில் மணம் புரிவித்தல். 4. To set by the ears; சண்டைமூட்டுதல்.

கொளுவு-தல் koḷuvu-, 5 v. Caus. of கொள்-. tr. 1. To cause to hold; கொள்ளச் செய்தல். மலைப்பெருவிற் பாம்புஞாண் கொளீஇ (புறநா. 55, 1). 2. To kindle, as fire; தீமூட்டுதல். தீக்கொளுவும் விடங்க (திருவாச. 6, 19). 3. To clasp, buckle up, hook on, lock; பூட்டுதல். அறிவென்னுந் தாள் கொளுவி (திவ். இயற். 3, 12). 4. To urge on, as a dog; தூண்டிவிடுதல். கதநாய் கொளுவுவென் (கலித். 144, 20). 5. To entangle, ensnare, inveigle; அகப்படுத்துதல். (W.) 6. To take into partnership; கூட்டுச்சேர்த்தல். (W.) 7. To put on, as sandals; செருப்பு முதலியன அணிதல். (J.) —intr. 1. To be engaged, as in an employment; வேலையில் அமர்தல். (W.) 2. To make an impression, as on the mind; மனத்திற் பதிதல். (W.) 3. To be ensnared, entrapped; சிக்குதல். (W.) 4. To contrive, manage by artifice or scheming; தந்திரஞ் செய்தல். (W.) 5. To have cramp, as in the bowels; to have a stitch, as in the sides; குடல் தூக்கிக்கொள்ளுதல். (J.)

கொளுவுகயிறு koḷuvu-kayiṟu, n. <கொளுவு-+. Loop of the tying-string of an ola book; ஏட்டின் கயிற்றின் முடிப்பு. (J.)

கொளை koḷai, n. <கொள்-. 1. Hold, as of a string in a bow; பிடிப்பு. நாரியின் கொளை நீக்கி (சீகாளத். பு. சிலந்தி. 57). 2. Determination; கோட்பாடு. கொளை தளராதவர் (கலித். 34, 17). 3. Result; பயன். தெளியெனக் கொண்டதன் கொளையன்றோ (கலித். 132, 17). 4. Melody; இசை. புரிநரம்பின் கொளை (பரிபா. 7, 77). 5. Beating time with hands or cymbals; கைமுதலியவற்றால் தாளமிட்டு ஒற்றறுக்கை. கொளை புணர் சீர்நரம்பு (சிலப். 17, ஒன்றன்பகுதி, 2). 6. Song; பாட்டு. படிக ணிமிழ் கொளை (பரிபா. 16, 12).

கொளையமை-த்தல் koḷai-y-amai-, v. tr. <கொளை+. To string the bow; வில்லை நாணேற்றுதல். கொடுவெஞ் சிலையைக் கொளையமைத்து (சீவக. 1659).

கொற்கை koṟkai, n. An ancient port formerly at the mouth of the Tāmiraparṇi in the Pāṇḍya kingdom; பாண்டிநாட்டில் தாமிரபர்ணியின் சங்கமுகத்தமைந்த பழைய துறைமுகப் பட்டினம். கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை (ஐங்குறு. 188).

கொற்சேரி koṟ-cēri, n. <கொல்²+. Blacksmiths' quarters; கொல்லர் வசிக்கும் இடம். வைகொண்ட ஊசி கொற்சேரியின் விற்று (திருக்கோ. 386).

கொற்றக்குடை koṟṟa-k-kuṭai, n. <கொற்றம்+. Umbrella, an emblem of royalty; அரசாங்கக் குடை. கொற்றக்குடையும் வெற்றி வேலும் (பெருங். உஞ்சைக். 57, 56).

கொற்றத்தேவி koṟṟa-t-tēvi, n. <id.+. Queen-consort; பட்டத்தரசி. கொற்றத்தேவி செற்றந் தீர்க்கும் பெற்றியர் (பெருங். வத்தவ. 14, 18).

கொற்றப்பெருங்கணி koṟṟa-p-peru-ṅ-kaṇi, n. <id.+. State astrologer; அரசாங்கச் சோதிடன். வெற்ற வேந்தன் கொற்றப் பெருங்கணி (பெருங். மகத. 22, 244).

கொற்றம் koṟṟam, n. prob. கொல்-. [M. koṟṟam.] 1. Victory, success; வெற்றி. கொற்றங் கொளக்கிடந்த தில் (குறள், 583). 2. Heroism, bravery; வீரம். பெரும்படைக் கொற்றம் பீடழிந்து (பெருங். மகத. 3, 90). 3. Power, strength; வன்மை. (சூடா.) 4. Sovereignty, kingship, government; அரசியல். கொற்றங் கொண்டு கோலினி தோச்செல (பெருங். இலாவாண. 5, 73).

கொற்றம்வை-த்தல் koṟṟam-vai-, v. intr. <கொற்றம்+. To entrust the government to a person; அரசாட்சியை ஒருவரிடம் ஒப்புவித்தல். நீயொருவன்மேற் கொற்றம் வைப்பின் (சீவக. 204).

கொற்றமுரசு koṟṟa-muracu, n. <id.+. Trumpet of victory, an insignia of royalty;

அரசாங்கத்திற்குரிய வெற்றிமுரசு. கொற்ற முரசிற் கோடணை கொட்டி (பெருங். இலாவாண. 11, 186).

கொற்றவஞ்சி korṟa-vañci, *n.* <id.+. (Puṟap.) Theme extolling a king who destroyed his foes with his sword; பகைவரை வாளோச்சி அழித்த அரசனது புகழைப் பெருகவுரைக்கும் புறத்துறை. (பு. வெ. 3, 7.)

கொற்றவள்ளை korṟa-vaḷḷai, *n.* <id.+. 1. (Puṟap.) Theme indirectly describing the prowess of a king by regretting that the enemy's country will be destroyed; பகைவர் தேசம் கெடுவதற்கு வருந்துவதைக் கூறுமுகத்தான் அரசன் கீர்த்தியைச் சொல்லும் புறத்துறை. (பு. வெ. 3, 8.) 2. Devastation of a hostile kingdom; பகைவர் நாடழிகை. (திவா.) 3. Tribute paid by a defeated king; தோற்றவேந்தன் கொடுக்குந் திறை. (தொல். பொ. 63, உரை.)

கொற்றவன்[1] korṟavaṉ, *n.* <id. [M. *korṟavan.*] 1. King, monarch; அரசன். குடையினீழற் கொற்றவன் (சீவக. 2544). 2. Victor; வெற்றியாளன். ஊர்கொண்ட வுயர்கொற்றவ (மதுரைக். 88).

கொற்றவன்[2] korṟavaṉ, *n.* cf. கொற்றான். Balloon-vine. See முடக்கொற்றான். (மலை.)

கொற்றவாயில் korṟa-vāyil, *n.* <கொற்றம் +. Portico at the entrance of a palace or temple. See ஆசாரவாசல். கொடிக்கோசம்பிக் கொற்றவாயில் (பெருங். மகத. 27, 194).

கொற்றவி korṟavi, *n.* <id. Queen; அரசி. கொற்றவி மகனை நோக்கிக் கூறினள் (சீவக. 2609).

கொற்றவுழிஞை korṟa-v-uḻiñai, *n.* <id. +. (Puṟap.) Theme describing the march of a king with his army to capture the enemy's city; பகைவர்பதியைக் கைக்கொள்ளுதற்பொருட்டு அரசன் படையெடுத்துச் செல்லுதலைக் கூறும் புறத்துறை. (பு. வெ. 6, 5.)

கொற்றவை korṟavai, *n.* <id. Durgā, as the Goddess of Victory; [வெற்றிக்கு உரியவள்] துர்க்கை. முற்றவை காட்டிக் கொற்றவை பழிச்சி (பெருங். இலாவாண. 2, 31).

கொற்றவைநிலை korṟavai-nilai, *n.* <கொற்றவை+. (Puṟap.) Theme of offering sacrifice to Durgā and worshipping Her; துர்க்கைக்குப் பலியிட்டுப் பரவும் புறத்துறை. (தொல். பொ. 59.)

கொற்றன் korṟaṉ, *n.* <கொற்று[1]. Mason, bricklayer; கொத்தன். (நன். 130, மயிலை.)

கொற்றாள் korṟāḷ, *n.* <id.+ஆள். Labourer working in earth, stone, etc.; mason; கல்மண் களில் வேலைசெய்பவன்-ள். என்போலத் திருந்து கொற்றாள் கிடையாது (திருவாலவா. 30, 11).

கொற்றான் korṟāṉ, *n.* Parasitic leafless plant, s. cl., *Cassytha filiformis;* இலையற்ற கொடிவகை. (M. M. 230.)

கொற்றி[1] korṟi, *n.* <கொற்றம். [M. *korṟi.*] 1. See கொற்றவை. பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய் நொடித்தாங்கு (கலித். 89). 2. [T. *koṭṭamu.*] A masquerade dance; ஒருவகை வரிக்கூத்து. (சிலப். 3, 13, உரை.)

கொற்றி[2] korṟi, *n.* Young calf; பசுவின் இளங்கன்று. (பிங்.)

கொற்றிக்கோரை korṟi-k-kōrai, *n.* perh. கொற்றி[2]+. A kind of sedge, *Cyperus;* கோரை வகை.

கொற்றியார் korṟiyār, *n.* <கொற்றி[1]. 1. A sect of Vaiṣṇava female mendicants wearing basil garlands and other religious marks; துளசி மாலை முதலிய சின்னங்களை யணிந்து திருமாலடியாராய்த் திரியும் பெண் துறவிகள். 2. One of the constituent themes of *kalampakam;* ஒரு கலம்பக வுறுப்பு. 3. Goddess of Parturition; பிள்ளைப் பேற்றின் அதிதேவதை. (J.)

கொற்றியாரைவழிவிடு-தல் korṟiyārai-vaḻi-viṭu-, *v. intr.* <கொற்றியார்+. To bid farewell to the Goddess of Parturition on the fifth day after childbirth, by sending away the midwife to some open place or jungle with the mat used by the mother and a morsel of each of the dishes she had tasted; பிரசவித்த ஐந்தாம்நாள் பிள்ளைப்பேற்றின் அதிதேவதையை வழியனுப்பும் பாவனையாகப் பிரஸவஸ்திரீ படுத்திருந்த பாயுடன் அவள் கொண்ட உணவின் ஒவ்வொருவகையிலும் சிறிது எடுத்துக்கொள்ளச் சொல்லி மருத்துவச்சியை ஊருக்குப் புறத்தே போகச்செய்தல். (J.)

கொற்றிலக்கை korṟilakkai, *n.* <கொற்று[1] +இலக்கை. An ancient tax; ஒரு பழைய வரி. (Insc.)

கொற்று[1] korṟu, *n.* prob. கொல்-. 1. Masonry, brickwork; கொற்றுவேலை. கொற்றுள விவரில் (திருவாலவா. 30, 23). 2. Mason, bricklayer; கொத்தன். *Colloq.* 3. The measure of work turned out by a mason; ஒரு கொத்தன் செய்யும் வேலையளவு. இந்தச் சுவர் கட்ட எத்தனை கொற்றுச் செல்லும்?

கொற்று[2] korṟu, *n.* perh. கொள்-. [M. *korṟu.*] Food, means of subsistence; உணவு. (I. M. P. S. A. 109.)

கொற்றுறை korṟuṟai, *n.* <கொல்[2]+துறை. Blacksmith's workshop, smithy; கொல்லன் பட்டடை. கொற்றுறைக் குற்றில (புறநா. 95).

கொறகொறெனல் koṟa-koṟeṉal, *n.* Onom. expr. of rattling in the throat; தொண்டையின் கரகரப்புக் குறிப்பு.

கொறடா koṟaṭā, *n.* <Port. *corda.* [T. *koraḍā*, K. *koraḍē*, M. *koraṭā*, Tu. *korḍe.*] Horsewhip, whip, scourge; குதிரைச்சவுக்கு.

கொறி[1]**-த்தல்** koṟi-, *11 v. tr.* cf. *kṣur.* [T. *koruku*, K. *koruku*, M. *koṟi.*] 1. To nip off the husks of grains; to nibble grain; பல்லாலும் அலகாலும் தானியத்தைப் பிரித்துத் தின்னுதல். *தினைகள் கொறிப்ப முன்றூவி* (காஞ்சிப்பு. இருபத். 95). 2. To graze; to pick up food here and there, as cattle; to eat scantily; சிறிது சிறிதாகப் பொறுக்கி உண்ணுதல். *உடுத்திரள் பொரியிற் கொறிப்ப* (கல்லா. முருகன்துதி). 3. To make a ticking or clucking sound; to chirp, as a lizard; விட்டுவிட்டு ஒலித்தல். (J.) 4. To chatter; அலப்புதல். (J.)

கொறி[2] koṟi, *n.* perh. கொறி-. [T. *goṟṟe*, K. Tu. *kuṟi*, M. *koṟi.*] 1. Sheep; ஆடு. *கொறியினவுணர்தம் வெள்ளங்கள் . . . கொன்றதிலோ* (அஷ்டப். திருவரங். மா. 32). 2. Aries, a constellation of the zodiac; மேடராசி. *கொறியலவன்* (சினேந். 71).

கொறித்துப்பார்-த்தல் koṟittu-p-pār-, *v. tr.* <id.+. (W.) 1. To ascertain by tasting whether the paddy-grain that has been boiled is dry enough for husking; குத்துதற்குத் தக்கபடி காய்ந்துள்ளதா என்பதை அறியப் புழுங்கல் நெல்லை வாயிலிட்டுப் பதம்பார்த்தல். 2. To stare at with impudence; அகங்காரங்கொண்டு வெறித்துப் பார்த்தல்.

கொறிதலை koṟitalai, *n.* Creat. See நிலவேம்பு. (மலை.)

கொறு koṟu, *n.* cf. கொரி. Wicker-muzzle of a calf; கன்றின் வாய்ப்பூட்டு. (W.)

கொறுக்கச்சி koṟukkacci, *n.* See கொறுக்கை[1], 1. (குறிஞ்சிப். 68, உரை.)

கொறுக்கல் koṟukkal, *n.* See கொறுக்கை[2]. *Loc.*

கொறுக்கா koṟukkā, *n.* See கொறுக்காய்ப்புளி. (மலை)

கொறுக்காய் koṟukkāy, *n.* See கொறுக்காய்ப்புளி. (W.)

கொறுக்காய்ப்புளி koṟukkāy-p-puḷi, *n.* prob. கொடுக்காய்+. (L.) 1. Manilla tamarind, m. tr., *Pithecolobium dulce;* கொடுக்காய்ப்புளி. 2. Malabar gamboge, l. tr., *Garcinia cambogia;* ஈழப்புளி.

கொறுக்கு koṟukku, *n.* [T. *koṟuku.*] Syphilis, chancre; இலிங்கவிரணம். *Loc.*

கொறுக்குவலி koṟukku-vali, *n.* <குரங்கு+. A kind of disease. See குரக்குவலி. (W.)

கொறுக்கை[1] koṟukkai, *n.* 1. European bamboo reed, l. sh., *Arundo donax;* நாணல்வகை. (மலை.) 2. Stargazers, sea-fish, *Uranoscopidæ;* கடல்மீன்வகை. 3. See கொறுக்கு. (M. L.)

கொறுக்கை[2] koṟukkai, *n.* <கொறு (onom.) [T. *guṟaka.*] Snoring; குறட்டைமூச்சு. (பிங்.)

கொறுக்கோல் koṟu-k-kōl, *n.* See கொறு. *முன்னணைக் கன்று பசுக்களோடே போனால் முலையுண்ணுமைக்குக் கொறுக்கோலென்று அதின் மூஞ்சியிலே கட்டிவிடுவர்கள்* (ஈடு, 4, 8, 4).

கொறுகொறு-த்தல் koṟu-koṟu-, *11 v. intr.* [T. *koṟakoṟalāḍu.*] To bubble with anger; கோபங்காட்டுதல். *இட்டிடை கோறுநாங்க ளெனக் கொறுகொறுப்ப* (சீவக. 2040).

கொறுகொறுவெனல் koṟu-koṟu-v-eṉal, *n.* Onom. expr. signifying (a) roaring, as the sea; rattling, as the throat; ஓர் ஒலிக்குறிப்பு. *பாற்கடல் கொறுகொறுவென்ன* (தணிகைப்பு. நாகமருள். 3): (b) anger; கோபக்குறிப்பு.

கொறுடு koṟuṭu, *n.* prob. கொடிறு. Cheek; கன்னம். (ஈடு, 8, 3, 4.)

கொன் koṉ, *n.* 1. Uselessness, futility; பயனின்மை. (தொல். சொல். 256.) 2. Fear; அச்சம். *கொன்முனை யிரவூர்போல* (குறுந். 91). 3. Season, time; காலம். (தொல். சொல். 256.) 4. Dawn; விடியற்காலம். *கொன்னிளம் பரிதி* (சீவக. 173). 5. Greatness, vastness; பெருமை. *கொன்னூர் துஞ்சினுமியாந்துஞ்சலமே* (குறுந். 138). 6. Power, strength; வலி. (சூடா.)

கொன்றை koṉṟai, *n.* 1. Indian laburnum. See சரக்கொன்றை. *பொலனணி கொன்றையும்* (ஐங்குறு. 435). 2. Red Indian laburnum. See செங்கொன்றை. (L.) 3. Siamese tree. See மஞ்சட்கொன்றை. (L.)

கொன்றைசூடி koṉṟai-cūṭi, *n.* <கொன்றை+. Śiva, as crowned with *koṉṟai* flowers; [கொன்றைமாலை சூடியவன்] சிவன். (திவா.)

கொன்றைப்பழக்குழல் koṉṟai-p-paḻa-k-kuḻal, *n.* <id.+. Musical pipe made of the *koṉṟai* pod; கொன்றைப்பழத்தைத் துளைத்துச் செய்யப்பட்ட ஊதுகுழல். *கொன்றைப்பழக்குழற் கோவலர்* (சிலப். 17, பாட்டு, உரை).

கொன்றைவேய்ந்தன் koṉṟai-vēyntaṉ, *n.* <id.+. A short moral code in Tamil by Auvaiyār, commencing with *koṉṟaivēynta;*

ஔவையார் இயற்றிய 'கொன்றைவேய்ந்த' என்று தொடங்கும் ஒரு நீதிநூல்.

கொன்னுளன் kon-n-āḷaṉ, *n.* <கொன்+ ஆள்-. 1. Useless person, person of no concern to anybody; பயனற்றவன். *நம்மருளாக் கொன்னு ளன் (கலித். 42, 18).* 2. Sinner; பாவி. *வடதிசையுங் கொன்னுளர் சாலப் பலர் (நாலடி, 243).*

கொன்னு-தல் koṉṉu-, *5 v. intr.* [M. *koññu.*] 1. To stammer, stutter; திக்கிப்பேசுதல். 2. To babble; குழறுதல். *ஒன்னார்கள் வாய் கொன்ன (தனிப்பா. i, 386, 38).*

கொன்னெச்சன் koṉṉeccaṉ, *n.* A kind of gadfly biting cattle; மாட்டிடிப்பற்றும் ஈவகை. (J.)

கொன்னை[1] koṉṉai, *n.* <கொன்னு-. 1. Stammering, imperfect articulation; திக்கிப் பேசுகை. *Loc.* 2. Babbling; குழறுகை.

கொன்னை[2] koṉṉai, *n.* <தொன்னை. Cup made of leaves; தொன்னை. *Loc.*

கொனை koṉai, *n.* [T. *kona*, K. Tu. *kone.*] Tip, end, as of a needle; நுனி. *பிரம்பின் கொனை படலால் (அஷ்டப். திருவரங். மா. 89).*

கொஸ்தாப்பர் kostāppar, *n.* <E. Constable; போலீஸ்சேவகன். (J.)

கோ

கோ[1] kō. The compound of க் and ஓ.

கோ[2]**-த்தல்** kō-, *11 v. tr.* [K. M. *kō.*] 1. cf. *grath.* To string, as beads, flowers, ola leaves; to file; to insert; to thread, as a needle; மணி முதலியவற்றினூடு நூலைப்புகுத்தியிணைத்தல். *கோத்தணிந்த வெற்பு மணி (பெரியபு. மானக்கஞ். 22).* 2. To compose, compile, arrange, reduce to order; to systematise; ஒழுங்குபடுத்துதல். *பார்த்த விட மெங்கணுங் கோத்தநிலை குலையாது (தாயு. கருணாகர. 4).* 3. To narrate in order; முறையாகக் கூறுதல். *பூமியாண் முறையுங் கோத்தார் (பாரத. சம்பவ. 113).* 4. To enumerate, recount; தொகுத்துரைத்தல். *கோமின் முழாய்முடி யாதியஞ்சோதி குணங்களே (திவ். திருவாய். 4, 1, 7).* 5. To invent, as a story, in a clever and fitting manner; சாதுரியமாகக் கதைமுதலியன புனைதல். 6. To put on, to wear; உடுத்துதல். *கோத்த கல்லாடையும் (தேவா. 509, 2).* 7. To clasp, join, interlock, as the hands; கை பிணைத்தல். *குரவை யாய்ச்சியரோடு கோத்ததும் (திவ். திருவாய். 6, 4, 1).* 8. To unite, merge; ஒன்று சேர்த்தல். *அன்பரைக் கோத்தற விழுங்கிக்கொண்டு (தாயு. பொருள்வ. 3).* 9. To envelop, cover; கவிந்துகொள்ளுதல். *வல்லிருள் கோத்தது கருங்கடல் கொள்ளைகொண்டென (கம்பரா. இலங்கைகேள்வி. 3).* 10. To oppose, resist; எதிர்த்தல். *கனலிகோப்பக் காரிரு ளுடைந்த தேபோல் (சீவக. 1290).*

கோ[3] kō, *n.* perh. *gō-mān* masc. nom. sing. of *gō-mat.* [M. *kō.*] 1. Emperor; சக்கரவர்த்தி. *கோக்கண்ட மன்னர் குரைகடற் புக்கிலர் (தமிழ்நா. 126).* 2. King; அரசன். (பிங்.) 3. Great man, eminent person; பெருமையிற் சிறந்தோன். (பிங்.) 4. Father; தகப்பன். *நின்கோ வரினு மிங்கே வருக (கலித். 116).* 5. Leadership, domination; தலைமை. *ஐவர் வந்து கோச்செய்து குமைக்க (தேவா. 997, 6).* 6. cf. *gōmanta.* Mountain; மலை. *கோக்க டோறு மின்வாள் வீசி (சிவப்பிர. வெங்கைக்கலம். 84).* 7. [K. *kōva.*] Potter; குசவன். *மூதூர்க் கலஞ்செய் கோவே (புறநா. 256, 7).*

கோ[4] kō, *n.* <*gō.* 1. Cow; பசு. (பிங்.) 2. Bull; எருது. *ஒரு கோவை யேறி (இலக். வி. 907, உரை).* 3. Heaven; சுவர்க்கம். *உயர்கோவைத் தரு கோவை (இலக். வி. 907, உரை).* 4. Aerial region, sky; ஆகாயம். (பிங்.) 5. Earth; பூமி. (பிங்.) 6. Cardinal points, direction; திசை. (பிங்.) 7. Ray, beam; கிரணம். (பிங்.) 8. Thunderbolt, as the weapon of Indra; வச்சிராயுதம். (பிங்.) 9. Arrow; அம்பு. (பிங்.) 10. Eye; கண். *கோலானைக் கோவழ லாற் காய்ந்தார் (தேவா. 520, 7).* 11. Speech, word; சொல். (பிங்.) 12. Water; நீர். *வரு கோவைச் சூடி (இலக். வி. 907, உரை).* 13. Sap, juice; இரசம். (தைலவ.)

கோ[5] kō, *n.* cf. *kōla.* Jujube tree. See இலந்தை. (மலை.)

கோ[6] kō, *int.* Expr. meaning 'alas! இரங்கற் குறிப்பு. (சூடா.)

கோக்கதவு kō-k-katavu, *n.* <கோ[3]+. Big door; பெரிய கதவு. *களத்திற்குக் கோக்கதவு கூட்டிவிட்டிருக்கிறது. Nāñ.*

கோக்கலம் kō-k-kalam, *n.* perh. id.+. Utensils made of bell-metal; வெண்கலப்பாத்திரம். *Nāñ.*

கோக்காமரம் kōkkā-maram, *n.* prob. கோ-+கால்[1]+. *Loc.* 1. A kind of raft or catamaran; கடலிற்செலுத்தும் கட்டுமரவகைகளில் ஒன்று. 2. Scaffold for execution of criminals; தூக்குமரம்.

கோக்காலி kō-k-kāli, *n.* prob. id.+. 1. Bracket in a wall for holding pots; சட்டிபானை முதலியவை வைப்பதற்குச் சுவரையொட்டி அமைக்கப் படுஞ் சட்டம். *(பதிற்றுப். 43, உரை).* 2. A tall person; நெட்டையானவ-ன்-ள். *Colloq.*

கோக்கு kōkku, *n.* <id. cf. U. *kōk.* Basting, tacking; நூலோட்டுகை. *Loc.*

கோக்குமாக்கு kōkku-mākku, *n.* Redupl. of கோக்கு. cf. U. *kūk.* Juggling; புரட்டுச்செயல்.

கோக்கோ kōkkō, *n.* <E. Cocoa; ஒரு வகைப் பானபண்டம்.

கோகடம் kōkaṭam, *n.* <*kōkaḍa*. A kind of hare; முயல்வகை. (யாழ். அக.)

கோகண்டம் kōkaṇṭam, *n.* <*gō-kaṇṭaka*. A small prostrate herb. See நெருஞ்சி. (மலை.)

கோகத்தி kōkatti, *n.* <*gō-hati*. The sin of cow-killing; பசுக்கொலையாகிய பாவம்.

கோகத்தியை kōkattiyai, *n.* <*gō-hatyā*. See கோகத்தி.

கோகந்தம் kōkantam, *n.* A mineral poison; கந்தகபாஷாணம். (W.)

கோகம்[1] kōkam, *n.* <*kōka*. 1. Ruddy shield-rake. See சக்கரவாகம். *கோகங்க ளெல்லைப் போதிற் றணந்திட* (இரகு. திக்குவி. 247). 2. A species of wolf; செந்நாய். 3. Frog; தவளை.

கோகம்[2] kōkam, *n.* Dried or withered flower; உலர்ந்த பூ. (W.)

கோகயம் kōkayam, *n.* <*gō-śaya*. Lotus; தாமரை. (மலை.)

கோகர்ணம் kōkarṇam, *n.* <*gō-karṇa*. 1. Śiva shrine in Malabar; மலைநாட்டில் உள்ள ஒரு சிவதலம். 2. A metal vessel with handle and lip for serving liquid food; இரசம் மோர்முதலியன பரிமாறுதற்குரிய பிடியுள்ள மூக்குச்சட்டிவகை.

கோகரணம் kōkaraṇam, *n.* cf. *gō-karaṇa*. 1. See கோகர்ணம், 1. *கோலக் கோபுரக் கோகரணஞ் சூழா* (தேவா. 1182, 9). 2. Art of moving or shaking the ears alone, as cows do; பசுவைப்போலக் காதைமாத்திரம் அசைத்துக் காண்பிக்கும் ஒருவித்தை. *கசகரணங்கள் சேர்ந்த கோகரணமார்க்கம்* (திருவேங். சத. 66).

கோகருணி kōkaruṇi, *n.* <*gōkarṇī*. Bowstring hemp. See பெருங்குரும்பை. (மலை.) (M. M. 477.)

கோகலி kōkali, *n.* Seaside Indian oak. See கடம்பு. (மலை.)

கோகழி kō-kaḻi, *n.* <கோ[4] + கழி[3]. Tiru-v-āvaṭu-turai, a Śiva shrine; திருவாவடுதுறை என்னும் சிவதலம். *கோகழி யாண்ட குருமணிதன் றாள் வாழ்க* (திருவாச. 1, 3).

கோகன்னம் kō-kaṉṉam, *n.* <*gō-karṇa*. See கோகர்ணம், 1. *ஆவினது செவிபோல அவ்வி லிங்க நிமிர்வுறலால் மேவினது கோகன்ன மெனும் பெயர்* (பிரமோத். 2, 55).

கோகனகம் kōkaṉakam, *n.* <*kōka-nada*. See கோகனதம். *கோகனகத்தவன் கேள்வன்* (திவ். திருவாய். 9, 8, 2).

கோகனகை kōkaṉakai, *n.* <id. See கோகனதை. (திவா.)

கோகனதத்தோன் kōkaṉatattōṉ, *n.* <id. See கோகனதன். *கோகனதத்தோன் றண்டமாகிய விடத்தில்* (கந்தபு. ததீசியுத். 17).

கோகனதம் kōkaṉatam, *n.* <*kōka-nada*. Red lotus. See செந்தாமரை. *கோகனத முகங் காட்ட* (தேவா. 575, 3).

கோகனதன் kōkaṉataṉ, *n.* <id. Brahmā, as lotus-born; [தாமரையிற் பிறந்தவன்] பிரமன். *கோகனதன் சொற்கொண்டு* (கோயிற்பு. நடரா. 68).

கோகனதை kōkaṉatai, *n.* <id. Lakṣmī, as seated on the lotus; [தாமரையில் இருப்பவள்] இலக்குமி. *கோகனதை பிரியாத குழகன்போல* (சேதுபு. சேதுபல. 37).

கோகனம் kōkaṉam, *n.* prob. *gō-karṇa*. 1. A plant found in wet places. See கரிசலாங்கண்ணி. (பிங்.) 2. cf. *kōkasīman*. A plant. See நிலக்கடம்பு. (W.) 3. Creat. See நிலவேம்பு. (மலை.)

கோகிதம் kōkitam, *n.* <*gōhira*. Heel; குதிங்கால். (யாழ். அக.)

கோகிலம்[1] kōkilam, *n.* <*kōkila*. 1. Koel. See குயில். *இருளாநின்ற கோகிலமே* (திருக்கோ. 322). 2. cf. *kōka*. Wall-lizard; பல்லி. (திவா.)

கோகிலம்[2] kōkilam, *n.* cf. *gō-lāṅgūla*. Monkey; குரங்கு. (பிங்.)

கோகிலம்[3] kōkilam, *n.* 1. Tube; anything tubular; துளை. (அக. நி.) 2. Small Indian ipecacuanha. See சிறுகுறிஞ்சா. (மலை.)

கோகிலவாசம் kōkila-vācam, *n.* <*kōkilāvāsa*. Lit., the abode of koels. Mango tree; [குயிலுக்கு இருப்பிடம்] மாமரம். (மலை.)

கோகிலாட்சம் kōkilāṭcam, *n.* cf. *kōkilākṣa*. (மலை.) 1. White long-flowered nail-dye. See நீர்முள்ளி. 2. Citron. See கொம்மட்டி மாதுளை.

கோகிலோற்சவம் kōkilōṟcavam, *n.* <*kōkila+ut-sava*. Lit., that which causes festivity to the koels. Mango tree; [குயிலுக்கு மகிழ்ச்சியை விளைப்பது] மாமரம். (மலை.)

கோகு kōku, *n.* 1. cf. *dōḥ* nom. sing. of *dōṣ*. Shoulder; புயம். *கொற்றவன்றன் கோகின் மேல் வெற்றிவாளின் வீசினான்* (சூளா. அரசி. 240). 2. cf. *guh*. Guile; கபடம். *கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டுவித்தென்னைக் கோகுசெய்தாய்* (தேவா. 1040, 2). 3. Irregularity, disorder; அடைவுகேடு. (ஈடு, 3, 5, 4.) 4. Ass; கழுதை. *வீழ்ந்து கோகிறப்புழி* (உபதேசகா. உருத்திரா. 193).

கோகுகட்டு-தல் kōku-kaṭṭu-, *v. intr.* <கோகு+. See கோகுதட்டு-. *கோகுகட்டுண் டுழலா தார்* (*திவ். திருவாய்.* 3, 5, 4).

கோகுத்தம் kōkuttam, *n.* Arabian jasmine. See மல்லிகை. (*மலை.*)

கோகுதட்டு-தல் kōku-taṭṭu-, *v. intr.* <கோகு+. To parade one's strength by patting oneself on the shoulder; ஆரவாரஞ் செய்தல். *கோகுதட்டிடு தனஞ்சயன்* (*பாரத. நிரைமீட்சி.* 68).

கோகுலம்[1] kōkulam, *n.* <*gō-kula*. The village where Kṛṣṇa was brought up; கண்ணன் வளர்ந்த ஆயர்பாடி. *கோகுலத் தாயன் வேட்ட* (*திருச்செங். பு.* 18, 26).

கோகுலம்[2] kōkulam, *n.* <*kōkila*. See கோகிலம்[1], 1. *கோகுலமாய்க் கூவுநரும்* (*பரிபா.* 9, 65).

கோகுலம்[3] kōkulam, *n.* See கோகிலம்[2]. (W.)

கோகுலம்[4] kōkulam, *n.* See கோகிலம்[3], 1. (W.)

கோகுலாஷ்டமி kōkulāṣṭami, *n.* <*gō-kula+aṣṭamī*. Birthday of Śrī Kṛṣṇa; கண்ணன் அவதரித்த ஆவணிமாதத்துக் கிருஷ்ணாஷ்டமி.

கோகுள் kōkuḷ, *n.* A kind of tree; மரவகை. *கோகுளிலையைக்கொண்டு* (*சடு*, 7, 2, 1).

கோகொட்டை kōkoṭṭai, *n.* A species of gamboge, *Garcinia spicata;* மஞ்சள்நாங்கு. (L.)

கோகோவெனல் kō-kō-v-eṉal, *n.* Onom. expr. of crying or bawling loudly; பேரொலி செய்தற்குறிப்பு. *கோகோவென்று வந்திருகை தலைபுடைத்து* (*பாரத. பதினேழாம்.* 254).

கோங்கந்தட்டம் kōṅkan-taṭṭam, *n.* <கோங்கு+. Flower of the *kōṅku* tree; கோங்கம்பூ. *கோங்கந்தட்டம் வாங்கினர் வைத்தும்* (*பெருங். இலாவாண.* 14, 24).

கோங்கம்[1] kōṅkam, *n.* <id. See கோங்கிலவு. *முறியிணர்க் கோங்கம்* (*ஐங்குறு.* 366).

கோங்கம்[2] kōṅkam, *n.* cf. *கோரங்கம்.* Emblic myrobalan. See நெல்லி. (*மலை.*)

கோங்கலர் kōṅkalar, *n.* perh. *தோங்கு+அலர்.* A garment of ancient times; முற்காலத்து வழங்கிய ஒருவகைத் துகில். (*சிலப்.* 14, 108, *உரை.*)

கோங்கிலவு kōṅkilavu, *n.* <id.+இலவு. False tragacanth, m. tr., *Cochlospermum gossypium;* மரவகை. (L.)

கோங்கு kōṅku, *n.* 1. Common caung, l. tr., *Hopea wightiana;* கோங்குவகை. (L.) 2. Ironwood of Malabar, *Hopea parviflora;* நீர்க்கோங்கு. (L.) 3. See கோங்கிலவு. (*மலை.*) 4. Red cotton tree. See முள்ளிலவு. (L.)

கோச்சு kōccu, *n.* <E. Coach, a four-wheeled carriage drawn by horses; குதிரை வண்டிவகை.

கோச்சுப்பெட்டி kōccu-p-peṭṭi, *n.* <கோச்சு+. Driver's box in a bullock carriage; வண்டியின் முகப்புப் பெட்டி. *Loc.*

கோச்செங்கட்சோழநாயனார் kō-c-ceṅkaṭ-cōḻa-nāyaṉār, *n.* <கோ[3]+. The Chola king and canonized Śaiva saint, one of 63; நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவராகிய சோழவரசர். (*பெரியபு.*)

கோச்செங்கணன் kō-c-ceṅkaṇāṉ, *n.* See கோச்செங்கட்சோழநாயனார். *செம்பியன் கோச்செங்கணான் சேர்ந்த கோயில்* (*திவ். பெரியதி.* 6, 6, 1).

கோசக்கம் kōcakkam, *n.* Confusion; குழப்பம். (*யாழ். அக.*)

கோசகாரம் kōcakāram, *n.* <*kōśa-kāra*. Silk-worm; பட்டுப்பூச்சி. *கோசகாரப் புழுப்போல்* (*ஞானவா. மனத்.* 22).

கோசங்கம் kō-caṅkam, *n.* perh. *gō+saṅgha*. Early morning, dawn; வைகறை. (*யாழ். அக.*)

கோசஞ்சாரபூமி kō-cañcāra-pūmi, *n.* <*gō-sañcāra-bhūmi*. Land allotted for pasturage of cows; பசுக்கள் மேய்வதற்கென்று விடப்பட்ட நிலம்.

கோசணை kōcaṇai, *n.* <*ghōṣaṇā*. cf. கோடணை. Roar, loud noise, tumult; பேரொலி. (*பிங்.*)

கோசம்[1] kōcam, *n.* <*kōśa*. 1. Egg; முட்டை. (*பிங்.*) 2. Sheath, scabbard, case, receptacle; உறை. (*அக. நி.*) 3. Sheaths or cases believed to constitute the body. See பஞ்சகோசம். *பிணங்கிய கோசபாசப் பின்னலை* (*கைவல். தத்து.* 10). 4. A part of fortress wall; மதிலுறுப்பு. (*பிங்.*) 5. Penis; ஆண்குறி. *ஐயர்தங் கோச நோக்கினர்* (*கந்தபு. ததீசியுத்.* 54). 6. Womb; கருப்பை. *சஞ்சலமான கோசத் தசையினை* (*பாரத. சம்பவ.* 72). 7. Treasure; பொக்கிஷம். (*திவா.*) 8. Treasury; பொக்கிஷசாலை. *ஐம்பெருங் குழுவு மந்திரிகோசமும்* (*பெருங். வத்தவ.* 9, 5). 9. Treatise, book, vocabulary, dictionary; அகராதிமுதலிய புத்தகம். *காப்பியக் கோசமுங் கட்டிலும் பள்ளியும்* (*பெருங். உஞ்சைக்.* 38, 167). 10. Register or muniment of title; பட்டா. *Loc.* 11. Heap, bundle; தொகுதி. (*பெருங். உஞ்சைக்.* 38, 167, *உரை.*) 12. (Nāṭya.) A variety of *alikkai*, q.v.; அபிநயத்துக்குரிய அலிக்கைவகை. (*சிலப். பக்.* 92.) 13. Nutmeg tree. See சாதிக்காய். (*மலை.*)

கோசம்[2] kōcam, *n.* cf. *ghōṣa*. Street; வீதி. (*திவா.*)

கோசம்பி kōcampi, *n.* < *Kauśāmbī.* See கௌசாம்பி. கொடிக் கோசம்பிக் கோமகன் (மணி. 15, 61).

கோசமதம் kōca-matam, *n.* < கோசம்[1] +. Must from the generative organ of a male elephant in rut; ஆண்யானையின் குறியினின்று வரும் மதநீர். (திவா.)

கோசமம் kōcamam, *n.* Sponge-gourd. See பீர்க்கு. (மலை.)

கோசமாற்று-தல் kōca-māṟṟu-, *v. intr.* < கோசம்[1] +. To transfer patta, etc., in another's name; பட்டா முதலியவற்றிற் பேர் மாற்றுதல்.

கோசர் kōcar, *n.* An ancient caste of warriors; பழைய வீரக்குடியினருள் ஒரு சாரார். மெய்ம் மலி பெரும்பூட் செம்மற் கோசர் (அகநா. 15).

கோலாலம் kōlālam, *n.* <*kōlāhala.* See கோலாகலம். கோலாலமாகிக் குரைகடல்வா யன்றெழுந்த வாலாலம் (திருவாச. 12, 8).

கோலாவலை kōlā-valai, *n.* <கோலா¹ +. A kind of net generally used for catching *kōlā* fish; கோலாமீன் பிடிக்கும் வலை. *Loc.*

கோலாள் kōl-āḷ, *n.* <கோல்¹ +. Charioteer; தேர்ப்பாகன். அங்கவன்றன் கோலாளைக் கொன்று (பாரதவெண். 799).

கோலி¹ kōli, *n.* prob. கோலு-. Hair; மயிர். (சது.)

கோலி² kōli, *n.* <*kōli.* Jujube tree. See இலந்தை. (பிங்.)

கோலி³ kōli, *n.* cf. *kōla.* Long-pepper. See திப்பலி. (மலை.)

கோலி⁴ kōli, *n.* <Mhr. *gōlī.* [T. M. *gōli*, Tu. *gōḷi.*] Marble, a plaything; சிறு குண்டுவடிவான விளையாட்டுக்கருவி.

கோலி[5] kōli, *n.* (L.) 1. cf. *kōlaka*. Privet. See சிற்றழிஞ்சில். 2. A species of privet, s. tr., *Ligustrum perrottetii;* புன்குவகை.

கோலிக்கற்றை kōli-k-kaṟṟai, *n.* <கோலி[1] +. Chowry, tail of the yak; சாமரம். (சங். அக.)

கோலிக்கொள்(ளு)-தல் kōli-k-koḷ-, *v. tr.* <கோலு- +. To gather up, amass, accumulate, as property; சேர்த்துக்கொள்ளுதல். (W.)

கோலிகக்கருவி kōlika-k-karuvi, *n.* <கோலிகன் +. Loom; நெசவுக்கருவி.

கோலிகப்பறையன் kōlika-p-paṟaiyaṉ, *n.* <id. +. A division of the Pariah caste who weave coarse cloths; மட்டமான ஆடை நெய்யும் பறைச்சாதியான். (W.)

கோலிகன் kōlikaṉ, *n.* <*kaulika*. 1. A caste of weavers; நெய்யுந்தொழில் செய்யும் கீழ்ச் சாதி. (நேமிநா. எழுத். 16, உரை.) 2. A kind of coarse cloth, as woven by Kōlikar; கோலிகரால் நெய்யப்பட்ட ஆடை. (தொல். சொல். 114, உரை.)

கோலியடி-த்தல் kōli-y-aṭi-, *v. intr.* <கோலி[4] +. To play marbles; கோலியுண்டையால் விளையாடுதல்.

கோலியப்பறை kōliya-p-paṟai, *n.* <கோலியன் +. See கோலிகப்பறையன். (W.)

கோலியள்ளு-தல் kōli-y-aḷḷu-, *v. tr.* <கோலு- +. To bale, take up with a bucket, as water, or gather with a sweep of the arm, as earth, grain; வாரியெடுத்தல். (J.)

கோலியன் kōliyaṉ, *n.* See கோலிகன்.

கோலிவா-தல் [கோலிவருதல்] kōli-vā-, *v. tr.* <கோலு- +. To go round, envelope, as an army; சுற்றிவருதல். *Loc.*

கோலிளகுதல் kōl-iḷakutal, *n.* <கோல்[1] +. Lit., fall of the sceptre. Death of a king; [செங்கோல் நெகிழ்கை] அரசனிறக்கை. கோலிளகுதல் மங்கல மரபு (சீவக. 2146, உரை).

கோலு-தல் kōlu-, 5 *v. tr.* 1. cf. *kṣur*. To make, form, as beds in a garden; பாத்தி முதலியன வகுத்தல். 2. To enclose, envelop, encompass; to stretch round; வளைத்தல். நெடுங்காழ்க் கண்டங் கோலி (முல்லைப். 44). 3. cf. *kul*. To gather; திரட்டிவைத்தல். கோலாப் பிரசமன்னாட்கு (திருக்கோ. 110). 4. [M. *kōru*.] To bale, draw up, as with an ola bucket; to gather with a sweep of the arm; நீர் முதலியவற்றை முகந்து அள்ளுதல். கோலித் தண்ணீர்குடிக்கப்பட்ட . . . குடை (கலித். 23, உரை). 5. To spread out; விரித்தல். கணமயிலெருக் கெண்ணுழையாத் தழை கோலிநின் றூலும் (திருக்கோ. 347). 6. To commence; தொடங்குதல். பாஸ்வரூபத்தைத் நிரூபிக்கக் கோலி (ஈடு, அவ. ஜீ.). 7. To construct, compass, effect, accomplish; உண்டாக்குதல். (J.) 8. To consider, deliberate; ஆலோசித்தல். முற் கோலிப் பாண்டு புத்திரர்க் கோறும் (பாரத. நச்சுப். 3). 9. To ponder, meditate; தியானித்தல். மாலைக் கோலித் திரியும் (அஷ்டப். திருவேங். மா. 3).

கோலுபட்டை kōlu-paṭṭai, *n.* <கோலு- +. A kind of ola bucket; இறைகூடை வகை. (J.)

கோலுமை kōlumai, *n.* <id. Preparation, commencement; தொடக்கம். (W.)

கோலெரி kōl-eri, *n.* <கோல்[1] +. Lamp on a post; விளக்குத் தண்டின்மேல் உள்ள தீபம். கோலெரி கொளைநறை (பரிபா. 17, 6).

கோலெழுத்து kōl-eḻuttu, *n.* <id. +. A variety of script used in Malabar; மலையாள நாட்டில் வழங்கும் ஒருவகை எழுத்து. (I. M. P. Trav. 93-B.)

கோலை kōlai, *n.* <*kōla*. Black-pepper. See மிளகு. (தைலவ. தைல. 135, வரி 91.)

கோலொற்று-தல் kōl-oṟṟu-, *v. intr.* <கோல்[1] +. To shoot an arrow; அம்பு தொடுத்தல். கோலொற்றக் குனிந்தவாறே (சீவக. 797).

கோலோகம் kō-lōkam, *n.* <*gō-lōka*. Paradise of cows, as cow-world; பசுக்களுக்குரிய விண்ணுலகம். கோலோகம் விட்டிழிந்து (காசிக. விச் சுவநா. 8).

கோலோர் kōlōr, *n.* <கோல்[1]. Spearmen controlling an elephant in rut; மதயானையை அடக்கிநடத்தும் குத்துக்கோற்காரர். கோலோர்க் கொன்று மேலோர் வீசி (மதுரைக். 381).

கோவங்கிழங்கு kōvaṅkiḻaṅku, *n.* <கோவை +. Roots of *kōvai*; கோவையின் கிழங்கு. *Loc.*

கோவசூரி kō-vacūri, *n.* <*gō* +. Cow-pox; மாடுகளுக்கு வரும் வசூரிவகை.

கோவணக்குண்டியன் kōvaṇa-k-kuṇṭiyaṉ, *n.* <கோவணம் +. See கோவணாண்டி. (W.)

கோவணம் kōvaṇam, *n.* <*kaupīna*. [T. *gōvanamu*, K. Tu. *kōvaṇa*, M. *kōvaṇam*.] Man's loin-cloth; கௌபீனம். தன்னம்பெய் கோவணம் (திருவாச. 12, 2).

கோவணவன் kōvaṇavaṉ, *n.* <கோவணம். See கோவணன். இஞ்ஞின்ற கோவணவன் (திரு விசை. கருவூர். 46).

கோவணன்[1] kōvaṇaṉ, *n.* <id. Lit., one with a loin-cloth. Śiva; [கோவணந்தரித்தவன்] சிவன். (சது.)

கோவணன்[2] kōvaṇaṉ, *n.* prob. *gō* + அண்ணு-. Vaśiṣṭha, as having Kāmatēṉu with

him; [காமதேனுவைப் பொருந்தியவன்] வசிட்டன். (சது.)

கோவணாண்டி kōvaṇāṇṭi, *n.* < கோவணம் + ஆண்டி. Lit., a beggar with only a loin-cloth for his clothing. Destitute person; [கோவண மட்டுமுடைய பிச்சைக்காரன்] கதியற்றவன்.

கோவணி kōvaṇi, *n.* prob. *gō-parṇī*. Common mountain ebony. See ஆத்தி. (மூ. அ.)

கோவத்தி kō-v-atti, *n.* <*gō-hatyā*. See கோவதை.

கோவதை kō-vatai, *n.* <*gō*+. Slaughter of cows, considered a sin; பசுக்கொலை. கொந் தலர்த்தார் மைந்தனைமுன் கோவதை செய்தார்க்கு (பெரியபு. மநுநீதி. 34).

கோவம்[1] kōvam, *n.* <*kōpa*. Anger; கோபம். கோவந் தோன்றிடிற் குரையு முயிருணுங் கொடியோர் (கம்பரா. படைக்கா. 23).

கோவம்[2] kōvam, *n.* <*indra-gōpa*. Cochineal. See தம்பலப்பூச்சி. கோவத் தன்ன கொங்கு சேர் புறைத்தவின் (சிறுபாண். 71).

கோவம்[3] kōvam, *n.* cf. *karbura*. Gold; பொன். (பிங்.)

கோவர்த்தனம் kōvarttaṉam, *n.* <*Gō-vardhana*. Celebrated hill in Brindaban near Muttra lifted up and held by Kṛṣṇa to shelter cows and cow-herds from a rain-storm sent by Indra; இந்திரன் சினந்து விடுத்த பெருமழையைத் தடுத்துக் கோக்களையும் கோவலரையும் காப்பதற்காகக் கண்ணனாற் குடையாகத் தாங்கப்பட்ட நம் வடமதுரைப் பக்கத்துள்ளதுமான ஒரு மலை. (திவ். பெரியாழ். 3, 5, 1.)

கோவர்த்தனர் kōvarttaṉar, *n.* <id. Herdsmen; கோவைசியர். (பிங்.)

கோவல் kōval, *n.* See கோவலூர். கோவ லிடைகழியே பற்றி (திவ். இயற். 1, 86).

கோவலகணவாய் kōvala-kaṇavāy, *n.* A species of cuttlefish, *Octapis vulgaris;* கண வாய்ச்சிப்பிமீன் வகை. (W.)

கோவலர் kōvalar, *n.* <*gō-pāla*. Men of the sylvan tract, herdsmen; முல்லைநிலமாக்கள். குருந்தங் கண்ணிக் கோவலர் (ஐங்குறு. 439).

கோவலன் kōvalaṉ, *n.* Hero of the epic Cilappatikāram; சிலப்பதிகாரக்காப்பியத்தலைவன்.

கோவலி kōvali, *n.* perh. *gō*+வலி-. Tetanus; பற்கிட்டுகை. *Loc.*

கோவலூர் kōval-ūr, *n.* Tirukkoyilur in S. Arcot district of historic interest; தென்னார்க் காடு ஜில்லாவிலுள்ளதும் பழைமையுடையதுமாகிய திருக்கோவலூர். முரண்மிகு கோவலூர் நூறி (புறநா. 99).

கோவளம் kōvaḷam, *n.* <Mhr. *kōḷam*. (W.) 1. Cape, headland; கடற்குள் நீண்ட தரை முனை. 2. Town near a headland; தரைமுனையி லுள்ள ஊர்.

கோவளை kōvaḷai, *n.* Tube-flower; நரி வாழை. (L.)

கோவன் kōvaṉ, *n.* <*gō-pa*. 1. Herdsman; இடையன். கோவ னிரைமீட்டனன் (சீவக. 455). 2. King; அரசன். கோவனும் மக்களும் (சீவக. 1843). 3. Vaśiṣṭha; வசிட்டன். (அக. நி.) 4. Śiva; சிவன். (அக. நி.)

கோவா kōvā, *n.* A grafted mango; ஒட்டு மாம்பழவகை.

கோவாங்கு kōvāṅku, *n.* perh. *gavāṅga*. A kind of ruby; படிதம் என்னும் மாணிக்கவிசேடம். (சிலப். 14, 186, உரை.)

கோவாரி kō-vāri, *n.* <*gō*+வாரு-. Rinderpest; மாடுகளுக்கு வரும் வதரிநோய். (M. Cm. D. [1887] 247.)

கோவாலவண்டி kōvāla-vaṇṭi, *n.* See கோல்லாப்பண்டி. (சிலப். பக். 199, ft.)

கோவி[1] kōvi, *n.* <*kōpī* nom. sing. of *kōpin*. Angry person; கோபமுள்ளவ-ன்-ள். கோவி யவாவன் (சைவச. ஆசாரக். 17).

கோவி[2] kōvi, *n.* <*gōpī*. Shepherdess; இடைச்சி. கோவி நாயகன் (திவ். பெரியதி. 2, 1, 4).

கோவிசந்தனம் kōvi-cantaṉam, *n.* See கோபிசந்தனம். கோவிசந்தனத்தினைக் கோடு நெற்றி யில் (சேதுபு. சேதுபல. 128).

கோவிசு kōvicu, *n.* <E. Cabbage, *Brassica oleracea capitata;* முட்டைக்கோசு. (M. M. 419.)

கோவிட்டு kōviṭṭu, *n.* <*gō-viṣṭhā*. Cowdung; பசுச்சாணம். (தைலவ. பாயி. 41.)

கோவித்தியர் kōvittiyar, *n.* <கோவி[2]. Women of the sylvan tract, shepherdesses; முல்லைநிலமகளிர். (தொல். பொ. 20, உரை.)

கோவிதாரம் kōvitāram, *n.* <*kōvidāra*. 1. Bottle-flower. See தூரா. (உரி. நி.) 2. Holy mountain ebony. See காட்டாத்தி. (மலை.)

கோவிந்தக்கொள்ளி kōvinta-k-koḷḷi, *n.* <*Gō-vinda*+. Burning an unclaimed corpse with cries of 'Gōvinda'; கோவிந்தசத்தமிட்டு அநாதப்பிணத்துக்கிடுங் கொள்ளி.

கோவிந்தசதகம் kōvinta-catakam, *n.* <id.+. A *catakam* poem (of 102 stanzas) by Nārāyaṇa-pārati, each stanza explaining a proverb and ending with an address to Gōvinda; நாராயணபாரதியார் இயற்றியதும் ஒவ்

வொரு செய்யுளும் ஒவ்வொரு பழமொழியைக்கொண்டு 'கோவிந்தனே' யென்று முடியப்பெறுவதுமாகிய ஒரு சதகநூல்.

கோவிந்தம்போடு-தல் kōvintam-pōṭu-, *v. intr.* <id.+. To bow or salute uttering the name of Gōvinda; 'கோவிந்தா' என்று சொல்லிக் கையால் வணங்குதல். *Colloq.*

கோவிந்தர் kōvintar, *n.* <id. Men of the sylvan tract, herdsmen; முல்லைநிலமாக்கள். (திவா.)

கோவிந்தன் kōvintaṉ, *n.* <*Gō-vinda.* Viṣṇu; திருமால். (பிங்.)

கோவில் kō-v-il, *n.* <கோ³+இல். [T. *kōvila*, M. *kōvil.*] Temple. See கோயில்.

கோவில்வாசல்மறியல் kōvil-vācal-maṟiyal, *n.* <கோவில்+. A form of panchayat among the Nāṭṭukkōṭṭai Chetties, in which the temple-manager takes the lead, dist. fr. *maṭattu-vācal-maṟiyal;* நாட்டுக்கோட்டைச்செட்டிகள் கோயிலதிகாரியை முன்னிட்டுக்கொண்டு நடத்தும் பஞ்சாயத்து வகை. (E. T. v, 263.)

கோவில்வீடு kōvil-vīṭu, *n.* <id.+. 1. A private chapel or shrine; வீட்டிலமைந்த குல தெய்வங்களின் கோயில். (G. Tp. D. I, 91.) 2. House given in endowment to a temple; கோயிலுக்குத் தருமமாக விடப்பெற்ற வீடு. *Loc.*

கோவிலங்கு kō-vilaṅku, *n.* <கோ³+. Lion, as king of beasts; [மிருகராசன்] சிங்கம். கோவிலங்கு பொர வஞ்சமோ (பாரத. திருட்டிண. 122).

கோவிலாழ்வார் kōvil-āḻvār, *n.* <கோவில் +. See கோயிலாழ்வார்.

கோவிற்குடியான் kōviṟ-kuṭiyāṉ, *n.* <id. +. Conch-blower, a servile caste, one of 18 *kuṭi-makkaḷ*, q.v.; சங்கூதும் பணிசெய்வோன். (W.)

கோவிற்புறா kōviṟ-puṟā, *n.* <id.+. Blue rock-pigeon. See மாடப்புறா. (M. M. 99.)

கோவிற்றுறையார் kōviṟṟuṟaiyār, *n.* <id.+துறை. Staff of servants in a temple; கோயில்வேலைக்காரர். *Loc.*

கோவின்மை kōviṉmai, *n.* <id. See கோயின்மை. கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மையோ (யாப். வி. 22, உரை).

கோவுகந்தம் kōvukantam, *n.* An arsenic. See தாலம்பபாஷாணம். (யாழ். அக.)

கோவூர்கிழார் kōvūr-kiḻār, *n.* <கோவூர்+. A celebrated poet of the last Sangam; கடைச் சங்கப் புலவருள் ஒருவர். (புறநா.)

கோவெனல் kō-v-eṉal, *n.* Onom. expr. of (a) bewailing; இரங்கற்குறிப்பு: (b) making loud noise; பேரொலிசெய்தற் குறிப்பு. (உரி. நி.)

கோவேள் kō-vēḷ, *n.* <*gō*+வேள்-. cf. வேட்கோ. [K. *kōva.*] Potters; குயவர். இருங் கோவேட்களுஞ் செம்பு செய்ஞ்ஞரும் (மணி. 28, 34).

கோவேறுகழுதை kō-v-ēṟu-kaḻutai, *n.* <கோ³+ஏறு-+. cf. *rāja-vāhana.* [M. *kovarakaḻuta.*] Mule, as the mount of a king; [அரசர் ஏறும் வாகனம்] கழுதைவகை. (சிலப். 6, 119, உரை.)

கோவை kōvai, *n.* <கோ-. [T. M. *kōva.*] 1. Stringing, filing, arranging; கோக்கை. கோவை யார்வடக் கொழுங்கவடு (கம்பரா. வரைக். 1). 2. Series, succession, row; வரிசை. 3. String of ornamental beads for neck or waist; கோத்த வடம். (பிங்.) 4. Arrangement, scheme; ஏற்பாடு. கோத்த கோவை நன்றாயினும் (பாரத. சூது. 64). 5. A kind of love-poem; அகப்பொருட்கோவை. நற்றமிழ்க் கோவை யுரைசெய்த (பிரமோத். கடவுள். 8). 6. An ancient gold coin; ஒரு பழைய பொன்னாணயம். (I. M. P. N.A. 594.) 7. A common creeper of the hedges, *Coccinia indica;* கொடிவகை. கோவையங் கனிநே ரொன்ன (திருச்செந். பு. 8, 56). 8. A climbing shrub, *Bryonia epigæa;* படர்கொடிவகை. (பதார்த்த. 421.)

கோவைக்கலித்துறை kōvai-k-kali-t-tuṟai, *n.* <கோவை+. A kind of *kalittuṟai* verse. See கட்டளைக்கலித்துறை. (வீரசோ. யாப். 18, உரை.)

கோவைக்கீச்சான் kōvai-k-kīccāṉ, *n.* <id.+. A sea-fish. See கீச்சான்.

கோவைசியர் kō-vaiciyar, *n.* <*gō*+. A class of Vaiśyas whose profession is the protection of cows; பசுக்களைப் பரிபாலனஞ் செய்து வாழும் வைசிய வகையார். (பிங்.)

கோவைசூரி kō-vaicūri, *n.* See கோவசூரி.

கோவைத்துறை kōvai-t-tuṟai, *n.* <கோவை+. Theme of the stanzas in a ***kōvai*** poem; கோவைநூலில் அமைந்த அகப்பொருட்டுறை.

கோவையாணி kōvai-y-āṇi, *n.* <கோ-+ஆணி. Pegs for joining rafters together; கைமரங்களை இணைக்கும் முளை. (W.)

கோழ் kōḻ, *adj.* <கொழு-மை. 1. Slippery, oily; வழுவழுப்பான. வெண்பொனூற் கோழரை குயின்ற பூகம் (திருவிளை. திருமணப். 65). 2. Thriving, luxurious, rich; செழிப்பான. கோழிலை வாழை (அகநா. 2). 3. Fat; கொழுப்பான. கோழினத் தகர் (திருவிளை. நகரப். 79).

கோழக்கெளுத்தி kōḻa-k-keḷutti, *n.* A river-fish. See கூழக்கெளுத்தி.

கோழம் kōḻam, *n.* A mineral poison. See சங்கபாஷாணம். (யாழ். அக.)

கோழம்பம் kōḻampam, *n.* prob. குழம்பு-. cf. கோரம்பம். Confusion, tumult; குழப்பம். கொடீ ராகிற் கோழம்பமே (திவ். பெரியாழ். 3, 4, 5).

கோழரை kōḻ-arai, *n.* <கொழு-மை+அரை. Slippery tree-trunk; வழுவழுப்பான மரத்தினடி. கோழரை குயின்ற பூகம் (திருவிளை. திருமணப். 65).

கோழி kōḻi, *n.* <கொழு-. [T. *kōḍi*, K. M. *kōḻi*, Tu. *kōri*.] 1. Gallinaceous fowl; குக்குடம். குப்பை கிளைப்போவாக் கோழிபோல் (நாலடி, 341). 2. Uraiyūr, a town near Trichinopoly, once the capital of the Cholas, where a cock is said to have conquered an elephant; கோழி யானையை வென்றதாகக் கூறப்படும் இடமும் சோழராசதானியு மாகிய உறையூர். கோழி யுயர்நிலைமாடத்து (புறநா. 67, 8). 3. Grass-hopper; விட்டில். விளக்கத்திற் கோழி போன்றேன் (தேவா. 523, 5). 4. See கோழியவரை. 5. A tuberous-rooted herb. See வெருகங் கிழங்கு. (மலை.) 6. Water-nut, *Trapa bispinosa;* பன்றிமோந்தான்கிழங்கு. (மலை.)

கோழிக்கரணம் kōḻi-k-karaṇam, *n.* <கோழி+. (Astrol.) A division of time. See பத்திரை. (யாழ். அக.)

கோழிக்கல் kōḻi-k-kal, *n.* <id.+. A stone used in polishing iron; துருஞ்சிலைக்கல். (W.)

கோழிக்காசிரைக்கீரை kōḻi-k-kācirai-k-kīrai, *n.* <id.+. Sea-blite. See உமரிக்கீரை. (M. M.)

கோழிக்காமம் kōḻi-k-kāmam, *n.* <id.+. See கோழிப்போகம்.

கோழிக்காரம் kōḻi-k-kāram, *n.* <id.+. 1. Medicine in which fowl-dung is used; கோழி மலங் கூட்டிச்செய்த மருந்துவகை. 2. Medicinal broth of boiled fowl; மருந்தாக உட்கொள்ளுங் கோழியாணம். (யாழ். அக.) 3. Fowl-dung generally used in manuring soil for the ganja plant; கஞ்சாப்பயிர்க்கு உரமாகும் கோழியெரு. (J.)

கோழிக்கால்[1] kōḻi-k-kāl, *n.* perh. கோளி+. Wild pipal. See கோடியரசு. (மலை.)

கோழிக்கால்[2] kōḻi-k-kāl, *n.* <கோழி+. Cross-mark shaped like ×, as resembling a fowl's foot; கோழிக்கால்போன்ற அடையாளக்குறி வகை. *Loc.*

கோழிக்காற்புல் kōḻi-k-kāṟ-pul, *n.* <id. +. Deccan grass, *Panicum ramosum;* புல்வகை. (W.)

கோழிக்கீரை kōḻi-k-kīrai, *n.* <id.+. [T. *gōḷikūra*.] Common purslane, *Portulaca oleracea;* பருப்புக்கீரை. (பதார்த்த. 604.)

கோழிக்குடாப்பு kōḻi-k-kuṭāppu, *n.* <id. +. See கோழிக்கூடு.

கோழிக்குடி kōḻi-k-kuṭi, *n.* perh. id. Indian mast-tree. See அசோகு. (L.)

கோழிக்குரல் kōḻi-k-kural, *n.* <id.+. See கோழிகூவுநேரம். (யாழ். அக.)

கோழிக்கூடு kōḻi-k-kūṭu, *n.* <id.+. Hen-coop, fowl-house; கோழியை அடைத்துவைக்கும் இடம். *Colloq.*

கோழிக்கொடி kōḻi-k-koṭi, *n.* <id.+. See கோழியவரை. (மலை.)

கோழிக்கொடியோன் kōḻi-k-koṭiyōṉ, *n.* <id.+. Lit., one having a cock on his banner. [கோழியைக் கொடியிற் கொண்டவன்] 1. Skanda; முருகக்கடவுள். கோழிக் கொடியோன்றன் குறை போலும் (தேவா. 253, 2). 2. Aiyaṉār; ஐயனார். (திவா.)

கோழிக்கொண்டை kōḻi-k-koṇṭai, *n.* <id.+. Cockscomb, ornamental shrub, *Celosia cristata;* சாவற்சூட்டுப்பண்ணை. (மலை.)

கோழிகிண்டு-தல் kōḻi-kiṇṭu-, *v. intr.* To scrawl, scribble; உருத்தெரியாதபடி எழுதுதல். *Colloq.*

கோழிகூவல் kōḻi-kūval, *n.* <id.+. See கோழிகூவுநேரம். (யாழ். அக.)

கோழிகூவுநேரம் kōḻi-kūvu-nēram, *n.* <id.+. Daybreak, as the time of cock-crowing; [கோழி கூவும் சமயம்] விடியற்காலம். *Colloq.*

கோழிச்சூடன் kōḻi-c-cūṭaṉ, *n.* <id.+ *cūḍā*. See கோழிக்கொண்டை. (J.)

கோழிச்சேவல் kōḻi-c-cēval, *n.* <id.+. Cock; ஆண்கோழி. கோழிச்சேவற் கொடியோன் கோட்டமும் (சிலப். 14, 10).

கோழித்தலைக்கந்தகம் kōḻi-t-talai-k-kantakam, *n.* perh. id.+தலை+. Red sulphur, a prepared arsenic; வைப்புப்பாஷாண வகை. (W.)

கோழிநூல் kōḻi-nūl, *n.* <id.+. Treatise on cock-fighting; கோழிகளின் போர்த் திறங்களைக் கூறும் நூல். (பு. வெ. 12, வென்றிப். 6, உரை.)

கோழிநெஞ்சு kōḻi-neñcu, *n.* <id.+. cf. கோழைநெஞ்சு. Chicken-heart; அஞ்சிநடுங்கும் மனம். (யாழ். அக.)

கோழிப்பசளை kōḻi-p-pacaḷai, *n.* <id.+. Sea-blite. See உமரிக்கீரை. (L.)

கோழிப்பறவை kōḻi-p-paṟavai, *n.* <id.+. Short distance, distance of a fowl's flight; கோழிபறக்குந் தூரவளவு. (J.)

கோழிப்பிராணன் kōḻi-p-pirāṇaṉ, *n.* <id. +. Weakling, as a cock; [கோழிபோன்று உயிர் வன்மையற்ற பிராணி] சத்தியற்றவ-ன்-ள்-து.

கோழிப்புடம் kōḻi-p-puṭam, *n.* <id. +. A mode of calcination in preparing medicine. See தக்குடபுடம். (மூ. அ.)

கோழிப்பூ kōḻi-p-pū, *n.* <id. +. Cocks-comb; கோழியின் தலைச்சூட்டு. *Loc.*

கோழிப்போகம் kōḻi-p-pōkam, *n.* <id. +. Sexual union attended with a very early discharge of semen; விரைவில் இந்திரியஸ்கலிதம் உண்டாம் புணர்ச்சி. *Loc.*

கோழிபஸ்மம் kōḻi-pasmam, *n.* <id. +. A kind of medicinal powder prepared from eggs; கோழிமுட்டைக் கருவினின்று செய்யும் பஸ்மம். (யாழ். அக.)

கோழிமீன் kōḻi-mīṉ, *n.* prob. id. +. Sturgeon, blackish-brown, attaining 18 in. in length, *Achanthurus gahm;* பதினெட்டங்குல நீளமும் கரு நிறமுமுள்ள கடல்மீன்வகை.

கோழிமுட்டை kōḻi-muṭṭai, *n.* <id. +. Lit., hen's egg. Cipher; [கோழியின் முட்டை] பூச்சியம். *Colloq.*

கோழிமுட்டைத்தைலம் kōḻi-muṭṭai-t-tailam, *n.* <id. +. Medicinal oil extracted from hen's eggs, used for fits, spasms, etc.; மாந்தம் வலிப்பு முதலியவற்றுக்கு மருந்தாகக் கோழி முட்டையிலிருந்து இறக்கும் தைலம். (W.)

கோழிமுள் kōḻi-muḷ, *n.* <id. +. Hooked claws of a cock; கோழிக்காலிலுள்ள கூரிய நகம். *Loc.*

கோழிமுள்ளி kōḻi-muḷḷi, *n.* perh. id. +. Holly-leaved bear's-breech. See கழுதைமுள்ளி. (L.)

கோழிமுளையான் kōḻi-muḷaiyāṉ, *n.* perh. id. +. Large-flowered purslane, *Portulaca quadrifida;* ஒருவகைப் பூடு. (யாழ். அக.)

கோழியவரை kōḻi-y-avarai, *n.* perh. id. +. 1. Sword-bean, m. cl., *Canavalia ensiformis;* அவரைவகை. (பதார்த்த. 572.) 2. West Indian seaside-bean, m. cl., *Canavalia obtusifolia;* பெருங்கோழியவரைக்கொடி. (A.)

கோழியாகக்கூவு-தல் kōḻi-y-āka-k-kūvu-, *v. intr.* <id. +. Lit., to crow like a cock. To entreat, importune; [கோழிபோலக் கூவுதல்] மன்றாடுதல். *Loc.*

கோழியாணம் kōḻi-y-āṇam, *n.* <id. +. **Chicken broth;** கோழிக்குழம்பு ரசம். (W.)

கோழியுள்ளான் kōḻi-y-uḷḷāṉ, *n.* <id. +. Jack snipe, *Gallinago gallimula;* ஒருவகை உள்ளான். (W.)

கோழிவென்றி kōḻi-veṉṟi, *n.* <id. +. (Puṟap.) Theme describing the victory of a cock in cock-fight; சேவலின் போர்வெற்றியைக் கூறும் புறத்துறை. (பு. வெ. 12, வென்றிப். 6.)

கோழிவேந்தன் kōḻi-vēntaṉ, *n.* <id. +. Chola, as the king of Uṟaiyūr; [உறையூர் அரசன்] சோழன். (திவா.)

கோழை kōḻai, *n.* prob. கொழு-மை. 1. [K. *kōḷe.*] Phlegm, mucus; கபம். கோழைமிடறாக (தேவா. 263, 1). 2. Saliva; உமிழ் நீர். கோழை வடிதல். 3. cf. *kōca.* [M. *kōḻa.*] Bashfulness, timidity; மனத்திட்பமின்மை. கோழை மனத்தை (திருப்பு. 366). 4. Tender-heartedness; இரக்கம். *Colloq.* 5. Bashful, timid person; மனத்திட மில்லாதவன். கோழைகளா யிருப்பாரை (ஈடு, 9, 3, 6). 6. Child; சிறுபிள்ளை. பருவமுறாக் கோழை யறியுமோ (விநாயகபு. 72, 132).

கோழைக்கட்டு kōḻai-k-kaṭṭu, *n.* <கோழை +. Accumulation of phlegm in the bronchial tubes; சுவாசக்குழலிற் கட்டும் கபத்திரட்சி.

கோழைத்தனம் kōḻai-t-taṉam, *n.* <id. +. Bashfulness, timidity, cowardice; மனத்திடமின்மை.

கோழைதீர்-தல் kōḻai-tīr-, *v. intr.* <id. +. To overcome bashfulness or timidity; மனத்திடம் பெறுதல். *Loc.*

கோழைபடு-தல் kōḻai-paṭu-, *v. intr.* <id. +. To dwindle, decrease; கீழ்மையடைதல். மேழிச் செல்வங் கோழைபடாது (கொன்றைவே.).

கோழைபோக்கி kōḻai-pōkki, *n.* <id. +. A fragrant convolvulus; நறுந்தாளி. (சங். அக.)

கோழையறுக்குஞ்சூரன் kōḻai-y-aṟuk-kuñ-cūraṉ, *n.* <id. +. Long-pepper; திப்பலி. (சங். அக.)

கோழையறுப்பான் kōḻai-y-aṟuppāṉ, *n.* <id. +. Vegetable expectorant, as loosening phlegm; கோழையைப் போக்கும் பூடு.

கோழையன் kōḻaiyaṉ, *n.* <id. Bashful or timid person, coward; மனத்திடமற்றவன்.

கோழையிருமல் kōḻai-y-irumal, *n.* <id. +. Cough occasioned by the accumulation of phlegm; கபக்கட்டால் வரும் இருமல். (J.)

கோழைவிந்து kōḻai-vintu, *n.* <id. + perh. *bhēdin.* Holy basil; துளசி. (மலை.)

கோள்[1] kōḷ, *n.* <கொள்-. 1. [T. *kōlu*, M. *kōḷ*.] Taking, receiving, accepting, seizing, holding, enveloping; கொள்ளுகை. *கோளிரு ளிருக்கை* (பரிபா. 4, 57). 2. Opinion, tenet, creed; decision, determination, conclusion; துணிபு. *மாசற்றார் கோள்* (குறள், 646). 3. Estimation, appraising, valuation; மதிப்பு. *தம்மைத்தாங் கொள் வது கோளன்று* (நாலடி, 165). 4. Strength, power, ability; வலிமை. (பிங்.) 5. Quality, nature, character; தன்மை. *யாக்கைக்கோ ளெண்ணார்* (நாலடி, 18). 6. Enjoyment, experience; அனு பவம். *என்னுருயிர் கோளுண்டே* (திவ். திருவாய். 9, 6, 7). 7. [K. *kōḷ*.] Calumny, aspersion, back-biting, tale-bearing; குறளை. *கோட்செவிக் குறளை காற்றுடனெருப்பு* (கொன்றைவே.). 8. Falsehood; பொய். (சூடா.) 9. Impediment, obstacle; இடையூறு. (திவா.) 10. Evil, vice; தீமை. (திவா.) 11. Killing, murder; கொலை. *கோணிளைக்குறித்து வந்தான்* (சீவக. 264). 12. Serpent; பாம்பு. (சீவக. 320, உரை.) 13. cf. *ghōra*. Poison; விஷம். 14. Ascending node; இராகு. *கோள்வாய் மதியம் நெடியான் விடுத்தாங்கு* (சீவக. 454). 15. Planet; கிரகம். *எல்லாக் கோளு நல்வழி நோக்க* (பெருங். இலாவாண. 11, 70). 16. Cloud; மேகம். *கோளொடு குளிர்மதி வந்து வீழ்ந்தென* (சீவக. 320). 17. Brilliance, light; ஒளி. *முன்னைக் கோளரியே* (திவ். திருவாய். 2, 6, 6). 18. cf. *gōla*. Halo; பரிவேடம். *மதியங் கோள்வாய் விசும்பிடை* (சீவக. 1098). 19. Cluster; குலை. *செழுங்கோள் வாழை* (புறநா. 168, 13). 20. Citronella grass. See காவட்டம்புல். (மலை.) 21. Ploughshare; கொழு. (திவா.)

கோள்[2] kōḷ, *part.* Corr. of *கள்*. Verbal ending of the second pers. pl.; முன்னிலைப் பன்மை விகுதி. *புறப்பற்றுத் தள்ளுங்கோள்* (அஷ்டப். நூற்றெட். 58).

கோள்குண்டணி kōḷ-kuṇṭaṇi, *n.* <கோள்[1] +. Tale-bearing, calumny; புறங்கூறுகை. *Loc.*

கோள்பிராது kōḷ-pirātu, *n.* <id. +. Tale-bearing; குறளைகூறுகை. *Loc.*

கோள்முடி-த்தல் kōḷ-muṭi-, *v. intr.* <id. +. *Loc.* 1. To tell tales; புறந்தூற்றுதல். 2. To create mischief by slanderous reports; கோட் சோல்லி இருவருக்குள் கலகம் விளைத்தல்.

கோள்வாய் kōḷ-vāy, *n.* <id. +. Fresh wound; புதுப்புண். *கலக்குபிரிந்த கோள்வாய் பொறுக்க வரிதாயிருக்கும்* (ஈடு, 6, 2, ப்ர.).

கோளக்கட்டி kōḷa-k-kaṭṭi, *n.* <*gōla* +. Glandular tumour; புண்வகை. (இங். வை. 307.)

கோளகபாஷாணம் kōḷaka-pāṣāṇam, *n.* <*gōlaka* +. A mineral poison; பிறவிப்பாஷாண வகை. (மூ. அ.)

கோளகம்[1] kōḷakam, *n.* <*kōlaka*. (மலை.) 1. Common pepper; மிளகு. 2. cf. கோலகம். Long-pepper; திப்பலி.

கோளகம்[2] kōḷakam, *n.* <*gōlaka*. 1. See கோளகபாஷாணம். 2. Yellow sulphide of arsenic; தாளகம். (சங். அக.) 3. Viper; மண்டல விரியன். (பிங்.)

கோளகன் kōḷakaṉ, *n.* <*gōlaka*. Widow's son; விதவைபெற்ற மகன். (திவா.)

கோளகை kōḷakai, *n.* <id. 1. Sphere, globe, orb; வட்டவடிவம். *அண்டகோளகைப் புறத்த தாய்* (கம்பரா. அகலிகைப். 60). 2. Ornamental ring, as of an elephant's tusk; யானைக்கிம்புரி. (பிங்.) 3. A large viper; மண்டலிப்பாம்பு. (சூடா.) 4. Envelope, receptacle, socket; உறை. (W.)

கோளம் kōḷam, *n.* <*gōla*. Ball, orb, globe, sphere; உருண்டை. 2. Gland; பிராணி களின் உடலில் நீருறுந் தசைப்பற்று. *கோளக்கட்டி*.

கோளயோகம் kōḷa-yōkam, *n.* <id. +. (Astrol.) Conjunction of seven planets in one house; ஓர் இராசியிலே ஏழுகிரகங்கள் நிற்கவரும் யோகம். *ஒருராசி தன்னிலேதா னேரேழு கோளு நிற்கி லிருமையாங் கோளயோகம்* (சாதகசிந். 2045).

கோளரி kōḷ-ari, *n.* <கோள்[1] + அரி. [M. *kōḷari*.] Lion; சிங்கம். (பிங்.)

கோளரிக்கொடியோன் kōḷari-k-koṭiyōṉ, *n.* <கோளரி +. Bhīma, as having a lion-banner; [சிங்கக்கொடியோன்] வீமன். (பிங்.)

கோளரிஞ்சான் kōḷ-ariñcāṉ, *n.* perh. கோள்[1] + அரி-. Carp, leaden-grey, attaining 9½ in. in length, *Labeo ariza;* 9½ அங்குல நீளமும் சாம்பனிறத்ததுமான ஆற்றுமீன்வகை.

கோளவங்கம் kōḷa-vaṅkam, *n.* perh. *gōla* +. Lead ore; ஈயமணல். (சங். அக.)

கோளன்[1] kōḷaṉ, *n.* <கோள்[1]. Tale-bearer; குறளைகூறுவோன். *பெருமஞ்சிகன் கோளன்* (தணி கைப்பு. அகத். 345).

கோளன்[2] kōḷaṉ, *n.* See கோளகன். *கோள ரிருக்கு மூர்* (தனிப்பா. i, 64, 127).

கோளா kōḷā, *n.* <*gōla*. 1. Balls of minced mutton or vegetables mixed with powdered spices and fried in ghee; வாசனைப் பண்டங்கலந்ததும் இறைச்சி முதலியவற்றை உள்ளீடா கக்கொண்டதுமான ஒருவகை உண்டையுணவு. *Loc.* 2. Balls of ganja drug inducing stupor; மயக் கத்தையுண்டுபண்ணும் கஞ்சாவுருண்டை.

கோளாங்கல் kōḷāṅ-kal, *n.* <id. +. Pebbles. See கூழாங்கல். (J.)

கோளாம்பி kōḷāmpi, *n.* < id. + prob. ஆம்பி. Spittoon; படிக்கம். *Loc.*

கோளார்த்தம் kōḷārttam, *n.* < id. + *ardha*. Earth's hemisphere; பூகோளத்தின் பாதி. *Mod.*

கோளாளன் kōḷ-āḷaṉ, *n.* < கோள்[1] + ஆள்-. A man of retentive memory or of firm grasp; நூற்பொருள்முதலியவற்றை மறவாது உட்கொள்பவன். *கோளாள னென்பான் மறவாதான்* (திரிகடு. 12).

கோளாறு kōḷ-āṟu, *n.* < id. + ஆறு[1]. 1. Disorder; தாறுமாறு. 2. Fault; குற்றம். 3. Quarrel, tumult, scuffle; சண்டை. (J.) 4. Means, expedient; உபாயம். *அந்தக் காரியம் முடியும்படி நான் ஒரு கோளாறு சொல்லுகிறேன். Loc.* 5. Aim; இலக்கு. *கோளாறு பார்த்து எறிந்தான். Loc.*

கோளி[1] kōḷi, *n.* < கொள்-. 1. Receiver; கொள்வோன். (சூடா.) 2. (Gram.) Dative case; நான்காம் வேற்றுமை. *ஒண்கோளியொடு* (வீரசோ. வேற். 1). 3. Banyan. See ஆல். (பிங்.) 4. Country fig. See அத்தி. (பிங்.) 5. Tree bearing fruit without outwardly blossoming; பூவாது காய்க்கும் மரம். *கொழுமென் சினைய கோளியுள்ளும்* (பெரும்பாண். 407). 6. Sylhet orange. See கொழிஞ்சி. (பிங்.)

கோளி[2] kōḷi, *n.* < *gōla*. See கோளகன். (திவா.)

கோளி[3] kōḷi, *n.* See கோளிகை. *குண்டேமுங் கோளியோ ராறும்* (திருக்காளத். பு. 13, 30).

கோளிகை kōḷikai, *n.* < *ghōṭikā*. Female of a horse or ass; குதிரை கழுதைகளின் பெட்டை. (யாழ். அக.)

கோளியம் kōḷiyam, *n.* Country mallow. See துத்தி. (பிங்.)

கோளிழை-த்தல் kōḷ-iḻai-, *v. tr.* < கோள்[1] + To kill; கொல்லுதல். *குஞ்சரங் கோளிழைக்கும் பாம்பை* (திருக்கோ. 21).

கோளுரை kōḷ-urai, *n.* < id. + உரை. Slanderous report; குறளைமொழி. *கோளுரைகள் பேசொணுது* (அறப். சத. 8).

கோளேசம் kōḷēcam, *n.* < *kālēyaka*. Saffron; குங்குமப்பூ. (மலை.)

கோளை[1] kōḷai, *n.* < சோள்[1]. Rat; எலி. (யாழ். அக.)

கோளை[2] kōḷai, *n.* Corr. of குவளை.

கோளைக்குத்து kōḷai-k-kuttu, *n.* < கோழை + Acute throbbing pain in the chest from phlegm; கபக்கட்டாலுண்டாகும் மார்புக்குத்து. (J.)

கோறகணக்குக்குழிக்கணக்கு kōṟ-kaṇakku-k-kuḻi-k-kaṇakku, *n.* < கோல்[1] +. Land-surveying; computing the extent of a land in *kuḻi*, with a measuring rod; கோலால் அளந்து கொள்ளப்பட்ட நிலத்தின் குழிக்கணக்கு. *Loc.*

கோற்காரன் kōṟ-kāraṉ, *n.* < id. +. [K. *kōlūkāra*, M. *kōlkāran*, Tu. *kōlukārē*.] Lit., one having a staff. [கோலையுடையவன்] 1. A village-servant; கிராம ஊழியக்காரன். (G. Sm. D. I, i, 127.) 2. Ferryman; ஓடந்தள்ளுவோன். *Loc.*

கோற்குத்து kōṟ-kuttu, *n.* < id. +. Bit of land coverable by the end of a staff when planted on the ground; கோல்முனையாற் குத்தப்படும் அளவுள்ள நிலம். *பந்துக்களுக்கு ஒரு கோற் குத்துங் கொடேன்* (ஈடு, 7, 5, ப்ர.).

கோற்குறிப்பு kōṟ-kuṟippu, *n.* < id. +. Abstract of land-survey; நிலவளவுக் கணக்கு. (W. G.)

கோற்கூத்து kōṟ-kūttu, *n.* prob. id. +. A kind of masquerade dance; வரிக்கூத்துவகை. *கோத்த பறைக்குடும்பு கோற்கூத்து* (சிலப். 3, 13, உரை).

கோற்கொடி[1] kōṟ-koṭi, *n.* < id. +. 1. A species of creeper; கொடிவகை. (திவா.) 2. Calabash. See சுரை. (மலை.)

கோற்கொடி[2] kōṟ-koṭi, *n.* < *kōla* +. Jujube tree. இலந்தைவகை. (பிங்.)

கோற்பிரமாணம் kōṟ-piramāṇam, *n.* < கோல்[1] +. Statement of the whole extent of a village and its lands whether cultivated or waste; கிராமத்தின் நில விஸ்தீரணக் கணக்கு. *Loc.*

கோற்புழு kōṟ-puḻu, *n.* < id. +. Caseworm. See உலண்டு. (பிங்.)

கோற்றகைமாக்கள் kōṟṟakai-mākkaḷ, *n.* < id. + தகை- +. Warriors armed with sticks; கோல்கொண்டு காக்கும் வீரர். *மிலைச்சருஞ் சிலதருங் கோற்றகை மாக்களும்* (பெருங். உஞ்சைக். 42, 24).

கோற்றேன் kōṟṟēṉ, *n.* < id. + தேன். Superior wild honey, as found on tree-branches; கொம்புத்தேன். *காலனை யோலமிட வடர்த்த கோற் றேன்* (திருக்கோ. 150).

கோற்றொடி kōṟṟoṭi, *n.* < id. + தொடி. Bangles of fine workmanship; வேலைத்திறமமைந்த கை வளையல். *கோற்றொடி மாதரொடு* (சிலப். 26, 121).

கோற்றொழில் kōṟṟoḻil, *n.* < id. + தொழில். 1. Rule or government of a kingdom, as symbolically expressed by sceptre-wielding;

[செங்கோல் செலுத்துதற் றொழில்] அரசாட்சி செய்கை. கோற்றொழிற் கொற்றம் (பெருங். மகத. 23, 60). 2. Fine workmanship; அரிய வேலைப்பாடு. கோற்றொழில் விளங்குந் தொடி (கலித். 100, உரை).

கோற்றொழிலவன் kōṟṟoḻilavaṉ, *n.* <கோற்றொழில். Guard or watchman armed with a stick, stationed at the porch of a king's palace; ஆசாரவாசலிற் கோல்கொண்டு காவல்செய்பவன். கோற்றொழிலவற்குக் கூறினனிற்ப (பெருங். உஞ்சைக். 47, 10).

கோற்றொழிலாளர் kōṟṟoḻil-āḷar, *n.* <id. +. King's attendants armed with sticks, their duty being to disperse the crowd and clear the way for the king to pass; தண்டத்தைக் கையேந்தி அரசர்க்குமுன் வழிவிலக்குவோர். கோற்றொழிலாளர் மாற்றுமொழி யியம்ப (பெருங். உஞ்சைக். 58, 76).

கோறணி kōṟaṇi, *n.* See கோரணி. (யாழ். அக.)

கோறம்பு kōṟampu, *n.* [K. *kōramba.*] An ancient ornament for the forehead; ஒருவகை நெற்றியணி. நெற்றிமேற் றிருத்திய கோறம்புந் திருக்குழலும் (திவ். பெரியாழ். 3, 4, 6).

கோறல் kōṟal, *n.* <கொல்-. Killing, slaying; கொல்லுகை. கோறல் பிறவினை யெல்லாந் தரும் (குறள், 321).

கோறின்னல் kōṟiṉṉal, *n.* <கோல்¹ + தின்-. Lit., biting a stick. Cleaning the teeth; [கோலை மெல்லுகை] பல்விளக்குகை. விதித்த கோறின்று (காஞ்சிப்பு. ஒழுக். 8).

கோறை kōṟai, *n.* perh. குறை³. 1. Defect, blemish; பழுது. *Loc.* 2. Scratch, as on the body; சிராய்த்த காயம். *Loc.* 3. Hole, cavity, hollow, as in a tooth, in fistula; துவாரம். (W.) 4. Socket; மணிபதிக்குந் துவளை. (W.)

கோறைபடு-தல் kōṟai-paṭu-, *v. intr.* <கோறை+. *Loc.* 1. To be injured, as clothes, fruits; பழுதாதல். 2. To have a scratch, as on the body; சிராய்த்த காயமுண்டாதல்.

கோறையா-தல் kōṟai-y-ā-, *v. intr.* <id. +. 1. To be injured or spoiled; பழுதுபடுதல். 2. To become hollow; துழியாதல். (J.)

கோறைவை-த்தல் kōṟai-vai-, *v. intr.* <id.+. See கோறையா-. (J.)

கோன்¹ kōṉ, *n.* <கோ³. [M. *kōn.*] 1. King; அரசன். 2. Master, lord; தலைவன். உண்மையுமா யின்மையுமாய்க் கோனாகி (திருவாச. 5, 15).

கோன்² kōṉ, *n.* <*gō.* See கோனான். *Loc.*

கோன்மை kōṉmai, *n.* <கோல்¹. [M. *kōṉma.*] Rule, sovereignty; அரசாட்சி. பாய்திரையுலகக் கோன்மை (உபதேசகா. சிவத்துரோ. 276).

கோனடிதொடு-தல் kōṉ-aṭi-toṭu-, *v. intr.* <கோன்¹+. To swear upon king's feet; அரசனடிமேல் ஆணையிடுதல். உசாவுவங் கோனடி தொட்டேன் (கலித். 94, 36).

கோனாடு kō-nāṭu, *n.* <id. + நாடு. A division of Chola country; சோணாட்டு உட்பிரிவுகளுள் ஒன்று. (புறநா. 54.)

கோனான் kōṉāṉ, *n.* <*gō.* [T. *kōnāri.*] Title of the Iṭaiyar caste; இடையர் பட்டப்பெயர். எந்தக் கோனான்றன் கையிற் கொடுத்தானோ (விறலிவிடு. 703).

கோனிச்சி kōṉicci, *n.* <id. A woman of Iṭaiyar caste; இடைச்சி. (யாழ். அக.)

கோனேரி kōṉ-ēri, *n.* <கோன்¹+. A sacred tank on Tirupati Hills, Svāmi-puṣkariṇi by name; திருப்பதியிலுள்ள சுவாமிபுஷ்கரிணி என்னும் பொய்கை. கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே (திவ். பெருமாள். 4, 1).

கோனேரியப்பமுதலியார் kōṉēri-y-appa-mutaliyār, *n.* The author of the Tamil Upatēca-kāṇṭam; தமிழில் உபதேசகாண்டம் பாடிய ஆசிரியர்.

கோனோலை kōṉ-ōlai, *n.* <கோன்¹+. Written order of a king; அரசாணை எழுதப்பட்ட திருமுகம். (S. I. I. ii, 351.)

கோஷ்டம்¹ kōṣṭam, *n.* <*kuṣṭha.* 1. Costus shrub, *Saussurea lappa;* ஒருவகை வாசனைச் செடி. (M. M.) 2. Arabian costum, m. sh., *Costus speciosus;* ஒருவகைச்செடி. 3. Putchock; வாசனைப்பண்டவகை.

கோஷ்டம்² kōṣṭam, *n.* <*ghōṣa.* Tumult, uproar, boisterousness, as of the sea; ஆரவாரம். *Loc.*

கோஷ்டி¹ kōṣṭi, *n.* <*gōṣṭhī.* 1. Assembly, congregation; கூட்டம். விர்தாகோஷ்டி யென்னிலே செல்வசெத்தனை (தாயு. ஆனந்தமான. 1). 2. Row, order, as of reciters of sacred works in the presence of the idol; தெய்வசந்நிதி முதலியவற்றில் திருவாய்மொழி முதலியன சொல்வார் இருக்கும் வரிசை. *Vaiṣṇ.*

கோஷ்டி² kōṣṭi, *n.* See கோட்டி, 1, 3, 4.

கோஷ்டிவிலக்கு-தல் kōṣṭi-vilakku-, *v. intr.* <id.+. To arrange *kōṣṭi* in orderly rows, as in the presence of an idol; சந்நிதி முதலியவற்றில் கூட்டத்தை வரிசையாகநிற்கும்படி செய்தல். *Vaiṣṇ.*

கோஷ்பாதம் kōṣpātam, *n.* <*gō-ṣ-pada.* Bit of land coverable by cow's foot; பசுவின் பாதக்குவட்டினளவுள்ள நிலம். அவனுக்குக் கோஷ்பாதங்கூடப் பூமி இல்லை. *Loc.*

கோஷ்பாரா kōṣpārā, *n.* <U. *gōṣwāra.* Abstract of account; கணக்குச் சுருக்கம்.

கோஷ்வாரா kōṣvārā, *n.* <id. See கோஷ்பாரா. *Loc.*

கோஷம் kōṣam, *n.* <*ghōṣa.* 1. Noise, roar, thunder; பேரொலி. 2. Herdsmen's quarters; இடைச்சேரி. *கங்கையிற் கோஷமென்றும்* (கைவல். தத். 79).

கோஷா kōṣā, *n.* <U. *gōṣa.* Zenana lady, purdahnashin; அன்னிய புருஷர் காணாதபடி திரையிட்டு வாழும் பெண்கள். *Colloq.*

கோஷி-த்தல் kōṣi-, *11 v. intr.* <*ghōṣa.* To sound, roar; ஒலித்தல். *டமாரங்கள் கோஷிப்ப* (பணவிடு. 71).

கோஸ்தா kōstā, *n.* <E. *coast.* Sea-coast; கடற்கரை. (C. G.)

கௌ

கௌ[1] kau. The compound of க் and ஔ.

கௌ[2] kau, *n.* cf. Mhr. *gallā.* Horse-gram; கொள்ளு. (மலை.)

கௌசல்யம் kaucalyam, *n.* <*kauśalya.* Ability; திறமை. *சிற்பகௌசல்யத்துடனே குண்டமண்டபவேதிகளைச் சமைத்து* (சி. சி. 8, 3, சிவாக்.).

கௌசலம் kaucalam, *n.* 1. See கௌசல்யம். 2. Art, artfulness; தந்திரம். *Loc.*

கௌசலை kaucalai, *n.* <*Kausalyā.* Rama's mother; இராமபிரான் தாய். *மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே* (திவ். பெருமாள். 8, 1).

கௌசனம் kaucaṉam, *n.* cf. *ku-vasana.* See கௌபீனம். *Loc.*

கௌசனை kaucaṉai, *n.* <*kōśa.* 1. [T. *gausena.*] Cover, envelope; உறை. 2. Cushion or pad for a rider on a horse or elephant; குதிரைமுதலியவற்றின் மேற்றவிசு. (W.)

கௌசாம்பி kaucāmpi, *n.* <*Kauśāmbī.* An ancient city on the banks of the Ganges in the lower part of the Doab; கங்கைக் கரையிலுள்ள ஒரு பழைய நகரம்.

கௌசிகம்[1] kaucikam, *n.* <*kauśika.* 1. Owl; கூகை. (பிங்.) 2. Silk cloth; பட்டாடை. (பிங்.) 3. (Mus.) A primary melody-type; பண்வகை. (சிலப். 6, 35, உரை.)

கௌசிகம்[2] kaucikam, *n.* Lamp-stand. விளக்குத்தண்டு. (பிங்.)

கௌசிகன் kaucikaṉ, *n.* <*Kauśika.* Lit., descendant of Kuśika. [குசிக வமிசத்தான்] 1. Viśvāmitra; விசுவாமித்திரன். *கௌசிகன் சொல்லுவான்* (கம்பரா. மிதிலை. 42). 2. Indra; இந்திரன். (பிங்.)

கௌசுகம் kaucukam, *n.* <*kauśika.* Tripterocarp dammar. See தங்கிலியம். (மலை.)

கௌஞ்சம் kauñcam, *n.* <*krauñca.* See கிரவுஞ்சம். (சூடா.)

கௌடநடை kauṭa-naṭai, *n.* <*gauḍa*+. See கௌடநெறி. (W.)

கௌடநெறி kauṭa-neṟi, *n.* <id.+. (Rhet.) The *kauṭam* style of poetry characterised mainly by verbosity, dist. fr. *vaitaruppa-neṟi;* செறிவு முதலிய வைதருப்பநெறிக்குரிய குணங்கள் நிரம்பிவாராமல் சொற்பெருகத் தொடுக்குஞ் செய்யுணெறி. (தண்டி. 12, உரை.)

கௌடம்[1] kauṭam, *n.* <*Gauḍa.* 1. The district of Gaur, central part of Bengal extending from Vanga to the borders of Orissa; வங்காளமத்தியத்தில் உள்ள ஒரு தேசம். 2. (Rhet.) See கௌடநெறி. (தண்டி. 14.)

கௌடம்[2] kauṭam, *n.* A medicinal creeper; மூலிகைவகை. (W.)

கௌடி kauṭi, *n.* prob. *gauḍī.* A musical mode. See கவுடி[2]. (பிங்.)

கௌடிலம் kauṭilam, *n.* <*kauṭilya.* Bend, curve, crookedness; வளைவு. (மணி. அரும்.)

கௌடிலியர் kauṭiliyar, *n.* <*Kauṭilya.* Cāṇakya, the author of a treatise on Polity in Sanskrit; வடமொழியில் அர்த்தசாஸ்திரம் இயற்றிய சாணக்கியன்.

கௌண்டன் kauṇṭaṉ, *n.* A caste title. See கவுண்டன், 1.

கௌணப்பொருள் kauṇa-p-poruḷ, *n.* <*gauṇa*+. Secondary meaning or sense of a word, metaphorical sense, opp. to *mukkiya-p-poruḷ;* இலக்கணைவகையாற் கொள்ளும் பொருள். (சி. சி. பாயி. 2, ஞானப்.)

கௌணம் kauṇam, *n.* <*gauṇa.* That which is subordinate or secondary; முக்கியமல்லாதது.

கௌணாவதாரம் kauṇāvatāram, *n.* <id. +*ava-tāra.* Secondary or partial incarnation in which God's spirit enters and works through a human being; ஒரு நிமித்தம்பற்றித் தன்சக்தியை ஒருவர்பால் ஏறிட்டு நிகழ்த்தும் தெய்வ அவதாரம்.

கௌணியன் kauṇiyaṉ, *n.* <*kauṇḍinya.* One born in Kauṇḍinya gōtra. See கவுணியன்.

கௌத்துவக்காரன் kauttuva-k-kāraṉ, *n.* <கௌத்துவம்[3]+. Deceitful person; வஞ்சகன்.

கௌத்துவம்[1] kauttuvam, *n.* prob. கைத்தலம். The 13th *nakṣatra;* அத்தநாள். (திவா.)

கௌத்துவம்[2] kauttuvam, *n.* <*kaustubha.* 1. See கௌஸ்துபம். கௌத்துவமுடைக் கோவிந்தன் (திவ். பெரியாழ். 4, 5, 8). 2. A kind of ruby; பதுமராகம். (சூடா.)

கௌத்துவம்[3] kauttuvam, *n.* cf. *kaitava.* Deceit. See கவுத்துவம்[1].

கௌத்துவவழக்கு kauttuva-vaḻakku, *n.* <கௌத்துவம்[3]+. Barratry, vexatious litigation, false suit; பொய்வழக்கு. *Loc.*

கௌதகம் kautakam, *n.* Capital of a pillar, wooden piece attached to a wall supporting the main beam of a house; போதிகை. *Nāñ.*

கௌதம்[1] kautam, *n.* Common kingfisher. See கவுதம். (W.)

கௌதம்[2] kautam, *n.* Cornice; வீட்டுச் சுவர்களில் நாற்புறமுஞ் சுற்றியமைக்கப்பெறும் கட்டுமானவகை. *Tinn.*

கௌதமம் kautamam, *n.* <*Gautama.* Dharmasūtra by Gautama, one of 18 *taruma-nūl,* q.v.; தருமநூல் பதினெட்டனுள் கௌதமரால் இயற்றப்பட்ட நூல்.

கௌதமன் kautamaṉ, *n.* <*Gautama.* 1. An ancient Ṛṣi, husband of Ahalyā; ஒரு முனிவர். 2. The founder of the Nyāya system of Indian philosophy; நியாயசாஸ்திரஞ் செய்த அக்கபாதர். 3. The Buddha; புத்தன். 4. Kṛpācārya, a preceptor of the Pāṇḍavas; கிருபாசாரியர். முன்னிருந்த கௌதமன் (பாரத. வாரணா. 66).

கௌதமனார் kautamaṉār, *n.* <id. A poet of the first Sangam; தலைச்சங்கப் புலவருள் ஒருவர். (தொல். பொ. 75, உரை.)

கௌதமி kautami, *n.* <*Gautamī.* 1. A river; ஒரு நதி. (பிங்.) 2. Bezoar-stone; கோரோசனை. (W.)

கௌதமை kautamai, *n.* See கௌதமி. (W.)

கௌதாரி kautāri, *n.* See கவுதாரி.

கௌதுகம் kautukam, *n.* <*kautuka.* 1. Joy, pleasure; மகிழ்ச்சி. 2. Legerdemain, jugglery; சாலவித்தையாட்டு. கதுமெனத்தரும் விஞ்சையர் கௌதுகம் போல (சேதுபு. காசிப. 37). 3. Thread worn on the wrist as amulet; காப்பாக மணிக்கட்டிற் கட்டும் நூல். (சங். அக.)

கௌந்தி[1] kaunti, *n.* perh. *kauntī.* 1. Cubeb. See வால்மிளகு. (மலை.) 2. Chebulic myrobalan root; கடுக்காய்வேர். (மூ. அ.)

கௌந்தி[2] kaunti, *n.* Female Jain ascetic. See கவுந்தி[1]. (திவா.)

கௌபீனசுத்தம் kaupīṉa-cuttam, *n.* <*kaupīna*+. Man's sexual purity; அயற்பெண்களின் கூட்டுறவற்றிருக்குந் தூயதன்மை.

கௌபீனசுத்தன் kaupīṉa-cuttaṉ, *n.* <id. +. Man of sexual purity; பிறபெண்களைச் சேராதவன். *Loc.*

கௌபீனதோஷம் kaupīṉa-tōṣam, *n.* <id.+. Man's sexual impurity; பிறபெண்களைச் சேர்தலாகிய குற்றம்.

கௌபீனம் kaupīṉam, *n.* <*kaupīna.* Man's loin-cloth; கோவணம்.

கௌமாரம் kaumāram, *n.* <*kaumāra.* 1. Childhood; இளம்பருவம். 2. The religion of the Kaumāras who hold Skanda as the Supreme Being and are exclusively devoted to His worship; முருகக்கடவுளே பரம்பொருளென்று வழிபடுஞ் சமயம்.

கௌமாரி kaumāri, *n.* <*Kaumārī.* 1. Kaumārī, the female principle of Kumāra or Skanda, one of *catta-mātar,* q.v.; சத்தமாதர்களுள் ஒருத்தி. 2. Kāḷī; மாகாளி. (பிங்.)

கௌமோதகி kaumōtaki, *n.* <*kaumōdakī.* The mace of Viṣṇu; திருமாலின் தண்டாயுதம். (பிங்.)

கௌரம் kauram, *n.* <*gaura:* 1. Whiteness; வெண்மை. 2. Yellow colour; பொன்னிறம். (சிலப். 12, 67, உரை.)

கௌரவம் kauravam, *n.* <*gaurava.* 1. Dignity, eminence, honour; மேன்மை. 2. Pride; பெருமிதம். அடர்ச்சிமிகுங் கௌரவம் (சிவப்பிர. பொது. 30).

கௌரவர் kauravar, *n.* <*kaurava.* Kaurava princes. See கவுரவர். வரிவெஞ்சிலைக்கைக் கௌரவர் (பாரத. ஒன்பதாம். 31).

கௌரி[1] kauri, *n.* <*Gaurī.* 1. Pārvatī; பார்வதி. (திவா.) பெருங் கௌரியென் றழைத்தனர் (திருவிளை. விருத்த. 4). 2. Kāḷī; காளி. அம்பிகை மாதரி கௌரி (அரிச். பு. துதி.). 3. Young girl of 8 or 10 years; எட்டு அல்லது பத்து வயதுப்பெண். 4. Yellow colour; பொன்னிறம். (W.) 5. Mustard; கடுகு. (மலை.) 6. Bristly-trifoliate vine. See புளிநறளை. (மலை.)

கௌரி[2] kauri, *n.* <U. *kauri.* Cowry, small white or yellow shell, used as a coin in some parts of India, *Cypraea moneta;* சோகி. (M. M. 238.)

கௌரிகாளை kauri-kāḷai, *n.* cf. *gaurava* +*kāhala.* [T. *garukahaḷi.*] A long brass-trumpet; எக்காளவகை. *Madr.*

கௌரிகேணி kauri-kēṇi, *n.* <*gaura*+ perh. காக்கணம். White-flowered mussell-shell creeper. See வெள்ளைக்காக்கணம். (மலை.)

கௌரிசங்கம் kauri-caṅkam, *n.* <*gaurī* +. Double rudrak bead. See கவுரிசங்கம்.

கௌரிசங்காமணி kauri-caṅkā-maṇi, *n.* <id. +. See கவுரிசங்கம். (W.)

கௌரிசிப்பி kauri-cippi, *n.* perh. U. *kauri* +. A large kind of conch used as offering-cup in worship; பூஜாபாத்திரமாக உபயோகப்படும் பெருஞ் சங்கு. (W.)

கௌரிபாத்திரம் kauri-pāttiram, *n.* <id. +. See கௌரிசிப்பி. (W.)

கௌரிபாஷாணம் kauri-pāṣāṇam, *n.* perh. *gaurī* +. A prepared arsenic. See கவுரி பாஷாணம். (W.)

கௌரிமைந்தன் kauri-maintaṉ, *n.* <id. +. Skanda, as son of Pārvatī; [பார்வதி புத்திரன்] முருகக்கடவுள். (பிங்.)

கௌரியம் kauriyam, *n.* perh. கௌரியன். Black neem tree. See கருவேம்பு. (மலை.)

கௌரியன் kauriyaṉ, *n.* perh. *kauravya.* Pāṇḍya title; பாண்டியன் பட்டப்பெயர். தவிரா வீகைக் கௌரியர் மருக (புறநா. 3, 5).

கௌரிவிரதம் kauri-viratam, *n.* <*gaurī* + *vrata.* Religious observance in honour of Pārvatī in the month of Aippaci; ஐப்பசி மாதத்தில் கௌரியைநோக்கிப் புரியும் நோன்பு.

கௌல்[1] kaul, *n.* Fetid odour. See கவுல்[1].

கௌல்[2] kaul, *n.* <U. *qaul.* Favourable tenure of land. See கவுல்[2].

கௌல்தார் kaul-tār, *n.* <id. +. Ryot holding lands on cowl. See கவுல்தார்.

கௌலவம் kaulavam, *n.* <*kaulava.* (Astron.) A division of time, one of eleven *karaṇam*, q.v.; கரணம் பதினொன்றனுள் ஒன்றாகிய காலப்பகுதி.

கௌவகம் kauvakam, *n.* A curl of hair on one side of a horse's body; குதிரையுடலின் ஒரு பக்கத்திலிருக்கும் சுழிவகை. (அசுவசா. 149.)

கௌவாணம் kauvāṇam, *n.* (Mus.) A secondary melody-type. See கவ்வாணம். (பிங்.)

கௌவாளன் kauvāḷaṉ, *n.* [T. *kovvāḷḷu.*] A fish; மீன்வகை.

கௌவியம் kauviyam, *n.* <*gavya.* The five choice products of a cow, viz., *pāl, tayir, ney, kōcalam, kōmayam;* பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஆகிய பசுவினின்று பெறப்படும் பொருள்கள். தீதில் கௌவியங் கூட்டுபு பிசைந்தனர் (சூத. சிவமா. 2, 23).

கௌவு-தல் kauvu-, *5 v. tr.* 1. To seize with mouth, grasp with eagerness. See கவ்வு[1]-. கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் (நாலடி, 70). 2. To absorb, engross; கவர்தல். அகங்கௌவிய களிப்பெய்தி (திருவிளை. யானை. 24).

கௌவுகண் kauvu-kaṇ, *n.* <கௌவு- +. Downcast furtive look; கீழ்ப்பார்வை. கௌவுகண் போட்டுப் பார்க்கிறான். *Nāñ.*

கௌவுதடி kauvu-taṭi, *n.* <id. +. Forked stick. See கவைக்கோல், 1. (W.)

கௌவை[1] kauvai, *n.* prob. *hvay.* 1. Sound, noise, roar; ஒலி. குயிற் கௌவையிற் பெரிதே (ஐங்குறு. 369). 2. Disclosure; வெளிப்பாடு. களவொடு புணர்ந்த கௌவை (தொல். பொ. 41). 3. Ill-report, scandal, disrepute; பழிச்சொல். கல்லென் கௌவை யெழாஅக் காலே (ஐங்குறு. 131). 4. Affliction, distress; துன்பம். (பிங்.) 5. Toddy; கள். (பிங்.)

கௌவை[2] kauvai, *n.* See கவ்வை[2].

கௌவைமரம் kauvai-maram, *n.* <கௌவு- +. Cross-bar at the entrance of an enclosure to prevent animals from straying; விலங்குகள் அடைப்புக்குள் வாராமல் தடுக்குங் கட்டை. *Loc.*

கௌளம் kauḷam, *n.* cf. *gauḍa.* (Mus.) A primary melody-type; இராகவகை. (பரத. இராக. 55.)

கௌளி[1] kauḷi, *n.* House-lizard. See கவுளி[2]. (திவா.)

கௌளி[2] kauḷi, *n.* perh. T. *gauḷi.* cf. கௌடி. (Mus.) A specific melody-type; ஓர் இராகம். (பரத. இராக. 56.)

கௌளிக்கட்டாய்ச்சொல்(லு)-தல் kauḷi-k-kaṭṭāy-c-col-, *v. tr.* <கௌளி[1] +. To deceive a person by professing to foretell, to mislead by soothsaying; குறிசொல்லி ஏமாற்றுதல். *Loc.*

கௌளிக்கட்டு kauḷi-k-kaṭṭu, *n.* <id. +. See கௌளிக்காதல். *Loc.*

கௌளிக்காதல் kauḷi-k-kātal, *n.* <id. +. Chirp of a lizard, as presaging good or evil; நன்மை தீமைகளை அறிவிக்கும் பல்லிச்சத்தம். (W.)

கௌளிச்சொல் kauḷi-c-col, *n.* <id. +. See கௌளிக்காதல். *Loc.*

கௌளிசாத்திரம் kauḷi-cāttiram, *n.* <id. +. Treatise interpreting the chirps of lizards; பல்லிச்சொற்குப் பலன்கூறும் நூல்.

கௌளிபத்திரம் kauḷi-pattiram, *n.* <*gaura* +. White betel-leaf; வெள்ளை வெற்றிலைவகை.

கௌளிபந்து kauḷi-pantu, *n.* perh. T. *gauḷi*+. A melody-type; ஓர் இராகம்.

கௌளிபாத்திரம் kauḷi-pāttiram, *n.* perh. *gaura*+. 1. A variety of coconut tree bearing yellow coconuts; மஞ்சள் நிறமான காய்கள் காய்க்குந் தெங்குவகை. *Loc.* 2. Coconut shell used by ascetics as a begging bowl, water-vessel, etc.; தேங்காயோட்டினால் செய்யப்பட்டுத் துறவிகள் நீர் அல்லது உணவுகொள்ள உபயோகிக்கும் பாத்திரம்.

கௌஷீதகி kauṣītaki, *n.* <*Kauṣītakī*. An Upaniṣad, one of 108; நூற்றெட்டுபநிடதங் களுள் ஒன்று.

கௌஸ்துபம் kaustupam, *n.* <*kaustubha*. The gem worn by Viṣṇu on his breast; திருமால் மார்பிலணியும் மணி.

ங

ங் ṅ. The guttural nasal.

ங[1] ṅa. The compound of ங் and அ.

ங[2] ṅa, *n.* Symbol for a *marakkāl* or eight measures; குறுணியைக் குறிக்குங் குறி.

ஙகரம் ṅa-karam, *n.* <ங[2]+. A measure of capacity = 8 *nāḻi* = 1 *kuṟuṇi*; குறுணியளவு. (தைலவ. தைல. 6.)

ஙனம் ṅaṉam, *part.* Affix in the sense of place, manner, room, mode, way, used after the demonstrative particles அ, இ, உ, எ, யா, as அங்ஙனம், etc.; சுட்டெழுத்து வினாவெழுத்துக்களை ஒட்டித் தன்மை, இடம் முதலிய பொருள்களைத் தரும் இடைச்சொல். (நன். 106, உரை.)

End of Vol. II.